Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(1 லாய் 1½ சதம்)




KVC0449.

திங்கள், வியாழன் வெளிவரும்: வருட சந்தா ரூ. 3—0—0.

மலர் 2 | சென்னை, 1931 ஜுலை 27உ, பிரஜோற்பத்தி ஆடிமீ 12உ திங்கட்கிழமை | இதழ் 11

# கடவுள் எங்கே?

கடவுள் கோவிலில் இருப்பதாக இந்துக்கள் சொல்லுகிறார்கள் அங்கு போய் பூஜை செய்கிறார்கள். திருவிழா செய்கிறார்கள். பிரார்த்தனை செய்கிறார்கள். கோவிலுக்குள் இருக்கும் கடவுள் எல்லாருக்கும் பொதுவான கடவுளே. இந்துக்கள் கோவிலுக்குள் கடவுள் இருப்பதாய் நம்பும்போது, அந்த நம்பிக்கையுள்ள சகல இந்துக்களும் கோவிலுக்குள் போய் பிரார்த்தனை செய்ய உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்று எப்படி நடக்கிறது? மேல் ஜாதிக்காரர் என்று சொல்லுகிறவர்கள் தான் கோவிலுக்குள் போகலாம். எல்லாரையும் விட மேல்ஜாதியார்தான் விக்கிரகத்தின் பக்கத்தில் நிற்கலாம். கீழ்ஜாதிக்காரர் கோவில் சமீபமாகவே வரக்கூடாதாம். அப்படியானால் கடவுள் மேல் ஜாதியாருக்கு மட்டுந்தானா சொந்தம்? கீழ் ஜாதியாருக்கு உரிமை யில்லையா? கீழ்ஜாதியாரை கடவுள் படைக்கவில்லையா? இவ்வுலகிலுள்ள சகலமும் கடவுள் படைத்தவைகளே. அந்தக் கடவுள் மனிதருக்குள் எப்படி உயர்வு தாழ்வு காட்டுவார்? மனிதர் எல்லாரும் சமமே. அன்பே உருவாய் அமைந்த அந்த கடவுளுக்கு, ஜாதிவித்தியாசம் இருப்பதாச் சொல்லுவது, சுயநலக்காரர் சூழ்ச்சி யாகும். கடவுள் ஒரு ஜாதியாருக்கு ஆதரவளித்து, மற்றொரு ஜாதியாரை கஷ்டப் படுத்துவாரானால், அவர் கடவுள் அல்ல. அவரை வின்ஸ்டன் சர்ச்சில், அல்லது ஜெனரல் டயருக்கே ஒப்பிட வேண்டும்.

இந்தியாவில் ஜாதித் திமிரால் நடைபெறும் அநியாயங்கள் பல. அவற்றில், தீண்டாதாரை கோவிலுக்குள் அநுமதிக்காதது முக்கியமானதாகும். இந்த அக்கிரமத்தை தொலைக்க காங்கிரஸ் கமிட்டிகள் முன் வந்ததைக் கண்டு நாம் சந்தோஷமடைகிறோம். கேரள மாகாண காங்கிரசும், பம்பாய் மாகாண காங்கிரசும், ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கப் போகின்றன. இதற்கு முன்பு தீண்டாதார் ஆலயத்திற்குள் நுழையவேண்டுமென்று சத்தியாக்கிரகஞ் செய்வது ஒரு முறையாயிருந்தது. பம்பாய் கமிட்டி ஒரு புதிய முறையை அநுஷ்டிக்கப் போவதாக அறிகிறோம். முதலில் எல்லா கோவில்களுக்கும் ஒரு அறிக்கை அனுப்புவார்கள். அதில் தீண்டாதார் சுவாமி தரிசனம் செய்ய அநுமதிக்கவேண்டுமென்று கேட்பார்கள். எந்தக் கோவில்கள் மறுக்கின்றனவோ, அக்கோவில்கள் முன்பு மறியல் ஆரம்பிப்பார்கள். அந்தக் கோவில்களுக்கு யாரும் பண உதவி புரியக்கூடாதென்றும், அக்கோவில்களில் மற்ற ஜாதியார் சுவாமி தரிசனம் செய்ய போகக்கூடாதென்றும் மறியல் செய்வார்கள். இம்முறை நூதன முறையே யாகும்.

பல கோவில்களுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. ஜனங்கள் உதவியை எதிர் பாராமலே நடத்திக் கொண்டுபோகலாம். இருந்தாலும், ஜனங்களால் பகிஷ்கரிக்கப்பட்ட கோவில்களை அவர்கள் நடத்திக்கொண்டு

(கடைசி பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# நெல்லிக்குப்பம் ஆலை :: வேலையில்லை வெளியேபோ!

(எம்டன் எழுதியது)

பிரபலமான பாரி கம்பெனி மானேஜ்மெண்டுக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் 'வேலையில்லை வெளியேபோ' என்னும் கூச்சல் அதிகமாய்விட்டது. சர்க்கரை கிடங்கு மிட்டாய் கிடங்கு, சோடா காற்றடிக்குமிடம், வொர்க்ஷாப் முதலிய இடங்களிலுள்ள தொழிலாளிகள் நூற்றுக்கணக்காக வெளியேற்றப்படுகின்றனர். பீப்பாய் செய்யுமிடங்களிலுள்ள அநேகர் திடீரென்று நிறுத்தப்பட்டனர். இதற்கெல்லாம் கேள்வி முறையில்லையா?

## ஆலைக்கு நஷ்டமா?

இதற்கெல்லாம் காரணம் ஆலைக்கு போதிய இலாபமில்லை யென்று சொல்லப்படுகிறதாம். போதிய இலாபமில்லை யென்கிறார்களே ஒழிய நஷ்டம் என்று கூறவில்லை. இதற்கு முன் தொழிலாளர்கள் கட்டுப்பாடாய் சம்பள உயர்வு கேட்டால "ஆலைக்கே நஷ்டம். மூன்று அல்லது நான்கு மாதம் ஆலையை அடைக்கப் படும்" என மிரட்டல் செய்யப்பட்டதாம். ஆனால் ஒரு நாளும் ஆலை அடைக்கப்படவில்லை.

## ஐயோ பாவம்!

ஆலைக்கு இலாபமே கிடையாது, நஷ்டத்திலே வேலை செய்கிறது என்பதற்குப் பிரத்தியட்சமாக பல உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். பூர்வத்தில் முள்வேலி போட்டுக் கொண்டு வேலை துடங்கியதையும் இப்போது ஆலையார் இருக்கும் அந்தஸ்தையும் விளக்கிக் காட்டா விட்டாலும், சமீபகாலத்தில் அவர்கள் எவ்வளவு கஷ்டத்தி லிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறேன். பாவம் ஆலையினுள் பலவிதப் புதிய கட்டிடங்கள் ஆயிரக் கணக்கான ரூபாய் செலவில் கட்டப்படுவதுடன், ஆலைக்கு எதிரிலுள்ள வீட்டை எழாயிர ரூபாயில் வாங்கி மைதானத்தை வளைத்து 10 ஆயிரம் ரூபாயில் கிளப்பும், புதிதாக வந்த உதவி ஏஜண்டுக்கு கேவலம் 12 ஆயிர ரூபாய் செலவில் ஒரு பங்களாவும் கட்டி, சுற்றியுள்ள நில பரப்பில் மதில் எழுப்பிக் கொண்டும் வருகிறார்கள். மோரைக்கிராமத்தை அப்படியே விலைக்கு வாங்கி கஷ்டப்படும் துரைமார்களுக்கு பங்களாக்கள் கட்டக் கேட்கிறார்களாம். அங்கு குடிசையில் வாழும் கருப்பர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! ஆலைக்குத் தெற்கேயுள்ள சேரிமாடத்தை நஷ்டக்காடு நஷ்டமாய் வளைத்து வேலியன் போட்டு விட்டார்கள். பந்தடிக்குமிடமும், பாட்டுப்பாடு மிடமுமாக ஏற்பாடு செய்து கொண்டு தினமும் துன்பப் படுகிறார்கள்! அந்தோ, ஓரே ஒரு வெள்ளையன் இருந்த இடத்தில் இருபதிற்கு மேற்பட்ட வெள்ளையர் தானே இப்போது தொழிலாளரை மேற்பார்வை பார்த்து வருகிறார்கள்? அழகிய பங்களாவில் மின்சார விளக்குகளும், விசிறிகளும், குரோட்டன்சுகளும், ஏராளமான வேலைக்காரரும் வைத்துக்கொண்டு என்ன அவதிப்படுகிறார்கள்! பாருங்கள்!

## இதுவா சிக்கனம்?

பத்து வயது காலத்திலிருந்து 40 வயது வரை ஆலைக்கு உழைத்து கண் பஞ்சடைத்து முதுகு வளைந்து தோலும் எலும்புக் கூடுமாய் போன தொழிலாளர்களை, யாதொரு பலனுமின்றி வெறுங்கையுடன் வீட்டிற்குப் போகச் செய்யும் சண்டாளத்தனம் ஒரு பக்க மிருந்தாலும், அநேக வருஷமாய் ஒரே விதமான வேலையைச் செய்து செய்து பழக்கப்பட்ட தொழிலாளிகளை வீட்டுக்குப் போகச் சொன்னால், அவர்கள் எங்கேபோய் என்ன செய்வது? எம் நாட்டவர்களுக்கு எமது நாட்டிலுள்ள தொழிற்சாலையில் இடமில்லை யென்றால் 6000-ம் மைலுக் கப்பாலுள்ள வெள்ளை தோலருக்கு இங்கென்ன வேலை?

சகத்தை வழுக்குப் படாமல் அதிகார தோரணையில் ஆயிரக்கணக்காக ரூபாய் வாங்கும் ஒரு வெள்ளையரை எடுத்தால் 100 தொழிலாளிகள் குடும்பம் பிழைக்குமே! இப்போது மூட்டுப் பூச்சிப்போல் பெருத்து வரும் இருபதிற்கு மேல்பட்ட வெள்ளையருக்கு உண்மையாகவே வேலை இருக்கின்றதா? இல்லவே இல்லை மலைபோகிற இடம் தெரியாமல் கடுகு போகிறதைக் கணக்குப் பார்த்த நிபுணர் போல், நாளுக்கொரு பங்களா கட்டி, சுகபோக விளையாட்டுகளிலும், வெள்ளையர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தையும், போனசையும் கவனித்துப் பார்க்காது ஏழை தொழிலாளிகள் தலையில் கை வைப்பதுவா சிக்கனம்?

குறிப்பு:—நெல்லிக்குப்பம் ஆலைத் தொழிலாளர்கள் துன்பவிஷயமாக தொடர்ந்து பல கட்டுரைகள் "காந்தி"யில் வெளியாகும். சகல தொழிலாளிகளே "காந்தி"யை எதிர்பாருங்கள்.

Koviloor Digital Library



PRESENTED BY: ... SETHAR

# பிரிட்டனுக்கு புத்தி வருமா? :: பாதிரிகள் பிரார்த்தனை.

லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் கோவிலில் சென்ற 21ல் பாதிரிகள் கூட்டம் கூடியது. சகல பிரிட்டிஷ் மிஷனரி பிரதிநிதிகளும் வந்திருந்தனர். சுமார் 3 ஆயிரம் கூட்டம். பிரிட்டிஷ் பெரிய குருவான காண்டர்பரி ஆர்ச்பிஷப் தலைமை வகித்தார். இந்தியாவின் தேசீய அபிலாஷைக்கு ஆதரவு காட்டவும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் சமரசம் ஏற்படும்படி பிரார்த்தனை செய்யவும், லார்ட் இர்வின் பிரசங்கத்தை கேட்கவும் இக்கூட்டம் கூடியது. லார்ட் இர்வின் கிறிஸ்தவ குணத்தை ஆர்ச்பிஷப் புகழ்ந்தார். பின்னால் பேசிய லார்ட் இர்வின், மகாத்மாவின் குணங்களை சிலாகித்து பேசினார். அவர் பிரசங்கம் முடிந்ததும், அதற்கென்று தயாரித்த பிரார்த்தனையை ஆர்ச்பிஷப் வாசித்தார் அதில் பிரிட்டன்—இந்தியா போராட்டத்தில் பிரிட்டனிலுள்ள சகல கட்சிகளுக்கும் சரியான பாதையில் நடக்க அருள் புரிய வேண்டுமென்றும், மகாத்மா காந்தியின் செல்வாக்கால் இருகட்சிகளும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு சமரச முடிவு ஏற்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. எல்லாரும் எழுந்து நின்று இந்த பிரார்த்தனையை செய்தார்கள். இலைவகளை நிறைவேற்ற தங்களை அர்ப்பணஞ்செய்ய எல்லாரும் கடவுள் முன்பு கங்கணம் கட்டிக் கொண்டார்கள். லார்ட் இர்வினையும் மகாத்மாவையும் எல்லாரும் புகழ்ந்தார்கள். அச்சமயம் லார்ட் இர்வின் செய்த பிரசங்கத்தில், சில முக்கிய வாசகங்களை கீழே கொடுக்கிறோம்.

## தர்மகர்த்தா கடமை.

"நான் காந்திஜியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில், "இந்தியர் நன்மைக்கானவை"களுக்குமட்டும் பாதுகாப்புகள் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது இதை சிலர் ஆட்சேபிக்கிறார்கள். தர்மகர்த்தர்கள் கடமை என்ன? தங்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறவர்கள் உரிமைகளை முதலில் கவனிப்பதே யோக்கியப் பொறுப்பு. தேச பாதுகாப்பு, பண நிர்வாகம், சிறுபான்மையோர் உரிமைகள் இவற்றை கவனிப்பதில் பிரிட்டன் கடமைப்பட்டிருக்கிறது. பிரிட்டன் பொருளாதார நிலைமையையும் கவனிக்கவேண்டும். பிரிட்டன் வர்த்தகம் செழிப்பாயிருந்தால்தான் கடற்படை மூலம் இந்தியாவை பாதுகாக்க முடியும். இந்தியாவிற்கு பிரிட்டிஷ் கடற்படை உதவி அவசியமாயிருக்கிறது. ஆகவே இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் கூடுமான அளவு அதிகமாய் பிரிட்டன் பெற வசதிவேண்டும். இந்தியாவும், இங்கிலாந்தும் ஒன்றையொன்று ஒட்டி வளர்ந்து வந்திருக்கின்றன. ஒன்றின் நன்மையைவிட்டு மற்றொன்றின் நன்மையை பிரிக்க முடியாதென்பது உண்மையே ஆனால் அது வேறு விஷயம். அதற்காக, பிரிட்டன நன்மையைக்கருதி இந்திய அரசாங்க அமைப்பில் பாதுகாப்புகள் வேண்டுமென்று பிரிட்டன் கேட்பது யோக்கியமாகாது அப்படிக்கேட்பது தர்மகர்த்த பதவியின் பொறுப்புக்கு நேர் விரோதமாகும். அம்மாதிரி முயற்சி தோல்வியே அடையும்.

## பிரிட்டன் நன்மை எது?

பிரிட்டனின் நன்மை எது? சந்தோஷமும், திருப்தியும் அடைந்த இந்தியா ஏகாதிபத்தியத்தில் இருப்பதே அதன் உண்மையான நன்மையாகும். சுயநல நோக்கத்தோடு இந்தியாவை ஏகாதிபத்தியத்தில் வைக்கவே இங்கிலாந்து விரும்புகிறது என்ற சந்தேகம் இந்தியாவிற்கு தோன்றுமானால், இந்தியாவை ஏகாதிபத்தியத்தில் நாம் பிடித்துவைக்க முடியாது. பிரிட்டிஷ் நன்மைகளை காப்பாற்ற பலமான அடக்கு முறைகளை கையாள வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது இது பலிக்காது. பிரிட்டனுக்கு நிரந்தர நன்மை வேண்டுமானால், இந்தியாவுடன் நட்புச்செய்து, அதன் அனுமதியின் பேரிலேயே பெறமுடியும். பிரிட்டன் இந்தியாவின் நன்மைக்க கபாடுபட தயாராயிருக்கிறது என்பதை நிரூபிக்கவேண்டும். காந்திஜீயும், மற்ற தேசீய வாதிகளும் இதை ஒப்புப்படி நாம் நடந்துகொண்டால், பிரிட்டன் உதவியைஅவர்கள் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுவார்கள் காந்திஜி இந்தியாவில் தேன்றிய சீர்திருத்தக்காரர்களில் மிகப்பெரியவர்."

---

எல்லேப்புற மாகாணத்தில் கத்தர் இயக்கம் அபாரமாய் வேலை செய்கிறது. அதன் பொருளாதார உதவியும், சாந்த அருளும் அங்கு நடக்கும் கொலைகளையும், கொள்ளைகளையும வெகுதூரம் குறைத்துவிட்டன.—எல்லேப்புற காந்தி.

# கலெக்டர் குடி பிரசாரம்: ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி சவுக்கடி

ஸ்ரீ. சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியர் எழுதுகிறார்:—

சென்னை கலெக்டர் திரு. ஏ. ஆர். காக்ஸ் சமீபத்தில் ஒரு தர்பார் நடத்திப் பெரிய மனிதர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் பட்டங்களும் சன்னதுகளும் அளித்தார். அச்சமயம் அவர் செய்த பிரசங்கத்தைப் படித்துப் பார்த்தால், இந்த வேலையைக் கலெக்டர்களுக்குக் கொடுப்பது மிக்க அபாயம் என்று தோன்றும். உத்தியோகத்தை நாடும் அரசியல் கட்சித் தலைவர் பேசுவதுபோல், அவர் தம்மை மறந்து சம்பந்தமில்லாத விஷயங்களைப்பற்றிப் பேசியிருக்கிறார். சாதாரணமாக, இந்த மாதிரி வேடிக்கைப் பிரசங்கங்களை நாம் படித்துச் சிரித்து விட்டுத் தள்ளிவிடலாம். ஆனால் இந்தப் பிரசங்கம் ஜனங்களுக்குத் தப்பு வழி காட்டுவதோடு கலகம் செய்யத் தூண்டுவதாகவும் இருப்பதால் நாம் அதைப் பற்றிக் கவனிக்கவேண்டியது அவசியமாகிறது.

மிஸ்டர் காக்ஸ் இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாயிருந்தால் அவர் ஒரு நாளும் காந்தியுடன் ஒப்பந்தத்திற்கு இணங்கியிருக்க மாட்டார். சாத்வீகமாய் மறியல் செய்யும் பாத்தியதையை ஒப்புக்கொண்டிருக்கவே மாட்டார், விக்டோரியா மண்டபத்தில் தம்மிடம் சன்னது பெற்றுக் கொண்டவர்களுக்கு அவர் சொன்ன பேச்சுகளையெல்லாம் மகாத்மாவிடமும் சொல்லியிருப்பார். மறியல் எவ்வளவு அமைதியாக நடந்தபோதிலுமென்றாலும் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார். ஆனால் நல்லவேளையாக மிஸ்டர் காக்ஸ் ராஜப்பிரதிநிதியல்ல. ஆயினும் அவர் ஒரு ஜில்லாவின் நிர்வாக அதிகாரி. பொறுப்பை உணர்ந்து நடக்கவேண்டியவர். போலீஸ்காரர்களுக்குப் பரிசு கொடுக்கும் சாக்கில், அவர் இந்திய அரசாங்கத்தின் நிர்வாகமுறையைக் கண்டித்தது வரம்பு மீறிய செயலாகும்.

சாத்வீக மறியலை அனுமதித்தது தவறு என்று நினைப்பவர் காக்ஸ் ஒருவர்மட்டுமல்லவென்பது எனக்குத் தெரியும். சிவில் சர்வீஸ் வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அதிகாரியும் இந்திய அரசாங்கம் இதை ஒப்புக்கொண்டது தவறு என்றே நினைக்கிறார்கள். தங்களுக்கு விருப்பமில்லாத நிர்வாக முறையை அவர்கள் வேறு வழியில்லாமல் நடத்திவருகிறார்கள். ஆனால் இந்திய அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டு நடத்தும் முறையை மிஸ்டர் காக்ஸ் ஒருவர்தான் பகிரங்கமாகக் கண்டிக்க முன்வந்திருக்கிறார்.

### தூண்டிவிடுதல்.

அரசாங்கத்தார்களால் வருமானத்தில் அக்கறை புள்ளவர்களாயிராத பக்ஷத்தில் ஸ்ரீ. காக்ஸின் கூற்றுகள் எவ்வளவு தவறானவை என்பதை உடனே காண்பார்கள். வேறு சில விஷயங்களைப் பற்றி இதே விதமாக யாரொருவர் பேசியிருந்தால், அது பெரிய குற்றமாகக் கருதப்படும் என்பதில் சந்தேகமில்லை.

"சாத்வீக மறியல் என்ற பெயரால் நடக்கும் இந்த நடவடிக்கையை அதனால் கஷ்டமடைபவர்கள் எத்தனை காலந்தான் ஒன்றும் செய்யாமல் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறார்களோ தெரியவில்லை". என்று மிஸ்டர் காக்ஸ் பேசியிருக்கிறார்.

"குடிக்கவும் விற்கவும் உரிமையுடையவர்கள் தடுக்கப்பட்டால் கோபங்கொள்வது சகஜம். அவர்கள் சில சமயம் நிதானந்தவறித் தங்களைத் தடை செய்பவர்கள்மீது தங்கள் கோபத்தைச் செலுத்திப் பழி வாங்கக் கூடும்" என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

### சும்மா இருப்பார்களா?

தொழிற்சாலையொன்றில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டிருக்கும் சமயத்தில், "முதலாளிகளின் கதவடைப்பினால் கஷ்டமடைந்திருக்கும் தொழிலாளிகள் எத்தனை காலந்தான் அந்த அநியாயத்தைச் சாந்தமாய்ப் பொறுத்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்?" என்றும், "இந்த மாதிரி நடத்தினால் பெரும்பாலான ஜனங்கள் கோபங்கொண்டு, ஒவ்வொரு சமயம் பொறுமையிழந்து தொழிற்சாலை வாயில் காப்பவர்களையோ, கம்பெனி டைரக்டர்களையோ தாக்கிப் பழி வாங்குவது சகஜம்" என்றும் நான் சொல்வதாக வைத்துக்கொள்வோம். இப்படிப் பேசினால் சமாதான பங்கம் செய்யத்தூண்டுவதாக என்மேல் வழக்குத் தொடர்ந்தால் நான் குறைகூற முடியுமா?

அல்லது ஒரு மசூதிமுன் மேளம் வாசிப்பதைப் பற்றி மிஸ்டர் காக்ஸைப் போல் நான் பேசுவதாக வைத்துக் கொள்வோம். "மசூதி முன் மேளத்தைத் தடுப்பதை ஹிந்துக்கள் எத்தனை நாள் தான் சாந்தமாகப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?" என்றும், "ஹிந்துக்களில் அநேகர் இதனால் ஆத்திரமடைந்து ஒவ்வொரு சமயம் தங்களை மேளம் வாசிக்காமல் தடை செய்பவர்கள் மீது ஆத்திரத்தைச் செலுத்துதல் சகஜந்தான்," என்றும் நான் கூறினால், உடனே மாஜிஸ்ட்ரேட்டின் முன்பு என்னைக்கொண்டு போவதற்குத் தகுதி செய்துகொண்டவனாவேன்.

அல்லது அரசாங்க விஷயமாக இதைப் போல் நான் பேசுவதாக வைத்துக் கொள்வோம். "தற்போதைய அரசாங்கத்தை இந்திய மக்கள் எத்தனை நாள் தான் சகித்துக் கொண்டிருக்கப் போகிறார்



Koviloor Digital Library

Koviloor Digital Library



கள் என்று நான் கேட்கிறேன். ஜனக் கூட்டங்கள் சிற்சில சமயம் பதட்ட மடைந்து பழி தீர்க்கத்தொடங்கினால் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை'' என்று நான் சொன்னால் அரசாங்கத்தார் என்னைப் பிடிக்க மாட்டீர்களா?

இன்னும் ஒரு விதத்திலும் இதை எடுத்துக் காட்டுகிறேன். தற்சமயம் நான் கூலி ஜனங்களிடம் சென்று பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அளவில்லாத துன்பங்கள் விளையக் காரணமான கொடிய மதுவியாபாரம் செய்வோரை எத்தனை நாள் நீங்கள் சும்மா விட்டிருக்கப் போகிறீர்கள்? இத்தகைய நிலைமையில் யாரும் சில சமயம் ஆத்திரங்கொண்டு பழி வாங்குவது சகஜந்தான்'' என்று கூறினால் அது பலாத்காரத்துக்குத் தூண்டுவதாகாதா?

## பேடிச் செய்கை

தம் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கில்லையென்ற தைரியத்தினால் மிஸ்டர் காக்ஸ் இவ்வாறு பேசியிருப்பது பெருந்தவறாகும். சட்ட திட்டங்களுக்கு மேலேயுள்ளவர்கள்தான் சாதாரண ஜனங்களைவிட அதிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். நமது தொண்டர்கள் அஹிம்சாவிரதம் பூண்டவர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். தற்காப்புக்காகவும், அவர்கள் பலாத்காரத்தை உபயோகிக்கக்கூடாது என்று கட்டுப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் திடகாத்திரசாலிகளல்ல, தடியர்கள் அல்ல, பெரும்பாலும் தேகபலவீனமுள்ள சிறு பிள்ளைகள் குடிக்கவருபவர்களோ கடைக்காரனுடைய ஆட்களோ அவர்களைச் சுலபமாய் அடித்துப் போடலாம். மேலும் தொண்டர்களின் எண்ணிக்கையையும் மிகவும் குறைத்திருக்கிறோம். ஆதலின் அவர்கள் எல்லாரும் திடகாத்திர தேகிகளாய் இருந்த போதிலும் கடைக்காரர்களின் ஆட்கள் சுலபமாகவே அவர்களைத் தாக்கி அடித்துவிடலாம்.

மறியல் நடக்கும் இடத்தில் தொண்டர்களைத் தவிர மற்ற ஜனங்கள் கூடாமலும் நாம் செய்திருக்கிறோம். எனவே தொண்டர்கள் அடிக்கப்பட்டால் அவர்களுக்கு மற்றவர்களின் உதவி கிடைப்பதற்கும் வழியில்லை. கடைக்கு சுற்றுப் பக்கத்தில் உடைதரித்தோ உடையில்லாமலோ இருக்கும் போலீஸ்காரர்கள் மது வியாபாரத்தைக் காப்பதற்கே யிருக்கிறார்கள். என்பதும் அனைவரும் அறிந்த விஷயம். தொண்டர்களை பாதுகாப்பதற்காக இல்லை. இத்தகைய நிலைமைகளின் கீழ் நமது தொண்டர்கள் எவ்வளவோ தீரத்துடன் ஒரு பெரிய லட்சியத்துக்காகப் பணி செய்து வருகிறார்கள். இவர்களுடைய தைரியத்தையும் பொதுநலப் பற்றையும் யோக்கியர்கள் பாராட்டுவார்கள். இதற்கு மாறாக பாதுகாப்பற்ற அப்பையன்களைத் தாக்குவதற்குத் தூண்டும்படியாகப் பொறுப்புள்ள ஓர் அதிகாரி பேசினால், அதை என்னவென்று சொல்லுவது?

## புட்டி பிரசாரம்.

மிஸ்டர் காக்ஸ் "ஒரு தடவை கொஞ்சம் குடித்தால் அவர்களுக்குக் கெடுதல் ஒன்றும் வராது" என்று அவர் சொல்லுகிறார். இதுதான் சைத்தானின் போதனை. ஒரு தடவை கொஞ்சம் குடிப்பது தான் பிறகு மக்களை எப்போதும் மதுபானத்துக்கு அடிமையாக்கிவிடுகிறது. ஏழைகளை எப்போதும் துன்பத்தில் ஆழ்த்தி வைத்திருப்பது அதுவேயாகும்.

மிஸ்டர் காக்ஸ் "குடியை ஒழிப்பதில் மட்டும் ஏன் கவனம் செலுத்துகிறீர்கள்? மற்ற துன்மார்க்கங்களை ஏன் கவனிப்பதில்லை? வேசி, 'விபசாரத்தை யொழிக்க ஏன் முயற்சி செய்யக் கூடாது?'' என்று கேட்கிறார். விபசாரத்துக்கும், மற்றும் பல துன்மார்க்கங்களுக்கும் காரணம் குடியே என்பது அவருக்குத் தெரியாது போலும். குடியை நிறுத்தினால் மற்றும் பல துன்மார்க்கங்கள் தாமே நின்று போகும். இந்தக் காரணமே வேண்டியதில்லை. குடித் தீமையை ஒழிக்க நாம் முயற்சி செய்கிறோம். மிஸ்டர் காக்ஸும் அவரைச் சேர்ந்தவர்களும் வேசிகளை ஒழிக்க முயலட்டும். நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆதரவுந் தருகிறோம். ஆனால் நாம் செய்யும் வேலை வேண்டாமென்று அவர் ஏன் சொல்லவேண்டும்.

## வெள்ளையர் மனோபாவம்

இந்த மாதிரி அர்த்தமற்ற ஆட்சேபங்களுக்கெல்லாம் மூல காரணம் ஒன்றேதான். மதுபானத்தில் நமது ஜனங்களுக்குள்ள அருவருப்பையும் துவேஷத்தையும் ஐரோப்பியர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஒருவன் குடிக்க விரும்பினால் அவனை ஏன் தடுக்கவேண்டும் என்பது அவர்களுடைய மனப்பான்மை. குடிப்பதும் குடியாததும் ஒருவனுடைய சொந்த விஷயம். அதில் ஏன் மற்றவர்கள் தலையிடவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். ஐரோப்பியர்களுக்கு "மதுபானக் கடை" என்பது நண்பர்களை சந்தித்துக் குதூகலமாகப் பொழுது போக்கும் இடம் ஆனால் இவ்விஷயத்தில் இந்தியர்களின் மனோ பாவம் முற்றும் மாறானது இந்தியாவிலுள்ள பாமர ஜனங்களும் ஹிந்து முஸ்லீம்களிற் மிகவும் கீழ்நிலையில் உள்ளவர்களுங்கூட மதுபானத்தை ஒரு பாவமாகக் கருதுகிறார். மதுபானம் உணவு விஷயமென்றும், அது ஜனங்களின் உரிமையென்றும் இந்தியாவில் யாரும் எண்ணுவதில்லை. துன்மார்க்கமென்றும் சமூகத்துக்கு அபாயமென்றும் வெட்கப்பட வேண்டிய விஷயமென்றுமே மதுபானம் இங்கே கருதப்படுகிறது. இது வெள்ளைக்காரர்களுக்குத் தெரிவது கஷ்டம்.

---

பிரிட்டனின் நன்மைக்காக சில பாதுகாப்புகளை இந்தியா மீது சுமத்துவது, தர்மகர்த்தாவிற்கு யோக்கியப் பொறுப்பல்ல—லார்ட் இர்வின்.

# "கோவண பக்கிரி" வெற்றி

பிரஞ்சு ஆசிரியர் ரேமண்ட் லாக் கோஸ்டி, "ரெவியூ டி பிரான்ஸ்" பத்திரிகையில் எழுதுகிறார்:—

சரித்திரத்தில் ஒரு முக்கியமான சந்தியில் பிரிட்டன் நிற்கிறது. 150 வருஷங்களாக பலன் பெற்று தன் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க காரணமாயிருந்த இந்தியாவை அது இழக்கப் போகிறதா? இந்திய தேசீய இயக்கம இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 50 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது. 1919 லிருந்து அதிகமாயிற்று. சென்ற வருஷ போராட்டம் அதிசயமானது. வெறுப்புச் சச்சரவு செய்து வந்த நூற்றுக்கணக்கான வகுப்புகள் தங்கள் சண்டையை விட்டு தாய் நாட்டிற்காக போராட யாவரும் ஒன்று என்பதை காட்டின.

காந்திஜியை விடுவித்தார்கள். லார்ட் இர்வின் அவருடன் சமாசப் பேச்சு ஆரம்பித்தார். "கோவணம் தரித்த ராஜத் துரோக பக்கிரி" வைசிராயுடன் பேசுவதா என்று சிலர் கூச்சல் போட்டார்கள். முடிவில் காந்தி வெற்றி பெற்றார் சர்க்காருக்கு விரோதமாக காங்கிரஸ் ஆரம்பித்த போர் வெற்றி பெற்றது காங்கிரசுக்கும், மகாத்மாவுக்கும் உள்ள பெருமை அதிகரித்தது. இங்கிலாந்தின் மதிப்பு கீழே வீழ்ந்தது. இந்தியா கேட்டதை யெல்லாம் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு இங்கிலாந்து வந்துவிட்டது.

பிரிட்டிஷ் பிடிப்பிலிருந்து இந்தியா சீக்கிரம் விடுதலையடையப் போவது நிச்சயம். அப்படி நேரும் காலத்தில், இங்கிலாந்திற்கு நேரிடும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. பிரிட்டன் செல்வத்தை தொலைத்து போகும் பொருளாதார கஷ்டமும் கொஞ்சமல்ல இந்திய வர்த்தகத்தை இழந்தால், லங்காஷயர் பருத்தி தொழிற்சாலைகள் நாசமாய் போகும். அவற்றை அண்டி பிழைக்கும் தொழில்களும் தொலைந்து போகும். இங்கிலாந்து என்ற கப்பல் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

## மகாத்மாவுக்கு விசித்திர கடிதங்கள்.

மகாத்மா காந்திக்கு அமெரிக்காவிலிருந்து ஏராளமான கடிதங்கள் வருகின்றன. அநேக கடிதங்களில் 'மகாத்மாஜி "அன்புக்குரிய மகாத்மாவே" "அன்பான சகோதரரே," மனித கோடிகளின் ஆண்டவனே," இந்தியாவின் ரட்சகனே" என்று பலவாறு வணங்கிப் பாராட்டப் படுகிறார். அமெரிக்காவிலிருந்து வரும் கடிதங்கள் ஒரு நிலைப்பட்ட மேல் விலாசங்களை யுடையனவா யில்லாமை பற்றித் தபால் அதிகாரிகள் மகாத்மா காந்தியின் யாத்திரைகளை கவனித்து வரவேண்டியிருக்கின்றது. சில கடிதங்கள் 'காந்தி, இந்தியா' என விலாசமிடப்படும், வேறுசில 5-ம் ஜார்ஜ் மன்னரோ இந்தியாவின் வைசிராயோ மேற்பார்த்து அளிக்கும்படி விலாசமிடப்பட்டும் வருகின்றன. ஒரு கடிதத்தில் விலாசமிட வேண்டிய இடத்தில் காந்திஜியின் படமொன்று ஒட்டப் பட்டும், இந்தியா என்ற பதம் கீழே எழுதப்பட்டும் வந்து சேர்ந்தது. மற்றொன்றில் பெயர் முதலிய விவரம் எதுவும் குறிக்கப்படாமல் "இந்தியாவின் மகா புருஷர்" என்று மட்டும் விலாசமிடப்பட்டிருந்தது.

---

"காந்தி" பிரசுரம் நெ. 2.

### சோவியத் ருஷியா
அல்லது
### ருஷிய புரட்சி

ருஷியாவில் ஜார்மன்னர் கொடுமை, புரட்சி ஏற்பட காரணம் முதலிய விவரங்களை தெளிவாய் இச்சிறு புத்தகத்தில் பார்க்கலாம். ஜார் சர்க்காருக்கு பின்னால் ஏற்பட்ட இரண்டு சர்க்கார்களைப்பற்றியும், மூன்றாவதாக ஏற்பட்ட சோவியத் சர்க்காரைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. லெனின் கட்சியார் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட வரையிலுள்ள எல்லா விஷயங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.

பிரதி 1-க்கு 0—1—0

100 பிரதிகள் தபால் மூலம் ரூ. 5—11—0 ரயில் மூலம் ரூ 4—11—0. முன் பணம் அனுப்பவும். தனிப்பிரதி வேண்டியவர்கள் 1½ அணா ஸ்டாம்புகள் அனுப்பவும்.

'காந்தி' ஆபீஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

---

Koviloor Digital Library



## எம். என். ராய் "டிமிக்கி"

ஸ்ரீ எம். என். ராய் உலகப்பிரசித்தி பெற்றவர். போல்ஷவிக் சர்க்காரில் மிகுந்த செல்வாக்குடையவராயிருந்தாராம். ரஷியாவில் பல வருஷங்கள் வசித்தார் பின்னர் ஜெர்மனியில் வாசஞ்செய்தார். இந்தியாவில் போல்ஷவிக் பிரசாரஞ்செய்ய தூண்டியதாக அவர்மீது சர்க்கார் புகார் கூறினார்கள். இந்தியாவில் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதியதாக சர்க்கார் முன்பு பிரசுரித்தார்கள். அதாவது போல்ஷவிக் மசோதாவை சட்டசபையில் கொண்டு வருவதற்கு சில தினங்களுக்கு முன்பு செய்தார்கள். அக்கடிதம் பொய்க்கடிதமென்று பெரிய புகார் ஏற்பட்டது. அவரைப்பற்றி பார்லிமெண்டில் நூற்றுக்கணக்கான தடவைகளில் கேள்விகள் கேட்கப்பட்டன. அவர் பழைய பொது வுடைமைக்காரர் என்று இந்திய போலீஸ் புலிகள் சொல்லுகிறார்கள்; ஆனால் அவருக்குள்ள பொது உடைமைக் குணம் போதாதென்று பொது உடைமை சங்கத்தார் அவரை தங்கள் கோஷ்டியிலிருந்து விலக்கிவிட்டதாக நமக்கு ஞாபகம். எப்படியிருந்தாலுஞ்சரி, ரகசியப் போலீசார் அவரை அல்லும், பகலும் நினைத்துக் கொண்டேயிருந்தார்கள். அப்படியிருந்தும், இந்தியாவில் அவர் வந்து இறங்கியதையோ, சில மாதங்களாக இந்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்ததையோ அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஸ்ரீ ராய், டாக்டர் முகமது என்ற பெயருடன் இந்தியாவில் வந்து இறங்கி, வட இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்தாராம். யாரோ ஒரு ஜெர்மன் மாது அவரை எங்கோ ஓரிடத்தில் அடையாளங் கண்டுபிடித்து வெளியில் சொல்லிவிட்டாராம். உடனே போலீஸ் கண்ணோட்டம் இந்தியாவெங்கும் பாய்ந்தது. பம்பாயில் வந்து சில வாரங்கள் இருந்தார். போலீசார் பல தடவைகளில் அவரை பிடிக்க முயன்றும், ஒவ்வொரு தடவையிலும் சாமர்த்தியமாக டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பினாராம். அப்புறம் அவர் பம்பாய் வாசஸ்தலத்தை கண்டு பிடித்து சென்ற 21உ காலை 5 மணிக்கு அவர் படுக்கையறையில் கைது செய்தார்களாம். கமிஷனர் உதவி கமிஷனர், இன்ஸ்பெக்டர், பல ரகசிய போலீஸ் புலிகள் திடீரென்று சென்று அவரை கைது செய்தார்கள். அவரிடம் பெயர் கேட்டபோது சொல்ல மறுத்துவிட்டார். அவர் கான்பூர் சதியாலோசனை வழக்கில் சம்பந்தப்பட்டவரான படியால், அவருக்கு இடங்கொடுத்து ஆதரித்ததற்காக போலீசார் பம்பாயில் 10 பேரை கைது செய்தனர். ஸ்ரீ ராயை தவிர மற்றவர்களை ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். அவருடைய சொந்தப்பெயர் எம். என். ராய் அல்ல. அதுவும் ஒரு மாறு பெயரே.

---

## மகாத்மா லண்டன் ஜாகை.

மகாத்மா லண்டனில் ஏழைகள் விடுதியான கிங்ஸ்லி ஹாலிலேயே தங்கியிருப்பாரெனத் தெரிகிறது. அக்கட்டிடத்தின் மேன் மாடியில் 3 அறைகளிருக்கின்றன. அதில் தற்போது சில தொழிலாளர் இருக்கின்றனர். மகாத்மாவுக்காக அத் தொழிலாளர் அவ்வறைகளைக் காலி செய்து விடுவர். ஒவ்வொரு அறையிலும் ஒரு பாயும் நாற்காலியுமே இருக்கின்றன. சபர்மதி ஆசிரமத்திலுள்ளது போலவே அறைகளில் பாய்களை விரிக்கப் போவதாகவும், யாதொரு விசேஷ ஏற்பாடொன்றும் மகாத்மாவுக்கு தேவையில்லை என்றும் ஸ்ரீமதி. லெஸ்டர் கூறுகிறார். தோட்டத்திலுள்ள சிறிய பந்தலில் மகாத்மா தமது சிஷ்யர்களுடன் தெய்வ வழிபாடு, பிரார்த்தனை முதலியவைகள் செய்வார் மகாத்மாஜிக்கு லண்டனி லிருக்கையில், அவர் தங்கக்கூடிய இடமான கிங்ஸ்லி ஹால் நிர்வாகிகள், காந்திஜிக்கு அன்றாடம் கறக்கப்பட்ட ஆட்டுப்பால் அளிக்க தங்களிடம் ஆடு இல்லையே எனக் கவலையுடன் தெரிவித்திருந்தார்கள். இப்பொழுது, நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தம் தம் ஆடுகளை அனுப்பி வைப்பதாக ஏராளமான கடிதங்கள் அந்நிர்வாகிகளுக்கு வந்து குவிந்திருக்கின்றன.

கார்டிப் என்ற இடத்திலுள்ள ஒருவர் தமது ஆட்டை அனுப்பி வைக்கும் செலவையும், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான செலவையும் தாமே ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார். லண்டனிலுள்ள ஆட்டுச் சொந்தக்காரர்களின் ஆடுகளையே பெற்றுக் கொள்வதென அந்நிர்வாகிகள் உத்தேசித்திருக்கின்றனர். மகாத்மாஜிக்கு அன்றாடம் பழங்களும், பாலாடையும் அனுப்புவதாகவும் பலர் தெரிவித்துள்ளனர்.

Koviloor Digital Library



# பகிரங்க பேச்சு

## சிம்லா பேச்சு

மகாத்மா காந்தி சிம்லாவை விட்டு புதன் கிழமை புறப்பட்டார். உடன் படிக்கையை மீறி சர்க்கார் நடக்கும் விஷயமாக விசாரணை கமிட்டி நியமிக்க சர்க்கார் ஒப்புக் கொள்ளவில்லையென்று தெரிகிறது. மகாத்மா இதைப் பற்றி அறிக்கை யொன்றும் வெளியிடாத படியால், நிலைமை எப்படி யிருக்கிற தென்று தெரியவில்லை.

## சர்க்கார் பணிவு.

ரயில்வேயில் ஆட்களை குறைப்பது சம்பந்தமாக சமரச கமிட்டி நியமிக்க தொழிலாளர் சங்கம் சர்க்காரை வேண்டிக் கொண்டது. சர்க்கார் மறுத்தார்கள். வைஸிராய் பேட்டி கொடுக்கக்கூட மறுத்தார். வேலை நிறுத்தத்திற்கு தொழிலாளர் ஏற்பாடு செய்தவுடன், சர்க்கார் நாடி சமரசமாய் வந்திருக்கிறது. விசாரணைக் கமிட்டி நியமிப்பதாய் இப்பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முட்டிய பின்பு குனிவதே இந்த சர்க்காரின் பிறவிக் குணமாய் போய்விட்டது.

## தெருவெல்லாம் கள்!

சென்னையில் மதுக்கடை மறியல் மும்முரமாய் நடக்கிறது. காங்கிரஸ் கமிட்டி முன்வராவிட்டாலும், அங்கங்குள்ள தேசபக்தர்கள் முன்வந்து மறியலை ஆரம்பித்தது போற்றத்தக்கது. தொண்டர்கள் வெயிலையும், மழையையும் பாராமல் தீவிரமாய் மறியல் செய்கிறார்கள். கள் விற்பனை, கடைகளில் குறைந்து போகவே, கண்ட இடமெல்லாம் கள்ளை கொண்டு விற்பதாக தலைவர்கள் புகார் செய்கிறார்கள். இப்படிச் செய்வது சட்டத்திற்கு பொருத்தமானதா வென்று ஸ்ரீ. [illegible] கேட்கிறோம். அல்லது குடிகாரர் உரிமையை காப்பாற்ற இம்மாதிரி செய்யப்படுகிறதா?

## பலே ராஜபாளையம்!

ராஜபாளையத்திலுள்ள 16 சீமைத்துணி கடைகளும் காங்கிரஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டன. சீமைத்துணி ஒரு அங்குலம் கூட அங்கு வாங்க முடியாது. கள்ளு, சாராயம் ஒரு துளியும் பெற முடியாதபடி மறியல் நடக்கிறது. தேசபக்தி ததும்பும் ராஜபாளையத்தை வாழ்த்துகிறோம்.

## அலங்கார பொம்மைகள்.

பம்பாயில் 4 நிர்வாக அங்கத்தினரும், 3 மந்திரிகளும் இருக்கிறார்கள். நாலுபேர் முன்பு செய்துவந்த வேலையைத்தான், மாண்டேகு சீர்திருத்தத்தால் 7 பேர் செய்கிறார்கள். இது தான் இந்தியா அடைந்த நன்மை. இவர்களை மறுபடியும் நாலு பேராக்கிவிட சிக்கன கமிட்டி சிபார்சு செய்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த அலங்கார பொம்மைகளை நீக்கவேண்டியது மிக மிக அவசியமாகும்.

---

## சைமனுக்கு சூடு.

லார்ட் இர்வின் 23உ யன்று பேசியதாவது:

சைமன் கமிஷன் சொல்லுகிறபடி, தன்மை சர்க்காரில் இந்தியருக்கு பொறுப்பு கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுத்தால், கோடிக் கணக்கான ஒன்றுமறியா இந்தியரை, சில படித்த இந்தியரிடம் காட்டிக் கொடுப்பதாய் முடியுமென்று சொல்லுகிறார்கள். இது அறியாதவர்கள் பேசும் வாதம். ஏழை இந்தியரைப் பொறுத்த பல விஷயங்கள் இன்று இந்திய மந்திரிகள் நிர்வாகத்திலேயே இருக்கின்றன. இவற்றோடு, நிலவரி வசூலையும், போலீசையும் இந்தியரிடம் ஒப்புவிக்கும்படி சைமன் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. வேறு என்ன பாக்கி யிருக்கிறது? ஆகவே முக்கியமான சகல விஷயங்களும் இந்தியர் கையிலிருக்கும் போது, இந்தியரைப் பற்றியவைகளை இந்தியரிடம் ஒப்புவிக்கக் கூடாதென்று புதிதாக சொல்ல முன்வருவது வெறும் அக்கிரமமாகும்

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

போவதால் என்ன பயன்? தீண்டாதாருக்கு அனுமதியில்லாத கோவில்களில் தாங்களும் நுழைவதில்லை யென்ற சபதம் எடுத்துக் கொண்டால்தான், தீண்டாதாருக்கும் மற்றவர்களுக்கும் உண்மையான ஐக்கிய பாவம் ஏற்பட முடியும்

பம்பாய் கமிட்டி யோசனையை நாம் ஆதரிக்கிறோம். கடவுள் எங்கே யிருக்கிறார்? அன்பிருக்கிற இடத்திலேயே கடவுள் இருக்கிறார். துவேஷம் உள்ள இடத்தில் கடவுள் இல்லை. மனிதரில் ஒரு பகுதியாரை வரக் கூடாதென்று தடுக்கும் கோவில்களுக்குள் கடவுள் எப்படி இருக்க முடியும்? அங்கே ஒரு நாளும் கடவுள் இருக்கமாட்டார். அந்தக் கோவில்களை பகிஷ்கரியுங்கள்.

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.


விலை காலணா
(மலாய் 1½ சதம்)

# காந்தி

திங்கள், வியாழன் வெளிவரும்: வருட சந்தா ரூ. 3—0—0.

மலர் 2 | சென்னை, 1931 ஜூலை 30௳, பிரஜோற்பத்தி ஆடிமீ 15௳ வியாழக்கிழமை | இதழ் 12

## மகாத்மா லண்டன் ஜாகை



கிங்ஸ்லி ஹால்.

இதற்கு பெயர் கிங்ஸ்லி ஹால். ஏழைகளுக்கு வேலை செய்யும் பரோபகாரிகள் வாசஸ்தலம். இதன் தலைவியின் பெயர் மிஸ். மாரியல் லெஸ்டர். இங்கு பற்பல நாட்டைச் சேர்ந்த 12 ஆணும், பெண்ணும் வாசஞ் செய்கிறார்கள். மிஸ். லெஸ்டர் 29 வருஷ காலமாக லண்டன் ஏழைகளுக்கு உழைத்து வருகிறார். மகாத்மா காந்தியை பார்ப்பதற்கென்று இந்தியாவிற்கு வந்தார். மகாத்மாவிடம் டாக்டர் ரவீந்தரநாத தாகூர் பந்துவால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். ஒருமாத காலம் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் வாசஞ் செய்தார். அது முதல் இது வரை மகாத்மாவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

லண்டனுக்குச் சென்றால், அவருடன் தங்க சௌகரியப்படுமோ என்று மகாத்மா மிஸ் லெஸ்டருக்கு எழுதிக் கேட்டார். உடனே மகாத்மாவை வரவேற்க கிங்ஸ்லி ஹாலில் ஏற்பாடுகள் ஆரம்பமாயின. மெத்தையிலுள்ள 3 சிறிய அறைகளை மகாத்மாவிற்காக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மெத்தை அறைகளுக்கு முன்பு ஆகாயவெளி இடம் விசாலமா யிருக்கிறது. ஒரு பக்கத்தில் சிறு தோட்டமும் மெத்தையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மகாத்மாவிற்கு தூங்கவோ, பிரார்த்தனை செய்யவோ மெத்தையிலேயே போதிய சௌகரியங்கள் இருக்கின்றன. மகாத்மா லண்டனில் இருக்கும்போது அவர் உபயோகத்திற்காக ஒரு இந்திய டாக்டர் தமது மோட்டாரை கொடுத்திருக்கிறாராம்.

மிஸ் லெஸ்டருக்கு மகாத்மா மீது அளவற்ற மதிப்புண்டு. "மகாத்மா ஒரு ஆச்சரியமான மனிதர்" என்று அவர் சொல்லுகிறார்.

கிங்ஸ்லி ஹாலில் வாசஞ்செய்பவர்கள் ஏழைகளுக்காக உழைக்க கங்கணம் கட்டுபவர்கள் ஆவர். அவர்களுக்கு சாப்பாடுபோக வாரம் 4-8-0 ரூபாய் கைச்செலவு, துணி முதலியவைகளுக்காக மிஸ். லெஸ்டர் கொடுக்கிறார். லண்டன் பட்டணத்தில் ஒரு ஏழை சம்பாதிப்பதை விட இத்தொகை மிகவும் குறைவானது. இருந்தாலும் அங்கு வாசஞ் செய்கிறவர்கள் தாங்களாகவே எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிற படியால், இந்தப் பணத்திற்குள் தங்கள் சௌகரியங்களை கட்டுப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

Koviloor Digital Library



# கவர்னரை கொல்ல முயற்சி :: மகாத்மா கண்டனம்

சென்ற 22உ காலை புனா பர்கூசன் காலேஜிலுள்ள வாடியா வாசகசாலையைப் பார்க்க, பம்பாய் ஆக்டிங் கவர்னர் சர். எர்னஸ்ட் ஹாட்சன் வந்தார்.

கவர்னர் வாசகசாலையைப் பார்வையிட மாடிப்படிகளில் ஏறுகையில் மாணவர்கள் வந்தே மாதர கோஷம் செய்தனர். கோகாதே என்ற மாணவர் வாசகசாலை மண்டபத்தின் கதவுக்கருகில் உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். கவர்னர் உள்ளே வந்து அங்கு தொங்கவிடப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக்கொண் டிருக்கையில், கோகாதே எழுந்திருந்து கையிலிருந்த புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு தன் பையிலிருந்து துப்பாக்கியை எடுத்து நிதானமாக கவர்னர் மீது குறிவைத்துச் சுட்டார். இச் சம்பவத்துக்குப் பின், அவர் சிறிதும் கலவர மடைந்ததாகத் தெரியவில்லை. அவர் முகத்தில் எவ்விதமான பரபரப் புணர்ச்சியும் காணப்படவில்லை. கோகாதே வாடியா வாசகசாலையிலிருந்து போலீசாரால் வெளியே கொண்டுவரப்படுகையில் அங்கு கூடி நின்ற மாணவர்களைப் பார்த்து,

“ஷோலாப்பூர் அநியாயத்துக்காக நான் பழிக்குப்பழி வாங்க நினைத்தேன். ஆனால் அவர் (கவர்னர்) தப்பிவிட்டார். இது ஒரு எச்சரிக்கையேயாகும். மகாராஷ்டிர வாலிபர்களே! வீறுகொண்டெழுங்கள்! என்னைப் பின்தொடர்ந்து ஷோலாப்பூர் அக்கிரமத்துக்காகப் பழிக்குப்பழி வாங்குங்கள்” என அறிவித்தார்.

இச்சம்பவத்துக்குப் பின் கவர்னர் கல்லூரியிலிருந்து புறப்பட்டுச் செல்லுகையில் “வேலுைம் ஹாட்ஸனே! உனக்கு நன்றாக வேணும்” எனச் சில மாணவர்கள் கத்தியதாகச் சொல்லப்படுகிறது.

பின்னல் அங்கு லேடி ஹாட்சன் உட்கார்ந்திருந்த மோட்டார்மீது சிலர் கல்லெறிந்து கண்ணாடிகளை உடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

## மகாத்மா கண்டனம்

கவர்னர் இந்த ஆபத்திலிருந்து தப்பியதை பாராட்டி, மகாத்மா, சர்தார் பட்டேல் இருவரும் கவர்னருக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்களாம். மகாத்மா இச்செய்கையை கண்டித்து “நவஜீவன்” பத்திரிகையில் எழுதுகிறார்,—

பர்கூசன் கல்லூரி மாணவர் பம்பாய் ஆக்டிங் கவர்னரை மாய்க்க முயன்றதன் நோக்கம் என்னவாக விருக்கக் கூடும்? பழிக்குப்பழி வாங்க முயன்றதினால், பகைமை உணர்ச்சியை மிகுதிப் படுத்தினரே யொழிய, வேறில்லை. இம்மட்டோ! எத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் கொலை புரிய முயன்றாரென்பதை நோக்குமிடத்து, அம்மாணவரின் கொடுந் துரோகம் இனிது விளங்கும். கவர்னர் பர்கூசன் கல்லூரிக்கு விருந்தினராக வந்திருக்கின்றார் வீடுதேடி வந்தவரை எந்நிலைமையிலும் பாதுகாக்க வேண்டுவது தலைசிறந்த கடமையாகும். ஜென்ம விரோதியானாலும், வீடுதேடி வந்தவனை அரபியர்கள் கொலை புரிய மாட்டார்கள். பலாத்கார செயல் புரிவார்க்கு வரம்பு இல்லையே! இத்தகைய செயல்களால் இந்திய நாட்டிற்கு மதிப்பு உண்டாகாது; அவமதிப்பே உண்டாகும்; சுயராஜயம் பெறுவதற்கான தகுதியுடைமை அதிகரித்து விடாது; அதற்கு மாறாக குறையும்; முடிவாக நாம் சுயராஜ்யம் பெறுவதற்கும் தாமதம் ஏற்படும்.

சில ஆபிரக்கணக்கான கொலைகாரர்கள் எல்லா பிரிட்டிஷாரையும் கொலை செய்வதில் சித்தி பெற்று விட்டன ரென்று நினைத்துக்கொள்வோம். அவர்களால் இந்தியாவை ஆட்சிபுரிய முடியுமா? பலாத்கார வெறி பிடித்தவர்களாய் அவர்கள் தங்களுக்கு விருப்பமில்லாதவர்களை யெல்லாம் கொலைபுரிவ ரென்பதில் எத்துணையும் ஐயமில்லை.

---

நான் பம்பாய் கார்ப்பரேஷன் தலைவராயிருந்ததையோ, இந்தியசட்டசபை தலைவராயிருந்ததையோ, பெரிய கௌரவமாய் நினைக்கவில்லை ஜெயிலுக்குப்போதும் பாக்கியம கிடைத்ததையே எல்லாவற்றையும் விட பெரியதாய் நினைக்கிறேன்,—வி. ஜே. பட்டேல்.

Koviloor Digital Library



# விலங்கு போச்சு, குட்டை வந்தது டும், டும் !

வட நாட்டிலிருந்து ஒரு பணக்கார வியாபாரி தென்னாடு நோக்கிவந்தான். வழியில் திருடர்கள் அவனிடம் இருந்ததை உறிஞ்சிக்கொண்டு அவனையும் நூறு மொகராவிற்கு விற்றுவிட்டார்கள். அடிமையாக இருந்து வியாபாரி கஷ்டப்பட்டான். மனம் உடைந்தான். இச்சமயம் இவன் நண்பன் ஒருவன் அங்கே தற்செயலாய் வந்தான். வியாபாரியின் நிலைமையைக் கண்டு இறங்கி நூறு மொகரா கொடுத்து அவனை விடுவித்தான். தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் உபசரித்தான். அவன் குணத்தைக்கண்டு மனங்களித்து தன் மகளை விவாகஞ்செய்து வைத்து ஆயிரம் பொகராவும் சீதனமாகக் கொடுத்தான்.

வியாபாரிக்கு அடிமை வாழ்வு நீங்கி விவாகமாய் விட்டது. பழைய எஜமான் அதிகாரம் இனி இவனிடம் வராது. ஆனால் புதிதாக ஒரு அதிகாரம்—தொல்லை கிளம்பியது. காலை முதல் இரவு வரை புருஷனிடம் போராடுவதும், கடுமையாக வேலை வாங்குவதும், எடுத்ததற்கெல்லாம் குற்றஞ் சொல்லுவதும் மனைவியின் வழக்கமாய் விட்டது. புருஷன் பொறுத்துப்பார்த்தான் முடியவில்லை. ஒருநாள் துணிந்துவிட்டான். மெதுவாய் "நீ நன்றி கெட்டவள்" என்று சொன்னான். அவள் பொறுப்பாளா? "ஆம், உன்னைப்போல. நூறு மொகரா கொடுத்து எனது தந்தை யல்லவா உன்னை விடுவித்தார்?" என்றாள். புருஷனுக்கு அதற்குமேல் தாங்க முடியவில்லை.

"ஆம். நூறு மொகரா கொடுத்து திருடனிடமிருந்து விடுவித்தார். ஆயிரம் மொகராவிற்கு உன்னிடம் விற்றுவிட்டார்" என்றான்.

விலங்கு போச்சு, குட்டை வந்தது டும், டும் !

ஒரு துன்பத்திலிருந்து விடுவித்து மற்றொரு துன்பத்தில் மாட்டி வைத்தால், நன்றி செலுத்துவது என்ற பேச்சுக்கு எங்கு இட மிருக்கிறது ?

மேற்படி கதையில் மனைவியின் நடத்தையைப்போல பிரிட்டிஷார் சொல்லுகிறார்கள். அவர்கள் செய்த நன்றிகளை இந்திய தேசியவாதிகள் மறந்து விட்டார்களாம் !

இந்தியர் மீது மிகுந்த அன்பு இருப்பதாக சில பிரிட்டிஷார் சொல்லுகிறார்கள். அவர்கள் கூட "இந்தியாவை பிரிட்டிஷாரே உள்நாட்டு கலகத்திலிருந்தும் குழப்பத்திலிருந்தும் தடுத்த"தாக சொல்லாமல் இருப்பதில்லை.

ஆனால் ஒருவராவது "விவாக"த்தையாவது, அதன் பின்பு ஏற்பட்ட அநுபவத்தையாவது பற்றி பேசுவதில்லை.

தாமர்லேன், நாதர்ஷா இந்தியாவில் செய்த அக்கிரமங்களைப்பற்றி வாய்ச் சாலகமாக பேசுகிறார்கள். ஹேஸ்டிங்ஸ், ராபர்ட்கிளைவ பற்றி அவர்கள் நினைப்பதாய் தெரியவில்லை. குழப்பம், சண்டையைப்பற்றி பேசுகிறார்கள். இந்திய சமூதாயத்தையே பேடிகளாக்கி விட்டதை மறந்து விடுகிறார்கள். பழைய காலத்து கொள்ளைகளைப்பற்றி பேசுகிறார்கள். "சட்ட" பூர்வமாய், நிரந்தரமாய் இந்நாட்டிலிருந்து சுரண்டிக்கொண்டு போவதை மழுப்புகிறார்கள். அடிக்கடி பண்டைக்காலத்தில் நடந்த அன்னியர் படை எடுப்புகளை சுட்டிக்காட்டுகிறார்கள். இடைவிடாமல் பலைபோல இந்தியாவை அமுக்கிவைக்கும் அடிமைத் தனத்தை குறிப்பிடுகிறார்கள் இல்லை.

நம்மை நூறு மொகரா கொடுத்து வாங்கியதையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் மொகராவிற்கு மறுபடியும் அடிமைப் படுத்தியதைப்பற்றி சிந்திப்பதில்லை. நமது நட்பு விருத்தி யடையலாம். ஆனால் இங்கிலாந்து இம்மாதிரி பேசுவதை விட்டுவிடவேண்டும்.

—பிரீ பிரஸ் ஜர்னல்

வால் போச்சு,
கத்தி வந்தது டும், டும்,
விலங்கு போச்சு,
குட்டை வந்தது டும், டும், டும்.

---

## பத்திரிகைகள்.

| தேசம் | ஜனத்தொகை | பத்திரிகைகள் |
|---|---|---|
| இந்தியா | 318, 942, 480. | 3,439 |
| கானடா | 8,788, 483. | 1,554 |
| அமெரிக்கா | | |
| ஐக்கிய நாடு | 115, 378,000, | 20,681 |
| ஜப்பான் | 61,081, 954, | 4,592 |
| சிசிலி | 3,964,462. | 627. |

Koviloor Digital Library



# குடியரே, கவனியுங்கள்!

இந்தியாவிலுள்ள குடிகாரர் எவ்வளவு குடிக்கிறார்கள் தெரியுமா? 1929-30-வது வருஷத்தில் மதுபான வகையரா மூலம் இந்திய சர்க்காருக்கு 20 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது அதாவது அதற்கு முந்திய வருஷத்தைவிட அந்த வருஷம் 44 லட்சம் ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அந்த வருஷம் இந்தியாவில் நாட்டு சாராயம் எவ்வளவு செலவாயிருக்கிறதென்று திட்டமாகத் தெரியவில்லை. எனெனில் செலவான காலத்திற்குப் பின் 12 மாதகாலம் கழிந்த பின்னருங்கூட பம்பாய், சிந்து, மத்திய மாகாணம், பீரார், பர்மா முதலிய மாகாணங்கள் அது சம்பந்தமாக தங்கள் கணக்குகளை சமர்ப்பிக்கவில்லை. சென்னை மாகாணம் 15 லட்சம் காலன் நாட்டு சாராயத்தைக் குடித்திருக்கிறது. பீராரும் ஒரிசாவும் 10 லட்சம் காலன் சாராயமும், வங்காளம் 5 லட்சம் காலன் சாராயமும், பாஞ்சாலமும் ஐக்கிய மாகாணமும் மூன்றரை லட்சம் காலன் சாராயமும் அசாம் இரண்டரை லட்சம் சாராயமும் குடித்திருக்கின்றன.

மொத்தம் இந்தியாவுக்கு 4,38,000 காலன் பிராந்தி இறக்குமதியாகிறது. இதில் கிட்டத்தட்ட 4,00,000 காலன் பிராந்தி பிரான்ஸிலிருந்து வருகிறது.

ஜின் மொத்தம் 1.31,000 காலன் இந்தியாவில் இறக்குமதி ஆகியிருக்கிறது இதில் 1.00000 காலன் ஜின் பிரிட்டனிலிருந்து வருகிறது.

மொத்தம் விஸ்கி 5, 45,000 காலன் இறக்குமதியாகியிருக்கிறது. இதில் 5'39.000 காலன் பிரிட்டனிலிருந்து இறக்குமதியாகியிருக்கிறது.

ரம் மொத்தம் 2,05.000 காலன் இறக்குமதியாயிருக்கிறது. இதில் 1 93,000 காலன் ஜாவாவிலிருந்து வந்திருக்கின்றது.

சாராய வகையருக்கள் மொத்தம் 19000 காலன் இறக்குமதியாயிருக்கிறது. இதில், 11,000 காலன் பிரான்சிலிருந்து வந்திருக்கிறது.

மொத்தம் 13 லட்சத்து 38 ஆயிரம் காலன் இறக்குமதியாயிருக்கிறது.

1929-30-ம் வருஷத்தில் இந்தியாவில் மாகாணவாரியாக, கலால் இலாகா மூலம் கிடைத்த வரும்படியாவது:—

| | (ஆயிரம் ரூ.) |
|---|---|
| சென்னை | ... 5,9617 |
| பம்பாய் | .... 4,02 06 |
| வங்காளம் | ... 2,26 25 |
| ஐக்கிய மாகாணம் | ... 1,29 86 |
| பாஞ்சாலம் | ... 1,13 73 |
| பர்மா | ... 1,28 31 |
| பீகார், ஒரிசா | ... 1,90,81 |
| மத்திய மாகாணம், பீகார் | ... 1,25 45 |
| அசாம் | ... 66 23 |
| மொத்தம் | 19 78 87 |

இந்த வரும்படி 1930-31-ல் குறைந்துபோயிற்று. தேசீய இயக்கம் தீவிரமாய் பரவியபடியால் கலால் வருமானத்திற்கு ஆபத்து ஏற்பட்டது 1930-31-ல் கிடைத்த வரும்படியை கவனிப்போம்.

| | (ஆயிரம் ரூ.) |
|---|---|
| சென்னை, | ... 5,27,63 |
| பம்பாய், | ... 3,01 56 |
| வங்காளம், | ... 1,80 36 |
| ஐக்கிய மாகாணம் | ... 1,11,82 |
| பாஞ்சாலம், | ... 1,14,88 |
| பர்மா, | ... 1,08 55 |
| பீகார், ஒரிசா, | ... 1,42,11 |
| மத்திய மாகாணம், பீகார், | ... 86 29 |
| அசாம் | ... 58,37 |
| மொத்தம். | ... 16,31,57 |

இந்த வருஷம் வருமானம் இன்னும் குறைந்துவிடும். காரணம் தீவிரமாய் நடக்கும் மதுக்கடை மறியலே.

குடிகாரர் தாங்களாக குடியை விடுவார்களென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. எதற்காக குடிக்கிறார்கள்? ஸ்திர புத்தியை கெடுக்கவே குடிக்கிறார்கள். புத்தியை கெடுக்க குடிக்கிறவர்களுக்கு நல்ல புத்தி தானாக வருமா?

இந்தியா ஹிந்துக்களுக்கும் சொந்தமல்ல—முஸ்லிம்களுக்கும் சொந்தமல்ல. அது இந்தியர்களுக்கே சொந்தமாகும். இவ் உன்னதமான தேசிய லக்ஷியத்தை அனைவரும் அறிந்தால் தான் வகுப்புப் பிரச்னையைப் பற்றிய வாக்குவாதம் அடியோடு மறையும்.—காசிம்பஜார் மகாராஜா.

Koviloor Digital Library



ஒரு நாளும் வராது. குடி கிடைக்காமல் செய்தோ, மானமுள்ளவர்களுக்கு அதை விளம்பி விட்டோ தான் தடுக்க வேண்டும் இதற்கு மறியல் ஒன்றே சரியான வழி.

குடிகாரர்களே, எவ்வளவு பணத்தைவீணுக தொலைக்கிறீர்கள்? உங்கள் அறிவை கெடுப்பதற்காக கையிலுள்ள காசை தொலைக்கலாமா? உங்கள் அறிவு கெடுவதற்காக, அறிவுத்தெளிவுள்ள உங்கள் மனைவி, மக்கள் பட்டினி கிடக்கவேண்டுமா? நீங்கள் மனிதராய்ப் பிறந்தது எதற்காக? உங்களுக்கு கடவுள் புத்தியை கொடுத்திருப்பது எதற்காக? குடிப்பதற்காகவா?

---

## யார் அறிந்தார் அவர் பெருமை?

லண்டனிலே ஒரு இந்து மாணவர் 40 வருஷங்களுக்கு முன்னால் படித்துக் கொண்டிருந்தார். அவரைப்பற்றி அச்சமயம் ஒருவரும் விசேஷமாய் கவனிக்கவில்லை. எத்தனையோ பேர்களில் அவர் ஒருவர். உலகமே திகைக்கும்படி செய்யக்கூடிய சக்தியுள்ளவரென்று எந்த ஜோசியரும் அச்சமயம் சொல்லவில்லை கைரேகை நிபுணர்களும் கூட இந்த ரகசியத்தை கண்டு பிடிக்கவில்லை. அவர் கையில் தோரியோ என்றவர் எழுதிய வியாசம் ஒன்று கிடைத்தது தோரியோ பெரிய தத்துவஞானி. "சர்க்காரை காக்க மனிதரல்ல, தனி மனிதனை காக்கவே சர்க்கார். தேசபக்தியை காட்டிலும் சன்மார்க்கமே உயர்ந்தது" என்பவை தோரியோவின் கொள்கைகள். அக்கிரமமாக வரி வசூலிப்பதை ஆட்சேபித்து, தோரியோ ஜெயிலுக்குப் போனாராம். இவற்றை யெல்லாம் அந்த இந்து மாணவர் படித்தார். அவர் மனதில் அச்சமயம் என்ன தோன்றிற்று? யாருக்கும் தெரியாது. ஆனால் இன்று உலகம் முழுவதிலும் அந்த மாணவருடைய நவீன கொள்கை பரவி மக்களை வென்று வருகிறது. அவரே மகாத்மா காந்தி!

மேனாட்டு நாகரிகம் அதிக வேகமாக இயந்திரங்களுக்கடிமை யாவதை ஸ்ரீ தோரியோ கண்டித்திருக்கிறார். 1840ம் ஆண்டிலேயே அவர் அதைப்பற்றி பின் வருமாறு கூறியிருக்கிறார். "சுகம், சந்தோஷம் முதலியவற்றைப் பெருக்கவல்ல ஞான சாதனங்களை மாத்திரமே அதிகமாகச் சேகரிப்பது இதன் நோக்கமாயிருக்கிறது. இயற்கையை வசப்படுத்த வேண்டும், தனத்தைக் கட்டியாளவேண்டும். எதேனும் ஒரு ஸ்தானம் ஏற்பட்டு அதன் மூலமாகச் சந்தோஷ சாதனங்கள் பரவவேண்டும். சன்மார்க்கமும் அவனுடைய தேவைகளைக் கட்டுப்படுத்துவதும் சிறிது கூட கவனத்திற்குரியன அல்ல.

உலக சக்கரத்தில் கட்டுண்டு அதன் வேகத்தால் மயக்க மடைந்து, தொழிற்சாலை சாமான்களை உற்பத்திசெய்வதன் மூலமாகப் பொருள் விர்த்தியடைய வேண்டுமென்ற சுழலுக்குள் அகப்பட்டு, தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமாகப் புதுத்தேவைகளை உற்பத்தி செய்துகொண்டே நாம் இந்த வெறிகொண்ட உலக மக்களாயிருக்கிறோம். பிழைக்கும் வழி தேடி யலைவதில் வாழ்க்கையின் லட்சியத்தை இழந்துவிடுகிறோம்." ஸ்ரீ காணுப்தோரியோ போன்றவர்களை நாம் உற்பத்தி செய்யவேண்டும். இல்லாவிடில் இயந்திர நாகரிகம் ஆசைப் பெருக்கால் மூச்சு திணறித தவித்து நாசமடைந்து விடுவோம்.

ஆனால் ஸ்ரீ தோரியோவைப் போன்ற எளிய வாழ்க்கை நடத்துவது இப்போது முடியாத காரியமாயிருக்கும். உயர்ந்த செலவில் அதிக தேவைகளை அவசியமாக்கிக்கொண்டு வாழ்தல் இப்போது அவசியமாயிருக்கிறது. இருந்தாலும் அவ்வப்போது சில தலைவர்கள் தோன்றி சமூகம் இயந்திரங்களுக்கடிமை யாகாமல் காக்க வேண்டியது அவசியம். தற்கால உலகில் இதுவே மிக அவசியமாயிருக்கிறது.

உலகில் எங்கும் தொழிற்சாலைகளில் சிக்கல்கள் நேர்ந்திருக்கின்றன. ஒரு பாதி ஜனங்கள் சாமான்களை விற்க வழியின்றியும் மற்றொரு பாதி ஜனங்கள் தமக்கு தேவையான சாமான்களை வாங்கமுடியாமலும் கஷ்டப்படுகின்றனர். ஆகவே எல்லோரும் வருமையிலாழ்ந்து விடுகிறார்கள். இவ்விதம சிகாகோ சர்வ கலாசாலைத் தலைவர் டாக்டர் ராபர்ட் மேனுட் ஹட்சின்ஸ் கூறுகிறார்.

இதற்குப் பரிகாரம் கூறும்போது கல்வி முறையை முற்றிலும் மாற்றித் தற்காலத் திமைகளைக் களையவல்ல புத்திமான்களை யுற்பத்தி செய்யவல்ல சர்வ கலாசாலைகள் வேண்டுமென்கிறார். தாம் தலைமை வகிக்கும் சிகாகோ சர்வகலாசாலையில் தமமாலான முயற்சி எடுத்துக்கொண்டு தம் பரிகாரத்தைச் செயலில் காட்டவேண்டிய ஆவலை செய்கிறார்.

Koviloor Digital Library



# நடுத்தெரு நாராயணன்!

பிரிட்டன் இன்று நடுத்தெரு நாராயணன் போல பரிதவிக்கிறது என்று பல அறிஞர் சொல்லுகிறார்கள். நடுத்தெரு நாராயணனுக்கு தங்க இடம் கிடையாது. உண்ண உணவு கிடையாது. உடைமை செய்ய பொருள் கிடையாது. அந்த நிலைமைக்கு பிரிட்டன் வருவதென்றால், உண்மையில் நமக்குகூட கொஞ்சம் கண்ணீர் வருகிறது. நடுத்தெரு நாராயணனை பிரிட்டன் மாறிவிட்டதா? அல்லது இனி மாறப்போகிறதா? இனி மாறப்போவதாயிருந்தால் அதை தடுக்க முடியாதா?

சென்ற இதழில் ஒரு அமெரிக்கர் கூறியதை பிரசுரித்தோம். லண்டனில் "நியூஸ் கிரானிகள்" என்பது பிரபல பத்திரிகை. அதன் ஆசிரியர் ஸ்ரீ டாம்கிளார்க் ஒரு அமெரிக்க பத்திரிகையில் எழுதுகிறார்:—

1776ம் வருஷம் பிரிட்டனுக்கு மறக்க முடியாத ஒரு வருஷம். அந்த வருஷத்தில் பிரிட்டன் அமெரிக்காவை இழந்தது 155 வருஷங்கள் கடந்துபோயின. மறுபடியும் பிரிட்டன் அதே தவறை செய்யப்போகிறதா என்று அமெரிக்காவிலிருந்து கேட்கலாம். இதற்கு நான் திடமென்று பதில் சொல்லிவிட முடியாது. ஆனால் அமெரிக்காவை இழந்த சமயம் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கும், இப்பொழுது இருப்பவர்களுக்கும் வித்தியாசமுண்டு. அமெரிக்கா என்ன கேட்டது? நம்முடன் சமத்துவமாய் இருக்க விரும்பியது. பிரிட்டன் அடிமையாய் வைக்க விரும்பியது. அதனால் நம்முடைய சம்பந்தமே யில்லாத பூர்ண விடுதலை யடைந்தது அப்பொழுது செய்த முட்டாள்தனத்தை பிரிட்டன் அதற்குள் மறந்துவிட முடியுமா? 1931 வது வருஷம், பிரிட்டனுக்கு ஒரு பெரிய கண்டமுள்ள வருஷம். ஜனநாயக கொள்கையை பிரிட்டன் நம்புவது உண்மையானால், அதை வெளிக்காட்ட தற்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தைப் போல முன்பு ஏற்பட்டது கிடையாது. பிரிட்டன் இனி பின்வாங்க முடியாது."

பிரிட்டன் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளப் போகிறதா, அல்லது நடுத்தெரு நாராயணனாகப் போகிறதா?

# இத்தாலியில் குசேலர் கூட்டம்.

("தேவிதாசன்" எழுதுகிறார்.)

குசேலர் ஏராளமான குழந்தைகள் பெற்றார். பெயரிடுவதற்கு பெயர் கிடைப்பது கஷ்டமாய் போகவே நட்சத்திரங்களின் பெயர்களை வரிசையாக கொடுத்துக்கொண்டு போனார். அம்மாதிரி வீரர்கள் இந்தியாவில் அதிகம் உண்டு எவ்வளவு தரித்திரத்திலும், இந்தப் போட்டியில் யாரையும் வென்று விடுவார்கள். இதை தாயுமானவர் கூட அறிந்திருக்கிறார் அறிந்துதான் "கலகலென புலபுலென புதல்வர்களை பெறவீர் காப்பதற்கும் வகை யறியீர். கைவிடவும் மாட்டீர்" என்றார். இந்தியாவில், புருஷன், மனைவிக்கே அன்னத்திற்கு தாளம் போடும்போது, குசேலர்கள் எப்படி பிழைப்பார்கள்? இதனால்தான் கர்ப்பத்தடை பிரசாரம் பலமாயிருக்கிறது. குசேலர்கள் குறைந்து வருகிறார்கள். நல்ல வேளையாக இந்த குசேலர்களுக்கு இத்தாலியில் ஆதரவு கிடைத்திருக்கிறது 1950 வது வருஷத்திற்குள் இத்தாலி ஜனத்தொகை 600 லட்சமாகிவிட வேண்டுமென்று முசோலினி பெண்கள் கூட்டத்தில் 1926ல் பேசினார். அது பலன் கொடுத்துவிட்டது! இவ்வருஷம் ஜனத்தொகை 421 லட்சத்திற்கு உயர்ந்துவிட்டது. அதாவது 1921 வது வருஷத்தைவிட 34 லட்சம் கூடியிருக்கிறதாம். கிருஷ்ணன் குசேலருக்கு உதவியதைப்போல, முசோலினியும் உதவி செய்கிறாராம் பெரிய குடும்பத்திற்கு குறைந்த ரயில் சார்ஜ். அதிக குழந்தைகள் பெற்ற தாயாருக்கு சன்மானம், தகப்பனுக்கு இனமாக ரயில் பிரயாணம். வேறு என்ன வேண்டும்? இத்தாலியர் தங்கள் திறமையைக்காட்ட ஒரு சரியான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது இந்தியாவிலுள்ள குசேலர்களுக்கு அம்மாதிரி சந்தர்ப்பம் கிடைத்தால் விட்டு விடுவார்களா? அடடா, முசோலினி இந்தியாவிற்கு எப்பொழுது வரப்போகிறார் என்று பல குசேலர் ஏங்குகிறார்கள்! இத்தாலியில் பிரமச்சாரிகளுக்கு கடுமையாக வரிவிதிக்கிறார்கள். அதன் மூலம் 5½ லட்சம் பவுன் வருகிறது. அதை என்ன செய்கிறார்கள்? பிரசவ ஆஸ்பத்திரிக்கு செலவழிக்கிறார்கள்! பேஷ்!

Koviloor Digital Library



# ஜப்பானில் காந்தி மயம்.

ஜப்பான் பத்திரிகைகள் இந்திய தேசிய இயக்கத்தைபபற்றி ஏராளமாக செய்திகளை பிரசுரித்து வருகின்றன. இந்தியா சென்று திரும்பும் ஜப்பான் வர்த்தகர்கள் மகாத்மாகாந்தியைப்பற்றி பல விஷயங்களை பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். ஜப்பானில் வாசஞ்செய்யும் ஜெர்மனியர், அமெரிக்கர், ஐரிஷ்காரர்களும் இந்தியர் கோரிக்கையை ஆதரித்து ஜப்பான் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்.

### இயேசு வந்தால்?

ஒரு கிறிஸ்தவ பாதிரி ஜப்பான் தினசரி ஒன்றில் எழுதுகிறார்:—

"இயேசு மறுபடியும் பூலோகத்திற்கு வந்தால், நேராக அவர் இந்தியா சென்று காந்தி போராட்டத்தில் கலந்து கொள்ளுவார். ஆங்கிலேயரே, உங்களுடைய சொந்த கௌரவத்தையும், உங்கள் நாட்டின் மதிப்பையும் உத்தேசித்தாவது, இந்தியாவின் நிலைமையை சீர்தூக்கிப் பாருங்கள்."

### காந்தியும் புத்தரும்

டாக்டர் ஷேர்வுட் எட்டி என்ற அமெரிக்கர் ஜப்பானில் பேசியதாவது:—

கன்பூஷியஸ் என்ற சீன குரு, புத்தர், இயேசு இவர்கள் வாழ்ந்த காலங்களில் அவர்களுக்கிருந்த பக்தர்களைவிட, காந்திக்கு எவ்வளவோ அதிகமாக பக்தர்கள் இருக்கிறார்கள். அவருடன் நான் ஒருதடவை வெளியில் புறப்பட்டேன். இருபுறமும் அன்பொழுகும் முகங்களோடு ஜனங்கள் ஆவலாய் அவரை நோக்கி நின்றார்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை தூக்கி காட்டினர். படித்தவர்கள் அவரைப் பார்த்ததும் பிரார்த்தனை செய்தனர். பலர் அவர் உடம்பையோ, ஆடையையோ தொட்டு கண்ணில் வைத்துக் கொண்டனர். இவற்றைக்கண்டு கொஞ்சமும் சலனப்படாமல் புத்தரைப்போல அமைதியாக அவர் நடந்துசென்றார். அவர் முகத்தில் ஒரு ஒளி விளங்கியது. அதை பூவுலமெங்கு தேடினாலும் வேறிடத்தில் காணமுடியாது. கண்டேன், கண்டேன், கடவுளிடம் ஐக்கியமான ஒரு மகா புருஷரை கண்டேன்."

### ஜப்பான் காங்கிரஸ்

இந்திய காங்கிரஸ் சபையின் கிளைச்சபை ஒன்று ஜப்பானில் இருக்கிறது. சென்ற வருஷம் உப்பு சட்டமறுப்பு ஆரம்பித்தவுடன், அதைச்சேர்ந்த 4 பேர் 2500 ரூபாயுடன் இந்தியாவிற்கு சட்டமறுப்பு செய்ய வந்தார்கள். இந்தியாவில் நடக்கும் முக்கியமான ஹார்த்தால் தினங்களில் ஜப்பான் இந்திய வர்த்தகரும் ஹார்த்தால் அனுஷ்டிப்பதுண்டு. ஜப்பான் எங்கும் காந்தி மயம் பரவியிருக்கிறது. ஜனங்கள், பத்திரிகைகள், தலைவர்கள் எல்லாரும் இந்தியரிடம் அநுதாபம் காட்டுகிறார்கள்.

# உப்பு தொல்லை

(மகாத்மா காந்தி)

டெல்லி ஒப்பந்தத்தில் உப்பு எடுத்துக் கொள்ளும் விஷயத்தைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறதோ அதன்படி மீர்பூர், கல்பாக் என்ற இடங்களிலுள்ள ஜனங்கள் நடந்து கொள்ளாமையினால், அரசாங்கத்தார் இந்த உப்பெடுக்கும் சௌகரியத்தை அங்கு வாபீஸ் வாங்கிக்கொண்டுவிட்டார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஜனங்கள் மணங்கு கணக்காக உப்பைத் திரட்டி ஒட்டகங்களின் மேல் எடுத்துச் சென்றனராம். இது உண்மையாயிருந்தால், ஒப்பந்தத்திற்கு விரோதமேயாகும். இந்த அற்பத் தவறுக்கு அரசாங்கத்தார் மிகக் கடுமையாக நடந்து கொண்டார்களா இல்லையா என்பது, முழு விவரங்கள் அறிந்துகொண்ட பிறகே கூறமுடியும். சென்னை மாகாணத்தில், சிலர் உப்பு உற்பத்தி செய்து, வண்டிகளில் எடுத்துச் சென்றார்களாம் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். வண்டிகளில் உப்பெடுத்துச் செல்வது தவறேயாகும். ஆனால் அரசாங்கத்தார், இவ்விஷயத்தில் எச்சரிக்கை செய்து அதனுடன் நின்றிருக்கக் கூடாதா? இதுபோன்ற விஷயங்கள் சம்பந்தமாக, உண்மையான விவரங்களைப் பொறுப்புள்ள காங்கிரஸ் தலைவர்கள் எனக்கனுப்பினால் நன்றாயிருக்கும். கிராமவாசிகள், தங்கள் குடும்ப உபயோகத்திற்காகவும், எவ்வளவு தூரம் நடந்து செல்ல முடியுமோ அவ்வளவு தூரத்திற்குள்

(96-ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்களை கைக்குள் போட்டு இந்நாட்டில் சீமைத்துணி விற்பனை செய்ய ஒரு முயற்சி நடக்கிறது. அதை முஸ்லிம்கள் ஆதரித்தால், இந்து-முஸ்லிம் சண்டையும், பிரிட்டன் எஜமானத்துவமும் நிரந்தரமாய் விடும். முஸ்லிம்களே, எச்சரிக்கை —மௌலானா ஜாபர் அலிகான்.

Koviloor Digital Library



# உலகப் போக்கு.

## மகாத்மா இறுதிக் கடிதம்.

பர்டோலி தாலூகாவில் கிராம அதிகாரிகள் செய்யும் அன்பம் பொறுக்க முடியவில்லை. வரி கொடுக்க சக்தியில்லாதவர்கள் சாமான்களை ஜப்தி செய்கிறார்களாம். இந்த அக்கிரமத்தை பார்த்து மகாத்மாவிற்கு தாங்க முடியவில்லை. 14 தினங்களுக்குள், கிர்பந்தத்தால் வசூலித்த வரியை திருப்பிக் கொடுக்காவிட்டால், உடன்படிக்கையை மீறியதாக கருதப்படுமென்று வைசிராய்க்கு தந்தி கொடுத்தார். உடனே கவனிப்பதாகவும், நெருக் கடியை உண்டுபண்ண வேண்டாமென்றும் கேட் டுக்கொள்ளுவதாக வைசிராய் பதில் கொடுத்தார். மற்ற விவரங்களை அனுப்பும்படி பம்பாய் சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டிருப்பதாக தெரிகிறது.

## ராய் நீதில்.

ஸ்ரீ. எம். என் ராயை பம்பாய் போலீசார் கைது செய்ததைப்பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டிருக் கிறோம். கைது செய்யப்பட்டவர் எம். என். ராய் தானு என்பது சந்தேகமாம். இதற்கு முன்பு இம்மாதிரி மூன்று தடவை யார் யாரையோ எம். என். ராய் என்று கைது செய்து அப்புறம் விடுவித் தார்களாம். ஐக்கிய மாகாணத்தில் காலகங்கார் ராஜா மாளிகையை இதன் சம்பந்தமாக போலீசார் சோதனை போட்டனர். காலகங்கார் ராஜா சகோதரர் பிரிஜேஷ சிங்கையும், அவர் விருந்தாளி யாக வந்திருந்த ஸ்ரீமதி. ஸ்லேலர் என்ற வெள்ளை மாதையும் கைது செய்தனர்.

## சிம்லாவில் அடக்குமுறை.

பாஞ்சால சமஸ்தான குடிகள் மகாநாடு சிம்லா வில் 24-ல் நடைபெற்றது. ஜில்லா மாஜிஸ்திரேட் அதை சட்ட விரோதமென்று சொல்லி கலைத்த தோடு, சிக்கிய தலைவரும், காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினருமான சர்தால் சார்துல் சிங் கையும் கைது செய்தனர்.

## நல்ல புத்தி.

உதயப்பூர் சமஸ்தான சர்க்கார் காங்கிரசிற்கு விரோதமாக ஒன்றுஞ் செய்வதில்லை யென்று உறுதி கூறி, கைதியானவர்களையும் விடுவித்து விட்டபடியால், அங்கு நடந்த சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

## தேசீயக்கொடி வெற்றி.

கள்ளிக்கோட்டைக்கு பக்கத்திலுள்ள பட்டாம் பியில் காங்கிரஸ் ஆபீசிலும், கடைகளிலும் பறந்து கொண்டிருந்த தேசியக்கொடிகளை சில விரோதி கள் பறித்துக்கொண்டு போயினர். போலீசாரும் மௌனம் சாதித்தார்கள். ஜனங்கள் திகைத்தனர். இதைப்போக்க கள்ளிக் கோட்டையிலி ருந்து தலைவர்கள் அங்கு சென்று ஒரு பெரிய ஊர்வலம் நடத்தினர். காங்கிரஸ் ஆபீசிலும், பஜா ரில் ஒவ்வொரு கடையிலும் தேசியக் கொடிகள் பறக்கவிட்டனர். எங்கும் உற்சாகம், விரோதிகள் தலை நீட்டவில்லை.

## வயிற்றில் கடிக்கிறது.

காங்கிரசிற்கு விரோதமான, ஜாம்நகர சமஸ் தான துறை முகங்களை வர்த்தகர்கள் பகிஷ்கரித் தார்கள். சமஸ்தான வரும்படியில் மிக பலமாய் அடித்துவிட்டதென்று தெரிகிறது.

## சென்னை மறியல்.

சென்னையில் தெருவெல்லாம் கள் விற்பதைப் பற்றி புகார் கூறி போலீஸ் கமிஷனருக்கு தலைவர் கள் கடிதம் எழுதியிருந்தார்கள். கலால் இலாகா செய்யவேண்டிய வேலைகளைச் செய்யத் தமயிடம் ஆளில்லை என்று கமிஷனர் சொல்லி விட்டார். கலால் இலாகா எங்கே? சென்னை மறியல் மும்மு ரமாய் நடக்கிறது. திருவல்லிக்கேணி பார்த்த சாரதி குப்பத்திலுள்ள மீன் பிடிக்கும் ஜாதியார் குடிப்பதில்லை யென்று தீர்மானித்திருக்கிறார்கள். நடுத் தெருவில் கள் விற்பதை தடுக்கும்படி சென்னை கார்ப்பரேஷன் தீர்மானித் திருக்கிறது. இந்த தீர்மானத்தை கமிஷனர் சுகாதார கமிட்டி யின் அநுமதி பெற அனுப்பியிருக்கிறா. அநுமதி கிடைத்தவுடன், தெருவில் விற்பவர்கள் மீது நட வடிகை எடுக்கப்படும்.

---

(95-ம பக்கத் தொடர்ச்சி)

விற்பனை செய்யவும் உப்பை எடுக்கலாம் என்று டெல்லி ஒப்பந்தம் கூறுகிறது இந்த ஒப்பந்தப்படி, மனிதர்களே உப்பை எடுத்துச் சென்று விற்பனை செய்யலாம். கை வண்டி கூட உபயோகிக்கக் கூடாது. தோள் மீதோ தலைமீதோ ஒருவன் எடுத்துச் செல்லலாம். டெல்லி ஒப்பந்தத்தை மீறி நடக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளு முன் னர், அரசாங்கத்தார் எச்சரிக்கை செய்வர் என்று எவரும் எதிர் பார்க்கக் கூடும். இந்த உப்பு உற்பத்தியில் கோடிக்கணக்கான கிராம வாசிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் இவர் கள், அவ்வப்பொழுது அரசாங்கத்தாரால் செய்யப்படும் விதிகளைத் தெரிந்துகொண்டி ருப்பார்கள் என்று எதிர் பார்ப்பது சரியா காது. வட இந்தியாவிலாவது, தென்னிந்தி யாவிலாவது, ஜனங்கள் வேண்டுமென்றே இந்த விதிகளை மீறி நடந்திருந்தார்களானல் அதற்காக நான் ஆச்சரியமே படுவேன். எப்படி யிருந்த போதிலும், காங்கிரஸ்காரர் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும்.

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)


# காந்தி

திங்கள், வியாழன் வெளிவரும்: வருட சந்தா ரூ. 3—0—0.

மலர் 2 | சென்னை, 1931 ஆகஸ்டு 3வ, பிரஜோற்பத்தி ஆடிமீ 19வ திங்கட்கிழமை | இதழ் 13

## துப்பாக்கி சாமி

அந்தக் காலத்தில்



நாகரிக ஜாதியார் என்று பிரிட்டிஷார் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் காட்டுமிராண்டிகளாய் காடுகளில் அலைந்தனர். பச்சை மாமிசத்தை தின்றனர். தோல்களை உடுத்தினர். க்ஷவரம் செய்வது என்பது உண்டு என்பதையே அறியாமல் அலைந்தனர். அக்காலத்தில் இந்தியர் என்ன நிலைமையில் இருந்தனர்? மாடமாளிகைகளில், பட்டுப் பட்டாடைகள் கட்டி, யானை, குதிரைகள் மீது சவாரி செய்தனர். அறுசுவை உண்டி உண்டனர். இப்பொழுது? அடுத்த இதழ் "காந்தி"யை பார்க்கவும்.

கலெக்டர் காக்ஸ் பிரசங்கம் திருவல்லிக்கேணி கள்ளுக் கடைக்காரர் மூளையில் பதிந்து விட்டது போலிருக்கிறது. துப்பாக்கியை தூக்கிக் கொண்டு புறப்பட்டார் வெளியில். எங்கிருந்து புறப்பட்டார்? வீட்டிலிருந்தா? அல்ல. கள்ளுக் கடை ஆசிரமத்திலிருந்து! எதற்காக புறப்பட்டார்? துஷ்ட மிருகங்களை வேட்டையாடவா? அல்ல. சாந்த சொரூபிகளாய் நிற்கும் தொண்டர்களை—யார் அடித்தாலும் திருப்பி அடிக்க மனதிலும் நினைக்காத தொண்டர்களை வேட்டையாடப் புறப்பட்டார்! இந்த வீரர் பெயர் ஷண்முக சுந்தரமாம்.

வியாழக் கிழமை மாலை, திருவல்லிக்கேணி ஐன் ஹவுஸ் கள்ளுக் கடையில் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டு நின்றார்கள். திடீரென்று நமது வீரர் ஷண்முக சுந்தரம் துப்பாக்கி சகிதம், கள்ளுக் கடையை விட்டு வெளியே வந்தாராம். தொண்டர்களிடம் துப்பாக்கியை காட்டி, மறியலை விட்டுப் போகிறீர்களா, அல்லது சுடட்டுமா என்று பயமுறுத்தினாராம். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சவா போகிறது? ரிவால்வர்களையும், பீரங்கிகளையும், போலீஸ் தடியடிகளையும் பார்த்த தொண்டர்கள், இந்த ஓட்டைத் துப்பாக்கியைக் கண்டா பயந்து விடப் போகிறார்கள்? கள்ளுக் கடை சண்முக சுந்தரத்திற்கு உயிர் வெல்லமா யிருக்கிறது. கள்ளு விற்ற பணம் அதை விடப் பெரிதாக தேன் போல இருக்கலாம். தொண்டர்களுக்கு பணமும்,

(கடைசி பக்கம் பார்க்க)

# கொல்லுந் தொழில் வேண்டாம்

ராஜீயக் கொலைகளைப்பற்றி மகாத்மா காந்தி "யங் இந்தியா"வில் எழுதுகிறார்:—

பகத்சிங் உபாசனை தேசத்திற்கு அளவற்ற கெடுதியை உண்டுபண்ணியிருக்கிறது. பகத்சிங் சிறந்த குணங்களை பல நம்பிக்கை வாய்ந்தவர்களிடமிருந்து அறிந்தேன். அவருடைய ஒழுக்கம் என் மனதை கவர்ந்தபடியால், மிக ஜாக்கிரதையுடன் தயாரித்த தீர்மானத்தை காரச்சி காங்கிரசில் ஆதரித்தேன். ஆனால் அந்த ஜாக்கிரதையை ஜனங்கள் காற்றில் விட்டுவிட்டு பகத்சிங் செய்கையை போற்றி புகழ்கிறார்கள். அதன் முடிவு பலாத்காரமும் இழி தன்மையும் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று காங்கிரஸ் ஒரு பெரிய சக்தியாக விளங்குகிறது. பகத்சிங் உபாசனைசெய்து பகத்சிங் செய்கையை ஆதரிக்கப் புறப்பட்டால், காங்கிரசிற்கு இன்றுள்ள செல்வாக்குபோய்விடும். காங்கிரஸ் வழி முறையாகிய அஹிம்சையையும், உண்மையையும் பெரும்பான்மையோர் விரும்பாவிட்டால், காங்கிரஸ் லட்சியத்தை மாற்றிக்கொள்ளட்டும். வழி முறைக்கும், கொள்கைக்கும் வித்தியாசமுண்டு. வழி முறையை மாற்றிக்கொள்ளலாம். கொள்கையை மாற்ற முடியாது: இரண்டில் எதை ஒப்புக்கொண்டு பிரதிக்ஞை செய்தாலும், பிரதிக்ஞையை காப்பாற்றுகிற வரை இரண்டும் ஒன்றே. அஹிம்சையை கொள்கையாக ஒப்புக்கொள்ளாமல், வழி முறையாகமட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறவர்களும் காங்கிரசில் இருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் அங்கத்தினராயிருந்து கொண்டு பலாத்காரத்தில் இறங்கினால், அது நம்பிக்கைத் துரோகமாகும்.

நமது வழி முறையில் நாம் யோக்கியப் பொறுப்போடு நடந்து கொள்ளாவிடில், சுயராஜ்யத்தை தடைசெய்ய அதுவே பெரிய முட்டுக் கட்டையாயிருக்கும்.

சர்க்காருக்கு ஒரு வார்த்தை. அடக்குமுறையால் நடக்கப்போவது ஒன்றுமில்லை. இம்மாதிரி கொலைகள் அடிப்படையான வியாதியை காட்டுகின்றன. குற்றஞ் செய்தவர்களை தண்டித்துவிடலாம், ஆனால் மூலகாரணத்தை நீக்கினால் தான் இச்செய்கைகளை நீக்க முடியும். அப்படிச்செய்ய சர்க்காருக்கு சக்தியில்லாவிடில், அவர்கள் வேலையை தேசத்தாரிடம் விட்டுவிடட்டும்.

# ஆடுமாடுகளா?

ஒரு வாடகை மோட்டாரில் 4 பேருக்கு மேல் 5 பேர் ஏறிவிட்டால் உடனே போலீஸ்காரன் வந்து விடுகிறான். ஒரு ஜட்கா வண்டியில் 4 பேருக்கு மேல் 5 பேர் ஏறினால் உடனே வண்டியோட்டிக்கு அபராதம். ஆனால் ஒரு டிராம்காரில் ஈக்கள்போல கண்ட இடமெல்லாம் தொத்திக்கொண்டு போனாலும் கேட்பார் கிடையாது. ஒரு ரயில் வண்டியில், 8 பேர் ஏறக்கூடிய இடத்தில் 20 பேரை புளி மூட்டை போல அடைத்துக்கொண்டு போனாலும் கேள்வி இல்லை. சட்டமும் ஒழுங்கும் டிராம் கம்பெனியிடமும். ரயில்வே இடமும் போவதில்லை. ஏன் போவதில்லை? அவை வெள்ளையர் கம்பெனியானதால் கிட்ட நெருங்குவதற்குக் கூட சர்வ வல்லமையுள்ள சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் பயமாயிருக்கிறதாம்! ஆனால் ஜனக்கூட்டத்தின் நெருக்கமும், புழுக்கமும் தாங்க முடியாமல் ஒருவன் சங்கிலியை பிடித்திழுத்து ரயிலை நிறுத்தினால் உடனே ஆபத்து. அவனை கோர்ட்டில் கொண்டுபோய் கம்பெனியார் நிறுத்தி விடுகிறார்கள். இது நியாயமா? ஒழுங்கா? அல்லது யோக்கியமா? சட்டம் என்றால் எல்லாருக்கும் பொதுவல்லவா? கம்பெனியார் நியாய விரோதமாய் நடந்தால் ஏன் அபாய சங்கிலியை இழுக்கக் கூடாது? பிரயாணிகளுக்கு உரிமை கிடையாதா? இதன் சம்பந்தமாய் பம்பாயில் சென்ற வருஷம் ஒரு வழக்கு நடந்தது. ரயில்வே சட்டம் 108வது பிரிவின்படி, ஒரு வண்டியில் இருக்கவேண்டிய பிரயாணிகளுக்கு அதிகமாக பிரயாணிகள் ஏறினால், அபாய சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்த பிரயாணிக்கு அதிகாரமுண்டு என்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். இதை கவனிக்காமல் சமீபத்தில் ஸ்ரீ சாய்ப்சி என்றவர் மீது பம்பாயில் ஜி. ஐ. பி. கம்பெனியார் சங்கிலி இழுத்த வழக்கு தொடுத்தார்கள். பழைய ஹைகோர்ட்டு தீர்ப்பு ஆதாரத்தின் மீது மாஜிஸ்திரேட் வழக்கை தள்ளிவிட்டார். இதே குற்றத்திற்காக ஆந்திராவில் ஒரு தேசபக்தர் ஜெயில் வாசம் செய்து வருகிறார். இந்த அநியாயத்தை போக்க தீவிரமாய் கிளர்ச்சி செய்யவேண்டும். பிரயாணிகள் காசு கொடுக்காமல் மண்ணையா கொடுக்கிறார்கள்? அவர்கள் மனிதரா, மிருகங்களா?

Koviloor Digital Library



# தெய்வமே கண்ணில்லையா?

(பண்டித மாளவியா.)

ஐக்கிய மாகாணத்திலுள்ள விவசாயிகள் சகிக்கமுடியாத துன்பப்படுகிறார்கள். தற்காலம் தேசத்தில் ஏற்பட்டுள்ள தரித்திரத்திற்கு காரணமென்ன? வர்த்தக மந்தத்திற்கு காரணமென்ன? இந்நாட்டு பண நிர்வாகத்தை பிரிட்டன் சரியாக நடத்தாததே காரணம். பிரிட்டிஷ்காரருக்காக இந்தியாவை இங்கிலாந்து ஆளுகிறது. அவர்களுக்காக சிவில் சர்விசிலும், ராணுவத்திலும் கொழுத்த சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த கொழுத்த சம்பளம் கொடுப்பதற்காக இந்தியர்மீது தாங்க முடியாத வரிகளை விதிக்கிறது. எல்லா வரிகளிலும் நிலவரி மிக கொடுமையானது. இந்த அநியாயத்தை இந்தியர் இடைவிடாமல் கண்டித்து வந்தனர். குறைக்கும்படி ஓயாமல் கேட்டுவந்தனர். சர்க்கார் என்னவோ செவி சாய்க்கவில்லை. வரியை குறைப்பதற்கு பதிலாக 30 வருஷங்களாக கூட்டிக் கொண்டுபோகிறார்கள் கூட்டுறவு இலாகா சர்க்கார் ஸ்தாபனம். ஐக்கிய மாகாணத்தில் 100க்கு 80 விவசாயிகள் நிரந்தரமாய் கடனில் மூழ்கியிருக்கிறார்களென்று அந்த இலாகா கூட சொல்லுகிறது.

விவசாயிகள் கஷ்டத்தை குறைப்பதற்கு பதிலாக, கஷ்டத்தை அதிகரிக்க நாணயமாற்று விகிதத்தை 18 பென்சாக்கினார்கள். இந்தச் செய்கையால் வருஷம் சுமார் 40 கோடி ரூபாய் இந்திய விவசாயிகளுக்கு நஷ்டம். நாணய மாற்று குறைந்ததால், விலை வாசிகள் கீழே விழுந்தன. இந்த நிலைமையில் வரி கொடுக்க முடியாமல் விவசாயிகள் தவிப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

வரிகளைகட்டும்படி ஜமீன்தார்களை நிர்ப்பந்திக்கிறார்கள். ஜமீன்தார்கள குடிகளை நிர்ப்பந்திக்க சர்க்கார் தூண்டுகிறார்கள் போலீசார் உதவியைக்கொண்டு பல ஜமீன்தார்கள் செய்த கொடுமைகளை நான் வெளியில் சொல்லவும் நாக்கு கூசுகிறது. இம்மாதிரி குடிகள் கஷ்டப்படும் போது, காங்கிரஸ் அவர்கள் உதவிக்கு போவது இயற்கை. காங்கிரஸ் ஜமீன்தார்களுக்கு விரோதமானதல்ல ஆனால் காங்கிரஸ் ஏழைகள் உரிமைகளை காப்பாற்றதேன்றியிருக்கிறது. ஏழைகள் திக்கின்றி தவிக்கும்போது காங்கிரஸ் எப்படி உதவி செய்யாமல் இருக்க முடியும்?

# ஜப்பானியர் தியாகம்

ஜப்பானியர் 50 வருஷங்களுக்குள் அதிசயமாய் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். தொழிலில் எந்த மேல்நாடும் அதனோடு போட்டிபோட முடியவில்லை. முக்கியமாய் துணிவர்த்தகத்தில் பிரிட்டனை தோற்கடித்து விட்டது. காரணமென்ன? ஜப்பானியர் தேசபக்தியும் இடைவிடாவூக்கமுமே காரணங்கள். அவைமட்டும் போதுமா? ஜப்பானிய சர்க்கார் எப்பொழுதும் உதவி செய்ய தயாராயிருக்கிறார்கள். ஊக்கமில்லாமல் சர்க்கார் உதவியோ, உதவியில்லாமல் ஊக்கமோ இருந்தால் போதாது. இரண்டும் சேரவேண்டும். ஜப்பானில் முதலாளிகள், நமது முதலாளிகளைப் போல வெறும் லாபத்தில் மட்டும் கண்ணோட்டமாயிருப்பதில்லை. புதிய முயற்சிகளில் பணம் போய்விடுமோ என்று நடுங்குவதுமில்லை. ஜப்பானிய சரக்குகளை எவ்வளவு அதிகமாய் செலவழிக்கலாம், எந்தெந்த புதிய மார்க்கட்டுகளை பிடிக்கலாம் என்பதிலேயே அவர்கள் கண்ணும்கருத்துமா யிருக்கிறார்கள் வெளிநாட்டு ஏற்றுமதிகளில் நஷ்டம் ஏற்படுவதாயிருந்தால், அதில் 100-க்கு 70-வீதம் கட்டிக்கொடுக்க ஜப்பான் சர்க்கார் தயாராயிருக்கிறார்கள். பாக்கியுள்ள 100-க்கு 30-நஷ்டத்தையோ அல்லது அதைவிட அதிகமானதையோ பொறுத்துக்கொள்ள முதலாளிகள் எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு போட்டிகளில் வெற்றியடைய எந்த நஷ்டத்தையும் முதலாளிகள் பெரிதாய் எண்ணுவதில்லை. நஷ்டம் அவர்களுக்கு பெரிதல்ல ஒரு புதிய மார்க்கட்டை பிடித்துவிட்டால், அதுவே அவர்களுக்கு போதுமானது. இம்மாதிரி போட்டியில் நிப்பன் மெய்வா கம்பெனி 38-லட்சம் பவுன் நஷ்டமடைந்திருக்கிறது. கோஷோ காபுஷிக்கி கெய்ஷா கம்பெனி 7 லட்சம் பவுன் நஷ்டமடைந்திருக்கிறது. சில வருஷங்களில் இந்த போட்டியில் ஈடுபடுவதற்காக லாபத் தொகையை பிரித்துக் கொடுக்காமல் நிறுத்தி வைப்பதுமுண்டு. இம்மாதிரி ஊக்கத்தோடு போட்டி போட்டால், ஜப்பான் வெற்றி பெறுவதில் என்ன ஆச்சரியம்? ஜப்பானியர் தங்கள் தொழில் அபிவிருத்திக்காக எதையும் தியாகஞ் செய்ய தயாராயிருக்கிறார்கள். அம்மாதிரி தியாகபுத்தி நமது முதலாளிகளிடம் வரவேண்டும். அது வராத வரையில் அவர்கள் வெற்றி பெற முடியாது

Koviloor Digital Library



# கண்ணாடி தொழில் :: திலகர் பெருமை.

தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை பழைய சுதேசி இயக்கம் காலத்தில் தீவிரமாய் வேலை செய்த தலைவர். அக்காலத்தில் கண்ணாடி சாமான்கள் தலைவர்களுக்கு பிடிக்காது. அவை வெளி நாட்டு சாமான்கள். அவற்றை கையினால் கூட தொடக் கூடாதென்று பிரசாரஞ் செய்வார்கள். தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை இதைப்பற்றி பேசியதுதான் வேடிக்கை. "வெள்ளைக்காரன் தந்திரசாலி. கண்ணாடி சிமினி உபயோகிக்க உங்களை பழக்கி விட்டால், அப்புறம் இடைவிடாமல் லாபம் கிடைக்குமென்பது அவன் நினைப்பு. சிமினிகளோ அடிக்கடி உடைந்து போகின்றன. இதன் பொருளென்ன? நீங்கள் ஒரு சிமினியை உடைத்தால், உடனே வெள்ளைக்காரன் ஜேபியில் உங்கள் பணம் 3 அணா போய் விழுந்து விடுகிறது." என்று சொலலுவார். கண்ணாடி சாமான்களை நாம உபயோகிக்க ஆரம்பித்ததால், 2½ கோடி ரூபாய் வருஷ வருஷம் இழந்து வருகிறோம். லோகமான்ய திலகர் தொழில் அபிவிருத்தியில் மிகுந்த சிரத்தையுள்ளவர். அவர் முயற்சியில்லாவிடில், புனா பர்கூசன் காலேஜ் இன்றைய நிலைமைக்கு வந்திருக்குமா? அவர் சிரத்தை யில்லாவிடில் பெரிய அச்சுக் கூடமாகிய சித்திரசாலை அச்சாலையும், டெக்கான் சபையும், மாராட்டா, கேசரி பத்திரிகைகளும் தோன்றியிருக்குமா? ஒவ்வொரு துறையிலும் இந்தியா முன் அணியில் நிற்கவேண்டும் என்பது திலகர் விருப்பம். அதற்காக ஒவ்வொரு வழியிலும் புதிய ஸ்தாபனங்களை சிருஷ்டித்தார். அவற்றில் "பைசா நிதி" கண்ணாடி தொழிற்சாலையும் ஒன்று. திலகர் ஸ்தாபித்த அந்த தொழிற்சாலை, இன்று இந்தியாவிலேயே பிரதானமானதாய் விளங்குகிறது.

பம்பாய், சென்னை, பாஞ்சாலம் முதலிய மாகாணங்களில் கண்ணாடி தொழிற் சாலைகள் ஏற்பட்டன. வெளி நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்தார்கள். எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். சர்க்கார் உதவி செய்ய மறுத்து விட்டது. வெளிநாட்டு நிபுணர்களும் இந்தியாவில் கண்ணாடி செய்ய கால நிலைமை சரியில்லை யென்று சொல்லி போய் விட்டார்கள்.

திலகரும், அந்தாஜி தாமோதர் என்பவரும் சேர்ந்து 1905-ம் வருஷத்தில் "பைசா பண்ட்" என்ற காலணா நிதியை ஏற்படுத்தினார்கள். காலணா வரை யார் வேண்டுமானாலும் உதவி செய்யலாம் என்பதே அந்த பெயர் கொடுத்ததற்கு காரணம். வீடுவீடாய்ச் சென்று திலகர் காலணா நிதிக்கு பொருள் சேர்த்தார். கடைசியாக 1908-ம் வருஷத்தில், புனா ஜில்லாவில், டாலிகான் டபாடே என்ற சிறிய நகரில் கண்ணாடி தொழிற் சாலையை ஸ்தாபித்தார்கள். (Paisa Fund Glass Works, Talegaon Dhabada. G. I. P. Ry.) ஜெர்மனியிலிருந்து பழகிவந்த ஸ்ரீ ஈஸ்வரதாஸ் அத்தொழிற் சாலையை நடத்த ஆரம்பித்தார். ஜப்பானிலிருந்து சில நிபுணர்களை வரவழைத்தார்கள். பின்னால் பார்க்கும் போது, அந்த ஜப்பானியர் கண்ணாடி தொழிற்சாலையில் வேலை செய்தவர்களே யொழிய, நிபுணர்கள் அல்லவென்று தெரிந்தது. தங்களுக்கு தெரிந்ததையும் அவர்கள் இந்தியருக்கு சொல்லிக்கொடுக்க மறுத்தார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, கண்ணாடி செய்யும் விதத்தை தாங்களே ஆராய்ச்சி செய்தார்கள். வெற்றி பெற்றார்கள்.

இந்தியாவில் தற்சமயம் சுமார் 15 தொழிற்சாலைகள் இருக்கின்றன: இவற்றில் சுமார் 2 ஆயிரம் தொழிலாளர் வேலை செய்கின்றனர். இந்த தொழிற் சாலைகள் ஒவ்வொன்றிலும், ஷை காலணா நிதி தொழிற்சாலையில் பயின்ற நிபுணர்களே வேலை பார்த்து வருகிறார்கள். கண்ணாடி தொழிலுக்கு இந்தியாவில் தலைமை வகித்து, பல நிபுணர்களை பயிற்சி செய்து வருகிறது. வெள்ளை களிமண் சாமான்களும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் சரக்குகள் உயர்ந்தவையாக இருப்பதால், பல ரயில்வே கம்பெனிகள் கூட அவர்களிடம் சரக்குகள் வாங்குகின்றன. இந்தியா 1929—30-ல் 252 லட்சம் ரூபாய்க்கு கண்ணாடி சாமான்களை இறக்குமதி செய்திருக்கிறது. இந்தியரே, இந்தக் கொள்ளையை எப்பொழுது நிறுத்தப் போகிறீர்கள்?

Koviloor Digital Library



# கலி தீர்க்கும் கத்தர்.

(டாக்டர் ப. சீதாராமய்யா.)

பரதேச துணிகளுக்காக இந்தியாவிலிருந்து வெளிநாடு போகும் 60 கோடி ரூபாயை தடுத்துவிட்டால், இந்தியர் வறுமை நீங்கிவிடும். நமது நாட்டிலிருந்து அரிசி வெளி நாடுகளுக்கு போகவே போகாது. ஆனால் கத்தர் மூலமாக தடுத்தால்தான் முழு பலன் கிடைக்க முடியும். மில் துணியும் சுதேசிதான். என்றாலும், கத்தரைப்போல மில் துணி ஏழைகளுக்கு அன்னமளிப்பதில்லை.

100 ரூபாய் பெறுமான மில் துணி வாங்கினால், 71 ரூபாய் முதலாளிகளுக்கு போகிறது. 29 ரூபாயே தொழிலாளருக்கு கிடைக்கிறது. 100 ரூபாய் கத்தரை எடுத்துக் கொண்டால், 79 ரூபாய் தொழிலாளருக்கு கிடைக்கிறது. 21 ரூபாய் மற்ற செலவுகளுக்கு போகிறது. ஒரு ரூபாய் பெறுமான கத்தரில் யார்யாருக்கு எவ்வளவு கிடைக்கிறதென்று பார்ப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நூற்பவன் | ... | 0 | 3 | 9 |
| பஞ்சு | ... | 0 | 4 | 9 |
| பட்டைபோட்ட | ... | 0 | 2 | 0 |
| வெளுக்க | ... | 0 | 0 | 6 |
| நெசவு | ... | 0 | 3 | 9 |
| விற்பவன் | ... | 0 | 1 | 0 |
| போகவர கூலி | ... | 0 | 0 | 3 |
| | | 1 | 0 | 0 |

கைத்தறி தொழில், நூற்றல், அச்சடித்தல், சாயம்போடல், வெளுத்தல் முதலிய பல உபத்தொழிலுக்கு மூலாதாரமாய் நிற்கிறது. இவற்றின் மூலம் பற்பல ஜனங்களும் உதவி பெற சாத்தியமாகிறது. ஆகவே கத்தர் கலி தீர்க்கும் சஞ்சீவி யல்லவா?

கத்தர்விலை அதிகமாயிக்கிற தென்று சிலர் சொல்லுகிறார்கள். மலிவாயிருந்தால் தாங்கள் அவசியம் வாங்குவதாக கூறுகிறார்கள். இவர்கள் வாதம் ஆச்சரியமாகவே யிருக்கிறது. சீமைத்துணியைப் போல கத்தர் மலிவாயிருக்குமானால், அதை வாங்குவதற்கு யார் சிபார்சு வேண்டும்? மகாத்மா காந்தியும், காங்கிரசும் கத்தரை வாங்கும்படி பிரசாசம் செய்ய தங்கள் அரிய நேரத்தை செலவிடவும் வேண்டுமோ? மேலும் விலை மலிவுக்கு காரணமென்ன? ஏராளமான ஆட்களை ஒரு இடத்தில் சேர்த்து வைத்து, அமோக உற்பத்தி செய்வதன் மூலம்தான் விலை மலிவாக முடியும் கத்தர் தத்துவம் இதற்கு நேர் விரோதமாயிற்றே!

விலை மலிவாயில்லை என்று சொல்லும் காரணமும் உண்மையானதல்ல கத்தர் விலை அதிகமென்று சொல்லும் சீமைத்துணி கட்டும் அதே ஆசாமி, அணிந்திருக்கும் உடைகள் மலிவானவையா? அவர் அணியும் தலைப்பாகை 10 முதல் 20 ரூபாய் வரை பெறுமானதாயிருக்கிறது. அவர் கோட்டுத்துணியோ 20, 25க்கு குறைவில்லை. அதற்காகும் தையல் கூலி 6, 8 ரூபாய் ஆகிறது. அவர் சில்க் ஷர்ட் 10 ரூபாயும், அதில் மாட்டியிருக்கும் தங்க பொத்தான்கள் 2 பவுன் பெறுமானதாயு மிருக்கின்றன. இவற்றிற்கு மேலாக அவர் அணியும் உத்தரீயம் 30, 40 ரூபாய் விலையுள்ளது

இவற்றை பார்த்தால் கத்தர் எவ்வளவோ மலிவானது. ஆரம்பத்தில் விலை அதிகமாய் தோன்றலாம் அதன் நீடித்த உழைப்பையும், அதை தரிப்பதால் ஏற்படும் குறைந்த தேவையையும் கவனித்தால் கத்தர் எவ்வளவோ மலிவானது. கத்தர் தரிக்க ஆரம்பித்தாலே படாடோப வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு, சாமான்ய வாழ்க்கையில் விருப்பு ஏற்படுகிறது.

காங்கிரஸ் கடன் அறிக்கை.

வெளி வந்து விட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாமீது அநியாயமாக சுமத்திய கடன் விவரங்களை இதில் அறிந்துகொள்ளலாம். 32 பக்கங்கள்.

விலை 1 அணா.

ஒரு பிரதிக்கு $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

காந்தி ஆபீஸ்,

11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

Koviloor Digital Library

# தொழிலாளர் சங்கமெங்கே? :: (எம்டன் எழுதுவது)

சுமார் 2000-ம் தொழிலாளர் அடங்கிய நெல்லிக்குப்பம் ஆலைக்கு ஒரு தொழிலாளர் சங்கம் இருந்து உருப்படியாக வேலை செய்யாதது விசனிக்கத்தக்கது. சுமார் ஐந்தாறு வருஷத்திற்குமுன் தொழிலாளர்கள் சங்கமொன்று நிறுவினர். அச்சமயம் ஏஜண்டு செய்த சூழ்ச்சியின் பலனால் சங்கம் அழிந்தது. நாளுக்கு நாள் தொழிலாளர் துயரம் பெருகவே இந்நகர் பொதுஜன சேவையாளராகிய எம். என். முத்துக்குமாரசாமி பாவலர் பெரு முயற்சி செய்து சென்னை ஸ்ரீமான்கள் சிவராவ் எஸ். ஆர். வரதராஜுலு இவர்களை வரவழைத்து தொழிலாளர்களை ஊக்கப்படுத்தி ஸ்ரீ சிவராவ் கவுரவத் தலைவராகவும் எஸ். ஆர். வரதராஜுலு தலைவராகவும் பாவலர் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு சங்கம் நிறுவப்பட்டு பல முற்போக்கான வேலைகளை சங்கம் செய்து வந்தது.

## ஏஜண்டு சூழ்ச்சி

தொழிலாளர் கட்டுப்பாட்டையும் உறுதியையும் கண்டு ஏஜெண்டு பல தந்திரங்கள் செய்து பார்த்தார். ஸ்ரீ பாவலரைக் கூப்பிட்டனுப்பி தொழிலாளர் சங்கத்திற்குப் போகாதிருந்தால் 3 அல்லது 6 மாதம் பொறுத்து ஆலையில் வேலை தருவதாக ஒரு அதிகாரி கூறினார். பத்திரிகையிலும் கைவைக்க வேண்டாமென்றார். வேலை கொடுத்தால் வேலை செய்வதாகவும், தொழிலாளர்களுக்குத் துரோகமாக சுயநலவாதியாக தன்னால் விலக முடியாதென்றும் பாவலர் கூறிவிடவே, பிறகு பாவலர் கிளர்ச்சி செய்கிறார் என போலீஸ் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதோடு, நடவடிக்கை எடுக்கவும் வக்கீல் ஆலோசிக்கப்பட்டதாம். உடனே பாவலர் இரு சகோதரர்களையும் நிறுத்தி வேறு வேலைக்கு ஏற்பாடு செய்தார். சில பெரும் விவசாயிகளும், மிராசுதாரர்களும் பாவலரைக் கேலிசெய்து, தொழிலாளர் விஷயத்தில் சிரமப்பட வேண்டாமென்றார், ஆலையில் [illegible] அதிகப்பட்டால் தாங்களும் கூலி அதிகம் உயர்த்த வேண்டிவரும் என்றும் தொழிலாளர்கள் ஒற்றுமை நிலைத்திராதென்றும் கூறி மனதைக் கலைத்தார்கள். தொழிலாளர்களைக் கொண்டு செல்கிறவன் திறமையாகக் கொண்டு சென்றால் எல்லாம் சரியாக வருமென்றும் கூறி, அடிக்கடி அடிக்க பந்து கிளம்புவதுபோல் தொந்திரவு அதிகப்பட அதிகப்பட காரியதரிசி ஊக்கத்தோடு வேலை செய்தார். அச்சமயம் இருந்த சீப் என்ஜினியர் பாவலரிடம் "தொழிலாளர்களுக்கு கூலி அதிகம் கேட்பது தகாது. கூலி அதிகம் போட்டால் தொழிலாளர் குடித்துக்கெட்டுப்போவார்கள்" என்று அனுதாபத்துடன் கூறினார். "இப்படித் தொழிலாளர்களை குடியர்கள் என்று சொல்வது அடாது. உங்கள் வகுப்பினரைவிட தொழிலாளர்கள் குடியர்கள் அல்ல. அப்படித் தொழிலாளர்கள் விஷயத்தில் உங்களுக்கு பூரண அனுதாபமிருப்பின் தொழிலாளர்களுக்கு வீடு நிலங்கள் வாங்கிக்கொடுத்துச் சாப்பாடும் போட்டு சம்பளத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று தகுந்த சூடு பாவலரால் கொடுக்கப்பட்டது

## சங்கமெங்கே?

இவ்வளவு ஊக்கத்துடன் வேலை நடந்த சங்கம் எங்கே? தற்போது இருந்த இடம் தெரியவில்லையே! தலைவர் எங்கே! சந்தாப்பணம் எங்கே! ஒன்றும் காணவில்லை. ஏஜெண்டு சூழ்ச்சி வேறுவிதத்தில் திரும்பியது, பாவலர் சங்கத்திலில்லாது செய்தீர்களானால் தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மை செய்வதாக சங்கத் தலைவர் வரதராஜுலுவிடம் அடிக்கடி வற்புறுத்தவே தலைவரும் இவ்விஷயத்தை தொழிலாளர்களிடம் சொன்னார். தொழிலாளர்கள் ஒரு கூட்டம் கூடி, பாவலர் சங்கத்திற்கு காரியதரிசியாகவே என்றும் இருக்கவேண்டும் என்றும் எக்காரணத்தைக் கொண்டும் விலக்க முடியாதென்றும் தீர்மானித்தனர்.

சங்கத்தை ரிஜிஸ்தர் செய்ய அனுப்பும் விண்ணப்பத்தில் தலைவர், பாவலர் பெயரைவிடவே சில முக்கியஸ்தர்கள் பாவலர் இல்லாது போனால் சங்கமே வேண்டியதில்லையென மறுத்தார்கள். தலைவர், ஏஜெண்டு ஜோதியில் கலந்துபோவதை அறிந்த பாவலர், தாம் விலகுவதால் தொழிலாளர்களுக்கு நன்மை வாங்கித்தருவதானால் ஆசைவிட வேறு பலன் தமக்கு வேண்டியதில்லையென்று கூறி அதிலிருந்து சங்கத்தில் தலையிடாதிருந்தார். ஏஜெண்டு எண்ணம் பலித்தது துன்பம் அதிகமாயிற்று. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமானது. தொழிலாளர்கள் இனி என்னசெய்யப் போகிறார்கள்?

அடுத்தவாரம்—சங்கத்தால் கிடைத்த நன்மைகள் என்ற வியாசம் வெளியாகும்.

## சர்க்கார் குஸ்தி.

லாகூரில் ஜெயில் அதிகாரிகளுக்கும் நீதிஸ்தல அதிகாரிகளுக்கும் குஸ்தி நடக்கிறது. லாகூர் சதிவழக்கு எதிரிகள் தண்டிக்கப்படுகிறவரை நிரபராதிகள். அவர்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நீதிபதிகளைச் சேர்ந்தது. எதிர் வழக்காட வேண்டிய சௌகரியங்கள் செய்யவும், அசௌகரியங்கள் நேரிடாமல் இருக்கவும் நீதிபதிகள் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் இவை சம்பந்தமாக கோர்ட்டார் பிறப்பிக்கும் உத்தரவுகளை ஜெயில் அதிகாரிகள் காற்றில் விட்டு விடுகிறார்கள். ஹைகோர்ட் ஜட்ஜுகள் கூட ஜெயில் அதிகாரிகள் நடத்தையை கண்டித்தார்கள். கண்டித்தும், ஸ்ரீ. சுகதேவராஜை தனியாக அடைத்துவைக்கக் கூடாதென்று கோர்ட்டார் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றவில்லை. ஏன் என்று கேட்டால் ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அம்மாதிரி செய்யக் கூடாதென்று உத்தரவு செய்திருக்கிறாராம். கோர்ட்டாரை கேட்டால் "நாங்கள் என்ன செய்வது" என்று கையை விரிக்கிறார்கள். கடைசியாக சுகதேவராஜை மூன்றாவது வகுப்பு கைதிகளோடு வைப்பதென்று ஜெயிலதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். எதிரிகள் எல்லாரையும் சேர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லியதற்கு பதிலாக இந்த போலி ஏற்பாடு. சர்க்கார் இலாகாக்களுக்குள்ளே பல குஸ்திகள் அந்தரங்கமாய் நடப்பது வழக்கம். ஆனால் பகிரங்கமாய் இதைப் போல இதுவரை நடந்தது கிடையாது. நீதிபதிகள் சொல்லுவதை போலீசாரோ, ஜெயிலதிகாரிகளோ நிறைவேற்றுவதில்லையென்றால், கோர்ட்டுகள் எதற்காக? அதிலும் ராஜீய வழக்குகளில் இம்மாதிரி நடப்பதென்றால், தேசபக்தர்களுக்கு அதைவிட கொடுமை வேறு வேண்டியதில்லை. சர்க்கார் நடுநிலைமையில் இருக்க வேண்டியிருக்க, வழக்குகளில் எதிரிகளுக்கு வேண்டுமென்றே துன்பம் விளைவிப்பது பெரிய அயோக்கியத் தனம், நம்பிக்கைத் துரோகம், பொறுப்பற்றதனமாகும். நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் பிரிக்க வேண்டுமென்பதற்கும், ஜெயில்போன்றவைகள் நீதி இலாகா அதிகாரத்திற்கே உட்பட்டிருக்க வேண்டுமென்பதற்கும், லாகூரில் நடக்கும் இந்த குஸ்தியே போதுமான உதாரணமாயிருக்கிறது.

## உலகப் போக்கு.

### தெருவெல்லாம் கள்.

நகரத்தெருவில் கள் விற்பதை தடுக்கும்படி சென்னை கார்ப்பரேஷன் தீர்மானித்திருக்கிறது. இந்த தீர்மானத்தை கமிஷனர் சுகாதார கமிட்டியின் அநுமதிபெற அனுப்பியிருக்கிறார். அநுமதி கிடைத்தவுடன், தெருவில் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

### வெறியாட்டம்.

திருநெல்வேலியில் பிரசாரஞ் செய்து வந்த ஸ்ரீ. இளங்கோ மீது ஜாமீன்வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். திருநெல்வேலி ஜங்ஷன் சாராயக்கடை மறியல் செய்தவர்களை குடியர்கள் அடித்தார்களாம். குடியின் மகிமையை இச் செய்தி விளக்குகிறது. தென்காசியில் 20உ முதல் ஸ்ரீ. பாரதநேசன் தலைமையில் கள்ளுக்கடை மறியல் நடக்கிறது. கடைக்காரர்கள் தோப்புகளில் கொண்டுபோய் குடியர்களுக்கு சப்ளை செய்கிறார்களாம். வனபோஜனம் போலும்! திருச்செந்தூரிலும் மறியல் ஆரம்பமாயிருக்கிறது. குடியர் வெறியாட்டம் எங்கும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது.

### 50 ரூபாய்க்கு கற்பு!

பாலி என்ற இடத்திலுள்ள சணல் தொழிற்சாலை மானேஜர் வில்கி என்ற வெள்ளையன் ஒரு இந்திய கூலிப்பெண்ணை கற்பழிக்க முயன்றான். அதற்காக அவனுக்கு மாஜிஸ்திரேட் 150 ரூபாயே அபராதம் விதித்தார். அத்தொகை வசூலானால் கூலிப் பெண்ணுக்கு 50 ரூபாய் கொடுப்பார்களாம்! ஒரு வெள்ளைப் பெண்ணை கற்பழிக்க ஒரு இந்தியன் முயன்றால், இதே மாஜிஸ்திரேட், இதே 150 ரூபாய்தான் அபராதம் விதிப்பாரோ?

### இன்ஸ்பெக்டர் திண்டாட்டம்.

குடிவாடா போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கான்பகதூர் ஷெயிக் தாவுது சாகிப், சட்டமறுப்பு காலத்தில் பெரிய ஆர்ப்பாட்டஞ் செய்தார். ஜில்லா சூப்பரின்டென்ட் உத்தரவுக்கு கீழ்ப் படியாமல் அவர் 'சட்ட மறுப்பு' செய்தாராம். அதற்காகவும், பண மோசடி குற்றஞ் சாட்டியும் விசாரணை செய்யப் போகிறார்கள். அதுவரை வேலையைவிட்டு விலக்கப்பட்டிருக்கிறார்.

### காக்ஸ் விழிக்கிறார்.

கலெக்டர் காக்ஸ் குடிபிரசாரம் செய்தார். செய்தும் சென்ற 30உ சென்னையில் நடந்த மதுக்கடை ஏலத்தில் ஒருவரும் ஏலம் எடுக்க முன் வரவில்லை. வெளியில் நிற்பவர்களை கலெக்டர் உள்ளே கூப்பிட்டு பார்த்தும், ஒருவரும் எடுக்கவில்லை. ஏலத்தை ஒத்திவைத்திருக்கிறார். இந்த வருஷம் இதுவரை உள்ள நிலைமைப் படி பார்த்தால், சர்க்காருக்கு கலால் வரும்படியில் ஒரு கோடி ரூபாய் மண் விழுந்திருக்குமென்று தெரிகிறது.

Koviloor Digital Library



(முதல் பக்கத் தொடர்ச்சி)

உயிரும் துச்சமேயாகும். உச்சி மீது வான் இடிந்து வீழ்ந்த போதிலும் கலங்காத தொண்டர்களா, கள்ளுக் கடைக்காரரின் ஓட்டைத் துப்பாக்கிக்கு பயந்து விடப்போகிறார்கள்? இவர்களிடம் தமது வீரத்தைக் காட்டப் புறப்பட்ட ஷண்முக சுந்தரத்தின் "வீர"த்தை நினைக்கும் போது, விராட ராஜன் புத்திரனுடைய "வீர"மே முதலில் நமது ஞாபகத்திற்கு வருகிறது. பாவம்! கள்ளுக் கடை வாசனை "வீர"த்தை உண்டாக்கி விட்டது போலிருக்கிறது!

துப்பாக்கி சாமியின் மிரட்டலைக் கண்டு தொண்டர்கள் பயப்படவில்லை ஒரு அங்குலம் கூட பின் வாங்கவில்லை உயிர் போயினும் நிலை பெயரோம் என்று வீரத்தோடு தங்கள் ஸ்தானத்தை காப்பாற்றி வந்தார்கள். நல்ல வேளையாக அச்சமயம் அங்கு வந்த போலீசார் துப்பாக்கி சாமியிடம் இருந்த துப்பாக்கியை பிடுங்கிக்கொண்டார்கள். துப்பாக்கி சாமி உடனே அந்த இடத்தைவிட்டு நழுவிவிட்டாராம் அச்சமயம் அங்கு மறியல் செய்த ஸ்ரீ. எஸ். டி. கண்ணபிரானையும், மற்ற தொண்டர்களையும் அவர்களுடைய வீரத்திற்காக பாராட்டுகிறோம்.

கள்ளுக்கடைகாரரே, உங்கள் மிரட்டல் பலிக்காது. பொதுஜன விரோதத்தை தேடி வீணாய் கெட்டுப் போகவேண்டாம். பஞ்ச மகா பாதகங்களில் ஒன்றைச் செய்ய என் இம்மாதிரி தவிக்கிறீர்கள்? பாவஞ் செய்வதென்றால் சப்த நாடிகளும் ஒடுங்கவேண்டியிருக்க, நீங்கள் பாவஞ் செய்ய போட்டி போடுகிறீர்களே! உங்கள் மனம் எவ்வளவு கேவலமான சாக்கடையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறதென்பதை உங்கள் செய்கை காட்டுகிறது. இனியாவது சாக்கடையை விட்டு எழுந்து உயர்நிலைமைக்கு போங்கள். கள்ளு விற்ற காசைக்கொண்டு கோவில் திருப்பணிகள் செய்து விடுவதால் உங்கள் பாவம் போய் விடாது; அல்லது நீங்கள் பெரியவர்களாகவும் ஆக முடியாது.

போலீஸ் கமிஷனருக்கு ஒரு வார்த்தை. கலெக்டர் காக்ஸ் செய்த அதிகப் பிரசங்கமே, ஷண்முகசுந்தரத்தின் நடத்தைக்கு தூண்டுகோலாயிருக்கிறது. இம்மாதிரி இன்னம் பல விஷயங்கள் நடக்கலாம். ஆகவே உடனே சகல ஜாக்கிரதை ஏற்பாடுகளும் செய்யவேண்டும். கள்ளு சாராயக்கடை காரர்களிடமுள்ள துப்பாக்கிகளை பறிமுதல் செய்யவேண்டும். கடை சொந்தக்காரர்களின் நடவடிக்கைகளை ரகசியமாய் கவனித்து வரவேண்டும். ஸ்ரீ ஷண்முக சுந்தரம் மீது சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

---

# கும்பி கூழுக்கு அழுகிறது.

## கொண்டை பூவிற்கு அழுகிறதாம்!

(மகாத்மா காந்தி)

சுயராஜ்ய சர்க்காரில், மாதம் 500 ரூபாய்க்கு மேல் எந்த அதிகாரிக்கும் சம்பளம் கிடையாது. காங்கிரஸ் செய்த இந்த தீர்மானம் பலரை தூக்கி வாரி போட்டிருக்கிறது. அதிகச் சம்பளம் கொடுத்து தீரவேண்டுமென்பது விதியல்ல. இந்தியர் சராசரி வரும்படி எவ்வளவு! அதில் எந்த விகிதாசாரப்படி அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கலாம். வெளி நாடுகளில் எந்த விகிதாசாரப்படி கொடுக்கிறார்கள் என்பவற்றை முதலில் கவனிக்க வேண்டும். அப்புறம் காங்கிரஸ் தீர்மானத்தோடு அவற்றை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அப்படி பார்த்தால்தான், காங்கிரஸ் தீர்மானத்தின் நேர்மை விளங்கும்.

ஜப்பானை எடுத்துக்கொள்ளுவோம். வைசிராய்க்கு மாதம் ஆயிரம் ரூபாய்க்கு குறைவாகவே சம்பளம். சர்க்கார் காரியதரிசிகளுக்கு 150க்கு மேல் 500க்குள் சம்பளம். பிரதம நீதிபதி கூட 1000 ரூபாய்க்கு குறைவாகவே பெறுகிறார். மற்ற ஜட்ஜுகள் 150 முதல் 700 வரை வாங்குகிறார்கள். கீழ்த்தர அதிகாரிகளுக்கு கூடிய சம்பளம் 300 ரூபாய். போலீஸ் சார்ஜண்டுக்கு 70 முதல் 80 வரை. ஜப்பானியரின் சராசரி வரும்படி தினசரி 4 அணா. இந்தியரின் சராசரி வரும்படியை கவனித்தால், காங்கிரஸ் தீர்மானித்திருக்கிற 500 ரூபாய் சம்பளம், மிக தாராள புத்தியோடு செய்யப்பட்டிருக்கிறது விளங்கும்.


சுற்றியிருப்பவர்களை கவனிப்பதில்லை. தனக்கேயென்று தனியாக ஒரு படாடோபமான செயற்கை வாழ்வை சிலர் உண்டுபண்ணுகிறார்கள். அவர்களுடைய செலவிற்கு இத்தொகை போதாதென்று சொல்லுகிறார்கள். சுற்றியிருப்பவர்கள் வாழ்க்கையுடன் ஒத்துவாழ முடியாதவர்களுக்கு யாரும் ஜவாப்தாரியாயிருக்க முடியாது. கொஞ்சக் காலம் அவர்களுக்கு கஷ்டமாய் தோன்றலாம். நாளடைவில் சரிப்பட்டு விடும். 500 ரூபாய் சம்பளம் குறைவானது என்ற எண்ணம் அவர்கள் மனதை விட்டு நீங்க ஆரம்பிக்கும் போது, செயற்கை வாழ்வும் நீங்கி, கஷ்டமும் குறையும்.

Edited, Printed & Published by T. S CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

(மலர் 1[illegible]




திங்கள், வியாழன் வெளிவரும். வருட சந்தா ரூ 8—0—0.

மலர் 2 || சென்னை, 1931 ஆகஸ்டு 6வ, பிரஜோற்பத்தி ஆடிமீ 22உ வியாழக்கிழமை || இதழ் 14

# கொடியில் மாறுதல்

## இந்தக் காலத்தில்



வெள்ளையர் இந்தியாவை பிடித்த பின்பு மாட மாளிகைகளில் வாழுகிறார்கள். மோட்டார், ஆகாயக் கப்பல்களில் சவாரி போகிறார்கள். நந்தவனங்கள் அமைத்து உலாவுகிறார்கள். சுருக்கமாய் சொன்னால், இந்திரபோகம் அநுபவிக்கிறார்கள். அடிமைப்பட்ட இந்தியரோ, உடுக்க கந்தையும், குடிக்க கஞ்சியும், தங்க குடிசையும் அற்று தவிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியால் யார் நன்மை அடைந்தார்கள்?

---

கம்பத்தின்கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற்குரிய அவ்வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்
தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட—வாரீர்!

—பாரதி

தேசியக்கொடியில் மாறுதல் வேண்டுமா என்பதைப்பற்றி விசாரிக்க காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒரு கமிட்டியை நியமித்தது. ஹோம்ரூல் கிளர்ச்சி காலத்தில் பச்சையும் சிகப்பும் கலந்த கொடியை டாக்டர் பெசன்ட் ஏற்படுத்தினார். காங்கிரஸ் சத்தியாக்கிரக இயக்கம் பலமானவுடன் அக் கொடியில் வெள்ளை வர்ணம் சேர்க்கப்பட்டது. அதாவது கொடியின் அகலத்தில் பாதி சிகப்பு. கால் பாகம் பச்சை. மற்றொரு கால் பாகம் வெள்ளை. சிகப்பு இந்துக்களுக்கும், பச்சை முஸ்லீம்களுக்கும் வெள்ளை மற்ற மதத்தினருக்கும் என்று பிரித்தார்கள். இம்மாதிரி பாகுபாடு செய்தவுடன், சீக்கியர் தங்கள் சமூகத்தை குறிப்பிடும் வர்ணமும் கொடியில் இருக்கவேண்டுமென்று கேட்டனர். இதனால் தற்கால தேசியக் கொடியிலும் வகுப்பு வாதம் தலைகாட்ட ஆரம்பித்தது. இம்மாதிரி தகாறு ஏற்படவே தகாறு இல்லாமல் ஒரு கொடியை ஏற்படுத்தவேண்டியது அவசிய மென்று காங்கிரஸ் கருதி, அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித்தது.

Koviloor Digital Library



கொடியின் அமைப்பை மாற்ற வேண்டுமென்று கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதாவது கொடியின் வர்ணம் மஞ்சள். இடது பக்கத்தில் மேல் மூலையில் நீலவர்ணத்தில் ராட்டினம். இதுவே கமிட்டி சிபார்சு செய்யும் புதுக்கொடி. இந்த சிபார்சை சிலர் ஆட்சேபிக்கிறார்கள். இதுவரை காங்கிரஸ் போராட்டம் முழுவதும் தற்கால கொடியின் கீழ் நடந்திருக்கும்போது, அதை எப்படி மாற்றுவதென்று சிலர் கேட்கிறார்கள். சென்னை "இந்தியா"வும் இப்படியே சொல்லுகிறது. நமது இயக்கத்திற்கு கொடி ஒரு அடையாளம். அந்த அடையாளம் வகுப்பு வாதத்தை கிளப்புமானால், "பழைய கொடி" என்பதற்காக அதை மாற்றக்கூடாது என்று சொல்லுவது வேடிக்கைக் கூத்தாகவே இருக்கிறது. சகலரும் ஆட்சேபனை சொல்லக்கூடாத ஒரு கொடி ஏற்பட வேண்டியதே அவசியமாகையால், இந்த ஆட்சேபனை அவ்வளவு பெரிதல்ல.

சென்னை "தமிழ்நாடு" கொடி மாற்றத்தை ஆதரிக்கிறது. ஆனால் வழக்கம் போல சில அர்த்தமற்ற ஆட்சேபனைகளையும், சில அனாவசியமான ஜோசியங்களையும் அது சொல்லாமல் விடவில்லை. முதலில் மஞ்சள் வர்ணம் அதற்கு பிடிக்கவில்லையாம். அதற்கு காரணம் இருட்டில் மஞ்சளுக்கும் வெள்ளைக்கும் வித்தியாசம் தெரியாதாம். இருட்டில் சிகப்பிற்கும், கருப்பிற்கும், பச்சைக்குமுள்ள வித்தியாசத்தை "தமிழ் நாடு" கண்டு பிடிக்க முடியுமா? மற்றொரு ஆட்சேபனை. நாட்டுக்கு 80 பேர் பயிர்தொழில் செய்வதால் "ஏர்" போட வேண்டுமே யொழிய ராட்டினம் போடக் கூடாதென்று சொல்லுகிறது. நாட்டுக்கு நூறு பேர் தினசரி சாப்பிடுவதால் "சோறு" மார்க் போட வேண்டுமென்று அது சொல்லாமல் இருக்கிறதற்காக நாம் சந்தோஷப் படுகிறோம். சாப்பிடுவது பெரிதல்ல மானமே பெரிது. மானத்தை காக்க உடை அவசியம். அந்த உடைக்கு பிறநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மானங் கெட்ட வாழ்வை நீக்கியது ராட்டினமே! உடலுக்கு மானத்தை காப்பாற்றியதோடு, தேசம் மற்றொரு நாட்டிற்கு அடிமைப்பட்டு வாழும் மானங் கெட்ட வாழ்வை நீக்க வந்த காமதேனு ராட்டினமே! இந்தியர் விழிப்படைந்து இன்றுள்ள நிலைமைக்கு வரக் காரணமாய் இருந்தது அந்த ராட்டினமே யாகையால், அதுவே தேசியக் கொடியில் இலங்க வேண்டும். பிரிட்டனுக்கு பழைய கொடி சிம்ம கொடி. இப்பொழுதும் பிரிட்டிஷ் கொடியுடன் சிங்கத்தை சேர்த்து போடுகிறார்கள். பிரிட்டனில் எந்த ஜென்மத்திலும் சிங்கம் வாழ்ந்ததே கிடையாது. மருந்துக்கு கூட கிடையாது. சிங்கத்தை பார்க்க வேண்டுமானால் காட்சி சாலைக்கே போக வேண்டும். பிரிட்டனில் "நாட்டுக்கு எத்தனை சிங்கங்கள்" இருந்ததற்காக சிங்க கொடி போட்டார்கள்?

"தமிழ் நாடு"வின் ஜோசியம் என்னவென்றால், ராட்டின மகிமை வெகுகாலம் நிற்காது என்பதாகும். இந்த ஜோசியம் பலித்தாலுமே அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. கடவுளைத் தவிர வேறு எதுவும் உலகத்தில் நிலையுள்ள வாழ்வை பெற முடியாது. தற்சமயம் நமது விழிப்பிற்கு காரணமானது எது? ராட்டினமே! ஆகவே அதை நாம் போற்றுவதற்கு யாரிடமும் ஜோசியம் கேட்க வேண்டியதில்லை. ராட்டினத்திற்குப்பதில் "வாள்" போடலாமென்று "தமிழ் நாடு" வீரம் பேசுகிறது. ஏனென்றால், எத்தனை காந்திகள், இயேசுக்கள், புத்தர்கள் தோன்றினாலும் வாள் பலம் உலகத்தில் இருந்து கொண்டேயிருக்குமாம். எத்தனை ஜெயில்கள் தோன்றினாலும் திருடர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்காக ஜெயில்களை இடித்துவிடலாமா? மனிதனுக்கு கீழ் நோக்கி போகும் சுபாவம் இயற்கையாகவே உண்டு. அதை அடக்கிவைக்க மேல் நோக்கும் லக்ஷியம் வேண்டும். அந்த உயர்ந்த லட்சியங்கள் இல்லாவிட்டால் மனிதன் மிருகமாய் மாறுவதை தடுப்பதற்கு ஒன்றும் இல்லாமல் போய்விடும். அஹிம்சா தர்மம் வெல்லுமா என்பதைப்பற்றி தர்க்கஞ் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. இரண்டில் எது சிறந்தது என்று கேட்டால் அஹிம்சையே சிறந்ததென்று யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். அது ஒன்றே போதுமானது. அஹிம்சை உலகம் முழுவதிலும் பரவுகிற காலத்தில் பரவட்டும். அதைப் பற்றி அக்கரையில்லை. அஹிம்சை, லட்சியங்களில் சிறந்தது. அதோடு, இந்தியா அஹிம்சா தர்ம போராட்டத்திலும் வாள் பலத்தை தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறது. உலகம் முழுவதும் இந்த அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்படும்போது, "தமிழ் நாடு" உணராமல் போய்விட்டது வருந்தத்தக்கது.

ஆகவே குதர்க்க வாதங்கள் எத்தனையோ தோன்றினும், புதிய தேசியக் கொடியையும், அதில் பொறிக்கப்படும் ராட்டின அடையாளத்தையும் நாம் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறோம்.

Koviloor Digital Library



# நமக்கு தேசாபிமானம் இல்லையா?

கல்கத்தாவில் வெளியாகும் "முசல்மான்" என்ற முஸ்லிம் பத்திரிகை எழுதுகிறது:—

சுதேச சாக்குகளை உபயோகிப்பதன் பயனை அறியாத இந்தியன் ஒருவனும் கிடையாது. சுதேச சாக்குகளை உபயோகித்தால், சுதேச தொழில்கள் விருத்தியடைகின்றன. ஒரு தேசத்தின் செழிப்பெல்லாம் அதன் தொழில் அபிவிருத்தியை பொறுத்தது. இவற்றையெல்லாம் பள்ளிச் சிறுவன்கூட அறிவான். இந்தியாவிலிருந்து வருஷம் 60 கோடி ரூபாய் துணிகளுக்காக வெளிநாடு போகிறது. இந்த கொள்ளையை தடுக்க ஒவ்வொருவரும் பரதேச துணியை பகிஷ்கரிக்க வேண்டியது கடமையாகும். அப்படிச் செய்ய வேண்டியது கடமையாயிருக்க, பரதேச துணி வர்த்தகஞ் செய்வதற்காக 10 கோடி ரூபாய் முதலுடன் பிரபல முஸ்லிம்கள் நிர்வாகத்தில் ஒரு கம்பெனி ஏற்படப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. இதற்கு கனம் ஆகாகான் ஆதரவும் உண்டாம். இக்கம்பெனி பெயர் ஈஸ்ட் அன்ட் வெஸ்ட் கார்ப்பரேஷனும். டெல்லியில் ரிஜிஸ்தராகப் போகிறதாம். இந்நாட்டிலிருந்து பரதேச துணிகளை விலக்க தீவிரமாய் முயற்சி நடக்கும் போது, தேசபக்தியில்லாமல் சில முஸ்லிம்கள் இம்மாதிரி கம்பெனி ஸ்தாபிக்க முயலுவது ஆச்சரியமாகவே இருக்கிறது மௌலானா ஷவுகத் அலியும் இதில் சேர்ந்திருக்கிறாரா என்பது தெரியவில்லை அவர் இப்பொழுதும் கதரே அணிந்து வருகிறார் ராஜீய விஷயத்தில் அவர் அபிப்பிராயம் மாறியிருக்கலாம். எவ்வளவுதான் மாறிய போதிலும இம்மாதிரி தேசத்துரோகமான காரியங்களில் அவரும் சேரும்படி அவர் மனோ நிலைமை மாறிவிட்டால், அது மிகவும் வருந்தத்தக்கதே. லண்டன் மகாநாட்டிற்கு மௌல்வி, வ. கே. பஸ்லுல்ஹக் பிரதிநிதியாகப் போயிருந்தார். லண்டனில் ஒரு ஷாப்பிற்கு சென்று ஒரு ஜெர்மன் சாமான் வேண்டுமென்று கேட்டார். அங்கே யில்லை யென்று கடைக்காரன் பதில் சொன்னான். வேறு எந்தக்கடையில் கிடைக்குமென்று மௌல்வி அவனை விசாரித்தார். "வேண்டுமானால் நீங்கள் ஜெர்மனிக்கு தான் போகவேண்டும். ஜெர்மன் சாக்குகளை நாங்கள் விற்பதில்லை" என்று பதில் சொன்னானாம்.

பிரிட்டிஷாரின் இந்த தேசாபிமானத்தை, மௌல்வி கல்கத்தாவில் ஒரு பிரசங்கதில் சொன்னார். இம்மாதிரி பிரிட்டிஷாருக்கு தேசாபிமானம் இருக்க, தங்கள் நாட்டின் நன்மைக்கு விரோதமாக வெளிநாட்டு வர்த்தகத்திற்கு உதவி செய்யக் கூடிய முஸ்லிம்கள் இந்நாட்டில் இருக்கிறார்கள். இந்தியாவில் முஸ்லிம்கள் அல்லாத பல பரதேச துணி வர்த்தகர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மையே. அவர்களைப்பற்றி அவர்கள் மதக்காரர் வெட்கமடையவில்லை யென்பது உண்மையே. ஆனால் இதற்கும் அதற்கும் வித்தியாசமுண்டு. அவர்கள் வெகு நாட்களாக அந்த தொழில் செய்து வருகிறார்கள். யார் மீதும் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்யவில்லை. இப்பொழுது ஆரம்பிக்கப் படும் முஸ்லிம் கம்பெனியோ, ராஜீய நோக்கத்தோடு ஆரம்பிக்கப் படுகிறது. அன்னிய துணி பகிஷ்காரத்தை முறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்படுகிறது. வெறும் வர்த்தகத்திற்காக இது ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே அதற்காக நாம் மிகவும் வெட்கமடைகிறோம். இந்த தேசத் துரோகமான வேலையை, ஆரம்பித்தவர்கள் விட்டுவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

---

## காங்கிரஸ் கடன் அறிக்கை.

வெளி வந்து விட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாமீது அநியாயமாக சுமத்திய கடன் விவரங்களை இதில் அறிந்துகொள்ளலாம். 32 பக்கங்கள்.

**விலை 1 அணா.**

ஒரு பிரதிக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,

11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

Koviloor Digital Library



# பழைய கருப்பன் லாயட் ::

## அவர் கல்தா வாங்கிய ரகசியம்.

லாயட் என்ற பேர்வழி சர். ஜார்ஜ் லாயட் என்ற பெயரோடு பம்பாயில் கவர்னராயிருந்தார். ஒத்துழையாமை காலத்தில் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார். மிருந்த தலை கிறுக்கு பிடித்த ஆசாமி மகாத்மாவை உயிரோடு புதைத்து விடவேண்டுமென்று சொன்ன அகம்பாவ கொடுக்கு. "பார்டோலியில் காந்தி சட்ட மறுப்பை (1922ல்) நிறுத்தியிருக்கா விட்டால், சர்க்கார் கதி என்னவாயிருக்கும்? அதை நினைக்கும் போதே பயமாயிருக்கிறது" என்று சீமைக்கு போன பின்பு சொன்னார். சட்ட மறுப்பை கண்டு அவ்வளவு நடுக்கம் கொள்ளுகிறவர். ஆகவே அதன் சிருஷ்டிகர்த்தாவான மகாத்மா மீது எவ்வளவு நடுக்கமும் துவேஷமும் இருக்க வேண்டும்? இந்தப் பேர்வழி சர்ச்சில் கோஷ்டியைச் சேர்ந்தவர். துடை நடுங்கிகள் ஆனபடியால் நாக்கில் நரம்பில்லாமல் உளறுவார்கள். "இம்" மென்றால் இருபத்தாறு அடக்கு முறைகளும், "ஊம்" என்றால் அறுபத்து நாலு அடக்கு முறைகளும் பிரயோகிப்பார்கள். சர்ச்சில் கோஷ்டியைச் சேர்ந்த சகல துடை நடுங்கிகளும் இம்மாதிரியே இருப்பதை நண்பர்கள் கவனித்தால் விளங்கும். பம்பாய் கவர்னர் வேலையை விட்டு சீமைக்கு போனார். இந்த ஆசாமியை எகிப்து நாட்டிற்கு ஹை கமிஷனராய் தூக்கி அனுப்பினார்கள். சர். ஜார்ஜ் லாயட், லார்ட் லாயடாக மாறினார். பம்பாயில் காட்டியதைப்போல அங்கும் தமது வாலை நீட்டினார். வாவிது கட்சியாரான எகிப்திய தேசிய வாதிகள் இவரை சும்மாவிடவில்லை. இவர் வாலை முறித்துக்கொண்டே வந்தார்கள் முறிக்க முறிக்க லாயடுக்கு கோபம் அதிகமாயிற்று. அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களை அவிழ்த்து விட்டார் கன்சர்வேடிவ் கட்சியார் அச்சமயம் மந்திரிசபை நடத்தினார்கள். அந்நிய நாட்டு மந்திரியாயிருந்த சர். ஆஸ்டின் சேம்பர்லேன் ரகசியமாக லார்ட் லாயடை எவ்வளவோ எச்சரித்தார். இம்மாதிரி மூடத்தனமாய் நடக்கவேண்டாமென்று சொல்லிப்பார்த்தார். பிடிக்கிறதற்கு ஆள் வந்தால், சாமி ஆடுகிறவன் அதிகமாய் குதிப்பான். அதைப்போல லார்ட் லாயட் அதிக ஆவேசங்கொண்டு பேயாட்டம் ஆடினார். இவர் பேயாட்டம் உச்சத்தில் இருக்கும் போது, கன்சர்வேடிவ் கட்சி சர்க்கார் கவிழ்ந்தது. தொழிற்கட்சி சர்க்கார் ஸ்தானத்திற்கு வந்தது. ஸ்ரீ. ஆர்தர் ஹெண்டர்சன் அந்நியநாட்டு மந்திரியாக வந்தார். வந்ததும் தமது பூதக்கண்ணாடியால் வெளிநாடுகளை நோக்கும் போது எகிப்தில் லார்ட் லாயட் பேயாட்டம் தெரிந்தது. பழைய தஸ்தாவேஜுகளை புரட்டிப்பார்த்தார். தமக்கு முன்னாலிருந்த சேம்பர்லேன் கண்டித்தும், லாயடின் பேயாட்டம் குறையாமல் கூடிக்கொண்டு போவதை கவனித்தார்.

இந்தப் பேர்வழிகளை வெறும் உபதேசத்தால் சரிப்படுத்த நினைப்பது, நாய் வாலை நிமிர்க்க முயற்சிப்பது போல்தான் என்று தீர்மானித்தார் உடனே என்ன செய்தார்? ஒரு வினாடி கூட தாமதிக்கவில்லை தமது சாமான்களை மூட்டை கட்டவோ, தமது நண்பர்களிடம் விடை பெற்றுக் கொள்ளவோ கூட அவகாசம் கொடுக்கவில்லை எகிப்திலிருந்து ஒரு கல்தா கொடுத்து சீமையில் கொண்டு தள்ளினார். அவ்வளவுதான் அவர் என்ன கதியானார் என்றுகூட கவனிக்கவில்லை. அன்று இங்கிலாந்தில் போய் விழுந்த லார்ட் லாயட், வெகு காலம் வரை வெளியே வரவில்லை. முக்காடு போட்டு மூலையில் குந்தினார். அவருடைய நண்பர்கள் அவருக்காக பார்லிமென்டில் உறுமி பார்த்தார்கள். கலங்கா நெஞ்சம் படைத்த ஹெண்டர்சன், அந்த உறுமல்களை லட்சியஞ் செய்யவேயில்லை. கடுகளவாவது மானம் இருந்தால், லார்ட் லாயட் வெளியே தலை நீட்டியிருக்கக்கூடாது. ஆனால் பாவம், மானம் விலைக்கு அகப்படக் கூடிய வஸ்துவல்ல. ஆகவே லார்ட் லாயடுக்கு அது கிடைக்கவில்லை. அவர் என்ன செய்வார்? மறுபடியும் வெளியே வந்து இந்தியாவைப் பற்றி ஊளையிடுகிறார்! வேலையில் இருந்தால் கல்தா கொடுத்து வெளியே அனுப்பலாம். வேலையில் இல்லாமல் உளறும் போது என்ன செய்வது?

Koviloor Digital Library



## கடவுளுக்கு கங்காணி வேண்டுமா?

ஒரு வெளிநாட்டு கிறிஸ்தவ பாதிரியார் இந்தியாவிற்கு மதப்பிரசாரம் செய்ய வரப் போகிறார். தமது அபிப்பிராயத்தை கவிபர சர் டாக்டர் ரவீந்தரருக்கு எழுதினர். அவர் அந்த பாதிரியாருக்கு எழுதிய பதில் ருசிகர மாயிருக்கிறது. அதை கீழே கொடுக்கிறோம்.

"உங்கள் கடிதத்தை மிகவும் சந்தோஷத் தோடு பார்த்தேன். நான் சொல்லக்கூடியது ஒன்றே. உங்கள் மதக்கொள்கைகளை எப் பொழுதும் பிறருக்கு உபதேசம் செய்வதிலே யே திருஷ்டியை செலுத்த வேண்டாம். அதற்குப் பதிலாக அன்போடு நீங்கள் ஐக்கிய மாகுங்கள் எதையும் ஜெயிக்கவேண்டும், ஆளவேண்டும் என்ற நினைவுகளே மேல்நாட் டாரான உங்கள் மனதில் நிரம்பிப்போயிருக் கின்றன மத மாற்றும் வேலையும் அதைச் சேர்ந்ததே. கிறிஸ்து எப்பொழுதும் எந்த மத கொள்கையையும் உபதேசிக்கவில்லை கட வுளிடம் அன்பு கொள்ளுவது ஒன்றையே அவர் உபதேசித்தார். கிறிஸ்துவைப் போலவே ஒவ்வொரு கிறிஸ்தவருடைய நோக் கமும் இருக்கவேண்டும். தன் எஜமான் வேயிலே தோட்டத்திற்கு கூலிகளை சேர்த்துக் கொண்டு போகும் கங்காணிகளைப் போல உங் கள் நோக்கமோ வேலையோ இருக்கக்கூடாது.

வெறும மத உபதேசம் செய்வது ஒரு தியா கமல்ல அது ஒரு சுகவாழ்வே யாகும். உல கத்திலுள்ள சோம்பேறி சுக வாழ்வுகளில் அது மிகவும ஆபத்தானது உங்கள் கடமை யை நீங்கள் செய்வதாக ஒரு பொய் நினைப்பை உங்களுக்கு உண்டாக்குகிறது. மற்றவர்களை விட நீங்கள் புத்திசாலிகள் என்ற கர்வத்தை உண்டு பண்ணுகிறது. இது உண்மையான உப தேசமாகாது உண்மை உபதேசத்திற்கு பணிவு, அன்பு, தன்னலதியாகம் இவை வேண்டும். உங்கள் சமூகமோ, ஜாதியோ, தனிப்பட்டவர் களோ உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இருக் குமானால், நீங்கள் ஒரு நாளும் பிறருக்கு நன் மை செய்ய முடியாது. நன்மை செய்யலாம் என்ற நினைப்பை நீங்கள் விட்டுவிடலாம். ஆத் மார்த்தீக உலகில், நீங்கள் நல்லவராயிருந்தா லொழிய பிறருக்கு நன்மை செய்ய முடியாது. நீங்கள் கிறிஸ்துவைப் போல ஆனாலன்றி கிறி ஸ்தவத்தை உபதேசிக்க முடியாது. அப்படி யான பின்பு நீங்கள் கிறிஸ்துவைப் போல கட வுளின் அன்பை உபதேசிப்பீர்களே யொழிய கிறிஸ்தவத்தை உபதேசிக்க மாட்டீர்கள்.

---

## சுயராஜ்யம் ஏன் வரவில்லை?

சர். சினுபாய் என்பவரின் குடும்பத்தாரு க்குச் சொந்தமான ஆலயமொன்று ஷாகிபாக் என்ற இடத்திலுள்ளது. இதுவரை "மேல் ஜாதி" இந்துக்களே அதனை உபயோகித்து வந்தனர். 2௨ மாலை மகாத்மா காந்தி அக் கோயிலில் "தீண்டாதாரும்" பிரவேசிக்க உரி மையுண்டென அறிவித்தார் காந்திஜி அக் கோயிலைத் தீண்டாதாருக் கென்று பிரதிஷ் டை செய்கையில் கூறியதாவது:—

"அரசியலைக்காட்டிலும் ஆயிரமடங்கு அதிக மாக நான் சமுதாய சீர் திருத்தத்தில் சிரத்தை கொண்டவன். தீண்டாதாருக்குச் சேவை புரிவதைக் காட்டிலும் நான் அரசியலை மிகவும் முக்கியமானதாகக் கருதவில்லை எனது சீர் திருத்த வேலைக்கு ஒரு வித தடையுமில்லை தி ருக்கும் பொருட்டே நான் அரசியலில் தீவிர மகக் கலந்துகொண்டு வருகின்றேன். தீண் டாமை விஷயத்தை நான் சுயநல நோக்கத்து டன் கருதவில்லை; தீண்டாதவர்கள் வேறு மதத்தைத் தழுவி, இந்துக்களை அரசியலில் எதிர்ப்பரென்று தினையளவும் எண்ணியதில்லை. காங்கிரஸ் வேலைத்திட்டத்தில் தீண்டாமை விலக்கை முக்கியமான அம்சமாக விருக்க வேண்டுமென்பதையும் நானே வற்புறுத்தி னேன். தீண்டாமை விலக்கு நிறைவேறும் வரையில் நாம் சுயராஜ்யத்திற்குத் தகுதியுடை யவர்களல்ல. தீண்டாத மக்களுக்கு நீதி வழங் கும் வரையில், நமக்கு ஆத்மசுத்தி ஏற்பட்டி ருக்கும் அளவில்தான் சுயராஜ்யம் பெறு வோம். நமது பாவங்கள் ஒழியாததால்தான், நாம் சுயராஜ்யம் பெறவில்லை. தீண்டாமை நீங் குமானால், எல்லா வித்தியாசங்களும் சூரிய னைக்கண்ட பனிபோல் மறையும்; உயர்வும் தாழ்வுமில்லாமற் போகும். ஒரு குடும்பத்தா ருககுச் சொந்தமான இக் கோயிலில் தீண்டா தார்களை அனுமதிப்பதோடு நின்றுவிடக்கூ டாது. தீண்டாதார் பொது ஆலயங்கள் அனை வற்றிலும் பிரவேசிக்குமாறு செய்ய, நீங்கள் இயக்கமொன்றை ஆரம்பிக்க வேண்டும்."

பூரி ஜெகந்நாதர் கோவிலில் தீண்டாதார் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போகிறார்கள்.

Koviloor Digital Library



# ஆலையில்
# அன்றும், இன்றும்,

(எம்டன் எழுதுவது)

நெல்லிக் குப்பம் ஆலை தொழிலாளர் சங்கம் உருவில்லாது போகச் செய்தவர்களின் எண்ணம் போலவே முடிந்தது. சங்கத்தைக் காட்டிக் கொடுத்து அவர்கள் தக்க வெகுமதியை பெற்றார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு சங்கத்தைக் காப்பாற்ற போதிய திறமை இல்லாமல் போய்விட்டதே என்பதை நினைக்கையில்தான், தொழிலாளர்களுக்கு மனப் பூர்வமாக உழைத்தவர்கள் மனம் மிகவும் வருந்துகிறது.

### அன்றைய நன்மை

சங்கமிருந்தபோது தொழிலாளர்களடைந்த நன்மைகளாவன:—

(1) தொழிலாளர்களை வேலையினின்றும் அடிக்கடி அகாரணமாக நிறுத்தும் கொடிய வழக்கம் நின்றது.

(2) ஷுகர் ஆலையில் ஒரே சமயத்தில் எடுக்கப்போன சுமார் 300 பேர்களுக்கு ஒருவித நன்மையைத் தேடிக் கொடுக்கப்பட்டது.

(3) வீதியில் உட்கார்ந்து ஸ்திரீகள் குழந்தைகளுக்கு பால் கொடுத்திருந்த அநியாயத்தைப் போக்கி, அவர்களுக்காகத் தனியாக ஒரு அறை கட்டும்படி செய்தது.

(4) தொழிலாளர்கள் வகுப்புவாரி சாப்பிட கட்டடம் கட்டப்பட்டது.

(5) சகலருக்கும் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது.

(6) 7 அணாவிற்கு குறைந்து ஆள்கூலி வைக்கப்படாது என விதி ஏற்பட்டது.

(7) பிரசவஸ்திரீகளுக்கு ஒரு மாதச்சம்பளத்துடன் லீவும், இன்னொரு மாதம் சம்பளமில்லாது லீவும் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப் பட்டது.

(8) ஆஸ்பத்திரி லீவும், சம்பளமும் கவனிக்கப்பட்டது.

(9) வருஷவாரி கூலியாட்கள் உட்பட 6 நாள் லீவு சம்பளத்துடன் கொடுக்க ஆலையார் ஒத்துக் கொண்டார்கள்.

(10) அலுக்கப் பணம் வாசிகளுக்கு தண்ணீர் குழாய் கூப்பர் ஷெட்டில் வைத்துக் கொடுத்தது.

(11) ரைட்டர்களுக்கு தாமதமாய் வரும் அபராதம் தள்ளப்பட்டது. கூலி ஆட்களுக்கு லேட் அபராதம் குறைக்கப்பட்டது.

(12) செல்லுப் போடும் சவுகரியம் ஏற்படுத்திக் கொடுத்தது.

(13) தொழிலாளர்களுக்குள் ஊக்கமும், உணர்ச்சியும், கட்டுப்பாடும் ததும்பி யிருந்தது.

(14) இலஞ்சம் வாங்கும் வழக்கம் தணிந்து வந்தது.

(15) பென்ஷன் கொடுப்பவர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டது.

இன்னும் பல சவுகரியங்கள் ஏற்பட்டன.

# யாருக்கு நாகரிகம்?

வெள்ளையர் நாகரிகத்தில் முற்றி பழுத்து விட்டதாகச் சொல்லுகிறார்கள் ஆனால் தூக்குத் தண்டனை விதித்து மனிதனை கொல்லும் அநாகரிகத்தை இன்னும் விடவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஏற்படுத்திய கமிட்டி, 5 வருஷங்களுக்கு தூக்கு தண்டனையை நிறுத்தி மாதிரி பார்க்கும் படி சிபார்சு செய்தது. பார்லிமெண்ட் இதுவரை ஒப்புக்கொள்ளவில்லை. இந்திய சட்டசபையில், தூக்கு தண்டனையை தொலைக்க வேண்டுமென்று ஸ்ரீ. கயா பிரசாத் சிங் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அது உருப்படவில்லை. நாகரிக சர்க்கார்களின் யோக்கியதை இப்படி இருக்கிறது. நேபாளராஜ்யம் இமாசலத்தில் இருக்கிறது. அதை ஆள்பவரும் ஒரு ராஜா சுயேச்சை பெற்றவர். பிரிட்டனுக்கு உட்பட்டவரல்ல. உலகப் பிரசித்தி பெற்ற கூர்க்க சிப்பாய்கள் அந்த நேபாள வாசிகள்தான். மலைநாடு, வீரம் பொருந்தியவர்கள். அழகாய் இருப்பார்கள். அந்த நாட்டில், 5 வருஷ காலத்திற்கு தூக்கு தண்டனையை ஒழித்திருப்பதாக மகாராஜா அறிவித்திருக்கிறார். நேபாள மகாராஜா பிம ஷம்ஷீர் ஜங் பகதூரை பாராட்டுகிறோம். அந்த பகதூர், பிரிட்டிஷார் செய்ய நடுங்கும் ஒரு காரியத்தை தீரத்தோடு செய்ததற்காக போற்றுகிறோம். இப்பொழுது யார் நாகரிகமுள்ளவர்கள்? மரணதண்டனையை ஒழித்த நேபாளியரா அல்லது மரண தண்டனையை ஒழிக்காமல் இருக்கும் பிரிட்டிஷாரா?

Koviloor Digital Library



# காலச் சக்கரம்.

## திருகூடசுந்தரர் நற்புத்தி,

கொழும்பில் வசூலான பணத்தை திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிடம் கொடுத்துவிட ஸ்ரீ. திருகூடசுந்தரம் பிள்ளை ஒப்புக்கொண்டு விட்டாராம். அதன் சம்பந்தமான தஸ்தாவேஜிகளை கமிட்டியிடம் கொடுத்து விடுவார் என்று திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் காரியதரிசிகளுக்கு அறிவிக்கிறார். தற்சமயம் ஒரு செல்லாக்காசு கூட கையில் வரப்போவதில்லை யென்றும், ("நிர்மாண" வேலை) கடன் கொடுத்தவர்களிடமிருந்து பெற்ற தஸ்தாவேஜிகளையே கொடுக்கப் போகிறாரென்றும் இதிலிருந்து தெரிகிறது. இதை கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பலன் ஒன்றுதான். இருந்தாலும், இவ்வளவு காலம் கழித்தாவது, பிறர் பணத்தை கொடுத்து விடவேண்டுமென்ற நற்புத்தி ஸ்ரீ. பிள்ளைக்கு உதயமானதற்காக சந்தோஷப்படுகிறோம்.

## லாயட் ஊளை.

"இந்தியாவில் சட்டமோ சமாதானமோ அடியோடு போயிற்று. பர்மாவில் கலகம். கராச்சியில் வெள்ளைப்பரை அவமானப் படுத்தினர். சிட்டாகாங்கில் ஆயுதச்சாலை கொள்ளை. கஜானாக்களில் பணமில்லை. எங்கும் ஒரே குழப்பம். இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? இந்திய சர்க்கார் காங்கிரசை மதித்து ராஜிசெய்ய முயன்றதே காரணம்" என்று பழைய கருப்பன் லார்ட் லாயட் சொல்லுகிறார். காரணம் அதுவா? அல்ல. சர்க்கார் ராஜிபேச நினைக்காத வருஷங்களாகிய 1919, 1921-ல் என் நெருக்கடி ஏற்பட்டது? லார்ட் லாயட் போன்ற பேர்வழிகளையும், அவர் அண்ணன் தம்பிகளான, ஜெனரல் டயர், மைக்கேல் ஓட்வியர், சார்லஸ் இன்ஸ், ரெஜினால்ட் கிராடக், பேசில் பிளாக்கெட், லார்ட் ரீடிங் போன்ற அகப்பாவம் பிடித்தவர்களையும் இந்தியாவில் உத்தியோகம் பார்க்க நியமித்ததே மூல காரணமாகும்.

## 20 ஆயிரம் ரூபாய்க்கு குடித்தவர்.

ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், ஆகிய இடங்களில் மறியல் மும்முரமாய் நடக்கிறது. ஒரு குடி பக்தர் இது வரை 20 ஆயிரம் ரூபாய் பெறுமான தமது சொத்தை விற்று குடித்து வந்தாராம்; மறியல் ஆரம்பித்த பின்பு அவர் குடியை விட்டு, தொண்டராய்ச் சேர்ந்து மறியல் செய்கிறாராம். மறியலின் பெருமையே பெருமை. இந்த மறியல் முன்பே வந்திருந்தால் இவரைப்போல அநேகர் கெட்டுப்போயிருக்கமாட்டார்கள்.

## கமிஷனருக்கு சூடு.

சென்னை கலால் கமிஷனர் ஒரு விநோத புருஷர். கள்ளுக்கடை மறியலைத்தான் காந்தி—இர்வின் உடன்படிக்கை ஒப்புக்கொள்ளுகிறதே யொழிய, குத்தகை ஏல மறியலை ஒப்புக் கொள்ளவில்லை யென்று வியாக்கியானஞ் செய்தார். அம்மாதிரி மறியல் செய்வதை அநுமதிக்க முடியாதென்று வீரம் பேசினார். இதைப்பற்றி ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி கவர்னருக்கு எழுதினார். ஏலமறியலை சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை யென்று கவர்னர் தெரிவித்திருக்கிறார். குடி கமிஷனருக்கும் இதைப் பற்றி சூடுபோட்டு அடக்கிவிட்டார். ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரிக்கு கிடைத்த கடிதமாவது:—

அன்புள்ள ராஜகோபாலாச்சாரி! 19 ஜூலை 1931-ல் தாங்கள் எழுதிய கடிதப்படி சமாதான உடன்படிக்கையின் 7-வது நிபந்தனைக்கும் கள்ளுக்கடை ஏலங்களை மறியல் செய்வதில் சர்க்கார் தலையிடுவதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று சர்க்கார் அபிப்பிராயப்படுவதாகத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி கவர்னர் விரும்புகின்றார்.

கள்ளுக்கடை ஏல மறியலோ, கள்ளுக்கடை மறியலோ, அல்லது அது சம்பந்தமான எதுவாயிருந்தபோதிலும், மறியல் எவ்வகையிலும் சட்டவிரோதமான தன்று. ஆனால் மறியல் சமாதான விரோதமாகவோ, அல்லது பலாத்கார வழியிலிறங்குவதாகவோ, ஒழுங்கீனத்தை உற்பத்திப்பதாகவோ இருந்தால் அதன் பேரில் சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். தாங்கள் கூறுகிறபடி "மறியல் சாத்விகமாகவும்; பலாத்காரமின்றியும் இருக்க வேண்டு"மென்பது எத்தகைய மறியல்களுக்கும் உடன் பாடாயிருக்கவேண்டும். இதே மாதிரி கலால் கமிஷனருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*கவர்னர் அந்தரங்க காரியதரிசி.*

இனியாவது கலால் கோஷ்டியார் வாலை மடக்கிக் கொண்டு சும்மாயிருப்பார்களா?

Koviloor Digital Library



## பசுத்தோல் மூடிய புலி!

இந்திய கடலோர வர்த்தகத்தை இந்திய கப்பல் கம்பெனிகளுக்கு ஒதுக்கி வைக்கவேண்டுமென்று ஸ்ரீ, ஹாஜி இந்திய சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்தார். வெள்ளையர் கூச்சல் போட்டனர். கப்பல் கம்பெனி முதலாளி லார்ட் இஞ்சுகேப் பல்லை நறநறவென்று கடித்தார். "பக்ஷபாதம்" "வகுப்புத் துவேஷம்" என்று வெள்ளை பத்திரிகைகள் கத்தின. இந்திய சர்க்கார் மசோதாவை எதிர்த்தார்கள். உலகத்தில் நாகரீகமுள்ள எந்த நாடும் இப்படிச் செய்யாதென்று சர்க்கார் கூறினார்கள். வர்த்தகம் தாராளமாய் நடக்கவேண்டுமென்று உபதேசம் செய்தார்கள். ஆஸ்திரேலியாவில் இம்மாதிரி கடலோர வர்த்தகத்தை தங்கள் நாட்டு கம்பெனிகளுக்கென்று ஒதுக்கி வைத்திருப்பதை இந்தியர் எடுத்துக்காட்டினர். காட்டியும் சர்க்கார் பிடிவாதத்தை விடவில்லை. கிறிஸ்தவ தர்மத்தில் ஊறி பக்குவமடைந்த லார்ட் இர்வின் கூட இந்த பக்ஷபாதத்தைவிட முடியவில்லை.

இன்று இங்கிலாந்தில் எப்படியிருக்கிறது? இந்தியர் கடலோர வர்த்தகத்தை தங்களுக்கென்று ஒதுக்கி வைப்பது "துவேஷம்" என்று உபதேசம் செய்த இங்கிலாந்து இன்று என்ன யோசனை செய்கிறது தெரியுமா? கடலோர வர்த்தகத்தை ஒதுக்கிவைக்க யோசனை செய்கிறது! பழைய உபதேசங்கள் பறந்துவிட்டன. தன்னுடைய வயிற்றில் அடிபடவே, தனக்கொரு நீதிகள் பிறக்க முன் வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களில் ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு கொண்டுபோகும் சாமான்களை ஏகாதிபத்திய கப்பல்களே கொண்டுபோக வேண்டுமாம். பிற நாட்டு கப்பல்களுக்கு இடமில்லாமல் சட்டஞ்செய்ய வேண்டுமாம். பலே, இங்கிலாந்தே! நீ பசுத்தோல் போர்த்திய புலி என்பதில் சந்தேகமென்ன? உனக்கொரு நீதி பிறருக்கு ஒரு நீதியா?

உலகத்தில் எந்தெந்த நாடுகளில் கடலோர வர்த்தகத்தை தங்கள் நாட்டு கப்பல்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை சர்வதேச சங்கம் சேகரித்திருக்கிறது.

### ஒதுக்கிவைத்த நாடுகள்.

அல்பேனியா, பிரேஜில், பல்கேரியா, சில்லி, கோஸ்டாரிக்கா, எகிப்து, எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, கிரீஸ், இத்தாலி, ஜப்பான், லாட்வியா, மெக்சிகோ, நெதர்லாந்து, பனமா; போலந்து, போர்த்துகல், ருமேனியா, ஸ்பெயின், ஸ்வீடன், துருக்கி, ருஷியா, அமெரிக்கா, யூருகாய்.

முக்கியமான எல்லா நாடுகளும் ஒதுக்கி வைத்திருப்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்தியா மட்டும் எதற்காக இளித்த வாய்த்தனமாக பிரிட்டனுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும்? இதுவரை விட்டுக்கொடுத்ததால் லார்ட் இஞ்சுகேப் கோடீஸ்வரரானார். அதனால் திமிர்கொண்டு இந்தியாவிற்கு விரோதமாக கண்டபடி உளறி வருகிறார். நம்முடைய காசு அவர் கையில் ஏறி இருக்காவிட்டால் இம்மாதிரி திமிரும், அகம்பாவமும் அவருக்கு வந்திருக்குமா?

## போலீஸ் எலிகள்.

ரங்கூனில் "காந்தி" பத்திரிகை பார்சல்கள் இறங்கியதும் ரகசிய போலீஸ் எலிகள் கவ்விக்கொண்டு ஓடி விடுகின்றனவாம். திங்கட்கிழமையன்று கப்பல் ரங்கூன் செல்லுகிறது. மற்ற பார்சல்களும் கடிதங்களும் திங்கட்கிழமையே கிடைத்து விடுகின்றன. "காந்தி" பத்திரிகை பார்சல்கள் மட்டும் செவ்வாய்க் கிழமை மாலையில்தான் கிடைக்கின்றனவாம். அவையும் ஒழுங்காய் கிடைப்பதில்லை. தலையங்க ஷீட்டுகளும், போஸ்டர்களும் தவிர மற்றவைகளே கிடைக்கின்றனவாம். ரங்கூன் போலீஸ் எலிகளுக்கு அவை ருசியாயிருக்கின்றன போலும். பணம் கொடுத்து வரவழைக்கிறவர் வேறொருவராயிருக்கும் போது மற்றொருவர் திருடுவது அயோக்கியத்தனமல்லவா? சர். சார்லஸ் இன்ஸ் ராஜ்யத்தில், வெட்டுத் தலை காட்சிகள் நடக்கும் போது, இதெல்லாம் எம்மாத்திரம்?


### தேசீய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| சோவியத் ருஷ்யா | 0 | 1 | 0 |
| கான்பூர் கலகம் | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் சரித்திரம் | 0 | 1 | 0 |
| பாரத ஜோதி | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் கடன் அறிக்கை | 0 | 1 | 0 |

மொத்தமாக வேண்டுபவர்கள் 7 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ், சென்னை.


Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)




திங்கள், வியாழன் வெளிவரும். வருட சந்தா ரூ. 3—0—0.


மலர் 2 | சென்னை, 1931 ஆகஸ்டு 10உ, பிரஜோற்பத்தி ஆடிமீ 26உ திங்கட்கிழமை | இதழ் 15

# காந்திஜி கண்ணீர்

வர வர ராஜீயக் கொலைகள் அதிகமாய்க் கொண்டு வருகின்றன. இதைக் கண்டு மகாத்மா கண்ணீர் வடிக்கிறார். அவர் "யங் இந்தியா"வில் எழுதிய எழுத்துக்களும், 6உ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேசிய பேச்சுக்களும் கல் மனமும் கரையும்படி இருக்கின்றன. காங்கிரஸ் அஹிம்சா தர்மத்தை கைக்கொண்டிருக்கிறது. தற்காலம் இந்தியா இருக்கும் நிலைமைக்கு அதுவே சரியான முறை என்பதற்காக ஒப்புக் கொண்டிருக்கிறதே யொழிய, வேறு எந்த மத நம்பிக்கைக்காகவுமல்ல. அந்த முறையை காங்கிரஸ் கைக் கொண்டிருக்கிறவரை காங்கிரசை சேர்ந்தவர்கள் அதன்படி நடக்க கடமைப் பட்டிருக்கிறார்கள். அதை விட்டு சிலர் பலாத்காரத்தில் இறங்குவது பெரிய துரோகமாகும். ராஜீயக் கொலை செய்பவர்களை பாராட்டுவதோ, அல்லது அந்தரங்கத்தில் ஆதரிப்பதோ பெரிய தேசத் துரோக மென்றே நாம் கூறுவோம். 36 கோடி ஜனங்களின் பிரதிநிதியாக காங்கிரஸ் இருப்பதால்தான் அதற்கு இன்று மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் பிரதிநிதியாகவே மகாத்மா லார்ட் இர்வினுடன் உடன்படிக்கையை செய்திருக்கிறார். அந்த உடன்படிக்கையை கெடுக்கும் வழியில் புரட்சிக்காரர்கள் நடப்பார்களானால், கண்டிப்பாக சகலரும் அவர்களை கண்டனஞ் செய்ய வேண்டியது கடமை. புரட்சிக் காரர் செய்கையால் காங்கிரஸ் மதிப்பு குறைகிறது. காங்கிரசிற்கோ மகாத்மாவிற்கோ செல்வாக்கு இல்லை என்ற எண்ணம் பரவுகிறது. தேசத்திற்கு இதைவிட பெரிய கெடுதி என்ன வேண்டும்? அதிலும் முக்கியமாக, லண்டன் மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள இருக்கும்போது, காங்கிரஸ் வெறுக்கும் ஒரு செய்கையை சிலர் செய்வதென்றால், அதைவிட துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது. காங்கிரஸ் செய்யும் முயற்சிகள் பலிக்காமல் போகுமானால்,

(கடைசி பக்கம் பார்க்க)

## திருக்குறள் அவதானம்.



டி எஸ். ராமதாஸ்.

தென்காசி திருவள்ளுவர் கழகத்தில் 9-8-31ல் ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு அம்பாசமுத்திரம், வக்கீல் உயர்திரு, கே. எ. சிவஞானபிள்ளை அவர்கள் தமைமையில் திருக்குறள் அஷ்டாவதானியார், உயர்திரு, தி.ப. சுப்பிரமணிய தாஸ் அவர்கள் குமாரர் 11-வயதுள்ள திருவாளர், டி. எஸ். ராமதாஸ் அவர்கள் "திருக்குறள் அவதானம்" என்னும் நவீன மனோதத்துவ ஆராய்ச்சியை செய்து காட்டி திருக்குறளை அரங்கேற்றினார். அதுகாலை அன்பர்கள் யாவரும் வந்து கேட்டு இன்புற்று அன்னாரை ஆசிர்வதித்தனர்.

# சுயராஜ்யத்திற்கு ஆபத்து :: மகாத்மா காந்தி

"நியாயமென்று தமக்கு விதிக்கப்பட்ட முறையில் வங்காளத்தில் விசாரணை புரிந்து கடமையாற்றியிருந்த ஒரு நீதிபதியைப் படுகொலைபுரிந்தது புரிந்தவர்களுக்குத் தீராத பழியாகும். இச் செய்கையால் கல்கத்தாவிலும் மற்ற இடங்களிலும் ஐரோப்பியர் கிலேசப்பட்டுக் கிளர்ச்சி புரிந்து வருவதில் ஒன்றும் அதிசயமில்லை. தமக்குப் பிரியமில்லாதவர்களையெல்லாம் கொன்று விடுவதில் பேராவுடைய வாலிபர்கள் எவ்வளவுதான் தேசாபிமானத்தால் தூண்டப் பட்டவர்களாயினும் தாங்கள் மேற்கொண்ட உத்தம காரியத்தைப் பூர்த்தி செய்பவர்களாகார். இரகசியச் சங்கங்களால் செய்யப்படும் கொலைச்சதிகள், அண்டையயலாரில் ஒவ்வொருவரையும் சந்தேகப் பிராணிகளாகச்செய்து விடுவனவாகின்றன. ஒவ்வொரு ஐரோப்பிய உத்தியோகஸ்தருடைய கொலையும் இந்தியாவின் தற்கால நிலைமை முழுவதையும் பாதிக்குத்தமென்பதில் ஐயமில்லை. இப்படிப்பட்ட கொலைகளை வெறுக்கும் ஒவ்வொருவரும் தமது கண்டனத்தை வெளியிட்டு கொலைத் தொழிலை ஆதரிப்பவர்களில் ஒவ்வொருவரோடும் விவாதித்து நல் வழிப்படுத்த முயல வேண்டியது கடமையாகும். அவர்கள் திருந்தாவிட்டால் அவர்களோடு ஒத்துழைப்பதை நாம் நிறுத்திவிட வேண்டும். சத்தியாக்கிரக முறை மக்களிடையே தாக்ஷண்யம் பாராட்டுவதில்லை சரியான நிலைமையில், சத்தியாக்கிரகம் நம்மை விரோதிகளாகப் பாவிப்பவர்களிடையே உபயோகப்படுவதைக் காட்டிலும் நம் நண்பர்களிடையே மிகவும் அதிக பயனுடைய விதத்தில் உபயோகிக்கப் படலாகும். இப்படிப்பட்ட செய்கைகளை நாம் ஆதரித்தாலும், அல்லது கவனிக்காமலிருந்து விட்டாலும் ஸ்வராஜ்யம் கிடைப்பதற்குரிய காலம் நீடிக்கப்படுவதன்றியும், ஸ்வராஜ்ய சர்க்கார் நன்கு நடைபெறுவதற்குத் தடைகளும் கஷ்டங்களும் ஏற்படும். ஏனெனில், கொலைகாரச் சதிச் சங்கங்களின் செய்கைகள் எப்படியிருந்தாலும் படை வன்மையும் அதிக ஜாக்கிரதையும் உடைய அந்நிய சர்க்கார்களுக்கு இராஜ்ய நிர்வாகம் செய்து கொண்டு போகவு அவற்றினிடையே சாத்தியமாயிருக்குமேயாயினும், பொது ஜனாபிப் பிராயத்தை யாதாரமாகக்கொண்ட அரசியல் முறை இப்படிப்பட்ட சபைகளின் செய்கைகளினிடையே செவ்வனே நடைபெறாது என்பதில் ஐயமில்லை. நாம் வெறுக்கும் உத்தியோகஸ்தர்களையோ இதர ஜனங்களையோ கொன்று விடுவது சரியென்று கருதுகின்ற கொள்கை, ஸ்வராஜ்யம் கிட்டியவுடன் போய்விடும் என்று கருத இடமேயில்லை. ஆகவே சுயநலம் பொருட்டாயிருந்தாலும், சுதந்தரத்தை விரும்புவோரனைவரும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இப்படிப்பட்ட செய்கைகளை ஒழிக்கத் தம்மாலானவரையில் அல்லும் பகலும் உழைக்க வேண்டும் சாத்வீக முயற்சிகளோடு பலாத்கார முயற்சிகளும் பரவிவந்தால் பின்னது முன்னதற்கு மிகுந்த ஒத்தாசை செய்யக் கூடும் என்று சிலர் என்னிடம் கூறக் கேட்டிருக்கிறேன். அஹிம்சா இயக்கத்துக்குக் காரணன் என்ற தோரணையில் பலாத்காரம் அஹிம்சைக்கு உதவி புரியுமென்று நம்புவது மனப் பிராந்தியேயாகும், என்று நான் மிகவும் உறுதியாகவும் நம்பிக்கையோடும் வெளியிடுகின்றேன். பலாத்காரமான எவ்வித அரசியற் செய்கைகளும் அஹிம்சா இயக்கத்தைப் பாழுறச் செய்வதாகும். நான் செய்யாமலும் விரும்பாமலுமிருக்கையில் இப்படிப்பட்ட பலாத்காரமாகிய தொத்து நோய்பரவுவதாயின், அஹிம்சா இயக்கம் தானாகவே தடைப் பட்டும் போய் விடும் என்று அனைவரும் அறிய வேண்டும். சர். ஹாட்ஸனைக் கொல்வதற்காகச் செய்த முயற்சி ஐரோப்பியர்கள் பால் ஆத்திரத்தை யுண்டு பண்ணியிருக்கின்றது. இதர வகையான கொலை முயற்சிகளுக்கும் அதிதியை ஒருவன் கொலை செய்ய மேற்கொள்ளும் முயற்சிக்கும் வித்தியாசமுண்டு. அதிதியைக் கொலை செய்ய முயல்வது சாதாரணக் கொலையைக் காட்டிலும் அதிகப் பாபகரமானது. எவ்விதத்திலும் கடுமையாகக் கண்டிக்கத்தக்க தொன்றும்.

"யங் இந்தியா"

Koviloor Digital Library



# ஆண்டிகள் மடம் கட்டிய கதை

ஒரு பாழடைந்த மடம். இரவு தோறும் அப் பக்கம் வரும் ஆண்டிகள் அங்கு தங்குவார்கள் எந்த யுகத்திலேயோ அம்மடம் கட்டப்பட்ட படியால் இடிந்து சீர் கெட்டுப்போயிருந்தது. அதை சீர்திருத்தினுல்தான் மழை காலத்தில் அங்கு தங்க முடியும். ஒவ்வொரு இரவிலும் அங்கு கூடும் ஆண்டிகள் அதைப் பற்றி பேசுவார்கள். மறு நாளை யாசகம் எடுத்து சீர்படுத்த ஆரம்பிக்க வேண்டுமென்று விடிய விடிய பேசிக் கொண்டிருப்பார்கள். காலை எழுந்ததும் ஒவ்வொருவன் ஒவ்வொரு மூலையை நோக்கி போய் விடுவான். மறுபடி இரவு கூடியதும் அதே பேச்சு. காலையானதும் மறுபடியும் கம்பி நீட்டுதல். இன்று வரை இப்படியே ஆண்டிகள் காலங்கடத்தி வருவதால் மடமும் அப்படியே பாழடைந்து கிடக்கிறது. பழைய ஆண்டிகள் மட்டும் அப்படியல்ல. அந்த தொழிலுக்கு வரும் சகலருக்கும் அதே புத்தி. அதனுல்தான் நடக்காத காரியத்திற்கு "ஆண்டிகள் மடம்கட்டியது போல" என்று உலகத்தில் சொல்லுகிறார்கள்.

இந்த ஆண்டிகளுக்கு போட்டியாக ஐரோப்பாவில் ஒரு கூட்டம் தோன்றி இருக்கிறது. அவர்களிடம் இந்த ஆண்டிகள் பிச்சை வாங்கும்படி அவ்வளவு பெரிய புரட்டர்களாயிருக்கிறார்கள். வருஷந் தவறினுலும், யுத்தம் ஒழிக்கும் மகாநாடோ, ஆயுதங்குறைக்கும் ஒப்பந்தமோ ஏதாவது ஒன்று செய்யாமல் அந்த வெள்ளை ஆண்டிகள் இருப்பதில்லை. வண்டி வண்டியாக "யுத்த நிறுத்த" ஒப்பந்தங்கள் குவிகின்றன. டன், டன்னுக ஆயுதங் குறைத்தல் பேச்சுக்கள் நடக்கின்றன. ஆனுல் நடவடிக்கையில் பார்த்தால் பூச்சியமாகவே யிருக்கிறது. ஆண்டிகள் கூடி மடம் கட்ட வெறும்பேச்சு பேசிய கதைக்கு மேலாகவே இருக்கிறது. எல்லாம் வெறும் கூச்சல்! இந்த வெள்ளை ஆண்டிகள் அயோக்கியத்தனத்தை கமான்டர் கென்வொர்த்தி வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கிறார். அதைப்பார்த்தால் சர்வதேச சங்கத்தின் யோக்கியதை நன்றாய் தெரியும். சர்வ தேச சங்கம் "திருடர்கள் கூட்டம்" என்று ஒரு பெரியார் முன்பு வர்ணித்திருக்கிறார்.

யுத்தத்தை நிறுத்தவேண்டும், யுத்த தளவாடங்களை குறைக்கவேண்டும் என்று கூச்சல் போடும் ஐரோப்பியர், வருஷாவருஷம் எவ்வளவு செலவிடுகிறார்கள்? யுத்த தளவாடங்களுக்காக ஐரோப்பிய நாடுகள் வருஷம் 90 கோடி பவுன் அல்லது 1350 கோடி ரூபாய் செலவிடுகின்றன. யுத்த நிறுத்த (கெல்லாக்). உடன்படிக்கைக்கு வெள்ளைக்கொடி பிடித்த அமெரிக்கா சென்ற யுத்தத்திற்கு முன்னுல் 1914-ல் 9 கோடி 20 லட்சம் பவுன் ராணுவத்திற்காக செலவிட்டது. தற்சமயம் வருஷம் 17½ கோடி பவுன் செலவிடுகிறது. கெல்லாக் உடன்படிக்கையின் பலன்! கடற்படைகளை குறைக்க வேண்டுமென்று 1929-ல் பெரிய ஆர்ப்பாட்டத்தோடு மகா நாடு கூட்டிய பிரிட்டன் யோக்கியதை என்ன? சென்ற யுத்தத்திற்கு முன்பு 1912-ல் 6 கோடி பவுன் ராணுவத்திற்கு செலவிட்டது. இவ்வருஷம் 11 கோடியே 10 லட்சம் பவுன் செலவிடுகிறது. என்ன ஒழுங்கு!

1924-ல் ரஷியா 240 லட்சம் பவுன் செலவிட்டது. இவ்வருஷம் 620 லட்சம் பவுன் செலவிடுகிறது. பிரான்ஸ் 1924-ல் 660 லட்சம் பவுன். இவ்வருஷம் 870 லட்சம் பவுன்.

சென்ற யுத்தத்தினுல் ஒவ்வொரு நாளும் படும் கஷ்டமும், பட்ட கடனும் கொஞ்சமல்ல. பிரிட்டன் மட்டும் யுத்த கடனுக்காக நிமிஷத்திற்கு ஆயிரம் பவுன் வீதம் 140 வருஷங்களுக்கு கொடுக்கவேண்டி யிருக்குமாம். யுத்தத்தில் ஒரு கோடிபேர் மாண்டனர். 2 கோடி பேர் காயமடைந்தவர். 90 லட்சம் குழந்தைகள் தகப்பனை இழந்தனர். 50 லட்சம் பெண்கள் கணவரை இழந்தனர். இந்த அநியாயங்களை கண்ணெதிரே பார்த்தும் புத்திவரவில்லை.

விஷப்புகையை சென்ற யுத்தத்தில் உபயோகித்ததால் சிப்பாய்கள் பட்ட துன்பம் கொஞ்சமல்ல. சித்திரவதைக்கு உட்பட்டு உயிர் துறந்தனர். அவ்வளவு கொடிய தன்மையுள்ள விஷப்புகையை இனி யுத்தத்தில் உபயோகிப்பதில்லை என்று எல்லா நாடுகளும் ஒப்பந்தம் செய்திருக்கின்றன. இருந்தும், புதிது புதிதாக விஷப்புகைகளை கண்டுபிடிப்பதோ, அவற்றிற்காக மருந்துச் சரக்குகளை சேர்த்து வைப்பதோ நிற்கவில்லை. இந்த விஷப்புகை ஆராய்ச்சிக்காக பிரிட்டன இவ்வருஷத்தில் 170 ஆயிரம் பவுன் செலவிடுகிறது!

இம்மாதிரி அநியாயக் காரர்கள் இருக்கிற வரை யுத்தம் நிற்குமா? ஒரு நாளும் நிற்காது, யுத்த நிறுத்தப் பேச்சு பலிக்குமா? ஆண்டிகள் மடம் கட்டுவது பலித்தால் இதுவும் பலிக்கும்.

Koviloor Digital Library



# டம்பாச்சாரி மன்னர்கள் ::

பாபு ராமானந்த
சாட்டர்ஜி

சில சுதேச மன்னர்கள், தங்களுடைய சமஸ்தான வரும்படியின் பெரும்பாகத்தை, அரண்மனைச் செலவுகளுக்கும் களியாட்டங்களுக்கும் உபயோகப் படுத்துகிறார்கள் என்று இம்மன்னர்கள் மீது குறை கூறப்படுகிறது. இந்தச் சமஸ்தானங்கள் இவர்களுடைய சொந்த சொத்தல்ல. தனிப்பட்ட நபர்கள் கூட, தங்கள் வருவாயில் பெரும்பாகத்தை வீண் ஆடம்பர செலவுகளில் செலவழித்தால் அவர்கள் மனிதத் தன்மைக்கு மாறுபட்டவர்கள் என்று பொதுவாகக் கருதப் படுகிறது. ஆதலின், சுதேச மன்னர்கள் தங்களுடைய சொந்தச் செலவைச் சுருக்கிக் கொண்டு, அப்பணத்தை, அபிவிருத்தி இலாக்காக்கள் என்று சொல்லப் படும் கல்வி முதலிய இலாக்காக்களுக்கு உபயோகப் படுத்த வேண்டும். பிரிட்டிஷ் மன்னர், அதாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியின் அரண்மனைச் செலவு எவ்வளவு ஆகிறதென்பதை நமது சுதேச மன்னர்கள் கவனித்தல் நலம். ஜார்ஜ் மன்னரின் (சிவில்லிஸ்ட்) செலவு 5,76,000 பவுன். 1929-30ம் வருஷத்து கிரேட் பிரிட்டனில் வருமானம் 73,41,88,748 பவுனாகும். எனவே பதினாயிரம் பவுன் வரும்படியில் எட்டு பவுன் விதம் பிரிட்டிஷ் மன்னர் செலவுக்கு எடுத்துக் கொள்கிறார். அதாவது தற்போதைய நாணயமாற்று விகிதத்தின்படி, பிரிட்டிஷ் மன்னருடைய அரண்மனைச் செலவு 76,80,000 ரூபாயாகிறது.

இனி இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களைக் கவனிப்போம். பல சுதேச சமஸ்தானங்களின் வருஷாந்த அறிக்கைகள் என்னிடம் இல்லை. இரண்டொரு சமஸ்தானங்களின் அறிக்கைகளே என்வசம் இருக்கின்றன. அவைகளினின்று சில புள்ளி விவரங்களை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். ஒரு சமஸ்தானத்தின் வரும்படி வருஷத்தில் 249 லட்சம். இதில் மன்னருடைய அரண்மனைச் செலவு மாத்திரம் 29,60,000 ரூபாய் அதாவது மொத்த வருமானத்தில் நூற்றுக்குச்சுமார் பன்னிரண்டு விதம் செலவழிக்கப் படுகிறது. மற்றொரு சமஸ்தானத்தில், மொத்த வரும்படி 2,47,23,000 ரூபாய் அரண்மனைச் செலவு மட்டும் 13,67,000 ரூபாய் அதாவது நூற்றுக்குச் சுமார் ஆறரை விதம் செலவழிகிறது. இந்தச் சமஸ்தானம், வருமானத்தில் நூற்றுக்கு இரு பது விதம் கல்விக்குச் செலவழிக்கிறது. எனவே, இந்தச் சமஸ்தானத்தின் அரண்மனைச் செலவு சிறிது குறைவென்றே சொல்ல வேண்டும். ஆனால், ஜார்ஜ் சக்கரவர்த்தியினுடைய அரண்மனைச் செலவை உத்தேசிக்கையில் இவை, சிறிது அதிகமென்றே சொல்லவேண்டும்.

நமது சுதேச மன்னர்கள் எதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவர்களுடைய சமஸ்தான வருமானம் அதிகமாவதை விரும்புவார்கள் என்பது நிச்சம். இதற்கு, சமஸ்தானங்களின் இயற்கை வளங்களை விருத்தி செய்ய வேண்டும். ஜனங்கள் போதிய கல்வி ஞானம் பெறவேண்டும். தவிர, வேலை செய்வோருடைய திறமையும் அதிகமாக வேண்டும், அதாவது, ஜனங்களின் சுகாதார நிலை சரியாக விருந்தால் தேசத்தின் பொருளபி விருத்தியும் புகழத் தக்கதாயிருக்கும்.

இச்சமயத்தில் இந்தியாவிலுள்ள சில சுதேச சமஸ்தானங்களையும் மேனாடுகளிலுள்ள சில சுதேச சமஸ்தானங்களையும் மேனாடுகளிலுள்ள சில பிரதேசங்களையும் ஒப்பிட்டுக் காட்டுதல் பொருந்தும் என்று கருதுகிறேன். காஷ்மீர சமஸ்தானத்தையும் ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஜர்லாந்தையும் எடுத்துக் கொள்வோம். இரண்டும் மலைப் பிரதேசங்கள்; குளிர் நிரம்பியவை. தேகாரோக்கியத்துக்குச் சாதகமான சீதோஷ்ண ஸ்திதியுடையது. இரண்டும் உள்நாட்டுப் பிரதேசங்கள். ஸ்விட்ஜர்லாந்து வாசிகளிற் பலர் பேரறிஞர்களாய் சுதந்திர வீரர்களாய் விளங்கினார்கள். இதனால் ஸ்விட்ஜர்லாந்து பிரபல மடைந்தது. காஷ்மீரவாசிகளும் அறிவுள்ளவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவர்களுடைய அறிவு விருத்திசெய்யப் படாமலிருக்கிறது. இந்தியாவில் கல்வி, அறிவைப் பெற்றவர்களுடைய தொகை மிகக் குறைவாயிருப்பது காஷ்மீர் பிரதேசமே. இங்குப் பலவித உலோகவகைகள் இருக்கின்றன. ஸ்விட் ஜர்லாந்தின் விஸ்தீரணம் 15,940 சதுரமைல். ஜனத்தொகை 40 லட்சத்துக்குமேல்இருக்கிறது. இந்நாட்டின் 1929-ம் வருஷத்து வருமானம் 17,57,33,323 ரூபாயாகும். காஷ்மீர் சமஸ்தானம், ஸ்விட்ஜர்லாந்தை விட ஐந்துமடங்கு விஸ்தீரணமுள்ளது. அதாவது. 84,258 சதுர மைல்களாகும். 1927-28-ம்வருஷத்து இந்தச் சமஸ்தானத்தின் வருமானம் 2,39,00000 ரூபாயாகும். அதாவது ஸ்விட்ஜர்லாந்தின் வருமானத்தில் சுமார் எழில் ஒரு பங்கேயாகும்.

Koviloor Digital Library



## சந்திக்கு இழுங்கள்!

லண்டனில் கிங் எட்வர்ட் ஆஸ்பத்திரி என்ற ஆஸ்பத்திரி ஒன்றிருக்கிறது. இதற்கு பணம் சேகரிப்பதற்கு ஒரு நூதன முறையை கைக்கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்தில் பிரபலமாயுள்ளவர்கள் மீது வேடிக்கையாக ஒரு குற்றஞ் சாட்டுகிறது இந்தக் குற்றத்தை விசாரிக்க ஒரு தமாஷ் கோர்ட், அந்தக் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப் பட்டவர் குறிப்பிட்ட தெய்தியில் வந்து பதில் சொல்ல வேண்டும். இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்பு கோர்ட்டார் தீர்ப்பு கூறுவார்கள். கோர்ட், தீர்ப்பு எல்லாம் தமாஷ் ஆனால் இரு தரப்பு வாதங்கள் மட்டும் அறிவை வளர்க்கக் கூடியவையா யிருக்கும், இவற்றைப்பார்க்க பலர் விரும்புவார்கள். அவர்களிடம் டிக்கட்டு விற்று ஆஸ்பத்திரிக்கு பணம சேர்ப்பார்கள் இந்த தமாஷ் கோர்ட்டில் இதுவரை, பேர் பெற்ற நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னுட்ஷா, மிஸ். சிட்வெல், அல்பிரட் நாய்ஸ் முதலியவர்கள் விசாரிக்கப் பட்டிருக்கிறார்கள் ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் பிரிட்டனில் பெரிய நூலாசிரியர்களில் ஒருவர் சமீபத்தில் அவர் மீது குற்றஞ் சாட்டி வேடிக்கை கோர்ட்டில் விசாரணை நடந்தது.

புராதன காலத்தை, முக்கியமாக சென்ற நூற்றாண்டின் மத்திய காலத்தை மிகவும் விசேஷமானதென்று ஸ்ரீ. செஸ்டர்டன் சொல்லுகிறாராம். பொதுவாக தற்காலத்தைவிட சென்றுபோன காலத்தையே அவர் புகழ்கிறாராம். இந்த "பட்சபாத" குற்றத்திற்காக அவர் விசாரிக்கப்பட்டார். தற்கால ராஜீய வாதிகளை விட முற்கால ராஜீயவாதிகள் சாமர்த்திய சாலிகள். தற்கால ஜனங்களை விட முற்காலத்தில் இருந்தவர்கள் ஒழுக்கம் மிகுந்தவர்கள் என்பது செஸ்டர்டன் கொள்கை. இரு பக்கமும் வாதம் நடந்தது. முடிவில் எதிரி குற்றவாளியென்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டார். அவருக்கு பட்சபாதம் இருப்பது கோர்ட்டாருக்கு நிரூபமாயிற்று. ஆகவே எட்சர் வாலஸ் நாவல்களையும். வார்ட் பிரன்ட் பேரர்ட் பிரசங்கங்களையும் ஒரு வார்த்தை விடாமல் படித்து புதிய நாவல் ஒன்றை எழுத வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள். இவை முற்றிலும் தமாஷ்தான். இருந்தாலும் எவ்வளவோ படிப்பினைகள் அடங்கியிருக்கின்றன.

இந்தியாவிற்கு சுய ராஜ்யம் வேண்டாம் என்று சொல்லும் பேர்வழிகள் இந்நாட்டில் சிலர் இருக்கிறார்கள். வேறொரு காரணத்தைச் சொல்லி சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்த ஆசாமிகளை சந்திக்கு இழுத்து மேற்படி கோர்ட்டுகளில் விசாரித்தால், யோக்கியதை வெளிப்பட்டு போய்விடும். தமிழ் நாட்டை பொறுத்தவரையில், இம்மாதிரி கோர்ட்டுகளில் விசாரிக்கப் படவேண்டியவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

## தேசியக் கொடி மாறுதல்.

பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி, தேசியக்கொடி மாறுதலைப்பற்றி அடியிற்கண்ட தீர்மானம் செய்திருக்கிறது:—

தேசியக்கொடிக் கமிட்டி யாதாஸ்தைக் கார்யக்கமிட்டி பரிசிலனை செய்தது. கமிட்டியாரது உழைப்பைப் பாராட்டுவதோடு தேசியக் கொடி வகுப்பு பேதங்களைக் காட்டுவதாகவிருக்கக் கூடாதெனக் கமிட்டியார் கூறியிருப்பதையும் இக் கூட்டம் அங்கீகரிக்கிறது. அதோடு வேறு நாட்டுக் கொடி என சந்தேகப்படாத வண்ணம் திட்டமாக இக்கொடி இந்நாட்டு தேசியக்கொடி யென்பதைக் காட்ட வேண்டும் ஆனால் இப்போதிருக்கும் கொடியில் அதிக மாறுதலும் செய்யக் கூடாது. ஆகவே இக்கமிட்டியார் கீழ்க்கண்ட மாறுதலை மட்டும் அங்கீகரிக்கும்படி அதில் இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குச் சிபார்சு செய்கிறார்கள். முன்போலவே கொடியில் மூன்று வர்ணங்களிருக்கவேண்டும். அவை ஒன்றன்கீழ் ஒன்றாக விருக்கவேண்டும். முதலில் குங்கும வர்ணமும், அதற்கடுத்து வெள்ளை வர்ணமும், அதன்கீழ் பச்சை வர்ணமும் இருக்கவேண்டும். நடுவில் இருக்கும் வெள்ளை வர்ணத்தில் நல்ல நீல நிறத்தில் கைராட்டின உருவ மிருக்க வேண்டும். இவ்வர்ணங்கள் எந்த விதத்திலும் ஜாதிகளைக் குறிக்கா. குங்கும வர்ணம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கும். வெள்ளை நிறம் சமாதானத்தையும் உண்மையையும் குறிக்கும். பச்சை வர்ணம் நம்பிக்கையையும் ஆண்மையையும் காட்டும். கைராட்டினம் பாமர ஜனங்களின் நம்பிக்கையை உணர்த்தும்.

Koviloor Digital Library

# சீனாவிற்கு சென்ற காங்கிரஸ் தொண்டர்.

இந்தியர் பழைய தூங்கு மூஞ்சிகளல்ல. வீட்டிற்குள் அடைத்துக் கிடக்கும் வழக்கம் போய்விட்டது. பாதாள லோகத்திற்கு முதலில் சென்றவர்களும் இந்தியரே. அந்தக் குணம் இந்தியரை விட்டு போய்விடவில்லை. உலகமெங்கும் இந்தியர் சென்று பல அற்புத வேலைகள் செய்து வருகிறார்கள். பற்பல நாடுகளில் பெரிய பதவிகளிலும் இருக்கிறார்கள். சமீபத்தில் பெஷாவாரில் ஒருவரை கைது செய்தார்கள். அவரை விசாரித்தபோது, பாஞ்சால நவஜவான் சபை தலைவராம், ஆப்கானிஸ்தானம் ருஷியா முதலிய நாடுகளுக்கு போய் விட்டு அப்பொழுதுதான் திரும்பிவந்தாராம். சீனாவிற்குச் சென்று சீனயுத்தத்தில் சேவை செய்த ஒரு காங்கிரஸ் தொண்டர் சரித்திரம் இப்பொழுது வெளியாயிருக்கிறது.

அவர் பெயர் சங்கர நாராயண வாக். 1920ம் வருஷ முதல் பம்பாய் காங்கிரஸ் கமிட்டி, இந்துஸ்தானி சேவாதளம், முதலியவைகளில் வேலை செய்து வந்தார், கூர்ஜா வித்யா பீடத்தில் வேலை செய்தார். காக்கா சாஹிப் கலேல்காருடன் தங்கி யிருக்கும் போது, சீனாவிற்குச் சென்று தொண்டு செய்யும்படி உத்தரவு கிடைத்தது. அதற்கு வேண்டிய பணமும் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ சங்கர நாராயண வாக் சீனாவிற்கு புறப்பட்டார். பர்மா வழியாக சீனா சென்றடைந்தார். அங்குள்ள பிரிட்டிஷ் ஸ்தானாதிபதி உதவி செய்ய மறுக்கவே, சீன சர்க்காரை உதவி கேட்டார். ஹானனபு என்ற ஊரிலிருக்கும் சர்க்கார் நிர்வாக சபையாரிடம் விண்ணப்பம் செய்தார். 1930ம் வருஷ ஆரம்பத்தில் யுத்த முனைக்குச் சென்று போர்புரிந்து காயமடைந்தவர்களுக்கு உதவி செய்ய அநுமதி கோரினார். அநுமதி கிடைத்தது ஒரு சீன ராணுவ ஜெனரலுடன் யுத்த முனைக்குச் சென்று, ஒரு சீன டாக்டரின் கீழ் வேலை பார்த்தார். சீன தேசிய சர்க்கார் துருப்புகள் வெற்றி பெற்று எதிரிகள் தோல்வி யடைந்தனர். அப்புறம் அங்கு வேலையில்லாமையால் இந்தியாவிற்கு திரும்பினர்.

பர்மாவில் மாண்டலே வந்து சேர்ந்ததும் போலீஸ் சனி பிடித்தது. பாமோ என்ற இடத்திற்கு வந்ததும் போலீஸ் சூப்பரெண்டிடம் சென்று தாம் வந்த விவரத்தை தெரிவித்து வாக்குமூலம் கொடுத்தார். அப்படியிருந்தும், மாண்டலே போலீஸ் புலிகள் அவரை விட வில்லை. மே மாதம் 14வ அவரை கைதுசெய்து, "பிழைப்பில்லாத பேர்வழி" என்று குற்றஞ்சாட்டி ஜாமீன் வழக்கு தொடர்ந்தார்கள். அவருக்கு ஒரு வருஷம் தண்டனை விதித்து 3-வது வகுப்பு கைதியாக நடத்த தீர்ப்புச் செய்தனர். "பிழைப்பில்லாத பேர்வழி" என்று குற்றஞ் சாட்டியது அயோக்கியத்தனம் என்று ஸ்ரீ வாக் மாஜிஸ்திரேட்டுக்கு அறிவித்தார். அவர் கேட்கவில்லை. ஆகவே உண்ணா விரதம் மேற்கொண்டார். கட்டாயப் படுத்தி உணவைச் செலுத்தியும் பலிக்கவில்லை. காந்தி—இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டபடியால், ஜெயில் அதிகாரிகள் காங்கிரஸ் காரரிடம் சென்று முறையிட்டார்கள். காங்கிரஸ்காரர் வந்து ஸ்ரீ. வாகை கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் உண்ணாவிரதத்தை விட்டார் பின்னால் காங்கிரஸ் தலைவர்கள், ஜெயில் அதிகாரிகள் முயற்சியின்மீது அவரிடமிருந்து ஒரு வாக்குமூலம் வாங்கி சர்க்காருக்கு அனுப்பினர்கள். ஜூலை மாதம் 9வ யன்று சர்க்கார் அவரை விடுதலை செய்துவிட்டார்கள். இந்த சம்பவம் காந்தி-இர்வின் உடன்படிக்கைக்கு பின்னால் ஏற்பட்டதென்பதை நண்பர்கள் மறக்கக் கூடாது. எத்தனை உடன்படிக்கைகள் ஏற்பட்டாலும், பெரிய அதிகாரிகள் எவ்வளவு உபதேசம் செய்தபோதிலும் போலீஸ் வால் நீட்டம் என்னவோ குறையவில்லை.

---

## திண்டாதார் கடவுள் மக்களல்லவோ?

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ ?
மாநிலஞ் சுமக்க மாட்டேன் என்னுமோ ?
வாழ் நான்கு ஜாதிக் குணவு காட்டினும்
கீழ்நான்கு ஜாதிக் குணவு காட்டினுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறில்லை தரணியோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடும் தெய்வமும் ஒன்றே !

—கபிலர் அகவல்.

Koviloor Digital Library



# நெல்லிக்குப்பம் ஆலை

## அன்றும், இன்றும்

(எம்டன் எழுதுவது)

### இன்றைய துன்பம்.

சங்கம் உயிரற்றது என்று தெரிந்தபின் ஏற்பட்ட துன்பங்களாவன.

பல டிப்பார்ட் மெண்டுகளிலு மிருந்து வேலையாட்கள் நிறுத்தப்பட்டார்கள்.

(2) கூப்பர் ஷெட்டில் இரும்புப் பீப்பாய்களை வரவழைத்துக் கொண்டு, அவ்வேலையில் நெடுநாள் பழக்கப்பட்ட கூப்பர் தொழிலாளிகளைத் திண்டாடவிட்டது.

(3) தொழிலாளர்களுக்கு அபராதம் மீண்டும் தொடங்கிக் கொண்டது

(4) லஞ்சப்பேய் தீவிரமாக ஆடுகிறது.

மற்றப்படி பலவித அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கிறதுடன் கிடைத்த சவுகரியங்கள் பலவும் போயின. ஆனால் ஒன்று சங்கத்தைக் காட்டிக் கொடுத்து இல்லாததை புளுகி கோள் சொல்லி குண்டுணியாகத்திரிந்து சுயநல மடைந்த ஒரு சிலருக்குத்தான் வயிற்றுப் பிழைப்பு அற்றுப் போயிற்று என் செய்வது? திருட்டுப் பிழைப்பு எத்தனை நாளுக்கு நிலைக்கும்.

### ஏஜெண்டு மன்னிக்கவும்.

ஏஜெண்டு துரை என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒரு பெரிய பிசகு செய்து விட்டேன். முதல் குறிப்பில் உதவி ஏஜெண்டுதுரை யவர்களின் செலவு 12 ஆயிர ரூபாய் என எழுதிவிட்டேன். இது பெறும் தவறு. 28-ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படுகிறது என அறிகிறேன். இந்த தவறுதலை மன்னித்து ஏஜெண்டு துரை இருபத்தி எண்ணாயிரம் ரூபாய் என்று திருத்தி சென்னைக்கு டைப் அடித்து அனுப்பவும். எனது பெயர் பதிந்த ரிக்கார்டுகளையும் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

# உடம்பு வேண்டாம் கையை விட்டால் போதும்!

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் இந்திய கம்பெனிகளோடு போட்டி போடுவது சர்வசாதாரணம். அந்த போட்டியால்தான் தூத்துக்குடி சுதேசி கப்பல் கம்பெனி போயிற்று. வேறு பல இந்திய கம்பெனிகளும் போயின. உள் நாட்டு கப்பல் கம்பெனிகளை தொலைப்பதற்கு அவை கையாளும் தந்திரம் ஒன்றே. அதாவது கப்பல் கூலியை குறைப்பது இதன் மூலம் சுதேசி கப்பல்களை தொலைத்த பின்பு, பழைய விகிதத்திற்கு இருமடங்கு அதிகமாக கூட்டுவிடும். இந்த அயோக்கியத் தனத்தை இந்திய வர்த்தகர் அறிவர்கள். ஆனால் போதிய தேசாபிமானம் இல்லாத படியால், குறைந்த விகிதத்திற்கு ஆசைப்பட்டு, சொந்த நாட்டு கப்பல்களை அழிக்க தாங்களே காரணமாயிருக்கிறார்கள். வர்த்தகர்களுக்கு புத்தி கற்பிக்கவும், கப்பல் கம்பெனிகளுக்கு சூடு போடவும் சீனு ஒரு புதிய முறையை கைக்கொண்டிருக்கிறது. சீனுவிலும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் இதே சூழ்ச்சியை செய்தன. ஆகவே சீன துறைமுகங்களில் சிலவற்றை தவிர மற்றவைகளில் வரும் அந்நிய கப்பல்களை பகிஷ்கரிக்க ஒரு இயக்கம் ஆரம்பமாயிற்று. வான்ஷீன் என்ற துறைமுகத்திற்கு வந்த 'வான்டன்'' என்ற பிரிட்டிஷ் கப்பலுக்கு முதலில் இந்த சனி பிடித்தது. துறைமுக வேலையாட்கள் அனைவரும் கட்டுப்பாடாய்ச் சேர்ந்தனர். அக்கப்லில் வந்த சரக்குகளை இறக்குமதி செய்ய மறுத்துவிட்டனர். கப்பல் திண்டாடுகிறது. இதைப்போல பல அந்நிய கப்பல்கள் தவிக்கின்றன. சீன சர்க்காருக்கு தெரிவித்துப் பார்த்தார்கள். தங்களால் ஒன்றும் முடியாதென்று அவர்கள் கைவிரித்து விட்டார்கள். இனி ஏற்றவில்லை, ஏற்றியதை இறக்கி விடுங்கள் என்றாலும் கேட்பாரில்லை என்னசெய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். இச்செய்தியைக் கேட்டதும், பல கப்பல்கள் தங்களிடமுள்ள சரக்குகளை சீனக்கப்பல்களுக்கு மாற்றி விட்டன. இதுவல்லவோ சரியான வழி! இந்தியருக்கு இத்தகைய தேசாபிமானம் எப்பொழுது வரப் போகிறது?

Koviloor Digital Library

(முதல் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் முறையை மாற்றிக் கொள்ள ஜனங்களுக்கு உரிமையுண்டு. அது வரை புரட்சிக்காரர் ஏன் பொறுத்திருக்கக் கூடாது?

மேலும் பலாத்காரத்தால் சுயராஜ்யம் வருமானால், சுயராஜ்யம் வந்த பின்பும் தேசத்தில் பல வருஷம் பலாத்கார ஆசாமிகள் கொடுமை செய்து வருவார்கள். பலாத்கார புரட்சியால் சுயராஜ்யம் பெற்ற நாடுகளில் இந்த உண்மையை நாம் கண்டு வருகிறோம். சீனாவிலும், ரஷியாவிலும் எத்தனைபேர் மாண்டனர்; அயர்லாந்தில் எத்தனைபேர் மாண்டனர் தெரியுமா? சுயராஜ்யம் கிடைத்த பின்பு வெடிக்குண்டு கொடுமையை ருசிபார்க்க யாரும் விரும்ப மாட்டார்கள் என்று நினைக்கிறோம். அதற்காகவாவது, பலாத்காரச் செயல்களை ஜனங்கள் வெறுத்து பலமாய் கண்டிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

## கொடியில் மாறுதல்.

தேசியக் கொடியில் மாறுதல் ஏற்படவேண்டிய அவசியத்தைப்பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தோம். காங்கிரஸ் காரியக்கமிட்டி இவ்விஷயமாக தீர்மானம் செய்திருக்கிறது. தற்காலக் கொடிக்குள்ள வர்ணங்களுக்கு வகுப்பு பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதை மாற்றவே புதிய கொடி வேண்டுமென்று சொல்லுகிறோம். தற்கால கொடி அடியில் சிகப்பு, மத்தியில் பச்சை, மேலே வெள்ளை. இந்த மூன்று வர்ணங்களையும் காரியக்கமிட்டி விடவில்லை. ஆனால் அதன் அமைப்புகளை மாற்றி, அதற்கு இருக்கும் வகுப்பு வாசனையை ஒழித்துவிட்டது. அதாவது அடியில் பச்சை, நம்பிக்கையையும், ஆண்மையையும் குறிக்கும். மத்தியில் வெள்ளை, சமாதானத்தையும் உண்மையையும் குறிக்கும். மேலே சிகப்பு, தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கும், மத்தியில் வெள்ளைப் பகுதியில், நீல நிறத்தில் ராட்டினம். ஜனங்களின் நம்பிக்கையை அது காட்டும். இந்த அமைப்புகளோடு புதுக்கொடி விளங்கும். பழைய வகுப்பு வாசனையை ஒழிக்க வேண்டுமென்பதே நமது விருப்பம். அந்த வகுப்பு வாசனையை ஒழித்து, ராட்டினத்தை புது கொடியில் திகழும்படி செய்ததற்காக காரியக் கமிட்டியை பாராட்டுகிறோம்.

## காலச் சக்கரம்.

### "கப் சப்"

சர்க்கார் வரும்படி குறைந்து விட்டபடியால், அகவிலைகள் மலிந்து விட்டபடியால் சர்க்கார் சிப்பந்திகள் சம்பளத்தை குறைக்க வேண்டுமென்ற முயற்சி இந்தியா வெங்கும் நடந்து வருகிறது. சில்லரை அதிகாரிகள் சம்பளத்தை மட்டும் குறைக்கவேண்டுமென்றும், பெரிய அதிகாரிகள் சம்பளத்தை தொடக் கூடாதென்றும் சிலர் சூழ்ச்சி செய்கிறார்கள். இதை யார்தான் ஒப்புக் கொள்ளுவார்கள்? பெரிய அதிகாரிகள் சம்பளத்தை குறைக்க இந்திய சர்க்காருக்கு அதிகாரமில்லை என்றால் அது ஒரு காரணமாகாது. குறைக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காரை கட்டாயப்படுத்த வேண்டும். இந்த முயற்சியைக் கண்டு சிவில் சர்விஸ் கோஷ்டியாருக்கு நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஸிம்லாவில் கூடிய அவர்கள் கூட்டத்தில், தங்கள் சம்பளத்தை குறைக்கக் கூடாதென்றும், குறைத்தால் எல்லாரும் ராஜீநாமாச் செய்வதென்றும் ஒருவர் தீர்மானம் கொண்டுவந்தார். "சரி, ராஜீநாமாவை ஒப்புக்கொண்டு விட்டால் அப்புறம் என்னசெய்வீர்கள்"? என்று மற்றொருவர் எழுந்து கேட்டார். உடனே சபையில் "கப்சப்." ஒருவரும் மூச்சு விடவில்லை. தீர்மானம் கொண்டு வந்தவர் நழுவிவிட்டார்! இம்மாதிரி கொழுத்த சம்பளம் யார் கொடுக்கப் போகிறார்கள்? இந்த மிரட்டல்கள் எல்லாம் இங்கே பலிக்காது. சீமையில் இவர்கள் யோக்கியதை தெரியாதா?

### வாலிபம் திரும்புகிறது!

லார்ட் ரீடிங் இந்தியாவில் வைசிராயாக இருந்தவர். 70 வயதாகிறது. அவருக்கு இரண்டாம் தடவை கலியாணமாம். 70க்குமேல் கிறுகிறுப்பு வருகிறது! இந்தியவில் பால்ய விவாகம் நடக்கிறதென்று மேயோ போட்ட கூச்சலுக்கு கணக்கில்லை. கிழட்டு பணக்காரர்களும், மகாராஜாக்களும் விவாகஞ் செய்வது காம வெறியென்று வெள்ளை பத்திரிகைகள் செய்யும் ஆர்ப்பாட்டத்திற்கு அளவில்லை. லார்ட் ரீடிங்குக்கு என்ன வெறி ஏற்பட்டிருக்கிறதென்று அதே பேர்வழிகளை கேட்கிறோம். பால்ய விவாகமும், விருத்தாப்பிய விவாகமும் இந்தியா சுயராஜ்ய மடைய தடைகளாக இருக்கின்றனவாம். அது உண்மையானால் லார்ட் ரீடிங்கைப் போன்ற கிழட்டுமாப்பிள்ளைகள் இருக்கும் இங்கிலாந்து எப்படிசுயராஜ்யத்திற்கு லாயக்காகும்?

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)

# காந்தி

திங்கள், வியாழன் வெளிவரும். வருட சந்தா ரூ. 3—0—0.


மலர் 2 || சென்னை, 1931 ஆகஸ்டு 13௳, பிரஜோற்பத்தி ஆடி ௴ 29௳ வியாழக்கிழமை || இதழ் 16

## மகாத்மா அன்றும், இன்றும்



மாணவர் காந்தி.

சுமார் 40 வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தி மாணவராக சீமைக்குச் சென்ற சமயம் எடுத்த படம். அச்சமயம் அந்த மாணவர் எத்தனையோ மாணவர்களோடு ஒரு மாணவராயிருந்தார். எதிர்காலத்தில் 40 வருஷங்களுக்குப் பின்னால் உலகப்பிரசித்தி பெற்றவராக வருவாரென்றோ, உலகப் பெரியாராக வருவாரென்றோ யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.



மகாத்மா காந்தி.

30 கோடி ஜனங்களின் ஏக பிரதிநிதியாக இவ்வருஷம் லண்டன் மகாநாட்டிற்கு செல்லும் மகாத்மா காந்தி. உலகம் முழுவதும் மகாத்மா மீது கவனத்தைச் செலுத்துகிறது. அஹிம்சா போரை கண்டு பிடித்த பெரியாராய், பலாத்காரத்தை தோற்கடித்த வெற்றி வீரராய், சத்தியாக்கிரக திலகமாய் மகாத்மா சீமை செல்லுகிறார். முன்னால் டை, காலர், சூட், அணிந்து சென்றார். தற்சமயம் நாலு முழத்துண்டு கட்டி செல்லுகிறார்.

Koviloor Digital Library



## நெஞ்சம் கொதிக்குது!

*நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி*
*நயம்புரிவாளெங்கள் தாய்—அவர்*
*அல்லவராயினவரை விழுங்கிப்பின்*
*ஆனந்தக் கூத்திடுவாள் —பாரதி*

திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை. ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாள் போலாகும். இதை ஜமீன்தார்கள் அறியவில்லை. ஜனங்களை துன்புறுத்திய மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணாய்ப் போயினர். ருஷிய சக்கரவர்த்தி எங்கே? கெய்சர் எங்கே? ஸ்பெயின் மன்னர் எங்கே? ருஷிய சக்கரவர்த்திக்கு நேர்ந்த கதியை அறிந்தும், ஜமீன்தார்களுக்கு புத்தி வரவில்லை. ஐக்கிய மாகாணத்தில் நில வரி வசூல் பூராவும் ஜமீன்தார்கள் மூலமாகவே நடக்கின்றன. இந்த ஜமீன்தார்களில் பலர் கல் நெஞ்சம் படைத்த கசடர்களாயிருக்கிறார்கள். இவர்களும், இவர்கள் கூலிகளும் வரி கொடுக்கும்படி விவசாயிகளை செய்யும் கொடுமைகள் கொஞ்சமல்ல. காதால் கேட்கவே முடியாது. சில கொடுமைகளை டெல்லி "இந்துஸ்தான் டைம்ஸ்" வெளியிட்டிருக்கிறது.

ஒரு பதினெட்டு வயது கிராமப் பெண்ணை ஒரு ஜமீன்தார் கூலிகள் 4 பேர் இழுத்துக் கொண்டுவந்தனர். அவள் ஆடையை உரித்து நிர்வாணமாக்கி அவளை சொல்ல முடியாதவிதத்தில் அவமானப்படுத்தினர். அவள் கர்ப்பவதி. இந்த கூலிகள் செய்த கொடுமையால் வயிற்றிலிருந்த கர்ப்பம் கலங்கி குழந்தை செத்துப் போய் வெளியே வந்ததாம். மற்றொரு கிராமத்தில் ஒரு கிழவியை பிடித்து நிர்வாணமாக்கி இம்மாதிரி கொடுமை செய்தார்களாம். வேறொரு கிராமத்தில் 4 பெண்களை நிர்வாணமாக்கி சித்திரவதை செய்தார்களாம். இன்னொரு கிராமத்தில் ஒரு பெண்ணை ஜமீன்தார் கூலிகள் பலாத்காரமாய் கற்பழித்தார்கள். ஆண்கள் படும் துன்பங்களும் கொஞ்சமல்ல. பலர் அடிபட்டு உயிர் துறந்திருக்கிறார்களாம். இம்மாதிரி கொடுமை செய்தால், கிராமவாசிகள் கோபங்கொண்டு கலகத்திற்கு கிளம்புவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? இத்தகைய அயோக்கியத்தனங்கள் நடக்கும் போது, மகாத்மா எப்படித்தான் சகித்து போக முடியும்? ஜமீன்தார்களே, தலைகால் தெரியாமல் நடக்கவேண்டாம். உங்களைவிட பெரிய பலசாலிகள்—கொடுங்கோலர்—என்ன கதி அடைந்தார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

## கழுதையை குதிரையாக்க முடியுமா?

இந்திய சர்க்காரை "உயிரற்ற மரக்கட்டை" என்று பழைய இந்திய மந்திரி மாண்டேகு சொன்னார். மகாத்மா காந்தி "சாத்தான் சர்க்கார்" என்று சொன்னார். இந்த அழகிய பட்டங்களை மாற்றக் கூடிய யோக்கியதைக்கு சர்க்கார் இன்னும் வந்ததாய் தெரியவில்லை. இழி குணமும், பிரித்தாளும் சூழ்ச்சியும் அதை விட்டு தொலையவில்லை. வட்டமேஜை மகாநாட்டிற்கு வர்த்தக பிரதிநிதிகளாக ஜனாப் ஜமால் முகமது சாகிபையும் ஸ்ரீ. பிர்லாவையும் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று அகில இந்திய வர்த்தக சபை சிபாரிசு செய்தது. இருவரும் பெரிய வர்த்தகர்கள். நாணயமாற்று விஷயத்தில் நிபுணர்கள். அப்படியிருந்தும் அவர்கள் தேசீய வாதிகள் என்ற பாவத்திற்காக அவர்களை விட்டுவிட்டு, சர்க்கார் தாசர் சர். தாதாபாயை நியமித்திருக்கிறார்கள். வர்த்தக சங்கம் சொல்லுகிறபடி பிரதிநிதிகளை நியமிப்பதாக ஒப்புக் கொண்டவர்கள், தாக்குப்புரண்டு நடக்கும் அயோக்கியத் தனத்தை என்னென்று சொல்லுவது? சர்க்கார் நிர்ணயித்திருக்கும் 18 பென்ஸ் விகிதத்தை ஷை இருவரும் ஆதி முதல் கண்டித்து வருகிறார்கள். இவர்களை வட்டமேஜை மகாநாட்டிற்குள் விட்டால் சர்க்கார் சாயம் வெளுத்துப் போகும். இதற்கு பயந்தே அவர்களை நியமிக்கவில்லை.

முஸ்லிம்களில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. யோக்கியமாக நடக்கும் சர்க்காராயிருந்தால், இரண்டு கட்சிகளுக்கும் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். தனித் தேர்தல் வேண்டுமென்று சொல்லுகிறவர்களுக்கு ஏராளமாக கொடுத்து விட்டு, தேசீய முஸ்லிம்களை வரவிடாமல் தடுப்பது அயோக்கியத்தன மல்லவா? டாக்டர் அன்சாரிக்கு ஏன் லண்டன் மகாநாட்டில் இடம் கொடுக்கவில்லை? இந்த இரண்டையும் பார்த்த பின்பு, தற்கால சர்க்காருக்கு நல்ல புத்தி வந்திருப்பதாக யாராவது ஒப்புக் கொள்ள முடியுமா? ஒரு நாளும் முடியாது. தங்களை ஆதரிப்போர்களாகப் பார்த்து பொறுக்கி எடுக்கும் அற்ப புத்தி இன்னும் போகவில்லை. சுய நலத்தைவிட்டு விடும்படி இந்த சர்க்காரிடம் எதிர்பார்ப்பது, கழுதையை குதிரை யாக்க முயற்சிப்பதை போலவேயாகும். லண்டன் மகாநாட்டில் இந்திய விடுதலைக்கு விரோதமாக தங்களால் செய்யக் கூடியதை யெல்லாம் சர்க்கார் தந்திரமாக செய்து வருகிறார்கள்.

# காங்கிரஸ்காரர் மீது ஜாமீன் வழக்கு

(மகாத்மா காந்தி)

காங்கிரஸ்காரர்கள்மீது மாகாண அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தொடங்கியிருப்பதால், எதிர் வழக்காடும் விஷயத்திலும் ஜாமீன் கொடுக்கும் விஷயத்திலும் தொண்டர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி எனக்குப் பல கடிதங்கள் வருகின்றன. எதிர் வழக்காடுவதிலோ, ஜாமீன் கொடுப்பதிலோ, காங்கிரஸ்காரருக்கு விருப்பமில்லை யென்பதறிந்து அதைப் பாராட்டுகிறேன். இந்த முறையில் அவர்கள் நீண்ட காலமாகப் பழகியிருக்கிறார்கள். டெல்லி ஒப்பந்தத்தை அநுசரித்து, காங்கிரஸ்காரர் எதிர் வழக்காடவோ, ஜாமீன் கொடுக்கவோ, விரும்பினுல் செய்யலாம். எவரும் இன்ன முறையைத்தான் அநுசரிக்க வேண்டுமென்று கட்டுப்பட்டவர்களில்லை ஆனால் டெல்லி ஒப்பந்தம் அமுலில் இருக்கிறவரை, எதிர் வழக்காடுவதையோ, ஜாமீன் கொடுப்பதையோ ஒரு கடமையாகக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படக் கூடும். எவ்வித பேச்சும் பேசக் கூடாதென்ற நிபந்தனையின் பேரிலேயே ஜாமீன் கொடுக்கப் படுகிறதென்று தெரிகிறது. பொதுவாகக் கூறுமிடத்து இத்தகைய நிபந்தனையுடன் ஜாமீனில் விடுதலை பெறக்கூடாதென்பது என் அபிப்பிராயம் 108-வது பிரிவுப்படி ஜாமீன் கொடுக்கும் விஷயத்திலும் என்னுடைய அபிப்பிராயம் இதுவேயாகும். ஆனால் சில விசேஷ சந்தர்ப்பங்களில், தேசநன்மையை உத்தேசித்து, ஜாமீன் கொடுக்கும்படி நேரிடலாம். இந்த மாதிரியான நிலைமைகளில், ஒவ்வொருவரும் தத்தம் தலைவர்களின் எழுத்து மூலமான அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொள்ளல் நலம் குஜராத்தில் சர்தார் வல்லபாய் படேல் என்ன முறையை அநுசரிக்கிறார் என்பதைக் காங்கிரஸ் தொண்டர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவரும் நானும் தவிர, மற்றக் காங்கிரஸ் தொண்டர்கள் பேசக்கூடாதென்று அவர் பொதுவாக நிபந்தனை விதித்திருக்கிறார். அவர் கூட அவசியமான சந்தர்ப்பங்களிலேயே பேசுகிறார். இதனுல் குஜராத்திற்கு எவ்விதத்திலும் தீமை ஏற்படவில்லை. போர்க் காலத்திலேயோ, சமாதான காலத்திலேயோ, வேண்டுவது அமைதியான வேலையேயாகும். வேலை யிருந்தால் பேசுவதற்கிடமில்லை. அரசியல் ஞானம் பெறுவதற்கு உபந்நியாசங்கள் முக்கியமானவை யல்ல. சென்ற பதினைந்து வருஷங்களாக அதிகக் குறைவாகப் பேசும் வழக்கத்தை அநுசரித்து வருகிறேன். ஆயினும் நாவலர்களின் தொகை குறைந்து விடவில்லை. பேச்சுக்கும் ஒரு காலம் இருந்தது. ஆனால் காரியம் செய்யவேண்டிய காலம் தொடங்கிவிட்டால் பேச்சுக்குப் பின் இடமே ஏற்பட்டுவிடுகிறது. நாம் பேசுவதைக் குறைத்துக் கொண்டால் செயலுக்கு அதிக பலம் உண்டாகும். இப்பொழுது காங்கிரஸ் தொண்டர்களுக்கும் கிராம வாசிகளுக்கும் நெருங்கிய சமபந்தம் வேண்டும். கிராம வாசிகள், தங்களுடைய தொண்டர்கள் இன்னார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தொண்டர்கள் அவர்களுடைய சொந்த நன்மைக்காக அல்லாமல் கிராமவாசிகளின் நன்மைக்காகவே வேலை செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்பதைப் பின்னவர் உணர வேண்டும். தற்போதுள்ள நிலையை யொட்டியே நான் இந்த யோசனையைக் கூறியிருக்கிறேன். அமைதியாக வேலை செய்வதெப்படி என்பதைப்பற்றி திட்டமான சில அபிப்பிராயங்களை நான் கொண்டிருக்கிறேன். குஜராத் மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் அதிகமாகப் பேசுவதில்லை யென்பதற்கும், கோர்ட் நடவடிக்கைகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. தொண்டர்கள் அதிகமாகப் பேசக்கூடாதென்று குஜராத் மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை, பொதுவாக எப்பொழுதுமே நல்லதென்று கருதப்பட்டமையினுல் ஏற்படுத்தப்பட்டது

---

## தமிழா, கேள்!

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரென கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

—பாரதி.

Koviloor Digital Library



## அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பம்பாய் மகா வீரஜெயின் வித்தியாலய மண்டபத்தில் 6வ கூடியது. 6, 7, 8, மூன்று நாட்களும் கூட்டம் நடந்தது. சுமார் 180 அங்கத்தினர் வந்திருந்தார்கள். மண்டபத்தில் தலைவர் பீடத்திற்கு மேல், தற்கால தேசியக் கொடி, கொடி கமிட்டி சிபார்சுசெய்த தேசியக் கொடி, காரியக் கமிட்டி முடிவு செய்த தேசியக் கொடி மூன்றும் பறந்து கொண்டிருந்தன. ராஜீயக் கைதிகள் கண்டனம், காரியக் கமிட்டி சிபார்சு செய்த புதிய தேசியக் கொடி அங்கீகாரம், ஜீவாதார உரிமைகள், முதலிய தீர்மானங்கள் நிறைவேறின. 8வ மாலை கமிட்டி கூட்டம் முடிவடைந்தது. புதிய தேசியக் கொடி யேற்றும் வைபவம் இந்தியா முழுவதிலும் இம்மாதம் 30வ நடைபெற வேண்டுமென்று கமிட்டி தீர்மானித்திருக்கிறது. லண்டன் மகா நாட்டுக்கு தாம் போகும் விஷயமாக மகாத்மா கமிட்டி கூட்டத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். கூர்ஜரம், ஐக்கியமாகாண விவசாயிகள் குறைகள் சம்பந்தமாக சர்க்கார் சரியான வாக்குறுதி கொடுத்தா லொழிய லண்டன் போக முடியா தென்று தெரிவித்தார். ஐக்கிய மாகாணத்தில் பண்டித ஜவார்லால் கூறிய குறைகளை நிவர்த்தி செய்வதாக கவர்னர் பதில் அனுப்பி யிருக்கிறாராம். பம்பாய் கவர்னரிடமிருந்து இன்னம் பதில் வரவில்லை மகாத்மாஜி இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, சென்ற வாரம் பம்பாய் ஜின்னுஹாலில் தேசிய முஸ்லிம் தலைவர்களை, கிலாபத் கட்சி முஸ்லிம்கள் அடித்ததை கண்டித்தார் "இ மாதிரி பலாத்காரங்களும் சண்டைகளும் என் மனதை புண்படுத்துகின்றன. இத்தகைய நிலைமையைக் கண்டு என்னால் ஒன்றும செய்ய முடியவில்லை. என்னால் தாங்க முடியவில்லை. இப்படி யிருக்கும்போது நான் லண்டன் போய்தான் என்ன செய்ய முடியும்?" இப்படி மகாத்மா பேசிக் கொண்டு வரும்போது துக்கம் தாங்க முடியாமல் மூர்ச்சையாய் விட்டார். சில நிமிஷங்கள் கழிந்தபின்பே மூர்ச்சை தெளிந்தது.

பம்பாய் காங்கிரஸ் மாளிகையில் புதிய தேசியக் கொடி ஏற்றும் வைபவம் 8வ காலை நடந்தது. சர்தார் பட்டேல் கொடி யேற்றினர். பல முக்கியமான தலைவர்கள் வந்திருந்தார்கள். தொண்டர்கள் கூடியிருந்தனர். பெண் தொண்டர்கள் தேசியக் கொடி கீதம் பாடினர். காட்சி முழுவதையும் சினிமா கம்பெனியார் படம் பிடித்தார்கள்.

## பட்டாணியர் எச்சரிக்கை.

சென்ற வாரம் பம்பாயில் நடந்த தேசிய முஸ்லிம்கள் கூட்டத்தில், ஷவுகத் அலி கட்சியைச் சேர்ந்தவர்கள் புகுந்து தடியடி நடத்தியதை நண்பர்கள் அறிவார்கள். எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்த அப்துல் ஜலீல் சாகிப் நத்வி என்ற பட்டாணிய தலைவருக்கு நல்ல அடி. இதைக் கேள்விப்பட்டதும் பெஷாவார் ஜில்லா காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. அடியிற்கண்ட தீர்மானஞ் செய்திருக்கிறது.

"பம்பாய் காலிகள் எங்கள் மாகாண தலைவரை தாக்கியதை பலமாய் கண்டிக்கிறோம். கான் அப்துல் காபர்கானிடம் முன்பு அவமரியாதையாக நடந்து கொண்டதையும், ஒரு பட்டாணிய தொண்டரை கொன்றதையும் பார்க்கும் போது, பட்டாணிய தேசிய வாதிகளுக்கு இடையூறு செய்யும் நோக்கத்தோடு, பம்பாயில் தேசிய விரோதிகள் சதியாலோசனை செய்வதாகத் தெரிகிறது. இம்மாதிரி இழிவான காரியங்களை இனி செய்யாமல் இருக்கும்படி இக் கூட்டம், பம்பாய் காலிகளையும், அவர்களை தூண்டி விடுகிறவர்களையும் எச்சரிக்கிறது. தவறி அவர்கள் செய்வார்களானல், துரதிர்ஷ்ட பலனை அவர்கள் அநுபவிக்க நேரிடும். அதற்கு பொறுப்பும் அவர்கள் தலையிலேயே விடியும்."

ஜவார்லால் நேரு (மூன்றாம் பதிப்பு)

வெளிவந்து விட்டது. திருத்தி பதிப்பித்தது. 32 பக்கங்கள். பண்டிதர் ஜீவிய சரித்திரம் முழுவதும் அடங்கியது விலை அணு 1.

ஒரு பிரதிக்கு 1½ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

பழைய கோடிக்கும் புதுக் கோடிக்கும் சொற்ப வித்தியாசமே இருக்கிறது. பழைய கோடிக்கு கொடுத்த வகுப்புவாத வியாக்யானத்தை மாற்றவே இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தி யிருக்கிறோம்.—சர்தார் பட்டேல்.

Koviloor Digital Library



## காங்கிரஸ் தமாஷ்.

ராஜீயக்கொலைகளை கண்டித்து அகில இந்திய காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தில், பம்பாய் கவர்னர் சர். எர்னஸ்ட் ஹாட்சனை "கனம் பொருந்திய விருந்தாளி" என்று குறிப்பிடப் பட்டிருந்தது. கவர்னரை பெர்கூசன் கலாசாலை அதிகாரிகள் அழைத்து அவர் வந்த படியால் அவர் விருந்தாளி என்பது பொருள், கமிட்டி விவாதத்தில் ஸ்ரீ. சால்வ் என்ற அங்கத்னர் இதை ஆட்சேபித்தார். "அவர் ஒருவர் தானா நமது விருந்தாளி? இந்நாட்டிலுள்ள சகல வெள்ளையரும் நமது விருந்தாளிகள் அல்லவா? நமது விருந்தாளிகள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டாமா? என்று கேட்டார் எவ்லாரும் சிரித்தார்கள்.

"வெள்ளையர் மீது சுடுவது அற்ப விஷயம். பெரிய விஷயங்களை கவனிப்பதை விட்டு இதை யேன் இவ்வளவு பிரமாதமாய் கவனிக்க வேண்டும்?" என்று மௌலானா புக்காரி ஒரு பெரிய பிரசங்கம் செய்தார். பிரசங்கமேடை மீது நின்று பம்பரமாக அவர் சுழன்று சுழன்று பேசினார். அவர் பேச்சு ஆரம்பத்தில் மகாத்மா கூட்டத்தில் இல்லை. பின்னால் வந்து சேர்ந்தார். மௌலானா சுழன்று பிரசங்கம் செய்யும்போது மகாத்மாவை பார்த்துவிட்டார். மகாத்மா புன்னகை புரிந்தார். பலாத்கார கண்டனத்தை எதிர்த்த மௌலானாவிற்கு பேச்சு ஓடவில்லை மகாத்மா புன்னகை அவரை உட்காரும்படி செய்து விட்டது.

பாரிஸ்டர் அபயங்கார் அப்புறம் பேசினார். பலாத்கார கண்டனத்தை காந்திஜி பிரேரித்திருக்கும் போது, அதன்மீது பேசும் சமயத்தில் அவர் எப்படி கூட்டத்தை விட்டு போகலாம் என்று கேட்டார். "நான் குற்றவாளிதான்" என்று காந்திஜி ஒப்புக்கொண்டார்!

தேசியக்கொடிக்கு பூர்ண சந்திரர் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்து பேசினார். "உம்முடைய திருத்தப் பிரேரணையை சொல்லி விடடு அப்புறம் பேசும்" என்றார் ஒருவர் "என்னுடைய விருப்பப்படி, கொடியில், சங்கு, வாள், சம்மட்டி, நாட்டை, அரிவாள், நட்சத்திரம், சந்திரன்" என்று அடுக்கிக் கொண்டு போனார். ஒருவர் "மெஷின் பீரங்கியை என் விட்டுவிட்டீர்" என்றார். "சங்கு சேர்ப்பது உண்மையானால் சேண்டியையும் சேர்த்துக் கொள்ளும்" என்று அபயங்கர் சொன்னார். எல்லாரும் சிரித்தார்கள்.

## தானொன்று நினைக்க, தெய்வம் வேறொன்று நினைக்கிறது!

பிரிட்டிஷ் வர்த்தகர் கொள்ளையடிப்பதற்காக பர்மாவை பிரிக்க முயற்சி செய்தார்கள். இந்தியருக்கு விரோதமாக பர்மியரை பர்மா கவர்னர் கிளப்பிவிட்டார். அதே பர்மியர் இன்று சர்க்காருக்கு விரோதமாக கிளம்பி யிருக்கின்றனர். பர்மாவை பிரிக்கச் செய்யும் சூழ்ச்சியை பர்மியர் அறிந்ததும், அதை இன்று எதிர்க்கிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் எதிர்பாராத விதமாக மற்றொரு ஆட்சேபனை இப்பொழுது கிளம்பி யிருக்கிறது. பர்மா இரண்டு பாகம். மேல் பர்மா ஒன்று. கீழ் பர்மா ஒன்று. மேல் பர்மா ஷான் சமஸ்தானங்கள் என்று பெயர். இந்த சமஸ்தான அதிபதிகள் பர்மியரல்ல. இந்தியர். இவர்களே முன்பு ராஜ்யம் ஆண்டு வந்தார்கள். இப்பொழுதும் அவர்கள் சொற்ப அதிகாரங்களோடு அதிபதிகளாயிருக்கிறார்கள். இவர்கள் இந்திய மந்திரிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி யிருக்கிறார்கள். அதில் பர்மாவை பிரிப்பதாயிருந்தால் மேல் பர்மாவை பிரிக்கக்கூடாதென்று சொல்லுகிறார்கள். மேல் பர்மா இயற்கை அமைப்புப்படி இந்தியாவைச் சேர்ந்தது. அந்த அதிபதிகள் படித்தவர்கள் ஆகவே தங்கள் நாட்டை கீழ் பர்மாவோடு சேர்க்கக் கூடாதென்று ஆட்சேபிக்கிறார்கள். எப்பொழுதும் மேல் பர்மாவை இந்தியாவுடனேயே சர்க்கார் முன்பு சேர்த்து வந்திருக்கிறார்களே யொழிய கீழ் பர்மாவோடு சேர்க்கவில்லை யென்று காரணம் காட்டுகிறார்கள். ஆகவே பர்மாவை பிரித்தாலும், மேல் பர்மாவை அதோடு சேர்க்கமுடியாது. இந்த எதிர் பாராத ஆட்சேபனையைக் கண்டு சார்லஸ் இன்ஸ் கோஷ்டியார் கலங்குகிறார்கள். பொய்யும், புரட்டும், சூழ்ச்சியும் எவ்வளவு காலந்தான் ஜெயிக்க முடியும்? பிரிட்டனே, இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்? தன்வினை தன்னைச் சுற்றுகிறது.

இதுவரை நான் ஒருவருக்கும் கெடுதி செய்யவில்லை. இனி செய்யவும் விரும்பவில்லை. நமக்குள்ளேயே அடித்துக்கொள்ளும் கொடுமையைப்பார்த்து என் மனம் சொல்லொண்ணா துன்பப்படுகிறது.—மகாத்மா.

Koviloor Digital Library



# சங்குக்கு ஆபத்து

(எம்டன் எழுதுவது)

நெல்லிக் குப்பம் ஆலை ஏஜெண்டு ஸ்ரீமான் மொக் ஆன்லின் துரை அவர்கட்கு "நோபில் பரிசு கொடுக்கும்படி நான் பலமாய் சிபார்சு செய்"கிறேன். ஏனெனில் அவர் மூளை அவ்வளவு அபார பிரகாசமுடையது. இதுபோன்ற மூளை பிரகாசம் பிறரொருவருக்கு இதுவரை வந்ததே கிடையாது. இப்போதும் கிடையாது. இனி வருவதுமில்லை. அழுக்கைப் போட்டு அழுக்கைக் காய்ச்சி அழுக்காக எடுக்கும் சிக்கன மூளையின் திறத்தைச் செப்பவும் வேண்டுமோ? சிக்கனம்! சிக்கனம்!! எடுத்ததெல்லாம் சிக்கனம். (ஆனால் இவர் காலத்தில் தான் அனாவசியச் செலவு அதிகமாம்) சர்க்கார் இவரை சிக்கனக் கமிட்டித் தலைவராக நியமித்துக் கொள்ளும் படியும் ஆலோசனை கூறுகிறேன்.

## ஏன்?

ஆலையில் ஊதும் காலை ஐந்துமணி சங்கையும் மாலை 5-ல் சங்கையும் ஏஜெண்டு ஊதவேண்டாமென்று நிறுத்தி விட்டாராம். இரண்டிலும் நிலக்கரியொன்றிற்கு அதிகமாக செலவழிந்தால் எட்டு ரூபாய் செலவாகுமாம். அதாவது மாதம் இருநூற்றுப் பத்து ரூபாய். இந்த இருநூற்றுப் பத்து ரூபாயை பிரதிமாதமும் கம்பெனிக்கு இலாபமாக்கி இருப்பதுடன் மற்றொரு இலாபமும் உண்டாக்கி இருக்கிறார். சங்குகள் சரிவர ஊதாமல் பல வருஷங்களாக நடந்ததற்கு மாறாக சங்கை நிறுத்தும் அவசரச் சட்டம் போட்டு விட்டமையால், சங்கொலி இல்லாது, மணியும் தெரியாது தொழிலாளர்கள் பல மைல்கள் நடந்து வந்து சரியான காலத்தில ஆஜராகாமல் போவார்கள். அவர்களுக்கு அபராதம் அடிக்கடி விதித்து அத்தொகையையும் கம்பெனிக்குச் சேர்க்கலாம். தாமதமாக வந்த தொழிலாளர்களை "வேலை இல்லை வெளியே ஓடு" என்று துரத்தலாம், என்பது போன்ற பல நல்ல கருத்துகளைக் கொண்டே "சங்கு" ஊதலைத் தடை செய்யப் பட்டதாம். இதை செய்த ஏஜெண்டுக்கு "நோபில் பரிசு" கொடுக்க நான் செய்த சிபார்சை யாவரும் ஒப்புக் கொள்வார்கள் என்பதில் ஆட்சேபனையேயில்லை.

## இது வெள்ளெழுத்தா?

பூசணிக்காய் போகிறதைப் பாராது, சுண்டைக்காய் சுருங்குவதை கணக்கெடுத்தால் உலகம் சிரிக்காதா? கம்பெனியார் பயிரிடும் கரும்பு பண்ணை மூலியமாய் வருஷா வருஷம் ஐம்பதினாயிரம் ரூபாய் நஷ்டமாகி வருகிறதே! புள்ளி விபரம் தவறி இருந்தால் அறிந்தவர் திருத்திக் கொள்ளவும் அதன் இரகசியத்தைக் கண்டு பிடித்து நிவர்த்தி செய்தால் கம்பெனிக்கு உண்மை இலாபத்தைக் கண்டு பிடித்துக் கொடுத்தவராவார். வருஷம் ஐம்பதினாயிர ரூபாய் நஷ்டப்பட்டாவது கம்பெனிக்காரரை கொண்டு குடித்தனக் காரர்கள் வைக்கும் கரும்பில் இந்த நஷ்டத்தை ஈடுசெய்யப் பார்ப்பது நியாயமற்ற காரியமாகும். குத்தகைக்கு நிலமெடுப்பதும், ஏராளதொகை செலவிட்டு இஞ்ஜின்களை அதற்காக வரவழைத்து வருவதும், சூப்பிரவைசர்களான துரைகளுக்கு தொள்ளாயிரம் மூந்நூறு நாநூறு எனச்சம்பளம் கொடுப்பதும், அவர்களுக்குத் தனித்தனி மோட்டாரும், பங்களாவும், மின்சார அமைப்புகளும், வேலைக்காரர்களும், ஏற்படுத்திக்கொடுத்து பண்ணைக்கு சரியான பராமரிப்பும் இல்லாதுபோனால் ஏன் நஷ்டம் உண்டாகாதென்று வினவுகிறோம். கரும்பு காலத்திலும், கரும்புப் பண்ணையிலும் நடக்கும் இலஞ்சப் பிரசாதங்கள் வெகு மோசமானது. இக்கரும்பு டிபார்ட்மெண்டில நஷ்டமாகும் இத்தொகையைச் சிக்கனமாக்கத் தெரியாமல், தொழிலாளர்கள் சவுகரியத்தைக் குறைக்கப் பார்த்தது புத்திசாலித்தனமாகாது. ஒன்றிரண்டு சிறு சவுகரியங்களைக் குறைத்து விடுவதால் பெரிய சிக்கனம் செய்து விட்டதாக வெள்ளெழுத்துக் காரனும் நினைக்கமாட்டான். ஆதலால மீண்டும் "சங்கு ஊதலை" வழக்கம்போல் உத்திரவிட வேண்டிய அவசியம். பெருங் கவுரவத்தைப் பாராமல் தொழிலாளர்கள் சவுகரியத்தையும் கவனிக்க வேண்டும்.

குறிப்பு:—தொழிலாளர்கள் "காந்தி" கை வசமில்லாதபோது வந்து மிகவும் தொந்திரவு செய்கிறார்கள். "காந்தி"யை வாங்கினதும் ஒவ்வொருவரும் சேமித்து வைத்துக் கொண்டால் புத்தகவடிவில் தைத்து வைத்துக் கொள்ளலாம்.

Koviloor Digital Library



## சர்ச்சில் பாட்டன் ஜாதகம்.

சர்ச்சில் கோஷ்டியார் பாட்டனார்கள்தான் கிழக்கு இந்திய கம்பெனி என்ற பெயரோடு இந்தியாவிற்கு வந்தார்கள். கம்பெனியார் ஆட்சியில் வங்காளம் அடைந்திருந்த நிலைமையைப்பற்றி ஸ்ரீ மெக்காலே கூறுவதை பாருங்கள்:—"கிளைவ் வங்காளத்தை விட்டு இங்கிலாந்து சென்று ஐந்து வருஷ முடியுமுன் வங்காளத்தில் கொடுங்கோலாட்சி தாண்டவமாடத் தொடங்கிற்று. கம்பெனி உத்தியோகஸ்தர்கள் உள் நாட்டு வர்த்தகம் முழுமையும் குத்தகை எடுத்துக் கொண்டனர். மலிவான விலைக்கு சாமான்களைத் தமக்கு விற்கவும், ஜாஸ்தி விலைக்கு தம்மிடமிருந்து வாங்கவும் அவர்கள் ஜனங்களைக் கட்டாயப்படுத்தினர். நீதி பரிபாலன உத்தியோகஸ்தர்களையும் போலீசாரையும் சுங்க உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் லட்சியம் செய்யவே இல்லை. கம்பெனி உத்தியோகஸ்தன் ஒவ்வொருவனும் கம்பெனி அதிகாரத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். ஆகவே அவர்கள் மிகச் சுளுவாக சீமான்களாகிவிட்டனர். 3 கோடி சுதேசிகள் வறுமைவாய்ப்பட்டுத் தவித்தனர். பண்டைய இந்திய அரசர்கள் கொடுங்கோலாட்சி புரிந்தால் ஜனங்கள் எதிரிடையாக எழும்பி அரசாங்கத்தைத் தொலைத்துவிடுவார்கள். ஆனால் கம்பெனியாரின் ஆங்கில அரசாங்கத்தை அவர்களுக்கு அசைக்க முடியவில்லை. கம்பெனியார் மிருகத்தனமாக சர்வாதிகாரம் நடத்தி வந்தார்கள்."

கம்பெனியாரின் போக்கு வாரன் ஹேஸ்டிங்சுக்குங்கூடப் பிடிக்கவில்லை. அவர் கூறுவதாவது:—"சுதேசிகள் உரிமைகளில் நம்மவர்கள் பலவந்தமாகத் தலையிடுவதை இந்தியர்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆகவே நம்முடன் நட்புக்கொள்ள சுதேசிகள் அஞ்சுகிறார்கள். கம்பெனி உத்தியோகஸ்தர்களின் அக்கிரமச் செயல்களால் நமது தேசியப் பெருமையே அழிந்துவிட்டது. உத்தியோகஸ்தர்களின் சம்பளம், பென்ஷன் முதலிய செலவினங்களை நவாபின் தலைமேல் சுமத்துவது, அவரால் தாங்க முடியாத ஒரு பாரமாகும். சுதேச உத்தியோகஸ்தர்களுக்கு சன்மானம் வழங்கப்படுவதை நம்மவர்கள் தடுத்ததும் அக்கிரமமாகும். நவாப் விரும்பாமல் இருக்கும்போது நாமாக அவருடைய பாது காப்புக்கு ஒரு சேனையை ஏற்படுத்தி அதற்குள்ள செலவை அவர் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துவது நியாயமாகுமா? "உமக்குப் பிரியமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்சரி, செலவுத் தொகையை நீர் கொடுக்க வேண்டியதுதான்" என்று நான் எவ்வாறு அவர் முகம் பார்த்துச் சொல்லுவேன்? லக்ஷக்கணக்கான நவாபின் வருமானம் தமக்கே சொந்தமானதென்றெண்ணி கம்பெனி உத்தியோகஸ்தர்கள் தம்மிஷ்டம்போல் பந்தயங் கட்டிச் சூதாடுகிறார்கள்."

## காலச் சக்கரம்.

### கடவுள் விசாரணை.

சிம்லாவில் கூடிய சுதேச சமஸ்தான ஜனங்கள் மகா நாட்டில் டெபுடி கமிஷனர் கிரம்ப் என்பவர் ஆர்ப்பாட்டஞ்செய்ததை நண்பர்கள் அறிவார்கள். சிறந்த சீக்கிய தலைவர் சர்தார் சார்துல் சிங்கை முரட்டுத்தனமாய் நடத்தி கைது செய்தார். 144-வது பிரிவை மீறியதாக அவரை கைது செய்த போதிலும், அவர் மீது வழக்குத் தொடரவேயில்லை. அப்புறம் விசாரிக்கும்போது, அன்று கிரம்ப் குடித்து விட்டு வந்ததாக சொல்லப்பட்டது. திடீரென்று ஒரு வருஷ ரஜா கொடுத்து அவரை ஊருக்கு போகும்படி சொன்னார்கள். மகா நாட்டில் செய்த முரட்டுத்தனத்திற்கு தண்டனையாக இப்படி சர்க்கார் செய்தார்களென்று நினைத்தோம் பாவம், யார் தண்டனைக்கும் உட்படாத வாறு இவ்வுலகைவிட்டு அவர் பிரிந்து போனார் என்று இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது. அவர் இறந்து போனபடியால், அவர் செய்த அக்கிரமங்களைப் பற்றி இனி நாம் பேசவேண்டியதில்லை. கடவுளிடம் பதில் சொல்லிக் கொள்ளட்டும்.

### மண்டை கிறுக்கு

கல்கத்தா வெள்ளை பத்திரிகைகள் கார்லிக் கொலைக்குப்பின்னால் கண்டபடி எழுதுகின்றன. ஒரு பத்திரிகைக்கு கிறுக்கு மண்டை உச்சியில் ஏறி விட்டது. "காந்தியத்தால் பலாத்காரத்தை தடுக்க முடியாது. பைத்தியம் பிடித்த நாய் (புரட்சிகாரர்) களிடம் வாதம் செய்வதால் பலனுண்டா?" என்று கேட்கிறது. நாய் சும்மா இருக்கும் போது பைத்தியம் பிடிப்பதில்லை. பைத்தியம் பிடித்த நாய் கடித்தால்தான் நல்ல நாய்க்கும் பைத்தியம் வருகிறது. இதை வெள்ளைப்பத்திரிகைகள் அறியுமா? ரகசிய போலீஸ் படையை கலைத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டால், வங்காளம் ஒரு நிமிஷத்தில் அமைதி பெற்றுவிடும்.

Koviloor Digital Library



## பூனை வருது தேரை விலக்கு !

பம்பாயில் ஒரு வேடிக்கை. சினிமா படங்களை பார்த்து சர்டிபிகேட் கொடுக்க ஒரு கமிட்டி இருக்கிறது. படங்களை வெளியிடுமுன்பு அக்கமிட்டியின் அனுமதி பெறவேண்டும். [illegible] பம்பாய் படங்களில் [illegible] கொடுக்கிறார்கள். அவரவர்கள் தாய் பாஷையில் எழுதுவதோ பேசுவதோ குற்றமா? ஆனால் ஒரு கப்பலில் ஏறி சீமையிலிருந்து அப்பொழுதுதான் வந்து இறங்கியதாக சிலர் மனப்பால் குடிக்கிறார்கள். அவர்கள் பேசுவது எழுதுவதோ எல்லாம் இங்கிலீஷ்தான். கீரை விற்கும் கிழவியிடம் பேசுவதும், நாயிடம் பேசுவதுங்கூட இங்கிலீஷ் என்றால் மற்றதை கேட்பானேன்? பம்பாய் கமிட்டி காரியதரிசி சினிமா கம்பெனிகளுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார். கமிட்டியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்களுக்கு உருது தெரியாதாம். ஆகவே எல்லா தலைப்புகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமாம். அதை சர்க்கார் மொழிபெயர்ப்பவரிடம் காட்டி கையெழுத்து வாங்கவேண்டுமாம். இதை ஒரு வாரத்திற்கு முன்னதாகவே கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமாம். இல்லையெனில் சர்ட்டிபிகேட் கிடையாது! இதென்ன அநியாயம்? இந்த நாட்டில், இந்நாட்டார் சம்பளத்தை வாங்கி வயிறு வளர்த்து, இந்நாட்டு பாஷையை அறிந்துகொள்ள முடியாமல் போனால், அந்த இன்ஸ்பெக்டர்களுக்கு எதற்காக தெண்டம் கொடுக்கவேண்டும்? ஜனங்கள் பாஷை தெரியாதவர்கள் ஜனங்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும்? ஜனங்களின் பழக்க வழக்கங்களை எப்படி அறிந்து சினிமா படங்களை சீர்தூக்கி பார்க்க முடியும்? இன்ஸ்பெக்டர்களுக்கு உருது தெரியவில்லையென்றால் அதற்கு சினிமா கம்பெனி பொறுப்பல்ல. உருது தெரிந்தவர்களை நியமிக்க வேண்டும். அதை விட்டு இங்கிலீஷில் மொழிபெயர்க்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது, "பூனை வருது தேரை விலக்கு" என்று சொல்லிய மடையன் கதைபோலவே இருக்கிறது.

## கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது.

பண்டித கனால ராமமூர்த்தி சென்னை சட்டசபை நியமன அங்கத்தினர். சென்னையில் அவருக்கு மிஞ்சிய ராஜபக்தியுள்ள ஆசாமியை வேறு கண்டுபிடிக்க முடியாது. அவர் விஸ்வகர்ம குல பிரதிநிதி. சென்ற வாரம் சென்னை சட்டசபை கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். [illegible] பிராமணர் என்று சர்க்கார் [illegible] வேண்டும். அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் பெயருக்கு முன்பு 'பிரம்மஸ்ரீ' என்றும், பெயருக்கு பின்னால் "ஆச்சாரியலு" என்று சேர்க்க வேண்டும். சித்திர வேலை செய்பவர்களுக்கு பண்டித மகாராஜா என்று பட்டமளிக்க வேண்டும். இவையே அவர் கேட்டவை. சர்க்கார் அங்கத்தினர் பதில் சொன்னார். இவ்வளவையும் "[illegible]" என்றார். அதோடு அவர் நிற்கவில்லை. விஸ்வகர்ம குலத்தினரை பிராமணரோடு சேர்த்தால், வகுப்புவாரி வேலைகள் கொடுப்பதற்கும் பிராமணராகவே பாவிக்க நேரிடும் என்று ஜாடையாகச் சொன்னார். உடனே பண்டித ராமமூர்த்தி சப்தநாடிகளும் ஒடுங்கிவிட்டன. பிராமணரல்லாதார் கூட்டத்தில் இருந்தாலாவது சர்க்கார் வேலையாவது கிடைக்கும். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல இந்த ஆபத்து எதிர்பாராமல் வந்து சேர்ந்தது! அப்புறம் ஏன் அவர் பேசப் போகிறார்? பதில் பேசவும் முடியவில்லை. தீர்மானத்தை வாபஸ் வாங்கவும் தைரியமில்லை. தீர்மானம் தானாக தோல்வியுற்றது.

## பொன் விளையும் இந்தியா

உலகத்தில் பொன் விளையும் நாடுகளில் இந்தியா ஏழாவது ஸ்தானம் வகிக்கிறது. மைசூர் கோலார் சுரங்கத்தில் தான் ஏராளமாய் தங்கம் கிடைக்கிறது. ஹைதராபாத் சமஸ்தானத்திலும், அனந்தபூர் ஜில்லாவிலும் கொஞ்சம் கிடைக்கிறது. பர்மா நதியோரங்களில் மிகச் சொற்ப தங்கம் அகப்படுகிறது. இந்தியாவில் கிடைக்கும் தங்கத்தின் மதிப்பாவது:—


| | பவுன் | | பவுன் |
|---|---|---|---|
| 1926 | 16.24,238. | 1928 | 15.88,252. |
| 1927 | 16,26 913. | 1929 | 15,42 109. |

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)




வருட சந்தா ரூ. 3.
திங்கள், வியாழன் வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை 1931 ஆகஸ்டு 17௳, பிரஜோற்பத்தி ஆவணிமீ 1௳ திங்கட்கிழமை | இதழ் 17

# போர் முழக்கம்

மகாத்மா காந்தி லண்டன் போகவில்லை. உடன்படிக்கைக்கு விரோதமாக சர்க்கார் நடந்து வருகிறார்கள். அவற்றை எடுத்துக்காட்டியும் சர்க்கார் திருந்தவில்லை. ஆகவே லண்டன் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதில்லை யென்று காங்கிரஸ் காரியக்கமிட்டி 13௳ இரவு முடிவு செய்து விட்டது. இதைக்கேட்டு இந்தியாவிலும் லண்டனிலும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது. அதைப்போல், பிரிட்டிஷ் சர்க்காரும் லார்ட் இர்வினும் செய்த முயற்சிகள் பலிதமாகப் போகிற சமயத்தில், பம்பாய் கவர்னர் சர். ஹாட்சனின் அகம்பாவத்தால் எல்லாம் சிதறிப்போயின.

கிருஷ்ண பகவானை பாண்டவர்கள் துரியோதனிடம் தூதனுப்பினார்கள். "என்ன கேட்க வேண்டு"மென்று கிருஷ்ணன் கேட்டார். "எங்கள் ராஜ்யம் வேண்டும்" என்று தர்மர் சொன்னார்.

கிருஷ்ணன்:—சம்மதிக்கா விட்டால்?

தர்மர்:— ஐவருக்கும் ஐந்து நாடுகள் கேளும்

கிரு:—அதற்கும் சம்மதிக்காவிட்டால்?
தர்:—ஐந்து நகரம்
கிரு:—அதையும் கொடுக்க மறுத்தால்?
தர்:—ஐந்து கிராமங்கள்
கிரு.—அதற்கும் இணங்கா விட்டால்?
தர்:—ஐந்து வீடுகள் போதும்.
கிரு:—அதுவும் இல்லை யெனறால்?

தர்மர்:—அதையும் மறுத்தால், சரி, போருக்கு தயாராயிருக்கும்படி சொல்லும்.

மகாத்மா காந்தி டெல்லியில் உடன்படிக்கை செய்த பின்பு எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பலாத்கார கைதிகளை விடும்படி கேட்டார். சர்க்கார் மறுத்தார்கள்; பகத்சிங்கை விடுவிக்கும்படி கேட்டார். சர்க்கார் தூக்கில் போட்டார்கள். எல்லைப்புற மாகாணம் போக அநுமதி கேட்டார். இர்வின் மறுத்துவிட்டார். உடன்படிக்கைப்படி சகல ராஜீயக் கைதிகளையும் விடுவிக்கும்படி கேட்டார். இன்னம பலரை விடுவிக்காமல் ஜெயிலில் அடைத்து வைத்திருக்கிறார்கள். ஐக்கிய மாகாண விவசாயிகளுக்கு பரிகாரம் தேடும்படி கேட்டார். சர்க்கார் சம்மதிக்கவில்லை. இந்தியா வெங்கும் நடைபெறும் போலீஸ் அக்கிரமங்களை நிறுத்தும்படி கேட்டார். இன்னம் நிற்கவில்லை. கூர்ஜரத்தில் விவசாயிகளை துன்புறுத்துவதை நிறுத்தும்படி கேட்டார். சம்மதிக்கவில்லை. அநியாயமாய் துன்புறுத்தி வாங்கிய வரிகளை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டார். மறுக்கப்பட்டது. தாம் சொல்லும் புகார்களை விசாரிக்க ஒரு நடு நிலைமை கமிட்டியை நியமிக்கும்படி கேட்டார். அதற்கும் இணங்கவில்லை. கூர்ஜர விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையிலாவது தாம் சொல்லும் புகார்களை நிவர்த்திக்கும்படி கேட்டார். அதையும் சர்க்கார் புறக்கணித்து விடவே, வேறு வழியில்லை. கடைசியாக லண்டன் மகாநாடு போவதை நிறுத்தும்படி நேரிட்டது. மகாத்மா காந்தியைப்போல பொறுமை

Koviloor Digital Library



சாலியை வேறு பார்க்க முடியாது. எவ்வளவு தூரம் பொறுத்துப் பார்த்த பின்பு இந்த முடிவிற்கு வந்திருக்கிறார் என்பதை கொஞ்சம் கவனித்தால், இந்த சர்க்காரின் அயோக்கியத்தனம் நன்கு விளங்கும்.

பம்பாய் கவர்னர் ஹைட்சன் தலைகிறுக்கு பிடித்தவர். அதிகார வர்க்கத்தின் அகம்பாவமே உருவாய்த்திரண்டவர். கூர்ஜரத்தில் வரிவசூலித்தது உடன்படிக்கைக்கு விரோதமென்று காந்திஜி அவருக்கு தெரிவித்தார். காந்தி-இர்வின் உடன்படிக்கை சட்டமாகாது என்றும், நிலவரிச் சட்டப்படியே சர்க்கார் நடக்க கட்டுப்பட்டிருக்கிறதென்றும் அவர் பதில் தெரிவித்தாராம். பம்பாய் சர்க்காரின் அயோக்கியத்தனம் எவ்வளவு தூரம் போயிருக்கிறது பார்த்தீர்களா? காந்தி-இர்வின் உடன்படிக்கையை பகிரங்கமாய் ஒரு கவர்னர் மீற ஆரம்பித்து விட்டால், அதை கண்டிக்க மேல் அதிகாரிகள் முன்வராவிட்டால், அப்புறம் லண்டனுக்கு போவதுதான் எதற்கு? "யோக்கியனுக்கும் உடன்படிக்கை வேண்டியதில்லை அயோக்கியனுக்கும் வேண்டியதில்லை" என்று ஒரு பழமொழி உண்டு. யோக்கியனாயிருந்தால், வாயால் சொன்னாலும் அவன் கட்டுப்படுவான். அயோக்கியனிடம் எத்தனை பக்கம் எழுதி வாங்கினாலும் அவன் அதன்படி நடக்கப்போவதில்லை. சர்க்கார் விஷயத்தில் காந்தி-இர்வின் உடன்படிக்கை இக்கதியையே அடைந்திருக்கிறது.

காங்கிரஸ் சார்பாக காந்திஜிக்கும், சர்க்காருக்கும் நடந்த கடிதப்போக்கு வரத்துக்களை காரியக்கமிட்டி வெளியிடப்போகிறது. அவற்றைப்பார்த்த பின்பு உலகம் உண்மையை அறிந்துகொள்ளும். குட்டி அதிகாரிகளும், முக்கியமாய் பம்பாய் சர்க்காரும் உடன்படிக்கைக்கு விரோதமாக எவ்வளவு கேவலமாக நடந்துகொண்டார்கள் என்பது தெரிந்துபோகும். காரியக்கமிட்டி முடிவைக் கேட்டவுடன் ஸ்ரீமதி. சரோஜனியும், பண்டித மாளவியாவும் லண்டன் மகாநாடு போவதை தாங்களும் நிறுத்தி விட்டார்கள். இந்திய வர்த்தக சபைக்கு லார்ட் இர்வின் கொடுத்த வாக்குறுதியை மீறி நடந்து அவமதித்ததற்காக, வர்த்தக சபையும் லண்டன் மகாநாட்டை பகிஷ்கரித்துவிட்டது. அதன் பிரதிநிதி சர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாசும் மகாநாடு போவதை நிறுத்திவிட்டார்.

உடன்படிக்கைக்குப் பின்னால் அதை மீறி சர்க்கார் செய்த அக்கிரமங்களுக்கும் புரட்டுகளுக்கும் அளவில்லை. ஆகவே காங்கிரஸ் லண்டன் மகாநாட்டில் கலந்து கொள்ளுவது முடியாத காரியம். இந்த சர்க்கார் அதிகாரிகளுக்கு இன்னம் புத்தி வரவில்லை. "இந்நாடு இந்தியருடையது. இங்கே நாம் சேவகர்கள்" என்ற உண்மை அவர்கள் மண்டையில் ஏறுகிறவரை நாம் போராடியே தீரவேண்டும். போர்முழக்கம் கேட்கிறது. காங்கிரஸ் உடனே சட்டமறுப்பு ஆரம்பிக்கப் போவதில்லையென்று மகாத்மா சொல்லுகிறார். இருக்கலாம். ஆனால் இதற்கு முன்பு உடன்படிக்கையை மீறிச் செய்தவைகளுக்கு பரிகாரம் தேடாமலும், இனிமேலும் மீறிக்கொண்டும் இருந்தால், காங்கிரஸ் கை கட்டி சும்மாயிருக்கப் போவதில்லை. தமிழரே, தயாராகுங்கள். காங்கிரஸ் சங்கொலி நாதம் கேட்கிறது. புதிய தேசியக்கொடி கெம்பீரமாய் பறக்கிறது. திடீரென்று உத்தரவு பிறக்கலாம். எதற்கும் தயாராயிருங்கள்.

## அடக்கு முறை

சென்னையில் ரகசிய போலீசார் சுறுசுறுப்பாயிருக்கிறார்களாம். ராசிபுரத்திலும், காஞ்சீவரத்திலும் மறியலுக்கு விரோதமாக 144 பிறந்திருக்கிறது. சேலத்தில் ஸ்ரீமான்கள் பவானி சிங், சுப்பிரமணியம் முதலியவர்கள் மீது ஜாமீன் பிரிவுப்படி வழக்குகள். இந்த பேயாட்டங்களைப் பார்த்த பின்பு, காந்தி—இர்வின் உடன் படிக்கை இந் நாட்டில் இருப்பதாக யாராவது நினைக்க முடியுமா? லார்ட் இர்வின் நினைத்தபடி இந் நாட்டில் அமைதியை நிலைநாட்ட சில்லரை தேவதைகளுக்கு பிடித்தமில்லை யென்பது வெட்ட வெளிச்சமாய் விட்டது. ஊர் இரண்டு பட்டால்தானே கூத்தாடிக்கு கொண்டாட்டம்?

## "காந்தி" வாரம் மும்முறை

வெகு சீக்கிரத்தில், "காந்தி" வாரம் மும்முறை பதிப்பாக வெளிவரும். தங்களுக்கு வேண்டிய பிரதிகளுக்கு உடனே ஏஜண்டுகள் எழுதவும்.

மானேஜர்.

Koviloor Digital Library



# வில்லிங்டனே, பதில் என்ன?

எல்லைப்புற மாகாணம் பட்டாணியர் வாழும் இடம். அவர்கள் முரடர்கள், சட்டத்திற்கு உட்படாதவர்கள் என்று சர்க்கார் இடைவிடாமல் சொல்லுகிறார்கள். அங்கு நடக்கும் சர்க்காரே தனி சர்க்கார். அடக்குமுறைகள் எப்பொழுதும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும். சட்டங்களும் தனி சட்டங்கள் ஒருவன் அதிகாரி ஒருவனை கொலை செய்ய முயற்சி செய்ததாக ருசுவானால் போதும். அற்பகாயம் கூட செய்யாமல் இருந்தாலும் சரி, அவனுக்கு மரண தண்டனை விதித்துவிடலாம். அப்பேர்ப்பட்ட ஆட்சி அங்கு நடக்கிறது. அந்நாட்டு தலைவர்தான் எல்லைப்புற காந்தி என்ற கான் அப்துல் கபார்கான். அவர் முயற்சியால், அஹிம்சா தர்மமும் ராட்டின இயக்கமும் அங்கு தாண்டவமாடுகின்றன. சென்ற வருஷ சட்ட மறுப்பு போரில் அந்நாட்டு வாதிகள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. சும்மாயிருக்கும் போதே அடக்குமுறை. அதில் சட்டமறுப்பு வந்துவிட்டால் அதிகாரிகள் சும்மா யிருப்பார்களா? பெஷாவாரில் நடந்த ராணுவ ஆட்சியையும் அக்கிரமங்களையும் நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள் அதைப்பற்றி விசாரிக்க ஸ்ரீ வித்தல்பாய் பட்டேலை தலைவராய்க்கொண்ட ஒரு கமிட்டியை காங்கிரஸ் நியமித்தது அக்கமிட்டி அறிக்கை வெளிவந்ததும் சர்க்கார் அதை பறிமுதல் செய்து விட்டார்கள். இப்பொழுதும் நாள் தவறினாலும், எல்லைப்புற தொண்டர்கள் போலீசாரிடம் தடியடிபடுவது தவறுவதில்லை. எல்லைப்புற மாகாணத்தில் குதாய் கித்மத்கார் என்ற தொண்டர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் படும் கஷ்டங்களையும், ஜனங்கள் படும் கஷ்டங்களையும் நேரில் பார்க்கும் பொருட்டும், அவர்கள் எவ்வளவு தூரம் அஹிம்சா தர்மத்தை கைக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும் பொருட்டும் மகாத்மாவை எல்லைப்புற காந்தி அழைத்தார். ஆனால் பரமயோக்கியர் என்று சொல்லப்படும் லார்ட் இர்வின் கூட பரம சாந்த சொரூபியாகிய மகாத்மாவிற்கு அநுமதி கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் மகாத்மா போக முடியவில்லை.

சமீபத்தில் தமது குமாரர் தேவதாஸ் காந்தியை நேரில் பார்த்து வரும்படி அங்கு அனுப்பியிருந்தார். அவர் பார்த்து வந்து சென்ற வாரம் பம்பாயில் கூடிய காரியக்கமிட்டியில் தமது அறிக்கையை சமர்ப்பித்தார். தேவதாஸ் காந்தி அங்கு சுற்றுப்பிரயாணம் செய்யும்போது ஒரு அதிசயம் நடந்து.

சார்சாடா என்ற ஊர் பக்கத்தில் மாலை 4 மணிக்கு தேவதாஸ் காந்தியும், எல்லைப்புற காந்தியும் ஏறிய மோட்டார் சென்றது. அவர்கள் போகிற வழி நெடுக அங்கங்கே ஜனங்கள் கூடி உபசரித்தார்கள். போலீசாரும் பல இடங்களில் இருந்தார்கள். சார்சாடா பக்கத்தில் இவர்கள் மோட்டார் சென்றதும், இவர்கள் பின்னால் சென்ற ஒரு மோட்டார் லாரி மீது யாரோ துப்பாக்கியால் சுட்டார்களாம். அதிலிருந்த மூவருக்கு காயம். சாமான்களையும் கொள்ளை யடித்துக்கொண்டு போனார்களாம். பட்டப்பகலில், போலீசார் நிற்கும்போது, இந்தச்செய்கை எப்படி நடக்க முடியும்? உண்மையாகவே, சுட்டவர்கள் திருடர்கள் தானா? இதைப்பற்றி இப்பொழுது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. கான் அப்துல் கபார்கானிடம் இதைப்பற்றி கேட்டபோது, அவர் பின் வருமாறு சொன்னார்.

“இதற்கு போலீசாரே ஜவாப்தாரி என்று சீப் கமிஷனரிடம் சொன்னேன். இப்பொழுதும் அதையே சொல்லுகிறேன். இம்மாதிரி சம்பவங்கள் சாதாரணமாக இங்கு நடப்பதே கிடையாது. ராஜீய இலாகா சதியாலோசனை மீது இச்சம்பவம் நடந்ததாக சிலர் சொல்லுகிறார்கள். அப்படிச் செய்வார்களா என்று நம்ப முடியவில்லை. ஆனால் முன்னால் நடந்த பல சம்பவங்களை கவனித்தால், இம்மாதிரி நடக்க முடியாது என்று சொல்லுவதற்குமில்லை. அது உண்மையானால், எங்களை பயமுறுத்துவதற்காகவே இப்படிச்செய்திருக்க வேண்டும். தேவதாஸ் காந்தியும், அவருடன் வந்த மற்றவர்களும், எல்லைப்புற வாசிகள் காட்டு மிராண்டிகள் என்று நினைப்பதற்காக சூழ்ச்சி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால ராஜீய இலாகா தான் செய்ததா என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது.’’

இதற்கு வியாக்கியானம் ஒன்றும் தேவையில்லை. லார்ட் வில்லிங்டன் சமாதானமே தேவை உடனே பதில் கூற அவர் கடமைப்பட்டிருக்கிறார்:

Koviloor Digital Library



## காங்கிரஸ் விவசாயிகளுக்கே!

பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் மகாத்மா பேசியதாவது:—

ஒப்பந்த அநுஷ்டான சம்பந்தமாக சில்லரை விஷயங்களைப் பற்றி நான் கவலை கொள்ளவில்லை. அவைகள் எவ்வளவு தொல்லையை விளைவிக்கக் கூடியதாக இருப்பினும் அதைப் பற்றி எனக்கு அக்கரையேயில்லை. காங்கிரஸ் தொண்டர்களில் பலர் சிறைப்பட்டு வருவது எனக்குத் தெரியும். அதனால் எனக்கு எவ்வளவு மன வருத்தமேற்பட்டாலும் நான் அவைகளை யெல்லாம் சகித்துக் கொள்ள தீர்மானித்திருக்கிறேன். ஏனெனில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நாம் கஷ்டப்படுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக நமது லக்ஷியம் பூர்த்தியடையும். விஷயங்களை நன்கு அறிந்து கொள்ளும் ஜனங்கள் விஷயத்தில் தான் நான் அவ்விதம் நிற்க முடியும். டில்லி ஒப்பந்தப்படி அதிகாரிகள் நடக்காவிட்டாலும் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமென நாம் அத்தகையோர்களிடம் கூற முடியும். ஆனால் விவசாயிகள் விஷயம்தான் மிகவும் கவலையைக் கொடுக்கக்கூடிய விஷயமாகும். நாம் அவர்களை எவ்விதம் திருப்தி செய்வது? அவர்களைத் திருப்தி செய்வது, அவர்களுடைய சௌகரியங்களை பாது காக்க வேண்டியதுதான் நமது இன்றியமையாத கடமையாகும். உண்மையில் காங்கிரஸ் விவசாயிகளின் சபையாகும். விவசாயிகளுடைய சபையாக காங்கிரஸ் இராவிடில், அது இருந்தாலென்ன அல்லது ஒழிந்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான். ஜமீன்தார்கள், ராஜாக்கள், முதலாளிகள் முதலியோர் காங்கிரசில் பிரதிநிதிகளாக இருக்கிறார்களென்பது உண்மையே. எனினும், பாமர ஜனங்களுடைய சௌகரியங்களையும், விவசாயிகளுடைய சௌகரியங்களையும் பாது காக்க வேண்டியதுதான் காங்கிரசின் முக்கிய அலுவலாகும். விவசாயிகளுக்கு விபத்தை விளைவிக்காமலிருக்கும் வரையில் தான் காங்கிரஸ் செல்வந்தர்களுடன் ஒத்துழைக்க முடியும். சில சமயங்களில் விவசாயிகள் உரிமைகளைப் பாது காத்து ரக்ஷிக்க காங்கிரஸ், செல்வந்தர்களுடன் போராடும்படி நேரும். ஆனால் ஒரு போதும் காங்கிரஸ் விவசாயிகளுடன் போராடும்படி நேராது. எனவே, மற்றவர்கள் விஷயத்தில் டில்லி ஒப்பந்தப்படி அநுஷ்டிக்காவிட்டாலும் அதை என்னால் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் விவசாயிகள் விஷயத்தில் அதிகாரிகள் டில்லி ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவார்களானால், பின்னர் நாம் கண்களை மூடிக் கொண்டு சும்மாயிருக்க முடியாது. தற்போது கூர்ஜரத்திலும், வடமேற்கு எல்லைப்புறங்களிலுள்ள சில இடங்களிலும் விவசாயிகளுக்கு துன்பம் ஏற்பட்டிருக்கிறது.

## தோட்டத்தில் பாதி கிணறு

இம்பீரியல் பாங்கி என்ற பாங்கியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இந்தியாவின் தேசிய பாங்கி என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். சர்க்கார் பணம் முழுவதும் அந்த பாங்கியில்தான் போட்டிருக்கிறார்கள். சர்க்கார் மேற் பார்வையில் நடைபெற்று வருகிறது ஆனால் அது "தேசிய" பாங்கியா என்று கேட்டால், அதுதான் சந்தேகம். இந்நாட்டிலுள்ள சர்க்காருக்கு இந்திய சர்க்கார் என்று பெயர் இருந்தும் இந்தியருக்கு எப்படி உரிமையில்லையோ அதைப்போலவே அந்த "தேசிய" பாங்கியும் இருக்கிறது. இந்தியர் பணத்தைக் கொண்டு இந்தியாவில் அந்த பாங்கி நடந்தும், மூட்டைப் பூச்சிகளைப் போல வெள்ளையர்களே அந்த பாங்கியை அப்பிக் கொண்டிருக்கிறார்கள்: பெரிய உத்தியோகங்கள் எல்லாம் வெள்ளையருக்கு, வெறும் குமாஸ்தா வேலையைத் தவிர வேறு எதுவும் தெரியாத வெள்ளை வாலிபர்களை சீமையிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். எடுத்தவுடன் 500 ரூ ாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் அநுபவம் பெற்ற இந்தியர்களுக்கு அந்தப் பதவிகள் கிடையா. இம்மாதிரி வெள்ளையருக்கு வாரி வாரி கொடுப்பதால், பாங்கி செலவு விஷம் போல ஏறிக் கொண்டு போகிறது. தோட்டத்தில் பாதி

---

இந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர், பார்சி, யூதர் முதலிய சகலரையும் நான் நேசிக்கிறேன். ஆகவே அவர்கள் செய்கைகளுக்கு நானே பொறுப்பு என்று உணருகிறேன். ஒரு இந்திய சிறுவன் ஒரு வெள்ளையரை திட்டினால், பொறுப்பு நம்முடையது என்று நீங்கள் உணர வேண்டும்—மகாத்மா.

Koviloor Digital Library



கிணறு என்று சொல்லுவார்கள். இம்பீரியல் பாங்கியில் தோட்டத்தில் முக்கால் பாகம் கிணறாயிருக்கிறது. அதன் நிர்வாகச் செலவு எம்மாதிரி ஏறிவருகிற தென்பதை கவனிப்போம்.

| வருஷம் | வரும்படி (லட்சம்) | சிப்பந்தி செலவு. (லட்சம்) |
|---|---|---|
| 1921 | 222 | 67 |
| 1922 | 242 | 84 |
| 1924 | 288 | 106 |
| 1927 | 280 | 123 |
| 1929 | 279 | 127 |
| 1930 | 276 | 130 |

மற்றச் செலவுகள் வேறு. 1930ல் மட்டும் சிப்பந்தி செலவு 130 லட்சமும் இதர செலவு 45 லட்சமும் ஆக 175 லட்சம் செலவாயிருக்கிறது. வரும்படி குறைந்தாலும், சிப்பந்திசெலவு வருஷா வருஷம் கூடுவதில் மட்டும் குறைவில்லை. வேலையற்ற வெள்ளையருக்கு வேலை கொடுப்பதற்காக இம்பீரியல் பாங்கி ஏற்பட்டிருக்கிறதா? இம்பீரியல் பாங்கி வெள்ளையருக்கு மாமனார் வீடா? இந்த அநியாயத்தை நிறுத்த வழிதேட வேண்டும். படித்த இந்தியர் எத்தனையோபேர் பட்டினி கிடக்கும்போது, சீமையிலுள்ள உதவாக்கடை பேர்வழிகளுக்கு ஆயிரம் ஐந்நூறு சம்பளம் கொடுத்து வரவழைப்பது போக்கிரித்தனமாகும்.

## ஜீவகாருண்யமா, மிருகத்தனமா?

ஆஸ்பத்திரிகள் மனிதரின் நோய் துன்பங்களை பரிகரிக்கவே ஏற்படுகின்றன. காயமோ நோயோ பட்டுவிட்டால், அவன் எதிரியாயிருந்தாலும் பரிகாரம் தேடவேண்டியது மனித ஜென்மத்தின் முதல் கடமை. ஆனால் இந்தியாவிலுள்ள பல ஆஸ்பத்திரிகள் தங்கள் கடமையை மறந்து விடுகின்றன. மீரத் போல்ஷவிக் சதி வழக்கில் ஹச்சின்சன் என்ற வெள்ளையர் ஒரு எதிரி. அவர் விசாரணையிலிருப்பதால் ஜெயிலில் இருக்கிறார். சென்ற வாரம் திடீரென்று அவருக்கு ஜுரம் வந்துவிட்டது. 104 டிகிரி உஷ்ணம். பக்கத்தில் ராணுவ ஆஸ்பத்திரி. ஜெயிலிலிருந்து அங்கு கொண்டுபோக டாக்டர்கள் விரும்பினர். ஆனால் ராணுவ அதிகாரிகள், ஒரு போல்ஷவிக் எதிரிக்கு இடம் கொடுக்க முடியாதென்று முதலில் மறுத்துவிட்டார்களாம். பல மணி நேரம் சர்க்கார் வக்கீல்கள் சிபார்சு செய்த பின்பு இரவு 11 மணிக்கு அநுமதி கொடுத்தார்களாம். பாவம், இம்மாதிரி சீடர்கள் தமது பெயரைச் சொல்லி வழிபடும் கிறிஸ்து கண்டால் என்ன சொல்லுவாரோ? யுத்தத்தைவிட கொடுமையான விரோதம் இருக்க முடியாது. அந்த யுத்தத்தில் கூட கைதியான காயமடைந்த எதிரிகளுக்கு ஆஸ்பத்திரியில் இடம் கொடுத்து ஆதரிக்கிறார்கள். ஹச்சின்சன் ஒரு விரோதியாயிருந்தாலும், ஜீவகாருண்யத்தை உத்தேசித்தாவது அவருக்கு சிகிச்சை செய்ய வேண்டுமென்ற நினைப்பு ராணுவ திமிரில் மறைந்து போயிற்று போலும்! இந்நாட்டிலுள்ள வெள்ளையரின் கிறிஸ்தவ தர்மத்தை என்னென்று சொல்லுவது? இம்மாதிரி கொடுமை இந்நாட்டுக்கு புதிதல்ல. சட்டமறுப்பு காலத்தில், தடியடியால் காயமடைந்த தொண்டர்களுக்கு செஞ்சிலுவை சங்கத்தார் உதவி செய்ய மறுக்கவில்லையா? அதன்மீது காங்கிரஸ் சொந்தமாக செஞ்சிலுவை தொண்டர்களை ஏற்படுத்திய போது, அவர்கள் செஞ்சிலுவை அடையாளத்தை உபயோகிக்க கூடாதென்று தடுக்கவில்லையா? மதுரையிலும், வேறு பல ஆஸ்பத்திரிகளிலும் காயமடைந்த காங்கிரஸ் தொண்டர்களுக்கு சிகிச்சை செய்ய மறுக்கவில்லையா? இவையெல்லாம் ஜீவகாருண்யத்தை காட்டுகின்றனவா, மிருகத்தனத்தை காட்டுகின்றனவா? இந்த மிருகத் தனமுள்ள ஆஸ்பத்திரிகள் இருப்பதைவிட இடிந்து நாசமாய் போவது மேல். நாட்டைவிட்டு பிரிந்து, தாயை விட்டு பிரிந்து ஜெயிலில் வாடும் ஹச்சின்சனுக்கு ஆஸ்பத்திரியில் இடமில்லையென்றால், இதைவிட வேறு கொடுமை என்ன இருக்கிறது? நமது நெஞ்சம் பிளக்கிறது.

சிங்கப்பூர் ஏஜன்ட்

சிங்கப்பூரில் 'காந்தி' பத்திரிகையும், 'காந்தி' பிரசுரங்களும் கிடைக்குமிடம்:—

இந்தியா நாவல் டிப்போ,
73, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

கோடி எந்த வர்ணமாயிருந்தால் என்ன? எது தேசீயக் கோடியா யிருந்தாலும், அதை வணங்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.—ஸ்ரீ நரிமன்

Koviloor Digital Library



## காந்திஜி கண்ணீர்!

“ஸ்வசக்தி” எழுதுகிறது:—

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில், காந்தியடிகள் முடிவில் ஆண்டவனை வேண்டிக் கண்ணீர் உகுத்துக் கசிந்து கசிந்து உருகிப் பேச்சற்று அயர்ந்தார் என்று பத்திரிகை நிருபர் தெரிவித்திருக்கிறார்.

ஆண்டவனடியை அடியவர் நெஞ்சசந்தவழும் போது, மெய்யரும்பல், விதிர் விதிர்த்தல், கண்ணீர் பெருகல் முதலியன உண்டாவது இயல்பு. முப்பதுகோடி மக்களின் பொருட்டு, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் பொருட்டுக் காந்தி யடிகள் ஆண்டவனை நோக்கி அழுகிறார். அவ்வாறு எல்லாரும் நெஞ்சு நெக்குருக அழுதல் வேண்டும். புறக்கிளர்ச்சியினும், அக அன்பு அழுகை, குறைபாடுகளைக் களையவல்லதாகும்.

எல்லாம் வல்ல ஆண்டவனே! எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பெருமானே!

பெரிய பாரததேசம்! பாழாகி விட்டது; பொருட் செல்வத்தை இழந்து விட்டது; கல்விச் செல்வத்தை இழந்து விட்டது; சாதிமதச் சண்டைகளுக் கிரையாகிறது; அடிமையை விரும்புகிறது; இருளில் வீழ்ந்து கிடக்கிறது; உன்னையும் மறந்து வருகிறது; எங்கணும் பசி பட்டினி; ஏழை இந்தியா! இதற்கு விடுதலை தேட ஒருவர் எல்லாவற்றையுந் துறந்து, ஏழைக்கு ஏழையாய், கோவணதாரியாய், முயன்று வருகிறார். அவருக்கு இடையூறுகள் சூழ்ந்தவண்ணமா யிருக்கின்றன. அச்சூழலிடை நின்றும் அவர் தொண்டாற்றி வருகிறார். அவர் நின்னருளை நோக்கி யழுகிறார். இந்தியா பாவதேசம்: பல பாவங்களை இந்தியா செய்திருக்கிறது; பலனையும் அநுபவித்து வருகிறது. பாவ இந்தியாவுக்காக ஒருவர் நின்னை நோக்கி அழுகிறார். அவருக்கு அருள் சுரக்க; ஆற்றலை வழங்குக; தேசத்தாருக்கு நல்லறிவை சகோதர நேயத்தை அருள்க. எல்லாம் நீ; எல்லாம் நின்னால். ஆண்டவனே! அருள் செய்க.

## மகாத்மா தேக நிலை

சென்ற சில தினங்களாக மகாத்மாவிற்கு வேலை அதிகம். அதோடு மனக்கவலை. கூர்ஜர, ஐக்கியமாகாண விவசாயிகள் துன்பம் ஒரு பக்கம். வெடிக் குண்டு சம்பவங்கள் மற்றொரு பக்கம். இவற்றோடு பம்பாயில் ஜின்னு ஹாலில் நடந்த கலகம் அவர் உள்ளத்தை உருக்கி விட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அவர் பலாத்கார சம்பவங்களைப் பற்றி பேசும் போது அப்படியே மூர்ச்சையாய் விட்டார். சென்ற திங்கட் கிழமை அவர் “யங் இந்தியா” பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதிக் கொண்டிருக்கும்போது, அவர் வலக்கை விரல்கள் மரத்துப்போய் விட்டன. ஆயினும் அவர் எழுதுவதை விடவில்லை இடக்கையால் எழுதிக் கொண்டு போனார். மறுபடியும் வலக்கையில் ரத்த ஓட்டம் சரியாய் வந்த பின்பே அதை உபயோகித்தார். சென்ற வருஷம் யுத்த காலத்தில் அவருக்கிருந்த மனக்கவலையைவிட “சமாதான காலம்” என்று சொல்லும் இக்காலத்தில் அவர் பன்மடங்கு அதிகமாய் மனக் கவலை கொள்ளுகிறார். அம்மாதிரி நிலைமையை உண்டு பண்ணும் நமது நாட்டு ஜனங்களைப்பற்றி என்னென்று சொல்லுவது? ஒப்புயர்வற்ற மகாத்மாவை நமது நாடு பெற்றிருந்தும், அவர் சொல்லுகிறபடி கேட்டு அவரை நிம்மதியில் வைக்க நமது ஜனங்களுக்கு அறிவில்லை. மகாத்மா நமது நாட்டின் முடிசூடா மன்னர் அவரே நமது நாட்டின் உயிர். அவரே நமது ஆத்மா. இந்தியாவிற்குள்ள இன்றைய பெருமை அவராலேயே கிடைத்தது. போலீஸ் சிகப்பு தலைப்பாகையைக் கண்டால் குட்டிக் கரணம் போடும் நமது நாட்டார் இன்று பீரங்கியையும் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் வீரம் அவராலேயே ஏற்பட்டது மூட பழக்கவழக்கமும், அடிமைச்சிறுமதியும், ஆண்மையற்ற வாழ்வும் மாய்ந்து மறைந்து போனது அவர் பெருமையே! அத்தகைய கருணாநிதியை மனக்கவலை கொள்ளும்படி செய்யலாமா? அப்படிச் செய்தால் அந்த கர்ம பலன் நம்மை வாட்டாமல் போகுமா? மூட ஜனங்களே ஒரு வினாடியாவது யோசியுங்கள்.

---

நீங்கள் சரித்திரத்தைப்படித்தால் பலாத்காரம் அதைச் செய்கிறவனுக்கு தண்டனை கொடுப்பதைத் தவிர, ஜனங்களிடம் எப்பொழுதும் விழிப்பை உண்டு பண்ணவில்லை என்பதை அறியலாம் —மகாத்மா.

Koviloor Digital Library

## ஏஜன்டுக்கு பகிரங்கக் கடிதம்.

(எம்டன் எழுதுவது)

ஏஜெண்டு மிஸ்டர் மெக்காஸ்லேன் துரை அவர்கட்கு எம்டன் வந்தனம்! தந்தனம்! பிரதி வாரமும் என்னால் "காந்தி"யில் எழுதும் விஷயங்களைக் கண்டு அளவிலாத கோபங் கொள்கிறீர்க ளென்பது எனக்குத் தெரியும். தவறுதல் செய்கிறவர்களுக்கு கோபம் அதிகம் வருவது அனுபவம். ஆனால் புத்திசாலிகள் கோபங் கொள்வதைவிட, பிறர் சொல்வதில் குற்ற மிருக்கிறதா இல்லையா, குற்ற மிருப்பின் அதை எவ்விதம் நிவர்த்திக்கலாம் என்று ஆராய்ந்து பரிகாரம் செய்வார்கள். மாதம் 1100 ரூபாய் சம்பளமும், போனசும், படியும், பங்களாவும், மற்ற சுகபோகமும் சவுகரியமாய் அமையப் பெற்றிருக்கும் தாங்கள் புத்திசாலி யென்றே எண்ணுகிறேன். ஆனால் செய்கையில் தாங்கள் தவறிப்போவதின் போக்கிற்கு தங்களைச் சூழ்ந்து போதிக்கும் குட்டிச் சாத்தான்களே காரண மென்று நினைக்கின்றேன்.

### இது தெரியாதா?

சீப்பை ஒளித்து விடுவதால் கலியாணம் நின்றுவிடாது. உமது தொப்பி போய்விடுவதால் உமது ஏஜண்டு வேலை போய்விடாது: நீர் போய் விட்டால் ஆலை நின்று விடாது என்பது என்னைவிட முழ நீளமுள்ள தங்களுக்கு தெரியாத விஷய மல்லவே! அது போல் "காந்தி" யின் வால் போஸ்டர்களை நீர் கிழித்துப் போட்டு விடுவதால் "காந்தி" வருவது நின்றுவிடாது. எம்மை மடக்கப் பார்க்கும் உமது யோசனையும் உருப்படாது.

### இதைக் கவனியுங்கள்

ஆலையைப்பற்றி நான் அடிக்கடி பத்திரிகைகளில் எழுதுவதால் தாங்கள் அடைந்துள்ள கோபமும், அதனால் வரும் இன்னல்களையும் இடைஞ்சல்களையும் நான் நன்றாக அறிந்தே இருக்கிறேன். என் செய்வது? என்னை இப்படி எழுதும்படி தூண்டியது எது? ஏன் எழுதுகின்றேன் என்பதற் கெல்லாம் காரணம் தற்காலம் தொழிலாளர் படுந்துயரமே காரணம். இந்திரபாளிகைப் போன்ற பங்களாவில் நீர் இன்பமாக உட்கார்ந்து கொண்டும், சாப்பிட்ட ஆகாரம் செரிக்காததால் நேரும் பாதையை நிவர்த்திக்க சோடாவும், பிராந்தியும் சாப்பிட்டு இரவும் நாலு மணிவரை குதித்துக் கொண்டிருக்கவும், உமது பக்கத்தில் பத்தடி தூரத்தில் நாற்பது வருஷமாய் உழைத்து வரும் ஆலை ஏழைத் தொழிலாளி ஒருவன் 8 அணா தினக் கூலியில் குடும்பபாரம் தாங்காது குடிசையில் எட்டு நாள் பட்டினியுடன் செத்தால் எடுத்துப் போடவும் விதியில்லையே! என ஏங்கிக் கொண்டிருக்கவும் கண்ட உமது மனம் கல்லா யிருந்தாலும் என்மனம் கசிகிறதே! "முதலாளி முதல் போடுகிறவன், தொழிலாளி அதை காப்பாற்றி உருப்படுத்துகிறவன். ஆதலால் கிடைக்கும் இலாபத்தில் இருவரும் பங்குதாரர் ஆவார்கள். முதலாளி இல்லாது தொழிலாளி இல்லை. தொழிலாளி இல்லாது முதலாளி இல்லை. ஆதலால் இருவரும் பரஸ்பரம் சமமான நிலையில் இருத்தல் வேண்டும்" என்று எழுதிவைத்திருக்கிற—அல்லது அநுபவத்தில் செய்து வருகிற ஹென்ரி போர்டும் உம்மைப்போல் மேனாட்டைச் சார்ந்தவராயிற்றே! உமக்கு அந்த எண்ணம் உண்டாகவேண்டியது நியாயமாயிற்றே! ஆத்திரப்படாது விஷயங்களை ஆலோசித்துப் பாருங்கள்.

---

### புதுவை முரசு அநுபந்தம்

ஸ்ரீ எஸ். குருசாமி பி ஏ அவர்களை ஆசிரியராய்க் கொண்டு புதுவையிலிருந்து வெளிவரும் "புதுவை முரசு" வாரப் பத்திரிகையின் வருஷ அநுபந்தம் வரப்பெற்றோம். சுயமரியாதை கட்சியை ஆதரிக்கும் கட்டுரைகளும், வேடிக்கை கட்டுரைகளும், வேடிக்கை படங்களும் தலைவர்கள் படங்களும் நிறைந்திருக்கின்றன. சுயமரியாதைக் கொள்கையை பரப்பும் நோக்கத்தோடு வெளிவந்த புத்தகங்களில் இதை முதல் படியில் வைக்கலாம். இவ்வளவு சிறந்த சுயமரியாதை வெளியீடு இதற்குமுன்பு வெளிவந்ததாக தெரியவில்லை. 120 பக்கங்கள் விலை, அணா 6. கிடைக்குமிடம்: "புதுவை முரசு", புதுச்சேரி,

---

### கோயம்புத்தூர்.

"காந்தி" பத்திரிகை விற்க கோயம்புத்தூரில் ஏஜன்டு தேவை. உடனே எழுதவும்.

மானேஜர்:

"காந்தி" ஆபீஸ்,

11, ஆண்டர்சன் ரோடு, சென்னை.

Koviloor Digital Library



## கேள்வி யில்லையா?

லாகூர் ஷாலிமார் தோட்டத்தில் மே மாதம் 3உ ஒரு போலீஸ் வேட்டை நடந்தது. அதில் ஜகதீச சந்திரர் இறந்துபோனார். சுகதேவராஜ் கைதியானார். இருவரும் போலீசார் மீது சுட்டதால் போலீசார் திருப்பி சுட்டதாகவும் அதனால் ஜகதீச சந்திரர் இறந்ததாகவும் அச்சமயம் சொன்னார்கள். ஜகதீச சந்திரர் தலைமறைவாயிருந்த ஒரு வெடிக்குண்டு ஆசாமி என்றும் சொன்னார்கள். சில நாட்கள் சென்றன. ஜகதீச சந்திரர் எந்த சதிவழக்கிலும் சேர்ந்தவரல்லவென்று வெளியாயிற்று. அவர் கலாசாலையில் படித்துவிட்டு ரஜா நாட்களில் ஊர் திரும்பிய மாணவர் என்பதும் உறுதியாயிற்று. அப்படியானால் அவரை போலீசார் கைது செய்ய முயற்சித்தது ஏன்? அந்த தோட்டத்தின் வாசல்கள் அடைக்கப்பட்ட பின்பு அவர் தப்பியோட வழியுமில்லை. அந்நிலையில் அவரை சுடுவானேன்? இப்பொழுது வேறு சில விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. ஜகதீச சந்திரர் கையில் துப்பாக்கியே யில்லையென்றும், அவர் போலீசாரை சுடவேயில்லையென்றும், போலீசார் சுடுவதிலிருந்து தப்பி ஓடவே முயன்றாரென்றும் தெரிகிறது. நாலு உண்மைகள் தெளிவாகின்றன.

1. ஜகதீச சந்திரரை எந்த வழக்கு சம்பந்தமாகவும் போலீசார் கைது செய்ய தேடியிருந்ததில்லை.

2. போலீசாரை அவர் சுட்டதாக எவ்வித ஆதாரமுமில்லை. அவரை சுட்டுக்கொன்ற பிரேயர், ராபின்சன் என்ற போலீஸ் அதிகாரிகள் அவரிடம் ஆயுதம் இருக்குமென்று எண்ணி சுட்டதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

3. மூன்று வெள்ளை போலீஸ் அதிகாரிகளும் அவரிடம் ஆயுதம் இருந்ததை தங்கள் கண்களால் பார்க்கவில்லையென்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

4. ஜெகதீச சந்திரர் இறந்து கொஞ்சநேரம் சென்ற பின்பு போலீசார் ஒரு துப்பாக்கியைக்கொண்டு வந்து ஷை அதிகாரிகளிடம் காண்பித்து, அது ஜெகதீச சந்திரருடையது என்று சொன்னார்களாம்.

இவற்றிலிருந்து ஆயுதமில்லாத ஒரு நிரபராதியின் அருமையான உயிர் போலீசாரின் அவசர புத்தியால் பறிக்கப்பட்டது வெளியாகிறது. இதற்கு கேள்வி முறை யில்லையா என்று லார்ட் வில்லிங்டனை கேட்கிறோம்.

## ஹாட்சன் தலைகிறுக்கு

பம்பாய் ஆக்டிங் கவர்னராய் வேலை பார்க்கும் சர். எர்னஸ்ட் ஹாட்சன் இயற்கையிலேயே அகம்பாவம் பிடித்தவர். சென்ற வருஷ சட்டமறுப்பு சமயத்தில் பம்பாய் சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாயிருந்தார். அச்சமயம் அவர் செய்த அக்கிரமங்கள் கொஞ்சமல்ல. பார்டோலி, தர்சனா முதலிய இடங்களில் நடந்த தடியடி தர்பார்களுக்கும், பொதுவாக பம்பாயெங்கும் இருந்த அடக்கு முறைகளுக்கும் நமது ஹாட்சனே மூல புருஷர். சென்ற வருஷம் திலகர் தினத்தன்று முதல் நாள் மாலை புறப்பட்ட ஊர்வலத்தை மறுநாள் காலை வரையில் நடுத்தெருவில் நிறுத்தி வைத்து, சர்தார் பட்டேல் பண்டித மாளவியா முதலிய தலைவர்களையும் பனியில் நனையும்படி விட்டதை நண்பர்கள் அறிவார்கள். மறுநாள் காலை இதே சர். ஹாட்சன் அங்கு வந்தார். ரயில்வே ஸ்டேஷன் மெத்தையில் ஏறி நின்றுகொண்டு கூட்டத்தை தடியால் அடித்து கலைக்கும்படி உத்தரவிட்டார். அவ்வளவு பெரியபுண்ணியவான் பம்பாய் கவர்னர் சர் பிரடரிக் சைக்ஸ் அடிக்கடி 'பிரேக்' போடாவிட்டால், ஹாட்சன் வால் இன்னம் அதிக தூரம் நீண்டிருக்குமென்று சொன்னார்கள். அவர் முட்டாள்தனமான செய்கையை சர்க்கார் அறிந்திருந்தும், ஒரு இந்தியருக்கு ஆக்டிங் கவர்னர் வேலை கொடுக்கக்கூடாது என்பதற்காக ரஜாவில்போன ஹாட்சனை பிடித்து ஆக்டிங் கவர்னராகப் போட்டார்கள். சும்மாயிருக்கும்போது குரங்கு சேஷ்டை செய்யும். அதோடு கள்ளும் குடித்து, இஞ்சியையும் தின்றால் கேட்கவா வேண்டும்? கவர்னர் பதவியாகிய கள்ளும், சமீபத்தில் அவரை ஒரு மாணவன் சுட முயன்ற இஞ்சியும் ஹாட்சனுக்கு கிடைக்கவே, தலைகால் தெரியாமல் ஆடுகிறார். மகாத்மா காந்தி சீமைக்கு போவதை தடுக்க அவரே முட்டுக்கட்டை போடுகிறார் என்று தெரிகிறது. அவருக்கு கவர்னர் வேலை கொடுத்ததே பெரிய முட்டாள் தனம். அதை இந்திய சர்க்காரும் லண்டன் சர்க்காரும் இப்பொழுது உணர்ந்திருப்பார்கள். போனது போகட்டும். ஹாட்சன் தலைகிறுக்கை அப்படியே விட்டுக்கொண்டிருக்கப் போகிறார்களா? அவருக்காக லண்டன்மகாநாட்டை நாசமாக்கி இந்தியாவில் அமைதியின்மையை உண்டாக்கப் போகிறார்களா? லார்ட் வில்லிங்டன் தைரியத்தை இதில் நாம் பார்க்கப்போகிறோம்.

Edited, Printed & Published by T. S. Chockalingam at the Lakshmi Press 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)

# காந்தி

வருட சந்தா ரூ. 3.
திங்கள், வியாழன் வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 | சென்னை, 1931 ஆகஸ்டு 20௳, பிரஜோற்பத்தி ஆவணி மீ 4௳ வியாழக்கிழமை | இதழ் 18

## குந்தியையோ குரங்கே?

லார்ட் இர்வினுக்கும், மகாத்மா காந்திக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை சிவில் சர்விஸ் கோஷ்டிக்கு பிடிக்கவில்லை. உடன்படிக்கை ஏற்பட்டது முதல் சில்லரை விஷமங்கள் செய்துகொண்டே வந்தார்கள். சிவில் சர்விஸ் கோஷ்டி என்ற கலெக்டர் கூட்டத்திற்கு எப்பொழுதுமே அகம்பாவம் அதிகம். கோபுரத்திலுள்ள பொம்மைகள் தாங்கள்தான் கோபுரத்தை தாங்குவதாய் நினைக்குமாம். அதைப்போல் இந்தியாவையே தாங்கள் தூக்கிச் சுமப்பதாகவும் தங்களைத் தவிர வேறு யாராலும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாதென்றும் நினைக்கிறார்கள். ஜில்லாக்களில் இந்த சிவில் கோஷ்டி தனிக்காட்டு ராஜாமாதிரி, சர்வ அதிகாரங்களோடு தர்பார் நடத்தி வருகிறார்கள். இந்த அதிகாரங்கள் பறிபோவதென்றால் அவர்களால் சகிக்க முடியுமா? இந்தக்கோஷ்டியிலிருந்து படிப்படியாக கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினராகவும், கவர்னராகவும் ஆவதுண்டு. அந்த ஆசாமிகள் வழிகாட்டிய அகம்பாவம் கொண்டவர்களாய் இருப்பார்கள் என்பதில் சந்தேகமென்ன? இந்தியாவில் தற்சமயம் தொல்லை விளைவிக்கக்கூடிய மாகாணங்களை பார்ப்போம். பம்பாய், பஞ்சாலம், ஐக்கியமாகாணம், பீகார், பர்மா இத்தனை மாகாணங்களிலும், உடன்படிக்கைக்கு விரோதமாக நடைபெறும் அக்கிரமங்கள் கொஞ்சமல்ல. இத்தனை மாகாணங்களிலும் கவர்னர்களாயிருப்பவர்கள், சிவில் சர்விஸ் கோஷ்டியிலிருந்து, அதாவது கலெக்டர் பதவியிலிருந்து கவர்னர்களாய் வந்தவர்கள்

தீப்பட்ட வீட்டுக்கு காற்றும் கூடியதாம். அகம்பாவம் பிடித்த சிவில் சர்விஸ் கோஷ்டியார் டெல்லி உடன்படிக்கையை தவிடுபொடியாக்க முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு தாளம் போட மேலேயுள்ள கவர்னர்களும் அதே கோஷ்டியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இது மட்டுமா? இந்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாயிருக்கும் சர். ஜேம்ஸ் கிரீரார்—பட்டேலிடம் படாதபாடு பட்ட வீரர்—யார்? அவரும் சிவில் சர்விஸ் கோஷ்டியைச் சேர்ந்தவரே! இதைவிட அமைப்பான திருக்கூட்டத்தை நாம் பார்க்க முடியுமா? இந்தக்கூட்டம் முழுவதும் சேர்ந்துகொண்டு வைசிராயை எதிர்க்காமல் எதிர்க்கிறது. பாவம், அவர் என்ன செய்வார்? இவர்களை அடக்க சக்தியில்லை. கீழே விழுந்து விட்டார்.

மகாத்மா காந்தி லண்டனுக்கு போகவில்லை. இதனால் இந்த சிவில் சர்விஸ் கோஷ்டி வெற்றி பெற்று விட்டதென்று சிலர் சொல்லுகிறார்கள்; அப்பேச்சு முட்டாள் தனமான பேச்சு. மகாத்மா லண்டனுக்கு போக வேண்டுமென்று யாரிடமும் விண்ணப்பஞ் செய்யவில்லை. அவர் லண்டனுக்கு வர வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார்தான் மகாத்மாவிடம் விண்ணப்பஞ் செய்தது. அதற்காக நிபந்தனையின்றி சகல காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்தது.

(கடைசி பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# லண்டன் செல்லாததேன்?

(மகாத்மா காந்தி)

15-ம் தேதி நான் லண்டனுக்குப் புறப்படுவேன் என்று அனைவரும் நம்பினர். இந்தியாவிலும் இங்கிலாந்திலும், உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள பலர் நான் லண்டனுக்குப் போக வேண்டுமென்பதில் ஆவலுடையவர்களாக விருந்தனர். கடவுளின் திருவுளச் சம்மதமோ வேறு. வைஸிராயின் பதிலில் நான் இறைவனின் திருவுள்ளம் என்னவென்பதைக் கண்டேன். லண்டன் மகாநாட்டில் கலந்து கொள்ள என்னால் இயன்றவரை திரிகரண சுத்தியாகப் பாடுபட்டேனென்பதை நான் நிச்சயமாகக் கூறுவேன். அப்படி முயன்றும் நான் லண்டன் போக முடியாமற் போனதால், அப்படி நிகழ்ந்தது இந்தியாவின் நன்மைக்கு உகந்ததென்பதே எனது நம்பிகை.

பட்டாபிஷேகம் நடை பெறப் போகும் காலத்தில் காட்டுக்குப் போக வேண்டுமென்பதை ஸ்ரீ. ராமர்கூட அறியவில்லை. அப்படியிருக்க, குறிப்பிட்ட காலத்தில் இன்னது நிகழுமென்று அடியேனாவோ, அல்லது காங்கிரஸாவோ எப்படி சொல்ல முடியும்? கடவுளின் திருவுள்ள சம்மதப்படியே எல்லாம் நிகழ்ந்து வருகிறது. அதனால் நமக்கு நன்மையே ஏற்படும்.

பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் வேறு, சிவில் சர்வீஸ் உத்தியோகஸ்தர்கள் வேறு என்று நான் வேற்றுமை பாராட்டுவதில்லை. இங்கே சிறிய விஷயங்களில் நியாயம் பிறக்க அரும்பாடு பட வேண்டியிருக்கிறது. அப்படி பாடுபட்ட போதிலும் சில சமயங்களில் நியாயம் பிறப்பதில்லை. நிலைமை இவ்வாறிருக்கும்போது "பெரிய" விஷயங்களில இங்கிலாந்தில் நியாயம் பிறப்பது இயலாத காரியம். இங்கு ஏற்பட்ட அனுபவமே இங்கிலாந்தில் என்ன நிகழப் போகிறதென்பதற்கு எதிரொலியாகும். இந்த கருத்து உண்மையானால், காங்கிரஸ் பிரதிநிதியாக நான் லண்டனுக்குச் செல்வது நேர்மையாகாது. ஆனால் ஜனங்களின் பொறுப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளது; இதுபோது ஜனங்கள் அதிக வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது.

# காலச் சக்கரம்.

## சீமைத் துணிக்கு பலி

சீமைத்துணி மறியல் செய்து வந்த திருநெல்வேலி தொண்டர் சுப்பையா பிள்ளையை யாரோ படுகொலை செய்து விட்டனர் சென்ற வாரம் புதன்கிழமை காலை கத்தர் துணி எடுத்துச் சென்ற தொண்டரை அப்புறம் உயிருடன் யாரும் பார்க்கவில்லை. பாளையங்கோட்டைக்குப் பக்கத்தில் அவரை துண்டு துண்டாக வெட்டி ஒரு கத்தர் துணியில் மூட்டை கட்டி கொலை பாதகர் புதைத்து விட்டனர். இச் செய்தியைக் கேட்கும் போது நமது மனம் பதை பதைக்கிறது. தாய் நாட்டிற்காக பாடுபட்ட ஒரு தொண்டருக்கு செய்ய வேண்டிய கடமையா இது? அட கொலைபாதகர்களே, நீங்கள் செத்து சுடுகாடு போகும்போது சீமைத்துணி பணம் உங்களோடு வரப்போகிறதா? லாபத்திற்கு ஆசைப் பட்டு இந்தக் கொலைபாதகம் செய்யலாமா? அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும். ஒரு வேளை சர்க்கார் தண்டனையிலிருந்து நீங்கள் தப்ப முடிந்தாலும், கடவுள் தண்டனையிலிருந்து தப்பமாட்டீர்கள் என்பதை எச்சரிக்கிறோம். தொண்டர் சுப்பையா பிள்ளையை கொன்று விட்டால், மறியல் நின்று விடாது. ஆயிரம் சுப்பையா பிள்ளைகளை அவர் தியாகம் சிருஷ்டித்து விடும். சுப்பையா பிள்ளையின் வீரமும், தியாகமும், திருநெல்வேலி ஜில்லா சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும்.

## போர் முழக்கம்

மகாத்மா காந்தி சீமைக்கு போவதை நிறுத்தி விட்டதாக செய்தி கிடைத்தவுடன் மாகாண காங்கிரஸ் இயந்திரங்கள் வேகமாய் சுழல ஆரம்பிக்கின்றன. எதற்கும் தயாராயிருக்கும்படி காங்கிரஸ் கிளைச் சபைகளுக்கு எச்சரிக்கைகள் பறக்கின்றன. அலகாபாத்தில் நடந்த கூட்டமொன்றில், "யுத்தத்திற்கு தயார்" என்ற தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. எல்லாரும் தயாராயிருக்கும்படி சுபாஷ் பாபு கல்கத்தாவில் முழக்கஞ் செய்கிறார். கமிட்டிகள் உடனே உஷாராகும்படி மத்திய மாகாண காங்கிரஸ் தலைவர் தந்தி கொடுத்திருக்கிறார். ஆகவே எதற்கும் காங்கிரஸ் தயாராகவே இருக்கிறது.

Koviloor Digital Library


## அரேபியாவில் காந்தீயம்

(புரபசர் ஹேட்பர்ட் மில்லர்)

அரேபியாவில் வெள்ளையருக்கு விரோதமான உணர்ச்சி அதிகரித்து வருகிறது. வெள்ளை வர்த்தகர் கொள்ளை யடிப்பதை அவர்களால் சகிக்க முடியவில்லை. ஆகவே நஜத், ஹெட்ஜாஸ், ஈராக, டிரான்ஸ்ஜோர்டேனியா, சிரியா, பாலஸ்தீனம் முதலிய அரபு நாடுகள் ஒன்று சேர்ந்து வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்க்குமென்று தோன்றுகிறது. இந்த நாடுகள் ஒன்று சேர முயற்சிகள் நடந்து வருகின்றன. மகாத்மா காந்தி உபதேசங்கள் இந்நாடுகளில் வெகுதூரம் பரவியிருக்கின்றன இந்தியாவில் நடக்கும் புரட்சியை அவை ஆவலோடு கவனித்து வருகின்றன. அஹிம்சையை அராபியர் எவ்வளவு தூரம் கைக்கொள்ள முடியுமென்பது சந்தேகப் படக்கூடிய விஷயந்தான். இருந்தாலும் ஒத்துழையாமையில் சில அம்சங்களை கையாண்டு பார்ப்பார்கள் என்று தெரிகிறது. சிரியா பிரஞ்சு ஆட்சியில் இருக்கும் நாடு. அங்கு ஏற்கனவே பிரான்சு சரக்கு பகிஷ்காரம் பேச்சு ஆரம்பமாய்விட்டது. சிரியாவில் செய்யப்பட்ட துணிகளை கட்டிக்கொள்ளுவதில் சிரியர் பெருமைப்படும் காலம் வந்திருக்கிறது. சர்வ தேச சங்கத்தின் சார்பாக பிரான்சுக்காரர் சிரியாவை ஆளுவதால், பிரான்சு சரக்குகளை பாதுகாக்கும் பொருட்டு அங்கு இறக்குமதி தீர்வை விதிப்பதும் சாத்தியமில்லை. பகிஷ்காரம் ஆரம்பமானல், பிரான்சுக்காரர் வாயில் மண்விழும். முன்னல் பலாத்கார கலகம் கிளம்பியபோது சொல்ல முடியாத கொடுமைக்குட்பட்டு தோல்வியுற்ற படியால், காந்திமுறையை பின்பற்ற சிரியர் ஆரம்பித்திருக்கிறார்கள். லாரன்ஸ் வார்த்தையை நம்பி துருக்கியரிடம் ஹெட்ஜாஸ் அராபியர் சண்டை போட்டும், முடிவில் பிரிட்டிஷர் ஏமாற்றிவிட்டதை அவர்களால் சகிக்க முடியவில்லை. இந்தக் காரணத்தால் இந்திய புரட்சியை அராபியர் கவலையோடு கவனித்து வருகிறார்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் மகாத்மா காந்தியுடன் சேர்ந்து போர்புரியாததைக் கண்டு அராபியர் அனைவரும் பலமாய் கண்டிக்கின்றனர்.

## ஐய்யங்கார் அலங்கோலம்.

"ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ எ. ரங்கசாமி ஐயங்கார் சீமைக்கு கப்பலேறி விட்டார். தாம் இதுகாலம் வரை காங்கிரஸ் காரராகவே இருந்ததாகவும், இனியும் அப்படியே இருக்கப்போவதாகவும் சென்ற வாரம் பேசினர். ஆனல் சனிக்கிழமையோ அந்தப்பேச்சை காற்றில் விட்டு, காரியக்கமிட்டி தீர்மானத்தை மீறி சீமைக்கு புறப்பட்டுவிட்டார் இன்னம் அவர் காங்கிரஸ் காரர்தானு? பம்பாயில் மகாத்மா காந்தியை இரண்டு தடவை பேட்டி கண்டார். முதல் தடவையில் அவரை சீமைக்கு போகவேண்டாமென்று சொல்லப் பட்டதாம். மறு தடவை அவர் போய் மகாத்மாவைக் கண்டும் அவர் சம்மதம் கிடைக்கவில்லை. பம்பாயில் டாக்டர் சையது முகமதையும், ஸ்ரீ பிரெல்வியையும் ஐயங்கார் பேட்டிகண்டு காங்கிரஸ் விஷயங்களைப் பற்றி பேசினராம். இதற்கு என்ன அர்த்தம்! இந்த பெரிய "காங்கிரஸ் தலைவர்" புத்திமதியை அந்த தேசபக்தர்கள் ஒருக்காலும் விரும்பியிருக்கமாட்டார்கள். காங்கிரஸ் விருப்பத்தை புறக்கணித்து ஐயங்கார் போவதை தடுக்கவே அவர்கள் முயற்சித் திருப்பார்கள் என்று நினைக்கிறோம்.

ஒரு விதத்தில் பார்த்தால், ஐயங்கார் சீமைக்கு புறப்படுவது தடுக்க முடியாததுதும். அவர் முன்பு சிம்லாவில் கொஞ்சக்காலம் தங்கினர் தம்மை லண்டன் மகாநாட்டிற்கு தெரிந்தெடுக்கும்படி வெகு முயற்சி செய்தார். இவர் முயற்சி மீது அங்கத்தினரானர் இவர் கேட்காமல் வந்த பதவியல்ல. அப்படியிருக்கும்போது எப்படி போகாமல் இருக்க முடியும்?

மற்ருெரு விஷயம். சர்க்காரும், வெள்ளையரும் "இந்து" பத்திரிகைக்கு ஏராளமாய் கொடுக்கும் ஆதரவையும் அவர் யோசித்துப்பார்க்க வேண்டி யிருக்கிறது!

காந்திஜீ சீமைக்கு கட்டாயம் போவார் என்று நினைத்து அவர் காரியம் செய்தது பெரிய தவருய் முடிந்தது. எப்படியாயினும் காங்கிரசை அவர் உண்மையாக பின்பற்றுகிறவராயிருந்தால், "மூல்டான்" கப்பலில் ஏறும் முன்பு லண்டன் மகாநாட்டு அங்கத்தினர் பதவியை அவர் ராஜிநாமாச்செய்திருக்கவேண்டும்.

—சண்டே டைம்ஸ்

# பிரித்தாளும் சூழ்ச்சி :: சில ஆதாரங்கள்.

காபூல், காபிலி யுத்தங்களில் தோல்வியேற்பட்டவுடன் அக்காலத்து கவர்னர் ஜெனரலாக விருந்த லார்டு எல்லன்பரோ, வெல்லிங்டன் பிரபுவுக்கு 1842 அக்டோபர் 4உ பின்வருமாறு எழுதினார்:— "ஆப்கானிஸ்தானத்தில் நமக்குத் தோல்வியேற்பட வேண்டுமென முஸ்லிம்கள் விரும்புவதாகப் பிரஸ்தாபம் உண்டானபோது நான் நம்பவே இல்லை. ஆனால் இப்பொழுது கிடைத்திருக்கும் சில தகவல்களால் அது உண்மைதானென்று எனக்குத் தோன்றுகிறது. நம்மையே நம்பி வாழும் சில முஸ்லிம் தலைவர்களும் கூட அவ்வாறு விரும்புவதாக அறிகிறேன். ஆனால் ஹிந்துக்களோ நம்மிடம் பக்ஷமுள்ளவர்களா யிருக்கிறார்கள். பத்தில் ஒரு பகுதியார் நமக்கு விரோதிகளாய் விட்டதை அறிந்த பிறகும், நம்மிடம் நம்பிக்கையுடைய பத்தில் ஒன்பது பகுதியாரை நம் வசப்படுத்த முயலாமலிருப்பது மூடத்தனமாகும்."

மீண்டும் 1843 ஜனவரி 18-ல் லார்டு எல்லன்பரோ, வெல்லிங்டனுக்குப் பின்வருமாறு எழுதினார்:

"முஸ்லிம்கள் நமக்கு ஜென்ம விரோதிகளாய் விட்டார்கள். ஆகவே ஹிந்துக்களின் நட்பைப்பெற நாம் சதா முயற்சி செய்யவேண்டும்."

"பிரித்தாளும் தந்திரத்தையே நாம் இந்தியாவில் கைக்கொண்டொழுக வேண்டும்" என்று 1821-ல் ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் "ஏஷியாட்டிக ஜர்னல்" என்ற சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

சிப்பாய் கலக காலத்தில் மொராதபாதில் சேனாதிபதியாயிருந்த லெப்டினண்டு கர்னல் ஜான்கோக் எழுதியதாவது:— "இந்தியாவின் பல திறப்பட்ட மதத்தினருக்கும், ஜாதியாருக்கும் தற்போது இருந்துவரும் பிரிவினை நாளுக்கு நாள் விருத்தி யடையும்படி செய்வதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். அவர்கள் ஒற்றுமைப்பட விடலாகாது. பிரித்தாளும் சூழ்ச்சியைத்தான் இந்திய சர்க்கார் கைக்கொண்டொழுக வேண்டும்."

1859 மே 14உ எழுதி யனுப்பிய ஒரு யாதாஸ்தில், "உரோமர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பின்பற்றி வந்ததனால் அவர்களுக்கு ஜெயமுண்டாயிற்று; நாமும் அவ்வாறே செய்யவேண்டும்" என்று லார்டு எல்லன்பரோவும் வற்புறுத்தி யிருக்கிறார்.

"இந்தியாவில் பரஸ்பர விரோதமுள்ள பல வகுப்பார் இருப்பது நமது அரசியல் வெற்றிக்குச் சாதனமாகும்" என்று சர் ஜான் ஸ்டாரச்சியும் பிரஸ்தாபித்திருக்கிறார்.

ஸ்ரீ ராம்ஸே மாக்டொனல்டு கூறியிருப்பதைக் கவனியுங்கள்:—"பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பல சூழ்ச்சிகள் செய்து வருவதாகத் தோன்றுகிறது. முஸ்லிம் தலைவர்களிடம் துர்ப்போதனைகள் சொல்லித் தூண்டிவிடுவதாகவும் தெரிகிறது. முஸ்லிம்களுக்கு விசேஷ அநுகூலங்கள் செய்து ஹிந்து-முஸ்லிம் பிரிவினையை அதிகப்படுத்துவதே இந்த சூழ்ச்சிக்காரர்களின் நோக்கம்"

பாஞ்சால நிருவாக சபை மெம்பராகவிருந்தவர் ஜான் மேய்னார்டு ஒரு லண்டன் பத்திரிகையில் எழுதியிருப்பதாவது;—'ஹிந்து-முஸ்லிம் சச்சரவுகள் இருப்பதினாலேயே பிரிட்டிஷ் அரசாங்கம் நடைபெற்று வருகிறது. பிரிட்டிஷ் அரசாட்சி ஆரம்பமானது முதல் ஹிந்து-முஸ்லிம் சச்சரவுகள் தலையெடுத்தன. பண்டைக்காலங்களில் இரு சமூகத்தாரும் எத்தகைய கலவரமுமின்றி தத்தம் மதாசாரங்களைப் பின்பற்றி நேசபாவனையில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்."

---


## தேசீய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| பண்டித ஜவார்லால் (மூன்றும் பதிப்பு) | 0 | 1 | 0 |
| சோவியத் ருஷியா | 0 | 1 | 0 |
| கான்பூர் கலகம் | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் சரித்திரம் | 0 | 1 | 0 |
| பாரத ஜோதி | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் கடன் அறிக்கை | 0 | 1 | 0 |

மொத்தமாக வேண்டியவர்கள் 8 அணா ஸ்டாம்புகள் அனுப்பவும். தனிப்புத்தகம் வேண்டியவர்கள் 1½ அணா ஸ்டாம்புகள் அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு,
சென்னை.

Koviloor Digital Library



## தொழில் என்றால் இழிவில்லை!

(மைசூர் யுவராஜா)

உத்தியோகந்தான் உயர்வானதென்றும், சரீர உழைப்பால் வேலை செய்வது இழிவென்றும் நினைக்கிறீர்கள். தொழில் என்றால் இழிவில்லை. தொழிலாளர் ஒடுக்கப்பட்டவர்கள் என்று நீங்கள் நினைப்பதாயிருந்தால், அதுவும் தவறு. பிரிட்டன் சரித்திரத்தைப் பாருங்கள். இங்கிலாந்து 50 வருஷங்களுக்கு முன்னால் நான்கு ஜாதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. ஏராளமாய் நிலங்கள் வைத்துள்ள மிராசுதார்கள். பெரிய உத்தியோகங்கள், வர்த்தகம் செய்யும் பணக்காரர். சாதாரண உத்தியோகஸ்தர்கள் தொழிலாளிகள். மிராசுதார்களுக்கு ஏராளமாய் வரி விதித்தபடியால் பலர் நிலங்களை விற்று விட்டனர் பலர் தங்கள் சொத்துக்களை கம்பெனிகளாக மாற்றி விட்டனர். இரண்டாவது வகுப்பாகிய பணக்காரருக்கு, அக்காலத்தில் போதுமானதாயிருந்த வரும்படி தற்காலம் போதவில்லை. அவர்கள் உயர்ந்த வாழ்விற்கு பணம் போதாமல் திண்டாடுகிறார்கள். ஆனால் மூன்றாவது வகுப்பாகிய சாதாரண குமாஸ்தாக்கள் நிலைமையும் நான்காவது வகுப்பாகிய தொழிலாளர் நிலைமையும் எவ்வளவோ உயர்ந்திருக்கின்றன. அவர்கள் வாழ்க்கை நிலைமை அதிகரித்து சந்தோஷமாய் வாழ்கிறார்கள் சரீர உழைப்பு செய்கிறவர்கள் இங்கிலாந்தில் இன்று சந்தோஷமாயிருக்கிறார்கள்? அது மட்டுமா? ஒடுக்கப்பட்டவர்கள் என்று 50 வருஷங்களுக்கு முன்னால் கருதப் பட்டவர்களும், சரீர உழைப்பால் ஜீவிப்பவர்களுமாகிய அந்த தொழிலாளர் இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முழுவதையும ஆளுகிறார்கள். இம்மாதிரி "ஒடுக்கப் பட்டவர்கள்" அரசாளுவதை உலகம் இதற்கு முன்பு கண்டதில்லை.

### ஒழுக்கம் தேவை.

வேலை செய்வது இழிவல்ல. அது கௌரவமே. ஆனால் வேண்டியது ஒழுக்கம் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கல்கத்தாவில் ஒரு தச்சன் வேண்டியிருந்தால் ஒரு சீனாக்காரனை தேடுகிறார்கள். மைசூரில் ஒரு பெரிய வேலை நடக்க வேண்டியிருந்தால், மலையாள மாப்பிள்ளைகளையோ, எல்லைப்புற பட்டாணியர்களையோ கொண்டு வருகிறார்கள். ஏன்? அவர்கள் நாணயமாய் வேலை செய்வார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது. இந்த குறைக்கு இடங் கொடுக்கக் கூடாது. மேல் பார்வை பார்த்தாலும் பார்க்கா விட்டாலும் ஒவ்வொரு தொழிலாளியும் தன்வேலையை யோக்கியமாய் செய்யும் சுபாவம் வரவேண்டும். அன்றே தொழிலாளர் கௌரவம் உயரும். அந்த நாளை ஆவலோடு நான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

---

## கள்ளுப் பாட்டு.

(ஸ்ரீ வி. எஸ். நடேசன்)

---

1. காசு பணத்தை இழந்து
கவலைப் படுவதும்—கள்ளாலே
ஆசையுள்ள மக்கள் அன்புள்ள
பெண்டிர் அலைவதுங்—கள்ளாலே
மாசற்ற மேனிக்கு மாறாத
நோய் கொண்டு மடிவதுங்—கள்ளாலே
மானாபிமானத்தை தானிழந்து
புத்தி மாறுதல்—கள்ளாலே

2. நல்ல மனிதனை பொல்லாதவ
னென்று நவில்வதும்—கள்ளாலே
நாட்டிலுள்ள மக்கள் நாளும்
உணவின்றி நலிவதும்—கள்ளாலே
கல்லாத மக்கள் நிலைமறந்து
கவலைப்படுவதும்—கள்ளாலே
கண்டோர் நகைத்துமே காரி
யுமிழ்ந்திட காணுமே—கள்ளாலே.

3. பாட்டன் தேடிய பண மெல்லாம்
தோற்பதும பாழான—கள்ளாலே
பரதேசி கோலமாய் பாரில்
பிச்சை எடுத் தேங்குதல்—கள்ளாலே
தோட்டம், துறவுகள் உள்ள
பொருள்யாவும் தொலைப்பதும்-கள்ளாலே
துன்பமதிகரித்தே நாளும்
வாடுதல் துர்குண—கள்ளாலே

4. ஆடுகள், மாடுகள், வீடுகள
யாவும் அழிவது—கள்ளாலே
அன்னிய நாட்டாரின் ஆக்ஷிக்
கடங்கிட ஆனதும்—கள்ளாலே
பாடு பட்டு தினம் சம்பாதிக்கும்
பணம் பாழாகும்—கள்ளாலே
பஞ்சமா பாதகம் அஞ்சும்
விளைவதும் பாழான—கள்ளாலே

5. சண்டைக் கலகங்கள் சச்சரவு
நேர்ந்து சாவதும்—கள்ளாலே
சர்க்கார் பிடித்து ஜெயிலி
லடைப்பதும் சண்டாளக்—கள்ளாலே
கண்டபடியாக கோர்ட்டில்
பணத்தை கழிப்பதும்—கள்ளாலே
கடைசியாய் தூக்கினில் மாட்டப் பட்டு
உயிர் அழிவதும்—கள்ளாலே

Koviloor Digital Library



## பத்திரிகை பெயர்கள்.

சென்ற 15வ சனிக்கிழமை யன்று சென்னை "இந்தியா" ஆபீசில் தேசியக் கொடி ஏற்று விழா நடைபெற்றது. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியார் கொடியேற்றும் போது பேசியதாவது:—

நமது நாட்டில் அழகான பெயர்களை யெல்லாம் பத்திரிகைகள் பிடுங்கிக் கொள்ளுகின்றன. சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று அல்லும்பகலும் சொல்லுகிறோம். அதற்காக எதையும் தியாகஞ் செய்கிறோம். சுயராஜ்யம் ஒன்றே நமது லட்சியமாயிருக்கிறது. அந்த சுராஜ்யம் என்ற பெயர் எவ்வளவு சிறப்புள்ளதாயிருக்கிறது! அதை "சுயராஜ்யா" என்ற பத்திரிகை பிடுங்கிக் கொண்டது. இந்தியா நமது நாடு. புராதன நாடு. நாம் வாழும் நாடு. அதை விடுதலையடையவே நாம் பாடுபடுகிறோம். இந்தியா என்ற பெயர் உலகத்தையே இன்று மயக்குகிறது. அதை "இந்தியா" பத்திரிகை பறித்துக் கொண்டது.

ஒருவர்:—காந்தி!

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார்:—ஆம், காந்தி. மகாத்மா காந்தி இன்று உலகத்திலேயே பெரியாராயிருக்கிறார். அவர் பெயர் பரவாத இடமேயில்லை. எவ்வளவு உயரிய பெயர்! "காந்தி" பத்திரிகை அந்தப் பெயரை பிடுங்கிக் கொண்டது. "காந்தி" சொல்லுகிறது என்றால், சென்னையிலுள்ள "காந்தி" பத்திரிகை சொல்லுகிறதா அல்லது மகாத்மா காந்தி சொல்லுகிறாரா என்று சந்தேகப்படும்படி ஏற்பட்டு விட்டது. (கரகோஷம்)

### தமிழா, கேள்!

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !

—பாரதி

## சனி தொலைந்தது!

வைஸிராயிடமிருந்து சென்ற 13வ யன்று முடிவாக பதில் கிடைத்த பின்புதான், லண்டன் மகாநாட்டுக்கு மகாத்மா போகவேண்டியதில்லை என்று காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்தது. அன்றுதான் காரியக்கமிட்டி அங்கத்தினர்களுக்கு "சனி தொலைந்தது" என்ற சந்தோஷம் ஏற்பட்டதாம். டெல்லி உடன்படிக்கை ஏற்பட்டது முதல், அதை நிறைவேற்றிவைக்க வேண்டுமே என்ற ஆவலோடும், காங்கிரஸ்காரர் யாரும் மீறிவிடக் கூடாதே என்ற கவலையோடும் தலைவர்கள் வேலைசெய்து வந்தார்கள். சர்க்காராக அந்த உடன்படிக்கையை மீறியதாக ருசுவான பின்பு, அவர்களுடைய பொறுப்பும் கவலையும் தொலைந்தன. காரியக்கமிட்டி அங்கத்தினர் பலர் அநேகமாக இரவு 12 மணி வரையில் தூங்கப்போவதில்லை. ஆனால் மிகமுக்கியமான தீர்மானம் செய்த வியாழன் இரவோ, கவலை நீங்கியவர்களாய், இரவு 10 மணிக்கு முன்னதாகவே தூங்கப்போய் விட்டார்களாம். மகாத்மா காந்திகூட அன்று சீக்கிரமாக படுக்கைக்குப் போய்விட்டார்.

டெல்லி உடன் படிக்கைக்கு ஜெயகாரும், சாப்ரூவும் மூலமாயிருந்தார்கள். ஆகவே பார்டோலி தகராறு நெருக்கடியானவுடன் மகாத்மா இருக்கிற நிலைமையை ஜெயகாருக்கு தெரிவித்தார். ஜெயகார் வைசிராய்க்கு தந்தி அடித்தார். ஹாட்சன் தலைகிறுக்கு வைசிராய் தலைகிறங்கும்படி செய்து விட்டது. ஹாட்சனும், மால்கம் ஹெயிலியும் சொல்லியது சரியென்று வைசிராய் சாதித்தார். ஜெயகாரும், சப்ரூவும் வியாழன் இரவு மகாத்மாவை போய் எழுப்பி ஆலோசித்தார்கள். தகராறை விசாரிக்க காங்கிரஸ் பிரதிநிதியும், சர்க்கார் பிரதிநிதியும் அடங்கிய கமிட்டி வேண்டுமென்பது மகாத்மா நிபந்தனை. ஆனால் ஒரு பொறுப்பான சர்க்கார் அதிகாரியை நியமித்தால் கூட போதுமென்றும், கமிட்டி யோசனையை ஜெயகார், சாப்ருவிற்காக விட்டு விடுவதாகவும் மகாத்மா சொன்னார். உடனே ஜெயகார், சாப்ருவின் தந்தி வைசிராய்க்கு பறந்தது. அதை வைசிராய் ஒப்புக் கொண்டிருந்தால், மகாத்மா "மூல்டான்" கப்பலில் புறப்பட்டிருப்பார். தமக்கு மேலதிகாரிகளிடம் கலந்து பதில் சொல்லுவதாக தெரிவித்தபடியால், "மூல்டான்" கப்பல் மகாத்மா இல்லாமல் புறப்பட்டது.

Koviloor Digital Library



# இந்தியர் உயிரின் விலை ::

டாக்டர்
ஜே. டி. கார்னிலியஸ்.

பொது சுகாதார செய்கைகளின் பொருளாதார மதிப்பை ஆராய்வதே இந்த வியாசத்தின் நோக்கம். இதில் சில மறுக்க முடியாத விஷயங்கள் இருக்கின்றன. அதன் உண்மையை எல்லாரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

மானிடர் ஆத்மா பெறுதற்கரியது என்பது போக அதற்கு பணமதிப்பும் இருக்கிறது.

ஒரு நாட்டின் செல்வவளத்துக்கு அதன் ஜனசங்கை தான் பெரும் சொத்தாகும்.

ஒரு நாட்டின் வருவாய் போதுமானபடி பெருக அதன் மக்கள் சுகமாக வாழவேண்டியது இன்றியமையாததாகும்.

மானிட உயிர் பணமதிப்பை உடையது என்பதற்கு குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்த்து அவர்களுக்கு கல்வி போதிக்க பெருந்தொகைப் பணம் செலவிடப் படுவதே தகுந்த சான்றாகும். ஒரு இந்தியக் குழந்தையை வாலிபப்பருவம் வரை போஷிக்க அதாவது 18-வயது வரை போஷிக்க எவ்வளவு செலவாகும் என்பதை நிச்சயமாகக் கூற எனக்கு உண்மையான விபரங்கள் கிடைக்காவிட்டாலும், ஒரு குழந்தையை மேலே கூறிய பருவம் வரை போஷிக்க 150 ரூபாய்க்கு குறையாமல் பிடிக்கும் என்று கூறலாம். குழந்தைகளை போஷிக்க பணம் செலவாவதுடன், ஒரு மனிதன் எவ்வளவு பண மதிப்புடையவன் என்பதை கணக்கிடலாம்.

1930ம் வருஷத்திய சைமன் கமிஷன் அறிக்கை பிரிட்டிஷ் இந்தியாவில் சராசரி ஒரு இந்தியன் 116 ரூபாய் சம்பாதிக்கிறான் என்று கூறுகிறது. வேறொரு அறிக்கை ஒராண்டு முழுவதும் ஒரு இந்தியன் 74 ரூபாயே சம்பாதிக்கிறான் என்று கூறுகிறது. எனவே சராசரி ஒரு இந்தியன் 100 ரூபாய் சம்பாதிக்கிறான் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இந்தியாவில் வியாதிக்கு வாரத்தில் சராசரி இரண்டு ரூபாய் செலவாகிறது என்று 1925ல் வங்காள பொது சுகாதார இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ. பிரான்ஸ்பை வில்லியம் கணக்கிட்டிருக்கிறார் தடுக்கக்கூடிய வியாதிகளினால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஏற்படும் பண நஷ்டத்தை அவர் கீழ்காணும் புள்ளி விபரத்தைக்கொண்டு கணக்கிட்டிருக்கிறார்:-

(1) பிரிட்டிஷ் இந்தியா ஜனசங்கை 2500 லட்சம்.

(2) இந்தியாவில் ஒரு மானிடர் உயிரின் சராசரி விலை ரூ 200 (1925ல் இந்திய சர்க்கார் சுகாதார கமிஷனராக இருந்த கர்னல் ஹட்சின்சன் இவ்விதம் கணக்கிட்டிருக்கிறார்)

(3) இந்தியாவில் வருஷத்தில் ஆயிரம் பேருக்கு 24 முதல் 30 பேர் வீதம் மரணம் ஏற்படுகிறது.

(4 குறைந்த பட்சம் இப்படி மறிப்பவர்களில் பாதிப்பேர் தடுக்கக் கூடிய வியாதிகளினாலே இறக்கிறார்கள். தடுக்கக்கூடிய வியாதிகளினால் வருஷத்தில் 3750000 பேர் இறக்கிறார்கள்.

(5) ஒவ்வொரு மரணத்துக்கும் 180 வாரங்கள் வியாதி இருக்கிறது.

அவர் கணக்கிட்டிருக்கும் முறை வருமாறு;—

| | | ரூபாய் |
|---|---|---|
| (அ) உயிர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் 37,50 000 உயிர்கள் மரணத்தால் | ... | 75,00,00,00,0 |
| (ஆ) வியாதிக்கு வாரத்துக்கு இரண்டு ரூபாய் செலவு வீதம் 375 0000 மரணத்துக்கும்(180 வாரத்துக்கும்) | | 13,50,000,000 |
| மொத்தம் | .... | 2,1000,00,000 |

எனவே இதை 200 கோடி ரூபாய் என்று முழுத்தொகையாக எடுத்துக் கொள்ளலாம். இது நூற்றுக்கு 7½ வீதம 2667 கோடிகளுக்கு வட்டியாகும். எனவே தடுக்கக்கூடிய வியாதிகளினால் இந்தியாவுக்கு வருஷத்தில் 2667 கோடிகள் நஷ்டமாகிறது. உயிர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம கணக்குவைத்து பார்த்த தகைப்படி வருஷத்தில் ஒரு இந்தியர் 100 சம்பாதிக்கிறார் எனனும் வீதப்படி மேலே காட்டிய முறையில் கணக்குப்போட்டு பார்த்தால், தடுக்ககூடிய வியாதினால் உண்டாகும் மரணத்தினாலும் வியாதிச் செலவினாலும் கீழ் காணும் தொகை நஷ்டமாகிறது:—

Koviloor Digital Library



| | கோடி |
|---|---|
| (அ) ரூ 100 சம்பாதிக்கக் கூடிய 3750000 பேர் மரணத்தால் | 37½ |
| (ஆ) வியாதிக்காக வருஷத்துக்கு இரண்டு ரூபாய் செலவு வீதம் 180 வாரங்களுக்கு 3750000 பேர்களுக்கு | 135 |
| மொத்தம் | 172½ |

இது நூற்றுக்கு 3½ வீதம் 6000 கோடிகளுக்கு கிடைத்த வட்டித் தொகையாகும். எனவே இம்மாதிரி கணக்குப்படி இந்தியாவுக்கு வருஷத்தில 5000 கோடி நஷ்டமாகும்.

இப்படிபட்ட விஷயங்களால் ஆடவனாயினும் சரி பெண்ணாயினும் சரி அல்லது குழந்தையாயினும் சரி மானிட உயிருக்கு பணமதிப்பு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்களில் சிலர் நீண்டநாள் வியாதியினாலோ அல்லது வேறு கொடிய வியாதியினாலோ வேலை செய்ய சக்தியற்றவர்களாகி விட்டால் அல்லது வியாதியினால் இறந்துவிட்டால் அதனால் சமூகம் பணநஷ்டமடைகிறது; ஜனங்களை வியாதியிலிருந்து காப்பாற்றி கொஞ்சமும் அனாவசிய செலவில்லாது அவர்களை வாலிபர்களாக்கினால் சமூகம் லாபமடைகிறது. அவர்கள் சுபபாக்கியத்தினால் சமூகம் செழிப்படைகிறது என்பதினாலே சுகாதார வேலைக்கு பணம் செலவிட வேண்டியது நியாயமாகும். சுகாதார வேலை மாந்தர் உயிர்களை பாதுகாப்போனாகவும், பணத்தை பாதுகாப்போனாகவும் ஆகிறது.


## சுதேசி புடவைகள்

கலருக்கு உத்திரவாதம். அழகான கரையும் முகதலையும், எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

6 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 2-15-0
8 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 3-15-0
9 கெஜம் 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 4-4-0

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட்

காந்தி தொப்பி 1-க்கு அணா 6.

☞ ½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக் அனுப்பப்படும்.

காந்தி ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.


(முதற் பக்கம் தொடர்ச்சி)

லார்ட் இர்வின் மூலம் மகாத்மாவுடன் சமாதான உடன்படிக்கையும் செய்து கொண்டது. இப்பொழுது மகாத்மா லண்டன் போகவில்லையென்றால், அதனால் ஏமாற்றமடைந்தது பிரிட்டிஷ் சர்க்காரே. தாம் கப்பல் ஏறுகிறவரை உறுதியில்லையென்று மகாத்மா சொல்லிவந்தது உண்மையாயிற்று எனெனில் சர்க்கார் யோக்கியதையை அறிவதில் அவர் மகா நிபுணர்.

காவடி எடுத்து ஆடுகிறவனுக்கு தன்னை பிடிக்கிறவன் ஒருவன் இருக்கிறான் என்று தெரிந்தால் ஆட்டம அதிகமாய் வரும். பிடிக்க பிடிக்க ஆவேசம் துள்ளிக்கிளப்பும். பிடிப்பவர் விட்டுவிட்டால் ஆட்டமும் அடங்கி ஒடுங்கும். டெல்லி உடன்படிக்கை காவடி, சிவில் சர்விஸ் தோளில் வந்தது. அவர்கள் ஆடிக்குதித்தார்கள். மகாத்மா தமது இயற்கையான பொறுமையோடு அவர்களை பிடித்துப்பார்த்தார். அவர் பொறுமையை சிவில் சர்விஸ்காரர் அவர் பயப்படுவதாக தவறுதலாக நினைத்தார்கள். அதிகமாய் ஆடினார்கள். மகாத்மா விட்டுவிட்டார். பலன் என்ன? சிவில் சர்விஸ் கோஷ்டியார் ஜெயித்ததாக அர்த்தமல்ல. பிடிப்பை விட்டவுடன் தொப்பென்று கீழே விழுந்தார்கள். அவர்கள் முட்டாள் தனத்தை பார்த்து உலகம் நகைக்கிறது. முகத்தில் கரிபூசியது போலாயிற்று பிடிப்பார் யாருமில்லை. திகைக்கிறார்கள். என்ன செய்வது என்று தெரியவில்லை. வால் நீளமுள்ள குரங்கு தன் வாலைப்பற்றி மிக பெருமை கொண்டது. மரக்கிளையில வாலைச் சுற்றி வேகமாய் ஆடியது. வால் அறுபட்டு கீழே விழுந்தது. வால் பெருமை போயிற்று. வாலறுந்த மூளியாயிற்று. மூலையில் போய் குந்தியது. "[illegible]றினாயோ குரங்கே?" என்று எல்லாரும் கேலிசெய்ய இடமாயிற்று அதைப்போல இன்று சிவில் சர்விஸ்காரர் நிலைமையும் இருக்கிறது.

கவர் பிளந்த மரத்துளையில்
கால் நுழைத்துக்கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட
குரங்கதனைப் போல
அகப்பட்டீரே சிவில் சர்வீசாரே
கிடந்துழல அகப்பட்டீரே !

Edited, Printed & Published by T. S. Chockalingam at the Lakshmi Press, 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No M 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)




வருட சந்தா ரூ. 3.
திங்கள், வியாழன் வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 | சென்னை, 1931 ஆகஸ்டு 24உ, பிரஜோற்பத்தி ஆவணி மீ 8உ திங்கட்கிழமை | இதழ் 19

# விட்டில்பட்டர் அகப்பட்டார் !

டெல்லி உடன்படிக்கை நடந்தது முதல் இதுவரை ஒவ்வொரு மாகாணத்திலும் உடன்படிக்கையை மீறி சர்க்கார் செய்த காரியங்களை மகாத்மா வெளிப்படுத்தியிருக்கிறார். இவற்றைப் பற்றி அவ்வப்போது சர்க்காருடன் நடத்திய கடிதப்போக்கு வரத்துகளையும் வெளியிட்டிருக்கிறார். இவற்றை படித்துப் பார்த்தால், உடன்படிக்கையை கெடுக்க இந்த சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவு தூரம் சிரத்தை எடுத்து வந்திருக்கிறார்கள் என்பது விளங்கும். சிவில் சர்விஸ் கோஷ்டியின் உண்மை சொரூபம் வெளிப்பட்டுவிட்டது. மகாத்மா எவ்வளவு பொறுமையாய் இருந்திருக்கிறார் என்பதை உலகம் அறிந்துகொண்டது. பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டல்லவா? கூர்ஜரத்தில் 19 லட்சம் ரூபாய் நிலவரிக்காக மகாத்மா வசூலித்துக் கொடுத்திருக்கும்போது, அக்கிரமமாக விவசாயிகளை துன்புறுத்தி மேலும் பணம் வசூலித்தது அவரால் பொறுக்க முடியவில்லை. அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்கும்படியே மகாத்மா கேட்கிறார். திருப்பிக் கொடுக்கும்படி கேட்கும் தொகை 50 ஆயிரமேயானாலும், அப்படி வசூலித்தது உடன்படிக்கையை மீறியதல்லவா? அகம்பாவம் பிடித்த பம்பாய் சர்க்கார் அப்படிச்செய்ய மறுத்தது. இந்திய சர்க்காரும் அதற்கு தாளம் போட்டது. ஒன்று பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும், அல்லது அப்படி வசூலித்தது நியாயமா என்பதை விசாரித்து அறியும்படி ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று மகாத்மா கேட்டார். சர்க்கார் மறுக்கவே, மகாத்மாவும் லண்டன் போக மறுத்து விட்டார்.

மகாத்மா சர்க்கார்மீதுள்ள 'குற்றப்பத்திரிகை'யை வெளியிட்டவுடன் சிம்லாவில் உறுமல் கிளம்பிற்று. இனி சமாதானப் பேச்சிற்கு கொஞ்சங்கூட வழியில்லை யென்று சிம்லாவிலிருந்து தந்திகள் பறந்தன. மலை பெயர்ந்தாலும் நிலை கலங்காத மகாத்மாவா இந்தப் பூச்சாண்டிக்கு பயப்படுகிறவர்? 13உ யே சமாதானப் பேச்சிற்கு வழியில்லாமல் போய்விட்டதென்றும் அதைப்பற்றி கொஞ்சங்கூட கவலைப்படப் போவதில்லை யென்றும் சொல்லிவிட்டார். கல்கத்தாவிற்கு வந்திருந்த வைசிராய் திடீரென்று சிம்லாவிற்கு புறப்பட்டுப் போனார். சர்க்கார்மீது மகாத்மா குற்றப்பத்திரிகை வெளியிட்டிருப்பதால், காங்கிரஸ் மீது சர்க்கார் குற்றப்பத்திரிகை வெளியிடப் போவதாக சிம்லாவிலிருந்து பயமுறுத்தல் கிளம்பிற்று. மகாத்மா எதற்கும் அஞ்சுபவராக காணப்படவில்லை. அம்மாதிரி குற்றப் பத்திரிகையை சந்தோஷமாக வரவேற்பதாகச் சொன்னார். அது மட்டுமா? தமது குற்றப் பத்திரிகை விஷயமாக சர்க்கார் விசாரணைக்கு ஒப்புக் கொள்ளாமல் போனாலும், சர்க்கார் காங்கிரஸ் மீது சொல்லும் குற்றப் பத்திரிகை விஷயமாக தாம் விசாரணைக் கமிட்டி நியமிக்க ஒப்புக்கொள்ளத் தயார் என்றார். இதைக் கேட்டவுடன் சர்க்காருக்கு இடி விழுந்தது

(கடைசி பக்கம் பார்க்க)

Koviloor Digital Library

# சர்க்கார் புரட்டு

மகாத்மா "யங் இந்தியா" பத்திரிகையில் 'உண்மையான பிரச்னை' என்ற தலைப்பிட்டு வியாசம் எழுதியிருக்கிறார். அதாவது:—

என்னை லண்டனுக்கு அனுப்புவதில்லையெனக் காங்கிரஸ் முடிவு செய்ததற்குக் கவர்ன்மெண்டுக்கும் காங்கிரஸுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு சிறு வித்தியாசந்தான் காரணம். ஆனால் அந்த வித்தியாசம் சிறிதேயானாலும் அது மிக முக்கியமான வித்தியாசமாகும். இந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கடிதப் போக்குவரத்து விவரங்களை ஜாக்கிரதையாகப் படிப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த வித்தியாசம் மிக முக்கியமானதென நன்கு தெரியும்.

அந்தந்த மாகாணக் கவர்ன்மெண்டுகள் ஒப்பந்தத்தை மீறிச் செய்துள்ள காரியங்களை நான் தயாரித்துள்ள குற்றப்பத்திரிகை மூலம் அறிந்து கொள்ளலாம். அந்தக் குற்றப் பத்திரிகையில் நான் கவர்ன்மெண்டு ஒப்பந்தத்தை மீறி நடந்த விவரங்கள் அனைத்தையும் அறிவித்துவிட்டதாக நினைக்க வேண்டாம். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக சட்ட மறுப்பாளர்களில் இன்னும் நூற்றுக் கணக்கான பேர் சிறையிலிருந்து வருகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் அவர்களும் விடுதலைபெற உரிமையுள்ளவர்கள் என்றே கருதுகிறார்கள். ஆனால் அவர்கள் விஷயம் இன்னும் மாகாணக் கவர்ன்மெண்டுகளின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. ஆகவே அவர்கள் விஷயத்தை நான் குற்றப் பத்திரிகையில் சேர்க்கவில்லை. மாகாணக் கவர்ன்மெண்டுகள் முன்னமே விரோதமாக முடிவு செய்து விட்டிருக்கும் வழக்குகளைப் பற்றி மட்டுமே நான் பிரஸ்தாபித்திருக்கிறேன். சில வழக்குகளில் இந்திய கவர்ன்மெண்டார் சவுகரியம் செய்வார்கள் என்றும் கூட இடமிருக்கிறது. ஆனால் அவைகளில் பெரும்பாலானவர்களுக்கு நியாயம் கிடைக்காது. காங்கிரசுக்குத் திருப்தி ஏற்படாத விஷயங்களைப் பற்றியெல்லாம் பகிரங்கமாக விசாரணை நடத்த வேண்டுமெனக் கேட்டதில்லை. இந்த ஒப்பந்தம் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டதானால் கவர்ன்மெண்டின் மீது கோர்ட்டில் நடவடிக்கை எடுத்து விடலாம். ஆனால் எப்போது இந்த ஒப்பந்தம் அவ்விதம் செய்யப்படாமலிருக்கிறதோ அப்போது கவர்ன்மெண்டார் அவசியம் ஒரு விசாரணை சபையை நியமித்துக் கொடுத்து அங்கு காங்கிரஸ் கூறும் ஆக்ஷேபங்களுக்குத் தீர்ப்புச் சொல்லவும் ஒப்பந்த நிபந்தனைகளுக்குச் சரியான வியாக்யானம் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குக் கவர்ன்மெண்டு இணங்கிவிடாவிட்டால் பொது ஜனங்களிடையே அதிகாரம் மாற வேண்டுமென்பதை இந்தியாவிலுள்ள அதிகாரிகள் எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பது தெரிகிறது.

காங்கிரஸ் பொது ஜனங்களின் பிரதிநிதிச் சபையென்பதையும் அதன் ஒத்துழைப்பை வந்தனத்துடன் ஏற்றுக் கொள்வது நன்மையென்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் ஒத்துழைப்பு என்றால் அவர்கள் உத்தரவுப்படி நடப்பதென்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் பரஸ்பரம் நம்பிக்கையுடன் நடக்க வேண்டுமென்பதை நினைக்கவில்லை. எங்கு பார்த்தாலும் மாகாணக் கவர்ன்மெண்டுகள் காங்கிரஸ்காரர்களைச் சந்தேகத்துடனே பார்க்கின்றனர். சில விடங்களில் அவர்களை விரோதிகளாகவே நினைக்கின்றனர்.

அவசியமெனத் தோன்றியபோதெல்லாம் மாகாணக் கவர்ன்மெண்டுகள் காங்கிரஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள சற்றும் தயங்குவதில்லை. ஆனால் இவ்வழக்குகளில் கவர்ன்மெண்டார் குற்றத்துக்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் துன்புறுத்தவே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள் என நான் அபிப்பிராயப்படுகிறேன். உதாரணமாக 124எ. பிரிவுப்படி தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளைப் பரிசீலனை செய்யலாம். இந்தப் பிரிவு அதிருப்தியை விளைவிப்பது சம்பந்தமான பிரிவு. காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொருவரும் அவர்களது லக்ஷியப்படி ராஜாங்கத் துவேஷியென்பதையும் ஒப்பந்தம் ஏற்பட்டதால் அந்தத் தன்மை மாறவில்லையென்பதையும் ஒப்புக் கொள்ளுகிறேன். தற்போதுள்ள அரசாங்க முறையை ஒழித்து விட்டு பூரணமாக தேசீய ஆட்சி முறையை

(151ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# ஐயங்கார் ஓட்டம்

காணம் என்றால் வாயைப்பிளப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடுவதுமான பல "தலைவர்கள்" இந்நாட்டில் இருக்கிறார்கள். சட்ட மறுப்பு சமயத்தில் குதிங்கால் பிடரியில் படும்படி ஓடுவார்கள். சமாதான சமயத்தில் அலங்காரமாய், அழைப்பேற்று நுழைவார்கள். சுயராஜ்யத்திற்கு வியாக்கியானஞ் செய்வார்கள். காங்கிரஸ் அப்படிச் செய்யாமல் இப்படிச் செய்திருந்தால் "புத்திசாலி"த்தனமாயிருக்கும் என்று புத்தி கூறுவார்கள். மகாத்மா பெரியவர்தான், இருந்தாலும் அவர் இவ்விஷயத்தில் தவறு செய்து விட்டார் என்பார்கள். இம்மாதிரி பேர்வழிகள் தமிழ்நாட்டில் தான் அதிகம். தமிழ்நாட்டைப் பிடித்த துரதிர்ஷ்டம்! சட்டமறுப்பு காலத்தில் பதுங்கி ஓடினார்கள். இருந்த இடமே தெரியவில்லை. அந்த சூரர்கள் இன்று பிரபல தலைவர்களாய் விளங்குகிறார்கள். இவர்களில் "இந்து" ஆசிரியரும், "சுதேசமித்திரன்" மானேஜிங் டைரக்டருமான ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார் ஒருவர். லாகூர் காங்கிரசிற்கு முன்னால் காங்கிரசில் பொதுக் காரியதரிசி வேலை கூட பார்த்தார். இந்திய சட்டசபையில் பண்டிதநேருவின் சீடராய் விளங்கினார். லாலா லஜபதிராய் சுயராஜ்யக் கட்சியில் சேராமல் தனியாக முன்பு தேர்தலுக்கு நின்றார். அச்சமயம் இவர் பத்திரிகையான தேசபக்தி மிகுந்த சுதேசமித்திரன், "ஒரு சட்டி கூழுக்காக உரிமையை விற்று விட்டார்" என்று லாலாஜியை நாக்கில் நரம்பில்லாமல் தூஷித்தது. அவ்வளவு சிறந்த தேசபக்தராகிய நமது ஐயங்கார், லாகூர் காங்கிரசிற்குப் பின்னால் சென்ற விடம் தெரியாமல் பதுங்கினர். ஸ்ரீ. சீனிவாச ஐயங்கார் ஒரு விதத்தில் சிறந்தவர் என்று சொல்லவேண்டும். சட்டமறுப்பு தீர்மானத்திற்கு பின்பு அவர் விலகிவிட்டாலும், சமாதானத்திற்கு முன்பு மறுபடியும் வந்து நுழையாமல் மரியாதையாக ஒதுங்கிவிட்டார். தேசபக்தர் ரங்கசாமி ஐயங்கார் அப்படியல்ல. சமயசஞ்சீவி. லாகூரில் பிடித்த ஓட்டம் மைலாப்பூரில் வந்து நின்றது. தமது குரு பண்டித நேரு ஜெயிலுக்குப் போனதை பார்த்தும், தமக்கு பெயரும், புகழும் கொடுத்த காங்கிரஸ் சபையை சர்க்கார் அடக்குமுறையால் நசுக்க முயற்சி செய்வதைப் பார்த்துங்கூட "இந்து" ஆபீஸ் மெத்தையை விட்டு இறங்கவில்லை. காற்று எப்பக்கம் அடிக்கிறது என்பதை அவர் ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டிருக்கும்போது, ஜெயக்கார், சாப்ரூ, தூது புறப்படுவது தெரிந்தது. உடனே சும்மா இல்லாமல் அலகாபாத் ஓடினார். அங்கிருந்து ஜெயக்கார் சாப்ரூவுடன் எரவாடா ஜெயிலுக்கு ஓடினார். தாமும் இந்த பெரிய ராஜி முயற்சியில் கலந்து கொண்டிருப்பதாய் விளம்பரஞ் செய்தார்.

மகாத்மாவும், பண்டித நேருவும் இவரை நன்கு அறிவார்கள். இவர் அனாவசியமாக ஜெயக்கார், சாப்ரூவுடன் வந்தது அவர்களுக்கு பிடிக்கவில்லை. ஆகவே இவரைப் பார்த்தவுடன் "நீர் ஏன் இங்கு வந்தீர்?" என்று கேட்டார்கள். ஐயங்கார் முகம் சுருங்கிவிட்டது. சென்னைக்கு திரும்பிவிட்டார். தம்மை இம்மாதிரி கேட்டு அவமானப்படுத்திவிட்டதாக கொஞ்சக் காலம் சொல்லிக்கொண்டிருந்தார். இவர் காலடி வைத்த விசேஷம் முதல் ராஜி முயற்சி தோல்வியடைந்தது. அப்புறம் டெல்லி உடன்படிக்கை வரையில் ஐயங்கார் பேச்சு மூச்சை காணவில்லை.

அந்த பெரிய தலைவர் இப்பொழுது சீமைக்குப் போயிருக்கிறார். ஒரு வாரத்திற்கு முன்னால், தாம் எப்பொழுதும் காங்கிரஸ்வாதி என்று சென்னையில் கர்ஜித்தார். காங்கிரஸ் லண்டன் மகாநாட்டை பகிஷ்கரித்ததை அறிந்த பின்பும், இந்த தேசபக்தருக்கு லண்டன் மகாநாட்டு மோகம் விடவில்லை. மகாத்மா வராவிட்டாலும் இவருக்கு போகாமல் இருக்க முடியவில்லை. இதுதான் காங்கிரஸ்வாதிக்கு அழகா? இவருக்கு காங்கிரஸ் மீதுள்ள அபிமானம் இவ்வளவுதானா? பண்டித மாளவியாவும், ஸ்ரீமதி சரோஜினியும் போகாமல் இருக்கும்போது, ஐயங்கார் மட்டும் ஓடுவானேன்? இவர் போய் என்ன சாதித்துவிடப் போகிறார்? ஐயங்கார் கப்பலேறி ஓடிவிட்டார். அவர் காங்கிரஸ் பக்தராக சீமைக்கு போகிறாரா அல்லது சர்க்கார் தாசராக சீமைக்கு போகிறாரா என்பதை தமிழரே முடிவு செய்து கொள்ளுங்கள். லாலாஜியை தூஷித்த "சுதேசமித்திரன்," வாயில் கடலை மாவை போட்டிருப்பதால் பேசமுடியவில்லையாம்!

Koviloor Digital Library



# நெசவுத் தொழில் அழிந்த கதை

சீமைத் துணிகளை இந்நாட்டில் கொண்டு வந்து விற்பதற்காக, இந்நாட்டு நெசவுத் தொழிலை அழிக்க சர்க்கார் இது வரை பல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். முன்பு சில விவரங்களை வெளியிட்டிருக்கிறோம். 1914ம் வருஷத்திற்குப் பின்னால் சர்க்கார் செய்த சட்டங்களை கவனிப்போம்.

1917-18:—இறக்குமதியாகும் பருத்தி ஜவுளிமீது விதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கு 3½ விகித வரியை 7½ விகிதமாக உயர்த்தினர். உள்நாட்டு ஜவுளிமீது ஏற்படுத்தப் பட்டிருந்த வரி நூற்றுக்கு 3½ விகிதமாகவே இருந்தது.

1920:—நாட்டில் எவ்வளவோ எதிர்ப்பிருந்தும் அதைப் பொருட்படுத்தாது சர்க்கார் ரூபாய்க்கும்-பவுனுக்கு முள்ள நாணயமாற்று விகிதத்தை ரூபாய்க்கு 2 ஷில்லிங் என்று அமைத்தனர். இதனால் இந்தியாவின் தங்க இருப்பில் 78 கோடி ரூபாய் மறைந்தது. அந்த நாணயமாற்று விகிதத்தை நிர்ணயிக்க முடியாது சர்க்கார் முடிவில் 1924 வது வருஷத்தில் வலையை விரித்து விட்டனர்.

1921-22:—சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்ததால் சர்க்கார் பொதுவாகவுள்ள இறக்குமதி வரியை நூற்றுக்கு 7½ விகிதத்திலிருந்து 11 விகிதமாக உயர்த்தினர். உள்நாட்டில் செய்யப்படும் துணிகளின் மீது விதிக்கப்படும் வரி நூற்றுக்கு 3½ விகிதமாகவே இருந்தது. நூல் நூற்கவும் நெசவு செய்யவும் உபயோகமாகும் மில் யந்திரங்களுக்கும், மற்றுமுள்ள சாமான்களுக்கும் நூற்றுக்கு 2½ விகிதம் இறக்குமதி வரி விதித்தனர்.

1922-23:—பொது வரியை நூற்றுக்கு 15 விகிதம் விதித்தனர். பருத்தி ஜவுளிமீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி நூற்றுக்கு 11 விகிதமாகவே இருந்தது. உள்நாட்டு வரி நூற்றுக்கு 3½ விகிதமாகவும், மில் சாமான்களின் மீது இறக்குமதி வரி 2½ விகிதமாகவே இருந்தது.

1922-23:—இறக்குமதியாகும் பருத்தி நூல் மீது நூற்றுக்கு 5 விகிதம் வரி விதிக்கப்பட்டது. 1925-26.—1896-ம் வருஷம் முதற்கொண்டு விதிக்கப்பட்டுவரும் 'பேர் பெற்ற' உள்நாட்டு வரியை 1925-ம் வருஷம் டிசம்பர் முதல் தேதி முதற்கொண்டு வசூலிக்காது நிறுத்தி வைத்திருந்தனர். 1926-ம் வருஷத்தில் அதை முற்றிலும் எடுத்துவிட்டனர். லங்காஷயர் தூண்டுதலின் பேரில் இந்த உள்நாட்டு வரி இந்தியாவில் செய்த துணிகளின் மீது விதிக்கப்பட்டுவந்தது. நாடுகளின் பல பாகங்களிலுமிருந்தும் அந்த வரி விகிதத்தை பலமாக எதிர்த்தும் சர்க்கார் அவ்வரியை விதித்துக் கொண்டே வந்தார்கள். 1921-22ம் வருஷத்தில் இந்திய பொக்கிஷக் கமிஷன் அந்த உள்நாட்டு வரி முறையைப் பலமாக பகிரங்கமாக கண்டித்தனர்

1927-ல் சட்டசபையில் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் ஆதரவைப் பெற்று நாணயமாற்று விகிதத்தை ரூபாய்க்கு 18 பென்ஸாக ஏற்படுத்தினர். இந்த நாணயமாற்று விகிதத்தை எவ்விதத்திலும் நிலை நிறுத்தும் பொருட்டு சர்க்கார் நாணயச் செலாவணியை இயற்கைக்கு விரோதமாக செயற்கை முறையில் சுருக்கியும், வருத்தி வந்தனர். இந்த 18 பென்ஸ் நாணயமாற்று விகிதத்தை சர்க்கார் நிலை நிறுத்தும் பொருட்டு 1926 ஏப்ரல் மாதத்திலிருந்து 1930 நவம்பர் 15 தேதிவரை இந்தியாவின் தங்க இருப்பிலிருந்து 33 கோடி ரூபாய் மறைந்துவிட்டது. நாணய மாற்று விகிதத்தை உயர்த்தியிருப்பதால் இந்தியக் கைத் தொழில்கள் பாதிக்கப்பட்டன. அது மட்டுமல்ல. இந்தியக் கைத் தொழிலாளர் உழைக்க வெளி நாட்டினர் கப்பம் பெறுவது போல் லாபமடைந்து வந்தனர்.

1927:—பருத்தி நெசவுக் கைத் தொழிலுக்கு பாது காப்பு அளிப்பதைக் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நியமிக்கப்பட்ட வரி விசாரணை போர்டார் 1927-ம் வருஷம் தங்கள் அறிக்கையை சமர்ப்பித்தனர். அவ்வறிக்கையுடன் அது விஷயமாக சர்க்காரின் தீர்மானமும் சமர்ப்பிக்கப் பட்டது. அந்த அறிக்கைமீது சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. பொது ஜனங்கள் அநேக விண்ணப்பங்கள் செய்ததன் பேரில் சர்க்கார் அவ்விஷயத்தை மீண்டும் புனராலோசனை செய்து 1927 செப்டம்பர் மாதம், பருத்தி நூல் இறக்குமதிமீது நூற்றுக்கு 5 விகித வரி அல்லது ஒரு ராத்தலுக்கு 1½ அணா (எந்த வரி அதிகமாயிருக்கிறதோ அந்த வரி விதிக்கப்படும்) விகித வரி விதித்தனர். இது மிக அற்பமான உதவியாகும். நூற்கும் மில்களுக்கு வேண்டுமானால் ஒரு வேளை ஒரு சிறிது உதவி யிருக்கலாம். ஆனால் அதனால் கைத்தறிக்கு உருப்படியான உதவியும் ஏற்படவில்லையென்றே சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library



# சீமை நூல் கொடுமை :: ஏழைகள் வயிற்றில் மண்.

### விதவை வடித்த கண்ணீர்.

மகாத்மா காந்தி "யங் இந்தியா" பத்திரிகையில் கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார்:—

கத்தர் பிரதிஷ்டானத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஸதீச சந்திர தாஸ் குப்தா "ராஷ்டிர வாணி" என்ற பெயருடன் வெளியாகும் வங்காள பாஷைப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராக இருந்து அதை நடத்தி வருகிறார். அவர் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் "சமாச்சார தர்ப்பணம்" என்ற பத்திரிகையில் வெளியாகியிருந்த கடிதம் ஒன்றைக் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிறார். அந்தக் கடிதம் மிகவும் முக்கியமானது. இந்தியாவில் புராதனத்தில் ராட்டினத்திற்கு எவ்வளவு சீரும் செல்வாக்கும் இருந்ததென்பதையும், அப்போது இந்திய மாதர்கள் ராட்டினத்தை எவ்வளவு தூரம் போற்றி வந்தார்களென்பதையும், ஆனால் பின்னர் அதை எவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவிலிருந்து மறைந்து போகும்படி செய்தார்களென்பதையும் அக்கடிதம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளக்கிக் காட்டியிருக்கிறது. அதை ஸ்ரீ. குப்தா அவரது பத்திரிகையில் பிரசுரித்து அதன் மொழி பெயர்ப்பை எனக்கு அனுப்பியிருக்கிறார். கத்தர் இயக்கத்தில் சிரத்தை யுள்ள வாசகர் யாவரும் அதை சிரத்தையுடன் வாசிப்பார்களென்பது நிச்சயம். அக்கடிதம் பின் வருமாறு:—

### நூற்பவர் வேண்டுகோள்.

"சமாசார" பத்திரிகை ஆசிரியருக்கு.

நான் நூல் நூற்பவள். சொல்லொணாத கஷ்டத்திற்குள்ளான பின்னர் நான் இக் கடிதம் எழுதுகிறேன். இக் கடிதத்தை தயவு செய்து தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யுங்கள். அதை நீங்கள் பிரசுரித்தால், அதைப் பார்ப்பவர்கள் எனது கஷ்டத்தைத் தீர்த்து, என் கோரிக்கையை பூர்த்தி செய்வார்களென நம்புகிறேன். இவ் ஏழையின் கஷ்டத்தை அலட்சியம் செய்யாது வெளியிடுங்கள்.

நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. நான் பட்ட கஷ்டங்களையெல்லாம் இங்கு விவரித்துக் கூறினால் அது ஓர் துக்ககரமான கதையாக முடியும். ஆயினும் சுருக்கமாகக் கூறி விடுகிறேன். எனது 22-வது வயதில் நான் விதவையானேன். நான் வைதவ்யத்தை அடைந்த போது எனக்கு 3-குமாரிகள் இருந்தனர். இறந்த என் கணவருக்கு யாதொரு சொத்துமில்லை. வயோதிகரான எனது தந்தை எனது மாமியார், 3-குமாரிகள் இவர்களை சம்ரக்ஷணை செய்யும் பொறுப்பு என் தலையில் விடிந்தது. என் கணவன் சிராத்தத்திற்கு என் நகைகளை விற்றுச் செலவு செய்தேன். கடைசியாக எல்லாம் துறந்து நாங்கள் பட்டினி கிடக்கும் நிலையில் வந்தபோது, கடவுள் எனக்கு ஓர் வழியைக் காட்டினார். அதிலிருந்து நான் கதிரிலும் (தக்ளி) ராட்டினத்திலும் நூல் நூற்க ஆரம்பித்தேன். காலையில் நான் வழக்கம் போல் குடும்ப காரியங்களை முடித்து விட்டு ராட்டினத்தில் மத்தியானம் வரை நூல் நூற்பேன். பின்னர் எனது பெற்றோர்களுக்கும், பெண்களுக்கும் சமைத்து உணவு அளித்து விட்டு, நானும் சாப்பிட்டவுடன் மீண்டும் கதிரில் நல்ல நூலாக நூற்பது வழக்கம். இவ்விதம் பிரதி தினமும் என்னால் ஒரு தோலா நூல் நூற்க முடிந்தது. நெசவுக்காரர்கள் என் வீட்டிற்கு வந்து ஒரு ரூபாய்க்கு மூன்று தோலாக்கள் வீதம் நான் நூற்ற நூலை அவர்கள் வாங்கிச் செல்லுவது வழக்கம். இதனால் துணிமணிக் கவலையும் சாப்பாட்டுக் கவலையும் எங்களுக்கு இல்லாம லிருந்தது. இவ்விதம் சில வருஷங்கள் சென்ற பின் நான் 28 ரூபாய் வரை சேர்க்க முடிந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு பெண்ணிற்குக் கலியாணம் செய்து வைத்தேன் பின்னர் அவ்விதம் 3 பெண்களுக்கும் விவாகம் நடத்தினேன். ஜாதி வழக்கத்திலிருந்தும் நான் சிறிதும் மாறவில்லை. எனது மாமனார் இறந்ததும் அவருடைய சிராத்தத்திற்கு 44 ரூபாய் செலவழித்தேன். அத்தொகையை நெசவுக்காரர்களிடமிருந்து நான் முன் பணமாக வாங்கிக் கொண்டேன் பின்னர் 12 வருஷத்தில் நான் அதை திருப்பிக் கொடுத்துவிட்டேன். ராட்டினத்தின் உதவியினாலும் மகிமையினாலுமே நான் இவ்வளவு தூரம் சமாளிக்க முடிந்தது. ஆனால், சென்ற 3 வருஷங்களாக நானும் எனது மாமியாரும் உணவிற்குக் கஷ்டப்படுகிறோம். ஏனெனில் நான் நூற்கும் நூலை வாங்க நெசவுக்காரர்கள் வருவதில்லை. தவிர நான் எனது நூலை மார்க்கட்டிற்கு அனுப்பினால்

Koviloor Digital Library



கூட அது முன்னர் விற்ற விலையில் பாதியில் ஒரு பங்கு கூட விற்பதில்லை. அதற்குக் காரணம் என்னவென எனக்குத் தெரியவில்லை. நான் அதைப்பற்றிப் பலரைக் கேட்டேன். சீமையிலிருந்து ஏராளமாக இறக்குமதியாகி வருகிறதென்றும் நெசவுக்காரர்கள் அதை வாங்கி செய்கிறார்களென்றும் கூறினார்கள். நான் நூற்பதைக் காட்டிலும் அது சிறந்த நூலாக இராதென்பது என் அபிப்பிராயம். பின்னர் விதேசி நூலை வாங்கிப் பார்த்தபோது எனது நூலைக் காட்டிலும் அது சிறந்ததாக இருந்தது. ஒரு சேர் 3 அல்லது 5 ரூபாய் வீதம் அதை விற்பதாகவும் நான் கேள்விப்பட்டேன். நான் அதைப் பார்த்ததும் முகத்தை சுளித்துக் கொண்டு கூறியதாவது:— கடவுளே! என்னைக் காட்டிலும் மிகவும் ஏழ்மைத் தனமுள்ள சகோதரிகள் இருக்கிறார்கள். விதேசி மனிதர்களெல்லாம் பணக்காரர்களென்பதை நான் அறிவேன். ஆனால் அங்கு என்னைக் காட்டிலும் ஏழைகளான பெண்கள் இருக்கிறார்களென்பதை இப்போது தெரிந்து கொண்டேன். வறுமையினால்தான் அவர்கள் இவ்வளவு சிறந்த நூலை நூற்றிருக்கிறார்கள். அங்கு விற்க முடியாததினாலேயே அவர்கள் அத்தகைய உயர்ந்த நூலை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். நல்ல விலை கொடுத்து அதை இங்கு வாங்கிக் கொண்டாலாவது அவர்களுக்கு சிறிது சௌகரியமாக இருக்கும். அதனால் நமது பிழைப்புக்கும் ஆபத்து வந்துவிட்டது. அந்த நூலினால் செய்த துணியை இரண்டு மாதங்கள் கூடக் கட்டிக்கொள்ள முடியாது. அது வீணாய்ப் போய் விடுகிறது. எனவே அந்த நூல் நூற்போர்களை இங்கு நூல் அனுப்புவது நியாயமா என்பதை ஆராய்ந்து பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்."

ஏழை நூல்நூற்பவள், சாந்திபூர்.

---


ஜவார்லால் சரித்திரம்

மூன்றாம் பதிப்பு. சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே எழுதவும். 32 பக்கங்கள். விலை அணா 1. ஒரு பிரதிக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,

11, ஆண்டர்சன் தெரு, சென்னை.


# கோவிந்தா போடுவதேன்?

இந்தியாவில் வயிற்றுக்கு கஞ்சி யில்லாமல் கோவிந்தா போடுகிறவர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். 200 வருட காலம் இந்நாட்டில் 'காருண்ய முள்ள" பிரிட்டிஷ் சர்க்கார் இருந்தும், வரவர கோவிந்தாக்கள் அதிகமாய்க் கொண்டே போகின்றனர். இதன் காரணமென்ன? ஒரு நாடு செழிப்படைய இரண்டு வசதிகள் வேண்டும். ஒன்று இயற்கை தேவியின் அருள், மற்றொன்று மனிதப் பிரயத்தனம். இயற்கை தேவி இந்நாட்டிற்கு தான் வேறு எந்த நாட்டையும் விட அதிகமாக தனது அருளை காட்டி யிருக்கிறாள். இந்நாட்டில் விளையாத பொருள்கள் இல்லை. கிடையாத சுரங்கங்கள் இல்லை. இருந்தும், இயற்கை வசதிகள் இல்லாத மற்ற நாடுகளைவிட நாம் தரித்திரர்களாய் இருக்கிறோம். காரணமென்ன? மனிதப் பிரயத்தனம் போதிய அளவு இல்லை. பழைய சென்சஸ் கணக்குப்படி இந்நாட்டில் 32 கோடிப் பேர் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் 25 கோடி இருக்கிறார்கள். 25 கோடி இருந்தும் தொழில் செழிக்கவில்லை. விவசாயம் ஓங்கவில்லை. ஜனத் தொகையில் நூற்றுக்கு எத்தனை பேர் வீதம் வேலை செய்து ஜீவிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்து | 60 | ஜெர்மனி | 58 |
| பிரான்ஸ் | 53 | இந்தியா | 40 |

இங்கிலாந்தில் நூற்றுக்கு 60 பேர் வீதம் உழைத்து சாப்பிடும்போது, இந்நாட்டில் 40 பேர் தான் செய்கிறார்கள். இனி இந்த 40 பேராவது பிரிட்டிஷாரைப் போல அதிகமாய் வேலை செய்கிறார்களா? அதை பார்க்க வேண்டுமானால் சராசரி வயதை கவனிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்து | 52 | ஜெர்மனி | 47 |
| பிரான்ஸ் | 46 | இந்தியா | 23 |

இங்கிலாந்தில் 52 வயது வரை வாழும்போது, இந்தியாவில் 23 வயது வரையே வாழுகிறார்கள். சுமார் 15 வயதுக்கு மேல் தான் யாருக்கும் வேலை செய்ய முடியும். அந்தக் கணக்குப்படி இந்தியர் 8 வருஷமே வேலை செய்கிறார்கள். பிரிட்டிஷாரோ 37 வருஷ வேலை செய்கிறார்கள். ஆகவே இந்தியாவில் கோவிந்தா போடுகிறவர்கள் அதிகம் இருப்பதில் என்ன ஆச்சரியம்?

Koviloor Digital Library



(146ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதே காங்கிரஸின் லக்ஷியம் காங்கிரஸ் இந்த லக்ஷியத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென நான் நினைத்ததுமில்லை. காங்கிரஸ் நிலைமையைப்பற்றிய விவாதத்தை அதிகமாக வளர்த்துக் கொண்டுபோக விரும்பவில்லை. காங்கிரஸ் கோரும் விஷயத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு விரும்பாவிட்டாலும் காங்கிரஸிடம் நம்பிக்கையில்லாவிட்டாலும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்காது. காங்கிரஸ் பொது ஜன நம்பிக்கைக்கு விரோதமாக நடந்திருந்தால் ஒப்பந்தம் ஒழிந்துவிட்டிருக்கும். இதுவே நியாயமான வழி இதை விட்டு ஒப்பந்த ஆரம்பத்திலேயே அவநம்பிக்கையுடன் ஆரம்பித்துவிட்டால் அதன் அர்த்தம் என்னவென்றுதான் எனக்கு விளங்கவில்லை. மாகாணக் கவர்ன்மெண்டுகள் ஒப்பந்தத்தை மீறி விசேஷமாக காரியங்கள் செய்துவிட்டனவாயினும், பர்டோலியில் பலவந்தமாக வசூலித்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், இல்லையேல் அவர்களுக்கு வரி செலுத்த சக்தியில்லாதிருந்த போதும் அவர்களிடமிருந்து பலவந்தப்படுத்தி பணம் வசூலிக்கப்பட்டதென்றும் நான் சொல்வதைப்பற்றி விசாரித்து முடிவு செய்ய ஒரு மத்தியஸ்த கோர்ட்டு நியமிக்க வேண்டுமென்றும் கேட்டதற்கிணங்கினாலும் நான் லண்டனுக்குப் புறப்படச் சித்தமாக விருப்பதாக அறிவித்தேன். இக்காரியம் அதோடு முடியவில்லை. காரியக் கமிட்டி எல்லா அம்சங்களிலும் பரிகாரம் கோர கடமைப்பட்டிருக்கிறது. ஆனாலும் பர்டோலி ஒரு விஷயத்தை மட்டும் வற்புறுத்துவதென்றும் அதற்கிணங்காவிட்டால் ஒத்துழைக்க மறுப்பதென்றும் முடிவு செய்தார்கள். மாகாணக் கவர்ன்மெண்டுகளின் நடத்தையை நான் பார்த்தபோது ஸிவிலியன்கள் உண்மையில் நான் லண்டன் போவதை விரும்பவில்லையெனத் தெரிந்துகொண்டேன். ஆகவே அந்த ஸிவிலியன்கள் சரிவரத் திருந்தும் வரை பூரண சுதந்திரம் பெறுவதற்குக் கவர்ன்மெண்டோடு காங்கிரஸ் எவ்விதத்திலும் சமரஸம் பேசுவதில் பயனில்லை. இனி எவ்வளவு கஷ்டமாக விருந்தாலும் காங்கிரஸ் தனது வேலையை செய்து கொண்டு போக வேண்டியதுதான்.

---

# அரசி ஆண்டியானாள்!

அருணகிரியார் ஒரு வினாடியில் தெய்வபக்தரானார். லீலா சுகரும் அப்படியே. பட்டினத்து அடிகள் ஒரு வினாடியில் தமது போக வாழ்வை துறந்தார். உள்ளத்தில் ஒளி தோன்றியவுடன் உண்மை பக்தர்கள் எல்லாவற்றையும் துறந்து ஆண்டிகளாய் மாறுகிறார்கள். பிரிட்டிஷ் கடற்படை தளகர்த்தரின் புதல்வி. ஏராளமான செல்வம். பெற்றோருக்கு செல்லக் குழந்தை. அழகிலும் முதல் தரம். நாளுக்கு நாள் உடை மாற்றம். போகவாழ்விலும், போக நாகரீகத்திலும் சிறப்புற்ற பாரீஸ் நகரிலேயே வாசம். அழகும் பணமும் மிகுந்த கட்டழகிகள் வாழும் பாரீஸ் நகரிலே நமது தளகர்த்தர் புதல்வி சிறப்புற்று விளங்கினார். அவர் இல்லாத பெரிய விருந்துகளோ நடனக் கச்சேரிகளோ கிடையா. நினைத்தவுடன் உல்லாசப் பிரயாணம். பணம் தண்ணீர் பட்ட பாடாயிருக்கும் பாரிஸ் நகரிலே, உயர்ந்த வாழ்வு நடத்துவதென்றால் சாதாரணப் பேர்வழிகளால் முடியாது. ஒரு நாள் பாரிசில் விருந்துக் கச்சேரியில் நமது மாது இருக்கும்போது, மகாத்மா காந்தி பேச்சு வந்தது. அவர் பெருமையைப் பற்றி யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். போக வாழ்வில் மூழ்கியிருந்த நமது மாது சிரோமணிக்கு திடீரென்று உள்ளத்தில் ஒளி தோன்றிற்று. காந்தியைப் பற்றி பல புத்தகங்களை படித்தார். படிக்கப் படிக்க சபர்மதி கவர்ச்சி அதிகமாயிற்று. சபர்மதியில் வாசஞ் செய்ய அநுமதி கோரினார். "எல்லாவற்றையும் துறக்க தயாராயிருந்தால் சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று மகாத்மா பதில் எழுதினார். ஒரு வினாடி கூட யோசிக்கவில்லை. சகலவற்றையும் துறந்தார். சொத்தை இழந்தார். சுகத்தை இழந்தார் உற்றார் உறவினரை இழந்தார். நேரே சபர்பதி நோக்கி ஓடி வந்தார். இன்று மகாத்மாவின் சீடராய் மகாத்மா எங்கு சென்றாலும் உடன் செல்லுகிறார். சாதாரண உடை. தலைமுடி மழுங்க க்ஷவரம். காலில் செருப்புகூட கிடையாது.

அந்த காரைக்கால் அம்மையார் யார்? அவரே மிஸ். ஸ்லேட் என்ற ஸ்ரீமதி. மீராபாய்!

Koviloor Digital Library



# வெள்ளை பத்திரிகைகள் அயோக்கியத்தனம்

சர்க்காருக்கு விரோதமாக காங்கிரஸ் ஒரு முடிவு செய்தால் உடனே வெள்ளை பத்திரிகைகள் ஒரே கூச்சல் போடுவது வழக்கம். அந்தக் கூச்சல் பலிக்காவிட்டால், அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாய் பல்டி யடித்து மறுபடியும் காங்கிரஸை ஆதரித்து சர்க்காருக்கு புத்திமதி சொல்ல கிளம்புவது. மகாத்மா லண்டனுக்கு போகக்கூடாது என்று காரியக் கமிட்டி தீர்மானித்தவுடன் இந்த நாடகம் மறுபடியும் நடக்கிறது. காந்தி என்றால் இந்தியாவல்ல என்றும், அவர் இல்லாமலே மகாநாட்டை நடத்த முடியுமென்றும் கூச்சல் போட்டன. காந்தி அவ்வளவு முக்கியமானவரல்ல என்றால், இதற்கு இவ்வளவு கூச்சல் எதற்கு? இந்தக் கூச்சலே, மகாத்மா இல்லாமல் எந்த முடிவு செய்தாலும் பலிக்காது என்று அவை உணருவதை காட்டவில்லையா? பம்பாய் டைம்ஸ், விசாரணை கமிட்டி நியமிப்பது சர்க்கார் கௌரவத்திற்கு அழகல்ல என்று முதலில் குதித்தது. சர்க்கார் கௌரவத்திற்கு பாதகமில்லாமல் விசாரணை கமிட்டி நியமிக்கலாமென்று இப்பொழுது பல்டி அடித்திருக்கிறது. இங்கிலாந்தில் மார்னிங் போஸ்டும், மான்செஸ்டர் கார்டியனும், தற்காலம் சட்ட மறுப்பு ஆரம்பிக்க இந்தியாவில் முடியாதாகையால், மகாத்மாவை லட்சியஞ் செய்ய வேண்டியதில்லையென்று சொல்லுகின்றன. ஆகவே பிரிட்டிஷார் நியாயத்திற்கு கட்டுப்பட மாட்டார்களென்றும், சட்டமறுப்பிற்கே பயப்படுகிறார்களென்றும் ஏற்படுகிறது. இதுதான் பிரிட்டிஷ் நீதியா? வெள்ளைப் பத்திரிகைகளின் அயோக்கியத்தனம் வெட்ட வெளிச்சமாயிற்று. ஒரு எச்சரிக்கை. இதே மார்னிங் போஸ்ட் பத்திரிகை, 1929 டிசம்பரில், சட்டமறுப்பு பூச்சாண்டி வெறும் பூச்சாண்டியென்றும், ஒரு நாளும் நடக்காதென்றும் உளறிற்று. 1930-ல் என்ன நடந்தது என்று மார்னிங் போஸ்டை கேட்கிறோம். உலகம் திகைக்கும்படி சட்டமறுப்பு போர் நடந்தது ஆகவே வீண் பசோவாஜ்யம் செய்து கெட்டுப்போக வேண்டாமென்று வெள்ளைப் பத்திரிகைகளை எச்சரிக்கிறோம்.

# ஒரு கப்பல் "தலைவர்கள்"

(ஸ்ரீ. அடயங்கார்)

சிலர் நினைப்பதைப்போல பிரிட்டிஷார் தெய்வங்கள் அல்ல வாதத்தினாலோ, பேச்சினாலோ இது வரை எந்த நாடும் ஆளுகிறவர்களிடமிருந்து ராஜ்ய சுதந்திரம் பெற்றதில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் மீதும் பிரிட்டிஷ் ஜனங்கள் மீதும் (பகிஷ்காரம், சட்டமறுப்பு மூலம்) இந்தியர் தங்கள் பலத்தை காட்டுவார்களானால், மகாத்மா சீமைக்கு போனாலும் போகாவிட்டாலும் சுயராஜ்யம் கிடைத்து விடும். ஜனங்களின் ஆதரவில்லாத வக்கீல்களும் ராஜதந்திரிகளும் ஒரு கப்பல் நிறைய சீமைக்கு போனபோதிலும் நடக்க போவது ஒன்றுமில்லை. பார்லிமெண்டின் தினைபளவு நீதி வழங்கும்படி மகாத்மா கேட்கிறார். அதைக்கூட இந்திய சர்க்கார் கொடுக்க மறுக்கும் போது, சீமை சர்க்காரா சுயராஜ்யம் கொடுக்கப் போகிறவர்கள்? பிரிட்டிஷாரை வழிக்கு கொண்டு வரும் விதத்தில் இந்தியா எவ்வளவோ வேலை செய்ய வேண்டியிருக்கிறது. தியாகஞ் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த நிலைமை வந்து விட்டால், கப்பல் நிறைய இங்கிருந்து பிரதிநிதிகள் போக வேண்டிய அவசியமே ஏற்படாது. ஒருவர் இருவர் சீமைக்கு போனால் போதும். அதற்காக வேலை செய்யுங்கள்.

(முதற் பக்கத் தொடர்ச்சி)

போலாயிற்று சிவில் சர்விஸ் பூச்சாண்டி அடங்கிற்று. சிம்லாவில் கப்சப். பேச்சு மூச்சில்லை விட்டில பட்டர் அகப்பட்டுக் கொண்டதைப்போல, சிவில் சர்வீசாரும், மற்றவர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள்: விழிக்கிறார்கள்!

சர்க்கார் நிலைமை திரிசங்கு சுவர்க்கம் போல இருக்கிறது. ஆகவே பயமுறுத்தல் போய் விட்டது மறுபடியும் எப்படியாவது மகாத்மாவுடன் ராஜி செய்து அவரை சீமைக்கு அனுப்ப ஆலோசிக்கிறார்களாம். முட்டிய பின்பு குனியும் புத்தி இந்த சர்க்காருக்கு பிறவிக்குணம். காந்தி—இர்வின் உடன் படிக்கைக்கு பின்பு கூட அந்தக் குணம் போகவில்லை. போயிருந்தால் இப்படி அகப்பட்டுக் கொண்டு விழிப்பார்களா? அட அசடுகளே, எப்பொழுது தான் புத்தி வரப் போகிறது?

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)

# காந்தி

வருட சந்தா ரூ. 3.
திங்கள், வியாழன் வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 | சென்னை, 1931 ஆகஸ்டு 31உ, பிரஜோற்பத்தி ஆவணி மீ 15உ திங்கட்கிழமை | இதழ் 21

## காந்திஜி பிரயாணம்.



செல்லாமை யுண்டேல்
எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

—குறள்

கடுகைத் துளைத்து எழுகடலைப் புகுத்தி குறுகத்தறித்த குறள் என்று ஒரு புலவர் சொன்னார். குறள் வாக்கியம் ஒவ்வொன்றிலும் நிறைந்திருக்கும் பொருள், கடுகுக்குள் எழுகடலைப் புகுத்தியதைப் போல அவ்வளவு அதிகமாய் இருக்கிறதாம். மேலே சொல்லிய குறள் வாக்கியத்தை கவனித்தால், எழுகடல்களல்ல, ஈரேழு உலகத்தையும் ஒரு கடுகுக்குள் புகுத்தியதைப் போல அவ்வளவு பொருள் நிறைந்து விளங்குகிறது. ஒரு காதலன் அயலூர் செல்ல தன் காதலியிடம் விடை கேட்டபோது, அவள் மேலே சொல்லியவாறு உரைத்ததாக திருவள்ளுவர் சொல்லுகிறார். அதாவது செல்லாமையுண்டேல் எனக்குரை—போகாமல் இருப்பதென்றால் எனக்குச் சொல்லு. அப்படியில்லாமல் போவதாயிருந்தால், உன் வரவை வாழ்வாருக்கு—நீவரும் போது உயிருடன் இருப்பவருக்கு—உரை என்பது பொருள். காதலன் பிரிவை சகித்து அவன் திரும்பி வருமளவும் உயிர்வாழ முடியாது என்பது காதலியின் முடிவு. என்ன அழகான பொருள்!

மகாத்மா காந்தி 29உ யன்று சீமைக்கு கப்பலேறினர். அவர் பிரிவை நோக்கி இந்தியா படும் பாட்டைப் பார்க்கும்போது மேலே சொல்லிய குறள் அடி மிகவும் பொருத்தமாயிருக்கிறது. மகாத்மா இந்நாட்டை விட்டு பிரியும்போது, நமது உயிர் பிரிவது போலத் தோன்றுகிறது. நமக்கிருந்த மலைபோன்ற பலம் அவருடன் கப்பலேறியது போல உணருகின்றோம். தாயைக் காணாத சேய்போல இந்தியர் பரிதவிக்கின்றனர். உயிரற்ற வாழ்வு நடத்துவது போல பெருமூச்சு விடுகின்றனர். நடுக் காட்டில் விட்டது போல தவிக்கின்றனர். ஏன்?

Koviloor Digital Library



மகாத்மாவே இந்தியா. இந்தியாவே மகாத்மா. மகாத்மாவையும் இந்தியாவையும் பிரிக்க முடியாது. இரண்டும் இரண்டறக்கலந்து நிற்கின்றனர். உயிரும் உடலும் போலவும், பாலும் நீரும் போலவும், நகமும் சதையும் போலவும், பூவும் மணமும் போலவும் சேர்ந்து வாழ்கின்றனர்.

மகாத்மா தென்னாப்பிரிக்காவி லிருந்து 1914ல் இந்தியா திரும்பினார். அச்சமயம் இந்தியர் அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்டு வாழ்ந்தனர். மானம் சிறிதென்றெண்ணி, வாழ்வு பெரிதென்று எண்ணினர். ஊக்கமும், உள்வலியும், உண்மையிற் பற்றுமில்லாமல் இருந்தனர். ஒரு போலிஸ்காரனைக் கண்டு ஒன்பது குட்டிக்கரணம் போட்டனர். சர்க்கார் என்றால் இடி என்று நடுங்கினர். செல்லரிக்காய் முட்டையைப் போல வாழ்ந்து வந்தனர். அந்த இந்தியனை ஒரு வீர ஜாதியாக மகாத்மா 16 வருஷங்களில் செய்துவிட்டார். சுயமதிப்பும், சுதந்திர உணர்ச்சியும் அவர்களிடம் பொங்கும்படி செய்தார். போலீஸ் தடியடிகளையும், துப்பாக்கி, பீரங்கிகளையும் சிறிதும் லட்சியஞ் செய்யாத சூரர்களாக்கினார். இந்தியாவைக் கண்டு உலகம் வணங்கும்படி செய்தார். இந்தியா மீது எல்லா நாடுகளும் கவனஞ் செலுத்தும்படி மதிப்பை உயர்த்தினார். துரியோதனனைப் போல வணங்காமுடியர்களாயிருந்த இந்த சர்க்காரை, ஜனங்களுக்கு வணங்கும்படி செய்தார். 150 வருஷங்களில் கூட நடைபெற முடியாத பெரிய அபிவிருத்திகளை, இரண்டு சட்ட மறுப்புகளில், இரண்டு வருஷங்களில் மகாத்மா செய்து முடித்தார்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியபின்பு மகாத்மா கொஞ்சங் கொஞ்சமாக இந்தியாவோடு தன்னை ஐக்கியப் படுத்தினார். முதலில் கெய்ராவில் வரிமறுப்பு ஆரம்பித்து குடிகளின் கஷ்டத்தை நிவர்த்தித்தார். பின்னர் சாம்பரான் அவுரி தோட்டங்களில் கூலிகள் படும் கஷ்டத்தை சட்ட மறுப்பினால் போக்கினார். ரௌலட் சட்டத்தை நீக்க சத்தியாக்கிரக வாரவிழாவை ஆரம்பித்தார். அதிலிருந்து கிளம்பிய பாஞ்சால படுகொலைக்கு பரிகாரம் தேட ஒத்துழையாமை துவக்கினார். சென்ற வருஷம் உப்புச் சட்ட மறுப்பு போர் தொடுத்தார். இப்படியாக, படிப் படியாய் இந்தியாவும், மகாத்மாவும் கலந்து பூர்ணமாய் ஐக்கியமானார்கள். இன்று மகாத்மா இந்தியாவாயிருக்கிறார். இந்தியா மகாத்மாவாயிருக்கிறது. இருவரையும் பிரிக்க முடியாது. இந்தியாவிலுள்ள 35 கோடி ஜனங்கள் மனதிலும் மகாத்மா ஒளிவிளக்காய் பிரகாசிக்கிறார்.

தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியாவிற்கு 1914ல் மகாத்மா வந்தார். அதுமுதல் ஒவ்வொரு கஷ்டத்திற்கும் இந்தியா சபர்மதி மகரிஷியை நோக்கும். ஒவ்வொரு நெருக்கடியான சமயத்திலும் மகாத்மா வெளிவராமல் இருப்பதில்லை. இந்தியர் துன்பக் குரல் கேட்கும்போதெல்லாம் "அஞ்சேல்" என்ற அபய மொழி சபர்மதியிலிருந்து எதிரொலிக்கும். ஆகவே இந்தியர் எக் கஷ்டத்தையும் மகாத்மா மீது போட்டு நிம்மதியாயிருந்தனர். 1914ல் இந்தியா வந்த மகாத்மா இதுவரை இந்தியாவை விட்டு ஒரு நாள்கூட வெளியே போனதில்லை. அவரைப் பிரிந்து வாழ்ந்த அநுபவத்தை இதுவரை இந்தியா பெற்றதில்லை. இப்பொழுதோ, குறைந்தது 2 மாத காலமாவது அவர் இந்தியாவை விட்டு பிரியவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தியர் தாயைப் பிரிந்த சேயைப்போலும், காதலனைப் பிரிந்த காதலியைப் போலும் கதறுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? 'செல்லவுண்டேல் எனக்குரை, மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை" என்று இந்தியா புலம்புகிறது. முக்கியமாக கூர்ஜர விவசாயிகளும் ஐக்கிய மாகாண விவசாயிகளும் பரிதவிக்கின்றனர். என்ன செய்வது? நமக்காகவே மகாத்மா சீமை செல்லுகிறார். அவர் செல்லுவதால், இந்தியாவின் பெருமை உயரும். சீக்கிரம் விடுதலை கிடைக்கும். இந்த ஆறுதலைக் கொண்டு மகாத்மா பிரிவை நாம் சகித்திருப்போமாக! மகாத்மா காந்தி சுகமாய் சென்று, திடகாத்திரத்துடன் வெற்றி வீராய் திரும்பும்படி எல்லாம் வல்ல பராசக்தியை பிரார்த்திக்கிறோம்.

வாழ்க நீ! எம்மான்,
இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா!
நீ வாழ்க! வாழ்க—பாரதி.

அன்பு சக்தியை உபயோகிப்பவனே கடவுளை அறிய முடியும். அன்புள்ள இடத்தில் உயிர். பகையுள்ள இடத்திலோ அழிவு!—மகாத்மா.

Koviloor Digital Library



## முதல் மந்திரி துரோகம்

பிரிட்டிஷ் முதல் மந்திரி ராம்சே மெக்டனல்ட் சென்ற வாரம் ஒரு பலே பல்டி அடித்தார். பிரிட்டனில் பணக் கஷ்டம் நேரிட்டிருக்கிறபடியால், சிக்கன திட்டம் ஒன்றை மந்திரிகள் தயாரித்தார்கள். இதில் வேலையில்லாதவர்களுக்கு கொடுக்கும் உதவியில் குறைப்பதும் ஒன்று. தொழிற்கட்சியாருக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் ஆட்சேபித்தார்கள். பிரிட்டனுக்கு கடன் கொடுக்கும் அமெரிக்காவோ, அம்மாதிரி குறைக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்ததாம். முதல் மந்திரியை ஆதரிப்பவர்களும் மந்திரிசபையில் குறைந்தனர். பிரபல மந்திரிகளாகிய, ஹெண்டர்சன், பென், லான்ஸ்பரி முதலியவர்கள் தொழிற் கட்சி சங்கம் சொல்லுவதை ஆதரித்தனர். மெக்டனல்ட் இருதலை கொள்ளி எறும்பு போல பரிதவித்தார் ஒன்று தமது கட்சியாகிய தொழிற்கட்சி சொல்லுவது போலச் செய்ய வேண்டும் அல்லது மந்திரி வேலையை ராஜீனாமாச் செய்து மற்ற கட்சி மந்திரி சபை நடத்தும்படி விட்டுவிடவேண்டும். மெக்டனல்டுக்கு மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை. தொழிற்கட்சி சொல்லுகிறபடி நடக்கவும் முடியவில்லை, மந்திரி பதவியும் வேண்டும். ஆகவே ஒரே பல்டி யடித்தார். தமது மந்திரி சபையை கலைத்தார். கன்சர்வேடிவ்கள், லிபரல்கள், தமது சீடர்கள் சேர்ந்த புதிய கலப்பு மந்திரி சபையை அமைத்து தாமே பிரதம மந்திரியானார் இச்செய்கை தொழிற் கட்சிக்கு துரோகஞ் செய்வதாகும். தொழிற்கட்சியால் முதல் மந்திரி பதவியை பெற்ற பின்பு, அக்கட்சியை உதறித்தள்ளுவது நன்றி கெட்ட செய்கை. சரியோ தப்போ, கட்சி சொல்லுகிறபடி நடப்பதே யோக்கியர்களுக்கு அழகு. மெக்டனல்டை தொழிற் கட்சியார் தங்கள் கட்சியிலிருந்து தள்ளிவிட்டார்கள். பார்லிமெண்டில் சுமார் 200 அங்கத்தினர்கள் அவருக்கு எதிராக ஹெண்டர்சன் தலைமையில் கட்சியாய் சேர்ந்திருக்கிறார்கள். மெக்டனல்ட் பக்கம் சுமார் 20 பேரே இருக்கின்றனர். தற்கால மந்திரி சபையில் எந்தக் கட்சிப் பிரதிநிதியாக மெக்டனல்ட் சேர்ந்திருக்கிறார்? 6 மாதங்களுக்கு அப்புறம் நடக்கப் போகும் தேர்தலில் எந்தக் கட்சி சார்பாக மெக்டனல்ட் நிற்கப் போகின்றார்? தொழிற் கட்சியை அவர் நட்டாற்றில் விட்டு விட்டார்!

## சர்க்கார் கவிழ்ந்தது.

சீமையில் தொழிற் கட்சி சர்க்கார் கவிழ்ந்துவிட்டது. தொழிற்கட்சி சர்க்காரில் மந்திரிகளாயிருந்த 4 பேர், கன்சர்வேடிவ் கட்சியில் 4 பேர், லிபரல் கட்சியில் 2 பேர் ஆக 10 பேர் அடங்கிய ஒரு "அவியல்" மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது. தொழிற்கட்சி மந்திரி சபை ஒழிந்துவிட்டதால் இந்தியாவிற்கு குடி முழுகிப் போனது ஒன்றுமில்லை. எந்த ராஜா பட்டத்திற்கு வந்தாலும், பல்லக்கு தூக்குகிறவனுக்கு அதே வேலைதான். எந்த மந்திரி சபை அதிகாரத்திற்கு வந்தாலும், இந்தியாவை கொள்ளையடிப்பதில் அபிப்பிராய பேதம் இருக்காது. தொழிற் கட்சி மந்திரிசபை அமைத்தால் இந்தியாவிற்கு சுயராஜ்யம் வந்து விடும் என்று பலர் கனவுகண்டு கொண்டிருந்தார்கள். இரண்டு தடவை தொழிற்கட்சி மந்திரி சபை அமைத்தது. என்ன நடந்துவிட்டது? சுயராஜ்யம் கப்பலேறி வந்துவிட்டதா? இந்த தொழிற் கட்சியார் அதிகாரத்தில் இருக்கும் போதுதான் 1924ல் வங்காள ஆள்தூக்கி சட்டத்திற்கு அநுமதி கொடுத்தார்கள். இவர்கள் காலத்தில்தான் சென்ற வருஷம் மிருகத்தனத்திலும் கேவலமான போலீஸ் தடியடிகள் இந்தியாவில் நடந்தன. கன்சர்வேடிவ் மந்திரி சபை காலத்தில் நடக்காத கொடுமைகளையெல்லாம் இவர்கள் காலத்தில் தான் நாம் அநுபவித்தோம். ஆகவே இந்த தொழிற்கட்சி மந்திரிசபை மண்ணாய் போய்விட்டதைக் கண்டு நமக்கு அணுவளவும் வருத்தம் கிடையாது. புதிய மந்திரி சபையில் இந்தியா மந்திரியாக இருப்பவர் சர் சாமுவேல் ஹோர் என்ற கன்சர்வேடிவ் கட்சிக்காரர். மந்திரி சபையில் தனிப்பட்டவர்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் இந்தியா சம்பந்தமாய் நல்ல காரியம் ஒன்றையும் செய்துவிட முடியாது. கெட்ட காரியத்தை கூடியவரை தடுக்கவோ அல்லது அதற்காக அநுதாப மொழிகள் கூறி மழுப்பவோ முடியும். இந்த காரியத்தை இந்திய மந்திரியாயிருந்த ஸ்ரீ. பென் செய்து வந்தார். அவருக்குப்பதில் வந்திருக்கும் சர். சாமுவேல் ஹோர் இந்தியாவின் ஜன்மவிரோதி. சர்ச்சில் கோஷ்டியைச் சேர்ந்தவர். ஒரு விஷயத்தில் பார்த்தால், இம்மாதிரி எதிரிகளால் தான் நமக்கு சுயராஜ்யம் சீக்கிரமாய் கிடைக்கும். ஆகவே சர். சாமுவேல் ஹோர் நியமனத்தை நாம் வரவேற்கிறோம்.

Koviloor Digital Library



# கர்ம பலன் விடுமா?

1857 அக்டோபர் 11-ல் ஸௌத்தாம்டனில் இந்தியாவில் ஏற்பட்ட சிப்பாய் கலகத்தின் பயங்கரத்தைப்பற்றி இங்கிலாந்து முற்றிலும் ஒரே அமளியாக இருந்த சந்தர்ப்பத்தில், எட்மண்ட் கெல் என்ற ஒரு கருணையுள்ள கிருஸ்தவப் பாதிரி செய்த மிகவும் உருக்கமான பிரசங்கம்:—

இந்தியாவை நாம் அடைந்த விதத்தையும் இந்தியாவில் நமது ஆட்சி முறைகளைப் பற்றியும் நாம் ஆராய்ந்து பார்த்து நாம் குற்றமற்றவர்களா யிருக்கின்றோமா வென்றும், சிகேக பாவமாக வியாபார முறையில் நம்மிடம் மிக நாணயமாக நடந்து கொண்டவர்கள் நமக்கு விரோதமாக ஏன் எழும்ப வேண்டுமென்றும், மிகத் தொலைவிலுள்ள அந்நாட்டில் இரத்த வெறியும் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற கொடூரமான எண்ணமும் ஏற்பட்டு ஒரே அடியாகக் கூக்குரலை எழுப்ப வேண்டிய காரணத்தையும் பரிசீலனை செய்து பார்ப்போம். இவ்வாறு நம்மை நாமே பரிசீலனை செய்து கொள்வதால் இங்கிலாந்தும் இந்தியாவும் மீண்டும் சமாதான நிலையை யடையக் கூடுமாதலால் அதனால் நமக்கு நன்மையே விளையும்.

இந்தியர்களின் இரத்தப் பெருக்கினால் அவர்களை ஆள நமக்கு உரிமையில்லையென நான் கண்டிப்பாய்க் கூறுவேன். நமது பெருங் குற்றங்களை நாம் ஒப்புக் கொண்டுதான் தீர வேண்டும். நாம் இந்தியாவைக் கைப்பற்றியதில் மிகவும் கேவலமான ஏமாற்றுக்களையும் பலாத்காரங்களையும் பிரயோகித்து இந்தியர்களுக்குத் துரோகம் செய்து, பெருந் தவறிழைத் திருக்கின்றோம் என்பதை ஒப்புக் கொள்ளாம லிருக்க முடியாது. கிளைவ் பிரபுவும், வாரன் ஹேஸ்டிங் பிரபுவும், வெல்லஸ்லி பிரபுவும் இந்திய அரசர்களை ஒருவரை சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தும் மற்றொருவரை இறக்கியும் அங்கு மிங்கும் கால்பந்து போல் உருட்டி விட்டார்கள். மிகவும் கடினமான தப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அதன்படி நடக்கும்படி அவர்களை வற்புறுத்தினார்கள். தங்கள் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்குப் பொருள் சம்பாதிப்பதற்காக அவர்களைச் சின்னாபின்னமாக்கி அவர்களுக்குள் சச்சரவுகளை உண்டாக்கினார்கள்.

### பாவ மன்னிப்பு

இத்தகைய குற்றங்களையெல்லாம் இழைத்த இங்கிலாந்து ஒப்புக்கொள்ள வேண்டாமா? இத்தகைய குற்றங்களை ஒரு சமூகம் தாங்கிக் கொண்டிருக்க முடியுமா? சிப்பாய்கள் இரத்த வெறி கொண்டு நம்மைத் தாக்கினார்களென்று நாம் இப்பொழுது கூச்சலிடுகின்றோம்.

### உலகெங்கும் சுதந்திர எழுச்சி!

ஒவ்வொரு சமூகமும் தமது சொந்த அரசாங்கத்தை ஸ்தாபித்துக் கொள்ள சுதந்திரம் உடையதாகவே யிருக்கின்றது. இந்த உரிமையைக் கொண்டுதான் ரன்னிமேட் பிரபுக்கள் மக்னசார்ட்டாவை ஏற்படுத்தினார்கள். ஹாம்டன் நாட்டைவிட்டு ஓடினார். சுதந்திரதாகம் அதிகரித்ததால் ஸிட்னி தூக்கில் மாண்டார். சுதந்திரப்போர் தொடுத்து எட்வர்ட் என்ற கொடுங்கோல் மன்னனிடமிருந்து வாலஸ் தமது தாய்நாட்டைக் காப்பாற்றினார். புரூஸ் சண்டை செய்து பானக்பர்ன் யுத்தத்தை ஜெயித்தார். ஸ்விஸ் தேச பக்தரான வில்லியம் டெல் என்பவர் மலைநாட்டில் பதுங்கியிருந்து கொண்டு ஆஸ்டிரியக் கொடுங்கோலாட்சியை வீழ்த்தி ஜனநாயக உரிமையை ஸ்தாபித்தார். போலண்டின் நன்மைக்காக கோஸியஸ்கோ தமது இரத்தத்தை சிந்தினார். மதாவேசமுள்ள பல சுதந்திர வீரர்கள் என்று மழியாப் புகழை ஸ்தாபித்திருக்கிறார்கள். "உலக முற்றிலும் ராஜிய மத சம்பந்தமான சுதந்திரம்" என்ற கூக்குரல் எழும்பி யிருப்பதின் கருத்தென்ன? நம் நாட்டின் சுதந்திரங்களைவிட அயல்நாட்டின் சுதந்திரங்கள் குறைவுபட்டவை எனக் கருதுதல் நீதியாகுமா? இதை அயல் நாட்டார் ஒப்புக்கொள்வார்களா? இந்தியர்கள் நமது ஆக்கினையை விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்திருக்கின்றார்களென்பது உண்மையே. ஓ! ஒரு நூற்றாண்டளவில் நாம் அவர்களுக் கிழைத்திருக்கும் தீமைகளையே அவர்கள் நம்மீது திருப்பி யிருக்கிறார்கள். இந்தியா தன்னுள் அடங்கிக் கிடக்க வேண்டுமென இங்கிலாந்து எதிர்பார்க்கின்றது. சுய நலத்தை உத்தேசித்து அன்னியர்கள் தன்னைக் கணக்கற்ற பிரிவாக வகுப்பதையும், தன்மீது படையெடுத்து தன் அரசர்களை சிம்மாசனத்தினின்றும் இறக்குவதையும், தனது செல்வத்தை உறிஞ்சி தன் ஜனங்களை மிகக் கொடுமையான பஞ்சத்திற் காளாக்குவதையும் இந்தியா எங்ஙனம் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

Koviloor Digital Library



# சிரிப்பதா? அழுவதா? ::

(எம்டன் எழுதியது)

கனம் ஏஜன்டு துரை யவர்களே! தங்களுக்கிருக்கும் ஏராளமான வேலைத் தொந்திரவின் இடையில் யானும் தங்களைத் தொல்லைப்படுத்துவது எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. என்செய்வது? சங்கத்தை ஒழிக்கச் செய்ததின் பிரதிபலனாக இதையாவது எம்டன் தங்களுக்குச் செய்யாவிடில் நான் நன்றி மறந்தவனாவேன். ஆலைத் தொழிலாளிகள் பெரும்பாலோர் சகல விதத்திலும் மந்த உணர்ச்சி யுடையவர்கள் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் இதற்காக அவர்களை நசுக்கப்படாது. சில டிப்பார்ட்மென்டில் இருக்கும் துரோகிகள் பலர் தங்களுக்கு துர்ப்போதனை செய்து, தொழிலாளர்களை இம்சை செய்யும் விதம் சொல்லிக் கொடுத்து மானங்கெட்ட பிழைப்பு பிழைக்கிறார்கள் என்பதும் உண்மையே! பாவம் சங்கு நிறுத்தின விஷயத்திலும் தாங்கள் ஒரு கீழ்தர உத்தியோகஸ்தரின் பேச்சுப்படி நடந்து விட்டீரென்று தொழிலாளர்கள் ஒரு முகமாக குறை கூறுகிறார்கள்.

எவர் சொல்லி அல்லது எவர் ஆலோசனைப்படி தாங்கள் நடந்தாலும், பொறுப்பும் பெயரும் தங்கள்மீது தானே வரும். இப்படி கீழ் சிப்பந்திகளின் வலையில் விழுந்து பலர் நகைக்கும் செய்கைகளை நீர் செய்வதைக்கண்டு நான் சிரிப்பதா? அழுவதா? என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறேன்.

### எனக்குத் தெரியாதா?

வெள்ளையர்கள் அதிக சுகபோகத்தை அனுபவிக்கிறார்கள், கருப்பர்கள் சிக்கனப்பெட்டியில் போட்டு பூட்டப்படுகிறார்கள் என்று நான் 'காந்தி'யில் எழுதியதைக்கண்டு தாங்கள் வெள்ளையர்களுக்கும் சிக்கனம் தேடி விட்டீர்கள். பலே! இதுதான் உண்மையான ஏஜென்டின் நிர்வாகம். நிறபேத மில்லாத நீதி. ஆனால் எனக்கொரு சந்தேகம். இப்படி உங்கள் கோஷ்டியாருக்கும் சிக்கனம் செய்ய எத்தனை நாள் ஆலோசனை செய்தீர்கள் என்பது சிற்றறிவிற்கு எட்டவில்லையே!

துரைகள் பங்களாவிற்கு விடும் இனும் ஆட்களில் ஒருவனை நிறுத்தி விட்டீர். தினம் கொடுக்கும் இரவு இராந்தலைக் கொடுக்காது நிறுத்திவிட்டதோடு, இனும் விறகையும் கொடுக்கக் கூடாது எனக் கட்டளையிட்டு விட்டீர். என்ன சிக்கனம்! வெகு இலாபம். ஆலைக்குப்பெரியவரே! இது யாரை ஏமாற்றும் வித்தை? பல நூற்றுக் கணக்காக சம்பளம் வாங்கும் உங்கள் இனத்தார்க்கு இனும் ஆள்கூட எதற்கு? ஒரு ஆளுக்கும் வேலை யில்லையே! பட்டப்பகல் போல் எலக்டிரிக் விளக்குகள் எரியும் பங்களாக்களுக்கு கிருஸ்னயில் விளக்கெதற்கு? பட்லர்கள் வீட்டிற்கு கொண்டு போகவும், உங்கள் வீட்டு அடுப்பு எரிவதற்குமே அந்த எண்ணெய் உபயோகம். ஒரு ரூபாய் விறகு நிறுத்திப்போடுவதில் பிரமாதமான நஷ்டமொன்று மில்லை. இந்த மூன்றுவித சிக்கனத்திலும் மாதம் பத்து அல்லது பதினைந்து ரூபாய்க்கு ஆலைக்கு இலாபம் தேடிவிட்டீர். இந்த மூன்றுவகைகளும், நிறுத்திவிட்டதால் துரைகளின் சொந்த சம்பளத்தில் ஒன்றும் குறைபடவில்லை. கம்பெனியாரால் சம்பளத்திற்கு மேல் இனுமாக இதுவரை அளிக்கப்பட்டுவந்தது என்பது கவனிக்கத் தக்கது. ஐயாவே! இந்தக்கண்ணைத் துடைக்கும் ஏற்பாட்டின் சூழ்ச்சி என்னவென்பது எனக்குத் தெரியாதா? பெரிய துரையே, இது வல்ல சிக்கனம். கண்ணைத்திறந்து உலகத்தைப் பாருங்கள். மற்ற இடத்தில் நடப்பதுபோல், துரைமார்கள் சம்பளத்தில் நூற்றுக்கு ஐம்பது அல்லது 25 வீதம் உடனே குறையுங்கள். அதனால் கம்பெனிக்கு இலாபமுண்டு. வெள்ளையர்களுக்கும் சிக்கனம் என்ற வேடிக்கையைக் காட்டி, தொழிலாளர்கள் தலையில் கைவைக்காதீர், துரோகம் செய்யாதீர்.

---

## தமிழா, கேள்!

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார். —பாரதி

Koviloor Digital Library



# “புல் சூட்” பிழைப்பு.

கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு ஒருவன் நெய்க்கு அலைந்தானாம். நமது நாட்டில் பிழைக்கும் வழிகள் எவ்வளவோ இருக்கின்றன. இருந்தாலும் “புல் சூட்” மாட்டிய படித்தவர்கள் பலர் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். மிகவும் அற்ப விஷயமான பொம்மைகளை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியாவில் வருஷம் 65 லட்சம் ரூபாய்க்கு பொம்மைகள் இறக்குமதி யாகின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை தகர பொம்மைகள். மேல் நாடுகளில் ராணுவ காலேஜ், ரயில்வே பயிற்சிசாலை முதலிய இடங்களில் பொம்மைகள் மூலமாக பாடம் கற்பிக்கிறார்கள். அறிவை வளர்க்கக்கூடிய பொம்மைகளும் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் இந்தியாவில் இறக்குமதியாகிற பொம்மைகள் வெறும் விளையாட்டுப் பொம்மைகள். சிறு குழந்தைகள் விளையாடி உடைத்தெறியும் பொம்மைகள். ஒரு காசுக்கு உதவாதவை. 65 லட்சம் ரூபாய் வெளி நாடுகளுக்கு கொட்டுகிறோம். இந்த பொம்மைகளை நம் நாட்டில் ஏன் செய்யக்கூடாது? இங்கு வரும் தகரப் பொம்மைகள் அநேகமாய் ஜெர்மனியிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் வருகின்றன. அந்த பொம்மைகள் மிக மலிவாய் விற்பதை யாவரும் அறிவார்கள். எப்படி விலை மலிவாய் விற்கிறார்கள்? முதலில், பொம்மைகளுக்கு உபயோகிக்கும் தகரங்களை புதிதாக வாங்குவதில்லை. தகர தொழிற்சாலைகளில் துண்டு விழும் தகரங்களை மலிவாய் வாங்குகிறார்கள். பொம்மைகள் செய்ய உபயோகிக்கும் இயந்திரங்களும் புதியவையல்ல. மற்ற தொழிற்சாலைகளில் கழித்துப்போட்ட இயந்திரங்களை விலை மலிவாய் வாங்குகிறார்கள். ஆகவே அவர்கள் செய்யும் பொம்மைகளையும் மலிவாய் விற்க முடிகிறது. இந்தியாவில் கழிவு தகரங்களுக்கு பஞ்சமில்லை. பழைய இயந்திரங்களுக்கும் குறைவில்லை. வேலை இல்லாமல் திண்டாடும் “புல் சூட்” மாட்டிய படித்தவர்களுக்கும் அளவில்லை. இவர்கள் ஏன் இம்மாதிரி பொம்மைகள் செய்யக்கூடாது? எல்லாரும் சர்க்கார் சேவகத்திலும், சோம்பேறி வாழ்விலும் ஆசைப்பட்டால், அவை நடக்கிற காரியமா? பி. ஏ. படித்துவிட்டு, 25 ரூபாய் உத்தியோகத்திற்கு “புல் சூட்” மாட்டி அலைவதைவிட, தொழில் செய்து பிழைப்பது கடுகளவும் இழிவானதல்ல.

# தமிழா, தூங்காதே!

(ஆசிரியர் திரு.வி. கலியாணசுந்தர முதலியார்)

இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவளல்லள்; இன்று பிறந்தவளல்லள். அவள் மிகமிகத்தொன்மை யுடையவள்; கலைகளை யுடையவள். அவளையா கொல்வது? தாய்க் கொலை புரிவதா தமிழர் வீரம்? வீரத்துக்குரிய உங்கள் இளமுகம் நோக்கிக் கேட்கிறேன். நேற்றும் இன்றும் பிறந்த நாடுகளையுங் கலைகளையும் ஓம்பவும் பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகிறார். நாமோ-பாவிகளாகிய நாமோ - பழம்பழம் பெருநாட்டை மறைக்கப் பார்க்கிறோம். தமிழ் இறந்த பின் “தமிழ் மண்” மட்டுமிருந்தென்? மொழியன்றோ நாடு? கலைகளல்லவோ நாட்டின் உயிர்? மொழி யிறந்துபடின் நாடும் இறந்துபடுமன்றோ? உலகிற்கே ஒரு போது நாகரிகத்தை வழங்கிய மாண்பு வாய்ந்த ஒரு பெரும் நாட்டையா மறைப்பது? இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலையை ஓருங்கள்; ஓர்ந்து உங்கள் பொறுப்பை யுணருங்கள்; தமிழ்த் தாயைப் புறப் போர்வையில் ஒப்பனை செய்து, அரியாசனத் தமர்த்தச் சூள் கொண்டெழுங்கள், எழுங்கள்.

““தமிழ் தமிழ்” எனில் தமிழில் போதிய நூல்களில்லையே” என்று சிலர் கேட்கிறார். இச்சகோதரர் நிலை இரங்கற்குரியதே. காலதேச வர்த்தமானத்துக்கேற்ற கலை நூல்கள் தமிழில் இல்லையேல், அவைகளை யாக்கப்புகுவதே அறிவுடைமை. நில நூல், வான நூல், உயிர் நூல், பொருள் நூல் முதலியவற்றைப் பிற மொழிகளினின்றும் பெயர்த்தெழுதிக் கொள்ளலாம்.

ஜர்மனியர், பிரஞ்சுக்காரர் முதலியோர் எம்மொழியில் கல்வி பயில்கிறார்? அவர் தத்தம் தாய்மொழியிலேயே பயில்கிறார். தமிழன் மட்டும் ஏன் பிறமொழி வாயிலாகக் கல்வி பெறல் வேண்டுமென்பது விளங்கவில்லை.

ஆங்கில நூல்கள் யாவும் முதல் நூல்களல்ல. அவைகளிலும் மொழி பெயர்ப்பு நூல்களிருக்கின்றன. ஜெர்மானியன் ஒருவன் எதாயினும் ஒரு புதுமை காண்பனேல், அவன் அதை ஆங்கிலத்திலா எழுதுகிறான்? அவன் அதைத் தன் தாய்மொழியிலேயே எழுதுகிறான். ஆங்கிலேயர் அதைத் தமது தாய்மொழியில் பெயர்த்தெழுதிப் பயில்கிறார். இவ்வாறு தமிழர் ஏன் செய்தலாகாது?

Koviloor Digital Library



## செத்து மடிவது ஏன்?

விவசாயத்தில் எத்தனை பேருக்கு பிழைப்புண்டோ, அதற்கு அதிகமாக அதில் போய் விழுவதாக சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். தற்காலம் விவசாயத்திலோ, மற்ற தொழில்களிலோ கிடைக்கும் வருமானத்தைப் பார்த்தால், இந்நாட்டில் உள்ளவர்களுக்கு போதுமான வருமானம் இல்லையென்பது விளங்கும். அதாவது வருமானத்திற்குமேல் ஆட்கள் இருக்கிறார்கள். இதனால் போதிய ஆகாரமின்றி பட்டினி கிடக்க நேரிடுகிறது. பட்டினியால் உடம்பில் சக்தி குறைகிறது. சக்தி குறையும்போது எந்த வியாதியும் எளிதில் பிடித்துக் கொள்ளுகிறது. காய்ந்த சுள்ளிகளில் நெருப்பு எவ்வளவு சுலபமாய் பற்றுகிறதோ அதைப்போல தொத்து வியாதிகள் வெகுசுலபமாய் இந்தியரை பற்றுகிறது. இந்த அபிப்பிராயத்தை கணக்குகள் மூலமாய் காட்டுகிறோம்.

| வியாதி | வருஷம் | மாண்டவர்கள் |
|---|---|---|
| பஞ்சம் | 1875-1900 | 2,37,40,000 |
| பிளேக் | 1901-1920 | 9,522445 |
| மலேரியா | 1900-1921 | 18361167 |
| இன்புளுயன்சா | 1918-1919 | 8419694 |

தரித்திரம் இல்லாமல் ஜனங்கள் செழிப்பாய் வாழ்ந்து வந்தால் தொத்து நோய்கள் இவ்வளவு அதிகமாய் பரவியிருக்கா. இதை தடுக்க வேண்டுமானால் ஜனங்களுக்கு போதிய உணவு கிடைக்க வழி செய்ய வேண்டும். தலைவிதி தலைவிதி என்று ஜனங்கள் பேசுவதை ஒழிக்கவேண்டும். எந்தக் கஷ்டம் வந்தாலும் கர்ம பலன் என்று பேசும் சோம்பேறிப் பேச்சை விடவேண்டும். "முயற்சி மெய் வருந்த கூலி தரும்" என்ற பழமொழியை ஜனங்கள் கைக்கொண்டு தீவிரமாய் போராட வேண்டும். உழைப்பு, உழைப்பு, எங்கும் உழைப்பாய் இருக்கவேண்டும். எல்லாத் தொழில்களையும் திறமையாய்ச் செய்ய அவா வேண்டும். இவற்றிற்கெல்லாம் மனிதப் பிரயத்தனம் வேண்டியது அவசியமானாலும், சர்க்கார் முயற்சியும் முக்கியமாய் வேண்டும். ஜனங்கள் தரித்திரத்தை விரட்ட சர்க்கார் முன்னின்று வழி காட்டவேண்டும். அறிவின்மையைப்போக்க ஒவ்வொரு தெருவிலும் பள்ளிக்கூடங்கள் வைக்க வேண்டும். இந்த சர்க்கார் அந்த வேலைகளை இதுவரைச் செய்யவில்லை, இனியும் செய்யாது. சுயராஜ்ய சர்க்கார் வந்தால்தான் அந்த வேலைகள் நடைபெற முடியும். அப்பொழுது தான் அநியாயமாக நமது ஜனங்கள் ஈசல் போல மடிவதும் நிற்கும்.

## தமிழ் மாகாண நவஜவான் மகாநாடு

நாளது செப்டம்பர் மாதம் 11, 12, 13 தேதி வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஈரோட்டில் கூடும். தலைவர் ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸ். ஸ்ரீமதி துர்காபாய் மகாநாட்டைத் திறந்து வைப்பார். உண்ணாவிரத தியாகி ஜதின் தாஸின் சகோதரர் கிரன்தாஸ், பம்பாய் யுவர் தலைவர் மேஹர் அலி, டாக்டர் குந்தல் குமாரி தேவி, உத்கலநாட்டு ஸ்ரீமதி சாரளாதேவி, பம்பாய் யுத்தசபைத் தலைவர்கள் ஸ்ரீமதிகள் ஸோபியா ஸோப்ஜீ, கமலா தேவி சட்டோபாத்தியாய ஸ்ரீஜத் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய முதலியோர் விஜயஞ் செய்வர்.

## தமிழ் மாகாண மாதர்கள் மகாநாடு. ஈரோடு.

நாளது செப்டம்பர் மாதம் 12, 13 தேதி சனி, ஞாயிறு கிழமைகளில் கூடும். உத்கல வீரமணி ஸ்ரீமதி ஸாரளாதேவியார், தலைவி. ஸ்ரீமதி பத்மாவதி ஆஷர், வரவேற்புத் தலைவி.

சுதேசி புடவைகள்

கலருக்கு உத்திரவாதம். அழகான கரையும் முகதலையும், எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

6 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 2-15-0
8 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 3-15-0
9 கெஜம் 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 4-4-0

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட்

காந்தி தொப்பி 1 க்கு அணா 6.

½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக் அனுப்பப்படும்.

காந்தி ஸ்டோர்ஸ்,
மவுண்டு ரோட், மதராஸ்.

மறுபடியும் சட்ட மறுப்பு ஆரம்பித்தால் 12 முஸ்லிம்கள்கூட ஜெயிலுக்குப்போக மாட்டார்கள் என்று மௌலானா ஷவுகத்அலி கூறினார். ஆரம்பித்த வினாடியே 5 ஆயிரம் முஸ்லிம்கள் ஜெயில் செல்ல தயார் என்று நான் அவருக்கு பதில் கூறினேன்.-டாக்டர் சையது முகமது.

Koviloor Digital Library



# சர். பட்டாணி தேசபக்தி.

காங்கிரஸ் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருந்த ரங்கசாமி ஐயங்கார் துரோகஞ்செய்து விட்டார். ஆனால் ஆயுள் நாள் முழுவதும் அதிகாரியாயிருக்கும் சர். பட்டாணி ஒரு பெரிய தேசபக்தராய் ஜொலிக்கிறார். சர். பிரபா சங்கர் பட்டாணி ஒரு உபாத்தியாயரா யிருந்தார். அப்புறம் கத்தியவார் ராஜகுமாரருக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயரானார். அதிலிருந்து சமஸ்தான திவானானார். பின்னால் பிரதம மந்திரியானார். அவருடைய ராஜதந்திர மேன்மை பம்பாய் சர்க்காரில் கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர் பதவி யளித்தது. அந்த வேலை முடிந்தவுடன் லண்டனில் இந்திய மந்திரி சபையில் அங்கத்தினரானார். அங்கிருந்து திரும்பிய பின்பு பவநகர் சமஸ்தான நிர்வாக சபைக்கு தலைவரானார். இப்பொழுதும் அதே பதவியில் இருக்கிறார். லண்டன் மகா நாட்டிற்கு சமஸ்தான பிரதிநிதிகளில் ஒருவராய் முதல் மகா நாட்டிற்கும் போயிருந்தார். சென்ற 15௳ மற்ற பிரதிநிதிகளோடு லண்டன் மகாநாட்டிக்கு கப்பல் ஏற தயாராயிருந்தார். ஆனால் மகாத்மா காந்தி போகாமல் நின்றவுடன் தாமும் போவதை நிறுத்திவிட்டார் அதுமட்டுமோ? மகாத்மா சொல்லும் புகார்கள் சரியானவை யென்றும், சர்க்கார் அதிகாரிகள் உடன்படிக்கையை மீறி நடந்திருக்கிறார்கள் என்றும், விசாரணைக் கமிட்டி நியமிக்கவேண்டியது அவசியம் என்றும் பகிரங்கமாய் சொன்னார். ராஜபக்தி மிகுந்த ரங்கசாமி ஐயங்காரே, சர். பட்டாணி சொல்லுவதை கேட்டீரா? அற்பருக்கு பவிஷு வந்தால் அர்த்தராத்திரி குடை பிடிப்பார்களாம். பெரிய பதவியிலுள்ள சர். பட்டாணி மகாத்மா போகாததால் தாமும் நின்றுவிட்டார். புதிதாய் பதவி கிடைத்த ரங்கசாமி ஐயங்காருக்கு நிற்க முடியவில்லை! சர். பட்டாணி ஆதிமுதல் சர்க்காருக்கு புத்தி சொல்லி வந்தார். முடிவில் அவர் முயற்சி வெற்றி பெற்றது. மகாத்மாவோடு அவரும் சீமைக்கு புறப்பட தயாராய் விட்டார். சர். பட்டாணி ஒரு பெரிய அதிகாரியா யிருந்தபோதிலும், அவருடைய தேசபக்தி அபாரமானது. மகாத்மாமீது மிகுந்த அபிமானமுள்ளவர். மகாத்மா கொள்கையை பின் பற்றுகிறவர். ஏதோ ஒரு விஷயத்திற்கு பிராயச்சித்தம் செய்ய சென்ற வருஷம் உண்ணாவிரதம் கூட கைக்கொண்டார். சென்ற வருஷம் மார்ச்சு மாதம் 12௳ மகாத்மா டண்டிக்கு புறப்படும்போது சர் பட்டாணி ஆமதாபாத் வந்து, அவர் புறப்படுகிறவரை கூடவே இருந்தார். வயது மிகுந்த பட்டாணியின் தேசபக்தியை போற்றுகிறோம். அவர் நீடூழி வாழ்க!

# மகாத்மா வெற்றி.

மகாத்மா சிம்லாவில் வெற்றி பெற்று விட்டார். சர்க்கார் கீழே இறங்கிவிட்டது. பார்டோலி விஷயமாக விசாரணை செய்ய சர்க்கார் சம்மதித்துவிட்டது அதற்காக நாசிக் கலெக்டரை நியமித்திருக்கிறது. ஆகவே மகாத்மா சீமைக்கு புறப்பட ஆட்சேபனையில்லை. 27௳ வியாழக்கிழமை மாலை 6-50 மணிக்குத் தான் சர்க்காருக்கும், மகாத்மாவிற்கும் ராஜி ஏற்பட்டது. உடனே புறப்பட சிம்லாவில் ரயில் வண்டியில்லை. அன்று இரவு பம்பாய் மெயிலில் புறப்பட்டால்தான் சனிக்கிழமை காலை பம்பாய்க்கு வந்து உடனே கப்பலேற முடியும். ஆகவே ஒரு ஸ்பெஷல் ரயில் ஏற்பாடு செய்து அதில் மகாத்மாவை ஏற்றி காலகா ஸ்டேஷனில் வந்து பம்பாய் மெயிலில் பிரயாணஞ் செய்ய சௌகரியஞ் செய்தார்கள். அவருடன் சர். பிரபாசங்கர் பட்டாணியும் புறப்பட்டார். சமாசத்தைக் கேட்டு சிம்லாவில் உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த திருப்தி. சர்தார் பட்டேல், எல்லைப்புற காந்தி, பண்டித ஜவார்லால், முதலியவர்களுக்கும் திருப்தியே. 29௳ சனிக்கிழமை காலை மகாத்மா பம்பாய் வந்து சேர்ந்தார். பெரிய பொதுக் கூட்டம் ஒன்று ஏற்பாடாயிருந்தது. உபசாரப்பத்திரம் கொடுத்தார்கள். உடனே மகாத்மாவும், அவர் குமாரர் தேவதாஸ் காந்தி, காரியதரிசி பியாரிலால், மகாதேவ தேசாய், மீராபாய் ஆகியவர்களும், ஸ்ரீமதி சரோஜினி, பண்டித மாளவியா, சர். பட்டாணி முதலியவர்களும், ஸ்ரீ. பிர்லாவும் கப்பலேறினார்கள். ஏராளமான ஜனங்கள் துறைமுகத்தில் கூடி வழியனுப்பினார்கள்

## ஏடனில் உபசாரம்.

மகாத்மா காந்தி சீமைக்குப் போகும் போது அவரை ஏடனில் உபசரிக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. ஏடன் துறைமுகத்தில் வசிக்கும் இந்தியர்களும், அராபியரும் ஒரு கூட்டம் கூடி, எவ்விதமான வரவேற்பு கொடுக்கலாம் என்று யோசித்தனர். ஒரு பெரிய தடபுடலான வரவேற்பு உபசாரம் செய்வதென்றும், பணமுடிப்பு ஒன்று கொடுப்பதென்றும் தீர்மானித்தார்கள். அதற்காக பிரபல இந்தியரும், அராபியரும் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press 11, Anderson St. Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)

# காந்தி

வருட சந்தா ரு. 3.
திங்கள், வியாழன் வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 3௳, பிரஜோற்பத்தி ஆவணி ௴ 18௳ வியாழக்கிழமை | இதழ் 22

## இன்னம் சந்தேகமா?

சேத் அப்துல்லா ஹாரூன் காராச்சிவாசி. வகுப்புவாதம் பேசி சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறவர்களில் ஒருவர். தனித்தொகுதியும், வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் கொடுத்தாலொழிய, சுயராஜ்யம் வேண்டியதில்லை என்று சொல்லும் கோஷ்டியைச் சேர்ந்தவர். அவர் ஏதோ நல்ல வேளையில் எகிப்தில் நடைபெறும் அரசியலைப்பற்றி அறிய அவா கொண்டார். அங்கு முஸ்லிம்கள் மெஜாரிட்டி. கிறிஸ்தவர்கள் மைனாரிட்டி 100க்கு 4 பேர். அந்தப் பிரச்னையை எகிப்தியர் எப்படி தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்று அறிய "அல் பாலாக்" என்ற எகிப்திய பத்திரிகையின் ஆசிரியருக்கு கடிதம் எழுதினார். அவர் பெயர் உஸ்தாத் அப்துல் காதர். எகிப்திய தேசிய கட்சியான வாபிது கட்சியின் பெரிய தலைவர்களில் ஒருவர். "அல்பாலாக்" தேசியக் கட்சி நடத்தும் பத்திரிகை. அவர் சேத் அப்துல்லா ஹாரூனுக்கு எழுதிய கடிதம் இந்நாட்டில் வகுப்பு வாதம் பேசுவோருக்கு கண்திறந்து விடும் என்று நம்புகிறோம். தேசியக் கட்சியார் ஜக்லுல் பாஷா தலைமையில் போராடி எகிப்திற்கு சுதந்தரம் பெற்றார்கள் என்பதை நண்பர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம். அவர் எழுதிய கடிதத்தின் சாராம்சமாவது:—

"உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிக்கு முன்பு, ஒரு விஷயத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டு தங்கள் தாய் நாட்டின் கதி மோட்சத்திற்கு பாடுபட வேண்டும். ஆகவே அவர்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதத்தை போக்கி அவர்களை ஒன்று படுத்துவதைவிட வேறு சிறந்த தர்மம் இல்லை. அவர்கள் ஒன்று சேர்ந்தால்தான் உங்கள் நாட்டை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் அன்னியர் ஆதிக்கத்தை தகர்க்க முடியும். அந்த ஒற்றுமையில் நீங்கள் முயற்சி செய்து சித்தி பெற்றுவிட்டால், உங்கள் நாட்டின் விடுதலைக்கு விரோதமாக வெளிநாட்டார் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்கா. தவிர, உங்கள் நாட்டில் ஏற்படும் அந்த ஒற்றுமை உங்கள் நாட்டுக்கு மட்டும் பயனளிப்பதாயில்லை; முக்கியமாக மற்ற முஸ்லிம் நாடுகளுக்கும், பொதுவாக கீழ்நாடுகளுக்கும் பெரிய பலன் அளிக்கும். உலகப் போக்கிலேயே பெரிய மாறுதல் ஏற்படும்.

எங்கள் நாட்டில் கிறிஸ்தவரும் முஸ்லிம்களும் எப்படி ஒற்றுமையா யிருக்கிறார்கள் என்ற விஷயம் உங்கள் நாட்டு ஒற்றுமைக்கு பலனளிப்பதாயிருந்தால், எகிப்தியராகிய நாங்கள் மிகுந்த சந்தோஷமடைவோம். நாங்கள் சுதந்திரப்போர் ஆரம்பித்தபோது 'எகிப்தியர்' என்ற உணர்ச்சி எங்கும் பரவியதே யொழிய முஸ்லிம்கள் என்றோ, கிறிஸ்தவர்கள் என்றோ தனி உணர்ச்சி ஏற்படவில்லை. எங்களுக்கு சுதந்திரம் கொடுக்கும்போது, மைனாரிட்டியை பிரித்துவிட பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்தார்கள். அதாவது மைனாரிட்டியார் பாதுகாப்பு பிரிட்டனைச் சேர்ந்தது என்று சொன்னார்கள்.

Koviloor Digital Library



ஆனால் இந்த சூழ்ச்சியை கிறிஸ்தவர்களே எதிர்த்தபடியால் பலிக்கவில்லை. சர்க்கார் அமைப்புத்திட்டம் நகலகள் தயாரித்தபோது, பார்லிமெண்டிலும், மந்திரி சபையிலும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஒரு கிறிஸ்தவ பிரதிநிதி சொன்னார். இச் செய்தி வெளியானவுடன் எல்லா கிறிஸ்தவர்களும் அதை எதிர்த்தபடியால், வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் என்ற பேச்சே சட்டத்தில் கிடையாது. இர்மந்திரி அவர்கள் மறுத்துவிட்டதை இரு ஜாதியாருக்கும் ஒற்றுமையை விருத்தி செய்தது. இதனால் பார்லிமெண்டின் இருசபைகளிலும் அவர்களுக்கு விகிதாச்சாரப் படி கிடைக்கவேண்டிய ஸ்தானங்கள் இரட்டிப்பாய் கிடைத்தன. பார்லிமெண்டு சபை தலைவராகக் கூட ஒருமுறை ஒரு கிறிஸ்தவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஜகலூல் பாஷா அமைத்த முதல் மந்திரி சபையில் இரண்டு கிறிஸ்தவ மந்திரிகளை நியமித்தார். விகிதாச்சாரப்படி பார்த்தால் ஒருவருக்கே இடமுண்டு. சர்க்கார் உத்தியோகங்களுக்கு திறமையை பொறுத்து நியமிக்கிறோமே யொழிய வகுப்பு பேதத்தை கவனிப்பதில்லை.

கிறிஸ்தவரும் முஸ்லீம்களும் வெவ்வேறு மதத்தினரா யிருந்தாலும், நாங்கள் எகிப்தியரென்றே எங்களை கருதுகிறோம். இரண்டு பிரிவினராக நாங்கள் கருதுவதில்லை. ஆகவே எங்களுக்குள் ஒப்பந்தம் எதற்காக? இருவருக்கும் தனித்தனியாக நன்மைகள் எப்படி இருக்க முடியும்? நாங்கள் ஒருவரை ஒருவர் நம்புகிறோம். ஒரே நாட்டார் என்ற உண்மையை கெட்டி பிடித்திருக்கிறோம். சுகமோ, துன்பமோ இருவரும் பங்கிட்டுக் கொள்ள தயாராயிருக்கிறோம். ஆகவே எங்களுக்குள் எப்படி பிரிவு ஏற்பட முடியும்? இதுவே ரகசியம்.

இந்தியாவிலுள்ள சகலரும் ஒரு மனிதனைப் போல சேர்ந்து நின்று, விடுதலைக்குப் போராட வேண்டு மென்பதே எகிப்தியராகிய எங்கள் ஆசை. உங்கள் பெரிய தலைவராகிய மகாத்மா காந்தியின் தலைமையில் இந்தியா வெற்றி பெற்றிருப்பது உண்மையே. ஆனால் அதை பூர்ண வெற்றி என்று நம்பிவிடாதீர்கள். ஏனெனில் பிரிட்டிஷார் அவ்வளவு தந்திரசாலிகள். 1924-ம் வருஷம் முதல் நாங்கள் பெற்றுவரும் அனுபவங்களிலிருந்து, பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் ஏமாற்றுவதில் நிபுணர்கள் என்பதை அறிந்திருக்கிறோம். எங்கள் அனுபவத்திலிருந்து நீங்கள் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாம். அவர்களிடம் சர்வ சக்திவாய்ந்த மிகப் பெரிய ஆயுதம் ஒன்றிருக்கிறது. அதுவே பிரித்தாளுதல். உங்களுக்கிடையில் பிரிவினைகள் உண்டுபண்ண அவர்கள் மிக படுபடுவார்கள். அதில் அகப்பட்டுக் கொள்ளாமல் உஷாரா யிருங்கள். உங்கள் விடுதலைப் போராட்டத்தில் நீங்கள் சீக்கிரம் வெற்றி பெறும்படி கடவுள் அநுக்கிரகிப்பாராக!"

இதைவிட தெளிவாகயாரும் சொல்ல முடியாது. எகிப்தியரில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள். அவர்கள் அடைந்த அநுபவங்களை நம் நாட்டு முஸ்லீம் சகோதரர்கள் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். "பிரித்தாளுவதே பிழைக்கும்வழி" என்ற மந்திரத்தை அதிகாரவர்க்கம் கையில் பிடித்திருக்கிறது. இதில் இனியும் சந்தேகப்பட வழியுண்டோ?

## காலச் சக்கரம்.

### தடிக்கம்பு கலெக்டர்:

தென்காசி போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் ஒரு தொண்டர் தெருவில் நின்று கொண்டிருந்தாராம். அவ்வழியாகப்போன ஜில்லா கலெக்டர் அவர் வழியில் நிற்பதாகச் சொல்லி அவரை தமது தடிக்கம்பால் அடித்தாராம். இது உண்மையானால், கலெக்டர் ஒரு அகம்பாவம் பிடித்தவர் என்றே சொல்ல வேண்டும். இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இருக்காவாம். கலெக்டருக்கு தடிக்கம்பு வேலையில் பிரிய மிருந்தால், அவரை போலீஸ் ஜவானாக மாற்றும்படி கவர்னருக்கு சிபார்சு செய்கிறோம்.

### குப்பம் மாஜிஸ்திரேட் கூத்து.

தேசியக்கொடி பறக்கவிடுவது சுயராஜ்ய சர்க்கார் ஏற்பட்டுவிட்டதாக நினைக்கும்படி செய்யுமாகையால், அதை 15 நாட்களுக்கு பறக்கவிடக்கூடாதென்று குப்பம் மாஜிஸ்திரேட் ஸ்ரீ. எத்திராஜுலு நாயுடு ஒரு தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார் ஸ்ரீ. நாயுடுவின ராஜபக்தியை வேறு எந்த அதிகாரியும் மீற முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். இவ்வளவு சிறந்த ராஜபக்தர் இந்நாட்டில் கிடந்து வதியும்படி நேரிட்டிருப்பதைக் கண்டு வருந்துகிறோம். 'பக்கிங்ஹாம் அரண்மனை வாயில்படி தான் நமது நாயுடுவின் ராஜபக்திக்கு பொருத்தமான இடமாகும்.

Koviloor Digital Library



## மகாத்மா விடுத்த செய்தி

சென்ற சனிக்கிழமை 29உ பகல் 1½ மணிக்கு மகாத்மா பம்பாயில் கப்பல் ஏறினர். 2 மணிக்கு கப்பல் புறப்பட்டது. கப்பல் ஏறியதும் அவர் நமது நாட்டாருக்கு விடுத்த செய்தியாவது:—

"நம்பிக்கைப்படக் கூடிய அறிகுறிகள் எதுவும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் காணவில்லை. இருந்தாலும் நான் நம்பிக்கை மிகுந்தவனுகையால், வெற்றி கிடைக்குமென்று நம்பிக்கொண்டிருக்கிறேன். கடவுளே எனக்கு வழிகாட்டி. நான் லண்டனுக்குப்போகும் பாதையை அவர் திறந்து வைத்திருப்பதாய் தெரிகிறது. ஆகவே மானிடரின் சேவைக்காக என்னை அவர் ஆயுதமாக லண்டனில் உபயோகிப்பாரென்று நம்புகிறேன்.

ஜனங்களில் சிலர் காங்கிரஸ் தங்களுக்கு பிரதிநிதியல்ல வென்று கூறலாம். ஆனல், இந்தியா முழுவதற்கும் பிரதிநிதியாயிருக்கவே காங்கிரஸ் வேலை செய்து வருகிறது. காங்கிரஸ் என்மீது நம்பிக்கைகொண்டு பிரதிநிதியாக தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆகவே என்மீது சுமத்திய நம்பிக்கைக்கு பொருத்தமாக, நான் வேலைசெய்ய வேண்டும். காங்கிரஸ் பாடுபடும் வாயில்லாப் பூச்சிகளான கோடிக் கணக்கான ஜனங்களின் நன்மைக்கு விரோதமில்லாதவாறு சகலரின் நன்மைகளையும் நான் பாதுகாப்பேன்.

மகாண சர்க்கார்களும், சிவில் சர்விசும், ஆங்கில வர்த்தகர்களும், காங்கிரஸ் லட்சியம் நிறைவேற உதவிபுரிவார்கள் என்று நம்புகிறேன். அஹிம்சையும் உண்மையுமே காங்கிரஸ் கொள்கைகள். ஆகவே தேசத்தின் பல வகுப்பினரின் பூர்ண ஆதரவைக் கொண்டே காங்கிரஸ் வெற்றி பெற முடியும் அந்த பூர்ண ஆதரவு இந்த பணிவுள்ள தூதனுக்கு கிடைக்குமென்று நம்புகிறேன்."

பண்டித மாளவியா

பரஸ்பர நம்பிக்கையையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யுங்கள். உயர்ந்த நம்பிக்கை கொள்ளுங்கள். தளரா நெஞ்சம் படையுங்கள். சுயராஜ்யம் வந்துகொண்டிருக்கிறது.

சர். பட்டாணி.

நான் மகாத்மாமீது பக்தியுள்ளவன். அவரை பின் பற்றுகிறவன். ஆகவே நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. காந்திஜியின் ஒப்பற்ற பொறுமையையும் வைசிராயின் நற்குணத்தாலுமே தற்போது சமரசம் ஏற்பட்டது.

## சாயம் வெளுத்தது.

பிரிட்டிஷ் பண நிர்வாக யோக்கியதை வெளுத்துப் போயிற்று! அமெரிக்காவிடம் கடன் கேட்டதாகவும், வேலை யற்றவர்கள் உபகார நிதியிலும் மற்றவர்கள் சம்பளத்திலும் சிக்கனம் காட்டினுல் தான் அவர்கள் கடன் கொடுக்க முடியுமென்று பிரிட்டனுக்கு சொல்லி விட்டதாகவும் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். தொழிற்கட்சியார் இந்த சிக்கனத்தை ஒப்புக்கொள்ளாததால் மந்திரி சபை கலைந்து போயிற்று. அமெரிக்கர் நிபந்தனை விதித்தது உண்மைதான் என்று இப்பொழுது நிச்சயமாய் தெரிகிறது. பிரிட்டன் அமெரிக்கா விடமும், பிரான்சினிடமும் 8 கோடி பவுன் கடன் கேட்டிருக்கிறது. அமெரிக்கா 4 கோடி பவுனும், பிரான்ஸ் 4 கோடி பவுனும் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கின்றன. 8 கோடி பவுன் அல்லது சுமார் 110 கோடி ரூபாய்க்கு கூட வழியில்லாமல் பிரிட்டன் திண்டாடும்படி நேரிட்டிருப்பது பெரிய ஆச்சரியமே. இந்தக் கடனுக்கும் ஒரு வருஷ வாய்தாதான். இந்தக் கடன் வாங்க ஒரு மந்திரி சபை கவிழவும், மூக்கட்சி மந்திரிசபை ஏற்படவும் அவசியமாயிற்று. இவ்வளவையும் யோசித்தால், பிரிட்டன் பொக்கிஷ நிலைமை டம்பாச்சாரி பொக்கிஷத்தைவிட மோசமாய் இருக்கிறதென்று தெளிவாகிறது. ஒரு பெரிய ஏகாதிபத்தியம், 100 கோடி ரூபாய்க்கு குட்டிக்கரணம் போடுவதென்றால், பொக்கிஷ நிர்வாகஸ்தர் எவ்வளவு மோசமானவர்களாய் இருந்திருக்கவேண்டும்! இந்த யோக்கியதையில், இந்திய சர்க்கார் மூடத்தனமாய் கையாளும் 18 பென்ஸ் விகிதத்தை நிலைநாட்ட, இந்தியாவிற்கு பிரிட்டன் கடன் கொடுக்கத் தயார் என்று முதல் மந்திரி முன்னல் அறிவித்தார். இந்தியருக்கு பண நிர்வாகத்தில் பழக்கமில்லையென்றும், சுயராஜ்யத்தில் பணநிர்வாகம் பிரிட்டிஷார் கைவசமே இருக்க வேண்டுமென்றும் வெட்கமில்லாமல் சர்ச்சில் கோஷ்டியார் கூச்சல் போடுகிறார்கள். பிரிட்டிஷாரே, உங்கள் பண ஊழல் இவ்வளவு மோசமாய் இருக்குமென்று யாரும் நினைத்ததில்லை. இதுவரை வெறும் டம்பாச்சாரி வாழ்வு நடத்தி வந்திருக்கிறீர்கள் என்பது இப்பொழுதே வெளியாயிற்று. இந்திய பண நிர்வாகத்திற்கு நீங்கள் கடுகளவும் யோக்கியதை படைக்கவில்லையென்பதில் இனியும் சந்தேக முண்டோ?

Koviloor Digital Library



# கர்ம பலன் விடுமா?

## பிரிட்டிஷ் ஆட்சியின் பலன்

பஞ்சமென்றால் சாமான்ய பஞ்சமா? லட்சக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் துன்புற்றார்கள். 1770ம் ஆண்டில் வங்காளத்திலேற்பட்ட பஞ்சத்தில் மடிந்த ஜனங்களைக் கணக்கிட முடியாது. உலகில் வசிக்கும் சகல ஜனங்களுக்கும் தந்தையாயிருக்கும் பரமபிதா வட்டத்தில் எப்படி இக்கொடுமைகளை வெளியிடுவது? ஆங்கில ஆதிக்கத்தின் அநீதமே ஜனங்களுக்கு மரண தண்டனை விதித்தது. அநீதமாக ஆளப்பட்ட அந்த தேசத்திலே அரசியல் கைதிகள் பசிப்பிணியால் மாண்டிருக்கின்றார்கள். உயிர்வாழும் நிமித்தம் தரையில் சிதறுண்டு கிடந்த தானியங்களைப் பொறுக்கி எடுத்துண்டிருக்கின்றார்கள். மனதினாலும் வாக்கினாலும் நிர்மாணிக்க முடியாத கொடுந் துன்பங்களுக்கு ஆளாவதாயிருந்தால் இங்கிலாந்து அதைச் சகித்துக்கொண்டிருக்குமா? தன்னை ஜெயிப்பவர்கள் தன் பணத்தையெல்லாம் அபகரித்தால் என்ன செய்யும்? நீர்வள நிலவளங்களால் செழிப்புற்றிருந்த வயல்களெல்லாம் பயங்கரமான காடாந்திரமாகவும், கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் சிறப்புற்றிருந்த நகரங்களெல்லாம் பாழ்பட்டுப் பாலைவனமாகவும் மாறுவதை இங்கிலாந்து பார்த்துக்கொண்டிருக்குமா? உடனே வீறு கொண்டு தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு அம்முயற்சியில் தான் அழிவதானாலும், தன்னை அடக்கியவரும் ஆக்ஞையிலிருந்து விடுதலைபெறத் துணிந்து விடாதா? விடுதலை முயற்சியில் இங்கிலாந்து முனைவதை விட இந்தியா காலதாமதமாகவே முனைந்திருக்கிறது

கீழ் திசை பிரஜைகளுக்குத் தங்களைத்தாமே ஆளும் சக்தியில்லை என்று என்னிடம் நீங்கள் கூறவேண்டாம். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலீஷ்காரர்களாகிய நாம் அவர்களுக்குள் சண்டை சச்சரவுகளையுண்டாக்கி அதனால் லாபமடையலாமெனப் பிரவேசிக்குமுன் நம்மைவிட மேன்மையாக இந்தியா தன்னைத் தானே ஆளவில்லையா? நேப்பாளம் முதலிய கட்டுப்படாத தேசங்களும், பர்மா, ஸையாம் முதலியவைகளும் தாமே ஆள்கின்றன. ஆகவே தன்னைத்தானே ஆண்ட இந்தியா இனியும் ஆளமுடியும். இந்தியர்களுக்கு அதிகமான மனோ சக்தியிருக்கின்றது. உலகிலுள்ள இதர கர்வம் படைத்த நாடுகளெல்லாம் தாமறிந்த சாஸ்திரக் கலைகளுக்கும், சிற்ப மேன்மைக்கும் இந்தியாவினிடத்தில் கடன் பட்டிருக்கின்றன. புராதன இந்தியாவில் கவிவாணர்களும் தத்துவ ஞானிகளும், வானசாஸ்திரிகளும், நீதி நிபுணர்களும் இருந்திருக்கின்றார்கள். கிரீஸ் மனித சக்தியைப்பற்றிக் கனவு காணுமுன்பும், ரோம் தன் முதல் குடிசையைக் கட்டுமுன்பும் இந்தியாவில் திறமை வாய்ந்த சிற்ப வல்லுநர்களிருந்திருக்கின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகத்தில் சிறந்த நாட்டினரெல்லாம் மெல்லிய மேன்மையான ஆடைகளுக்கு இந்தியாவையே எதிர்பார்த்தார்கள். இந்திய பாஷைகளையும் சரித்திரங்களையும் இந்துக்களின் புராதனமான புனித பழக்க வழக்கங்களையும் ஆராயப் பல அறிஞர் குழாங்கள் உலகெங்கும் ஏற்பட்டன. நாம் தற்போது நூதனமாக அறிந்திருப்பதைவிட மிக மேன்மையான ராஜரீகம் இந்தியாவிலிருந்திருக்கின்றது: 1547 ஆம் ஆண்டிலேயே இந்தியாவில் கங்கை முதல் சிந்து நதி வரையில் இரு மருங்கிலும் பழவிருட்சங்களால் சூழப்பட்ட அகண்ட ரஸ்தா இருந்திருக்கின்றது. அந்த ரஸ்தாவில் இரண்டு மைலுக்கொரு கிணறும் தக்க இடங்களில் தங்குமிடங்களும் அமைந்திருந்தன. அதனுடைய சிற்பமேன்மைக்கு அலகாபாத்திலுள்ள பிரமாண்டமான கோட்டைகளைப் போய்ப் பாருங்கள். கஜினியிலுள்ள கலைவைக்கல் பகுதியைப் போய்ப்பாருங்கள். உயர்ந்த சிகரங்களுடைய கோபுரங்களுடனும், அழகிய கடைவீதிகளுடனும், அறுபதாயிரம் சங்கீத விற்பன்னர்களுடனும் விளங்குகின்ற கனௌஜ் நகரத்தைப் பாருங்கள். வைரங்களாலும் நவரத்தினங்களாலும் பிரகாசிக்கின்ற பெரிய சொர்ண விக்கிரகங்களையுடைய ஆலயங்களமைந்த மத்ராவைப் போய்ப் பாருங்கள். டெல்லியிலுள்ள விஸ்தாரமான ராஜ மாளிகைகளையும், விலையற்ற மாணிக்கங்கள் பதியப்பட்ட ஆக்ரா மசூதிகளையும் பாருங்கள். ஓ! இந்தியர்களுக்கு எழும் சக்தியில்லை என்று கருதும் உங்கள் தப்பிதத்தையுணர்ந்துகொள்ளலாம்.

Koviloor Digital Library



## தினசரி பூதம்

முன்னால் இரண்டுபேர் பிடித்திழுக்க, பின்னால் இருவர் தள்ள, மாதம் காதவழி போகுமாம் மகா விகடன் மாயக்குதிரை. அதைப் போல பழைய 'கிளி' பிரசை வைத்துக்கொண்டு ஒருவர்மைப்போட, ஒருவர் இழுத்துப் பிடிக்க, மற்றொருவர் காகிதம்கொடுக்க ஓட்டிவரும் அச்சியந்திரத்தை அநேகர் பார்த்திருப்பார்கள். அந்த பிரமாண்டமான இயந்திரத்தில் எவ்வளவு வேகமாய் போட்டாலும் மணிக்கு 200க்கு மேல் அச்சாவது நடக்காத காரியம். அதைமட்டும் பார்த்தவர்களுக்கு, பெரிய தினசரிபத்திரிகைகள் எம்மாதிரி நடக்கின்றன என்பதை யூகித்துக்கூட அறிய முடியாது. சென்னையில் 3 தினசரிப் பத்திரிகைகளைத்தவிர மற்றவையெல்லாம் "டபிள் பீடர்" என்ற இரு பக்கமும் காகிதம் கொடுக்கும் மெஷின்களில் தான் அச்சாகின்றன. இந்த மெஷின்களில் 4 பக்கங்கள் கொண்ட காகிதம் 2 ஆயிரம் முதல் 4 ஆயிரத்திற்குமேல் ஒரு மணிக்கு அச்சிட முடியாது இந்த மெஷின்களையும், இவை அச்சிடுவதையும் வெளியூர்க்காரர் பார்ப்பார்களானால் அவர்களுக்கு பெரிய ஆச்சரியமாயிருக்கும். மணிக்கு 200 அச்சிடுவதைபார்த்த பழகியவர்களுக்கு 2 ஆயிரம் அச்சிடுவது பார்த்தால் பெரிய காரியமாய்த்தான் இருக்கும். ஆனால் 4 பக்கமல்ல, 16 பக்கங்கள் கொண்ட முழு பத்திரிகையை ஒரு மணிநேரத்தில் 20 ஆயிரம் அச்சிடும் இயந்திரங்களைப் பார்த்தால் அதைவிட ஆச்சரியமாயிருக்காதா? அம்மாதிரி இயந்திரங்களும் சென்னையில் இருக்கின்றன. ஆனால் மணிக்கு 50 ஆயிரம் பிரதிகள் அச்சிடும் இயந்திரத்தை சென்னையில் யாரும் பார்த்ததில்லை. இந்தியாவிலேயே கிடையாது. அமெரிக்காவும், பிரிட்டனிலும் அவைஇருக்கின்றன. ஒரு மணி நேரத்தில், 16 பக்கங்கள் கொண்ட முழுபத்திரிகையில் 50 ஆயிரம் அச்சிட்டு மடித்து அடுக்கி வைப்பதென்றால் எவ்வளவு அதிசயமானவேலை? அந்த இயந்திரங்கள் ஓடும்போது பெரிய பூதங்கள் அசைவதுபோல தோன்றும் உடம்பு புல்லரிக்கும். பத்திரிகைகள் படிப்பவர்கள் அதிகமாக ஆக இம்மாதிரி இயந்திரங்களும் தோன்ற வேண்டியது அவசியமாயிருக்கிறது. தமிழ்நாட்டில் இம்மாதிரி இயந்திரங்கள் பெருத்தால்—அதாவது பத்திரிகைகள் வாங்குவது பெருத்தால்—அப்பொழுதே ஜனங்களுக்கு போதிய ராஜீய அறிவோ மற்ற அறிவோ ஏற்பட்டதாகச் சொல்ல முடியும்.

## ஆராய்ச்சிக்கார மகாத்மா

(மகாத்மா காந்தியைப் பற்றி வெரியர் எல்வின் பாதிரியார் பல கட்டுரைகள் எழுதி இருக்கிறார். எல்வின் பாதிரியார் மகாத்மாமீது பக்தி கொண்ட வெள்ளையர்களில் ஒருவர். கிறிஸ்து சேவா சங்கம் என்று புனாவில் ஒரு ஆசிரமம் வைத்து நடத்தி வருகிறார் அவர் கட்டுரைகளில் முதல் கட்டுரையாகிய "ஆராய்ச்சிக்கார மகாத்மா" என்ற விஷயத்தை கீழே வெளியிடுகிறோம். மற்றவைகளை பின்னால் தொடர்ந்து வெளியிடுவோம்)

மகாத்மா காந்தி ஒரு ஆராய்ச்சிக்காரர். துணிகரமுள்ளவர். ஆராய்ச்சிக்காரருக்கு இருக்கவேண்டிய குணங்களாவன:- பணிவு. குற்றங்களை ஒப்புக்கொள்ளும் குணம். பிரயாணத்தின் போது மிகச்சொற்ப சாமான்களை எடுத்துச் செல்லுதல். கடுமையான கட்டுப்பாடு. எல்லாவற்றிற்கும் மேலாக தான் படும் கஷ்டங்களுக்கு மேலான ஒரு உயர்ந்த லக்ஷ்யம். இவ்வளவும் மகாத்மா பெற்றிருக்கிறார். எல்லாரையும் விட தான் கடைசி என்ற பணிவு, இம்மண்ணுலக இன்பத்திலோ பாசத்திலோ ஈடுபடாமல் ஒதுங்கியிருத்தல், எது நேரினும் வரை தவறாத கட்டுப்பாடு, முடிவை அறிய வேண்டுமென்ற லட்சியம், கடவுளை உண்மையாயும், அன்பாயும், நிரந்தரமாயும் விளங்குகிறார் என்ற நம்பிக்கை, இவைகள் மகாத்மாவிடம் இருப்பதை யாரும் பார்க்கலாம்.

மகாத்மா தமது சுய சரித்திரத்திற்கு சத்திய சோதனை என்று பெயரிட்டிருக்கிறார். அதாவது ஆத்மசோதனை. ஒரு சாஸ்திரி எப்படி பொறுமையாக தமது ஆராய்ச்சியை நடத்துகிறாரோ அம்மாதிரி மகாத்மா நடத்துகிறார். அவர் சத்ய சோதனையில் ஆத்திரம் சிறிதும் இல்லாமல் ஒழுங்கு, அமைதி நியாயம் முதலியவைகளைக் கைக்கொண்டு ஆராய்ச்சி நடத்துகிறார். அவருக்கு பாரபட்சமோ முன்முடிவோ கிடையா. உலகமே அவருடைய ஆராய்ச்சி சாலை வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அவர் ஆராய்ச்சி செல்லுகிறது. தென்னாப்பிரிக்கா தான் முதலில் அவருடைய ஆராய்ச்சி சாலையாயிருந்தது. தமது தென்னாப்பிரிக்கா பள்ளிக் கூடத்தில் குழந்தைகளை அடிக்காமல் சொல்லிக் கொடுக்கும் வழியை கண்டு பிடித்தார். இப்பொழுதோ, ரத்தம் சிந்தாமல் போராடும் சத்தியாக்கிரகம் என்ற புதிய யுத்தத்தை கண்டு பிடித்திருக்கிறார்.

Koviloor Digital Library



# ஆரணியில் ஆர்ப்பாட்டம் தோற்றது சிவில் சர்வீஸ்!

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார்)

சப் இன்ஸ்பெக்டர் ஒரு கடையில் 5 தொண்டர்களுககுமேல் மறியல் செய்யக் கூடாதென்று ஆட்சேபிக்கின்றா ரென்றும், ஒவ்வொரு தினமும் மறியல் செய்யும் தொண்டர்களின் பெயர்களைத் தெரிவிகக வேண்டுமென்று கேட்கின்றா ரென்றும் ஆரணி தாலுகா காங்கிரஸ் தலைவர் புகார் செய்கின்றார். ஜில்லா அதிகாரிகள் தங்கள் உத்தரவுகளைப் பகிரங்கமாகவும், திட்ட மாகவும் அறிக்காதது மிக்க அதிருப்தியை விளைவிக்கிறது. அப்படி அவர்கள் தெரிவிப்பார்களே யனால், தகுந்த நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ள இயலும். ஒவ்வொரு போலீஸ உத்தியோகஸ்தரும் எழுத்து மூலமாக இல்லாமல் உத்தரவு பிறப்பிப்பார்களேயானால், அதனால் சங்கடம் ஏற்படும்.

சட்டத்தையும் டில்லி ஒப்பந்தத்தையும் வியாக்யானம் செய்து பார்த்தால், தொண்டர்களின் எண்ணிக்கையை ஒருவரை யறைக்கு உட்படுத்த நாம் கடமைப் பட்டவர்கள் அல்ல. ஆனால் சந்தர்ப்பங்களைக் கவனிக்க வேண்டுவது அவசியமே. காங்கிரஸின் அனுமதி பெற்ற தொண்டர்களே மறியல் செய்யவேண்டியதே நேர்மையானதாகும். அதற்காக மறியல் தொண்டர்களுக்கு ஒரு அடையாளம் வேண்டும். சட்டரீதியான காரியத்தைச் செய்வோர் தங்கள் பெயர்களைப் போலீசாருக்கு முன்னதாகவே அறிவிக்க வேண்டுமென்பதற்கு சட்டமில்லை. போலீசார் தொண்டர்களின் பெயர்களைக் கேட்பதன் காரணத்தை நான் நன்கு அறிவேன். மறியல் செய்வது தங்கள் மதிப்பையும் அதிகாரத்தையும் மட்டுபடுத்த முயலுகிறதென்று அவர்கள் உணருகின்றனர். எதாகிலும் ஒரு வகையில் சிறிய அளவாகிலும் தொண்டர்கள் மீது அதிகாரம் பெற விரும்புகின்றனர். போலீசார் தொண்டர்களோடு ஒத்துழைப்பதாக விருந்தால், நான் தொண்டர்களின் பெயர்களை முன்னதாகவே தெரிவிப்பதை மிகவும் ஆதரிப்பேன்.

டெல்லி உடன்படிக்கையை கெடுக்க இந்தியாவிலுள்ள சிவில் சர்வீஸ் கோஷ்டி கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது. மகாத்மாவை சீமைக்கு போகவிடாமல் செய்ய மறைமுகமாக முயற்சி செய்தது. தங்களால் எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ அவ்வளவையும் பாரடோலி தாலுகாவில் செய்து காட்டியது. பம்பாய் கவர்னர் சர். ஹாட்சனும் அந்த கோஷ்டிக்கு ஒத்து ஊதினர். காங்கிரஸ் கேட்டபடி விசாரணை கமிட்டி நியமிக்க முடியாது என்று சொன்னர். மகாத்மாவுக்கு எழுதிய கடிதங்களில், சர்க்கார் அகம்பாவ வாசனை வீசிற்று. இவற்றால் மகாத்மா சீமை போவதை நிறுத்தும்படி நேரிட்டது. இந்த சில்லரை விஷயங்களுக்கு உட்பட்டு மகாத்மா சீமைக்கு போனால், தாங்கள் ஜெயித்துவிட்டதாக அர்த்தமென்று சிவில் சர்வீஸ் கோஷ்டி கனவு கண்டது. ஆனால் மகாத்மா சீமைக்கு போக முடியாது என்று அறிவிக்கவே, வாலறுந்த குரங்கு போல மூலையில் குந்த நேரிட்டது. சீமைக்கு போகாத குற்றத்தை மகாத்மா மீது சுமத்தி, அவர் பலத்தை ஒடித்துவிட சிவில் சர்விஸ் சூழ்ச்சி செய்தது. ஆனால் பலன் வேறுவிதமாய் முடிந்தது. சர்க்கார்மீதுள்ள குற்றப்பத்திரிக்கையை மகாத்மா வெளியிட்டவுடன், சிவில் சர்விஸ் அயோக்கியத்தனம் உலகத்திற்கு வெட்ட வெளிச்சமாயிற்று. தாங்கள் செய்த சூழ்ச்சிகள் பலிக்காமல் போனதோடு, அதிக அவமானத்தையும் அடைந்தது. சீமைக்கு போகாத குற்றம் மகாத்மாவை சேரவில்லை. அல்லது சிவில் சர்விஸ் விஷமங்களுக்கு பரிகாரமில்லாமல் அவர் போகவும் இஷ்டப்படவில்லை. ஆகவே புதிதாய் ஏற்பட்ட அவமானத்தை நீக்க பார்டோலியில் விசாரணை கமிட்டி நியமிக்க ஒப்புக்கொள்ள நேரிட்டது. கடைசியாக சிவில் சர்விஸ் சூழ்ச்சியும், பம்பாய் கவர்னர் ஒத்து ஊதுதலும், இந்திய சர்க்கார் பிடிவாதமும் தகர்ந்து போயின. மகாத்மா வெற்றி வீரராய் சீமை செல்லுகிறார். அதிகார வர்க்கத்தின்மீது அவர் சாட்டும் குற்றங்கள் அசைக்க முடியாதவை என்பது மறுபடியும் நிரூபமாயிற்று. சத்தியமே வென்றது. அகம்பாவம் தோற்றது!

---

நான் ஒரு சக்தியற்ற நொண்டி ஆனால் நொண்டிகளின் கஷ்டத்தை ஒரு நொண்டியே அறிய முடியுமாகையால், நொண்டி (இந்தியா) தேசத்தின் பிரதிநிதியாக இந்த நொண்டியை தேர்ந்தெடுத்தது இயற்கையே.—மகாத்மா.

Koviloor Digital Library



# காந்திஜியின் குஷி

"ரஜபுத்தானா" என்ற கப்பல் சென்ற சனிக்கிழமை ஜென்ம சாபல்ய மடைந்தது. மகாத்மா அக்கப்பலிலேயே சீமை செல்லுகிறார். அவர் கப்பல் ஏறும் போது பம்பாய் துறைமுகத்தில் கண்ட காட்சியை வர்ணிக்க ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாது கண்ணுக்கெட்டும் தூரம் வரை மனிதர் தலைகள். அவர்கள் கோஷமும், கரகோஷமும் இடிபோல முழங்கின. மகாத்மாவுக்கு அவர்கள் சமர்ப்பித்த புஷ்பங்களும், பழங்களும் மலைபோல குவிந்தன. மகாத்மா இதுவரை தம்மை படம் பிடிக்க சம்மதித்ததில்லை. கப்பல் ஏறியவுடன் முதல்முதலாக அதற்கு சம்மதித்தார். நூற்றுக்கணக்கான "காமராக்கள்" மகாத்மாவை தங்கள் கண்களுக்குள் பிடித்துக் கொண்டன. மகாத்மா சீமையிலும் கோவண ஆண்டிபோலவே உடை அணிவார். கப்பலில் இருக்கும் காலத்தில் உபயோகத்திற்காக 10 காலன் ஆட்டுப்பாலை பக்குவம் செய்து கொண்டு போகிறார்கள். திராட்சை, பேரீச்சம்பழம் முதலியவைகளும் வேண்டிய மட்டும் இருக்கின்றன. கப்பலில் ஏறியவுடன் பம்பாய் ஹைகோர்ட் பிரதம நீதிபதி மகாத்மாவை பார்த்து பேசினார். பின்னால் துறைமுக நிர்வாக போர்ட் தலைவர் ஸ்ரீ. நீல்சன் என்ற வெள்ளையர் மகாத்மாவுடன் பேட்டி கண்டு பேசினார். கப்பல் காப்டனுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் மகாத்மா தங்கள் கப்பலில் வருவதால் மிகுந்த குஷி.

கப்பல் பிரயாணம் செய்வதென்றால் "பாஸ்போர்ட்" என்ற அநுமதிச் சீட்டு வேண்டும். டாக்டர் பரிசோதனை வேண்டும். பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பம் செய்த பலர் வாரக்கணக்காக காத்திருக்கும்படி சர்க்கார் செய்வார்கள். ஆனால் மகாத்மா விண்ணப்பம் அனுப்பவில்லை. கப்பலேறுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னால் ஒருபோலீஸ் அதிகாரி தாமாக அவரிடம் வந்து பாஸ்போர்டுக்காக கையெழுத்து வாங்கிக் கொண்டு போனாராம். பாஸ் போர்ட்டில் எந்த நாட்டார் என்று குறிப்பிடும் இடத்தில் "பிரிட்டிஷ் பாதுகாப்பு பிரஜை" என்று மகாத்மாவை எழுதியிருந்தார்கள். அதைப் பார்த்து காந்திஜி சிரித்தாராம். காந்திஜிக்கு பிரிட்டிஷார் பாதுகாப்பு வேண்டுமா அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு காந்திஜி பாதுகாப்பை தேடுகிறார்களா?

டாக்டர் பரிசோதனை இல்லாமலே காந்திஜி கப்பலேறினார். ஸ்ரீமதி காந்தி கண்ணில் நீர் நிறைந்து நிற்க விடை பெற்றார். அவர் உள்ளத்தில் ஒரு சந்தேகத்தை மகாத்மா கண்டு கொண்டார். "ஏன பயப்படுகிறாய்?" என்று சொல்லி சமாதானப் படுத்தினார். கப்பலில் உற்சாகம் ததும்புகிறது. மகாத்மா கப்பலிலுள்ள பிரயாணிகளிடம் தாராளமாய் பழகி பேசுகிறார். சிறு குழந்தைகளிடம் விளையாடுகிறார். ரஜாவில் போகிற மாணவனைப்போல குஷாலாய் இருக்கிறாராம். "ராஜபுத்தானா" கப்பலில் ராய்ட்டர் நிருபர் ஒருவரை சீமை வரை அனுப்பி, அன்றன்று மகாத்மா செய்யும் வேலைகளைப்பற்றி ஆகாச தந்தி மூலம் உலகத்திற்கு அனுப்ப ராய்ட்டர் கம்பெனி ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே மகாத்மா நடுக்கடலில் போய்க் கொண்டிருந்தாலும், தினசரி அவரைப்பற்றிய செய்திகள் ஆகாசத்தந்தி மூலம் வந்துகொண்டிருக்கின்றன. கப்பலில் ஏறியவுடன் சில நாட்கள் வரை வாந்தியெடுப்பு, தலைவலி முதலியவை பொதுவாய் வருவதுண்டு பண்டித மாளவியா, சரோஜினி தேவி முதலியவர்கள் இதற்குள் அகப்பட்டபோதிலும் காந்திஜிக்கு மட்டும் ஒன்றுமில்லையாம். எப்பொழுதும்போல சாப்பிடுகிறாராம். மௌலானா ஷவுகத் அலி போர்ட் செட் துறைமுகத்திலிருந்து மகாத்மாவுடன் பிரயாணஞ் செய்யப் போகிறாராம்; ஆகவே இந்து, முஸ்லிம் ஒப்பந்தம் ஏற்படலாமென்று நம்ப இடமிருக்கிறது. கப்பலில் வெட்ட வெளிச்சத்தில் மகாத்மா தூங்குகிறார். மாலை தோறும் பிரார்த்தனைகள் ஒழுங்காய் நடை பெறுகின்றன. கப்பலில் போகும் போது உலகமெங்குமிருந்து, மகாத்மா பிரயாணம் வெற்றிகரமாய் முடிய வேண்டுமென்று ஆயிரக்கணக்கான தந்திகள் அவருக்கு வந்து கொண்டிருக்கின்றன கப்பல் காப்டன் மகாத்மாவுக்கு மிகுந்த மரியாதை செய்கிறார். முதல் வகுப்பில் வரும்படி சர். பட்டாணி மகாத்மாவை கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டார். படிப்பதிலும், எழுதுவதிலும், பிரயாணிகளோடு பேசுவதிலும், குழந்தைகளோடு விளையாடுவதிலும் மகாத்மா தமது நேரத்தை போக்கி வருகிறார்.

Koviloor Digital Library



## காங்கிரஸ் தொழிலாளருக்கே

(மகாத்மா காந்தி)

தொழிலாளர் நன்மைக்காக முக்கியமாகவும், அதற்கென உழைக்கும் முதலாளிகளின் நன்மைக்காகவும் காங்கிரஸ் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்றது ஆகவே அந்நியத்துணி பகிஷ்கார விஷயத்தில் மட்டுமே ஆலை முதலாளிகளோடு காங்கிரஸ் ஒத்துழைக்க முன்வந்துள்ளது எனெனில் தொழிலாளர்களுடைய நன்மையை உத்தேசித்தே அந்நியத் துணி பகிஷ்காரம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இருதிறத்தினரும் ஒத்துழைப்பது அவர்களுடைய பரஸ்பர சம்மதத்தாலேயேயாம்; அவர்கள் எப்போது வேண்டுமானாலும் பிரிந்துவிடக்கூடும். தமக்கு அவ்வொத்துழைப்பு லாபகரமில்லை என்று முதலாளிகள் தெரிந்து கொண்ட உடனே அவர்கள் தாமே விலகி விடுவார்கள். அல்லது, கதரியக்கத்துக்கோ, தொழிலாளர் நன்மைக்கோ, துணி வாங்குவோர்கள் நன்மைக்கோ, அது கெடுதல் புரியுமாயின், அப்போதே காங்கிரஸ் அதனின்று விலகிக்கொள்ளும். கதரியக்கத்தின் பரவுதலில் ஒரு தற்காலிகமான தடையேற்படுதலும் கூடும்; இப்போது அவ்வாறு சிறிது ஏற்பட்டிருப்பதாகக் கூறலாம். ஒன்றிரண்டு வருஷங்கள்வரை துணி வாங்குவோர்கள் அதிக விலை மூலமாகக் காப்பு வரிகளுக்குச் செலுத்தக் கூடும். ஆனால் அது ஆலை பங்குதாரர்கள் நன்மைக்கல்ல; ஆலையின் வேலை சிக்கனமாக நன்கு நடைபெறும் பொருட்டேயாம். ஆனால் தொழிலாளர் நன்மைகளையோ காங்கிரஸ் விட்டுக்கொடுக்கவே முடியாது. பகிஷ்கார இயக்கத்துக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் தொழிலாளரின் நிலைமை குறைவுறக்கூடாது. ஆனால் அவர்கள் நிலையை அதைவிட விசேஷ விருத்தியை அடைய வேண்டும் என்றே முயற்சிக்க வேண்டிய கடமை காங்கிரஸுக்கு அவ் வொப்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பு அவர்களுடைய உண்மையான நிலைமை என்ன என்பது சரியாகக் காங்கிரசுக்கு விளங்கவில்லை. தொழிலாளர் நிலைமையை விருத்தி செய்யும்படி காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஆலை முதலாளிகளைக் கேட்டுக்கொள்வதான தீர்மானமும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அதே விஷயமாகக் காரியக் கமிட்டிக்குச் சிபார்சு செய்த தீர்மானமும் இங்கு கவனிக்கத்தக்கது.

தொழிலாளர் நன்னிலைமைக்காக உழைப்பது காங்கிரஸுக்கு எவ்வளவு நன்மை பயக்குமோ அவ்வளவு நன்மை ஆலையதிகாரிகளுக்கும் பயக்கும். ஸ்வராஜ்ய மார்க்கம் எல்லாத் தேசிய முயற்சிகளின் ஒத்துழைப்பாலேயுமுண்டாகுமன்றி, அவற்றின் விரோதத்தால் ஒரு போதும் ஏற்படாது. இவ்விதனைத்தும் முடிவாகத் தொழிலாளர் நன்றியைத் தம் லட்சியமாகக் கொண்டிருக்கவேண்டும்.

---

### வாழ்க தமிழ்மொழி !

வாழ்க தமிழ் மொழி  
வாழ்க தமிழ்மொழி  
வாழ்க தமிழ் மொழியே  
எங்கள் தமிழ்மொழி  
எங்கள் தமிழ்மொழி  
என்றென்றும் வாழியவே  
வானமளந்த  
தனைத்து மளந்திடு  
வண்மொழி வாழியவே. —பாரதி.

---

## "காந்தி" வாரம் மும்முறை

இம்மாதம் 10உ முதல் "காந்தி" வாரம் மும்முறையாக வெளி வருகிறது. பிரதி திங்கள், வியாழன், சனிக்கிழமைகளில் பிரசுரமாகும். வெளியூர்களிலும அதே தினங்களில் கிடைக்கும். "காந்தி" பழைய பிரதிகள் வேண்டுவோர், தபால் செலவுக்கு சேர்த்து. ஸ்டாம்புகள் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press. 11, Anderson St Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)




வருட சந்தா ரு. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 7உ, பிரஜோற்பத்தி ஆவணிமீ 22உ திங்கட்கிழமை | இதழ் 23

# கடையை கட்டுங்கள்

## மகாத்மா ஸ்ரீமுகம்.

நடுக்கடலில் போகும் "ராஜபுத்தானா" என்ற கப்பலிலிருந்து மகாத்மா காந்தி ஆகாசத்தந்தி மூலம் இந்திய மக்களுக்கு விடுத்திருக்கும் ஸ்ரீமுகமாவது.—

"இந்தியக்கரைகளை விட்டுப்பிரிந்து நான் வெகு தூரம் போய்க் கொண்டிருக்கிறேன். ஆகவே நான் இல்லாத காலத்தில், பரிபூர்ண அஹிம்சா தர்மத்தை காத்துவரும்படி இந்திய மக்களை கேட்டுக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் நிர்மாண வேலையை நிறைவேற்றுங்கள். குடியை ஒழியுங்கள்; அந்நிய துணிகளை பகிஷ்கரியுங்கள். தீண்டாமையை விலக்குங்கள். கத்தர் உற்பத்தியை அதிகமாக்குங்கள்.

ராஜீய அதிகாரம் இந்தியர் கைக்கு மாறவேண்டியது நியாயந்தான் என்று வெள்ளையர்கள் மனப்பூர்வமாய் நினைப்பதாயிருந்தால், காங்கிரசையும், காங்கிரஸ் காரரையும் நம்பும்படி உத்தியோக வெள்ளையரையும் மற்ற வெள்ளையரையும் கேட்டுக்கொள்கிறேன்"

## வைசிராய் தந்தி.

காந்திஜிக்கு கப்பல் விலாசத்திற்கு வைசிராய் வில்லிங்டன் அனுப்பியிருக்கும் தந்தியாவது:—

'உங்கள் பிரயாணம் வெற்றிகரமாய் முடிய கடவுள் ஆசீர்வதிப்பாராக. எப்பொழுதும் என்னை பூர்ணமாய் நீங்கள் நம்பியிருக்கலாம்."

திடங் கொண்ட ராமபாணம் செருக்களத்துற்ற போது, கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினன் இலக்கைவேந்தன் என்று கம்பர் பாடினார். அவர் இக்காலத்தில் இல்லாமல் போய் விட்டாரே என்று வருந்துகிறோம். அவர் உயிருடன் இருந்து, தற்கால இந்திய சர்க்கார் எதற்கும் அஞ்சாமல் கடன் மேல் கடன் வாங்கிக் கொண்டு போவதைப் பார்ப்பாரானால், கட்டாயம் ஷை பாட்டை மாற்றியே தீருவார். திடங் கொண்ட ராமபாணத்திற்கு உவமானமாக கடன்பட்டார் நெஞ்சத்தை காட்டியிருக்கமாட்டார். பட்டகடனைக் கண்டு அஞ்சவோ, புதிதாய் வாங்க கலக்கமோ கொள்ளுபவர்களுக்கு அல்லவா மேலே காட்டிய உதாரணம் பொருந்தும்? இந்த சர்க்காருக்குத்தான் கடன் வாங்குவதென்றால், பாதாம் அல்வா சாப்பிடுகிறதைப் போல் இருக்கிறதே! என்ன வட்டியானாலும் எவ்வளவு தொகையானாலுஞ் சரி கடன் வாங்க தயார். பாவம் கம்பர் இல்லாமல் போய் விட்டாரே!

வெண்ணெய் விழுங்குவது போல, கடன் வாங்கி விழுங்கிவந்த இந்த சர்க்காரின் யோக்கியதையை, காங்கிரஸ் கடன் கமிட்டி அம்பலத்திற்கு கொண்டுவந்தது. இவர்கள் விழுங்கிய தொகையை இந்தியர் தலைமீது சுமத்திய அயோக்கியத்தனத்தை பட்டவர்த்தனமாக

எடுத்துக் காட்டியது. காட்டியும் இந்த சர்க்காருக்கு புத்திவரவில்லை. மறுபடியும் கடன் வாங்க புறப்பட்டிருக்கிறது. அதிலும் ஒரு "பிரமோஷன்"! இது வரை 100க்கு வருஷத்திற்கு 6 வட்டிக்கு வாங்கியது இப்பொழுது 6½ வட்டி! சர்க்காரின் பண நிர்வாக யோக்கியதையை விளக்க இதைவிட வேறு உதாரணம வேண்டுமா? சென்ற வருஷம் சுமார் 55½ கோடி ரூபாய் கடன் வாங்கினார்கள். சென்ற பிப்ரவரி மாதம் 23 கோடி ரூபாய் கடன் மே மாதம் 19௳ மறுபடியும் 13½ கோடி ரூபாய் அரை வட்டிக்கு வாங்கினார்கள். மறுபடியும் இம்மாதம் கடன் கேட்க முன் வந்திருக்கிறார்கள். இந்தக் கடனுக்கு அளவே கிடையாது. எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளத் தயார்! இம்மாதிரி கடன் வாங்க சர்க்கார் புறப்பட்டு விட்டால், ஜனங்கள் பிழைப்பது எப்படி என்று தெரியவில்லை. ஜனங்களுக்கு இருக்கும் பணக் கஷ்டம் கொஞ்சமல்ல. நெருப்பிலிட்ட புழுப்போல துடிக்கிறார்கள். பணக் கஷ்டத்தால் தற்கொலைகள் அதிகமாகி வருகின்றன. இந்த நெருக்கடியை தொலைக்க வேண்டுமானால் ராணுவச் செலவையும், சிவில் செலவையும் பாதிக்கு குறைக்க வேண்டும். நாணய மாற்றை 18 பென்சிலிருந்து 16 பென்சாக்க வேண்டும் இந்த இரண்டையும் செய்யாமல் கடன் வாங்கிக் கொண்டே போனால் முடிவென்ன? இந்த முட்டாள் தனம் எதுவரையில் போய் எப்படி முடியப்போகிறது என்பதே நமக்கு கவலையாயிருக்கிறது இருக்கிற நெருக்கடியை குறைக்கிறதற்கு இதுவா வழி? ஜனங்களிடம் இருக்கிற அற்ப சொற்ப பணத்தையும் கடன்கேட்டு வாங்கிக் கொண்டால், இந்த நெருக்கடி பொறுக்க முடியாமல் போய்விடும். பணக் கஷ்டம் சொல்ல முடியாத அளவு ஏற்பட்டு விடும். இந்த அசட்டுத் தனங்களுக்கெல்லாம் முடிவு கிடையாதா? இந்த முட்டாள்தனமான பணநிர்வாகத்தை தொலைக்க வழியில்லையா? இந்திய பண நிர்வாகம் பிரிட்டிஷார் கையில் இருக்கக்கூடாது என்பதற்கு இதை விட வேறு காரணம வேண்டியதில்லை லண்டன் மகாநாடு இதை முதலில் யோசிக்க வேண்டும். மற்றக் காரியங்கள் தாமதமாக ஏற்பட்டாலும், பண நிர்வாகத்தை உடனே இந்தியர் கைக்கு மாற்றி விட்டு மறுவேலை பார்க்கும்படி பிரிட்டிஷாரை கட்டாயப் படுத்தவேண்டும். பிரிட்டிஷார் பண நிர்வாக யோக்கியதை தெரிந்து போய்விட்டது. 100 கோடி ரூபாய்க்கு வழியில்லை மஸ்பிரான்ஸ் சொல்லுகிறபடியும், அமெரிக்கா சொல்லுகிறபடியும் பிரிட்டிஷ் மந்திரி சபை குட்டிக்காரணங்கள் போட்டு வருகின்றன. இந்நாட்டு சர்க்கார் யோக்கியதையோ அதைவிட மோசமாயிருக்கிறது: போதுமய்யா, உங்கள் கூட்டுறவு! கடையை கட்டுங்கள்.

---

## வெள்ளி விலை குறைந்ததேன்?

வெள்ளிக்கு ஒரு காலத்தில் உயர்ந்த மதிப்பிருந்தது. தங்கத்திற்கு அடுத்தபடியாக கருதப்பட்டது. கீழ்நாடுகளில் வெள்ளி நாணயங்கள்தான் மிகுதியாக வழக்கத்தில் இருக்கின்றன. ஆபரணங்கள் செய்யக்கூட வெள்ளியை ஏராளமாய் உபயோகிக்கிறார்கள். கீழ்நாட்டார் சேமித்துவைக்கும் பொக்கிஷமும் வெள்ளியாயிருக்கிறது. இந்த வெள்ளியின் மதிப்பு திடீரென்று குறைந்துபோயிற்று. லண்டனில் ரூபாய் இடைக்கு கால்ரூபாயாக விற்கிறது. இந்நாட்டில் இறக்குமதி தீர்வை விதித்திருப்பதால் வெள்ளி விலை கொஞ்சம் அதிகமாயிருக்கிறது இருந்தாலும் பாதிக்கு மேல் விலை குறைந்து போயிற்று. இப்படிக் குறையக் காரணமென்ன? வெள்ளி உற்பத்தி அதிகமாய்விட்டதே விலை குறைவிற்கு காரணம். தொழிற் முயற்சி அதிகமாய் விட்டதால், செம்பு, ஈயம், நாகத்திற்கு கிராக்கி அதிகமாயிற்று. இந்த கிராக்கிக்காக அவற்றை அதிகமாய் உற்பத்தி செய்ய நேரிட்டிருக்கிறது. இவற்றைச் செய்யும் போது, இவற்றின் மூலம் வெள்ளி கிடைப்பதும் அதிகமாகிறது. ஆகவே உலகத்திற்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமாய் வெள்ளி உற்பத்தியாயிருப்பதால் விலை குறைந்து விட்டது. விலை குறைந்ததால் ஐரோப்பிய நாட்டில் வெள்ளி நாணய உபயோகம முன்போல இல்லை. ஆனால் கீழ் நாடுகளை மேல்நாடுகள் வர்த்தகத்தில் எதிர்பார்க்க வேண்டியிருப்பதால், கீழ்நாடுகளில் வெள்ளி விலை குறையாமல் இருக்க அமெரிக்கா முயற்சி செய்தது. என்ன முயற்சி செய்தும் பலிக்கவில்லை இந்தியாவில் சர்க்கார் ஏராளமாக வெள்ளியை கைவசம் வைத்திருப்பது விலை குறைவிற்கு மற்றொரு காரணம். இதனால் இந்திய சர்க்காருக்கு மிகுந்த நஷ்டம். அதோடு போயிற்றா? சுமார் 80 கோடி கீழ்நாட்டு வாசிகளின் வாங்கும் சக்தியையும் ஒன்றுக்கு பாதியாக்கி விட்டது. இந்தியா பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்படுவதற்கு இது ஒரு காரணம். வெள்ளியின் மதிப்பு தொலைந்தது. அதோடு இந்தியரும் "பச்சை பாப்பர்"ஆனார்கள்.

Koviloor Digital Library



## எச்சரிக்கை.

### (எம்டன் எழுதுவது.)

### ரீட் துரை அறியவும்.

ரீட் துரை அவர்களே!

தங்களைப்பற்றி அநேக மகஜர்களும் லெட்டர்களும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகளை அப்படியே வெளியிடும்படியும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது ஆனால் யான் அப்படிச் செய்யாது தங்கள் சவுகரியத்திற்காக அவற்றை நிறுத்திவைத்து தங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தாங்கள் ஏஜன்டிக்கு அடுத்தபடியாக ஒரு பெரிய பொறுப்புள்ள என்ஜினியர் பதவியை வகித்துவருகிறீர்கள். இப்பதவிக்குத் தக்கபடி தாங்கள் வகித்து வரவேண்டுவது நியாயம். அஃதன்றி பொறுப்பற்றவர்கள் பேசல் நிதானமிழந்து வேலையிடுவதும், பிறகு மாற்றுவதும், உண்டாம்: இவ்வளவு இழிவான செய்கையை தாங்கள் செய்ய மாட்டீர்களென்று நினைக்கின்றேன். அல்லது தொழிலாளர்கள் கூறுவது உண்மையானால் உமக்கு இத்தடவை எச்சரிக்கை செய்கிறேன். இதிலிருந்து தங்களின் மறதிக்குணத்தை விடுத்து தொழிலாளர்களை ஹிம்சை செய்யாதிருக்கும்படியும், நிதான புத்தியுடன் நடந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் மறுபடியும் பழைய வழக்கப்படி கேவலமாக நடக்கிறதாக தெரிய வந்தால், தங்களைப்பற்றி கிடைத்திருக்கிற விண்ணப்பங்களை வரிசைக் கிரமமாக வெளியிட நேரிடும் என்பதைத் தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தண்டபாணியே!

தம்பி தண்டபாணியே! என்ஜினீருக்கு அடுத்தபடி உம்மீது தான் புகார்கள் கிடைத்திருக்கின்றன. நாம் இருவரும் நெடுநாளைய நண்பர்கள், (அதாவது நீர் ஆலைக்கு வந்தது முதல்) உம்மை எனக்கு நன்கு தெரியும். தாங்கள் தங்களின் தற்கால பதவியைப் பெரிதாக எண்ணி தொழிலாளர்களை விரோதம் செய்து கொள்ளாதீர். கருப்பர்களாகிய நாமே நம்மவர்களைக் கெடுத்தால் மாற்றான் கொடுமையை எப்படி நிவர்த்திப்பது? தொழிலாளர்களுக்கு நன்மையைச் செய்யாவிட்டாலும் கெடுதியாவது செய்யாதீர்கள். நமது நட்பை உத்தேசித்து தங்கள் மீது வந்துள்ள கடிதத்தையும் வெளியிடாது வைத்திருக்கின்றேன் இனிமேல் தொழிலாளர்கள் மனம் திருப்தி யடையும் வகையில் நடந்துகொள்வீரென நம்புகிறேன்.

## சும்மா கிடைக்குமா சோஷலிசம் பதவி?

### (ஹேலன் ரோலண்ட்)

சோஷலிசம் பதவி சும்மா கிடைக்காது. எதுவும் சும்மா கிடைக்காது. ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய விலை கொடுத்தே பெற வேண்டும். விடுதலை, விடுதலை, எங்கும் விடுதலை மயம். ஆணும், பெண்ணும், குழந்தையும் குட்டியும் விடுதலை, விடுதலை என்று சொல்லுகின்றனர். விடுதலை அழகானது. நிகரற்றது. மேன்மையானது. அருமையானது. ஆனால் சும்மா கிடைத்து விடுமா? அதற்குரிய விலை—தியாகம்—கொடுத்தால்தான் அது கிடைக்கும். தெருவில் கிடைக்கும் அருகம் புல்லைப் போலவோ, கடற்கரையில் கிடைக்கும் கூழாங்கற்களைப் போலவோ சுலமாய் கிடைக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். விடுதலை பெறுவது அவ்வளவு எளிது என்று மனோ ராஜ்யம் செய்கிறார்கள். அதுதான் தவறு. விடுதலைக்குரிய விலையை கீழே வைத்தாலொழிய, விடுதலை ஒருக்காலும் கிடைக்காது. அது எவ்வளவு உயரிய பொருளா யிருக்கிறதோ அவ்வளவு அதிகமாக அதற்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அன்புக்கும், புகழுக்கும், கொடுக்கும் விலையைவிட அதற்கு அதிகவிலை. தங்கத்திற்கும் அதைவிட ஆயிரம் மடங்கு அருமையான ரேடியத்திற்கும் கொடுக்கும் விலையைவிட விடுதலை விலை அபாரமா யிருக்கிறது. விடுதலைக்கு சமமாக உலகத்தில் வேறு எந்தப் பொருளும் இல்லை. அதைப்போலவே அதன் விலைக்கு சமமாக வேறு எதற்கும் விலை கிடையாது. வாழ்விற்கு மூன்று விஷயங்கள் முக்கியமானவை. அன்பு அல்லது காதல். சந்தோஷம். விடுதலை. காதலைப்பெற சுய நலத் தியாகம் செய்ய வேண்டும். சந்தோஷத்தைப் பெற தன்னல மறப்பு வேண்டும்: விடுதலையின் விலையோ கடுமையான உழைப்பு! எவ்வளவுக் கெவ்வளவு கஷ்டப்படுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு துளி துளியாக விடுதலை கிடைக்கும். விடுதலை இனிமையான பொருள் தான். ஆனால் அதை கஷ்டப்பட்டால்தான் பெறமுடியுமேயொழிய, சும்மா பெறமுடியாது.

Koviloor Digital Library



# பக்தர் மகாத்மா

(பாதிரியார் எல்வின்)

மகாத்மா பக்தி மிகுந்தவர். பக்தி மார்க்கத்தை கடைப்பிடிப்பவர். அன்பால் தான் சீக்கிரமாய் கடவுளை அடைய முடியும் என்பதில் நம்பிக்கையுள்ளவர். பக்தியில் அவர் புராதன கொள்கைகளை கைப்பற்றினாலும், மற்றொரு பக்கம் வைதீகம், வகுப்புவாதம் முதலியவைகளை பலமாய் எதிர்த்து சமூகத்தை புதுவழியில் அமைக்க வேண்டுமென்று பாடுபடுகிறார். பிரார்த்தனையிலும், உபவாசத்திலும் அவருக்கு அதிக நம்பிக்கையுண்டு "பிரார்த்தனையிலும் பக்தியிலும் எனக்கு நம்பிக்கையுண்டு. என்னை துண்டு துண்டாக வெட்டினாலும், கடவுள் உண்டு என்று சொல்லக் கூடிய தைரியத்தை கடவுள் எனக்கு அளிப்பார் என்று நம்புகிறேன்." என்று அவர் சொல்லுகிறார். உலகத் துறவும், உலகத்தை மாற்றி அமைப்பதும் மகாத்மாவின் பக்தியில் அடங்கியிருக்கின்றன. இது ஒரு ஆச்சரியம். பக்தி, பிரார்த்தனை, துறவு முதலிய ஆத்மீக வழிகளில் அவர் துக்காராம், கபீர்தாஸ் முதலியவர்களோடு ஒப்பாய் விளங்குகிறார். ஜனங்களின் லௌகிக வாழ்க்கை, பொருளாதாரம் முதலியவைகளில் அவர் வேலை செய்யும் போதும், தொழிலாளர், விவசாயிகள் குறைகளுக்கு பரிகாரம் தேடும் போதும் அவர் பெரிய சீர்திருத்தக்காரராய் விளங்குகிறார். அந்த வேலைகளில் ராம்மோகன ராய், கோகலே, ரானடே முதலியவர்களோடு ஒப்பிடலாம். சுருக்கமாய்ச் சொன்னால், ராம கிருஷ்ண பரமஹம்சரும், விவேகானந்தரும் கலந்ததாய் அவர் இருக்கிறார்.

நீதி, ஒழுக்கம், பயமின்மை, இவற்றில் அவருக்கு கடவுள் விளங்குகிறார் "எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமடைகிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுளிடம் நெருங்குவதாக நான் உணருகிறேன். என்னுடைய பக்தி இமாசலத்தைப் போல அசையாமலும், அதன் உச்சியில் படர்ந்திருக்கும் பனிக்கட்டியைப் போல வெண்மையாகவும் இருக்குமானால், நான் கடவுளுக்கு பக்கத்தில் போய் விடுவேன். அக்காலத்தை எதிர் பார்க்கிறேன்." என்று மகாத்மா சொல்லுகிறார். மேலும் அவர் சொல்லுவதாவது:—ஏழைகளோடு கலந்து அவர்களுக்கு உதவி செய்ய முடியாதவர்களால் தன்னைத் தான் அறிய முடியாது. தன்னுடைய சகோதரர்களுக்கு உழைக்கிறவர்களையே கடவுள் ஆசீர்வதிக்கிறார். கடவுள் பக்தர் ஒவ்வொருவரும் ஏழைகளுக்காக பாடுபட வேண்டும். ஏழைகள் முன்பு நூல் நூற்று, அவர்களையும் அம்மாதிரி செய்யும்படி தூண்டுகிறவர்களே, மற்ற யாரையும் விட கடவுளுக்கு அதிகமாய் சேவை செய்கிறவர்கள். கிருஷ்ணன் கீதையில் சொல்லுகிறார்.—"உண்மையான பக்தியோடு, ஒரு பழமோ, ஒரு பூவோ, ஒரு வில்வமோ எனக்கு கொடுத்தாலும் அவனே என் உண்மையான பக்தன். ஏழைகள் வாழும் இடத்திலேயே கடவுளின் திருவடிகள் இருக்கின்றன." ஆகவே நூல் நூற்பது ஜெபங்களில் சிறந்தது; பிரார்த்தனைகளில் மேலானது; தியாகங்களில் தலை மிஞ்சியது. பிரார்த்தனை நிறைந்த இருதயமே கடவுளிடம் கொண்டு விடும் ரதம். ஏழைகளுக்கு சேவை செய்வதால் இருதயத்தில் பிரார்த்தனை நிறைகிறது. இந்த யுகத்தில் தீண்டாதார்களுக்கு மனப்பூர்வமாக சேவை செய்யும் இந்துக்கள் உண்மையாக பிரார்த்தனை செய்கிறவர்களாவர். ஏழைகளுக்காக நூற்கிறவர்களும் அம்மாதிரியே."

எதிலும் கடவுள் உணர்ச்சியில்லாத காரியம் மகாத்மாவுக்கு பிடிக்காது. வாழ்வின் ஒவ்வொரு துறையும் மதத்தை அடிப்படையாக கொண்டிருக்கவேண்டும். "மதத்தை விட்டு பிரிந்த ராஜ்யத்திற்கு அர்த்தமே கிடையாது. மத உணர்ச்சியில்லாத பொருளாதார கொள்கையால் எதுவும் செய்ய முடியாது. வாக்கிலும், மெய்யிலும், நெஞ்சிலும் உண்மையில்லாதவர்களால் சுயராஜ்ய பீடத்தின் பக்கத்தில் போக முடியாது" என்று மகாத்மா சொல்லுகிறார். ஆகவே மகாத்மா மனதில் தோன்றியிருக்கும் அதிசயநாடு உண்மையாக ஒரு அதிசயநாடாகவே இருக்கும். சி. எப். ஆண்ட்ரூஸ் இதைப்பற்றி சொல்லுவது கவனிக்கத்தக்கது. அதாவது:—

அழியாத வஸ்துக்களைக் கொண்டு அவர் ஒரு ஆத்மார்த்தீக நகரத்தை சிருஷ்டி செய்து வருகிறார். அதன் அஸ்திவாரங்கள் தெய்வீகமானவை. ஏழைகளை துன்புறுத்தும் செய்கை அங்கு தலை காட்ட முடியாது. அன்பு, பக்தி, சேவை இவைகளே அந்நகரத்தின் ஆபரணங்கள். ராணுவ ஆர்ப்பாட்டங்கள் அங்கே நுழைய முடியாது. ஜாதி, நிற வித்தியாசங்களுக்கு அங்கு இடம் கிடையாது. ஆகவே அந்நகரத்தின் சிறப்பைக் கெடுக்க அங்கு எந்த மதச் சச்சரவும் தோன்ற முடியாது. இருதயமே அதன் ஏகாதிபத்தியம்.

Koviloor Digital Library



# இந்திய உப்பு தொழில் ::

(சி. எப். ஸ்ட்ரிக்லாந்து ஐ. சி. எஸ்.)

இந்தியாவிலுள்ள பிரபலமான கைத்தொழில்களில் உப்புக் கைத்தொழில் ஒன்று. உப்பு எல்லோருக்கும் மிக அவசியமானதோர் பொருளாகும். ஒவ்வொரு மனிதரும் உப்பை உபயோகித்தே தீர வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பிராணியும் உப்புச் சத்தின்றி உயிர்வாழ முடியாது. மற்றும் அநேக கைத்தொழில்களுக்குங் கூட உப்பு இன்றியமையாததாக விருக்கிறது. 35 கோடி ஜனத்தொகையுடைய இந்தியாவில் வருஷந்தோறும் மொத்தம் 20 லட்சம டன் உப்பு செலவாகிறது. அதாவது சராசரி ஒரு மனிதனுக்கு 13 ராத்தல் உப்பு விழுக்காடு விழுகிறது. இந்தியாவில் செலாகும் உப்பில் கால்வாசி உப்பு பெரும்பாலும் எகிப்திலிருந்தும், ஏடனிலிருந்தும் இறக்குமதியாகிறது. மீதமுள்ள 15 லட்சம் டன் உப்பில் மூன்றில் இரண்டு மடங்கு உப்பை பம்பாய், சென்னை மாகாணங்களிலுள்ள சமுத்திரக்கரையோரங்களிலும் (சிறுபான்மை பர்மா கடற்கரைகளிலும்) உற்பத்தி செய்கிறார்கள். மீதமுள்ள 5 லட்சம் டன் உப்பை பாஞ்சாலத்திலுள்ள மலைப் பிரதேசங்களிலுள்ள பூமியில் உண்டாயிருக்கும் உப்புப் பாறையிலிருந்தும் ராஜபுதனத்திலுள்ள ஏரிகள் வற்றிய பின்னர் உப்புப் படிந்து கிடக்கும் தரைப் பரப்பிலிருந்தும் சேகரிக்கிறார்கள்.

ராஜபுதனத்தில் ஜெயபுரி சமஸ்தான எல்லைக்கும், ஜோதிபுரி சமஸ்தான எல்லைக்கும் மத்தியிலுள்ள சாம்பார் ஏரியிலிருந்து வருஷந்தோறும் $1\frac{1}{2}$ லட்சம் டன் உப்பு சேகரிக்கப்படுகிறது. அந்த ஏரி 90 சதுர மைல் விஸ்தீரண முடையது. அங்கு கோடை காலத்திலும் 4 தடவைக்குக் குறையாமல் மழை பெய்தபோதிலும் அவ்வேரித் தண்ணீர் கோடைகாலத்தில் மிக விரைவாக வற்றிவிடுகிறது.

மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் அந்த ஏரி மிக அதிகமாக வற்றிவிடும். அதிலுண்டாகும் உப்பு மிக உயர்ந்த தரமானது. அவ்வேரியில் கண்டிராக்டர்கள் 100 அடி நீளம் 50 அடி அகலம் பாத்தி கட்டி பழைய காலத்து முறைப்படி உப்பு உண்டாக்குகிறார்கள். ஆனால் சர்க்கார் யந்திர முறையைக் கொண்டு செய்யும் உப்பு அதைவிட மேலானதாக இருக்கிறது.

உப்புப்பாத்தியில் ஏரித்தண்ணீரை பாய்ச்சி வற்ற வைத்து ஒரு வருஷத்திற்குப் பின் ஏரியிலிருந்து உப்பை சேகரித்துக் குவிப்பார்கள். பின்னர் அந்த உப்பு மூட்டைகளை ஒட்டகைகளில் ஏற்றி ராஜபுதனத்திலுள்ள சுதேச சமஸ்தானங்களுக்குக் கொண்டுபோய் விற்பார்கள்.

தற்காலம் உப்பு பெரும்பாலும் 'கியார்' களிலிருந்து சேகரிக்கப்படுகிறது. அதாவது சர்க்கார் ஏரியில் சுமார் 4000 அடி நீளம் 1500 அடி அகலத்திற்கு இடத்தை சுவர்போட்டு வளைத்துக் கொள்கின்றனர். அவ்விடத்திற்கு 'கியார்' எனப்பெயர். அதில் 20 லிருந்து 60 வரையுள்ள பாத்திகளிலிருக்கும் கடலிலிருந்து ஜலத்தை கால்வாய்கள் வழியாக அப்பாத்திகளில் பாய்ச்சுவார்கள். அப்பாத்தி சோடாக விருக்கும். அப்பாத்திகளுக்கு ஊடே தொழிலாளர்கள் நடந்து செல்லுவதற்காக ஒத்தடிப் பாதை போடப்பட்டிருக்கும். பாத்திகளில் பாளம் பாளமாக உப்புப்படியும். ஒரு வருஷத்திற்குப் பின் அந்த உப்பை சேகரித்துக் குவிப்பார்கள். அந்த உப்பை உபயோகிக்கலாமா வென்று பரிசோதனை செய்யப்பட்ட பின்பு அவைகளை மூட்டைகளில் கட்டி நிறுப்பார்கள். உப்பு வர்த்தகர்கள் தங்களுக்குத் தேவையான உப்பு வாங்குவதற்கு அதன் விலையைச் சர்க்கார் கஜானாக்களில் செலுத்தி விடுவார்கள். கஜானாக்களிலிருந்து சாம்பார் ஏரியிலுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு வந்ததும் அவர்கள் உடனே தேவையான தரமுடைய உப்பை எடுத்து மூட்டைகளில் போட்டுக்கட்டி நிறுத்து அந்தந்த வியாபாரிகளுக்கு அனுப்பி விடுவார்கள். ஒரு மணங்கு உப்பின விலை 4 அணா. ஆனால் அதன்மீது சர்க்கார் வரி ரூ. 1-4-0. ஆக மொத்தம் ஒரு மணங்கு உப்பின் விலை ரூ. 1-8-0 யை உப்பு வியாபாரி செலுத்திவிட வேண்டும். இவ்விதமான உப்பு வரியால் சர்க்காருக்கு மொத்தம் $7\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

சாம்பார் ஏரியில் உப்பு உற்பத்தி செய்வதற்காக நவீன முறையில் ஏற்பாடுகள் நடைபெற்றன. 1920-3-வது வருஷங்களில் $37\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவழித்து அவ்வேரியில் 2 மைல் நீளத்திற்கு ஒரு பெரிய அணை கட்டியிருக்கின்றனர். அவ்வணை தண்ணீரை தடுத்து உப்புப்பாத்திகளுக்கு அத் தண்ணீர் பாயும்படி செய்கிறது.

நவீன யந்திர முறைகளை அனுஷ்டித்து உப்பு செய்கிறவர்கள் மேற்கூறிய நவீனமுறை மிக சாதாரணமானதென்று கருதலாம். ஆனால் இந்தியா மற்ற நாடுகளைப்போலல்ல. இந்திய ஜனங்கள் எளிய வாழ்க்கை நடத்துகிறவர்கள். அவர்களால் பளுவான வரியைத் தாங்க முடியாது. அதனால் காசடங்கும் யந்திர முறைகளை அனுஷ்டிக்க வேண்டிய வசதிகள் செய்வதற்கு சர்க்கார் பணம் செலவழிக்க முடியாத நிலைமையிலிருக்கின்றனர். சாம்பார் ஏரியில் இப்புது முறை ஏற்படுத்தியதே இந்திய உப்புக் கைத்தொழிலுக்கேற்பட்ட ஓர் பெரிய அபிவிருத்தியாகும்.

Koviloor Digital Library



## ஆதிதிராவிடத் தலைவர்களுக்கு வேண்டுகோள்.

தமிழ்நாட்டிலுள்ள ஆதித்திராவிட சமூகத் தலைவர்கள் அனைவருக்கும் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் விக்ஞாபனம்:—

தற்போது நமது நாட்டில் கட்குடியை யொழிப்பதற்குப் பெரு முயற்சி நடந்து வருகிறதென்பதைத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள். இச்சமயம் அனைவரும் கலந்துழைத்தால் இந்த நற்முயற்சியில் வெற்றி யடையலாம் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மதுவிலக்குப் போல் நன்மை தரக்கூடிய தனித்த திட்டம் வேறொன்றுமில்லையென்பதும் தாங்கள் அறிந்ததே. மதுபானம் ஒழிந்தால் அவர்களுடைய ஒழுக்கம், சமூக அந்தஸ்து, பொருளாதாரம் ஆகிய எல்லாம் உயர்ந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

இப்போது பலவிடங்களில் உத்தியோகஸ்தர்களும், கள்ளு சாராயக்கடைக் குத்தகைக்காரர்களும் சில ஏமாந்த ஆதி திராவிட சகோதரர்களைக்கொண்டு மதுவிலக்கு இயக்கத்தையொடுக்க முயற்சி செய்வதாகத் தெரிய வருகிறது. இந்தத்தீய சூழ்ச்சியில் ஆதி திராவிட சகோதரர்கள் அகப்பட்டுக் கொள்ளாவண்ணம், ஆதி திராவிட சமூகத்தலைவர்கள் எச்சரிக்கை செய்தல் மிகவும் அவசியம். அரசியல் விஷயங்களில் எவ்வித அபிப்பிராய பேதமிருந்த போதிலும், கள்ளைத்தொலைக்கும் முயற்சியில் தாங்கள் ஒத்துழைப்பதற்கு எவ்வித ஆக்ஷேபமும் இருக்க முடியாது.

ஆதித்திராவிட சமூகத்தில் தற்போது எப்போதுமில்லாத விழிப்பு உண்டாகியிருக்கிறது. முன்னேற்ற விருப்பமும், தன் மதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலின் எந்த நல்ல விஷயமானாலும் என்னைப் போன்றவர்கள் சொல்வதைவிட அச்சமூகத்தவர்களே கூறினால் அதிக பயன்படும். மற்ற வகுப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் மீது நீங்கள் குறை கூறி வந்திருக்கிறீர்கள். ஆதலின் எங்கள்மீது அவர்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் 'குடிக்கவேண்டாம்' என்று சொன்னால் கூட அவர்கள் சந்தேகப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இக்காரணத்தினால் உங்களுடைய பொறுப்பு பதின்மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆதலின் தங்கள் சமூகத்துக்கு அளவிலாத நன்மை தரக்கூடிய இப்பெரியக்கத்தில் நீங்களே முன்னின்று உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கிறேன்.

## புதுக்கொடி வணக்கப்பாட்டு

(நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை)

1\. கொடிவணக்கமது செய்வோம்-நாட்டின்
குறைகள் நீக்கியினி உய்வோம்
முடிவணங்கியதைப் போற்றி-அதன்
மூன்று நிறக்குறி சாற்றி — கொடி.

2\. புதுமையான கொடி பாரீர்-வேறு
பூதலத்திலில்லை நேரீர்
முதுமையாயெவர்க்கும் பொதுவாம்-வாழ்வின்
முறையைக்காட்டுவது இதுவாம் — கொடி.

3 பச்சையான ஒரு தோற்றம்-நமக்கு
பக்தி வேண்டுமெனச் சாற்றும்
இச்சையான பொருள் கூட-பக்தி
இருக்கவேணுமதை நாட — கொடி.

4\. தூய்ய வெள்ளை நிறக்காக்ஷி-உண்மை
துலங்குமென்பதற்குச் சாட்சி
மையமாக நிற்கும் மர்மம்-ஸத்யம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம் — கொடி.

5\. துறவின் வர்ணமர்தக் காவி-உலகின்
துக்கப்பூட்டினுக்குச் சாவி
சிறையும் வீமெதற்கொன்றே-என்னும்
சேதி ஓதுவதற்கென்றே — கொடி.

6\. நடுவில் ராட்டையொன்று வார்ப்போம்-அதில்
நலிந்த பேர்க்குக் கஞ்சி வார்ப்போம்
வடுவிலாத தொழில் நூற்றல்-குடிசை
வாழும் ஏழைக்கென்று சாற்றல் — கொடி.

7\. பக்தி, சத்யம், தியாகம்-இவற்றின்
பண்பே வாழ்க்கையின் யூகம்
நித்தம் நித்தமிந்த நீதி—தம்மை
நீட்டும்புதுக் கொடியின் ஜோதி — கொடி.

8\. ஜாதிபேதமதில் இல்லை-மற்றும்
சமயபேத மதில் இல்லை
நீதியான பல முறைகள் தமக்கு
நிலமாகுமதன் குறிகள் — கொடி.

9\. என்னபுதுமையிது பாரும்-கொடி
எதிதுபோலொன்று கூறும்
அன்னைசொலுயிதனைப்பாடி-அதன்
அடியில் நின்று புகழ் கூடி — கொடி.

10\. ஏழை எளியவர்கள் யார்க்கும்-பயம்
இல்லையென்ன அறம் காக்கும்
வாழி புதிய கொடிவாழி-புது
வாழ்வு தந்தினிது வாழி. — கொடி.

Koviloor Digital Library



# தேளுக்கு மணியம்

தேளுக்கு மணியம் கொடுத்தால் வெடுக்கு வெடுக்கு என்று கொட்டிக்கொண்டிருக்கும். இந்திய அதிகார வர்க்கம் மணலை கயிறாகத் திரிக்க வல்லவர்கள். காலிகளுக்காக ஏற்பட்ட 144 வது பிரிவு, 108வது பிரிவு இவைகள் இந்த சர்க்கார் கையில் ராஜீய விஷயத்திற்கு சர்வ சஞ்சீவிகளாக உபயோகப்படுகின்றன என்றால், இவர்களின் சாமார்த்தியத்தை சொல்லவும் வேண்டுமா? மனதில் நினைத்துக் கொண்டிருப்பதைக் கூட மாஜிஸ்திரேட்டுகள் அறிந்து விடுவார்கள். இனி என்ன நினைக்கப் போகிறோம் என்பதையும் அவர்கள் கையாட்களாகிய ரகசியப்போலீசார் தெரிந்துகொள்ளு வார்கள். அவ்வளவு சூரர்கள். மணலை கயிறாகத்திரிப்பவர்கள் பஞ்சு அகப்பட்டால் விடுவார்களா? அல்லது வெறும் வாயை மெல்லுகிறவர்கள் அவல் கிடைத்தால் சும்மாதான் இருப்பார்களா? சட்டம் செய்தது எக்காலத்தில், எதற்காக செய்யப்பட்டது என்ற யோசனையோ பகுத்தறிவோ கொஞ்சமும் இந்த சர்க்கார் மூளையில் நுழையாது. அவர்கள் இஷ்டத்தை நிறைவேற்ற எந்த துருப்பிடித்த சட்டமாயிருந்தாலும் சரி. உடனே எடுத்துவிட்டு விடுவார்கள். இம்மாதிரி அதிகாரங்களில் "பாஸ் போர்ட்" அல்லது வெளிநாடுபோக அநுமதி என்பது ஒன்று. இதை வைத்துக் கொண்டு இந்த சர்க்கார் செய்யும் ஆர்ப்பாட்டம் கொஞ்சமல்ல. "பாஸ்போர்ட்"டுக்கு இப்பொழுதுள்ள நிபந்தனைகள் யுத்த காலத்தில் ஏற்பட்டவை. அவற்றை இன்னம் இந்த சர்க்கார் வைத்துக்கொண்டு, தங்களுக்கு பிரியமில்லாதவர்கள் மீதெல்லாம் பிரயோகிக்கிறது. சக்லத்வாலவை சீமையைவிட்டு வெளியேறாமல் செய்ய இந்த "பாஸ் போர்ட்" பல தடவை உபயோகிக்கப் பட்டது. வெளி நாட்டில் வசிக்கும் இந்திய தேச பக்தர்கள் பலர் இந்நாடு வர முடியாமல் இந்த பாஸ்போர்ட் தடுத்து வருகிறது. சுவாமி சத்தியதேவ் கண் வைத்தியத்திற்காக ஜெர்மனிக்கு போக விரும்பிய போது இந்த பாஸ் போர்ட் தடுத்தது. டாக்டர் சதீந்திர போஸ் அமெரிக்க சர்க்கார் சர்வகலாசாலையில் பெரிய புரபசர். அவர் இந்தியாவிற்கு வந்து தமது தாயை பார்க்க முடியாதபடி இந்த "பாஸ் போர்ட்" கொஞ்சக்காலம் ஆர்ப்பாட்டம் செய்தது. இந்தியாவிலிருந்து வைத்தியத்திற்காகவோ, படிப்பிற்காகவோ, ராஜ்யத்திற்காகவோ வெளி நாடு போக விரும்புகிறவர்களை யெல்லாம் இந்த "பாஸ் போர்ட்" ஒரு வரியில் நிறுத்திவிட முடியும்.

ஸ்ரீ தேவரார்கர் என்பவர் பம்பாய் ஆதித்திராவிட தலைவர்களில் பிரபல மானவர் அவர் வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதியல்ல. இருந்தாலும் தமது கட்சியின் கொள்கைகளை பிரிட்டிஷ் ஜனங்களுக்கு எடுத்துரைக்க லண்டன் செல்ல விரும்பினர். சர்க்காரிடம் "பாஸ் போர்ட்" கேட்டார். என்ன பதில் கிடைத்தது? "கொடுக்க முடியாது" அவ்வளவுதான். காரணம் ஒன்றும் கிடையாது. எதற்காக கொடுக்க முடியாது? அதை எழுதக்கூட இந்த சர்க்காருக்கு மதியில்லாமல் போய்விட்டது. காரணம் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல. ஸ்ரீ. தேவரார்கர் தேசியவாதி. பொதுத் தேர்தல் தொகுதி வேண்டு மென்று சொல்லுகிறவர். வட்டமேஜை மகாநாட்டுக்கு தீண்டாதார் பிரதிநிதியாகப் போகும் டாக்டர் அம்பேத்கார் கொள்கைகளை எதிர்ப்பவர். இப்பேர்ப்பட்டவரை சீமைக்கு போக விட்டால், சர்க்கார் சாயம் வெளுத்துப்போகாதா? அதனால்தான் அவருக்கு பாஸ் போர்ட் இல்லையென்று சொல்லி விட்டார்கள். தேசிய முஸ்லிம்களுக்கு லண்டன் மகாநாட்டில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை. உண்மையான வர்த்தகப் பிரதிநிதிகள் போகவில்லை. உண்மையான தீண்டாதார் பிரதிநிதிகளும் மகாநாட்டில் இடம் பெறவில்லை. தனிப் பொறுப்பில் போகவும் விடுவதில்லை. பின்பு எதற்காக மகாநாடு நடத்துகிறீர்கள் என்று கேட்கிறோம். ஸ்ரீ. தேவரார்கருக்கு "பாஸ் போர்ட்" கொடுக்க மறுத்தது வெறும் அயோக்கியத் தனத்தைத் தவிர வேறில்லை.

---

சர்தார் பட்டேல் சரித்திரம்.

வெளியாய் விட்டது. 82 பக்கங்கள். 1 அணா. தபால் செலவு அரை அணா.

"காந்தி" ஆபீஸ்.

11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

Koviloor Digital Library

## மகாத்மா கப்பல் ஓட்டுகிறார்

ராஜபுத்தானா கப்பல் சென்ற 3வ காலை 4 மணிக்கு ஏடன் துறைமுகம் சேர்ந்தது. அங்குள்ள இந்தியர் மகாத்மாஜிக்கு ஒப்பற்ற வரவேற்பு அளித்தனர். கப்பலிலிருந்து சரோஜினி தேவி, மகாதேவ தேசாயுடன் மகாத்மாஜி நீராவிப் படகில் ஏறி கரை சேர்ந்தார். அங்கு செய்த உபசாரம் கொஞ்சமல்ல. ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்து, 325 பவுன் அடங்கிய பணமுடிப்பும் கொடுத்தார்கள். "நீங்கள் ஏராளமாய் பணம் கொடுப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்" என்று மகாத்மா சொன்னார். பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு, ஏடனில் பல இடங்களை பார்வையிட்டார். பிரிட்டிஷ் ரெசிடெண்டுடன் பேசினார். பின்னால் அங்குள்ள வர்த்தகர்களுடன் காலை ஆகாரம் முடித்து கப்பல் திரும்பினார். கப்பல் 9 மணிக்கு அதை விட்டு புறப்பட்டது.

துறைமுகத்திலிருந்து கடலுக்கு போகிறவரை காந்திஜி ராஜபுத்தானா கப்பலை ஓட்டினார். காப்டன் அவர் பக்கத்தில் நின்று சொல்லிக்கொடுத்தார். அரையில் கட்டிய துண்டுடன் காந்திஜி கப்பலை ஓட்டி வரும்போது "நான் கப்பலை கவிழ்த்து எல்லாரையும் மூழ்கடித்துவிட மாட்டேன் என்று நம்புகிறேன்" என்று ஓட்டைப்பல்லை காட்டி சிரித்தாராம். பின்னால் கப்பல் சம்பந்தமான பற்பல இயந்திரங்களையும் காப்டன் மகாத்மாஜிக்கு காட்டி விளக்கிச் சொன்னார். எஞ்சின் அறை, ஆகாரசத்தந்தி அறை முதலியவைகளுக்கு மகாத்மாவை அழைத்துக்கொண்டு போய் காப்டன் காட்டினாராம்.

மகாத்மாஜி பள்ளிக்கூடத்து பையனைப் போல ஒவ்வொன்றையும் மிகுந்த சிரத்தையோடு கவனித்தாராம். கப்பலில் இருந்த ஒரு கருப்பு பூனை காந்திஜியோடு சினேகம் செய்துகொண்டது. எப்பொழுதும் அவர் பக்கத்திலேயே இருக்கிறதாம். அதற்கு ஆட்டுப்பால் கொடுத்து மகாத்மா வளர்க்கிறார். இரவில் மகாத்மாவுடன் அவர் படுக்கையில் படுத்துக்கொள்ளுகிறதாம். மகாத்மா கப்பல் பூனையை வளர்ப்பதைப் பற்றி சீமை பத்திரிகைகள் படங்கள் பிரசுரித்திருக்கின்றன. மகாத்மா கப்பலில் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் உலகமெங்குமுள்ள பத்திரிகைகள் பிரபலமாய் பிரசுரித்து வருகின்றன.

## எனது சுயராஜ்யம்

(மகாத்மா காந்தி)

ராஜபுத்தானா கப்பலில் மகாத்மா சென்று கொண்டிருக்கிறார். ராய்ட்டர் நிருபர் அவரிடம் சென்று லண்டனில் எம்மாதிரி வேலை செய்யப் போகிறார் என்று கேட்டார். அவர் சொல்லியதாவது:—

அடிமையிலிருந்தும், ஆகரவிலிருந்தும் இந்தியாவை விடுவித்து, தன் இஷ்டப்படி சரியோ தப்போ செய்யக் கூடிய சுதந்திரத்துடன் இந்தியா இருக்கும்படி முயற்சி செய்யப் போகிறேன். எனது சுயராஜ்ய இந்தியா எப்படியிருக்க வேண்டும்? ஏழைகளும் இந்தியா தங்கள் நாடு என்று நினைக்க வேண்டும். இந்திய புனருத்தாரணத்தில் அவர்கள் செல்வாக்கு ஓங்கவேண்டும். உயர் ஜாதி, கீழ் ஜாதி இருக்கக் கூடாது. எல்லா சமூகங்களும் சமாதானத்தோடு வாழ வேண்டும். தீண்டாமைக்கு அங்கு இடம் கிடையாது. குடி தலை நீட்ட முடியாது. பெண்களுக்கு ஆண்களைப்போல சுதந்திரங்கள் உண்டு. எல்லா தேசங்களுடனும் நமக்கு சமாதானமே. நமது தேசத்தை கொள்ளையடிக்க விடவோ அல்லது நாம் கொள்ளையடிக்கவோ போவதில்லை. ஆகவே எவ்வளவு குறைவான துருப்புகள் வேண்டுமோ அவ்வளவே இருக்கும். கோடிக் கணக்கான திக்கற்ற ஏழைகளின் நன்மைக்கு கெடுதல் உண்டு பண்ணாத வரையில் எல்லாருடைய நன்மைகளும் பாதுகாக்கப்படும். அவை சுதேசியா யிருந்தாலுஞ் சரி. பரதேசியனாலுஞ் சரி. பிற நாட்டார், நம் நாட்டார் என்ற வித்தியாசத்தை நான் வெறுக்கிறேன். இதுவே என்னுடைய கனவிலுள்ள சுயராஜ்யம. இதற்காக நான் லண்டன் மகாநாட்டில் போராடுவேன். ஒரு வேளை நான் தோல்வி யடையலாம். அதைப் பற்றி எனக்கு கவலையில்லை. நான் ஒப்புக் கொள்ளுவதா யிருந்தால், இதற்கு குறைந்த எந்த சுயராஜ்யத்தையும் நான் சம்மதிக்க முடியாது.


### சுபாஷ் பாபு சரித்திரம்.

வெளிவந்துவிட்டது. 32 பக்கங்கள் 1 அணா தபால் செலவு ½ அணா.

"காந்தி" ஆபீஸ், சென்னை.


Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press. 11 Anderson St. Madras

Regd. No M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)

# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 10௳, பிரஜோற்பத்தி ஆவணி ௴ 25௳ வியாழக்கிழமை | இதழ் 24

## டி வாலரா பொன் மொழிகள்

1921ம் வருஷத்தில் அயர்லாந்தோடு சுயராஜ்ய விஷயமாய் ராஜி பேச பிரிட்டிஷ் சர்க்கார் அழைத்தார்கள். அயர்லாந்து வீரனாகிய டி வாலரா தலைமையில் பிரதிநிதிகள் லண்டனுக்கு போயினர். வட்டமேஜை மகாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து நவதானியப் பிரதிநிதிகள் போயிருப்பதைப் போல அச்சமயம் அயர்லாந்து பிரதிநிதிகள் போகவில்லை. சின்பீன் கட்சி பிரதிநிதிகள் மட்டுமே போயினர். இந்தியாவிலிருந்தும் அதே மாதிரி மகாத்மா தலைமையில் பிரதிநிதிகள் போயிருந்தால் எவ்வளவு மேன்மையாயிருந்திருக்கும்? டிவாலரா அச்சமயம் அயர்லாந்திற்கு விடுத்த செய்தி மிகவும் முக்கியமானது. மகாத்மா லண்டனுக்கு தூதா சென்றிருக்கும் இச்சமயத்தில், டி வாலரா செய்தியை இந்தியர் படித்தால், பல உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

### டி வாலரா செய்தி.

“ இதற்கு முன்பு எப்படியிருந்தாலும், இச்சமயம் ஐரிஷ்காரர் எல்லாரும் ஒன்று சேர்ந்து நிற்கவேண்டும். நமது பிரதிநிதிகளை பூர்ணமாய் ஆதரிப்பதாக காட்டிக்கொள்ள வேண்டும். பிரிட்டனுக்கும், அயர்லாந்திற்கும் சமரசம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் பிரதிநிதிகளுக்கு பூர்ணமாய் இருக்கிறது. இருந்தாலும் சமரசம் ஏற்படுவது நம்முடைய விருப்பத்தில் இல்லை. நாம் எதற்காக போராடுகிறோம்? நமது உரிமையாகிய சுதந்திரத்தைப் பெறவே போராடுகிறோம். அதைக் கொடுத்தாலொழிய சமாதானம் ஏற்பட முடியாது.

அதைக் கொடுக்க மறுத்து பல நூற்றாண்டுகளாக பிரிட்டிஷார் ரத்தஞ் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் சுவாதீனத்தை அவர்கள் விட்டு விடுவார்களென்று தோன்றவில்லை. நமது சுதந்திரமும் அவர்கள் சுவாதீனமும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை. ஆகவே பிரதிநிதிகள் வீண்கனவு கண்டு போகவில்லை. அப்படியே தேசத்தாரும் வீண் கனவு காண வேண்டாம்:

தலைவர்கள் ராஜதந்திரத்தாலோ, புத்திசாலித்தனத்தாலோ, இந்தப் போராட்டத்தை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்திவிட முடியாது. சுதந்திரம் கிடைத்தாலொழிய சாகத் தயார் என்ற உறுதியோடு ஐரிஷ்காரார் ஒன்று படும் தன்மையே சமாதானம் அளிக்க வல்லது. இந்த உறுதி இருந்தால்தான் பிரதிநிதிகள் வெற்றி பெற முடியும். இனி கஷ்டப்படவோ, தியாகஞ் செய்யவோ அயர்லாந்து கடுகளவு தயங்குகிறதென்று எதிரிகளுக்கு தெரிந்தாலும் சரி, இது வரை நாம் அடைந்துள்ள பலனும் நாசமாய் போய்விடும். ஒன்றில் நம்மை பயமுறுத்தி அவர்கள் பணிய வைத்துவிட்டால், அதைக் கொண்டே எல்லாவற்றிலும் பணிய வைத்து விடுவார்கள். ஆகவே பயமின்றி, பணிவின்றி உண்மைக்குன்றின்மீது அயர்லாந்து நிமிர்ந்து நிற்கவேண்டும்.

(கடைசி பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



## பிரிட்டிஷாரே உஷார்!

(லாலா லஜபதி ராய்)

வேற்றரசர்கள் இந்தியாவைப் பிடித்துக் கொள்வார்கள் என்று பயப்படுவதற்கு காரண மில்லை. உலக அமைப்பைக் கவனித்தால் வேற்றரசர்கள் இந்தியாவைப் பிடிக்க சௌக ரியமில்லையென்பது விளங்கும். இந்தியா சுய ராஜ்யம் பெற்றால், அதனால் ஐரோப்பிய தேசங் களுக்கு ஆபத்துண்டாகாது. எதேனும் ஒரு தேசத்தார் இந்தியாவைக் கைப்பற்ற முயற்சி செய்தால், தற்காப்பைக்கருதி ஐரோப் பிய தேசத்தார் அதைத் தடுக்க முயற்சி செய் யாமலிருக்க மாட்டார்கள். அன்றியும் இந்தி யர் தற்காலம் விரும்புவது போல் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குள் சுயேச்சை நாடாக இருக்குமானால், அது பிரிட்டனுக்கும் ஒரு பெரிய பக்கபலமாகவே இருக்கும். ஏகா திபத்தியத்தை விட்டு விலகும்படி நிர்ப்பந்திக் கப்பட்டால் அதனால் உலக சமாதானத்துக் குள்ள ஒரு தடை நீங்கி விடுமென்றே சொல் லலாம். மகாயுத்தத்துக்குப் பிறகு ஏகாபத்தி யக் கட்சியாருக்கும், பொதுவுடைமைக் கட்சியா ருக்கும் போராட்டம் நடந்த வண்ணமாகவே இருக் கிறது. யுத்தம் நிமித்தம் ருஷியாவில் ஒரு புரட்சி யுண்டாயிற்று: அதற்கு இணையான ஒரு புரட்சி இதுகாறும் உண்டானதே யில்லை. சோவியத்து அரசாங்கத்தை முதலாளி அர சாங்கங்களெல்லாம் எதிர்த்தே வருகின்றன. "ருஷியா அழிந்துவிட்டது; அழியப் போகி றது" என்று பய முறுத்தப் படுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். ஆனாலும் ருஷியா இப்பொழுதும் சுகமாகவே வாழ்ந்து வருகிறது. பிரிட்டிஷாரும் ருஷியாவைப் பார்த்து பயந்து கொண்டேதா னிருக்கிறார்கள். போல்ஷவிக் கொள்கைகள் நமக்கு ஒருக்கால் பிடித்தமா கவோ, பிடிக்காமலோ இருக்கலாம். ஆனால் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அதன் சக்தி பரவி வருவதை ஒருவருக்கும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நடைபெறும் விஷயங்களைக் கவனித்தால் ஏகாதிபத்தியத்தின் வாழ்நாள் குறுகி வருவதை நமக்கு எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். ஏகாதிபத்தியக் கொள் கைக்கும், பொது வுடைமைக் கொள்கைக்கும் ஒரு போராட்ட முண்டாகப் போவதும், பொது வுடைமைக் கொள்கை வெற்றியடையப் போவதும் நிச்சயம். போல்ஷவிக் முறையைத் தடுப்பதற்கு ஏற்ற வழி இந்தியா உட்பட எல்லா அடிமை நாடுகளுக்கும் சுதந்தரம் அளித்துவிடுவதேயாகும். இந்தியா சுதந்திரம் பெறாவிட்டால்,போல்ஷவிக் கொள்கைகள் இந் தியாவில் பிரவேசியாமல் தடுக்க ஹிமாலய பர் வதத்தாலுங்கூட முடியாது.

## கூழைக் கும்பிடு!

இந்தியாவில் சீமைத்துணி பகிஷ்காரம் ஏற் பட்டவுடன், லங்காஷயர் மில் காரர் "அடக்கு முறை, அடக்கு முறை" என்று கத்தினர். லார்ட் இர்வின் மறியலை தடுக்க ஒரு அவசரச் சட்டம் கூட செய்தார். ஒன்றும் பலிக்காமல் போகவே, நாடி சமாருக்கு வந்திருக்கிறது. மகாத்மாவிடம் மண்டியிட்டு கெஞ்சிக் கேட்க முன்வந்திருக்கின்றனர். ஏழைகள் கஷ்டத்தை மகாத்மா சகிக்க மாட்டார் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால் புதிய முறையை கைக் கொண்டிருக்கின்றனர். இந்திய பகிஷ்காரத் தால் மூடிக் கிடக்கும் மில்களையும், பட்டினி கிடக்கும் மில் தொழிலாளரையும் மகாத்மா விடம் காட்டப் போகிறார்களாம். மகாத்மா சிம்லா சென்றிருக்கும்போது, தங்கள் அழைப் பிற்கு இணங்கி லங்காஷயர் வரவேண்டு மென்று லங்காஷயர் மில்காரர் அவருக்கு ஒரு தந்தி கொடுத்தனர். சீமைக்குச் சென்றதும், மில்காரர் பிரதிநிதிகளும், தொழிலாளர் பிரதி நிதிகளும் அவரை பேட்டி கண்டு லாங்காஷய ருக்கு அழைப்பார்கள். பிரிட்டிஷ் சரக்கு களுக்கு இந்தியாவில் சலுகை கொடுப்பதா யிருந்தால், மகாத்மா கேட்கிறபடி ராஜீய சுதந் திரம் கொடுக்கத் தயார் என்று அவர்கள் சொல்லப்போவதாகக்கூட ஒரு வதந்தி யிருக் கிறது. மகாத்மாவின் சக்தியையும், இந்திய ரின் தேச பக்தியையும் நன்றாய் அறிந்து கொண்டதால்தான், லங்காஷயர் மில்காரர் கூழைக்கும்பிடு போடுகின்றனர்.

---

பொது தேர்தல் தொகுதியையும், சர்வஜன ஓட்டுரிமையையும் கொண்டிராத எந்த சர்க்கார் முறையையும் தேசீய முஸ்லிம்கள் ஆதரிக்க முடியாது—டாக்டர் அன்சாரி.

Koviloor Digital Library



## இந்தியாவிற்கு வேண்டிய நூல்.

(ஸ்ரீ. எம். பி. காந்தி.)

1927-28ம் வருஷம் முதல் 1929-30ம் வருஷம் வரை இந்தியாவில் சராசரி வருஷந்தோறும் 19,000 லட்சம் கெஜ ஜவுளியும், 450 லட்சம் ராத்தல் நூலும் இறக்குமதியாகியிருக்கின்றன.

1929-30ம் வருஷம் இந்தியாவிலுள்ள மில்கள் 8330 லட்சம் ராத்தல் நூல் நூற்றிருக்கின்றன மில்கள் தங்கள் மிஷின் தறிகளில் துணி செய்வதற்காக மொத்தம் 5010 லட்சம் ராத்தல் நூலை உபயோகப்படுத்தி யிருக்கின்றன. கைத்தறிகளில் துணி செய்ய 3510 லட்சம் ராத்தல் நூல் உபயோகமாகி யிருக்கிறது. 250 லட்சம் ராத்தல் நூல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்குத் தேவையான துணிகளுக்கு வேண்டிய மொத்த நூல்களில் இந்திய மில்களும் கைராட்டினங்களுமாகச் சேர்ந்து 1929-30 வருஷத்தில் நூற்று 65 பங்கு நூல் உற்பத்தி செய்திருக்கின்றன. அத்துடன் கூட வெளிநாடுகளுக்கு 1330 லட்சம் கெஜ துணியையும் ஏற்றுமதி செய்திருக்கின்றன. 1929-30-ம் வருஷத்தில் இந்தியாவுக்குத் தேவையான மொத்த துணியில் நூற்றுக்கு 35-பங்கு துணியும் அதாவது 19000 லட்சம் கெஜ துணியும், இந்தியாவில் உற்பத்தியாகும் நூலில் நூற்றுக்கு 5 பங்கு நூலும் அதாவது கிட்டதட்ட 450 லட்சம் ராத்தல் நூலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டிருக்கின்றன.

வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இந்த 19000 லட்சம் கெஜ துணியை இந்தியாவில் உற்பத்தி செய்வதற்கு மொத்தம் 4000 லட்சம் ராத்தல் நூல் வேண்டும். அதாவது 100 ராத்தல் நூலைக் கொண்டு 112 ராத்தல் இடையுள்ள மில் துணி செய்ய முடியும். இக்கணக்கில் செய்யும்போது சேதாரமாகும் நூலைக் கழித்தும் கஞ்சி போடுவதால் அதிகமாகும் நிறையைக் கூட்டியு மிருக்கிறது.

ஆகவே 1 ராத்தல் நூல் 4.78 கெஜ துணி (மில்லில் செய்யப்பட்டது) ஆனால் கைத்தறிகளில் 4 கெஜம் துணி செய்ய ஒரு ராத்தல் நூல் பிடிக்கும் என்று கணக்குப் பார்த்தால் அப்பொழுது மொத்தம் 4750 லட்சம் ராத்தல் நூல் வேண்டும். இப்பொழுது இந்தியாவுக்கு இறக்குமதியாகும் 450 லட்சம் ராத்தலுக்கு பதிலாக இந்தியாவிலேயே அவ்வளவு நூலை நூற்கவும் வேண்டும்.

## 48 கோடிக்கு "லாட்டரி."

இந்திய சர்க்கார் 6½ வட்டிக்கு கடன் கேட்பதைப்பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப்பற்றி இன்னம் சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. இம்மாதமும், அடுத்த மாதமும் சுமார் 48 கோடி ரூபாய் பழய கடனுக்கு அடைபட வேண்டிய திருக்கிறதாம். மற்ற செலவுகள் வேறு இந்த நெருக்கடியால்தான் 6½ வட்டிக்கு கடன் வாங்க முன்வந்திருக்கிறது இப்படி கடன் வாங்கி கடன் வாங்கி சிறு ஒட்டைகளை மூடிக்கொண்டு போனால் பெரிய ஒட்டைகளுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? சென்ற ஏப்ரல் மாதம் வரவு செலவு திட்டத்தை ஆஜர் செய்யும்போது சிக்கனத்தைப் பற்றி பிரமாதமாய் பேசினார்கள். அன்று நியமித்த சிக்கனக் கமிட்டிகள் மாதங்கள் 5 ஆகியும் இதுவரை ஒரு முடிவிற்கும் வரவில்லை. சாகுந் தருணத்தில் தண்ணீர் கேட்டவனுக்கு கருமாதியன்று ஒருவன் கொண்டுவந்தானாம். இதைப்போல சிக்கனக் கமிட்டிகளின் வேலைகள் இருக்கின்றன. இந்தக்கமிட்டிகள் முடிவு கூறி, அதன் மேல் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் முன்பு இந்திய பொருளாதார நிலைமை பரலோகஞ் சென்று திரும்ப வேண்டியதாய்த் தான் ஏற்படும். எல்லா நாடுகளிலும் சிக்கனத் திட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டு வந்து விட்டார்கள். இந்த சர்க்கார் இன்னம் சாக்கு போக்கு காட்டி வருகிறது. கொழுத்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு சம்பளம் குறையவில்லை. ஆனால் ஏழைகள் படும் கஷ்டம் மட்டும் நாளுக்கு நாள் விஷம் போல ஏறுகிறது. சர்க்கார் தன்னுடைய டம்பாச்சாரிதனத்திற்காக கடன் வாங்குவதில் மட்டும் கூசுவதில்லை. எல்லா வற்றையும் யோசித்தும் பார்த்தால், ஒரு பெரிய சூழ்ச்சி மீது நடைபெறுகிறதோ என்று சந்தேகந்தோன்றுகிறது. அடுத்த வருஷம் எப்படியாவது இந்நாட்டில் சுயராஜ்ய சர்க்கார் ஏற்படுவது நிச்சயம். பண நெருக்கடியையும், கடனையும் அதுவரை ஏற்றிக் கொண்டே போனால், சுயராஜ்ய சர்க்கார் அவற்றைத் தீர்க்க எக்கேடு கெட்டாலும் சரி என்று அதிகாரவர்க்கம் நினைக்கிறதா

Koviloor Digital Library

# புரட்சிக்கார மகாத்மா :: எல்வின் பாதிரியார்

மகாத்மா சொல்லுகிறார்:— "எல்லா நாடுகளும் வளர்ச்சியினாலும் புரட்சியினாலுமே முன்னேற்றமடைந்திருக்கின்றன. வளர்ச்சியும், புரட்சியும் ஒன்றைவிட ஒன்று அவசியமானவை. பிறப்பும் வளர்ப்பும் வளர்ச்சி. மரணம் புரட்சி. மனித வளர்ச்சிக்கு உயிர் எவ்வளவு அவசியமோ அதைப்போல மரணமும் அவசியம். கடவுள் ஒரு பெரிய புரட்சிக்காரர். அவரைப்போல புரட்சிக்காரரை இதற்கு முன்பு உலகம் பார்த்ததில்லை. இனி பார்க்கவும் முடியாது. ஒரு விநாடிக்கு முன் மிகவும் அமைதியாயிருந்த ஓர் இடத்திற்கு திடீரென்று கடவுள் ஒரு பெரிய புயல்காற்றை அனுப்புகிறார். பெரிய மலைகளை சில விநாடிகளுக்குள் தரைமட்டமாக்கி விடுகிறார். குபீரென்று நதிகளில் வெள்ளப் பெருக்கெடுத்து பல ஊர்களை அழிக்கும்படி ஏவுகிறார் "ஒழுங்காய் அமைக்கப்பெற்ற" முன்னேற்றத்தைவிட, ஆச்சரியமான புரட்சிகளே உலக சரித்திரத்தில் ஏராளமாய் காணப்படுகின்றன."

மகாத்மா காந்தி தமது ஆயுள் முழுவதிலும் எதிர்ப்பு கட்சியிலேயே இருந்து வருகிறார். வாலிபத்தில் தமது சமூகத்திலுள்ள ஜாதிகட்டுப்பாடுகளையும், வைதீகத்தையும் எதிர்த்து போராடினார். சீமைக்கு போனவுடன் அங்கு காணப்பட்ட போலி ஆடம்பர வாழ்வை எதிர்த்து போராடினார். தென்னாப்பிரிக்கா சென்றதும், அங்கு துன்பப்படுகிறவர்களுக்கு தலைவராய் நின்று கொடுமைகளை எதிர்த்தார். இன்று அவர் புரட்சி மிகப்பெரிதாய் விட்டது. ஆனால் முன்னுள்ள புரட்சிக்காரருக்கும் இவருக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவர் புரட்சி சாந்தமானது. அமைதியே உருவாய்க்கொண்டது. பாரபட்சமற்றது. அன்பும், தயாளமும் நிறைந்தது. கபடமற்றது.

மகாத்மா பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாய் மட்டும் புரட்சி செய்கிறவர் என்று பொதுவாக எல்லாரும் நினைக்கிறோம். அவர் வாழ்வில் இந்த ராஜீய புரட்சி ஒரு அற்ப விஷயமே. பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கைகளையும், திட்டங்களையும் அவர் எதிர்க்கிறாரேயொழிய சர்க்காரை எதிர்க்கவில்லை. மேல் நாட்டு நாகரிகம் கீழ்நாட்டு கலைகளை நாசப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆத்மார்த்திக நினைப்பை விட்டு, பண வருமான நினைப்போடு ஒவ்வொன்றையும் பார்க்கும்படி செய்கிறது. ஏழைக்கும், பணக்காரனுக்கும் நெஞ்சு பிளக்கும்படியான வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது. மகாத்மா சொல்லுகிறார்:—

"வெள்ளையர் நாகரிகம் வெள்ளையருக்கு பொருத்தமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தியருக்கு நாசத்தை விளைவிப்பதாகும். உலகாதய சௌகரியங்களை ஓயாமல் தேடுவதாலும், அவற்றை பெருக்கிக் கொண்டு போவதாலும் பெரிய சனியன் ஏற்படுகிறது. இந்த போகங்களில் அகப்பட்டு நசுங்கிப் போகாமல் இருக்க வெள்ளையர் விரும்பினால், இவற்றிலிருந்து தப்பிக் கொள்ளும்படி எச்சரிக்கிறேன்."

நவீன நாகரிகமும், இயந்திரங்களும் மனிதரின் அயோக்கியத்தனத்தை மறைக்க உபயோகமாகின்றன; அநீதியும், ராணுவத்திமிரும் கொண்ட ஏகாதிபத்தியம், மனிதர் உயிர் வாழவே முடியாதோ என்ற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது; என்று மகாத்மா சொல்லுகிறார். ராஜீயம் மட்டுமல்ல, மத ஊழல் சமூக ஊழலையும் மகாத்மா விடுவதில்லை. தீண்டாமை ஒழித்தல், பால்ய மணம் தவிர்த்தல், அசுத்த வாழ்வை போக்கல் முதலியவை விஷயமாய் மகாத்மா எவ்வளவு தீவிரமாய் போராடி வருகிறார் என்பதை எல்லாரும் அறிவார்கள்.

அவர் புரட்சி தத்துவம் ருஷிய தலைவராயிருந்த லெனின் தத்துவத்திற்கு நேர் விரோதமானது. தம்முடைய எதிரிகளை தமது பக்கம் திருப்ப முயற்சிப்பது அவர் நோக்கமேயொழிய அழிப்பது நோக்கமல்ல. அவர் ஆயுதம் அன்பு ஒன்றே பிறருக்கு கடுகளவும் துன்பம் செய்யக்கூடாது என்பதே அவர் கொள்கை முதலாளிகளை அழிப்பது அவர் விருப்பமல்ல. முதலாளித்தனத்தை அழிப்பதே அவர் விருப்பம் ஆமதாபாத்திலுள்ள தொழிலாளர் சங்கம் உலகத்திற்கே தலை சிறந்ததாய் விளங்குகிறது. அங்கு முதலாளிகளும், தொழிலாளரும் மகாத்மா சொல்லுகிறபடி கேட்கிறார்கள். அவர் அன்பு முறையின் வெற்றியை அங்கு காணலாம். மகாத்மா யாரையும் கட்டாயப்படுத்தி தமது புரட்சியை புகுத்துவதில்லை. தமது நியாயத்தாலும், அன்பாலுமே மற்றவர்களை வெல்லுகிறார்.

Koviloor Digital Library



# தங்கம் தமொழிய கதை.

உலோகங்களில் தங்கமே ராஜா. ஆனல். அந்த ராஜாவிற்கும் ஆபத்து வந்தது. யுத்த காலத்தில் பல ராஜ ககள் சிம்மாசனம் இழந்து விடவில்லையா? அதைப்போல தங்கமும் யுத்த காலத்தில் தனது பட்டத்தை துறக்க நேரிட்டது. அதன் கிரீடத்தை "பிளாட்டினம்" என்ற உலோகம் கைப்பற்றியது தங்கத்தின் ராஜ வாழ்வு போயிற்றே என்று பயப்படும் படியாயிருந்தது. ஆனல் பிளாட்டினம் சிம்மாசன வாழ்வு, ஆப்கனில் பாச்சா சாக்கோ வாழ்வைப் போல அற்ப ஆயுளில் முடிந்து போயிற்று. 50 வருஷங்களுக்கு முன்னல் பிளாட்டினம் கைத்தொழிலில் ஒரு முக்கிய மான பதவி பெற்றது. காஸ்விளக்கு, மின் சார சரக்குகள் முதலியவைகள் செய்வதற்கு பிளாட்டினம் அவசியமான பொருளாயிற்று. ரஷியாவிலிருந்து ஏராளமாய் வந்துகொண்டிருந்தது. யுத்தத்தினல ரஷிய சப்ளை நின்று போகவே, பிளாட்டினத்திற்கு கிராக்கி ஏற்பட்டது. தென் ஆப்பிரிக்கா, கனடா, கொலம்பியா நாடுகளில் கிடைக்கிற மட்டும் அதிகமாய் சப்ளை செய்ய முயன்றும் போதவில்லை. தேவைக்கு தக்க அளவு சரக்கு இல்லையானல் விலை கூடுவது சகஜந்தானே? பிளாட்டினம் விலை கூடிக் கொண்டே போயிற்று. தங்கத்திற்கும் மேல் போயிற்று. தங்கத்திற்கு மேல் விலை போனல் ஆபரணக்காரர் விடுவார்களா? விலையைப்பொறுத்து தானே ஆபரண அலங்காரமும் நிற்கிறது? ஏராளமாய் ஆபரணங்கள் செய்யப்பட்டன. விலை மறுபடியும் கூடி சுமார் ஏழு, எட்டு மடங்கு தங்கத்தை விட அதிக விலைக்கு ஏறியது. தங்கம் தனது சிம்மாசனப் பதவியை இழந்தது பிளாட்டினம் சிம்மாசனத்தில் ஏறியது இது நீடித்து நிற்க வில்லை. யுத்தம் நின்றதும் ரஷியா மறுபடியும் கப்பல் கப்பலாய் பிளாட்டினத்தை உலக மெங்கும் ஏற்றி அனுப்பியது. விலை திடீரென்று கீழே விழுந்தது சிம்மாசனப் பதவி போயிற்று. தங்கத்திற்குப் பதிலாக பிளாட்டினத்தை பொக்கிஷப் பொருளாய் வைக்கலாமா என்று யோசித்த நாடுகள் திடுக்கிட்டன. தங்கத்தின் விலையை விட பிளாட்டினம் விலை மலிந்தது. மறுபடியும் தங்கம் சிம்மாசனம் ஏறியது. உலோகங்களில் ராஜாவாக திரும்பவும் பசுமையோடு பிரகாசிக்கிறது!

---

## 1932ல் சுயராஜ்யம்

---

### ஒரு ஜோசியம்

மகாத்மா காந்தி கட்டாயம் லண்டனுக்கு போவார் என்று பண்டித சங்கர சாஸ்திரி சென்ற மாதம் ஜோசியம் சொன்னர். அது பலித்து விடவே மறுபடியும் சில ஜோசியங்கள் எழுதி யிருக்கிறர். அவர் குறிப்பிடுவதாவது:—

கன்சர்வேடிவ் கட்சியார் மறுபடியும் மந்திரி சபையை கைப்பற்ற பகிரதப் பிரயத்தனஞ் செய்வார்கள். ஆனல் காரியந்தான் பலிக்காது. அடுத்த தேர்தலிலும் அவர்கள் தோல்வியடைவார்கள். மந்திரி சபை எது வந்தாலும் போனலும் வட்ட மேஜை மகாநாட்டிற்கு எவ்வித பாதகமும் ஏற்படாது. இந்திய பிரச்னையை தீர்த்து வைக்க லார்ட் இர்வின் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்வார். அவர் முயற்சியாலேயே வெற்றி கிடைக்கும் என்று கூடச் சொல்லலாம். 1932ம் வருஷம் ஜனவரி மாதம் லார்ட் வெல்லிங்டன் டெல்லியில் ஒரு தர்பார் கூட்டுவார். அதில் புதிய சீர்திருத்தங்களை வெளியிட்டு அமுலுக்கு கொண்டு வருவார்.

லண்டன் மகாநாடு வெற்றிகரமாய் முடிவதற்கு ஜார்ஜ் மன்னரும், இதர ராஜ குடும்பத்தினரும் மிகுந்த உதவி செய்வார்கள்.

---

ஜார்ஜ் மன்னர் பிறப்பினல் பிரிட்டிஷார். பேசுவதும் ஆங்கிலம். மதமும் பிரிட்டிஷாரில் பெரும்பாலோர் பின்பற்றும் கிறிஸ்தவ மதம் ஆனல் தானே தனது குடிகளுக்கு ஏக பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளுவதில்லை போது ஜன விருப்பத்திற்கு உட்படுகிறர். ஜனங்கள் பிரியப்படியே நடக்கிறர். எல்லாருக்கும் நானே பிரதிநிதி என்று சொல்லும் இந்திய மன்னர்கள், தங்களுக்கு மன்னராய் விளங்கும் பிரிட்டிஷ் மன்னரிடம் பாடங் கற்றுக் கொள்வார்களாக.

—ஸ்ரீ. ராமானந்த சாட்டர்ஜி.

Koviloor Digital Library



## பச்சை புளுகு

கெட்டிக்காரன் புளுகு கூட எட்டு நாளில் வெளியாய் விடுமாம் இது பழைய காலத்தில். தந்தியும், ஆகாசத் தந்தியும் பெருத்த இக்காலத்தில் 8 விநாடிகளில் வெளுத்து விடும். மகாத்மா காந்தியைப் பற்றியும், காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றியும் எத்தனையோ புளுகுகளை வெள்ளை நிருபர்கள் உற்பத்தி செய்கிறார்கள் கடைசியாய் கட்டிய புளுகு மிகப் பெரிய புளுகு. ஒத்துழையாமை இயக்கம் 1921ல் நடந்து கொண்டிருக்கும்போது, வேல்ஸ் இளவரசர் இந்நாட்டிற்கு வந்ததையும், அவரை காங்கிரஸ் பகிஷ்கரித்ததையும் நண்பர்கள் அறிவார்கள். வேல்ஸ் இளவரசர் இந்நாட்டில் இருக்கும்போது ஒரு நாள் மகாத்மா டெல்லிக்கு போயிருந்தாராம் இந்திய சர்க்கார் நிர்வாக சபை அங்கத்தினரான ஒரு இந்தியர் ஆபீசில் அவர் பேசிக் கொண்டிருந்தாராம். அச்சமயம் வேல்ஸ் இளவரசர் அங்கே வந்தாராம். உடனே மகாத்மா எழுந்து அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்து, இந்தியரிடம் கருணை காட்டும்படி பிரார்த்தித்தாராம். இதுவே கடைசியாக கட்டிவிடப் பட்டிருக்கும் புளுகு. இதை எழுதியவர் ஸ்ரீ. ஜார்ஜ் ஸ்லோகோம்ப் என்ற "டெயிலி ஹெரால்ட்" நிருபர். இவர் சென்ற வருஷம் இந்தியாவிற்கு வந்து மகாத்மாவை எரவாடா ஜெயிலில் பேட்டி கண்டு பேசியதை நண்பர்கள் அறிவார்கள். மிகவும் பொறுப்புள்ளவர்; அநுபவம் மிகுந்தவர். அவரே இம்மாதிரி எழுதுவாரானால் மற்ற "டெயிலி மெயில்," "மார்னிங் போஸ்ட்" போன்ற கறு தலை நிருபர்களைப் பற்றி நாம் சொல்லவேண்டியதே இல்லை ஸ்லோகோம்ப் இந்தியாவிலிருக்கும் போதோ, சீமைக்குச் சென்ற பின்போ யாரோ இக்கதையை கட்டி விட்டிருக்கவேண்டும். மகாத்மாவிற்குள்ள சுயிப்புத்தன்மையையும், பெருந்தன்மையையும் அறிந்த அவர் இந்த பச்சைப்புளுகை உண்மை என்று நம்பியிருக்க வேண்டும். சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு புத்தியில்லையா? இம்மாதிரி மோசமான செய்திகளை வெளியிடு முன்பு அவர் தீர விசாரித்திருக்கவேண்டும், அப்படிச் செய்யாமல். உலகப் பெரியாராய் விளங்கும் ஒருவரைப் பற்றி இம்மாதிரி புளுகுவது வெறும் அக்கிரமமாகும். இச் செய்தியை மகாத்மா கேட்டவுடன் திடுக்கிட்டுப் போனார். இச் செய்திக்கு ஆதாரமென்ன என்று ஸ்லோகோம்பிற்கு எழுதிக் கேட்கும்படி பண்டித ஜவார்லாலிடம் மகாத்மா சொல்லியிருக்கிறார்

## சம்பளக் கொள்ளை

மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் வெள்ளையருக்கு வாரி வாரி சம்பளம் கொடுப்பது விளங்கும். வரவுக்குத் தக்க செலவு என்பது இந்த சர்க்காருக்கு கனவிலும் நினைப்புக் கிடையாது. செலவுக்கு வேண்டிய வரவை எப்படி பெறுவது என்பதே அவர்கள் கவலை இது சம்பந்தமாக புரபசர் வி. கே. ஆர். வி. ராவ் ஒரு கணக்கு வெளியிட்டிருக்கிறார்.

| | | சராசரி வருஷ வரவு | சராசரி குமாஸ்தா சம்பளம் |
|---|---|---|---|
| பிரிட்டன் | ரூ. | 1240 | 1266 |
| கானடா | | 1420 | 1650 |
| அமெரிக்கா | | 1850 | 3125 |
| ஜெர்மனி | | 520 | 1110 |
| ஜப்பான் | | 295 | 650 |
| இந்தியா | | 74 | 360 |

இனி உயர்தர உத்தியோகஸ்தர்களின் சராசரி சம்பளவிகிதத்தை பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷ் | ரூ | 40000 |
| கானடா | ,, | 27400 |
| அமெரிக்கா | ,, | 27400 |
| ஜெர்மனி | ,, | 14960 |
| ஜப்பான் | ,, | 8800 |
| இந்தியா | ,, | 48000 |

பிரிட்டனில் சராசரி வருமானத்தை விட சராசரி உயர்ந்த சம்பளம் 30 பங்கே அதிகமாயிருக்கிறது. இந்தியாவிலோ 600 பங்கு அதிகம்! பிரிட்டனை விட 20 பங்கு அதிகம். தர்மகர்த்தா பதவியின் யோக்கியதை இது தான். வாயில்லா பூச்சிகளாகிய இந்தியரைக் காப்பாற்றும் தர்மமும், வெயிலைப் பாராமல் 6 ஆயிரம் மைல் கடந்து இந்த நாட்டில் வந்து "பரோபகாரமாய்" உத்தியோகம் பார்க்கும் சூழ்ச்சியும் இதுதான்.

---

இனி எந்த சர்க்காரும் விவசாயிகளின் அபிமானத்தை பெறாமல் வாழ முடியாது
—சென்னை முதல் மந்திரி.

Koviloor Digital Library



## இந்தியருக்கா ஆண்மை இல்லை?

பழைய சேனாதிபதி வில்லியம் பர்ட்வுட், கிழவராய் போன மைக்கேல் ஓடயர், நடக்க முடியாத லார்ட் சைடன்ஹாம, மரியாதை கெட்ட லார்ட் லாயட் முதலிய சோம்பேறிக் கூட்டங்கள், இந்தியருக்கு ஆண்மையில்லையென்று சொல்லுகின்றனர். இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் வெளி நாட்டார் இந்தியா மீது படையெடுப்பார்களாம். அதைத் தடுக்க இந்தியருக்கு சக்தியில்லாமல், மறுபடியும் யாருக்காவது அடிமையாய் விடுவார்களாம். விவகார ரீதியாகப் பார்த்தால் இது வெறும் மூடத்தனமான பேச்சு. உண்மை வழியாகப் பார்த்தால் இது அசல் சுயநலப் பேச்சு. பாலுக்கு தான் காவல் இருக்கவேண்டுமென்று பூனை சொல்லுவது எவ்வளவு பொருத்தமோ அதைப்போலவே வெள்ளையர் இந்தியாவிற்கு தர்மகர்த்தாவாயிருக்க வேண்டுமென்று சொல்லுவதும் பொருத்தமாகும். வெள்ளையர் சொல்லும் இந்தக் காரணம் வெறும் நொண்டிக் காரணம். நல்லவர்கள் எங்கும் இருப்பார்கள். பிரிட்டிஷாரிலும் ஒன்றிரண்டு நல்ல ஆசாமிகள் இல்லாமல் போகவில்லை. ஜெனரல் சர். ஹாமில்டன் என்ற சேனாதிபதி என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள்.

"ராணுவத்திற்கு யோக்கியதையுடைய ஜாதியார் வட இந்தியாவில் தாராளமாய் இருக்கிறார்கள். திறமையுள்ள தலைவர்களால் பழக்கப்பட்டால், அவர்கள் ஐரோப்பாவைக் கூட தலைகீழாய் புரட்டி விடுவார்கள். போர் முனையில் வீரமும், தியாகமும் ஒரு தேச மக்களை மாட்சிமைப்படுத்தும் குணங்களாய் இருக்கின்றன. அவர்களுடைய வீரமும், தியாகமும் வெளிப்பட வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அறிவு வளர்ச்சியடையும் போது தக்க தலைவர்கள் தானாக தோன்றுவார்கள். தலைவர்கள் தோன்றி விட்டால் ஆங்கிலேயர் இந்தியரை அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியாது." இந்தியரின் வீரமும், தியாகமும் சென்ற வருஷப் போராட்டத்தில் வெளியாயிருக்கின்றன. சென்ற வருஷம் அவர்கள் தடியடி கொடுமைக்குள் அகப்பட்டதைப் போல எந்த சிப்பாயும் யுத்தத்தில் கஷ்டப் பட்டிருக்க முடியாது. இந்தியருக்கு ஆண்மையில்லையென்று யாரால் சொல்ல முடியும்?

## கடவுள் காப்பாராக!

பிரிட்டனில் பேர் பெற்ற உளறுவாயர்களில் சர்ச்சில் முதன்மையானவர். இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாது என்று இவர் பேசும்போதெல்லாம், தீண்டாதாருக்காக ஒருடன் நீலிக்கண்ணீர் வடிப்பார் சாச்சிலின் நீலிக் கண்ணீரை பார்த்து பார்லிமெண்டில் பலர் வெறுப்புக் காட்டினர். ஸ்ரீ. ஐசக்புட் என்பவர் ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர். அவர் ஒரு சமயம் பேசியபோது பின் வருமாறு சொன்னார்:—"சர்ச்சிலே, நீர் 25 வருஷமாக இந்த பார்லிமெண்டில் இருக்கிறீரே! இதற்கு முன் எப்பொழுதாவது தீண்டாதாரைப்பற்றி பேசியதுண்டா? எந்தச் சமயத்திலாவது தீண்டாதார் படும் துன்பங்களை இந்த சபையாருக்கு எடுத்துக் காட்டியதுண்டா? இல்லை. ஏன்? அவர்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் உமக்கு இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை இப்பொழுது உமது பிரசாரத்திற்கு அவர்கள் அவசியமாயிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்காக நீலிக்கண்ணீர் விடுகின்றீர்! தீண்டாதாருக்கு எவ்வளவு பெரிய அவமானத்தை உண்டுபண்ணுகிறீர்! எத்தனையோ நூற்றாண்டுகளாக தீண்டாதார் அவமானங்களுக்கு உட்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. நீர் அவர்களை உபயோகப்படுத்துவது மூலம் அவற்றிலெல்லாம் பெரிய அவமானத்தை அவர்கள் இப்பொழுது அடையும்படி செய்கிறீர்."

சர்ச்சிலுக்கு மட்டும் நீலிக்கண்ணீர் வடிவதாக நினைக்க வேண்டாம். இந்தியாவில் சில முஸ்லிம் தலைவர்களுக்கும் அந்தக் கண்ணீர் புதிதாகத் தோன்றியிருக்கிறது. லண்டன் மகாநாட்டிற்கு புறப்பட்டுப் போகும் தலைவர்களாகிய மௌலானா ஷவுகத் அலி முதல் ஸ்ரீ. ஜின்னா வரையில் சகல முஸ்லிம் தலைவர்களும் பம்பாய் துறை முகத்தில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு டன் கண்ணீர் தீண்டாதாருக்காக கொட்டிவிட்டு கப்பல் ஏறுகிறார்களாம். ஐயோ, பாவம்! இந்தியாவிலிருக்கும் போது தீண்டாமையை தொலைக்க இவர்கள் என்ன செய்தார்களோ, இவர்கள் மனம் எவ்வாறு உருகிற்றோ கடவுளே அறிவார். எப்படியிருந்தாலும் இந்த நண்பர்களிடமிருந்து தீண்டாதாரை கடவுளே காப்பாற்ற வேண்டும்!

Koviloor Digital Library



(முதற் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் சமாதான நிபந்தனைகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் கட்டுகளை காவது தவறுவீர்களானல் நமது கட்சி தொலைந்து போகும். நம்முடைய விரோதிகள் நம்மை பிரித்து விடவோ, பலவீனமாக்கவோ, சோர்வடைச் செய்யவோ பல சூழ்ச்சிகள் செய்வார்கள். உஷார், உஷார்!

ஒற்றுமையே பிரதானம். நீங்கள் ஒற்றுமையாயிருக்கிறீர்கள் என்பதை, உங்கள் பிரதிகள் மீது உங்களுக்கு பூர்ண நம்பிக்கையிருக்கிறது என்பதன் மூலம் காட்டுங்கள்; உங்கள் தலைவர்கள் உத்தரவை கட்டுகளவும் மீறி நடக்க மாட்டீர்கள் என்பதன் மூலம் காட்டுங்கள். அம்மாதிரி செய்யும்படி உங்களை வேண்டிக் கொள்ளும்,

டி வாலரா
(10—9—21)

இதை இந்தியர் பன்முறை படிக்க வேண்டுகிறோம். மகாத்மா இந்தியாவின் ஏகப் பிரதிநிதியாகப் போயிருக்கிறார். மற்ற "பிரதிநிதி"களைப்பற்றி நமக்கு கவலையில்லை. மகாத்மா வெற்றி பெறுவது இந்தியர் அளிக்கும் பலத்தைப் பொறுத்திருக்கிறது. இந்தியாவிற்கு மகாத்மா உயிர். இந்தியர் உடல். மகாத்மா மீது அளவற்ற நம்பிக்கையிருக்கிறதென்பதை இந்தியர் காட்ட வேண்டும். அவர் சொல்லுவாரானல் மறுபடியும் சட்ட மறுப்பு ஆரம்பிக்க தயார் என்பதை பகிரங்கப் படுத்த வேண்டும். அவர் கட்டளைப்படி நடக்க இந்தியா தவித்துக் கொண்டிருக்கிறது என்பதை பிரிட்டிஷாருக்கு உணர்த்த வேண்டும். அப்பொழுதே மகாத்மா வெற்றி பெற முடியும்.

---


சுதேசி புடவைகள்

கலருக்கு உத்திரவாதம். அழகான கரையும் முகதலையும், எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

6 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 2-15-0
8 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 3-15-0
9 கெஜம் 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 4-4-0

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட்

காந்தி தொப்பி 1 க்கு அணா 6.

☞ ½ அணா ஸ்டாம்பு அனுப்பினல் கேட்லாக் அனுப்பப்படும்.

காந்தி ஸ்டோர்ஸ்,
மவுண்டு ரோட், மதராஸ்.


# கப்பலில் காந்திஜி

ஏடனில் பார்சிகள் 4 ஆயிரம் ரூபாய் மகாத்மாவிற்கு சமர்ப்பித்தார்கள். மகாத்மா குழந்தை மாதிரி கப்பலிலுள்ள குழந்தைகளுடன் விளையாடுகிறாராம். சென்ற 6 மாதமாக அவருக்கு வேலை அதிகமாகையால், கப்பலில் நடனம், சங்கீதம் முதலிய என்ன சப்தம் இருந்தபோதிலும் மகாத்மா அயர்ந்து நித்திரை புரிகிறார். ஒருநாள் காலையில் கிறிஸ்தவர் பிரார்த்தனையில் கலந்து கொண்டார். 7ந் தேதியன்று "ராஜபுத்தானா" சூயஸ் துறைமுகம் அடைந்தது. அங்கு எகிப்தியரும், இந்தியரும் ஏராளமாய் கூடி மகாத்மாவை வரவேற்றனர். எகிப்திய பிரபல தலைவரான காலஞ் சென்ற ஜக்லுல் பாஷா மனைவியார் மகாத்மாவிற்கு வரவேற்பு தந்தி அனுப்பியிருந்தார். எகிப்திய தேசீயக் கட்சித் தலைவரும், முதல் மந்திரியாயிருந்தவருமான நஹாஸ் பாஷா, மகாத்மா வரவேற்று, அவருக்கு வெற்றியளிக்க கடவுளைப் பிரார்த்தித்து தந்தி அனுப்பியிருந்தார். இந்தியாவிற்கு திரும்பும் போது எகிப்திற்கு விஜயஞ் செய்யுமாறு அழைத்திருக்கிறார். லண்டனில் வரவேற்பு வேலைகள் பலமாய் நடைபெறுகின்றன. அமெரிக்காவிற்கு வரும்படி ஏராளமாய் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன; பிரிட்டனில் பிரசங்கங்கள் செய்யும்படி விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன. பிரிட்டிஷ் சர்க்கார் விருந்தாளியாகப் போவதால், முதல் மந்திரியை கேட்காமல் வெளியே பிரசங்கம் செய்ய முடியாதென்று மகாத்மா சொல்லுகிறார். கப்பலில் சென்ற லண்டன் மகாநாட்டு நடவடிக்கைகளை மகாத்மா படித்து வருகிறார். துப்பறியும் நாவல்கள் படிக்கும்படி ஒரு அமெரிக்கர் கொண்டு வந்து கொடுத்தாராம். வந்தனத்துடன் மறுத்துவிட்டார். லண்டனில் மகாத்மாவை பாதுகாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் ரகசிய போலீசார் பலத்த ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

---


ஏஜண்டுகள் தேவை

சிதம்பரம், கும்பகோணம், ஈரோட்டில் "காந்தி" பத்திரிகை விற்கவும், "காந்தி" அணா பிரசுரங்கள் விற்கவும் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்:—"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.


Edited, Printed & Published by T. S. CHOCKALINGAM, at the Lakshmi Press, 11, Anderson St. Madras.

Kovilooor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)

# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 14உ, பிரஜோற்பத்தி ஆவணி மீ 29உ திங்கட்கிழமை | இதழ் 26

## சர்க்காரே, உனக்கு மானமுண்டா?

சர்க்காரே, உனக்கு மானமுண்டா? வானத்தை பார்க்க வேண்டாம். மேலே வானம் இருப்பதை நாம் அறிவோம். உனக்கு மானம் இருக்கிறதா என்றே நாம் கேட்கிறோம். இந்தியரை காப்பாற்ற இந்நாட்டிற்கு வந்திருப்பதாய்ச் சொல்லுகிறாய். ஏழை இந்தியருக்கு நீ தான் கார்டியன் என்று பேசுகிறாய். இந்தியாவின் நாணயத்தை தூக்கி பிடித்திருப்பதாய்ச் சொல்லுகிறாய். இவையெல்லாம் உண்மை தானா? உண்மையானால் உனக்கு மானமில்லை. ஏனெனில் நீ சொல்லுகிறபடி நடக்கவில்லை. அல்லது நீ பொய் சொல்லவேண்டும். இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற பண நெருக்கடி சொல்லத்தரமல்ல. இதை அறிந்தும் நீ வாங்கும் கொள்ளை சம்பளத்தை குறைக்கவில்லை. சிக்கன கமிட்டிகள் என்று பெயருக்கு ஏற்படுத்தி யிருக்கிறாயே யொழிய, காரியத்தில் ஒன்றுமில்லை. இதுதானா உனது "கார்டியன்" வேலையின் போக்கியதை?

இங்கிலாந்தைப் பார். அங்கே சர்க்கார் எவ்வளவு கவலையோடு வேலை செய்கிறது. பார்த்தாயா? அங்கே முதல் மந்திரி சுமார் 5 ஆயிரம் ரூபாயே சம்பளம் வாங்குகிறார்: இங்கே ஒரு நிர்வாக சபை அங்கத்தினரும் அந்தத்தொகை பெறுகிறார். பிரிட்டனில் அவ்வளவு சொற்ப சம்பளம் பெற்றும், எல்லா மந்திரிகள் சம்பளத்திலும் 100 க்கு 20 விதம் குறைத்துவிட்டார்கள். அதுமட்டுமா? 5 ஆயிரம் பவுனுக்கு மேல் வருஷம் சம்பளம் வாங்கும் ஜட்ஜுகளுக்கும் 100 க்கு 20 விதம் குறைத்து விட்டார்கள். சிவில் சர்விஸ்காரர் தப்பினார்களா? அல்ல. வருடம் 2 ஆயிரம் பவுனுக்கு மேல் பெறும் சிவில் சர்விஸ்காரர் சம்பளத்தில் 100 க்கு 10 விதம் குறைத்திருக்கிறார்கள். 2 ஆயிரம் பவுனுக்கு குறைவாக சம்பளம் வாங்குகிறவர்களுக்கு படியை பிடித்துவிட்டனர். இவ்வளவு தானா? அல்ல. போலீஸ் இலாகாவில் 5 லட்சம் பவுன் குறைவு. ராணுவத்தில் 50 லட்சம் பவுன் குறைவு. பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சம்பளத்தில் 100 க்கு 10 குறைவு. வேலையில்லாதவர்களுக்கு கொடுக்கும் தொகையில் 250 லட்சம் பவுன் குறைவு. இம்மாதிரி குறைவு ஏற்படுத்தி சீமையில் சர்க்காருக்குள்ள பணக்கஷ்டத்தை போக்குகிறார்கள். இங்கு என்ன செய்கிறார்கள்? இந்திய சர்க்காரே நீ என்ன செய்கிறாய்? பரோபகார நோக்கத்தோடு இந்த உஷ்ண பூமிக்கு வந்து வேலை செய்வதாகச் சொல்லும் உனது சிவில் சர்விஸ் கோஷ்டி என்ன செய்கிறது? ஏழை விவசாயிகளிடம் வரி வசூல்செய்ய எம்மாதிரி அடக்கு முறைகளை உபயோகிக்கலாம் என்பதில் அந்தக் கோஷ்டி ஈடுபட்டிருக்கிறதே யொழிய, ஒரு செப்புக் காசு தியாகபுத்தி கூட காணவில்லை.

(கடைசி பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



## குழிவெட்டி புதையுங்கள்

ஆமதாபாத்தில் 11ல் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் அச்சுச்சட்டம் மசோதாவைப்பற்றி பின்வரும் தீர்மானம் செய்திருக்கிறது:—

"காங்கிரஸ் காரியக்கமிட்டி பலாத்காரத்தை எப்பொழுதுமே எதிர்த்து கண்டனஞ்செய்து வருகிறது. ஆனால் தற்சமயம் சர்க்கார் கொண்டுவந்திருக்கும் அச்சுச்சட்ட மசோதாவை அவசியமில்லாத கடுமையானமுறை என்று கருதுகிறது. அது பத்திரிகை சுதந்திரத்தை நிர்மூலம் செய்வதாகும். மசோதாவில் சொல்லப்பட்டிருக்கும் விதிகள் மிகவும் விரிவானவையாகவும் தெளிவின்மையாகவும் இருப்பதால் ஜனங்கள் செய்யும் எந்தச் செய்கையையும் பலாத்காரம் என்று சொல்லக் கூடியதாய் இருக்கிறது. டெல்லி உடன்படிக்கைப்படி விடுதலையாக வேண்டிய பலரை இன்னும் விடுவிக்காமல் இருப்பதற்கு சர்க்கார் சொல்லும் "பலாத்கார" வியாக்கியானம் நாம் மேலே சொல்லுவதை உறுதிப்படுத்துகிறது. சென்ற வருஷம் ஏற்படுத்திய அவசர அச்சுச்சட்டத்தை விரிவாக்கி மறுபடியும் சட்டமாக்க மசோதாவாககொண்டு வந்திருக்கிறார்கள் என்றே கமிட்டி அபிப்பிராயப்படுகிறது. ஆகவே இது யுத்த நடவடிக்கையாகும். சமாதான காலத்தில் இந்த யுத்த நடவடிக்கையை சட்டமாக்க முயற்சிப்பது, டெல்லி உடன்படிக்கையை அடியோடு மீறுவதாகும்"

காங்கிரஸ் காரியக்கமிட்டி தனது அபிப்பிராயத்தை வெளியிட்டுவிட்டது. இனி இந்தபுதிய மசோதாவை ஒரு கை பார்க்க தேசம் தயாராகி விடும். காந்தி—இர்வின் உடன்படிக்கைக்கு பின்னால் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததே பெரிய அயோக்கியத்தனம். ஏதோ முட்டாள் தனமாய் கொண்டுவந்து விட்டார்கள். இனி செய்யவேண்டிய வேலை மரியாதையாக வாபஸ் வாங்கவேண்டியதே. சர். ஜேம்ஸ் கிரீரார் தலைகீழாக நின்று கத்தினாலும் அச்சுச்சட்டம் வெற்றிபெற முடியாது. அதிக சுதந்திரம் வேண்டும் என்று சொல்லும் இக்காலத்தில், இருக்கிற சுதந்திரத்தையும் பிடுங்கவரும் அச்சுச்சட்டத்தை குழிவெட்டி புதைக்க வேண்டியது ஜனங்கள் கடமையாகும்.

## காலச்சக்கரம்.

### பித்தம் ஏறுகிறது!

"மார்னிங் போஸ்ட்" பத்திரிகைக்கு மகாத்மா சீமைக்கு வருவது பிடிக்கவில்லை. ஆதிமுதல் அது செய்து வந்த பிரசாரங்கள் பலிக்காமல் மகாத்மா வெற்றி மேல் வெற்றி பெறுகிறார். இதைப்பார்த்து பித்தம் பிடித்ததைப் போல சீறுகிறது. இன்று மகாத்மா மௌன தினம். இன்றுதான் ஐக்கிய ஆட்சி கமிட்டி கூடுகிறது. அவர் அதில் பேசாமல் மௌனமாய் இருப்பார். இதைப்பார்த்து "மார்னிங் போஸ்ட்" மிரளுகிறது. மகாத்மா தமது ஆத்ம சக்தியை லண்டன் பட்டணத்தில், பிரிட்டிஷ் மந்திரிகள் மத்தியில் கொண்டுவந்து நிலை நாட்டுவதென்றால் அதற்கு பொறுக்க முடியுமா? "மகாத்மா மௌனமாயிருந்தால் இருக்கட்டும். யாருக்கும் கவலையில்லை" என்று சொல்லுகிறது. உண்மையிலேயே அதற்கு கவலையில்லையானால், இவ்வளவு கோபம் எதற்கு? பாவம், மார்னிங் போஸ்ட் இருதலைக் கொள்ளி எறும்பு போல தவிக்கிறது!

### அநியாய தண்டனை.

பாஞ்சால கவர்னரை சுட முயற்சி செய்த ஹரிகிருஷ்ணருக்கு உடந்தையாக இருந்து சதியாலோசனை செய்ததாக ரணவீர சிங், துர்க்காதாஸ், சமன்லால் ஆகிய மூன்று வாலிபர் மீது வழக்குத் தொடுத்திருந்தனர். இரண்டு ஜூரிகள் எதிரிகளை குற்றவாளிகள் அல்லவென்று சொல்லினர். ஒரு ஜூரி சமன்லால் மட்டும் உடந்தையாயிருந்ததாகச் சொன்னார். மற்றொருவர் சமன்லால் சதியாலோசனையில் கலந்திருந்ததாகச் சொன்னார். இவற்றை கவனிக்காமல் செஷன்ஸ் ஜட்ஜ் மூவருக்கும் தூக்கு தண்டனை விதித்திருக்கிறார். இது அநியாய தண்டனை. சதியாலோசனையில் சேர்ந்திருந்ததை ஜூரிகளில் பெரும்பாலோர் ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக் கொண்டிருந்தாலும் சதியாலோசனைக்கு தூக்கு போடுவது கொடுமையிலும் கொடுமை. இம்மாதிரி மனோபாவம் மாறவேண்டும்.

---

தீமையை எதிர்க்காதே என்று கிறிஸ்து சொன்னார் தீமையை தீமையால் எதிர்க்காமல் நன்மையால் எதிர்க்க வேண்டும் என்பதே அதன் பொருள்—மகாத்மா

Koviloor Digital Library



# காந்தி சந்நியாசி : :

(பாதிரியார் எல்வின்)

1915ம் வருஷம் மகாத்மா காந்தி காலஞ் சென்ற கோகலே படத்தை திறந்து வைக்கும் போது ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது பேசிய வார்த்தைகள் அவர் உள்ளக் கிடக்கையை உலகத்திற்கு வெளிப்படுத்தியது. அவர் பேசியதாவது:—இங்கு பாடிய பாட்டில் "யார் துணி கிழிந்து தூசி படிந்திருக்கிறதோ அவருடன் தான் கடவுள் இருக்கிறார்" என்று சொல்லப்பட்டது. உடனே என் ஆடையைப் பார்த்தேன். அது கிழியவுமில்லை, அழுக்காகவுமில்லை. வெண்மையாய் நன்றாய் இருந்தது. ஆகவே என்னிடம் கடவுள் இல்லை" மகாத்மாவின் சன்னியாச மனப்போக்கை இது விளக்குகிறது. பூகத்தினால் கூட அறிய முடியாத அவ்வளவு தரித்திரம் நிறைந்த ஒரு நாட்டின் பிரஜையாக அவர் இருக்கிறார். பட்டினியிலேயே சதா மூழ்கிக் கொண்டிருக்கும் அவர்களுடைய துன்பங்களைப் போக்கும் வழிகளைப் பற்றியே அவர் சதா நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர்களுக்காக தொண்டு செய்வதைவிட கடவுளுக்கு உகந்தது வேறு எதுவுமில்லை என்பதே அவர் தீர்மானம். சுயநல மறுப்பே மகாத்மாவின் சந்நியாசம். பணி செய்து கிடப்பதே அவரின் துறவற வாழ்வு.

ஆகவே பால்யத்திலிருந்தே தமது வாழ்க்கையை சாத்தியமான வரையில் எளிய தாக்க அவர் முயன்று வருகிறார். ஒரு ஏழை நாட்டில் அதன் வரும்படிக்கு மேல் வாழ்க்கை நடத்துவது, திருடி பிழைப்பதைப் போலாகும் என்று அவர் சொல்லுகிறார். ஆகவே அவர் தமது கையால் வேலை செய்கிறார். தமது உணவை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைத்திருக்கிறார். ஆடையையும் குறைத்திருக்கிறார். அவரின் பேர்பெற்ற லங்கோடாவை துவைத்துப் போடும் பாக்கியம் எனக்கு ஒரு நாள் கிடைத்தது. அப்பொழுது தான் அந்த துணி எவ்வளவு சிறியதாக இருக்கிறது என்பதை கவனித்தேன். அதன் ஓரங்களை கிழித்து கைக்குட்டைகளாக உபயோகிக்கிறார். 3 வது வகுப்பில் தான் ரயிலில் பிரயாணஞ் செய்கிறார். அவருடைய ஆசிரமத்தில் அவர் அறை மிகவும் சாதாரணமாய் இருக்கும். அகப்படுகிற துண்டுக் காகிதங்களையெல்லாம் கடிதம் எழுத அவர் உபயோகிப்பார். சிக்கனம், எளிய வாழ்வு, இவைகளையே மகாத்மாவைச் சுற்றி நாம் காணமுடியும். கடவுளுக்கு எத்தனையோ பெயர்கள் உண்டு, அவற்றிலெல்லாம் "தரித்திர நாராயணன்"—ஏழைகளின் கடவுள்—என்ற பெயரே அவருக்கு நிரம்ப பிடித்தமானது.

சந்நியாச வாழ்க்கை யென்றால் வெறும் தரித்திர வாழ்க்கை மட்டுமல்ல. ஐம்புலன்களையும் அடக்கியாள வேண்டும். நாக்கு ருசியை ஒழிக்கவேண்டும். கண்டபடியெல்லாம் கண் பார்வை போகும்படி விடக்கூடாது. காது, பரிசம், வாசனை இவைகளையும் அடக்கியாள வேண்டும். ஆகவே வெறும் செய்கையில் மட்டும் பிரமச்சாரியாக இருப்பது பிரம்மசரியம் அல்ல என்பது மகாத்மா கொள்கை: ஐம்புலன்களை அடக்கி ஆளுவதே பிரமச்சரியம். மகாத்மா காந்தி தூக்கத்தைக்கூட அடக்கி ஆளுகிறார். வேண்டிய சமயம் தூங்குகிறார். வேலையிருக்கிற சமயம் தூக்கத்தை தள்ளிவிடுகிறார்.

சரீரத்தை வதைத்து அடயோகம் செய்வது போன்றவைகள் மகாத்மாவின் சந்நியாசக் கொள்கையல்ல. பகுத்தறிவை உபயோகப்படுத்தி நடக்க வேண்டுமென்பதே அவர் கொள்கை. "பரிசுத்த வாழ்விற்கு திடகாத்திரம் வேண்டியது அவசியம். ஞானம் ஏற்பட்டு உடம்பை கவனிக்காமல் போனால் குற்றமல்ல. ஆனால் சோம்பேறித் தனத்தாலோ, அறியாமையினாலோ உடம்பை கவனிக்காமல் இருப்பது பெரிய குற்றம்" என்று அவர் சொல்லுகிறார்.

---

மகாத்மா டண்டிக்கு புறப்படும் முன்பு, சுயராஜ்யம் கிடைத்தாலொழிய போரை நிறுத்துவதில்லை யென்று தீர்மானித்தோம். என்று மகாத்மாவை விடுதலை செய்து ராஜி பேச டேல்லிக்கு அழைத்தார்களோ அன்றே சுயராஜ்ய தீர்ப்பு கிடைத்துவிட்டது. அதை நிறைவேற்றவே மகாத்மா லண்டன் சென்றிருக்கிறார்—சர்தார் பட்டேல்.

Koviloor Digital Library



# இராட்டைப் பாட்டு

(நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை)

ஆடு ராட்டே சுழன் றாடுராட்டே
சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே-இனி
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே (ஆ)

1. பாபங் குறையு மென்று ஆடு ராட்டே-இனி
பயங்கள் மறையு மென்று ஆடு ராட்டே
கோபங் குறையு மென்று ஆடு ராட்டே-நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடு ராட்டே (ஆ)

2. பட்டணத்து வீதிகளில் சுற்றி யலைந்து-மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து-நூல்
இழைத்துப் பிழைப்பரென்று ஆடு ராட்டே (ஆ)

3. கள்ளுபீர் சாராயம் காமவகைகள்-கெட்ட
கஞ்சா அபின்களெல்லாம் ஓடியொளிக்க
பிள்ளை குட்டி பெண்சாதி வயிறாற-உண்ணப்
பெற்றதே சுதந்திர மென் றாடுராட்டே (ஆ)

4. ஆங்கிலம் படித்த மென்று அகங்கரித்து-சொந்தம்
அக்கம் பக்கம் யாரெனினும் மதியாமல்
தாங்களே பெரிய ரென்று இருந்ததெல்லாம்-இனித்
தலைகுனிந் தோடுமென்று ஆடுராட்டே (ஆ)

5. அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து-
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும் [நம்
கன்னியர்கள் நூற்கப்பல காலைகள் செய்ய-நாம்
காத்துக் கொள்வோம் மானமென்று ஆடுராட்டே
(ஆ)

6. சாந்தி பெருகுமென்று ஆடு ராட்டே-மனச்
சாட்சி விளங்குமென்று ஆடு ராட்டே
காந்தி துலங்கு மென்று ஆடு ராட்டே-அந்தக்
காட்சி சுதந்திரமென் றாடுராட்டே (ஆ)

---

## ஜவார்லால் சரித்திரம்.

மூன்றாம் பதிப்பு. சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே எழுதவும். 32 பக்கங்கள். விலை அணா 1. ஒரு பிரதிக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

# பிரிட்டிஷார் சாதித்ததென்ன?

(லாலா லஜபதிராய்)

பிரிட்டிஷார் இந்நாட்டில் நுழைந்தது முதல் இந்தியா க்ஷேமமாகவும், திருப்தியாகவும் வாழ்ந்திருந்தால் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்தது, தம் பாக்கியமென்றே இந்தியர்கள் கருதுவார்கள். ஆனால் பிரிட்டிஷார் சுயநலங் கருதாத தர்ம கர்த்தாக்களா? அவர்கள் ஆளுகையில் இந்தியா க்ஷேமமடைந்ததா? என்பவையே நாம் கேட்கும் முக்கியமான கேள்விகள். இந்த விஷயங்களைப் பற்றி சொற்பமேனும் ஞானமுடையவர்கள் இக் கேள்விகளுக்கு ஒரே ஒரு விடைதா னளிப்பார்கள்.

இங்கிலாந்தில் உற்பத்தியாகும் சாமான்களை இலாபகரமாக விற்க இந்தியாவை ஒரு சந்தையாக்குவதே அந்நாள் முதல் இந்நாள் வரை பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்துவருகிறது: இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யவே அவர்கள் அரசியல் அதிகாரத்தை உபயோகப் படுத்தி வருகிறார்கள். இந்த வாக்கியங்களே மேலே நானெழுப்பிய இரண்டு கேள்விகளுக்கும் ஏற்றதான ஒரே விடை. ஆதியில் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்கள் வியாபாரம் செய்து பணந்தேடும் நோக்கத்துடனேயே வந்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் பெற்ற அரசியல் அதிகாரத்தை, கிழக்கிந்திய கம்பெனியார் தம் வர்த்தகத்தை விருத்தி செய்ய உபயோகிக்கலாயினர்: 1858ல் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசாட்சியை ஒப்புக்கொண்டது வாஸ்தவமே. ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் அரசாட்சி ஒப்புக்கொண்ட பிறகு இந்தியாவின் பொருளாதார நிலை எள்ளளவேனும் விருத்தி யடைந்ததா? கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களிடமிருந்து அதிகாரம், பெயரளவில் பார்லிமெண்டுக்கு மாற்றப் பட்டது. நடைமுறையில் இந்திய மந்திரி கம்பெனி டைரக்டர்களின் ஸ்தானத்தைப் பெற்றார். இந்திய மந்திரி சபையாரே பொருளாதார நிருவாகத்தை நடத்தி வருகிறார்கள். இந்திய அரசாங்கத்தை நடத்தும் உத்தியோகஸ்தர்கள் எல்லாம் அவர்கள் கட்டளைப்படி நடக்க வேண்டியவர்களே.

---

கோடிக் கணக்கான உங்கள் ஆதரவு மகாத்மாவுக்கு இருக்குமானால், லண்டனில் அவர் கேட்பதை யெல்லாம் கொடுத்துவிடுவார்கள்.—பண்டித ஜவார்லால்.

Koviloor Digital Library



# தேசியக் கடன் எது?

(ஸ்ரீ ஜகதீசன் குமரப்பா)

உலகத்திலே ஒருவர் செலவு செய்ய வேண்டுமானால், அவருக்குக் கையிருப்பில் பணம் வைத்துக்கொண்டுதான் செலவுசெய்யவேண்டும் கையில் பணம் எப்படி வைத்துக்கொள்வது? தனக்குவரக் கூடிய வரவு பணத்தை கையிருப்பாகச் சேர்த்துக் கொள்வது ஒன்று; அல்லது கடன் வாங்கி கையிருப்பில் வைத்துக்கொள்ளல். கையில் பணமிருந்தால்தான் செலவு செய்யமுடியும். அல்லது கடன் படவேண்டும்.

ஒரு தனிப்பட்ட நபரின் செல்வ நிலையில் அவருடைய தேவைகளுக்குத் தக்கினபடி, வரவை அதிகப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பங்கள் கிடைக்காவிட்டால், அவர் தமது செலவுகளைச் சமாளிக்க கடன்பட வேண்டும். தனிப்பட்ட நபர்கள் பணமில்லாத சமயத்தில் தங்கள் தேவைக்கு ஏற்றபடி கடன் வாங்குவது போலவே ஒரு ராஜ்ஜியமும் செய்கிறது.

ஒரு ராஜ்ஜியம் தனது தேவைகளுக்கு ஏற்றவாறு செலவுசெய்யப் போதுமான கையிருப்பு வைத்துக் கொண்டில்லாவிட்டால், எந்த காரியத்தை உத்தேசித்து பணம் தேவையாய் இருக்கிறதோ அதே காரியத்துக்காக புதிய வரி போடலாம். அல்லது இருக்கப்பட்ட வரிகளை உயர்த்தி தனது வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம். இப்படி வருமானத்தை அதிகப்படுத்த வரி விதிக்கும் அதிகாரத்தை அந்நாட்டின் ஆட்சி நடத்துவோர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு வருஷத்துக்கு வரவு இவ்வளவு செலவு இவ்வளவென்று உத்தேசமாய் மதிப்பிட்டு ஒரு திட்டம் ஏற்படுத்தி வைத்துக் கொண்டு அதன்படி செலவு செய்து வருகிறார்கள். இம்மாதிரி செலவை மிதப்படுத்தி திட்டமாக செலவுசெய்து வருகையில், ஏதோ திடீரென்று அதிக பணச் செலவு செய்ய வேண்டியதான ஒரு எதிர்பாராத சந்தர்ப்பம் நேரிட்டதென்று வைத்துக் கொள்வோம். அதாவது ஒரு அயல்நாட்டினர் திடீரென்று நாட்டின் மேல் படையெடுப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தப்படையெழுச்சியை எதிர்த்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது என்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட எதிர்பாராத சந்தர்ப்பத்தில் தனக்குத் தேவையான தொகையை அந்த நாடு கடன்வாங்க வேண்டும்.

இதுவேயன்றி, இன்னும், சில தேசங்கள் தங்கள் வருஷ வருமானங்களை அதிகரிக்கச் செய்வதற்காக, தங்கள் ஆஸ்திகளை விருத்தி செய்யக்கூடிய [மேட்டூர் திட்டம் போன்ற] திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்துகிறார்கள் இதற்காகப் பிடிக்கும் செலவு-முதலுக்கு கடன் வாங்க வேண்டியதாய் இருக்கிறது. இது வருஷா வருஷம் திரும்பித் திரும்பி வரும் செலவு இனங்களில் சேர்ந்ததல்ல.

அல்லது நாட்டின் குடி மக்களிடமிருந்து தொகை சேகரித்து, ஆஸ்தியை விருத்தி செய்து, அந்த விருத்தியால் உண்டாகும் நன்மைகளை எவ்வளவு காலம் வரையில் அந்த விருத்தி இருந்து வருகிறதோ அதுவரையில், குடி மக்கள் அனுபவித்து வரும்படி விட்டு விடுகிறது என்ற இதுவும் ஒரு நல்ல வழியாம். இப்படி தேசத்தின் பொதுநன்மைக்காக வாங்கப்பட்ட கடன்களே, பொதுக் கடன்களாம்.

இப்படி அவசரத்தை சமாளிக்கவோ அல்லது ஆஸ்தியை அபிவிருத்தி செய்யவோ கடன் வாங்கும் முதல் தொகையை (மூலதனத்தை) எந்தக் காரியத்துக்காகக் கடன் வாங்கினார்களோ, அந்தக் காரியத்திற்கே செலவு செய்யப்பட வேண்டும். எந்தத் தேசம் அந்த கடனைத் திருப்பி கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறதோ அந்த தேசத்தின் பொது நன்மைக்காகவே அதை செலவு செய்ய வேண்டும் என்பதை யாவும் சொல்லவே வேண்டியதில்லை. இது எல்லோரும் ஒப்புக் கொண்ட விஷயமே. இப்படி தேசத்தின் பொது உபயோகத்திற்காக வாங்கப்படும் கடனை அந்தத் தேச ஜனப்பிரதிநிதிகள் வாங்கினால் அதுதான் "தேசியக்கடன்கள்" என்று அழைக்கப் படுகிறது.

அப்படிக் கடன் வாங்கும் சர்க்கார் ஜனப்பிரதிநிதிகளின் சர்க்காராக இல்லாமல் வேறு அன்னிய சர்க்காராக இருந்தால், அந்தக் கடனுக்கு "பொதுக் கடன்கள்" என்று பெயர்.

---

காங்கிரஸ் வரையறுத்துள்ள சுயராஜ்யமே தேசிய முஸ்லிம்களுக்கு வேண்டும். ஸ்ரீ. ஜின்னா சொல்லும் சுயராஜ்யம் வேண்டியதில்லை.—டாக்டர் அன்சாரி.

Koviloor Digital Library

## ஓடும் கோவிலில் உயிருள்ள தெய்வம்!

“ராஜ புத்தானா” கப்பல் எத்தனையோ வருஷங்களாய் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அதன் பெயர் இதற்கு முன்பு இவ்வளவு பிரபலமாகவில்லை. மகாத்மா காந்தி அதில் ஏறி சீமைக்குச் செல்லும் பாக்கியத்தை அது பெற்ற படியால், அதற்கு ஒரு புது மகத்துவம் ஏற்பட்டிருக்கிறது. “ராஜ புத்தானா” இதற்கு முன்பு எத்தனையோ பெரிய மனிதர்களை ஏற்றிக் கொண்டு போயிருக்கலாம். தங்கம், வெள்ளி, வைரம், மாகதம் போன்ற பொக்கிஷங்களை ஏற்றிக் கொண்டு போயிருக்கலாம். ஆனால் அது பிறந்து இதுவரை, மகாத்மா காந்தியைப் போன்ற விலை மதிக்க முடியாத பொக்கிஷத்தை அது ஏற்றிச் சென்றதில்லை. ஆகவே “ராஜ புத்தானா” அதனால் புனிதமடைந்தது. மகாத்மா கப்பல் ஏறியது முதல் உலகமெங்கு முள்ளவர்கள் “ராஜ புத்தானா” “ராஜ புத்தானா” என்று உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். பத்திரிகைகள் எல்லாம் “ராஜ புத்தானா” என்ற பெயரை பிரபலமாய் பெரிய எழுத்துக்களில் வெளியிடுகின்றன. பம்பாயிலிருந்து மார்சேல்ஸ் துறைமுகம் வரை ஒவ்வொரு துறை முகத்திலும், “ராஜ புத்தானா” வருகிறதா வருகிறதா என்று ஜனங்கள் ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தனர். “ராஜ புத்தானா”வைப் பார்த்ததும் அளவற்ற ஆரவாரஞ் செய்தனர். ராஜ புத்தானா அவர்களுக்கு ஒரு புனிதமான பொருளாய் தோன்றிற்று. ரயிலில் போகும்போது புண்ணிய க்ஷேத்திரங்களின் கோபுரத்தையோ கொடியையோ கண்டதும் எப்படி ஜனங்கள் உள்ளக்கிளர்ச்சி பெறுகிறார்களோ, அதைப்போல “ராஜ புத்தானா” ஓடிவருவதைக் கண்டதும் துறை முகங்களில் உள்ளவர்கள் உள்ளக்கிளர்ச்சி பெற்றனர். ராஜ புத்தானா ஒரு கோவிலாய் அவர்களுக்குத் விளங்கிற்று. ஸ்தாவர கோவிலல்ல. ஓடும் கோவில்; நம்மிடம் ஓடிவரும் கோவில்! அதனுள் இருக்கும் தெய்வம் நமது கோவில்களுக்குள் இருக்கும் தெய்வங்களைப்போல பேசாத தெய்வமல்ல; பேசும் தெய்வம்; உயிருள்ள தெய்வம்! ராஜ புத்தானாவும், அதில் வீற்றிருந்த விலைமதிக்க முடியாத பொக்கிஷமாகிய மகாத்மாவும், ஓடும் கோவிலில் உயிருள்ள தெய்வம்போல வழிபெக்கும் விளங்கினர்!

## கர்ஜன் சீடர்கள்

(லெ. கர்னல் ஆஸ்பார்ன்)

இந்தியாவில் கவர்னாயிருந்த ஒருவர் சமீபத்தில் சீமை கன்சர்வேடிவ் பத்திரிகை பொன்றில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் சொல்லுகிறார்:—லார்ட் கர்ஜன் அந்நிய நாட்டு மந்திரியா யிருந்தபோது, வெளி நாடுகளில் இருந்த எங்கள் ராஜதந்திர சாமர்த்தியத்தை அவர் பூர்ணமாக நம்பியிருந்தார். அதாவது, நமக்கு எதிராக பலமுள்ள நாடுகள் சேர்ந்து விடாமல், (ஒன்றை மற்றொன்றின் மீது தூண்டிவிட்டு) தடுக்கும் வேலையில் எங்கள் மீது அவருக்கு முற்றிலும் நம்பிக்கை யுண்டு.”

பிரிட்டிஷ் ராஜதந்திரத்தை பச்சையாக அப்படியே இவ்விஷயம் வெளிப்படுத்துகிறது. இதைவிட மோசமாக லெனின், டிராட்ஸ்கி தான் சொன்னார்களா? அல்லது காந்தி, டிவாலரா தான் சொன்னார்களா?

இதைப்பார்த்த பின்பு எந்த இந்தியராவது அல்லது அயல் நாட்டாராவது, நம்மை நம்புவார்களா? நாம் இந்தியாவில் என்றென்றும் இருப்பதற்காக இந்து—முஸ்லிம் சண்டையை கிளப்பி விடுவதாகச் சொல்லுவது சரியல்ல என்று எவ்வளவு கூச்சல் போட்டாலும் நம்புவார்களா?

கலக ஏஜண்டுகளாகிய நாரதர்களை நியமிக்கவில்லை யென்றோ, லார்ட் கர்ஜன் கொள்கைகளை பின்பற்றவில்லை யென்றோ, நெஞ்சில் கை வைத்து இந்திய ரகசிய போலீஸ் தலைவர் சொல்ல முடியுமா?


### சுதேசி புடவைகள்

கலருக்கு உத்திரவாதம். அழகான கரையும் முந்தலையும், எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

6 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 2-15-0
8 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 3-15-0
9 கெஜம் 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 4-4-0

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட்

காந்தி தொப்பி 1 க்கு அணா 6.

☞ ½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக் அனுப்பப்படும்.

காந்தி ஸ்டோர்ஸ்,
மவுண்டு ரோட், மதராஸ்.


பட்ச பாதமும், கோபமும் உள்ளவன் ஒருநாளும் உண்மையை அறிய முடியாது.—மகாத்மா

Koviloor Digital Library



## காந்திஜிக்கு கடிதம்

ஆமதாபாத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியில், ஒப்பந்தத்தை மீறி சர்க்கார் செய்யும் காரியங்களை அங்கத்தினர் எடுத்துக்காட்டினர். தற்காப்புக்காக சட்டமறுப்பு ஆரம்பிக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்தினார்களாம். ஆனால் மகாத்மா இங்கு இல்லாத சமயத்தில் அப்படிச்செய்ய கமிட்டிக்கு பிரியமில்லை. ஆகவே மகாத்மாவுக்கு இதைப்பற்றி கடிதம் எழுத தீர்மானித்தனர். ஒப்பந்த மீறதலான காரியங்களை சர்க்காருக்குத்தெரிவிப்பதென்றும், காங்கிரஸ் குற்றப்பத்திரிகைக்கு விரோதமாக சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் கண்டவைகளுக்கு மறுபடியும் சர்க்காருக்கு மறுப்பு அனுப்புவதென்றும் தீர்மானமாயிற்று.

---

## காந்திஜி லண்டன் விஜயம்

மகாத்மா காந்தி பிரான்சிலுள்ள மார்சேல்சில் இறங்கி அங்கிருந்து ரயில் மார்க்கமாய் போலோன் துறைமுகம் சென்றார். போலோனிலிருந்து கப்பலேறி போக்ஸ்டோன் என்ற பிரிட்டிஷ் துறைமுகத்தில் நேற்று காலை இறங்கினர் அங்கிருந்து மோட்டாரில் லண்டன் போய்ச் சேர்ந்தார். பம்பாயைவிட்டு அவர் புறப்பட்டது முதல் மார்சேல்சில் இறங்கியது வரை ஓயாமல் தந்திகள் வரவும் போகவுமாயிருந்தனவாம். கப்பலில் மூன்று ஆகாயத் தந்தி அடிப்பவர்களுக்கு பூர்ணமாய் வேலையிருந்ததாம். தந்திச்செலவு ஏராளமாய் ஏற்பட்டபடியால் மகாத்மா அதற்காக கடன் வாங்கி கொடுத்தாராம்.

---

## சபர்மதி பக்கிரி.

"ஆமதாபாத்துக்கு ஏற்பட்ட பெருமை பணம் தேடிகுவிக்கும் சாமர்த்தியத்தால் ஏற்படவில்லை. பிரமாண்டமான மில்களுக்கு இடையில் தமது சிறிய ராட்டையை வைத்து நூற்றுக்கொண்டு, தியாகத்தின் பெருமையை நமக்கு காட்டிய சபர்மதி பக்கிரியாலேயே அந்தப்பெருமை ஏற்பட்டது" என்று சர்தார் படேல் சொன்னாராம். இதில் என்ன சந்தேகம்? இன்று ஆமதாபாத் தேசிய க்ஷேத்திரமாய் மினிருகிறது.

## வர்த்தகரே நல்ல காலம் வருகுது!

லண்டன் 'டெயிலி எக்ஸ்பிரஸ்" இதற்கு முன்பு நடந்த வர்த்தக மந்தங்களைப்பற்றி சில விவரங்களை வெளியிட்டிருக்கிறது. எந்தெந்த வருஷங்களில் அவை ஆரம்பித்து எத்தனை மாதங்கள் இருந்தன என்பதை குறிப்பிடுகிறோம்.

| | |
|---|---|
| 1857 | 12 மாதம் |
| 1869 | 8 மாதம் |
| 1873 | 36 ,, |
| 1884 | 22 ,, |
| 1887 | 19 ,, |
| 1893 | 25 ,, |
| 1907 | 12 ,, |
| 1914 | 8 ,, |
| 1921 | 14 ,, |

இவற்றைப் பார்த்தால் வர்த்தக மந்தம் ஏற்படுவதும், பிறகு செழிப்பு ஏற்படுவதும் மாறி மாறிவரும் காரிமாயிருப்பதை அறியலாம். ஆகவே இப்பொழுது ஏற்பட்டுள்ள வர்த்தக மந்தத்தைக்கண்டு யாரும் அஞ்சவேண்டாம். அஞ்சவும் கூடாது. இதற்கு முன் வர்த்தக மந்தம் ஏற்பட்ட காலங்களில், அவற்றால் சோர்வு கொள்ளாமல் யார் தைரியமாக இருந்தார்களோ அவர்களே பின்னால் வெற்றி பெற்றார்கள். அம்மாதிரி தைரியமுள்ளவர்களே இனியும் வெற்றிபெற முடியும். தற்கால வர்த்தக மந்தம் சீக்கிரம் நீங்கத்தான் போகிறது. இப்படியே இருந்துவிட முடியாது. ஆகவே ஊக்கமும் தைரியமும் உள்ளவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்

---

## தேள் கொட்டிய திருடன்

யுத்த தளவாடங்களை ஒழிக்க வேண்டுமென்று ஐரோப்பா பெரிய கூச்சல் போடுகிறது. சமீபத்தில் அதற்காக ஒரு மாநாடு கூடப்போகிறது. இத்தாலி மந்திரி ஸ்ரீ. கிராந்தி ஜினிவா சர்வதேசசங்கத்தில் ஒரு வெடிக்குண்டு போட்டிருக்கிறார். ஆயுதம் ஒழிப்பது உண்மையானல், அந்த மகாநாடு முடிகிற வரையிலாவது எந்த நாடும் யுத்த தளவாடம் செய்யாமல் இருக்கட்டும் பார்க்கலாம் என்று அவர் சொல்கிறார். தேள் கொட்டிய திருடனைப் போல, இதைக்கேட்டு பிரான்ஸ் விழிக்கிறதாம்.

---

சாத்விக சட்ட மறுப்பு மனிதன் பிறப்புரிமை. மனிதனாக இருக்க விரும்புகிற யாரும் அதை இழக்கத் துணியமாட்டான்.—மகாத்மா.

Koviloor Digital Library



(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் சர்க்கார் சேவகர்கள் இவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கும்போது, நீங்கள் பேசாமல் இருப்பது அவமான மல்லவா? மானமோ, சம்பளம் வானமோ எது எங்கே போனாலும், உங்கள் பணம் மட்டும் குறையக் கூடாதென்பது உங்கள் விருப்பமா?

பிரிட்டிஷ் சர்க்கார் சேவகர்கள் சம்பளம் குறைத்தது ஒரு பக்கம் இருக்கட்டும். உங்கள் மன்னர் ஜார்ஜ் ராஜாவின் தியாகத்தைப் பாருங்கள். தமது குடும்பச் செலவில் வருடம் 50 ஆயிரம் பவுனை குறைத்துவிட்டார். வேல்ஸ் இளவரசர் 10 ஆயிரம் பவுன் குறைத்துக் கொண்டார். உங்களுக்கெல்லாம் மன்னராகிய ஜார்ஜ் ராஜாவும், எதிர்கால மன்னராகிய வேல்ஸ் இளவரசரும் இம்மாதிரி சிக்கனஞ் செய்யும்போது நீங்கள் மட்டும் ஏன் அதிகமாக சம்பளம் வாங்கவேண்டும்? இது உங்களுக்கு அவமானமாயில்லையா?

இவற்றை யெல்லாம் பார்த்தால், இந்திய சர்க்காரே, உனக்கு நாணமோ, மானமோ இருப்பதாய்த் தெரியவில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் அக்டோபர் முதல் தேதியிலிருந்து இந்த சிக்கன திட்டங்களை அமுலுக்கு கொண்டுவரப் போகிறார்கள். ஆனால் நீ எந்த யுகத்தில் எவ்வளவு குறைக்கப் போகிறாய் என்பது கடவுளுக்காவது தெரியுமா என்பது நமக்கு சந்தேகமாயிருக்கிறது. உன் நடத்தைகளைப் பார்த்தால், யார் எக்கேடு கெட்டாலும் உன் சம்பளத்தில் சல்லி குறையாமல் வாங்க நீ முடிவு செய்திருக்கிறதாய் தோன்றுகிறது. இந்தியாவில் எவ்வளவு பண நெருக்கடி யிருந்தாலும் உனக்கு கவலையில்லை போல தெரிகிறது. இது மானங்கெட்ட வாழ்வல்லவா? ஜனங்களுக்காக நீ இருக்கிறாயா அல்லது உனது தொந்திக்காக ஜனங்கள் இருக்கிறதா?

---

சர்தார் பட்டேல் சரித்திரம்.

வெளியாய் விட்டது. 82 பக்கங்கள் 1 அணா. தபால் செலவு அரை அணா.

"காந்தி" ஆபீஸ்.

11. ஆண்டர்சன் தெரு. சென்னை

# செய்தித் திரட்டு.

வெங்கடகிரியில் ஜமீன் குடிகள் மகாநாடு கூடக் கூடாதென்று மாஜிஸ்திரேட் சர்வசஞ்சீவி 144ஐ எடுத்துவிட்டார். உமது உத்தரவை நீரே வைத்துக் கொள்ளும் என்று சொல்லிவிட்டு மகாநாட்டை தலைவர்கள் நடத்திவிட்டார்கள். மாஜிஸ்திரேட்டும், போலீஸ் புலிகளும் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறார்களாம்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து 348 இந்தியர் வியாழனன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

பம்பாய் கவர்னரை சுட முயன்றதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஸ்ரீ. கோகாதேக்கு 8 வருட கடுங்காவல் விதித்திருக்கிறார்கள்.

ரயில்வே தொழிலாளர் சங்கத்திற்கும், ரயில்வே போர்டாருக்கும் ரயில்வே தொழிலாளரை குறைக்கும் விஷயமாக ஏற்பட்டிருக்கும் தகராறை தீர்த்து வைக்க சர்க்கார் ஒரு விசாரணை கமிட்டி நியமித்தார்கள். அது பம்பாயில் விசாரிக்க தொடங்கியிருக்கிறது. ரயில்வே போர்ட் சார்பாக பம்பாய் அட்வகேட் ஜெனரல் சர். ஜெ பி. கங்கா முதலிய 4 பேர் வாதிக்கிறார்கள். தொழிலாளர் சார்பாக ஸ்ரீமான்கள் யமுனாதாஸ் மேத்தாவும், வி. வி. கிரியும் வாதிக்கிறார்கள்.

ஸ்ரீ. எம். என். ராய் தம்மை ஜாமீனில் விடும்படி கொடுத்த விண்ணப்பத்தை கான்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் தள்ளிவிட்டார்.

சிந்து மாகாணத்தில் பிரபல காங்கிரஸ் தலைவராகிய சுவாமி கோவிந்தானந்தரை ராஜத்துவேஷ குற்றத்திற்காக கைது செய்திருக்கிறார்கள்.

எல்லைப்புற மாகாணத்து சீப் கமிஷனர் சர். பீயர்ஸ் ஒரு மலை உச்சியிலிருந்து தவறி கீழே விழுந்து மாண்டு போனார்.

புதிய அச்சுச்சட்ட மசோதாவில் கண்டிருக்கும் முறைகள் போதாவாம். இன்னம் கடினமான முறைகள் வேண்டுமென்று கல்கத்தா வெள்ளையர் சங்கம் சொல்லுகிறதாம்.

கோயம்புத்தூர் ஸ்ரீ. சாத்தப்ப செட்டியாரைப் பற்றி பிரசுரித்த செய்திகளில், தலைப்புப் பெயர்கள் கொடுத்திருந்தது கோர்ட்டை அவமதிப்பதாயிருக்கிறதென்று சொல்லி, ஸ்ரீ. சாத்தப்ப செட்டியார் "தமிழ்நாடு" பத்திரிகைமீது சென்னை ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். விசாரணைக்காக இன்று வாயிதா போட்டிருக்கிறார்கள்.

பெஷாவாரில் விபசாரிகள் வீடுகளின் முன்பு மறியல் நடக்கிறது.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No M 2677

விலை காலணு
(மலாய் 1¼ சதம்)


# காந்தி

வருட சந்தா ரு. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 || சென்னை, 1931 செப்டம்பர் 17உ,
பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 1உ வியாழக்கிழமை || இதழ் 27

# கப்பலில் காந்திஜி விளையாட்டு



(ராஜ புத்தாணு கப்பலில் போகும்போது காந்திஜி ஒரு சிறு குழந்தையைப்போல குழந்தைகளுடன் விளையாடினாராம். அதைப்பற்றி வேடிக்கையாக பம்பாய் " பிரீ பிரஸ் " பத்திரிகையில் இப் படம் வெளியாயிருக்கிறது.)

1. பாப்பா, என்னை இந்த வண்டியில் வைத்து சீமைக்கு இழுத்து போவாயா ? 2. கண்ணும் பூச்சி. 3, ரயில் புறப்பட ஊதுகிறது 4. "நான் கட்டிய வீட்டை வந்து பாருங்கள்" 5. ஒரு காலத்தில் ஒரு ராஜா இருந்தாராம், (கதை சொல்லுகிறார்) 6 உப்புச்சுமை.

Koviloor Digital Library



## பூவுலகை மயக்கும் "பொக்குவாய் சிரிப்பு"

இந்தியாவில் தான் மகாத்மாவின் பொக்கு வாய் சிரிப்பு மக்களை மயக்கி வருகிறதென்று நினைத்தோம். சென்று இடங்களிலெல்லாம் அந்த பொக்குவாய்ச் சிரிப்பிற்கு சகலரும் அடிமையாய் விடுவதாய் தெரிகிறது. மார்சேல்சில் கூடியிருந்த பிரஞ்சுக்காரர் மகாத்மாவின் பொக்குவாய்ச் சிரிப்பில் அப்படியே மயங்கி விட்டார்களாம். காந்திஜியை ஜனங்கள் நெருக்கிவிடாதபடி செய்ய போலீசார் மிகுந்த சங்கடப்பட்டுப் போனார்களாம். அங்குதான் அப்படியென்றால், போக்ஸ்டோனிலாவது பொக்குவாய்ச் சிரிப்புவிட்டதா? அங்கும் அந்த ஓட்டைப் பல் சிரிப்பு பிரிட்டிஷ் ஜனங்களை மயக்கிவிட்டது. லண்டனிலும் அப்படியே. அவர் ஜாகையைச் சுற்றி எப்பொழுதும் ஜனங்கள் காத்துக்கொண்டு நிற்கிறார்களாம். மழையையும் பனியையும் பாராமல் நிற்கிறார்கள். எதற்காக? ஒரு பொக்குவாய்ச் சிரிப்பு கிடைக்காதா என்பதற்காகவே. சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை ஹைட்பார்க்கில் டோர்செஸ்டர் ஹவுசிற்கு மகாத்மா போயிருந்தார். அங்கு வந்திருப்பதை ஜனங்கள் அறிந்ததும், ஆயிரக் கணக்காக கூடிவிட்டனர். தெருவெல்லாம் கூட்டம்; வண்டிப் போக்குவரத்து நின்றுபோயிற்று. போலீசார் மிகுந்த சிரமப்பட்டு மகாத்மாவை அவர் மோட்டாரில் ஏற்றினார்கள். மகாத்மாவைப் பார்த்ததும் ஜனங்கள் "காந்தி நல்ல தாத்தா" என்று ஆரவாரஞ் செய்தார்கள், சர்ச்சில் கோஷ்டியாரும் டெயிலிமெயில், மார்னிங் போஸ்ட் போன்ற பத்திரிகைகளும் எவ்வளவோ பொய்ப்பிரசாரம் செய்திருக்கிறார்கள். காந்திஜியைப் பற்றி அவர்கள் கட்டிவிட்ட கதைகளுக்கு அளவில்லை. அப்படியிருந்தும் அவ்வளவு பிரசாரங்களையும் ஒரே விநாடியில் அவர் பொக்குவாய்ச் சிரிப்பு பஸ்பமாக்கிவிட்டது. காந்திஜியின் பொக்குவாய்ச் சிரிப்பிற்கு எதிராக பிரிட்டனில் எந்த சக்தியும் இல்லை. அவர் சிரிப்பில் மயங்காத மனிதர் இல்லை. உலகமே அந்த சிரிப்பிற்குள் அடங்கி அடிமையாய் விட்டது. என்னே அன்பின் சக்தி!

## "நான் ஒரு ஆண்டி"

மார்சேல்சில் மகாத்மா இறங்கியதும் சுங்க இலாகா இன்ஸ்பெக்டர் சந்தித்தார். வரிவிதிக்கக்கூடிய பொருள் ஏதாவது இருக்கிறதா என்று அவர் கேட்டார். அதற்கு மகாத்மா பதில் சொல்லியதாவது:—

"நான் ஒரு ஆண்டி. இந்த மண்ணுலகத்தில் எனக்கு உள்ள ஆஸ்தியெல்லாம், 6 ராட்டை, சில ஜெயில் தட்டுகள், ஒரு குப்பி ஆட்டுப்பால், 6 கத்தர் துண்டுகள், எனது கீர்த்தி இவைகளே. இவை என்ன விலை பெறப்போகின்றன?"

சுங்க இன்ஸ்பெக்டர் இந்த ஆண்டி கொண்டு போகும் சரக்குகளுக்கு வரி விதிக்கவில்லை. பழைய தட்டுகளும், கிழட்டு ராட்டைகளும் வரி விதிக்கக்கூடாத அற்ப சாமான்களாய் இருக்கலாம். அவ்விஷயத்தில் அந்த ஆண்டி சொன்னதை இன்ஸ்பெக்டர் எடுத்துக்கொண்டதில் ஆட்சேபனையில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் இன்ஸ்பெக்டர் ஆண்டியிடம் ஏமாந்து போனார் "ஒரு காசுக்கு உதவாதவை" என்று ஆண்டி குறிப்பிட்ட சரக்குகளில் "எனது கீர்த்தி" என்பதையும் தந்திரமாய் சேர்த்துக்கொண்டார். இதை இன்ஸ்பெக்டர் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த ஆண்டி சொல்லியதைப் போல அவர் "கீர்த்தி" காசுக்குதவாததல்ல. விலைமதிக்க முடியாத பொக்கிஷமாகும். அதற்கு வரி போட்டிருந்தால் சுங்க இலாகாவிற்கு ஏராளமாய் வரும்படி கிடைத்திருக்கும். இன்ஸ்பெக்டர் ஏமாந்துபோனார். ஸ்தூலப் பொருள்களுக்குத் தான் வரிவிதிக்க முடியுமேயொழிய சூட்சுமப் பொருளுக்கு வரிவிதிக்க முடியாதென்று ஒரு குருவி சொல்லுகிறது. பிரஞ்சு சுங்க இலாகாவில் சூட்சுமப் பொருளுக்கு வரி வசூலிக்க அதிகாரமில்லையென்று அந்தக் குருவி சொல்லுகிறது. சூட்சுமப் பொருளாகிய காற்றுக்கும், ஆகாயத்திற்கும் உரிமை பாராட்டும்போது, என் "கீர்த்தி"க்கு வரி போடக்கூடாது? போனது போகட்டும். பிரஞ்சு சர்க்கார் உடனே தங்கள் சுங்க விதிகளை திருத்திக்கொண்டால் மகாத்மா திரும்பி வரும்போது பிடித்துக் கொள்ளலாம். அவர் 'கீர்த்திக்கு' அவர் சொல்லும் மதிப்பை ஒப்புக்கொள்ள முடியாதென்று சொல்லி, ஏராளமாக வரி வசூலித்து விடலாம்!

---

மகாத்மா இந்நாட்டைவிட்டுபோன பின்பு நிலைமை சீர்பட்டிருப்பதாய் சொல்ல முடியாது. பல மாகாணங்களில் நடப்பதைப் பார்த்தால் நெருக்கடி அதிகமாயிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.—சர்தார் பட்டேல்

Koviloor Digital Library



## ஸ்ரீ. எம். என். ராய் சரித்திரம்

ஸ்ரீ எம். என். ராய் என்பவரை கைது செய்து கான்பூரில் வைத்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் உண்மையான பெயர் எம். என்' ராய் அல்ல என்று நாம் முன்பு எழுதியதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அவர் உண்மையான பெயர் நரேந்திரநாத் பட்டாச்சாரியா. கல்கத்தாவிற்கு 8 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு ஏழை பிராமணர் வம்சத்தில் உதித்தவர். 1906 ம் வருஷம் வங்காள கிளர்ச்சி நடைபெற்ற போது, அவர் கிராமத்தில் ராஜீயக் கொள்ளை அடித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டார். அதில் குற்றம் ருசுவாகாமல் விடுதலை யடைந்தார். 1908 ம் வருஷம் சதியாலோசனை செய்ததாக அவர் மீது சர்க்கார் வழக்குத் தொடர்ந்து அப்புறம் வாபஸ் வாங்கிக்கொண்டது. இருந்தாலும் போலீசார் திருக்கண் பார்வை அவரைவிட்டு அகலவில்லை. 1914 ல் கல்கத்தாகார்டன் ரீச் பகுதியில் கொள்ளை யடித்ததாக அவரை கைது செய்து ஆயிரம் ரூபாய் ஜாமீனில் விடுவித்தார்கள். ஜாமீனில் இருக்கும்போது மாறுவேடம் புனைந்து சீனாவிற்கு போய்விட்டார். போலீஸ் புலிகள் ஏமாந்துபோயின. சீனாவில்தான் மனவேந்திரநாதராய் அல்லது எம். என். ராய் என்ற பெயர் சூட்டிக்கொண்டார். அங்கிருந்து அமெரிக்காவிற்குச் சென்று அமெரிக்க பெண்ணை விவாகஞ்செய்தார். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா சென்றார். அங்கே இந்தியா விடுதலையும் பொருட்டு பல நாடுகளில் வேலை செய்தார். அவர் பிரான்சில் இருக்கும்போது பிடித்து கொடுக்கும்படி பிரிட்டிஷ் சர்க்கார் கேட்டும் பிரான்ஸ் மறுத்துவிட்டது. அப்புறம் ருஷியாவுக்குச் சென்று சிலகாலம் அங்கிருந்து விட்டு பின்னால் ஸ்விட்ஜர்லாந்தில் வந்து தங்கினார். சென்ற வருஷம் சட்டமறுப்பு நடக்கும்போதே அவர் டாக்டர் மூகமது என்ற பெயரோடு போலீசார் கண்ணை மூடி இந்தியாவிற்கு வந்துவிட்டார். அவர் லக்ஷ்மணபுரி, கல்கத்தா, சென்னை, லாகூர், டெல்லி, நாகபூர் முதலிய இடங்களுக்கெல்லாம் போனாராம். சென்னைக்கு ஒரு முஸ்லிம் பெண்ணைப்போல வேடமணிந்து வந்ததாக கேள்வி. கராச்சியில் மார்ச்சு மாதம் நடந்த காங்கிரஸ் கூட்டத்திலும், விஷயாலோசனை கமிட்டி கூட்டத்திலும் ஆஜராயிருந்து வாதத்தில் கலந்து கொண்டாராம். காரியக்கமிட்டி கூட்டங்களில் சிலவற்றில் கூட டாக்டர் மூகமது பிரசன்னமாயிருந்தாராம். அவர் இந்தியாவிற்கு வந்திருப்பதை ரகசியப் போலீசார் அறிந்தும் அவரை 7 மாதங்களாக பிடிக்க முடியவில்லை. பலரை எம். என். ராய் என்று கைது செய்து ஏமாற்றமடைந்து விடுவித்தார்கள். கடைசியாக ஜூலை மாதம் 21வ யன்று அவர் தூங்கிக் கொண்டிருக்கும்போது போலீசார் அவரை கைது செய்தார்கள்.

## அலுவலா, அகம்பாவமா?

மகாத்மா காந்தி லண்டன் போய் இறங்கிவிட்டார். இங்கிலாந்து புனிதமடைந்தது. மகாத்மாவின் திருவடி இங்கிலாந்தில் படுவதென்றால் இங்கிலாந்து புண்ணியமுள்ளதென்றே சொல்லவேண்டும். இங்கிலாந்தின் சரித்திரத்தில், மகாத்மா சென்று இறங்கிய தினம் மிகவும் விசேடமுள்ளதாய் விளங்கும். ஆனால் அதன் பாவம் முழுவதும் விமோசனமடைவதாய் தெரியவில்லை. மகாத்மா தரிசனத்திற்கு பல்லாயிரக் கணக்கான பேர் காத்திருக்கிறார்கள். அவர் ஒரு வார்த்தை பேசமாட்டாரா என்று கோடிக்கணக்கான பேர் தவங்கிடக்கிறார்கள். உலகத்திற்கே பெரிய அவதார புருஷரென்று சகல அறிஞர்களும் போற்றுகிறார்கள். அப்பேர்பட்ட மகாத்மா சீமை போயிருக்கிறார். அவரை வரவேற்க வேண்டியது பிரிட்டனின் கடமை. ஜனங்கள் அவரை வரவேற்று உபசரித்தார்கள். ஆனால் தலைவர்கள் எங்கே? ஒரு கட்சியிலுமில்லாத பிரதம மந்திரி எங்கே? கன்சர்வேடிவ்தலைவர் பால்டுவின், தொழிற்கட்சி தலைவர் ஹெண்டர்சன், லிபரல்கட்சி தற்காலிக தலைவர் சர். ஹெர்பர்ட் சாமுவேல் இவர்கள் எங்கே போனார்கள்? அவர்களுக்கு வேறு அலுவல் இருந்ததாம். அதனால் அவர்கள் மகாத்மாவை வரவேற்க வரவில்லையாம். மகாத்மாவை வரவேற்பதை விட வேறு எந்த பெரிய வேலையும் இந்த ஆசாமிகளுக்கு இருந்திருக்க முடியாது. மகாத்மாவை வரவேற்றிருந்தால், இவர்கள் பழைய பாவங்களாவது தீர்ந்திருக்கும். புதிய வெளிச்சம் அவர்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கும். அவற்றைப் பெற இந்த பேர்வழிகள் கொடுத்து வைக்கவில்லை. அது அவர்கள் பாடு. அவர்கள் எப்படியும் போகட்டும் ஆனால் இந்தியாவின் ஒப்பில்லாத மணியாய் சென்றிருக்கும் மகாத்மாவை வரவேற்க இவர்கள் வராமல்போனது இந்தியாவை அவமதித்ததாகும். அவர்களுக்கு வேறு அலுவல் இருந்ததாகச் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. வராமல் இருந்ததற்கு காரணம் அகம்பாவமாகவே யிருந்திருக்க வேண்டும். இவர்கள் வந்தாலும் வராவிட்டாலும், மகாத்மாவிற்கு ஒன்றே. துறவிக்கு வேந்தன் துரும்பு. ஆனால் இந்த அசடுகள் தங்களை அறியாமலே தங்கள் கர்வத்தை உலகம் பார்த்து சிரிக்கும்படி செய்து கொண்டார்கள்.

Koviloor Digital Library



# நவஜவான் மகாநாடு.

சென்ற 11வ யன்று ஈரோட்டில் தமிழ்நாடு நவஜவான் மகாநாடு கூடியது. லாகூர் சதி வழக்கில் கைதியாகி ஜெயிலில் இருக்கும்போது, ராஜீயக் கைதிகளை சரியாக சிறை அதிகாரிகள் நடத்தவில்லை யென்ற காரணத்தினாக ஸ்ரீ. யதீந்திரநாத் தாஸ் உண்ணாவிரத மிருந்தார். அதில் உயிர் துறந்தார். அவர் சகோதரர் ஸ்ரீ கிரன்சந்திர தாஸ் இந்த மகா நாட்டிற்கு தலைமை வகித்தார். அவர் பேசியதன் சுருக்கமாவது :—

“நவஜவான் பாரத சபையானது முதல் முதலில் பஞ்சாபில் ஆரம்பிக்கப் பட்டது. நவஜவான்களின் இயக்கத்திற்கு தோழர் சர்தார் பகவத்சிங்கும், அவருடைய நண்பர்களும், முக்கியஸ்தர்களாக இருந்து வந்தார்கள்; இந்திய தேசத்திலுள்ள மக்களை தூக்கத்தினின்று எழுப்பவும், ராஜீய சுதந்திரத்தை பெறுவதற்காகவும் இந்த சபையை அவர்கள் ஆரம்பித்தார்கள். பகத்சிங்கும், அவரது தோழர்களும் செய்த பிரசாரத்தின் பயனாக பஞ்சாபில் மட்டுமல்ல, மற்ற மாகாணங்களிலும் இந்த நவஜவான் இயக்கம் பரவலாயிற்று.

தேசத்து மக்கள் ஏகோபித்து எதிர்த்தார்கள் என்றாலும், பகத்சிங்கும் அவரது தோழர்களும் தூக்கில் மாண்டனர் என்பது உண்மையே. அவர்களுடைய பூத உடல் மறைந்துவிட்டாலும் கூட அவர்களுடைய எண்ணங்கள் நம்மை விட்டு நீங்காது உயிரோடேயே இருக்கின்றன.

நவஜவான் சபையோருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் அபிப்பிராய பேதம் இருந்து வருவதாக தப்பிதமாகக் கூறப்பட்டு வருகிறது. நவஜவான் சபையார் தனிப்பட்ட முறையில் பலாத்காரத்தை உபயோகிக்கலாம் என்று கூறுகிறார்கள் என காங்கிரஸ்காரர்கள் நினைக்கலாம். இதற்காக இந்த சபையைக் கண்டெடுத்த பகத்சிங் அவர்களையே உதாரணமாக அவர்கள் கூறலாம். இந்த விஷயமாக நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் பகத்சிங் பலாத்கார முறையை கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றாலும், (அதை அவர் எவ்வளவோ வெறுத்தும் கூட) அவர் அந்த முறையைக் கொள்கையாகக் கையாடவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பகத்சிங் தனது நிலைமையை டெல்லி கோர்ட்டில் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாகக் கூறியிருக்கிறார். அந்நிய கவர்ன்மெண்டாருக்கு எச்சரிக்கை செய்யவே அவ்வாறு செய்ததாகவும், நாட்டில் புத்துணர்ச்சி ஒன்று வரப்போவதைத் தெரிவிக்கவே அவ்வாறு செய்ததாகவும் அவர் கூறியிருக்கிறார். இதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பகத்சிங்கு தனது அறிக்கையில் கொல்லுவது தனது நோக்கமல்ல வென்றும் கூறியிருக்கிறார். கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நமது தேசீயத் தலைவர்கள் நான் கூறியவற்றை ஒப்புக் கொள்ளுவார்கள் என்று எண்ணுகிறேன்.

எனக்குத் தெரிந்த வரையிலும் நவஜவான் பாரத சபையின் கொள்கைகளிலும், காங்கிரஸ் சபையின் கொள்கைகளிலும், அதிக வித்தியாசமில்லை யென்றே நினைக்கிறேன். இவ்விரண்டு ஸ்தாபனங்களும் பொது உரிமைகளுக்காகவும் ஸ்வராஜ்யத்திற்காகவும் பாடுபட்டு வருகின்றன என்று நினைக்கிறேன். இரண்டும் பொது ஜனங்களின் எழுச்சிக்காகப் பாடுபடுகின்றன. இரண்டு ஸ்தாபனங்களும் ஒரே நிலையில் இருக்கும் போது எங்களுக்குள் ஏன் தப்பபிப்பிராயங்கள் இருக்கவேண்டும். காங்கிரசில் நாங்கள் தீவிரக்கொள்கைக் கொண்டிருந்தோம் என்ற காரணத்தாலா? காங்கிரசில் தீவிரகொள்கையுடையவர்கள் காங்கிரசிலேயே இருந்து, காரியங்களைச் செய்யவில்லையா? சென்னையில் கூடிய காங்கிரசில், தீவிரக்கொள்கை யுடைய கட்சியாரை அனுசரித்து பிரிட்டிஷ் தொடர்பு அற்ற பூர்ண சுயராஜ்யம் வேண்டும் எனத் தீர்மானம் செய்யவில்லையா? மறுபடியும் 1929ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரசின் போது நேரு கமிட்டி ரிபோர்ட்டும் சைமன் கமிட்டி யாதாஸ்தும் விவாதத்திற்கு வந்தன. அப்போதும் காங்கிரசின் தீவிர கட்சியார் குடியேற்ற நாட்டு அந்தஸ்திற்குப் பதிலாக பூர்ண சுயராஜ்யமே வேண்டும் எனப் போராடினார்கள். கடைசியில் அவர்கள் கூறி வந்தது லாகூர் காங்கிரசில் ஒப்புக்கொள்ளப்படவில்லையா? ஆகையால் காங்கிரஸ்காரர்கள் எங்களை தப்பித

Koviloor Digital Library



மாக அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. மற்றும் காங்கிரசில் இருப்பவர்கள் எவ்வளவு தேசப் பற்றுடையவர்களோ அவ்வளவு நவஜவான் சபையோரும் தேசப்பற்றுடையவர்கள் என்று நான் அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால் நாளாவட்டத்தில் இந்த வித்தியாசங்கள் எல்லாம் ஒழிந்துவிடும் என்றே நம்புகிறேன்"

## பிடி நோக்கை!

போலீசாருக்கு சுயமரியாதை இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். மேலப்பாளையம் வழக்கு ஜோடித்த செஷன்ஸ் ஜட்ஜால் சவுக்கடி பெற்ற திருநெல்வேலி போலீசாருக்கு ஒரு வேளை சுயமரியாதை இல்லாமல் இருக்கலாம். ஆனால் எல்லாரும் திருநெல்வேலி போலீசைப் போல அவ்வளவு மோசமாய் இருக்க மாட்டார்கள். வடக்கே பாஞ்சாலத்திலுள்ள ஜீலம் ஜில்லா போலீசார் தங்கள் சுயமரியாதையை காட்டியதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது ஜீலம் ஜில்லா போலீஸ் சூப்பரின்டென்ட் ஹெரான் என்ற பேர்வழி அகம்பாவமே உருவாய் வந்தவர். அவர் அங்கே வந்தது முதல் பெரிய இன்ஸ்பெக்டரிலிருந்து சாதாரண போலீஸ்காரன் வரையில் சகல இந்திய போலீசார் மீதும் சீறிச் சீறி விழுவது வழக்கமாம். "இந்தியருக்கு மூளை கிடையாது" என்று அடிக்கடி சொல்லுவாராம். போலீசாருக்கு இது மிகவும் மனவேதனையை கொடுத்து வந்தது. காரணமில்லாமல் எல்லாரையும் அவமானப்படுத்தி வருவதை பொறுக்க முடியவில்லை. சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் பிராசிகியூட்டிங் இன்ஸ்பெக்டர், ஹெட்கிளார்க், ஹெட்கான்ஸ்டேபிள் முதலியவர்களை தாறுமாறாய் ஏதோ உளறியிருக்கிறார். இந்த மானங்கெட்ட அகம்பாவம் பிடித்த வெள்ளையனுக்கு புத்தி கற்பிக்க அவர்கள் தீர்மானித்தார்கள். உடனே "பிடி ராஜீநாமாவை" என்று அவன் மூஞ்சியில் வீசி எறிந்தார்கள். இதைக்கேட்டதும் ஜீலம் நகரிலுள்ள எல்லா போலீசாரும் ராஜீநாமா செய்தார்கள். ஜில்லா கலெக்டர் இதைப்பார்த்து நடுங்கிவிட்டார். போலீஸ் லைனுக்கு ஓடினார். சூப்பரின்டென்டை மாற்றிவிடுவதாக உறுதி கூறி ராஜீநாமாவை வாபஸ் வாங்கும்படி விண்ணப்ப மிட்டார். ஒருவரும் கேட்க வில்லை. இதற்கிடையில் வெளியூர்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்து பெல்ட்களையும், சட்டைகளையும், துப்பாக்கிகளையும் வண்டி வண்டியாக அங்குள்ள போலீசார் அனுப்பினார்கள். எங்கு பார்த்தாலும் "பிடி நோக்கை" "உன் வேலை வேண்டாம்" என்ற ஆரவாரம் பலமாயிருந்தது. இன்ஸ்பெக்டர் ஜெனரலும் வந்துவிட்டார். ஹெரானை விரட்டினாலொழிய காரியம் பலிப்பதாய் தோன்றவில்லை உடனே ரஜாவில் ஊரை விட்டு ஓடும்படி உத்தரவிட்டார். ஜில்லா சூப்பரின்டென்டாய் ஆர்ப்பாட்டஞ் செய்த மகாகனம் பொருந்திய ஹெரான் துரையவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் மூரீ என்ற இடத்திற்கு திரும்பிப் பாராமல் ஓட நேரிட்டது. இனி ஜீலம் ஜில்லாவையே அவர் திரும்பிப் பார்க்க மாட்டார் என்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் உறுதி கூறியதன் பேரில் போலீசார் மறுபடியும் வேலை தொடங்கி யிருக்கிறார்கள்.

## காந்திஜி பெயரால் பிழைப்பு!

உடும்பு வேண்டாம் கையைவிட்டால் போதும் என்று இந்திய சர்க்கார் பொக்கிஷ மந்திரி சொல்லுகிறாராம். ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை சில விஷயங்களை வெளியிட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால் பொக்கிஷ மந்திரி எப்பொழுது தன் பொறுப்பு நீங்குமென்று ஆவலோடு விழித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஒரு பிரிட்டிஷாருக்கு எழுதிய கடிதம் ஒன்று கிடைத்திருக்கிறது. லார்ட் இர்வினோடும் பொக்கிஷ மந்திரி சர். ஷுஸ்டரோடும் அவர் இந்தியாவில் வந்திருக்கும் போது பேசினாராம். பல இலாக்காக்களை இந்தியரிடம் உடனே ஒப்படைத்துவிட வேண்டுமென்று லார்ட் இர்வின் சொன்னார். சர். ஷுஸ்டர் தம்முடைய பொக்கிஷ இலாகாவையே முதலில் மாற்ற விரும்பினாராம். "கடனோ நாளுக்குநாள் ஏறிக்கொண்டு போகிறது. பணக்கஷ்டமோ தீர்ந்தபாடில்லை. இந்தியர் ஒத்துழைப்பு பூர்ணமாய் இருந்தாலொழிய இந்த தொல்லையிலிருந்து நீங்க முடியாது 'காந்தி கடன்" என்ற பெயரால் கடன் வாங்கினால் தான் ஜனங்கள் கொடுப்பார்கள். ஆகவே உடனே என்னுடைய இலாகாவை ஒரு இந்தியருக்கு மாற்றி விடுங்கள். அவசியமானால் நான் ஆலோசனை சொல்லுகிறவனா யிருக்கிறேன்." என்று சர். ஷுஸ்டர் சொன்னாராம். இம்மாதிரி நிலைமை ஏற்படும் என்பதை நாம் முன்பே எடுத்துக்காட்டி யிருக்கிறோம்.

Koviloor Digital Library



## விலாசம் தேவை.

"அரை நிர்வாண ராஜத்துவேஷ பக்கிரி, ஒரு ராஜப்பிரதிநிதி மாளிகைக்குள் சென்று சம ஆசனம் பெறுவதா?" என்று சர்ச்சில் முன்பு ஊளையிட்டார். "மார்னிங் போஸ்ட்" என்ற பத்திரிகை ஜெனரல் டயருக்கு அண்ணன் "காந்தி அம்மாதிரி இங்கிலாந்து வரட்டும் பார்க்கலாம்." என்று அது உறுமிற்று. அதாவது மரியாதை பங்கம் உண்டாக்கக் கூடிய ஆடைகள் அணிந்து சென்றால் ஒரு போலீஸ்காரன் கைது செய்யலாம். காந்திஜி ஆடை அம்மாதிரி ஆடையாம். ஆகவே லண்டனுக்கு அந்த நிருவாண ஆடையோடு வந்தால், உடனே "மார்னிங் போஸ்ட்" ஆசிரியர் ஒரு போலீஸ்காரனை காந்திஜி மீது ஏவி விடுவாராம். இம்மாதிரியாக "மார்னிங் போஸ்ட்"டும், மகாகனம் மண்டை பெருத்த சர்ச்சிலும் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள் பெரிய வீரர்கள் என்று தங்களை சொல்லிக்கொள்ளுகிற படியால், மகாத்மா லண்டனுக்குச் சென்றால் தங்கள் வாக்குப்படி நடப்பார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆகவே அந்த வேடிக்கையை ஆவலோடு நோக்கினோம். கடைசியாக ஏமாந்தோம். பூபூபூபூ! ஒன்றையும் காணவில்லை சர்ச்சில் போன இடம் தெரியவில்லை. மார்னிங் போஸ்ட் ஆசிரியர் எந்தக் குகையில் பதுங்கி யிருக்கிறார் என்பதும் தெரியவில்லை. மகாத்மா காந்தி தமது கோவண ஆடையோடு தான் சீமை சென்றார். கோவண ஆடையோடுதான் போக்ஸ்டோனிலிருந்து லண்டன் வரை மோட்டாரில் சென்றார். அந்த கோவண ஆண்டியை பாதுகாக்கவே நூற்றுக் கணக்கான போலீசார் வழி நெடுக அணி வகுத்து நின்றனர். மகாத்மாவிற்கு உபசாரம் நடந்த மண்டபத்திலும் அவர் கோவண ஆண்டியாகவே பிரவேசித்தார். வழக்கம்போல உட்கார்ந்து கொண்டே அவர் பேசினார். உளறுவாய் சர்ச்சில் எங்கே? போலீஸ் பூச்சாண்டி காட்டிய மார்னிங் போஸ்ட் எங்கே? சென்றவிடம் தெரியவில்லை. அவர்கள் விலாசம் தேவை. உங்களுக்கு தெரியுமா?

## தமிழ்த்தாய் புலம்பல்.

சாத்திரங்கள் பல தந்தார்—இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்.
நேத்திரங்கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்ததனைத்துந் துடைத்து முடிப்பான்!

நன்றென்றுந் தீதென்றும் பாரான்—முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—வையச்
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்

கன்னிப்பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில்விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெயருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்

தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலியாலும்
இந்தக் கணமட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்

## பிரிட்டனுக்கு எச்சரிக்கை

மார்சேல்ஸில் போய் இறங்கியதும் மகாத்மா தமது முதல் பாணத்தை பிரயோகித்தார். அதுவே பிரிட்டனுக்கு அவர் விடுத்த முதல் எச்சரிக்கை அதாவது:—

"உள்நாட்டு தொல்லைகளை நிவர்த்திக்க வழி தேடி பிரிட்டிஷ் சர்க்கார் திணறிக்கொண்டிருக்கிறது. இச்சமயம் இந்தியாவின் கோரிக்கையை மறுத்து சட்டமறுப்பையும் பகிஷ்காரத்தையும் மறுபடியும் அநுபவிக்க பிரிட்டிஷ் சர்க்கார் வழி தேடுமென்று நான் நினைக்கவில்லை.

இதைக்கேட்டு சர்ச்சில் கோஷ்டியார் அடங்கிவிட்டார்களென்று தெரிகிறது. அவர்கள் பேச்சு மூச்சையே காணவில்லை.

ஜவார்லால் சரித்திரம்.

மூன்றாம் பதிப்பு. சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே எழுதவும். 32 பக்கங்கள். விலை அணா 1. ஒரு பிரதிக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

காங்கிரஸ் கொடியைக் காக்க பலர் உயிர் இழந்தனர். பலர் வீரத்தோடு போலீஸ் தடியடியை தாங்கினர். ஆகவே எந்த தேசியக் கூட்டத்திலும் காங்கிரஸ் கொடி கௌரவம் பெறவேண்டும்.

—மகாத்மா

Koviloor Digital Library



## போலிக் கதர் !

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. சி. ராஜ கோபாலாச்சாரியார் நமக்கு எழுதுகிறார்:— சுதேசி மில் துணி வாங்கவேண்டுமென்ற பிரசாரம் பலமாய் இருந்தபோதிலும், தென் இந்தியாவில் கத்தர் விற்பனை கொஞ்சமும் குறையவில்லை. ஆகவே போலிக்கதர் இங்கே அதிகமாய் தலைகாட்டுகிறது. செ. 10½ மில் நூலை வாங்கி கத்தர் மாதிரி நெய்து கத்தர் என்று சொல்லி விற்கிறார்கள். இதைத் தவிர ஜப்பானிலிருந்து கத்தர் மாதிரி நெய்து அச்சிட்டு வரவழைத்து விற்கிறார்கள். அதன்மீது மகாத்மா படத்தையோ மற்ற தேசிய தலைவர்கள் படத்தையோ ஒட்டி விடுவதால் வாங்குகிறவர்கள் உண்மை கத்தர் என்று ஏமாந்து போகிறார்கள். இந்த ஏமாற்றுகளிலிருந்து தப்ப வேண்டுமானால் காதி வஸ்திராலயத்திலோ அல்லது அது சர்ட்டிபிகேட் கொடுத்த கடைகளிலிருந்தோ கத்தர் வாங்குவது தான் ஒரே வழி. சில கடைகள் சர்க்கா சங்கம் சர்ட்டிபிகேட் பெற்ற கத்தர் இங்கே விற்கப்படும் என்று விளம்பரப் பலகைகள் தொங்கவிட்டிருக்கின்றன. அம்மாதிரி கடைகளில கத்தரும் இருக்கலாம். ஆனால் அங்கு இருப்பவையெல்லம் சுத்தக்கதர் என்று சொல்ல முடியாது. இருக்கிறவையெல்லாம் சுத்த கத்தர் தானா என்று அறியவேண்டுமானால், அந்த கடைக்கு சர்க்கா சங்கம் அத்தாட்சி கொடுத்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

(இந்த மோசடியைப் பற்றி நாம் முன்பே எழுதியிருக்கிறோம். சென்னை கிடங்கு தெருவில் நினைத்த மாத்திரத்தில் பேல் பேலாக "கத்தர்" தயாரித்து விடுகிறார்கள். ஜப்பான் காடா துணியில் கத்தரைப்போல கரைகள் அச்சிட்டு மகாத்மா படத்தையும் ஒட்டிவிடுவதே அவர்கள் "கத்தர்" தயாரிக்கும் ரகசியமாகும். வர்த்தகர்கள் தேசாபிமானத்திற்காக அல்லாவிட்டாலும் சத்தியத்திற்காகவாவதுகட்டுப்பட்டு உண்மையாக நடந்து கொண்டால் ஒரு தொல்லையும் இல்லை. ஆனால் சில "தன்மதிவணிகர்" அப்படி நடக்காமல் இருக்கும் போது, அவர்கள் மோசடியில் அகப்படாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது ஜனங்களின் பொறுப்பாகும். கத்தரென்று நினைத்து அதிக விலை கொடுக்கும் போது, அது ஜப்பானுக்கா போய்ச் சேர வேண்டும்? ப—ர்.)

## மகாத்மா எச்சரிக்கை.

லண்டனில் மகாத்மா காந்திக்கு "நண்பர் மாளிகை"யில் வரவேற்பு அளித்தார்கள். மகாத்மா அச்சமயம் பேசியதாவது:—

யார் என்னை பிரதிநிதியல்லவென்று சொல்லுகிறார்களோ அவர்கள் சார்பாக நான் இங்கு வரவில்லை. பட்டினியால் வாடும் கோடிக்கணக்கான ஏழைகளின் பிரதிநிதியாகவே நான் இங்கே வந்திருக்கிறேன். சமாதான தூதிற்காக என் நண்பர்களுடன் பெரிய சமூகமாகிய பிரிட்டிஷ் சமூகத்தின் விருந்தினனாய் இங்கு புறப்பட்டு வந்தேன். நான் காங்கிரஸ் பிரதிநிதி. காங்கிரஸ் எனக்கு சில கட்டளைகள் இட்டு அனுப்பியிருக்கிறது. அவற்றிற்கு உட்பட்டே நான் நடக்க முடியும். எந்த சமூதாயமும் பெருமைப்படக் கூடிய ஒரு விஷயத்திற்காக காங்கிரஸ் போராடுகிறது. கலப்பில்லாத தனி சுதந்திரமே அவ்விஷயமாகும். இதை அடைவதற்காக உண்மை, அஹிம்சை ஆகிய ஆயுதங்களை காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது. இந்தக் கொள்கைக்கு விரோதமாக அதன் பிரதிநிதிகள் நடந்தால் உலகம் எவ்வளவு கண்டித்தாலும் தகும். ஆனால் இந்த அடிப்படையான கொள்கையை ஒப்புக்கொள்ளாத சிலர் எங்கள் நாட்டில் இருக்கின்றனர். அவர்கள் கொள்கை காங்கிரசிற்கு மிகுந்த வருத்தத்தை கொடுக்கிறது. அவர்கள் முறை எவ்வளவு தவறுதலாய் இருந்தபோதிலும், இந்தியாவின் பிறப்புரிமையாகிய விடுதலைக்காகவே அவர்கள் அந்த முறையை கையாளுகிறார்கள். இதை காங்கிரஸ் அறிந்தபோதிலும், பலாத்காரத்தை உபதேசிக்கிறவர்கள் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் கெடுதியை உண்டு பண்ணுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரசிற்கும் சர்க்காருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். கண்ணியமுள்ள பிரிட்டிஷ் கனவானான லார்ட் இர்வின் தளரா முயற்சியாலேயே அது முடிவு பெற்றது. எப்பொழுது சாத்தியப்படுகிறதோ அப்பொழுது லண்டன் வருவதாய் அவருக்கு வாக்களித்திருந்தேன் அதன்படி வந்திருக்கிறேன். ஒவ்வொரு பிரிட்டிஷ் ஆண்பெண்ணுக்கும் ஒரு விஷயத்தை தெளிவாக்க விரும்புகிறேன். இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் சமரசம் ஏற்பட்டாலொழிய உங்கள் வரவு செலவு திட்டத்தை யோக்கியமாய் சரிக்கட்ட உங்களால் ஒரு நாளும் முடியாது.

Koviloor Digital Library



# இந்திய விடுதலைக்கு ஆதரவு.

ஜினிவா சர்வதேச சங்கத்தில் இந்தியா ஒரு அங்கத்தினர். சுதந்திரமுள்ள நாடுகளே அங்கத்தினர்களாய் சேரலாம். இருந்தாலும். பிரிட்டன் சூழ்ச்சியால் இந்தியாவை அதில சேர்த்துக்கொண்டு வருஷாவருஷம் இந்தியாவிடம் வரி வசூலிக்கிறார்கள். அங்கே போகிற பிரதிநிதிகளும் ஜனங்கள் பிரதிநிதிகளல்ல. இந்திய சர்க்கார் பிரதிநிதிகள். அவர்களும் இந்திய மந்திரி உத்தரவுப்படி நடக்க வேண்டும். இந்திய சர்க்காருக்கு ஒரு அதிகாரமுமில்லை. இவற்றைப்பற்றி தற்சமயம் அங்கு பிரதிநிதிகளாய் சென்றிருக்கும் சர். பாத்ரா, சட்ட மந்திரி சர். பி. எல். மித்தர் இருவரும மற்ற நாட்டு பிரதிநிதிகளிடம தெரிவித்தனராம்: அவர்கள் எல்லாரும் இந்திய விடுதலைக்கு ஆதரவளித்தார்கள். அவர்கள் சொல்லியதாவது—பிரஞ்சு அயல்நாட்டு மந்திரி பிரயண்ட்:—இந்தியாவிற்கு குடியேற்ற ஆட்சி கொடுக்கப்போவதாக சொல்லிய பிரிட்டன் இந்தியாவை சர்வ தேச சங்கத்தில் சேர்த்தது. ஆகவே குடியேற்ற ஆட்சி அதற்கு உடனே கொடுக்க வேண்டும்.

லார்ட் செசில்:—சர்வதேச சங்கம் நேராக இந்தியாவுடன் கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்திய மந்திரிக்கு குறுக்கிடும் அதிகாரம் கூடாது.

அயர்லாந்து பிரதிநிதிகள்:—உங்கள் நாட்டில தேசிய இயக்கத்தை தொடர்ந்து பலமாய் நடத்துங்கள். அது ஒன்றே விடுதலைக்கு வழி.

## மகாத்மாவுக்கு தந்தி.

அடியிற்கண்ட தந்தியை மகாத்மாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள்:—

சென்னை முஸ்லிம் லீக், மகாஜன சபை, முஸ்லிம் ஒற்றுமை சபை, தமிழ், ஆந்திரா ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, ஆகியவைகள் ஆதரவில் கூடிய கூட்டம், இந்து—முஸ்லிம் ஒற்றுமையை செய்து வைப்பதிலும், தாய் நாட்டிற்கு பூர்ண விடுதலை பெறுவதிலும் தங்கள் மீது பூரா நம்பிக்கை யிருப்பதாக தீர்மானம் செய்திருக்கிறது. தங்களுக்கு வெற்றி ஏற்பட மாறு பிரார்த்திக்கிறார்கள்.

யாகூப் ஹாசன், தலைவர்.

# இந்தியாவின் செய்தி

சென்ற 13உ யன்று மாலை மகாத்மா தமது லண்டன் ஜாகையாகிய கிங்ஸ்லிஹாலில் அமெரிக்காவிற்கு ஒரு பிரசங்கம் செய்தார். அங்கிருந்து அவர் பிரசங்கம் ஆகாசத்தந்தி மூலம் அமெரிக்கா வெங்கும் பரபரப்பட்டது. அமெரிக்கர் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் இருந்தவண்ணம் ரேடியோ மூலம் அவர் பிரசங்கத்தைக் கேட்டனர். காலநிலைமை சௌகரியமாயிருந்தபடியால் மகாத்மா பேசியது மிகவும் தெளிவாக அமெரிக்கருக்கு கேட்டது. மகாத்மாவின் பிரசங்கத்தைக் கேட்டதும், அவர் பேசிய உயர்ந்த ஆங்கிலத்தைப் பார்த்து அமெரிக்கர் பிரமித்துப் போயினராம். அவர் பேசியதாவது:—

இதுவரை மனிதர் காட்டு மிராண்டிகளைப் போல சண்டை போட்டுக்கொண்டு வந்தனர். மனித சமூகத்திற்கு இந்த காட்டுமிராண்டி சண்டை ஒத்ததல்ல என்பதை இந்தியர் உணர்ந்தனர். என்னைப்பொறுத்த வரையில் ரத்தஞ்சிந்தி விடுதலை பெறுவதைவிட, ரத்தஞ்சிந்தாமல் பெற எத்தனை யுகமானாலும் காத்திருக்க தயார். இந்த ரத்தக்களரியைக் கண்டு உலகம் சலித்துப்போய் விட்டது. ஆகவே ரத்தஞ்சிந்தாத ஒரு போர் முறையை இந்தியா பின்பற்றுகிறது. இவ்விஷயத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டியது இந்தியாவே. ஆகவே இதில் இந்தியாவே உலகிற்கு தலைமை வகிக்கிறது. இந்தியாவே உலகிற்கு வழிகாட்டும் பெருமை பெற்றிருக்கிறது. இந்த முறையை பின்பற்றி இந்தியா செய்யும் பெரிய போராட்டத்திற்கு உதவிபுரியும்படி உலகிலுள்ள எல்லா சமூதாயங்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்து முஸ்லிம்கள் சண்டை போடுவதைக்கண்டும், கோடிக்கணக்கான சொந்த சகோதரர்களை தீண்டாதார் என்று இந்துக்கள் பிரித்து வைத்திருப்பதைக் கண்டும் நான் வெட்கமடைகிறேன். ஆனால் இந்தியர் ஆரம்பித்திருக்கும் இந்த பெரிய போராட்டத்தில், தீண்டாமை ஒழிப்பது, தேசிய ஒற்றுமை, மதுவிலக்கு இவற்றிற்கே முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். மதுவிலக்கு விஷயத்தில் இந்தியாவில் சர்க்கார் ஆதரவு எங்களுக்கு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது. பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான இந்தியருக்கு அநுதாபம் காட்டும்படி உலகத்தாரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)




வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 19௳, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 3௳ சனிக்கிழமை | இதழ் 28

# "நான் பிரிட்டிஷ் பிரஜையல்ல, ஒரு புரட்சிக்காரன்"

திங்கட்கிழமை காலை லண்டன் ஜேம்ஸ் மாளிகையில் ஐக்கிய ஆட்சி அமைப்பு கமிட்டி கூடியது. மகாத்மா காந்தி ஒரு சால்வையால் உடம்பை போர்த்திக் கொண்டு, ஒரு புட்டி ஆட்டுப் பாலுடன் வந்தார். அரண்மனை வாசலில் லார்ட் சாங்கி அவரை வரவேற்று அழைத்துப் போனார். உள்ளே சென்றதும் இந்திய மந்திரி சர். சாமுவேல் ஹோருக்கு அறிமுகப் படுத்தினார். அன்று மௌனதின மாகையால் மகாத்மா பேசவில்லை. நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தார் தலைவர் லார்ட் சாங்கிக்கு இடது கைப்பக்கத்தில் மகாத்மா காந்தியும் வலது கைப்பக்கத்தில் இந்திய மந்திரியும் வீற்றிருந்தனர். செவ்வாய்க்கிழமை காலை மறுபடியும் மகாநாடு கூடியது. முதலில் மகாத்மாவை பேசும்படி லார்ட் சாங்கி கேட்டுக் கொண்டார். மகாத்மா உட்கார்ந்த வண்ணமே சுமார் 45 நிமிஷ நேரம் நிதானமாக காங்கிரஸ் கொள்கையை எடுத்துரைத்தார். அவர் பேசிய ஆணித்தரமான பேச்சு எல்லார் மனதிலும் பசுமரத்தாணி போல பதிந்தது. அவர் கூறிய வீரமொழிகளின் சாராம்சமாவது:—

ஒத்துழைக்க வேண்டுமென்ற பூர்ணமான எண்ணத்தோடேயே நான் இங்கு வந்திருக்கிறேன். ஆனால் ஒத்துழைப்பதால் ஒரு பயனும் ஏற்படாதென்று எனக்கு தெரியுமானால் அந்த விநாடியே நான் மகாநாட்டை விட்டு விலகிவிட தயங்கமாட்டேன். இந்திய தேசிய காங்கிரசின் தாழ்மையுள்ள ஏஜண்டாக நான் இங்கு வந்திருக்கிறபடியால், அந்த மகா சபையின் கொள்கைகளை நீங்கள் அறிய வேண்டியது அவசியம். காங்கிரஸ் எல்லா மதஸ்தருக்கும் எல்லா ஜாதியாருக்கும் பொது. அதை முதலில் ஆரம்பித்தவர் ஏ. ஓ. ஹியூம் என்ற பிரிட்டிஷார். அதை வளர்த்தவர்கள் இரண்டு பார்சிகள். தீண்டாமையை ஒழிக்க காங்கிரஸ் அன்றும் இன்றும் பாடுபட்டு வருகிறது. மன்னர்களுக்கு இடையூறு செய்யவேண்டாம் என்பதற்காகவே சமஸ்தானங்களின் உள் நிர்வாகங்களில் காங்கிரஸ் தலையிடுவதில்லை. கத்தர் சங்கத்தின் மூலம் 2 ஆயிரம் கிராமங்களில் 50 ஆயிரம் பெண்கள் பிழைப்பு பெறுகிறார்கள். இதில் பாதி முஸ்லிம் பெண்கள். ஆயிரக்கணக்கான தீண்டாத பெண்களும் உதவி பெறுகிறார்கள். கராச்சி காங்கிரஸ் பூர்ண சுயராஜ்யமே காங்கிரஸ் லக்ஷ்யம் என்று தீர்மானித்திருக்கிறது. முதல் மந்திரி முன்னால் செய்த பிரசங்கத்தை கவனமாய்ப் படித்துப் பார்த்தேன். காங்கிரஸ் கேட்கும் கோரிக்கைகளுக்கும் அவர் சொல்லுவதற்கும் எவ்வளவோ தூர மிருக்கிறது.

பிரிட்டிஷாரிடமிருந்து பிரிந்துவிட்டோம் என்பதை உலகிற்கு காட்டுவதற்காக நாங்கள் பூர்ண சுயராஜ்யம் கேட்கவில்லை. பரிபூர்ண விடுதலை யடைந்த இரண்டு நாடுகளும் கூட்டுறவாய் இருப்பதைப் போல இருக்கவே காங்கி

Koviloor Digital Library



ரஸ் அதை கேட்கிறது. கராச்சி தீர்மானம் இதோ இருக்கிறது. எனக்கு காங்கிரஸ் கொடுத்த கட்டளையும் இதுவே. கோடிக்கணக்கான திக்கற்ற இந்தியருக்கு நன்மை செய்யக் கூடிய வழி சுயராஜ்யத்தைத் தவிர வேறு இருப்பதாக எனக்கு நிரூபிக்க முடியுமானால் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அந்த வழியை காங்கிரசும் ஒப்புக்கொள்ள வேண்டும். காங்கிரசிற்கும் சர்க்காருக்கும் ஏற்பட்ட டெல்லி உடன்படிக்கையில், ஐக்கிய ஆட்சி அமைப்பை காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் உண்மையாக சுதந்திரம் இந்தியாவிற்கு கொடுக்காமல் வெறும் ராஜீய அமைப்பைக் காட்டினால் அதை காங்கிரசோ, நானோ ஒப்புக்கொள்ள முடியாது.

நான் ஒரு பிரிட்டிஷ் பிரஜை என்று சொல்லிக் கொள்ளுவதில் நான் பெருமை யடைந்திருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் அம்மாதிரி சொல்லுவதை நான் விட்டு பல வருஷங்களாய் விட்டன. நான் பிரிட்டிஷ் பிரஜையல்ல. நான் ஒரு புரட்சிக்காரன். ஆனால் நான் ஒரு பிரஜையாக இருக்க ஆசைப்பட்டேன். இப்பொழுதும் ஆசைப்படுகிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அல்ல. சர்வ சுதந்திரமுள்ள கட்டுறவு ஐக்கிய பத்தியத்தில் பிரஜையாக இருக்க விரும்புகிறேன். அந்த ஐக்கிய பத்தியம் பிரிக்கக்கூடாததாக விருக்கலாம். ஆனால் ஒரு நாடு மற்றொரு நாட்டின் தலையில் சுமத்தி கட்டாயப்படுத்தியதாக இருக்கக்கூடாது.

ஆகவே இரண்டு நாடுகளில் எது பிரியப்பட்டாலும் தங்கள் சம்பந்தத்தை விலக்கிக்கொள்ளவோ கூட்டுறவை நிறுத்திக்கொள்ளவோ சுதந்திரம் வேண்டுமென்று காங்கிரஸ் கேட்கிறது. இப்படியிருப்பது இருவருக்கும் நன்மையே. மற்றொரு கூட்டை கொள்ளையடிக்கவோ, சுரண்டவோ நாங்கள் விடுதலை கேட்கவில்லை. பலமுள்ள நாடோ பலமில்லாத நாடோ எல்லாருக்கும் நாங்கள் விரும்பும் விடுதலையை கொடுக்க மறுப்போமானால் எங்களுக்கு விடுதலை பெற யோக்கியதை கிடையாது. இந்து முஸ்லிம் ஒப்பந்தம் ஏற்படும்படி கடவுள் அருள்புரிகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். பிரிட்டனைப்போல இந்தியாவும் பூர்ண விடுதலை பெற்று பிரிட்டனோடு பங்காளியாயிருந்தால், இரண்டு நாடுகளும் பரஸ்பரம் அதிக நன்மை பெற முடியாதா என்று கேட்கிறேன். இது ஒன்றிலிருந்தே ராணுவம், வெளிநாட்டு சம்பந்தம், பண நிர்வாகம், வரி, முதலியவை சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்ன என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். பங்காளிகள் நிர்வாகம் மாறும்போது, கணக்கை தணிக்கை செய்து கூடுதல் குறைவுகளை சரிக்கட்டுவது வழக்கம். அதைப்போல செய்ய வேண்டுமென்றே கடன் விஷயத்தில் இந்தியா கேட்கிறது.

ஆயுதபலத்தால் இந்தியாவை அடக்கிவைக்க பிரிட்டனுக்குள்ள பலத்தை நான் குறைத்துக் கூறவில்லை. ஆனால் அன்பால் இருநாடுகளும் பிணைக்கப்பட்டால் இந்தியா பிரிட்டனுக்கு எவ்வளவு சிறந்த பங்காளியாயிருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். இந்தியா நியாயமாய் பொறுக்க வேண்டிய பொறுப்பிற்குமேல் எதையும் இந்தியா மீது சுமத்த பிரிட்டன் விரும்பாதென்று நினைக்கிறேன். அதைப்போலவே நியாயமாய் பொறுக்க வேண்டிய எந்தப் பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொள்ள மறுக்காது.

## தென்னாட்டார் இளித்த வாயர்களா ?

ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்:—

முக்கியமாக தென் ஜில்லா வியாபாரிகள் விதேசித்துணி சரக்கு அதிகமாக எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் என்று 12வ வெளியான சென்னை துணி மார்கெட் நிலவர அறிக்கையில் காணப்படுகிறது. தென்னாட்டுக்கு இது ஓர் எச்சரிக்கையாகும். தேச முன்னேற்றத்துக்கு இச்சமயத்தில் முட்டுக்கட்டை போடாதீர்கள் என்று தென்னாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன். தேசபக்தி அணுவளவேனும் உள்ளவர் எவரும் இச்சமயம் விதேசித்துணி வாங்கக் கூடாது. பணமிருந்தால் கத்தர் வாங்கி அணியுங்கள். கத்தர் வாங்கப்பணமில்லை யென்றால், பழைய துணியே போதும். அன்னியத்துணி வாங்க வேண்டாம்.

Koviloor Digital Library



# ஓணான் ராமசாமி

ஓணான் வினாடிக்கு வினாடி நிறம் மாறுமாம். அது ஓணான் தவறல்ல. சீதோஷ்ண நிலைமையே அதற்குக் காரணம். தற்காலம் இந்திய சர்க்காரில் சட்ட மந்திரியாய் விளங்கும் சர். ஸி. பி. ராமசாமி ஐயர், இம்மாதிரி அடிக்கடி மாறுவதாக சிலர் சொல்லுகிறார்கள். உண்மையே. அதற்கு அவர் எப்படி ஜவாப்தாரியாக முடியும்? ஓணான் வர்ணம் மாறுவதற்கு சீதோஷ்ண நிலைமை காரணம். அதைப்போல ராமசாமியின் பல்டிக்கு ராஜீய நிலைமையே காரணம். இன்றைய நிலைமை சர்க்காரில் ஒரு பெரிய பதவியை கொடுக்கிறது. "தேசத்திற்காக" ராமசாமி அதை ஒப்புக்கொள்ளுகிறார். நாளைக்கு அந்த வேலை போகிறது. உடனே "தேசத்திற்காக" சர்க்காரை எதிர்த்துப் பேசுகிறார். மறுபடியும் வேலை கிடைத்தால் பழையபடியே சர்க்காரோடு ஐக்கியமாகிறார். இம்மாதிரி கூடுவிட்டு கூடு பாயும்போது, அணிந்த வேஷத்திற்கு தக்கபடி பேசிததானே ஆகவேண்டும்? ஆகவே சர். ராமசாமி ஐயர் ஓணானைப்போல மாறுகிறார் என்று குற்றமாய்ச் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படி மாறுவதிலேயே அவர் சேவையின் பெருமை அடங்கி யிருக்கிறது! உப்பிட்ட வரை உள்ளத்தில் நினை என்ற பழமொழியை அவர் ஒரு நாளும் கைவிட மாட்டார். இதை டாக்டர் பெசன்டுகூட ஒப்புக்கொண்டிருக்கிறார். சென்னை சட்ட மந்திரியா யிருக்கும்போது சைமன் கமிஷனுக்கு விருந்தளித்தார். வேலையைவிட்டு விலகியதும் சைமன் பகிஷ்காரத்தில் சேர்ந்தார். இந்த பல்டியை பெசன்ட் விளக்கினார். சர்க்கார் உப்பை தின்னும்போது அதற்கு விரோதமாய் செய்யக்கூடாது. ஆகையால் அவர் சைமன் கமிஷனுக்கு விருந்தளித்தார் என்று டாக்டர் பெசன்டு சொன்னார். ஆகவே சர். ராமசாமி பேசுகிற தினங்களில் அன்று யார் உப்பை தின்றிருக்கிறார் என்பதை அறியவேண்டும். இதை அறிந்துகொண்டால், அவர்மீது குற்றஞ்சொல்ல வேண்டிய சங்கடமே இருக்காது. சர். ராமசாமி தற்சமயம் இந்திய சர்க்கார் சட்ட மந்திரி. சர்க்கார் கொண்டு வந்திருக்கும் அச்சுச்சட்ட மசோதாவை பலமாய் ஆதரித்துப் பேசியிருக்கிறார். 15 வருஷங்களுக்கு முன்னால் இதே ராமசாமி, அச்சுச்சட்டம் கூடாது என்று லக்ஷ்மணபுரி காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதே ராமசாமி புதிதாய் ஒரு அச்சுச்சட்டம் கொண்டு வருவது ஆச்சரியமல்லவா என்று ஸ்ரீ ரெங்கய்யர் சட்ட சபையில் கேட்டார். இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? ஓணான் நிறம் மாறுவதில் ரங்கய்யர் ஆச்சரியப்படுகிறாரா? அதில் ஆச்சரியப்படாமல் இருக்கும்போது ராமசாமி மாறுதலில் ஏன் ஆச்சரியப்படவேண்டும்? 15 வருஷங்களுக்கு முன்பு அவர் சட்ட மந்திரி ராமசாமியாயில்லை. வெறும் ராமசாமியாயிருந்தார். இன்று சட்ட மந்திரி ராமசாமியாக இருக்கிறார். சர்க்கார் உப்பை தின்கிறார். உப்பிட்டவரை உள்ளத்தில் நினைக்க வேண்டாமா? ஆகவே சர். ராமசாமி அச்சுச்சட்டத்தை ஆதரிக்கிறார். ஓணான் பெருமை நிறம் மாறுதலில் இருக்கிறது. அதேபோல நமது ராமசாமியின் ராஜீயப் பெருமை "உப்பிட்டவருக்கு ஊழியஞ் செய்வதில்" இருக்கிறது. ராமசாமி அபிப்பிராயம் இங்கும் அங்கும் மாறி மாறி ஓடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர் ஏன் ஒரே கட்சியில் இருக்கக்கூடாது என்று நீங்கள் கேட்கலாம். அது வேறு விஷயம். அதைப்பற்றி அவரிடமே கேட்க வேண்டும்.

---

## காந்தி செய்திகள்

ஏடனில் மகாத்மா காந்திக்கு நடந்த வரவேற்பில் தேசியக்கொடியை பறக்கவிடக் கூடாதென்று ரெஸிடெண்ட் உத்தரவிட்டார். மகாத்மா ஏடனில் இறங்கியதும் இச்செய்தியை தெரிவித்தார்கள். ஏடன் இந்திய சர்க்கார் நிர்வாகத்தில் இருப்பது. இந்திய சர்க்காரோ காங்கிரசோடு ராஜி ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். தேசியக்கொடியை அவர்கள் கௌரவிக்க வேண்டியது கடமை. ஆகவே ஏடனில் மட்டும் தேசியக்கொடி பறக்கவிடக் கூடாதென்று சொல்லுவது நியாயமல்ல என்று மகாத்மா சொல்லியனுப்பினார். ரெஸிடெண்டிற்கு வேறு வழியில்லை. தேசியக்கொடி பறக்கவிடாமல் மகாத்மா பிரசங்கம் செய்வாரென்று தோன்றவில்லை. ஆகவே மரியாதையாக ரெஸிடெண்ட் தமது ஆட்சேபனையை வாபஸ் வாங்கிக்கொண்டார். தேசியக்கொடி கம்பீரமாய் பறக்க, மகாத்மா கூட்டத்திற்கு வந்து பிரசங்கம் செய்தார்.

சூயஸ் துறைமுகத்திற்கு கப்பல்போய்ச் சேர்ந்ததும் "அல் அஜார்" என்ற பிரபல எகிப்திய சர்வ கலாசாலையைச் சேர்ந்த மாணவர்களும், மற்றவர்களுமடங்கிய ஒரு நீராவிப்படகு கப்பலுக்கு சமீபம் வந்தது. அதன் பின்னால் மற்றொரு படகில் உலகமெங்குமுள்ள சுமார் 12 பிரபல பத்திரிகைகளின் நிருபர்களும் படம் பிடிப்பவர்களும் வந்தார்கள். வேறொரு படகில் எகிப்திய தேசியக் கட்சியான வாபீது கட்சியின் பிரதிநிதிகள் தங்கள் தலைவர் நஹாஸ்பாஷா செய்தியுடன் மகாத்மாவை வரவேற்க வந்தார்கள். ஒரு எகிப்திய மாணவர் மகாத்மாவிற்கு மாலை சூட்டும்போது "மகாத்மாஜிக்கு ஜே" என்ற கோஷம் கிளம்பியது. எகிப்தியர் மகாத்மாவிற்கு கத்தர் வெகுமதி யளித்தது எல்லாருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

எல்லா கட்சிகளையுஞ் சேர்ந்த எகிப்திய பத்திரிகைகள் அன்று முதல் பக்கத்தில் மகாத்மா சரித்திரத்தை பிரசுரித்திருந்தன. மகாத்மாவிற்காக அரபு பாஷையில் கட்டிய கவியை 72 வயதான ஒரு எகிப்தியர் மகாத்மாவிடம் வாசித்துக் கொடுத்தார். ஜக்லுல் பாஷா மனைவி அனுப்பிய செய்தி மகாத்மாவிற்கு மிகுந்த மனக்களிப்பை அளித்தது.

Koviloor Digital Library



# வெள்ளை அதிகாரிகள் யோக்கியதை.

ஸ்ரீ. ஜி. லவ்ஸ் டிக்கின்சன் சுதந்திர மனப்பாங்குடைய ஒரு உத்தம ஆசிரியர். அவர் கீழைத் தேசங்களில் பிரயாணம் செய்து அரசியல் விஷயங்களை நேர்முகமாகக் கண்டறிந்த பிறகு "இந்தியா, சீனா, ஜெப்பான் நாகரிகம்." என ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அவர் அந்நூலில் கூறியிருப்பதாவது.—"இந்திய நாகரிகத்தின் மகிமையை அறிய ஆங்கிலேயர்களுக்கு சக்தியே இல்லை. இந்திய நாகரிக தத்துவங்களைக் கிரகித்துக்கொள்ள அவர்களுக்கு வாசனையுமில்லை. தமது ஆசார அனுஷ்டானங்களையெல்லாம் அவர்கள் இந்தியாவுக்கு கொண்டுபோகிறார்கள். 20 அல்லது 25 வருஷங்கள் நாடு கடத்தப் பட்டவர்களைப் போல் எண்ணி எண்ணித் தொலைக்கிறார்கள். அவர்கள் தாய் நாட்டுக்கு வந்ததும் புது மனிதர்களைப் பதிலாக அனுப்புகிறார்கள். சஞ்சார சௌகரியங்களினால் ஏற்பட்ட நன்மை இவ்வளவு தான். இந்தியாவிலிருக்கும் ஆங்கிலேயர்கள் கல்விப் பயிற்சிக்காகத் தம் குழந்தைகளை இங்கிலாந்துக்கு அனுப்புகிறார்கள். சாதாரணமாக அவர்கள் மனைவிமார் தம் பாதி வாழ்நாளை இங்கிலாந்திலே போக்குகிறார்கள். அவர்களும் அடிக்கடி தாய் நாட்டுக்கு வந்து போகிறார்கள். அவர்களது உயிர் நாடியிருப்பது இந்தியாவிலல்ல; இங்கிலாந்திலே. ஆகவே அவர்கள் இந்தியர்களோடு ஒரு நாளும் ஐக்கியப்படக் கூடாதவர்களாயிருக்கிறார்கள்."

வங்காள கவர்னராயிருந்த சர். பாம்ப்பைட் புல்லர், இந்தியர் வாழ்க்கை முறை மனோபாவனை இவைகளைப் பற்றி எழுதிய ஒரு நூலில் அவர் கூறியிருப்பதாவது:—"தமது உத்தியோகத்துக்குத் தேவையான யோக்கியதைகள் இல்லாத பிரிட்டிஷ் இளைஞர்கள் இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்கள் வகிக்க அனுப்பப் படுகிறார்கள். அவர்களுக்கு இந்தேச சட்டமோ சரித்திரமோ தெரியாது. பொருளாதார விஷயங்களிலும் அவர்களுக்கு ஞானம் கிடையாது. அரைகுறையாக ஒரு தேச பாஷையை மட்டும் கற்றிருப்பார்கள். உத்தியோகத்துத் தேவை இதர விஷயங்களிலும் அவர்கள் ஞான சூனியர்களாகவே இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவுக்குரிய பழக்கம் பெறாதவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்களாக அனுப்பப்படுகிறார்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இந்தியர்களின் வாழ்க்கை முறை ஆசாரங்கள் முதலியவைகளைப்பற்றி அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமானாலும் அத்தகைய ஞானமில்லாதவர்களே பொதுவாக போலீஸ் உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெறுகிறார்கள். தேசபாஷைகளில் ஒன்றையாவது அவர்கள் கற்றுக்கொள்வதுமில்லை. வன இலாகா உத்தியோகஸ்தர்களும், வைத்திய இலாகா உத்தியோகஸ்தர்களும், இஞ்சினீயர்களும், கல்வியிலாகாதார்களும் இத்தகையவர்களே. இந்த ஏற்பாடு சுதேசிகளை அவமதிக்கத்தக்கதாகும்."

இந்திய விஷயங்களை மிகுந்த ஆவலுடன் கவனித்துவரும், பெயர்பெற்ற சோஷியலிஸ்டு தலைவர் ஸ்ரீ. எச். எம். ஹிண்டமான் எழுதுவதாவது:—"இந்தியாவுக்கு அனுப்பப்படும் உத்தியோகஸ்தர்கள், இந்திய வாழ்வுக்குப் பொருந்தாத நடை உடை பாவனையுடையவர்களாயிருக்கிறார்கள். உத்தியோக வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் அவர்கள் இந்தியர்களுடன் கலந்து கொள்வதில்லை. மாகாண கவர்னர்கள் ஐந்து வருஷங்களுக்கு மேல் உத்தியோகத்திலிருப்பதில்லை. கீழ்உத்தியோகஸ்தர்களும் அடிக்கடி விடுமுறை பெற்று இங்கிலாந்துக்குச் செல்லுகிறார்கள்; உத்தியோகம் முடிந்ததும் மீண்டும் இங்கிலாந்துக்குப் போய் விடுகிறார்கள். அவர்கள் நீண்டகாலம் உண்மையாக உத்தியோகம் நடத்தியவர்களாயிருந்தாலும் பொதுவாழ்வில் இந்தியர்களுடன் கலந்து நட்புப் பாராட்டியவர்களாக இருக்க மாட்டார்கள். ஆதி காலத்தில் மிகச் சொற்பமாயிருந்த ஜாதி, நிற வித்தியாச உணர்ச்சிகள் நாளடைவில் வலுத்துவிட்டன. தற்கால ஆங்கிலப் பிரபுக்கள் குடும்பங்களைவிட எவ்வளவோ புராதனப் பெருமை வாய்ந்த பரம்பரைச் சீமான்களான ஜெமீன்தார்களும், அரச குடும்பத்தாரும் கூட, வயிற்றுப் பிழைப்புக்காக சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்குத் தாழ்ந்தவர்களாகவே மதிக்கப் படுகிறார்கள்."

Koviloor Digital Library



# காந்தி மீது காதல் ::

(ஸ்ரீ. நெக்லி பார்சன்)

ஒரு பிரிட்டிஷ் ஆசிரியர் அமெரிக்காவிற்கு வந்தார். "அமெரிக்காவாசிய நீங்கள் இந்தியாவைப்பற்றிய உண்மையை அறிந்து கொள்ளுவதில்லை. எப்பொழுது தான் அறியப்போகிறீர்கள்?" என்று கேட்டார். "எந்த உண்மையை அறியவில்லை என்று சொல்லுகிறீர்? எது உண்மை? சர்ச்சில் சொல்லுவதா, லார்ட் இர்வின் சொல்லுவதா. மகாத்மாகாந்தி சொல்லுவதா?" என்று கேட்டேன். அவர் பதில் சொல்ல முடியவில்லை. இந்தியர் மீது அமெரிக்கர் மிகுந்த கவனஞ்செலுத்தி வருவது உண்மையே. அதற்குக்காரணம் என்ன? காந்தியே! நவநாகரிகத்தில் உன்னத நிலைமை பெற்று பல சிக்கல்களில் அகப்பட்டு அமெரிக்காவிய நாங்கள் தவிக்கிறோம். வழி தெரியாமல் திகைக்கும் எங்களுக்கு காந்தியின் உபதேசங்கள் பெரிய ஆறுதல் அளிப்பதாயிருக்கின்றன. ஆகவே அவர்மீது நாங்கள் காதல் கொண்டிருக்கிறோம். அமெரிக்காவில் தெருவில் போகும் ஒருவனிடம் "இந்தியாவைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேளுங்கள். அவனுக்கு வேறு எதுவும் கவலையில்லை. "காந்தி ஒரு பெரிய மகானுமே!" என்று தான் கேட்பான். அமெரிக்காவிற்கு பிரிட்டன் மீது விரோதம் கிடையாது. இந்தியாவில் நடக்கும் போராட்டத்தை பாரபட்சமில்லாமலே கவனித்து வருகிறார்கள். காந்தியின் முறைகள் புதுமையாயிருப்பதால் ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. முதலில் சட்டமறுப்பு ஆரம்பிக்கப்போவதாக சென்ற வருஷ ஆரம்பத்தில் பேசியபோது, நாங்கள் அதை பிரமாதமாய் நினைக்கவில்லை. சட்டமறுப்பாவது நடக்கிறதாவது, அதிலும் பிரிட்டிஷாரிடமா நடக்கப்போகிறது? என்று நினைத்தோம். முசோலினி முன்பு ஆப்பிரிக்காவாசிகள் சத்தியாக்கிரகஞ் செய்து ஜெயிப்பதோ, அல்லது பிரஞ்சுக்காரர் முன்பு ரீப் ஜாதியார் ஆத்மசக்தி காட்டி ஜெயிப்பதோ எப்படி நடக்கமுடியும்? அதைப்போலவே காந்தி ஆரம்பிக்கும் சத்தியாக்கிரகமும் தோல்வியடையுமென்று நினைத்தோம். ஆனல் எங்கள் நினைப்பு தவறாய் முடிந்தது.

பிரிட்டிஷார் தனிப்பட்டவர்கள் சுதந்திரத்தையும், தேசிய சுதந்திரத்தையும் கீழ்நாட்டாருக்கு உபதேசஞ் செய்தார்கள். அவற்றை அவர்கள் கேட்கும்போது எப்படி மறுக்கமுடியும்? சட்டமறுப்பு ஆரம்பகாலத்தில் இந்திய சர்க்காரும் எங்களைப் போலத்தான் நினைத்தார்கள். சட்டமறுப்பு பலிக்காது என்று எண்ணினர்கள். அதனல் உப்புச்சட்டத்தை மீறிய மகாத்மா காந்தியை அவர்கள் கைது செய்யாமல் விட்டு வைத்தார்கள். தேசமெங்கும் சட்டமறுப்பு பரவியது. அஹிம்சா தர்மத்தை விளக்கும் செய்திகளும் பரவின. இச்சமயம் போலீசார் தடியடி சம்பவங்களும் எங்களுக்குத் தெரியவந்தது. கையில் ஒரு துரும்புகூட இல்லாமல்வரும் தொண்டர்களை, என்ன அடித்தாலும் இடத்தைவிட்டு நகருவதில்லையென்று உறுதியோடு இருக்கும் தொண்டர்களை, அவர்கள் மூர்ச்சையாகும் வரை ரத்தம் ஒழுக போலீசார் அடிப்பதென்றால், யாருக்குதான் மனக்கொதிப்பு ஏற்படாமல் இருக்க முடியும்? இந்தச் செய்திகளைப் பார்த்தபின்பே அமெரிக்கருக்கு இந்தியர்மீது அநுதாபம் அதிகமாயிற்று. போலீசார் அடித்து அடித்துப் பார்தார்கள். கடைசியாக அவர்களுக்குக்கூட வெறுப்பு ஏற்பட்டது. தங்கள் மனதிற்கு பிடித்தமில்லாத இந்த தடியடிகளைச் செய்யும்படி மகாத்மா இயக்கம் செய்கிறதே என்று வருந்த ஆரம்பித்தார்கள். இச்செய்தியே மகாத்மா இயக்கத்தின் மேன்மையை அமெரிக்கர் அறியும்படி செய்தது. ஆகவே இந்தப் போராட்டம் ஜனங்களுக்கும் போலீசாருக்கும் ஏற்படும் வெறும் சண்டையல்ல அல்லது இந்தியருக்கும் வெள்ளையருக்கும் ஏற்படும் சண்டையுமல்ல. பலாத்காரத்திற்கும் அஹிம்சா தர்மத்திற்கும் ஏற்படும் சண்டையாகும். கீழ்நாட்டு பலத்தையும் மேல்நாட்டு பலத்தையும் சோதிக்கும் சிறந்த யுத்தமாகும். மேல்நாடுகள் பலாத்காரத்தை உபயோகிக்கின்றன. இந்தியா அதற்கு எதிராக அஹிம்சையைக் காட்டுகிறது. அஹிம்சையோடு பலாத்காரத்தால் போராட முடியவில்லை. அஹிம்சையை ஜெயிக்க முடியவில்லை. அஹிம்சைக்குப்பதில் சொல்ல முடியாமல் பலாத்காம் திண்டாடுகிறது. இதுவே காந்தி செய்துள்ள அற்புத நிலைமை. இதுவே காந்தி மீது எங்களுக்கு காதல் ஏற்படும்படி செய்தது.

# எகிப்து தலைவர் வாழ்த்து.

முஸ்தபா நஹாஸ் பாஷா எகிப்து தேசியக் கட்சியான வாப்து கட்சித் தலைவர். ஜக்லுல் பாஷாவிற்கு அப்புறம் தலைவராய் வந்தவர். எகிப்தில் முதல் மந்திரியாய் இருந்தார். தொழிற் கட்சி சர்க்கார் அதிகாரத்திற்கு வந்ததும் எகிப்துடன் ராஜி பேச நஹாஸ் பாஷாவை சீமைக்கு அழைத்தார்கள். ராஜிப் பேச்சு சமாசமாய் முடிய வில்லை. அப்புறம் ஏற்பட்ட தகராறால் நஹாஸ்பாஷா ராஜீநாமாச் செய்து விட்டார். தற்சமயம் ஒரு கட்சியையும் சேராத ஒரு மந்திரியை வைத்துக்கொண்டு எகிப்து மன்னர் எதேச்சாதிகாரமாய் எகிப்தை ஆண்டு வருகிறார். மகாத்மா காந்தி எகிப்து எல்லையாகிய சூயஸில் போய்ச் சேர்ந்ததும், நஹாஸ்பாஷா பின் கண்ட வரவேற்பு தந்தியை அவருக்கு அனுப்பினார். அதாவது,

பெரிய தலைவராகிய மகாத்மா காந்தி,

ராஜபுத்தானா கப்பல்.

உரிமைகளுக்காகவும் சுயேச்சைக்காகவும் போராடும் எகிப்தின் சார்பாக, அதே காரியங்களுக்காகப் போராடும் இந்தியாவின் முதல் தலைவராகிய உங்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனங்களை சமர்ப்பிக்கிறேன். தாங்கள் க்ஷேமமாகச் சென்று சந்தோஷத்தோடு திரும்ப வேண்டுகிறேன். தங்கள் வைராக்கியம் மிகப் பெரியது. அதற்குத் தகுந்த பெரிய வெற்றியை தங்களுக்கு அளிக்க கடவுளை பிரார்த்திக்கிறேன். இந்தியா திரும்பும் போது தங்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்குமென்று நம்புகிறேன். தாங்கள் செல்லும் காரியம் வெற்றியாயினும் சரி, தோல்வியாயினும் சரி, தங்கள் கொள்கைகளுக்காக தாங்கள் செய்துள்ள மகத்தான தியாகங்களையும், தங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக தாங்கள் பாடுபட்டு அடைந்துள்ள ஒப்பற்ற வெற்றிகளையும் பாராட்டுவதற்கு அச்சமயம் எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்று நம்புகிறோம். தங்களுக்கு நீடிய ஆயுளை கொடுத்து, தங்கள் முயற்சி வெற்றி அடையும்படி கடவுள் அருள் புரிவாராக. குபடிஅ.., போர்ட் செட்டிலும், எங்கள் பிரதிநிதிகள் தங்களை நேரில் கண்டு வரவேற்று எங்கள் அன்பை வாய் மூலம் தெரிவிப்பார்கள்.

முஸ்தபா எல் நஹாஸ் பாஷா.

# போருக்குத் தயார்.

உண்மை கொண்ட உறுதிகொண்ட
உத்த மன்சாம் காந்தியே
திண்மை கொண்ட நெஞ்சி னோடு
செம்மை காண வேண்டியே
வன்மை கொண்ட லண்ட னுக்கு
வாய்மை கொண்டு சென்றனார்
நன்மை காண லாமோ வன்றி
நடுவி கந்து போகுமோ 1

வெற்றி கொண்டு காந்தி யிங்கு
வீர மோடு வருகினும்
வெற்றி யின்றி தோல்வி கண்டு
வெறுமை யோடு திரும்பினும்
மற்றி ரண்டு மொன்று என்று
மனதில் நன்கி றுத்துவோம்
பெற்றி யாய வீறு கொண்டு
பெரிய தொண்டு புரிகுவோம் 2

மீண்டும் போரைத் தொடங்கு தற்கு
மிகமு னைந்து வருகுவோம்
நீண்ட போரில் களைத்த லின்றி
நிலைத்த நன்மை காணுவோம்
தாண்டு மெந்தத் தடைக ளுக்கும்
மயக்க மின்றி முன்னிற்போம்
வேண்டும் வேண்டு மெனமு ழங்கி
விடுத லையை நாடுவோம் 3

காந்தி சொன்ன நன்னெறியைக்
கடைப்பிடித்து ஒழுகுவோம்
எந்தியத்தைப் பாக்கி கண்டு
இளைத்துப் பின்னர் சென்றிடோம்
வீந்தி டப்ப லத்தி னாலே
வெட்டி னும்மெ திர்த்திடோம்
சாந்தி சாந்தி யென்று சொல்லி
சத்தியப்போர் நிகழ்த்துவோம். 4

சாதி பேத மொன்று மின்றிச்
சண்டை செய்ய சேருவோம்
நீதியற்ற ஆட்சி முறையை
நிலைபெ றாமல் ஓட்டுவோம்
ஓதி கண்ட உண்மை வழியில்
உரிமை கொள்ள விரைகுவோம்
சோதி கொண்டு திகழு மந்த
சுதந்தரத்தைப் பெறுகுவோம் (5)

தி. சி. குழந்தை வேலன்.

சர்தார் பட்டேல் சரித்திரம்.

வெளியாய் விட்டது. 82 பக்கங்கள்
1 அணா. தபால் செலவு அரை அணா.

"காந்தி" ஆபீஸ்.

11 ஆண்டர்சன் தெரு, சென்னை

Koviloor Digital Library



## லண்டனில் லங்கோடு முனிவர்

சென்ற ஞாயிறன்று இரவு லண்டன் டோர்செஸ்டர் ஹோட்டலில் சர். சாப்ரூ மகாத்மாவிற்கு விருந்தளித்தார். வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதிகள் பலரும், லார்ட் சாங்கியும், முதன் மந்திரியும் அதற்கு வந்திருந்தார்கள். முதல் மந்திரி மகாத்மாவுடன் அரை மணி நேரம் பேசியிருந்து விட்டுப்போனார். லார்ட் சாங்கி, மகாத்மா, மாளவியா மூவரும் சுமார் 2 மணி நேரம் வரை அந்தரங்கமாய் பேசிக் கொண்டிருந்தார்கள் என்ன பேசினார்களோ தெரியாது. ஆனால் லார்ட் சாங்கி வெளியே போகும்போது ஆழ்ந்த யோசனை நிறைந்த முகத்தோடு போனாராம். ஸ்ரீ. வித்தல்பாய் பட்டேல் ஆஸ்திரியாவிலிருந்து லண்டன் வந்து விட்டார். அவர் வந்தது மிதவாதிகளுக்கு நடுக்கத்தைக் கொடுக்கிறது. முதல் நாள் மகாநாட்டில் மகாத்மா பேசவில்லை. மறுநாள் செவ்வாய்க்கிழமை தான் பேசினார். அவர் பேச்சைக் கேட்டு லார்ட் ரீடிங்கும் இந்திய மந்திரி சர். சாமுவேல் ஹோரும் குழம்பிப்போய் கிடக்கின்றனர். அவியல் மாதிரி வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் மந்திரி சபை அமைத்திருப்பதால், சர்க்கார் அபிப்பிராயம் ஒன்றும், தனிப்பட்ட அபிப்பிராயம் ஒன்றுமாய் அவர்கள் வைத்துக்கொண்டு திண்டாடுகிறார்கள். இந்திய மந்திரியுடன் மகாத்மா செவ்வாயன்று பேசினார். சர்ச்சில் மகாத்மாவுடன் பேசுவதற்கு நேரம் குறிப்பிட தமது குமாரரை அனுப்பியிருந்தார்.

மகாத்மா பேச்சைக்கேட்ட பின்பு சர். மகமது ஷபிக்கு குஷி அதிகமாயிருக்கிறது. "இனி இந்து முஸ்லிம் ஒப்பந்தம் ஏற்படுவது வெகு சுலபம்" என்று கூறுகிறார். சில மஞ்சள் பத்திரிகைகள் குதித்துக் கூத்தாடுகின்றன. டெயிலி மெயிலு, மார்னிங் போஸ்ட் கோஷ்டி வாய் மூடி மூலையில் குந்தியிருக்கின்றனவாம். மற்றப் பத்திரிகைகள் மகாத்மாவை பற்றி செய்திகளை ஏராளமாய் பிரசுரிக்கின்றன. முதல் நாள் ஐக்கிய ஆட்சி நிர்மாணக் கமிட்டி கூட்டத்தின் படத்தை எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரித்திருக்கின்றன. அப்படத்தில் லார்ட் சாங்கிக்கு இடது பக்கத்தில் மகாத்மா கம்பளியால் மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். மகாத்மாவைப்பற்றிய "கார்ட்டூன்கள்" (வேடிக்கைப் படங்கள்) ஏராளமாய் பிரசுரமாகின்றன. அவற்றில் மகாத்மாவின் லங்கோடு, மூக்குக் கண்ணாடி, காந்தி குல்லா இவை பிரபலமாய் காட்டப் பட்டிருக்கின்றன. லண்டன் நாடகக் கொட்டகைகளிலும் காந்தி பெயர் பாடல்களில் புகுந்து விட்டது. ஆனால் ஆட்சேபமான பாட்டுகள் வரக் கூடாது என்பதற்காக பிக்காடில்லி தியேட்டர் நாடகக் கொட்டகையில் காந்தியைப்பற்றி பாடவிருந்த பாட்டை அதிகாரிகள் நிறுத்தி விட்டனர். செவ்வாய்க்கிழமை மாலை காந்திஜி ஜாகைக்கு வெளியே ஏராளமாய் குழந்தைகள் கூடிக் கொண்டு வாழ்த்துக் கூறின. மகாத்மா புன்சிரிப்போடு அவற்றை ஆசீர்வதித்தனர். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்து மேயர் லண்டன் வந்திருக்கிறார். அவர் செவ்வாய்க் கிழமை இரவு மகாத்மாவை பார்க்க விரும்பி ஏற்பாடு செய்திருந்தார். இது எப்படியோ ஜனங்களுக்கு தெரிந்துவிட்டது. கூட்டம் ஏராளமாய் கூட ஆரம்பித்தது. வரவர கூட்டம் அதிகமாகி தெருவில் எள் விழ இடமில்லை. மேலும் மேலும் காந்திஜி ஜாகையை நோக்கி கூட்டம் போக ஆரம்பித்தபடியால் போலீசார் அந்த தெருவை இரு பக்கங்களிலும் அடைக்க நேரிட்டது. ஆகவே மேயரால் வர முடியவில்லை. வர முடியாமல் போனதற்காக வருந்தி டெலிபோன் மூலம் மேயர் செய்தி அனுப்பினர்.

## துப்பாக்கி சாமிக்கு அபராதம்.

திருவல்லிக்கேணி கள்ளுக்கடையில் துப்பாக்கிசாமி ஷண்முகசுந்தரம் என்ற குத்தகைப் பேர்வழி, தொண்டர்களை துப்பாக்கியால் சுட்டு விடுவதாக பயமுறுத்தியதை நண்பர்கள் அறிவார்கள். அந்த துப்பாக்கிசாமி மீது போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். அது முடிந்து விட்டது. ஷண்முக சுந்தரத்திற்கு 50 ரூபாய் அபராதமும் தவறினால் ஒரு வாரம் ஜெயிலும் மாஜிஸ்திரேட் விதித்தார். நமது வீரர் உடனே மறு பேச்சில்லாமல் அபராதத்தை செலுத்தி விட்டார். இனி இம்மாதிரி மிரட்டல்கள் செய்யமாட்டேன் என்று அவர் கூறியதை மாஜிஸ்திரேட் ஒப்புக்கொள்ளாமல் 6 மாத காலத்திற்கு ரூ 500 ஜாமீனும் வாங்கிக்கொண்டார். அவர் துப்பாக்கியையும் பறிமுதல் செய்து விட்டார். கலால் குத்தகைக்காரர் இனி ஜாக்கிரதையாய் நடந்து பிழைப்பார்களாக.

Koviloor Digital Library



# மகாத்மா ஜெயந்தி.

அக்டோபர் 2௳ மகாத்மா ஜெயந்தி வருகிறது. அன்று 63 வது பிறந்த நாள். சென்ற வருஷம் பிறந்த நாளன்று மகாத்மா ஜெயிலில் இருந்தார். இவ்வருஷம் 6 ஆயிரம் மைலுக்கு அப்புறம் லண்டனில் இருக்கிறார். தேசமெங்கும் மகாத்மா பிறந்த தினம் மிகவும் விசேடமாய் கொண்டாடப்படும். இச்சமயம் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறோம். நவம்பர் மாதம் தீவாளி வருகிறது. தீவாளிக்காக ஏராளமாக சீமைத்துணிகளை சென்னையிலிருந்து தென்ஜில்லா வர்த்தகர்கள் வாங்கிப்போகிறார்களாம். ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் இதைப் பற்றி எழுதியதை மற்றொரு பத்தியில் வெளியிட்டிருக்கிறோம். தமிழ் நாட்டார் தேசாபிமான மற்றவர்கள் என்று இந்த வர்த்தகர்கள் நினைக்கிறது போல தெரிகிறது. இந்தச்சமயம் அவர்களுக்கு புத்திபுகட்ட வேண்டியது தமிழர் முக்கிய கடமையாகும். தமிழ் நாட்டார் இளித்தவாயர்கள் அல்ல என்பதை அந்த பேராசை பிடித்த வர்த்தகர்கள் அறியும்படி செய்யவேணடும். அவர்கள் சென்னையிலிருந்து சீமைத்துணிகளை சுமந்துகொண்டு போனது தான் இளித்தவாய்த்தனம் என்பதை இந்த தீவாளியில் அவர்களுக்கு உணர்த்தவேண்டும். இதற்கு ஒரே வழிதான். எவ்வளவு குறைவாய் கொடுத்தாலும், எவ்வளவு பகட்டாய் இருந்தாலும், சீமைத்துணிகளை கையினால்கூட தீண்டுவதில்லை என்ற விரதம் எடுக்கவேண்டும். மேலும் மகாத்மா சீமையில் இருக்கும் இச்சமயம் நமது கடமை அதிகமாகிறது. நமக்கு மகாத்மா மீது உண்மையான அன்பு இருக்குமானால் அதைக்காட்ட இப்பொழுது சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. மகாத்மா பிறந்த தின விழாவை கொண்டாட அக்டோபர் 2௳ முதல் 8௳ வரை மகாத்மா வாரமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அந்த வாரத்தில் ஏராளமாய் கத்தர் விற்க தொண்டர்கள் முன் வரவேண்டும். சுமார் 15 லட்சம் ரூபாய் பெறுமான கத்தர் சரக்குகள் ஆமதாபாத் கத்தர் சங்கத்தில் தங்கிக் கிடக்கின்றன. அவற்றை விற்றால்தான் மேலே கத்தர் வேலைக்கு பணம் சௌகரியமாயிருக்கும். ஆகவே தீவாளிக்கு புதுத்துணி வாங்குகிறவர்கள் காந்தி வாரத்தில் வாங்க வேண்டுகிறோம். அதனால் இருக்கிற கத்தர் செலவாகும். சீமைத்துணி தொலையும். காந்தி ஜெயந்தியை கொண்டாடுவதற்கு இதைவிட சிறப்பான வழி கிடையாது. ஒவ்வொரு காந்தி சீடரும் அந்த வாரத்தில் 100 ரூபாய் பெறுமான கத்தர் விற்பதென்று விரதம் எடுத்துக் கொண்டால், சீமைத்துணியை தொலைப்பது பெரிய காரியமல்ல.

## சனியன் பிடித்தது.

ஆரம்பத்தில் சனியன் பிடித்தால் அந்தம் வரை விடாது. அச்சச்சட்ட மசோதாவிற்கு இந்த கெட்டகாலம் பிடித்திருக்கிறது. அச்சுச்சட்ட மசோதாவைப்பற்றி மகாத்மா பின்வருமாறு அபிப்பிராயம் கூறியிருக்கிறார்:—

"இது மிகவும் பிற்போக்கானது. இந்திய ஜனங்களுக்கு ஆளும் அதிகாரத்தை வட்டமேஜை மகாநாடு கொடுக்கப்போகிறது என்று நம்புகிறவர்களுக்கு இந்த மசோதா மிகுந்த மனக்குழப்பத்தை கொடுக்கும். சர்க்கார் மறுபடியும் யோசனைசெய்து இதை வாபஸ் வாங்கிக் கொள்ளுவார்களென்று நம்புகிறேன். அது எப்படியாயினும் சட்டசபை அங்கத்தினர் இதை எதிர்ப்பார்களென்று எதிர்பார்க்கிறேன்."

மகாத்மா நினைக்கிறபடி இந்த சர்க்கார் வாபஸ்வாங்கிக் கொள்ளுவார்களென்று தெரியவில்லை. அல்லது சட்டசபை அங்கத்தினர்கள் எதிர்க்கவும் போவதில்லை ஏனெனில் தற்சமயம் மெஜாரிட்டி பேர் தலையாட்டி தம்பிரான்களாய் இருக்கிறார்கள். எப்படியாயினுஞ் சரி, மகாத்மா ஆரம்பத்திலேயே சாபம் கொடுத்துவிட்டார். ஆகவே அச்சுச்சட்டத்திற்கு நீடித்த ஆயுள் இருக்குமென்று நாம் நம்பவில்லை. மகாத்மா சாபத்தைப்பெற்ற ரௌலட் சட்டம் எந்த குப்பை தொட்டிக்குப் போயிற்றோ, அதே தொட்டிக்குத்தான் இந்த அச்சுச்சட்டமும் போகப்போகிறது. இதில் சந்தேகமில்லை.

சுதேசி புடவைகள்

கலருக்கு உத்திரவாதம். அழகான கரையும் முகதலையும், எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

6 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 2-15-0
8 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 3-15-0
9 கெஜம் 2½ அகலம் புடவை 1க்கு ரூ. 4-4-0

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட்

காந்தி தொப்பி 1 க்கு அணு 6.

☞ ½ அணு ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக் அனுப்பப்படும்.


காந்தி ஸ்டோர்ஸ்,
மவுண்டு ரோட், மதராஸ்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)





வருட சந்தா ரு. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 || சென்னை, 1931 செப்டம்பர் 21உ, பிரஜோற்பதி புரட்டாசிமீ 5உ திங்கட்கிழமை || இதழ் 29

# லண்டன் மகாநாட்டில் திகைப்பு.



லண்டன் மகாநாட்டில் மகாத்மா காந்தி பேசியதைக் கேட்டவுடன் இந்திய அங்கத்தினரும், பிரிட்டிஷ் ராஜீய வாதிகளும் திகைத்துப் போய்விட்டனர். இந்திய வகுப்பு வாதிகளும், பிரிட்டிஷ் பிற்போக்காளர்களான சர்ச்சில் கோஷ்டியாரும் வாய்திறக்க முடியாதபடி மகாத்மா ஆணித்தரமாக பேசினர். மகாத்மாவுக்கு பதில் கூற அவர்களுக்கு வழியில்லை. வாயை மூடிக் கொண்டு விழிக்கின்றனர். பாவம்!

# காலட்சேப கூட்டமா, காரியக் கூட்டமா?

சென்ற 17உ யன்று ஐக்கிய ஆட்சி அமைப்புக் கமிட்டி கூட்டத்தில் மறுபடியும் மகாத்மா பேசினார். சர்க்கார் தாங்கள் கொடுக்கப்போவது இன்னதென்று சொல்லவில்லை. அதை தெரியாத வரையில் விவாதம் செய்து கொண்டிருப்பது வெறும் பேச்சு என்று அவர் கண்டிக்கிறார். உடனே சர்க்கார் நோக்கத்தை தெரிவிக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தியதால், மகாநாட்டில் புதியதோர் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர் பேசியதாவது:—

கமிட்டி வெறும் விவாத சபைபோல் விவாதம் நடத்த முற்பட்டதுபற்றி நான் மிக வருந்துகிறேன். இக்கூட்ட நடவடிக்கைகளில் தலைமை வகிப்பதில் லார்டு சாங்கிக்கு மிருந்த பொறுமை யிருக்க வேண்டும்! கமிட்டி திட்டமாகச் செய்ய வேண்டிய கிரியாம்சத்தைக் கவனிக்க வேண்டுவது அவசியமாகிறது. கமிட்டியில் இவ் விவாதங்களை நடத்துபவர்கள் கவர்ன்மெண்டினால் நியமிக்கப்பட்டவர்களாகவே யிருக்கிறார்களேயன்றி, தேசத்தின் பிரதிநிதிகளா யிருக்கவில்லையே யென்று நினைத்து நானே சங்கடப்படுகிறேன். அத்துடன் இன்னும் பல முக்கிய கலவுரிமைகளுக்கு இதில் பிரதிநிதித்துவ மேற்படாம லிருக்கிறது. இந்த இரண்டரைநாள் நடவடிக்கைகளை பார்த்தால் இதெல்லாம் வெறும விவாதத்திற்கும் கேவலமாக விருந்து முடிவில் ஒரு வழியும் காட்டக் கூடாததாக விருக்கிறதென்பது தெரியவருகிறது.

மன்னர் பிரானுக்கு ஆலோசனை கூறுபவர்களான மந்திரிகளைப் பற்றி நான் ஒரு சிறு குறைகூற விரும்புகிறேன். தூரதேசத்திலிருந்து பலநாள் தங்கள் முக்கியக் கடமையிலிருந்து விடுத்து இவ்விடத்திற்கு இம்மந்திரிகள் தருவித்திருக்கின்றனர். அவர்களுக்கு என்ன நடக்கப் போகிறதென்பதைப்பற்றி ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

கவர்ன்மெண்டின் மனோபாவமென்ன வென்பதை இக்கமிட்டிக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கமிட்டித் தலைவர் மூலம் நான் வேண்டிக் கொள்ளுகிறேன் கமிட்டி தனது அபிப்பிராயத்தை ஒரு வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடிய வழியில் கவர்ன்மெண்டார் திட்டமான யோசனைகளைத் தயாரித்து ஆஜர் செய்ய வேண்டும். அவ்விதம் திட்டமான யோசனைகள் கூறப்பட்டால்தான் சரியாகவோ தப்பாகவோ, திருப்திகரமாகவோ அதிருப்திகரமாகவோ ஒரு முடிவிற்கு வரக்கூடும்.

ஆனால் கமிட்டி இதுவரையில் செய்து வந்ததுபோல் அங்கத்தினர்கள் அழகாகப் பேசி வருவதுடன் நின்றுவிடும் பக்ஷத்தில், நாம் எக்காரியத்திற்காக இங்கு கூடியிருக்கிறோமோ அக்காரியமாக சிறிதும் இடமிராது. ஆகவே தான் கமிட்டி தனது முடிவைத் தெரிவிக்க வேண்டிய உருவான ஒரு திட்டத்தை அமைக்கத் தனிக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கமிட்டித் தலைவர் இந்த யோசனைகளைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு மந்திரிகளுக்குத் தெரிவிப்பாரென நம்புகிறேன்.

லார்ட்டு சாங்கி:—கட்டாயம் தெரிவிக்கிறேன்.

ஐக்கிய சட்ட சபையில சமஸ்தானங்களுக்குப் பிரதிநிதித்துவ மளிப்பதில் ஜன நாயகக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று டாக்டர் அம்பேட்கார் பேசியதில் எனக்கு பூர்ண அனுதாப மிருக்கிறது. ஆனால் சுதேச மன்னர்கள் தேச பக்தியுடன் தங்கள் சர்வாதிகாரத்தில் சிறிது விட்டுக் கொடுக்கத் தாங்களாக முன்வந்திருக்கும் சந்தர்ப்பங்களை யோசிக்குங்கால், சுதேச மன்னர்களே இதில் ஒரு வழியைக் கண்டு பிடிக்க அவர்களுக்குச் சுதந்தரமளித்துவிடுவேன். ஜனங்களுக்குச் சரியான பிரதிநிதித்துவ மளிக்க வேண்டுமென்று மாத்திரம் அவர்களை நான் வேண்டிக் கொள்ளுவேன்.

இந்தியாவென்பது ஒன்றே அது பிளவுபடுத்தக் கூடியதல்ல. நான் சுதேச மன்னர்களைப் பாராட்டுகிறேன்.

ஓட்டுரிமை விஷயத்தில் வயதான எல்லோருக்கும ஓட்டுரிமை யளிப்பதற்கு காங்கிரசும் நானும் கட்டுப்பட்டிருக்கிறோம். படிப்பு அல்லது சொத்து யோக்கியதை வோட்டர்களுக்கு விதிக்கப்படுவதை நாங்கள் ஆக்ஷேபிக்கிறோம்.

ஆனல் காங்கிரசிற்கும் சட்டசபைக்கும் ஒப்பிடுவது கலக்கத்தை யுண்டுபண்ணலாம். ஆகவே பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள 50000 கிராமங்களும் ஒவ்வொன்றும் ஒன்றல்லது இரண்டு பிரதிநிதிகளைத் தெர்ந்தெடுத்து அவர்

(2[illegible]1ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



## கிராமபோன் தாதாபாய்

இந்திய சர்க்கார் சொல்லிக் கொடுத்தபடி சீமையில் போய்ச் சொல்லும் அநேக கிராமபோன்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். இவர்களில் சர். மானக்ஜி தாதாபாய் என்ற கிராமபோனும் ஒன்று. இந்த கிராமபோன் சங்கீதங்களை ராஜாங்க சபையில் எவ்வளவோ கேட்டிருக்கிறோம். வட்டமேஜை மகாநாட்டில் இந்த கிராமபோன் பாடிய பாட்டு மிகவும் அற்புதமானதாகும். இந்தப் பாட்டை இந்தியாவில் இதற்கு முன்பு தாதாபாய் கிராமபோன் பாடியதில்லை. இவர் வட்டமேஜை மகாநாட்டுக்கு எப்படி அங்கத்தினரானார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இந்திய வர்த்தக சபை சென்ற மகாநாட்டை பகிஷ்கரித்து விட்டது. இவ்வருஷம் காங்கிரஸ் ஒத்துழைக்க தீர்மானித்தபடியால் வர்த்தக சபையும் ஒத்துழைக்க சம்மதித்தது. ஆனால் தான் சிபார்சு செய்பவர்களையே பிரதிநிதிகளாக போட வேண்டுமென்று உறுதி கேட்டது. லார்ட் இர்வின் அந்த உறுதி மொழி கொடுத்தார். லார்ட் வில்லிங்டன் அதை காற்று வாக்கில் விட்டார். ஸ்ரீமான்கள் ஜமால் முகமது, பிர்லா, தாகூர்தாஸ் இம் மூவரையும் வர்த்தக சங்கம் தேர்ந்தெடுத்தது. சர்க்கார் தாகூர்தாசை மட்டும் நியமித்து மற்றவர்களை விட்டு விடவே, வர்த்தக சங்கம் மகாநாட்டை பகிஷ்கரித்தது. சர். தாகூர் தாசும் போகவில்லை. இந்த வர்த்தகப் பிரதிநிதிகள் இடத்தில் நியமிக்கப்பட்ட சர்க்கார் பிரதிநிதிகளில் சர். தாதாபாய் கிராமபோனும் ஒன்று. ஆகவே தாதாபாய் கிராமபோன் சீமைக்குச் சென்றதும் சர்க்கார் ஸ்துதிபாட உற்சாகம் கிளம்பி விட்டதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? இந்தியா மீது சுமத்தப்பட்ட கடன்களையெல்லாம் கொடுத்துவிட வேண்டுமாம். பிரிட்டிஷ் பாதுகாப்பு இந்தியாவிற்கு என்றென்றும் இருக்க வேண்டுமாம். இதுவே தாதாபாய் கிராமபோனின் லண்டன் மகாநாட்டு புத்தப் புதிய சங்கீதம்! அடிமை வழக்கத்தை ஒழிக்க அமெரிக்க சர்க்கார் சட்டம் செய்ய முன்னால் முயன்றார்கள். தாங்கள் அடிமைகளாகவே யிருக்க வேண்டுமென்று அச்சமயம் சில பணக்கார கிராமபோன்களான அடிமைகள் சர்க்காருக்கு விண்ணப்பித்தார்களாம். அதற்கும், தாதாபாய் கிராமபோனிற்கும் வித்தியாசமென்ன?

## "அயலார் வீட்டு நெய்யே என்பெண்டாட்டி கையே"

நமது வைசிராய் லார்ட் வில்லிங்டன் மனைவியார் லேடி வில்லிங்டன் மிகுந்த கோலாகலப் பிரியர். அழகு, ஆடம்பரம், அலங்கார முதலியவைகளில் லேடி வில்லிங்டன் மிகுந்த கிறுக்குள்ளவர். சிங்காரக் கலைகளில் அவருக்குள்ள கிறுக்கை நாம் குறைகூறவில்லை. அவர் சொந்த மாளிகையில் சொந்தப்பணத்தைக்கொண்டு இந்த அலங்காரங்களை செய்து வைத்தால் நாம் கூட அவரை வாழ்த்தத் தயாராயிருக்கிறோம். ஆனால் கஞ்சிக்கு திண்டாடும் இந்தியர் பணத்தை எடுத்து சிங்காரக் கலைகளில் தன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றப் பார்ப்பது பெரிய அக்கிரமமாகும். அம்மையார் சென்னையில் இருந்தபோது, கவர்னர் மாளிகைகளிலும், உதகமண்டலத்திலும் அலங்காரங்களுக்காக எவ்வளவோ பணம் கொட்டப்பட்டது. இப்போது டெல்லியில் அந்த சேவையை அம்மையார் செய்து வருகிறாராம். புதிதாய் கட்டிமுடிக்கப்பட்ட வைசிராய் அரண்மனையின் அமைப்புக் கூட நமது லேடி வில்லிங்டனுக்கு பிடிக்கவில்லை. முக்கால் வாசிக்கு மேல் மாறுதல் செய்து விட்டாராம். தனது அரண்மனையில் மட்டுமல்ல, சிப்பந்திகள் இருப்பிடங்களிலும் அம்மையாரின் சிங்காரகலைகள் புகுந்து பெரிய மாறுதல்கள் செய்திருக்கின்றன. எலக்டிரிக் லைட்டின் பல்பைக் கூட மாற்றிவிட்டாரென்றால், இதிலிருந்தே மற்ற மாறுதல்கள் எவ்வளவு விரிவாய் இருக்குமென்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். வைசிராய் தம்பதிகளுக்கு தனியாக ஒரு ரயில் வண்டி யிருக்கிறது. மிகுந்த செலவு செய்து சமீபத்தில் உயர்ந்த வர்ணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால லேடி வில்லிங்டனுக்கு இந்த வர்ணம் பிடிக்கவில்லையாம். அவருக்கு கத்தரிப்பூ வர்ணம்தான் பிடித்தமானது. ஆகவே ரயில்வண்டிகள் முழுவதையும் கத்தரிப்பூ வர்ணம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். இதற்கு பதினாயிரக் கணக்காக செலவழிக்கிறார்களாம். எல்லா வேலைகளையும் குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்க வேண்டுமென்று அம்மையார் உத்தரவாம். ஆகவே சீமைக்கு தந்திகள் பறக்கின்றன. துணிகள், வர்ணங்கள் முதலிய சரக்குகளெல்லாம் தந்தி மூலம் சீமையிலிருந்து வரவழைக்கப் படுகின்றன. வில்லிங்டனே, யார் வீட்டுப்பணத்தை யார் செலவழிப்பது?

Koviloor Digital Library



# மதமும் சுயமரியாதையும்

ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கும் பிரமசமாஜத்தில் பிரபல தலைவராயும், "மாடர்ன் ரெவியூ" என்ற சிறந்தமாத சஞ்சிகையின் ஆசிரியருமான பாபு ராமானந்த சாட்டர்ஜி, "மாடர்ன் ரெவியூ"வில் பின் வருமாறு எழுதுகிறார்:—

சென்னை மாகாணத்தில் தோன்றியுள்ள சுயமரியாதை இயக்கம், பிராமணரல்லாதார் இயக்கத்தினின்றும் தோன்றிய மற்றொரு ஸ்தாபனமாகும். ஜனங்களுள் எப் பிரிவினரேனும், தம் சுய மரியாதையை மறுபடி பெறவேண்டுமென விரும்புவரேல், அவர்களுடைய முயற்சிக்கு மதிப்பும், சகோதர பாவமாகவுள்ளதோர் அனுதாபமும், ஆதரவும் தரவேண்டுவது அவசியம். தென்னிந்திய சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் சொல்லும் கொள்கைகளும் அவர்கள் கொள்ளும் தீர்மானங்களும் முற்றும் சரியாக இருப்பதாகத் தோன்றவில்லை. இப்பொழுது சின்னாட்களுக்கு முன்னர் விருது நகரில் நடந்த சுயமரியாதை மகாநாட்டில் அதன் எண்ணத்தைக் காதலாமலகமாய்க் காட்டுமோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது:—

"மதத்தின் பேரால் அனுஷ்டிக்கப்படும், வழக்கங்களும், பயிற்சிகளும் சமூகச் சீர்திருத்தங்களை உயர்ந்து பக்குவமடைய வளரவொட்டாமல் தடுத்துவிட்டன. அதுபற்றி அது போன்ற மதங்கள் மறையவேண்டும். மதம் ஒழியாமலன்றி சகோதரத்துவம் என்ற உணர்ச்சி ஒரு சிறிதும் இருக்க இயலாது. மதச் சச்சரவுகள் தீரவேண்டுமானால், எல்லா இந்தியர்களும் மதத்தைப்பற்றிய உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்" என்பதே அத்தீர்மானம். பிரத்தியக்ஷமாக மதத்தைப்பற்றி அவர்கள் கொண்ட நோக்கம் வெளியாகின்றதே, அதைப்பற்றியே சில குறிப்புகள் எழுத விரும்புகிறோம். வேதங்களை ஆக்கிய ரிஷிகள் அல்லது எவர்களுக்குச் சாஸ்திரங்கள் வெளியிடப்பட்டன வென்று ஜன சம்மதமாக எண்ணப்பட்டதோ அத்தகைய ரிஷிகள், அனைவராலும் பிராம்மணர்களெனக் கருதப்பட்டிருக்கின்றனர். அவர்களனைவரும் பிறப்பில பிராமணர்களல்லர். ஆனால் அனைத்திற்கும் உயர்ந்தான சுயம்பிரகாசமான, பிரம்மனை வழிபடுபவர்கள். தீர்க்கதரிசிகள் என்னும் ஹோதாவில் பிராமணர்களாவர். பகவத்கீதையை மொழிந்தவனாவது அல்லது குருக்ஷேத்திரத்தில் அமர்க்களத்தில் கீதை யாருக்குப் போதிக்கப்பட்டதோ அவனாவது பிராமணனல்லன். உபநிடதங்களைத் தொகுத்த ரிஷிகளாவது, அவைகள் யாருக்கு வெளியாக்கப்பட்டதோ அவர்களாவது அனைவரும் பிராமணரல்லர். அவர்களில் அநேகர் க்ஷத்திரியர்கள். சில ரிஷிகள் யாரு மறியாத சந்ததியைச் சேர்ந்தவர்கள். மற்றுஞ் சிலர், இந்நாளில் இருப்பரேல் அபகீர்த்தியைப் பெறுமானதோர் பிறப்பை யுடையோர் என்று கருதப்படுவர். எனினும் அந்நாளிலிருந்த ஹிந்து மதம் சமூகச் சீர்திருத்தங்களை வளரவொட்டாமல் தடுக்கவில்லை என்பதை ஞாபகம் கொள்ளலாம். புத்தரும் பிராமணரல்லர். அவரது பிரதம சீடர்களில் பலர் பிராமணர்களில்லை. பிக்ஷுக்களிலும் பிக்ஷுணிகளிலும், அநேகர் சூத்திர குலத்தினராயும், அதைவிடத் தாழ்ந்த குலத்தினராயும் இருந்தனர். வேசிகளாயிருந்த சிலர் பிக்ஷுணிகளானது முண்டு. ஜாதி முறையையே புத்தமதம் தகர்த்தெறிந்தது. அம்மதமும் அதைப் பின்பற்றுவோரின் எல்லாருடையவும் அல்லது ஒவ்வொருவரினுடையவும் வளர்ச்சியைத் தடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மத்திய காலத்தில், எவ்வாறு நானக்கும், சீக்கிய குருக்களும், அதிலும் முக்கியமாக குரு கோவிந்தசிங்கும் தாழ்ந்தோரை உயர்த்தி அவர்களனைவரையும் 'பாய்கள்' அதாவது சகோதரர்கள் ஆக்கினரென்பது அனைவர்க்கும் தெரிந்ததே. கபீர், மற்றும் அவர்போன்ற பல சாதுக்களின் உபதேசங்கள் உயர்ந்த கோட்பாடுகளையே கொண்டிருக்கின்றன. வங்காளத்தில் சைதன்யரெனும் வைணவ தீர்க்கதரிசி, அனைவரையும் ஜாதிமத பேதமின்றி, முஸ்லிம்களையும் விட்டுவிடாமல் தனக்குச் சீடர்களாய்ச் சேர்த்துக் கொண்டார். குல சம்பிரதாயத்திற்கே அவ்வைணவ மதம் தீவிரமானதோர் அதிர்ச்சியைக் கொடுத்

---

அன்னியரை இந்நாட்டிலிருந்து அனுப்புவதே என்னுடைய சுயராஜ்யமாகும்—பண்டித ஜவார்லால்.

Koviloor Digital Library



தது. தற்கால சரித்திரத்தைக் கவனிப்போம். பிரம்ம சமாஜத்தை ஸ்தாபித்த ராம்மோஹன ராய் பரம வைதிகர். சிறந்த சமூக சீர் திருத்தக்காரராகவு மிருந்தார். பிரம்ம சமாஜத்தின் வேலைகளைச் சீர்திருத்த இயக்கமாகக் கேசப் சந்தர் சென் விருத்தியாக்கினர். பிரம்ம சமாஜத்தில், குலத்தைவிட்டு விடுவதென்பது அவரது தலைமையின் கீழ்தான் ஆரம்பித்தது. பால்ய விவாகத்தைத் தளரச் செய்ததும், பருவம் வந்தபின் விவாக மென்பதை ஆதரித்ததும், கலப்புமத, கலப்பு மாகாண, கலப்புக் கோத்திர விவாகங்களுக்குப் போதிய உயிரளித்ததும் விதவா விவாகத்தை விருத்திக்குக் கொண்டு வந்ததும் பிரம்ம சமாஜமே. மத விஷயத்தில் சம உரிமைகளை அது பெண்டிருக்கும் ஈந்துளது. ஆரிய சமாஜமும் பக்தி வைராக்யமுள்ளதோர் சீர்திருத்த இயக்கமே. தன்னுடைய சீடர் பலரைத் தன் உபதேசங்களால் உணர்வு பெறச் செய்த சுவாமி விவேகானந்தர் பிராமணரல்லர். அவரைப் பின்பற்றினவர்களிலும் சீடர்களிலும் சிலர் பிராம்மணர்கள். சிலரல்லர். அவர்களனைவரும் வைதிக ஹிந்துக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. மஹாத்மா காந்தி ஓர் ஆழ்ந்த வைதிக சிரேஷ்டர், அவர் ஓர் ஹிந்து. பிராம்மணரல்லர். ஆயினும் அவர் பிராமணர்களுக்கும் பிராம்மணரல்லார்க்கும் ஒரே தரமான மதபோதகராயிருக்கிறார். அதுவுமன்றிக் கிரியாம்சையில் காட்டுமோர் சீர்திருத்தக்காரர். தீண்டப்படாதார்க்குச் சகோதரனாகவும் ஆருயிர் நண்பனாகவுமிருப்பதில் இணையற்றவர். ரவீந்திரநாத தாகூர் சிறந்த வைதிகர்தான். நாட்டில் தாழ்ந்த வகுப்பினர் கோஷ்டியும், தாழ்ந்த வகுப்பினரைச் சீர்திருத்த வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் ஏற்பட்டிருக்கும் சங்கமும், வங்காளச் சீர்திருத்தக் கூட்டமும் மதவைராக்கிய முள்ளவர்களால் ஏற்படுத்தப்பட்டே நடைபெற்று வருகின்றன. தென் இந்தியச் சுயமரியாதையினர் ருஷியாவைக் கூர்ந்து பார்க்கின்றனர் போலும். நாஸ்திக மார்க்கம் அங்கு பரவியதைப்பற்றிய உண்மையை மிகைபடப் பலர் கொண்டிருக்கின்றனர். தீவிர நாஸ்திகர்கள் அங்கு வெகு சிலரே. அவர்களில் பலரைக் கூட நாம் மதப் பற்றற்றவரென்று கூறத் துணியோம்.

## வாழ்க காந்தி!

("பச்சைமலை பவழமலை" என்றமெட்டு)

1. ஏழைகளின் உயிர்க்குயிராய்
இலங்குகின்ற காந்தி
எக்கணமும் சத்தியத்தை
விட்டுவிடாக் காந்தி

2. இழிவுதரும் கோபத்தையே
எரித்து விட்ட காந்தி
இன்பமான சாத்விகத்தை
எடுத்துரைக்கும் காந்தி

3. பட்டினியால் வாடுமக்கள்
பந்துவான காந்தி
பாரினிலே மாந்தரது
மனங் கவர்ந்த காந்தி

4. எப்பிறப்பு எய்திடினும்
ஏகமெனவோதும்
எழிலுடைய தர்ம மதை
ஏத்துகின்ற காந்தி

5. துன்பமிகு ஆப்பிரிக்கா
கண்டமது ஏகி
தூங்குகின்ற இந்தியர் தம்
துயில்விடுத்த காந்தி

6 பாஞ்சால துன்பந்தனை
பார்த்து மனம் பதறி
பாரத நம் நாட்டினர்க்கே
புது முறையைக் காட்டி

7. ஈட்டியோடு வாளுடனே
ரத்தமதைச் சிந்தா
ஈசனுக்கு மனமுகந்த
மார்க்கம் தந்த காந்தி

8. சகலவேத சாத்திரமும்
தாங்கிநின்ற தருமம்
சகலமத தத்துவமாம்
சாந்தமிகு தருமம்

9. புதுமையான இந்த ஒரு
போர்முறையைக் கொண்டு
பூவுலகம் மெச்சும் அறப்
போர் தொடுத்தார் காந்தி

10. சாந்தகுண வடிவினராம்
காந்திமுனி வாழ்க!
சத்தியத்தி லீடுபட்ட
இந்தியரும் வாழ்க!

—கே. கணேசன்.

Koviloor Digital Library



## சபாஷ், சேலம் தாத்தா

இம்மாதம் 16ஆ சென்னை தமிழ் நாடு 'காங்கிரஸ் மாளிகை' திறப்பு விழாவில் தலைமை வகித்த சேலம் ஸ்ரீமான். விஜயராகவாச்சாரியார் பேசிய சாராம்சம்:—

"உடனே இந்தியா மற்ற குடியேற்ற நாடுகளுக்குள்ள பரிபூர்ண சுதந்தரங்களைப் பெறாவிட்டால், இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும், பிரமாண்ட பிளவேற்பட்டு, பெரிய ஆபத்து உண்டாகுமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

பிரஞ்சு நாடு, அயல்நாட்டு மந்திரி பிரயாண்ட் பகிரங்கமாக சென்ற வாரம் சொன்னதை ஞாபகம் மூட்டுகிறேன். 1917ம் வருஷ அரசியல் சீர்திருத்தத்தால் இந்தியா சுயேச்சை நாடாகி விடுமென்று பிரிட்டிஷார் கூறிய உறுதி மொழியை நம்பியே இந்தியாவை ஓர் மெம்பராக சேர்த்துக் கொண்டார்களாம். இந்தியாவுக்கு பூரண குடியேற்ற அந்தஸ்து அளிக்காவிடில் இந்தியாவுக்கு மட்டுமன்றி சர்வதேச சங்கத்திற்கே குற்றம் செய்ததாக ஏற்படும்.

அமெரிக்கர்கள் சுயேச்சை அடைந்து, நூறு வதாண்டு விழாவை கொண்டாடின தினத்தில் அதாவது 1876ம் ஆண்டு, ஒரு பெரிய சுதந்தர சிலையை, சுயேச்சையைக் குறித்து—அமெரிக்கா ஐக்கிய நாட்டிற்கு பிரஞ்சு தேசத்தார் பரிசாக கொடுத்தார்கள். சிலை கையில் தீவட்டி, சுதந்தர தீ வளர்த்து, உலகெங்கும் சுதந்தர தாகத்தை பரப்புவதைக் குறிக்கிறது.

நாமும், பிரஞ்சு நாட்டாரிடமிருந்து, அம்மாதிரி 'சுதந்தர தேவியின் சிலை" ஒன்றை பெற உரிமையுண்டு.

இந்தியாவிற்கு கடைக்காரர்களாக வந்த ஆங்கிலேயர்களை அரசாளச் செய்தது பிரஞ்சுக்காரர்களே. இப்பொழுது, பிரஞ்சு தேசம் சர்வதேச சங்கத்தில் முக்கிய அங்கம் பெற்றிருக்கிறது. இந்தியாவை குடியேற்ற நாடாக்கி சுதந்தரமாகச் செய்ய பிரஞ்சு பிரிட்டனை நிர்பந்தம் செய்ய கடமைப்பட்டிருக்கிறது. எப்படியும் இந்தியா சுயேச்சை அடையப் போவது திண்ணம்;

இதே இடத்தில் இனி நடக்க வேண்டிய அடுத்த விழா, அத்தகைய பிரமாண்டமான 'இந்திய சுதந்தர தேவி சிலை" திறப்பு விழாவாக இருக்குமென்று என் உள்ளத்தில எழுகிறது. அதற்கு தலைமை வகிக்க மகாத்மாவே இருப்பார். நாம் நமது போராட்டத்தில் வெற்றி பெறுவோமானால். நான் சொல்லியது நடப்பதில் அதிசயமில்லை.

## முழு மூடங்கள்

பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் பொது விஷய ஞானத்தைப் பற்றி ஸ்ரீ ராம்ஸே மாக்டொனால்டு கூறுவதாவது:—"பத்துப் பதினைந்து வருஷமா இந்தியாவில் உத்தியோகம் நடத்திய சிவில் உத்தியோகஸ்தர்கள் பலரை நான் இந்தியாவில் சந்தித்தேன். இந்தியத் தலைவர்களில் ஒருவரையாவது அவர்களுக்குத் தெரியாது; பொது விஷயங்களைப்பற்றி அவர்கள் பரஸ்பரம் வார்த்தை யாடியதும் கிடையாது. தற்கால ராஜீய விஷயங்களில் அவர்களுக்குள்ள ஞானமோ பூச்சியந்தான். கிளப்புப் பேச்சுகளிலும், பத்திரிகை ரிப்போர்ட்டுகளிலும் வெளியாகும் விஷயங்களைத் தவிர வேறெதையும் அவர்கள் அறியார்கள் லண்டனில் இருக்கும் நம்மவர்கள் பத்திரிகைகள் மூலம் விஷயங்களை அறியும் அளவில வது அவர்கள் அறிய முயல்வதில்லை. இந்தியர்கள் நடத்தும் பத்திரிகைகளை அவர்கள் வாசிப்பதுமில்லை."

முற்காலங்களில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர்கள், அவர்களது உத்தியோகத்துக்குத் தேவையான தேச பாஷைகளைக் கற்றிருக்க வேண்டுமென்று ஏற்பாடு இருந்ததென்று லார்டு கர்சன் பிரஸ்தாபித்ததாக ஸ்ரீ மக்டொனால்டு கூறுகிறார்.

ஆனால் தற்கால உத்தியோகஸ்தர்களோ அது அநாவசியமென்று நினைக்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் கர்வத்தையும், ஜாதி இறுமாப்பையும் பற்றி ஸ்ரீ. ஆல்டஸ் ஹக்ஸ்லி என்னும் ஓர் ஆசிரியர் எழுதியிருப்பதாவது:—"இங்கிலாந்து கிராமாந்தரங்களிலிருந்து ஒரு வாலிபன் இந்தியன் சிவில் சர்வீசில் ஒரு குமாஸ்தாவாகச் செல்கிறான். இந்தியாவுக்குச் சென்றவுடனே அவன் ஆளும் வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆண் சிங்கமாகி விடுகிறான். அவன் காலாலிட்ட பணியைத் தலையால் செய்ய எண்ணற்ற இந்திய ஊழியர்கள் அவனைச் சூழ்ந்து விடுகிறார்கள். 32 கோடி இந்தியர்களுக்கு அவன் எஜமானனாகிவிடுகிறான் இந்தியக் கூலியும், மகாராஜாவும், பறையனும் பிராமணனும், உழவனும், கலாசாலைப் பட்டதாரிகளும், சுருக்கக் கூறில் சர்வ இந்தியர்களும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என நினைக்கிறான். அவன் ஏழை மகனாயிருந்தாலும், கல்வியறிவில்லாதவனாயிருந்தாலும், முழு மூடனாயிருந்தாலும், காரியமில்லை; அவனது வெள்ளைத் தோல் அவனுக்கு எல்லாப் பெருமைகளையும் அளித்துவிடுகிறது."

Koviloor Digital Library



(226ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சட்டசபைக்கு ஓட்டர் தொகுதியினராக விருக்கலாம். இந்த மறை முகமான தேர்தல் முறையை நான் ஆதரிக்கிறேன். இதன் மூலம் தொகுதிகள் மிகவும் விஸ்தாரமாகவிருக்கும். கஷ்டத்தையும் தேர்தல் செலவையும் நிவர்த்திக்கலாம். அத்துடன் ஓட்டர்களுக்கும் சட்டசபையினருக்கும் நெருங்கிய சம்பந்த மேற்படலாம். இரண்டு சட்டசபைகள் இருப்பதான கொள்கையை நான் முற்றிலும் எதிர்க்கிறேன். ஏனெனில் இது அனாவசியமாகவும், அதிகச் செலவை யுண்டுபண்ணக் கூடியதாகவும் இருப்பதுடன் சமரஸமாக ஒத்துப்போவதற்கும் இது இடம் கொடுக்காது. இந்தியா ஒரு கண்டமென்றும், அதன் ஒவ்வொரு பாகமும் வேறுபட்டிருக்கிறதென்றும் லார்டு பீல் சொன்னதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகவே இந்தியாவுக்கென புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. விசேஷ உரிமைகள் சம்பந்தப்பட்ட வரையில் ஹிந்து முஸ்லீம் சீக்கியர் உரிமைகளைக் காங்கிரஸ் சரிக்கட்டி யிருக்கிறது. இக்கொள்கையை இனி விஸ்தரிக்க அது இஷ்டப்படவில்லை. தாழ்ந்த வகுப்பினர் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களுக்கும் பிரதிநிதிகளாக விருக்கும் பொறுப்பை டாக்டர் அம்பேட்கருடன் காங்கிரஸும் பங்கிட்டுக்கொள்ளத் தயாராகவிருக்கிறது. இதேபோல் மற்றவர் நன்மைகளுக்கும் காங்கிரஸ் பிரதிநிதித்துவம் வகிக்கத்தயாராக விருக்கிறது. நிலச்சுவான்தார்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களை ஒழித்துவிடக் காங்கிரசோ, குடிகளோ உத்தேசிக்கவில்லை. ஐரோப்பியர்கள் சம்பந்தப்பட்டவரையில் ஸ்ரீ. ஆண்டிரூசைப் போல காலின் ஜோன்ஸ் பொது ஜனங்களுடன் தம்மை ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் அழைக்கிறேன். இந்தியப் பொது ஜனங்கள் அவர்களை எத்தொகுதியிலும் தெரிந்தெடுக்கக் கூடுமென்று நான் நிச்சயமாக அறிவிக்கிறேன்.

இந்தியாவில் ஐரோப்பியர்கள் இந்தியர்போலவே வசிக்கட்டும். விசேஷப் பிரதிநிதித்துவமளிப்பதற்குக் காங்கிரஸ் இணங்க முடியாது. இந்திய கிறிஸ்தவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் விசேஷப் பிரதிநிதித்துவம் கேட்கவில்லை.

எந்த சட்டசபையிலும் நியமன மென்பதற்கே இடமிருக்கக் கூடாது நிபுணர்கள் விஷயங்களைத் தெளிவுபடுத்தலாம். ஆனால் வோட்டர்கள் தான் சபையில் ஓட் செய்யும் உரிமையை அளிக்கக்கூடும் தகுந்தபடி ஐரோப்பியர், தாழ்ந்த வகுப்பினர், ஸ்திரீகள் முதலியோர் தெரிந்தெடுக்கப்படாவிடின் சபையினர் அவர்களில் சிலரைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்வதை நான் ஆதரிக்கிறேன்.

---

## வகுப்புவாதிகள் திண்டாட்டம்:

தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம். லண்டன் மகா நாட்டில் வகுப்புவாதிகளும், தான்தோன்றித் தலைவர்களும் இதற்கு முன்பு கண்டபடி பேசி வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்சேபனையை கிளப்பி விட்டனர். ஒருவருக்காவது பொது நோக்கமில்லை. பெரியபுத்தி யில்லை. பரந்த அபிமானம் இல்லை. மகாத்மா காந்தி போனவுடன் எல்லாம் அடங்கி விட்டதாய் தெரிகிறது. இங்கு வந்திருக்கிற "பிரதிநிதிகளை" யார் அனுப்பினார்கள்? இவர்கள் என்ன கேட்கிறார்கள்? வெறும் பேச்சு பேசவா எங்களை அழைத்தீர்கள்? என்று மகாத்மா மூன்று கேள்விகளைப் போட்டார். சபையில் கப் சப். சரி, சர்க்கார் என்ன கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள்? அவர்கள் கொடுக்கப் போவது என்னதென்று சொல்லாமல் எதற்காக எங்களை வீண் பேச்சு காலட்சேபம் செய்யச் சொல்லுகிறீர்கள்? என்று மகாத்மா மற்றொரு கேள்வி கேட்டார். அதற்கும் கப் சப். "போனது போகட்டும். இனியும் நான் வீண் காலட்சேபம் செய்யத்தயாரில்லை. சர்க்கார் உத்தேசம் என்ன என்பதை சபையில் தெரிவித்து விடவேண்டும். இதை சபைத் தலைவர் மந்திரிகளுக்கு அறிவிப்பாரா?" என்று மகாத்மா கேட்டார். லார்ட் சாங்கி உடனே எழுந்து "ஆட்சேபனையின்றி இப்பொழுதே தெரிவிக்கிறேன்" என்றார். ஆகவே சர்க்காரை மகாத்மா காந்தி ஒரு மூலையில் கொண்டுபோய் மடக்கிவிட்டார். சர்க்கார் கொள்கை இன்னதென்று சொல்லியாக வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணி விட்டார். பதில் சொல்லாமல் சர்க்கார் தப்பிக்க முடியாது. வீண் விவாதம் செய்து சண்டை போட்டுக் கொண்டிருக்கும்படி சர்க்கார் இனி செய்ய முடியாது. அகப்பட்டுக் கொண்டார்கள். மகாத்மா பிரசங்கத்தைக்கேட்ட பின்பு வகுப்புவாதிகள் கூட தலை நீட்ட முடியாமல் அடங்கி விட்டார்கள். அவர்கள் கூட்டம் கூடி மகாநாட்டில் முட்டுக்கட்டை போடாமல் ஒதுங்கியிருப்பதென்று தீர்மானித்திருக்கிறார்களாம். லண்டன் மகாநாட்டை மகாத்மா மயக்கிவிட்டார். அந்த மகாநாடு உருப்படுமோ அல்லது தொலைந்து போகுமா என்பது ஒரு வாரத்தில் தெரிந்து போய்விடும்.

Koviloor Digital Library



## பிரிட்டிஷார் திகைப்பு

அசாத்தியமானவைகளை மகாத்மா கேட்பார், பயமுறுத்தி பேசுவார், சுலபமாய் அவரை மடக்கிவிடலாம், என்று பிற்போக்கு பேர்வழிகளும், பத்திரிகைகளும் நினைத்தன. யாரும் மறுக்கமுடியாத விதத்தில், ஆச்சரியப்படும் தோரணையில் மகாத்மா தமது கோரிக்கைகளைப்பற்றி மகாநாட்டில் பேசவே அவர்கள் திகைத்துப்போய் நிற்கின்றனர். விழுங்கவும் முடியவில்லை. துப்பவும் முடியவில்லை. மகாத்மா கேட்பதை மறுக்க அவைகளுக்கு தைரியமில்லை. ஆகவே திருடனை தேள் கொட்டியதைப் போல, சர்ச்சில் கோஷ்டியார் பல்லைக்கடித்துக் கொண்டு விழிக்கின்றனர். இந்த ஆச்சரியமான நிலைமையை உண்டுபண்ணிய மகாத்மாவின் சக்தி அபாரமானதே. ஆத்ம சக்தியில் மகாத்மா எவ்வளவு பெரியவரோ, அவ்வளவு ராஜ தந்திரத்திலும் பெரியவர் என்பதை அவர் லண்டன் பிரசங்கம் உலகத்திற்கு காட்டிவிட்டது.

லங்காஷயர் பருத்தி மில்கள் இருக்குமிடத்திற்கு மகாத்மாவை அழைத்திருக்கிறார்கள். அடுத்தவாரம் போகிறார். நியூகாஸில் நகரத்து மேயர் தமது நகரத்திற்கு விஜயஞ்செய்யும்படி மகாத்மாவிற்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார். மிஷனரி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு பிரசங்கம் செய்ய கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிஷப்கள் கூட்டத்தில் மகாத்மா பேசவேண்டுமென்று மற்றொரு பக்கம் கேட்கிறார்கள். பால்ட்வின், சர்ச்சில், ஹெர்பர்ட் சாமுவேல் ஆகியவர்களுக்கு மகாத்மா பேட்டி கிடைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. பார்லிமெண்டிலுள்ள மூன்று கட்சி பிரதிநிதிகளுக்கு மகாத்மா ஒரு நாள் பிரசங்கம் செய்வார். பிரான்சுக்கு அடுத்தவாரம் விஜயஞ்செய்யும்படி அழைப்பு வந்திருக்கிறது. அமெரிக்காவிற்கு எழுந்தருள வேண்டுமென்று 25 பிரபல அமெரிக்கர் கையெழுத்திட்டு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றனர். தினசரி அவர் போகும்போதும் வரும் போதும் ஏராளமாக கூட்டம் கூடி ஆரவாரிக்கிறார்கள்:

## ஸ்ரீ சுபாஷ் பாபு ராஜிநாமா

ஸ்ரீ சென்குப்தாவிற்கும் ஸ்ரீ சுபாஷ் போசுக்கும் வங்காளத்தில் பெரிய போராட்டம் இருந்துவந்தது. இதை விசாரித்து தீர்ப்புச்செய்ய காங்கிரஸ் காரியக்கமிட்டி ஸ்ரீ. ஆனேவை நியமித்திருக்கிறது. 18௳ யன்று ஸ்ரீ. சுபாஷ்போஸ் திடீரென்று தமது மாகாண காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். ஆகவே சச்சரவு இதோடு முடிந்துவிடுமென்று எதிர்பார்க்கிறோம்.

## பார்லிமெண்டில் மகாத்மாவுக்கு மரியாதை.

பார்லிமெண்ட் கட்டிடத்தில் தொழிற்கட்சி அங்கத்தினருக்கு 16௳ யன்று மகாத்மா ஒரு பிரசங்கம் செய்தார். அந்நிய துணி பகிஷ்கார தத்துவத்தை விளக்கி கீழ் வருமாறு கூறினார்:—

100க்கு 85 பேர் விவசாயிகள். அவர்களுக்கு வருடத்தில் 6 மாதம் வேலை கிடையாது அவர்களுக்கு வேலை கொடுக்கவே கத்தர் இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் முதலாளிகள் சிலாக்கியமா, இந்திய முதலாளிகள் சிலாக்கியமா என்பதைப்பற்றி எனக்கு கவலையில்லை. ஏழைகள் கஷ்டம் தொலையவேண்டும் என்பது ஒன்றே எனது கவலை. நான் வந்திருக்கும் வேலை சமரசமாய் முடியுமென்றே நம்புகிறேன். ஆனால் கொள்கையில் இம்மியளவும் விட்டுக்கொடுக்க முடியாதென்பதை பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு எச்சரிக்கிறேன். இந்தியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் இருப்பதென்பது சுதந்திரக் கொள்கைக்கு விரோதமாகும். சுதந்திரத்திற்காக மற்றொரு போராட்டம் அவசியமானால் இந்தியா தயாராயிருக்கிறது. அதிகத்தியாகமோ, சென்ற வருஷத்தைவிட அதிகக் கஷ்டமோ படவேண்டுமானாலும் இந்தியா தயார்.

பார்லிமெண்டில் பேசிவிட்டு மகாத்மா வெளியே வரும்போது, அவர் வரும் பாதையின் இருபுறமும் உள்ளவர்கள் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். அவர் தங்கள் பக்கம் வந்தவுடன் தங்களையறியாமலே தொப்பியைக் கழற்றினர். மகாத்மா புன்முறுவலுடன் நமஸ்காரம் செய்தார். காந்திஜி பேச வருகிறார் என்பதை அறிந்தவுடன் ரகசியப் போலீசார் பலமான பந்தோபஸ்து செய்திருந்தனர். ஏராளமான இன்ஸ்பெக்டர்கள் பார்லிமெண்ட் கட்டடத்தில் காந்தியை காவல் புரிந்து நின்றனர்.

## லண்டனில் சத்தியாக்கிரகம்

லண்டன் ஹோட்டல் ஒன்றில் 5 பெண்களை வேலையிலிருந்து தள்ளிவிட்டனர். சென்ற 16௳ காலையில் ஹோட்டல் திறந்தவுடன் மற்றப்பெண் வேலைக்காரிகள் வாசலில் மறியல் போட்டனர். "இந்திய சகோதரிகள் கையாளும் மறியலில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. அதையே நாங்கள் கையாளுகிறோம். எங்கள் குறை தீரும்வரை இந்த சாந்த மறியலை விடமாட்டோம்" என்று அந்தப் பெண்கள் சொல்லுகிறார்கள். மறியலால் ஹோட்டல் வியாபாரம் குறைந்துவிட்டது.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)


# காந்தி

வருட சந்தா ரு. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 || சென்னை, 1931 செப்டம்பர் 24உ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 8உ வியாழக்கிழமை || இதழ் 30

## மதில் மேல் பூனை




மகாத்மா:—"மதில் மேல் பூனை மாதிரி நீ வேலி மீது நின்று கொண்டு காலங்கழிக்க முடியாது. ஒன்று இங்கே குதிக்க வேண்டும். அல்லது அங்கே குதிக்க வேண்டும். சீக்கிரம்."

(இங்கே குதித்தால் சர்ச்சில் கோஷ்டியார் கோபப்படலாம். ஆனால் அங்கே குதித்தால் கன்றை இழப்பது நிச்சயம். (பிரிட்டன் இந்தியாவை இழந்து உயிர்வாழ முடியுமா?)

## பவுன் பறக்கிறது!

பிரிட்டனின் "தங்கமதிப்பு" ஆகாயத்தில் பறக்கிறது. நாணய வரவு செலவை கட்டுப்பாட்டிற்குள் வைக்க தங்கத்தின் விலையை நிர்ணயிக்க வேண்டும். அதற்கே "தங்க மதிப்பு" என்று பெயர். உலோகங்களில் தங்கமே விலை உயர்ந்தது. அதை நிர்ணயத்தில் வைத்தால் தான் பவுன், வெள்ளி நாணயங்களின் விலையையும் நிர்ணயத்தில் வைக்க முடியும். வெளி நாடுகளுடன் பற்றுவரவு செய்வதற்கும் இது அவசியம். ஆனால் சமாளிக்க முடியாத பெரிய நெருக்கடி ஏற்பட்டு விட்டபடியால் பிரிட்டன் தனது தங்க மதிப்பை கைவிட நேரிட்டது. அதாவது குறித்த விலைக்கு இங்கிலாந்து பாங்கியில் தங்க விற்பனை செய்வதை விட்டுவிடும்படியாயிற்று. இதற்குக் காரணம் இங்கிலாந்தில் ஏற்பட்ட தங்கப்பஞ்சமே யாகும். வெளி நாடுகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை தங்கப்பாளங்கள் ஏற்றுமதி செய்தே தீர்க்கவேண்டியிருக்கிறது. அம்மாதிரி ஏற்றுமதி செய்து செய்து தங்கமெல்லாம் அநேகமாய் இங்கிலாந்திலிருந்து காலியாய் விட்டது. பெரும்பான்மையான தங்கம் பிரான்சிடமும், அமெரிக்காவிடமும் அகப்பட்டுக் கொண்டது. இனியும் பழைய மதிப்பையே வைத்துக் கொண்டிருந்தால் இருக்கிற தங்கமும் போய்விடும் போல தோன்றிற்று. ஆகவே குறிப்பிட்ட விலைக்கு தங்கம் விற்பதை இங்கிலாந்து 20உ ரத்துச் செய்து விட்டது. இந்திய சர்க்காரும் அதைப்பின் பற்றி ரத்துச் செய்து விட்டார்கள். இதற்காக 22உ யன்று மட்டும் இந்தியாவிலுள்ள எல்லா பாங்கிகளையும் மூடி விடும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். பண நிர்வாகத்தில் நிபுணர்கள் என்று டப்ப மடிக்க பிரிட்டிஷார் போகிறதை இந்த க்ஷணத்தில் இருக்கிறது: இனி தங்கம் விலை ஏறலாம். அதனால் மற்ற பொருள்களின் விலையும் கூடலாம். பிரிட்டிஷ் பொக்கிஷ இலாகா பல்டி மேல் பல்டி அடிக்கிறது. எங்கு போய் முடியுமோ தெரியவில்லை. "தங்கமதிப்பு" போயிற்று. பிரிட்டன் விழிக்கிறது. பழைய காலத்தைப்போல பண்டங்களுக்கு விலையாக பண்டங்களை கொடுக்கும் பண்ட மாற்றுதல் முறையும் வந்துவிட்டது. சீதேவி பிரிட்டனிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

## "இனி பொறுக்க முடியாது"

மகாத்மா இரண்டு தடவை எச்சரித்தார். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கொள்கையை வெளிப்படையாய், பச்சை வெட்டாய் சொன்னாலொழிய மகா நாடு நடப்பதால் என்ன பலன் என்று கேட்டார். சர்க்கார் விழிக்கிறார்கள்: விழித்துக் கொண்டிருக்கிறார்களேயொழிய இதுவரை ஒரு பதிலும் சொல்லவில்லை. ஆகவே மறுபடியும் எச்சரித்திருக்கிறார். லண்டன் "நியூஸ் கிரானிகிள்" பத்திரிகை அவரை பேட்டி கண்டபோது பின்வருமாறு சொன்னார்:—

"தற்கால நிலைமையைக் கண்டு நான் வருந்துகிறேன். சர்க்கார் கல்லுப் பிள்ளையாரைப் போல அசையாமல் இருக்கிறார்கள். மகாநாடோ நத்தை போல நகருகிறது. இந்த நிலைமையில் நாம் எங்கிருக்கிறோம் என்பதே சந்தேகமாயிருக்கிறது. சர்க்கார் எவ்வளவு தூரம் போகத் தயாராயிருக்கிறார்கள் என்பது தெரிய வேண்டும். இந்த வாரம் சாந்தமாய் பேசினேன். சர்க்காரின் இந்த ஸ்திரமற்ற நடவடிக்கையை எவ்வளவு தூரம்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இனி பொறுக்க முடியாது."

சுயராஜ்யம் கொடுத்தால் பிரிட்டிஷ் சரக்குகளுக்கு சலுகை காட்ட முடியுமா என்று ஒரு நிருபர் கேட்டார். "இந்தியா கேட்கிற சுயராஜ்யத்தை பார்லிமெண்ட் கொடுத்துவிட்டால், இந்தியாவின் நன்மைக்கு விரோதமில்லாத வழியில் பிரிட்டனுக்கு சலுகை காட்ட நான் தயாராயிருக்கிறேன்." என்று மகாத்மா சொன்னார்.

மகாத்மாவுடன் மிதவாத பிரதிநிதிகளும் சேர்ந்து, தங்கள் கொள்கையை வெளியிடும்படி சர்க்காரை கட்டாயப் படுத்துவார்களென்று தெரிகிறது. இங்கிலாந்தில் உள்நாட்டு நிலைமை திருப்தியாயில்லாததால் சீக்கிரம் பொதுத்தேர்தல் ஏற்படலாம். அப்படி நேர்ந்தால் மகாநாட்டு வேலைகள் அடியோடு நின்று போகலாம். லார்ட் இர்வின் வியாழக்கிழமை லண்டன் வந்து வெள்ளிக்கிழமை மகாத்மாவுடன் பேசுவார். லார்ட் இர்வின் பேசிய பின்பு மகாத்மாவுடன் பேசுவதற்கு ஸ்ரீ. பால்டுவின் மிகவும் ஆவலோடு இருக்கிறார். தமது பிறந்த நாளுக்காக ஏற்படுத்தியிருக்கிற விருந்துகளுக்கு போக மகாத்மா மறந்துவிட்டார்.

Koviloor Digital Library



# திமிர் பிடித்த ஜப்பான்

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டியாம். அதைப்போல சீனா திமிர்பிடித்த நாடுகளுக்கெல்லாம் "இளைத்த நாடு" போல தெரிகிறது. ஒரு கன்னத்தில் அடித்தால் இரண்டு கன்னங்களையும் சீனா பெயர்த்துவிடும் என்ற பயம் இருந்தால் எந்நாடும் அதன்கிட்ட நெருங்காது. உள்நாட்டுச் சண்டையால் மெலிந்து, வெள்ளையர் நசுக்கியதால் கசங்கிப் போன சீனா, ஜப்பானுக்கு விளையாட்டுப் பொம்மை மாதிரி தோன்றுகிறது. உம் என்றால் ஒரு படையெடுப்பும், அம் என்றால் ஆகாயக் கப்பல் குண்டுபோடுவதும் ஜப்பானுக்கு வழக்கமாய் விட்டது. சீனாவின் வடபாகத்தில் ஜப்பான் படையைச் சேர்ந்த ஒரு காப்டனை யாரோ கொன்று விட்டார்களாம். இதற்காக ஜப்பான் படையெடுத்துவந்து, முக்டன் என்ற சீன நகரைப்பற்றிக் கொண்டது. பல சீனர் மாண்டனர். அப் பிரதேசத்திலுள்ள சீனர்களை யெல்லாம் பயந்து நடுநடுங்கும்படி ஜப்பானிய படைகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனவாம். சீன தேசிய சர்க்கார் இதை எவ்வளவோ கண்டித்தும் ஜப்பானிய சர்க்கார் கவனிக்கவில்லை. இந்த அயோக்கியத்தனம் எதற்காக என்று கேட்கிறோம். 2 வருஷங்களுக்கு முன்னால் இதே மாதிரி ரஷியா சீனாமீது படையெடுத்துவந்தது. இப்பொழுது ஜப்பான் வந்திருக்கிறது. சீனா பலமுள்ளதாயிருந்தால் அதன்மீது படையெடுக்க இந்த தேசங்கள் துணியுமா? ஒருக்காலும் துணியா. உலகத்தில் யுத்தம் நடக்காதபடி நிறுத்தவே சர்வதேச சங்கம் இருக்கிறதாக பெருமையடிக்கிறார்கள். தகராறை தீர்த்துக்கொள்ள யுத்தத்தை தேசிய தர்மமாக கொள்ளுவதில்லை என்ற கெல்லாக் வுடன்படிக்கையில் ஜப்பானும் சீனாவும் கையெழுத்திட்டிருக்கின்றன. அந்த சர்வதேச சங்கம் எங்கே? அந்த கெல்லாக் உடன்படிக்கை தான் எங்கே? ஜப்பான் படையெடுத்துச் சென்று ஒருவாரமாகியும் இதுவரை சர்வதேச சங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாய் தெரியவில்லை. முன்னால் ரஷியா படையெடுத்துவந்த சமயம் சீனா சர்வதேச சங்கத்திடம் முறையிட்டபோது, அச் சமயமும் மூச்சுவிடாமல் சர்வதேச சங்கம் அடங்கி ஒடுங்கியிருந்தது. ஆபத்துக்குதவாத இந்த சங்கம் இருந்தென்ன, போயென்ன? அல்லது எளியவருக்கு ஒரு பேச்சு வலியவருக்கு ஒரு பேச்சா? எந்த வழியாகப் பார்த்தாலும் ஜப்பான் சீனாமீது படையெடுத்தது வெறும் திமிர் பிடித்த செய்கையென்றே சொல்லவேண்டும். சீனாவை எளிதில் அடக்கிவிடலாமென்று ராணுவத் திமிர்கொண்ட நாடுகள் நினைக்கலாம். அந்த தைரியத்தைக்கொண்டு அடிக்கடி சீனாவுக்கு தொல்லைகொடுக்க துணியலாம். ஆனால் தேசாபிமானம் சீனாவுக்கு இருக்கிறவரையில் எந்த ராணுவத்திமிரும் அதை அசைக்க முடியாது. துருக்கியை பால்கன் நாடுகள் இப்படித்தான் தொல்லைக்குட்படுத்தி வந்தன. இன்று துருக்கி எந்தநிலைமையில் இருக்கிறது? பால்கன் நாடுகள் அதை கனவில் நினைத்தால் கூட அலறுகின்றன. பிரான்சில் மன்னனை விலக்கி குடியாட்சி ஏற்படுத்தியபோது ஜெர்மனியும் மற்ற நாடுகளும் அதன்மீது படையெடுத்து வந்தன. பிரான்சில் ஒழுங்கான துருப்புகள் புரட்சிக்காரருக்கு கிடையாது. அப்படியிருந்தும் அந்த படையெடுப்புகளை பிரான்ஸ் எப்படி தடுத்தது? பிரான்சின் தேசபக்தி முன்பு எந்த ராணுவத்திமிரும் நிற்க முடியாமல் ஓடி ஒழிந்துபோயின. இதே ஜப்பான் எவ்வளவு சிறியநாடு, ரஷியா எவ்வளவு பெரிய நாடு ஜப்பான்மீது ரஷியா படையெடுத்ததை ஜப்பான் எப்படி தோற்கடித்தது? தனது தேசாபிமானத்தாலேயே பிரமாண்டமான ரஷியாவை புறங்காட்டி ஓடும்படிசெய்தது. அப்படியெல்லாம் மிருக்க, தன்னுடைய சொந்த பாடத்தைக்கூட ஜப்பான் மறந்துவிட்டு சீனாமீது படையெடுத்திருக்கிறது. இதைப்பார்த்து சர்வதேச சங்கமும் வாயில் மண்போட்டுக் கொண்டு சும்மாயிருக்கிறது. யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒருகாலம் வரும். பிரான்சிடம் இன்று இங்கிலாந்தும் ஜெர்மனியும் மண்டி போடுவதைப்போல, இதே சீனாவிடம் இதே ஜப்பான் மண்டிபோட்டு நமஸ்காரம் செய்யும் காலம் வராமல் போகாது.

---

**காந்தி திருநாள்**

**அக்டோபர் 2உ முதல் 8உ வரை.**

**கத்தர் கட்டுங்கள்**

Koviloor Digital Library



# ஒளிமறைவில்லா பேச்சு.

லார்ட் பிரன்ட் போர்ட் சொல்லுகிறார்:—

இந்தியர்களின் நன்மைக்காக நாம் இந்தியாவை ஜயிக்கவில்லை. இந்தியர்களின் நிலைமையை உயர்த்துமாறு நாம் இந்தியாவை ஜெயித்ததாகப் பாதிரிகளின் கூட்டங்களில் சொல்வதை நான் அறிவேன். அது பொய்ப் பேச்சு. இங்கிலாந்தின் சரக்குகளுக்குச் செலவிடமாகவே நாம் இந்தியாவை ஜெயித்தோம்......இந்தியர்களுக்காக இந்தியாவை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோமென்று சொல்வதற்கு நான் வஞ்சகனல்ல. பொதுவாகப் பிரிட்டிஷ் சரக்குகளுக்கும், முக்கியமாக லங்காஷயர் பருத்தித் துணிகளுக்கும் சிறந்த போக்கிடமாக நாம் அதனை வைத்துக் கொண்டிருக்கிறோம்.—

லண்டன் டெய்லி ஹெறால்டு பத்திரிகையின் அதிபராயிருந்த ஸ்ரீ ஜியார்ஜ் லான்ஸ்பெரி, 1910 டிசம்பர் 11-ல் எஸ்ஸக்ஸ் ஹாலில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதாவது:—"இந்தியாவில் சுமார் 30 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்தில நாம் 4 கோடிப்பேர் இருக்கிறோம். ஆனால் அவர்களுடைய க்ஷேமத்துக்குத் தேவை இன்னதென்று அவர்களைவிட நமக்கு நன்றாகத் தெரியுமென்று நாம் பெருமை பாராட்டுகிறோம். இதைவிட முழுமூடத்தனமான இறும்பு வேறுண்டா? நமது தோல் வெண்மையாயிருக்கும் காரணத்தினாலேயே, கறுப்புத்தோலுடைய இந்தியர்களைவிட நாம் மிகுந்த புத்திசாலிகளென்று பெருமை பாராட்டுகிறோம். இந்தியர்களைச் சந்திக்கும்போதெல்லாம் நான் வெட்கித் தலைகுனிகிறேன். இந்தியாவைப்பற்றி அவர்களுக்குத் தெரிவதைவிட நமக்கு எவ்வாறு ஜாஸ்தியாகத் தெரிய முடியும்?"

இந்தியா மந்திரியாயிருந்த ஸ்ரீ. இ. எஸ். மாண்டேகு 1917 ஜூலை மாதத்தில் பார்லிமெண்டில் பேசியதாவது:— இந்திய அரசாங்க இயந்திரம் தற்காலப் போக்குக்கு ஒவ்வாத ஒரு இரும்புக் கூடாகிவிட்டது. அதை மேலும் இந்தியாவில் வைத்துக்கொண்டிருப்பது நியாயமல்ல.'

"சுதந்தர புத்தியுடைய இந்தியர்களின் கண்டன அபிப்பிராயங்கள் வெளிவராமல் தடுக்கப்பட்டிருப்பதினாலேயே இந்திய அரசாங்கம் நிலைபெற்று வருகிறது" என்று இந்திய உதவி மந்திரியாயிருந்த சர். ஜான் மாலட் ஒரு சந்தர்ப்பத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்.

லார்டு லிட்டன் வைசிராயாயிருந்தபொழுது அவரது ஆப்த நண்பர்களில் ஒருவரான ஸ்ரீ. வில்பிரட் ஸ்காவின் ப்ளண்ட் இந்தியாவுக்கு வந்தார். அவர், இந்திய விஷயங்களை சர்க்கார் அதிகாரிகள் மூலமாகவும், நேர்முகமாகப் பார்த்தும் மிக நுட்பமாக அறிந்துகொண்டார். அவர் கன்சர்வெடிவ் கட்சியைச் சேர்ந்தவராயினும் இந்தியக் கொள்ளையை அவருக்கு சகிக்க முடியவில்லை. ஆகவே, அவர் எகிப்தைப்பற்றி எழுதிய ஒரு புஸ்தகத்தில் இந்தியாவைப்பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"இந்திய விஷயங்களைப் பார்த்து நான் ஏமாற்றமடைந்துவிட்டேன். மற்ற ஆசியா தேசங்களிற் போலவே இந்திய ஆட்சியும் மிக மோசமாகவே இருக்கிறது. துருக்கியிற் போலவே இந்தியாவிலும் வரிப்பளுவும், பொதுமுதல் அழிவும காணப்படுகின்றன. சுதேசிகள் மெலிந்து வாடி, அடிமைகளைப் போல் வாழ்கிறார்கள். நான் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவனாயினும் இந்தியர்களின் அடிமை வாழ்க்கையைப் பார்த்து எனக்கு சகிக்க முடியவில்லை. பிரிட்டிஷ் அரசாட்சியில் எனக்கிருந்த நம்பிக்கையும், மதிப்பும் அடியோடு ஒழிந்துவிட்டன. தற்காலத் தோரணைப்படி நாம் மேலும் இந்தியாவை விருத்தி செய்துகொண்டிருப்போமானால் இந்தியர்கள் வெகு சீக்கிரத்தில் நரமாமிச பட்சணிகளாய் விடுவார்கள். ஏனென்றால் இந்தியாவிலுள்ள பொருள்களெல்லாம் கொள்ளைபோன பிறகு அவர்கள் ஒருவரை யொருவர் கொன்று தின்பதைவிட வேறு பிழைப்புக்கு வழி யேது?"

---

## மகாத்மா தூது.

(வெ. சி. வீரநாதக் கோவலனார்.)

பாதுகாத் தளிக்குங் கண்ணன்
பாண்டவர்க் காக அந்நாள்
றூதுபோய் ஆட்சி கேட்ட
தூயநற் செயலை நேர
சாதுவாங் காந்தி லண்டன்
சார்ந்துளா ரிந்தியர்க்காய்
தீதுலா ராத வண்ணம்
தேவி ! நின் அருள் செய்வாயே.

Koviloor Digital Library



## பணப்பஞ்சம் ஏற்பட்ட ரகசியம்

(ஸ்ரீ. கேசின் பட்டர்)

இந்தியாவில் பணக்கஷ்டம் கொஞ்சமல்ல. பணத்தைப் பார்ப்பதென்றால் மூன்றாம்பிறை சந்திரனைப் பார்ப்பது போல இருக்கிறது. இதற்கு காரணமென்ன? இந்தியாவில் எவ்வளவு பணம் பழக்கத்தில் இருந்தது, இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்பதை கவனித்தால் இந்தரகசியம் விளங்கும். 1919ம் வருஷம் மார்ச்சு மாதம் 31வ யன்று இந்தியாவில் நோட்டுகள் 153 கோடி ரூபாய்க்கு பழக்கத்தில் இருந்தன. அந்த நோட்டுகளுக்காக பாதுகாப்பு நிதியாக சுமார் 37 கோடி ரூபாய்க்கு வெள்ளி நாணயமும், தங்கமும் வைத்திருந்தார்கள். 1931ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15வ பார்த்தால், 156 கோடி ரூபாய்க்கு நோட்டுகள் பழக்கத்தில் இருக்க, பாதுகாப்பு நிதியோ 133 கோடி ரூபாய்க்கு உயர்ந்து விட்டது. அதாவது 3 கோடி ரூபாய் நோட்டுகளுக்கு 96 கோடி ரூபாய் பாதுகாப்பு நிதியில் அதிகமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 96 கோடி ரூபாயும் ஜனங்கள் பழக்கத்தில் இல்லாமல் கட்டிக் கிடக்கின்றன. இதைத் தவிர சுமார் 32 கோடி ரூபாய் நாணயங்களை உருக்கிவிட்டார்கள். ஆகமேவ மொத்தம் 128 கோடி ரூபாய் நாணயங்கள் பழக்கத்திலிருந்து போய் விட்டன. இவ்வளவு பெரிய தொகை போய்விட்டால் பணக்கஷ்டம் இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? ஜனங்களுக்கு வெள்ளி நாணயத்தைவிட காகித நோட்டுகளில் அதிகப் பிரியம் இருப்பதாய் சொல்ல முடியாது. 3 கோடி ரூபாய்க்கு அதிக நோட்டுகள் போடுவானேன்? 128 கோடி வெள்ளி ரூபாய்களை குறைப்பானேன்? நோட்டை குறைத்து பணத்தை அதிகமாக பழக்கத்தில் விட்டால் ஜனங்களுக்கு அதிக நன்மை ஏற்படும். இந்த சர்க்காருக்கு கடுகளவாவது ஜனங்களின்மீது அபிமானம் இருக்குமானால் அப்படித்தான் செய்யவேண்டும். சர்க்கார் செய்வதைப் பார்த்தால், ஜனங்களிடமிருந்து எவ்வளவு அதிகமாய் வெள்ளியை உறிஞ்சவேண்டுமோ அவ்வளவு பிடுங்கிட வேண்டும் என்று நினைப்பதாய் தெரிகிறது. இந்த அக்கிரமத்தை தடுக்க வேண்டுமானால், பண நிர்வாகம் நமது கைக்கு வரவேண்டும்.

## சென்றவிடமெல்லாம் சிறப்பு.

மகாத்மா காந்தி லண்டனில் கிங்ஸ்லி ஹாலில் இருக்கிறார். அங்கிருந்து மகாநாடு நடக்கும் இடமாகிய ஜேம்ஸ் மாளிகைக்கு அதிக தூரம் இருப்பதால் மோட்டாரில் வர ஒரு மணி நேரமாகிறது. இதற்கிடையில் வண்டிப் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தும இடங்களில் வீணாக காத்து நிற்க நேரிடுகிறது. மகாத்மா காந்தி சீக்கிரமாக வரவும் போகவும் செய்வதற்கு லண்டன் போலீசார் ஒரு ஏற்பாடு பண்ணியிருக்கின்றனர். நகரங்களில் போகும் வண்டிகள் இடப்பக்கமாய் மட்டுமே போகலாம் என்பதை நண்பர்கள் அறிவார்கள். காந்தி மோட்டாருக்கு முன் ஒரு போலீஸ் மோட்டார் போகும். அந்த மோட்டார் மணி அடித்துக்கொண்டே செல்லும். அந்த மோட்டாரைக் கண்டவுடன் மற்றமோட்டார்கள் வழிவிலகி விடவேண்டும். அவசியமானால் வலது கைப்பக்கம வேண்டுமானாலும் காந்தி மோட்டார் போவதற்கு உரிமையுண்டு மகாத்மா எங்கு புறப்பட்டாலும் அவர் மோட்டார் முன்பு புறப்பட ஒரு போலீஸ் மோட்டார் தயாராயிருக்கிறது. மகாத்மா ஜாகை அதிக தூரத்தில் இருப்பதால், வட்டமேஜை மகாநாட்டு அங்கத்தினரும் மற்றவர்களும் அவருடன் அடிக்கடி கலந்துபேச அசௌகரியமாயிருக்கிறது. இதற்காக மகாநாடுகூடும் ஜேம்ஸ் மாளிகையிலேயே மகாத்மாவிற்கு ஒரு அறை கொடுத்திருக்கிறார்கள். மாலையில் வெகுநேரம் வரை மகாத்மா அங்கேயே தங்கி நண்பர்களுடன் பேசி வருகிறார். இந்த அசௌகரியத்தை நீக்குவதற்காக, ஜேம்ஸ் மாளிகைக்குப் பக்கத்தில் தமது ஜாகையை மகாத்மா ஏற்படுத்திக் கொள்ளப்போகிறார். சீக்கிரமாக கிங்ஸ்லி ஹாலிலிருந்து தமது ஜாகையை மாற்றிவிடுவார். கிங்ஸ்லி ஹாலில் 18உ யன்று அப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு ஒரு விருந்து நடந்தது. மகாத்மா அதில் பிரசன்னமாயிருந்தார். 20வ யன்று டோர்செஸ்டர் ஹோட்டலில் ஜெயக்கார் சாப்ரு இருவரும் மகாத்மாவிற்கும், மாளவியாவிற்கும விருந்தளித்தார்கள். பிரபல பத்திராசிரியர்கள் அங்கு வந்திருந்தனர். பல வட்டமேஜை மகாநாடு அங்கத்தினரும் விஜயமாயிருந்தனர். மௌலானா ஷவுகத் அலி அங்கு வந்தவுடன் மகாத்மாவை ஆலிங்கனஞ் செய்து கொண்டார். மகாத்மா மிகவும் தமாஷாக எல்லாருடனும் பேசிக்கொண்டிருந்தார்

Koviloor Digital Library


## முன்ளு மூனையில் மூன்று குளம்.

முன்ளு மூனையிலே மூன்று குளம் வெட்டினேன்; 2 குளம் பாழ்; ஒரு குளம் தண்ணீரே யில்லை; என்று கோமாளி நாடகத்தில் பாடுவான். இந்தியாவிலுள்ள ராணுவத்தை இந்திய மயமாக்க யோசனைசொல்ல ஒரு கமிட்டி நியமிக்கும்படி வட்டமேஜை மகாநாடு கேட்டுக் கொண்டது. அதைப் பின்பற்றி இந்திய சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அதற்கு தலைவர் ஆரம்பாவம்பிடித்த சர். பிலிப் செட்வோட் என்பவர். இவர்தான் இந்தியாவின் சேனாதிபதி. சேனாதிபதி பதவியில் நியமனம்பெற்று சீமையில் இருக்கும்போது, இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாதென்று பேசலாமா என்று ஒருவர் கேட்டார். "சிவில் நிர்வாகத்தில ராணுவ அதிகாரிக்கு என்னவேலை? சேனாதிபதி வைசிராய்க்கு உட்பட்டவரே" என்று இந்திய மந்திரி ஒரு சவுக்கடி கொடுத்தார். அந்த ஆசாமிதான் நமது சேனாதிபதி. அவர்தான் மேலே சொல்லிய ராணுவக் கமிட்டிக்கும் தலைவர். முதல் கோணல். கமிட்டி ஆரம்பமாகும் அன்றே [illegible]களை இந்திய மயமாக்குவது என்றகாரியம் சமீபத்தில் நடக்கிறதல்ல என்றார். வட்டமேஜை மகாநாடு "சீக்கிரமாய் இந்திய மயமாக்க யோசனை "சொல்லும்படி கேட்டிருக்க, இவர் தகப்பன் சாமி மாதிரி இப்படிப் பேசினார். அவர் கமிட்டி என்னதான் தீர்மானம் செய்துவிட முடியும்? முன்ளு மூனையிலே மூன்று குளம் வெட்டிய கதை போலவே முடிந்தது. ராணுவத்தில் வைசிராய் கமிஷன், ராஜா கமிஷன் என்ற இரண்டு தினுசு உத்தியோகங்கள் இருக்கின்றன. இந்த இரண்டையும் ஒன்றாக்கிவிட வேண்டுமாம். கமிட்டி விசாரணையால் இது பிரமோஷன். அதன் மீது வருஷம் 60 இந்தியரை பொறுக்கி பழக்க வேண்டுமாம். இந்த விதப்படி பழக்கினால் முற்றிலும் இந்திய மயமாக 150 வருஷங்களுக்குப் பின்னால் தான் இந்தியர் பூரணமாய் ராணுவ நிர்வாகத்திற்கு யோக்கியதை யுள்ளவர்கள் என்றால் அது அயோக்யத்தன மல்லவா? கமிட்டியில் மெஜாரிட்டிபேர் தலையாட்டி தம்பிரான்கள். மைனாரிட்டிகளான சர். அப்துர் ரஹிம், சர். சிவசாமி, டாக்டர் மூஞ்சே, ஜெனரல் ராஜவாடே முதலியவர்கள் மெஜாரிட்டி அறிக்கையின் வழிய பஞ்சாய் பறக்கவிட்டு உலகத்திற்கு காட்டி யிருக்கிறார்கள். அது ஒன்றுதான் நமக்கு திருப்தி. தங்கள் மறுப்புரைகளை சேர்த்தாலொழிய கையெழுத்திட முடியாதென்று இந்த மைனாரிட்டி அங்கத்தினர்கள் சொல்லி வெற்றி பெற்றது பாராட்டத் தக்கது

## காஷ்மீர சால்வை கப்பலேறிய கதை

"ரஜபுத்தானா" கப்பலில் நிகழ்ந்ததொரு ரசமான சம்பவத்தைப்பற்றி ஸ்ரீ. மகாதேவ தேசாய் யங் இந்தியாப் பத்திரிகையில் எழுதுவதாவது:—காந்திஜீ கப்பல் ஏறிய வுடன் அவர் கூரிய கண்கள் அவருக்கு சுற்றுப்புறங்களில் உள்ளவர்களைப் பார்க்க ஆரம்பித்தன. காந்திஜீயின் கோஷ்டியை சேர்ந்தவர்கள் பல விலையுயர்ந்த உடுப்புப் பெட்டிகளைக் கடன் வாங்கி வைத்துக் கொண்டிருந்தனர். பல நண்பர்கள் அவர்களுக்கு அபரிமிதமான உடைமைகளை ஏராளமாக கொடுத்திருந்தனர். தேசத்திலுள்ள ஏழைகளின் பிரதிநிதியான காந்தி, தம்முடன் வருகின்றவர்கள் விலையுயர்ந்த உடுப்புப் பெட்டிகளை இனாமாகவோ அல்லது கடனாகவோ வாங்கிக்கொண்டு உடன் எடுத்துச் செல்லுவது அவருக்கு மிகுந்த மனவருத்தத்தை உண்டாக்கியது. ஆண் பெண் பாலர் ஒவ்வொருவரும் அவரது பலமான கண்டனத்திற்குள்ளானார்கள். இவ்வுடைமைகள் அவர்களுடைய வறுமைப் பிரதிக்ஞைகளுக்கு முரண்பட்டதென்று அவர் கூறினார். அவர்களுக்குக் கிடைத்திருந்த வெகுமதிகள் 700 ரூபாய் பெறுமான காஷ்மீர் சால்வையும் ஒன்றிருந்தது. இச்சமயத்தில் போபால் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஷ்வாயிப் குரைஷி உள்ளே வர காந்திஜீ அவரைப்பார்த்து சிரித்துக்கொண்டே "ஷ்வாப், நவாபின் கோஷ்டியில் எவருக்கேனும் காஷ்மீர சால்வைகள் தேவையாக இருந்தால் எனக்குத் தெரிவியுங்கள். மோதிரத்திற்குள் நுழையும்படி அவ்வளவு மெல்லியதாக இருக்கும் சால்வை ஒன்று இருக்கிறது. நவாப் இந்த விலையுயர்ந்த சால்வையை வாங்கிக் கொண்டு ஏழைகளுக்கு உதவுவதற்காக அதன் விலையாக 7000 ரூபாய் கொடுத்துவிடட்டும்." என்று கூறினார். மகாத்மாவின் பரிவாரங்கள் தாங்கள் செய்த தவறை உணர்ந்தார்கள். ஏடன் சென்றதும், தங்களிடமுள்ள விலையுயர்ந்த 7 பெட்டிகளையும் சாமான்களையும் அடுத்த கப்பலில் இந்தியாவிற்கு அனுப்பி விட்டார்கள்.

Koviloor Digital Library



## இந்திய ஜனத் தொகை.

இவ்வருஷம் எடுத்த ஜனத்தொகை கணக்கு பின்வருமாறு :—

இந்தியா முழுவதும்
352,986,876.

| | |
|---|---|
| ஆண்கள் | 181,921,914 |
| பெண்கள் | 171,064,962 |
| இந்துக்கள் | 238,330,912 |
| முஸ்லிம்கள் | 77,743,928 |
| கிறிஸ்தவர்கள் | 5,961,794 |

பிரிட்டிஷ் இந்தியா

| | |
|---|---|
| மொத்தம் | 271,273,107 |
| இந்துக்கள் | 176,934,435 |
| முஸ்லிம்கள் | 67,085,510 |
| சீக்கியர் | 3,192,169 |
| கிறிஸ்தவர் | 3,531,703 |

சென்னை மாகாணம் (பிரிட்டிஷ் இந்தியா)

| | |
|---|---|
| மொத்தம் | 46,575,670 |
| இந்துக்கள் | 40,392,900 |
| முஸ்லிம்கள் | 3,316,083 |
| கிறிஸ்தவர் | 1,770,328 |

சென்னை சுதேச சமஸ்தானங்கள்

| | |
|---|---|
| மொத்தம் | 6,754,484 |
| இந்துக்கள் | 4,323,150 |
| முஸ்லிம்கள் | 467.396 |
| கிறிஸ்தவர் | 1,958,811 |

இந்தியா முழுவதிலும்

| | |
|---|---|
| சீக்கியர் | 4,306,442 |
| பார்சிகள் | 106,973 |
| ஜெயினர் | 1,205,235 |
| பௌத்தர் (பர்மா நீங்கலாக) | 400.000 |
| யூதர் | 20,984 |

பாஞ்சாலத்தில்

| | |
|---|---|
| இந்துக்கள் | 8,599,721 |
| முஸ்லிம்கள் | 14,929,896 |
| சீக்கியர் | 4071,624 |
| கிறிஸ்தவர் | 419.353 |
| ஜெயினர் | 35,284 |
| பௌத்தர் | 5,723 |

வங்காளத்தில்

| | |
|---|---|
| இந்துக்கள் | 22,179,813 |
| முஸ்லிம்கள் | 27,842,940 |
| பௌத்தர்கள் | 330,333 |
| கிறிஸ்தவர் | 183,340 |

10 வருஷங்களுக்கு முன்னால் எடுத்த ஜனத்தொகையை விட சுமார் 5 கோடி அதிகமாயிருக்கிறது. இந்துக்கள் தொகையில் 100க்கு 10 வீதமும், முஸ்லிம்கள் தொகையில் 13 வீதமும், சீக்கியர் தொகையில் 33 வீதமும், பௌத்தர் தொகையில் 8 வீதமும், பார்சிகள் தொகையில் 5 வீதமும் ஜனத்தொகை கூடியிருக்கிறது.

## வைதீகர் அக்கிரமம்.

திருநெல்வேலி தாலுகாவைச் சேர்ந்த பாலாமடை, கெங்கைகொண்டான், பிரான்சேரி கிராமங்களில் பொது ரஸ்தாக்களில் தீண்டாதார் பிரவேசிக்கக் கூடாதென்று பிராமணர் தடுக்கிறார்களாம். யாராவது தப்பித்தவறி போய்விட்டால் அவர்களை அடிக்கிறார்களாம். அபராதம் போடுகிறார்களாம். இந்தக் கொடுமையை தொலைக்க வழியில்லையா என்று 47 தீண்டாதார் சகோதரர்கள் கையெழுத்திட்டு நமக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார்கள். இவை நடப்பது உண்மையானால், இந்த அக்கிரமங்களை நீக்க திருநெல்வேலி காங்கிரஸ் உடனே ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். இந்த கிராமங்களுக்கு காங்கிரஸ் தொண்டர்கள் சென்று தீண்டாமை ஒழித்தல் பிரசாரம் வேண்டும். தீண்டாதாருக்குள்ள உரிமைகளை நிலை நாட்ட அவசியமானால் சத்தியாக்கிரகம் கூட ஆரம்பிக்கலாம். காங்கிரஸ் தொண்டர்கள் போய் பிரசாரம் செய்ய ஆரம்பித்தால் வைதீகப் பித்தம் தானாகவே இறங்கி விடுமாகையால், உடனே அதற்கு ஏற்பாடு செய்ய திருநெல்வேலி காங்கிரஸ் தலைவர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

சுதேசி கத்தர்.

அழகிய கரைகள். கைநெசவு.

4 மு x 3 அகலம் ஜோடி 1-க்கு ரூ. 1-6.
4½ மு ஷை 1-10.
5 மு ஷை 1-12.
4, 4½ மு கதர் சால்வை 1-க்கு அணா 12, 1.

கதர் பீஸ்

3 மு அகலம். வேஷ்டிக்கும் சட்டை தைப்பதற்கும் உதவும் நைஸானது. பீஸ் 1-க்கு 12 கெஜம் நீளம் 3 அகலம் விலை ரூ. 3-12, 4, 4-12 5 வரை.

7 மு 50'' கதர் வேஷ்டி ஜோடி 1-க்கு ரூ. 2-8.
8 மு 54'' ஷை ரூ. 3-4.

காந்தி ஸ்டோர்ஸ், மவுண்ட் ரோட், மதராஸ்.

Koviloor Digital Library



## முட்டியபின் குனிதல்

முட்டிய பின்பு குனிவது இந்த சர்க்காரின் பிறவிக் குணம். இந்திய வர்த்தக சங்கம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை அனுப்புவதாக லார்ட் இர்வின் வாக்குறுதி கொடுத்தார். லார்ட் வில்லிங்டன் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. வர்த்தக சங்கம் சர்க்கார் புரட்டை கண்டித்து மகாநாட்டை பகிஷ்கரித்தது. சர். தாகூர்தாஸ் லண்டன் மகாநாட்டு அங்கத்தினர் பதவியை ராஜீநாமாச் செய்தார். இவ்வளவிற்குப் பின்னால்தான் வில்லிங்டன் சர்க்காருக்கு கொஞ்சம் புத்தியில் பட்டது. தோல் பொசுங்கிய பின்பே மலைப் பாம்பு நெளித்துக் கொடுக்குமாம். அதைப் போல சர்க்கார் புரட்டைக் கண்டு ஊர் சிரித்து, நாடு சிரித்து, நகரமும் சிரித்ததன்பேல்தான் சூடு உறைக்கிறது. முன்னால் மறுத்த இந்த சர்க்கார் இப்பொழுது வர்த்தக சங்கம் கேட்டபடி ஸ்ரீமான்கள் ஜமால் முகமது, ஜி. டி. பிர்லா, சர். தாகூர்தாஸ் மூவரையும் லண்டன் மகாநாட்டிற்கு நியமிக்க ஒப்புக் கொண்டிருக்கிறது இந்தச் செய்கையை ஆரம்பத்திலேயே செய்தால் இவ்வளவு மானக் குலைய நேரிடுமா?

## வந்தே மாதரம்

இந்தியாவின் தேசீய மந்திரமாகிய "வந்தே மாதரம்" என்ற புனித நாமத்துடன் சென்னையில் வெளிவந்திருக்கும் காலை தினசரியை நாம் மனமுவந்து வரவேற்கிறோம். "சுதேசமித்திரன்" பத்திரிகையை நடத்திவந்த ஸ்ரீ. வி. என். ரங்கசாமி ஐயங்காரே இதன் ஆசிரியர். ஆகவே ராஜீய நுண்ணறிவோடு கட்டுரைகள் அதில் மிளிரும் என்பதை சொல்ல வேண்டியதில்லை காலையில் ஒரு தினசரிப் பத்திரிகை தமிழ் நாட்டிற்கு மிகவும் அவசியம். இதை ஏற்று நடத்த வந்த நண்பர் ஐயங்காரை நாம் வாழ்த்துகிறோம். "வந்தே மாதரம்" செழித்தோங்கி ஏழைகளின் நண்பனாய் நின்று சேவை புரிய விரும்புகிறோம்.

விலாசம்:—71,- அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

## செய்தித் திரட்டு

தென்காசியில் செங்குந்த முதலியார்கள் கூட்டம் கூடி மதுபானம் உபயோகிக்கக் கூடாதென்று சமூகக் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள்; இது போற்றத் தக்கதே; வெறும் தீர்மானத்தோடு நின்றுவிடாமல் மதுபானத்தால் விளையும் கெடுதல்களைப்பற்றி பிரசாரமும் செய்வது அவசியமாகும் என்று நமது நிருபர் எழுதுகிறார்.

லண்டன் மகாநாட்டு பிரதிநிதிகள் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒருவாணத்தை கொளுத்தி ஹோட்டலுக்குள் ஒருவன் வீசினான்.

வங்காளத்தில் ஹிஜிலி என்ற ஊரில் வைக்கப்பட்டிருந்த வங்காள பாதுகாப்பு கைதிகளை காவல்காரர் சுட்டதால் இருவர் மரணமடைந்து 20 பேர் காயமடைந்தனர். மரணமடைந்தவர்களை சென்குப்தாவும் சுபாஷ் போசும் ஸ்பெஷல் வண்டியில் கல்கத்தா கொண்டு வந்தனர். பெரிய ஊர்வலம் நடந்தது. இந்த அக்கிரமத்தை விசாரிக்க கமிட்டி நியமிக்க வேண்டுமென்று சட்டசபை அங்கத்தினர் கவர்னருக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள்,

இந்தியா வெற்றியடையுமாறு விரும்புவதாக போப் குருவும், முசோலினியும் சர். ஆல்பியன் பானர்ஜியிடம் சொன்னார்கள்.

ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் கஷ்டம் பொறுக்க முடியாததாக இருப்பதால், சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று ராய்பெரிலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மாகாண கமிட்டியை வேண்டிக்கொண்டிருக்கிறது.

## விதவா விவாக சகாயசபை
### 161 பிராட்வே சென்னை.

இச்சபையின் ஆதரவில் மாம்பலத்தில் வைத்திருக்கும் விதவா விடுதியில் இருந்து, மறுமணம் செய்துகொள்ள விரும்பும் இந்து விதவா சகோதரிகளுக்கு சபையார் இலவசமாக சாப்பாடு துணி முதலியவைகளை அவர்களின் மணங்கள் நடக்கும்மட்டும் அளிக்கின்றனர். வேண்டுவோர் சபையின் காரியதரிசிக்கு எழுதிக் கொள்ளவும்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Regd. No M. 2677.

விலை காலணா
(மலாய் 1½ சதம்)


# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 செப்டம்பர் 26உ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 10உ சனிக்கிழமை | இதழ் 31

## குட்டு வெளியாயிற்று.




வகுப்பு வாதி:— அது என் குழந்தை. காங்கிரஸ்:— அல்ல, என் குழந்தை.
ஜட்ஜ் :— உங்கள் இருவருக்கும் பாதி பாதி கொடுக்கும்படி தீர்ப்பு செய்கிறேன்.
வகுப்பு வாதி :— அதுதான் சரி. எனக்கு சம்மதம்.
காங்கிரஸ்: — வேண்டாம், வேண்டாம். அவளுக்கே கொடுத்து விடுங்கள். யாரிடமாவது உயிரோடு கொடுத்தால் போதும். வெட்ட வேண்டாம். சின்ன பின்னப் படுத்தினல் குழந்தை எப்படி உயிரோடு இருக்கும்?

யார் உண்மையான தாயார்? குழந்தையின் தாயாயிருந்தால் யாராவது வெட்ட சம்மதிப்பாளா? லண்டன் மகாநாட்டில் வகுப்பு வாதிகள் பேசுவது இம்மாதிரி இருக்கிறது. அவர்கள் குட்டு வெளியாயிற்று.

Koviloor Digital Library



## ஹிஜ்லியில் நடந்ததென்ன?

வங்காளத்திலுள்ள மிதுனபுரியில் ஹிஜ்லி என்ற இடத்தில் பல வங்காளிகளை பாது காப்பு சட்டத்தின்படி விசாரணையில்லாமல் பந்தோபஸ்தில் வைத்திருக்கிறார்கள். அங்கே சென்ற 16௳ இரவு ஒரு துக்ககரமான சம்பவம் நடந்தது. போலீசார் சுட்டதால் இருவர் மாண்டனர். 20 பேர் காயமடைந்தனர். இம்மாதிரி சுடவேண்டிய அவசியமென்ன? சர்க்கார் சொல்லும் காரணம் தெளிவாயில்லை, முடிவாகவுமில்லை. ஜில்லா மாஜிஸ்திரேட் விசாரிக்கிறாராம். அவர் விசாரணை முடிந்த பின்பு தான் முழு தகவல்களும் தெரியுமாம். ஜனங்கள் சொல்லும் விவரங்களை கூறுவோம். காவல்காரர் நிற்கிற இடத்திற்கு அப்புறம் 50 கெஜம் தூரம் வரை 6 பாதுகாப்பு கைதிகள் உலாவச் சென்றனராம். காவல்காரர் இதை ஆட்சேபித்தனர். இப்படி போவது வழக்கமென்று கைதிகள் சொல்லினர். உடனே காவல்காரர் அபாய மணி அடிக்க, போலீசார் 50 பேரும், 2 டஜன் சிப்பாய்களும் துப்பாக்கிகளுடன் வந்து கட்டிடத்தை சூழ்ந்து கொண்டனர். கண்டபடி நூறு தோட்டாக்கள் வரை சுட்டனர். இதைத்தவிர கட்டிடத்திற்குள் புகுந்து அடித்தும் ஈட்டியால் குத்தியும் இம்சித்தனர். இவை உண்மையா பொய்யா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். சர்க்கார் சொல்லுவதைக் கொண்டு கவனித்தாலுமே, காவல்காரரை எதிரிகள் எதிர்த்து தாக்கியதால், அதை தடுக்க நடவடிக்கைகள் எடுத்ததாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்த அற்ப குற்றத்திற்கு உயிர்வாங்கும் செய்கையாகிய துப்பாக்கியால் சுடவேண்டிய அவசியம் எப்படி வந்தது? காவலில் இருக்கும் தேச பக்தர்கள் மீது கோர்ட்டில் எக்குற்றமும ருசுவாகவில்லை. போலீசார் சந்தேகத்தைக் கொண்டே ஆன்ருக்கி சட்டப்படி கைதியாக்கி வைத்திருக்கிறார்கள். கோர்ட்டில் குற்றம் ருசுவாகாதவரை எல்லாரும் நிரபராதிகளே. அந்த நிரபராதிகளை இப்படி நடத்துவதுதான் பிரிட்டிஷ் நீதியா? மேலும் கண்டபடி, நினைத்தவுடனே சுடும்படியான அதிகாரத்தை கேவலம் போலீசாருக்கு கொடுத்திருப்பது பொறுப்பற்ற தன்மையல்லவா? 16௳ நடந்த சம்பவத்திற்கு இதுவரை சர்க்காருக்கு பூரா தகவல் கிடைக்கவில்லை யென்று உள்நாட்டு மந்திரி இந்திய சட்டசபையில் 21௳ யன்று சொல்லியது பெரிய மானக்கேடான விஷயம். இதைப்பற்றி ஸ்ரீ. எஸ். சி. மித்திரர் இந்திய சட்டசபையில் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டுவந்தார். அது தோற்றுப் போகும்படி அங்குள்ள சில தலையாட்டி தம்பிரான்கள் நடந்து கொண்டார்கள். சிட்டகாங்கில் ஏற்பட்டிருக்கும் புகாரும், ஹிஜலியில் நடந்த சம்பவமும் வங்காள சர்க்காரின் நிர்வாக ஊழலை வெளிப்படுத்துகின்றன.

## “கார்டியன்கள்” புரட்டு.

தீண்டாதாருக்கு பிரிட்டிஷ் சர்க்கார்தான் கார்டியன்கள் என்று சொல்லுகிறார்கள்; இந்த கார்டியன்கள் யோக்கியதையைப் பற்றி ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. பாஞ்சாலத்திலுள்ள சாக் என்ற இடத்தில் சுமார் 800 தீண்டாதார் கிறிஸ்தவர்கள் குடியேறி யிருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் புகாராவது:— “எங்களுக்கு செய்யப்படும் அநீதியைப்போல சரித்திரத்திலேயே நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். தீண்டாதாருக்காக 30 ஆயிரம் ஏக்கர்கள் நிலத்தை பாஞ்சால சர்க்கார் ஒதுக்கி வைத்தார்கள். லாகூர் கத்தோலிக் பிஷப் மூலம் எங்களுக்கு அதிலிருந்து நிலம் வாங்கி குடியேறினோம். முள்ளும் கல்லும் நிறைந்த காடுகளை பாலும் தேனும் ஓடும் நாடாக வளப்படுத்தினோம். நிலத்திற்கு கிரயமாக இதுவரை சுமார் 60 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். பத்து வருஷங்களுக்கு இனாம் என்று முதலில் சொன்னார்கள். என்ன காரணத்தாலோ பிஷப் எங்களை கைவிட்டு, தமது பொறுப்பை விலக்கும்படி சர்க்காருக்கு எழுதினார். சர்க்கார் அப்புறம் செய்பவேண்டியது என்ன? நிலங்களை நேராக எங்களுக்கு கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அஞ்சுமன் சபைக்கு கொடுத்தார்கள். நாங்கள் ஆட்சேபித்தும் கேட்கவில்லை. இப்பொழுது பல்வளம் பெருகும்படி செய்த எங்கள் நிலத்தையும், நாங்கள் கட்டிய வீடுகளையும் விட்டுப் போகும்படி அஞ்சுமன் சபையார் கேட்கிறார்கள். போலீசாரைக் கொண்டு வந்து வைத்து எங்களை பலாத்காரமாய் அப்புறப்படுத்துகிறார்கள். நாங்கள் திக்கற்றவர்களாய் தவிக்கிறோம். எங்களில் அநேகரை போலீசார் கைது செய்திருக்கிறார்கள். எங்களுக்கு உதவி செய்வார் யாருமில்லையா? கோர்ட் மூலம் வாதாடி எங்கள் உரிமைகளை ஸ்தாபிக்க வேண்டியிருக்கிறது. எங்கள் குழந்தை குட்டிகள் தெருவில் நின்று தவிக்கின்றன. எங்கள் மீது இரக்கம் கொண்டவர்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுங்கள்.”

—டெயிலி ஹெரால்ட்

கார்டியன்கள் யோக்கியதையைக் காட்ட இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

Koviloor Digital Library



## எல்லைப்புற தர்பார்

எல்லைப்புற மாகாணத்தில் நடக்கும் ராணுவ தர்பாரையும், ஜனங்கள்படும் கஷ்டங்களையும் நேரில் பார்த்துவரும்படி மகாத்மா காந்தி, தமது குமாரர் தேவதாஸ் காந்தியை அனுப்பியிருந்தார். தேவதாஸ் காந்தி காரியக்கமிட்டிக்கு அனுப்பிய அறிக்கையில் அடியில்கண்ட விஷயம் காணப்படுகிறது:--

எல்லைப்புற காந்தியுடன் அப்துல் காபர்கானையும், அவர் தொண்டர் கூட்டமாகிய குதாய்கித்மத்காரர்களையும் சுடும்படி மல்லிக் வகுப்பாரை தூண்டிவிடுகிறார்கள். இது சுத்தப்பொய் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். நேரில் நான் விசாரித்ததை கூறுகிறேன். 25 மல்லிக்குகளை ஒரு விசாரணையுமில்லாமல் 9 நாள் அடைத்து வைத்திருந்தார்கள். அப்துல் காபர்கான் பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்ததே அவர்கள் குற்றமாம். அவர்களை விடுவிக்கும் முன்பு எல்லைப்புற காந்தியையும், தொண்டர்களையும் சுடும்படியும், சுட்டால் துப்பாக்கிகள் வெகுமதியளிப்பதாகவும் சொல்லப்பட்டதாம். இது நம்பமுடியாதது போல காணப்படலாம். ஆனால் அடைபட்டிருந்த அந்த மல்லிக்குகளே என்னிடம் நேரில் இதைச் சொன்னார்கள். அவர்கள் முகத்தைப் பார்த்ததிலிருந்து அவர்கள் சொன்னது பொய் என்று என்னால் நம்பமுடியாது.

கோஷா பெண்களை கோர்டிற்கு அழைக்கும் வழக்கமே முன்னால் கிடையாது. இப்பொழுது சர்வ சதாரணமாயிருக்கிறது. நில வரியில் பாக்கியிருக்கிறதாம். இதற்காக கோஷா பெண்களுக்கு சம்மன் போட்டு வரவழைத்து பல ஆண்கள் முன்னிலையில் அவமானப் படுத்துகிறார்கள். ஒருபெண் வரிசெலுத்தாத குற்றத்திற்காக தனது பையனுடன் மூன்று நாள் வரையிலும் வெயிலில் நிற்கும்படிசெய்தார்களாம். அச் சமயம் குடிக்க தண்ணீர் கூட கொடுக்கவில்லை. இம்மாதிரி கொடுமைகள் அங்கு சகஜம் என்று தெரிகிறது. ஆண்கள் படும் கொடுமை இதைவிட அதிகம். குளவிக்கூடு இருந்த ஒரு அறையில் ஒருவனைவிட்டு, குளவிக்கூட்டுக்கு அடியில் கொஞ்சம் நெருப்பு காட்டினார்கள். கதவையும் பூட்டிவிட்டார்கள். குளவிகள் ஏராளமாய் கிளம்பி அவனைக்கொட்டி சித்திரவதை செய்துவிட்டன. குதாய் கித்மத்கார் தொண்டர் படையில் சேர்ந்திருப்பவர்களை பொறுக்கி எடுத்து துன்பப் படுத்துகிறார்கள். மற்றவர்களுக்கு வரி பாக்கியிருந்தால் அவ்வளவு கஷ்டம் கிடையாது. இத்தொண்டர்களுள் செலுதத வேண்டியிருந்தால் பெரிய தொல்லைகள் விளைகின்றன. 16 வயதுள்ள ஒரு வாலிபர் தொண்டர் படையில் சேர்ந்து தீவிரமாய் இருந்ததற்காக அவர்மீது கண்ணோட்டம் போட்டார்கள். அவருக்கு ஒன்றை லட்சம் ரூபாய் பெறுமான நிலங்கள் உண்டு. இரண்டாயிரம் ரூபாய் வரி செலுத்த கொஞ்சம் தாமதமானதற்காக அவரை ஜெயிலில் போட்டு, அவர் சொத்துக்களையும் ஜப்தி செய்தார்கள்.

## ஜனத் தொகை.

பிரிட்டிஷ் மாகாணங்களில் எந்தெந்த மாகாணத்தில் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறதென்பதை கவனிப்போம்.

| | |
|---|---|
| வங்காளம் | 50 122 550 |
| ஐக்கிய மாகாணம் | 43,4 8,763 |
| சென்னை | 46,575 670 |
| பீஹார், ஒரிசா | 37 676,576 |
| பாஞ்சாலம் | 2 .580 852 |
| பம்பாய் | 21,854 841 |
| மத்திய மாகாணம் | 15,507.723 |
| பர்மா | 14,645,969 |
| அசாம் | 8,623 251 |
| வடமேற்கு மாகாணம் | 2 425 076 |
| டெல்லி | 636,246 |
| ஆஜ்மீர், மீர்வார் | 560.292 |
| பலுசிஸ்தான் | 463,508 |
| குடகு | 163,327 |

### சமஸ்தானங்கள்.

| | |
|---|---|
| ஹைதராபாத் மொத்தம் | 14,437 541 |
| ஷை இந்துக்கள் | 12,173 327 |
| ஷை முஸ்லிம்கள் | 1,535 022 |
| ஷை கிறிஸ்தவர் | 151.946 |
| காஷ்மீரம் மொத்தம் | 3,616,241 |
| ஷை இந்துக்கள் | 734 607 |
| ஷை முஸ்லிம்கள் | 2 8,7 695 |
| ஷை சீக்கியர் | 50662 |
| மைசூர் மொத்தம் | 6 557,302 |
| ஷை இந்துக்கள் | 6 015,880 |
| ஷை முஸ்லிம்கள் | 398,628. |

## தேசீய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| பண்டித ஜவஹர்லால் (மூன்றாம் பதிப்பு) | 0 | 1 | 0 |
| சோவியத் ருஷியா | 0 | 1 | 0 |
| கான்பூர் கலகம் | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் சரித்திரம் | 0 | 1 | 0 |
| பாரத ஜோதி | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் கடன் அறிக்கை | 0 | 1 | 0 |

மொத்தமாக வேண்டியவர்கள் 8 அணா ஸ்டாம்புகள் அனுப்பவும் தனிப்புத்தகம் வேண்டியவர்கள் 1½ அணா ஸ்டாம்புகள் அனுப்பவும்

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

Koviloor Digital Library



# அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு விண்ணப்பம்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்:—

இங்கிலாந்தில் அரண்மனை அதிகாரிகளும், பிரதம மந்திரியும், மற்ற பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சமீபத்தில் காட்டியிருக்கும் உதாரணம் நம் நாட்டிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பெரிய தர்மசங்கடத்தில் விட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் பண நெருக்கடி காரணமாக, ஆங்கில அரசர் தமது அரண்மனைச் செலவுகளைக் குறைத்துக் கொண்டிருக்கிறார். அவரைப் பின்பற்றி அந்நாட்டின் பெரிய உத்தியோகஸ்தர்கள் 100க்கு 20 வீதமும், சின்ன உத்தியோகஸ்தர்கள் 100க்கு 10 வீதமும் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்குச் சங்கடம் உண்டாக்கியிருக்கிறது. அவர்களுடைய செயலை இவர்கள் கண்டிப்பதற்கு இல்லை. அவர்களைப் பின்பற்றித் தங்களுடைய சம்பளங்களைக் குறைத்துக் கொள்ளவும் மனம் வரவில்லை. கிளப்புகளில் கூடும்போது தங்களுக்குள்ளே கூட இதைப்பற்றிப் பேச்சு எடுப்பதில்லை. 'மௌனம் கலஹ நாஸ்தி' என்றிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலேயே உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைப்பது அவசியமானால் இந்தியாவில் அது பதின்மடங்கு அவசியமாகும். ஆங்கில நாட்டாரை விட இந்தியர்கள் பரம ஏழைகள். சம்பளமும் ஆங்கில உத்தியோகஸ்தர்களை விட நீங்கள் குறைவாகப் பெறவில்லை. வாழ்க்கைச் செலவோ இந்தியாவை விடச் சீமையில் அதிகம்.

பத்து வருஷங்களுக்கு முன்பு விலைவாசிகள் அதிகமானபோது பெருங் கிளர்ச்சி செய்து சம்பளங்களை அதிகப்படுத்திக் கொண்டீர்கள். இப்போது விலைவாசிகள் ஒன்றுக்குப் பாதியாகி விட்டன. நமது நாட்டில் குடியானவர்கள், வியாபாரிகள் எல்லாரும் இதனால் கஷ்டமடைந்திருக்கிறார்கள். ஏழைகளின் கூலி குறைந்து விட்டது. நீங்கள் மட்டும் அணுவளவும் தியாகம் செய்ய முன் வராதிருப்பது தர்மமா? பொது ஜனங்களின் பாது காவலர் நாங்கள் தான் என்று வாய் கூசாது எப்படிச் சொல்லிக் கொள்வீர்கள்?

தற்போது நமது நாட்டில் மதுபானத்தையொழிக்க வேண்டுமென்று பெருங்கிளர்ச்சி நடந்து வருவது நீங்கள் அறிந்ததே. பொது ஜனங்கள் எல்லாரும் ஆண், பெண், குழந்தைகள் உள்பட இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆயினும் சர்க்காரே முன்வந்து கள்ளையொழியாமல் இருப்பது ஏன்? அதற்குப் பெருந் தடையாயிருப்பது உங்களுடைய சம்பளம். அது குறையாமலிருப்பதற்காக ஏழைகள் குடித்து நாசமாக வேண்டுமென்று சொல்வீர்களா?

இங்கிலாந்து போன்ற தேசத்தில் இவ்வளவு பெரிய பொதுஜனக் கிளர்ச்சி நடந்திருந்தால், சர்க்கார் உடனே எல்லா கள்ளு சாராயக்கடைகளையும் மூடியிருப்பார்கள். எந்தக் கட்சியார் அரசாங்கம் நடத்தினாலும், வரவு செலவுத்திட்டம் சரிக்கட்டுவதற்காக ஜனங்கள் கள் சாராயம் குடித்துக் கெடவேண்டுமென்று சொல்லத் துணிய மாட்டார்கள். சர்க்காருக்கே பணக்கஷ்டமென்றால் என்ன அர்த்தம்? அந்த அளவுக்கு தேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பணக்கஷ்டமும், கடன் உபத்திரவமும், பசியும், பட்டினியும் அதிகமாகி விட்டன என்று அர்த்தமல்லவா? குடியை ஒழித்து ஏழைகளைக் காப்பதற்கு இதுதான் தக்க சமயமாகும்.

தைரியமிருந்தால், நேர்முகமாக வரி போட்டு வசூலித்துக் கொள்ளுங்கள். நாடெங்கும் கள்ளு சாராயக்கடைகள் வைத்து ஏழைகளைக் குடிக்கச் செய்துதான் அவர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்று சொல்வது வெட்கக்கேடல்லவா?

நீங்களே முன்வந்து உங்கள் சம்பளங்களை உடனே குறைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன். அரசரைப் பின்பற்றி நடந்து உங்களுடைய இராஜ பக்தியையும், ஏழை ஜனங்களிடம் உங்களுக்குள்ள அன்பையும் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

சர்தார் பட்டேல் சரித்திரம்.
வெளியாய் விட்டது. 32 பக்கங்கள்
1 அணா தபால் செலவு அரை அணா.
"காந்தி" ஆபீஸ்.
11 ஆண்டர்சன் தெரு, சென்னை

Koviloor Digital Library



# ஆங்கிலக் கல்வி, அடிமை விலங்கு!

லார்டு மெக்காலேயின் பந்துவும், கம்பெனியில் பல உத்தியோகங்கள் வகித்தவரும், பின்னர் சென்னைக் கவர்னர் ஆனவரும், இந்தியா சுப்ரீம் கௌன்ஸில் மெம்பராயிருந்தவருமான சர். சார்லஸ் டிரிவேலியன், சுமார் 40 வருஷங்களுக்குமுன் ..ல இந்தியர் கல்வியைப்பற்றி ஒரு புஸ்தகம் வெளியிட்டார். இந்தியர் கல்விக்காக பத்து லட்சம் பவுன் வருஷந்தோறும் செலவு செய்தால், இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கி நேசபாவனையி விருப்பார்கள் என்று அவர் அந்நூலில் முடிவு கூறியிருக்கிறார். அவர் கூறுவதாவது.—"நாம் பின்பற்றப் போகும் முறை புதியதல்ல. உரோமர்கள் தமது இலக்கியங்களையும் கலைகளையும் ஐரோப்பியர்களுக்குக் கற்பித்து உரோம நாகரீகத்தை ஐரோப்பா முழுதும் பரப்பி உரோம மயமாக்கியதனால் ஐரோப்பா முழுதும் உரோம்புரிக்கு அடிமையாயிற்று. யுத்த மூலம் பெற்ற வெற்றியை அவர்கள் தமது கல்வி முறையால் வலுப்படுத்திக் கொண்டார்கள். இத்தாலியா, ஸ்பெயின், ஆபிரிக்கா, கால் முதலிய தேசங்கள் முன்னேற்ற உணர்ச்சி எதுவுமின்றி, உரோம நாகரீகத்தை குருட்டு நம்பிக்கையுடன் பின்பற்றி, கடைசிவரை உரோம சாம்ராஜ்யத்துக்கு அடிமைகளாகவே இருந்தன. இறுதியில் அந்நாடுகள் உரோமர் பந்தத்திலிருந்து விடுபட்டது உள்நாட்டுப் புரட்சியாலல்ல; வெளிநாட்டு அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே அவை பிரிய நேரிட்டது. நாம் ஒரு காலத்தில் உரோமர்களுக்கு எவ்வாறு கீழடங்கியிருந்தோமோ அவ்வாறே இந்தியர்களும் நமக்குக் கீழடங்கி விடுவார்கள் என்பது நிச்சயம். பிரிட்டிஷ் தலைவர்களின் மக்களுக்கு உரோமக் கலைகளையும் இலக்கியங்களையும சாஸ்திரங்களையும் போதித்து உரோம நாகரிகத்தில் சுவையூட்டுவது ஜூலியஸ் ஆக்ரிகோலாவின் வழக்கமயிருந்ததென்று டாசிட்டஸ் என்னும் ஆசிரியர் கூறுகிறார். அவரது யுக்தி சரியாக பலித்ததென்று நாமனைவரும் அறிவோம். பிரிட்டிஷார் உரோமர்களுக்கு சத்துருவாயிராமல் நம்பிக்கையுள்ள நேயர்கள் ஆனார்கள்; உரோமர் ஆக்கிரமிப்பைத் தடுக்க அவர்களது முன்னோர்கள் எவ்வளவு முயன்றார்களோ அவ்வளவு இவர்கள் உரோம நாகரீகத்தைப் பின்பற்ற முயன்றார்கள்."

வங்காளத்தில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பிய ரெவரெண்டு அலக்சாண்டர் டப்பும் இந்த உரோம – பிரிட்டிஷ் வரலாற்றை வற்புறுத்திக் கூறியிருக்கிறார். சர். டிரிவேலியன் நூல் வெளிவந்த அதே காலத்தில் ரெவரெண்டு அலக்சாண்டர் டப் வெளியிட்ட ஒரு புஸ்தகத்தில் அவர் எழுதியிருப்பதாவது:—

"உரோமர்கள் ஒரு மாகாணத்தைப் பிடித்தடக்கியவுடனே அதை உரோம மயமாக்க முயற்சி செய்தனர்; அதாவது உரோம இலக்கியம் கலை சாஸ்திரம் வீரப்பாடல்கள் இவைகளில் தாம் அடக்கிய தேசத்தாருக்குச் சுவையூட்டினர். உரோமர்கள் தம் முயற்சியில் வெற்றி பெறவில்லையா?

சுதேசக் கல்விமுறை பிரிட்டிஷார் க்ஷேமத்துக்கு ஆபத்து விளைவிக்குமென்று சர். டிரிவேலியன் நினைத்தார். ஆகவே இந்தியச் சிறுவர்கள் ஆங்கிலக் கல்வியிலும் ஆங்கில நாகரீகத்திலும் முழுதும் ஆங்கில மயமாக வேண்டுமென்று அவர் விரும்பினர்.

ஆங்கில இலக்கியத்தின் போக்கு ஆங்கில பந்தத்துக்கு அனுகூலம் செய்யத் தவறாது. ஆங்கில இலக்கியத்தில் பழகிய இந்தியர்களுக்கு நாம் அன்னியர் என்ற உணர்ச்சி நீங்கிவிடும். அவர்கள் நமக்கு ஜன்ம விரோதிகளாயிராமல், பட்சமிருந்த நேயர்களாகவும் ஒத்துழைப்பார்களாகவும் மாறிவிடுவார்கள்."

மேலே கூறியவற்றுள் அடங்கிய அரசியல் சூழ்ச்சியை இதை விடத்தெளிவாக நமக்கு விளக்கமுடியாது.

இனி, சர். டிரிவேலியனின் கண்யம் வாய்ந்த பந்துவான லார்டு மெக்காலே கூறுவதைக் கவனியுங்கள்.

"நமக்கும் நாம் ஆளும் கோடிக் கணக்கான இந்திய மக்களுக்கும் இடையே ஒருவகைத் தரகரை சிருஷ்டி செய்ய நாம் இப்போதே முயலவேண்டும். பிறப்பினாலும் நிறத்தினாலும் அவர்கள் இந்தியர்களாயிருந்தாலும் இலக்கிய வாசனையிலும் ஆசார அநுஷ்டானங்களிலும் அவர்கள் ஆங்கிலேயர்களாகவே இருத்தல் வேண்டும்."

Koviloor Digital Library



## இன்ப துன்பமற்ற மகாத்மா

(பாதிரியார் என்வின்)

சாந்தமாயிருக்கும் சக்தியும், எந்த துன்பத்திலும் சிரிக்கும் வல்லமையும் ஒவ்வொரு பெரிய மனிதருக்கும் உண்டு. சிரிப்பில்லாத பெரிய மனிதத் தன்மை ஆபத்தானது, உபயோகமற்றது, சீக்கிரம் தாழ்ந்து போகக் கூடியது. 60 வயதுக்கு மேலாகியும் அந்த சிரிப்பு ஒன்றே மகாத்மாவை இன்றும் பால்யரைப் போல வைத்திருக்கிறது. அதிகாலையில் அவருடைய சிரிப்பில் ஒன்று உங்களுக்கு கிடைத்தால் போதும். அன்று முழுவதும் நீங்கள் உற்சாகமாயிருப்பீர்கள். அவருடைய சிரிப்பு ஒட்டுவாரொட்டி. எப்பொழுதும் சிரிப்பு. எப்பொழுதும் வேடிக்கை. அவருடன் இருந்தால் எல்லா கவலைகளும் போய்விடும். அவருடைய விளையாட்டையும் சிரிப்பையும் கண்டே குழந்தைகள் எப்பொழுதும் அவரைச் சுற்றி கூடுகின்றன. எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் அவர் சிரிப்பிற்கு மட்டும் குறைவு கிடையாது. பொறுப்பில்லாத சிரிப்பல்ல, மற்ற யாரையும்விட அவர் பொறுப்பு அதிகம். உணருவதும் அதிகம். பூர்ண பொறுப்பை உணர்ந்து முழுச் சிரிப்பு சிரிப்பதில் தான் ஒருவருடைய தன்னை அடக்கி ஆளும் பெருமையிருக்கிறது. 1922ம் வருஷம் மகாத்மா ஜெயிலுக்குப் போனவுடன், "நான் ஒரு பறவையைப்போல கவலையின்றி சந்தோஷமாயிருக்கிறேன்" என்று ஸ்ரீ. ஆண்ட்ரூஸுக்கு கடிதம் எழுதினார். "துன்பத்தை சந்தோஷமாக அநுபவிக்க ஆரம்பித்தால், அந்த துன்பமும் இன்பமாய் மாறி விடும்" என்று மகாத்மா சொல்லுகிறார். டாக்டர் ரவீந்திரநாத தாகூர் சொல்லுவது மிகவும் பொருத்தமானது. அவர் சொல்லுகிறார்:—"காந்தி விடுதலை பெற்ற ஆத்மா. என் கழுத்தை யாராவது நெரிக்க வந்தால் நான் உதவிக்கு கத்துவேன். காந்தி கழுத்தை யாராவது நெரித்தால் அவர் அவனைப் பார்த்து சிரிப்பாரே யொழிய சத்தமிடமாட்டார். அதனால் அவர் சாக வேண்டி வந்தாலும், கடைசி வினாடி வரையில் புன் சிரிப்புடனேயே இருப்பார்". மகாத்மா எவ்வளவு சிரிப்போடு இருந்தாலும், பொறுப்பை ஒரு வினாடிகூட மறந்து விடமாட்டார். 1924ம் வருஷத்தில் கோஹத்தில் நடந்த ஹிந்து முஸ்லிம் கலகத்தை கேட்டவுடன் அவர் பட்டினி கிடக்க ஆரம்பித்ததே இதைக் காட்டப் போதுமானது.

## 18 பென்சுக்கு சமாதி.

பிரிட்டிஷ் செல்வ நிலை சங்கடத்தால் இந்தியாவில் ஏற்படும் சாதக பாதகங்களைக் குறித்து அபிப்பிராயம் கேட்டதில், பிரபலமான இந்திய நிதி நிபுணர்கள் யாவரும், இந்திய வர்த்தகர் எச்சரிக்கைகளை சிறிதும் கவனியாது சர்க்கார் கையாண்டு வரும் நிதிக்கொள்கைகளை பலமாக கண்டிக்கின்றனர்.

வங்காள தேசிய வர்த்தக சங்கத்தின் உபதலைவரான ஸ்ரீ. நளினரஞ்சன் சர்க்கார் பின்வருமாறு கூறினார்:—"தங்கத்தை கைவிட்டுவிடுவதென பிரிட்டன் செய்த முடிவினால் பிரிட்டனுக்கு அளவற்ற நன்மை விளையும். இதனால் பிரிட்டிஷ் வர்த்தகத்திற்கும் வாணிபத்திற்கும் போதுமான கடனும், பணமும் கிடைக்கும். ஆனால் திடீரென நாம் நமது சக்திகளையெல்லாம் சேகரித்து ரூபாயின் மதிப்பை ஓர் நிரந்தரமான மதிப்பில் பாதுகாக்காவிட்டால், நமது வர்த்தகமும் தொழிலும் நிலையற்றதாகி தவிக்கும். நமது ஏற்றுமதி வியாபாரம் படுத்துவிட்டது. இறக்குமதியோ வெகு அதிகம். இப்படியிருக்கும்பொழுது நமது வர்த்தகத்தின் எதிர்கால நிலைமை வெகு கவலைக்கிடமானதாகவுள்ளது. 18 பென்ஸ் விகிதமென்ற பாலம் முறிந்து வீழ்ந்து கொண்டிருக்கும் பொழுது அதன் மீது நின்று கொண்டு சாவதானமாக சர். ஜார்ஜ் ஷுஸ்டர் வேதாந்தம் பேசுவது உண்மையிலேயே வெகு விசனத்தையே தருகின்றது.'!"

சென்ட்ரல் பாங்கி விசாரணைக் கமிட்டியின் அங்கத்தினரான ஸ்ரீ. தேவி பிரசாத் கெய்தான் கூறுவதாவது:—"தவிர்க்க முடியாத முடிவு கடைசியில் நேர்ந்து விட்டது. இயற்கைக்கு மாறுபட்டு, கணக்கற்ற தீமைகளை விளைவித்த 18 பென்ஸ் விகிதத்தை பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய சர்க்காரும் சேர்ந்து கொண்டு தாங்கி நின்றாலும், இனிக் காப்பாற்ற முடியாது. இந்த விகிதத்தைக் காப்பாற்றவே இந்தியாவின் தங்க ரிசர்வ்களையெல்லாம் கொண்டுபோய்க் கொட்டி தீர்த்தனர். ஆனால் பிரிட்டிஷ் பவுனின் மதிப்பு இவ்வளவு தூரம் சீர்குலைந்து போன பின்னரும், இவ்விரு சர்க்கார்களும் தாங்கள் இந்தியாவிற்கு செய்த தீங்குகளை திருத்திக் கொள்ள முயலாமல் ரூபாயையும் பவுனையும் ஒன்று சேர்த்து பிணைக்க முயலுவது திடுக்கிடச் செய்கிறது."

Koviloor Digital Library



## செய்தித் திரட்டு.

ஹிஜ்லியில் ராஜீயக் கைதிகளை போலீசார் சுட்டதைப்பற்றி விசாரிக்க உத்தியோகஸ்தரல்லாத கமிட்டியை சர்க்கார் நியமிக்கிறவரையில் சாப்பிடுவதில்லையென்று ஹிஜ்லி சிறையிலுள்ள 175 ராஜீயக் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

மகாத்மா ஜெயந்தியை உத்தேசித்து கத்தர் விற்பனை பம்பாயில் மும்முரமாய் நடக்கிறது. 3 நாளில் 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. சென்னை ஸ்ரீ ஜமால் முகமது சாகிப் 5 ஆயிரம் ரூபாய்க்கும், பம்பாய் சர். புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸ் 10 ஆயிரம் ரூபாய்க்கும் கத்தர் வாங்கியிருக்கிறார்கள்.

பிரிட்டன் பணத்திற்கு பஞ்சாய் பறப்பதால், வட்டமேஜை மகாநாட்டிற்கு சென்றிருக்கும் மன்னர்கள், தங்களுக்காகும் செலவை தாங்களே செய்து கொள்ளப்போகிறார்களாம். மன்னர் சபை தலைவர் போபால் நவாப் இவ்விஷயத்தை பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கு அறிவித்தார். உடனே மன்னர்களின் தயாள குணத்தைப் புகழ்ந்து அவர் பதிலுக்கு ஒரு கடிதமும் எழுதிவிட்டார்.

ஈரோட்டில் கூடிய நவஜவான் மகாநாட்டு தலைவர் ஸ்ரீ. கிரன் சந்திர தாசை கள்ளிக்கோட்டையில் 117-வது பிரிவுப்படி கைது செய்திருக்கிறார்கள்.

ஓடும் ரயிலில் சென்று கொண்டிருந்த இரண்டு அதிகாரிகளை தாக்கி ஒருவரைக்கொன்று ஒருவரை பலகாயப் படுத்தியதாக குற்றஞ்சாட்டி 3 பேரை விசாரித்தார்கள். 2 பேருக்கு மரண தண்டனையும், ஒருவருக்கு ஆயுள்வரை தீவாந்தரமும் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி தாலூகாவில் கெங்கை கொண்டான், பாலாமடை, முதலிய இடங்களில் தீண்டாதார் படும் கஷ்டத்தைப்பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். அவர்கள் கஷ்டத்தைப் போக்க சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கலாம் என்றுகூட எழுதியிருந்தோம். திருநெல்வேலி தாலூகா காங்கிரஸ் கமிட்டி இயல்பாக, தீண்டாமையை போக்க பிரசாரமும், சத்தியாக்கிரகமும் செய்ய தீர்மானித்திருப்பதாக இப்பொழுது அறிகிறோம். மிகவும் சந்தோஷம். நாம் மேலே சொல்லிய ஊர்களை ஞாபகத்தில் வைத்து உடனே ஆரம்பிக்க வேண்டுகிறோம்.

திருநெல்வேலியில் தேசபக்தராயிருந்த நண்பர் திருகூட சுந்தரனார் தற்சமயம் செட்டிமார் நாட்டில் வீராய் விளங்குவதை நண்பர்கள் அறிவார்கள். கொளும்பு பணத்தை ஒருவகையாக கொடுக்க ஒப்புக் கொண்டார். ஆனால் செட்டிமார் நாட்டில் வசூலித்த பணத்திற்கு பழைய ஆட்சேபனையே சொல்லுகிறாராம். ஆட்சேபனையில்லாமல் பண விஷயத்தில் இவர் எப்போதான் நடந்துகொண்டார்? எப்படியோ காரைக்குடி ஜில்லா காங்கிரஸ் பொக்கிஷதார் பதவி அவரை விட்டுப்போய் விட்டதே போதுமானது.

## காலச் சக்கரம்.

### மற்றொரு சிட்டுக்குருவி.

சந்திரகிரி தாசில்தாருக்கு திடீரென்றுதான் ஒரு நவாப் என்ற நினைப்பு வந்தது. உடனே எல்லா கிராம அதிகாரிகளுக்கும் தாக்கீது பிறப்பித்தார். "காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் முறிந்து போய்விட்டதாக பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கின்றன. ஆகவே இனி காங்கிரசை சர்க்கார் விரோதிகளென்று நீங்கள் பாவிக்க வேண்டும்" என்பதுதான் அவர் தாக்கீது. இவர் எந்த லோகத்து பத்திரிகையை படித்தாரோ நமக்குத் தெரியாது. ஏனெனில் இந்த லோகத்து பத்திரிகை எதிலும் காந்தி—இர்வின் ஒப்பந்தம் முறிந்து போனதாக செய்தி வெளியாகவில்லை. இந்த தாசில்தாரின் மடத்தனமான உத்தரவை சர்க்காருக்கு அறிவித்தவுடன், ஜில்லா கலெக்டரைக் கொண்டு அவர்கள் வாபஸ் வாங்கிவிட்டார்கள். அதற்காக நாம் சந்தோஷப் படுகிறோம். ஆனால் இவ்வளவு மதியீனம் நிறைந்த ஒருவரை மறுபடியும் தாசில்தார் பதவியில் வைத்திருப்பது உசிதமா என்று கேட்கிறோம். மற்றொரு சிட்டுக்குருவி நாராயணவரத்தில் புறப்பட்டிருக்கின்றதாம். யாரும் குடிக்கக் கூடாதென்று சொல்லக்கூடாதாம். குடிப்பவர்களை பகிஷ்காரம் செய்யக்கூடாதாம். இதை மீறி யாராவது நடந்தால் அவர்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமாம். இம்மாதிரி கிராம அதிகாரிகளுக்கு ஒரு சுற்றுத்தரவு போயிருக்கிறது. சில்லரை அதிகாரிகள் இம்மாதிரி விஷமஞ்செய்யும் காரணமென்ன? அவர்கள் என்ன செய்தாலும் கவர்னர் வரையிலுள்ள சகல அதிகாரிகளும் அவர்களை பாதுகாப்பது என்ற முட்டாள் தனமான வழக்கமே காரணம். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். அம்மாதிரி பழக்கம் செய்து விட்டதால், இன்று வைசிராய் சொன்னால்கூட நல்ல காரியம்செய்ய அவர்களால் முடியவில்லை. அவர்கள் பழக்கம் வந்து முட்டுகிறது.

Koviloor Digital Library



# லண்டன் அதிசயங்கள்.

லண்டனில் ஏற்பட்ட பண நெருக்கடியாலும், தங்க மதிப்பு தவிடு வாங்கிப்போய் விட்டபடியாலும், வட்ட மேஜை மகாநாட்டில் விசேஷம் ஒன்றுமில்லை. தங்க மதிப்பு போய்விட்டதால் மெக்டொனல்ட் பதவி கொஞ்சம் உறுதியாயிற்று. பிரிட்டன் பணத்திற்கு தவிப்பதால், இந்தச் சமயத்தில் பார்லிமெண்டை கலைத்து புதிதாக தேர்தல் நடத்துவதும் சாத்தியமில்லை. மறுபடியும் தொழிற் கட்சியார் மெக்டனல்டை சேர்த்துக் கொண்டாலும் கொள்ளலாம்.

சர். சாமுவேல் ஹோர் தங்கமதிப்பை இந்தியாவிலும் எடுத்து விட்டதைப்பற்றி ஐக்கிய நிர்மாண கமிட்டியில் ஒரு அறிக்கை வாசித்தார். இந்திய சட்டசபையைக் கூட கேட்காமல் இந்த முடிவுசெய்தது பொறுப்பற்ற தனமென்று மகாத்மா கண்டித்தார். ஆகவே காங்கிரசைப் பொறுத்தவரையில் இவ் விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைக்க முடியாதென்று மகாத்மா மறுத்துவிட்டார். உலகம் முழுவதும் பிரிட்டனை கவனித்துக் கொண்டிருக்கிறது. இச்சமயம் இந்திய சர்க்காரின் எதேச்சாதிகாரத்தைக் காட்ட சர். சாமுவேல் ஹோர் மூலம் ஒரு சந்தர்ப்பத்தையும், அதை வெளிப்படுத்த மகாத்மா மூலம் ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்த தவிடு பொடியான தங்க மதிப்பிற்கு நமது வந்தனங்கள்.

மகாத்மா காந்தியும் ஆகாகானும் சீக்கிரம் கலந்து பேசுவார்கள். ஸ்ரீ. வித்தல்பாய் பட்டேல் ஒரு இடம்கூட விட்டுக் கொடுக்கக் கூடாதென்று மகாத்மாவை வற்புறுத்தி வருகிறார். லங்காஷயர் போவதை மகாத்மா நிறுத்தி விட்டார். கிங்ஸ்லி ஹாலைவிட்டு, நைட்ஸ் பிரிட்ஜ் தெரு 85 வது நெம்பர் கட்டிடத்திற்கு மகாத்மா தமது ஜாகையை மாற்றியிருக்கிறார். அந்த இடத்தை மார்வாரி நண்பர்கள் அவருக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர் போகும் போதும் வரும்போதும் கூட்டம் கூடுவதும் ஜெயகோஷம் போடுவதும் குறையவில்லை. காந்திஜி மோட்டாரைக் கண்டால் ஏராளமான குழந்தைகள் கூடி விடுகின்றனவாம். "குழந்தையைப்போல ஆனால்தான் உனக்கு மோட்சம் கிடைக்கும்" என்று கிறிஸ்துநாதர் சொன்னார். லண்டன் குழந்தைகள் மகாத்மாவை தங்களைப்போல ஒரு குழந்தை என்றே நினைத்துக்கொண்டிருக்கின்றன போலும்.

உலகத்திலேயே பேர்பெற்ற சினிமா கோமாளியான சார்லி சாப்ளின் என்றவரும் மகாத்மாவும் 22உ யன்று சந்தித்துப் பேசினார்கள். தெருவில் ஏராளமான கூட்டம். இருவரும் பேசிய பின்பு ஜன்னல் பக்கம்வந்து ஜனங்களுக்கு தரிசனம் கொடுத்தார்கள். ஜனங்கள் ஜெய கோஷம் செய்தனர். கூட்டத்தில் ஒருவர் மகாத்மா காணிக்கைக்காக ஒரு பெரிய உப்பு பொட்டலத்தை வைத்துக் கொண்டு நின்றது பெரிய காட்சியாயிருந்தது. ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்காரை மகாத்மா தமது ராஜீய காரியதரிசியாக நியமித்திருக்கிறார். ராமரால் அகலியை சாப விமோசன மடைந்தாள். ஸ்ரீ ஐயங்கார் காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாக அவசரமாய் லண்டனுக்கு ஓடினார். அந்தப்பாவம் அவர் மகாத்மாவின் காரியதரிசியாக ஆனதால் விமோசனமாயிற்று.

ஸ்ரீமதி மீராபாய் என்ற மிஸ். ஸ்லேட் தாயார் ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார். தமக்குள்ள சொத்தாகிய பத்தாயிரம் பவுனையும் தமது இருகுமாரிகளில் ஒருவராகிய மிஸஸ் வெர்னனுக்கு காட்டியிருக்கிறார். மிஸ் ஸ்லேட் என்ற குமாரி இருப்பதாகவே அதில் காட்டவில்லை. இதைப்பற்றி மிஸ். ஸ்லேடை ஒரு நிருபர் கேட்டார். மிஸ். ஸ்லேட் சொல்லியதாவது:—"எனது குடும்பத்தாருக்கும் எனக்கும் பேச்சு வார்த்தையோ சம்பந்தமோ கிடையாதென்று சொல்லுவது பொய். நான் மகாத்மாவின் சீடரானவுடன் இரண்டு விரதங்கள் மேற்கொண்டேன். ஒன்று பிரமச்சரியம். மற்றொன்று துறவறம். ஆகவே எனக்கென்று ஒரு உடமை கூடாதென்றும், என் பெயரைக் குறிப்பிட வேண்டாமென்றும் என் தாயாரை கேட்டுக்கொண்டேன். அதன்படியே என் தாயார் நடந்து கொண்டார்."

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No M 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)


# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 செப்டம்பர் 28உ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 12உ திங்கட்கிழமை || இதழ் 32

## சவத்திற்கு தாலி.




செத்துப்போன பவுன் மதிப்பின் பிரேதத்திற்கு இந்திய வெள்ளி நாணயத்தை சர்க்கார் தாலி கட்டி வைக்கிறார்கள்.

இந்தியா மந்திரி:-தீர்க்க மாங்கல்ய பவ!. மகாத்மாவே, நீங்களும் ஆசீர்வாதம் செய்யுங்கள்.

மகாத்மா:—பிரேதத்திற்கு தாலிகட்டினால் தீர்க்க மாங்கல்யம் எப்படியிருக்கும்? உம்முடைய அக்கிரமமான செய்கையை நான் பலமாய் கண்டிக்கிறேன்.

Koviloor Digital Library



# லண்டன் குறிப்புகள்.

## இந்து முஸ்லிம் ஒப்பந்தம்.

மகாத்மா காந்தி இந்து முஸ்லிம் சமரசம் விஷயமாக ஆகாகானுடன் பேசினர். அப்புறம் ஸ்ரீமதி சரோஜினி ஜாகையில் ஸ்ரீ. ஜின்னுவும் மகாத்மாவும் பேசினர். கூடிய சீக்கிரம் வட்ட மேஜை மகாநாட்டிற்கு வந்துள்ள சகல முஸ்லிம் அங்கத்தினர்களும் ஒன்றாய் கூடி சமரசம் விஷயமாய் மகாத்மாவுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் சீக்கிரமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படலாமென்று தெரிகிறது.

## காந்திஜி எச்சரிக்கை.

சர்க்கார் இன்னம் தங்கள் எண்ணத்தை வெளியிடவில்லை. காந்திஜி இரண்டு தடவை எச்சரித்தாய்விட்டது. மூன்றாவது தடவை கடைசி முறையாக எச்சரிப்பார் என்று தோன்றுகிறது. இந்து முஸ்லிம் சமரசப் பேச்சு முடிகிறவரை மகாத்மா பொறுத்திருப்பார். அதுவரையிலும் சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடாவிட்டால், அப்புறம் இந்த காலட்சேப மகாநாட்டில் கலந்துகொள்ளுவதா வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டிய அவசியம் நேரிடும்.

## பென் சந்திப்பு

ஜெயக்கார், சாப்ரு முயற்சியால் சென்ற செவ்வாயன்று இரவு மகாத்மா காந்தியை பழைய இந்திய மந்திரி பென் வந்து கண்டு பேசினர். இருவரும் தனியாக சுமார் 40 நிமிஷங்கள் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். இந்திய மந்திரியாக பென் இல்லாமல் போனதற்காக மகாத்மா வருந்தினர். எப்படியாவது மகாத்மா லண்டன் வந்து சேர்ந்ததைப் பார்த்து நாம் சந்தோஷமடைவதாக பென் சொன்னர். இந்தியாவிற்கு பூர்ண சுயராஜ்யம் தற்சமயம் பொருத்தமா என்பதைப் பற்றி பென் பேசினர். பரிபூர்ண சுயராஜ்யம் வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிக்க வேண்டியது இந்தியாவைச் சேர்ந்தது, என்று மகாத்மா பென் மனதில் படும்படி எடுத்துக் காட்டினர். காங்கிரஸ் தீர்மானத்தை பென்னுக்கு விளக்கிக்காட்டி, பிரிட்டிஷ் சம்பந்தம் வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பு இந்தியாவிற்கே உண்டு என்று அழுத்தம் திருத்தமாய் மகாத்மா கூறினர். இருவரும் மறுபடியும் சந்தித்துப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

## காந்தியும், கோமாளியும்.

மகாத்மா காந்தியும், சார்லி சாப்ளினும் சந்தித்துப் பேசியதைப்பற்றி பிரிட்டனில் பெரிய பேச்சாயிருக்கிறது. மான்செஸ்டர் கார்டியன் எழுதுகிறது:—

மகாத்மாவிற்கும், கோமாளிக்கும் பொதுவான சில குணங்கள் இருக்கின்றன. ஜனங்கள் உணர்ச்சியை அறிவதில் இருவரும் நிபுணர்கள். இருவரும் ஜனங்களை சிரிக்கும்படி செய்கிறார்கள். தங்கள் மீது அசையா பக்தி கொள்ளும்படி வைக்கிறார்கள். இவையே இருவருக்குமுள்ள பொதுவான குணங்கள். சிலர் நாம் சிரிக்கும்படி செய்கிறார்கள். சிலர் நாம் மறுத்துப்பேசாமல் பின்பற்றும்படி செய்கிறார்கள். அவர்கள் யார்? சார்லி சாப்ளினும், மகாத்மாவுமே !"

மகாத்மாவுடன் சார்லி பேசும்போது சம்மணம் போட்டு தரையில் உட்கார்ந்து கொண்டார். புதிய இயந்திரங்களாலும், அவற்றால் மனிதருக்கு ஏற்படும் உதவியாலும் மனிதர் மிகுந்த நன்மை யடையவில்லையா? என்று சார்லி கேட்டார். மகாத்மா பதில் பேசாமல் சிரித்தாராம். கேள்வி எவ்வளவு அசட்டுத்தனமானது என்பதற்காகவே அந்த ஓட்டைப் பல் சிரிப்பு என்று நினைக்கிறோம்.

## வழவழா ஹோர்

இந்திய மந்திரி சாமுவேல் ஹோரின் பவுன்-வெள்ளி தாலிகட்டுதல் அறிக்கையை மகாத்மா ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். தனியாகப் பேசி மகாத்மாவை திருப்பி விடலாமென்று சர். ஹோர் மனப்பால் குடித்தார். மகாத்மா உள்பட சில முக்கியமான இந்திய தலைவர்களை அழைத்தார். சர்வதேச சங்க பொக்கிஷ புலியான சர். ஸ்டிராகோஷைக்கொண்டு ஒரு பிரசங்கம் செய்யச்சொன்னர். ஒரு மணி நேரமாக சர். ஸ்டிராகோஷ் பிரசங்கம் செய்து பார்த்தார் என்னதான் பேசியும் மகாத்மா அசையவில்லை. அவரை திருப்திசெய்ய முடியவில்லை. "என்ன பேசினுலும் குற்றம் குற்றமே இந்திய சர்க்கார் செய்ததும், சர். ஹோர் பேசியதும் வெறும் தவறு. அவற்றை ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது". என்று மகாத்மா கூறிவிட்டார். சர். ஹோர் இஞ்சி தின்ற அதுமாரைப்போல விழிக்கிறார்.

Koviloor Digital Library



# மகாத்மா வீரமொழி.

மகாத்மா பிரசங்கத்தைக் கேட்க பிரிட்டிஷ் பார்லிமெண்டிலுள்ள சகல கட்சிகளுஞ் சேர்ந்த கூட்டமொன்று 23வ யன்று பார்லிமெண்டில் கூடியது. அக் கூட்டத்தில் மகாத்மா பேசியதாவது:—

ஓர் அடிமையாயிருந்து உங்களுடன் ஒத்துழைப்பதைவிட என்னை நீங்கள் சிறைபடுத்துவதே சிறந்ததென நான் மதிக்கிறேன். பாதுகாப்புகளைப் பற்றியே நான் பெரிதும் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற லண்டன் மகாநாட்டில் பாதுகாப்புகள் சம்பந்தமாய் செய்துள்ள தீர்மானத்தை காங்கிரஸ் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் சர்க்கார் வருமானத்தில் 100 க்கு 80 வீதத்தை அப்படி பாதுகாப்புகள் கட்டுப்படுத்தி விடுவதால் வருமானத்தில் எஞ்சும் 100 க்கு 20 வீதமே கல்வி, சுகாதாரம், ஆஸ்பத்திரி ரஸ்தா முதலிய நிர்மாண வேலைகளுக்கு உபயோகிப்பது சாத்யமாகும். இவ்வித நிர்மாண வேலைகளை ஒரு தலைமுறைக்கு முன்பே சர்க்கார் செய்திருக்க வேண்டும்.

அவ்வித சுயேச்சையை நான் தொடவும் விரும்பேன். நான் சிறைப்பட்டு இருந்தாலுமிருப்பேன் ஒரு புரட்சிக்காரனென்று கூறிக்கொள்வேன். ஆனால் இன்னும் 5 அல்லது 10 வருஷத்திற்குள் இன்சால்வெண்ட் ஆகக்கூடிய ஓர் சர்க்காரை ஏற்றுக்கொள்ள சற்றும் இசையேன். எந்த சுயமரியாதையுள்ள இந்தியனும் அவ்வேலையை மேற்கொள்ள மாட்டான். என் தேகத்தில் கடைசி துளி ரத்தம் உள்ளளவும் சட்டத்தை எதிர்ப்பவனாக இருந்து, நீங்கள் என்னை சிறை செய்யவோ, அன்றி என்மீது தடியடிகள் சரமாரியாகப் பொழியவோ, நான் சித்தனாக இருப்பேனேயன்றி, ஒரு அடிமையாக இருந்து உங்களுடன் ஒத்துழைக்கமாட்டேன். இராணுவம், நிதி வெளிநாட்டு சம்மந்தம் இவைகளுக்கு ஏற்படுத்தியுள்ள பாதுகாப்புகள் இந்தியாவை அடிமையிலாழ்த்தி வைப்பதாகவே இருக்கும்.

காங்கிரஸின் பூர்ண சுதந்திரமென்றால் இந்தியா பிரிட்டனை விட்டு அடியோடு பிரிந்துவிட வேண்டுமென்ற அர்த்தமல்ல: அன்றி பிரிட்டனுக்கு ஒப்ப சம அந்தஸ்தில் இந்தியா பிரிட்டனோடு என்றும் ஒன்றுபட்டிருக்கக்கூடாது என்றும் அர்த்தமல்ல. இந்தியா மீது பிற நாட்டினர் படையெடுத்து வந்துவிடுவார்களென்ற பயம் இந்தியர்களுக்குக் கிடையாது. இந்திய பாதுகாப்பை இந்தியர்களிடம் ஒப்படைத்து விட்டால் இந்தியாவே அழிந்துவிடுமென்ற பயமும் கிடையாது. இந்திய பாதுகாப்பை இந்தியரிடம் ஒப்படைத்து விடுவதென்றால், இந்திய ராணுவத்திலுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும், சோல்ஜர்களும் ராணுவத்திலிருந்து போய்விட வேண்டுமென்பது அர்த்தமல்ல. அவர்கள் இந்திய உத்தியோகஸ்தர்களுக் கீழ் வேலைசெய்ய விரும்புவார்களேயானால், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் சோல்ஜர்களும் சாதாரணமாக இந்திய ராணுவத்திலிருக்கலாம்.

சிவில் செர்விஸ் உத்தியோகஸ்தர்கள் மகா திறமையுடையவர்களாகவும், சுறுசுறுப்பாக வேலைசெய்யக் கூடியவர்களாகவுமிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து அதிகச் செலவுக்குக் காரணமிருப்பார்களேயானால் அவர்களால் இந்தியாவுக்குப் பிரயோஜனமில்லையென்றே சொல்லலாம். தற்போது இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்து வரும் உயர்ந்த சம்பளத்தைக் கொண்டு இந்திய சர்க்கார் நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியாது போகுமென்பது நிச்சயம். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கொழுத்த சம்பளம் வாங்கிக் கொண்டிருக்க, கோடிக் கணக்கான ஏழை இந்தியர்கள் அரை வயிறும் குறை வயிறுமாகப் பட்டினி கிடந்து வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள ஐரோப்பியர் நிலைமையைப் பற்றி சிலவார்த்தைகள் கூற வேண்டியது அவசியமாகும்.

ஐரோப்பியர் இந்தியர்களின் நண்பர்களாக இந்தியாவுக்கு வருவார்களேயானால், அவர்களுக்கு இந்தியாவில விசேஷ பாதுகாப்புக் கொடுக்கும்படி கேட்க வேண்டிய அவசியமே இல்லை. இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான கிராமவாசிகளின் நன்மையும் அபிவிருத்தியுமே அதிக முக்கியமானதாகும்.

Koviloor Digital Library



# கள்ளுக்கடை மறியல்.

## 1 கோடி ரூபாய் மண்.

*சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்:—*

காங்கிரஸ் தொண்டர்களின் மறியலும் பொது ஜனங்களின் மதுவிலக்குக் கிளர்ச்சியும் எவ்வளவு தூரம் பலனளித்திருக்கின்றன வென்பதை சென்ற கள்ளுக்கடை ஏலமுடிவுகளிலிருந்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். சாராயக்கடைகளின் ஏலம் இப்போது இல்லை. கள்ளுக்கடை ஏலம் தான் நடந்தது.

அநேக இடங்களில் கள்ளுக்கடைகள் ஏலம் எடுக்கப் படவில்லை யென்பது அனைவரும் அறிந்ததே. வேறுசில இடங்களில் கோரிய தொகை மிகவும் சொற்பமாயிருந்தபடியால் சர்க்கார் ஏலமுடிவை ஒப்புக் கொள்ளவில்லை. இவ்வாறு, சென்னை மாகாணத்திலுள்ள மொத்தம் 9000 கள்ளுக்கடைகளில், 3000 கடைகள் இன்னும் ஏலம் போகவில்லை யென்று தெரியவருகிறது. ஏலமும், மறு ஏலமும், டெண்டர் ஏலமும் பலமுறை நடத்தியும், எல்லா சர்க்கார் இலாகா உத்தியோகஸ்தர்களும் பெருமுயற்சி செய்தும் கூட மூன்றில் ஒருபங்கு கள்ளுக் கடைகள் இன்னும் கொடுபடாமல் பாக்கி யிருக்கின்றன:

ஏலம்போன கடைகளுக்கு மொத்தம் கிடைத்திருக்கும் வருஷாந்த குத்தகைத் தொகை சுமார் 50 லட்சம் ரூபாய். சென்ற வருஷங்களில் எல்லாக் கள்ளுக்கடைகளின் குத்தகைத் தொகையும் சேர்ந்து மொத்தம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைத்து வந்தது.

### தமிழ் நாடு

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 100-க்கு 30 கடைகள் இன்னும் ஏலம் போகவில்லை. ஏலம் போன கடைகளும் சென்ற வருஷத்தை விடப் பெரிதும் குறைந்த தொகைக்கே போயிருக்கின்றன. சராசரியில் மூன்றில் ஒரு பங்கு குறைந்திருக்கலா மென்று தெரிகிறது. ஏலம் போகாத கடைகளை டெண்டர் மூலம் விடுவதற்கு அதிகாரிகள் முயற்சிசெய்து வருகிறார்கள். சிலவிடங்களில் குத்தகைத் தொகையைப்பற்றி அதிகாரிகளுக்கும் கடைக்காரர்களுக்கும் பேரங்கள் நடந்து வருகின்றன. இதன் முடிவு என்னவாகுமென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. அந்தந்தப் பிரதேசத்தில் மதுவிலக்கு வேலை தீவிரமாகவும் பிடிவாதமாகவும் நடக்குமென்று குத்தகைக் காரர்களுக்குத் தோன்றினால் எடுக்கமாட்டார்கள். கிளர்ச்சி படுத்து விடுமென்று நினைத்தால் குறைந்த தொகைகளுக் காவது எடுத்துவிடுவார்கள்.

இதுவரையில் தமிழ் நாட்டில் ஏலம் போயிருக்கும் கடைகளுக்கு மொத்தம் வருஷாந்தர குத்தகைத் தொகை 35 லட்சம் ரூபாய் கிடைத்திருப்பதாய்த் தெரிகிறது. சென்ற வருஷத்தில் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கடைகளின் மொத்தகுத்தகைத் தொகை 80 லட்சம் ரூபாய். ஆகையால் இவ் வருஷத்தில் இதுவரை கிடைத்திருப்பது பாதியை விடக் குறைவு.

கடைக் குத்தகையல்லாமல் கள்ளுக்காக முத்திரை போடும் மரங்களின் மேல் மரவரியுண்டு. சாதாரணமாய் குத்தகைத் தொகைக்கு சமமான தொகை மரவரியிலும் கிடைப்பது வழக்கம். குத்தகைக் காரர்கள் இவ்வருஷம் மரங்களும் குறைவாகவே முத்திரை போட்டுக் கொள்வார்களென்று எதிர்பார்க்கலாம். ஆதலின் குத்தகைத் தொகை குறைந்திருக்கு மளவுக்கு, மரவரி வருமானமும் குறைந்துபோகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வரும் ஆண்டில, சர்க்கார் கலால் வருமானம் கள்ளுவகையில் மட்டும் சுமார் 75 லட்சத்திலிருந்து ஒருகோடி வரையில் குறைந்துவிடுமென்று மதிப்பிடுதல் மிகையாகாது. சராய வருமானக் கணக்கு வேறு.

### ஜில்லாக்கள்

குறிப்பிட்ட ஜில்லாக்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள மொத்தம் 560 கள்ளுக்கடைகளில், 260 கடைகள் ஏலம் போகவில்லையென்று தெரிகிறது. இவ்வாறே வடாற்காட்டில் உள்ள மொத்தம் நானூற்றுச் சில்லரைக் கடைகளில 200 கடைகள் பாக்கி யிருக்கின்றன. தென்னாற்காட்டில் மொத்தம் சுமார் 300 கடைகளில் 100 கடைகளுக்கு மேல் பாக்கி. இராமநாதபுரம் ஜில்லாவில் அநேகமாக எல்லாக் கடைகளையும் யேலத்தில் விட்டு விட்டாலும், இதற்கு முந்தைய வருஷங்களில் குத்தகைத்தொகை சுமார் 4 லட்சம் வந்திருக்க, இவ்வாண்டில் 2 லட்சம்தான் கிடைத்திருக்கிறது.

### வெற்றிக்கு அளவுகோல்

சர்க்கார் வருமானம் குறைந்ததைப் பற்றிய புள்ளி விவரங்களை ஏன் எடுத்துக் காட்டுகிறேனென்றால், இதுவே ஒரு ஜய மென்பதற்காகவல்ல; இதைக் கொண்டு திருப்தியடையவதற்காகவுமன்று கள்ளுக் குத்தகைக் காரர்கள் மதுவிலக்குக் கிளர்ச்சியின் வேகத்தையும், நம்முடைய வேலையின் பயனையும் எவ்வளவு தூரம் மதிப்பிட்டிருக்கிறார்களென்று அவை காட்டுகின்றன. அவர்கள் சூதாடிகளான போதிலும் கெட்டிக்காரர்கள். அந்தந்தப் பிரதேசத்தில் மதுவிலக்கு உணர்ச்சி எவ்வளவு தூரம் ஆழ்ந்திருக்கிற தென்பதை அவர்கள் அளந்தறிகிறார்கள். ஆகையினால் சாதாரணமாக நாம் அடைந்திருக்கும் வெற்றிக்கு ஏலத்தொகைகளைத் தக்க அளவுகோலாகக் கொள்ளலாம்.

Koviloor Digital Library



# சவத்திற்கு தாலி கட்டல்.

தங்க மதிப்பை கட்டுப்படுத்த பிரிட்டிஷாரால் முடியவில்லை. ஆகவே கட்டுப்பாட்டை நீக்கிவிட்டார்கள். தங்கம் கையிருப்பில் குறைந்தால் விலை ஏறுவது சகஜம். அம்மாதிரி கூடிவிட்டது. இந்தியாவிலும் அம்மாதிரி கட்டுப்பாட்டை நீக்கினார்கள். இங்கேயும் விலை ஏறியது. எப்பொழுது சவரன் விலை ஏறிற்றோ அப்பொழுது காகிதத்தில் மட்டும் அதன் விலையை பழைய விலையென்று எழுதிவைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. சவரன் காகித விலை மதிப்பு செத்து பிரேதமாய் விட்டது. ஆனால் இந்திய சர்க்கார் அந்த பிரேதத்தை விடவில்லை. சவரன் விலை எப்பொழுது கூடியதோ அப்பொழுதே 18 பென்ஸ் -நாணய மாற்று விகிதமும் செத்துப் போகவேண்டும். இந்தியாவில் வைஸிராய் அவசரச்சட்டம் மூலம் எப்பொழுது தங்க மதிப்பை நீக்கினாரோ அப்பொழுதே 18 பென்ஸ் விகிதம் தொலைந்தது என்றுதான் அர்த்தம். ஆனால் தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் தான் என்று சாதிக்கும் இந்த சர்க்காருக்கு நியாய புத்தி எப்படி தோன்றும்? 18 பென்ஸ் விகிதத்தை எடுத்து விட்டால் இந்தியர் கிளர்ச்சி வெற்றிபெற்றதென்று ஏற்பட்டு விடுமல்லவா? ஆகவே 18 பென்ஸை நிலைநாட்ட தீர்மானித்தார்கள். தங்கம் விலை ஏறினாலும் சரி, பவுன் விலை ஏறினாலும் சரி. பழைய பவுன் மதிப்பு செத்து பிரேதமாகி காகித மதிப்பாய் போய்விட்டாலும் அதைவிட மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்திய நாணயமாகிய வெள்ளியை செத்துப்போன சவரன் காகித மதிப்பிற்கே தாலிகட்டுவோம் என்று இந்திய மந்திரி சர். சாமுவேல் ஹோர் லண்டன் மகாநாட்டில் சொன்னார். இந்த அநியாயத்திற்கு-பிரேதத்திற்கு தாலி கட்டுவதற்கு—தான் உடந்தையாக இருக்க முடியாதென்று மகாத்மா மறுத்து விட்டார். இங்கிலாந்திலும் சகல வர்த்தக நிபுணர்களும் மகாத்மா சொல்லுவதை ஆதரிக்கிறார்கள்.

சர்க்கார் மட்டும் பிடிவாதத்தை விடவில்லை. வைஸிராய் பிறப்பித்த அவசரச் சட்டத்தை இரண்டு நாட்களில் ரத்துச் செய்தார்கள். பிரேதத்திற்கு தாலி கட்டவேண்டியது தான் என்று தீர்மானித்தார்கள். தங்க வினியோகத்தை கட்டுப் படுத்துவதற்காக புதிதாக ஒரு அவசரச்சட்டம் செய்திருக்கிறார்கள். இது வெறும் அக்கிரமம். சர். ஜிஹாங்கீர் கூட இந்த பிரேத விவாகத்தை கண்டிக்கிறார். 18 பென்ஸ் விகிதத்தால் வருஷம் சுமார் 50 கோடி ரூபாய் இந்தியாவிற்கு நஷ்டமாகி வருகிறது: தங்கம் விலைகூடிய பின்பு இதைவிட அதிக நஷ்டமாகும். இந்தியாவில் சர்க்கார் உண்டியல்களுக்கு அதிக கிராக்கி ஏற்படலாம். அதனால் சீமையிலிருக்கும் இந்திய தங்க பொக்கிஷத்தின் மீது அதிக உண்டியல்களை சர்க்கார் விற்கலாம். முடிவு என்ன? சீமையில் இருக்கும் நமது தங்கத்திற்கும் ஆபத்து ஏற்படும்.

இந்தியரின் நன்மையை உத்தேசித்து இந்த சர்க்கார் நடப்பதாயிருந்தால், இம்மாதிரி பிரேதத்தைக் கட்டி [illegible]மாட்டார்கள். 18 பென்ஸ் விகிதத்தை நிலைநாட்ட படுகுழியில் போய் விழமாட்டார்கள். ஆனால் சர்க்கார் இந்தியரைப்பற்றி கவலைப்படுவதாய் தெரியவில்லை. இந்தியரிடம் இந்த முக்கியமான விஷயங்களை ஆலோசிப்பதாயுமில்லை. ஆகவே கயிறறுந்த மத்தாளம் போல கண்டபடி போகிறார்கள்.

---

## மகாத்மா என்றால் என்ன ?

---

23ம் தேதி யன்று பார்லிமெண்டில் கூடிய சர்வ கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர் கூட்டத்தில் மகாத்மா ஒரு மணி நேரம் பேசினார். அதை மற்றொரு பத்தியில் வெளியிட்டிருக்கிறோம். அப்புறம் பலர் கேள்விகள் கேட்டனர். ஒருவர் "மகாத்மா என்றால் என்ன?" என்றார். "மகாத்மா என்றால் சர்வசாதாரணப் பேர் வழி" என்று காந்திஜி பதிலளித்தார். பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் பலர் ஞாபகார்த்தத்திற்காக தங்கள் நோட்டு புத்தகங்களில் மகாத்மா கையெழுத்திடும்படி வேண்டினர். மகாத்மா அப்படியே செய்தார்.

Koviloor Digital Library



# அருட்பெருஞ் சோதியே, வழிகாட்டு.

கிறிஸ்தவ பெரியார்களுள் செயின்ட் பிரான்சிஸ் ஒருவர். அவரது பெயரால் லண்டனில் பிரான்ஸிஸ்கன் சங்கமொன்று நடந்து வருகிறது. அந்தஸ்தாபனத்தின் ஆதரவில் 23ந் மாலை கிலெட் ஹவுஸ் கிறிஸ்தவாலயத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது. மகாத்மாஜி "வறுமையில் வறுமை" என்ற விஷயமாக சுமார் ஒரு மணி நேரம் பிரசங்கம் செய்தார். கூட்டத்திற்கு தலைமை வகித்த ஸ்ரீமதி. மாட்ராய்டன் முகவுரையாகக் கூறுகையில். அஸிஸியைச் சேர்ந்த செயின்ட் பிரான்ஸிஸ் உபதேசித்த 'வறுமையில் வறுமை' என்னும் உபதேச மொழிகளின் பிரத்தியட்ச மூர்த்தியாக உலகில் விளங்குபவர் காந்திஜி ஒருவரே என்று கூறினார். மகாத்மா உபந்யாசம் செய்ய எழுந்த பொழுது கூட்டத்திலிருந்தவர்கள் பலத்த கரகோஷம் செய்தனர். அவர் பேசியதாவது:-

சாதாரண ராஜீய விவகாரங்களில் ஒழுக்கக் குறைவும், பொய்மையும் நிறைந்திருக்கின்றன. ஆகவே நான் ராஜ்யத்தில் நுழைந்த காலத்தில் வறுமையில் வறுமையை மேற்கொள்ளுவது என்று தீர்மானித்தேன். எனது ராஜீயம் ஆத்மார்த்திகத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்று நான் இங்கு பேசுவது கூட நான் வந்திருக்கும் வட்டமேஜை மகாநாட்டு வேலையைப் போல ஒரு முக்கியமான வேலை என்று கருதுகிறேன். எல்லாரும் பணக்காரராய் இருக்கமுடியாது. ஆனால் எல்லாரும் வறுமையை மேற்கொள்ளலாம். அதற்காகவே நான் வறுமையை மேற்கொண்டேன். இயற்கையிலேயே வறுமையில் தவிக்கிறவர்களுக்கு நான் வறுமையை மேற்கொள்ள உபதேசிக்க மாட்டேன். ஆனால் வைத்திருக்கிறவர்கள் அடக்க தணிவு கொண்டால் ஒருநாட்டில் ஏற்படும் பெரிய பொருளாதார நெருக்கடியை சுலபமாய் நிவர்த்தித்து விடலாம்.

இரவு 7 மணி அடித்ததும் காந்திஜி, மீராபாய், மகாதேவ தேசாய் இவர்கள் வழக்கம் போல் தெய்வ பிரார்த்தனை செய்தனர். கிறிஸ்தவாலய பீடத்தில் மகாத்மா நின்று கொண்டு பிரார்த்தித்தார். கூட்டத்திலிருந்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் ஆசனத்திலமர்ந்து இரு கண்களையும் மூடி மெய்மறந்து சர்வ வல்லமையுள்ள கடவுளின்மீது தங்கள் கருத்தைச் செலுத்தினர். பிரார்த்தனை முடிந்ததும் யாவரும் எழுந்து நின்று மகாத்மா பெரிதும் விரும்பும் "அருட்பெரும் ஜோதியே வழிகாட்டுக" என்னும் பதத்தை அடியாகக் கொண்ட கீதத்தை மகாத்மா உள்ளிட்டு அனைவரும் பாடினர்.

## காந்தி மகிமை.

(ஐந்துகானுக்கிளைய என்றமெட்டு)

(சேலம் எஸ். ராமஸ்வாமி)

1 பஞ்சத்தை பாரில் போக்கி
  பதம் பெற நேரில் நோக்கி,
நெஞ்சத்தைத் தூய்மைபாக்கி-
  காந்தி-நேரில் தயை புரிந்தார்.

2 பண்ணுமவைத்தொலைய
  அன்னியர் மனங்குலைய
மன்னுமிந்தியர் உய்ய-
  காந்தி-மாபெரும் கதரளித்தார்.

3 மல்லை திவமளிக்கும்
  மான்செஸ்டர் மில்களெல்லாம்
பல்லை யிளிப்பதற்கே-காந்தி-
  பாரிடைக் கதரளித்தார்

4 சுதந்திர தீங்கனியை
  சூழ்ந்துமே நாமடைந்து
நிரந்தரமாய்ப் புசிக்க-
  காந்தி-நேர்மைவழி காட்டினார்

5 சாம்ராஜ்ய போர்படையை
  சாதுர்யத்துடன் வெல்ல
போற்றரிய சாத்விகமே-
  காந்தி-பொருந்துமென வுரைத்தார்

## துணிக்கடைக்காரர் தேச பக்தி

மதுரையில் மறியல் மும்முரம். ஆகவே சீமை ஜவுளிக்கடைக் காரர் அனைவரும் தங்கள் சாக்குகளை ரகவாரியாக பிரித்து கட்டி காங்கிரஸ் சீல் வைத்து அறையில் போட்டு பூட்டி விட்டார்கள். திருவையாற்றிலும் மறியல் மும்முரமானதால், சீமைதுணி கடைக்காரர் தங்கள் ஜவுளி மூட்டைகளுக்கு காங்கிரஸ் சீல் வைத்து பூட்டிவிட்டார்கள்.

Koviloor Digital Library



# பூஜை வேளையில் கரடி.

பாட்டியாலா மகாராஜாவும் பிக்கானீர் மகாராஜாவும் தான் ஐக்கிய ஆட்சி திட்டத்தின் மீது முதல் முதலில் காதல் கொண்டவர்கள். இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுப்பதாயிருந்தால் தலைமை சர்க்கார் சட்டசபைக்கு பொறுப்புள்ளதாயிருக்க வேண்டும். சுதேச மன்னர்களின் ஒப்பந்தங்களோ, உடன்படிக்கைகளோ எப்படியிருந்தாலும், அவர்கள் மீது தற்காலம் அதிகாரம் செலுத்தி வருபவர்கள் இந்திய சர்க்காரே. ஆகவே தலைமை சர்க்காராகிய இந்திய சர்க்காரில் பிரிட்டிஷ் இந்திய பிரஜைகளுக்கு பொறுப்பாட்சி கொடுக்கக் கூடாதென்று பாட்டியாலா கோஷ்டியார் சூழ்ச்சி செய்து வந்தனர். அப்படி கொடுத்துவிட்டால் பிரிட்டிஷ் இந்தியர் கையில் தங்கள் குடுமிகள் அகப்பட்டு விடுமாம். வெள்ளையர் கையில்தான் தங்கள் குடுமிகள் இருக்கவேண்டுமென்பது அவர்கள் ஆசை. இந்த முட்டுக்கட்டை இருந்தபடியால் லண்டன் மகா நாட்டில் இதை முதலில் தீர்க்கவேண்டியது அவசியமாயிருந்தது. இச்சமயம் மன்னர்கள் தங்களையும் சேர்த்து சட்டசபை அமைப்பதாயிருந்தால் ஐக்கிய ஆட்சிக்கு தாங்கள் தயார் என்று சொன்னார்கள். இருக்கிற நிலைமையை பார்த்தால், தங்களை எதிர்பாராமலே பிரிட்டிஷ் இந்தியா சுயராஜ்யம் பெற்றுவிடும் என்று அவர்களுக்கு தோன்றியது. ஆகவே இதை நிவர்த்திக்க ஐக்கிய ஆட்சி ஒன்றே சரியான வழி என்று அவர்களுக்குப்படவே, ஐக்கிய ஆட்சி அமைப்பின் மீது அளவற்ற காதல் கொண்டனர்.

பாட்டியாலா ராஜா ஒரு குஷால் புருஷர். அவருக்கு காதல் எப்பொழுதும் ஒரே இடத்தில் நிலைத்திருப்பதில்லை. பிக்கானீரும், பாட்டியாலாவுமே முதலில் ஐக்கிய ஆட்சிமீது காதல் கொண்டவர்கள். இருந்தும், இந்தியாவிற்கு வந்தவுடன் பாட்டியாலாவின் காதல் சூரியனைக்கண்ட பனிக்கட்டியைப் போல உருகிப் போயிற்று. ஜாடியாகப்பேசி, மறைமுகமாகப் பேசி, கடைசியாக பகிரங்கமாய் ஐக்கிய ஆட்சியை எதிர்த்துப் பேசவும் கிளம்பினார். இதற்குக் காரணமென்ன? மன்னர் சபைக்கு அவரை தலைவராய் நியமிக்காததே காரணமென்று பிக்கானீர் மகாராஜா பகிரங்கமாய்ச் சொன்னார். ஆகவே வேறு ஆதாரம் தேடவேண்டியதில்லை. முடிவில் பாட்டியாலா ராஜா லண்டன் மகாநாட்டிற்குக்கூட இத்தடவை போகாமல் நின்றுவிட்டார்.

பழைய காதலர்களில் ஒருவர் போனால் மற்றொருவரான பிக்கானீர் இருக்கிறார். இவராவது பழைய காதல் நீடித்து நிற்குமென்று நம்பினோம். ஆனால் விதி யாரைத்தான் விட்டது? பாவம், பிக்கானீரும் பாட்டியாலா கட்சிக்கு வந்துவிடுவாரோ என்று பயப்படக்கூடியதாயிருக்கிறது. சென்றவாரம் லண்டன் மகாநாட்டில் நமது பிக்கானீர் மகாராஜா ஒரு வெடிக்குண்டு போட்டார். எந்த சமஸ்தானம் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் ஐக்கிய சட்டசபைகளில் சமஸ்தானங்களுக்குரிய ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிட வேண்டுமாம். சமஸ்தான உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாதாம். நேரடியாக வரி விதிக்க சட்டசபைகளுக்கு அதிகாரம் கூடாதாம். இவற்றை ஒப்புக்கொண்டால்தான் சமஸ்தானங்கள் ஐக்கிய ஆட்சியில் சேர முடியுமாம். பிக்கானீர் ராஜா, மகாத்மா அங்கிருக்கும் இச்சமயத்தில் வீண் குதர்க்கம் பேசுவது, பூஜை வேளையில் கரடி புகுந்ததைப்போல இருக்கிறது.

ஆனால் ஒரு விஷயம். இந்த கரடிகளுக்கெல்லாம் காங்கிரஸ் அஞ்சப்போவதில்லை. நேரு அறிக்கையில் சமஸ்தானங்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறதென்பதை பிக்கானீர் நன்றாய் அறிவார். இப்பொழுது இந்திய சர்க்காருக்கு சமஸ்தானங்கள் மீது எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அதை அப்படியே சுயராஜ்ய சர்க்காருக்கு மாற்றிவிட வேண்டுமென்று நேரு அறிக்கை சொல்லுகிறது. மன்னர்கள் வழிக்குவந்தால் சரி. இல்லாவிட்டால் இவர்களுக்காக இந்தியர் சுயராஜ்யம் பெறுவதை ஒத்திவைக்கப் போவதில்லை. சுயராஜ்ய சர்க்கார் சமஸ்தானங்களின் பாதுகாப்பை எடுத்துக்கொள்ள நேரிடும். தற்கால இந்திய சர்க்கார் செய்யும் வேலையை, சுயராஜ்ய சர்க்கார் மட்டும் ஏன் செய்யக்கூடாது? அதுவே கடைசி முடிவு. மன்னர்களே, வீண் பிடிவாதம் காட்டி ஐக்கிய ஆட்சி திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டால், அதனால் பாதகமடைவது நீங்களேயொழிய நாங்களல்ல.

Koviloor Digital Library



## பொக்கிஷ மந்திரி பொம்மலாட்டம்

பொக்கிஷ மந்திரி சர். ஜார்ஜ் ஷுஸ்டர் 24ந் தேதியன்று இந்திய சட்டசபையில் ஒரு அறிக்கை வாசித்தார். அறிக்கையின் நீளம் 2 முழம் இருக்கும். இந்திய மந்திரி சொல்லியதை எப்படி அமுலுக்கு கொண்டுவரப் போகிறார்கள் என்பதே அறிக்கையின் கருத்து. ஆனால் இந்திய மந்திரி வெள்ளிக்கும் காகித சவரனுக்கும் முடிச்சுப்போட்டது எப்படி நியாயமாகும் என்பதைப்பற்றி அதில் ஒரு வார்த்தையை காணவில்லை. இந்திய சட்டசபையில் உள்ளவர்கள் தம்மிஷ்டம் போல ஆடுவார்கள் என்பது அவர்கள் நினைப்பு. ஆகவே அவர்களைக்கொண்டு பொம்மலாட்டம் காட்ட அவர் சூழ்ச்சி செய்கிறார். இது எவ்வளவு பலிக்குமென்பதை நாம் அறியோம். பவுன் மதிப்பிற்கும் வெள்ளிக்கும் பலவந்த விவாகம் செய்வதை ஆட்சேபிக்க சர். ஜிஹாங்கீர், ஷண்முகம் செட்டியார், மோடி முதலியவர்கள் சட்டசபையில் இருப்பது உண்மையே. ஓணான் வர்ணத்தை எப்படி நிலையானதென்று நம்பமுடியாதோ, அதைப்போல இவர்கள் ஆட்சேபனையையும் பிரமாதமாய் நினைப்பதற்கில்லை. திங்கட்கிழமை கழிந்தால் இவர்கள் நிலைமை இன்னதென்று நிச்சயமாகச் சொல்லமுடியும். தங்க விற்பனையை கட்டுப்படுத்த வைசிராய் புதிதாக ஒரு அவசரச் சட்டத்தை உண்டுபண்ணியிருக்கிறார். இந்தச் சட்டத்தின் மூலமாக இந்தியாவை விட்டு தங்கம் வெளியே போவதை தடுக்க முடியாது. இதை பொக்கிஷ மந்திரியே ஒப்புக் கொள்ளுகிறார். சீமையில் இந்திய மந்திரியிடம் இருக்கும் 3½ கோடி பவுன் பெறுமான தங்கத்தை குறைக்காமல் இருக்க இங்கே உண்டியல்களை விற்பதை நிறுத்தவும் சர்க்கார் தயாராயில்லை. ஆகவே அந்த தங்கமும் குறைபட நேரிடலாம். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிற்கு உதவி செய்யப்போவதாக முன்பு சொன்னார்கள். அந்த உதவியை இப்பொழுது கொடுக்கப்போகிறார்களா அல்லது இங்கயே இருக்கிற தங்கத்தையும் திருந்தபிறகு கொடுப்பதைப்பற்றி யோசிக்கப்போகிறார்களா என்பதும் தெரியவில்லை. இவற்றையெல்லாம் பார்த்தால் பொக்கிஷ மந்திரியின் பொம்மலாட்டம் தானாக வெளியாகிறது.

## செய்தித் திரட்டு.

சென்னை காங்கிரஸ் தொண்டர் ஸ்ரீ. சுப்பராவ் மீது ஜாமீன் வழக்கு தொடர்ந்தார்கள். எதிர் வழக்காடியும் பயனில்லை. சிப் பிரசிடென்சி மாஜிஸ்திரேட் ஜாமீன் கட்டும்படி கேட்டார். ஸ்ரீ. சுப்பராவ் ஜாமீன் கட்ட மறுத்து ஜெயில் சென்றார்.

வங்காள காங்கிரசில் ஸ்ரீ. சென்குப்தாவிற்கும் சுபாஷ் பாபுவுக்கும் ஏற்பட்ட தகராறை தீர்க்க ஸ்ரீ. ஆனேயை காங்கிரஸ் காரியக்கமிட்டி நியமித்தது. இருதரப்பாரும் ராஜியாய் போய்விட்ட படியால் விசாரணை நின்றது. சுபாஷ் போஸ் கோஷ்டியார் மாகாண காங்கிரசை விட்டு விலகினர். புதிய கமிட்டியில் இரு கட்சியாரும் சமமாய் ஸ்தானம் பெறுவார்கள். ஜனவரி மாதம் வரை இந்த ஏற்பாடு. அப்புறம் புதிய தேர்தல். பாடலிபுரத்தில் வெடிக்குண்டு போட்டதால் ஒரு சப் இன்ஸ்பெக்டர் இறந்ததாகவும், ஒரு ஹெட்-கான்ஸ்டேபிள் காயமடைந்ததாகவும் ஹசாரிலால் என்பவர் மீது வழக்கு. செஷன்ஸ் ஜட்ஜ் அவருக்கு ஜன்ம தண்டனை விதித்தார்.

இங்கிலாந்தில் தேசிய சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் புதிய சர்க்காருக்கு "பட்டினி சர்க்கார்" என்று தொழிலாளர் பெயர் வைத்திருக்கின்றனர்.

### பூசாரி குறும்பு.

சாமி வரம் கொடுத்தாலும், பூசாரிக்கு மனமில்லை என்று சொல்லுவார்கள். வைசிராய் லார்ட் இர்வினுக்கு ஏழை ஜனங்கள் உப்பெடுப்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் குட்டி கர்ணங்கள், தாசில்தார்களுக்கு மனம் சகிக்கவில்லை. யார் வீட்டு பணம் போகிறதென்ற கவலையோ, அல்லது சர்க்காருக்கு தத்து புத்திரர்கள் என்ற நினைப்போ தெரியவில்லை. திருநெல்வேலி ஜில்லாவில், கடற்கரை ஓரங்களில் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் உப்பு செய்யவோ எடுக்கவோ கூடாதென்று குட்டி அதிகாரிகள் ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள்.

புறம்போக்குநிலங்களில் உப்புசெய்யகூடாதென்றால் யார் முதுகில் செய்யச் சொல்லுகிறார்கள்? இப்படி ஆட்சேபிப்பது காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கே விரோதம், ஆகவே ஸ்ரீ. ராஜகோபாலச்சாரி இதைப்பற்றி கவர்னருக்கு எழுதினார். குட்டி அதிகாரிகள் சொல்லும் ஆட்சேபனையை கவர்னர் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, புறம்போக்கு நிலங்களை உப்புச்செய்ய உபயோகிக்கலாம் என்று சொல்லிவிட்டார். கவர்னரின் நீதிக்காக அவரைப் பாராட்டுகிறோம்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M 2677.

விலை காலணா
(மலாய் 1¼ சதம்)

# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 1௳, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 15௳ வியாழக்கிழமை || இதழ் 33

## தொப்பி கவிழ்ந்தது



(பிரிட்டனில் துணி செய்யுமிடம் லங்காஷயர். மகாத்மா காந்தி அப்பிரதேசத்தைப் பார்க்க சென்ற வாரம் சென்றிருந்தார்).

தொழிலாளர்:—மகாத்மாவே, நாங்கள் பட்டினி கிடக்கிறோம். எங்களை காப்பாற்றுங்கள். ஏதாவது தர்மஞ் செய்யுங்கள்.

மகாத்மா:—உங்களைப்போலவே நானும் ஏழை. இந்தியரும் நீங்களும் எனக்கு ஒன்றே. ஆனால் ஒரு வழி இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமானால், அநியாயமாக இந்திய மாதா கையில் பூட்டியிருக்கும் விலங்கை உடையுங்கள். அப்புறம் என்னால் கூடியதைச் செய்கிறேன்.

(கிரீடமாயிருந்த தொப்பி பிட்சா பாத்திரமாய் மாறிவிட்டது. இனியாவது இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுப்பார்களா?)

Koviloor Digital Library



# காந்தி ஜயந்தி.

நாளை அக்டோபர் 2வ யன்று உலக சிரேஷ்டர் மகாத்மாவின் பிறந்த திருநாள். 63-வது வயது ஆரம்பம். மகாத்மா இந்தியாவில் பிறந்ததால் நாம் எல்லோரும் புனிதர்களானோம். அவரால் புது சக்தி பெற்றோம். புத்துயிர் பெற்றோம். புதிய பிறப்பு அடைந்தோம். இந்தியர் என்றால் வாய் பேசா அடிமைகள் என்ற பெயர் மாறி, சுதந்திரத்திற்காக உயிரையும் விடுவார்கள் என்ற நாமம் படைத்தோம். போலீஸ் தடியடியும், அடக்குமுறைச் சட்டங்களும், ஜெயில் கொடுமைகளும சுவர்க்க போகங்கள் என்று நினைக்கும் மனோ சக்தியை வளர்த்தோம். இவ்வளவிற்கும் காரணமாயிருப்பது 98 பவுண்ட் நிறைகூட இல்லாத அந்த பரிசுத்த ஆத்மாவான காந்தியே. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது. மகாத்மாவிற்கு நாம் கைம்மாறு செய்யக்கூடிய யோக்கியதையுள்ளவர்களல்ல. மகாத்மாவும் கைம்மாறு வேண்டா பரம புருஷர். அப்படியானால் அவர் பிறந்த திருநாளை கொண்டாடுவது எப்படி? அவருக்கு எது உகந்ததோ அதைச் செய்வதே சிறந்தவழி. மகாத்மா கனவிலும் நினைவிலும் எதை நினைத்துக் கொண்டிருக்கிறார்? ஏழைகள் படும் துன்பத்தையே! ஏழைகளுக்கு உதவி செய்வதைவிட கடவுளுக்கு உகந்த சிறந்த சேவை வேறு எதுவுமில்லை. மகாத்மாவிற்கும் அப்படியே. ஏழைகளுக்காக மகாத்மா என்ன செய்யச் சொல்லுகிறார்? கத்தர், கத்தர், கத்தர். 1922-ம் வருஷம் மகாத்மா ஜெயிலுக்குப் போகும்போது, சரோஜினி தேவி அவரிடம் சென்று, "தேசத்திற்கு என்ன ஆக்ஞை இடுகிறீர்கள்?" என்று கேட்டார், மகாத்மா "கத்தர்" என்று ஒரு வார்த்தையில் பதில் சொன்னார். சென்ற வருஷம் ஜெயிலுக்குப் போகும்போதும் அதையே திருப்பிச் சொன்னார். உங்களுக்கு மகாத்மா மீது அன்பிருக்குமானால் வெறும் வாய் உபசாரத்தால் பயனில்லை. நீங்கள் கத்தர் கட்டாவிட்டால் இன்றே கட்டுங்கள். ஏற்கனவே கட்டியிருந்தால் புதிதாக மூவரையாவது கத்தர் கட்டும்படி செய்யுங்கள். அது போதும். அதுவே மகாத்மாவிற்கு பிறந்த தினத்தன்று நீங்கள் அளிக்கும் காணிக்கை.

# சர்க்கார் சண்டித்தனம்.

வட்டமேஜை மகாநாடு முன்னுக்கும் போகவில்லை, பின்னுக்கும் போகவில்லை, அப்படியே நிற்கிறது என்று மகாத்மா சொல்லுகிறார். பிரிட்டிஷ் சர்க்கார் எதற்காக இம்மாதிரி காலட்சேபம் செய்கிறார்கள் என்று கேட்கிறோம். இதற்கிடையில் மறுபடியும் தேர்தல் பேச்சு கிளம்பியிருக்கிறது. தற்கால பார்லிமென்ட் கலைந்து புதிய தேர்தல் ஏற்பட்டால், மந்திரி சபை வட்டமேஜை மகாநாட்டு வேலையை சிரத்தையாக கவனிக்க முடியாது. ஏதோ முறைக்கு அங்கு வந்து அழுது கொண்டிருப்பார்கள். அப்படி தேர்தல் ஏற்பட்டு, மறுபடியும் மந்திரி சபை அமைகிறவரை வட்டமேஜை மகாநாட்டை ஒத்திவைக்கவோ அல்லது முக்கியமான விஷயமாய் தீர்மானம்செய்யாமல் நடத்திக்கொண்டு போகவோ நேரிட்டால் அப்பொழுது மகாத்மா என்ன செய்வார்? "பேசாமல் இந்தியா திரும்பி விடுவேன். திரும்ப வருகிற விஷயம் அப்பொழுதுள்ள நிலைமையைப் பொறுத்தது" என்று மகாத்மா சொல்லுகிறார். சர்க்கார் நாள் கடத்திக்கொண்டு போகும் சண்டித்தனம் மகாத்மாவிற்கு பிடிக்கவில்லை. இந்தியாவிற்கும் பிரிட்டனுக்குமுள்ள தகராறை தீர்க்க வேண்டியது அவ்வளவு முக்கியமல்லவென்றோ, அல்லது தீர்க்காமல் பிரிட்டனின் உள்நாட்டு நிலைமையை சீர்படுத்திவிடலாமென்றோ மந்திரிகள் நினைப்பதாயிருந்தால் அதனால் பெரிய பாதகம் ஏற்படுமென்று மகாத்மா எச்சரிக்கிறார். இதற்கு உதாரணம் காட்ட வேறு எங்கும் போகவேண்டியதில்லை. லங்காஷயர் கண்ணெதிரே நிற்கிறது. பிரிட்டனின் தற்கால பொருளாதார நெருக்கடிக்கு இந்திய பகிஷ்காரமே முக்கியமான காரணம். அதை அலட்சியம் செய்தால், பிரிட்டன் இன்னும் கேடுகெட்ட நிலைமைக்கு வந்து சேரும். மகாத்மா வெறுங்கையோடு இந்தியா திரும்பினால் என்ன நேருமென்பதை பிரிட்டனே யூகித்துக் கொள்ளலாம். மகாத்மா சொல்லுவதை எடுத்துக் காட்டுகிறோம்:—"மகாநாடு முறிந்தால் கடவுளே காப்பாற்றவேண்டும். நரகத்தை போன்ற கஷ்டங்களை இந்தியா அநுபவிக்க நேரும். ஆனால் விடுதலை கிடைத்தாலொழிய இந்தியா சாந்தி பெறாது. அது மட்டும் நிச்சயமான உண்மை."

## மகாத்மா எச்சரிக்கை

மகாத்மாஜி சீமைத்துணி செய்யும் இடமாகிய லங்காஷயருக்கு 25ல இரவு விஜயமானார். வழி நெடுக ஜனங்கள் கூடி ஒவ்வொரு ஸ்டேஷனிலும் உபசரித்தார்கள். பருத்தி சங்கத் தலைவர் வழியில் மகாத்மாவை வரவேற்று அவருடன் பிரயாணம் செய்தார். மகாத்மாவுக்கு போலீஸ் பந்தோபஸ்து பலமாயிருந்தது. இந்திய பகிஷ்காரத்தால் லங்காஷயர் மில்கள் மூடிக்கிடக்கின்றன என்பதையும் லட்சக்கணக்கான தொழிலாளர் பட்டினி கிடக்கிறார்கள் என்பதையும் நண்பர்கள் அறிவார்கள். தொழிலாளர், முதலாளிகள், "மான்செஸ்டர் வர்த்தக சங்கத்தலைவர் ஸ்ரீ. பார்லோ ஆகியவர்கள் மகாத்மாவிடம் வந்து, பகிஷ்காரத்தால் தங்களுக்கு நேரிட்டிருக்கும் துன்பங்களை எடுத்துக் காட்டினர். மகாத்மா ஒளிமறைவில்லாமல் விஷயத்தை விளக்கிக் காட்டினார். இந்திய விவசாயிகள் பல மாதங்கள் வேலையில்லாமல் இருப்பதை போக்கவே கத்தர் இயக்கம் ஏற்பட்டிருப்பதை எடுத்துக் கூறினார். கடைசியாக ஒரு எச்சரிக்கை செய்தார். பிரிட்டன் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்து நண்பனாக்கிக் கொண்டால், இந்தியாவில் தற்காலம் செய்ய முடிகிற துணிபோக மீதம் வேண்டியிருந்தால், லங்காஷயரிடம் வாங்க தாம் சம்மதிக்க தயார் என்று சொன்னார். அப்படியில்லாமல் போனால் பகிஷ்காரத்தை தவிர வேறு வழியில்லை. லங்காஷயரில் தொழிலாளர் வேலையில்லாமல் படும் கஷ்டம் மகாத்மாவை உருக்கியது. ஆனால் உபகாரச் சம்பளம் பெறும் சீமை வேலையில்லாத தொழிலாளரைவிட, இந்திய தொழிலாளர் அதிக கஷ்டப்படுவதாகச் சொன்னார். லங்காஷயரைப் பற்றி அவர் கூறிய அபிப்பிராயமாவது:—"எனக்களித்த வரவேற்பைக் கண்டு நான் மனம் பூரிக்கிறேன். ஆனால் லங்காஷயரின் தரித்திரத்தைப் பார்த்து மனக்கஷ்டமடைகிறேன். இதற்கு நான் ஒருவகையில் பொறுப்பு என்பதை நினைக்கும் போது என் மனம் வேதனையடைகிறது. ஆனால் இதை வேண்டுமென்று நான் செய்யவில்லை. உலகத்திலேயே அதி தரித்திரர்களான இந்தியர் க்ஷேமமடைவதற்காகவே நான் முயற்சி செய்தேன். ஆகவே அதை நினைத்து என்மனம் நிம்மதியடைகிறது. இந்தியாவின் தரித்திரத்தைப் பார்த்தால் லங்காஷயர் தரித்திரம் அவ்வளவு பெரிதல்ல. ஏழை இந்தியாவும், லங்காஷயரும் எனக்கு ஒன்றே. இரண்டுக்கும் சாதகமான ஒரு வழியை கடவுள் காட்டுவாராக."

## சந்தேகத்தால் வந்த வினை.

அகில இந்திய வர்த்தக சங்கங்களின் தலைவராகிய ஸ்ரீ. ஜமால் முகமது சாகிப் லண்டன் மகா நாட்டிற்கு ஒரு பிரதிநிதியாக தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். அவருக்கு சென்ற சனிக்கிழமை சென்னையில் ஒரு தேக்கச்சேரி உபசாரம் நடைபெற்றது. அச்சமயம் அவர் பேசியதாவது:—

பொதுத் தேர்தல் தொகுதி வேண்டுமென்பதையே நான் ஆதரிக்கிறேன். ஏனெனில் சமூகங்களுக்குள் அடிக்கடி சண்டை வருவதை நான் விரும்பவில்லை. சிறுபான்மை சமூகங்களுக்கு பொதுத் தேர்தல் தொகுதியே நன்மையளிக்கும். இந்தியருக்கு இப்பொழுதுள்ள பல கஷ்டங்கள், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் நம்பாமல் இருப்பதால் ஏற்பட்டவையாகும். 18 பென்ஸ் நாணய மாற்று விகிதத்தை எடுத்துக்கொள்ளுவோம். 18 பென்ஸ் விகிதச் சட்டம் 1927ல் இந்திய சட்டசபையில் நிறைவேறியது. முஸ்லிம்களும் இந்துக்களும் சட்டசபையில் அச்சமயம் ஒற்றுமையாயில்லை. முஸ்லிம்கள் சர்க்கார் பக்கம் ஓட்டு கொடுத்தார்கள். அதனாலேயே 18 பென்ஸ் விகிதம் நிறைவேறியது. பலன் என்ன? உடம்பில் ஒரு சொட்டு ரத்தம்கூட இல்லாமல் சகல வகுப்பாருக்கும் போய்விட்டது. இதை வெள்ளையர்கூட ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாயிருந்தால் இந்தக் கஷ்டம் நேரிடுமா? இதனால் நமது பொருளாதார நிலைமையே கெட்டுப் போயிற்று. இங்கிலாந்தைப் பாருங்கள். தங்க மதிப்பு அவர்களுக்கு நன்மை செய்வதாயில்லை. அந்த வினாடியே அதை நீக்கிவிட்டார்கள். இந்தியாவிற்கு கெடுதலானதை நீக்க நம்மால் முடியவில்லை. இந்திய சர்க்கார் எப்படி நடக்க வேண்டுமென்பதை லண்டனில் இருக்கும் இந்தியா மந்திரி நிர்ணயிக்கிறார். அவருக்கு அவருடைய பொக்கிஷ காரியதரிசி ஆலோசனை கூறுகிறார். இந்தியாவிலுள்ள 35 கோடி ஜனங்களைப்பற்றி அவர்களுக்கு கவலையேயில்லை. 18 பென்ஸ் விகிதம் மிகவும் மோசமானது என்பதை இந்திய சர்க்கார் அறிவார்கள். அறிந்தும் இந்திய மந்திரியை மீற முடியவில்லை. நாம் ஒற்றுமையாயிருந்தால் இப்படி நடக்க முடியுமா?

Koviloor Digital Library



## ஷூஸ்டர் தோல்வி.

சென்ற சனிக்கிழமை இந்திய சட்டசபையில் ஸ்ரீ. ஷண்முகம் செட்டியார் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். பவுன் மதிப்புக்கும் வெள்ளிக்கும் போட்டு வைத்திருக்கும் முடிச்சை வெட்டிவிடவேண்டும். முதலில் வைசிராய் போட்ட அவசரச் சட்டத்தை புதிப்பித்து தங்க மதிப்பை நீக்கி விடவேண்டும். இரண்டாவது அவசரச்சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் இவையே ஸ்ரீ. செட்டியார் தீர்மானத்தின் சாராம்சம்: இத்தீர்மானத்திற்கு சாதகமாக 64 ஓட்டுகளும் பாதகமாக 40 ஓட்டுகளும் கிடைத்தபடியால் தீர்மானம் நிறைவேறிற்று. சர்க்கார் இதன்படி நடப்பார்களென்று நாம் நினைக்கவில்லை. வேறு யாரும் நினைக்கவும் மாட்டார்கள். ஆனால் இந்த விவாதத்தில் பொக்கிஷ மந்திரி ஷூஸ்டர் கலங்கிப் போனார். பதில் சொல்ல முடியாமல் திகைத்தார். ஸ்ரீ. செட்டியாரின் ஆணித்தரமான பேச்சிற்கு பதிலளிக்க வகையில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்தார். ஸ்ரீ. செட்டியார் வாதத்தில் கெட்டிக்காரரென்றும், சர்க்கார் மந்திரியாக அவர் இருந்திருந்தால் சர்க்கார் கட்சியை எடுத்துக்காட்ட இம்மாதிரியே ஆணித்தரமாய் பேசியிருப்பாரென்றும் சொன்னார். இது வாதத்திற்கு பதிலாகாது. சோம்பேறிப் பேச்சு. வெறும் கொண்டிக்காரனம்; சர். ஜார்ஜ் ஷூஸ்டர் இந்தியாவிற்கு நன்மை செய்யவேண்டுமென்றுதான் முதலில் தங்க மதிப்பை நீக்க வைசிராயைக் கொண்டு அவசரச்சட்டம் செய்யச்சொன்னார். அச்சட்டம் நீடித்திருந்தால், 16 பென்சுக்கு வந்திருக்கும். ஆனால் லண்டன் சர்க்கார் அப்படிச் செய்ய விரும்பவில்லை. இந்தியாவிலுள்ள வெள்ளை இறக்குமதிக்காரர் சுமார் 60 கோடி ரூபாய் வரை கொடுக்கவேண்டியிருக்கிறது. திடீரென்று நாணயமாற்று மாறிவிட்டால் அவர்கள் நஷ்டமடைய நேரிடும். அதனால் முதலில் செய்த சட்டத்தை ரத்துச் செய்து பின்னால் புதிய சட்டம் செய்ய வேண்டியதாயிற்று. அதாவது இந்திய சர்க்கார் லண்டன் சர்க்காருக்கு தலை குனிய நேரிட்டது. சர். ஷூஸ்டருக்கு கடுகளவாவது சுயமரியாதை இருந்திருந்தால், இந்தியா மந்திரி அறிக்கையைப் பார்த்தவுடன் ராஜிநாமாச் செய்திருக்க வேண்டும். இதுவரை ராஜிநாமாச் செய்யவில்லை. அவருக்கு சுயமரியாதை இருப்பதாக நாம் நினைக்க முடியாது

## நாணயம் போகிறது !

சவரன் மதிப்போடு இந்தியாவின் வெள்ளி நாணயத்தை பிணைத்ததால் இந்தியாவின் வெள்ளி நாணயத்திற்கு மதிப்பு குறைந்து கொண்டு போகிறது. புதிய பிணைப்பால் பிரிட்டிஷ் சரக்குகள் மட்டும் பழைய விலையில் விற்கும். ஆனால் மற்ற நாட்டு சரக்குகள் விலை கூடும். இதனால் இந்தியா ஏராளமாக நஷ்டமடையும். ஏனெனில், 1929-30ம் வருஷ கணக்குப்படி இந்தியாவின் வெளி நாட்டு வர்த்தகம் 559 கோடி ரூபாய். இதில் 172 கோடியே பிரிட்டனுடன் செய்யும் வர்த்தகம். சவரன் மதிப்போடு இணைத்ததால் மற்ற நாடுகளின் நாணய மாற்று விகிதம் கூடிக்கொண்டு போகிறது. சவரன் மதிப்போடு இணைப்பதற்கு முன்பு சென்னை நாணயமாற்று எப்படியிருந்ததென்று கவனிப்போம். அமெரிக்கா டாலர்கள் நூறுக்கு ரூ. 279 ஆக இருந்தது. பிரான்சு மார்க்குகள் என்ற நாணயம் நூறு ரூபாய்க்கு 900 விதம் கிடைத்தது. இப்பொழுது எப்படியிருக்கிறது தெரியுமா? அமெரிக்க டாலர்கள் நூறின் விலை ரூ. 279 லிருந்து 380க்கு உயர்ந்து விட்டது. நூறு ரூபாய்க்கு 900 விதம் கிடைத்து வந்த பிராஞ்சு மார்க்குகள் 650க்கு குறைந்து விட்டன. சர்க்காரின் பிடிவாதமான செய்கை எவ்வளவு பாதகத்தை விளைவித்திருக்கிறது என்பதை இதிலிருந்து நண்பர்கள் அறிந்து கொள்ளலாம். இந்த கூடிய விலைக்காவது அன்னிய நாட்டார் ஒப்புக்கொள்ளுகிறார்களா? அதுவுமில்லை. பாதாளத்தில் விழுந்து போன பிரிட்டிஷ் சவரனோடு இந்திய நாணயத்தை பிணைத்திருப்பதால், இன்னம் என்னென்ன கதி அதற்கு நேரிடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே பவுன் விலைக்கு சரக்கு அனுப்ப மறுக்கிறார்கள். டாலர் விலைக்கு சரக்குகள் வாங்க சம்மதமானால் தான் அனுப்ப முடியுமென்று சென்னையில் பல வர்த்தகர்களுக்கு தந்தி வந்திருக்கிறது. இதைவிட மானக்கேடு வேறு வேண்டுமோ? இங்கிலாந்திற்காக இந்தியாவின் நாணயத்தை இழக்கும்படி சொல்லுவது வெறும் அயோக்கியத்தனமல்லவா?

Koviloor Digital Library



# ஷண்முகம் செட்டியார் சவுக்கடி.

இந்திய சட்டசபையில், பவுன் மதிப்பு—வெள்ளி தாலி கட்டியதைக் கண்டித்து ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அச்சமயம் இந்திய சர்க்காரின் பொக்கிஷ நிர்வாகக் கொள்கையின் ஊழலை வெளிப்படுத்தி அவர் கொடுத்த சவுக்கடியாவது :—

பிரிட்டிஷ் சர்க்கார் தங்க நாணய மதிப்பை எடுத்துவிட்டதாக சீமையிலிருந்து தந்தி வந்தது. உடனே பொக்கிஷ மந்திரி சர். ஜார்ஜ் ஷுஸ்டர் வைசிராய் மாளிகைக்கு ஓடினார். இந்தியாவின் நன்மையை மனதில் வைத்து என்ன செய்ய வேண்டுமென்று அவர் நினைத்தாரோ அதை வைசிராயிடம் சொன்னார். அதன்படி இந்தியாவிலும் தங்க மதிப்பை நீக்கிவிட்டதாக வைசிராய் ஒரு அவசரச் சட்டம் செய்தார். இச்செய்தி லண்டனுக்கு போயிற்று. இந்தியா மந்திரி கலங்கிப்போனார். உடனே ஐக்கிய ஆட்சி கமிட்டிக்குச் சென்று, பொக்கிஷ மந்திரி அறிக்கைக்கு நேர் விரோதமாக ஒரு அறிக்கையை வாசித்தார். இந்தியாவை பாதிக்கும் விஷயங்களில் இந்தியா மந்திரியைவிட பொக்கிஷ மந்திரியையே நான் நம்புவேன். இந்தியாவிற்கு, பெரிய கெடுதலை இந்தியா மந்திரி உண்டுபண்ணியிருக்கிறார். இந்திய சர்க்கார் இந்தியா மந்திரிக்கு உட்பட்டது. ஆகவே வாயை மூடிக்கொண்டு சும்மாயிருக்கிறார்கள். ஒரு பொறுப்புள்ள பொக்கிஷ மந்திரியின் செய்கையை இம்மந்திரி ரத்துச் செய்வதென்றால், அவர் ராஜிநாமாச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இந்திய சர்க்கார் இந்தியா மந்திரியிடம் எத்தனை அவமானங்களை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள தயாராயிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய இந்தியா தயாராயில்லை.

இன்று ஒரு அவசரச் சட்டம். அதை ரத்துச் செய்ய நாளை மற்றொரு சட்டம். அவசரச் சட்டம் சில சமயங்களில் அவசியமாயிருக்கலாம். ஆனால் சட்டசபை கூடியிருக்கும்போது அதை கொஞ்சங்கூட கேட்காமல் இம்மாதிரி அவசரச் சட்டம் செய்வது போக்கியமா? லண்டனில் மகாநாடு கூடி எல்லாரும் பேசுகிறார்கள். ஆனால் இங்கேயோ அரைகுறையாகவுள்ள நமது உரிமைகளைக்கூட இந்த சர்க்கார் பிடுங்குகிறார்கள். 1927-ம் வருஷத்தில் 18 பென்சாக ஏற்பட்டதிலிருந்து இதுவரை 138 கோடி ரூபாயை பழக்கத்திலிருந்து குறைத்திருக்கிறார்கள். இதனால் விவசாயிகளும் தொழிலாளரும் சொல்லமுடியாத துன்பமடைகிறார்கள். 18 பென்ஸ் விகிதத்தை நிலைநாட்டுவதற்காக சென்ற 4 வருஷங்களில் 67 கோடி ரூபாய் தங்கத்தை சர்க்கார் தொலைத்திருக்கிறார்கள். இதுமட்டுமா? வெளிநாட்டு கடன் 7 கோடி பவுன் அதிகமாயிருக்கிறது. 21ந் தேதியன்று 18 பென்ஸ் விகிதத்தை தொலைத்து தலைமுழுக ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்ந்தது. பொக்கிஷ மந்திரி அப்படியே செய்தார். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் அப்படிச் செய்ய விடவில்லை. 18 பென்ஸ் விகிதம் ஏற்படும்போது அது தங்கத்துடன் பிணைக்கப்படுமேயொழிய சவரனுடன் பிணைக்கப்படாது என்று சர். பேசில் பிளாக்கட் சொன்னார். இன்று தங்கத்தைவிட்டு சவரனுடன் பிணைத்துவிட்டார்கள்.

1929-30ம் வருஷத்தில் இந்தியாவின் வர்த்தகம் 559 கோடி ரூபாய் இதில் பிரிட்டனுடன் செய்த வர்த்தகம் 173 கோடி மட்டுமே. 18 பென்ஸ் விகிதத்தை இயற்கைக்கு மாறாக கட்டாயப்படுத்தினால், பிரிட்டிஷ் வர்த்தகத்திற்கு சலுகை காட்டுவதாக நேரிடாதா? இந்தக் கொள்கையால் 5 கோடி ரூபாய் சர்க்கார் வரவு செலவில் மிச்சப்படும் என்று நீங்கள் சொல்லலாம். அந்த 5 கோடி ரூபாய் ஆகாயத்திலிருந்தா வரப்போகிறது? 20 கோடி ரூபாயை ஏழைகள் இழப்பதுமூலம் நீங்கள் 5 கோடி பெறப்போகிறீர்கள். இறக்குமதி உண்டியல்களுக்கு சர்க்கார் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏராளமாய் ஏற்றுமதி உண்டியல்களை வாங்க வர்த்தகர்கள் முன்வரலாம். தற்கால நிலைமையை தங்களுக்கு அநுகூலமாக்கி லாபம் சம்பாதிக்க சிலர் முயற்சிக்கலாம். அதனால் நமது தங்கமெல்லாம் பறிபோக நேரிடலாம். தங்கம் பறிபோவதை தடுக்க வைசிராய் அவசரச் சட்டத்தில் ஒன்றுமில்லை. ஆகவே சர்க்காரே, ஜாக்கிரதை!

Koviloor Digital Library



# வடிகட்டிய அயோக்கியத்தனம்.

ஸ்ரீமான். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார் :—

பூளவாடி என்னும் கிராமத்தின் கள்ளுக்கடை சென்ற வருஷம் ரூ. 1800-க்கு ஏலம் போயிருந்தது. பல மாதங்களாக இவ்வூரில் மறியலும், ஊர்க் கட்டுப்பாடும் தீவிரமாக நடந்து வந்ததின் பயனாகக் குடி அடியோடு நின்றுபோயிற்று. இவ் வருஷம் கள்ளுக்கடை ஏலம் நடந்தபோது யாரும் கோரவில்லை.

பிறகு, டெண்டரில், போனவருஷம் எடுத்த குத்தகைக்காரரே இந்த வருஷமும் எடுத்திருக்கிறார். ஆனால் சென்ற வருஷம் மாதம் ரூ 150 க்கு எடுத்தவர் இந்த வருஷம் ரூ. 11-க்கு எடுத்திருக்கிறார்.

இவ்வூரில் குடியென்பது அடியோடு நின்றுபோயிருந்தும், ஊர் ஜனங்கள் எல்லாருடைய அபிப்பிராயத்துக்கும் விரோதமாக இவர் மறுபடியும் கடை எடுத்திருப்பதின் இரகசியம் என்னவென்பதை விசாரித்தேன். சென்ற மாதங்களில் கடையில் வியாபாரம் அடியோடு நின்றுவிட்டபடியால், இவர் செலுத்தவேண்டிய கடைக்கிஸ்தி செலுத்த முடியாமல் ரூ. 540 பாக்கி நிறுத்தி யிருக்கிறார். விதிகளின்படி இவருடைய சொத்தை ஏலம்போட்டு சர்க்கார் மேற்படி பாக்கியை வசூல் செய்து விடலாம்.

ஆனால், இந்த வருஷத்தில் கலால் உத்தியோகஸ்தர்கள் வார்த்தையைத் தட்டாமல் சொற்ப தொகைக்காவது ஏலம் எடுத்தால், பழைய பாக்கியைத் தள்ளிக் கொடுப்பதைப்பற்றி யோசிப்பார்கள். இல்லாவிட்டால் கட்டாயம் சொத்தை ஜப்தி செய்து விடுவார்கள். ஆகவே மாதம் 11 ரூபாய்க் குத்தகைக்கு இவர் கடையை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

"வியாபாரமே நடக்காமற்போனாலும் கடை எடுத்தால் வருஷத்தில் ரூ. 132 தான் எனக்கு நஷ்டமாகும். கடை எடுக்காவிட்டால் ரூ. 540 பழைய பாக்கி செலுத்தியாகவேண்டும். ரூ. 400 லாபம் இருக்கிறது. அதனால்தான் துணிந்து எடுத்தேன்" என்று அவர் சொல்வதாய்க் கேள்விப்பட்டேன்.

தனி திருச்சிக்கோட்டை கிராமங்களிலுள்ள இரண்டு கள்ளுக்கடைகள் 1929-ம் வருஷத்தில் மாதம் ரூ. 900க்கு ஏலம் போயின. சென்ற வருஷம் சத்தியாக்கிரஹப் போரின் பயனாக, குத்தகைத் தொகை ரூ. 460 ஆகக் குறைந்தது. இவ் வருஷத்தில் இதுவரையில் யாரும் எடுக்கவில்லை. இந்த கிராமங்களில், மறியல்கூட இல்லாமல், தீவிர ஊர்க் கட்டுமானத்தினாலேயே குடி முழுமையும் நின்றிருக்கிறது. சென்ற வருஷம் குத்தகை எடுத்தவர் அதிக நஷ்டமடைந்திருக்கிறார். ஆயினும் இவ்வருஷத்தில் மேற்படி கடைகளை மாதம் ரூபா 20க்காவது எடுத்துக்கொள்ளும்படி கலால் அதிகாரிகள் அவரை வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது. பூளவாடி கடைக்காரரைப்போலவே இவருக்கும் பழைய பாக்கி பயம் உண்டு.

இப்படி பதினொரு ரூபாய்க்கும், இருபது ரூபாய்க்கும் கடைகளை விடுவதில், ஏழை ஜனங்களுக்குத் துன்பமுண்டாக்கியும் சர்க்காருக்கு லாபமாவது உண்டா? கிடையாது.

மேலே கூறிய கிராம ஜனங்கள் எல்லாரும் ஒரு முகமாக வேண்டாமென்று சொல்லியும் அவர்கள் மீது கள்ளுக்கடையை சுமத்துவானேன்? அவர்களுடைய நன்மைக்காகவல்ல.

சர்க்கார் வருமானத்தை முன்னிட்டுமில்லை. கோடிக் கணக்கில் செலவுசெய்யும் சர்க்காருக்கு ரூ. 11-ம், ரூ. 20-ம் ஒரு லக்ஷியம் ஆகாது. பின்னர், உண்மை என்ன?

இந்த ஜனங்கள் சொல்லி நாம் என்ன கேட்பது? காந்திக்கு முன்னால் 100 வருஷமாக நம் இஷ்டப்படி நடத்தினோம். இனிமேலும் அப்படித்தான் நடத்துவோம் என்ற வீண் பிடிவாதம்.

அல்லது, "இந்த வருஷம் எப்படியாவது கடையை நடத்திவிட்டால், வருமானம் சொற்பமாயிருந்தாலும், கடைக்காரன் எப்படியும் பழைய குடிகாரர்களை இழுக்க முயல்வான். ஜனங்களின் கட்டு உடையும். பழையபடியே குடி பெருகும். அடுத்த வருஷம் முன்போல் ஏழைகளின் பணத்தைப் பறிக்கலாம்," என்ற எண்ணம். இது எவ்வளவு பெரிய தவறு?

# காந்தி திருநாள்

## அக்டோபர் 2உ

### உங்களுக்கு காந்தி பக்தி உண்டா?

### அப்படியானால் கத்தர் கட்டுங்கள்.

Koviloor Digital Library



## கத்தர், கத்தர், கத்தர்!.

பம்பாயில் எங்கு பார்த்தாலும், மூலை முடுக்குகளிலும் கூட கத்தர் பேச்சும் கத்தர் மணமுமாயிருக்கிறது. சென்ற சனிக்கிழமை பம்பாய் அஜாத் மைதானத்தில் ஒரு பெருங் கூட்டம் கூடியது. சர்தார் பட்டேல் பேசும்போது "நீங்கள் காந்தியை கௌரவிக்க விரும்பினால் கத்தரை கௌரவியுங்கள். கத்தர் சங்கத்திலுள்ள 15 லட்சம் ரூபாய் கத்தரை காலி செய்யுங்கள்" என்று சொன்னார் "மகாத்மாவின் உயரிய அன்பு கத்தர் மூலம் ஜொலிக்கிறது." என்று பாதிரியார் எல்வின் கூறினார். பிரசங்கங்களைக் கேட்ட பின்பு "கத்தர் வாங்கவில்லையா, கத்தர்" என்ற சப்தம் கேட்டது. உடனே அங்கு வந்திருந்த ஆணும், பெண்ணும் தங்களிடமுள்ள பணத்தையும் நகைகளையும் வாரி வாரி மேடை மீது பொழிந்தனர். நகைகள் மட்டும் 2 ஆயிரம் ரூபாய்க்கு இருக்குமாம். அந்த இடத்திலேயே 22 ஆயிரம் ரூபாய்க்கு கத்தர் விற்பனையாயிற்று. அது வல்லவா தேசாபிமானம்? அது வல்லவா காந்திமீதுள்ள பக்தி? சென்னைக்கு புத்தி வருமா? சென்னைக்கு சுயமதிப்பு இருந்தால் காந்தி வாரத்தில் கைவசம் ஒரு கெஜம் கூட இல்லாமல் விற்பனை செய்யவேண்டும். வெறும் பேச்சு பேசி காலத்தைக் கழிப்பதில் பயனில்லை தீபாவளி அடுத்த மாதம்தான். அதற்கு வேண்டிய துணிகளை இப்பொழுதே வாங்கிவிட்டாலும் கத்தர் காலியாய் விடும். இது பெரிய தியாகமல்ல. ஆமதாபாத்தில் தொழிலாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய்க்கு கத்தர் வாங்கியிருக்கிறார்கள். ஆமதாபாத் முனிசிபல் சபை 5 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது. பம்பாயில் லட்சம் ரூபாய்க்கும், ஆமதாபாத்தில் 30 ஆயிரம் ரூபாய்க்கும், கெயிராவில் 15 ஆயிரத்திற்கும், மத்திய மாகாணத்தில் இருபதினாயிரத்திற்கும் கத்தர் விற்பனையாயிருக்கிறது. 15 லட்சம் ரூபாய் சரக்கு கையிலிருக்கும்போது இந்த விற்பனைகள் அவ்வளவு பிரமாதமல்ல. சென்னை மாகாணம் குறைந்தது 2 லட்சத்திற்காவது காந்தி வாரத்தில் கத்தர் வாங்கவேண்டும்.

## ஆகாகான் அவிட்டு.

ஆகாகான் என்பவர் பிற்போக்கான முஸ்லிம் தலைவர்களில் ஒருவர். லண்டன் மகா நாட்டில் அவரும் ஒரு அங்கத்தினர். பரமராஜ விசுவாசி. சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் கலீபாவாகிய துருக்கி சுல்தானுக்கு விரோதமாக முஸ்லிம்கள் யுத்தஞ் செய்யக்கூடாதென்று அலி சகோதரர்கள் சொன்னார்கள். அதனால் அவர்களை யுத்தம் முடியும் வரை ஜெயிலில் அடைத்தனர். ஆகாகான் முஸ்லிம்கள் பிரிட்டிஷாருக்கு உதவிசெய்ய வேண்டுமென்று சொன்னார். அதனால் பெரிய மனிதரானார். ஆகாகானுக்கு ராஜ்யம் ஒன்றும் கிடையாது. இருந்தாலும் பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தான மன்னர்களுக்குரிய பட்டமாகிய "ஹிஸ் ஹைனஸ்" என்ற பட்டம் அளித்தார்கள். குதிரைப் பந்தயத்தில் ஆகாகானுக்கு அசாதிய கிறுக்கு. வயது அதிகமாயினும் சென்ற வருஷத்தில் கூட ஒரு பிரெஞ்சு மாதை விவாகம் செய்திருக்கிறார். கோஜா வகுப்பு என்ற முஸ்லிம் வகுப்புக்கு குருவானபடியால் ஏராளமாக வரும்படி உண்டு. அவருக்கு எவ்வளவு வரும்படி வந்தால்தான் என்ன? எத்தனை பெண்கள் இருந்தால்தான் என்ன? அவர் செய்யும் செய்கை இந்தியாவை பிளவுபடுத்தி நாசம் செய்வதாய் இருக்கிறது. சுயராஜ்யத்திற்கு வேண்டுமென்று முட்டுக்கட்டை போடும் ஒரு கட்சிக்கு அவர் தலைவராய் நின்று வேலை செய்வது அவருக்கே பரிதாபமாகும். அமெரிக்காவிற்கு செய்த ஆகாச தந்தி பிரசங்கத்தில், என்னென்னவோ கூறியிருக்கிறார். முஸ்லிம்கள் மெஜாரிட்டியாயிருக்கும் மாகாணங்களுக்கு உடனே சுயராஜ்யம் வேண்டுமாம். மற்றவைகளுக்கு வேண்டாம்போலும். போதுமான அளவு சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் கொடுக்காவிட்டால், சுயராஜ்யமும் வேண்டாமாம். ஆகாகானின் பேச்சைக் கேட்டு அமெரிக்கர் நகைத்திருப்பார்கள். சுயராஜ்யம் இந்துக்களுக்கு மட்டுமல்ல. இந்தியாவிலுள்ள சகலருக்கும் சுயராஜ்யம். ஆகாகான் சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டை போட்டால், அதனால் கஷ்டமடைவது ஆகாகானல்ல. ஏழை இந்து முஸ்லிம்களே கஷ்டமடைவார்கள். ஆகவே ஆகாகான் அவுட்டைக்கண்டு முஸ்லிம்கள் ஏமாறமாட்டார்களென்று நம்புகிறோம்.

ஜவார்லால் சரித்திரம்.

மூன்றாம் பதிப்பு. சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே எழுதவும். 32 பக்கங்கள். விலை அணா 1. ஒரு பிரதிக்கு 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு. சென்னை.

Koviloor Digital Library



## வகுப்புவாதிகள் கொட்டம்.

வட்டமேஜை மகாநாட்டில் வகுப்புவாதிகள் கொட்டமடிக்க முயற்சிக்கிறார்களாம். ஆகாகான் கோஷ்டியைச் சேர்ந்த முஸ்லிம் அங்கத்தினர்கள் கொஞ்சங்கூட விட்டுக் கொடுக்க முடியாதென்று சொல்லுகிறார்களாம். இந்தியாவை விட்டுப் புறப்படும்போது ஸ்ரீ. ஜின்னா பேசிய பேச்சைப் பார்த்தால், அவர் சமாசத்திற்கு வருவாரென்று நினைக்க இடம் இல்லாமல் ஆகாகானைப்பற்றியோ சொல்லவேண்டியதில்லை. வெளியே ஷவுகத் அலிக்கு சமரசமனப்பான்மை இருந்தாலும், ஜின்னா, ஷாபி ஆகாகானுக்கு விரோதமாக அவர் ஜனப்புவா ரென்று தர்க்கம் செல்ல முடியாது. ஆகவே தேசிய முஸ்லிம்கள் போன பின்புதான் ஏதாவது விமோசனம் ஏற்படுமோ என்று எதிர்பார்க்கலாம். பிரிட்டிஷ் சர்க்கார் தந்திரசாலிகள். இந்தியாவில் சண்டை இருந்தால்தான் அதிகாரம் தங்கள் கையைவிட்டு போகாமல் இருக்கும். ஆகவே வடிகட்டிய முஸ்லிம் வகுப்புவாதிகளாகப் பார்த்து வட்ட மேஜை மகாநாட்டிற்கு நியமனஞ் செய்திருக்கிறார்கள். தேசிய முஸ்லிம் கட்சியில் சர் அலி இமாம் ஒருவரே நியமனமாயிருக்கிறார். சமீபத்தில் ஸ்ரீ. ஜமால் முகமது சாகிபும் நியமனமாயிருக்கிறபடியால் இரண்டு பேர் தேசிய முஸ்லிம்கள் என்று சொல்லலாம். ஸ்ரீ. ஜமால் முகமதுவை நியமிக்காமல் விட்டுவிட சர்க்கார் எவ்வளவோ சூழ்ச்சி செய்து பார்த்தார்கள். அதைப்போலவே டாக்டர் அன்சாரியையும் வேண்டுமென்றே நியமிக்காமல் விட்டுவிட்டனர். ஆனால் மகாத்மா காந்தி இந்த அக்கிரமத்தை சகிக்கவில்லை. டாக்டர் அன்சாரியை வட்ட மேஜை மகாநாட்டிற்கு கொண்டுவந்தால் ஒழிய எந்த ராஜியும் பேச முடியாது என்று சொல்லிவிட்டார்; தேசிய முஸ்லிம்களும் ஆகாகான் கோஷ்டியும் சேர்ந்து என்ன கேட்கிறார்களோ அதை கொடுக்க தாம் தயார் என்று மகாத்மா கூறுகிறார். ஆகாகான் கோஷ்டியார் உண்மையாக சுயராஜ்யத்தில் ஆசையுள்ளவர்களாயிருந்தால், டாக்டர் அன்சாரியை கொண்டுவர வேண்டியதும், அவர் கட்சியாருடன் சமரசம் செய்துகொள்ள வேண்டியதும் அவர்கள் கடமையாகும். எப்படி நடக்கிறார்கள் என்று பார்ப்போம்.

## உலகப் போக்கு.

திருவாங்கூரில் சேகலூர் கோவிலுக்குள் ஆரிய சமாஜ அனாதை ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் போகக்கூடாதென்று சர்க்கார் தடை செய்தார்கள். அவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார்கள். அதன் மேல் சர்க்கார் அவர்களுக்கு அநுமதி கொடுத்து, அங்கு வைத்திருந்த போலீஸ் காவலை நீக்கி விட்டார்கள்.

புதிய அச்சுச்சட்ட மசோதாவை கண்டிப்பதற்காக இந்தியாவிலுள்ள சகல தேசிய பத்திரிகைகளும் நேற்று பிரசுரமாகாமல் ஹார்த்தால் செய்தன.

பார்டோலியில் அதிக வரி வசூல் செய்தது சம்பந்தமாக மகாத்மா கோரிய விசாரணை 5உ ஆரம்பமாகும்.

ஹிஜ்லியில் ராஜீய கைதிகளை போலீசார் சுட்டுக்கொன்ற கொடுமையை கண்டிக்க கவியரசர் தாகூர் தலைமையில் 26உ கல்கத்தாவில் ஒரு பெரிய கூட்டம் கூடியது.

### எகிப்தியர் உபசாரம்.

எகிப்து எல்லையில் மகாத்மா கப்பல் சென்றவுடன் அவருக்கு எகிப்தியர் செய்த உபசாரங்களை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். எகிப்தியரிடமிருந்து அவருக்குக் கிடைத்த வரவேற்பு செய்திகளையும் வெளியிட்டிருக்கிறோம். ஆனால் வேறு எத்தனையோ சங்கங்களும் பிரபல தலைவர்களும் செய்திகள் அனுப்பியதாக இப்பொழுது தெரிகிறது. போர்ட்செட் வாவிது கட்சி தலைவர், எகிப்திய பெண்கள் சங்கத் தலைவர், கிழக்கு இந்திய தீவுகள் மாணவர் சங்கம், அல் அஜார் சர்வ கலாசாலையிலுள்ள இந்திய முஸ்லிம் மாணவர் சங்கம், பல எகிப்திய பார்லிமெண்ட் அங்கத்தினர் முதலியவர்கள் வாழ்த்து தந்தி அனுப்பினார்கள். இவற்றோடு மிதவாத கட்சித் தலைவரான முகமது மகமூது பாஷாவும் ஒரு தந்தி அனுப்பினர். இவரும் எகிப்தில் முதல் மந்திரியாயிருந்தவர். அவர் செய்தியில் குறிப்பிட்டிருந்ததாவது:— நானும், மிதவாத சங்கமும் இந்தியாவின் விடுதலைக்காக தாங்கள் செல்லும் தூதில் வெற்றி பெறுமாறு பிரார்த்திக்கிறோம். தாங்கள் இந்தியாவிற்கு திரும்பும் போது எகிப்தில் தங்களை வரவேற்கும் பாக்கியம் அளிப்பீர்களென்று நம்புகிறோம்.

எச். முகமது மகமூது.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M 2677.

விலை காலணு
(மலாய் 1¼ சதம்)


# காந்தி

வருட சந்தா ரு. ௩.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 3உ.
பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 17உ சனிக்கிழமை | இதழ் 34

## தலையைத் தடவ முயற்சி.




(தொட்டதெல்லாம் பஸ்மீகரமாகவேண்டுமென்று ஒரு அசுரன் வரம் கேட்டான். பரமசிவம் கொடுத்தார். உடனே அசுரன் அவர் தலையிலேயே கை வைக்க முயற்சித்தான். இது ஒரு கதை.)

சிக்கனத் திட்டம் வேண்டியதுதான் என்று ஜனங்கள் சம்மதம் கொடுத்தார்கள். பொக்கிஷ மந்திரி உடனே ஜனங்கள் தலையில், புது வரிகள் என்ற தமது கைகளை வைக்க ஓடுகிறார்.

Koviloor Digital Library



# சிக்கன மோசடி

ஒரு அசுரன் இருந்தான். பழைய பரமசிவத்திடம் ஒரு வரம் கேட்டு தவமிருந்தான். பரமசிவம் எப்பொழுதும் இளகிய மனமுள்ளவர். கேட்டதை இல்லையென்று மறுக்காத பரோபகாரி. "என்ன வரம் வேண்டும்?" என்று பழைய பரமசிவம் கேட்டார். "நான் தொடுவதெல்லாம் பஸ்மீகரமாக வேண்டும்" என்றான் அசுரன். "எதற்காக அந்த வரம் கேட்கிறாய்?" என்று இளகிய பரமசிவம் கேட்டார். "எனக்காகவல்ல. உமது விரோதிகளை நாசம் செய்வதற்காகவே கேட்கிறேன்" என்று பக்குவமாய் அசுரன் கூறினான். பரமசிவத்திற்கு குஷி வந்துவிட்டது. பக்கத்தில் கிடந்த கஞ்சா சிலும்பை எடுத்து ஒரு தம் அடித்து விட்டு "தந்தோம்" என்றார். அசுரன் குதித்தான். ஆர்ப்பாட்டஞ் செய்தான். "பரமசிவமே, நீர் மிகவும் நல்லவர். நீர் இருப்பதும் இறப்பதும் ஒன்றே. உமது வரம் உண்மையானதுதானா என்பதை உம்மிடமே சோதிக்கப் போகிறேன்" என்று கையை நீட்டிக்கொண்டு பரமசிவத்தின் தலையில் கைவைக்க வந்தான். சந்தோஷத்தில் மூழ்கி பாதி மயக்கிக்கிடந்த பழைய பரமசிவத்திற்கு உடனே மூளையில் உறைத்தது. பிடித்தார் ஓட்டம். அப்புறம் பரமசிவம் என்ன கதியானார் என்று கதையை வளர்த்துக் கொண்டுபோக நாம் பிரியப்படவில்லை. நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு இவ்வளவு கதை போதும்.

பழைய பரமசிவத்தைப்போல இந்தியரும் சாதுக்கள். கேட்டதை இல்லையென்று மறுக்காத பரோபகாரிகள். பட்ட கஷ்டத்தை வெளியில் சொல்லாத ஊமை ஜனங்கள். பரமசிவம் தனக்கு எதிரிகள் இருப்பதைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்ததைப்போல, இந்த ஜனங்களும் சர்க்கார் செலவு வரவுக்குமேல் போகிறதே என்று கவலை கொண்டனர். அசுரன் பரமசிவன் கவலையைப்போக்க வந்திருப்பதாய்ச் சொன்னான். இந்திய சர்க்கார் "சிக்கனத் திட்டத்தை" கண்டு பிடித்து விட்டதாகச் சொன்னார்கள். பரமசிவம் தலையையும் தாடியையும் ஆட்டி "தந்தோம்" என்றார். இந்தியர் "ஆமாம்" என்றார்கள்.

முடிவு என்ன?

பொக்கிஷ மந்திரி சர். ஜார்ஜ் ஷுஸ்டர் ஜனங்கள் தலையில் கைவைத்து விட்டார். வரவுக்கு மேல் செலவாகிறதை எப்படி குறைக்க யோசனை சொல்லுகிறார்? ஜனங்கள் தலையில் கைவைத்து வரவு செலவை சரிக்கட்ட யோசனை சொல்லுகிறார். செலவை குறைக்க ராணுவச் செலவை பாதியாக்கி விடவில்லை. அல்லது காங்கிரஸ் தீர்மானப்படி எல்லா அதிகாரிகள் சம்பளத்தையும் 500 ரூபாய்க்கு குறைத்துவிடவில்லை. இந்த இரண்டில் ஒன்றைச் செய்திருந்தாலும் வரவு செலவு சரிக்கட்டிப்போகும். நான் நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு என்பதைப்போல பெயருக்கு சம்பளத்தை குறைத்திருக்கிறார். வைசிராய் மாதம் எச்செலவும் போக ரூ. 20,900 சம்பளம் வாங்குகிறார். அவர் சம்பளத்தில் 100க்கு 20 குறைவாம். வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர் 7 ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் பெறுகின்றனர். அவர்களுக்கு 100-க்கு 15 விதம் குறைவாம். மற்றவர்கள் விஷயத்தில் 100-க்கு 10-க்கும் குறைவாக பிடித்தமாம். பிரிட்டனைவிட இந்தியா பணக்கார நாடல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முழுவதையும் கட்டி ஆளுகிறவரான பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கே மாதம் ரூ. 5,600 தான் சம்பளம். அவர் சம்பளத்திலும், அவரை விட குறைவாக சம்பளம் பெறும் மந்திரிகள் சம்பளத்திலும் 100-க்கு 20 விதம் குறைவு ஏற்படுத்தியிருக்கிறார்கள். 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வாங்கும் மற்ற உத்தியோகஸ்தர் சம்பளத்திலும் இந்த 20 விதம் குறைவு உண்டு. இந்தியாவிலுள்ள நிர்வாக சபை அங்கத்தினர் 7 ஆயிரம் ரூபாய் பெற்றும், அவர்களுக்கு 100-க்கு 15 விதமே குறைவாம். வைசிராய் 20 ஆயிரம் வாங்கியும் அவருக்கு 20 விதமே குறைவாம். இது உண்மையான சிக்கனமா? அல்ல. வெறும் மோசடி வித்தையே. செலவெல்லாம் போக வைசிராய் மாதம் ரூ. 16,720 வாங்குவதில் எங்கே தியாகம் இருக்கிறதென்று நம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இம்மாதிரி கண்ணைத் துடைக்கும் சிக்கனத்தையாவது உடனே அமுலுக்கு கொண்டுவரப் போகிறார்களா? அதுவுமல்ல. டிசம்பர் மாதம் முதல் தேதி முதலே அமுலுக்கு வருமாம். ஆனால் ஜனங்கள் தலையில் கைவைக்கும் புதிய வரிகள் மட்டும் செப்டம்பர் மாதம் 30உ முதல் அமுலுக்கு வந்துவிடுமாம். என்ன பாரபட்சம் பார்த்தீர்களா? இப்படி நடந்தால் எப்படி வரவு செலவு சரிக்கட்ட முடியும்? இந்த வருஷமும்

(271-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



## அமிதவாதி மாளவியா.

பண்டித மாளவியா ஒரு வைதீகப் பஞ்சாங்கம் அதோடு மிதவாதி. இருந்தாலும் முக்கியமான சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுப்பதில்லை. எந்த காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்கும் அவர் வராமல் இருக்கமாட்டார். மகாத்மா கொண்டுவரும் தீர்மானங்களில் தம்முடைய மிதவாதத்தை நுழைக்கப் பார்ப்பது ஒவ்வொரு தடவையும் வழக்கம். ஆனால் ஒவ்வொரு தடவையிலும் அவருக்குத் தோல்வி. இந்த தோல்விகளை அவர் லட்சியஞ் செய்வதில்லை. மகாத்மாவின் தீவிர வாதமும் மாளவியாவின் மிதவாதமும் ஒவ்வொரு காங்கிரசிலும் மோதிக் கொள்ளும். முடிவில் யார் ஜெயித்தார்? மகாத்மாவே ஜெயித்தார். மகாத்மாவின் தீவிர வாதம் மாளவியாவின் மிதவாதத்தை விரட்டிவிட்டது. தமது வைதீகத்தைக் கூட மூட்டை கட்டி வைக்கும்படி அவ்வளவு பெரிய தீவிர வாதியாகும்படி செய்துவிட்டது. சென்ற வருஷம் பம்பாயில் திலகர் தினத்தன்று நடுத் தெருவில் இரவு முழுவதும் சத்தியாக்கிரகஞ் செய்தவர்களில் நமது மாளவியாவும் ஒருவர். கடைசியாக தமது வைதீகத்தையும் பார்க்காமல் சட்டத்தை மீறி மாளவியா ஜெயிலுக்குப் போனார். மகாத்மா காந்தி சீமைக்குப் போவதை முதலில் நிறுத்தியவுடன் மாளவியாவும் நிறுத்திவிட்டார். காந்தியின் சக்தியே சக்தி! அதிமிதவாதியான மாளவியாவை அதி தீவிரவாதியாக்கிய மகாத்மாவின் பெருமையை என்னென்று சொல்லுவது? ஆகவே அதே மாளவியா லண்டன் மாணவர் கூட்டத்தில் தீரமாய் பேசியிருப்பதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர் சொல்லுகிறார் :—

"வட்ட மேஜை மகாநாட்டில் இந்தியா விரும்புவதை பெறாவிட்டால், துவேஷம் அதிகரித்து விடும். சாமான்ய மனிதரோ எதுவானாலும் பிரிட்டனைச் சேர்ந்த சகலமும் இந்தியாவில் பகிஷ்கரிக்கப்படும். இங்கிலாந்தும் இந்தியாவும் சொல்ல முடியாத துன்பங்களை அநுபவிக்க நேரும்."

இந்த வீரமொழிகள் புதிய மாளவியாவின் நிலைமையைக் காட்டுகிறது. பழைய மாளவியா இம்மாதிரி எக்காலமும் பேசியதில்லை.

## பழைய கதையை மறந்தாயோ?

இந்தியா மந்திரியாய் மிளிரும் சாமுவேல் ஹோரே! உமது முன்னோரின் பழைய கதையையும் மறந்தீரோ? பவுன் மதிப்பு—வெள்ளி பிணைப்பைப்பற்றி பார்லிமென்டில் ஒருவர் கேள்வி கேட்டாராம். "ஓ அது முடிந்துபோன விஷயம். அதைப்பற்றி புனராலோசனை செய்வது முடியாத விஷயம்" என்று சர். சாமுவேல் ஹோரர் துள்ளிக் குதித்து பதில் சொன்னாராம். "முடிந்துபோன விஷயம்" என்று இவரை விட ஆயிரம் மடங்கு அதிகமாக கர்வத்தோடு முன்பு கூறியவர்கள் பலர். அவர்கள் இன்று எக்கதியானார்கள்? அவர்கள் "முடிந்து போனவிஷயம்" எக்கதியாயிற்று? வங்காள பிரிவினையை முடிந்து போன விஷயம் என்று சொல்லிய சூரர்களை எங்கே? ரௌலட் சட்டத்தை ரத்துச் செய்ய முடியாது என்று கத்திய வீரர்களை எங்கே? பார்டோலியில் முன்பு வரி விசாரணை கமிட்டி நியமிக்க முடியாது என்று ஆர்ப்பாட்டஞ் செய்தவர்கள் எங்கே? தற்காலம் பார்டோலி அக்கிரம விசாரணை கமிட்டி நியமிப்பதை எதிர்த்த ஆசாமிகள் எங்கே? சென்ற இடம் தெரியவில்லை. இந்த சூரர்கள் எல்லாரும் சாமுவேல் ஹோரரை விட அதிக அகம்பாவத்தோடு "முடியாது" என்று மறுத்தார்கள். முடிவில் என்ன நடந்தது? அவர்கள் அகம்பாவம் மடிந்தது! செத்து மண்ணாயிற்று. ஜனங்கள் கட்சி வெற்றியடைந்தது. "முடிந்துபோன விஷயம்" முடியாதவிஷயமாக மாறிற்று. அட, சாமுவேல் ஹோரே, அவர்கள் அகம்பாவமெல்லாம் மடிந்து போனதை அறிந்தும், நீர் ஏன் அந்த சனியனில் போய் மாட்டிக் கொள்ளுகிறீர்? உமது வீட்டு விவகாரத்திற்கு நீர் சொல்லுவது "முடிவான" விஷயமாய் இருக்கலாம். இந்தியாவைப் பற்றி முடிவு செய்ய நீர் யார்? உமக்கு என்ன அதிகாரம்? வாயை மூடிக் கொண்டு சும்மா இரும். வெகு சீக்கிரத்தில் இந்த 18 பென்ஸ் விகிதம் மண்ணாய் போவதை நீரே பார்ப்பீர்.

Koviloor Digital Library



## புதிய வரிகள்.

சர்க்கார் டம்பாச்சாரித்தனம் புதிய வரிகள் விதிக்கும்படி வந்து சேர்ந்தது. அக்டோபர் முதல் தேதி முதல் புதிதாக சில வரிகள் போட்டிருக்கிறார்கள்.

### இறக்குமதி வரி.

எல்லா சாக்குகளுக்கும் தற்கால வரியில் நூற்றுக்கு 25 விகிதம் அதிகம்

செயற்கை பட்டு 100க்கு 40
செயற்கை பட்டு நூல் 100க்கு 15
பூட்ஸ் ஒரு ஜோடிக்கு 4 அணா
கற்பூரம், எலக்டிரிக் பல்ப் 100க்கு 40
இயந்திரங்கள், சாயம் 100க்கு 10
பருத்தி ராத்தலுக்கு ½ அணா
பழுப்பு சர்க்கரை மணங்குக்கு ரூ. 7-4-0

வருமான வரி ஆயிரம் ரூபாய்க்கு மேல் 2 ஆயிரம் ரூபாய் வரை ரூபாய்க்கு 4 தம்பிடி

தபால் கவர் 1¼ அணா
கார்ட் 9 தம்பிடி

தபால் விகிதம் உயர்வு எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிற தென்பதை இன்னம் குறிப்பிடவில்லை.

### சம்பளக் குறைவு.

வைசிராய் சம்பளத்தில் 100க்கு 20 விகிதம் குறைவு. வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர் சம்பளம் 100க்கு 15 விகிதம் குறைவு. மற்ற உத்தியோகஸ்தர் சம்பளம், அதாவது 40 ரூபாய்க்கு மேல் வாங்குபவர்கள் சம்பளத்தில் 100க்கு 10 விகிதம் குறைவு. மாகாண கவர்னர்களும், கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர்களும் வைசிராயை பின்பற்றி நடப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த சம்பளக் குறைவு டிசம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும். இவ்வளவு தூரம் அதிக வரி விதித்தும் இவ்வருஷம் வரவிற்கு மேல் சுமார் 10 கோடி ரூபாய் அதிகச் செலவாகுமென்று தெரிகிறது. அடுத்த வருஷத்தில் சம்பளக் குறைவால் 890 லட்சம் மிச்சப்படுமென்றும், அதிக வரிகளையும் சேர்த்தால் 24 கோடியே 73 லட்சம் அதிக வரும்படி வருமென்றும் தெரிகிறது. அடுத்த வருஷத்தில் துண்டு விழும் 19½ கோடி ரூபாயை இதில் கழித்தால் 5 கோடியே 23 லட்சம் மிச்சப்படுமென்று சர்க்கார் எதிர் பார்க்கிறார்களாம்.

## வரவு குறையுது, செலவு மிஞ்சுது!

இவ்வருஷம் எவ்வளவு வரவு வருமென்று சர்க்கார் எதிர் பார்த்தார்களோ அது வரவில்லை. வரவு குறைந்து கொண்டே போகிறது.

சுங்க இலாகாவில் துணி, சர்க்கரை, சாராயம் முதலியவைகளில் வருமான குறைவு 10 கோடி ரூபாய்.

வருமான வரி குறைவு 1¼ கோடி
ரயில்வே வருமான குறைவு 536 லட்சம்.

இந்திய சர்க்கார் வரவு செலவு நிபுணர்கள் இவ்வருஷ திட்டத்தில் 1 லட்சம் ரூபாய் மிஞ்சுமென்று கணக்கு காட்டினார்கள். இப்பொழுது எப்படியிருக்கிறது? 19½ கோடி குறையுமாம். இந்த நிபுணர்கள் புத்தி சாலித்தனத்தை என்னென்று சொல்லுவது? இவர்கள் மூளையை லெனின் மூளையை பரிசோதிக்கும் டாக்டர்களுக்கு அனுப்பி பரிசோதிக்கச் சொன்னால் நலமாயிருக்கும். இவ்வளவு பெரிய குறைவு ஏற்படுமென்பதை தெரியாதவர்கள் நிபுணர்களாம். வெட்கமில்லாமல் அவர்கள் இன்னம் தங்கள் பதவியில் இருக்கிறார்கள். வர்த்தக மந்தமும், பகிஷ்காரமும் ஏற்பட்டிருக்கும் நாட்டில், பழைய விதப்படி வருமான வரியும், சுங்க வரியும் வருமென்று எதிர்பார்ப்பது பரம மூடத்தனமல்லவா? இதை கீரை விற்கும் கிழவி கூட சொல்லுவாளே? சென்ற மார்ச்சு மாதம் வரவு செலவு திட்டத்தை சட்டசபையில் ஆஜர் செய்யும் போது சம்பள சிக்கனத்தைப் பற்றி சர்க்கார் பிரமாதமாய் பேசினார்கள். அன்றே சம்பளத்தை குறைத்திருந்தால் இதுவரை எவ்வளவோ மீதமாயிருக்கும். 8 மாதங்கள் வெறும் பேச்சில் கழிந்தன. டிசம்பர் மாதம் முதல்தான் சம்பளத்தை குறைக்கப் போகிறார்கள். இந்த 8 மாதமும் சர்க்கார் மந்தபுத்தியாலோ அசட்டுத்தனத்தாலோ ஏழை இந்தியா அநியாய சம்பளம் கொடுக்க நேரிட்டது. 8 மாதங்களில் வரவிற்கு மேல் 10 கோடி அதிக செலவாயிருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? சர்க்காரின் மூடத்தனத்தால் ஏற்பட்ட இந்த நஷ்டத்தை இந்தியா ஒப்புக்கொள்ள முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பளத்திலேயே பிடிக்கவேண்டும்.

Koviloor Digital Library



# வெள்ளையர் வெகுளித்தனம்.

மகாத்மாவுடன் பலவருஷங்கள் பழகிய ஓர் ஐரோப்பிய நண்பர் அவருக்குப் பின் வருமாறு எழுதுகிறார் :—

" நீங்கள், பிறர் உங்களை ஒரு முட்டாளாகக் கருதும்படி சில காலமாக நடந்துகொண்டு வருகிறீர்கள் என்று பட்ட வர்த்தனமாக இதுவரை எவரும் உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை. உங்களிடத்துள்ள கர்வத்தினாலும், தலைவராயிருக்க வேண்டுமென்ற ஆசையினாலும், பொய் சொல்ல ஆரம்பித்திருக்கிறீர்கள்; சாதாரண மனிதர்களும் கையாளாத பல தந்திரங்களைக் கையாள்கிறீர்கள்.

ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைத் தீர்த்துவைக்க முடியாததே, நீங்கள் சர்வகட்சி மகாநாட்டுக்குச் செல்லாததன் முக்கிய காரணம் என்பதை நீங்களே அறிவீர்கள். ஆனால் சில்லறை விஷயங்களை ஒரு காரணமாகக் கூறி யிருக்கிறீர்கள். அலகாபாத் காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த ஸ்ரீமான் சுந்தரலால் அவர்களே இதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்."

## மகாத்மா பதில்.

தமது கோபக் குறியினின்று நான் எங்குத் தவறி விடுவேனோ என்று கருதி இவர் ரிஜிஸ்டர் செய்தே இந்தக்கடிதத்தை அனுப்பியிருக்கிறார். நான் கப்பலில் சென்று கொண்டிருக்கும்போது தான் இந்தக் கடிதம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய ஆங்கிலேய நண்பர்கள், அவர்களுக்குத் திருப்தி தரும் வண்ணம் நான் ஏதேனும் செய்துவிட்டால் எனக்குப் பலவித சன்மானப் பத்திரங்கள் அளித்துவிடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதிருப்தியான காரியம் எதையேனும்செய்துவிட்டால் என்மீது பழி வாங்கத் தீர்மானித்துவிடுகிறார்கள். நான் முன்னே நடந்து கொண்டதற்கும் இப்பொழுது நடந்து கொள்வதற்கும் என் வேற்றுமை காணப்படுகிறது என்று இவர்கள் விசாரிக்கக்கூட முன் வருவதில்லை. என்னுடைய செயல்களில் ஒரேவிதத்தன்மை இருப்பதைக் கூர்ந்து கவனிக்க இவர்களுக்குப் பொறுமை இருப்பதில்லை. ஆதலின் இத்தகைய நண்பர்கள் என்னை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் அதனால் நான் பாதிக்கப் படுவதில்லை. இந்த நண்பருடைய கண்டனத்தைப் பாருங்கள். சில மாதங்கள் முன்வரை, நான் நல்ல மனிதனாயிருந்தேன். ஆனால் இப்பொழுது திடீரென்று ஒரு கெட்ட மனிதனாகிவிட்டேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்க நான் தவறிவிட்ட காரணத்திற்காக நான் லண்டன் செல்லவில்லை யென்று என்னைப் பொய்யனாகவும் ஆக்கிவிட்டார். என்னுடைய சமாதானத்தையும் இவர் கேட்க விரும்பவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் நான் பேசியதைத் திரித்துக்கூறியுள்ள ஒரு செய்தியை இவர் நம்புகிறார். இந்த நண்பர் கூறுவது போல தாம் ஒன்றுங் கூறவில்லையென்று பண்டித சுந்தரலால் அலகாபாத்திலிருந்து எனக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார். அப்படி பண்டித சுந்தரலால் கூறியது உண்மையாகவே இருந்தபோதிலும், ஒரு நண்பர் என்மீது இத்தகைய குற்றத்தைக் காட்டுதல் தகாதென்றே கருதுகிறேன். ஒரு வதந்தியை நம்பி அதனால் மனம் மாறுபடும் நட்பினர்களின் நட்பு அவ்வளவு சிலாக்கியமானதன்று. என்னைப் பாராட்டிப் பல செய்திகள் அனுப்பியுள்ள எனது ஐரோப்பிய நண்பர்களுக்கு நான் ஓர் எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன். அவர்களுக்கு அதிருப்தி தரத்தக்க செயல்களை நான் செய்ததாக அவர்கள் ஏதேனும் வதந்தியைக் கேள்விப்படுவார்களானால், உடனே என்னைப்பற்றி ஒருவித முடிவுசெய்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர்களின் இலட்சியம் ஒன்றாயிருந்தால், இடையே ஏற்படும் மனமாற்றங்கள் தாமே ஒழிந்துபோகும்.

என்னுடைய இலட்சியத்தை நான் தெளிவாகக் கூறுகிறேன். ஏழை மக்களின் நலனுக்காக, அந்நிய ஆதிக்கத்தினின்று விடுதலை பெற வேண்டுமென்பதே எனது விருப்பம். ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு முரண்பாடாயுள்ள எந்த உரிமையும் மாற்றிக்கொள்ளப்படவேண்டும். மாற்றிக்கொள்ளப் படாது போனால் மறைந்து போகவேண்டும். இங்ஙனம் பெறும் சுதந்திரமானது, இங்கிலீஷ்காரருடன் சம அந்தஸ்து வகிப்பதாய் இருக்கவேண்டும். இரு சாராரில் எவரேனும் ஒருவர் விரும்பினாலும் இச்சம்பந்தம் அற்றுப்போவதாய் இருக்கவேண்டும். அந்தச் சம்பவம் விரைவில் நிகழ வேண்டுமென்று விரும்பும் இங்கிலீஷ்காரர்கள் என்னைப் பாராட்டியதற்காகப் பிற்காலத்தில் எப்பொழுதும் வருந்த மாட்டார்கள். அப்படி விரும்பாதவர்கள், என்னுடைய சாதாரண காரியங்களில் தவறையே காண்பார்கள். "யங் இந்தியா"

Koviloor Digital Library



## வாழ்க மகாத்மா !

(டி. பி. குழந்தைவேலன்).

வாழ்க காந்தி வாழ்க காந்தி
வாழ்க வாழ்கவே
வீழ்க கொடுமை வீழ்க அடிமை
வீழ்க வீழ்கவே (1)
சத்தியமும் அஹிம்சையென்றும்
வாழ்க வாழ்கவே
கத்தி வெட்டு குண்டு சண்டை
வீழ்க வீழ்கவே (2)
நீதி நியாய சோதி நீதி
வாழ்க வாழ்கவே
நீதி யற்ற ராஜ ஆட்சி
வீழ்க வீழ்கவே (3)
கைத்தொழில்கள் வர்த்தகங்கள்
வாழ்க வாழ்கவே
உத்தியோக அடிமை வாழ்வு
வீழ்க வீழ்கவே (4)
நாட்டு வேலை தோட்ட வேலை
வாழ்க வாழ்கவே
வீட்டு நாய்போல் செய்யும் வேலை
வீழ்க வீழ்கவே (5)
மாண்ட தலைவர் மீண்டுந் தோன்றி
வாழ்க வாழ்கவே
தீண்டலாகா தென்னுங் கொடுமை
வீழ்க வீழ்கவே (6)
இளைஞர் தங்கள் வீரமோடு
வாழ்க வாழ்கவே
கொலையுங் களவும் பயமுந் துயரும்
வீழ்க வீழ்கவே (7)
பெண்களுந்தம் முரிமை கொண்டு
வாழ்க வாழ்கவே
ஆண்கள் அண்ணன் தம்பி போல
அமைந்து வாழ்கவே (8)
கோதி லாத ஜனங்கள் யாவுங்
கூடி வாழ்கவே
சாதி சண்டை சமய சண்டை
செத்து வீழ்கவே (9)
காந்தி வாழ்க கன்ய சீலர்
மன்னி வாழ்கவே
சாந்தி யான தர்ம ஆட்சி
தழைத்து வாழ்கவே (10)
வாழ்க காந்தி வாழ்க காந்தி
வாழ்க வாழ்கவே
வீழ்க கொடுமை வீழ்க அடிமை
வீழ்க வீழ்கவே.

## விளக்கெண்ணெய் மெக்டனல்ட்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ. ராம்சே மெக்டனல்ட் சாமர்த்திய பேச்சுக்காரர். தேனொழுகப் பேசுவார். அவரை மிஞ்சிய ராஜதந்திரி தற்சமயம் பிரிட்டனில் இல்லையென்று சொல்லலாம். சர்ச்சில் குலைத்துக் குலைத்து கெட்ட பெயர் எடுக்கிறார். மெக்டனல்ட் அம்மாதிரி கூச்சல் போடமாட்டார். வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போல சாமர்த்தியமாகப் பேசி குல்லா போட்டு விடுவார். வட்ட மேஜை மகாநாட்டின் மைனாரிட்டி கமிட்டிக்கு நமது விளக்கெண்ணெய் மெக்டனல்ட் தலைவர். மைனாரிட்டி கமிட்டியில் கூடியிருப்பவர்களோ நவக்கிரகங்கள். ஒவ்வொன்று ஒவ்வொரு பக்கம் வலித்துக்கொண்டிருக்கும். இதோடு விளக்கெண்ணெய் மெக்டனல்டும் சேர்ந்துவிட்டால் கேட்கவா வேண்டும்? நவக்கிரகங்கள் விளக்கெண்ணெயில் தோய்ந்து வெகு வேகமாய் சுழல ஆரம்பிக்கின்றன. சென்ற திங்கட்கிழமையன்று மைனாரிட்டி கமிட்டி கூடியது. அச்சமயம் மெக்டனல்ட் பேசினார்:—"வகுப்பு விஷயங்கள் உள்நாட்டு விவகாரம். உங்களைச் சேர்ந்தது. அதை நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குள் முடிவு ஏற்படவில்லையானால் நாங்கள் ஒரு முடிவு கூறும்படி சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை".

மெக்டனல்ட் நமது வகுப்பு விவகாரங்களில் தலையிட்டு தீர்ப்பு கூறவேண்டுமென்று நாம் வரங் கேட்க வரவில்லை. ஆனால் சர்க்காருக்கு பொறுப்பு கிடையாதா? வகுப்பு வாதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் சர்க்கார் அவ்விஷயத்தில் முடிவு கூறமாட்டார்களா? முடிவுகூற மறுப்பது எதற்காக? இப்படிச் சொன்னால் வகுப்புவாதிகள் சமரசம் செய்துகொள்ளுவதில் அலட்சிய புத்தி காட்டுவார்கள். அவர்களுக்குள் முடிவு ஏற்படாது. முடிவு ஏற்படாவிட்டால் இப்பொழுது சுயராஜ்யம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இதுவே ரகசியம். இதற்காக மெக்டனல்ட் விளக்கெண்ணெய் பேச்சு பேசுகிறார்: இது வஞ்சகமே யொழிய, நட்பல்ல.

Koviloor Digital Library



(266-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வருஷமும் சர்க்காருக்கு வரவை மீறிய செலவு 39 கோடி ரூபாய். மாகாண சர்க்கார்கள் கணக்கு வேறு. நாம் இப்பொழுது பேசுவது இந்திய சர்க்கார் கணக்கைப்பற்றியே. இந்த 39 கோடியில் இந்த வருஷம் இதுவரை சென்றுபோன மாதங்களில் 9 கோடியே 80 லட்சம் காலியாயிற்று. அடுத்த வருஷம் உள்பட 18 மாதங்களுக்கு இனி நஷ்டப்படும் தொகை 29 கோடியே 25 லட்சம். இதற்கு வழிகண்டுபிடிக்க வேண்டும். சம்பளக்குறைவு மூலம் ஒரு வருஷத்தில் 8 கோடியே 90 லட்சம்தான் கிடைக்கும். பாக்கிக்கு என்ன செய்வது ? பொக்கிஷ மந்திரி யோசித்துப் பார்த்தார். எதிரே ஊமைச் சனங்கள் அவர் கண்களுக்கு தோன்றினர். கழுவுக்கேற்ற ஆசாமி இருக்கும் போது அவருக்கு கவலையேது ? உடனே ஜனங்கள் தலையில் கை வைக்கத்தீர்மானித்துவிட்டார். புது வரிகளுக்கு கணக்கு போட்டார். அவர் போட்ட கணக்கு வேண்டிய தொகைக்குமேல் போயிற்று. அதாவது 18 மாதங்களுக்கு வரியும், சம்பளக்குறைவும் சேர்த்தால் 34 கோடியே 11 லட்சம் பெருகுகிறது. வேண்டியதோ 29 கோடியே 25 லட்சம்தான். அதிகமாயிருக்கும் 4 கோடியே 86 லட்சம் எதற்காக ? "கைவசம் இருக்கட்டும்" என்று பொக்கிஷ மந்திரி சொல்லுகிறார். இளித்தவாயர்கள் கொடுத்தால், கைவசம் வைத்துக்கொள்ள யாருக்குத் தான் பிரியமிருக்காது ? அதிக வரும்படிக்கு தக்கபடி வரிகளை குறைக்கக் கூட பொக்கிஷ மந்திரிக்கு தயவில்லை.

இதுவே சிக்கன நாடகத்தின் சிறப்பு. கிணறு வெட்டப் போய் பூதம் புறப்பட்டதாம். அதைப்போல சர்க்கார் செலவை குறைக்கும்படி ஜனங்கள் கேட்டார்கள். "தந்தோம்" என்று அதிக வரிகளை சர்க்கார் கொடுக்கிறார்கள். இந்த சிறப்பிற்கு இதற்கு மேல் வியாக்கியானம் தேவையில்லை.

---

## தமிழ்நாடு சித்திர மடல்.

---

தமிழ்நாடு சித்திரமடல் என்ற வருஷ அநுபந்தம் பிரதி வரப்பெற்றோம். 92 பக்கங்கள். ஏராளமான படங்கள். பல இனிமையான கட்டுரைகள். முதல் பக்கத்தில் சாந்த சொரூபியான புத்த பகவான் படம் சித்திரமடலை அலங்கரித்து நிற்கிறது விலை அணா 8. கட்டுரைகளையும், படங்களையும் பார்த்தால் விலை மிகவும் மலிவு. வேண்டுவோர் சென்னை பிராட்வே தமிழ்நாடு ஆபீசுக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

## பார்லிமெண்டில் படையெடுப்பு.

---

சென்ற 29ந் தேதி யன்று லண்டன் பார்லிமெண்ட் மீது ஆயிரம் வேலையில்லாத தொழிலாளர் படையெடுத்துச் சென்றனர். அவர்களை போலீசார் தடியால் அடித்து கலைத்தார்களாம். குதிரை மீதிருந்த போலீசாரை ஆண்களும் பெண்களும் கீழே இழுத்து தள்ள முயற்சித்தார்களாம். இந்த போராட்டம் பலமணி நேரம் நடந்ததாம். வேலையில்லாத தொழிலாளருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது சீமையில் வழக்கம். சிக்கனத் திட்டத்தில் இந்த உபகாரச் சம்பளத்தை குறைப்பதும் ஒன்று. இதை குறைக்கக் கூடாதென்று தொழிற் கட்சி மந்திரிகளில் பலர் சொன்னார்கள். பிரஞ்சு பாங்கிகளும், அமெரிக்க பாங்கிகளும் அதை குறைத்தால்தான் பிரிட்டனுக்கு கடன் கொடுப்போம் என்று கூறினர். இதனால்தான் தொழிற்கட்சி மந்திரி சபை ராஜிநாமாச் செய்ய நேரிட்டது. தேசிய சர்க்கார் என்ற பெயருடன் முக்கட்சியும் சேர்ந்த அவியல் மந்திரி சபை குறைக்க முடிவு செய்தது. இப்படி குறைக்கக் கூடாது என்று 20 ஆயிரம் தொழிலாளர் கையெழுத்திட்ட மகஜரை ஆயிரம் தொழிலாளர் எடுத்துக்கொண்டு லார்ட்ஸ் சபைக்கு போயினர். அப்படி போனவர்களையே போலீசார் கலைத்திருக்கிறார்கள். இதில் இரண்டு விஷயங்கள் கவனிக்கத் தக்கவை. கூட்டத்தில் இருந்தவர்கள் ஒரே ஆயிரம்பேர் தான். அவர்கள் போலீசாரை எவ்வளவோ கஷ்டப்படுத்தியும் 10 பேரையே போலீசார் கைது செய்திருக்கிறார்கள். இந்த ஆயிரம் பேரை கலைக்க பல மணி நேரம் பிடித்திருக்கிறது. இரண்டாவது போலீசார் தடியால் அடித்தார்கள் என்று செய்தி சொல்லுகிற போதிலும், ஒருவர் கூட காய மடைந்ததாகத் தெரியவில்லை. இதற்கு காரண மென்ன ? பதினாயிரக்கணக்கான கூட்டத்தையும் அரை மணியில் அடித்து துரத்தி ஆயிரக்கணக்கான பேர்களை படுகாயப் படுத்தும் இந்நாட்டு போலீசாரைப் போல அவர்கள் ஏன் நடக்கவில்லை ? பிரிட்டிஷ் ஜனங்கள் சுயராஜ்யம் பெற்றவர்கள். அங்கே போலீசார் வால் நீட்ட முடியாது. இந்நாட்டில் ஜனங்களுக்கு சுயராஜ்யமில்லை. ஆனால் போலீசார் சுயராஜ்யம் பெற்றவர்கள். ஆகவே அவர்கள் என்ன செய்தாலும் கேட்பாரில்லை.

Koviloor Digital Library



## சர்வ சந்தேக சாஸ்திரி.

சாஸ்திரி தர்க்க சாஸ்திரத்தை கரைத்து குடித்தவர். ஆகவே எடுத்ததெல்லாம் சந்தேகம். நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்ற சந்தேகம் ஒரு நாள் வந்தது. பல நாள் யோசித்துப் பார்த்தார். முடிவு தெரியவில்லை. கடைசியாக சோதனை செய்து முடிவை கண்டுபிடிக்க தீர்மானித்தார். சோதனை ஆபத்தில் வந்து சேர்ந்தது. தொன்னை சரியாய் இருக்கிறவரை நெய்க்கு சேதமில்லை. சோதனை பார்க்க கவிழ்த்தவுடன் நெய்யெல்லாம் விழுந்து விட்டது. நெய்க்கு தொன்னை ஆதாரமாகவுமில்லை. தொன்னைக்கு நெய் ஆதாரமாகவுமில்லை.

வட்ட மேஜை மகாநாட்டில், சமூக சமரசம் ராஜ்ய விடுதலையை கொடுக்குமா, ராஜ்ய விடுதலை சமூக சமரசத்தை கொடுக்குமா என்று நடக்கும் விவாதம் இதைப்போலவே இருக்கிறது. அந்தந்த ஸ்தானத்தில் இருக்கிறவரை எல்லாம் சரியாகவே இருக்கும். நிலைமை மாறி தலைகீழானால் எதுவும் எதையும் காப்பாற்ற முடியாது. தகராறும், வாதமும், சந்தேகமும் ஒரு காசுக்கும் உதவா. நியாய புத்தியும், தாராள புத்தியும் இப்பொழுது வேண்டும்.

ஆனால் லண்டன் மகாநாடு ஆரம்பமே கோணல் வழியில் புறப்பட்டிருக்கிறது. வகுப்புகளில் உள்ள வகுப்புவாதிகளைப் பொறுக்கி எடுத்து வாதம் செய்யச் சொல்லுவதால் கஷ்டம் தீர்ந்து விடாது. வகுப்புகளில் உள்ள வகுப்புவாதமில்லாதவர்களை கூட்டிவைத்து பேசச் சொன்னால்தான் முடிவு ஏற்பட முடியும்.

ராஜ்யவிடுதலை வகுப்புச்சண்டைகளுக்கு மேலானது. வகுப்புச்சண்டைகளை விட்டு ராஜ்ய விடுதலையை கட்டாயம் பிரித்து விடவேண்டும். ஆனால் பிரிட்டிஷ் மந்திரிசபை அப்படி நினைக்கவில்லை. ராஜ்ய விடுதலையையும், வகுப்பு சண்டைகளையும் பிணைத்து விட்டிருக்கிறார்கள். வகுப்புச் சண்டைகள் பலமானால் ராஜ்ய விடுதலையை கொன்று விடும். ராஜ்ய விடுதலை பலமானால் வகுப்பு சச்சரவுகளை மாய்த்து விடும். பிரிட்டிஷ் சர்க்கார் இரண்டையும் கிளப்பி விட்டுக் கொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

தாதி தனக்கு வேலையிருப்பதற்காக குழந்தையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவாளாம். அதைப்போல மைனாரிட்டி கட்சிகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாக சர்க்கார் கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## சந்திரன் இல்லாத வானம்.

சந்திரன் இல்லாத வானம் வானமல்ல. டாக்டர் அன்சாரியில்லாத முஸ்லிம்கள் கூட்டம் ஒரு கூட்டமாகுமா? டாக்டர் அன்சாரியை முஸ்லிம்கள் எப்படியாவது லண்டன் மகாநாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென்று மகாத்மா சொல்லுகிறார். முஸ்லிம்களில் இரண்டு கட்சி. அன்சாரி கட்சி ஒன்று. ஆகாகான் கட்சி ஒன்று. இரண்டு கட்சிகளும் சேர்ந்து என்ன கேட்கின்றன என்று தெரிந்தால்தான் இந்துக்களுடன் ராஜி பேச மகாத்மாவிற்கு சாத்தியப்படும். ஆகவே டாக்டர் அன்சாரியை கொண்டுவாருங்கள் என்று மகாத்மா சொல்லுகிறார். அன்சாரியில்லாமல் ராஜி பேச்சு நடக்கப்போவதில்லை. ஆகவே ஆகாகான் கோஷ்டியார் விழிக்கிறார்கள். டாக்டர் அன்சாரியை மகாநாட்டுக்கு நியமித்தால் தாங்கள் வரமாட்டோம் என்று ஆகாகான் கட்சியார் முன்பு சொன்னார்கள். இப்பொழுது அவர்களே அன்சாரியை நியமிக்க வேண்டுமென்று சர்க்காரை கேட்பது சுயமதிப்பில் தைக்கிறதாம். "அதனால் நாங்கள் கேட்கமாட்டோம். ஆனால் சர்க்கார் நியமித்தால் எங்களுக்கு ஆட்சேபனையில்லை" என்று சொல்லுகிறார்கள். மகாத்மா விடுவதாயில்லை. இந்து—முஸ்லிம் ராஜி உண்மையானதாயிருக்க வேண்டுமானால் அன்சாரியில்லாமல் முடியாது என்று சொல்லுகிறார். உண்மைதான். ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்கள் வானத்தில் இருக்கலாம். எத்தனை ஆயிரம் இருந்தாலும், சந்திரன் இல்லாத வானம் ஒரு வானமா? ஆயிரம், ஆயிரம் செடி கொடிகள் இருக்கலாம். என்ன இருந்தாலும் தாமரை இல்லாத தடாகம் ஒரு தடாகமா? எத்தனை பேர் கூடினாலும் அன்சாரியில்லாத கூட்டம் ஒரு கூட்டமாகாது.

---

இம்மாதிரி செய்வது டெல்லி உடன்படிக்கைக்கு விரோதமானது. சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் ஏற்படும் விவகாரங்களில் காங்கிரஸ் ஜனங்களுக்கு பிரதிநிதியாக இருந்து மத்தியஸ்தம் செய்துவைக்க அதிகாரமுள்ளது என்பதே டெல்லி உடன்படிக்கையின் அடிப்படையான கொள்கை. அதற்கு நேர் விரோதமாக காரியம் நடக்கிறது.

—பிரீபிரஸ் ஜர்னல்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M. 2677·

விலை காலணா
(மலாய் 1½ சதம்)


# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர் :
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 5ௗ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 19ௗ திங்கட்கிழமை | இதழ் 35

## நரிக்கு கொண்டாட்டம்.




இரண்டும் சேர்ந்து வாழுகிற வரையில் நரிக்கு லாபம் கிடையாது. சண்டை நடந்தால் தான் மாமிசத்துண்டு கிடைக்கும். யார் ஜெயித்தாலும், தோற்றாலும் அதற்கு கவலையில்லை. அதற்கு வேண்டியது சண்டை ஒன்றே. லண்டன் மகா நாட்டில் கூடியிருக்கும் "புத்திசாலி"களுக்கு இந்த சூழ்ச்சி தெரியவில்லையே!

## கிரீரர் முறுக்கு.

யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் என்பார்கள். இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி சர். ஜேம்ஸ்கிரீருக்கு தற்சமயம் சுக்கிரதிசை நடக்கிறதாம். சுக்கிரதிசை நடக்கும்போது யோகத்திற்கு என்ன குறைவு? மேலும் அவரை "ஜிம்மி" என்று அருமையாய் அழைக்கும் பழைய எஜமான் லார்ட் வில்லிங்டனே வைசிராயாக வந்திருக்கும்போது அவருக்கு என்ன கஷ்டம் வரப்போகிறது? கிரீருக்கு சுக்கிரதிசை அடிக்கிறது. முறுக்காய் இருக்கிறார். லார்ட் இர்வின் காலத்தில் சர். கிரீருக்கு சனி திசை இருந்ததாக ஜோதிடர்கள் கூறுகிறார்கள். அது பொய்யோ மெய்யோ நாம் அறியோம். ஆனால், சுயராஜ்யக் கட்சியார் இந்திய சட்டசபையில் இருந்தவரையிலும், ஸ்ரீ. பட்டேல் தமது தாடியை உருவிக்கொண்டு கூரிய கண்களோடு சட்டசபைத் தலைவர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த வரையிலும் சர்க்கார் அங்கத்தினர் சகலருக்குமே சனி திசை பிடித்திருந்தது என்பது உண்மை. எல்லாருக்கும் ஒரே சமயத்தில் சனிதிசை பிடிப்பது சாத்தியமா, இது என்ன ஜோதிடமய்யா, என்று நீங்கள் கேட்கலாம். ஒரு கப்பல் மூழ்கினால் எல்லாரும் ஒன்றுபோல சாகிறார்களே, அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? ஜோதிடத்தை விட்டுத் தொலைப்போம். வேறு என்ன காரணத்தை நீங்கள் வைத்துக் கொண்டாலும் சரி, சனிதிசை பிடித்தது என்னவோ பொய்யல்ல. அதிலும் முக்கியமாக சர். கிரீர் பட்டபாடு கொஞ்சமல்ல. போல்ஷவிக் மசோதா தோல்வியிலும், சட்டசபை பாதுகாப்பு விஷயத்திலும் பட்டேலிடம் ஜிம்மி அகப்பட்டுக் கொண்டு விழித்த விழிப்பை கடவுளே அறிவார். அந்த ஜிம்மி இன்று சட்டசபையில் முறுக்குகிறதைப் பார்த்தால் நமக்கே ஆச்சரியமாயிருக்கிறது. பூனையில்லாத இடத்தில் எலி துள்ளித் துள்ளி விளையாடுமாம். சுயராஜ்யக் கட்சியார் இருக்கும்போது வாய் திறவாத "ஜிம்மி" இப்பொழுது ஆர்ப்பாட்டஞ் செய்கிறாராம். அச்சுச் சட்ட மசோதாவைப்பற்றி இந்திய சட்டசபையில் வாதம் நடக்கிறது. புதிய பவிசு வந்திருக்கும் ஜிம்மிக்கு இது பிடிக்கவில்லை. சட்டசபை அங்கத்தினரைப் பார்த்து, "நீங்கள் ராஜதந்திரிகளாய்க் காணப்படவில்லை. வெறும் விதண்டாவாதக்காரர்களாகவே தோன்றுகிறது" என்று சொன்னாராம்! பேஷ், ஜிம்மி, உமது முறுக்கே முறுக்கு! இம்மாதிரி சுயராஜ்ய கட்சியார் இருக்கும்போது நீர் சொல்லத் துணிவீரா? உமக்கும் ஒரு யோககாலம் வரவேண்டியதுதானே! அதற்காக நாம் சந்தோஷ மடைகிறோம். ஆனால் இந்த அவமானத்தை வாங்கி பேசாமல் மூட்டைகட்டி வைத்துக்கொண்ட சட்டசபை அங்கத்தினர்களின் அசட்டுத்தனத்தைக் கண்டு நாம் இரங்காமல் இருக்க முடியவில்லை.

## ஸ்லோகோம்ப் கட்டுக்கதை

ஸ்ரீ. ஸ்லோகோம்ப் என்ற வெள்ளை நிருபர், வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்திருக்கும்போது மகாத்மா அவர் காலில் விழுந்து வணங்கியதாக ஒரு கதை திரித்திருந்தார். இதைக் கண்டித்து மகாத்மா எழுதுகிறார்:—

ஸ்ரீ. ஸ்லோகோம்ப், நீங்கள் விஷயங்களைத் தெளிவாய்த் தெரிந்து கொண்டிருப்பீர்களென்று நினைத்தேன். இத்தகைய கற்பனைகளினால் உமது கற்பனா சக்திக்கு மதிப்பேற்படாது. மகா எளிய தோட்டியையும், தீண்டப்படாதவர்களையும் ஒடுக்கி நசுக்கிக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவனாக பாவித்து, நான் அவர்களைக் கொடுமைப்படுத்தியதற்கு பரிகாரமாக அவர்கள் முன் முழங்காற்படியிட்டு வணங்குவேன். ஆனால் அரசன் முன்பாக வணங்க மாட்டேனென்றால், இளவரசர் முன் வணங்குவேனோ? காரணமென்னவென்றால், அவர்கள் கேவலம் தம் புஜபல பராக்கிரமத்தால் பெருமித முற்றிருக்கின்றனர்.

யானைக் காலில் அகப்பட்டுச் செத்தாலும் சாவேனேயொழிய, இவர் முன்னிலையில் நான் நமஸ்காரம் செய்யமாட்டேன்.

நான் அறியாமை காரணமாக ஒரு எறும்பை மிதித்துவிடுவேனேயானால் நான் அதன் முன் விழுந்து வணங்குவேன். ஆனால் மன்னரை வணங்கேன்.

Koviloor Digital Library



# பர்ன்ஹாம் கூச்சல்.

லார்ட் ராதர் மீரும், லார்ட் பீவர் புரூக்கும், மகாகனம் சர்ச்சிலும் மகாத்மா சீமைக்கு போகு முன்பு கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. அவர்களுக்கு பதிலாக மற்றொரு பேர்வழி கிளம்பியிருக்கிறார். இவர் பெயர் லார்ட் பர்ன்ஹாம். சைமன் கமிஷனில் இவர் ஒரு அங்கத்தினராய் இந்தியா வந்தவர். சைமன் கமிஷனுக்கு இந்தியாவில் நடந்த பரிசுகேட்டிலும், பகிஷ்கார ஆலாத்தியிலும், கருங்கொடி சாமரை வீச்சிலும் இவருக்கும் பங்குண்டு. அந்த மரியாதைகளெல்லாம் இந்நாட்டில் பெற்ற பர்ன்ஹாமுக்கு, மகாத்மாவிற்கு சீமையில் நடக்கும் உபசாரங்களைக் கண்டால் வயிறு எரியாதா என்ன? பச்சை மிளகாயைத் தின்றதுபோல அவர் வயிறு எரிகிறது. அடக்கி அடக்கிப்பார்த்தார். முடியவில்லை. எரி மலையைப்போல அவர் தொந்தியில் கிடக்கும் வசை மொழிகளை சரமாரியாக வெளிப்படுத்துகிறார். பிரிட்டனுக்கு இந்தியாவிலுள்ள எதிரிகளில் காந்தியே முதன்மையானவராம்! யார் வீட்டு சொத்தையாவது கொள்ளையடிக்க வேண்டுமென்று காந்தி சொல்லுகிறாரா? அல்லது எந்த நாட்டு ஜனங்களையாவது அடிமைப் படுத்தி சுரண்ட வேண்டுமென்று சொல்லுகிறாரா? இரண்டுமில்லை. பின் எதற்காக கோபம்? முன்போல பிரிட்டிஷ் வர்த்தகர் இந்நாட்டை சுரண்ட முடியாதபடி காந்தி தடுப்பதே அவருக்கு கோபம். காந்திக்கு கொடுக்கும் வரவேற்புகள் இங்கிலாந்திற்கு பெரிய அவமானமென்று பர்ன்ஹாம் கூச்சல் போடுகிறார். பர்ன்ஹாம் பதினாயிரம் தரம் செத்து செத்து பிறந்தாலும் காந்தியின் மகிமையை அறிய முடியாது. மகிமையையே அறிய முடியாதென்றால், காந்திக்குள்ள மதிப்பு அவருக்கு எப்படி வரப்போகிறது?

சைமன் கமிஷனை இந்தியாவில் யாரும் அழைக்கவில்லை. "சைமனே, திரும்பிப்போ" என்று சொல்லியும், அழையா வீட்டில் வலிய நுழைந்தார்கள். அதனால் சைமன் கமிஷன் மானங்கெட்டு, பரிசுகெட்டு, சீர்குலைந்தது. ஆனால் மகாத்மாவை வருந்தி பிரிட்டிஷ் சர்க்கார் அழைத்தார்கள். வேண்டுகோள் செய்து, அவர் கேட்பதையெல்லாம் செய்து கொடுத்தபடியால் மகாத்மா சீமைக்கு போயிருக்கிறார். அவருக்கு நடக்கும் உபசாரங்களைக்கண்டு வயிறு எரிவதால் நடக்கப் போவதென்ன? இந்த பர்ன்ஹாம் பிறந்து வளர்ந்த நாட்டிலேயே அவரை மதிப்பார் யாருமில்லை. அவர் கூச்சல் போடுவதால் என்ன நடக்கப் போகிறது? நாம் அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கையுள்ளவராகையால், பாவம், அவர் கத்தி கத்தி மண்டை வெடித்துப் போகாமல் இருக்க வேண்டுமே என்று கவலைப் படுகிறோம்.

மற்றொரு வேடிக்கை. இர்வின் மிகவும் நல்லவராம். ஆனால் ராஜ தந்திரத்தில் காந்திக்கு சரியான ஜோடி யல்லவாம். அதாவது மகாத்மா மிகுந்த ராஜதந்திரமுள்ளவராம். அதனால் லார்ட் இர்வினை சுலபமாய் மடக்கி விட்டாராம். லார்ட் இர்வின் நல்லவராயிருந்தாலும், 11 அவசரச்சட்டங்கள் செய்தும் பலிக்காமல் போன பின்பே மகாத்மாவுடன் ராஜி செய்ய வந்தார் என்பதை யாரும் மறந்துவிடவில்லை. லார்ட் இர்வின் ராஜதந்திரியாய் இருந்ததனால் தான், தேசீய இயக்கத்தின் பலத்தை அறிந்து ராஜி செய்து கொண்டார். இல்லாவிடில் பிரிட்டன் இந்தியாவை கனவிலும் நினைக்க முடியாதபடி நிலைமை மாறியிருக்கும். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இதே பர்ன்ஹாம் கோஷ்டியார், மகாத்மா ஒரு மதப்பித்து பிடித்த சன்னிபாசியென்றும், அவருக்கு ராஜீய விஷயம் தெரியாதென்றும் முன்பு கத்தினார்கள். இப்பொழுது அவர்களே மாறிப் பேசுவது அவர்கள் அயோக்கியத்தனத்தையோ அல்லது முட்டாள் தனத்தையோ காட்டுகிறது. அயோக்கியர்களாயிருந்தால் அவர்களை கவனிக்கவேண்டியதில்லை. முட்டாள்களா யிருந்தால் லட்சியஞ் செய்ய வேண்டியதில்லை. இரண்டும் ஒன்றே.

Koviloor Digital Library



# பிரார்த்தனையின் பெருமை

ராஜபுத்தானா கப்பலில் மகாத்மா சென்ற போது காலைப் பிரார்த்தனையைவிட மாலைப் பிரார்த்தனையின் போதே, சுமார் நாற்பது பேர் வரை தினந்தோறும் கூடிவந்தனர். சில ஐரோப்பியர்களும் இதற்கு வந்தனர். இப்பிரார்த்தனை முடிந்த பிறகு, தினந்தோறும் பதினைந்து நிமிஷ நேரம் வரை ஏதேனும் ஓர் உபந்நியாசம் செய்ய வேண்டுமென்று இந்த நண்பர்கள் மகாத்மாவைக் கேட்டுக்கொண்டார்கள். தினந்தோறும் ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டுமென்றும், மறுநாள் அதற்கு மகாத்மா பதில் அளிக்கவேண்டுமென்றும், ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருநாள் ஓர் இந்திய மாணாக்கர், பிரார்த்தனையினால் காந்தியடிகளுக்கு ஏற்பட்ட அநுபவத்தைப்பற்றிக் கூறும்படி கேட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது :—

"என் உயிரைக் காப்பாற்றியது பிரார்த்தனைதான். அஃதிருந்திராவிட்டால் நான் எப்பொழுதோ பைத்தியக்காரனாகிவிட்டிருப்பேன். என் வாழ்நாளிலே பொதுநல விஷயமாகவும், சொந்த விஷயமாகவும் பலவித அநுபவங்களை நான் அநுபவித்திருக்கிறேன். இந்த அநுபவங்கள் எனக்கு ஒருவித வெறுப்பையே உண்டாக்கிவிட்டன. ஆனால் பிரார்த்தனையினால் இந்த வெறுப்பு விலகிவிட்டு நீங்கிவிட்டது. ஆனால், என் வாழ்க்கையின் ஓர் அம்சமாகச் சத்தியம் இருக்கிறது. அதைப்போல் இந்தப் பிரார்த்தனை இல்லையென்பதுண்மை. அவசியத்தை முன்னிட்டே இந்தப் பிரார்த்தனையை நான் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. நான் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்குங் காலத்து இந்தப் பிரார்த்தனை எனக்குப் பெரிதும் ஆறுதல் அளித்திருக்கிறது. ஆண்டவனிடத்திலே எனக்கு நம்பிக்கை, அதிகமாக அதிகமாகப் பிரார்த்தனையிலே என் மனம் அதிகமாக ஈடுபட்டது. பிரார்த்தனையில்லாமல் வாழ்க்கை சூனியமாகிவிட்டது. நான் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, கிறிஸ்தவக் கோயில்களில் நடைபெறும் பிரார்த்தனைகளுக்குச் செல்வதுண்டு. அங்கு, தொழுவோர், ஆண்டவனைப் பெரிதும் இரந்து வேண்டிக்கொண்டார்கள். ஆனால் என்னால் அப்படி செய்ய முடியவில்லை. தேகத்திற்கு உணவு எப்படி இன்றியமையாததோ அப்படியே ஆன்மாவுக்குப் பிரார்த்தனை இன்றியமையாததென்று என் வாழ்நாளின் பிற்பாகத்தில் நான் கண்டுகொண்டேன். ஆராய்ந்து பார்த்தால், ஆன்மாவுக்குப் பிரார்த்தனை இன்றியமையாததா யிருப்பதுபோல், தேகத்திற்கு உணவு அவ்வளவு இன்றியமையாததல்ல. ஏனெனில், தேகத்தை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்திருக்க வேண்டுமானால், சில சமயங்களில் பட்டினி போடவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால் ஆன்மாவுக்குப் பட்டினி போடுவதென்பது கிடையாது. உலகத்திலே தோன்றிய மகான்களில் மூவராகிய, புத்தர் பெருமான், கிறிஸ்து நாதர், நபிகள் நாயகம் ஆகிய இவர்கள், பிரார்த்தனையின் மூலமாகவே தாங்கள் ஞானத்தை யடைந்ததாகப் பல ஆதாரங்களை வைத்துச் சென்றிருக்கிறார்கள். ஏன்? இப்பொழுதும் இலட்சக் கணக்கான ஹிந்துக்கள், முஸல்மான்கள், கிறிஸ்தவர்கள் முதலியோர் தங்கள் வாழ்க்கையில் இன்பத்தைக் காண பிரார்த்தனையே செய்கிறார்கள். இவர்களை நீங்கள் பொய்யர்களென்று சொல்ல முடியாது. இவர்கள் பொய்யர்களானால் இவர்களுடன் கலந்து கொள்ளவே நான் விரும்புகிறேன். ஏனெனில் இந்தப் பிரார்த்தனையான ஊன்றுகோலின்றி நான் ஒரு நிமிஷங்கூட என் வாழ்நாளைக் கடத்த முடியாது. இப்பொழுதேற்பட்டுள்ள அரசியல் நிலைமையைக்கண்டு எனக்கு எவ்வளவு சோர்வு ஏற்பட்டபோதிலும், நான் என் மன அமைதியை இழந்து விடவில்லை! என் மன அமைதியைக்கண்டு பொறாமைப் படுகிறவர்கள் உண்டு. இந்த அமைதி, பிரார்த்தனையினாலேயே உண்டாகிறது. நான் பெரிய படிப்பாளியல்ல; ஆனால் பிரார்த்தனையின் பெற்றியை உணர்ந்தவன். எந்த உருவத்தை வழிபாடு செய்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இவ்விஷயத்தில் அவரவர் போக்குப்படியே நடந்துகொள்ளவேண்டும். ஆனால், ஏற்கனவே பெரியோர் சென்ற சில பாதைகள் இருக்கின்றன, அவைகளின் வழியே செல்லுதல் நலம். இதுவே என்னுடைய அநுபவம். ஆதலின் ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்து, தங்கள் வாழ்நாளில் ஒவ்வொரு புதிய அம்சத்தைச் சேர்த்துக் கொள்வாராக."

"யங் இந்தியா".

Koviloor Digital Library

# குமாஸ்தா உற்பத்தி இயந்திரம்.

(லாலா லஜபதிராய்)

சர். ஜான் மால்காம் கூறுவதாவது:—இதர இடங்களிலும் ஆங்கிலக் கல்விச் சாலைகளை ஸ்தாபிக்காமல் பம்பாயில் மட்டும் ஸ்தாபித்திருப்பதினால் கணக்கர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் ஜாஸ்தி சம்பளம் கொடுக்க வேண்டியதாக விருக்கிறது. இவர்கள், தலைநகரத்திலிருந்து வெளியூர்களுக்கு மாற்றப்படும்போது ஜாஸ்திச் சம்பளம் கேட்கிறார்கள். செவ்வையாகப் பழக்கம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் தொகை குறைவாக இருப்பதினால் அவர்கள் கேட்ட சம்பளம் கொடுக்கவேண்டியதாக வருகிறது. இதனால் நமது இலாகாக்களிலெல்லாம் ஜாஸ்திச் செலவு ஏற்படுகிறது. இதற்குள்ள பரிகாரங்களை நான் பின்னர் விஸ்தாரமாகக் கூறுகிறேன்.

ஆனால் விலையைக் குறைப்பதற்கு ஏற்றவழி, சரக்கை அதிகப்படுத்துவதுதான். ஆகவே சூரத்திலும், புனாவிலும் ஆங்கிலப் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டும்."

"உத்தியோகம் கொடு; அல்லது உயிரை வதைத்து விடு" என்னும் மனப் போக்குடையவர்களை சிருஷ்டிப்பதே பிரிட்டிஷ் அதிகாரிகளின் நோக்கமாக இருந்து வருகிறது. இதற்கு அவர்கள் நிர்மாணம் செய்த கல்வி இயந்திரம் மிகப் பொருத்தமானதாகவும் இருக்கிறது, இத்துடன் இந்திய கைத்தொழில்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் மனப்பூர்வமாக அழித் தொழித்ததையும் கவனியுங்கள். இந்திய பருத்தித் தொழில் ஒழியவே லங்காஷயர் உயர்ந்தது. வர்த்தக சுதந்தரத்தின் பேரால் பால்ய தசையிலிருந்த கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்காமல், அவைகளின் வளர்ச்சிக்கு அதிகாரிகள் தடையுண்டு பண்ணினார்கள். நாணயச் செலாவணி முறையும், பாங்கி நிருவாக முறையும் இந்தியக் கைத்தொழிலாளருக்குத் தீமை விளைவிப்பனவாகவே இருக்கின்றன. சாஸ்திர வளர்ச்சியால் இதர நாடுகள் விவசாயம் மிக விருத்தி யடைந்திருக்கிறதாயினும் இந்திய விவசாயிகளுக்கு அதனால் ஒரு நன்மையும் ஏற்படவில்லை. சாஸ்திரிக விவசாய முறையில் இந்திய சர்க்கார் சிறிது கவனம் செலுத்தத் தொடங்கி யிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நமது விவசாயக் கல்விச் சாலைகளிலிருந்து வெளிவந்த பட்டதாரிகள் ஏட்டுச்சுரைக் காய்களா யிருக்கிறார்களே யன்றி அநுபவ ஞான முடையவர்களா யில்லை. லயால்பூர் விவசாயக் கல்லூரியில் பட்டம் பெற்ற சிலர், போலீஸ் இலாகாவில் உத்தியோகம் பெறத் தம்மிடம் சிபார்சுக் கடிதம் கேட்டதாக காலஞ் சென்ற சர். கங்காராம் கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு பிரசங்க மத்தியில் பிரஸ்தாபித்தார். கைத்தொழில், விவசாயம் முதலியவற்றின் கதியே இவ்வாறானால், இந்தியர்கள் சர்க்காரே தமக்குத் தஞ்சமென்றெண்ணி குமாஸ்தா வேலைக்குப் போவது ஆச்சரியமா?

# வால் அறுந்தது

ராமநாதபுரம் ஜில்லாவில் சில இடங்களில் கலால் அதிகாரிகள் வாலாட்டி வந்தார்கள். ஒரு ஆள் சுமை அளவு வரியோ விலையோ இல்லாமல் இயற்கையாய் உப்பு விளையும் இடத்திலிருந்து ஒருவன் எடுத்துப் போகலாம். ஆனால் எடுக்கும் இடத்திலிருந்து 5 மைலுக்கு அப்புறம் கொண்டு போகக்கூடாது. இதுவே காந்தி மகான் செய்த உப்பு தர்மம். இதைக்கெடுக்க குட்டி அதிகாரிகள் ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள். ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி இவ்விஷயத்தை சென்னை சர்க்காருக்கு அறிவித்தார். சர்க்கார் உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தந்தி கொடுத்து வாலாட்டத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டனர். வாலறுந்து போயிற்று. சென்னை சர்க்கார் இம்மாதிரிவிஷயங்களில் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதை நாம் பாராட்டுகிறோம்.

# இந்தியா வாரப் பதிப்பு.

சென்னையினின்று வெளிவரும் தேசிய தினசரிப் பத்திரிகை யாகிய "இந்தியா" 27-9-31 முதல் ஒரு வாரப்பதிப்பு வெளியிட்டு வருகிறது. முதல் பிரதி வரப்பெற்றோம். 40 பக்கங்கள். கட்டும், அமைப்பும் அழகாயிருக்கின்றன. அட்டையும், உள்ளேயுள்ள காகிதமும் உயர்ந்தவை. ஏராளமான படங்களும், அறிவை வளர்க்கும் கட்டுரைகளும் இனிமையான வியாசங்களும் அடங்கியிருக்கின்றன. விலை அணா இரண்டே. இம்மாதிரி வாரப்பதிப்புகள் தமிழ்நாட்டிற்கு மிகவும் அவசியம். "இந்தியா" சிறப்புற்று ஓங்குமாக.

Koviloor Digital Library



## தங்கத்திற்கு வந்த பவிசு.

தங்கத்திற்கு வந்திருக்கும் பவிசு கொஞ்சமல்ல. எங்கு பார்த்தாலும் கிராக்கி. பிரிட்டனில் கிராக்கி. இந்தியாவில் பஞ்சம். நார்வே, ஸ்வீடன், டென்மார்க்கில் பிரியம். இப்பொழுது ஜெர்மனி கூட இந்த கோஷ்டியில் சேரப்போகிறதாம். இந்த தங்கம் எங்கேதான் போயிற்று? பாதிக்குமேல் அதாவது 100க்கு 60 வீதம் பிரான்ஸிலும் அமெரிகாவிலும் அகப்பட்டுக்கொண்டது. மற்ற நாடுகள் எல்லாவற்றிலுமாகச் சேர்த்து 100க்கு 40 தான் இருக்கிறது. ஆகவே தங்கத்திற்கு பவிசு வந்து விட்டது. பிளாட்டினத்தால் சிம்மாசனம் இழந்து மறுபடியும் சிம்மாசனம் பெற்ற தங்கம், என்றுமில்லாத பவிசு பெற்று வாழ்கிறது. அதற்கு வந்த மோடியே மோடி.

உலகம் முழுவதிலும் 12000 கோடி டாலர் பெறுமான தங்கம் இருக்கிறது. ஒரு டாலர் சராசரி 3 ரூபாய். இந்த தங்கத்தில் பிரான்ஸில் செப்டம்பர் 18உ கணக்குப்படி 5857 கோடி 50 லட்சம் பிராங்கு பெறுமானது இருக்கிறது. ஒரு ரூபாய்க்கு சராசரி 9 பிராங்க். அமெரிக்காவில் செப்டம்பர் 9உ யன்று கணக்குப்படி 500 கோடி டாலர் தங்கம் இருக்கிறது. ஜூன் 10உ யிலிருந்து செப்டம்பர் 9உக்குள் மட்டும் 19 கோடியே 70 லட்சம் டாலர் அதிகமாய் அமெரிக்காவில் தங்கம் சேர்ந்திருக்கிறது. ஜூன் 15உ முதல் செப்டம்பர் 18உக்குள் மட்டும் பிரான்ஸ 205 கோடி பிராங்க் அதிக தங்கம் சேர்த்திருக்கிறது. இரண்டு நாடுகளும் சேர்ந்து 729 கோடியே 50 லட்சம் டாலர்கள் தங்கம் வைத்திருக்கின்றன. இம்மாதிரி இரண்டு நாடுகளும் தங்கத்தை பங்குபோட்டுக் கொண்டால் உலகத்தில் தங்கப் பஞ்சம் ஏற்படாமல் என்ன செய்யும்? பிரான்சுக்கு இருக்கிற தங்கம் போதாதாம். ஆகவே அமெரிக்காவிலிருந்து 164 லட்சம் டாலர் தங்கம் தற்சமயம் வரவழைக்கிறது. எல்லா நாடுகளும் தங்கத்தை பலி கொடுத்து விட்டு இஞ்சி தின்ற குரங்கைப்போல விழிக்கின்றன. இந்தியா பலி கொடுத்ததற்கு காரணம் 18 பென்ஸ் விகிதமே.

## வெளிநாட்டார் முட்டாள்களா?

இந்திய சட்டசபையில் பொக்கிஷ மந்திரி புதிய வரவு செலவு மசோதாவை அஜர் செய்ய அநுமதி கேட்டார். சர். ஹரிசிங் கோர் அதை எதிர்த்தார். புது வரிகள், அனாவசியமென்றும், ராணுவச் செலவை குறைத்தால் போதுமென்றும் சொன்னார். சர். அப்துர் ரஹீம் அதை ஆதரித்தார். இச்சமயம் ஆர்தர் மூர் என்ற வெள்ளை அங்கத்தினர் எழுந்து பேசினார். வரவு செலவு மசோதாவை அஜர் செய்ய மறுத்தால் வெளி நாட்டாராகிய ஐரோப்பியரும், அமெரிக்கரும் சட்டசபையைப்பற்றி கேவலமாய் நினைப்பார்கள் என்று சொன்னார். இந்த உளறுவாய் ஆர்தர்மூர் சொல்லியதைப்பற்றி நாம் சிரத்தை கொள்ளவில்லை. ஆனால் இந்தப் பேச்சை பொக்கிஷ மந்திரி ஆதரித்து தாளம் போட்டதே நமக்கு ஆச்சரியகரமாயிருக்கிறது. அப்படிச் செய்தால் சட்டசபையை பொறுப்பில்லாத சபையென்று வெளி நாட்டார் நினைப்பார்களாம். அப்படியானால் சட்டசபைக்கு பொறுப்பு இருப்பதாகவா தற்சமயம் வெளி நாட்டார் நினைக்கிறார்கள்? ஒருகாலும் இல்லை. பொறுப்பற்ற சர்க்காருக்கு இந்த சட்டசபை ஒரு விளையாட்டுப் பொம்மையென்றே வெளி நாட்டார் நினைக்கிறார்கள். சட்டசபைக்குள்ள அதிகாரத்தின் யோக்கியதையை சுயராஜ்யக் கட்சியார் முன்பே வெளி நாட்டாருக்கு வெளிப்படுத்தியாய்விட்டது. ஆகவே வெளி நாட்டாரைப்பற்றி பொக்கிஷ மந்திரி கவலைப்பட வேண்டியதில்லை. வெளி நாட்டார் முட்டாள்களல்ல. இந்திய சர்க்காரின் யோக்கியதையை அமெரிக்கரும், ஐரோப்பியரும் நன்றாய் அறிவார்கள். சைமன் கமிஷனை சட்டசபை பகிஷ்கரித்ததே, அதற்காக சர்க்கார் சைமன் கமிஷன் விசாரணையை நிறுத்திவிட்டார்களா? இல்லை. இந்தியரின் கோரிக்கையை தெரிவிக்கும் நூற்றுக் கணக்கான சட்டசபை தீர்மானங்கள் எக்கதியாயின? குப்பைத் தொட்டிக்கு போயின. இதை உலகம் முழுவதும் அறியும். அப்படியிருக்க, ஏதோ சட்டசபைக்கு பெரிய பொறுப்பை கொடுத்திருப்பதைப் போலவும், அதை நிறைவேற்றவிட்டால் உலகமே சிரிக்குமென்றும் பேசுவது வெறும் அசட்டுத்தனத்தைத் தவிர வேறில்லை.

Koviloor Digital Library



## செய்தித் திரட்டு.

### தங்கம் போகிறது.

நாணயமாற்று விகிதப்படி அமெரிக்கா டாலருக்கு இந்திய தங்கம் மலிவாய் இருப்பதால் வெளி நாடுகளில் ஏராளமாக கிராக்கி யிருக்கிறதாம். சென்ற 3உ யன்று 2 கோடி ரூபாய் பெறுமான தங்கம் ஏற்றுமதியாயிருக்கிறது. பம்பாய் வர்த்தகர் 1ந் திகிலடைந்து போயினர். சர். விக்டர் சாசூன், சர். ஜிஹாங்கீர், ஸ்ரீ. வால்சந்த் முதலிய பிரபல வர்த்தகர் காங்கிரஸ் தலைவர் சர்தார் பட்டேலை 2உ கண்டு பேசி, தங்கம் ஏற்றுமதியாவதை தடுக்க யோசனை செய்தார்கள். இந்தியாவில் தங்கமதிப்பை எடுக்காமல் சவரனோடு வெள்ளியை பிணைத்திருப்பதால், இந்த தொல்லை நேரிட்டிருக்கிறது.

### ஹிஜ்லி சமரசம்.

ஹிஜ்லி சம்பவத்தைப்பற்றி விசாரிக்க வங்காள சர்க்கார் ஒரு கமிட்டி நியமிக்க தீர்மானித்துவிட்டபடியால், ஹிஜ்லி ராஜீயக்கைதிகள் உண்ணாவிரதத்தை விட்டனர்.

### இந்து முஸ்லிம் சமரசம்.

லண்டனில் இந்து முஸ்லிம் சமரசப் பேச்சு இன்னம் முடிவடையவில்லை. சப் கமிட்டி 1உ மறுபடியும் கூடியது. 8உ வரை ஒத்திவைக்கும்படியும், அதற்கிடையில் ராஜி பேசி பார்க்கலாமென்றும் மகாத்மா கேட்டார். ஆகாகான் இதை ஆதரித்தார். அதன்படி 8உ வரை கமிட்டி ஒத்திவைக்கப்பட்டது. அதற்கிடையில் ராஜிப் பேச்சை நடத்தி முடிக்க ஒரு சிறு கமிட்டியை மகாத்மா நியமித்திருக்கிறார். 2உ முதல் இந்த கமிட்டி கூடி யோசித்து வருகிறது.

### மகாத்மா வேலை.

வகுப்பு சமரசத்திற்காக மகாத்மா தீவிரமாக வேலை செய்து வருகிறார். முதல் மந்திரியும் மகாத்மாவும் அவ்விஷயமாய் கலந்து பேசினர்.

சவரன் மதிப்பு—வெள்ளி விஷயமாக இந்திய மந்திரி மறுபடியும் மகாத்மாவோடு பேசினர். முன்பு அந்நிய நாட்டு மந்திரியா யிருந்தவரும் தற்காலம் தொழிற் கட்சி தலைவரா யிருக்கிறவருமான ஸ்ரீ. ஹென்டர்சன் மகாத்மாவோடு பேசினர். நண்பர்கள் சங்கம் ஏற்பாடு செய்த ஒரு பிரார்த்தனை கூட்டத்திற்கு மகாத்மா வந்தார். ஐக்கிய ஆட்சி கமிட்டி தலைவர் லார்ட் சாங்கியும் வந்தார். பிரார்த்தனை முடிந்ததும், லார்ட் சாங்கி ஆவலோடு மகாத்மாவின் கரங்களைப்பற்றிக் கொண்டு தமது சகோதரியை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். எவ்வளவு வேலைகளுக்கிடையிலும், எவ்வளவு கவலைகளுக்கிடையிலும் தாம் சந்தோஷமாகவே இருப்பதாக மகாத்மா சொல்லுகிறார்.

## காந்தி ஜயந்தி.

மகாத்மாவின் பிறந்த தினநாளாகிய 2உ யன்று இந்தியாவெங்கும் பெரிய திருநாளாயிருந்தது. ஊர்வலங்களும், பிரசங்கங்களும், ஏழைகளுக்கு அன்னமும், நண்பர்களுக்கு விருந்தளித்தலும் நடந்தன. ஏராளமாக கத்தர் விற்பனையாயிற்று. லண்டனில் ஒரு பெரிய கூட்டம் ஸ்ரீ. வித்தல்பாய் பட்டேல் தலைமையில் கூடியது. மகாத்மாவை வாழ்த்தி, 575 பவுன் அடங்கிய பணமுடிப்பை அவருக்கு பரிசளித்தார். மகாத்மா பேசும்போது சொன்னர்:—“சர்க்கார் தங்கள் கொள்கையை சொல்லிவிட வேண்டிய காலம் நெருங்குகிறது. வீணாக நாங்கள் இங்கே காலம் கடத்திக்கொண்டிருக்க முடியாது. இங்கிருப்பதால் பயனில்லையென்று எப்பொழுது எனக்கு தோன்றுகிறதோ, அன்றே இந்நாட்டைவிட்டு போய்விடுவேன்”.

---

### “உப்பு வரியை தொலைப்போம்”

#### மகாத்மா கண்டனம்.

“ஏழைகள் உப்பிற்கு வரியை கூட்டியதைக்கண்டு நான் கலங்குகிறேன். இதை காங்கிரஸ் எதிர்த்து போராடும். வரவு செலவை சரிக்கட்டுவதற்கு வழி புதிய வரி விதிப்பதல்ல. சிவில் செலவிலும், ராணுவச்செலவிலும் குறைப்பதே வழி. வைசிராய் தமது சம்பளத்தை குறைத்துக் கொண்டதை பாராட்டுகிறேன். ஆனல் தற்காலம் குறைத்திருக்கும் சம்பளக் குறைவு போதாது. இந்தியா உண்மையான சுயராஜ்யம் பெறுவதுண்டானல் இன்னம் ஏராளமாக சம்பளக்குறைவு ஏற்பட வேண்டும்.”

—மகாத்மா.

Koviloor Digital Library



## ஓநாய் அழுகிறது.

மைக்கேல் ஓட்வியர், லார்ட் ஹூலிங்டன், லார்ட் சைடென்ஹாம், லார்ட் லாயட், இவர்கள் எல்லோரும் பெரிய பிற்போக்குகள் என்பதை நண்பர்கள் அறிவார்கள். லார்ட் பிரென்ட்போர்ட் இந்தக் கோஷ்டிக்கே குருபீடம் வகிப்பவர். இவர்கள் ஒன்று சேர்ந்து லண்டன் மகாநாட்டிற்கு சென்றிருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளை வரவழைத்து உபசரித்தார்கள். லார்ட் பிரென்ட் போர்ட் தலைமை வகித்தார். அச்சமயம் முஸ்லிம்களுக்காக இந்தப் பேர்வழிகள் கண்ணீர் வடித்தார்களாம். பாலஸ்தீன கொள்கையை மாற்றி இந்திய முஸ்லிம்களுக்கு தங்கள் நட்பை காட்டவேண்டுமென்று லார்ட் சைடென்ஹாம் கூட்டத்திற்கு செய்தி அனுப்பியிருந்தார். "முஸ்லிம்கள் ராஜ பக்தி மிகுந்தவர்கள். ஏகாதிபத்தியத்தில் முஸ்லிம்கள் அதிகம். வட்ட மேஜை மகா நாடு எப்படியாயினும், முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்க பிரிட்டிஷார் தவறமாட்டார்கள்" என்று தலைமை ஓநாய் லார்ட் பிரென்ட் போர்ட் சொன்னார். "நமது நல்லெண்ணத்தை காட்டிக்கொள்ள இச்சந்தர்ப்பம் வாய்த்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்று எகிப்திய முஸ்லிம்களை அடிமையாக்கிவைக்க ஆர்வத்தோடு வேலை செய்த லார்ட் லாயட் சொன்னார். இவற்றையெல்லாம் கேட்டு சர். முகமது ஷாபியும், மௌலானா ஷவுகத் அலியும் இளகிப் போனார்கள். ஆனால் திடீரென்று இந்த பேர்வழிகளுக்கு "முஸ்லிம் அபிமானம்" ஏற்பட காரணம் என்ன என்பதை மௌலானாவும், சர். ஷாபியும் அறியாமல் போய்விட்டார்கள். வட்ட மேஜை மகாநாட்டை கெடுக்கவே இந்த சூழ்ச்சி. கிலாபத் கிளர்ச்சிக்கு காரணம் யார் என்பதை மௌலானா அதற்குள்ளாக மறந்துவிட்டார். பாலஸ்தீனத்தில் யூதர் ஆட்சி ஏற்பட முயற்சி செய்வது யார் என்பதை அவர்கள் அறிந்தும் அறியாதவர்கள் போல் இருக்கிறார்கள். முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்களை நஜ்த் சுல்தான் கைப்பற்றியிருக்காவிட்டால் தற்சமயம் யார் கையில் இருக்கும் என்பதை மௌலானா ஏன் அறியவில்லை? எகிப்து முஸ்லிம்களை அடக்கிவைப்பது யார் என்பதை இன்னும் ஏன் அறிந்துகொள்ள முடியவில்லை? இதுவரை அடைந்த அநுபவங்களிலிருந்து அறிந்துகொள்ள முடியவில்லையானால், இனி கடவுள்தான் அவர்களுக்கு கண் திறக்க வேண்டும்.

## காந்தி வாரம்.

### நீங்கள் செய்யவேண்டியதென்ன?

ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்:—

காந்தி வாரத்தை காந்திஜியின் மனதிற்கினியத வேலைகளை செம்மையாய்ச் செய்தவன் மூலம் தமிழ் நாடெங்கும் கொண்டாடவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் அந்தரங்க சுத்தியுடன் சாத்தியமான அளவுக்கு வேலை நடக்கவேண்டும். இஃதொன்றே நமது மாபெரும் தலைவருக்கு நாம் செலுத்த வல்ல கடமையாகும். அடிகள் உபதேசித் தருளிய வழிகள் பல. குடி யொழித்தல், தீண்டாமை விலக்கு, அந்நியத்துணி பஹிஷ்காரம் இம்மூன்றும் முக்கியமான வேலைகள். இவ்வழியில் ஒன்றும் செய்ய இயலாதவர்கள் மகாத்மாவின் லட்சியம் பூர்த்தியாகிற வரையில் அவருக்கு ஆரோக்யமும் தேக வலிவும் அருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்கலாம்.

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறிக்கை.

காந்தி வாரத்தில் ஒவ்வொருவரும் கீழ்கண்ட வழிகளில் காங்கிரஸைப் பலப்படுத்தலாம்.

1. நாலணா சந்தா செலுத்திக் காங்கிரஸ் அங்கத்தினராகப் பதிவுசெய்து கொள்ளல்.

2. அன்னிய தேசத் துணிகளை விலக்கி கதர் உடுத்தல்.

3. உள்ளூரில் காங்கிரஸ் கமிட்டியார் நடத்தி வரும் கள்ளுக்கடை மறியல், அன்னிய தேச ஆடை பகிஷ்காரம் இவ்வேலைகளில் கலந்துகொள்ளல்.

4. காங்கிரஸ் நிதிக்குத் தாராளமாக பண உதவி செய்தல்.

இதுவரையில் தமிழ் நாட்டில் 45,000 பேர்களே காங்கிரஸ் அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். காந்தி வாரம் முடிவதற்குள் தமிழ் நாட்டில் குறைந்தது லக்ஷம் அங்கத்தினராவது சேரவேண்டும். இதற்கு உங்களால் ஆன உதவி செய்யுங்கள்.

### காந்தி வாழ்த்துப்பா!

அன்புமதத் தலைவனே வாழ்க ! வாழ்க !
அஹிம்சை நெறிகண்டவனே வாழ்க! வாழ்க!
துன்பமதை அன்புடனேற்றுமே வாழ்க!
ஜோதியே ! சுடரொளியே! துரையே வாழ்க!
இன்புடனே ஓராடை கொண்டாய் வாழ்க !
ஏழையர் பாலுளமுருகும் இறையே வாழ்க !
மன்பதைகள் துயர் நீக்கவந்தாய் வாழ்க !
வள்ளலே ! எங்காந்தி வாழ்க ! வாழ்க !

—காந்தி தாசர், பர்மா

Edited Printed & Published by T. S. Checkalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 1½ சதம்)


# காந்தி

'வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 8௳,
பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 22௳ வியாழக்கிழமை || இதழ் 36

## காசை கீழே வை!




(ஒருவன் கடன் கொடுத்திருந்தான். கடன் வாங்கியவன் பலதடவை ஏமாற்றி கடைசியாக ஒரு வாய்தா போட்டான். அன்றுபோய் கேட்டபோது, தேங்காய் முளைக்க போடப்போவதாகவும், அது மரமாகி பலன் தரும்போது முதல் பலனை அவனுக்கே கொடுத்து கடனை தீர்ப்பதாகவும் சொன்னனும்).

மகாத்மா :—மெக்டனல்ட், என் காசை (சுயராஜ்யம்) எங்கே? இனி பொறுக்க முடியாது. கீழே வைத்துவிட வேண்டும்.

மெக்டனல்ட் :—மகாத்மாவே, உமக்காக நான் கஷ்டப்படுவது தெரியவில்லையா? இந்த தேர்தல் தேங்காயை முளைக்க போடப்போகிறேன். இது பார்லிமென்ட் மரமாக வளர்ந்து, அதில் வரும் முதல் பலனாகிய மந்திரி சபையில் உமது கடனைப்பற்றியே முதல் யோசனை செய்வோம். ஆகவே பயப்படவேண்டாம்.

Koviloor Digital Library

# லண்டன் துணுக்குகள்.

(பல நிருபர்கள்)

மகாத்மா காந்தியை பிரிட்டிஷார் பார்த்த உடனேயே அவர்மீது நல்லெண்ணம் உண்டாயிற்று. காங்கிரஸ் தலைவர் எப்படி யிருப்பார் என்ற ஆச்சரியம் முதலில் அவர்களை பிடித்தது. அந்த ஆச்சரியம் காந்தியைப் பார்த்த பின்பு அநுதாபமாய் மாறிற்று.

ஐக்கிய ஆட்சி கமிட்டியில் மகாத்மா பேசிய இரண்டு பேச்சுகளும் அவர் உண்மையையும், உறுதியையும், நியாயத்தையும் பிரிட்டிஷார் மனதில் பசுமரத்தாணிபோல பதிய வைத்திருக்கின்றன. ஒரு பிரபல கன்சர்வேடிவ் அங்கத்தினர் "மகாத்மா இங்கிலாந்தை விட்டுப்போகு முன்பு கன்சர்வேடிவ்கள் அவர் ஞாபகத்திற்காக சிலை நாட்டுவார்கள், பாருங்கள்" என்று சொன்னார். மகாத்மாவின் வசிய சக்தி அவ்வளவு இருக்கிறது.

## சாங்கி—காந்தி தமாஷ்.

கமிட்டி தலைவர் லார்ட் சாங்கியும் மகாத்மாவும் நெருங்கிய நண்பர்களாய் விட்டார்கள். இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் இருப்பதால் அடிக்கடி ஒருவருக்கொருவர் தமாஷாய் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மகா நாட்டு நடவடிக்கைகளை மகாத்மா மிகுந்த ஜாக்கிரதையாக கவனித்து, ஏராளமாய் குறிப்புகள் எழுதிக் கொண்டு வருகிறார். பலர் அனாவசியமாக பேசிக் கொண்டு போவது எந்த அங்கத்தினருக்கும் பிடிக்கவில்லை. பழைய காலத்து கர்நாடகக் கொள்கைகளை சிலர் சொல்லுகிறார்கள். யாருக்கும் பிரதிநிதி என்று சொல்ல யோக்கியதை யில்லாத சிலர், சர்க்காரை அப்படியே ஆதரித்துப் பேசுகிறார்கள். ஆனால் அங்கத்தினர்கள் பேச்சு எவ்வளவுக் கெவ்வளவு பிற்போக்கான தாயிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு மகாத்மாவின் புன் சிரிப்பும் அதிகமாகிறது.

ஐக்கிய ஆட்சி அமைப்பை பாட்டியாலா எதிர்த்தபடியால், கட்சி பலமாகி அந்த எண்ணமே தொலைந்து போகுமென்று சிலர் எதிர்பார்த்தனர். மகாத்மா அசாத்தியமானவைகளை வேண்டுமென்று கேட்பார் என்று வேறு சிலர் யூகித்தனர். எல்லாரும் ஏமாந்து போயினர். மகாத்மா பேச்சைக் கேட்டதும், பதில் சொல்ல வழியில்லாமல் திகைக்கின்றனர்.

மகாத்மாவிற்கு லண்டனில் வேலை மிகவும் அதிகமா யிருக்கிறபடியால், ஒவ்வொரு வாரக் கடைசியிலும் கிராமத்திற்கு போய் ஓய்வு எடுத்துக் கொள்ள ஏற்பாடா யிருக்கிறது.

# ஓநாய் ரகசியம் வெளியாயிற்று.

சென்ற இதழில் "ஓநாய் அழுகிறது" என்ற தலைப்பில் எழுதியதை நண்பர்கள் படித்திருக்கலாம். லார்ட் பிரன்ட்போர்ட் கோஷ்டியார் முஸ்லிம்களை கூட்டிவைத்து பேசினார்கள் அல்லவா? அக்கூட்டத்திற்கு சர். அலி இமாமையும் அழைத்திருந்தார்கள். சர். அலி இமாம் ஹைதராபாத்தில் திவானாயிருந்தவர். இந்திய சர்க்காரில் நிர்வாக சபை அங்கத்தினரா யிருந்தவர். வட்ட மேஜை மகாநாட்டிற்கு ஒரு பிரதிநிதி. அப்படியிருந்தும் அந்தக் கூட்டத்தில் அவரை பேச விடவில்லை. ஏன்? அவர் தேசிய முஸ்லிம். அவரை பேசவிட்டால் சாயம் வெளுத்துப் போய்விடும். பிரன்ட்போர்ட் கோஷ்டியார் கண்ணீர் வடிப்பது போலிக் கண்ணீர் என்பது உலகமெங்கும் தெரிந்துபோகும். ஆகவே அவரை பேச விடவில்லை. இந்த விசித்திர கூட்டத்தைப் பற்றி சர். அலி இமாம் சொல்லுகிறார்:—

நான் கூட்டத்தில் பேசாமல் இருந்ததால் ஸ்ரீ. ஷவுகத் அலியும், சர். ஷாபியும் சொல்லியதை ஆதரிப்பதாய் ஏற்படாது. என்னை பேச விடவில்லை. அவர்கள் கட்சியை ஆதரிப்பவர்களுக்கு மட்டுமே பேச அநுமதி கொடுத்தனர். இம்மாதிரி பேச்சு சுதந்திரம் இல்லாத கூட்டமாக அது இருக்குமென்று நான் நினைக்கவில்லை. கூட்டத்தை கூட்டியவர்கள் முன்கூட்டி யோசனை செய்து தந்திரமாய் நடந்துகொண்டார்கள். பிரிட்டிஷாருடன் ஸ்ரீ. ஷவுகத் அலியும் மற்றவர்களும் தகாதமுறையில் ஒப்பந்தம் செய்துகொண்டால், அதனால் பாதக மடைகிறவர்கள் முஸ்லிம்களே. இதை இப்பொழுதே எச்சரிக்கிறேன். பிரிட்டிஷார் முஸ்லிம்களிடம் அநுதாபப்படுவதாக காட்டிக் கொள்ளுவதெல்லாம் வெறும் வெளிவேஷம். தங்கள் காரியம் முடிந்தால் உடனே பிரிட்டிஷார் உதறித்தள்ளி விடுவார்கள் என்பது நிச்சயம். தற்காலம் லார்ட் பிரன்ட்போர்ட் கோஷ்டியாரும், ஷவுகத் அலி கோஷ்டியாரும் என்னதான் ஒப்பந்தஞ் செய்தாலும் முடிவில் இந்தியாவால் அவை உதறித் தள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இம்மாதிரி சூழ்ச்சியால் யாதொரு பயனும் விளையாது என்பதை எச்சரிக்கிறேன்.

Koviloor Digital Library



## லண்டனில் காந்திஜி.

மகாத்மா காந்தி மார்சேல்ஸ் என்ற பிரஞ்சு துறைமுகத்தில் கப்பலைவிட்டு இறங்கியதும் முதலில் அவரை வரவேற்றவர் ஸ்ரீமதி. ரோலண்ட் ஆவர். ரோமன் ரோலண்ட் என்பவர் பிரபல பிரஞ்சு நாவலாசிரியர். நோபல் பரிசு பெற்றவர். மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்மக்கொள்கையை பூர்ணமாய் ஆதரிப்பவர். மகாத்மா சரித்திரத்தையும் அவர் கொள்கைகளையும் பிரஞ்சு பாஷையில் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். பிரஞ்சு பெரியோர்களில் அவர் முதன்மையானவர். சமதர்மக்கொள்கை யுடையவர். தற்சமயம் ஸ்விட்ஜர்லாந்தில் வசிக்கிறார். அவர் எவ்வளவோ முயன்றும் மகாத்மாவை நேரில் வரவேற்க முடியாமல் சரீர அசௌக்கியம் ஏற்பட்டபடியால், தமது சகோதரியாகிய ஸ்ரீமதி. ரோலண்டை அனுப்பினார். தமது சகோதரி மூலம் தமது அன்பான வரவேற்பை மகாத்மாவிற்கு சமர்ப்பித்தார். ஸ்ரீமதி ரோலண்ட் மகாத்மாவை பார்த்தவுடன், தமது சொந்த சகோதரரைப் போல நினைத்து ஆலிங்கனம் செய்துகொண்டார்.

லண்டனுக்கு மகாத்மா போய்ச் சேர்ந்தபின்பு அவருடைய பழைய நண்பர்கள் அவரை வந்து பேட்டி கண்ட வண்ணமாயிருக்கிறார்கள். மாஜி சிவில் சர்விஸ்காரர் பலர் வந்து பேட்டி காணுகிறார்கள். ஒரு நண்பர் 50 பவுன் செக் ஒன்றை அனுப்பி, மகாத்மாவிற்கு இஷ்டமான வழியில் செலவிடும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பிரிகேடியர் ஜெனரல் குரோசியர் என்பவர் "காந்திக்கு ஒரு வார்த்தை" என்றொரு புத்தகம் எழுதி யிருக்கிறார். அதை மகாத்மாவிற்கு கொடுக்கும்படி ஸ்ரீமதி லெஸ்டருக்கு அனுப்பினார். "ஒரு ராணுவ அதிகாரி மகாத்மா கொள்கையை ஆதரிப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்படலாம்" என்று அவர் ஒரு கடிதமும் எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் இதுவரை கையாண்டுவந்த பலமுறைகளை அக்கிரமமானவை என்று அவர் கண்டிக்கிறார். அந்த சம்பவங்களை ஒருவர் படித்தால் உடம்பு சில்லிட்டுப்போகும். அயர்லாந்தில் சுதந்திரப் போராட்டத்தை அடக்க பிரிட்டிஷார் முயன்ற காலத்தில் ஜெனரல் குரோசியர் அங்கே வேலையில் இருந்தார். பெண்களை அநியாயமாய் கொடுமைப்படுத்தும்படி அவருக்கு உத்தரவு வரவே, அப்படிச் செய்ய பிரியமில்லாமல் அவர் ராஜிநாமாச் செய்து விட்டார். பிரிட்டிஷ் பத்திரிகைகளும், சர்ச்சில் கோஷ்டியாரும் பொய் பிரசாரம் செய்வதை அவர் பலமாய் கண்டித்து புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

## கத்தர் புகழ்.

(சேலம் எஸ். ராமசாமி)

ராகம் ஆரபி. (பாதுகையே-என்ற மெட்டு)

பல்லவி.

கதருடைய கதருடையே
கணக்கில்லா மகத்துவம்,
தனைசிறப்புடன் பெற்றக் (கத)

அநுபல்லவி.

மாந்தர் முப்பத்து,
முக்கோடி ஜனங்களும்
மகிழ்வுடன் தரித்துந்தன்,
மகிமைதனை செய்யும் (கத)

சரணங்கள்.

1. வறுமையை நீக்கி,
பெருமையை நோக்கி,
சிறுமையைப் போக்கிமிக,
செழிப்புடன் வாழ்வாய்,
கருமமே கண்ணாய்,
கனவிலுங் கொண்ட
காந்தி மகாத்மாவின்,
கருணையைக் கொண்ட (கத)

2. பாரத தேவிதன்
பாலர்க்குப் பாங்காக,
பரிவுட னளித்திடக்,
கதருடையே,
பாரத பூமியும்,
பாரினில் புகழ்பெறப்
பாடினே னுந்தனையே,
ராமன் நாளுமின்ப முறக் (கத)

Koviloor Digital Library



# கடவுள் உண்டா?

மகாத்மா காந்தி ராஜபுத்தானா கப்பலில் சென்று போகும்போது மாலை தோறும் பிரசங்கம் செய்வது வழக்கம். ஒரு நாள் மாலை பிரார்த்தனையைப்பற்றி பிரசங்கம் செய்தார். அச்சமயம் அங்கிருந்த ஒரு மாணவர் எழுந்து "எனக்கு கடவுள் இருப்பதாக நம்பிக்கையில்லை" என்று சொன்னார். அதற்கு மகாத்மா அளித்த பதிலாவது:—

"ஆண்டவனிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்வது எனது சக்திக்குப் புறம்பானதாகும். ருஜுப்படுத்த முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. ஆண்டவன் இருப்பானது, நமது மனதுக்கு எட்டாததாயிருக்கிறது. அறிவுக்கு எட்டும் விஷயத்தைப்பற்றி நான் ஒன்றும் கூறப்போவதில்லை. ஏனெனில் அறிவினால் ஆண்டவன் இருப்பைப்பற்றிச் சர்ச்சை செய்வது அநேகமாகத் தவறிய போயிருக்கின்றது. ஆண்டவன், தர்க்கத்திற்கு அதீதனாயிருக்கிறான். ஆனால் பல நிகழ்ச்சிகளைக் கொண்டு ஆண்டவன் இருப்பை ருஜுப்படுத்தலாம். ஆனால் அவைகளையெல்லாம் பற்றி இப்பொழுது நான் உங்களுக்கு எடுத்துக் காட்டப் போவதில்லை. குழந்தைகள் நம்பிக்கை வைப்பதைப் போல் ஆண்டவனிடத்தில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். நான் இருப்பது எப்படி நிச்சயமோ அப்படியே ஆண்டவன் இருப்பதும் நிச்சயம். ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வைப்பதானது, என்னைப்போல் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு அவசியமாயிருக்கிறது. அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து இந்த உண்மையை நீங்கள் அறிந்து கொள்ளலாம். இழந்துவிட்ட நம்பிக்கையை மீண்டும் பெறவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். இந்த நம்பிக்கையைப் பெறவேண்டுமானால், நீங்கள் கற்ற கல்வியை ஒரு சிறிது மறந்துவிடவேண்டும். நமக்கு ஒன்றுமே தெரியாதென்ற எண்ணத்துடன் ஆரம்பியுங்கள். அதுவே அடக்கத்திற் கறிகுறி. நாம் சாதாரண அணுக்களினும் சிறியவர்கள். அணுக்களினும் சிறியவர்கள் என்று வேண்டுமென்றே கூறுகிறேன். ஏனெனில் அணுவானது, இயற்கை விதிப்படி நடக்கிறது. ஆனால் நாமோ நமக்குள்ள அஞ்ஞானத்தால், இயற்கை விதியையே மறக்க ஆரம்பிக்கிறோம். நம்பிக்கையில்லாதவர்களுக்கு நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. ஆண்டவன் இருப்பை எப்பொழுது நீங்கள் ஒத்துக் கொண்டீர்களோ, உடனே பிரார்த்தனையின் அவசியத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது வாழ்க்கையே ஒரு பிரார்த்தனையாயிருக்கிறதென்றும், ஆதலின் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யவேண்டியது அவசியமில்லையென்றும் சுலபமாகச் சொல்லிவிடாதீர்கள். ஆண்டவனோடு எப்பொழுதும் ஒன்றுபட்டு நின்றவர்கள்கூட இங்ஙனம் கூறத் துணியவில்லை. அவர்களுடைய வாழ்க்கை, பிரார்த்தனை மயமாக இருந்தது. ஆனால், அவர்கள், நம்பொருட்டு, குறித்த சில நேரங்களில், பிரார்த்தனை செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். தங்களுடைய பக்தியைத் தினந்தோறும் ஆண்டவனிடத்தில் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். நாம் இங்ஙனம் நமது பக்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று ஆண்டவன் விரும்புகிறானில்லை. ஆனால் அங்ஙனம் செய்ய வேண்டுவது நமது கடமை. அப்படிச் செய்வதனால், நமது வாழ்நாளிலே ஏற்படும் பல துன்பங்கள் விலகிப் போகும்."


# ஸ்ரீ ஆச்சாரியார் வாழ்த்து.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் நமக்கு பின் வருமாறு எழுதுகிறார்:—

காந்தி ஆசிரமம்,
திருச்செங்கோடு. 1—10—31.

நமஸ்காரம். தங்கள் பத்திரிகையில் வெளியிட்டுவரும் (வேடிக்கை) படங்களை பார்த்தேன். அவை மிக நன்றாயிருக்கின்றன. அவைகளுக்கு விஷயம் கொடுத்தவர்களையும், படம் எழுதியவர்களையும் பாராட்டவேண்டும்.

இராஜகோபாலாச்சாரி.



மகாத்மா காந்தி லண்டன் மகாநாடு ஐக்கிய சர்க்கார் ஆட்சிக் கமிட்டியில் உட்கார்ந்திருக்கும் காட்சி. மத்தியில் உயர்ந்த நாற்காலியில் கமிட்டித் தலைவர் லார்டு சாங்கியும் அவருக்கு இடது கைப்பக்கத்தில் மகாத்மா, பண்டித மாளவியா, ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்கார், சர். தேஜ்பகதூர் சாப்ருவும் கடைசியில் திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியாரும் உட்கார்ந்திருப்பதைக் காணலாம்.—தமிழ் நாடு.

Koviloor Digital Library

Koviloor Digital Library


# மகாத்மாவின் பெருமை.

கான்டர்பரி என்ற ஊரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் புராடெஸ்டென்ட் கிறிஸ்தவருக்கு மிகவும் விசேஷமானது. அங்குள்ள ஆர்ச்பிஷப் என்ற மதகுரு தான் பிரிட்டிஷ் மன்னர்களுக்கு பட்டம், சூட்டு வைபவம் போன்ற பெரிய சடங்குகளை செய்பவர். கத்தோலிக்கருக்கு போப் எப்படியோ அம்மாதிரி புராடெஸ்டென்டுகளுக்கு, கான்டர்பரி ஆர்ச்பிஷப். கான்டர்பரி தேவாலயத்திற்கு வரும்படி மகாத்மாவை அழைத்திருந்தார்கள். [illegible]யன்று மகாத்மா தமது சகாக்களுடன் அங்கு விஜயஞ் செய்தார். பாதிரிகளுக்கு தலைவரான கான்டர்பரி டீன் ஜான்சன் அவரை வரவேற்று தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். ஜனங்கள் ஏராளமாய் கூடியிருந்தனர். அங்கு டீனுடன் மகாத்மா வெகு நேரம் பேசினார். மாலையில் கான்டர்பரி ஆலயத்திற்கு சென்றார்கள். பிரார்த்தனை நடந்தது. மகாத்மா டீனுக்கு பக்கத்தில் மேடை மீது அமர்ந்திருந்தார்.

## காந்திஜீ மாயம்.

மகாத்மா காந்தியின் உபதேசமும், செய்கையும் சாதாரண புத்தியுள்ளவர்களுக்கு அறிய முடியாமல் மாயமாயிருக்கின்றனவாம். ஆனால் அவைதான் உத்தமமானவையாம். லண்டன "சிட்டி டெம்பிள்" என்ற ஆலயத்தில் பிரார்த்தனைக்குப்பின் நடந்த பிரசங்கத்தில் டாக்டர் கார்வுட் என்ற பாதிரியார் இம்மாதிரி சொன்னார். அவர் மேலும் சொல்லுகிறதாவது :—

"இந்தக் காந்திஜியின் செய்கை எனக்கு ஒன்றும் புரியவேயில்லை. அனுஷ்டானத்தில் மிகச் சிறப்போடு விளங்கக்கூடிய ஒரு உத்தம நியமத்தை இவர் கைப்பற்றியிருக்கின்றார். அரைப் பட்டினியாயிருக்கும் ஜனங்கள் இந்தியாவில் 250 கோடிப் பேர்களிருக்கின்றனர். ஆனால் இந்த அரைப்பட்டினிக்காரர்கள் தமது ஆன்ம சக்தியினால் தாம் விரும்பியதைப் பெறக்கூடுமென்று மகாத்மா துணிந்து கூறுகின்றனர். ஆன்ம சக்தியைப்பற்றிய இந்தியக் கொள்கை நம்மிடையேயும் பரவிவரக் கூடாதா என்று நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். ஆன்ம சக்தியின்றி வேறெதனாலும் நாம் வெல்லக்கூடாத சில பீடைகளிருக்கின்றன. அவற்றுள் மிருக பலமும் ஒன்றாம். சில விஷயங்களில் மகாத்மா காந்தியை இயேசுநாதருக்கும் சமானமாக்வும் அவரோடு சம்பந்தப்பட்டவராகவும் கூறக்கூடும். ஆயுத பலமின்றி, ஆள் கட்டுப்பாடின்றி, இயேசுநாதர் உலகத்துன்பங்களை யெதிர்த்துப்போக்க முயன்றார். பெரிய ஏகாதிபத்தியத்தின் மத்தியிலே இச்சிறிய இந்தியர், உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வாடி மனிதரென மதிக்கத் தகாதவாறுள்ள 25 கோடி ஜனங்களின் சார்பாகப் பேச வந்திருப்பதைக் காணுமிடத்து, கிறிஸ்துவைப் போலவே இவர் வந்துள்ளாரோ என்று நாம் கருதி வியக்கவேண்டியிருக்கின்றது."

# மூடுமந்திர பாஷை வேண்டாம்.

"நான் கேலிக்காகச் சொல்லவில்லை. உண்மையாகச் சொல்லுகிறேன். நாம் இந்த ஸர்க்கார் வரவு செலவு திட்டத்தைப்பற்றி இந்த மூடுமந்திர (இங்கிலீஷ்) பாஷையில் பேசக் கூடாது. இந்த விஷயத்தைப்பற்றி நமது தாய் பாஷையில் ஆங்காங்கு கூட்டங்கள் போட்டு நமது ஜனங்களுக்குச் சொல்லவேண்டியது நமது கடமை. அப்பொழுதுதான் ஜனங்களுக்கு இந்த சர்க்காரின் வியாபாரங்கள் தெரியவரும். நாம் இந்த மூடுமந்திர பாஷையில் பேசுவது எப்படியிருக்கிறதென்றால் ஜனங்களுக்கும் இதற்கும் ஏதோ சம்பந்தமேயில்லைபோல் காண்பிக்கிறது. ஆகையால் நாம் தமிழில் இந்த சர்க்கார் புது வரவு செலவு மசோதாவைப்பற்றி ஜனங்களுக்கு எடுத்துரைத்து இதன் அநீதங்களை உணரச் செய்யவேண்டும்." இந்த டோஸ் சென்ற ஞாயிறன்று சாயந்திரம் ஆங்கிலம் கேட்க விரும்பும் சபையோர்களுக்கும் இதார்களுக்கும் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரவர்களால் அளிக்கப்பட்டது.

---

"யுத்தம் நெருங்குகிறது. யுத்த முரசொலி வெகு தூரத்திலிருந்து கேட்கிறது. மறுமுறையும் போர் துவங்கக் கூடும். கடல்கள் கடந்து அம்முழக்கம் கேட்கப்படுகிறது முடிவு வரை யுத்தம் புரியத் தயாராகுக. தாய் நாட்டிற்காக அனைத்தையும் தியாகம் செய்க."

—சர்தார் பட்டேல்.

Koviloor Digital Library



# பழைய சனியனுக்கு புதிய வேஷம்.

அச்சுச்சட்டம் இந்திய சட்டசபையில் நிறைவேறிவிட்டது. தலையாட்டி தம்பிரான்கள் அதிகமாயுள்ள இந்திய சட்டசபையில் அது நிறைவேறியது நமக்கு ஒன்றும் ஆச்சரியமல்ல. வைசிராய் கையெழுத்து ஒன்றுதான் பாக்கி. லார்ட் வில்லிங்டன் கையெழுத்து போட்டவுடன் பழைய சனியன் புதிய வேஷத்தோடு சிம்லா உச்சியிலிருந்து இந்தியா மீது பாய்ந்து விடும். இதற்கு பழைய சனியன் என்று எப்படி பெயர் கொடுக்கலாம் என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம். தற்காலம் வந்திருக்கும் அச்சுச்சட்டம் பழைய சனியனே. வைசிராய் அச்சுச்சட்டம் என்ற அவசரச்சட்டத்தை சிருஷ்டித்தார். அது காலாவதியான பின்பு சென்ற மார்ச்சுமாதம் அதை சட்டமாக்க சட்டசபையில் ஒரு மசோதா கொண்டு வந்தார்கள். மகாத்மாவிற்கும்—இர்வினுக்கும் ஏற்பட்ட ராஜி உடன்படிக்கைப்படி எல்லா அடக்குமுறைகளையும் சர்க்கார் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். அதன்படி இந்த மசோதாவையும் வாபஸ் வாங்கினார்கள். காந்தி—இர்வின் உடன்படிக்கை உடைந்து போகவில்லை. இப்பொழுதும் இருக்கிறது. ஆனல் சர்க்கார் நாணயம் உடைந்து போயிற்று. முன்னல் வாபஸ் வாங்கிய மசோதாவை வேறு பெயருடன் சட்டசபையில் புகுத்தினார்கள். விரட்டியடித்த பழைய சனியனை மீண்டும் பிடித்துக்கொண்டு வந்து பூஜை செய்தார்கள். சர். அப்துர் ரஹீம், சர். கோர் போன்ற மிதவாதிகள் எதிர்த்தும் பூஜையை விடவில்லை. சர்க்கார் சாம்பிராணி தூபத்திற்கு தலையாட்டும் தம்பிரான்களைக்கொண்டு பூஜையை முடித்துவிட்டார்கள். சர்க்கார் இதனல் உடன்படிக்கையை மீறியது மூக்காலும் உண்மை. மகாத்மா கண்டனத்தைக்கூட சர்க்கார் பொருட்படுத்தவில்லை. பத்திரிகைகளுக்கு மறுபடியும் ஏழரை நாட்டான் பிடித்துக்கொண்டான். பலாத்காரத்தை தூண்டும் பத்திரிகைகளுக்கே ஜாமீன் கேட்பார்கள் என்று சொல்லுவது வெறும் சோம்பேறிப் பேச்சு. சட்டத்தை நிறைவேற்ற அதை ஒரு காரணமாகக்கொண்டார்கள். ஆனல் நடவடிக்கையில் எல்லாம் தலைகீழாய் மாறிவிடுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. 144வது பிரிவும், 108வது பிரிவும் இப்பொழுது இந்த சர்க்கார் கையில் அகப்பட்டுக்கொண்டு படும்பாட்டைக் கவனித்தால், புதிய அச்சுச் சட்டத்தைக்கொண்டு எப்படி அர்ச்சனை டனஞ் செய்வார்கள் என்பதை சகலரும் அறிவார்கள்.

சர்க்காருக்கு ஒரு வார்த்தை. பலாத்காரத்தை எந்த காங்கிரஸ் பத்திரிகையும் ஆதரிக்காது என்பது சர்க்காருக்கே தெரியும். ஆனல் இந்தச் சட்டத்தைக்கொண்டு அஹிம்சா தர்மத்தைக் கொண்ட காங்கிரஸ் பத்திரிகைகளை அடக்கிவிடலாமென்று சர்க்கார் மனப்பால் குடிப்பதாயிருந்தால், அந்த நினைப்பை தூர கட்டிவைத்து விடும்படி இப்பொழுதே எச்சரிக்கிறோம். காங்கிரஸ் பத்திரிகைகள் எதற்கும் எப்பொழுதும் தயாராயிருக்கின்றன. சர். கிரீராரே, இதை நீர் நன்ருய் அறிவீர். இருந்தாலும் மறுபடியும் எச்சரிக்கிறோம். சட்டத்தை ரத்துச் செய்தால் சர்க்கார் "மதிப்பிற்கு" பங்கம் வராதா என்று சர். கிரீரார் கேட்கலாம். அதற்கு ஒரு யோசனை சொல்லுகிறோம். போல்ஷவிக் மசோதாவை சட்டசபையில் இதே கிரீரார் முன்பு கொண்டு வந்தார். அச்சமயம் மீரத் வழக்கை யொட்டி மசோதாவை விவாதஞ் செய்யக் கூடாதென்று, சட்டசபைத்தலைவர் பட்டேல் தடுத்துவிட்டார். ஆனல் கிரீராருக்கு ரோஷம் பிறந்து விட்டது. உடனே லார்ட் இர்வினிடம் ஓடினர். தமது சகாவின் மதிப்பை காப்பாற்ற இர்வின் தமது சர்வ சக்தியை உபயோகித்து மசோதாவை அவசரச் சட்டமாக்கினர். ஆனல் அந்த அவசரச் சட்டம் அமுலிலிருந்த 6மாத காலத்திலும், அச்சட்டத்திற்கு ஒரு நாலு கால் பிராணிகூட அகப்படவில்லை. அச்சட்டம் பட்டினியால் செத்து தொலைந்தது. மதிப்பிற்காக போல்ஷவிக் அவசரச் சட்டத்தை சிருஷ்டித்தாலும், எப்படி அதற்கு ஒரு அவசியமுமில்லாமல் செத்து மடிய விட்டார்களோ அம்மாதிரியே இச்சமயமும் செய்யலாம். மதிப்பிற்காக சட்டத்தை செய்தாய் விட்டது. அது ஒன்று கிரீராரின் இழந்துபோன மதிப்பை காப்பாற்ற போதாதா? அவர் புத்திசாலியாயிருந்தால், உடனே சட்டத்தை போல்ஷவிக் மசோதாவைப் போல பெட்டிக்குள் வைத்து பூட்டி விடவேண்டும். அப்படிச் செய்தால்தான் இருக்கிற மதிப்பையாவது காப்பாற்றிக்கொள்ள முடியும். சட்டத்தை அவிழ்த்து விட்டு வேடிக்கை பார்ப்பாரானல், அப்புறம் இந்திய சர்க்காரின் தத்தளிப்பை உலகம் கண்டு வேடிக்கை பார்க்கும்படி ஏற்பட்டுவிடும். ஆகவே, சர். ஜிம்மி, பழைய சனியனை இப்பொழுதே கட்டிப் போட்டு காட்சி சாலைக்கு அனுப்புவீராக.

Koviloor Digital Library



## காந்தி ஜயந்தி.

இந்தியா வெங்கும் காந்திவாரம் மிக சிறப்பாக நடைபெறுகிறது. கவி ரவீந்திரரும், இந்தியாவின் சார்பாக சர்தார் பட்டேலும் வேறு பலரும் மகாத்மாவிற்கு வாழ்த்து தந்திகள் அனுப்பினார்கள். பம்பாயில் தான் வெகு மும்முரம். கத்தர் கண் காட்சி சாலையைப் பார்க்க ஏராளமாய் கூட்டம் வருகிறது. உள்ளே போக 2 அணா டிக்கட். அதில் மட்டும் தினசரி ரூ. 250 வசூலாகிறது. இந்த காந்தி வாரத்திற்குள் கையிருப்பிலுள்ள 15 லட்சம் ரூபாய் கத்தரும் காலியாய் விடுமென்று தெரிகிறது. பம்பாயில் தினசரி பெரிய பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. பார்சிகளும் ஏராளமாய் கலந்து கொள்ளுகின்றனர். பம்பாய் காங்கிரஸ் கமிட்டி ஒரு சமபந்தி போஜனத்திற்கு ஏற்பாடு செய்தது. சகல ஜாதியாரும், முக்கியமாய் ஏராளமான ஆதித்திராவிடரும் அதற்கு வந்திருந்தனர். லண்டனில் நடந்த காந்தி ஜயந்தி விருந்துக்கு மகாத்மா போயிருந்தபோதிலும், ஆட்டுப் பாலைத் தவிர வேறெதுவும் அவர் சாப்பிடவில்லை.

## துரைசாமி தர்பார்

வாலாஜா தாலுகாவில் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டராய் இருக்கும் மகாகனம் துரைசாமி பிள்ளை அவர்கள் டெல்லி தர்பார் செய்வதாக நமக்கு புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. தொண்டர்களை அடிக்கிறாராம். கல்தா கொடுக்கிறாராம். நாக்கில் நரம்பில்லாமல் திட்டுகிறாராம். குடிக்கக்கூடாது என்று சொல்லும் தொண்டர்களை இம்மாதிரி இம்சித்து ஏன் பாவமூட்டையை கட்டிக் கொள்ளுகிறார்? இந்திய சர்க்கார் காங்கிரசோடு சமரசமாய் இருக்க விரும்பினாலும், துரைசாமி பிள்ளையைப் போன்ற சர்க்கார் தத்து புத்திரர்களுக்கு அது பொறுக்கவில்லை. நண்பர் துரைசாமி பிள்ளையே, உமக்கு ஒரு வார்த்தை. அஹிம்சையை சிரமேற்கொண்ட தொண்டர்களை அடிப்பது வீரமல்ல. பேடித்தனம். முழு பேடித்தனம். காதறுந்த ஊசியும் கடைசியில் வாராது என்ற பழமொழியை நீர் அறிவீர். இந்தப் போலீசும் உமக்கு சதமல்ல. இந்த பிரிட்டிஷ் சர்க்காரும் சதமல்ல. உமது நல்ல நடத்தையே—புண்ணியமே—உமக்கு கடைசி காலத்தில் உதவிக்கு வரும். அதை மனதில் இருத்திக்கொள்ளும். திக்கற்ற தொண்டர்களை இம்சித்து, சுமக்க முடியாத பாவச் சுமைக்கு வழி வைக்கவேண்டாம்.

## பழைய கருப்பன்

ஆயிரம் தடவை பிடுங்கி நட்டினாலும் அரளி ஷண்பகப்பூ வாருமா? ஒரு நாளும் ஆகாது. பழைய கருப்பன் கருப்பன் தான். மெக்டொனால்டும் பழைய மெக்டொனல்டுதான். எந்தக் கட்சியில் இருந்தால் என்ன, எதைப் பற்றி பேசினால் என்ன? பழைய பிரித்தாளும் குணம் போய் விடுமா? ஐக்கிய நிர்மாண மகாநாடு ஆரம்ப சமயத்திலேயே, வகுப்பு விஷயங்களைப் பற்றி பேசக்கூடாதென்றும், சர்க்கார் கொடுக்கப் போவது இன்னதென்று தெரிவித்துவிட வேண்டுமென்றும் மகாத்மா எச்சரித்தார். ஆனால் மெக்டொனல்ட் அசையவில்லை. முதலில் வகுப்புவாதிகளை கிளப்பி விட்டால், சுயராஜ்ய பேச்சு அதில் அமுங்கிப் போய்விடுமென்பது அவர் நினைப்பு. அப்படியே செய்தார். வகுப்பு வாதிகள் கொட்டமடிக்கின்றனர். ஆகாயத்திலுள்ள சந்திரனையும், தேவலோகத்திலுள்ள காமதேனுவையும் கொடுத்தால் தான் சமரசத்திற்கு வருவோமென்று சொல்லுகிறார்கள். மெக்டொனல்ட் யோக்கியராயிருந்தால், சுயராஜ்யம் கொடுப்பது உண்மையாயிருந்தால், வகுப்பு வாதச் சண்டையை தீர்த்து வைக்க அவர் கடமைப் பட்டிருக்கிறார். அப்படியே அவர் செய்யவேண்டும். சுயராஜ்யம் கொடுப்பதை ஏமாற்றப் பார்க்கும் மெக்டொனல்ட் அப்படி ஏன் செய்ய போகிறார்? இப்பொழுது என்ன சொல்லுகிறார் தெரியுமா? "வகுப்பு விஷயங்கள் உள் நாட்டு விஷயம். அதில் நீங்கள் சமரசம் செய்யாவிட்டால் உங்களுக்கு பொறுப்பாட்சி எப்படி கொடுப்பது? இப்பொழுது வேண்டுமானால் மாகாண சுய ஆட்சி தருகிறோம்" என்று சொல்லுகிறாராம். என்ன கபவஞ்சகம், என்ன மோசடி பார்த்தீர்களா? பழைய கருப்பன பழைய கருப்பனே!

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 1½ சதம்)


# காந்தி

வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 10௳, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 24௳ சனிக்கிழமை | இதழ் 37

## கோடாரிக் காம்புகள்.




குலத்தை கெடுக்குமாம் கோடாரிக்காம்பு. காம்பு அகப்படாவிட்டால் மரத்தை வெட்ட முடியாது. இந்திய தேசிய மரத்தை வெட்டிச்சாய்க்க பிரிட்டிஷ் சுயநலவாதிகள் சூழ்ச்சி செய்கிறார்கள். எந்த வகுப்பு அகப்படுமென்று அண்ணாந்து பார்க்கிறார்கள். ஒரு வகுப்பு அகப்பட்டாலும் போதும். அதை காம்பாய் உபயோகித்து வெட்டி வீழ்த்திவிடுவார்கள். மைனாரிட்டி வகுப்புகள் இந்த துரோகம் செய்யப்போகிறார்களா?

Koviloor Digital Library



## ஹோர் கக்குகிறார்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஒரு சக்கரக்கல் இருக்கிறதாம். பேய் பிடித்தவர்கள் அதை மிதித்தால் உடனே ஆடுவார்களாம். உள்ளதையெல்லாம் சொல்லி விடுவார்களாம். அதை மிதியாத வரையில் வெளிப்பார்வையில் களங்கமற்றவர்களாய் தோன்றுவார்கள். மிதித்துவிட்டால் உடனே உள்ளதை கக்கி விடுவார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு சக்கரக்கல் பார்லிமெண்ட் சபை. இந்தியாவிலுள்ள அதிகாரிகள் எந்தச் சட்டம் செய்தாலும் எந்தவரியை உயர்த்தினாலும் சரி, இந்தியரின் நன்மைக்காக செய்வதாகவே சொல்லுவார்கள். ஆனால் உண்மையை அறிய வேண்டுமானால் பார்லிமெண்டில் பிரிட்டிஷ் அதிகாரிகள் பேசுவதை கவனிக்கவேண்டும். பவுன் மதிப்பிற்கும் வெள்ளிக்கும் பிணைப்பு ஏற்படுத்தியது வெறும் அக்கிரமம் என்பதை நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். இதனால் பிரிட்டனுக்கு நன்மை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறோம். இந்தியாவிலுள்ள அதிகாரிகள் அப்படியல்ல என்று சொன்னார்கள். பிரிட்டனுக்கு சலுகை காட்டவில்லையென்று சத்தியம் செய்தார்கள். இவர்கள் கூறுவது முழுப்புரட்டு என்பதை இந்திய மந்திரி பார்லிமெண்டில் ஒப்புக்கொண்டு விட்டார். தற்காலம் இறக்குமதி வரியை 100க்கு 25 வீதம் கூட்டியிருக்கிறார்கள் அல்லவா? இப்படி கூட்டியதால் பிரிட்டிஷ் வியாபாரத்தில் பூரா மண் விழுந்துவிடுமென்று பார்லிமெண்டில் சிலர் ஓலமிட்டார்கள். இந்திய மந்திரி சர். சாமுவேல் ஹோர் அச்சமயம் பேசிய பதில் கவனிக்கத் தக்கது. அவர் சொல்லுகிறார் :—

“ வரி கூடியிருப்பதால் அதிக பாதகம் இல்லை. தற்கால நாணயமாற்று நிலைமை ஜப்பான் முதலிய நாடுகளைவிட பிரிட்டன் இந்தியாவிற்கு சாக்குகள் அனுப்ப மிகவும் சாதகமாயிருக்கிறது. பிரிட்டிஷ் வர்த்தகம் பாதகமடையாதபடி சகல ஏற்பாடுகளையும் சர்க்கார் செய்வார்கள்.”

இதைவிட தெளிவாய் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. பவுன் மதிப்பு—வெள்ளி பிணைப்பால் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் கொள்ளையடிக்க சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. மற்ற நாட்டு பொருள்கள் விலைகூடி விட்டன. பிரிட்டிஷ் வர்த்தகருக்காக இந்தியா தண்டம் கொடுக்கிறது. இது என்ன அநியாயம் !

## வால் மடங்குகிறது.

பார்டோலியில் போலீஸ் ஆர்ப்பாட்டஞ் செய்து அக்கிரமமாய் பல கிராமங்களில் வரி வசூலித்ததாய் மகாத்மா புகார் செய்தார். அதற்காக விசாரணை ஏற்படுத்தினாலொழிய சீமைக்கு கப்பலேற முடியாது என்று சொன்னதை நண்பர்கள் அறிவார்கள். சர்க்கார் விசாரணை செய்ய ஒப்புக்கொண்டார்கள். அந்த விசாரணை 5உ பார்டோலியில் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ. கார்டன் என்ற நாசிக் கலெக்டர் தான் விசாரணை அதிகாரி. காங்கிரஸ் சார்பாக ஸ்ரீ. புலுபாய் தேசாய் என்ற பிரபல பம்பாய் வக்கீல் ஆஜரானார். சர்க்கார் சார்பாக திவான்பகதூர் தாக்கூர்ராம் ஆஜரானார். விசாரணை சமயத்தில் சர்தார் பட்டேலும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் ஆஜராயிருந்தனர். முதலில் ஸ்ரீ. கார்டன் தம்மை சர்க்கார் நியமித்த உத்தரவை படித்தார். பின்னால் ஸ்ரீ. தேசாய் எழுந்து தாம் காங்கிரசிற்கும், விவசாயிகளுக்கும் பிரதிநிதியாக வந்திருப்பதை எடுத்துச் சொல்லி ஆதாரங்களைக் காட்டினார். துள்ளினாரய்யா சர்க்கார் வக்கீல்! வாலை கிளப்பிக்கொண்டு ஒரே துள்ளாய் ஆகாயத்தில் கிளம்பினார். “தேசாய் காங்கிரஸ் பிரதிநிதியல்ல. காங்கிரஸ் அவரை பிரதிநிதியாக நியமித்து ஒரு தீர்மானம் செய்தாலொழிய செல்லத் தக்கதல்ல.” என்று குதித்தார். இவர் குதிப்பைக் கண்டு ஸ்ரீ. தேசாய் கோபப்படவில்லை. பொறுமையாக கோர்ட்டாரைப் பார்த்து பின் வருமாறு சொன்னார்:—

“மகாத்மா காந்தி காங்கிரசின் மறுக்க முடியாத பிரதிநிதி. அவருக்கும் வைசிராய்க்கும் ஏற்பட்ட உடன்படிக்கையிலிருந்தே தற்கால விசாரணை ஏற்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியே பகிரங்கமாய் என்னை இந்த வழக்கில் ஆஜராகும்படி உத்தரவிட்டிருக்கிறார். இவ்வருஷ காங்கிரஸ் தலைவரும் எழுத்து மூலம் உத்தரவு கொடுத்திருக்கிறார். சர்க்கார் வக்கீல் இவற்றையெல்லாம் ஆட்சேபிப்பாரானால், இந்த விசாரணையில் கலந்து கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றி காங்கிரஸ் மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டியிருக்கும்”.

ஸ்ரீ. கார்டன் இந்த எச்சரிக்கையைப் பார்த்தார். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல இருந்தது. உடனே சர்க்கார் வக்கீல் ஆட்சேபணைகளை குப்பை தொட்டிக்கு அனுப்பிவிட்டு ஸ்ரீ. தேசாயை தமது கட்சியை எடுத்துரைக்கும்படி கேட்டுக் கொண்டார். சர்க்கார் வக்கில் வாலை மடக்கிக்கொண்டு உட்கார்ந்தார்.

Koviloor Digital Library



# வெற்றியா, வீழ்ச்சியா?

லண்டனில் மைனரிட்டிகள் நிலைமை ஒன்றும் சரியாயில்லை. திப்பட்ட வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று சிலர் கொள்ளை போடுவார்கள். அதைப்போல லண்டன் நிலைமை இருக்கிறது. சுயராஜ்யத்திற்காக காங்கிரஸ்காரர் அடிபட்டார்கள். ஜெயில் வாசஞ் செய்தார்கள். சொத்து சுகத்தை தியாகஞ் செய்தனர். போலீஸ் தடியடியும் வாங்கிக்கொண்டு பரதேச சரக்குகளை பகிஷ்காரம் செய்தார்கள். அதனால் பிரிட்டிஷார் நடுங்கி தோற்றுப் போயினர். இந்தியாவிற்கு வேண்டும் ராஜிய அமைப்பைப்பற்றி பேச யாருக்கு உரிமையுண்டு? காங்கிரசிற்கே உரிமையுண்டு. சர்க்கார் யோக்கியமானவர்களா யிருந்தால் காங்கிரசுடன் மட்டுமே அவர்கள் ராஜி பேசவேண்டும். ஆனால் யோக்கியதையற்ற சர்க்காரா யிருக்கும்போது அப்படிச் செய்வார்களா? தேசத்திற்காக ஒரு செல்லாக் காசுகூட கொடுக்காதவர்களையும், பாலுக்கு சர்க்கரை யில்லையே யென்று அழுகிற அசடுகளையும், ஜெயிலென்றால் நாலுகாத தூரம் ஓடும் வீரர்களையும் வட்டமேஜை மகாநாட்டிற்குள் கொண்டு நுழைத்திருக்கிறார்கள். காணமென்றால் வாயைத் திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடுவதுமான குதிரைக்கு ஒப்பாக இந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். எப்படியோ வட்ட மேஜை மகாநாட்டு அங்கத்தினர் பதவி கிடைத்துவிட்டது. இனி தங்கள் சக்தியைக் காட்டவேண்டாமா? அதற்காக இந்தப் பேர்வழிகள் வீண் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். இவர்கள் எந்த சமூகங்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களோ, அந்த சமூகங்களே இவர்கள் கொள்கைகளை எதிர்க்கின்றன. எதிர்த்து என்ன பயன்? பிரிட்டிஷ் சர்க்கார் செய்த தந்திரத்தால் இன்று அவர்கள் "பிரதிநிதிகளாய்" விளங்குகிறார்கள். அவர்கள் சம்மதமும் வேண்டுமோம். இம்மாதிரி பேர்வழிகளை பிடித்துப் போட்டால்தான் சுயராஜ்யம் கொடுப்பதை தள்ளிப் போடலாம் என்பது பிரிட்டிஷார் நினைப்பு. அதில் அவர்கள் வெற்றி பெற்று வருகிறார்கள் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளாத எந்த திட்டத்தையும் இந்நாட்டில் ஒரு வினாடி கூட அமுல் நடத்த முடியாது என்பதை பிரிட்டிஷார் அதற்குள் மறந்து போய்விட்டது நமக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது.

வட்ட மேஜை மகாநாட்டிலுள்ள தலையாட்டி தம்பிரான்களகளால் என்ன செய்துவிட முடியும்? நாளை சட்ட மறுப்பு ஆரம்பித்தால் இந்த சூரர்கள் இருக்கிற இடம் தெரியாமல் ஓடிப்போய் விடுவார்கள். சென்ற சட்ட மறுப்பில் இவர்கள் எங்கிருந்தார்கள்? ஆகவே கடைசி முறையாக எச்சரிக்கிறோம். வட்ட மேஜை மகாநாட்டில் ஏகோபித்த முடிவு ஏற்படாமல் பிரிட்டன் சூழ்ச்சி செய்து வெற்றி பெறலாம். அந்த வெற்றி வெற்றியாகாது. அந்த வெற்றி இந்தியரின் தேசிய நெருப்பை அவிக்க முடியாது. அந்த வெற்றி மற்றொரு பெரும் போரையே கிளப்பி விடும். ஆகவே அந்த வெற்றி வெற்றியல்ல, பிரிட்டனுக்கு நிலை கொள்ளாத வீழ்ச்சியாகவே வந்து முடியும்.

---

## சத்தியாக்கிரகமே, அருமருந்து!

---

ஒரே கூட்டமான பேடிகளிலும் ஒரு சில தைரிய முள்ளவர்களே நாட்டிற்கு விசேஷ உதவி யளிப்பவர். நாம் முன்னையிலும் பன்மடங்கதிகமான தியாகம் செய்யக்கூடு மென்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறது. ராஜியினால் நாம் ஏமாற்றமடையக் கூடாது. நமது லட்சியம் பரிபூரண விடுதலையே. வட்டமேஜை மகாநாட்டிலிருந்து காந்திஜி வெற்றியின்றித் திரும்ப நேரின் சுயராஜ்ய மடைவதற்கு சத்தியாக்கிரகமே சிறந்த வழி. மகாத்மா காந்தி வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொண்டதனால் நாம் சத்தியாக்கிரகம் செய்வதற்கு யாதொரு தடையுமில்லை. அரசாங்கத்தின நடத்தை எங்கெங்கு சகிக்கக் கூடாததோ அங்கு சத்தியாக்கிரகம் நடத்த வேண்டியதே. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் வலிமையைப் பெருக்குவதே அரசாங்கத்தை சுயராஜ்ய மளிக்கச் செய்வது. எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டாலும், காங்கிரஸ் இயக்கத்தை நடத்தப் பொது ஜனங்கள் தயாராக வேண்டும்.

—பண்டித ஜவார்லால்.

# "காங்கிரஸ் விருப்பமே எனது விருப்பம்"

லண்டன் டெய்லி மெயில் பத்திரிகையில் மகாத்மா பின்வருமாறு எழுதுகிறார்.

நான் விரும்புவதெல்லாம் தனது பத்திரிகையில் எழுதவேண்டுமென்று இதன் ஆசிரியர் என்னை அன்புடன் கேட்டுக்கொண்டார். நான் விரும்புவது என்று கூறுவதே தப்பானது. நான் இந்திய தேசிய காங்கிரஸின் பிரதிநிதியாகவே இங்கு வந்திருக்கின்றேன். காங்கிரஸின் விருப்பமே எனது விருப்பம். எனக்கென்று தனித்த விருப்பம் இல்லை. ஆதலின் எனது தலைவராம் காங்கிரஸைப்பற்றி இங்கே சிறிது கூற விரும்புகிறேன். இந்தியாவின் அரசியல் ஸ்தாபனங்களில் இதுவே புராதனமானது. அகில இந்தியாவின் பிரதிநிதியும் இதுவே. இந்திய தேசிய காங்கிரஸ் நாற்பத்தேழு பிராயமுடையது. அதற்கு அடிகோலியவர் ஸ்ரீ. அல்லான் ஆக்டேவியன் ஹ்யூம் என்ற ஆங்கிலேயரே யவர். இந்துக்களே யன்றி, மகம்மதிய, பார்ஸி, கிறிஸ்தவ பிரமுகர்களும் அதன் அக்கிரா(?)சனத் தலைமை வகித்துள்ளார்கள். டாக்டர் அன்னி பெஸண்டும் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் அதன் தலைமை வகித்த இரு ஸ்திரீகள். ஜமீன்தார்களும் அதன் அங்கத்தினர்களாகச் சேர்ந்துளர். இந்திய தேசிய காங்கிரஸ் எவருக்கும் தனிப்பட்ட மதிப்பு அளிக்காது. எவ்வகுப்பினரும், எந்த மதத்தினரும், ஆணோ, பெண்ணோ யாவரும் அதற்குச் சமமே. எப்பொழுதும் தீண்டாதாரென்று சொல்லப்படுவோரின் முன்னேற்றத்தில் மிகுந்த கவனஞ் செலுத்தி வந்திருக்கின்றது. சில வருடங்களாக தீண்டாமையை முழுதும் அழிப்பதற்கென்றே தனிக் கமிட்டி யேற்படுத்தியிருக்கிறது. இந்தியாவின் ஜனத்தொகையில் நூற்றுக்கு எண்பத்தைந்து விகிதம் ஏழு லட்சம் கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான ஏழை மக்களின் தனிப்பட்ட பிரதிநிதி காங்கிரஸே. இம்மகத்தான ஸ்தாபனத்தின் சார்பாகவே நான் கீழ்கண்டவைகளை கோருகிறேன்.

1. இந்தியாவின் பரிபூரண விடுதலை. 2. இஷ்டமிருக்கும் வரையில் ஏகாதிபத்தியத்தில் சம உரிமையுடன் சேர்ந்திருப்பதை இது பாதிக்காது. 3. இந்தியாவின் முன்னேற்றத்துக்கான பாதுகாப்புடன் ஐக்கிய அரசியல் முறையை ஏற்றுக்கொள்வதையும் இது தடை செய்யாது.

## யார் தர்மகர்த்தா?

"தேசத்தின் உத்தம புத்திரரான கணேச சங்கர வித்தியார்த்தி கான்பூர் நகரத்தினருக்கும், இந்து முஸ்லீம் ஐக்கியத்துக்கும் தனது கடமையைச் செய்யுங்காலத்து உயிர் நீத்தார். காந்தி-இர்வின் ராஜியினால் நாம் சுயராஜ்யம் பெற்றுவிடவில்லை. ஆதலின் நமது வேலையை நிறுத்தித் தூங்குவதற்கு இது காலமன்று. சிறிதளவு நமது முயற்சி தளரினும் நமது சுயராஜ்ய வெற்றிக்கு அது கேட்டினையே தரும். நாம் முன்பு செய்ததினும் அருந்தியாகம் செய்யவேண்டிய காலம் கிட்டியது. இந்தியாவின் தர்மகர்த்தா வென்று அரசாங்கம் சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் உண்மையான தர்மகர்த்தாவாக அது முழுதும் நடந்துகொள்ளவில்லை. ஆகவே, அவர்கள் சரியான தர்மகர்த்தர்களல்லர். காந்திஜியும், பண்டித ஜவஹர்லால் நேருவுமே சுய நன்மைக்கான வழியில் ஆட்சி புரியினும் அவ்வாட்சியும் நாம் விரும்புவதொன்றன்று. மூன்றாவதொருவர் வந்து தீர்த்துவைக்காத வரையில் இந்து முஸ்லீம் பிரச்னை முடிவு பெறாது. மகம்மதியர்களினுடைய அபிப்பிராயம் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பிருந்ததுபோல தற்சமயம் இருக்கவில்லை."—மோகன்லால் சாக்சனா.

---

காங்கிரஸின் சார்பாக நான் கோரிய இவ்வுரிமைகளைக்கண்டு "டெயிலி மெயில்" வாசகர்கள் பீதியடையமாட்டார்களென்று நம்புகிறேன். பிறர் உனக்கு யாது செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதையே பிறருக்குச் செய்க. பத்தொன்பது நூற்றாண்டுகளாகவுள்ள இந்த அறவுரையின்படி ஆங்கில ஆடவர்களும் பெண்டிர்களும் காரணமின்றி பிரிட்டிஷ் ஆட்சியில் இழந்திருந்த விடுதலையை இந்தியாவிற்கு அளிப்பதில் முணுமுணுக்க மாட்டார்களென்று நம்புகிறேன்.

தனித்து விளங்கும் உண்மைக்குக் காரணங் கூறவேண்டாம். விடுதலை எத்தேசத்தினருடையவும் பிறப்புரிமை. இவ்வுரிமை இந்தியாவிற்கும் உண்டு. இங்கு பிரிட்டிஷ் ஆட்சியிலேற்பட்ட தீயபலனைக் கூறுதிருக்க முடியவில்லை. இந்திய மக்களை அது ஆண்மையற்றவர்களாக்கியது, ஏழைகளாக்கியது. கிராமக் கைத்தொழில்கள் கொலைசெய்யப்பட்டன. இந்திய ஜாதி முழுதும் நிராயுதபாணிகளாக்கப் பெற்றது. இந்தியாவிற்கு இன்பமும் வலிமையு மளிப்பது பரிபூரண விடுதலையே.

Koviloor Digital Library



# மெக்டனல்ட் புலம்பல்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மெக்டனல்ட் தொழிற் கட்சியை நட்டாற்றில் கைவிட்டு, தேசீய மந்திரி சபை அமைத்திருக்கிறார். அவர் தனிமையாக இருந்து தமது பரிதாப நிலைமையைக் கண்டு புலம்புவதாக ஸ்ரீ. பரூச்சா ஒரு வேடிக்கை வியாசம் எழுதி யிருக்கிறார். அதாவது:—

"நேற்று வரையில் நான் பெரிய தொழிற் கட்சியின் எதிரற்ற தலைவராக இருந்தேன். தொழிற் கட்சியின் முக்கிய கர்த்தா நானே. எனது சகபாடிகள் ஒவ்வொருவர் மனத்தையும் கவர்ந்தவனுகவும் இருந்தேன். தொழிற் கட்சியில் ஒப்பற்ற கௌரவமும் பதவியும் வகித்திருந்தவன் நானே. எதிரிகளும்கூட என்னை ஸ்தோத்திரம் செய்து வந்திருக்கின்றனர். இரண்டாவது தடவையும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி பதவியைப் பெற்ற தொழிற் கட்சியாரில் நானே முதல்வன்; மிகவும் நெருக்கடியான சமயத்தில் பாரிசுக்கும் பெர்லினுக்கும் அனுப்பப்பட்ட செல்வ தூதன்யானே.

ஆனல், அந்தோ! இன்று எனது அன்பான தொழிற்கட்சியின் தலைவர் பதவியை இழந்தேன். அவர்கள் என்னைக் கைவிட்டு விட்டார்கள். எனது கொள்கைகளும் என்னைக் கைவிட்டு விட்டன.

தொழிற்கட்சி பதவியும் கௌரவமும் என்னைக் கைவிட்டுவிட்டன. என்னைத் தொழிற் கட்சியினர் துரோகி யென்றும், கொடுங்கோலனென்றும், சுயநலத்தை நாடும் சமய சஞ்சிவி யென்றும் தூற்றுகின்றனர். தமது தலைவருக்கு-நெடுங்கால நண்பனுக்கு-கிரேட் பிரிட்டனின் பிரதம மந்திரிக்கு என்னென்ன அடைமொழிகள்?

இந்த கொடிய செய்கையை "சாக்" ஆரம்பித்தான். மாக்ஸ்டன் உடனே அவனுடன் சேர்ந்து கொண்டான். என்னைக் கைவிட்டு விட்டான். பென்னர் பிராக்வே என்னை எதிர்த்தாலும் என்னைக் கைவிட்டுச் செல்லவில்லை. ஆனல் மோஸ்லியும் சிந்தியாவும் என்னை கைவிட்டுச் சென்றனர். என்னைப் பார்த்து பரிகாசமாகச் சிரிக்கின்றனர். பிராக்வேயைத் தடுத்து யாவரும் என்னை கேலி செய்கின்றனர்.

ஓ, தெய்வமே! நான்—ராம்சே மெக்டொனல்டும், பால்டுவின், சாம்பர்லெய்ன், சாமுவேல் ஹோர் இவர்களின் ராஜிய சகபாடிகளாக இருந்து வேலை செய்யவும் காலம் வந்ததே! அந்தோ! என்ன வீழ்ச்சி! ஆ கடவுளே!

கடவுளே! என்னை இந்திய ரிஷியினிடமிருந்து காப்பாற்றுவாய். அவருடைய ஒளிபொருந்திய கண்களுக்கு முன் என்னல் நிற்க முடியவில்லையே. பாதி பட்டினி கிடக்கும் கோவணண்டிகளான இந்திய மக்களின் பரிதாப நிலைமையை எடுத்துக் காட்டி இடித்துக் கூறுவதுபோல் இவருடைய வேஷமும் இருக்கிறதே.

1924-ம் ஆண்டு என் உயிர்போல் எண்ணி வாதித்து வந்த எனது இந்தியாக் கொள்கைகளை ஏன் கைவிட்டாய் என கேட்பது போல் இருக்கிறதே. கடந்த ஆண்டு, மரண தண்டனைகளையும், தேச பக்தர்களை நாடு கடத்தலையும் எப்படி அனுமதித்தாய் என கேட்டு பயமுறுத்துவது போல் தோற்றுகிறதே. நான் இப்போது இரு தலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேனே. என் மனம் ஓயாமல் உறுத்திக் கொண்டிருக்கிறதே. பல்லாண்டுகளாக நாம் இந்தியாவிற்குத் தீமையே இழைத்து வந்திருக்கிறோமே. இந்தியாவின் உதிரத்தை எல்லாம் உறிஞ்சி அதற்கு சவக் கோலத்தைத் தந்து விட்டோமே. ஆகவே இதுவரை நாம் இழைத்து வந்த தீமைகளுக்குப் பரிகாரமாக இப்போது காந்திஜியிடம் தகுந்த முறையில் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பெரும் பழியையும் அழிவையுமே தேடிக் கொள்ள வேண்டிவரும். ஓ தெய்வமே! எனது பிரார்த்தனைக்குச் செவி கொடுப்பாய்! என்னையும் எனது அருமைதேசத்தையும், எம்மால் கைவிடப்பட்ட இந்தியாவையும் பகைமையினின்றும் துன்பத்தினின்றும் காப்பாய். உமது அன்பையும் அருளையும் பாலிப்பாய்."

---

## மின்வெட்டு.

லண்டனில் மகாத்மா காந்தியின் காலம் துக்கம் தரும் விதமாக வீணுக்கப்படுகிறது. நிலைமை நம்பிக்கைக் கிடந்தரவில்லை. தேசமக்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து போருக்குத் தயாராக யிருக்கவேண்டும். அரசாங்கத்தின் உண்மையான மனோ நிலை அவர்கள் சமாதான காலத்தில் நடந்துகொள்வதிலேயே வெளியாகிறது. ஹிஜ்லி சிறை வாசிகள் ஈவு இரக்கமற்று படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக் கணக்கான குடியானவர்கள் தங்கள் பண்ணையிலிருந்து விரட்டப்படுகின்றனர். லண்டனில் எது நடப்பினும் இந்தியா உண்மையில் விடுதலை பெற்றே தீரும். வட்டமேஜையாவது சதுரமேஜையாவது விடுதலையளிக்காது. துன்பத்தைச் சகித்தலும் தியாகமுமே விடுதலை பெறும் மார்க்கம்.

—டாக்டர் அன்சாரி.

Koviloor Digital Library



# வகுப்புவாதிகள் கும்மாளம்:

(பம்பாய் கிரானிகிள் நிருபர்)

ஸ்ரீ. ஷவுகத் அலியும், டாக்டர் அம்பேத்காரும் தங்களை மகாநாட்டிற்கு நியமித்தவர்களிடம் விசுவாசத்தோடு நடக்க நிர்மானித்திருக்கிறார்கள். எப்படியாவது மகாத்மாவின் சமரச முயற்சி தோற்றுப் போகும்படி செய்ய தீவிரமாய் வேலை செய்கிறார்கள். மகாத்மா காந்தி தம்மால் கூடிய வரை முயன்று பார்க்கிறார். டாக்டர் அம்பேத்கார் பாம்பு போல காலைச் சுற்றிக் கொண்டு முன்னேற்றத்தை தடுக்கிறார். தீண்டாதாருக்கு தனித் தொகுதி கொடுப்பது சரியல்ல என்று மகாத்மா சொல்லியது அம்பேத்காருக்கு கோபத்தை கிளப்பி விட்டிருக்கிறது. மகாத்மாவிடம் மிகவும் அவமரியாதையாக நடந்து கொண்டார். காந்திஜி அதைப் பார்த்து சிரித்தாரே யொழிய கோபப்படவில்லை. மைனாரிட்டி தலைவர்கள் கூட்டத்தில் மகாத்மாவே தலைமை வகித்தார். அம்பேத்கார் மகாத்மா தலைமை வகிப்பதைக்கூட ஆட்சேபித்தாராம். காந்திஜி இதைக் கேட்டு சிரித்துக் கொண்டு "நீர் ஏன் இந்த நாற்காலியில் உட்காரக்கூடாது?" என்று கேட்டார். அம்பேத்கார் நடத்தையை அவர் நண்பர்களே பலமாய் கண்டித்தார்கள். அம்பேத்கார் காங்கிரசிற்கு விரோதமாய் கிளம்பியிருப்பதைக் கண்டு ஆகாகான், ஜின்னா, ஷாபி இவர்கள் கும்மாளம் போடுகிறார்கள். இந்த தலைவர்கள் தங்களால் கெட்டுப்போனதாய் பேர் வரக்கூடாது என்ற நினைப்பினால் மகாத்மா சொல்லுவதை அப்படியே ஒப்புக் கொள்ளுகிறார்கள். "சுயராஜ்யம் கொடுப்பதாய் சர்க்கார் உறுதி கூறிவிட்டால் அடுத்த வினாடியே முஸ்லிம்கள் கேட்பவை அனைத்தையும் கொடுக்கத் தயார். ஆனால் அதற்குப் பதில் முஸ்லிம்கள் பயமுறுத்துவதைக் கண்டு நாங்கள் பயந்து விடமாட்டோம்" என்று இந்த தலைவர்கள் சொல்லுகிறார்கள்.

இம்மாதிரி சச்சரவுகளைப் பார்த்து சர்ச்சில் கோஷ்டியார் ஆனந்த தாண்டவமாடுகிறார்கள். மகாத்மா தோல்வியடையும்படி செய்துவிட்டால், முஸ்லிம்கள் கேட்பதையெல்லாம் சர்க்கார் கொடுக்கும்படி செய்வதாக சர்ச்சில் கோஷ்டியார் முஸ்லிம்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்களாம். முதல் மந்திரிகூட நேர்மையாக இல்லை. மைனாரிட்டி சப் கமிட்டி முதல் கூட்டத்தில் பிரதம மந்திரி தலைமை வகித்தார். சர். அலி இமாம் தமது கட்சியாகிய அன்சாரி கட்சி கொள்கையை வெளியிட அநுமதி கேட்டார். தலைவர் மெக்டானல்ட் ஆகாகானைப் பார்த்தார். ஆகாகான் இப்பொழுது பேச வேண்டிய அவசியம் இல்லையென்றார். உடனே அநுமதி கொடுக்க மறுத்துவிட்டார். மெக்டானல்ட் தலைமை வகிக்கும் போது ஆகாகான் உத்தரவை எதற்காக எதிர்பார்க்கிறார்?

இந்திய சர்க்கார் நிர்வாக சபையில் இருக்கும் சர். பஸ்லி ஹுசேன் லண்டனிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்களுடன் தினசரி தந்தி போக்குவரத்து வைத்துக்கொண்டிருக்கிறார். லண்டன் "டெயிலி ஹெரால்ட்" பின்வருமாறு எழுதுகிறது:—

நாளை இந்தியாவில் தேர்தல் நடந்தால் தேசிய முஸ்லிம்களே வெற்றி பெறுவார்கள். வகுப்புவாத முஸ்லிம்களுக்கு மிக குறைந்த ஸ்தானங்களே கிடைக்கும். ஆனால் வட்ட மேஜை மகாநாட்டில் தேசிய முஸ்லிம்களுக்கு சர். அலி இமாம் ஒருவரே பிரதிநிதி. வகுப்புவாத முஸ்லிம்களோ ஒரு டஜனுக்கு மேல் இருக்கிறார்கள். இந்த வகுப்புவாதிகளால் மகா நாடு முறிய நேரிடுமானால் அது பெரிய துக்ககரமே.

## பெண்கள் தியாகம்.

இந்தியாவில் நடைபெற்ற சத்தியாக்கிரகக் காலத்தில் இந்தியப் பெண்கள் காட்டிய ஊக்கமும், மனோ உறுதியும், தியாகமும், மகா அற்புதமானவை. அவர்கள் தம் கடமையை யாற்றுந் திறனுடையவர்கள் என்னும் நம்பிக்கை எனக்கிருந்த போதிலுங்கூட இப்போது அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் விழிப்பு ஏற்படுமென்று நான் நினைத்ததே கிடையாது. பல வருஷங்களுக்குப் பிறகு அடையக்கூடிய நிலைமையை இந்தியப் பெண்கள் இப்போதே யடைந்துவிட்டனர். 18 மாதங்களுக்கு முன் இந்தியா இருந்த நிலைமையைவிட மேலான நிலைமை இந்தியா அடைந்திருக்குமானால் அதற்குப் பொறுப்பாளிகள் இந்தியப் பெண்கள் தான். தங்களுக்கு விசேஷ பாதுகாப்புகளும், விசேஷ சலுகைகளும் வேண்டுமென்று இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான பெண்கள் கோரவில்லை. விசேஷச் சலுகைகள் தங்களுக்கு வேண்டுமென்று கோராது மற்ற ஆண்களுக்கு வழிகாட்டியா யிருக்கிறார்கள். நான் மேற்கொண்டுள்ள பொறுப்பை இனிது நிறைவேற்றுமாறு அவர்கள் எனக்கு ஆசி கூற வேண்டுமென்று கோருகிறேன். —மகாத்மா.

Koviloor Digital Library



# மதுரையில் தடியடி.

மதுரையில் கள்ளுக்கடை மறியல் தீவிரமாய் நடந்து வருகிறது. தொண்டர்கள் சாத்வீகமாய் மறியல் செய்கின்றனர். 5உ இரவு 8½ மணிக்கு திடீரென்று ரிசர்வ் போலீசார் பல மோட்டார்களில் வந்து தொண்டர்களை தாக்கினார்கள். தடியால் அடித்தார்கள். துப்பாக்கி கட்டையால் இடித்தார்கள். இதனால் 15 தொண்டர்கள் காயமடைந்தனர். திடீரென்று இந்த மதுரை வீரர்கள் தொண்டர்கள் மீது பாய காரணம் என்னதென்று தெரியவில்லை. மறியல் சாத்வீகமாய் நடக்காததால் போலீசார் பிரவேசித்ததாக கலெக்டர் சொல்லுகிறார். ஆனால் மறியல் சாத்வீகமாய் நடந்ததென்றே காங்கிரஸ்காரர் கூறுகிறார்கள். இதில் நமக்கு சந்தேகமில்லை. சாத்வீகமாய் நடக்கவில்லையென்றால் காங்கிரஸ் அதிகாரிகளுக்கு கலெக்டர் எடுத்துக்காட்டியிருக்கலாம். அதை விட்டு இரவில் போலீசாரை விட்டு பழைய காட்டுமிராண்டித்தனமாகிய தடியடி தர்பார் செய்யச் சொன்னது வெறும் அக்கிரமமாகும். காந்தி—இர்வின் உடன்படிக்கை இதற்காகவா ஏற்பட்டது? அந்த ஒப்பந்தத்தை கௌரவிக்கும் யோக்கியதை இப்படித்தானா? மதுரை போலீசார் நடத்தையை இனி ஒரு வினாடியும் பொறுக்க முடியாது. சென்னை சர்க்கார் காந்தி—இர்வின் ஒப்பந்த விஷயத்தில் இதுவரை பலதடவைகளில் நேர்மையாய் நடந்திருக்கிறது. சென்னை கவர்னரின் நேர்மையை நாம் முன்பு புகழ்ந்திருக்கிறோம். இப்பொழுது அவர் நேர்மையைக் காட்டவேண்டிய முக்கியமான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அநியாயமாய் நிரபராதிகளான தொண்டர்களை முரட்டுத்தனமாய் அடித்ததற்கு கவர்னர் சரியான பரிகாரம் தேடவேண்டும். ஸ்தல அதிகாரிகள் சொல்லுவதை வேத வாக்காக நம்பிவிடக் கூடாது. ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி கேட்பதைப்போல ஒரு விசாரணை கமிட்டி நியமிக்கவேண்டும். புண்பட்டிருக்கும் தமிழ் நாட்டார் மனதை ஆற்றுவதற்கு கவர்னர் பரிகாரம் தேடாமல் போனால், அதனால் பெரிய அனர்த்தம் விளையுமென்பதை இப்பொழுதே எச்சரிக்கிறோம்.

# சீமையில் காந்தீயம்.

சீமைத்துணி செய்யும் இடமாகிய லங்காஷயரிலேயே காந்தியம் புகுந்து விட்டது. ஒரு தொழிலாளி மகாத்மாவுக்கு பின் வருமாறு எழுதுகிறார்;—

எங்களுடைய மதுபான வியாபாரத்தின் பயனாகக் கொடுமையாக நடத்தப்பட்டவரும், அந்த மதுபானத்திலேயே ஈடுபட்டிருப்பவருமான இந்தியர்களுக்கு மாத்திரம், தலைவராயிருக்கும்படி கடவுள் உங்களை நியமிக்கவில்லை. எங்களுடைய பெரிய தலைவரும் நீங்கள்தான். நீங்கள் உண்மையான கிறிஸ்தவர். ஏனெனில் மற்றவர் அனைவரும் மதுபானப் பேய்க்கு வசப்பட்டிருக்கின்றனர். நான் மதுவிலக்கில் முனைந்து நிற்பவன். நீங்கள் எப்பொழுதேனும் ராச்டேலுக்கு வந்தீர்களானால், அங்கு எந்தக் கூட்டம் நடைபெற்ற போதிலும், அதில் நான் மதுவிலக்கைப் பற்றிச் சிறிது பேசாமலிருப்பதில்லை: என் பதைக் காண்பீர்கள். மதுவிலக்கே சிறந்த பரிகாரமென்றும், ஸ்ரீமான் காந்திதான் உண்மையான கொள்கையை எங்கும் நிலை நிறுத்தக் கூடியவர் என்றும் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். நான் கூட்டங்களுக்குச் செல்லும் போது "காந்தி லீடர் வருகிறார்." என்று ஜனங்கள் கூறுவதுண்டு. உண்மையில் தங்களுடைய பூட்ஸை அவிழ்க்கக்கூட எனக்கு யோக்கியதையில்லை. இங்கிலாந்திலுள்ள மதுபானக் கடைகள் எப்படி நடைபெறுகின்றன? மில் தொழிலாளர்கள் அதிகமாகக் குடிப்பதனாலேயே இவை ஓங்கி வளர்கின்றன. இவர்கள், தங்களுடைய கூலியைச் சம்பாதித்துக் கொண்டுவந்து இந்த மதுபானக் கடைகளில் செலவழித்து விடுகிறார்கள். பின்னர், தாங்கள் உற்பத்தி செய்யும் துணிகளை இந்தியர்கள் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்! கடைசியாக நான் பிரார்த்தித்துக்கொள்வது என்னவென்றால், உங்களுக்கும் உங்கள் அருமைத் திருமகனாருக்கும், உங்கள் தோழர்களுக்கும் ஆண்டவன் எப்பொழுதும் பக்கத் துணையா யிருப்பாராக. இந்த மதுபானத் தீமையை நீங்கள் ஒழிப்பீர்களானால் அதற்காக இங்கிலாந்து உங்களை வந்தனம் செய்ய வேண்டி நிற்கும். பின்னர் உங்களுடைய இந்தியாவும் சுதந்திரமாக வாழும். பிறகு அனைவரும் ஒன்று சேர்ந்து, "எவரிடமிருந்து கருணைப்பிரவாகம் பொழிகிறதோ அந்த ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக" என்று பாடுவோம்.

Koviloor Digital Library



## சமாச முறிவு.

லண்டனில் மைனாரிட்டிகளுக்குள் சமாசம் ஏற்படுத்தும்படி மகாத்மா தலைமையில் ஒரு கமிட்டி ஏற்பட்டிருந்ததை நண்பர்கள் அறிவார்கள். அதில் மகாத்மா எவ்வளவோ விட்டுக்கொடுத்தும் ஆகாகான் கோஷ்டியார் பிடிவாதத்தால் சமாசம் இல்லாமல் முறிந்து போயிற்று. முஸ்லிம்களுக்கு பாஞ்சாலத்திலும் வங்காளத்திலும் மெஜாரிட்டி ஸ்தானங்களுக்கும், மற்ற மாகாணங்களில் அதிகப்படி ஸ்தானங்களுக்கும் மகாத்மா சம்மதித்தார். முஸ்லிம்கள் கேட்கிற படியால் தனித்தேர்தல் தொகுதிக்கும் சம்மதித்தார். ஆனால் முதல் தேர்தல் நடந்தவுடன் பொதுத் தொகுதி வேண்டுமா, தனித்தொகுதி வேண்டுமா என்பதைப்பற்றி மைனாரிட்டிகள் அபிப்பிராயம் தெரிய ஓட் எடுக்கவேண்டும். அதில் பொதுத் தேர்தல் தொகுதி வேண்டுமென்றால் அந்தப்படியே அமைக்க வேண்டும். ஆகாகான் கோஷ்டியார் காங்கிரஸ் தீர்மானமாகிய பூர்ண சுயேச்சையை ஒப்புக்கொள்ள வேண்டும். இவைதான் மகாத்மா சொல்லியவை. ஆகாகான் கூட்டத்தார் இவற்றை யோசனை செய்து 7உ மாலை 1 மணிக்குள் சொல்லவேண்டும். இதற்கிடையில் மகாத்மா காந்தி டாக்டர் அன்சாரியுடன் தந்திப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருந்தார். ஆகாகான் கூட்டத்தார் யோசனை செய்தார்கள். பூர்ண சுயேச்சையை ஒப்புக்கொள்ள முடியாதென்றும், குடியேற்ற ஆட்சியை ஒப்புக் கொள்ளுவதென்றும், குடியேற்ற ஆட்சியிலேயே பிரியும் உரிமை இருப்பதாகவும் சொன்னார்கள். ராணுவம் இந்தியர் கையில் வர சம்மதித்தாலும் உள் நிர்வாகம் பிரிட்டிஷாரிடமே இருக்க வேண்டுமாம். பண நிர்வாகம் இந்தியர் கைக்கு மாற்றுவதை ஒப்புக் கொள்ளுவார்களாம். அநேகமாய் ஆகாகான் கூட்டத்தார் மகாத்மா நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளுவார்கள்போல தோன்றிற்று. உடனே பிரிட்டிஷ் சுயநலப் புலிகளுக்கு அடி வயிற்றில் நெருப்பை வைத்து கட்டியதுபோல எரிந்தது. மகாத்மா யோசனைகளை ஒப்புக்கொள்ளாமல் செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்தார்களாம். யார் சூழ்ச்சியாயிருந்தாலுஞ் சரி. ஆகாகான் கோஷ்டியார் பல்டி யடித்துவிட்டார்கள். ராஜீய விஷயத்தைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாதென்றும், சமூக விஷயங்களை இப்பொழுது முடித்துக்கொண்டால் அப்புறம் ராஜீயத்தை பார்த்துக்கொள்ளலாமென்றும் முடிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே 7உ மாலை கூடிய கமிட்டி இரவு 1 மணி வரை நடந்து முடிவில் சமாசம் ஏற்படாமல் கலைந்துபோயிற்று. ராஜீய நிபந்தனைகளை தற்சமயம் ஒப்புக்கொள்ள முடியாதென்று முஸ்லிம்கள் சொல்லுவதால், சமாசப்பேச்சு முறிந்துவிட்டதாகவும், இதை முதல் மந்திரியிடம் தெரிவித்து விடுவதாகவும் மகாத்மா சொல்லிவிட்டார். ஆகவே மைனாரிட்டி கமிட்டி கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு, ஐக்கிய நிர்மாண கமிட்டி கூட்டத்தை சீக்கிரமாக நடத்தி முடிக்க வேண்டுமென்று மகாத்மா கேட்கப் போகிறார். ஆகாகான் கோஷ்டியார் இதற்கு முட்டுக்கட்டை போடலாம். பிரிட்டிஷ் சுயநலவாதிகள் நோக்கத்தை அறிந்திருந்தும், ஆகாகான் கோஷ்டியார் இம்மாதிரி முட்டுக்கட்டை போட்டு வருவது வெறும் தேசத்துரோகத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இந்துக்களும், சீக்கியரும் இந்த விவாதத்தை சர்வதேச சங்கத்தின் முடிவிற்கு விட விரும்பியும் ஆகாகான் கோஷ்டியாருக்கு சம்மதமில்லை. இதன் ரகசியமென்ன?

## மகாத்மாவுக்கு உபசாரம்.

பார்லிமெண்ட் அங்கத்தினர்களான லார்ட் ஆஸ்டரும், லேடி ஆஸ்டரும் தங்கள் மாளிகையில் மகாத்மாவை 6உ காலை வரவேற்று உபசரித்தனர். 2 மணி நேரம் வரை மகாத்மா அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். இன்று மகாத்மா கிசெஸ்டர் பிரதேசத்திற்கு பிஷப் பெல் விருந்தினராகச் செல்லுகிறார். அங்கே "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையின் சொந்தக்காரரான ஸ்ரீ. சி. பி. ஸ்காட் மகாத்மாவை பேட்டி கண்டு பேசுவார். இந்தியா மந்திரி ஆபீசில் இந்திய ஹை கமிஷனர் இர்வின் தம்பதிகளை 6உ வரவேற்று உபசரித்தார். அங்கே மகாத்மா பிரசன்னமாகி கௌரவித்து, லார்ட் இர்வினுடன் சிறிது நேரம் பேசியிருந்தார்.

### பார்லிமெண்ட் கலைவு.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் 7உ கலைந்துவிட்டது. 27உ பொதுத் தேர்தல் நடக்கும். அடுத்த மாதம் 10உ புதிய பார்லிமெண்ட் கூடும். மறுபடியும் தேசிய சர்க்கார் என்ற பெயருடன் கலப்பு மந்திரி சபையே ஏற்படுமென்று தெரிகிறது. தொழிற் கட்சியார் அதில் கலந்து கொள்ளுவார்களா என்பது தெரியவில்லை:

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)


# காந்தி

உள்நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.
திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

ஆசிரியர்:
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 12உ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 26உ திங்கட்கிழமை | இதழ் 38

## சோதனை காலம்.




(அர்ச்சுனன் மாம்பழத்தை கொய்துவிட்டான். முனிவர் விழித்தால் சாபம் போடுவார். கிருஷ்ணன் ஒரு யுக்தி சொன்னர். ஒவ்வொருவரும் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொன்னல் மாம்பழத்தை மறுபடியும் ஒட்டவைத்து விடுவதாக கூறினர். அப்படியே நடந்தது.)

மகாத்மா :—"இனி தாமதிப்பதால் பயனில்லை. இது வெடித்து எல்லாரையும் நாசமாக்கிவிடும். சுயராஜ்ய முனிவர் சாபம் கிடைக்கும். ஒவ்வொருவரும் விட்டுக் கொடுங்கள். பழத்தை மறுபடியும் மரத்தில் சேர்த்துவிடுகிறேன். அப்பொழுது தான் சுயராஜ்யம் கிடைக்கும்".

வகுப்புவாதிகள் விட்டுக் கொடுப்பார்களா? அல்லது நாசமாக்கப் போகிறர்களா?

Koviloor Digital Library



# முதல் மந்திரி குறும்பு

மைனாரிட்டி கமிட்டி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஒரு முடிவும் ஏற்படாமல் போனது வெட்கக்கேடானது. இந்தியாவில் போடும் வகுப்புச்சண்டை போதாதென்று சீமைக்கும் சென்று சண்டை போடுகிறார்கள். உலகமெல்லாம் இந்தியரைப் பார்த்து சிரிக்கவும், இந்தியர் சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லையென்று சொல்லவுமே இந்த சூழ்ச்சி பிரிட்டிஷ் சர்க்கார் செய்கிறார்கள். அதில் அவர்களுக்கு வெற்றியே. மகாத்மா காந்திக்கு ஏற்பட்டிருக்கும் மனத்துயரைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. பிரிட்டிஷார் எளிதில் சுயராஜ்யம் கொடுத்துவிடமாட்டார்கள். டிவாலரா சொல்லியபடி பிரித்துவிடுவார்கள், தூண்டிவிடுவார்கள், பயமுறுத்துவார்கள், இவற்றையெல்லாம் கடந்து ஜெயித்தால்தான் சுயராஜ்யம் கிடைக்கும். இந்தியாவிலிருந்து, போயிருக்கும் "பிரதிநிதிகளுக்கு" இந்த சூழ்ச்சி தெரியவில்லை. முதல் வலையிலேயே அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள். ஆகாகான் கோஷ்டியார் நாங்கள் கேட்கிறபடி இந்துக்கள் கொடுக்காவிட்டால், பிரிட்டனுக்கு என்றென்றும் ராஜவிசுவாசிகளாயிருப்போம் என்று கூவுகிறார்கள். பிரிட்டிஷ் சம்பந்தமே சர்வ சிலாக்கியமாம். என்றென்றும் அவர்கள் சம்பந்தம் இருக்க வேண்டுமாம். சர். பாத்ரோ மாகாண சுயாட்சி கொடுத்தால் போதும், நான் திருப்தியாக வீட்டுக்குப்போகிறேன் என்று உறுதி கூறுகிறார். இவர்கள் சொல்லுவது மைனர்கள் திருவிளையாடல்களைப் போலவே இருக்கிறது.

மைனர்களுக்கு சொத்தின் அருமை தெரியாது. கஷ்டப்பட்டு சம்பாதித்தவர்கள் அல்ல. பூர்வீகச் சொத்துக்கள் வாரிஸ் என்ற உரிமையில் மைனருக்கு வந்து சேருகின்றன. அருமை தெரியாத மைனர், 100 ரூபாய் வாங்கிக்கொண்டு ஆயிரம் ரூபாய்க்கு நோட்டு எழுதி கொடுக்கிறான். ஆயிரம் ரூபாய் கிடைத்தால் சொத்துக்கள் பூராவையும் கொடுத்துவிட அவன் தயார். அவனைப் போலவே மைனாரிட்டி வகுப்புகள் சில இருக்கின்றன. சுயராஜ்யத்தின் அருமை அவர்களுக்குத் தெரியவில்லை. அதற்காக இது வரை கஷ்டப்பட்டவர்களின் கஷ்டமோ, தியாகமோ அவர்களுக்குத் தெரியாது. பஞ்சணையில் சாய்ந்து பசி தெரியாமல் காப்பிட்டு வளர்ந்தவர்கள். தியாகஞ் செய்து சுயராஜ்யத்தை கொடு என்று தேசிய வாதிகள் கேட்கும் போது, இவர்கள் குறுக்கே விழுந்து இது கொடுத்தால் போதும், அது கொடுத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். மைனர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? மற்றொரு பக்கத்தில் தீண்டாதார் பிரதிநிதி என்று சொல்லும் டாக்டர் அம்பேத்கார் கிளம்புகிறார். அவருக்கு சுயராஜ்யமே வேண்டாமாம். இவற்றையெல்லாம் பார்க்கும் போது மிகவும் மன வேதனை உண்டாகிறது.

முதல் மந்திரி மெக்டனால்ட் இதுதான் சமயமென்று தமது குறும்புத்தனத்தை காட்டுகிறார். "உங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் எப்படி சுயராஜ்யம் கொடுப்பது?" என்று கேட்கிறார். பிரிட்டிஷ் சர்க்காருக்கு தலையாட்டுகிறவர்களை யெல்லாம் சேர்த்துவைத்துக்கொண்டு அவர்களிடம் சமாசம் பேசச் சொல்லுவது சாத்தியமானதா? மகாத்மா காந்தி "நீர் என்ன கொடுக்கப்போகிறீர்? அதைச் சொல்லும்" என்று கேட்கிறார். அதற்கு பதில் இல்லை. இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் அந்த சுயராஜ்ய சூரியனில் வகுப்புவாத பனிக்கட்டி உருகிப்போகும் என்று மகாத்மா சொல்லுவதே உண்மையான பேச்சு. அப்படிச் செய்யாமல், "ஒற்றுமையில்லை, ஒற்றுமையில்லை" என்று குறும்புத்தனமாய் பேசுவது அக்கிரமமாகும்.

எகிப்திற்கு சுயராஜ்யம் கொடுக்கும்போதும் இம்மாதிரியே மைனாரிட்டிகளை கிளப்பிவிட்டார்கள். எகிப்தியர் புத்திசாலிகளாகையால், பிரிட்டிஷார் சூழ்ச்சிக்குள் அகப்படவில்லை. ஆனால் இந்திய மைனாரிட்டிகளுக்கு எகிப்தியரைப் போன்ற தேசாபிமானம் வரவில்லை. அதனால் முட்டுக்கட்டை போடுகிறார்கள். முதலில் பிரதிநிதிகளை தெரிந்தெடுத்த முறையே ஆட்சேபிக்கத்தக்கது. தொழிற்கட்சி சர்க்கார் அதிகாரத்திற்கு வந்தவுடன், எகிப்திய பிரதிநிதிகளுடன் ராஜி பேச விரும்பினார்கள். அப்பொழுது என்ன செய்தார்கள்? இங்கே செய்ததுபோல பிரதிநிதிகளை நியமனஞ் செய்யவில்லை. புதிதாக தேர்தல் நடத்தி, மெஜாரிட்டியாக வந்த கட்சிப்பிரதிநிதிகளோடுதான் சமாசம் பேசினார்கள். அம்மாதிரி இந்தியாவில் ஒரு தேர்தல் நடத்தட்டும்.

(303-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# தலையாட்டி தம்பிரான்கள்

மைனாரிட்டி சமரசம் பலிக்கவில்லை. மகாத்மா எவ்வளவோ முயற்சி செய்தாய் விட்டது. மைனாரிட்டி கமிட்டி கூட்டம் சென்ற வியாழக் கிழமை கூடியதும் மகாத்மா தமது அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டார். அவர் அச்சமயம் வாசித்த அறிக்கை ஆணித்தரமானது. அதில் சொல்லுகிறார்:—

"இந்த மகாநாடு உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல. சர்க்கார் தாங்கள் கொடுக்கப் போவது இன்னது என்பதைச் சொல்லவில்லை. இவையே மைனாடிட்டிகளுடன் சமரசம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம். சர்க்கார் கொடுக்கப் போவது நல்லதாயிருந்தால், சமூக ஒப்பந்தம் ஏற்படாமல் அது கிடைக்காது என்று ஏற்படும்போது, அதை இழக்க யாரும் சுலபமாய் சம்மதிக்க மாட்டார்கள். ஒரு தடவைக்கு 50 தடவை யோசிப்பார்கள்."

வட்ட மேஜை மகாநாட்டில் சமூக ஒப்பந்தம் ஏற்படாததற்கு காரணத்தை நண்பர்கள் இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்தியாவிற்கு பூர்ண சுயராஜ்யம் வேண்டுமென்று காங்கிரஸ் கேட்கிறது. சர்க்கார் எம்மாதிரி சுயராஜ்யம் கொடுக்கப் போகிறார்கள் என்று இது வரை சொல்லவில்லை. அஸ்திவாரம் கட்டாமல் மேல் கட்டிடம் கட்டும்படி சொல்லுவது மூடத்தனம். ராஜீய அமைப்பைப் பற்றி சொல்லாமல் சட்டசபை அங்கத்தினர் எண்ணிக்கையைப் பற்றியும், சமூகங்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றியும், சட்டசபைக்கும், சர்க்காருக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் பேசச் சொல்லுவது இந்த மூடத்தனத்தை ஒத்ததேயாகும். இது ஒருபக்கம். மற்றொரு பக்கம் பார்த்தால், "பிரதிநிதி"கள் என்ற பெயரோடு போயிருப்பவர்கள் பிரதிநிதிகளல்ல. சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் சர்க்கார் சொல்லுகிறபடி தலையாட்டும் தம்பிரான்கள். இந்தக் கூட்டத்தோடு எப்படி சமரசம் பேசுவது சாத்தியம்? இந்தக் கூட்டத்திற்கு எப்படி தேசாபிமானம் இருக்கும்? ஆகவே வட்டமேஜை மகாநாடு வெற்றிகரமாய் நடக்காமல் முறிந்து போய்விடுமானால், அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இருக்கிற விஷயங்களைப் பார்த்தால், மகாநாடு தோல்வியடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு பிரிட்டிஷ் சர்க்கார் முன் யோசனையோடு சூழ்ச்சி செய்திருப்பது தெளிவாய் விளங்குகிறது.

# பிஷப் உபதேசம்.

வகுப்பு சண்டைகளும், சர்வ சந்தேகமும் மலிந்திருக்கும் இக்காலத்தில், சென்னை பிஷப் உபதேசம் ஸ்ரீ. பன்னீர் செல்வம் போன்றவர்களுக்காவது கண் திறக்க உதவியாயிருக்குமென்று நம்புகிறோம். சென்னை பிஷப் விசாகபட்டணத்தில் பேசிய போது சொன்னதாவது:—

"நாளை என்ன நடக்குமோ என்ற பயமே இந்த நாடு முழுவதிலும் பரவியிருக்கிறது. ஒவ்வொன்றும் மாறுகிறது. பழையவை மாறி புதியவை வருவதைக்கண்டு பயப்படுகிறார்கள். அம்மாதிரி பயப்படுவது கிறிஸ்தவ தர்மத்திற்கு ஒத்ததல்ல. கிறிஸ்தவர்கள் மைனாரிட்டிகளாயிருப்பதால் பாதுகாப்பு வேண்டுமென்று எங்கு பார்த்தாலும் பேச்சாயிருக்கிறது. பாதுகாப்பு வேண்டுமென்று கேட்பது கடவுளிடம் நம்பிக்கையில்லாததையே காட்டுகிறது. மற்ற சமூகங்களைப்போல பயந்து கொண்டு இந்த சர்க்காரிடமோ அந்த சர்க்காரிடமோ பாதுகாப்பு கேட்பதை விட இந்த அரிய சந்தர்ப்பத்தை கடவுளுக்காகவும், இந்நாட்டிற்காகவும் உழைக்க உபயோகிக்க வேண்டும். இந்நாட்டிற்கு உழைக்க கடவுளால் இங்கு அனுப்பப்பட்டிருப்பதாக கிறிஸ்தவர்கள் நினைக்கவேண்டும். தங்களுக்கு மற்றவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்ப்பதற்காக தாங்கள் மைனாரிட்டிகள் என்று ஸ்தாபிப்பதைவிட, தேசிய இயக்கத்தில் சேர்ந்து ஒரு கௌரவமுள்ள பதவியை தங்களுக்கு சிருஷ்டித்துக் கொள்ளுவது மேல். கிழக்கிலும் மேற்கிலும், எங்கும் மாறுதல் தோன்றிக் கொண்டு வருகிறது. அதைக்கண்டு பயந்து ஓடக்கூடாது. புதிய நிலைமையை சமாளித்து அதை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும்."

ஆனால் லண்டனில் கூடியுள்ள மைனாரிட்டிகள் புதிய மாறுதலுக்கு முட்டுக்கட்டை போடவோ, அல்லது பலித்த வரை லாபம் என்ற எண்ணத்தால் புதிய மாறுதலை உபயோகித்துக் கொள்ளவோ துணிந்திருக்கிறார்கள். இந்த மோசமான நடத்தை பின்னால் அவர்களுக்கே வினையாய் வந்து முடியும். இந்த சந்தர்ப்பத்தில் அகப்பட்டதைச் சுருட்டலாம் என்று நினைப்புக்கொண்டு மைனாரிட்டிகள் நடப்பார்களானால் அதைவிட தேசத்துரோகம் வேறெதுவுமில்லை. சென்னை பிஷப் உபதேசத்தை ஸ்ரீ. பன்னீர்செல்வமாவது கவனிப்பாரா?

Koviloor Digital Library



# இந்தியாவில் பெண்கள் குறைவு

சென்ற ஜன சங்கியை கணக்கைப் பார்த்தால் ஜனத் தொகை அவ்வளவு அதிகமானதாக இல்லையானாலும் சென்ற பத்து வருடங்களாக நமது சகோதரிகள் தூங்கிக் கொண்டிருக்கிறார்களென்று சொல்ல முடியாது. முன்னம் இருந்த ஜனத்தொகையைக் காட்டிலும் தற்போது 100க்கு 10 விகிதமே அதிகம் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது. இவ்விதமான ஜனப் பெருக்குக் காரணஸ்தர்களாக உள்ளவர்கள் பாராட்டத் தக்கவர்கள். ஜனப் பெருக்கை கூர்ந்து பார்த்தால் சகல மதத்திலும் முன்னேற்ற மேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சீக்கியர், கிறிஸ்துவர், முகம்மதியர், இந்துக்கள் ஆகியோர் 100க்கு முறையே 33, 32, 13, 10, விகிதம் அதிகப் பட்டிருக்கின்றனர். பார்சிகளும் யூதர்களும் 100க்கு 1 ஆக அதிகரித்திருக்கின்றனர்.

## பெண்கள் குறைவு

ஜனசங்கியில் ஓர் முக்கியமான மாறுதல் ஆண்கள் பெண்களைக் காட்டிலும் 110,00,000 அதிகரித்திருப்பதாகும். தங்களுக்குப் பெண் வீட்டுக்காரர்கள் வலிய வந்து பெண் கொடுப்பார்கள் என்று சொர்ப்பனங்கண்டு கொண்டிருந்த வாலிபர்கள் இந்த உண்மையை அறிந்ததும் திடுக்கிட்டுப் போவார்களென்று நினைக்கிறேன். அவர்களுக்காக நான் மிகவும் பச்சாதாபப்படுகிறேன்.

## அதிகரிப்புக்குக் காரணமென்ன?

நமது நண்பர்கள் ஆண்கள் அதிகரிப்புக்குக் காரணமென்னவாக இருக்கலாமென அறிய அவலுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன். விஞ்ஞான சாஸ்திரிகள் நல்ல ஆகாரம் அதிகமான ஆண்கள் உற்பத்திக்கு காரணமாக இருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்தக் கூற்று வேடிக்கையாகத் தோன்றினாலும் இதில் சில உண்மை இல்லாமலில்லை. ஜேம்ஸ் பருல் என்ற பெரியார் இதை ஒப்புக் கொள்ளுகிறார். காவல்ஸ்ஜி என்பார் பன்றி, எலி முதலிய மிருகங்களைக் கொண்டு பரிட்சை செய்து சத்தான ஆகாரம் பெண்களையும் சாரமற்ற ஆகாரம் ஆண்களையும் உற்பத்தி செய்கிறது என கண்டு பிடித்திருக்கிறார்.

## கஷ்டத்தை ஒழிக்க வழி

நமக்குக் கிடைத்துள்ள கணக்கின்படி 110,00,000 ஆண்கள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதிலிருந்து நம் நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் நல்ல ஆகாரம் அருந்தாமலிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அவர்களின் நிலைமை வருந்தத்தக்கதாகும். ஒரு நாட்டின் 110,00,000 ஆண்கள் கல்யாணஞ்செய்துகொள்ள பெண் கிடைக்காதவர்களாகவும் பல ஆடவர்கள் கல்யாணஞ்செய்து கொண்டால் மனைவியை வைத்து நடத்துவதற்குப் போதிய சௌகரியமில்லை என்பதற்காகவும் பிர்மசாரிகளாகவும் இருக்கிறார்களென்றால் இவற்றினுக் கெல்லாம் அடிப்படையான காரணம் பசியின் கொடுமையே ஆகும். இக் கொடுமை ஒழிய வேண்டுமானால் நாடு முன்னேற வேண்டுமானால் சுயராஜ்ய மடைய வேண்டியதைத் தவிர வேறு வழி யொன்றுமில்லை என்பது உறுதி.

—ஏ. ஜி. என்.

# தயாரா யிருங்கள்!

பாஞ்சால மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசி விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின் வருமாறு கூறப் ட்டுளது.

"சட்ட மறுப்பு இயக்கத்தை நாம் மீண்டும் துவக்கித் தானாக வேண்டுமெனத் தோற்றுகிறது. நமது விரோதி மட்டும் தயாரா யிருந்து கொண்டிருக்கையில், தேசியப்படைகள் சிதறுண்டு கிடக்கின்றன. இனி வரப்போகும் போராட்டத்துக்கு நாம் தயாரா யிருக்க வேண்டுமாயின், நாம் நம்மவரைத் திரட்டி ஒருங்கு சேர்க்கவேண்டும். அங்ஙனம் செய்தால்தான், நாம் மீண்டும் சட்ட மறுப்பு ஆரம்பிக்கவேண்டிய . அவசியம் ஏற்படுமேல் சுஷணநேரத்தில் நமது படைகளை முன்னணியில் கொணர்ந்து நிறுத்தலாம்."

மாகாணக் கமிட்டிக்குள்பட்ட காங்கிரஸ் கமிட்டிகள் தொண்டர்களைச் சேர்த்துப் பயிற்சியளிக்க வேண்டுமென்றும், சாராயம் அந்நியத் துணி இவைகளைப் பகிஷ்கரித்து கிராமங்களில் காங்கிரஸ் பிரசாரம் செய்வதுடன், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்கவும் மும்மரமான பிரசாரம் நடத்த வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library



# பிரிட்டனில் மகாத்மாவுக்கு உபசாரம்.

(மகாதேவ தேசாய்)

பம்பாயில் காந்தி வந்திறங்கினால் அங்கு ஜனங்கள் அவரைத் தரிசிக்க எப்படித் திரள் திரளாகக் கூடிக் காத்துக்கொண்டிருப்பார்களோ அப்படியே தான், கிங்க்ஸ்லி மண்டபத்திலும் காலை முதல் இரவு வரை ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் நூற்றுக் கணக்காக நின்றுகொண்டு, 'எப்பொழுது காந்தி மகான் வரப்போகிறார், அவரை எப்பொழுது பார்ப்போம்' என்று ஆவலுடன் நிற்கிறார்கள். நாங்கள் வெளியே செல்லத் தொடங்கினால், குழந்தைகள் எங்களுடன் தொடர்ந்து வருகின்றன. எங்களுடன் சிநேகிதம் செய்துகொள்ள வேண்டுமென்பதே அவைகளின் நோக்கம். "எங்களைப்போல் தான் உங்கள் தேசத்திலுள்ள குழந்தைகளும் இருக்கின்றனவா?" என்று ஒரு குழந்தை கேட்கிறது. "இவர்களுடைய உடையைப் பார்த்தால் மிகவும் விநோதமாயிருக்கிறது" என்று ஒரு சிறு பெண் தன் தோழியிடம் கூற, அத்தோழி "நாமும் அவர்களுக்கு விநோதமாகவே இருப்போம்" என்று பதில் சொல்கிறது. "உங்கள் நிஜார் எங்கே?" என்று மற்றொரு பையன் குறும்பாகக் கேட்கிறான்.

காந்திஜி இங்கிலாந்து சென்ற பிறகு அவரிடத்தில் எல்லாக் கட்சியாரும் அன்புடனேயே நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். இதுகாறும் அவருக்கு விரோதமாயிருந்த பத்திரிகைகள் இப்பொழுது அவரைப்பற்றிப் படங்கள் முதலியன வெளியிட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல, சாதாரண சில்லரை சாமான் விற்பவர்களும், மற்றெல்லாப் பாமர ஜனங்களும், காந்தியடிகளின் மோட்டார் வண்டி நின்றதும் அவரைப் பார்க்க வேண்டுமென்று கும்பல் கும்பலாகக் கூடி விடுகிறார்கள். இவரைப் பார்த்தவுடன் புன்சிரிப்புடன் கைகொட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.

தவிர, ஐரோப்பா கண்டத்தின் பல பாகங்களிலிருந்தும் இங்கிலாந்தின் பல பாகங்களிலிருந்தும், காந்திஜிக்கு வரவேற்பு அளித்து அவருடைய கொள்கை சித்தியாகுமாறு பிரார்த்திப்பதாக ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர் இங்கிலாந்தில் மாணவராயிருந்த காலத்தில் அவருடன் பழகிய பல பழைய நண்பர்கள், அவருடைய நட்பை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள அவரை வந்து கண்டு பேசிவிட்டுப் போகிறார்கள். இங்ஙனம் வந்து பார்ப்பவரில் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் பலரும் உண்டு. ஒருநாள் அவர் மௌன விரதத்தை அநுஷ்டித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சர். ஜார்ஜ் பர்ன்ஸ் என்பார் அவரைப்பார்த்து, வேறொன்றும் பேசாமல் அவருடன் கைகுலுக்கிவிட்டு வெளியே வந்தார். வெளியே வந்தபோது "அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறினார். ஞாயிற்றுக்கிழமைகளில் தத்தம் இடம் வந்து தங்கும்படி பல இடங்களிலிருந்து அழைப்புக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

# தங்கம் பறக்கிறது!

சென்ற 2 வாரங்களாக ஏற்றுமதியான தங்கத்தை விட இந்த வாரம் அதிகத் தங்கம் ஏற்றுமதியாகுமெனத் தெரிகிறது. தங்கத்தை ஏற்றுமதி செய்யக்கூடாதென சர்க்கார் உத்திரவு எந்தச் சமயமும் பிறக்கக் கூடுமெனக்கருதி சென்ற 2 நாட்களில் மட்டும் 50 லட்ச ரூபாய் பெறுமான தங்கக் கட்டியும், சவரன்களும், நியூயார்க்குக்கும் ரோட்டர்டாமுக்கும் ஏற்றுமதி யாகியிருக்கிறது. பம்பாய் தங்க வியாபாரிகள் சர்க்கார் உத்திரவு பிறக்கு முன் தம் தங்கத்தை எந்தக்கப்பலிலாவது ஏற்றுமதி செய்துவிட வேண்டுமென்று ஒருவருக்கொருவர் போட்டி போட்டு முந்துகின்றனர். 23-ம் தேதி புறப்படவேண்டிய "ராஞ்சி" கப்பலில் இப்போதே ஏராளமான தங்கம் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து பம்பாய்க்கு வரும் "காமோரின்" கப்பல் தபால் ஏற்றிச் செல்ல நிற்கும் போது இந்தத் தங்கத்தை அதில் ஏற்றி அனுப்பி விடுவார்கள் போலும்.

தங்க ஏற்றுமதி சம்பந்தமாக இந்திய வியாபார சக்கத் தலைவர் சர். சுனிலால் மேதாவை பிரீ பிரஸ் பிரதிநிதி கண்டு பேசிய போது அவர் கூறியதாவது :—எனக்குத் தெரிந்த வரையிலும், இந்திய வியாபார ஐக்கிய சங்கத்தின் அங்கத்தினர் பேரில் அனாவசியமாகக் குறை கூறி அதன் மூலம் இந்திய வியாபார சமூகத்தின்மீதே நீதியங்கத்தினர் குற்றஞ்சாட்ட முற்பட்டிருக்கிறாரென்றே கூறுவேன். இச்சங்கக் கமிட்டி ஏகமனதாகத் தீர்மானித்தபடி தங்க ஏற்றுமதியைத் தடுக்க வேண்டுமென்று ஆரம்பத்திலேயே சர்க்காருக்கு இச்சங்கம் மனுச் செய்து கொண்டது என்பதை மறந்து அவர் பேசுகிறார்.

Koviloor Digital Library



# நமது தூதர் மகாத்மா

(ஸ்ரீ. ப. ராமசாமி.)

கோடிக்கணக்கான இந்திய ஏழைகளின் பிரதிநிதியாக இங்கிலாந்து சென்றுள்ளார் நமது மகாத்மா காந்தி. பாரத நாட்டின் ஸ்வதர்மத்தையும் ஸ்வதந்தரத்தையும் நிலைநாட்டவே அடிகள் தூது போயுள்ளார். உலக சரித்திரத்திலும் புராண இதிகாசங்களிலும் தர்மத்தை ஸ்தாபனஞ் செய்யத் தூதுசென்ற பெரியார் பலருடைய சரித்திரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பெண்கள் நாயகமும், ஜனக மன்னன் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வியும், ஸ்ரீராமசந்திரனின் ஆவியுமான சீதாதேவி சிறையிருந்த காலத்தில் அங்கதனும் அனுமனும் தூதுசென்றதாக இராமாயணம் விவரிக்கின்றது. இவ்விருதூதர்களும் தர்மத்தை வேரோடு பொசுக்கி, மறக் கொடும்பாவத்தை வழிபட்டுவந்த இராவணனிடம் சென்று சிறையில் வைத்த சீதையை விடுத்து, அடிமைப்படுத்திய தேவர்களை முறையில் வைத்து நேர்மையுடன் நடக்கும்படி வேண்டினார்கள். பின்னால் பாரதத்தில் முரசுக் கொடியோனாகிய தர்மபுத்திரனுக்கு ஸ்ரீ கண்ணன் தூதராக அமைந்தது சொல்லப்பட்டிருக்கிறது. தர்மன் தனது தூதனை எதிரிகளாகிய துரியோதனாதிகளிடம், "ஐந்து ஊர்களையாவது வேண்டு; அவை மறுக்கப்பட்டால் ஐந்து இல்லம் வேண்டு; அவையும் மறுக்கப்படின் அடுபோர் (யுத்தம்) வேண்டு" என்று சொல்லியனுப்பினான். மேற்சொன்ன தூதர்கள் மூவரும் எதிரிகளிடம் சென்று தர்மத்தைக் கடைபிடிக்க வேண்டினர். ஆனால் எதிரிகள் இணங்காது போரிலிறங்கி மடிந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

நமது மகாத்மாவும் பெரியதோர் அவதார புருஷன் "நான்" என்னும் அகங்காரம் இல்லாமலிருப்பான்; இந்தப் பூவுலகம் முழுவதையுமே தான் என்று எண்ணுவான்; அவனுக்கு யாதும் ஊர், யாவரும் பந்துக்கள்; அவனுக்குக் கோலமென்பதில்லை; பிறர் உடலைச் சிதைத்துச் சித்திரவதை செய்தபோதிலும் அவன் உள்ளம் அருளி மகிழ்ந்து அவரிடம் அருள்சுரந்து நிற்பான் இவ்வாறு பாரதியார் கூறுகின்றார். இவ்விஷயங்கள் அனைத்தும் நமது காந்தியிடம் பொருந்தித் திகழ்கின்றன. "ஏசுநாதர் ஒருமுறை சிலுவையில் மாண்டார், காந்தியோ நித்த நித்தம் சிலுவையில் மாண்டு பிழைக்கின்றார்" என்று ஒரு வெள்ளைப் பாதிரியார் கூறுகின்றார். மகாத்மாவின் ஞானகுருவாகிய ருஷிய ஞானி டால்ஸ் டாய், "நான் இன்று முதல் காந்தியை 'மிஸ்டர் காந்தி' என்று அழைக்கமாட்டேன். அவரை 'ஏழை பங்காளன், பூவுலகில் கடவுளின் உண்மையான பிரதிநிதி' என்று அழைப்பேன்" என்று எழுதியிருக்கின்றார். இவ்வாறு பல்லாயிரம் அறிஞர்களின் ஆசியைப்பெற்ற நமது காந்தி கோடி சூரிய காந்தியுடன் ஒப்பற்ற அவதார புருஷனாக நம்மிடையே விளங்குகின்றார்.

ஒரு காட்டில் அழகிய பல மான்களிருந்தன. முரட்டு வேடனொருவன் அவைகளை அடிமைப்படுத்தி வேட்டையாட எண்ணினான். மான்கள் காங்கிரஸ் கூடி யோசித்தன. எதிரியைத் தாக்காமல் விரைவில் விடுதலையடைய எண்ணின. தலைமையான மான் முன்னால் ஓடி வந்தது. "காட்டைச்சுற்றி ஓடுகிற அடிமை வாய்க்காலைத் தாண்டுவதற்கு உங்களால் முடியாது. நான் வாய்க்கால் மத்தியில் நிற்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் என் முதுகில் தாவி அங்கிருந்து அக்கரைக்குத் தாவி ஓடிவிடுங்கள்" என்று சொல்லியது. சொல்லிய வண்ணமே காரியமும் நடந்தது. மான்களெல்லாம் தப்பியோடி விட்டன. தலைமை மான் நடுத்தண்ணீரில் நின்றுகொண்டிருந்தது. மற்ற மான்கள் முதுகில் தாவியதால் தோலும் தசையும் அறுபட்டு உடல் துண்டு துண்டாகத் தண்ணீரில் உதிர்ந்துகொண்டிருந்தது. இரத்தம் வாய்க்கால் நீரோடு கலந்து புனிதப்படுத்தியது. சிறிது நேரத்தில் மான் கீழே விழுந்து இறந்து தண்ணீரோடு போய்விட்டது. வேடன் வெறுங் காட்டைக்கண்டு ஏமாந்தான். இம்மானைப்போல் மகாத்மா 35 கோடி அடிமை மான்களைத் தம் முதுகின்மேல் தாங்கி விடுதலை வழங்க முன் வந்துள்ளார். நமக்கு விடுதலை உறுதி; அதுபோல் மகாத்மாவுக்குத் துன்பமும் துயரும் கிடைப்பதும் உறுதி.

"இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்று கருதி நடமாடும் தெய்வங்களாகிய 35 கோடி மக்களுக்குத் தொண்டாற்றும் இவ் அவதார புருஷன், இத்திருத்தூதன் நீடுழி வாழவும், இவர் புகழ் சப்த சாகரங்களுள்ளவரை, வையமுள்ளவரை, தெய்வமுள்ளவரை வாழ வேண்டுமென்றும் மன, மொழி, மெய்களால் நாம் இறைவனை வழுத்துவோம்.

Koviloor Digital Library



# மின் வெட்டு.

## காரணம் எதற்கு ?

ஹிஜ்லி சம்பவத்தைப்பற்றி விசாரணை நடக்கிறது. ஒரு ராஜீயக்கைதி நடந்த சம்பவத்தைப் பற்றி சாட்சி சொன்னார். "என்ன காரணத்திற்காக சுட்டார்கள் ?" என்று ஜட்ஜ் கேட்டார். "காரணமில்லாமல் ஜெயிலில் அடைக்கும் போது, காரணமில்லாமல் ஏன் சுடக் கூடாது? என்று அவர் பதிலளித்தார்.

## சர்க்கார் குடிக்கொள்கை

குடியை வெகு சீக்கிரத்தில் ஒழித்துவிடப் போவதாக தற்கால சென்னை மந்திரி சபை வாய் வீச்சு வீசுகிறது. காந்தி—இர்வின் உடன்படிக்கைப்படி சாத்விக மறியலை சர்க்கார் அநுமதித்திருக்கிறது. ஒன்றுக்கு இரண்டு ஆதரவு இருக்கும்போது, குடி ஏன் ஒழிந்து போகாது என்று நண்பர்கள் கேட்கலாம். அதுதான் இல்லை. உண்மையாக அவர்களுக்கு நினைப்பு இருக்கிறதானல், குடியை ஒழிக்க உதவி செய்யவேண்டுமல்லவா ? உதவிதான் செய்யவேண்டாம், இடையூறுவது செய்யாமல் இருக்க வேண்டுமல்லவா ? இரண்டும் இல்லை. ஸ்தலஸ்தாபனங்கள் எதுவும் மறியலுக்கு உதவி செய்யக் கூடாதென்று புதிதாக உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதைப்பார்க்கும்போது, தானும் செய்யமாட்டேன், பிறரையும் செய்ய விடமாட்டேன் என்பதே குடிமந்திரியின் கொள்கை என்றுதெரிகிறது.

## கிருதயுகம் எப்போ ?

ஜெனரல் ஸ்மட்ஸ் ஒளி மறைவில்லாமல் பேசுகிறவர். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை வெளிப்படுத்தும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் புண்ணிய ஆத்மா. கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான் என்ற வைராக்கியசித்தர். ஆயுதங் குறைத்தலைப்பற்றி ஐரோப்பாவில் ஆர்ப்பாட்டம் பலமாயிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். அதற்காக அடுத்த வருஷம் பெப்ரவரி மாதம் ஜினிவாவில் ஒரு மகாநாடு கூடப்போகிறது. அதைப்பற்றி நமது ஸ்மட்ஸ் சொல்லுவது கவனிக்கத் தக்கது.

"ஆயுதம் குறைக்க இது சமயமல்ல. இச்சமயம் மகாநாடு கூட்டுவது பரிதாபம். ஒரே அடியில் ஆயுதத்தை குறைத்துவிட முடியாது. பல நூற்றாண்டுகள் பிடிக்கும்" ஸ்மட்சின் வெளிப்படையான பேச்சிற்காக ஒரு சலாம். வெள்ளையரின் போலித்தனத்தை வெளிப்படுத்தியதற்கு மற்றொரு சலாம். ஸ்மட்ஸ் கணக்குப்படி பார்த்தால், இந்த கலியுகத்தில் ஆயுதங் குறைப்பது சாத்தியமில்லையென்று தெரிகிறது. அடுத்த கிருத யுகத்தில்தான் நடக்கும். கிருதயுகம் எப்போ, இன்னம் எத்தனை லட்சம் ஆண்டுகள் இருக்கின்றன என்பதை தயவு செய்து எந்த ஜோதிடராவது சொல்லுவாரா ?

## சரியான சூடு

சர். எம். விஸ்வேஸ்வரய்யா அமெரிக்கா போயிருந்தார். அங்கே பிரபல பாங்கி நிபுணரான ஸ்ரீ. ஜாக்கோப்சனைக் கண்டு பேசினர். "இந்தியாவின் செலாவணியை எப்படி அமைத்தால் இந்தியாவிற்கு நன்மையாக இருக்கும்" என்று அவரிடம் யோசனை கேட்டார். ஜாக்கோப்சன் சரியாக பதில் சொல்லாமல் குழப்பினர். விஸ்வேஸ்வரய்யா விடவில்லை. உடனே ஜாக்கோப்சன் அவருடன் வந்த அமெரிக்க நண்பரை தனியாக அழைத்துச் சென்று, "இவரை இந்தியாவிற்கு திரும்பிபோகச் சொல்லும். அங்கே சென்று அங்குள்ள தற்கால சர்க்காரை மாற்றி அமைக்கச் சொல்லும். அப்புறம் என்னிடம் வந்தால் நான் யோசனைசொல்லுகிறேன்"என்றாராம். சுயராஜ்யமில்லாமல், பொக்கிஷ நிலைமையை எப்படி சரிப்படுத்தமுடியும்? 21உ ஒரு சட்டம் 24உ ஒரு சட்டமாக நினைத்தபோதெல்லாம் "பத்வா" பிறப்பிக்கும் இந்த சர்க்கார் அமைப்பில் எப்படி ஒழுங்கு ஏற்பட முடியும்? சர். விஸ்வேஸ்வரய்யா இந்தக் கதையை இந்தியாவில் வந்து சொல்லி வருந்துகிறார். வருந்தி என்ன செய்ய ? 200 வருஷங்களாக அடிமைப்பட்டும், அதைவிட்டு விலக லண்டன் பிரதிநிதிகளுக்கு மானமில்லையே !

---

(298-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனங்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளோடு பிரிட்டிஷ் சர்க்கார் ராஜி பேசுவதாகச் சொல்லட்டும். அப்பொழுது உண்மைவெளிப்படும். தான்தோன்றிதம்பிரான்கள் தலைகாட்ட முடியாது. இப்பொழுது முட்டுக்கட்டை போடுவதுபோல முட்டுக்கட்டை போடவும் முடியாது. ஆனல் சர்க்கார் அம்மாதிரி செய்யமாட்டார்கள். முட்டுக்கட்டைக்கு அவர்கள் வழி தேடும் நோக்கத்தில் இருக்கும்போது எப்படி முட்டுக்கட்டை இல்லாமல் செய்ய முன் வருவார்கள்? இப்பொழுது அவர்கள் கொண்டுபோயிருக்கும் பிரதிநிதிகளுக்குள் சமரசம் ஏற்படவேண்டும், அப்புறம்தான் ராஜீய அமைப்பைப் பற்றி யோசிக்க முடியும் என்று சொல்லுவது, அலையோய்ந்த பின்பு தான் சமுத்திர ஸ்நானம் செய்ய வேண்டும் என்று சொல்லுவதைப் போலவே இருக்கிறது.

# கையெழுத்துக்கு போட்டி.

பிரபலஸ்தர்கள் கையெழுத்துகளை வாங்கி ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ளுவது வெள்ளையருக்கு சுபாவம். லண்டனில் காந்தி கையெழுத்துக்கு கொஞ்ச கிராக்கியல்ல. பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், கன்சர்வேடிவ்கள்கூட போட்டி போடுகிறார்கள். அவர் தங்கியிருக்கும் "கிங்ஸ்லி ஹால்" ஆசிரமத்தில் இந்தக் காட்சியை தினசரி பார்க்கலாம். காந்தி கையெழுத்தைப்பெற தனக்கு உரிமையுண்டு என்று சிலர் சொல்லி வாதிப்பதுதான வேடிக்கையாயிருக்கும். பென் பிளேட்டன் என்பவர் கிங்ஸ்லி ஹாலில் தங்கியிருந்து மகாத்மாவுக்கு பணிவிடைகள் செய்பவர்களில் ஒருவர். அவர் ஒரு புத்தகத்தை மகாத்மாவிடம் நீட்டி பின் வருமாறு சொன்னார்.

"நான் டெயிலி ஹெரால்ட் ஆபிசில் முன்னால் இருந்தேன். ஒரு புத்தகம் மதிப்புரைக்கு வந்தது. மதிப்புரைக்கு அது யோக்கியதையுள்ளதல்லவென்று தள்ளிவிட்டார்கள். அதை ஒரு ஷில்லிங் (12 அணா) விலை கொடுத்து நான் வாங்கி முதலிலிருந்து கடைசி வரை படித்தேன். உடனே உங்களைப்பற்றி இந்த ஆசிரமத்தில் பல பிரசங்கங்கள் செய்தேன். அன்று முதல் இந்த ஆசிரமவாசிகள் உங்களை அறிந்து கொண்டார்கள். அந்த புத்தகத்தில் நான் முன்பு நினைத்தவைகள் எல்லாம் காணப்பட்டன. அதை நான் உபயோகப்படுத்திய விதத்திலிருந்து அதில் உங்கள் கையெழுத்தைப் பெற நான் உரிமை பெற்றிருக்கவில்லையா?"

அதுவே மகாத்மாவின் சுய சரித்திரம்.

மற்றொருவர் வந்தார். மீராபாயை பார்த்து "உங்கள் தகப்பனார் கடற்படை சேனாதிபதியாயிருந்த போது அவரிடம் 21 வருடங்கள் நான் வேலை பார்த்தேன். எனது மருமகன் தான் மகாத்மாவிற்கு ஆட்டுப்பால் கொடுத்து வருகிறார். எனக்கு ஒரு கையெழுத்து வாங்கி கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். மகாத்மாவிடம் தெரிவித்தவுடன், தம்மிடம் அழைத்து வரும்படி சொன்னார். மகாத்மாவைக் கண்டதும் "உங்கள் தூது வெற்றியடைய பிரார்த்திக்கிறேன். இந்த உலக அநுபவத்தை எவ்வளவோ பார்த்திருக்கிறேன். சென்ற யுத்தத்தில் சேவை செய்தேன். அதில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. அடுத்த யுத்தம் வந்தால் ஜெயிலுக்கு போவேனே யொழிய யுத்தத்தில் சேவை செய்ய மாட்டேன். அது ஒரு பயங்கரமான வேலை. உங்களுக்காக சண்டை போட விரும்புகிறேன். உங்கள் தூது வெற்றியடையுமாக" என்று சொன்னார்.

மகாத்மா:-உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

அவர்:—நாலு ஆண்கள், நாலு பெண்கள்.

மகாத்மா:—"எனக்கு நாலு ஆண்கள். ஆகவே உம்மோடு பாதி தூரம் என்றால் போட்டிபோட முடியும்." இதைக் கேட்டு எல்லாரும் சிரித்தனர்.

# கோமாளியும், மகாத்மாவும்

(மகாதேவ தேசாய்)

சென்ற பல வருஷங்களாக மகாத்மாவுக்கு வேலை அதிகம். அவரைப்பற்றி மகாத்மாவிடம் சொன்னவுடன் அவரும் சம்மதித்தார். இருவரும் டாக்டர் காட்டியால் என்ற இந்திய டாக்டர் பங்களாவில் சந்தித்தார்கள். மகாத்மா அவரைப்பற்றி கேள்விப்படாவிட்டாலும், அவர் மகாத்மாவின் ராட்டினத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். இருவரும் சந்தித்ததும், "காந்திஜி இயந்திரங்களை வெறுக்க காரணமென்ன ?" என்று கேட்டார். இக்கேள்வி மகாத்மாவிற்கு சந்தோஷத்தை அளித்தது. மகாத்மா இந்தியாவில் விவசாயிகள் 6 மாதம் வேலையில்லாமல் இருப்பதையும், அவர்களுக்கு உபதொழில் வேண்டிய அவசியத்தையும், அதற்காக ராட்டின இயக்கம் ஏற்பட்டதையும் தெளிவாய் எடுத்துரைத்தார்.

சாப்ளின் :—அப்படியானால் துணிக்குமட்டுந்தான் நீங்கள் இயந்திரத்தை வெறுக்கிறீர்கள் ?

காந்திஜி :—ஆம்.

மகாத்மா :—உடையும், உணவும் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாடும் தானே செய்துகொள்ள வேண்டும். நாங்கள் முன்பு அப்படித்தான் இருந்தோம். அதையே திரும்ப பெற விரும்புகிறோம். இங்கிலாந்து ஏராளமாய் உற்பத்தி செய்வதால், வெளி நாடுகளில் விற்க வழி தேடுகிறது. அதையே கொள்ளை என்று நாங்கள் கூறுகிறோம். அம்மாதிரி நிலைமையில் இங்கிலாந்து இருப்பது உலகத்திற்கே ஆபத்து. இங்கிலாந்துக்கே அப்படியானால், ஏராளமான ஜனத்தொகையுள்ள இந்தியா இயந்திரங்களைக் கொண்டு அமோக உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் எவ்வளவு கெடுதல் ஏற்படும்?

சார்லி சாப்ளின் மகாத்மாவின் வாதத்தை சுலபமாய் அறிந்துகொண்டார். சாப்ளின்:—சரி, ரஷியாவைப் போல உங்கள் நாட்டிலும் சமபாக சொத்து கிடைத்து, இயந்திரங்களைக் கொண்டு உங்கள் நாட்டிற்கு தேவையானவைகளை உற்பத்தி செய்து, தொழிலாளருக்கு குறைந்த வேலையும், அதிக ஓய்வும் கொடுத்தால் நீங்கள் சம்மதிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மகாத்மா:—நிச்சயமாக.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras.

Koviloor Digital Library

Regd. No. M. 2677.


விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும். | உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½. | ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 15உ, பிரஜோற்பத்தி புரட்டாசிமீ 29உ வியாழக்கிழமை || இதழ் 39

# அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்.




குழந்தை வண்டி கேட்கிறது. வாத்தியார் மெக்டனல்ட் மைனரிட்டி கமிட்டியில் சவுக்கடி கொடுத்தார். அகம்பாவமும், திமிரும் கொண்டு அவமரியாதையாகப் பேசினார். அழுகிற குழந்தைக்கு வாழைப் பழம் கொடுத்து லார்ட் சாங்கி சமாதானப் படுத்துகிறார். வேண்டியது சுயராஜ்யமே யொழிய வாழைப்பழமல்ல.

லார்ட் சாங்கி எவ்வளவு சமாதானப்படுத்தினாலும், மெக்டனல்ட் அகம்பாவத்தை பிரதிநிதிகள் மறந்து விட முடியுமா? மறந்தால் அவர்கள் உணர்ச்சியற்றவர்களே.

Koviloor Digital Library



## புத்தி வரவில்லையா?

முதல் மந்திரி மெக்டனல்ட் மைனரிட்டி கமிட்டியில் பேசிய பேச்சு மான முள்ளவர்களுக்கு உறைத்திருக்க வேண்டும். இந்திய சமூகத்தையே இழிவாகப் பேசினர். பிரதிநிதிகளைப் பார்த்து "யோக்கியமாய் நடவுங்கள்" என்றார். "உங்களுக்குள் சமூக ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் சுயராஜ்யம் எப்படி கேட்க முடியும்?" என்று கத்தினர். சுருக்கமாய் சொன்னால், பிரதிநிதிகளை அவர் மதிக்கவில்லை. அகம்பாவமும், திமிரும் கொண்டு அயோக்கியத்தனமாய் பேசினர். அவர் பேச்சைக் கேட்டபின்பாவது வகுப்புவாதிகளுக்கு புத்தி வந்திருக்க வேண்டும். அப்புறமும் வரவில்லையென்றால், அவர்களுக்கு கடவுள்தான் கண் திறக்க வேண்டும். இனி மனிதப் பிரயத்தனத்தால் அவர்களை திருப்ப முடியாது.

மெக்டனல்ட் திமிர் பிடித்த பேச்சை மழுப்ப லார்ட் சாங்கி ஐக்கிய ஆட்சி கமிட்டியில் முயற்சித்தார். சாந்தமாய் குளிர்ந்த வார்த்தைகளில் பேசி பிரதிநிதிகளுக்கு ஊக்கமூட்ட முயன்றார். லார்ட் சாங்கி நல்லவரா யிருக்கலாம். அவர் உண்மையாகவே பேசி யிருக்கலாம். இருந்தாலும், மெக்டனல்ட் முதல் மந்திரி. அவருக்கு மிஞ்சி லார்ட் சாங்கியால் எதுவும் செய்துவிட முடியாது. ஆகவே லார்ட் சாங்கி குளிர்ந்த வார்த்தைகளைக் கண்டு ஏமாந்துபோகவேண்டாம். அவர் பேச்சு அடிபட்டு அழும் குழந்தைக்கு வாழைப் பழம் கொடுத்து ஏமாற்ற முயற்சிப்பதைப் போலவே இருக்கிறது. வேண்டியது சுயராஜ்யமே யொழிய வாழைப்பழமல்ல.

மகாத்மா காந்தி ஆரம்ப முதலே ஒரே ஒரு விஷயத்தை வற்புறுத்தி வருகிறார். "நீ என்ன கொடுக்கப் போகிறாய்? அதை முதலில் சொல்லு" என்பதே மகாத்மா பிரிட்டனை வற்புறுத்தும் விஷயமாகும். அவ்விஷயம் எவ்வளவு முக்கியமானது என்பது முதல் மந்திரிபேச்சால் மறுபடியும் உறுதியாயிற்று. அன்று மைனரிட்டி கமிட்டியில் முதல் மந்திரி பேசிய போது, "நீங்கள் சமாசத்திற்கு வராவிட்டால், நாங்கள் நினைத்திருக்கிறபடி இந்திய சர்க்காரில் சீர்திருத்தம் செய்யப் போகிறோம்" என்று சொன்னர். சுயராஜ்ய பேச்சை காணோம். குடியேற்ற ஆட்சி நாமத்தையும் காணோம். முதல் மந்திரி "சீர்திருத்தம்" கொடுக்கப் போகிறாராம். மெக்டனல்ட் தம்மை அறியாமலே உண்மையை கக்கிவிட்டார். இந்த "சீர்திருத்த"த்திற்காகவா பிரதிநிதிகள் போயிருக்கிறார்கள்? இதற்குத்தானா இவ்வளவு ஆர்ப்பாட்டம்? கொடுக்கப்போவது வெறும் "சீர்திருத்த"மானால், பிரதிநிதிகள் இப்பொழுதே மகா நாட்டிற்கு எள்ளும் தண்ணீரும் சேர்த்து வார்த்துவிட்டு ஊர் திரும்புவது மிகவும் விசேஷம். இதற்காகத் தான் பிரிட்டிஷ் சர்க்கார் கொள்கையை முதலில் தெரிவிக்க வேண்டுமென்று மகாத்மா வற்புறுத்தி வந்தார். குட்டு வெளிப்பட்டது.

வகுப்புவாதிகளே, இன்னம் புத்தி வரவில்லையா? லண்டனுக்கு சென்று உங்கள் வீர தீரத்தை காட்டுவது அவமானமாயில்லையா? ஒன்று வகுப்பு வாதத்தை விட்டுத் தொலையுங்கள். அல்லது முதலில் சுயராஜ்யத்தை வாங்கிக் கொண்டு அப்புறம் உங்கள் வழக்குகளை தீர்த்துக் கொள்ளுங்கள். வேறு எதற்காகவும் அல்லாவிட்டாலும், இந்தியாவில் பிறந்து இந்நாடு உங்களை சுமந்து கொண்டிருப்பதற்காகவாவது இந்த நல்ல புத்தியை கைக் கொள்ளுங்கள்.

## லண்டனில் மகாத்மா

ஓய்வு நாட்களாகிய சனி, ஞாயிற்றுக் கிழமைகளை காந்திஜி பிரிட்டனில் புகழ்பெற்ற சிசெஸ்டர் நகரிலுள்ள பிஷப் அரண்மனையில் கழித்தார்.

சர். பிரபா சங்கர பட்டாணி, ஸ்ரீமதி. மூரீல் லெஸ்ட்டர், ஸ்ரீ. தேவதாஸ் காந்தி, ஸ்ரீமதி. மீரா பாய், ஸ்ரீ. மகாதேவ தேசாய், பியாரிலால் இவர்களுடன் லண்டனிலிருந்து காந்திஜி 10உ மாலை சிசெஸ்டர் வந்து சேர்ந்தார். காந்திஜி, பிஷப் அரண்மனையில், பிஷப்பின் விருந்தினராகத் தங்கினர்.

சர். பிரபாசங்கர பட்டாணி டீன் (பாதிரி) காம்பெல்லின் ஜாகையில் தங்கியுள்ளார். பிஷப் சமாதானம், கிறிஸ்துவ ஸ்தாபனங்களுள் ஒற்றுமை, சர்வதேச சங்கம், உலக தேச மக்களிடையே பரஸ்பர பாவம் உண்டாகச் செய்வது இவைகளில் அதிக சிரத்தை கொண்டவர். எனவே பிஷப் காந்திஜியின் கொள்கையில் அதிக பற்றுதலும், ஊக்கமும் காட்டி வருகிறார்.

Koviloor Digital Library



# 18 பென்சால் வந்த வினை.

(ஸ்ரீ ஜமால்முகமது சாகிப்.)

16 பென்ஸ் விகிதம் இந்தியாவில் வெகு காலமாய் இருக்கிறது. 1919ல் பாபிங்டன் ஸ்மித் கமிட்டியை நியமித்தார்கள். அது 24 பென்ஸ் விகிதம் ஏற்படுத்தியது. அக்கமிட்டி சிபார்சுப்படி இந்திய சர்க்கார் சீமை உண்டியல்களை விற்பனை செய்ததால் 45 கோடி ரூபாய் நஷ்டமடைந்தது. ஆனால் இந்திய ஜனங்களோ சுமார் ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டமடைந்தார்கள். 24 பென்ஸ் விகிதம் சட்டத்தில் இருந்தபோதிலும் 1920 ஆகஸ்ட் மாதம் சர்க்கார் அதை கை நழுவவிட நேரிட்டது. 1924ல் சர்க்கார் மறுபடியும் குயுக்தி செய்து 18 பென்ஸ் விகிதத்தை ஏற்படுத்தியது. பின்னால் ஹில்டன் யங் கமிட்டி வந்தது. அக்கமிட்டி நமது வெள்ளி ரூபாயை பவுன் மதிப்போடு இணைக்கக் கூடாதென்றும், தங்கத்துடனேயே இணைக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்தது. 1927ல் 18 பென்ஸ் தங்கத்தோடு வெள்ளியை இணைக்க சட்டசபையில் மசோதா கொண்டுவந்தார்கள். ஜனப்பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். ஆனால் சர்க்கார் அங்கத்தினர்கள், நியமன அங்கத்தினர்கள் ஆகிய 50 பேர்களின் தயவைக்கொண்டு மசோதாவை சட்டமாக்கினார்கள். அச்சமயம் சர்க்காருக்கு 3 ஓட்டுகளே அதிகமாய் கிடைத்தன.

இங்கிலாந்து செப்டம்பர் மாதம் 19வ தங்க மதிப்பு வேண்டாமென்று தள்ளியது. இந்திய சர்க்காருக்கு 20வ அச் செய்தி கிடைத்திருக்க வேண்டும். 21வ இந்தியாவிலும் தங்க விற்பனையை நிறுத்த வைசிராய் ஒரு அவசரச் சட்டம் செய்தார். இந்தியாவிலுள்ள நிலைமையையும் ஜனங்களின் கஷ்டத்தையும் அறிந்து சர்க்கார் நியாயமாய் செய்ய வேண்டியதைச் செய்தார்கள். ஆனால் இந்தியா மந்திரி யாரையும் கேட்காமல் பவுன் மதிப்போடு வெள்ளியை பிணைத்தார். இதனால் முதலில் வைசிராய் பிறப்பித்த அவசரச் சட்டத்தை ரத்துச் செய்ய நேரிட்டது. 18 பென்ஸ் விகிதம் போலித்தனமானது. அதை தொலைத்தால் இங்கேயுள்ள விவசாயப் பொருள்கள் விலை கூடும். ஆனால் சர்க்கார் மேலும் மேலும் முட்டாள் தனம் செய்வதை விடவில்லை. சர்க்கார் இந்த வழிகளில் பரிகாரம் தேடாமல், வரியைக் கூட்டிக் கொண்டு போகிறார்கள். இது மிகவும் அக்கிரமம்.

# கான்பூர் திமிங்கலம்

வைசிராய் மாதம் 21 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார். அவர்தான் இந்தியாவில் அதிகச் சம்பளம் வாங்குகிறார் என்று நினைக்க வேண்டாம். கான்பூரில் ஒரு திமிங்கலம் இருக்கிறது. அதுதான் கான்பூர் சதியாலோசனை வழக்கில் சர்க்காருக்கு வக்கீல். வெள்ளை திமிங்கலம். அது மாதம் 34 ஆயிரம் ரூபாயை சர்க்காரிடமிருந்து வாங்கி விழுங்குகிறதாம். இவ்வளவு பெரிய திமிங்கலத்தைப் போல வேறு எங்காவது நீங்கள் கேள்விப் பட்டதுண்டா? ஆற்றில் போகிற தண்ணீரை, ஐயா குடி, அப்பா குடி என்று ஒருவன் சொன்னானாம். அதைப்போல இந்தக் கதை இருக்கிறது. இந்தியரின் பணம் இருக்கிறது. வெள்ளையரின் கை இருக்கிறது. பின்னால் கான்பூர் திமிங்கலம் ஏன் விழுங்காது? இது வரை அந்த வக்கீல் திமிங்கலம் 4 லட்சம் ரூபாய் விழுங்கி யிருக்கிறது. இந்த வழக்கு சமீபத்தில் முடிவதாயில்லை. ஆகவே இன்னம் எத்தனை லட்சம் விழுங்கப் போகிறதோ யாருக்குத் தெரியும்? இந்தியாவில் இது வரை நடைபெற்ற ராஜீய வழக்குகளில், இதைப்போல எந்த வக்கீலும் பணத்தை விழுங்கியதில்லை. இந்த வழக்கிற்கு மொத்தம் 50 லட்சம் ரூபாய் செலவாகுமாம். இந்தப் பணம் ஐக்கிய மாகாண சர்க்கார் தலையில் விடியும். அது எங்கிருந்து கொடுக்கப் போகிறது? ஏழைகள் வரிப்பணத்திலிருந்து கொடுக்கப் போகிறது. வரி கொடுக்க முடியாமல் திண்டாடும் ஐக்கியமாகாண விவசாயிகளுக்கு இந்தச் சனியனும் பிடித்திருக்கிறது. போல்ஷவிக்கம் இந்தியாவில் பரவி விடவில்லை. மீரத் வழக்கு அதை நிறுத்திவிடவில்லை. போல்ஷவிச அவசரச்சட்டம் 6 மாதகாலம் இருந்தும் ஒரு மூக்கறுந்த கழுதை கூட அச்சட்டத்திற்கு கிடைக்கவில்லை. இது ஒன்றே இந்தியாவில் போல்ஷவிசம் இல்லையென்பதை காட்டப் போதுமானது. இந்த மீரத் வழக்கிற்கு அநியாயமாக 50 லட்சத்தை கொட்டவேண்டுமா? மாதம் 4 ரூபாய் கூட சராசரி வரும்படியில்லாமல் திண்டாடும் இந்நாட்டில் ஒரு வெள்ளை வக்கீலுக்கு மாதம் 34 ஆயிரம் ரூபாய் கொடுப்பதென்றால் அக்கிரமத்தை தவிர வேறென்ன?

Koviloor Digital Library



# அன்பு அவதார மகாத்மா ::

ஸ்ரீ. ஆண்டுரூஸ்.

காந்திஜி குழந்தைகளின் அன்பர். அதனால் குழந்தைகள் அவரைக் காண பிரியப்படுகின்றனர். சாந்தமூர்த்தியான அவர் குழந்தைகள் பரிகாசம் செய்தால் மிகுந்த சந்தோஷமடைகிறார். இதனை நான் அவர் தென் ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் இருக்கும்போது என் கண்ணால் கண்டிருக்கிறேன். அவர் நகைப்பு பிறர் மனதைக் கவரச் செய்வதாக இருக்கிறது. அவர் தனக்குக் கஷ்டமான சமயங்களிலெல்லாம் புன்னகை புரிகிறார். அவர் சிரமத்தை பிறர் அறியா வண்ணம் அவருடைய புன் சிரிப்பு மறைத்து விடுகிறது. அவரை தரிசிக்கச் சென்று மீண்டு வருவோர் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்கள் யாவரும் முகமலர்ச்சி அடைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். காந்திஜி உண்மையே உருவான சத்திய சந்தர். அவர் ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதாக வாக்குறுதி கொடுத்தால் அதனை எவ்விதத்திலும் சாதிப்பவர் என்பதை அவரை நன்குணர்ந்தோர் யாவரும் அறிவர். எனக்கு அவரிடத்தில் உள்ள அனுபவத்திலிருந்து அவர் தன் சொல்தவறி நடந்ததைக் கண்டதில்லை. தன் வார்த்தையைக் காப்பாற்றவேண்டி பல இடுக்கண்களுக்கு அவர் ஆளாகி இருப்பதை அறிவேன். அவர் லார்டு இர்வினிடம் செய்து கொண்ட டில்லி ஒப்பந்தப்படி நடக்கவில்லை என்பதாகப் புகார் கூறப்படுகிறது. இதனை நான் நம்பமாட்டேன். இத்தகைய புகாரை லார்ட் இர்வின் நம்பமாட்டாரென நினைக்கிறேன். பொறுப்புள்ள ஸ்தானத்திலுள்ளவர்கள் இத்தகைய புகார்கள் செய்வதாகத் தெரியவில்லை. உண்மையைக் கூறுமிடத்து மகாத்மாஜி டில்லி உடன்படிக்கையை கிரியாம்சத்தில் நிறைவேற்றி வைக்க உள்ளும் புறமும் ஒன்றாகப் பாடுபட்டுள்ளார். அவர் ஒரு சமயம், 'நான் லார்டு இர்வினுக்கு வாக்களித்துவிட்டேன், அதனைக் காப்பாற்ற என்னால் இயன்றவரையில் பாடுபடுவேன்,' என்று கூறி இருக்கிறார். காந்திஜி ஓர் வக்கீலாக இருந்தவராகையால் அதற்கேற்ற வண்ணம் விசேஷமான திறமை வாய்ந்தவராக இருக்கிறார். அதனால்தான் அவர் எழுதுவதில் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார். எதிலாவது கையொப்பமிட நேரிட்டால் யோசனை செய்து கையை நாட்டுகிறார். பொதுக் கூட்டங்களில் வெகு நிதானமாக பேசுகிறார். சர்வ சாதாரணமான காரியங்களில்கூட அவர் சடுதியில் முடிவு கூறாமலும் விட்டுக் கொடுக்காமலும் இருப்பதிலிருந்து அவரை சிலர் தந்திரவாதி என்றும், வஞ்சகர் என்றும் கருதுகின்றனர். இது தவறுதலான அபிப்பிராயமாகும். அவரை தந்திரவாதி என்றோ அல்லது வஞ்சகர் என்றோ அழைப்பதைக் காட்டிலும் நிஷ்களங்கமற்ற எச்சரிக்கையாகவுள்ள காரியவாதி என அழைப்பது பொருத்தமுடையதாகும். ஏனெனில், அவர் சாவதானமாக ஓர் முடிவு கட்டிவிட்டால் அதன்படி கடைசி வரையில் நடக்கிறார். இத்தகைய அரிய குணத்தை உண்மையான ஆங்கில ரத்தம் ஓடும்படியான எம்மனிதனும் பாராட்டுவான். காந்திஜியின் குணத்திற்கும் கிராமவாசிகளுக்கும் மிகவும் பொருத்தமிருக்கிறபடியால் அவர் கிராமவாசிகளின் தோழனானார். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அவர் கிராமத்திலேயே கிராமவாசிகள் போன்று வாழ்க்கையை நடத்தி வருகிறார். அவர் தனது உடையிலும் செயலிலும் கிராமவாசியாகவே விளங்குகிறார்.

அவர்களை நன்குணர்ந்த அவர் தன்னை அவர்களில் ஒருவராகப் பாவித்து அவர்களின் சுகதுக்கங்களைப் பங்கெடுத்துக் கொள்ளுகிறார். இதனாலன்றோ அவர்கள் காந்திஜியைத் தங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவந்த வீரன் என மதிக்கின்றனர். அவர்மீது அவர்களுக்குள்ள அளவு கடந்த அன்பும் மரியாதையும் நாடோறும் குறைவின்றி வளர்பிறைச் சந்திரனைப்போல் பெருகி வருகிறது. கிராம வாசத்தின் பயனால் அவருக்குள்ள சாவதான புத்தி ஸ்திரமானதாகி அவருடைய ஆணித்தரமான முடிவுகளுக்கு ஆக்கமளித்தது. அவரின் குணத்தை இங்கிலாந்தின் வடபாகத்திலுள்ள ஆங்கிலேயருக்கு ஒப்பிடலாம். அதனால்தான் லார்ட் இர்வின் காந்திஜியை நன்குணர்ந்தார். அவரை கிராமவாசிகளின் பிரதிநிதி என அங்கீகாரஞ் செய்தார்.

---

மகாத்மா காந்தி மீது எவ்வளவு தூரம் நம்பிக்கை அதிகமாகிறதோ, அதைப் பொறுத்தே இந்தியாவின் நல்விதி இருக்கிறது.—சர். பட்டாணி.

Koviloor Digital Library





மகாத்மா லண்டன் மகாநாட்டில் பேசிவிட்டு வெளியே வரும்போது எடுத்த படம். முதல் வரிசையில் ஸ்ரீமதி. சரோஜனி நாயுடு, மகாத்மா காந்தி, ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார் முதலியவர்களும் பின் வரிசையில் சர். பிரபாசங்கர பட்டாணி, மாளவியா குமாரர், ஸ்ரீ. மகாதேவ தேசாய் (மகாத்மா காரியதரிசி) முதலியவர்க ளிருப்பதையும் காணலாம்.—தமிழ் நாடு.

கடவுள் இந்தியாவுக்கு காந்திஜியை அளித்தருளி இருக்கிறார். ஆகையால் அவர் காந்திஜிக்கு ஏற்றவாறு இந்தியாவைச் செய்து வைப்பாராக.—ஆலிவர் பால்டுவின்.

Koviloor Digital Library



## யாருக்கு யார் தலைவர்கள்?

வட்டமேஜை மகாநாடு பிரதிநிதித்துவம் உள்ள தல்ல என்று மகாத்மா சொன்னார். அதை சர். ஷாபியும், டாக்டர் அம்பேத்காரும் மறுத்தார்கள். டாக்டர் அம்பேத்கார் தங்கள் பிரதிநிதி யல்ல வென்றும், தங்களுக்கு தனித் தொகுதி வேண்டிய தில்லை யென்றும் இந்தியாவிலிருந்து தீண்டாதார் சங்கத்தார்கள் சீமைக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள். சர். ஷாபிக்கு ஸ்ரீ. டி. ஏ. கே. ஷெர்வானி சரியான பதில் கொடுத்திருக்கிறார். ஸ்ரீ. ஷெர்வானி தேசிய முஸ்லிம் கட்சியைச் சேர்ந்தவர். அவர் சொல்லுகிறார்:—

சர். ஷாபியே, உம்மிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். உமது முஸ்லிம் லீக்கிலும், கிலாபத் சபையிலும், அகில இந்திய முஸ்லிம் மகாநாட்டு சபையிலும் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர் இந்த வருஷத்திற்கு சந்தா செலுத்தி யிருக்கிறார்கள்? உங்கள் சங்கங்கள் எல்லா வற்றையும் சேர்த்து அங்கத்தினர்களை எண்ணினாலும், அவற்றைவிட ஆயிரம் மடங்கு அதிகமான முஸ்லிம்கள் காங்கிரஸ் சபையில் சேர்ந்திருக்கிறார்கள். தேசிய முஸ்லிம் சபைக்கு மட்டும் இந்தியா முழுவதிலும் 80 கிளைச் சபைகள் இருக்கின்றன. உங்கள் முஸ்லிம் லீக், கிலாபத் சபை, அகில இந்திய முஸ்லிம் சபைக்கு எத்தனை கிளைச் சபைகள் இருக்கின்றன? சர். ஷாபியும், ஸ்ரீ. ஜின்னாவும், பொதுத் தேர்தல் தொகுதியே முஸ்லிம்களுக்கு நல்லதென்றும் முஸ்லிம்கள் மைனாரிட்டியாயுள்ள மாகாணங்களில் அதிகஸ்தானம் கேட்டு, மெஜாரிட்டி மாகாணங்களை கெடுத்துக் கொள்ளக் கூடாதென்றும் பல தடவைகளில் தனியாக பேசிக்கொண்டிருக்கும் போது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தனித்தேர்தல் விஷம் என்று ஸ்ரீ. ஜின்னா ஒரு தடவை பகிரங்கமாய் சொன்னார். இன்று அதே விஷத்தை முஸ்லிம்களுக்கு ஊட்ட ஸ்ரீ. ஜின்னா முனைந்து நிற்கிறார்.

ஆகாகான் முஸ்லிம்களுக்கு தலைவராக வட்டமேஜை மகாநாட்டில் இலங்குகிறார். அவருக்கு தற்கால முஸ்லிம் இந்தியாவைப்பற்றி என்ன தெரியும்? இந்தியாவிற்கு அவர் வருகிறதே அபூர்வம். வந்தாலும் பம்பாயில் 2 நாளும் டெல்லியில் 2 நாளும் தங்கிவிட்டு போய்விடுகிறார்.

மௌலானா ஷவுகத் அலி தம்முடைய ராஜ பக்திக்கு அத்தாட்சியா யிருக்கும்படி லார்ட் லாயிடை கேட்கும் நிலைமைக்கு வந்துவிட்டார். மௌலானா காங்கிரசிற்கு விரோதமாக பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால் சந்தர்ப்பம் வரும்போது, வேறு எந்த சமூகத்திற்கும் முஸ்லிம் சமூகம் தேசபக்தியில் குறைந்ததல்ல என்பதை உலகத்திற்கு காட்டுவது நிச்சயம்."

இவற்றை படித்த பின்பு வட்டமேஜை மகாநாட்டில் கூடியிருப்பவர்கள் யாருடைய பிரதிநிதிகள்? அவர்கள் யாருக்கு தலைவர்கள்? என்ற சந்தேகம் நண்பர்களுக்கு தோன்றியிருக்கும். அதுதான் வட்டமேஜை மகாநாட்டின் அதிசயம்.

## பசி வந்தால் பத்தும் பறந்துபோம்!

பசிவந்தால் பத்தும் பறந்து போம் என்று ஒரு கவிராயர் சொன்னார். உபதேசங்களும், நீதிகளும் யாரும் சொல்லுவது எளிது. காரியத்தில் நடத்திக் காண்பிக்க நேரும்போதுதான் அவர்கள் யோக்கியதை தெரியும்.. ஜப்பான் சீனாவில் மஞ்சூரியா மீது படை யெடுத்திருப்பதை நண்பர்கள் அறிவார்கள். இரண்டு நாடுகளும் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினர்கள். யுத்தத்தை கையாடுவதில்லை யென்ற கெல்லாக் உடன்படிக்கையில் கையெழுத்துப் போட்ட நாடுகள். அப்படி யிருந்தும் ஒன்றை யொன்று குடுமியை பிடித்துக் கொண்டு நிற்கின்றன. இவைப் பற்றி சர்வ தேசசங்கம் யோசிக்கப் போகிறது. அது யோசித்து முடிவதற்குள் மஞ்சூரியாவிற்கு கருமாதியாய் விடுமோ என்று நாம் பயப்படுகிறோம். இம்மாதிரி மஞ்சூரியாமீது படையெடுக்க காரணமென்ன? இந்த ரகசியம் இப்பொழுது வெளியாயிற்று. சீனாவிற்கு ஜப்பான் அனுப்பிய கடைசி கடிதத்தில் இதை குறிப்பிட்டிருக்கிறார்கள். மஞ்சூரியாவில் ஜப்பானுக்கு விரோதமாக சீனர்கள் பிரசாரம் செய்கிறார்களாம். ஜப்பான் சாக்குகளை பகிஷ்காரம் செய்கிறார்களாம். சரக்குகளுக்கு ஆர்டர் கொடுத்தவைகளை ரத்துச் செய்கிறார்களாம். இவற்றை சீன சர்க்கார் தடுக்காத படியால் படையெடுத்தார்களாம். ஜப்பான் வியாபாரத்தில் சீனா மண்

(311ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# கிரகலக்ஷ்மி :: (மகாத்மா காந்தி)

(பெண்கள் சுதந்திரத்தைப்பற்றி பலமாய் இக் காலம் பேசப்படுகிறது. இந்த சுதந்திரத்திற்கு வெவ்வேறு பொருள் கூறுகிறார்கள். இச்சமயம் மகாத்மாவின் அபிப்பிராயத்தை வெளியிடுவது அவசியமாகும். லண்டன் டெயிலி ஹெரால்ட் பத்திரிகையில் மகாத்மா கீழே கண்ட கட்டுரையை எழுதியிருக்கிறார்.)

'பெண்கள் சமத்துவ மடையவேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. என தேசத்தில் பெண்கள் தாழ்ந்த நிலைமையிலேயே யிருக்கிறார்கள் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். வெளிக்குத்தான் அவ்விதம் தோன்றும்; உண்மையாக அவர்களுடைய செல்வாக்கு என்றுமே பலமாகத்தா னிருக்கிறது.

"எல்லா காரியாலயங்கள் உத்தியோகங்கள், தொழில்கள் முதலியவைகளிலெல்லாம் பெண்களுக்குத் தாராளமாக வேலை கொடுக்க வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம். அதில்லாவிடில் உண்மையான சமத்துவம் ஏற்பட வழியில்லை. ஆனால் பெண்கள் கிரக லக்ஷ்மிகளாய் வீட்டிற்கு அரசிகளாய் விளங்க வேண்டுமென்பதற்காகப் பாடுபட வேண்டுமென்பதே எனது கோரிக்கை. இந்த நிலைமையிலிருந்து பெண்கள் கீழே தள்ளப்படாமல் எப்பொழுதும் அவர்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு உரிமையில்லா வீடு பாழான வீடாகவே இருக்கும். மனைவி ஒருத்தி, டைப் அடிக்கும் பெண்ணாக மற்றொருவரிடம் வேலை பார்த்துக்கொண்டு, வீட்டிலிருப்பதே துர்லபமா யிருக்கும் வீட்டில் இன்ப நிலையிருக்குமென்று நினைப்பதே அசாத்தியம். குழந்தைகளைப் பரிபாலிப்பது யார்? பரம ஏழை வீடாயிருந்தபோதிலும் கூடிக்குலாவும் குழந்தைகளாகிய அழகிய மணிகள் இல்லாவிடில் அந்த வீட்டில் பிரகாசந்தான் ஏது? புத்திசாலியா யிருக்கும் ஒரு பெண், வெளியில் வேலை பார்த்து, ஏராளமாகச் சம்பாதித்து அந்த சம்பாத்தியத்தைகொண்டு தாராளமாகக் குழந்தைகளுக்குச் செலவு செய்து, பராமரிப்பதற்கும் ஒருத்தியை வீட்டில் நியமித்து விட்டால் அப்பொழுது என்ன தவறு என்று கேட்கலாம். இவ்விதம் செய்யக் கூடியவர்கள் சில ரிருக்கலாம். ஏதோ ஒரு சில பெண்கள் அசாத்தியமான காரியங்களையும் சாத்தியமாக்கிவிடக் கூடும். இதைப் பொதுவாக நாம் வைத்துக்கொள்ளக் கூடாது. பொதுவாக வீட்டில் தந்தைதான் சம்பாதித்துப் போடுபவனாயிருக்க வேண்டும். தனக்கு சந்தோஷமான குடும்பமொன்றிருக்கிறதென்பதையும், குழந்தைகளை ஒழுங்காக கவனிப்பதற்கு தாயே வீட்டிலிருக்க வேண்டியது அவசியமென்றும் ஒருவனுக்குத் தோன்றுமாகில், அவன் நன்றாக வேலை செய்து சம்பாதிப்பான். குழந்தைகளை வளர்த்து நல்ல குணசாலிகளாக்க வேண்டிய பொறுப்பு பெண்களைச் சார்ந்ததாகும். இதுவே சிறந்த பணியுமாகும். ஆண்களோடு சமத்துவம் பெறுவது எல்லா பெண்களுக்கு மிருக்கவேண்டும் என்றும் கருதுகின்றேன். குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பை தாயே கவனிக்கா திருந்துவிடில் அக்குழந்தைகள் அடையும் கஷ்டங்களைப் பற்றிக் கேட்கவேண்டியதே யில்லை. எந்த ஜாதியாராயிருந்தாலும் எந்த தேசத்தாராயிருந்தாலும் குடும்ப வாழ்க்கையே மிகச் சிறந்ததாகும். அதன் புனிதத் தன்மை என்றும் மாறாதிருக்க வேண்டும். ஒரு தேச மக்களின் க்ஷேமமே அதைப் பொறுத்ததாகத்தா னிருக்கிறது.

---

(310ம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கவே ஜப்பானுக்கு கோபம் வந்துவிட்டது. உடனே துருப்புகளை கூட்டிக்கொண்டு படையெடுத்து விட்டது. சமாதான உடன் படிக்கைகளெல்லாம் குப்பைத் தொட்டிக்கு போய் விட்டன. பசி வந்து விட்டால் பத்தும் பறந்து போம் என்பது உண்மையாயிற்று. இது யோக்கியமான செய்கையா என்று ஜப்பானை கேட்கிறோம். ஜப்பான் சரக்குகளை வாங்கவேண்டுமென்பது சீனருக்கு வேதவிதியா? ஒரு நாட்டு சாமானை மற்றொரு நாட்டார் வாங்காவிட்டால் அது குற்றமா? அதற்காக அவர்கள்மீது துருப்புகளை ஏவுவதும், ஆகாயக்கப்பலிலிருந்து குண்டு போடுவதும் நியாயமா? இதுதான் நாகரிகமா? சீனா இளைத்த நாடாயிருப்பதால் ஜப்பான் படை யெடுத்தது. பிரிட்டன் மீதோ அமெரிக்கா மீதோ அப்படி படையெடுக்க துணியுமா?

# மலை தூக்கி மகாதேவன்

ஒரு மலை யடிவாரத்தில் ஒரு கிராமம் மற்றொரு பக்கம் சமுத்திரம். அந்தக் கிராம ஜனங்கள் சாமான்கள் வாங்க பக்கத்து பட்டணத்திற்கு போக வேண்டுமானால் மலை மீது ஏறித்தான் போக வேண்டும். இது கிராம ஜனங்களுக்கு பெரிய கஷ்டமா யிருந்தது. இரவு காலத்தில் அதைவிட அதிக கஷ்டம். இந்த தொல்லையைப் போக்க ஜனங்கள் விசாரப் பட்டுக் கொண்டிருந்தார்கள். இச்சமயம் ஒருவன் கிராமத்திற்கு வந்தான். "இதுதானா பெரிய காரியம்?" என்றான். "ஒரு வருஷமும் ஒரு நாளும் கொடுங்கள். அப்புறம் இந்த மலை எங்கிருக்கிற தென்று பாருங்கள்" என்று ஆர்ப்பாட்டஞ் செய்தான். "ஆனால் ஒரு விஷயம். அதற்கிடையில் இந்த மலையைத் தூக்க எனக்கு பலம் கொடுக்கும் ஆகாரங்களை ஊட்டுங்கள்" என்றான். கிராமத்தாருக்கு சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. தங்களிடமுள்ள உயர்ந்த ஆகாரங்களை யெல்லாம் படைத்தார்கள். ஒருவருக் கொருவர் போட்டி. போட்டார்கள். ஆனால் இரண்டொரு கிழடர்கள் மட்டும் இவற்றை யெல்லாம் பார்த்து சிரித்தார்கள்.

ஒரு வருஷம் ஆயிற்று. ஒரு நாளும் ஆயிற்று. ஜனங்கள் கூடினார்கள். மலையைப் பார்த்தார்கள். அப்படியே இருக்கிறது. பயில்வானைக் கண்டு கேட்டார்கள். பயில்வான் மீசையை முறுக்கினான். புஜத்தை தட்டினான். உடம்பை நிமிர்த்து ஜோராக நின்று கொண்டு "சரி. இதோ பாருங்கள். ஒரு வினாடியில் என்ன நடக்கிற தென்று கவனியுங்கள்" என்றான்.

"இந்த மலையை பெயர்த்து கடலில் எறிய வேண்டும். அவ்வளவுதானே?" என்று கேட்டான். ஜனங்கள் "ஆம்" என்றார்கள். அடுத்த வினாடி நடக்கப் போகும் அதிசயத்தை பார்க்க கண் இமை மூடாமல் விழித்துக் கொண்டு நின்றார்கள்.

பயில்வான்:—சரி. இதோ நான் தயார். நீங்கள் எல்லாரும் இந்த மலையின் அடிவாரத்திற்கு போங்கள். ஒரே மூச்சில் தூக்கி என் தலையில் வையுங்கள். அடுத்த வினாடியில் அந்த ஆழமான கடலில் அமுக்கடித்து விடுகிறேன். அப்புறம் உங்கள் கஷ்டம் தொலைந்து போகும்.

இதைக் கேட்டதும் ஜனங்கள் விழித்தார்கள். முன்னால் சிரித்த கிழவர்கள் மட்டும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

வருப்புவாத மலை இந்தியாவிற்கு பெரிய இடையூறாயிருக்கிறது. அதைத் தொலைக்க இந்தியா வெகு கவலைப்படுகிறது. வாய்வீச்சு பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் அந்த மலையைப் போக்க மகாநாடு கூட்டினார்கள். மகாநாட்டில் "சொன்னபடி செய்யும்படி" பிரதிநிதிகள் கேட்டார்கள். பார்த்தார்கள் ராஜதந்திரிகள். "மலையைத் தூக்கி என் தலையில் வையுங்கள்" என்று சொல்லுகிறார்கள்.

"நீங்கள் மலையைத்தூக்கி தலையில் வைக்காவிட்டால் நான் எப்படி அதை எறிய முடியும்?" என்று பிரிட்டன் கேட்கிறது.

ஒரு வருஷமும், ஒரு நாளும் தீவனம் போட்டு இருந்ததை பறி கொடுத்த பின்புதான், மலையை தாங்கள்தான் தகர்க்க வேண்டுமே யொழிய, வாய்வீச்சுக்காரர் அல்ல வென்பதை உணர்ந்து கொண்டார்கள். இந்திய பிரதிநிதிகள் இவற்றையெல்லாம் கடந்தாய்விட்டது. ஆனால் இன்னும் அவர்கள் படிக்கவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன.

—பிரீபிரஸ் ஜர்னல்.

## லண்டனில் மகாத்மா.

சிசெஸ்டர் பிஷப் அரண்மனை மைதானத்தில் காந்திஜி 11ஆம் காலையை ஏகாந்தமாகக் கழித்தார். தீனபந்து ஆண்டுரூஸுடன் காந்திஜி அன்று மாலை போஷாருக்குச் சென்றார். "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை மாஜி ஆசிரியரான ஸ்ரீ. ஸி. பி. ஸ்காட்டுடன் சம்பாஷித்தார். சிசெஸ்டர். கிருஸ்தவாலயத்தில் நடை பெற்ற மாலை பிரார்த்தனையில், பாதிரியின் பக்கத்தில் மகாத்மா அமர்ந்து, பிரார்த்தனையில் தாமும் கலந்து கொண்டார்.

அமெரிக்க ஐக்ய மாகாணத்திற்கு காந்திஜியை வரவேற்று அழைத்துச் செல்வதற்காக அடுத்த வாரம் அமெரிக்காவிலிருந்து இந்திய சிறுமிகளிருவர் லண்டனுக்குப் புறப்படுகிறார்கள். அவர்களுள் ஸ்ரீமதி. மரியம் கோஷுக்கு வயது 7; அவளது சகோதரியான ஸ்ரீமதி. லீலாவதிக்கு வயது 4. இவ்விருவரும், அமெரிக்காவிலுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் கிளை ஸ்தாபனத் தலைவரின் புதல்விகளாவர். அவருக்கு பாஸ்போர்டு கிடைக்காததால், தமது புதல்விகளிருவரையும் மகாத்மாஜியை அமெரிக்கா அழைத்துவர அனுப்புகிறார்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677·

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 17உ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 1உ சனிக்கிழமை || இதழ் 40

## வகுப்பு துவேஷ நாசம்.




(அமிர்தத்தை எடுக்க திருப்பாற் கடலை கடைந்தார்கள். வாசுகி என்ற சர்ப்பத்தைக் கொண்டு மகா மேரு பர்வதத்தால் கடையும் போது சர்ப்பம் ஆலகால விஷத்தை கக்கிற்றும். விஷம் உலகத்தையே தகித்து விடுமாகையால் பரம சிவம் அதை எடுத்து விழுங்கி உலகத்தை காப்பாற்றினராம்)

வட்டமேஜை மகா நாட்டில் பிரதிநிதிகள் வகுப்புவாத விஷத்தை கக்கினர்கள். மகாத்மா பொறுமை காட்டாம லிருந்தால் மகாநாடு சுக்கல் சுக்கலாய் போயிருக்கும். மகாநாட்டை காப்பாற்ற வகுப்பு விஷத்தை மகாத்மா விழுங்கிவிட்டார். பிரதிநிதிகள் விஷத்தையெல்லாம் கக்கியாய்விட்டது. இன்று பல் பிடுங்கிய பாம்பு போல விழிக்கிறார்கள். ஆனல் மகாத்மா ஜோதியாய் விளங்குகிறர்.

Koviloor Digital Library



# பேச்சால் சுயராஜ்யம் வராது

சென்ற 13உ யன்று லண்டன் கெடர் தெரு ஹாலில் மகாத்மாவிற்கு ஒரு வரவேற்பு நடந்தது. ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தார்கள். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் சர். ஈவார்ட் கிரீவ்ஸ் தலைமை வகித்தார். மகாத்மா அச்சமயம் பேசியதாவது:—

இந்தியா கேட்பதை பிரிட்டன் கொடுக்குமென்று நான் நினைத்துக்கொண்டு இங்கு வரவில்லை. ஏனெனில் எந்த நாடும் வாதஞ்செய்து விடுதலை பெற்றதாக இதுவரை நாம் பார்த்ததில்லை. வாதத்தைவிட பலமான நடவடிக்கைகளே அவசியமாய் இருந்திருக்கின்றன. இந்தியாவும் அப்படி செய்தே ஆகவேண்டும். அந்த விதியிலிருந்து தப்பிக்க முடியாது. கஷ்டப்பட்டாலொழிய வெற்றி பெற முடியாது என்பது முன்னைவிட இப்பொழுது தெளிவாய் விட்டது. ஆனால் இந்தியர் முன்பு செய்த தியாகங்களும், பட்ட கஷ்டங்களும் பிரிட்டிஷ் ஜனங்கள் மனதில் பதிந்து சமாசப் பேச்சு மூலமாக ஒரு முடிவு செய்ய சாத்திய மாயிருக்குமென்று நம்பினேன். ஆனால் போகப்போக எனது வேலை மலையைப் புரட்டுவது போல கஷ்டமானதா யிருக்கிறதென்று உணருகிறேன். நான் அசையாத நம்பிக்கையுள்ளவன். ஆகவே, இனிச் செய்வது ஒன்றுமில்லை என்று தோன்றுகிறவரை எனது நம்பிக்கையை இழக்கவோ எனது வேலையை விடவோ போவதில்லை. இப்பொழுது இந்நாட்டின் மக்களின் இருதயத்தில் விளைக்கும் விதை சிக்கிரம் பலன் தந்து, அடிமைப் பட்டவர்களுடன் சமாசம் பேசும்படி இந்நாட்டு மந்திரிகளை கட்டாயப்படுத்துமென்று நம்புகிறேன்.

திக்கற்றவர்களை கொள்ளை யடிப்பதற்கு கையாளும் முறைகளால் கொள்ளை யடிப்பவர்கள் காட்டுமிராண்டிகளாகிறார்கள். அதனால் அவர்கள் கீழ் நோக்கி போவதோடு, மனித சமூகத்தையும் பாதாளத்திற்கு இழுக்கிறார்கள். இந்த ஆபத்திலிருந்து பிரிட்டனை தடுக்க நான் விரும்புகிறேன்.

மகாத்மா பேசி முடிந்ததும் பிரார்த்தனை நடந்தது. மண்டபம் முழுவதும் 15 நிமிஷங்களுக்கு நிசப்தம் குடிகொண்டது. அப்புறம் கேள்விகளுக்கு மகாத்மா பதில் சொன்னார். அச்சமயம் அவர் பேசியதாவது:—

இந்தியாவின் நன்மைக்காக கொஞ்சக் காலம் பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியாவில் இருக்க வேண்டியது அவசியமென்று எனக்கு நிரூபிக்கப்பட்டால், அப்படி இருப்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் அவர்கள் இந்திய தேசிய சர்க்கார் நிர்வாகத்தில் இருக்க வேண்டும். மகாநாட்டில் பூர்ண சுயராஜ்யம் கேட்பதில்லை யென்று நான் லார்ட் இர்வினுக்கு எக்காலமும் வாக்குறுதி கொடுத்ததில்லை.

இந்துக்களும், சீக்கியர்களும் முஸ்லிம்கள் கேட்பதை கொடுக்கும்படி தூண்டி வருகிறேன். அவர்கள் இருவரும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் உங்கள் கோரிக்கைகளை அமையுங்கள் என்று முஸ்லிம்களுக்கு சொல்லுகிறேன். நான் செய்யும் சமரச முயற்சியின் தன்மை இதுவே. சீக்கியருக்கும், முஸ்லிம்களுக்கும் விசேஷ பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியது முன் காலத்திலிருந்தே அவசியமாய் போய்விட்டது. அதற்காகவே அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் மற்ற மைனாரிட்டிகளுக்கும் அம்மாதிரி கொடுத்து தேசியத்தை குலைக்க நான் செய்யமாட்டேன். சிறு மைனாரிட்டிகளுக்கு விசேஷ பிரதி நிதித்துவம் அவசியமில்லை யென்பதை பார்சிகளைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள். பார்சிகள் ஜனத் தொகையில் மிகவும் சொற்பம். இருந்தாலும் அவர்கள் பயப்படவில்லை. ஆகவே எண்ணிக்கையில் எவ்வளவு குறைந்திருந்தாலும், பயப்படவேண்டிய அவசியமில்லை. விசேஷ பாது காப்பு இல்லாமலே அவர்கள் க்ஷேமமாய் இருக்க முடியும்.

நான் இங்கு வந்த பின்பு எனக்கு இந்நாட்டு ஜனங்கள் காட்டிய அன்பு என்மனதைக் கவர்ந்து விட்டது. இனி இந்தியாவில் சர்க்கார் அடக்கு முறையை கையாண்டால், இந்நாட்டார் ஒரு விநாடியும் சகிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. மறுபடியும் ஒத்துழையாமையும், சட்ட மறுப்பும் ஏற்பட வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டால், அக்காலத்தில் இங்குள்ள இந்திய மாணவர்கள் ஒழுங்காய் நடந்து பிரிட்டிஷ் ஜனங்கள் நன்மதிப்பை பெறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

Koviloor Digital Library



# சண்டப் பிரசண்டம்.

தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்ட பிரசண்டம் செய்வார். லண்டன் மகா நாட்டில் டாக்டர் அம்பேத்கார் குதிக்கிறார். துள்ளுகிறார். சுயராஜ்யம் வேண்டாமென்று கர்ஜிக்கிறார். மகாத்மா காந்திக்கும் தீண்டாதாருக்கும் என்ன சம்பந்தம் என்று ஆடுகிறார். லண்டன் மகாநாட்டில் தட்டிக் கேட்க ஆளில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் நியமித்த பிரதிநிதிகள் பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரிப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. அம்மாதிரி பேர்வழிகளைத் தானே அவர்கள் நியமிப்பார்கள்? லண்டனில் பேசிய பேச்சுக்களை இந்தியாவில் பேச அம்பேத்காரால் முடியாது. ஆகவே அவர் ஆசை தீர வட்டமேஜை மகா நாட்டில் துள்ளிக்குதிப்பதைக்கண்டு யாரும் கோபப்பட வேண்டாம். அம்பேத்காருக்கு தீண்டாதார் ஆதரவு எவ்வளவு இருக்கிறது என்பதை ஸ்ரீ. பாலு வெளியாக்கிவிட்டார். ஸ்ரீ. பாலு பிரபல கிரிக்கட் விளையாட்டுக் காரர். தீண்டாதார் தலைவர். பம்பாயில் அவர் தலைமையில் நடந்த தீண்டாதார் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார் மீது நம்பிக்கையில்லை யென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள் மகாத்மா மீது பூர்ண நம்பிக்கை யிருப்பதாகவும், பொதுத் தேர்தல் தொகுதியும், சர்வ ஜன ஓட்டுரிமையுமே வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அம்பேத்காரே, வாயை மூடும்.

வகுப்புவாத முஸ்லிம் பிரதிநிதிகளைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீ. டி. ஏ. கே. ஷெர்வானி கொடுத்திருக்கும் சவுக்கடியை சென்ற இதழில் நண்பர்கள் படித்திருப்பார்கள். வகுப்புவாதிகளாகப் பார்த்து பொறுக்கி எடுத்து பிரிட்டிஷ் சர்க்கார் லண்டனுக்கு கொண்டு போயிருப்பதால், வகுப்பு கூச்சல் பலமாயிருக்கிறது. வட்டமேஜை மகாநாட்டில் அந்தக் கூச்சல் பலமாயிருப்பதால், இந்தியாவிலும் அம்மாதிரி இருக்கிறதென்று சொல்ல முடியாது. தங்கள் கைவரிசைகளைக்காட்ட பிரிட்டிஷ் பந்தோபஸ்தோடு கூடிய வட்டமேஜை மகாநாடே சௌகரியமான இடமா யிருக்கிறபடியால், அந்தக் கூச்சல் பலமாய் கேட்கிறது.

இதைப்பற்றி லண்டனுக்கு வந்திருக்கும் ஒரு அமெரிக்கர் சொல்லும் அபிப்பிராயம் கவனிக்கத் தக்கது. அவர் சொல்லுகிறார்:—

"மனித சுபாவம் எப்படி யிருக்கிறதென்பதை கவனிக்க வேண்டும். வட்ட மேஜை மகா நாட்டில் மகாத்மா பலரை எதிர்த்து பேச வேண்டியிருக்கிறது. அந்த ஆசாமிகள் அவ்வளவு முக்கியமானவர்களாய் இல்லாமல் இருக்கலாம். மகாத்மா மிகப் பெரிய ராஜீய ஸ்தாபனத்தின் பிரதிநிதியாய் இருக்கலாம். இருந்தாலும் அவர்கள் பலர். இவர் ஒருவர். இது விளம்பர காலம். எவ்வளவுக் கெவ்வளவு பலமாய் சத்தம் போடுகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக மற்றவர்கள் கவனிப்பார்கள். இதை காந்தி கவனிக்கவில்லை. முஸ்லிம்களை கிளப்பிவிட்டு பலனடைய பிரிட்டிஷ் சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். இந்தியாவில் தேசீய முஸ்லிம் கட்சி பலமாய் இருக்கிறதென்பதை எல்லாரும் அறிவார்கள். ஆனால் அவர்கள் பேச்சு வட்டமேஜை மகா நாட்டில் ஒலிக்கவில்லையே! ஜனங்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லாவிடில் அவர்கள் எப்படி உண்மையை அறிய முடியும்? எல்லா மைனாரிட்டிகளி லிருந்தும் மகாத்மா தேசியவாதிகளை தம்முடன் கூட்டி வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், இன்று குதிப்பவர்களுக் கெல்லாம் அவர்கள் உடனுக்குடன் சரியான பதில் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்."

டாக்டர் அன்சாரி, ஸ்ரீ. ஷெர்வானி, டாக்டர் சையது முகமது போன்றவர்கள் போயிருந்தால் மகாநாட்டில் முஸ்லிம் வகுப்புவாதம் தலைகாட்டாமல் இருந்திருக்கும். அதைப்போலவே ஸ்ரீ. பாலு போயிருந்தால் அம்பேத்கார் ஆர்ப்பாட்டம் இருந்திருக்காது. தேசிய சிக்கியர் போயிருந்தால் நிலைமை இன்னம் சௌகரியமாருக்கும். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் அப்படிச் செய்வார்களென்று எதிர் பார்ப்பது வெறும் கனவு. பிரித்துவிட சூழ்ச்சி செய்யும் அவர்களை, சேர்த்து வைக்கும் வழியை கடைப் பிடிக்கும்படி செய்வது, கழுதையை குதிரை யாக்க முயற்சிப்பதைப் போலவே முடியும்.

# பிரிட்டிஷார் செய்த பாதகம்.

(மகாத்மா காந்தி.)

(லண்டனில் நடந்த காந்தி ஜயந்தியின் போது மகாத்மா செய்த பிரசங்கம்.)

இந்தியாவில் பிரிட்டிஷார் இதுவரை செய்துள்ள காரியங்களின் தன்மையை இருவிதமாகப் பரிட்சை செய்து நிர்ணயித்தேன். பிரிட்டிஷார் செய்த காரியங்களைத்தும் இந்தியாவுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியவை என்ற முடிவுக்கே வந்தேன். தேசத்திற்கு பிரிட்டிஷார் செய்த காரியங்களனைத்தும் பாதகம் விளைவிப்பவை என்றே இந்தியர்களனைவரும் மதிக்கின்றனர். இந்தியரின் இவ்வித உணர்ச்சியை பிரிட்டிஷார் அறிவது மிகவும் துர்லபம். இந்தியா உலகில் மிகவும் ஏழ்மையான நாடன்றோ! கோடிக் கணக்கான ஜனங்கள் 6 மாத காலம் வேலையின்றி தவிக்கவில்லையா? மேலும், நிர்ப்பந்தமாக இந்தியர்களனைவரையும் நிராயுதபாணிகளாக இருக்கச் செய்துள்ளதால், அவர்கள் ஆண்மையை இழந்துவிட்டனர். சுதந்திரம் பெற்ற தேசங்களில் மக்களுக்கு முன்னேற்ற மடைய இருக்கும் சந்தர்ப்பங்கள் இந்தியர்களுக்கு இல்லை. விசாரணை செய்து இது உண்மை என நீங்களே அறிந்தால், இங்கிலாந்து இந்தியாவின்பால் இதுவரை அனுஷ்டித்து வரும் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமென நீங்களே அபிப்பிராயப் படுவீர்களன்றோ?

"சுயராஜ்யம் நமது பிறப்புரிமை" என விடாது கர்ஜித்தார் லோகமான்ய திலகர். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பயன் எத்தன்மைத்தா யிருக்கிற தென்பதை நான் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. கோடிக் கணக்கான வாயில்லா பூச்சிகளின் சார்பாக இந்தியாவுக்கு சுயேச்சை வேண்டுமென கேட்ட மாத்திரத்தில் இந்தியா சுயேச்சை பெற உரிமை பெற்று விட்டதென்பதை நான் அறிவுறுத்துகிறேன். விடுதலை, சுயேச்சை என்ற வார்த்தைகளைக் கேட்டு இந்தியாவில் சிலர் பயப்படுகிறார்களே என்று சாக்கு கூறுவது சரியாகாது. சிலர், பிரிட்டிஷ் "பாதுகாப்பை" விட்டு நீக்கிவிடில் என்ன ஆகுமோ என்று பயந்திருப்பது உண்மையே. ஆனால் குடிக்க கஞ்சியின்றி தவிக்கும் கோடிக்கணக்கான வாயில்லா பூச்சிகள் விழித்தெழுந்து விட்டனர். அரசியல் உணர்ச்சி அவர்களுக்கு வந்துவிட்டது. விடுதலைக்காக எதையும் தியாகம் செய்ய சித்தமா யிருக்கின்றனர். பிறரது ரத்தம் சிந்தி இந்தியா விடுதலையடைய வேண்டு மென்பது எங்கள் விருப்பமல்ல. விடுதலை உரிமையைப் பெற, அவசியமானால், கங்கை நதி போல எங்கள் ரத்தப் பிரவாகம் புரண்டோடும் படியாகச் செய்து தியாகம் செய்ய நாங்கள் சித்தமா யிருக்கிறோம்."

# லங்கோடு தத்துவம்


(மகாத்மா காந்தி)

"என்னைப்பற்றி கூறப்படும் பலவித வர்ணனைகளையும் நான் படித்துப் பார்த்தேன். சிலர் என்னை ரிஷியென்கிறார்கள். மற்றவர்கள் போக்கிரியென்கிறார்கள். நான் யோகியுமல்ல போக்கிரியுமல்ல. நான் கடவுளுக்கு பயந்த யோக்கியனாக யிருக்கவேண்டு மென்பதே என்னுடைய பேரவல். என்னுடைய நாட்டினத்தில் நாற்றுப் பாருங்கள். நான் உங்களுக்கு போதிக்கக் கூடியதை விட அது அதிகமாகவே உங்களுக்கு போதிக்கும். பொறுமை, விடா முயற்சி, எளிய வாழ்க்கை முதலியவைகளை அது உங்களுக்களிக்கிறது. இந்த நாட்டினம் பட்டினியின் அடையாளம். இந்தியாவில் கோடிக் கணக்கான மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்பதை அது நன்றாகக் காட்டுகிறது.

"என்னுடைய ஆடையைப் பற்றி பத்திரிகைகள் வர்ணிக்கையில் லங்கோடு என்றே கூறுவதோடு அதைக்குறித்துப் பரிகாசம் செய்தும் எழுதுகின்றன. நான் என் அத்தகைய ஆடையை அணிய வேண்டுமென்றும் கேட்கிறார்கள். சிலர் நான் இவ்விதம் அணிவதை வெறுப்பதாகவும் தெரிகிறது. வெள்ளையர் இந்தியாவிற்கு வருவார்களாகில் சீதோஷ்ண நிலைமையை யோசித்தால் இந்தியர் உடைதான் எவ்வளவோ சௌகரியமான தாகும். அப்படியிருந்தும் இந்தியாவிற்கு வரும் வெள்ளையர் தங்கள் உடையை விட்டுவிட்டு இந்தியர் உடையை உடுக்க சம்மதிக்கிறார்களா? இல்லை. இங்கிலாந்தில் நான் இத்தகைய ஆடையை அணிவானேன் என்று கேட்பவர்களுக்கு அதிலேயே பதிலிருக்கிறது. எனக்கு இந்தியாவில் இவ்வுடைதான் வழக்கமாகையால் அதையே இங்கும் தரிக்கிறேன்.

Koviloor Digital Library





லண்டனில் சார்ளி சாப்ளினும், மகாத்மாவும் ஒரு இந்திய டாக்டர் பங்களாவில் சந்தித்தார்கள். அச்சமயம் மகாத்மாவைப் பார்க்க ஏராளமாக வெள்ளையர் கூடியிருந்தனர். மகாத்மா மோட்டாரை விட்டு இறங்கி கூட்டத்தில் நுழைந்து போகிறார்.

Koviloor Digital Library



## மகாநாடு முறிந்தால்—?

லண்டன் மகாநாடு முறிந்தால் என்ன நடக்கும்? இந்தியாவில் என்ன நடந்தாலும் உலகம் கவலை கொள்ளாத காலம் ஒன்றிருந்தது. இப்பொழுது அது மாறிவிட்டது. இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதை ஆவலோடும், கவலையோடும் மற்ற நாடுகள் பார்த்துக்கொண்டிருக்கின்றன. எதனால் இந்தியர் விழித்துக் கொண்டனர் என்பதை அவை அறியும். லண்டன் மகாநாடு எப்படி முடியுமோ என்று எல்லா நாடுகளும் கவனிக்கின்றன. முக்கியமாக எல்லா வெளி நாட்டு பாங்கிகளும் மிகுந்த ஜாக்கிரதையாக கவனித்து வருகின்றனவாம். மகாநாடு முறிந்து போனால் அடுத்தபடி சட்டமறுப்பு இயக்கமே. இதை மகாத்மா பகிரங்கமாய் சொல்லிவிட்டார். கங்கையைப் போல இந்தியர் ரத்தம் பிரவாகம் எடுத்து ஓடவேண்டியிருந்தாலும் இந்தியர் தயார் என்று அவர் சொல்லுகிறார். கிராமங்களிலும், நகரங்களிலும் சர்க்கார் செய்யும் சூழ்ச்சிகளைப் பார்த்து சலிப்பு ஏற்பட்டுவிட்டது. "இந்த நிலைமையில் மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்பித்தால், அந்த போராட்டம், இதுவரை உலகம் எதிர்பாராத அவ்வளவு பெரிய போராட்டமாகவே யிருக்கும். அப்புறம் என்ன நடக்குமென்பதை யாருமே சொல்ல முடியாது. பிரிட்டிஷ் வர்த்தகம் முழுவதும் "கபர்"ஆய்விடும். அதிகாரமோ ஆகாயத்தில் பறக்கும். பிரிட்டன் நிலைமை கலகலத்துப் போகும். இதற்காகவே வெளி நாட்டு பாங்கிகள் உஷாராய் இருக்கின்றன. லண்டன் மகாநாட்டில் சமூக சமரசம் ஏற்படவில்லை யென்பதை கேட்ட தினத்தில், மகாநாடு முறிந்துவிடுமோ என்ற பயமும் இருந்தது. அன்று அமெரிக்காவில் ஷில்லிங் விலை 10 ஆக குறைந்ததாம். மகாநாடு முற்றிலும் முறிந்து போய்விட்டால் அப்புறம் பவுனுக்கு 10 ஷில்லிங்காக குறைவது பெரிய காரியமல்ல. பிரிட்டனின் நாணய மதிப்பு அடியோடு தொலைந்து போகும். எந்த நாடும் கடன் கொடுக்காது. ஆகவே மகாநாடு முறிந்தால், பிரிட்டன் தவிர்க்க முடியாத நிலைமை ஏற்படும். இந்தியாவும் அளவற்ற கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். இந்தியா அதைப் பற்றி பயப்படவில்லை. ஆனால் பிரிட்டன் அம்மாதிரி பாதாளத்தில் விழ தயாராயிருக்கிறதா அல்லது விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறோம்.

## மின் வெட்டு.

### எல்லை யில்லை.

வரியில்லாத உப்பை 5 மைல் தூரம் வரையில் தான் ஜனங்கள் எடுத்துச் செல்லலாம் என்று வழக்கமிருந்தது. இந்தியா சர்க்கார் அதை ஒப்புக்கொள்ளவில்லை. கால் நடையாக இனும் உப்பை எடுத்துச் செல்லும் தூரத்தை நிர்ணயிக்க வேண்டியதில்லை யென்று தீர்மானித்து விட்டார்கள். ஆகவே கால் நடையாக எவ்வளவு தூரம் கொண்டுபோனாலும் குற்றமில்லை. உப்பள அதிகாரிகள் இதை கவனித்து வால் நீட்டாமல் இருப்பார்களாக. ஜனங்களும் இந்த அநுமதியை துர்விநியோகப் படுத்தாமல் நியாயமாய் நடக்கவேண்டுகிறோம். சர்க்காருக்கு நமது வந்தனம்.

### செல்லாக் காசுகள்.

"வட்டமேஜை மகாநாட்டிற்கு பிரதி நிதிகள் என்று சொல்லிக் கொண்டு போயிருப்பவர்கள் எல்லாரும் சர்க்கார் அச்சிட்டுவெளியிடும் வெள்ளி ரூபாயைப் போல் இருக்கிறார்கள். ஒரு ரூபாய் என்று முத்திரை யிடுகிறார்கள். ஆனால் அந்த வெள்ளியின் உண்மையான விலை அரை ரூபாய் கூட இல்லை. இதைப்போல இந்த பிரதிநிதிகள் யோக்கியதையுமிருக்கிறது." என்று டாக்டர் தேஷ்முகர் சொல்லுகிறார். இவ்வளவு கௌரவம் கொடுக்கக்கூட நாம் விரும்பவில்லை. உண்மை வெள்ளி ரூபாயா யிருந்தால் அரை ரூபாயாவது பெறுமே! ஈய ரூபாயா யிருந்தால் என்ன பெறும்? ஒரு காசுகூட பெறாது. அந்த மாதிரியே நமது "பிரதி நிதிகள்" இருக்கிறார்கள். அவர்கள் வெள்ளி ரூபாயல்ல. ஈய ரூபாய். செல்லாக் காசுகள்!

### பலே தேசாய்!

பம்பாயில் லக்ஷ்மி நாராயணன் ஆலயம் ஒன்று கட்டியாகிறது. அதை தீண்டாதாருக்கும் உபயோகிக்க உரிமை வேண்டுமென்று தீண்டாமை ஒழிக்கும் கமிட்டி கேட்டது. அதை கட்டிட கமிட்டி மறுத்து விட்டது. "இப்படிச் செய்தது தேசத்துரோக மாகையால், அதில் வேலை பார்க்க முடியாது" என்று சொல்லி உடனே கட்டிட கமிட்டியிலிருந்து ஸ்ரீ. காந்திலால் தேசாய் விலகிவிட்டார். அவரை பாராட்டுகிறோம்.

Koviloor Digital Library



பெரிய ஹம்பக்! முழு ஏமாற்றல்!

# எச்சரிக்கை

(லக்ஷ்மி தாஸன் எழுதியது)

தீபாவளிப் பண்டிகையை உத்தேசித்து, பல ஊர் வியாபாரிகள் அயல் நாட்டுத் துணிகளை வாங்க கிடங்குத் தெருவுக்கு வந்திருக்கிறார்கள். சில, மொத்த வியாபாரிகள் இதுவே தக்கத் தருண மென்று, அயல்நாட்டு நூல்களைக் கொண்டு நெய்வித்து சுதேசி என்று விற்கிறார்கள்.

தென்னாட்டு சகோதரர் சகோதரிகள் தேசிய பண்டிகையன்று வாங்கும் துணிமணிகள் மிக கவனித்து வாங்க வேண்டுகிறோம். இதனால் நீங்கள் பெரிய தர்மம், புனிதத்தினத்தன்று செய்தவர்களாகிறீர்கள். ஏழை மக்களுக்கு அன்ன மளிக்கிறீர்கள். உலக மெல்லாம் "வேலையில்லா திண்டாட்டம்" என்ற பிசாசு தலை விரித்தாடும்போது, நம் அன்னை நாடு—இந்தியாவில் அப்பிசாசு பிடிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன? என்ன? யோசித்தீர்களா? தெய்வீக இயக்கம் "பஹிஷ்கார"மல்லவா? இதை ஊன்றி சிந்தியுங்கள். நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கெஜ துணியும் சுத்த சுதேசியாயிருக்குமாகில், உங்கள் ஏழை தொழிலாளர்களுக்கு ஒரு அரு தர்மம் செய்தவர்களாகிறீர்கள்—வயிறார அன்ன மளிக்கிறீர்கள். இவைகளை ஊன்றி சிந்தியுங்கள்! சுத்த சுதேசி இல்லாவிடில் நீங்கள் ஏழை மக்கள்கள் புசிக்கும் அன்னத்தைப் பிடுங்கி பட்டினி கிடக்கச் செய்தவர்களாவீர்கள். இஃது கொடிய பாவம். உங்களாலியன்ற—யாவராலும் எளிதில் செய்யக் கூடிய உதவி—பாரத மாதாவுக்கு இஃதொன்றே—ஞாபகத்திலிருக்கட்டும்.

சுத்தக் கதரை வாங்கிக் கட்டுங்கள். இல்லையேல், காங்கிரஸ் அதிகாரம் பெற்ற சுதேசி துணிகளை வாங்க வேண்டும்.

சில பேராசை கொண்ட திமிங்கிலங்கள் இதுவே தருண மென அயல்நாட்டு நூல்களை வாங்கி நெய்வித்து சுதேசி என்று ஏராளமாய் விற்று கொள்ளை போடுகிறார்கள். இதில் தெலுங்கு தேசத்தில், கடப்பை, ஜம்மல்மடுக்கு என்ற ஊர்களில் சீமை நூலால் நெய்வித்து, ருத்திராக்ஷ கரை, புனுக் கரை, என்ற பல கரைகள் போட்டு, புனு புடவை யென்று 18 முழ நீளம் $2\frac{3}{4}$ அகலத்தில் போட்டு, ரூ. 5 முதல் 8 வரையிலும், ஜரிகையும் போட்டு விலை கூடுதலாகவும் விற்கிறார்கள். தென்னிந்தியாவில் ஒவ்வொரு ஜவுளிகடையிலும் இவைகள் ஏராளமாய் வரவழைத்து ஸ்டாக் செய்திருக்கிறார்கள்.

இவைகளை கவனிக்க வேண்டும். சுதேசி என்று விற்பது, அழகிய தேசபக்தி மிகுந்த ஆந்தர நாட்டிற்கே, அவமான முண்டாக்குவதாகும். ஆந்திர வியாபாரிகளே! தென்னாடுதான் தேசபக்தியில்லாத தெம்மாடிகள் நாடென நினைத்தீர்களோ! உங்கள் நாட்டில் இவைகளை ஏன் விற்கக்கூடாது?

## (2) பெத்தாபுரம் பட்டு.

அநேகர் இவைகளை முற்றிலும் சுதேசி எனவும், பங்களூரில் நூற்ற பட்டு நூலால் நெய்யப்பட்டதாகவும் சொல்லுகிறார்களாம். இல்லை. இல்லை. முற்றிலும் அயல் நாட்டு பட்டு நூல் ஏமாறாதீர்கள்,

சுதேசி சாமான்களுக்காக பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கும் கடைகளிலும் மேல் கண்ட தினுசுகள் ஏராளமாய் வைத்திருக்கிறார்கள். கவனிப்பார்களாக.

# அம்பேத்கார் திகைப்பு.

தீண்டாதாருக்கு தானே ஏகப் பிரதிநிதியென்று டாக்டர் அம்பேத்கார் லண்டன் மகாநாட்டில் குதித்தார். மகாத்மாவுக்கும் தீண்டாதாருக்கும் சம்பந்தமில்லையென்று கூறினர். இதை மறுத்து இந்தியாவிலிருந்து தந்திகள் லண்டனில் குவிகின்றனவாம். பம்பாய், டெல்லி, காசி முதலிய பல இடங்களிலுள்ள தீண்டாதார் மகாத்மா, முதல் மந்திரி, அம்பேதகார் இவர்களுக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஐக்கிய மாகாண சட்டசபையில் ஸ்ரீமான்கள் ஜகந்நாத், பாரோஸ் என்ற இரு தீண்டாதார் அங்கத்தினராயிருக்கிறார்கள். அவர்களும் லண்டனுக்கு தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

"பண்டிதர்களும், ஜமீன்தார்களும் பெருத்த இந்து புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியிலிருந்து நாங்கள் பிரதிநிதிகளாய் சட்டசபையில் இருக்கிறோம். டாக்டர் அம்பேத்கார் கூறும் அபிப் பிராயத்தை அடியோடு மறுக்கிறோம். எங்களுக்கு பொதுத் தேர்தல் தொகுதியும், சர்வ ஜன ஓட்டுரிமையுமே வேண்டும்."

இதுவே அவர்கள் கொடுத்துள்ள தந்தி. டாக்டர் அம்பேத்கார் விலவிலத்துப் போனார். என்ன சொல்வதென்று தெரியாமல் திகைக்கிறார். அவர் போலி பிரதிநிதித்துவம் வெட்ட வெளிச்சமாயிற்று. சென்னை தீண்டாதார் சகோதரர்களே, நீங்கள் ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? மகாத்மா மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா? இருந்தால் உடனே ஒரு கூட்டம் கூடி தந்தி அனுப்புங்கள்.

## கூலிக்கு மாரடிப்பவர்கள்.

சர்க்காருக்கு சலாம் போட்டு குலாமாயிருப்பவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களே. ஒத்துழையாமை காலத்தில் இவர்களை சேர்த்துப் பிடித்து "ராஜவிசுவாச சபைகள்" என்ற பெயரோடு பல சபைகளை அதிகாரிகள் கிளப்பி விட்டனர். வட இந்தியாவில் இந்த சபைகளுக்கு பெயர் அம்மன் சபைகள். இவற்றைப் பற்றியும் இவற்றின் அங்கத்தினர்களைப் பற்றியும் லூதியானா ஜட்ஜ் கொடுத்திருக்கும் அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. லூதியானா பாஞ்சாலத்தில் உள்ளது. அங்கு ஒரு நாள் சுதேசி பிரசார கூட்டம் கூடியது. அதை போலீஸ் தடியர்கள் தடியால் அடித்து கலைத்தனர். அதில் காயமடைந்த ஸ்ரீ. ராஜாராம் என்பவர் அதிகாரிகள் மீது நஷ்ட ஈடு வழக்கு தொடர்ந்தார். லூதியானா ஜட்ஜ் இந்த வழக்கில் வாதிக்கு ரூ. 301 நஷ்ட ஈடாக கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். அச்சமயம் அவர் கூறியதாவது:—

"இந்த அம்மன் சபையில் 50 பேரே அங்கத்தினர். அவர்களுக்கும் சந்தா கிடையாது. அந்த சபைக்கு சொத்தும் கிடையாது. அவர்கள் கூட்டம் கூடுவதும் அபூர்வம். இதுவரை அவர்கள் ஒரு பிரசங்கம் கூட செய்தது இல்லை. இந்த அங்கத்தினர்களில் பலர் லூதியானாவில் இருப்பதே இல்லை. ராஜ்ய வழக்குகளில் சர்க்காருக்கு உதவி செய்து தங்கள் சுயநன்மையை பெருக்கிக் கொள்ளும் ஆசாமிகள்தான் இதில் அங்கத்தினர்களாய்ச் சேரலாம். இவர்களை தேசியக் கட்சியார் போலீசாருக்கு வால் பிடிப்பவர்கள் என்று கூறுகிறார்கள். அம்மன் சபை அங்கத்தினர் கூட்டத்தில் எழுந்து நின்று கூச்சல் போட்டதைத் தவிர வேறு எவ்வித குழப்பமும் கூட்டத்தில் இல்லை. இதை சாட்சிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர். கூட்டத்தை கலைக்கும்போதும் அம்மன் சபை அங்கத்தினரை போலீசார் கலைக்கவில்லை. போலீசாருக்கு எந்தக் கூட்டம் பிடிக்கவில்லையோ, அதை பலாத்காரமாய் கலைப்பதற்கு இந்த அம்மன் சபை அங்கத்தினர்களை கூச்சல் போடும்படி உபயோகிக்கிறார்கள் என்று தெரிகிறது."

## மத்திய மாகாண மந்திரிகளே! சபாஷ்

மத்திய மாகாண மந்திரிகள் தம் சம்பளத்தை ரூ. 2000 ஆகக் குறைத்துக் கொண்ட செய்தி போற்றற் குரியது. இந்திய சர்க்கார் டிசம்பரிலிருந்து சம்பளத்தை குறைக்கப் போகிறதாகச் சொல்கிறார்கள். இவர்கள் ஏப்ரல் மாதத்திலிருந்தே குறைத்துக் கொள்ளுவதுடன், வாங்கிய சம்பளத்தையும் வாபீஸ் செய்யப் போகிறார்களாம். நம் மாகாணத்து மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்களென்று, ஒரு பத்திரிகை கேட்கிறது.

தமிழ் மூளைக்குத் தனிப் பெருமை யுண்டு. ஆதலால் நம் மந்திரிகள் செய்யப் போவது தனி பெருமையுடனே இருக்கும். அடுத்த வாரத்தில் தங்களுக்கு ரூ. 1500 போது மென்று சொல்வார்கள். அல்லது உள்ள சம்பளத்தில் நாலுகாசு கூட குறைக்க முடியாதென்று சொல்லி விடுவார்களென்று ஜோஸ்யர் ஒருவர் சொன்னார். ஆனால் முதல் சொன்ன ஜோஸ்யம் பலிக்காதென்றே நினைக்கிறோம். ஏனெனில் "பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கு" மென்பது ஓர் தமிழ் பழமொழி. பண ஆசை யாரைத்தான் விட்டது? உலகத்தை வெறுத்துத் தள்ளியதாகப் பாவனை செய்யும், ஆசாரியார்கள், பண்டார சன்னதிகள், ஜீயர்களைவிட வில்லையானால் நம்மந்திரிகளை லேசில் விட்டு விடுமாவென்பது சந்தேகம். இந்த சமயத்தில் நேற்று ஒரு குருவி வெகு அவசரமாய் பறந்து வந்து மந்திரிகள் ஏற்கனவே பனகால் அரசர் மந்திரியா யிருக்கும்போது ஆயிரம் ரூபாய் குறைத்து விட்டதால் இனி குறைக்க முடியாதென்று கண்டிப்பாய் மாட்டோம் என்று முணு முணுப்பதாகச் சொல்லி பறந்து விட்டது.

ஜோஸ்யர் சொன்னது நடக்குமா? அல்லது குருவியின் ஜோஸ்யம் பலிக்குமா? பார்ப்போம்—மந்திரிகளின் தியாக போக்கையும் கவனிப்போம்.

## அச்சுச் சட்ட பூதம்.

சட்ட சபையில் தீர்மானித்த அச்சுச்சட்ட பூதத்திற்கு வைசிராய் தமது கையெழுத்தை காட்டி உயிர் கொடுத்துவிட்டார். சென்ற 12௳ முதல் இந்த பூதம் உயிர் பெற்றுவிட்டது. இந்தியப் பத்திரிகைகளின் தலை எழுத்து இந்த பூதத்தின் கையில் இருக்கிறதாம்!

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 19௳, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 3௳ திங்கட்கிழமை || இதழ் 41

## திருப்பதி க்ஷவரம்.




லண்டன் மகாநாட்டு வேலை திருப்பதி க்ஷவரம் போல இருக்கிறது. மைனாரிட்டி விஷயம், ஐக்கிய பண நிர்வாகம், ஐக்கிய ஆட்சி அமைப்பு, ஐக்கிய கோர்ட் முதலிய எத்தனையோ விஷயங்களை ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டாய் விட்டது. ஆனால் ஒன்றாவது பூர்த்தியாக வில்லை. திருப்பதி அம்பட்டனைப் போல ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் செய்து விட்டு அப்புறம் பாய்கிறது. இவற்றைத் தவிர அயல் நாட்டு சம்பந்தம், பொக்கிஷம், ராணுவம், வரி முதலியவைகள் க்ஷவரம் செய்துகொள்ள காத்துக் கொண்டு நிற்கின்றன. அவற்றைப்பார்த்து பிரிட்டன் சொல்லுகிறது,

"என்ன யோசனை ? உட்காருங்கள். இதோ ஒரு வினாடியில் சிரைத்து தள்ளி விடுகிறேன்.'

Koviloor Digital Library



# தொண்டர்கள் துயரம்

"இந்தியா சட்ட மறுப்பை தீவிரமாய் நடத்தி முடித்த பெருமை யாரைச் சேர்ந்தது? தலைவர்களைச் சேர்ந்த தல்ல. ஊர் பெயர் தெரியாமல், வெளியில் பிரபலமாக வேண்டு மென்ற எண்ணமில்லாமல், அமைதியாக வேலை செய்யும் அந்த தொண்டரையே சேரும்" என்று பண்டித ஜவாஹர்லால் கூறினார். இது உண்மை. தலைவர்கள் இட்ட உத்திரவை—காங்கிரஸ் இட்ட கட்டளையை சிரமேற் கொண்டு நடத்தி வைத்தது தொண்டர்களே. போலீஸ் தடியடியை பொருட்படுத்தாமல், உயிரையும் திரணமாக மதித்து, அவசரச் சட்டங்களை வெறும் முட்டைத் தொட்டி காகித மாக்கியவர்கள் தொண்டர்களே. சென்ற யுத்தத்தில், "அன்னோன் சோல்ஜர்" அல்லது ஊர் பெயர் தெரியாத சிப்பாய் என்று பல இடங்களில் பெரிய ஞாபகச் சின்னம் கட்டி வைத்து, ஊர்வலம் செய்து மரியாதை செய்தார்கள். சிப்பாய்களின் தியாக புத்தியை வெளிப்படையாக பாராட்டுவதற்காக இம்மாதிரி செய்தார்கள். சிப்பாய்கள் எப்படி மிருகபல யுத்தத்திற்கு அடிப்படையானவர்களோ அம்மாதிரி அஹிம்சா தர்ம போருக்கு தொண்டர்கள் மூலமானவர்கள். சிப்பாய்கள் வீரத்தைவிட தொண்டர்கள் வீரம் பல்லாயிரம் மடங்கு அதிகமானது. "பேடிகள் அஹிம்சா தர்மத்தை கைக்கொள்ள முடியாது. வீரர்களே கைக்கொள்ள முடியும்" என்று அஹிம்சா தர்ம போரை கண்டு பிடித்த மகாத்மா கூறுகிறார். ஆயுதம் உபயோகிப்பது வீரத்தனமல்ல. ஆயுதங்களாலோ மற்றவைகளாலோ ஏற்படும் துன்பங்களை சகித்துக் கொண்டு அஹிம்சையை கைக்கொள்ளுவதே வீரத்தனம். அத்தகைய வீரர்கள் நமது தொண்டர்கள். நமது நாட்டிற்கு உயிர் போன்றவர்கள். நமது நாட்டின் மானத்தை காப்பாற்றியவர்கள். நமது ஆண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர்கள். நமது தேச பக்தியை குன்றின்மேலிட்ட விளக்கு போல பிரகாசிக்கச் செய்தவர்கள். "தொண்டர்தம் பெருமையை சொல்லவும் கூடுமோ?" என்றார் ஒரு பெரியவர்.

இத்தகைய சிறப்புற்ற தொண்டர்களை சில பேடி வியாபாரிகள் துன்புறுத்துவதாக நமக்கு செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. தர்மபுரியில் தொண்டர் ரத்தினவேலு ஆச்சாரியார், தொண்டர் தலைவர் சித்தரஞ் செட்டியார் இவர்கள் கள்ளுக்கடை மறியல் செய்யும் போது அவர்கள் மீது கள் மொந்தையை விசிறி அடித்தார்களாம். திட்டினார்களாம். திருக்காட்டுப்பள்ளி பக்கத்திலுள்ள திருச்சனம் பூண்டியில் கள்ளுக்கடைக்காரர் ஆயுதபாணியாக பிரசன்னமாகி தொண்டர்களை திட்டினார்களாம். பயமுறுத்தினார்களாம். விழுப்புரத்தில் ஒரு சீமைத்துணி கடைக்காரர் தொண்டர் வரதராஜுலுவை அடித்தாராம். மதுரையில் புது மண்டப சீமை ஜவுளி கடைக்காரர்களுக்கு திடீரென்று ஆவேசம் தோன்றி தொண்டர்கள் மீது வசைபுராணம் பொழிந்தார்களாம். இம்மாதிரி ஒவ்வொரு ஊரிலும் நடப்பதாகத் தெரிகிறது. வயிற்றில் அடிப்பதென்றால் யாருக்கும் கோபம் வரத்தான் செய்யும். சீமைத்துணி வர்த்தகர்களுக்கும், மதுவியாபாரிகளுக்கும் காங்கிரஸ் தொண்டர்கள் எமதர்மர்களைப்போல தோன்றுகிறார்கள். அவர்களால் வர்த்தகம் குறைந்து போய் விட்டது உண்மையே. குறைந்தமட்டோடு நின்றுவிடாது. வெகு சீக்கிரத்தில் அடியோடு அந்த இரண்டு வியாபாரமும் நாசமாய் போகும்.

ஆனால் அதற்காக தொண்டர்களை இம்சிப்பதா? அயோக்கியத்தனமான வழியில் வர்த்தகஞ் செய்யவேண்டா மென்று தான் தொண்டர்கள் கேட்கிறார்கள். அவர்கள் சொத்தை கொடுத்துவிடும்படி கேட்கவில்லை. வர்த்தகர்கள் புத்திசாலிகளாயிருந்தால், தொண்டர்கள் விருப்பப்படி நடந்து தங்கள் பாவமூட்டையை குறைத்துக் கொள்ளலாம். அதைவிட்டு தொண்டர்களை இம்சிக்க புறப்படுவது பாவ மூட்டையை அதிகரிப்பதாகவே முடியும்.

அநியாயம் என்றும் தோற்றே போகும். இதை வர்த்தகர்கள் அறியவேண்டும். பிட்டுக்கு மண் சுமந்தவனை அடித்த அடி உலகம் முழுவதிலுமுள்ள சகல ஜீவப்பிராணிகளுக்கும் விழுந்ததாம். அதைப் போல தொண்டர்களை துன்புறுத்துவதோ, திட்டுவதோ அந்த தொண்டர்களைச் சேரா. ஒவ்வொரு திட்டும் இந்திய மாதாவை திட்டுவதாகும். ஒவ்வொரு அடியும் பெற்ற தாயை அடித்ததாகும். புத்தி கெட்ட வர்த்தகர்களே, தொண்டர்கள் பெருமையை இப்பொழுதாவது உணருங்கள். வீணாக பாவமூட்டையை சுமந்துகொண்டு திண்டாட வேண்டாம். பணம் சம்பாதிப்பது பெரிதல்ல. யோக்கியதையே பெரிது. பண ஆசையால் கண்கெட்டு படுகுழியில் விழவேண்டாம்.

Koviloor Digital Library

# அமெரிக்காவிற்கு ஒரு காந்தி.

"கிறிஸ்டியன் ரெஜிஸ்டர்" என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியர் எழுதியுள்ள குறிப்பில் பின்வருமாறு கூறுகிறார்:—

அமெரிக்காவுக்கு ஒரு மகாத்மா காந்தி தேவை. அது, தன் அரசியல் தீமைகளினின்று விடுதலை செய்து கொள்ள அவர் வேண்டும் என்று நாம் கூறவில்லை. சிக்கலான ஒரு நாகரிகத்தினின்று விலகி, அமைதிக்குரிய கலைஞானப் பயிற்சியில் அபிவிருத்தி யடைய வேண்டுமென்பதற்காகவே காந்தியம் வேண்டுமென்று நான் கூறுகிறேன். இப்பொழுது நடைபெறும் இயந்திர காலத்தை ஆதரித்து நாம் பல சமாதானங்கள் கூறலாம். திறமையாகவும், வேகமாகவும், சுகமாகவும் காரியங்கள் நடைபெற இந்த இயந்திர உலகம் பெரிதும் உபயோகமுள்ளதாயிருக்கிறது. ஆனால் இந்த இயந்திரங்களின் சுழற்சியால் நரம்புகள் தளர்ந்து விடுகின்றன; வாழ்க்கை சிக்கலாகி விடுகிறது. மனித சமூகத்திற்குரிய விஷயங்களில் அதிகமான மின்சார சக்தி உபயோகிக்கப் படுகிறதென்று சமீபத்தில் ஓர் அறிஞர் கூறினார். இதனால் வாழ்க்கையானது செயற்கையாகி விடுகிறது என்று அவர் வருந்தினார். இயற்கையை விளையாட்டுப் பொம்மைகள் போல் கருதி அதனை மாற்றச் சிலர் முயன்று வியாபார நலத்திற்காக உபயோகிக்கப் பார்க்கின்றனர். மலைகளையும், ஆறுகளையும், ஏரிகளையும், மாற்றி மனித சமூக நலத்திற்காக உபயோகிக்க முயற்சி செய்யப் படுகிறது. ஒரு காலத்தில் நடக்கமுடியாத நிலையில் இருந்த நாடுகளில் இப்பொழுது அழகிய பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. காம்பாயிருந்த நிலங்கள், இதுகாலை, ஆகாய விமானங்கள் நிற்கக் கூடியவாறு பண்படுத்தப்படுகின்றன. இந்தியர்களிடை மாத்திரமல்ல, உலக தத்துவ ஞானத்தினிடமே காந்தியடிகளிடம் நிரம்பிய செல்வாக்கு இருக்கிறது. அவரிடம் அதிகமான சக்திகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர் தம் கொள்கைப்படி நடக்கிறார். அவர் லண்டன் சர்வகட்சி மகாநாட்டுக்குச் சென்றபோது, முதல் வகுப்பு வண்டியில் செல்லவில்லை. கப்பலின் மேல் தட்டிலேயே சென்றார். திராட்சைப்பழம், பேரீச்சம்பழம் ஆட்டுப்பால் முதலிய உணவுப்பொருள்களைத் தம்முடன் கூடவே எடுத்துச் சென்றார். இது மாத்திரமல்ல; ஒரு கைராட்டினத்தையும் ஸ்ரீமான் தோரு எழுதிய 'சட்ட மறுப்பு' என்ற புத்தகத்தையும் எடுத்துச் சென்றார். அவருடைய எளிய வாழ்வே, அவருக்கு உலகத்தில் ஏற்பட்டுள்ள செல்வாக்குக்குக் காரணம். இந்த உதாரணத்தைப் பின் பற்றினால் அமெரிக்கா நற்பயனடையாதா?

# மானங் கெட்ட சர்க்கார்

முட்டுவதற்கு முன்பு குனிய வேண்டுமென்ற புத்தி இந்த சர்க்காருக்கு கிடையாது. முட்டி மண்டையில் அடிபட்ட பின்பே குனியும் புத்தி வருவது வழக்கம். இம்மாதிரி இந்த சர்க்கார் செய்திருக்கும் திருவிளையாடல்களை எண்ணி முடியாது. சுபாஷ் பாபு, ஜகத்தால் என்ற மில் பிரதேசத்திற்கு ஒரு மகாநாட்டில் தலைமை வகிக்கச் சென்றார். உடனே பிறந்தது 144. சுபாஷ் பாபு ஜகத்தால் பிரதேசத்திற்குள் நுழையு முன்பே ஜகத்தால் போலீஸ் புலிகள் அவரை கைது செய்தார்கள். உத்தரவை மீறு முன்பு எப்படி கைது செய்யலாம் என்ற பேச்சு கிளம்பியது? சர்க்காருக்கு அப்பொழுதுதான் விழிப்பு ஏற்பட்டது. கைது செய்யவில்லை யென்றும், தடுத்து வைத்திருப்பதாகவும் சர்க்கார் அறிக்கை வெளியிட்டார்கள். சரி, எவ்வளவு நேரம் வைத்திருந்தார்கள்? 31 மணி நேரம். உண்ண உணவு கிடையாது. சகோதரர் ஒருவரைத் தவிர வேறு யாரையும் பேட்டி காண விடவில்லை. இது என்ன யோக்கியதை? ஜனவரி மாதம் நடந்த பூர்ண சுயராஜ்ய விழாவின் போது சுபாஷ் பாபுவை கைது செய்த சமயத்திலும், உண்ண உணவில்லாமலும், காயத்திற்கு மருந்து போடாமலும் வெகு நேரம் வரை வைத்திருந்தார்கள். சுபாஷ் பாபுவைப் போன்ற தலைவர்களுக்கே இந்த கதியானால் மற்ற சாதாரணமானவர்களைப் பற்றி கேட்க வேண்டியதேயில்லை. கடைசியாக சுபாஷ்பாபுவை கல்கத்தா போகும்படி விடுதலை செய்தார்கள். கல்கத்தா வந்தவுடன் மறுபடியும் தாம் ஜகத்தால் போகப்போவதாக சுபாஷ்பாபு அறிவித்தார். சர்க்கார் விழித்தது. தலையை சொறிந்தது. இந்த சங்கடத்திலிருந்து எப்படி தப்புவது என்று யோசித்தது. கடைசியாக 144வது பிரிவு உத்தரவை வாபஸ் வாங்கிக்கொண்டது. முட்டிய பின்பே சர்க்காருக்கு புத்தி

(327-ம் பக்கம் பார்க்க)

# பொய்வழக்கு ஜோடிக்கும் போலீசார்

பண்டித ஜவஹர்லால் நேரு "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:

கோசிகலான் வழக்கில் நீதிபதி அளித்துள்ள தீர்ப்பு பெரிதும் வியக்கத் தக்கதாயிருக்கிறது. ஹிந்து-முஸ்லிம் சச்சரவை யொட்டி இந்த வழக்கு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. ஜில்லாவில் பெரிய தானிய மார்க்கட்டு என்று சொல்லப்படும் மார்க்கட்டில் உள்ள பிரபல வியாபாரிகள் உள்பட சுமார் எழுபது பேர் இதில் குற்றவாளிகளாகச் சேர்க்கப் பட்டிருந்தார்கள். இந்த வழக்குச் சுமார் பதினைந்து மாதகாலம் நடைபெற்றது. இந்த வழக்கை நடத்தியவர் ஒரு கிறிஸ்தவர். சுமார் 210 பக்கம் கொண்ட தீர்ப்பை இவர் அளித்து எல்லாக் குற்றவாளிகளையும் விடுதலை செய்து விட்டார். இந்த வழக்குக்குக் காரணமாக நடைபெற்ற சச்சரவு வகுப்புச் சச்சரவல்லவென்றும், இதில் காங்கிரஸ் பெயரை இழுப்பது பொருந்தாதென்றும் இவர் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார். இவர், தமது தீர்ப்பில் கூறியுள்ள சில பாகங்கள் வருமாறு:—

"இதைவிடக் கேவலமான ஒரு பிராசிக்யூஷன் வழக்கை நினைக்கக்கூட முடியாது. ஏற்கெனவே கொள்ளை யடிக்கப்பட்டதனால் துன்ப மடைந்தவரும் நிரபராதிகளுமானவர்கள் இதில் சம்பந்தப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதனால் இவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய முடியாமற் போனதுடன், இவர்கள் பிரியாதுகள் கொண்டு வரவும் முடியாமற் போய்விட்டது.'.

ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரைப் பற்றிக் கூறும்போது, "உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் இங்ஙனம் வேண்டுமென்றே பொய் சொல்வது வெறுக்கத் தக்கதாயிருக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

போலீசாரால் கலைக்கப்பட்ட ஒரு கூட்டத்தைப்பற்றிக் கூறுகையில் "வேண்டுமானால் அதிகாரிகள் கூட்டத்தைத் தடுத்திருக்கலாம். அப்படித் தடையுத்தரவை மீறிக் கூட்டம் கூட்டப் பட்டிருக்குமானால், தடிப்பிரயோகம் செய்து அதைக் கலைத்திருக்கலாம். ஆனால் காலித்தனம் செய்து அதைக் கலைத்திருக்க வேண்டியதில்லை. தங்களுக்கு யாராரைக் கைது செய்ய வேண்டுமென்றிருந்ததோ அவர்களெல்லாரையும் போலீசார் முதலில் கைது செய்து விட்டனர். பிறகு இவர்கள் கலகத்தில் சம்பந்தப் பட்டிருந்தார்கள் என்று கூற சாட்சிகள் கொண்டு வரப்பட்டார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

விசாரணையின் போது, காங்கிரஸ்காரர், காங்கிரஸ் உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்கள் அடங்கிய ஒரு ஜாபிதாவைத் தாங்கள் வைத்துக் கொண்டிருப்பதாகப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கூறினார்கள். ஆனால் அது இரகசிய தஸ்தாவேஜு என்ற காரணத்தினால் அதை ஆஜர்படுத்த முடியாதென்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கூறிவிட்டார்.

எதிர் தரப்பு சாட்சிகள் போலீசாரால் பயமுறுத்தப்பட்டதோடு, போலீஸ் சட்டத்தின் 31-வது பிரிவுப்படி குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

இறுதியாக செஷன்ஸ் நீதிபதி குறிப்பிடுவதாவது:—"போலீசாரால் சுலபமாகத் தடுக்கப்பட்டிருக்க வேண்டிய ஒரு சிறிய சச்சரவு, ஒரு வகுப்புச் சண்டையாகச் செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்தின் பணம் சுமார் அரை லட்சம் ரூபாயாவது செலவழிந்திருக்கும். இந்தக் கோர்ட்டின் ஒரு வருஷ காலம் வீணாக்கப்பட்டது. ஒன்றுமறியாத பலர் சுமார் 15 மாத காலம் காப்பில் வைக்கப்பட்டிருந்தனர். இதனால் அவர்கள் வாழ்க்கையை அழிந்துவிட்டதுமல்லாமல், பெரிய தானிய மார்க்கெட்டும் அழிந்து போய்விட்டதென்று கூறலாம்."

இந்த விநோதமான வழக்கைப்பற்றி மேலே கூறப்பட்ட சில பாகங்களைக் கொண்டு ஒருவாறு தெரிந்து கொண்டிருக்கலாம். இந்தத் தீர்ப்பே, அரசாங்கத்திற்கும் போலீசாருக்கும் போதிய கண்டனமாகும்.

---

மகாத்மா பயமற்றவர். தன்னுடைய கட்சி நியாயமானது என உறுதி கொண்டவர். ஆகவே அவரை நயத்தாலோ பயத்தாலோ தோற்கடிக்க முடியாது. நியாயவாதங்கள் ஒன்றிற்கே அவர் கட்டுப் படுவார். இந்த சோதனை காலத்தில் அவருக்கு நியாயபுத்தியும் கடவுளும் துணை நிற்பார்களாக.—டிவாலா (ஸரிஷ் தலைவர்.)

Koviloor Digital Library



# ஒரு வருஷத்திற்கு 13 மாதங்கள்

இப்பொழுதுள்ள ஆங்கில மாதங்களில் 28 முதல் 31 வரை நாட்கள் இருக்கின்றன. ஒரே தரமாயில்லை. இதனால் மிகுந்த கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எல்லா மாதங்களுக்கும் ஒரே விகிதப்படி நாட்களை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இதைப்பற்றி யோசிக்க 60 தேசங்களின் பிரதிநிதிகள் சென்ற 12உ ஜினிவாவில் கூடியிருக்கிறார்கள். அவர்கள் ஒப்புக் கொண்டால் அடியிற்கண்ட விவரப்படி 1934ம் வருஷம் முதல் மாதங்கள் மாறுதலடையும்.

ஒரு வருஷத்துக்கு இப்போது 12 மாதங்கள் இருந்து வருகின்றன. ஆனால் இந்தப் புதிய முறைப்படி ஒரு வருஷத்துக்கு 13 மாதங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஜுன் மாதத்துக்கும் ஜுலை மாதத்துக்கும் இடையில் "ஸோல்" என்று ஒரு புதிய மாதத்தை நுழைக்கிறார்கள். இந்தப் புதிய ஏற்பாட்டின்படி மீ 1-க்கு 28 நாள் கொண்ட மாதங்கள்தான் இதின்படி 29, 30, 31 தேதிகள் உள்ள மாதங்களே கிடையாது. 13 ஐ 28 ஆல் பெருக்கினால் 364 ஆகிறது. எனினும் வருஷம் ஒன்றுக்கு 365 நாள்கள்தான். இந்தப் புதிய முறைப்படி 13 மாதங்களுக்கு 364 நாள்கள் போக மீதி இருக்கும் 1 நாளான 365வது நாளுக்கு "வெற்று நாள்" என்று பெயர். இதன்படி ஒவ்வொரு வருஷமும் ஞாயிற்றுக் கிழமையில் ஆரம்பித்து சனிக்கிழமையில் முடியும். அதாவது பிரதி வருஷமும் ஜனவரி மீ 1உ எப்போதும் ஞாயிற்றுக் கிழமையாகவே இருக்கும். டிசம்பர் மீ 28உ எப்போதும் சனிக்கிழமையாகவே இருக்கும். வெற்றுநாள் என்பதற்கு எந்த கிழமையின் பேரும் கிடையாது. இதனால் இப்போது இருப்பதுபோல் எல்லா கிழமைகளிலும் இனி வருஷம் பிறக்காது. எனவே ஒவ்வொரு மாதத்தின் ஒவ்வொரு தேதிக்கும் எல்லாம் எப்போதும் ஒரே மாதிரியாகவே கிழமைகள் வரும். எல்லா வருஷங்களிலும் இப்படியே வரும். இது ஒரு புறமிருக்க இனிவரும் வருஷங்களில் 3மீ ஒரு கால் வருஷமாக கணக்கிடப்படுவது இராது. 1933வது அல்லது 1934வது வருஷம் (எப்போது இந்த முறை ஆதாரத்திற்கு வருகிறதோ அந்த வருஷத்தில்) ஜனவரி மாதம் 28 தேதிக்குப் பிறகு பிறந்த நாள்களெல்லாம் மாறுதலடையும். இது மாதச் சம்பளக் காரர்கள் வட்டிக் கடன் காரர்கள், முதலானவர்களை வெகுவாய்ப் பாதிக்கும். இது முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், யூதர்கள் முதலானவர்களின ஒய்வு நாட்களைப் பாதிக்கும். உண்மையில் அவர்கள் மதப்படி ஒய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய தினத்தில் வேலை செய்ய வேண்டியதாகவே நேரிடும்.

ஒவ்வொரு வருஷமும் 365 நாள்களுக்கு 12 நிமிஷம் 14 ஸெகிண்டு குறைவு. இதை சரிப்படுத்த வேண்டியதற்காக 1582வது வருஷத்தில் அக்டோபர் மீ 4 தேதிக்குப் பிறகு 15 தேதி என்று 10 நாள் அதிகம் தள்ளி ஏற்பாடு செய்தார்கள். ஆனால் கிழமையை மாத்திரம் மாற்றவில்லை. வியாழக்கிழமைக்குப் பிறகு வெள்ளிக்கிழமை வந்தது.

# அநியாயம், கொடிய அநியாயம்!

பைத்தியம் பிடித்த நாய்களை தெருக்களில் விரட்டி விரட்டி அடிக்கும் பரிதாப செயலை இந்தியர்கண்டால் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் சில மாதங்களுக்குமுன் சித்தாகாங்கிலுள்ள மூன்று பள்ளிக்கூடங்களில் வெறி கொண்ட கூர்க்க சிப்பாய்கள் இரண்டு வெள்ளையர் தலைமையில் புகுந்து நடத்திய அட்டூழியம், கொடிய கோரமான செய்கை. திகிலடையச் செய்கிறது. பையன்களையும் வாத்தியார்களையும் விரட்டி அடித்தது மல்லாமல் ஈட்டியால் குத்தியும் துன்புறுத்தி யிருக்கிறார்கள். ஐயோ அரசரின் ஆடை அணிந்து அநியாயம் புரிவது நியாயமா? நாகரிக ஜாதி யென்று நிமிருடன் பேசும் ஆங்கிலேயர்களா இப்படிச் செய்வது? உலகம் பார்த்து பிரமிக்காதா? அமெரிக்காவில் கறுப்பு மனிதர்களை "லின்சிங்" என்று சித்திரவதை செய்து வந்தார்கள். "ஜாலின்வாலாபாக்" அட்டூழியம் அதிகமென நினைத்த நாம் இச் செய்தி அவைகளை மறக்கச் செய்துவிட்டன.

அடிபொறுக்க முடியாமல் ஓடின ஏழை இந்திய மாதாவின் பசலைகளைப் பரக்கப் பரக்க, துடிக்கத் துடிக்க அடித்த அநியாயத்தை யாரிடம் முறையிடுவது! ஈசனே உனக்கு கண்ணில்லையா?

ஈட்டிக் குத்தும், தடி கம்பு தாண்டவமுமா பால் மணம் மாறாத பசலைக்கு? ஐயோ! பள்ளிக்கு மாணவர் பயத்தால் வர மறுக்கிறார்களாம். இங்கிலாந்தில் வட்ட மகா மேஜையில் வட்ட சம்மணம் போட்டுக் கொண்டு தலை ஆட்டும் பிரதிநிதிகளே! உங்கள் உள்ளத்தில் தைக்குமா? இதற்கு ஒரு பரிகாரமில்லாமல் நீங்கள் வட்ட மேஜையில் திரும்பவும் அமரப்போகிறீர்களா—சர்க்கார் என்ன பதில் சொல்லுகிறார்கள் பார்ப்போம்.

Koviloor Digital Library



## திருப்பதி க்ஷவரம்

திருப்பதி க்ஷவரம் பேர் பெற்றது. அங்குள்ள அம்பட்டர்கள் தந்திரம் உலகப் பிரசித்தி பெற்றது. பக்தர்கள் பிரார்த்தனையில் தலைமுடி காணிக்கை பிரபலமானது. வசந்த காலத்தில் கூட்டங் கூட்டமாக காணிக்கை செலுத்த பக்தர்கள் திருப்பதிக்குச் செல்லுவார்கள். அச்சமயம் அங்குள்ள அம்பட்டர்களுக்கு நல்ல வரும்படி. இருந்தாலும் போட்டிக்கு குறைவில்லை. தலைமுடி காணிக்கைக்காக அம்பட்டர்களுக்கு நல்ல காசு கிடைக்கும். ஆகவே கூடியவரை அதிகமான பேர்களை தனக்கு இழுத்துக் கொள்ள ஒவ்வொருவனும் முயல்வான். அதற்காக ஒவ்வொருவர் தலையிலும் கத்தியால் ஒரு இழுப்பு இழுப்பான். பூரா க்ஷவரம் முடிவதற்குள் மற்றவர்கள் காத்திருக்க மாட்டார்கள். ஒருவர் தலையில் ஒரு அம்பட்டன் கத்தி போட்டால் மற்றொருவன் அவனுக்கு வேலை செய்ய மாட்டான். இந்த தந்திரத்தை கைக்கொண்டு புதிது புதிதாக வருபவர்கள் தலையில் ஒவ்வொரு இழுப்பு இழுத்து வரிசையாக உட்காரும்படி செய்து விடுவான்.

வட்டமேஜை மகா நாட்டை நடத்துபவர்கள் திருப்பதி அம்பட்டனிடமிருந்து பாடங்கற்றுக் கொண்டிருக்கிறார்கள் போல தெரிகிறது. ஒரே விஷயத்தை பூராவாக பேசி முடிவு செய்ய முயற்சித்தால் மகாநாடு முறிந்து போகு மென்று பயப்படுகிறார்கள். ஆகவே ஒன்றை எடுத்து கொஞ்சம் பேசுவதும், பின்னால் அதை விட்டு மற்றொன்றுக்கு தாவுவதுமா யிருக்கிறார்கள். ஐக்கிய நிர்மாணத்தைப் பற்றி முதலில் யோசிக்க இறங்கினார்கள். அதிலிருந்து மைனாரிட்டி விஷயத்திற்கு குதித்தார்கள். அதில் தகராறு ஏற்படவே உடனே ஐக்கிய பணநிர்வாகத்திற்குத் தாவினார்கள். அங்கும் தகராறு ஏற்படலாம். அங்கிருந் [illegible] கமிட்டிக்குக் குதிப்பார்கள். அங்கும் தகராறு ஏற்படலாம். அங்கிருந்து வேறொன்றுக்கு போவார்கள். இம்மாதிரி தாவிக் கொண்டிருப்பது அவர்கள் ஆத்திரபுத்தியை காட்டுகிறதே யொழிய, சாமர்த்தியத்தை காட்டவில்லை. இந்த மகாநாடு இருக்கிற கஷ்டங்களை நிவர்த்திக்கப் போவதில்லை. கஷ்டங்கள் மகாநாட்டை விழுங்கிவிடும். காரண மென்ன? மகாநாட்டின் அமைப்பே! நவக்கிரகங்கள் மாதிரி 90 பிரதிநிதிகளும் ஒவ்வொரு பக்கம் இழுக்கிறார்கள். இருவர் கூட ஒரே அபிப்பிராய முடையவர்கள் அதில் இல்லை. காலை முதல் அஸ்தமனம் வரை மகாநாட்டில் அபிப்பிராய பேதம், அபிப்பிராய பேதம், அபிப்பிராய பேதமே! இது ஒன்றைத்தவிர வேறு எதையும் காணமுடியவில்லை.

—பிரீபிரஸ் ஜர்னல்.

## இந்தியா மந்திரி பூச்சாண்டி.

ராணுவ விஷயத்தைப்பற்றி யோசிக்க இந்தியா மந்திரி ஆபீசில் ஒரு கூட்டம் நடந்தது. இந்தியா மந்திரி அதில் பேசியபோது, இந்தியரின் கீழ் வெள்ளை ராணுவ அதிகாரிகள் வேலை செய்ய பிரியப்படமாட்டார்கள் என்று சொன்னாராம். இம்மாதிரி வெட்ட வெளிச்சமாக சொல்லியதைக் கண்டு மகாத்மா சந்தோஷப்பட்டாராம்: ஆம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியா ஒரு பங்காளி என்று சொல்லிவந்த யோக்கியதை இதனால் வெட்ட வெளிச்சமாயிற்று. உண்மையாகவே இந்தியாவிற்கு பிரிட்டன் சம அந்தஸ்து கொடுக்கப் பிரியப்படுமானால், வெள்ளையர் இந்தியரின் கீழ் வேலை பார்க்க மாட்டார்கள் என்று சொல்ல நாக்கு துணியுமா? இந்தப்பேச்சு நிறத்திமிரையும் அகம்பாவத்தையுமே காட்டுகிறது, சம சுதந்திரம், கூட்டாளி, பங்காளி என்று பிரிட்டன் பேசுவதெல்லாம் வெறும் ஹம்பக் என்று இதனால் வெளிப்படுகிறது. வெள்ளையர் வேலை பார்க்க இஷ்டப்படாவிட்டால் யாவரும் அதற்காக அழப்போவதில்லை. ஆயிரம் நமஸ்காரம் செய்து வழியனுப்ப தயாரா யிருக்கிறோம். இந்த பூச்சாண்டிக்கு பயந்து ராணுவத்தை இந்தியரிடம் ஒப்படைக்க வேண்டாமென்று இந்தியா ஒருநாளும் சொல்லாது. மகாத்மா சொல்லியபடி, இன்றே பிரிட்டிஷார் இந்நாட்டை விட்டு போய் விட்டாலும், இந்தியருக்கு ராணுவப் பயிற்சி அளிக்க ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் முதலிய நாடுகள் தயாரா யிருக்கின்றன. துருக்கி அம்மாதிரியே செய்தது. ஆப்கனிஸ்தானமும் அந்த வழியையே பின் பற்றியது. ஆகவே, இந்தியா மந்திரியே, உமது பூச்சாண்டியை நிறுத்தும்.

Koviloor Digital Library



# "வந்தேன், பார்த்தேன் வென்றேன்."

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி)

காந்திஜி பிரிட்டனிலுள்ளோரின் இருதயத்தை வென்று வருகிறார். இங்ஙனம் அவர் வெகு எளிமையும், லாவண்யமும் கொண்ட முறையில் வெகு வேகமாக வென்றுவருவதை சீஸரது மொழிகளாலேயே வர்ணிக்க முடியும். "நான் வந்தேன்-பார்த்தேன் - வென்றேன்" இதுவே அம்மொழிகள். இதுபற்றி தினசரித் தந்திகள் மூலம் கிடைக்கும் செய்திகள் மகிழ்ச்சி யுண்டாக்குவனவாகும். காந்திஜியின் அன்பும், தாராளமான மனப்போக்கும், ஞானமும், நல்லுணர்ச்சியும் ஒருங்கு சேர்ந்திருக்கையில் அவருக்கு இவ் வெற்றி எம்மாத்திரம் ? எது எவ்வாறு போயினும் மகாத்மா காந்தி சீமைக்குப் போனது வீணாகிவிடாது. சென்ற வருஷம் பிரிட்டிஷார் நமது பதிலை யறியும்படி செய்தோம். இவ் வருஷம் சமாதானத்தில் நமக்கு இருக்கும் ஆர்வம் முதலியவைகளை மகாத்மா மூலம் நாம் காட்டுகிறோம். இது வியர்த்தமாக முடியாது. நமது வேலைத் திட்டம் நிறைவேறுவதற்கு சத்தியாக்கிரகத்தை தொடர்ந்து நடத்தவேண்டுமெனினும், நாம் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கவேண்டும். இவ்விதம் தாமதிப்பதால் மகாத்மாவும் இந்தியாவும் அதிக பல முள்ளவர்களாவார்கள்.

—யங் இந்தியா.

(326ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது. ஆனால் அதை காட்டிக்கொள்ளவில்லை. குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றது போல கதை செய்கிறது. ஜகத்தால் பிரதேசத்தில் அபாயம் ஏற்படக் கூடிய நிலைமை போய்விட்டதாம். அதனால் உத்தரவை ரத்துச் செய்தார்களாம். இந்த நொண்டிக் காரணத்தை கழுதை கூட ஒப்பாது. 2 நாட்களுக்கு முன்பு ஏற்பட்டிருந்த "அபாயம்," 2 மாதம் வரை தடையுத்தரவு போடவேண்டிய "அவசியம்" எப்படி இரண்டு நாட்களில் பறந்து போயின என்பது அதிசய மாகவே இருக்கிறது. சர்க்காருக்கு இப்பொழுது புத்தி வந்ததைக்கண்டு நாம் அதை வாழ்த்தப் போவதில்லை. இந்த மானங் கெட்ட சர்க்காருக்கு இம்மாதிரி முட்டி முட்டி குனிவதே வழக்கமாய் போய்விட்டது.

# மின் வெட்டு

## யார் குரங்கு?

பார்டோலியில் போலீசார் உதவியைக் கொண்டு குடிகளிடம் பலவந்தமாய் வரி வசூலித்தார்கள். அதைப்பற்றி விசாரணை நடக்கிறது. ஒருவர் வீட்டில் அதிகாரிகள் நுழைந்ததும் "அட குரங்கே" என்று வீட்டுக் காரரை கூப்பிட்டார்களாம். வீட்டுக்காரர் குரங்கா, அல்லது அழையாத வீட்டிற்குள் நுழைந்து கிடக்கிறசாமான்களை தூக்கிக் கொண்டு போகிறவர்கள் குரங்குகளா? யாரிடம் குரங்குச் செய்கை இருக்கிறது?

## இந்துக்கள் முட்டுக் கட்டை

மைனாரிட்டி தகராறை தீர்த்து வைக்க வட்ட மேஜை மகாநாட்டு பிரதிநிதிகள் மூவரைக்கொண்ட பாரபட்சமற்ற கமிட்டி நியமிக்க முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இந்துக்களும், சீக்கியரும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. சர்வதேச சங்கம் போன்ற சம்பந்தமில்லாதவர்கள் கமிட்டி வேண்டும் என்று சொன்னார்கள். இதனால் சமரசப் பேச்சு முறிந்தது. இப்பொழுது இந்து பிரதிநிதிகள் ஒரு புதிய யோசனை சொல்லுகிறார்களாம். "சர்வதேச சங்கம் வேண்டாம். பிரிட்டனில் பிரபலஸ்தர்களான மூவர் தீர்ப்புக்கு கட்டுப்படுகிறோம்" என்று கூறுகிறார்களாம். இது என்ன மானங்கெட்ட பேச்சு? சர்வதேச சங்க தீர்ப்பை கோருவதை நியாயமென்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால் பிரிட்டிஷார் மீது நம்பிக்கை பிறந்திருப்பது அதிசய மாகவே இருக்கிறது. சொந்த நாட்டு பிரதிநிதிகளான வட்ட மேஜை மகா நாட்டு பிரதிநிதிகளைவிட பிரிட்டிஷார் எந்த விதத்தில் நம்பிக்கைக்குரியவர்கள்? சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட கட்சிக்காரன் காலில் விழுவது மேலல்லவா? இந்து பிரதிநிதிகளே, உங்களைப் பார்த்து உலகம் சிரிக்கிறது. இந்த மானங் கெட்ட யோசனையை விட்டு விடுங்கள்.

## பூரா மொட்டை

இந்தியா மந்திரி சர். சாமுவேல் ஹோர் கன்சர்வேடிவ் கட்சியார் தொழிற்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ. ஜில்பர்ட் போல் என்பவர் தேர்தலில் ஒரு அபேட்சகராய் நிற்கிறார். அவர் 12வ தேர்தல் பிரசங்கம் செய்தபோது "நான் சர். சாமுவேல் ஹோரை பூரா மொட்டையடித்து விடப் போகிறேன். தேர்தல் தினத்தன்று அவரை சர்வ மொட்டை யாக்குவதற்காகவே நான் இப்பொழுது கஷ்டப்படுகிறேன்." என்றாராம். பேஷ், சரியான யோசனை. பூரா மொட்டை யடித்த பின்பு மண்டையில் கொஞ்சம் "ஐஸ்" வைக்க சிபார்சு செய்கிறோம். அப்புறமாவது மண்டை குளிர்ந்து கன்சர்வேடிவ் பித்தம் இறங்குமா ?

Koviloor Digital Library



மற்றொரு கூச்சல்

ஸ்ரீ. வின்டெர்டன் என்பவர் ஒரு கன்சர்வேடிவ் அபேட்சகர். அவர் தேர்தல் பிரசங்கம் செய்யும்போது, "எந்த ஜனங்கள் வாழ்வை கெடுத்தாரோ, அந்த ஜனங்கள் காந்திக்கு மரியாதை செய்வது அக்கிரமம், பொறுக்க முடியாது" என்று உளறினாராம். அட அசடே, காந்தியின் பெருமையை உன்னால் அறிய முடியவில்லை. ஆனால் லங்காஷயர் ஜனங்களுக்கு அவர் அன்புக்கடலாய் விளங்குவது தெரிகிறது. இது தெரியாவிட்டால், உளறுவதால் என்ன கிடைக்கப் போகிறது? உம்முடன் சேர்ந்த தப்பிலிக் கூட்டத்தை எங்கே? சர்ச்சில், லைடன் ஹாம், ராதர்மீர், பீவர் புருக் எங்கே? காந்தி ஜோதி முன்பு அந்த பொய் பிரசாரகர்கள்—தப்பிலிகள் நிற்க முடியவில்லை. மறைந்து, ஒளிந்து போனார்கள். அவர்களை சென்றவிடம் துலங்காமல் போய்விட்ட பின்பு நீர் கூச்சல் போடுவதால் நடக்கப் போவதென்ன?

ஒன்றுக்கு ஒன்பது

பிரிட்டனில் தற்சமயம் தேர்தல் நடக்கப் போகிறது. அங்கே ஒரு கட்சி மட்டும் இருக்கிறதாக நினைக்க வேண்டாம். நவக்கிரகங்கள் மாதிரி ஒன்பது கட்சிகள் இருக்கின்றன. ஆதியில் கன்சர்வேடிவ், லிபரல் என்ற இரண்டு கட்சிகளே இருந்தன. பின்னால் தொழிற் கட்சி சேர்ந்தது. இப்பொழுது தொழிற் கட்சியில் இரண்டு. கோடாரிக் காம்பான மெக்டானல்ட் தேசிய தொழிற்கட்சி என்ற பெயரோடு புதிய கட்சி ஆரம்பித்திருக்கிறார். லிபரல் கட்சியில் லாயட் ஜார்ஜ் கட்சி ஒன்று. ஹெர்பர்ட் சாமுவேல் கட்சி ஒன்று. தொட்டதெல்லாம் உருப்படாத ஸைமன் கட்சி ஒன்று. இவைகளைத் தவிர மாஸ்லி கட்சி, பொது உடமை கட்சி, சுயேச்சை வாதிகள் கட்சி. இம்மாதிரி நவக்கிரகங்கள் தேர்தலில் நிற்கின்றன. எந்தக் கட்சி ஜெயித்தால் இந்தியாவிற்கு நன்மை? எது ஜெயித்தாலும் இந்தியாவைப் பொறுத்த வரையில் ஒன்றே. எல்லாம் ஒரு குளத்து மண் தானே?

10 ஆயிரம் பேருக்கு வேலையில்லை.

ரயில்வேயில் மறுபடியும் 10 ஆயிரம் பேரை வேலையிலிருந்து விலக்க ரயில்வே போர்ட் முடிவு செய்திருக்கிறதாம். இது பெரிய புரட்டு. ரயில்வே தொழிலாளரை குறைக்கவேண்டியது அவசியமா என்பதைப் பற்றி விசாரிக்க ஏற்பட்ட சமரச கமிட்டி விசாரணை செய்து வருகிறது. அந்த விசாரணை முடியுமட்டும் எந்த சிக்கனமும் செய்வதில்லையென்று ரயில்வே போர்ட் முன்பு உறுதி கூறியிருக்கிறது. அதை மீறி 10 ஆயிரம் பேரை குறைப்பதென்பது பெரிய புரட்டல்லவா? இந்த நம்பிக்கை துரோகத்தை சும்மா விட்டுவிட முடியாது. நோகிற புண்ணில் கோல் கொண்டு குத்துவதுபோல இந்தச் செய்கை இருக்கிறது. இம்மாதிரி வாக்கு புரண்டு கொண்டே போனால் இதற்கு முடிவு எங்கே? இவர்கள் பேச்சைத் தான் எப்படி நம்புவது?

பலாத்காரத்தின் பலன்.

அயர்லாந்து பலாத்காரத்தை உபயோகித்து சுயராஜ்யம் பெற்றது. சுயராஜ்யம் பெற பலாத்காரம் அவசியம் என்று சொல்லுகிறவர்கள் அயர்லாந்தைப் பாருங்கள். எங்கு பார்த்தாலும் வெடிகுண்டு. எங்கு பார்த்தாலும் பலாத்காரம். எங்கு பார்த்தாலும் புரட்சி. தேசியக் கட்சியாருக்குள் இரண்டு பிரிவு ஏற்பட்டு விட்டது. ஒரு கட்சி சர்க்கார் நடத்துகிறது. மற்றொன்று எதிர்க்கிறது. இரண்டும் பலாத்காரத்தை உபயோகிக்கிறது. இதனால் சர்க்கார் சட்டங்களையெல்லாம் தற்காலம் அமுலில் இல்லாமல் செய்திருக்கிறார்கள். அதாவது ராணுவச் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். சர்க்கார் சொல்லுவதெல்லாம் சட்டம். எது வேண்டுமானாலும் செய்யலாம். ஐயோ, பலாத்காரத்தால் வந்த வினையைப் பார்த்தீர்களா? சுயராஜ்யம் பெற்ற பின்பும் சண்டை ஓயவில்லை. இந்தியா சுயராஜ்யமடைய பலாத்காரத்தை கைக்கொண்டால் அதுவும் இந்த கதிக்கே வரும். மகாத்மாவின் அஹிம்சா முறையின் மேன்மையை என்னென்று சொல்லுவது!

---

## காந்திஜி திக் விஜயம்.

சனிக்கிழமை காலை காந்திஜி லண்டனிலிருந்து புறப்பட்டு நாட்டிங்காம் சென்று அங்கு தமது நண்பர்களைக் கண்டார். சனிக்கிழமை மாலை பர்மிங்காமுக்கு சமீபமுள்ள செல்லிபோக் நண்பர் விடுதிக்கு வந்து ஞாயிற்றுக் கிழமையைக் கழித்தார். அங்கு கல்வி, சமுதாயம் முதலிய முன்னேற்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன. சர்வதேசங்களுக்கும் பொதுவான முறையில் வேலை நடக்கிறது. பல பிரபலஸ்தர்கள் இதை பார்வையிட்டுள்ளனர். கவி ரவீந்திரர், இஸ்தாபனத்தை சமீபத்தில் பார்வையிட்டு மிகவும் புகழ்ந்துள்ளார்.

Edited Printed & Published by T. S. C..chalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 22வ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 6வ வியாழக்கிழமை | இதழ் 42

## சிங்கம் பூனையாயிற்று




(ரோம ராஜ்யத்தில் அண்டிராக்கிள்ஸ் என்பவர் அபிப்பிராய பேதம் கொண்டதற்காக அவரை சிங்கத்திற்கு இரையாக்க எண்ணினர். சிங்கத்தை திறந்து விட்டவுடன் அது அண்டிராக்கிள்ஸ் பக்கத்தில் வந்ததும் பூனைபோல அவனை நக்கிக் கொடுத்தது)

மகாத்மா பொல்லாதவர் என்றும், பிரிட்டனுக்கு பரம சத்துரு என்றும் சர்ச்சில் கோஷ்டியார் சீமையில் கூச்சல் போட்டு பிரசாரம் செய்தார்கள். மகாத்மா சீமையில் இறங்கியவுடன் பிரிட்டிஷ் ஜனங்கள் அவரை அவமரியாதை செய்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் என்ன நடந்தது? மகாத்மாவின் பொக்குவாய்ச் சிரிப்பைப் பார்த்ததும் துள்ளிக் குதித்த பிரிட்டிஷ் சிங்கம் அடங்கி ஒடுங்கி மகாத்மாவிற்கு பூனைக் குட்டியாய் விட்டது. பிரிட்டன் எங்கும், முக்கியமாய் லங்காஷயரில் நடந்த வரவேற்பை பார்த்து எதிரிகள் வயிறு எரிகிறார்கள். என்ன எரிந்துதான் என்ன பயன்? மகாத்மாவின் அன்பு பிரிட்டிஷ் ஜனங்களை ஆட்கொண்டு விட்டது.

Koviloor Digital Library



# லண்டனில் நெருக்கடி

லண்டன் நிலைமை ஒன்றும் சரியாயில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போல பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் யோக்கியதை இருக்கிறது. அடுத்த தேர்தலில் உண்மையான தொழிற் கட்சியார் பதவிக்கு வருவார்களா என்பது சந்தேகம். கன்ஸர்வேடிவ்களோ அல்லது அவர்கள் ஆதரவை எதிர் பார்த்து நிற்கும் கூட்டமோ பதவிக்கு வந்தால் அவர்கள் அபிப்பிராயம் எப்படியிருக்குமென்பதை இப்பொழுதே இந்தியா மந்திரி போக்கிலிருந்து அறிந்துகொள்ளலாம். இந்தியா மந்திரி சர். சாமுவேல் ஹோர் பக்கா பேர்வழி. தோல் இருக்க சுளைவிழுங்கும் பெருச்சாளி. அவர் யோக்கியதையை பச்சையாக ராணுவ விவாதத்திலும், நாணய மாற்று விவாதத்திலும் மகாத்மா காந்தி பார்த்துவிட்டார். மற்றப் பிரதிநிதிகளும் பார்த்துவிட்டபடியால் அவர்களுக்கும் புளிப்பு விட்டுப்போயிற்று. விளக்கெண்ணெய் மெக்டானல்டைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. அவர் பெரிய கரி எளிப்பாட்டி. பூசணிக்காயை திருட கூரைமீது திருடன் ஏறினான். வீட்டுக்காரன் வந்ததைப்பார்த்ததும் அவனை ஏமாற்றுவதற்காக "பக்தா, இதுதான் பூலோகமா?" என்றானாம். காங்கிரஸ் வராது என்று மெக்டானல்ட் நினைத்துக்கொண்டிருந்தார். வராவிட்டாலும் சட்ட மறுப்பை நிறுத்தவாவது உபயோகமாயிருக்குமென்று ஒரு வட்ட—நீள—உருண்டை மேஜை மகாநாட்டை கூட்டினார். ஆனால் காங்கிரஸ் மகாநாட்டிற்கு வந்துவிட்டது. மெக்டானல்ட் கலங்கிப்போனார். காந்தி மகாநாட்டில் நுழைந்ததும் "எங்களுக்கு என்ன கொடுக்கப் போகிறாய்? அதை முதலில் சொல்லு" என்று கர்ஜித்தார். மெக்டானல்டுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. எதிர் பாராதது நடந்துவிட்டது. இம்மாதிரி கையும்மெய்யுமாய் மகாத்மா பிடித்துக் கொள்வாரென்று அவர் நினைத்ததில்லை. ஆகவே தமது ஆச்சரியத்தை மறைக்க "பக்தா பூலோகம் இது தானா" என்று கேட்கிறார். அதாவது உங்களுக்கு வேண்டியது என்ன? என்று மழுப்புகிறார். நமக்கு வேண்டியதை காங்கிரஸ் முன்பே சொல்லிவிட்டது. ஆனால் மெக்டானல்ட் அதை அறியாததுபோல பேசுகிறார். உங்களுக்குள் ஜாதிச்சண்டை போகவில்லை என்று நொண்டிக் காரணம் கூறுகிறார். இந்த பூச்சிகளெல்லாம் மகாத்மாவிடம் பலிக்கவில்லை. ஆகவே புதிது புதிதாக முட்டுக்கட்டைபோட முயற்சி செய்யப்பட்டது. ராணுவ நிர்வாகத்திலும், நாணயமாற்று நிர்வாகத்திலும் இந்தியா மந்திரி பச்சையாக சொல்லிவிட்டார்.

இவைகளையெல்லாம் பார்த்து பிரதிநிதிகளுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டதாம். அதிமிதவாதிகளான ஜெயக்கார் சாப்ருவுக்கு கூட பிடிக்கவில்லையாம். அவர்கள் நவம்பர் மாதம் 13உ யன்று இந்தியா திரும்ப கப்பல் டிக்கட் எடுத்து விட்டார்களென்று ஒரு செய்தி கூறுகிறது. மகாத்மா காந்திக்கு ஆதியிலிருந்தே இந்த வட்டமேஜை மகாநாட்டில் நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் பிரதம மந்திரி அடித்த தம்பட்டத்தைக்கண்டு உலகம் ஏமாந்து போயிருந்தது. பிரதம மந்திரியின் யோக்கியதையை உலகத்திற்கு வெளிப்படுத்தவும், சமரசப் பேச்சிற்கு தாம் எப்பொழுதும் தயார் என்பதை காட்டவுமே அவர் லண்டனுக்குச் சென்றார்.

உலகம் இப்பொழுது தெரிந்துகொண்டு விட்டது. இனி என்ன நடக்கப் போகிறது? இதுவே லண்டனிலும் இந்தியாவிலும் பெரிய கேள்வியாயிருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்த்தால் மகாநாட்டிற்கு முடிவு காலம் வெகு சீக்கிரம் ஏற்பட்டு விடுமென்றே தோன்றுகிறது. மகாநாடு முறிவிற்கு இந்தியர் தலையில் பாரத்தைப் போட பிரிட்டன் சூழ்ச்சிசெய்கிறது. என்ன சூழ்ச்சி செய்தாலும் உலகம் அதை நம்பாது. பிரிட்டனின் சூழ்ச்சியாலேயே மகாநாடு முறிந்ததென்பதையும், மகாநாடு வெற்றியடைய வேண்டுமென்பது பிரிட்டன் நோக்கமல்ல என்பதையும் உலகம் அறிந்து கொண்டது. இனி நடப்பதை எதிர்ப் பார்ப்போம்.

---

இராணுவ விஷயமாக இந்தியா மந்திரியான சர். சாமுவேல் ஹோர் தமது கருத்தை வெளியிட்ட பின், வட்ட மேஜை மகா நாட்டைச் சேர்ந்த இந்தியப் பிரதிநிதிகள் அம்மகா நாட்டிலிருந்து வெளியேறிவிட வேண்டிய சமயம் வந்து விட்டதென லண்டனில் பேசிக் கொள்ளப்படுகிறது.

(பம்பாய் கிரானிகள்)

Koviloor Digital Library



# இந்தியர் உடம்பில் பரதேச விஷம்

மகாத்மா காந்தி பர்மிங்ஹாமில் 18உ பேசியதாவது :—

இந்தியாவில் சர்க்கார் ஒரு கட்சியை மற்றொரு கட்சிமீது ஏவிக்கொண்டிருப்பதால், இந்து, முஸ்லிம், சிக்கிய ஒப்பந்தம் ஏற்படுவது கஷ்டமாயிருக்கிறது. இந்தியா கேட்பதை கொடுத்துவிடுமென்று நம்பி வட்டமேஜை மகாநாட்டிற்கு யாரும் வரவில்லை. ஆனால் ஏதோ கொஞ்சம் கிடைக்குமென்று ஒவ்வொருவரும் எதிர் பார்க்கிறார்கள். அந்தக் கொஞ்சமும் ஏழைகளைச் சுரண்டுவதைத் தவிர வேறில்லை. அப்படிச் சுரண்டுவதில் ஒவ்வொரு பிரதிநிதியும் தன்னுடைய சமூகத்திற்கு அதிக பங்கு கிடைக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறார். இந்தியாவைவிட்டு பிரிட்டன் விலகிவிடுமென்று அறிவித்தால், பற்பல சமூகங்களுக்குள்ளும் உடனே ஒற்றுமை ஏற்பட்டுவிடும்.

இந்திய சர்க்கார் சமூகங்களை பிரித்து வைக்கும் ஆப்பைப்போல இருக்கிறார்கள். இந்தியாவின் உடம்பில் அன்னிய விஷம் ஏறியிருக்கிறது. அதை வெளிப்படுத்துவதே பிரிட்டனுடன்செய்துகொள்ளும் உடன்படிக்கையில் முதல் நிபந்தனையாயிருக்கவேண்டும். பிரிட்டிஷ் ஜனங்கள் சர்க்காரை கட்டாயப்படுத்தினாலொழிய வட்டமேஜை மகாநாட்டில் எதுவும் நடக்கப்போவதில்லை.

இந்தியாவில் இந்து முஸ்லிம் சிக்கிய சமரச ஒப்பந்தம் ஒன்றை காங்கிரஸ் செய்து முடித்திருக்கிறது. ஆனால் இங்கே அதை ஒப்புக்கொள்ளுவார்கள் என்று தோன்றவில்லை. ஏனென்னில் லண்டன் மகாநாட்டில் காங்கிரஸ் பல சபைகளில் ஒரு சபையாக விளங்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவிலோ மற்ற எந்த சபையையும் விட காங்கிரசே பிரதானமாய் விளங்குகிறது.

சர்க்காரை நடத்தும் பொறுப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறது. சர்க்காரை காங்கிரசிடம் ஒப்படைத்து மைனாரிட்டிகள் சமரசத்தை தீர்த்து வைக்கும்படி சொல்லுவது பிரிட்டிஷ் சர்க்காரைச் சேர்ந்ததாகும். இந்தியாவிலுள்ள தரித்திரத்திற்கு பிரிட்டிஷ் ஆட்சியே காரணம். இச்சமயம் புதிய டெல்லியை நிர்மாணித்தது பெரிய குற்றம். கோடிக் கணக்கான பேர் பட்டினி கிடக்கும்போது, வைசிராய் மாளிகையில் ஆட்டமும் பாட்டமும், விருந்தும் நடப்பதை பலமாய் கண்டிக்கிறேன்.

# மரியாதை வேண்டுமா?

நியூ யார்க் பட்டணத்திலிருந்து வெளிவரும் "நேஷன்" என்ற பத்திரிகை உலகமெங்கும் மிகுந்த மதிப்பு பெற்றது. அப்பத்திரிகை பிரிட்டனை எச்சரித்து எழுதுகிறது :—

காந்திஜி லண்டனுக்கு தமது லங்கோட்டுடன் வந்துவிட்டார். செப்டம்பர் 13உ யன்று ரேடியோ மூலம் அமெரிக்காவிலுள்ள, கண்ணால் பார்க்க முடியாத கோடிக்கணக்கான ஜனங்களோடு பேசினார்.

"என்னைப் பொறுத்தவரையில் ரத்தம் சிந்தி சுயராஜ்யம் பெறுவதைவிட ரத்தம் சிந்தாமல் பெற பலகோடி வருஷங்கள் வேண்டுமானாலும் காத்திருக்க தயார். எனது 35 வருஷ ராஜிய அநுபவத்திலிருந்து, ரத்தம் சிந்துவதை உலகம் வெறுக்கிறதென்பதை இருதய பூர்வமாய் அறிந்திருக்கிறேன். அதைவிட்டு வெளியேற உலகம் தவித்துக்கொண்டிருக்கிறது. புராதன இந்தியா அந்த வழியை உலகிற்கு காட்டிக்கொண்டிருக்கிறது".

இம்மாதிரி காந்தி பேசினார். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கேட்பார்களானால், அவர்கள் கேட்கும்படி செய்யக்கூடிய ஒரு தேவதை நமக்கு கிடைக்குமானால், அந்த தேவதை அவர்கள் காதிற்குள் ரகசியமாய் சொல்லக்கூடிய விஷயம் ஒன்றே. "அதாவது இதுவே நல்ல தருணம். கொஞ்சம் மரியாதையுடனாவது பிரிட்டன் தப்பித்துக் கொள்ள விரும்பினால் இந்தியாவிற்கு இணங்கும் தருணம் இதுவே".

காந்தி உயிருடன் இருந்து நடத்துகிறவரையிலாவது, அஹிம்சா தர்மப்போர் இந்தியாவில் நிற்கும். அந்த ஆயுதத்துடன் எதிர்த்து நிற்க பிரிட்டனுக்கு வழி தெரியாது. அஹிம்சா தர்ம வீரர்கள் அமைதியோடும், பிடிவாதத்தோடும், எவ்வளவு காலம் வேண்டுமானாலும், பலாத்காரத்தை எதிர்த்து நிற்கக்கூடிய கூட்டமாகும். காந்தியும் அவர் கூட்டத்தாரும் தங்கள் கொள்கையை எக்காலமும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. அவர்களை எதிர்ப்பது ஒரு பக்கம் பிரிட்டனின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்துவதாயிருக்கும். மற்றொரு பக்கம் எவ்வளவு பணத்தை தொலைத்தாகிலும் எவ்வளவு ரத்தத்தை சிந்தியாகிலும், ஜனங்களுக்கு விரோதமாய் தங்கள் விருப்பத்தை கட்டாயப்படுத்தும் கொடுங்கோன் முறையை வெளிப்படுத்தும்.

Koviloor Digital Library



# இந்தியா வேண்டுவ தென்ன?

(மகாத்மா காந்தி)

"லாகூர் தீர்மானமும் காரச்சி தீர்மானமும் ஒன்றேயாகும். காரச்சித் தீர்மானம் லாகூர் தீர்மானத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதனை ஊர்ஜிதம் செய்கின்றது. ஆனால் பூரண சுயேச்சை என்பது கிரேட் பிரிட்டனுடன் கௌரவமான பங்காளித்துவத்தைப்பற்றி அது ஒதுக்கவில்லை என்பதை இத்தீர்மானம் தெளிவாக்குகின்றது. அமெரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் எப்படிப் பங்காளித்துவமிருக்க முடியுமோ அப்படியே இங்கிலாந்திற்கும் இந்தியாவுக்கு மிடையில் நாம் பங்காளித்துவத்தை வைத்துக் கொள்ள முடியும். காரச்சித் தீர்மானம் பூரணமாக சம்பந்தத்தை நீக்கிக் கொள்ள உத்தேச மிருப்பதையும் காட்டுகின்றது. ஏனெனில் நாம் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திருக்க விரும்பவில்லை. ஆனால் இங்கிலாந்துடன் இந்தியா பங்காளித்துவம் பெற்றிருப்பதென்பது சுலபமாக நினைக்கக் கூடியதாக இருக்கிறது. குடி யேற்ற நாட்டந்தஸ்தைக் கண்டு நான் மோகமுற்றிருந்த கால மொன்றிருந்தது. ஆனால் குடியேற்ற நாட்டந்தஸ்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் பொதுவான அந்தஸ்தாக இருக்கக்கூடுமென்று கண்டேன். ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா நியூஜிலாந்து முதலியவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கங்களாகும். இங்கிலாந்தைத் தாயாகக் கொண்டால் இவற்றை எல்லாம் புத்திரிகளாகக் கருதலாம். இந்தியா விஷயத்தில் இங்கிலாந்தைத் தாய்மாதிரி கருத முடியாது. அந்த தேசங்களில் எல்லாம் ஜனங்களில் பெரும்பான்மையோர் ஆங்கிலம் பேசுகின்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது அந்தஸ்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் அவர்கள் ஏதோ ஒரு விதமான சம்பந்தத்தைப் பெற்றிருப்பதைக் காட்டுகின்றது. லாகூர் காங்கிரஸ் இந்தியர்களது மனதிலிருந்து ஏகாதிபத்திய எண்ணத்தையே போக்கிவிட்டது. இது இந்தியர் முன்பு சுயேச்சை இலக்ஷியத்தை ஏற்படுத்தியது. காரச்சி தீர்மானம் அதையேற்கண்ட வியாக்யானத்தை ஏற்படுத்தியது. சுயேச்சை வாய்ந்தவர்கள் என்ற முறையில் கிரேட்பிரிட்டன் விரும்பினால் நாம் அதனுடன் பங்காளித்துவம் வைத்துக் கொள்ளலா மென்று காரச்சித் தீர்மானம் கூறுகிறது. ஏகாதிபத்திய எண்ண மிருக்கும் வரையில் டௌனிங் தெருவிலுள்ள பிரிட்டிஷ் மந்திரி சபையே பிரதமமாக இருக்கும். ஆனால் இந்தியா பிரிட்டனின் சுயேச்சை வாய்ந்த பங்காளியாக இருந்தால் கொள்கைகளை நிர்ணயிக்கும் அதிகாரஸ்தலம் டௌனிங் தெருவில் இல்லாமல் டில்லியிலிருக்கும். இந்தியா சுயேச்சை வாய்ந்த பங்காளியாக இருந்தால் அது யுத்தம், ரத்தஞ் சிந்துதல் இவற்றைக்கண்டு அருவருப்படைந்து வரும். உலகிற்கு விசேஷமான விஷய மொன்றை அளிக்க வல்லதாக இருக்கும். இப்போது யுத்த மேற்பட்டால் யுத்தத்தைத் தடுக்க இந்தியாவும் பிரிட்டனும் சேர்ந்து பொதுவாக முயற்சிக்க வேண்டியிருக்கும். அவை ஆயுத பலத்தால் அல்லாமல் எதனாலும் தடுக்க முடியாத சக்திவாய்ந்த தமது உதாரணத்தின் மூலம் சண்டையைத் தடுக்க முடியும். இது முடியாத காரிய மென்று உங்களுக்குத் தோன்றலாம். நீங்கள் இதுபற்றி எள்ளி நகையாடலாம். ஆனால் தேசப் பிரதிநிதியாகிய நான் அவ்வாறு செய்வது சாத்திய மென்று எடுத்துரைக்க முன்வந்திருக்கிறேன். இதற்குக் குறைவானதெதையும் நான் ஆதரிக்கத் தயாராக இல்லை. இதை அடைய முடியாவிட்டால் நான் தோல்வியுடன் திரும்பிச் செல்லுவேன். ஆனால் அவமானத்துடன் செல்லமாட்டேன். நான் இதற்குக் குறைவான தெதையும் ஏற்கமாட்டேன். இந்தியா போய்ச் சேர்ந்ததும் நான் நீண்ட கஷ்டத்திற்குள்ளாகும்படி தேசத்தாரைக் கேட்டுக் கொள்ளுவேன் அதில் நீங்களும் மனப்பூர்வமாக ஒத்துழைக்கும்படி உங்களை நான் வேண்டுக் கொள்ளுவேன்."

—லண்டன் பிரசங்கம்.

---

காங்கிரஸ் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதை முழுதும் பிரிட்டிஷார் ஆதரிக்கத் தக்கவாறு, இந்தியா, தன தியாகத்தினாலும் சகிப்புத் தன்மையினாலும், தன் தகுதியை பிரிட்டிஷார் உணரும்படி செய்துவிட்ட தென்னும் நம்பிக்கையுடனேயே நான் இங்கிலாந்திற்கு வந்தேன். இந்தியா இன்னும் கொடிய கஷ்டங்களையும் சகிக்கத் தயாராயிருக்கிறது. இந்தியாவின் கஷ்டங்களை நீக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் நான் இங்கே வரவில்லை. ஆனால், தன் ஆட்சியை நிலைநிறுத்த ஆங்கிலேயர்கள் தம்மைத் தடுப்போரின்றி கொடுமைகள் புரியும்படி நேரிடுமேயானால், அத்தகைய கொடுமைகள் ஏற்படாவண்ணம் தடுக்கவே நான் இங்கே வந்தேன்.

—மகாத்மா

Koviloor Digital Library



சென்ற செப்டம்பர் மாதம் 27ந் தேதி மகாத்மா காந்தி லங்காஷயருக்குச் சென்றிருந்தபோது அங்கு டார்வெனிலுள்ள கிரீன்பீல்டு மில்களைப் பார்வையிட்டார். மில்களில் வேலை செய்த வெள்ளைப் பெண்கள் மகாத்மாவைக் குதூகலத்துடன் வரவேற்று அவரைச் சூழ்ந்து நின்று ஆரவாரஞ் செய்தனர். வலது பக்கத்தில் முக்காடு போட்டு நிற்பவர்தான் மிஸ்: ஸ்லேட் என்ற மீராபாய்.

Koviloor Digital Library



# தேவ தாசிகள்

ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதுகிறார்:—

கோயில்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கத்தைப்பற்றி ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் கோயில் தர்மகர்த்தர்களுக்கு விடுத்த வேண்டுகோள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பிரசுரிப்பதற்கு முன் என்னுடைய அபிப்பிராயத்தை அம்மாள் கேட்டிருந்தார்கள். அவர்களுக்கு நான் எழுதிய பதில் பின்வருமாறு:—

காந்தி ஆசிரமம்.
10—10—31.

அன்புள்ள சகோதரி,

தங்கள் 9உ கடிதத்தைப் படித்தேன். என்னுடைய தேச சேவையைப் பாராட்டிக் கூறியிருக்கும் நன்மொழிகளுக்காக வந்தனம்.

கோயில் தென்னை மரங்களைக் கள்ளுக்கு விட வேண்டாமென்று தர்மகர்த்தாக்களுக்கு நான் விடுத்த வேண்டுகோளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது ஒன்றல்ல; அவர்களிடம் இன்னும் பல வேண்டுகோள்கள் செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் அந்த வேண்டுகோள்கள் பயன்பட்டனவா வென்பது வேறு விஷயம். தங்களையும் என்னையும் போன்றவர்கள் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இதுபோலவே, தீண்டாதாருக்குக் கோயில்களுக்குள் வந்து சுவாமி தரிசனம் செய்ய இடங்கொடுக்க வேண்டுமென்பதாக, தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில்களின் தர்ம கர்த்தர்களுக்கும், மடாதிபதிகளுக்கும் வேண்டுகோள் அனுப்பினேன். இவ் வேண்டுகோளும் இதுவரையில் பயன்படவில்லை. சிலர் பதில் எழுதவும் மனம் வைக்கவில்லை. பதில் எழுதியவர்கள் ஏதேதோ இடைஞ்சல்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பொட்டுக்கட்டும் வழக்கத்தை நான் முற்றிலும் வெறுக்கிறேன். வாழ்நாள் முழுதும் கன்னிகைகளாயிருந்து கடவுள் பணிசெய்யும் நோக்கத்துடன் இவ்வழக்கம் ஆதியில் ஏற்பட்டது. ஆனால் அநுஷ்டானத்தில் அது பெரிதும் சீர்கெட்டு, இப்போது தேவதாசிகள் என்றால் விபசாரிகள் என்றே பொருள் ஏற்பட்டிருக்கிறது. இது நமது நாட்டுக்கே பெரிய அவமானம். இவ் வழக்கத்தை யொழித்தல் இன்றியமையாதது.

தங்களுடைய முயற்சியை முழுமனதுடன் முற்றிலும் ஆதரிக்கிறேன். ஆனால் இந்தவேலையையும் என்னையே நடத்தும்படி கேட்காதீர்கள். கிளர்ச்சி நடத்தி இந்த வழக்கத்தை ஒழியுங்கள். அதற்கு வேண்டிய ஆற்றல் தங்களுக்கு உண்டு. தர்மகர்த்தாக்களுக்குத் தாங்கள் வேண்டுகோள் அனுப்புவதை நான் ஆதரிக்கிறேன். அதில் நானும் மனப்பூர்வமாகக் கலந்து கொள்கிறேன்.

தங்கள்
ச. இராஜகோபாலாச்சாரி

# தாமஸ் எடிசன்.

அமெரிக்காவில் பெரிய விஞ்ஞான சாஸ்திரியான தாமஸ் ஆல்வா எடிசன் தமது 84 வது வயதில் சென்ற 18உ யன்று இறந்துபோனார். நவீன உலகத்திலுள்ள பல அதிசயங்களை சிருஷ்டித்தவர் அவரே. போனகிராப், மின்சார விளக்கு, சினிமா முதலிய எண்ணற்ற நூதனங்களை கண்டு பிடித்தவர் எடிசனே. இதுவரை அவர் சுமார் 1000 நூதனங்கள் கண்டு பிடித்திருக்கிறார். தந்தி, ஆகாசத் தந்தி முதலியவைகளில் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்திருக்கிறார். சாகும் வரையில் ஆராய்ச்சி வேலையை அவர் விடவில்லை. 12 வயது வயதில் ரயில் வண்டியில் பத்திரிகைவிற்கும் பையனாயிருந்தார். அச்சமயமே ஆராய்ச்சியில் அவருக்கு ஆவல் ஏற்பட்டிருந்தது. சில மருந்துகளை வைத்து சோதித்துக் கொண்டிருக்கும்போது வண்டியில் நெருப்பு பிடித்துவிட்டது. உடனே கார்ட் ஓடிவந்து எடிசனுக்கு கன்னத்தில் ஒரு அறை கொடுத்தார். அன்று முதல் அவர் காது செவிடாக ஆரம்பித்தது. பேசும் சினிமாவை அவர் 1913 லேயே கண்டு பிடித்துவிட்டார். அவர் மின்சார விளக்கு கண்டுபிடிக்கும்போது இருந்த வீட்டையும் அதிலுள்ள சாமான்களையும் அப்படியே ஒன்று விடாமல் எடுத்து, ஹென்ரி போர்ட் தமது தொழிற்சாலையில் அமைத்திருக்கிறார்.

Koviloor Digital Library



## கண்டேன் காந்தியை!

(லார்ட் காஸ்ட்லி ரோஸ்)

லண்டன் டோர் செஸ்டர் ஹோட்டலில் காந்தியைக் கண்டேன். அவர் பக்கத்தில் உட்கார்ந்து பேசினேன். பேசிக்கொண்டிருக்கும் போது, 2 ஆயிரம் வருஷங்களுக்கு அப்புறம் உலகில் அவதரித்திருக்கும் ஒரு மகானுடன் பேசிக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன். காந்தி தியாகம் ஒன்றிலேயே நம்பிக்கை கொண்டிருக்கிறார். புத்தியுள்ள ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் அவரை ஆதரிப்பார்கள். கொள்கை சம்பந்தப்பட்ட வரையிலாவது நான் அவரை ஆதரிக்கிறேன். அதுவே எல்லா சந்தோஷத்திற்கும் அடிப்படையானது. கிறிஸ்தவ மதத்திற்கும் மற்ற உயரிய மதங்களுக்கும் அதுவே அடிப்படையானது. எல்லையற்ற பரம் பொருளை காணுவதற்கு வாத சக்தியோ மனோ சக்தியோ போதாது. ஆனால் நமது ஆத்மா அந்த பரம் பொருளுடன் சேர்ந்து லயப்பட முடியும். அதற்கு உடம்பைப் பொறுத்த சகலத்தையும் துறக்க வேண்டும். ஆகவே உலகில் அதிகமாய் சேர்க்காமல் இருக்கிறவன்தான் சந்தோஷ முள்ளவன் என்று சொல்ல முடியாது. அதிகமாய் யார் தியாகஞ் செய்கிறானோ அவனே மனிதரில் சந்தோஷ முள்ளவன்.

காந்தி ராஜீயத்தை உதறிவிட்டு மத சீர்திருத்தக் காரராக வெளிவந்திருப்பாரானால் உலகத்தையே புரட்டியிருப்பார். வாழ்வைப்பற்றி அவர் கொண்டிருக்கும் அபிப்பிராயம் செயின்ட் பிரான்கிஸ் கொண்டிருந்த அபிப்பிராயத்தைப் போன்றிருக்கிறது. செயின்ட் பிரான்சிஸ் நமது தேசத்தின் குளிருக்காக கனமான துணிகளை உபயோகித்தார். மகாத்மா அது கூடயில்லை. மெல்லிய துணிகளோடே பிரிட்டன் வந்திருக்கிறார். "பிரிட்டிஷாரை விரும்புகிறேன். ஆனால் அவர்கள் எங்கள் நாட்டை ஆளுவதை விரும்பவில்லை" என்று காந்தி சொல்லுகிறார். நமது நாட்டிலுள்ள (பிரிட்டனில்) ராஜதந்திரிகளைவிட காந்தி பிரிட்டனுக்கு விரோதமாக அதிகம் செய்கிறார் என்று யாரும் சொல்ல முடியாது. "இந்திய சர்க்கார் மோசமானது. அதற்கு நாமே காரணம்" என்று அவர் சொல்லுகிறார். அதில் என்ன தவறு?

## இந்தியாவின் பரிதாப நிலைமை

(ஸ்ரீ ஜமால் முகமது சாகிப்)

சென்ற எப்ரல் மாதத்திலிருந்து ஆகஸ்ட் முடியவுள்ள 5 மாதங்களின் ஏற்றுமதி இறக்குமதி கணக்குகளைப் பார்த்தால், இந்நாட்டின் நிலைமை எவ்வளவு நெருக்கடியா யிருக்கிறதென்பது விளங்கும். இந்த 5 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் விலை 6602 லட்சம் ரூபாயாகும். ஆனால் இதே 5 மாதங்களில் 1929ல் 13419 லட்சத்திற்கும், 1930ல் 10573 லட்சத்திற்கும் ஏற்றுமதியா யிருக்கிறது. இந்த 5 மாதங்களில் இறக்குமதி 5610 லட்சம். இதே மாதங்களில் 1929ல் 10099 லட்சமும், 1930 7664 லட்சமும் இறக்குமதியா யிருக்கிறது. இறக்குமதி போக அதிகமாய் இதே 5 மாதங்களில் ஏற்றுமதியாயிருப்பது 1929ல் 3320 லட்சம். 1930ல் 3009 லட்சம். ஆனால் இந்த வருஷத்திலோ 992 லட்சம்தான். ஆகவே 1929ல் சுமார் 33 கோடியும் 1930ல் சுமார் 30 கோடியாயுமிருந்த இந்த அதிக ஏற்றுமதி இவ்வருஷம் 10 கோடிக்கும் குறைந்துவிட்டது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் இவ்வருஷம் முழுவதிலும் அதிக ஏற்றுமதி 24 கோடிக்குள்தான் நிற்கும்.

மேலே சொல்லிய 5 மாதங்களில் 3 வருஷங்களில் எவ்வளவு தங்கம் வெள்ளி ஏற்றுமதி இறக்குமதியா யிருக்கிறதென்பதைக் கவனித்தால் இன்னம் பரிதாபமாயிருக்கிறது. 1929ல் எப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய 644 லட்சம் பெறுமான தங்கம் இறக்குமதி செய்திருக்கிறோம். 1930ல் 1054 லட்சம். ஆனால் இந்த வருஷத்திலோ ஷை 5 மாதங்களில் தங்கம் இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, 42 லட்சம் பெறுமான தங்கம் ஏற்றுமதியா யிருக்கிறது. ஷை 5 மாதங்களில் 1929ல் 492 லட்சம் ரூபாய் வெள்ளியும், 1930ல் 573 லட்சத்துக்கும் இறக்குமதி செய்திருக்கிறோம். இவ்வருடமோ 130 லட்சத்துக்கே இறக்குமதியா யிருக்கிறது. இந்தியா தங்கம் ஏற்றுமதி செய்யும் நாடல்ல. சாதாரணமாக வருஷம் ஒன்றிற்கு 40 முதல் 70 கோடி வரை தங்கம் இறக்குமதி செய்யும் நாடு. அது ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது, இந்திய ஜனங்கள் எவ்வளவு நெருக்கடியான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

Koviloor Digital Library



## மணித்திரள்

வட்டமேஜை மகாநாடு வீழ்ந்துவிட்டது. இனி நமக்கு வேலை அதிகமிருக்கிறது. நமக்கு வேண்டியது பூர்ண சுயராஜ்யமே. காங்கிரஸ் அதை அடைந்தே தீரும்.

—பண்டித ஜவர்லால்

லண்டனில் என்ன நடைபெறுகிற தென்பதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். இந்தியாவில் என்ன சம்பவிக்கிறதென்பதைப் பற்றியே நீங்கள் கவனமாயிருக்கவேண்டும். மகாத்மாஜி வெற்றிபெறுவாரோ மாட்டாரோ, நாம் இப்போது ஒன்றும் கூறுவதற்கில்லை. எது எப்படியிருந்தாலும் நீங்கள் ஆயத்தமாயிருந்தால் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் காந்திஜிக்கு ஆதரவாயிருக்கும்.

—ஸ்ரீ. சென்குப்தா

ஐக்கியமாகாணத்தில் விளைபொருட்களின் விலைவாசிகள் ரூபாய்க்கு எட்டணா வீதம் குறைந்திருக்க, வரி வஜா ரூபாய்க்கு 2 அணா 7 பை வீதந்தான் உத்திரவிட்டிருக்கிறார்கள். எனவே விளை பொருட்களைக் கொண்டு விவசாயிகள் கிஸ்தி செலுத்த முடியாது. ஆகவே, அவர்கள் விரட்டியடிக்கப்பட்டு பலவித இம்சைகளுக்கு ஆளாக வேண்டியது தான். இந்த நிலைமையில் கிஸ்தியைச் செலுத்த வேண்டாமென்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. இதனாலும் கஷ்டமுண்டென்று நமக்குத் தெரியும். ஓயாது கொடுமை செய்வதே தொழிலாகக் கொண்டுள்ள ஒரு இயந்திரத்தின் கீழ்ப்பட்டு நசுங்குவதைவிட போராடி மடிவதே சிறந்தது.

—ஸ்ரீ. புருஷோத்தமதாஸ் தாண்டன்

## தொண்டர்களுக்குத் தண்டனை

நாமக்கல் கள்ளுக்கடையில் சாத்விக மறியல் செய்துகொண்டிருந்த ஸ்ரீமான்கள் கிட்டுவப்பர், ராஜு செட்டியார், கந்தசாமி செட்டியார், என்னும் 3 தொண்டர்கள் பேரிலும், போலீசார் குடிக்க வருபவர்களை வழிமறித்தும், அவர்களை அடித்ததாகவும் வழக்கு கொண்டுவந்ததில் 17உ தீர்ப்பு சொல்லப்பட்டது. தொண்டர்களுக்கு தலா ரூ 50 அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால் 1 வார வெறுங்காவல் தண்டனையும் அடைய வேண்டுமென்று மாஜிஸ்திரேட் தீர்ப்பு சொன்னார். பணம் கட்டுவதற்கு 3 நாள் வாய்தா கொடுத்திருக்கிறார். தொண்டர்கள் அப்பீல் செய்து கொள்வார்களென்று தெரிகிறது.

—ஒரு நிருபர்.

## தேச பக்தன்.

சென்னையிலிருந்து வெளிவரும் தேசபக்தன் பத்திரிகையின் முதல் பிரதி வரப்பெற்றோம். ஹோம்ரூல் கிளர்ச்சி காலத்தில் அறிஞர் கலியாண சுந்தரனார் ஆசிரியத் தலைமையின் கீழ், தமிழ் நாடெங்கும் தேசபக்தியை சுடர்விட்டு எரியும்படி செய்த பழைய "தேசபக்தன்" ஞாபகம் நமக்கு வருகிறது. ஆகவே "தேச பக்தன்" என்ற பெயர் இந்நாட்டில் என்றென்றும் பழைய வீரநாட்களை ஞாபகப்படுத்துமாகையால், அதற்கு ஒரு மதிப்புண்டு. இப்பொழுது வெளிவந்துள்ள "தேசபக்தன்" வாரப்பதிப்பு. விலை காலணா. ஆசிரியர் ஸ்ரீ. என். தண்டபாணி பிள்ளை. அவர் ஆரம்பித்துள்ள இப் பத்திரிகை பழைய "தேசபக்தன்" பெயரை இன்னம் அதிகமாக பரப்பும் விதத்தில், தீவிரமாய் தேசியத்தில் சேர்ந்து உழைக்குமென்று நம்புகிறோம்.



ஒருவர்:—"இந்தச் செங்கல்லை எங்கே கொண்டு போகிறாய்?

மற்றவர்:—"என் வீட்டை விற்கவேண்டியதிருக்கிறது. அதற்கு மாதிரி கேட்டாலும் கேட்பார்களல்லவோ!"

dited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)


# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் : டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 24வ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 8வ சனிக்கிழமை | இதழ் 43




(ஒரு பக்தன் அனுயாச மரணம் வேண்டுமென்று தெய்வத்தை தினசரி பிரார்த்தனை செய்து வந்தான். ஒருநாள் தெய்வம் "தந்தோம்" என்றது. பிடித்தான் ஓட்டம். குதிங்கால் பிடரியில் படும்படி பக்தன் ஓரே ஓட்டமாய் ஓடி விட்டான்.)

ராம்சே மெக்டனல்ட் தம்முடன் ஒத்துழைக்கும்படி காங்கிரசை பல காலம் பிரார்த்தனை செய்வது போல பாசாங்கு செய்தார். காங்கிரஸ் ஒப்புக் கொண்டது. மகாத்மா சீமைக்குச் சென்றார். ஆனால் ராம்சே மெக்டனல்டுக்கு குஷியில்லை. உண்மையாக கோரினால் அல்லவா குஷியிருக்கப் போகிறது? மகாத்மாவின் நேரடியான கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் நடுங்குகிறார்.

Koviloor Digital Library

# மகா நாடு முறிந்தது

ஒரு போலி பக்தன் தினசரி கோவிலுக்குச் சென்று உருக்கமாய் பிரார்த்தனை செய்தான். "அப்பனே, இந்த மாயா உலகத்தில் என்னை ஏன் இருக்கும்படி செய்கிறாய்? என் உள்ளத்தை நீ அறியாயோ? அறிந்தும் என்னை ஏன் ஆட்கொள்ளவில்லை? உனது திருவடியை அடைய நான் எப்பொழுது பாக்கியம் பெறப் போகிறேன்? எனக்கு சீக்கிரம் அநாயாச மரணத்தை கொடு. அநாயாச மரணத்திற்காக நான் தவிக்கிறேன்" என்று நாள்தோறும் சொல்லிவந்தான். இவன் போலித்தனமாய் நடக்கிறான் என்பதையும், ஊரை ஏமாற்ற பாசாங்கு செய்கிறான் என்பதையும் தெய்வம் அறியும். இருந்தாலும் உலகத்திற்கு காட்டவேண்டும். ஆகவே ஒரு யுக்தி செய்தது. ஒரு நாள் "அநாயாச மரணம் வேண்டும், வேண்டும்" என்று அவன் உருக்கமாய் பிரார்த்தனை செய்யும்போது, திடீரென்று தெய்வம் "தந்தோம்" என்றது. இதைக்கேட்டதுதான் தாமதம். உடனே பக்தன் பிடித்தான் ஓட்டம். ஓரே ஓட்டமாய் குதிங்கால் பிடரியில்பட ஓடியே போய்விட்டான்.

மெக்டொனல்ட் இந்தியாமீது தாம் கொண்டிருக்கும் அன்பைக் கட்டி உருகினார். கண்ணீர் வடித்தார். இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்க காத்துக்கொண்டிருப்பதாயும், காங்கிரஸ் லண்டனுக்கு வந்தால் உடனே பெற்றுக்கொண்டு போய் விடலாமென்றும் சொன்னார். இவையெல்லாம் வெறும் பாசாங்கு என்பதை காங்கிரஸ் அறியும். ஆனால் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் யோக்கியதையை வெளிப்படுத்த லண்டனுக்கு போகவேண்டியது அவசியமென்று காங்கிரஸ் தீர்மானித்தது. மகாத்மா புறப்பட்டுச் சென்றார். என்ன நடந்தது? மெக்டொனல்ட் போலி பக்தனைப் போல ஓட்டம் பிடிக்கிறார். முன்னால் சொன்ன வாக்குறுதிகளையோ, காட்டிய உருக்கத்தையோ, வடித்த கண்ணீரையோ காணவில்லை. உண்மை வெளியாயிற்று.

லண்டன் மகாநாடு முறிந்து விட்டது. சர்க்கார் முறிந்துவிட்டதாக அறிவிக்கா விட்டாலும் முறிந்து விட்டது உண்மை. எதிர்பார்த்தது நடந்தது. இந்தியாவை ஏமாற்ற பிரிட்டிஷ் சர்க்கார் சூழ்ச்சி செய்தது. அதன்படி மகாநாடு முறிந்தது. இம்மாதிரி ஏற்படுமென்பதை காங்கிரஸ் முன்பே அறியும். ஆகவே மகாநாடு முறிந்துவிட்டதற்காக யாரும் ஒரு சொட்டு கண்ணீர்கூட வடிக்கப் போவதில்லை. சீமையில் காலடி வைக்கு முன்பே, மகாநாட்டால் எதுவும் நடக்கப்போவதில்லையென்று மகாத்மா சொல்லிவிட்டார். சீமைக்கு போனபின்போ, இந்தியர் விடுதலை பெற 10 லட்சம் பேர் இறக்கவும் தயாரென்றும், சென்ற வருஷத்தைவிட அதிகமான கஷ்டங்களை அநுபவிக்க நேரிடினும் பின் வாங்கப் போவதில்லையென்றும் சொல்லிவிட்டார். இவற்றிலிருந்து முடிவு என்ன என்பதை நண்பர்களே யூகித்துக் கொள்ளலாம்.

உண்மை இதுவானல், மகாத்மா காந்தி ஏன் இன்னும் சீமையை விட்டு புறப்படவில்லையென்று நண்பர்கள் கேட்கலாம். இதற்கு மகாத்மா காந்தி "நான் இறங்கிய பின்பு எந்த விஷயத்தையும் அரை குறையில் விட்டு வரும் வழக்கமில்லை" என்று சொல்லுகிறார். ஒவ்வொன்றிலும் கரைகாணுவது மகாத்மாவின் சுபாவங்களில் முக்கியமானது. ஆகவே சர்க்காராக லண்டன் மகாநாட்டை கலைக்கிறவரையில் எல்லா முயற்சிகளையும் செய்தே பார்ப்பார். ஒன்று திருப்திகாமான முடிவு ஏற்படவேண்டும். அல்லது லண்டன் மகாநாட்டிற்கு சமாப்தி ஆகவேண்டும். இரண்டில் ஒன்றை செய்து முடிக்கிற வரையில் மகாத்மா சும்மா இருக்கப் போவதில்லை. லண்டன் மகா நாட்டிற்கு சீக்கிரம் அந்திகாலச் சடங்குகள் நடை பெறலாம்.

இனிச் செய்ய வேண்டியது என்ன? வாதத்தால் சுயராஜ்யம் பெற்று விடலாம் என்று லார்ட் இர்வின் உபதேசம் செய்தார். ஜெயக்கார் சாப்ரு அதற்கு தாளம் போட்டார்கள். அந்த பாச்சா பலிக்காது என்பதை ஜெயக்கார் சாப்ருவே உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் இனி என்ன செய்யப் போகிறார்கள்? காங்கிரசுடன் சேர்ந்து போராடுவார்களா? அல்லது முன் போலவே மிதவாதம் பேசி வாழ்நாளை வீண் நாளாக ஆக்கப் போகிறார்களா? காங்கிரசைப் பொறுத்த வரையில் சந்தேகமே கிடையாது. ஒன்று சுயராஜ்யம், அல்லது போர். இரண்டில் ஒன்றிற்கு அது எப்பொழுதுமே தயார். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் இது வரை, காலத்தில் ஒன்றை செய்ததே கிடையாது. முட்டியபின் குனிவதே வழக்கம். அந்தப் புத்தி இந்தியா விஷயத்தில் போய்விடப் போகிறதா ஒரு நாளும் போகாது. எதிர் காலம் மிகவும் பயங்கரமாய் இருக்கிறது. இருள் நிறைந்ததாயிருக்கிறது. கடவுள் வழி காட்டுவாராக!

Koviloor Digital Library



# உனக்கும் எனக்கும் என்ன உறவு?

(ஸ்ரீ. நா. சிவராமன்)

ஸ்காட்லந்து தேசத்தைச் சேர்ந்த "எடின்பரோ" நகரில் ஓர் சந்தில் ஓர் ஸ்திரீ வசித்து வந்தாள். அவளுடைய கணவனை யிழந்து சில நாள்களாயின. அவளுக்கு மூன்று குழந்தைகள். ஆகாரத்துக்கு வழியில்லை. என்ன செய்வாள் பாவம். ஊரிலுள்ள சத்திரங்கள் தோறும் அலைந்தாள். ஒன்றும் கிடைக்கவில்லை. எதாவது ஓர் வீட்டில் போய் உதவி நாடுவாள், அங்கிருந்து விரட்டுவார்கள். வேறோரிடம் போவாள். இப்படியே ஊர் முழுதும் அலைந்தும் உதவி செய்வார் யாருமில்லை. ஒரு நாள் கழிந்தது, இரண்டு தினங்கள் சென்றன. ஒன்றும் கிடைக்க மார்க்கமில்லை. மனம் சோர்வுற்றாள். உடல் வலியும் குன்றியது. அலையவும் முடியவில்லை. விஷ ஜுரம் கண்டது; இறந்தாள். அந்த சந்தில் பல வீடுகளில் விஷ ஜுரமும் பரவியது. அதன் பயனாய் 17 பேர் இறந்தார்கள். பணச் சிக்கனம்!! அந்தோ அந்த அனாதையைக் காப்பாற்றி யிருந்தால்! "என் பணம், பணமே தெய்வம், என் பணத்தை ஏன் பிறருக்காக நான் செலவிட வேண்டும்" என்கிறான் மனிதன். ஓர் அனாதைக்கு விஷஜுரம் வந்தது. விஷஜுரம் அனாதையில்லாத 17 பேரை விழுங்கியது! என்ன ஆச்சரியம்! கதியற்ற அந்தப்பஞ்சை "என் ஐயனே. பார். நான் இவ்வுலகில் உதவியற்றுத் தவிக்கிறேன், நீ எனக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவன். நான உன் தங்கை. உன்னைப்போன்ற உயிர்ப் பிராணி, உன் ரத்தமே என் ரத்தம், என் சதை வேறு உன் சதை வேறல்ல. ஒரேகடவுள் நம் மிருவரையும் படைத்தான். நீ எனக்கு உதவி செய்யவேண்டும்" என்றலறினாள். அங்குள்ளோர் செவி கொடுக்கவில்லை. "நீயாவது எனக்குத் தங்கை யாவது; உனக்கு மெனக்கு மென்ன உறவு? நீ இருந்தாலென்ன இறந்தாலென்ன." என்றனர். ஆனால் உண்மையில் அவள் அவர்களுடைய சகோதரியே என்பதை ருஜுச் செய்து விட்டாளல்லவா? அவளுடைய விஷஜுரம் அவர்களைக் கொல்கிறது. வாஸ்தவத்தில் அவர்களெல்லோரும் அவளுடைய சகோதரர்கள் தான். அவள் போன இடத்தைத்தேடி 17 பேர் பின் தொடர்ந்து விட்டனர்? இருவருக்குமுள்ள உறவை? அவர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, மறுத்தாலும் சரியே.

மேலே வரைந்துள்ள விஷயம் கட்டுக்கதையல்ல. டாக்டர் அடிசன் என்ற ஒரு வைத்தியர் விசாரித்தெழுதியுள்ளதை கார்லைல் என்ற ஆங்கிலக்கவி தம் புத்தகத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார். நம் நாட்டிலுள்ளவர்கள் இதை கவனிக்க வேண்டும். நாம் ஒப்புக்கொண்டாலும் சரி மறுத்தாலும் சரியே—இந்த நாட்டிலுள்ளோர் யாவரும் சகோதரர்களே. ஒரு சாரார் தொழிலற்று வறுமை மிஞ்சிப் பரதவித்தால் எல்லோரையும் பாதிக்காம லிருக்காது. தற்காலம் நம் தமிழ் நாட்டு நெசவு காரர்களது தொழில் மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கிறது. பல நெசவுகாரக் குடும்பங்கள் தொழிலின்றிப் பிச்சை யெடுக்கக் கிளம்பி விட்டார்கள். எவ்வளவோ காங்கிரஸ் பிரசாரம் நடந்தும்கூட சிலர் பளபளப்பையும், விலை சாசத்தையும் கருதி அன்னியத் துணிகளை வாங்குகிறார்கள். நம் தறிகாரர்களைப் பரதவிக்க விடுகிறார்கள். அவர்களுக்கு நாம் என் உதவி செய்யவேண்டு மென்கிறார்கள். அவர்கள் தொழிலற்றுப்போனால் நமக்குற்றதென்ன என்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கு மென்ன உறவு என்கிறார்கள். விலைமலிவாய்க் கிடைத்தாலன்றி இவர்கள் துணியை நாமேன் வாங்கவேண்டும்? விலை மலிவாய் கிடைக்கும் நல்ல சரக்கை வாங்குவதுதான் பொருளாதார சாத்திர மென்கிறார்கள். அந்தப் பேர்வழிகள் மேலே வரைந்துள்ள கதையை ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களா?

---

## கத்தருக்கு ஜே!

மகாத்மா ஜயந்தி வாரத்தில் இந்தியா வெங்கும் 8 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு கத்தர் விற்பனையாயிருக்கிறது. பம்பாயில் மட்டும் 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு ஸ்ரீ. நரிமன் முயற்சியால் விற்றிருக்கிறது. மகாத்மா மீது இந்தியருக்கு எவ்வளவு அன்பிருக்கிற தென்பதற்கும், மகாத்மாவிற்கு இந்தியரிடம், எவ்வளவு செல்வாக்கு இருக்கிற தென்பதற்கும் இதை விட வேறு உதாரணம் வேண்டியதில்லை. இந்த கத்தரில் ஒரு பாகம் வங்காளம், பீகார், கொங்கண நாட்டிலுள்ள பஞ்சத்தால் வருந்தும் ஏழைகளுக்கு உபயோகமாயிருப்பது குறிப்பிடத்தக்கது. கத்தருக்கு ஜே! கத்தரை கண்டு பிடித்து ஏழைகளுக்கு உணவளித்த மகாத்மா நீடூழி வாழ்க!

Koviloor Digital Library



# ஐயோ, மெக்டனல்ட்!

ஐயோ பாவம் மெக்டனல்ட், உமது கதியும் இப்படியாயிற்றே! தொழிற் கட்சி தலைவராய் விளங்கினீர். அந்தக் கட்சியால் இருதடவைக்கு இருதடவை முதல் மந்திரி பதவியும் பெற்றீர். அபேதவாதக் கொள்கையை நிலைநாட்ட அவதரித்த வீரர் என்று உம்மை தொழிலாளர் புகழ்ந்தனர். இன்று அதே தொழிலாளர் கூட்டத்தில் உமக்கு போகக்கூட இடமில்லை. தலைவரோ, உமக்கு இக்கதியும் நேரிட இருந்திருக்கிறதே! தொழிலாளர் கட்சியை கைவிட்டீர். தொழிற் கட்சி கொள்கையை கைவிட்டீர். அதன் பலன் உமது சொந்த தேர்தல் தொகுதியில் உமது பேச்சை கேட்கக்கூட யாருக்கும் விருப்பமில்லாமல் போயிற்று. 15உ யன்று உமது தேர்தல் தொகுதியில் சுமார் 45 நிமிஷங்கள் நீர் முயன்றும் உம்மால் பேச முடியவில்லை. சரமாரியாக கேள்விகள் கேட்டு உம்மை சல்லடைக் கண்ணாக துளைத்துவிட்டார்கள். அடா பாவமே, உமக்குமா இக்கதி நேரிடவேண்டுமோ? நீர் முதல் மந்திரிதான். சந்தேகமில்லை. உம்முடைய கீர்த்தி பூலோக மெங்கும் பரவியிருக்கிற தென்று டெயிலி எக்ஸ்பிரஸ் கூறுகிறது. அப்பேர்பட்ட உம்மை பேச முடியாமல் செய்துவிட்டார்களே என்று அது கண்ணீர் விடுகிறது. அதன் ரகசியமென்ன? உம்மை முதல் மந்திரியாக்கிய அதே தொழிலாளர் இன்று உம்மை பேச விடாமல் தடுக்க காரணமென்ன? உம்மை—ராம்சே மெக்டனல்ட் என்ற உமது சரீரத்தை—தொழிலாளர் பிரமாதமாய் நினைக்கவில்லை. உமது இருதயத்தில் இருந்ததாய் காட்டிக் கொண்ட கொள்கைக்காகவே உம்மை ஆதரித்தார்கள். முதல் மந்திரியாக்கினார்கள். அந்த கொள்கை உம்முடைய இருதயத்திலிருந்து பறந்துவிட்டது. நீர் வெறும் மெக்டனல்டாய் விட்டீர். ஆகவே உம்மை பழைய கருப்பனாக தொழிலாளர் பாவிக்கிறார்கள். ஏணியைக் கொண்டு மேலே ஏறிவிட்டு ஏணியை உதைத்தீர். மறுபடியும் மேலே ஏற ஏணியை உதவி கேட்கும்போது அது உம்மை உதைக்கிறது. இதற்காக வருத்தப்பட வேண்டாம். கர்ம பலன் யாரைத்தான் விட்டது? குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர், நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர் என்ற கவியை தினசரி ஆயிரம் தடவை பாராயணம் செய்து மனதை தேற்றிக்கொள்ளும்.

# அஹிம்சையின் நோக்கம்.

(மகாத்மா காந்தி)

நமது அஹிம்சா இயக்கத்தின் நோக்கம் இந்தியாவிற்குப் பூரண சுயேச்சையைப் பெறுவதேயாகும். வேதாந்த தோரணையிலுள்ள பூரண சுயேச்சையல்ல. ஆங்கிலேயாது தோரணையிலுள்ள பூரண சுயேச்சையைப் பெறுவதே அதன் நோக்கமாகும். மனதில் எதையும் மறைத்து வைக்காமல் இதுதான் இந்த அஹிம்சா இயக்கத்தின் நோக்கமெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு தேசமும் தகுதியுடையதா இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லாமலே பூரண சுயேச்சையைப் பெற உரிமை பெற்றிருக்கின்றேன். சாப்பிடவும் தண்ணீர் பருகவும் காற்றை ஸ்வாசிக்கவும் எப்படி ஒவ்வொரு தேசமும் தகுதியுள்ளதாக யிருக்கிறதோ, அதே மாதிரியே ஒவ்வொரு தேசமும் தனது காரியங்களைத்தானே நிர்வகித்துக்கொள்ளத் தகுதியுள்ளதாக இருக்கிறது. அது தனது காரியங்களை அவ்வளவு தவறான முறையில் நிர்வகித்தாலும் அதைப்பற்றி அக்கரையில்லை. கெட்டுப்போன சுவாசப்பையையுடைய ஒருவன் எப்படி கஷ்டப்பட்டு சுவாசம் விடுவானோ அதே மாதிரியே இந்தியாவும் தனது திறமையின்மையால் ஆயிரம் தவறுகளைச் செய்யலாம். ஆளுவதற்குத் தகுதியுடைமைப் பற்றிய கொள்கை எல்லாம் வெறும் கண்ணைத் துடைப்பதற்கான காரியமேயாகும். சுயேச்சை என்பதற்கு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுபெறுவதே அர்த்தம்.

நமது பணத்தில் நமக்கே பூரண ஆதிக்கமிருக்க வேண்டுமென்ற திட்டமான முடிவுக்குக் காங்கிரஸ் வந்திருக்கிறது. பூரண ஆதிக்கமில்லாவிட்டால் எந்த வரவு செலவும், சுய ஆட்சித் திட்டமெனச் சொல்லப்படும் எந்தத் திட்டமும் தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இராது. நமது பணம் பாதுகாப்பு வெளிநாடு விஷயங்கள் இவற்றில் ஆதிக்கமிராத பூரண சுயேச்சை அர்த்தமற்றதென்பது எனக்குக் காங்கிரஸினால் இடப்பட்ட ஆணையின் பகுதியாகும். பாதுகாப்பு பணம் இவ் விஷயத்தில் நமக்குப் பூரண ஆதிக்கமளிக்காத எந்த விஷயமான கவர்ன்மெண்டையும் நான் பொறுப்பாட்சி என்றோ அல்லது சுய ஆட்சி என்றோ கருத முடியாது. இப்படி இருக்கையில் இந்த ஆதிக்கங்களில்லாத ஆட்சி முறை பூரண சுயேச்சை என்று எப்படிக் கருதமுடியும்?

—லண்டன் பிரசங்கம்.

Koviloor Digital Library



# சகல மதங்களுக்கும் கடவுள் ஒன்றே

(லண்டனில் 19-வயன்று பாதிரிகள் கூட்டிய கூட்டத்தில் பண்டித மாளவியாவும் பீகம் ஷா நவாசும் (சர். ஷாபியின் புதல்வி) பேசினார்கள். அவர்கள் சொல்லுகிறபடி இந்துக்களும், முஸ்லிம்களும் நடப்பார்களானால் இந்து முஸ்லிம் சண்டை இந்நாட்டில் மருந்துக்கு கூட கிடைக்காமல் போய்விடும்.)

### பீகம் ஷா நவாஸ்.

குரு நானக், புத்தர் இவர்களைப் பின்பற்றி சகோதரத்துவத்துக்காக பல நூற்றாண்டுகளாக பாடுபட்டு வரும் இந்தியராகிய நாங்கள் உங்கள் முன்பு பேச மிகவும் சந்தோஷப்படுகிறோம். உலகத்திற்கு இப்பொழுது வேண்டியது ஒற்றுமையும் ஒத்துழைப்புமே. நான் ஒரு முஸ்லிம். நான் கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்து மதத்தைப் பற்றியும் பேசுவதென்றால் அக்கடமை மிகவும் புனிதமானதாகும். மனிதரை ரட்சிப்பதற்காக கடவுளால் அனுப்பப்பட்ட தேவதூதர் என்றே நான் கிறிஸ்துவை நம்புகிறேன். நமது பரலோக பிதா பூர்ணத் தன்மை பெற்றவர். கிறிஸ்து உபதேசத்தில் இந்த பூர்ணதன்மையை காணலாம். மனிதராகிய நாம் மனிதருக்கு சேவை செய்வதன் மூலம் அந்த பூர்ணத் தன்மையை அடைய முயற்சிக்க வேண்டும். நாம் இருட்டில் இருந்தாலும், வெளிச்சத்தில் இருந்தாலும் அந்த பரம்பொருளின் அன்பை அடைய வேண்டியது அவசியம். அது நமது உடன் பிறந்த பந்துக்களை விட அருமையான படியால், அதை அடைந்தே தீரவேண்டும்.

சத்தியம் ஒன்று. அதைப்போல அவனும் ஒன்று. சத்தியம் மூலமாக நாம் அவனை அடைய முடியும். அவனை அடைவதே எல்லா மதங்களின் முடிவாயிருக்கிறது. கிறிஸ்து பூர்ண தன்மை பெற்றவர். அவரை தேவதூதரென்று முஸ்லிம்களாகிய நாங்கள் மதிக்கிறோம். நாம் எல்லாரும் ஒருவருடன் ஒருவர் கைகோர்த்து, அந்த உயர்ந்த தர்மங்களாகிய ஒத்துழைப்பு, சகோதரத்தன்மை ஆகியவை கீழ் நாட்டிற்கும் மேல் நாட்டிற்கு மிடையில் ஏற்படும் படி உழைப்போமாக.

### பண்டித மாளவியா

கடவுளை அறியும் முயற்சி வாழ்விலேயே சிறந்த சந்தோஷத்தை கொடுப்பது. கொஞ்ச நேரத்திற்காகவாவது அந்த முயற்சியில் ஈடுபட இங்குள்ள சகோதர சகோதரிகள் கூடியிருப்பதைக் கண்டு நான் சந்தோஷ மடைகிறேன். முள் நிறைந்த நமது பாதையில், இயேசுவின் சரித்திரம் ஒளி பொருந்திய விளக்காய் பிரகாசிக்கிறது. தற்சமயத்தைவிட மதத்திற்கு அவசியம் இதற்முன் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை. உலகத்தில் இப்பொழுது ஏற்பட்டுள்ள கஷ்டத்திற்கு காரணமென்ன? நமது வாழ்க்கையும், செய்கையும் தவறான அடிப்படை மீது கட்டப் பட்டிருக்கின்றன. நாம் எதை புகழ்கிறோமோ, மற்றவர்களை செய்யும்படி உபதேசிக்கிறோமோ அதை நாம் செய்வதில்லை. சர்வதேசசங்கம் இருக்கிறது. சர்வதேச கூட்டங்களும், ஆயுதபரிகரண கூட்டங்களும், கூடுகின்றன. இவற்றால் என்ன பயன் ஏற்பட்டு விட்டது? நமக்குள் ஏற்பட்டிருக்கும் பந்துத்துவத்தை அறிந்து, நாம் ஒருவரை யொருவர் உணர்ந்து கொண்டால்தான் இந்த முயற்சிகள் வெற்றியடைய முடியும். சகல மதஸ்தர்களுக்குள்ளும் சகோதரத்துவம் ஏற்படும்படி செய்வதே இப்பொழுது செய்ய வேண்டிய முதல் வேலை. ஆயுதங்களுக்காக செலவழிக்கும் பணத்தில் பத்தில் ஒரு பாகத்தைக் கொண்டு மதங்களின் அடிப்படையான நோக்கத்தையும், உலகத்தின் உண்மையான நிலைமையையும் பற்றி பிரசாரஞ் செய்ய ஏற்பாடு செய்தால், தற்கால நிலைமையைவிட எவ்வளவோ மேலான நிலைமை ஏற்படும் என்பது நிச்சயம். பல மதங்களைச் சேர்ந்த நாம் தேசங்களுக்குள் அமைதி, கௌரவம், நல்லெண்ணம் இவைகளை பரப்ப முயற்சித்தால் நாம் கடவுளுக்கு வெகு சமீபத்தில் போய்விடலாம்.

---

நாம் பிறரிடம் அஹிம்சையை அநுஷ்டித்தால், அவரும் நம்மிடம் அஹிம்சை அநுஷ்டித்து தீரவேண்டு மென்ற அவசியமில்லை என்பதை மறக்கக் கூடாது. ஆனால் முடிவில் அவர் அஹிம்சையோடு நடந்து கொள்ளுவார் என்பது மட்டும் நிச்சயம்.—மகாத்மா.

Koviloor Digital Library



## "சுரண்டும் ஜாதியார்"

57 தேசங்களைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்கள் லண்டனில் கூடி மகாத்மாவை வரவேற்றனர். தங்களுக்கு ஒரு பிரசங்கம் செய்யும்படி அவர்கள் கேட்டார்கள். கேள்விகள் கேட்கும்படியும், பதில் சொல்லுவதாகவும் மகாத்மா கூறினார். ஒரு கிறிஸ்தவ நீக்ரோ, ஒரு ரஷியர், ஒரு ஆங்கிலேயர் ஆகியவர்கள் கேள்விகள் கேட்டனர். பிரிட்டிஷ் தொழிலாளர் கஷ்டம் சம்பந்தமாக ஆங்கிலேய மாணவர் கேட்ட கேள்விக்கு மகாத்மா அளித்த பதிலாவது:—

தொழிற்சாலைகள் எங்கும் மலிந்து விட்டதால், பிரிட்டனில் வேலையில்லாக் கஷ்டமும் அதிகரித்து விட்டது. மெஷின்கள் கட்டுப்பாட்டை தகர்த்தெறியுங்கள். கிராமாந்திரத்திற்கு சென்று உங்கள் வாழ்க்கை முறையை கட்டோடு மாற்றிக்கொள்ளுங்கள். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தன் தேவைகளை அதிகரித்துக் கொள்ளுகிறானோ, அவ்வளவும் அவனுக்கு கஷ்டமே. நீங்கள் ஒரு சுரண்டும் ஜாதியார். (சிரிப்பு) உங்கள் மன்னர், இங்கிலாந்திற்கும், மற்ற குடியேற்ற நாடுகளுக்கும் அரசர். ஆனால் அவர் இந்தியாவிற்கு சக்கிரவர்த்தியாம். இதிலடங்கியுள்ள அகம்பாவத்தையும் கர்வத்தையும் நீங்களே உணர்ந்து கொள்ளலாம். எனவே உங்கள் சுயேச்சை பொய்மையானது. உங்கள் சாமான்களை வாங்கிக்கொள்ள நீங்கள் இந்தியர்களை நிர்ப்பந்தித்து பலவித குற்றங்கள் செய்திருக்கிறீர்கள். உங்கள் தேசம் இதனால் பணக்கார தேசங்களி லொன்றாய் விளங்குவதில் ஆச்சரியமொன்று மில்லை. ஆனால் உங்களுக்கு பணம் எங்கிருந்து வந்தது? இந்த மண்ணிலிருந்தல்ல, ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருக்கிறது. இந்தியாவின் மீது சிரத்தை காட்டுவதாக உங்கள் ஜனங்கள் கூறுகின்றனர். ஏன்? பலருக்கு அங்கே வேலை கிடைக்கிறது. நீங்கள் உங்கள் வாழ்க்கை முறையையே மாற்றிக் கொள்ள வேண்டும். அவசிய மேற்படும்வரை காத்திருக்காதீர்கள். என் மனதில் கொதிப்பதை நான் தெரிவித்து விட்டேன். என்னைக் கேட்டதனாலேயே நான் என் மனதிலுள்ளதைக் கூறினேன்.

## தொட்டிலை ஆட்டும் கை இந்தியாவை ஆளுகிறது

இந்தியாவில் பெண்களுக்கு சுதந்திரம் கிடையாதென்று சில பரதேச மூடர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் "சுதந்திரம்" என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தமோ நமக்குத் தெரியாது. இந்தியாவைப் பொறுத்த வரையில் உண்மையில் பெண்களே ஆண்களைவிட அதிகமாய் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். புரபசர் ரஷ்புரூக் வில்லியம்ஸ் என்ற வெள்ளையர் இந்திய சர்க்காரில் பிரசார இலாகா தலைவரா யிருந்தார். தற்சமயம் பாட்டியாலா சமஸ்தானத்தில் உயர்ந்த உத்தியோகம் வகிக்கிறார். அவர் சொல்லுவதை கவனியுங்கள்.

"இந்தியாவை உண்மையில் ஆளுகிறது யார்? பெண்களே. பெண்கள் படுதா வழக்கத்தை அநுஷ்டித்தாலும், ஆண்களோடு வெளியில் வந்து சமமாய் இருக்காவிட்டாலும், இந்தியாவை ஆளுகிறவர்கள் அவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு உதாரணம் கூறுகிறேன். ஒரு சமயம் பல இந்திய மன்னர்கள் ஒரு மன்னர் அரண்மனையில் கூடி ஆலோசனை செய்தார்கள். மிகவும் உக்கிரமமாய் வாதம் நடந்து கொண்டிருக்கும்போது, அங்கே தொங்கிய அழகிய படுதாவிற்கு அப்புறம் வளையல் சப்தம் கேட்கிற மாதிரி தோன்றிற்று. அதைப்பார்க்க எழுந்தேன். உடனே அந்த மன்னர் கையமர்த்தி "ஆச்சரியப்படவேண்டாம். அது என்னுடைய மனைவி. அவள் எல்லா வியங்களையும் அறிவாள். எல்லா அந்தரங்க விஷயங்களையும் நான் அவளிடம் சொல்லுவேன். எனக்கு அவள் மிகுந்த உதவியாயிருக்கிறாள்." என்று சொன்னார்.

ஆம், உயர்ந்த பதவியிலிருந்து தாழ்ந்த பதவி வரை சகல பெண்களுமே இந்தியாவை ஆளுகிறார்கள். ஆண்களின் எதிர்காலத்தை அவர்களே அமைக்கிறார்கள். சமஸ்தான விஷயங்களில் அவர்கள் செல்வாக்கு அபரிமிதமானது. இங்கிலாந்திலுள்ளவர்கள் அதன் அளவை ஊகத்தால் கூட அறியமுடியாது."

மிஸ். மேயோ போன்ற உளறுவாய் தப்பிலிகள் இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்? அவர்களால் பதில் சொல்ல முடியாது. மேல்நாட்டில் பெண்களுக்கு இருப்பதாய் சொல்லும் சுதந்திரம் சுதந்திரமல்ல. வெறும் போலித்தனம்.

Koviloor Digital Library


# ஜோசப் பல்டி

ஸ்ரீ. ஜார்ஜ் ஜோசப் ஒரு காலத்தில் பெரிய தேசிய தலைவராய் விளங்கினார். ஹோம் ரூல் கிளர்ச்சி காலத்தில் சீமைக்கு புறப்பட்ட தூதுக் கோஷ்டி ஒன்றில் அங்கத்தினராயிருந்தார். ஒத்துழையாமை காலத்தில் வக்கீல் வேலையை விட்டார். அலகாபாத்திற்குச் சென்று பண்டித நேரு ஆரம்பித்த "இண்டிபெண்டன்ட்" பத்திரிகை ஆசிரியரானார். அதற்காக ஜெயில் வாசமும் பெற்றார். அப்பால் மகாத்மா ஜெயிலுக்குச் சென்ற பின்பு அவர் பத்திரிகையான "யங் இந்தியா" விற்கு ஆசிரியரானார். சபர்மதி ஆஸ்ரமத்தில் தங்கினார். தேசத்திற்காக பல தியாகங்கள் செய்தார். கஷ்டப்பட்டார். இவ்வளவும் செய்த ஸ்ரீ. ஜார்ஜ் ஜோசபை நாம் போற்றுகிறோம். தமிழ் நாட்டில் தங்கி, தமிழ் நாட்டாருக்கு தேசபக்தியை ஊட்டி அதற்காக எத்தகைய தியாகமும் செய்ய பின் வாங்காமல் இருந்த அந்த ஜோசபை நாம் பாராட்டுகிறோம். ஆனால் அந்த தேசபக்த வீரராய் விளங்கிய பழைய ஜோசப்பை இப்பொழுது காணவில்லை. கத்தரின் தத்துவத்தை விளக்கிக் காட்டிய பழைய ஜோசப்பை காணமுடியவில்லை. வகுப்பு வாதம் தேசியத்தில் மூழ்கிவிட வேண்டுமென்று கர்ஜித்த பழைய ஜோசப்பை எங்கு தேடினாலும் கிடைக்கவில்லை. சீமைத்துணி உடுத்தி, வகுப்பு வாதம் பேசி, காந்திக்கு விரோதமாகவும், காங்கிரசிற்கும் தேசியத்திற்கும் எதிராகவும் ஒரு ஜோசப் கிளம்பி யிருக்கிறார். ஒத்துழையாமை காலத்தில் கர்ஜித்த அந்த ஜார்ஜ் ஜோசப் தானா இந்த புதிய ஜோசப் என்று பலருக்கு சந்தேகம் தோன்றலாம். ஆம், அதே ஜோசப்தான் இன்று புதிய ஜோசப்பாய் விளங்குகிறார். சுரேந்திர நாத்பானர்ஜியும், விபின சந்திரபாலரும் பிற்காலத்தில் என்ன செய்தார்களோ அதையே ஜார்ஜ் ஜோசப்பும் செய்திருக்கிறார். அதுவே பல்டி. காங்கிரசிலிருந்து ஓரே பல்டியடித்து எதிர் கட்சிக்கு போய்விட்டார். கொஞ்ச நாட்களாக அவர் பேசிவரும் பேச்சுக்களெல்லாம் வெகு மோசமாய் இருக்கின்றன. சென்ற 19உ சென்னையில்நடந்த இந்திய கத்தோலிக்கர் வருட கூட்டத்தில் அவர் பிரசங்கம் செய்தார். அதில் முதலில் இருந்து கடைசிவரையில் காந்தியையும், காங்கிரசையும் தூற்றியிருக்கிறார். 10 லட்சம் பேர் வேண்டுமானாலும் சுயராஜ்யத்திற்கு இரை கொடுக்க தயார் என்று மகாத்மா சொன்னார். இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களாகிய 60 லட்சம் பேரை இரை கொடுத்தாவது வகுப்புவாதத்தை நிலைநாட்டுமோ மென்று ஜோசப் சொல்லுகிறார். ஜோசப் சொல்லுவதை எத்தனை கிறிஸ்தவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பது வேறுவிஷயம். அவர் பிரசங்கம் செய்த அதே கூட்டத்தில் அவர் பிரசங்கத்தை பலர் ஒப்புக் கொள்ளாதது போல இடையிடையே கேள்விகள் போட்டனர். முடிவில் சட்டசபை பிரதிநிதித்துவத்தைப்பற்றி இப்பொழுது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை யென்று ஒரு தீர்மானமும் நிறைவேறியது. ஸ்ரீ. பன்னீர் செல்வத்தையும், ஸ்ரீ. ஜோசப்பையும் தவிர வேறு ஒரு கிறிஸ்தவர்கூட வகுப்புவாதத்தை ஆதரிக்க இந்நாட்டில் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே ஸ்ரீ. ஜோசப் சொல்லுவதற்கு எவ்வளவு தூரம் கிறிஸ்தவர் ஆதரவு இருக்கிற தென்பதைப்பற்றி சொல்ல வேண்டியதேயில்லை. ஸ்ரீ. ஜோசப் பிரசாரத்தால் தேசியம் தடைப்பட்டு விடுமென்றோ, மகாத்மா மதிப்பு குறைந்து போய்விடுமென்றோ நாம் பயப்படவில்லை. நாம் வருந்துவதெல்லாம் பழைய ஜோசப்புக்கு இக்கதி நேரிட்டதே என்பது ஒன்றுதான். நமது பழைய நண்பரின் பல்டியைக் கண்டு நாம் இரங்குகிறோம்.

---

## டெயிலி மெயில் புளுகு

பொய் சொல்லி பிழைப்பதே லண்டன் டெயிலி மெயிலின் வழக்கம். மகாத்மா சர்வதேச சங்கத்திற்கு இந்தியாவைப்பற்றி ஒரு விண்ணப்பம் அனுப்பியதாகவும், அதை சர்வதேச சங்கம் புறக்கணித்து விட்டதாகவும் ஒரு புது புளுகு கட்டிவிட்டது. அம்மாதிரி கடிதம் அனுப்ப வேண்டுமென்று தாம் நினைத்ததுகூட கிடையாது என்று மகாத்மா சொல்லுகிறார். கையால் ஆகாதவரல்லவா பிறர் உதவியை தேட வேண்டும்? இந்தியா தன்னால் சுயராஜ்யம் பெற முடியாத பேடியல்ல. சர்வதேச சங்கத்தின் "ஆண்மையை" பலதடவைகளில் பார்த்து விட்டோம். தற்சமயம் சீன—ஜப்பான் தகராறிலும் பார்க்கிறோம். இந்த பேடி சங்கத்திடமா மகாத்மா போய் விண்ணப்பஞ் செய்வார்? அட புளுகிணி டெயிலி மெயிலே, பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லும்படி கற்றுக் கொள்ளக்கூடாதா?

Koviloor Digital Library



# முதல் மந்திரிக்கு மிளகாய்.

மைனாரிட்டி கமிட்டியில் முதல் மந்திரி மெக்டொனல்ட் அகம்பாவம் கொண்டு பேசியதை முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறோம். பிரதிநிதிகளைப் பார்த்து "யோக்கியமாய் நடவுங்கள்" என்று அகம்பாவத்தோடு பேசினார். அப்படியானால் பிரதிநிதிகள் யோக்கியர்கள் அல்ல என்று ஏற்படுகிறது. இந்தப் பேச்சைக் கேட்டது முதல் மௌனமாயிருந்த பிரதிநிதிகளுக்கு கொஞ்சம் உயிர் பிறந்திருப்பதாய் தெரிகிறது. ஆனால் ஒருவராவது கண்டிக்க முன் வரவில்லை. இந்த வேலையை வேறு யாரும் செய்யாமல் இருப்பதைப் பார்த்தும் மகாத்மா காந்தி தாமே எடுத்துக் கொண்டார். மகாத்மாவிற்கும் மற்றவர்களுக்குமுள்ள வித்தியாசம் இதுவே. முதல் மந்திரியின் வாயாடித்தனத்தை சும்மா விட்டுவிட அவர் விரும்பவில்லை. ஆகவே மெக்டொனல்ட் வாயில் ஒரு மிளகாயை போட்டு சுவைக்கும்படி செய்தார். மிளகாய் கடித்த மெக்டொனல்ட் கண்ணீர் சொரிய நாக்கு உறைக்க விழி விழியென்று விழிக்கிறார். காந்திஜி எழுதுகிறார்:—

"மெக்டொனல்டே, நீர் "யோக்கியமாய் நடவுங்கள்" என்று சொன்னீர். அன்று பேசிய பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் கொள்கைகளை உண்மையாகவே வெளியிட்டார்கள். அப்படியிருக்க நீர் எப்படி அந்த மாதிரி பேசலாம். அடிப்படையான கொள்கைகளைப் பற்றி முடிவு ஏற்படாவிட்டால், அதாவது சுயராஜ்ய அமைப்பைப் பற்றி சமரசம் ஏற்படா விட்டால், மைனாரிட்டிகளுக்குள் ஒரு நாளும் சமரசம் ஏற்பட முடியாதென்று நான் சொன்னேன். அதுவும் என் மனப்பூர்வமான வார்த்தைகளே. நீர் பேசியது மிகவும் தவறு. அதற்கு உடனே சமாதானம் சொல்லும்."

மெக்டொனல்ட் இஞ்சி தின்ற அநுமாரைப் போல விழிக்கிறார். யோக்கியதை என்ற பேச்சு வருமானால், இந்தியர் யோக்கியர்களா பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் யோக்கியர்களா என்பதில் யாரும் முடிவுகூற வேண்டியதில்லை. பிரிட்டனின் யோக்கியதை உலகம் பூராவாக அடிபடுகிறது. ஆகவே அந்தப் பேச்சை விவாதத்திற்கு கொண்டு வர மெக்டொனல்ட் அவ்வளவு முட்டாளல்ல. லார்ட் லிட்டன் வங்காள கவர்னரா யிருக்கும் போது இந்தியப் பெண்களைப் பற்றி ஏதோ உளறினார். அதற்கு பதிலாக வெள்ளைப் பெண்களைப் பற்றி இந்தியப் பத்திரிகைகள் கொடுத்த பெரிய மூட்டையை சுமக்க முடியாமல் சுமந்தார். அம்மாதிரி தாமும் சுமக்க நேரிடுமென்பதை மெக்டொனல்ட் அறிவார். ஆகவே தந்திரமாய் அந்த விவாதத்தை மழுப்பப் பார்க்கிறார். மகாத்மாவிற்கு எழுதிய பதில் வழ வழவென்று இருக்கிறதாம். மகாத்மா கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்ல முதல் மந்திரிக்கு தைரியமில்லை. ஆகவே விழிக்கிறார். மகாத்மா காந்தி நல்லவேலை செய்தார்.

# ஈன்ஸ்டீன் வாழ்த்து

ஈன்ஸ்டீன் என்பவர் பெரிய ஸ்விட்ஜர்லாந்து விஞ்ஞான நிபுணர். பல அரிய விஷயங்களை கண்டு பிடித்திருக்கிறார். பூலோகத்தில் நம் கண்ணால் காண்பதற்கும் காண முடியாததற்குமுள்ள "உறவை" காட்டியவர். அவ்விஷயத்தில் அவரை மிஞ்சிய நிபுணர் உலகத்தில் கிடையாது. அதோடு அவர் ஒரு பெரிய தத்துவ ஞானி. உலகாதயத்தில் ஐரோப்பா மிதமிஞ்சி தலையிட்டுக் கொண்டிருப்பதால் ஏற்படப் போகும் கேட்டை முன் கூட்டி அறிந்து மக்களுக்கு எச்சரிக்கை செய்து வரும் பெரியார். இவ்விஷயத்தில் ரோமன் ரோலண்ட் கோஷ்டியோடு இவரைச் சேர்க்கலாம். பலாத்காரத்தையும், மிருக பலத்தையும் பலமாய் கண்டிக்கும் உத்தமர். அவர் ஜெர்மனியில் வாசஞ் செய்து வருகிறார். மகாத்மா காந்திக்கு அவர் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது:—

"பலாத்காரமில்லாமல் நாம் நமது லட்சியத்தை அடைய முடியுமென்பதை நீங்கள் உங்கள் செய்கையால் காட்டியிருக்கிறீர்கள். பலாத்காரம் வேண்டுமென்று சாதிப்பவர்களைக் கூட நமது அஹிம்சா தர்ம முறையால் வென்று விடலாம். பலாத்கார சண்டைகள் இனி உலகத்தில் ஏற்படாமல் இருக்கவும், சர்வதேசங்களின் உதவியாலும் ஒத்துழைப்பாலும் இந்த உலகத்தில் அமைதி நிலவும்படி செய்யவும், தங்கள் உதாரணம் ஜனங்களுக்கு ஊக்கத்தை அளிப்பது திண்ணம். என் பக்தியையும் பாராட்டுதலையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்களை சீக்கிரம் நேருக்கு நேராக பார்க்க முடியுமென்று நம்புகிறேன்."

மகாத்மா காந்தி அறிஞர் ஈன்ஸ்டீனுக்கு பதில் அனுப்பியிருக்கிறார். அதில் தமது சத்தியாக்கிரக ஆசிரமத்திற்கு விஜயஞ் செய்யுமாறும் கேட்டிருக்கிறார்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677.

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

| மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 26உ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 10உ திங்கட்கிழமை | இதழ் 44 |
|---|---|---|

## செத்த குதிரைச் சவாரி.




(வட்டமேஜை மகாநாடு குதிரை செத்துப் போயிற்று. ஆனால் மெக்டனல்ட் சவாரியை விடவில்லை)

மெக்டனல்ட்:—குதிரை சாகவில்லை. இளைப்பாறுகிறது.

ஒரே இளைப்பாறுதல்தான்!

Koviloor Digital Library



# சாக வில்லையாம்!

வட்டமேஜை மகாநாடு சாகவில்லையென்று பிரதம மந்திரியும், இந்தியா மந்திரியும் உறுதி கூறுகிறார்கள். இந்தியப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் கலந்து பேசுவதால் நன்மை ஏற்படுமென்று தோன்றுகிறவரை சர்க்கார் மகாநாட்டை நடத்திக் கொண்டு போவார்களென்று இந்தியா மந்திரி சொல்லுகிறார். இதையாரும் ஆட்சேபிக்க வில்லை. ஆனால் அம்மாதிரி பேசுவதால் நன்மை ஏற்படாது என்ற நிலைமை தற்சமயம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்று கேட்கிறோம். அந்த நெருக்கடி நேரிட்டிருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அதை பிரதம மந்திரியும் இந்தியா மந்திரியும் அறிவார்கள். அறிந்தும் அறியாததுபோல பேசுகிறார்கள். கலந்து பேசுவதால் நன்மை ஏற்படும் என்று எண்ணிய எண்ணத்திற்கு முதல் மந்திரியும் இந்தியா மந்திரியுமே உலை வைத்தார்கள். ராணுவ நிர்வாகத்தில் இந்தியர் அதிகாரத்திற்கு கீழ் வெள்ளையர் வேலைசெய்ய மாட்டார்களென்று இந்தியா மந்திரி சொல்லவில்லையா? நாணய மாற்று விஷயமும், பொக்கிஷ நிர்வாகமும் பிரிட்டிஷார் கையிலேயே இருக்கவேண்டுமென்று அவர் பேசவில்லையா? மகாநாட்டை குழிவெட்டி புதைப்பதற்கு இதைவிட வேறு என்ன செய்யவேண்டும்? இனி முதல் மந்திரியை எடுத்துக் கொள்ளுவோம். பிரிட்டிஷ் சர்க்கார் எவ்வளவு தூரம் சுயராஜ்யம் கொடுக்கப் போகிறார்களென்று சொல்லிவிட்டால் தான், மைனாரிட்டி தகராறு போன்ற விஷயங்கள் முடிவு பெறுமென்று மகாத்மா காந்தி பலதடவைகள் எச்சரித்தார்.

முதல் மந்திரி பதில் சொன்னாரா?

இல்லை. அவ் விஷயத்தில் வாய்மூடி மௌனியாயிருக்கிறார். அதுமட்டுமா? மைனாரிட்டிகள் கமிட்டியில் அவமரியாதையாகப் பேசினார். இவர் மகா யோக்கியர் போல நினைத்துக்கொண்டு "யோக்கியமாய் நடவுங்கள்" என்று பிரதிநிதிகளைப் பார்த்து சொன்னார். இவ்வளவும் எதை காட்டுகின்றன? இருநாட்டுப் பிரதிநிதிகளும் கூடிப்பேசி சமரச முடிவு காணவேண்டுமென்பதையா காட்டுகின்றன?

மகாநாட்டை முறிக்க மறைமுகமாக செய்யும் தந்திரங்களையே காட்டுகின்றன.

இந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர்கள், தீண்டாதார்களை ஒருவர் மீது ஒருவர் பாயும்படி தூண்டிவிட்டார்கள். இடையில் மன்னர்களை கிளப்பி விட்டார்கள். இவ்வளவையும் செய்துகொண்டு, மகாநாட்டை திருப்திகரமாய் நடத்தி முடிக்க ஆவலோடு இருப்பதாகச் சொல்லுவது வெறும் நீலிக் கண்ணீராகவே இருக்கிறது. வட்டமேஜை மகாநாட்டு குதிரை செத்துப்போயிற்று. ஆனால் முதல் மந்திரியோ அது சாகவில்லை யென்று சொல்லுகிறார். சர்க்கார் அறிக்கைகளின் யோக்கியதையை நாம் நன்கு அறிவோம். எவ்வளவு பலமாய் ஒன்றை மறுக்கிறார்களோ அவ்வளவு பலமாக விஷயம் உண்மையாயிருக்கும். வட்டமேஜை மகாநாட்டைப் பற்றி முதல் மந்திரி சொல்லும் விஷயமும் இதைப் போன்றதே. மூலதாரமான விஷயத்தைப்பற்றி மகாத்மா கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லாமல் இருக்கிறவரையில் மகாநாடு எப்படி உயிர் பெற்று வாழ முடியுமென்று கேட்கிறோம். அந்த மூலதாரமான விஷயத்திற்கு காங்கிரஸ் கோரிக்கைப்படி முதல் மந்திரி நடப்பாரென்று தோன்றவில்லை. ஆகவே எதிர்பாராத அதிசயம் ஏற்பட்டாலொழிய வட்டமேஜை மகாநாடு மறுபடியும் பிழைப்பது முடியாத காரியம். சர்க்காரே சீக்கிரமாக வட்டமேஜை மகாநாடு செத்துப் போயிற்று என்று அறிவிப்பது நிச்சயம்.

## காலப் போக்கு

புரட்சிக் காரர்களிடமிருந்து கைப்பற்றும் ஆயுதங்கள் அநேகமாய் சர்க்காரைச் சேர்ந்தவைகளாக இருக்கின்றனவாம். ஆகவே ராணுவ அதிகாரிகள் தங்கள் ஆயுதங்களை வெகு ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டுமென்றும், காணாமல் போய்விட்டால் உடனே மேலதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் ராணுவத்தாருக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தியை அழைத்துப்போக அமெரிக்க இந்திய காங்கிரஸ் தலைவர் புத்திரிகளான மரியம் கோஷும் லண்டனுக்கு வந்தார்கள். அவர்கள் மகாத்மாவை அழைத்தார்கள். ஆனால் தற்சமயம் அமெரிக்கா வர சாத்தியமில்லையென்று மகாத்மா சொல்லிவிட்டார். மகாநாடு முடிந்த பின்பு சௌகரியப்பட்டால் ஐரோப்பாவில் மகாத்மா திக்விஜயம் செய்வாரென்று தெரிகிறது.

Koviloor Digital Library



# தீண்டாதார் ஆலயப் பிரவேசம்.

கேரளத்தில் தீண்டாதார் ஆலயப்பிரவேச பிரசாரம் பலமாய் நடக்கிறது. காங்கிரஸ் கமிட்டி நவம்பர் 1வ. முதல் குருவாயூர் என்ற இடத்தில் தீண்டாதார் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கப் போகிறது. தொண்டர்கள் ஏராளமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். மகாத்மா ஆதரவு கிடைத்துவிட்டது. தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டஞ் செய்யும் சுவாமி—அல்ல மகாத்மா—சகஜானந்தர் உடனே குருவாயூர் புறப்பட்டுப்போவாரென்று எதிர்பார்க்கிறோம். கேரள சத்தியாக்கிரக கமிட்டிக்கு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் சர்தார் பட்டேல் அடியில் கண்டபடி கடிதம் எழுதியிருக்கிறார்.

'மகாத்மாஜியின் அனுக்கிரகத்தைப் பெற்று ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம் புரிய நீங்கள் ஏற்கனவே துணிந்துவிட்டிருக்கிறபடியால், உங்களுடைய கமிட்டிக்கு இதைத் திறமையுடன் நிர்வகிக்கச் சக்தியில்லை என்று நீங்கள் அதைரியப்பட்டாலன்றி வேறு எவ்வித ஐயத்துக்காவது தாமதத்துக்காவது இடமில்லை. சத்தியாக்கிரகத்திற்குரிய முக்கிய யோக்கியதாம்சமானது, தன்கையே தனக்குதவி என்ற கொள்கையேயாகும். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும் தன் வலியை யுணர்ந்திருக்க வேண்டும். அளவற்ற தியாகத்துக்கும் நீங்கள் தயாராயிருப்பீர்களானால், சத்தியாக்கிரகத்தின் அடிப்படையான கொள்கைகளை மீறாதிருப்பீர்களானால், உங்களுடைய கோரிக்கையில் நீங்கள் வெற்றியுற்றே தீருவீர்கள்; உங்களுக்கு அபஜய மென்பதில்லை. நானும் கேரளத்துக்கு விரைந்துவந்து உங்களோடு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள ஆவல்மிகுந்தவனா யிருக்கிறேனாயினும், இப்போது சில சந்தர்ப்பங்களால் நான் இங்கேயே இருக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருக்கின்றது. உங்களுடைய கமிட்டிக்குத் தன் உறுதியில் குறைபாத நம்பிக்கை யிருக்கும் பக்ஷத்தில் உடனே நீங்கள் சத்தியாக்கிரகம் தொடங்கித் தீவிரமாக நடத்துவது நலம். ஏனெனில் உங்களுடைய கட்சி நியாயமானதென்றும். நீங்கள் சத்தியாக்கிரகத்தின் உண்மையான முறைகளை மீறாமலிருந்தால் எல்லாம் சரியாக நிறைவேறி நீங்கள் வெற்றி யுறுவீர்கள். நீங்கள் உங்களுடைய நன்முயற்சியில் வெற்றியுற வேண்டும் என்பது என் கோரிக்கை.'

# சர்வதேச சங்க யோக்கியதை.

ஆள் அழகுபோல வேலை இழவுபோல. சர்வதேச சங்கம் உலகத்திலெங்கும் சமாதானத்தை நிலை நிறுத்தும் சங்கமாம். யுத்தத்தை தடுத்து விடுமாம். சிறு நாடுகளை பெரிய நாடுகளின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றி விடுமாம். எந்த நாடாவது ஒப்பந்தத்தை மீறி நடந்தால் உடனே மற்ற நாடுகள் எல்லாம் சேர்ந்து அதை பகிஷ்கரிக்க வேண்டுமாம். பெயர் அழகான பெயர். கொள்கைகளோ வானத்தை முட்டும் அளவு உயரிய கொள்கைகள். ஆனால் நடவடிக்கையோ? அது தான் இப்பொழுதுள்ள கேள்வி. சீனாமீது ரஷியா படை எடுத்தது. சீனா சர்வதேச சங்கத்திடம் ஓலமிட்டது. ரஷிய ஒரு உறுமல் உறுமிற்று. என்கிட்ட யாராவது வரட்டும் பார்க்கலாம் என்றுசொல்லிற்று. அந்த அதிர்ச்சியிலிருந்து சர்வதேச சங்கம் விடுபடவே யில்லை. முடிவில் ரஷியாவுடன் சீனாவுடன்படிக்கை செய்து தப்பிற்று. சர்வதேச சங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்பொழுது ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம். இரண்டும் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தவைதான். இருந்தாலும் ஜப்பானை அடக்க சர்வதேச சங்கத்தால் முடியவில்லை. கூட்டம் கூடியது. சீமையிலிருந்து லார்ட் ரீடிங் புறப்பட்டுபோனார். அமெரிக்க சர்க்கார் ஒருபிரதிநிதியை அனுப்பியது. எல்லா பிரதிநிதிகளும் கூடி ஆலோசனை செய்தார்கள். கெல்லாக் உடன்படிக்கையை ஜப்பானுக்கு எடுத்துக்காட்டினார்கள். உடனே யுத்தத்தை நிறுத்திவிடும்படி ஜப்பானுக்கு பொதுவாகவும், தனித்தனியாகவும் வேண்டுகோள் அனுப்பினார்கள். என்ன செய்தும் பலிக்கவில்லை. ஜப்பான் பழைய பிடிவாதத்தை விடவில்லை. மஞ்சூரியாவை விட்டு எப்பொழுது ஜப்பான் துருப்புகள் போகுமென்பதை சொல்ல முடியாதாம். ஜப்பான் சரக்குகளை பகிஷ்காரம் செய்யவில்லையென்று சீனா உறுதி கூறவேண்டுமாம். இந்த மானங்கெட்ட நிபந்தனையை எதிர்த்து தகர்க்க சர்வதேச சங்கத்திற்கு தைரியமில்லை. நவம்பர் 16வ-க்குள்ளாகவாவது ஜப்பான் காலி செய்து விடுமா என்று சர்வதேச சங்கம் கேட்கிறது. ஜப்பான் அதற்கும் உறுதி கூற மறுக்கிறது. இதுவே சர்வதேச சங்கத்தின் தற்கால நிலைமை. இந்த யோக்கியதையில் சர்வதேச சங்கம் உயிரோடு இருந்து பயனென்ன? வரப்பு தாண்டக்கூட முடியாதவனுக்கு தாண்டவராயன் என்பது எவ்வளவு பொருத்தமான பெயரோ, அதைப்போலவே கையாலாகாத பேர்வழிகளுக்கு சர்வதேச சங்கம் என்ற பெயரும் பொருத்தமானது.

Koviloor Digital Library

# காந்தி கடவுள் தூதர்:

(ஸ்ரீ. ஜமால் முகமது சாகிப்)

ஒரே ஒரு மனிதர், அவரது மதநம்பிக்கை எதுவேயாயினும் சரி, உலகத்திலேயே மிகப் பெரியோரென மதிக்கப்படுவது உண்மையிலேயே மிக விசேஷமாகும். இந்தியாவில் உள்ள 35-கோடி மனிதர்களால் மாத்திரமல்ல. பிறநாட்டவராலும் மகாத்மா காந்தி அவ்வாறே மதிக்கப்பட்டுள்ளார். இந்தியாவிலுள்ள 35-கோடி மனிதர்களுக்கும் அவரிடம் பூரண நம்பிக்கை யிருக்கிறது. மகாத்மா காந்தியிடம் இன்னோர் விசேஷமு மிருக்கிறது. தங்களுடைய பரம சத்துருவென்றும் தங்கள் ஜீவனத்தைக் கெடுத்தவரென்றும் அவரை எண்ணுவோரும் கூட இது காலை அவரை உபசரித்து வரவேற்றுப் புகழ்ந்து மரியாதை செலுத்துகின்றார்கள். ஆனால், இப்பொழுது அவரைப்பற்றி உயர்ந்த புகழுரைகள் கூறுவோர், மகாத்மாவின் நியாயமான கோரிக்கைகளை விட்டுக் கொடுப்பார்களா என்பது எனக்கு மிகவும் சந்தேகமாகவே யிருக்கிறது. ஆனால், கடவுளிடம் நம்பிக்கை வைத்துத் தங்களால் முடிந்த முயற்சியை யெல்லாம் செய்வோர், சோர்வுற வேண்டியதில்லை. இப்பொழுது உலக முழுவதும் ஏற்பட்டுள்ள கடுமையான நிலைமை நமக்கு எதிர்ப்பட்டிருக்கிறது. ராஜிய நிபுணர்கள் நிலைமையைச் சீர்செய்ய முயற்சிசெய்து, ஓர் வழி காணமுடியாது தோல்வியுற்று விட்டார்கள். ஏதாவது வழி யிருக்குமானால், அது கடவுளால் காட்டப்பட வேண்டுமென்றே நான் கருதுகிறேன். எங்கேயாவது எத்தேசமாவது சாம்ராஜ்யமாவது மிகப் பாதாளத்திலே வீழ்ந்து விட அதனால் மனித சமூகம் துன்புறுமாயின், இறைவன் அருள் புரிந்து ஏதாவதோர் கருவி மூலம் உலகத்திலே அமைதியை உண்டாக்குவார் என்ற நம்பிக்கை உலகத்துள்ள எல்லா நாட்டு ஜனங்களுக்கு மிருந்துவருகிறது. இத்தகைய நம்பிக்கை யுடையவருள் நானுமொருவன். இவ்வுலகத்தில் இறைவன் தம் சித்தத்தை நிறைவேற்றும் அத்தகைய கருவிகளாயிருப்பவரை, இறைவனின் தூதர் என்றோ காரியந்தர் என்றோ கூறலாம். மகாத்மா அத்தகையோருள் ஒருவரே என நான் நம்புகிறேன். எல்லாம் வல்ல இறைவன் தம் சித்தத்தை நிறைவேற்ற ஓர் இந்தியரைத் தேர்ந்து கொண்டதற்கு முக்கியமாக இந்தியராகிய நாம் பெருமை கொள்ளவேண்டும். மகாத்மாகாந்தி லண்டன் சென்றதைப்பற்றி நான் சந்தோஷப் படுவதற்கு இதுவோர் காரணமாகும். நான் உலகத்தின் வருங்காலம் நன்மையாகவே முடியுமென்ற நம்பிக்கை யுடையவன். தற்பொழுதைய துன்பம் எத்தகைத்தா யிருப்பினும், விடிவுக்காலம் நிச்சயம் வரும். அந்த விடிவுக்காலத்தில் இந்தியா ஓர் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும். உலகாயதக் காரர்களாலும், பிறரை இம்சிக்கும் தேசபக்தியுடைய நாட்டவராலும் உலகம் போதிய துன்பம் அனுபவித்து விட்டது. இதற்கோர் முடிவுவந்தாக வேண்டும். இவ்வகில வுலகமும் ஓரே எஜமானரால் தான் சிருஷ்டிக்கப் பெற்றுள்ளது. அவர் சக்கரவர்த்திகளுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாவார். தர்மம் நிலைபெறுமாறு அவர் பார்த்துக் கொள்ளுவார். உலகின் துன்பங்கள் சிலவற்றினின்றும் அதனை விடுவிக்கத்தக்க உன்னத பாக்கியம் இந்தியாவுக்குக் கிடைக்கப் போகின்றதென்று நான் நம்புகிறேன். இந்தியா ஆன்மார்த்தத் துறையில் மாண்புமிக்கது. உலகின் நான்கு பெரும் சமயங்கள் அதில் சந்தித்துள்ளது. சீர்திருத்தவேலை இத்தேசத்தினின்றே புறப்படவேண்டும். இதனை இந்தியர் பூரணமாக உணர்ந்து கொள்ளவில்லையே என்பதுதான் என் வருத்தம். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுட் சில பிரிவினர், இஸ்லாம் மார்க்கத்தின் உட்கருத்தை நன்றாக விளங்கிக்கொண்டு அதன்படி நடக்கவில்லை. இது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இஸ்லாத்தின் மிக முக்கியமான கொள்கை உலகத்திலுள்ள சகல ஜனங்களிடத்தும் சகோதரத்துவம் பாராட்டுதலே." இஸ்லாமார்க்கம், அநேக தத்துவங்களின் தொகுப்பேயாகும்; வெறும் குருட்டு அபிப்பிராயங்களைக் கொண்டதல்ல. இதுவே என் அபிப்பிராயம். இவற்றை எவர் பின்பற்றி நடந்தாலும், அவர் ஓர் முஸ்லிமே யாவார். மகாத்மா காந்தி ஓர் பக்கா முஸ்லிம் என்பதே எனது அபிப்பிராயம். பிற சமயத்தவர்களும் இதைப்போலவே மகாத்மா தங்கள் மதஸ்தரெனப் பாத்தியம் கொண்டாடுகிறார்கள். சகல மதங்களினதும் மூலாதார தத்துவங்களை யெல்லாம் அவர் அனுஷ்டித்து நடக்கிறார் என்பதையே இது ருசுப்பிக்கின்றது.

Koviloor Digital Library


# கழுதையின் கனவு.

கழுதை கனவு காண்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். கனவில் எதைக்காணும்? குயிலின் இனிய குரலையும், கிளியின் பச்சை அழகையும், தோகை மயிலின் நடனத்தையும், துள்ளியோடும் மானின் மிரண்ட விழிகளின் அழகையும், அன்னத்தின் அழகிய நடையையுமா காணப் போகிறது? இந்த விசேஷங்கள் எல்லாம் உலகத்தில் இருப்பதாக அதற்கு தெரிந்தால் அல்லவோ காண முடியும்? ஆகவே அதன் கனவில் இவையெல்லாம் வரமுடியுமா. பின் என்னதான் வரும்? நீங்களே யோசியுங்கள். அது என்ன செய்கிறதோ அதற்கு சுபாவம் எதுவோ அவையே வரும். அதனால்தான் கழுதை கனவுகண்டால் கத்தலும் கதுக்கலுமாயிருக்கும் என்று ஒரு கவிராயர் சொன்னார். அதன் கனவில் அதன் இனிய குரலான கத்துதலே முக்கிய பாகமாயிருக்கும். காய்ந்து கழிந்த கட்டை புல்களே கனவில் அதற்கு முக்கிய உணவாயிருக்கும். அவற்றை சவைக்க முடியாமல் வாயில் போட்டு மென்று கதுக்கிக்கொண்டிருப்பதே உண்ட பின் அநுபவிக்கும் பேரானந்தமாய் அதற்கு தோன்றும். இவற்றைத் தவிர கழுதையின் கனவிற்குள் வேறு எதுதான் வர முடியும்? சரி, இந்த கனவு காண்பதற்காக கழுதையை குற்றஞ் சொல்ல முடியுமா? அல்லது அது வேண்டுமென்று செய்கிறதா? இரண்டுமில்லை. அதன் சுபாவத்தை அது செய்கிறது. இயற்கை விதிப்படி அது நடக்கிறது. சூரியன் கிழக்கே உதயமாவதற்கு எப்படி யார் மீதும் குற்றஞ் சொல்ல முடியாதோ, அம்மாதிரியே கழுதை கத்தலும் கதுக்கலுமாக கனவு காண்பதற்கும் யாரையும் குற்றஞ் சொல்ல முடியாது. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இந்தியாவில் ஒரு விநோத ஜந்து இருக்கிறது. அதன் பெயர் வில்லியர்ஸ். அவர்தான் இந்தியாவிலுள்ள வெள்ளையர் சங்கத்திற்கு தலைவர். ஆயிரம் சர்ச்சில்கள் சேர்ந்தாலும் ஒரு வில்லியர்சுக்கு ஈடாக முடியாது. உளறுவதில் அவ்வளவு கைக்காரர். இந்த மகான் சீமைக்கு போய்விட்டு சமீபத்தில் இந்தியா திரும்பியிருக்கிறார். இந்தியாவிற்கு வந்ததும் அவர் கொடுத்த அபிப்பிராயத்தைப் பார்த்தால் எல்லாம் அபத்தமாகவே யிருக்கிறது. சீமையில் இருக்கும் போது "டெயிலி எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகை நிருபரிடம் ஏதோ உளறியதாக ஒரு செய்தி வந்தது. அந்த அபிப்பிராயத்தை இந்தியாவிலுள்ள வெள்ளையர் சங்கங்கள் எதிர்த்தன. உடனே வில்லியர்ஸ் தாம் அம்மாதிரி சொல்லியதில்லை யென்று மறுத்தார். ஆனால் பம்பாய்க்கு வந்ததும் இவர் கொடுத்த அபிப்பிராயத்தைப் பார்த்தால், லண்டன் சென்றதால் இவருக்கு மூளை குளிர்ச்சி அடைந்ததாய் தெரியவில்லை. சர்ச்சிலுக்கு சீமையில் மதிப்பு கிடையாது என்று அவர் முதலில் சொல்லுகிறார். வில்லியர்ஸ் போன்ற திமிங்கிலங்கள் இருக்கும் போது, சர்ச்சில் போன்ற மீன்களுக்கு என்ன மதிப்பு இருக்கப்போகிறது? உண்மைதான். மேலும் அவர் வாய் திறந்து கக்குவதாவது:—

"பிரிட்டிஷ் பிரஜைகள் அல்லாத மற்றவர்கள் வர்த்தகத்தை தடுக்க இந்தியருக்கு உரிமையுண்டு. ஆனால் பிரிட்டிஷாராகிய எங்களை தடுக்கக் கூடாது. எங்களுக்கு விரோதமாக எந்தச் சட்டமும் செய்வதில்லை யென்று ராஜாங்க அமைப்புச் சட்டத்தில் பாதுகாப்பு வேண்டும். பிரிட்டிஷாருக்கு இந்நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு உண்டு. அதற்கு குந்தகமில்லாமல் சட்டங்கள் அமைக்கவேண்டும். இந்நாட்டு ஜனங்களைப்போல சகல வர்த்தகங்களிலும் எங்களுக்கு உரிமை வேண்டும். இவற்றை தவிர வேறெதுவும் நாங்கள் கேட்கவில்லை. யார் எதிர்த்த போதிலும் இவற்றை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது."

ஸ்ரீ. வில்லியர்ஸ் அபிப்பிராயப்படி இந்தியா எக்கேடு கெட்டாலும் பிரிட்டிஷாருக்கு இந்நாட்டில் சுரண்டும் உரிமை போகக்கூடாது. அந்த உரிமையை பறிக்காத விதத்தில் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்கவேண்டுமாம். அதாவது சுளையை வெள்ளை வர்த்தகர் விழுங்கி விட்டு தோலை இந்தியருக்கு கொடுக்கவேண்டுமாம் ஸ்ரீ. வில்லியர்சின் சுயராஜ்யம் வேறு எவ்விதமாக இருக்கமுடியும்? கழுதையின் கனவில் குயில்நினைவோ மயில் நினைவோ வரமுடியாதென்றால், வில்லியர்ஸ் நினைவில் மட்டும் எப்படி உண்மை சுயராஜ்ய நினைப்பு வர முடியும்? வில்லியர்ஸ் கனவைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. அவர் மனப்போக்கையும், அவர் கூட்டத்தாரின் பேராசை நினைப்பையுமே அவர் அறிக்கை வெளிப்படுத்துகிறது. ஆனால் வில்லியர்சே, உமக்கு ஒரு வார்த்தை. இந்தியா சுயராஜ்யம் பெறப்போவது நிச்சயம். அதை உம்மைப்போல ஆயிரம் வில்லியர்ஸ் வந்தாலும் தடுத்துவிட முடியாது. கோபுரத்திலுள்ள பொம்மையைப் போல உம்மால் இந்தியா ஓடுகிறதென்று முட்டாள்தனமாய் நினைக்க வேண்டாம். உமது கனவோ நினைவோ எதுவானாலும், இந்தியாவிற்கு அதைப்பற்றி கொஞ்சமும் கவலை கிடையாது.

Koviloor Digital Library

# கஞ்சிக்கு திண்டாட்டம் :: (மகாத்மா காந்தி)

உங்களுடன் நான் வெளிப்படையாகப் பேசாவிட்டால் நான் உண்மையான நண்பனா யிருக்க மாட்டேன். மதுபானத்தையும் அந்நியத்துணியையும் பகிஷ்கரிக்கும் உரிமை எனக்கு அளிக்கப்படவேண்டுமென்று சென்ற மார்ச்சு மாதம் நான் லார்ட் இர்வினிடம் பெரிதும் மன்றாடினேன். மூன்று மாதம் வரை இதை நிறுத்தி வைக்கும்படி அவர் கூறினார். மூன்று நிமிஷங்கூட முடியாதென்று நான் கூறினேன். உங்களிடையே முப்பது லட்சம்பேர் வேலையில்லாதிருக்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ, முப்பது கோடி பேர் வருஷத்தில் ஆறு மாதம் வேலையில்லாமலிருக்கின்றனர். உங்களில் வேலையில்லாதிருப்போருக்குச் சராசரி 70 ஷில்லிங் வீதம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தியர்களின் சராசரி மாத வருமானம் [illegible] ஷில்லிங்கே யாகும். வேலையில்லாதிருப்பதனால், தமது தன் மதிப்பு போய்விட்டதாக ஒருவர் கூறினார். அஃது உண்மை. நான் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தை நடத்துவேனே யாகில், தொழிலாளர்கள் ஒரு நாள் கூட சும்மா யிருக்கும்படி செய்ய மாட்டேன். கல்லை உடைப்பதோ, மணலைத் தாக்குவதோ, தெருக்களில் வேலை செய்வதோ ஏதேனும் ஒரு வேலை செய்யும்படி கூறுவேன். அப்படியிருக்கும்போது முப்பது கோடி பேர் வேலையில்லாதிருக்கின்றனர் என்றால் அதை நினைத்துப் பாருங்கள். வேலையில்லாத காரணத்தினால் பலர், தன் மதிப்பிழந்தவர்களாய் கடவுள் நம்பிக்கையும் அற்றுப்போய் விடுகிறார்கள். ஆண்டவன் திருச் செய்தியை அவர்கள் முன்னர் எடுத்துச்செல்ல எனக்குப் போதிய தைரியமிருப்பதில்லை. அதைவிட அதோ கிடக்கும் அந்த நாய்க்குக் கடவுளைப் பற்றிக் கூறலாம். வேலையில்லாது வறுமையில் உழன்று கிடக்கும் இந்தியர்களின் கண்களில் பிரகாசமே இல்லை. சாப்பாடுதான் அவர்களுக்குத் தெய்வமாக இருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுத்துத் தான், பிறகு ஆண்டவன் திருச் செய்தியையும் அவர்களுக்குக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. காலையிலே நல்ல ஆகாரம் சாப்பிட்டுவிட்டு, மத்தியானம் நல்ல போஜனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்போர்க்கு ஆண்டவனைப் பற்றி நிறையப் பேசலாம். ஆனால் ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவும் இல்லாமல் தவிப்போர்க்கு ஆண்டவனைப்பற்றி எப்படிப் பேசுவேன்? ரொட்டியும் வெண்ணெயுமே அவர்களுக்கு ஆண்டவனாகப் புலப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள ஏழைக் குடியானவர்கள், நிலத்திலிருந்து உணவைப் பெற்றுக் கொள்கிறார்கள். மேல் செலவுக்காகக் கைராட்டினத்தைக் கைக்கொள்ளும்படி நான் கூறினேன். இப்பொழுது, நான் பிரிட்டிஷார் முன்னிலையில் என் எனது ஒற்றையாடையுடன் தோன்றியிருக்கிறேனென்றால், போதிய உணவும் உடுக்க உடையும் இல்லாது தவிக்கும் ஏழை இந்தியர்களின் பிரதிநிதி என்பதைக் காட்டுவதற்காகவேயாகும். உங்களுடைய துன்பகாலத்தில்கூட நீங்கள் சந்தோஷமா யிருக்கிறீர்கள். இதற்காக நான் பொறாமைப்படவில்லை. உங்களுடைய சந்தோஷம் அபிவிருத்தி யடையவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். ஆனால் இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான ஏழைமக்களின் சவக்குழிகளின்மீது நீங்கள் அபிவிருத்தியடைந்து சந்தோஷமா யிருக்கவேண்டுமென்று நினையாதீர்கள்.

இந்தியாவுக்குத் தனிப்பட்ட வாழ்க்கை வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் உண்டிக்கும் உடைக்கும் எந்த அயல் நாட்டையும் எனது நாடு நம்பிக் கொண்டிருக்கக் கூடாதென்பதே எனது கோரிக்கை. தற்கால நெருக்கடியைச் சமாளிக்க நாம் ஏதேனும் வழிகளைத் தேடலாம். ஆனால் பழையபடி லங்காஷைர் வியாபாரம் நடைபெறுமென்று நீங்கள் கருதவேண்டாம். அது முடியாத காரியம்.

இப்பொழுது திடீரென்று எனது மூச்சு நின்று விட்டதென்று வைத்துக்கொள்வோம். செயற்கை முறையில் எனக்கு மூச்சு வரும்படி பண்ணுகிறார்கள். அப்படியானால் அந்தச் செயற்கை முறையையே நாம் எப்பொழுதும் நம்பிக்கொண்டிருப்பதா? என்னுடைய சுவாசப் பையை நான் உபயோகியாமலே இருந்துவிடுவதா? பின்னைய முறைப்படி செய்வது தற்கொலை செய்வதற்கொப்பாகும். என்னுடைய சுவாசப் பையைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தியா, தனது சுவாசப் பையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நீங்கள் பிரார்த்திப்பீர்களாக. உங்களுடைய துன்பத்திற்கு இந்தியா காரணமென்று கருதாதீர்கள். உங்களுக்கு விரோதமாக உலக சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. நியாயமாக எல்லாவற்றையும் பாருங்கள். —லங்காஷயர் பிரசங்கம்

Koviloor Digital Library



# மின் வெட்டு.

"ஹிந்து" நிருபர் குறும்பு.

மகாத்மா சீமைக்கு போனது முதல் அவரைப் பற்றி மறைமுகமாக தாக்கி எழுதுவதையே "ஹிந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் தொழிலாய் வைத்துக் கொண்டிருக்கிறார். ஹிந்து ஆசிரியர் ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்கார் லண்டனில் இருப்பதால் அவரை அறியாமல் இச்செய்திகள் வருகின்றன என்று சொல்ல முடியாது. லண்டனில் எதிர்பார்த்த அளவு மகாத்மா வட்ட மேஜையில் மதிப்பு பெறவில்லையாம். மகாத்மா பல தடவைகளில் தவறி நடக்க இருந்ததை ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்கார் காப்பாற்றினாராம். இவையெல்லாம் பழைய கதை. இப்பொழுது புதிதாக ஒரு குறும்பு. மைனாரிட்டி கமிட்டியின் தோல்விக்கு மகாத்மாவே காரணமாம். இது எவ்வளவு அயோக்கியத்தனம்? சர். ஷாபி, ஜின்னா போன்றவர்கள் கூட மகாத்மாவின் நேர்மையை புகழ்ந்திருக்க, "இந்து" நிருபரின் புத்தி இப்படி கெட்டுப் போவானேன்? ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்காரை ஆகாயத்தில் தூக்கி வைத்து புகழ்ந்தாலும் நமக்கு கவலையில்லை. தினசரி அவரைப் பற்றி பத்தி பத்தியாக செய்திகளை வெளியிட்டாலும் நமக்கு விசாரமில்லை. ஆனால் மகாத்மாவை குறை கூறுவானேன்? அவரை குறை கூறுவதால் ரங்கசாமி ஐயங்கார் பெரியவராகலாம் என்று நினைப்பு இருந்தால், அவரும் சீனிவாச ஐயங்கார் கதியையே அடைவாரென்று எச்சரிக்கிறோம். காங்கிரசிற்கு விரோதமாக ஐயங்கார் சீமைக்கு ஓடியதை மறைப்பதற்கு இந்த சூழ்ச்சி செய்யப்படுமானால் அவர் ஒரு நாளும் வெற்றி பெறப்போவதில்லை.

முதல் மந்திரி மறுப்பு.

மகாத்மா மைனாரிட்டி கமிட்டியில் முதல் மந்திரி பேசியதை கண்டித்து அவருக்கு கடிதம் எழுதினார். அதற்கு பதில் எழுதும்போது மைனாரிட்டி சமரச முறிவிற்கு மகாத்மாவே காரணமென்று முதல் மந்திரி குறும்புத்தனமாய் எழுதியதாக "டெயிலி ஹெரால்ட்" வெளியிட்டது. அதை முதல் மந்திரி மறுக்கிறாராம். அம்மாதிரி குறும்புத்தனமாய் எழுதவில்லையென்று சொல்லுகிறார். தற்காலிகமாக முதல் மந்திரி பேச்சை ஒப்புக் கொள்ளுவோம்.

கும்பகர்ண தூக்கம்

ரயில்வே விசாரணை கமிட்டி முன்பு சென்னையில் ஸ்ரீ. தியாகராஜ ராவ் என்ற தென் இந்திய ரயில்வே மாஜி தொழிலாளர் சாட்சியம் கொடுத்தார். அவர் வேலையிலிருந்த சமயத்தில் தண்டிக்கப் பட்டவர். இதை அதிகாரிகள் அறிந்தும் ரயில்வேகாரர் மறுபடியும் அவரை வேலையில் வைத்துக் கொண்டார்கள். ஆனால் திடீரென்று சென்ற ஜனவரி மாதம் வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். ஏன்? அவர் முன்பு தண்டனையடைந்ததற்காகவாம். இரண்டு வருஷம் கழிந்தபின் பா அவர் தண்டனை யடைந்தது தெரிந்தது என்று கேட்டதற்கு, போலீசார் அப்பொழுது தான் தெரிவித்தார்கள் என்று ரயில்வே வக்கீல் சொன்னார். கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவரான ஸ்ரீ. வெங்கட்டராம சாஸ்திரி "2 வருஷங்கள் கழிந்தபின்பே தெரிந்தது ஆச்சரியம். அதிலும் இச்சமயம் திடீரென்று போலீசார் தெரிவிக்க காரணமென்ன?" என்று கேட்டார். இம்மாதிரி கும்பகர்ண தூக்கம் போடும் அதிகாரிகளிடம் ரயில்வே நிர்வாகத்தை ஒப்படைப்பது சரியா என்று கேட்கிறோம்.

தொண்டருக்கு செருப்படி.

காரைக்குடி கொப்புடையம்மன் சன்னதிக்கு முன்னால் அன்னிய ஜவுளி வியாபாரம் செய்யும் இ. மெ. லெ. நெ. ரெங்கநாதன் செட்டியார் கடை முன் கே. பழனியாண்டி, நாராயண பிள்ளை, உண்ணிகிருஷ்ண மேனோன் இன்னும் பல தொண்டர்கள் மிகவும் சாத்விகமாக மறியல் செய்து கொண்டிருந்தார்கள். ஷை செட்டியார் கடையில் தையல் வேலை பார்க்கும் நாயர் என்ற பேர்வழி கீழே கிடந்த செருப்பை கையில் எடுத்துக்கொண்டு "இனிமேல் துணிவாங்க வருபவர்களை வாங்கவேண்டாம் யென்று சொன்னால் இந்த மிதியடியினால் அடிப்பேன்" யென்று சொன்னார். அந்த சமயம் யாரோ ஒருவர் கடைக்குள் நுழைந்து துணிவாங்கப் போனார். "ஐயா இந்த பாஷாணத்துணியை வாங்கவேண்டாம் கதரை வாங்குங்கள்" யென்று பழனியாண்டி சொன்னார். உடனே தையல் கடை நாயர் கையிலிருந்த செருப்பால் தலையில் ஓங்கி அடித்தார். தொண்டர் கே. பழனியாண்டியும், மற்ற தொண்டர்களும் மகாத்மா காந்திக்கு ஜே என்று கோஷஞ் செய்தார்கள். தொண்டர்கள் கோபமடையவில்லை. ஆனால் அடித்தவர்தான் வெட்கி தலை குனிந்தார். தமது மூடத்தனத்தை உணர்ந்து இப்பொழுது வருந்துகிறாராம்.

—ஒரு நிருபர்

Koviloor Digital Library



## முதல் மந்திரி தோற்றால்?

முதல் மந்திரி பார்லிமெண்ட் தேர்தலுக்கு 3 இடங்களில் போட்டி போடுகிறார். அவரின் சொந்தத் தொகுதியான சீஹாமில் அவருக்கு இத்தடவை பூஜ்யம் ஓட்டுதான் கிடைக்குமென்று தெரிகிறது. மற்ற தொகுதியில் ஜெயித்தால் தான் அவர் பார்லிமெண்டுக்குள் நுழைய முடியுமென்று சொல்லப்படுகிறது. ஒரு வேளை எல்லா தொகுதிகளிலுமே தோற்றுப்போனாலும் போகலாம். அப்படி ஏற்பட்டால் அவர் கதியென்ன? அவர்தான் வட்டமேஜை மகாநாடு தலைவர். அவர்தோற்றால் வட்டமேஜை மகாநாடு என்னகதி யடையும்? அவர் பிரதமராய் விளம்பரஞ் செய்யும் தேசிய சர்க்கார் என்ன கதியை அடையும்? அப்படி தோற்றால் சக்கரவர்த்தி இஷ்டப்பட்டால் மறுபடியும் 6 மாதம் வரை ஒருவரை பார்லிமெண்டில் இருக்க, உரிமை கொடுக்கலாம். இந்த உரிமையின் மேற்றுழைந்து கொண்டு மெக்டனால்ட் காலங்கழிக்கப் போகிறாரா? அல்லது கன்சர்வேடிவ்கள் தயவால், அவர்கள் தொகுதிகளில் எங்காவது நின்று பார்லிமெண்ட் ஸ்தானத்திற்கு பிச்சை கேட்கப் போகிறாரா? இரண்டில் எதைச் செய்தாலும், மானங்கெட்ட செய்கையைத் தவிர வேறில்லை. மலை விழுங்கி மகாதேவனுக்கு கதவு டெங்கள் எந்த மூலை? தொழிற் கட்சியை காட்டிக் கொடுத்த மெக்டனால்டுக்கு இந்த விஷயங்கள் எல்லாம் அவமான மாகவா தோன்றப் போகிறது?

---

## ஸ்ரீ. பக்கிரிசாமி பிள்ளை விஜயம்

இரங்கூன் கட்டிகோட்டை செட்டியார்களின் பரிபாலனத்தில் நடந்துவருகிற திருக்கம்மை பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் உயர்திரு திருவாளர் கு. பக்கிரிசாமி பிள்ளையவர்கள் திங்கட்கிழமை (26—10—31) எரின்புரா கப்பலில் இரங்கூனிலிருந்து இங்கே சென்னைக்கு விஜயமாகி திரிசிராபுரம், பழனி முதலிய இடங்களுக்கு போய் திரும்பவும் ஒருமாதத்தில் இரங்கூன் போய் சேருவார். ஸ்ரீ. பிள்ளை அவர்கள் தமிழ் ஆராய்ச்சியும் ஆன்மார்க்க வழியில் சிறந்த அனுபவமும் பெற்றுள்ளவர். பரோபகாரமும், ஜீவகாருண்யமும் ஒருங்கே யமைந்துள்ள பெரியார். அவர் வாழ்வு நல்வா வாகுக.

—ஒரு நிருபர்.

## வெள்ளைச்சிறுமி எழுதிய காந்தி சரித்திரம்.

---

மகாத்மா பிறந்த தினத்தன்று பத்துவயது கூட நிரம்பாத ஒரு வெள்ளைப்பெண் மகாத்மாவைப்பற்றி ஒரு வியாசம் எழுதி மகாத்மாவிற்கு அனுப்பியது. அதாவது:—

செயிண்ட் பிரான்சிஸ் என்ற மகானை ஏழை மனிதர் என்று அழைத்தார்கள். காந்தியைப்போலவே ஒவ்வொரு வழியிலும் அவர் இருந்தார். காந்தியும் அவரும் குழந்தைகள், பறவைகள், புஷ்பங்கள் ஆகிய இயற்கைப் பொருள்கள்மீது அன்பு கொண்டனர். செயிண்ட் பிரான்சிசைப் போலவே மகாத்மாவும் லங்கோடு கட்டியிருக்கிறார். காந்தியைப்போல பிரான்சிஸ் மகானும் பணக்கார வர்த்தகரின் புதல்வர். தமது சீடர்களுடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஒருநாள் பிரான்சிஸ் மகான் இத்தாலிய ஏழைகளைப்பற்றி நினைத்தார். உடனே தம்மிடமுள்ள உயர்ந்த உடைகளையும் பணத்தையும் ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு காந்தியை போல பழைய துணிகளை கட்டிக் கொண்டார்.

பிரான்சிஸ் மகான் தமது சீடர்களுடன் சிறிய குடிசைகள் கட்டி வாழ்ந்தார். காந்தியும் அப்படியே. தமது செல்வ வாழ்வை ஏழை இந்தியருக்காக காந்தி துறந்தார். லண்டனுக்கு வரும்போது அவருக்கு வேண்டிய துணிகளை அவர் நாட்டார் கொடுத்தார்கள். ஏனென்றால் அவர் கையில் பணமே கிடையாது. திங்கட்கிழமை காந்தி மௌன விரதமிருக்கிறார். அவர் ஆட்டுப்பால்,' பழம், விதைகள் இவைகளை சாப்பிட்டே உயிர் வாழுகிறார்.”

இம்மாதிரி பல சிறுவர் சிறுமிகள் பிரிட்டனில் எழுதுவதாகத் தெரிகிறது. மகாத்மா பிரிட்டிஷாரிடம் அவ்வளவு செல்வாக்கு பெற்றுவிட்டார்.

### அயல் நாட்டார் அழைப்பு

மகாத்மாவை ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் நாட்டிற்கு வரவேண்டுமென்று அழைக்கிறார்கள். அமெரிக்கர் அழைத்ததற்கு ரெவரெண்ட் ஹோம்ஸிடம் கேட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார். ஹோம்ஸ் தற்சமயம் மகாத்மா அமெரிக்காவிற்கு விஜயம் செய்யும்படிகாலம் பக்குவமாயில்லை என்று சொல்லுகிறார். சில அமெரிக்க பிரமுகர்கள் மகாத்மாவை வந்து கண்டனர். மகாத்மா வந்தகாரியம் வெற்றி பெற முடிந்துவிட்டால், அஹிம்சையின் மூலமாக முதல் முதலில் உலகத்தில் அவர் வெற்றி பெற்றதை கொண்டாடும் விதத்தில் அவருக்கு அமெரிக்காவில் பெரிய வரவேற்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். லண்டனில் வெற்றி பெறாவிட்டால், அஹிம்சா தர்ம முறையில் இந்திய விடுதலைக்கு தாங்கள் உதவி புரிவதாகச் சொன்னார்கள்.

Edited Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 அக்டோபர் 29உ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 13உ வியாழக்கிழமை | இதழ் 45

## அர்ச்சுனன் தூது.




(கிருஷ்ணனை தன் பக்கம் பாரதப் போரில் சேர்க்கவேண்டு மென்று அர்ச்சுனனும், தன் பக்கம் சேர்க்க வேண்டு மென்று துரியோதனனும் எண்ணி கிருஷ்ணனிடம் சென்றார்கள். கிருஷ்ணன் முதலில் அர்ச்சுனனையே பார்த்தபடியால் பாண்டவர் பக்கமே சேர்ந்தார்.)

பிரிட்டிஷ் பொது ஜனங்களை சர்க்கார் ஏமாற்றி வைத்துக்கொண் டிருந்தார்கள். ஆனால் மகாத்மா லண்டனுக்குப் போன பின்பு பொது ஜனங்களும், பாதிரிகளும் மயக்கம் நீங்கி மகாத்மாவுடன் சேர்ந்து கொண்டார்கள். இனி வரும்போரில் (போர் நேரிட்டால்) பாதிரிகள் மகாத்மா பக்கம் இருப்பார்களே யொழிய மெக்டனல்ட் பக்கம் இருக்கமாட்டார்கள். கான்டர் பரிடீன் என்ற பெரிய குரு சொல்லுகிறார்:- வட்டமேஜை மகாநாடு தோல்வி யுற்றால், இந்தியாவில் மறபடியு அடக்குமுறைகளை கையாளவோ, ஜாலியன் வாலாபாக் படுகொலை மாதிரி செய்யவோ பிரிட்டிஷ் ஜனங்கள் ஒரு நாளும் சர்க்காரை விடப்போவதில்லை.

Koviloor Digital Library



# சமரசம் தோற்றால்—?

லண்டனில் நடக்கும் சமரசப் பேச்சு தோற்றுப் போனால், அப்புறம் என்ன நடக்கும்? என்று கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை நிருபர் மகாத்மாவைக் கேட்டார். "தோற்றுப் போனால் கூடிய சீக்கிரத்தில் மறுபடியும் சட்டமறுப்பையும் பகிஷ்காரத்தையும் ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று மகாத்மா சொன்னார்.

சட்டமறுப்பு ஆரம்பித்தால் சர்க்காரால் அதை அடக்கி விடமுடியுமா? முடியாது என்பதன் சின்னமே காந்தி—இர்வின் உடன்படிக்கை. சரி, நாம் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்காவில் நடைபெறும் "நேஷன்" பத்திரிகை சொல்லுவதைக் கேளுங்கள்.

"மகாத்மாவின் சாத்விக எதிர்ப்புக் கிடையில் பிரிட்டிஷாரின் ஆயுத பலம் எதுவும் செய்ய முடியாது. இப்பொழுது வேண்டியதெல்லாம், மகாத்மா தமது கொள்கையை சற்றும் விட்டுக் கொடுக்காமல் இருக்கவேண்டியது ஒன்றே. அவருடைய பலத்தைக்கண்டு எந்த ஏகாதிபத்தியமும் தலைவணங்கியே தீரவேண்டும்."

இம்மாதிரி "நேஷன்" சொல்லுகிறது. சட்டமறுப்பு சாமான்யமல்ல. போலீஸ் தடிகள் கண்டபடி சுழன்றும் அதை நிறுத்த முடியவில்லை. அதைப்போலவே பகிஷ்காரமுமாகும். லார்ட் இர்வின் 11 அவசரச் சட்டங்கள் செய்தும் இரண்டையும் அடக்க முடியவில்லை. அதன் பின்பே மகாத்மாவுடன் சமரசம் செய்து கொண்டார். ஆகவே சட்டமறுப்பை அடக்கி விட சர்க்காரால் ஒரு நாளும் முடியாது.

ஆனால் சட்டமறுப்பு ஆரம்பித்தால் சர்க்கார் சும்மா யிருக்கமாட்டார்கள். அடக்கு முறையை கைக்கொள்ளுவார்கள். பழைய தடியடிகள் புறப்படலாம். ஆனால் அதைப் பார்த்துக் கொண்டு உலகம் சும்மாயிருக்குமா? அல்லது பிரிட்டன்தான் சும்மாயிருக்குமா? ஒரு நாளும் சும்மா யிருக்காது. லண்டன் மகாநாடு என்ன கதியடைந்தாலும் சரி, மகாத்மா சீமைக்கு போனதன் மூலமாக இந்தியாவிற்கு ஒரு புதிய சக்தி கிடைத்திருக்கிறது. அதுவே மகாத்மாவின் செல்வாக்கு. "வந்தேன், பார்த்தேன், வென்றேன்" என்று ரோம சக்கரவர்த்தி சொல்லியது போல, மகாத்மா செல்லு மிடங்களிலெல்லாம் அவருக்கு வெற்றி. அவர் அன்பையும், நேர்மையையும் ஜனங்கள் உள்ளத்தில் நேராகப் பாய்ச்சுகிற படியால், எல்லாரும் அவருக்கு அடிமை. மகாத்மா கேட்பது மிகவும் நியாயமானது என்ற உண்மையை உலகத்தார் மனதிலும், முக்கியமாய் லங்காஷயர் தொழிலாளர் மனதிலும், அதிலும் முக்கியமாய் பாதிரிகள் மனதிலும் அவர் பதியும்படி செய்துவிட்டார். இந்த ஒரு வெற்றி அவர் சீமைக்குப் போனதால் ஏற்பட்ட வெற்றியாகும். பிரிட்டனிலுள்ள பிரபல மத குருக்கள் மாரும், பிரபல அறிஞர்களும் சேர்ந்து ஒரு பெரிய மகஜர் தயார் செய்கிறார்கள். மகாத்மா கேட்கிறபடி அவருடன் சமாதானம் செய்து கொள்ளவேண்டுமென்றும், இந்த அரிய சந்தர்ப்பத்தை விடுக்க வேண்டாமென்றும் அதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்பித்தால், சர்க்கார் கேட்பாரின்றி அடக்கு முறைகளை கையாள முடியாது. முக்கியமாய் பிரிட்டனில் பெரிய கிளர்ச்சி ஏற்படும். இவற்றையெல்லாம் பார்த்தால், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கு கடுகளவாவது சுயமதிப்போ, மானம் மரியாதையோ, புத்தியோ இருந்தால், காந்தியுடன் சமரசம் செய்வதே உடனே செய்யவேண்டிய அவசரமான காரியம் என்று எச்சரிக்கிறோம்.

அதை விட்டு, சமூக வேற்றுமைகளை காட்டிக் கொண்டு ஏமாற்றப் பார்த்தால் நிச்சயம் தோல்வியே அடைவார்கள். சமூக வேற்றுமைக்காக ராஜாங்க அமைப்பு மாறுதலை நிறுத்தக் கூடாது. "சுயராஜ்யம் கொடுப்பது உடனே நடக்கவேண்டும். சமூக ஒற்றுமை சமரசப் பேச்சால் ஏற்படாவிட்டால், ஒரு உயர்தர கோர்ட்டை அதற்காக நியமித்து தீர்ப்புக் கூறும்படி செய்யட்டும்" என்று மகாத்மா சொல்லுகிறார். இதுவே சரியான வழி. பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளே, கடைசி முறையாக எச்சரிக்கிறோம். மகாத்மாவுடன் சமரசம் செய்யாவிடில், உங்களுக்கு தாங்க முடியாத கஷ்டம் வந்துசேரும் என்பதை இப்பொழுதே சொல்லுகிறோம். உங்கள் சரித்திரத்தில், இந்தத் தடவையிலாவது புத்திசாலித் தனமாக நடந்து கொண்டதாய் பெயர் எடுங்கள். வீண் அகம்பாவம் வேண்டாம்.

---

இந்தியாவிலுள்ள மன்னர்களை இந்திய உடையிலிருக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகள் என்றே சொல்ல வேண்டும். ஒரு பிரிட்டிஷ் அதிகாரி என்ன நிலைமையி லிருக்கிறாரோ அதைப் போலவே ஒரு இந்திய மன்னரும் இருக்கிறார். ஆகவே சுயராஜ்ய சர்க்காருக்கு அவரும் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.—மகாத்மா காந்தி.

Koviloor Digital Library



## எங்கும் காந்தி!

இந்தியரை எந்த நாட்டார் பார்த்தாலும் "காந்தி எப்படி இருக்கிறார்?" என்றே கேட்கிறார்கள். பாரிசில் நான் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும்போது என் பக்கத்தில் இருந்த ஒரு பிரஞ்சு சீமாட்டி கேட்டாள். எகிப்தில் கண்காட்சிகளைக் காட்டும் வழிகாட்டி கேட்டான். தெருவில் சந்திக்கும் போலீஸ்காரன் கேட்கிறான். வண்டியில் போகும்போது டிரைவர் கேட்கிறான். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனால் போர்ட்டர் கேட்கிறான். ஹோட்டலுக்குப் போனால் பட்லர் கேட்கிறார். பூட்ஸ் துடைக்கும் நீக்ரோ பையன்கூட கேட்கிறான் என்று ஆசிரியர் சேஷாத்திரி எழுதுகிறார்.

மகாத்மா கையெழுத்திற்கு அயல் நாட்டார் மோகம் அசாத்தியமா யிருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர் ஜாகைக்கு பலர் வந்து கையெழுத்து கேட்கிறார்கள். "இன்று மௌன தினம். இன்று பேட்டிகாண முடியாதே" என்று ஒரு திங்கட்கிழமை அவர்களுக்கு பதில் சொல்லப்பட்டதாம். மௌன தினத்தன்று வரவேண்டுமென்பதற்காகவே இன்று வந்தோம். இன்று கேள்விகளுக்கு வாயால் பதில் சொல்ல மாட்டார். காகிதத்தில் எழுதி காட்டுவார். அதுவே எங்களுக்கு வேண்டும். அதை என்றென்றும் பத்திரப்படுத்தி வைத்திருப்போம்" என்று அவர்கள் சொன்னார்களாம்.

இந்த கையெழுத்து பைத்தியம் பார்லிமென்ட் அங்கத்தினர்களையும் விடவில்லை. கன்சர்வேடிவ் கட்சி அங்கத்தினர்கூட இந்த கையெழுத்துக்காக தவிக்கிறார்கள். பத்திரிகை நிருபர்களும் இதைவிட்டு தப்பவில்லை. ஆகவே மகாத்மாவின் பெருமை எல்லாரையும் ஆட் கொண்டு விட்டது. பிரிட்டனில் வேடிக்கைப் படம் எழுதுவதில் ஸ்ரீ. லோ என்பவர் பிரசித்தி பெற்றவர். அவர் மகாத்மாவை பேட்டி கண்டு பேசினார். "என்னைப் பற்றி படம் போட்டு எனக்கு விளம்பரம் கொடுப்பதற்காக சந்தோஷப்படுகிறேன்" என்று மகாத்மா வேடிக்கையாகச் சொன்னாராம்.

மகாத்மா காந்தியை பார்க்கு முன்பு, அவர் லங்கோட்டையும், நடையுடைகளையும் பார்த்து சிரிக்க வேண்டுமென்று பலர் நினைத்துக் கொண்டு வருவது வழக்கமாம் அவரைப்பார்த்ததும் அந்த நினைப்பெல்லாம் பறந்து, அவரிடம் பக்தி விசுவாசம் காட்டும்படி அவர் சக்தி செய்து விடுகிறதாம்.

அமெரிக்காவில் மகாத்மா காந்தியை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பிட்டு முதல் முதலில் பேசிய ரெவரன்ட் ஹோம்ஸ் லண்டனுக்கு வந்து மகாத்மாவை பேட்டி கண்டு பேசினார்.

## சர்க்கார் அறிக்கை யோக்கியதை

சர்க்கார் அறிக்கை தேவ வாக்கல்ல. ஜனங்கள் ஏதாவது புகார் கூறினால், அது பொய் என்று கூறுவதற்கு சர்க்கார் அறிக்கையை கீழே மாகாண சர்க்கார் முதல் மேலே இந்திய சர்க்கார் வரை ஆதாரமாகக் கொள்ளுகிறார்கள். ஹிஜிலியில் ராஜீயக் கைதிகளை சுட்டது பெரிய அக்கிரமம் என்ற புகார் கிளம்பியது. இந்தியா சட்டசபையில் கூட கேள்விகள் பிறந்தன. அவசரத் தீர்மானமும் வந்தது. அவற்றிற்கெல்லாம் இந்திய சர்க்கார் பதில் சொல்லும்போது, வங்காள சர்க்கார் அறிக்கையையே சுட்டிக் காட்டினார்கள். இந்த வங்காள சர்க்கார் அறிக்கையை ஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அது பட்சபாத முள்ளது என்று சொல்லி விசாரணைக் கமிட்டி நியமிக்க கிளர்ச்சி செய்தார்கள். அதன் பேரில் விசாரணை கமிட்டி நியமனமாகியது. இனி இந்த வங்காள சர்க்கார் முதலில் தங்கள் அறிக்கையே உண்மையானதென்று சாதித்து வந்தார்கள். அந்த அறிக்கையின் யோக்கியதையை கவனிப்போம். துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபின்பு வங்காள சர்க்கார், உதவிக் காரியதரிசி ஒருவரை அனுப்பி ஸ்தலத்தில் விசாரிக்கச் சொன்னார்கள். அந்த மகான் அங்கே வந்தார். அங்குள்ள ராஜீயக் கைதிகளை விசாரிக்கவில்லை, அல்லது அங்கேயிருந்த அதிகாரியான கர்னல் பேக்கர் சொல்லியதையும் கவனிக்கவில்லை. வெறும் துப்பாக்கி தடியர்களான காவல்காரரை விசாரித்தார். அவர்கள் தான் சுட்டவர்கள். அவர்கள் எப்படி உள்ளதை சொல்ல முடியும்? தாங்கள் செய்தது சரியென்று அவர்கள் சொன்னார்கள. அதை அப்படியே சர்க்காருக்கு அனுப்பினார். கர்னல் பேக்கர் இந்த விவரங்களைப் பற்றி சர்க்காருக்கு எழுதினார். சர்க்கார் அதை கவனிக்கவில்லை. உதவிக் காரியதரிசி எழுதியதையே சர்க்கார் அறிக்கையாக வெளியிட்டார்கள். சர்க்கார் அறிக்கையின் யோக்கியதை இதுதான்! இதை ஆதாரமாய் கொண்டுதான் இந்திய சர்க்காரும் பதில் சொன்னார்கள். என்ன அயோக்கியத் தனம் பார்த்தீர்களா?

Koviloor Digital Library



# அமெரிக்காவில் காந்தி புகழ்

மகாத்மா லண்டனுக்கு போன பின்பு அவர் புகழ் பூலோகமெங்கும் பரவிப் பரவி ஒலிக்கிறது. முக்கியமாக செல்வச் செருக்கும், உலகாயதமும் நிரம்பிய அமெரிக்காவில் அவர் புகழ் அதிகமாய் பரவியிருக்கிறது. இயந்திரங்களிலும், நாகரிகத்திலும், செல்வ போகங்களிலும் ஈடுபட்ட அமெரிக்கா ஆத்மார்த்தீகமே உருவாய் திரண்டு வந்திருக்கும் மகாத்மா மீது அன்பும் ஆர்வமும் கொள்ளுகிறது. இது அமெரிக்கர் தங்கள் வாழ்க்கை முறையில் வெறுப்புற்று மாறுதல் வேண்டுவதையே காட்டுகிறது. மகாத்மா லண்டனுக்கு லங்கோடு தரித்து வந்ததைப்பற்றியும், அவர் வட்டமேஜை மகாநாட்டில் கனிர் கனிரென்று பேசி பிரிட்டிஷ் சர்க்காரை திகைக்க வைத்திருப்பதைப் பற்றியும் அமெரிக்க பத்திரிகைகள் ஏராளமாக பிரசுரம் செய்து வருகின்றன. அவை கொடுக்கும் தலைப்புகளும் கவர்ச்சியுள்ளதாயிருக்கின்றன. "பார்லிமெண்டில் காந்தியின் சுதந்திரயுத்தம்," "பிரிட்டிஷாருக்கு காந்தி இறுதிக்கடிதம்," "பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலை காந்தி முறுக்குகிறார்," இம்மாதிரியாக தலைப்புகள் கொடுத்திருக்கின்றன. அமெரிக்கர் காந்தி, காந்தி என்று தவிக்கிறார்களாம். அமெரிக்கப்பத்திரிகைகளும், அமெரிக்கப் பெரியார்களும், மகாத்மா லண்டனுக்கு போன பின்பு கூறியவைகளை சுருக்கமாக கீழே வெளியிடுகிறோம்.

"காந்தி ஜேம்ஸ் மாளிகையில் முதலில் பேசிய பேச்சு ஜேம்ஸ் மாளிகையையே வேரோடு அசைப்பதாகவே தோன்றிற்று. அவர் ராஜீய வாழ்விலே அன்று பேசிய பேச்சு மிகப்பெரிய பேச்சாகும். காந்தி வெறும் மகாத்மா மட்டுமல்ல. ஒரு பக்கா ராஜ தந்திரியாகும்.'

—சிகாகோ டெயிலி டிரிபியூன்.

"இந்தியாவின் ஒப்பற்ற தூதரான காந்தி வேறு எந்த தேசத்தின் தூதரும் செய்ய முடியாத, தைரியங்கொள்ளாத விதத்தில் பிரிட்டிஷ் சர்க்காரை முறுக்குகிறார்"

—ஹிர்ஸ்ட்

"ஜார்ஜ் வாஷிங்டனுக்கு பின்பு பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாக கிளம்பிய புரட்சிக்காரரில் மகாத்மாவிற்கு மிஞ்சியவர் யாருமில்லை."

—ஈவனிங் ஸ்டான்டர்ட்

"காந்தி மிக மெதுவாகவும் அமைதியாகவும், சுமமாகவும் பேசியதால், அவர் கோரிக்கைகள் எவ்வளவு அதிகமாயிருந்த போதிலும், கேட்பவர்களுக்கு அவை நியாயமானவை என்று படும்படியாக இருந்தன. புரட்சியை விட ஒத்துழைப்புக்கு அவர் ஆதரவு அளிக்கத் தயாராயிருப்பது போல தோன்றியது. அவருடைய இனிய குரலையும், அழகிய வார்த்தைகளையும் கேட்டவர்கள், அவர் ஆடைகளை மறந்து விடுவார்கள். ஜேம்ஸ் அரண்மனையிலேயே பிறந்து வளர்ந்த ஒரு பக்கா ராஜ தந்திரியோ என்று திகைப்பார்கள்."

—நியூயார்க் டைம்ஸ்.

"மகாத்மாவின் லங்கோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே புரட்டிவிட்டது. பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் கர்வத்தை அடக்கிவிட்டது. லங்கோடு கட்டிய ஒருவருடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க எந்த ஆங்கிலேயனும் சம்மதிக்க மாட்டான். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை காப்பதற்காக அம்மாதிரி பேசும் அவசியம் ஏற்படும்படி காந்தி செய்துவிட்டார். ஆகவே ஆங்கிலேயரைவிட அவரே உயர்ந்தவர்."

—சிகாகோ சண்டே டிரிபியூன்

இன்று உலகத்தில் மிகப்பெரிய காரியங்கள் எவை? அமெரிக்கா, பிரான்ஸ் சேர்த்து வைத்திருக்கும் தங்கம், ருஷியாவில் நடக்கும் பெரிய நவீன முயற்சி, லங்கோடு கட்டிய காந்தி.

—ரெவரன்ட் எடல் புருட்.

இன்றைய தினத்தில் மகாத்மா காந்தியே சகல ராஜ தந்திரிகளையும்விட சிறப்பாய் முன்னணியில் நிற்கிறார். முதல் நூற்றாண்டில் கிழக்கே நாசரேத்தில் ஒரு நட்சத்திரம் (கிறிஸ்து) உதித்தது. இன்றும் அதே கிழக்கில்தான் நம்மை வழிகாட்டி நடத்த ஒரு மகான் தோன்றியிருக்கிறார்.

—டாக்டர் ஸ்டாக்டேல்.

வெற்றியின் உருவாய் நமது காலத்தில் மகாத்மா விளங்குகிறார். உலகாயத கண்களோடு பார்த்தால் அவர் வாழ்க்கை முழுவதும் ஒரே தோல்வியாகத் தோன்றலாம். ஆனால் அவர் மிகப் பெரிய பெரிய வெற்றிகள் பெற்றிருப்பதாக அறிவாளிகள் கூறுகின்றனர். ஆயுதங்கள் இல்லாமல் லட்சக்கணக்கனக்கான பேர்கள் அவர் உத்தரவுக்கு கீழ்படிகிறார்கள். அவருக்கு துப்பாக்கியோ, யுத்தக்கப்பல்களோ இல்லாமல் இருந்தும் அவர் தமது இஷ்டப் படி நடக்கும்படி ஒரு ஏகாதிபத்தியத்திற்கு ஆக்ஞையிட பலம் பெற்றிருக்கிறார். ஆடம்பரமோ, அதிகாரமோ இல்லையென்றாலும், உலகத்தார் அனைவரும் அவரை ஆவலோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

—கோல்ட்ஸ்மன்.

Koviloor Digital Library

# ஐந்து முஸ்லிம் பெண்மணிகள்

(ஸ்ரீமதி ஹிஜாப் இஸ்மாயில்)

பிரபல முஸ்லிம் பெண்மணிகள் ஏராளமாயிருக்கின்றனர். ஆனால், அவர்களில் ஐவரை பொறுக்கியெடுக்கிறேன். எந்த அடிப்படையைக் கொண்டு அவர்களை பொறுக்குவது? முஸ்லிம் பெண் மக்களுக்கு சேவை செய்து அவர்களை விழிப்படையும் செய்ததையே அடிப்படையாகக் கொள்ளுகிறேன். அப்படிப் பார்க்கும்போது முதலில் ராணி சூரியாவும், அப்புறம் ஸ்ரீமதி ஜக்லூல் பாஷாவும், பின்னால் ஸ்ரீமதி அதீபா ஹானமும், நான்காவதாக ஸ்ரீமதி அத்தியாபீகமும் ஐந்தாவதாக பீகம் ஷா நவாசும் வருகிறார்கள்.

## ராணி சூரியா

ராணி சூரியா அவர் தந்தை முகமது டர்சி இத்தாலியில் வெகு காலம் ஆப்கன் சர்க்கார் தூதராயிருக்கும்போது அங்கே பிறந்தார். இத்தாலியிலேயே கல்வி பயின்றார். சுதந்திர காற்றையும், விடுதலை உணர்ச்சியையும் அங்கே பெற்றார். ஆப்கன் மாஜி மன்னரான அமானுல்லாவுக்கு அவர் ஒரே மனைவி. அமானுல்லாவுக்கு சூரியா மீது அதிகப்பிரியமுண்டு. அதனாலேயே ஆப்கனில் பலதாரமணம் மிக சாதாரணமாக இருந்தும் அவர் சூரியாவைத் தவிர வேறு யாரையும் மணக்கவில்லை. ஆப்கனில் மிக முக்கியமான சீர்திருத்தக்காரர் என்ற முறையில் அமானுல்லா பெயரும், சூரியா பெயரும் என்றென்றும் நிலைத்து நிற்கும். முல்லாக்கள் எதிர்த்தும் நூற்றுக்கணக்கான பையன்களையும் பெண்களையும் மேல் நாட்டிற்கு கல்விக்காக அனுப்பினார்கள். மேல் நாட்டு நடையுடைகளை புகுத்தினார்கள். அமானுல்லா இஷ்டப்படி விட்டிருந்தால் கொஞ்சம் நிதானமாய் நடந்திருப்பார். ஆனால் சீக்கிரம் ஆப்கன் நாகரிகம் பெற்ற நாடாக வேண்டுமென்ற ஆசை சூரியா ராணிக்கு பலமாயிருந்தபடியால், சீர் திருத்தங்களை துரிதமாகச் செய்யும்படி அமானுல்லாவை தூண்டிக் கொண்டேயிருந்தார். அதன் பலனை இருவரும் அநுபவித்தார்கள். அவர்கள் பட்டத்தை இழந்த போகிலும், அவர்கள் ஊன்றிய வித்து தளிர்த்து வளர்ந்து மரமாகி சீக்கிரம் பலனளிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவர்கள் பெயர்கள் ஆப்கன் சரித்திரத்தில் பொன்னால் எழுதப்படும்.

## ஸ்ரீமதி ஜக்லூல் பாஷா.

ஜக்லூல்பாஷா எகிப்தில் முடிசூடா மன்னராய் விளங்கினார். ஸ்ரீமதி ஜக்லூல் பாஷா முடிசூடா ராணியாய் விளங்கினார். எகிப்தில் அழகும், படிப்பும், பணமும் ஒருங்கே அமையப் பெற்ற பெண்களில் அவர் ஒருவர். முகமூடியை எகிப்தில் முதலில் விலக்கியவர் அவரே தமது கணவனுக்கு பக்கத்துணையாக அவர் செய்யும் வேலைகளில் நின்றார். சௌரியமும், தைரியமும் உருவாய் அமைந்தவர். அவர் நாட்டிற்காகவும், அவர் நாட்டுப் பெண்களுக்காகவும் அவர் செய்த வேலைகளும் தியாகங்களும் அவரை எகிப்திலேயே மிகப் பெரிய சீமாட்டியாய் விளங்கும்படி செய்திருக்கின்றன.

## காலீடா அதீபா கானம்.

உலகிலுள்ள பேர்பெற்ற மாதரசிகளில் அதீபா கானத்தையும் ஒருவராய்ச் சொல்லவேண்டும். முதல் முதலில் உலகிலேயே மந்திரி பதவி வகித்த பெண்மணி அவரே. துருக்கி தேசீய சர்க்காரில் கல்வி மந்திரியாக அவர் இருந்து மிக திறமையாக தமது கடமையைச் செய்திருக்கிறார். அவர் தகப்பனார் துருக்கியில் தாராள நோக்கங்கொண்ட கனவானாகையால், மேல்நாட்டு கல்வி கூடாது என்ற கிளர்ச்சி துருக்கியில் நடக்கும்போது அவரை அமெரிக்க பெண் கலாசாலையில் சேர்த்து படிக்க வைத்தார். படித்த பின்பு சாலேபே என்ற அவரது வாத்தியாருக்கும் அவருக்கும் விவாகம் நடந்தது. அதீபா கானம் எழுத்திலும் பேச்சிலும் மிகவும் வன்மை பொருந்தியவர். யுத்த காலத்தில் அவர் செய்த வீர பிரசங்கங்களே கோழைகளை வீரர்களாக்கி யுத்தத்தில் சேரும்படி செய்தன.

## அத்தியா பீகம்

பீகம் அத்தியா பெய்சிதந்தை கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்து பம்பாய்வந்து குடியேறியவர். பம்பாயில் அவர் குடும்பம் பிரபலமானது. பீகம அத்தியா முஸ்லிம் பெண்கள் கல்வி அபிவிருத்திக்காக செய்த வேலைகளை விரோதிகள்கூட பாராட்டுவார்கள். 1925-ம் வருஷம் அலிகாரில் அகில இந்திய முஸ்லிம் கல்வி மகாநாடு கூடியது. பெண்களும் வந்து மகாநாட்டை கவனிக்கும்படி அத்தியாபீகம் ஒரு பக்கத்தில் படுதா கட்டி ஏற்பாடு செய்தார். காரியதரிசிக்கு இது பிடிக்காமல் படுதாவை எடுத்து விட்டார். உடனே அத்தியாபீகம் சில முஸ்லிம் பெண்களுடன் முக மூடியில்லாமல்

(358-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library

## மெக்டொனல்ட் மாற்றிய கதை

முதல் மந்திரி ராம்சே மெக்டொனல்ட் தொழிற் கட்சியை கைவிட்டு புதிய மந்திரி சபை அமைத்தாரே, அதன் ரகசிய மென்ன? எதற்காக அவர் அப்படி செய்யும்படி ஏற்பட்டது? இதைப்பற்றி ஒரு அமெரிக்க நிருபர் பின் வருமாறு எழுதுகிறார்:—

"மெக்டொனல்ட் தொழிற்கட்சி மந்திரி சபையில் முதல் மந்திரியாயிருக்கும் போது, தமது சகா மந்திரிகளுக்கு விரோதமாக ஒரு சதியாலோசனை செய்தார். ஆகஸ்ட் மாதம் 8வ. சில பாங்கிக்காரர்கள் முதல் மந்திரியைப் பார்த்து சில விஷயங்களை தெரிவித்தார்கள். மற்ற மந்திரிகளில் தாமஸ், ஸ்நோடன் இவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரிவிக்கக் கூடாதென்றும், கன்சர்வேடிவ் தலைவர் பால்டுவினுக்கும், லிபரல் தலைவர் சர். சாமுவேலுக்கும் தெரிவிக்கலாமென்றும் அவர்கள் நிபந்தனை விதித்தார்கள். மெக்டொனல்ட் அந்த நிபந்தனையை ஒப்புக்கொண்டார். பால்டுவினுடனும், ஹெர்பர்ட் சாமுவேலுடனும் ரகசியமாய் 2 வாரங்கள் வரையில் பேசினார். அவர் அந்தரங்கமாய் கூட்டு மந்திரி சபை அமைக்க முயற்சிப்பதை பாவம், தொழிற் கட்சி மந்திரிகள் அறியார்கள். ஏதோ சாதாரணமாய் வந்து பேசிப் போகிறார்கள் என்றே பால்டுவினையும், ஹெர்பர்ட் சாமுவேலையும் நினைத்தார்கள். முடிவில் 2 வாரம் கழித்து ரகசியம் வெளியாயிற்று. இந்த சூழ்ச்சியைக் கேட்டதும் அச்சமயம் மந்திரியாயிருந்த ஸ்ரீ. வில்லியம் கிரஹாம் "உள்ள நிலைமையை எங்களிடம் சொல்லி யிருந்தால், புதிய மந்திரி சபைக்கு அவசியமில்லாமல் செய்திருப்போமே" என்றார். ஆகவே மெக்டொனல்ட் துரோகம் இரட்டிப்பாயிற்று. 24வ. மந்திரி சபை ராஜிநாமாச் செய்தது. புதிய மந்திரி சபை ஏற்பட்டது. பழைய தொழிற்கட்சி மந்திரிகள் போய்விட்டார்கள். மெக்டொனல்ட், தாமஸ், ஸ்நோடன் மட்டும் கட்சியை காட்டிக் கொடுத்து புதிய மந்திரி சபையில் இருந்தார்கள்.

மெக்டொனல்ட் செய்த உதவியை பாங்கர்கள் மறக்கவில்லை. அவர் தேர்தலுக்கு தங்கத்தை சொரிந்தார்கள். அது மட்டுமா? மெக்டொனல்ட் தமது தேர்தல் பிரசாரத்திற்காக 20 ஆகாயக் கப்பல்களை பெற்றார். இவ்வளவு தானா? ஒரு கம்பெனி மட்டும் சுமார் 100 மோட்டார்கள் அவர் உபயோகத்திற்காக கொடுத்திருக்கின்றன."

எல்லாவற்றிற்கும் குறைவில்லை. ஓட் ஒன்று தான் பாக்கி. அதை பணம் கொடுத்து அவர் தொகுதியில் வாங்கமுடியாது. 27வ. தேர்தல் முடிந்துவிட்டது. அவர் கதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

லார்ட் கர்ஜன் வைஸிராயாக இருக்கும்போது, இந்தியரை பொய்யர்கள் என்று சொன்னார். வெகு சீக்கிரத்தில் அவரே பக்கா புளுகர் என்பது வெளியாயிற்று. ஸ்ரீ. மெக்டொனல்ட் சில தினங்களுக்கு முன்னால்தான் "யோக்கியமாய் நடவுங்கள்" என்று இந்தியரைப் பார்த்து மைனாரிட்டி கமிட்டியில் பேசினார். இன்று அவர் அயோக்கியத்தனம் வெளியாயிருக்கிறது. மந்திரி சபையில் இருந்து கொண்டு, தனது தோழர்களுக்கு தெரியாமல் சூழ்ச்சி செய்வதென்றால், அது யோக்கியமானதா, அயோக்கியத்தனமானதா என்று கேட்கிறோம். இந்த பரம யோக்கியர் மற்றவர்களைப் பார்த்து "யோக்கியமாய் நடவுங்கள்" என்று சொல்லுவது தலைக் கொழுப்பல்லவா?

---

(357ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில் பிரசன்னமாகி ஒரு வீரப் பிரசங்கம் செய்தார். மகாநாட்டில் கூடியிருந்த 20 ஆயிரம் பேரும் தலை குனிந்தனர். உடனே பெண்களும் அந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்தனர்.

### பீகம் ஷா நவாஸ்

லாகூரில் மீயான் குடும்பம் கல்வியிலும், நாகரிகத்திலும் பேர் பெற்றது. ஆண்களைப்போலவே பெண்களும் அக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த கல்வி பெற்றவர்களா யிருப்பார்கள். பீகம் ஷா நவாஸ் சர். முகமது ஷாபியின் மூத்த குமாரி. இந்தியா சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீ. ஷாநவாசின் மனைவி. அவர் வெகு காலத்திற்கு முன்பே முக முடியை எடுத்து விட்டாலும், சமீபத்தில் வட்டமேஜை மகாநாட்டில் அவர் பேசிய பின்பே மிகவும் பிரபலமானார். அவர் பேச்சு அவருடைய கல்வித் திறமையையும், தேசபக்தியையும், இந்தியாவை மகத்தான பதவிக்கு கொண்டு வரவேண்டுமென்ற நினைப்பையும் வெளிப்படுத்துகிறது.

Koviloor Digital Library



# டாக்டர் அன்சாரி பொன்மொழி

லாகூரில் கூடிய பாஞ்சால தேசீய முஸ்லிம் மகாநாட்டில் டாக்டர் அன்சாரி தலைமை வகித்தார். அச்சமயம் பேசியதாவது:—

தேசீய முஸ்லிம் கட்சியே இந்தியாவில் வெகு பழமையானது. கான்பூர் மசூதி கிளர்ச்சியும் தேசீய முஸ்லிம்கள் ஆரம்பித்ததே. கிலாபத் இயக்கத்தையும் அவர்களே ஆரம்பித்தார்கள். அலி சகோதரர்கள் ஆரம்பித்ததாகச் சொல்லுவது தவறு. கிலாபத் இயக்கத்தை நாங்கள் ஆரம்பித்தபோது அலி சகோதரர்கள் ஜெயிலில் இருந்தார்கள். தேசீய முஸ்லிம்களே சென்ற ஒத்துழையாமை இயக்கத்திலும் சென்ற வருஷ சட்ட மறுப்பிலும் தீவிரமாய் ஈடு பட்டு உழைத்தார்கள். ஜெயிலுக்குப் போனார்கள். முஸ்லிம்களுக்காகப் பேசுவதாகச் சொல்லும் மற்ற கட்சிகள் தாங்கள் செய்தவைகளை பகிரங்கமாய் சொல்லும்படி அறைகூவி அழைக்கிறேன். தேசீய முஸ்லிம் கட்சியே உண்மையான கட்சி. அதன் சம்மத மில்லாமல் செய்யும் எந்த திட்டமும் உருப்படாது. எங்கள் கட்சியை வட்டமேஜை மகாநாட்டிற்குள் நுழைய விடாமல் செய்ய சில முஸ்லிம்கள் பாடு பட்டனர். மகாத்மா காந்தி மீது எங்களுக்கு குறையாத நம்பிக்கையுண்டு. சில முஸ்லிம்கள் பிரிட்டிஷ் மந்திரி சபையோடு சேர்ந்து கொண்டு செய்த சூழ்ச்சியை மகாத்மா வெளிப்படுத்தியது பெரிய சேவையாகும். நாளடைவில் எங்கள் கட்சியே உண்மையானதென்று கண்டு, எங்களை விட்டு விலகி நிற்பவர்கள் திரும்ப வந்து சேருவார்கள்.

போலிகளை நம்பி மோசம்போக வேண்டாமென்று பிரிட்டிஷ் மந்திரி சபையை எச்சரிக்கிறேன். எங்கள் தலைவர் மகாத்மாவுடன் சமரசம் செய்து கொள்ளாவிடில் இந்திய தேசீயத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். அச்சமயம் பிரிட்டிஷார் யாரை நம்பினார்களோ அவர்கள் நட்டாற்றில் கைவிட்டு ஓடும்படி நேருவதை அறிந்து கொள்ளுவார்கள்.

வரவேற்பு தலைவர் ஸ்ரீ. மல்லிக் பார்க்கட் அலி பேசியதாவது:—

நமது லட்சியம் ஐக்கிய இந்தியா. இந்து, முஸ்லிம், சீக்கிய, பார்சிகள், தீண்டாதார்கள் எல்லாரும் சமம். நமக்கு வேண்டியது பொதுத் தேர்தல் தொகுதியே. இந்தியாவும், இஸ்லாமும் ஒன்று. இந்தியாவுக்கு கெடுதி நேரிட்டால் இஸ்லாத்திற்கு ஏற்பட்ட மாதிரியே. மற்ற முஸ்லிம் நாடுகள் மீது நமக்கு எவ்வளவு பிரியமிருந்தாலும், இந்தியாவை அடிமைப் படுத்த எந்த முஸ்லிம் நாடாவது முயன்றால், அதை நாங்கள் சகிக்கமாட்டோம். இந்தியர் எல்லாரும் சேர்ந்து அதை எதிர்ப்போம்.

# குட்டித் தேவதை கூத்து!

(எம்டன்)

பசு பால்கறக்க இடம் கொடுத்தாலும், கன்றுக் குட்டி இடம் கொடுக்காது. சற்று முரண்டிப் பார்க்கிறதுண்டு. பால்காரன் கன்றுக் குட்டிக்கு மற்றுமொரு கட்டு இறுக்கிக் கட்டிவிட்டு அவன் காரியத்தைப் பார்த்தே போவான். பால்காரனிடம் நம் ஜெபம் சாயாது என்ற புத்தி துள்ளும் கன்றுக்குட்டிக்கு கிடையாது. அது போல நேற்று சப்இன்ஸ்பெக்டர் வேலைக்கு வந்து, இன்னும் நிலை பெறாத தென்னாற்காடு ஜில்லா திருவதி சப்இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நடராஜன் அவர்கள் செய்கையுமிருக்கிறது. தேசீய கைங்கரியத்தை மடக்க சகல வல்லமையுள்ள சர்க்காரே முயன்று பார்த்து முடியவில்லையெனில், தேசீய சண்டமாருதக் காற்றில் அம்மிக் கல்லுகளெல்லாம் ஆகாயத்தில் பறக்கும்போது, கேவலம் ஒரு சப்இன்ஸ் பெக்டரால் தேசீய இயக்கத்தை மடக்கிவிட முடியாது என்பது சப் இன்ஸ்பெக்டருக்கு தெரியாது போனதற்காக, நமது அனுதாபத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமீபத்தில் பண்ருட்டியில் தேசீய நாடக விஷயமாக நாடகம் பார்க்கவந்த ஜனங்களை தடியால் அடித்து வீழ்த்தியதைப்பற்றியும், போலீசார் பலரை கைது செய்து வழக்குத் தொடருதலைப் பற்றியும் இப்போது நாம் ஒன்றும் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் பண்ருட்டி திருவதி பக்கம் காங்கிரஸ் இயக்கம் தலையெடுக்க முடியாமல் செய்துவிடப் போவதாக ஆர்ப்பாட்டம் செய்யும் ஷை சப் இன்ஸ்பெக்டர் நடத்தை

இந்தியாவிலுள்ள வெள்ளை ராணுவம் வெளியே போய் ஆகவேண்டும். இந்தியர் பணத்தை உறிஞ்சும் அந்த, கொடுமை தொலைய வேண்டும். அதுதான் இந்தியரை நொறுக்கி கொல்லும் மலைப்பாம்பு போல இருக்கிறது.—மகாத்மா காந்தி

Koviloor Digital Library

# மின் வெட்டு.

## மகாத்மா திக் விஜயம்

சென்ற வாரக் கடைசியில் இங்கிலாந்தில் பேர் பெற்ற ஆக்ஸ்போர்ட், ஈட்டன் கலாசாலைகளுக்கு மகாத்மா விஜயஞ் செய்தார். மகாத்மா காந்திக்கு மூன்றுதல் புறு அஸ்பத்திரியில் குடல் ஆப்பரேஷன் செய்த கர்னல் மாடாக் அவரை பேட்டி கண்டுபேசினார். ஆட்டுப் பண்ணை கண்காட்சி லண்டனில் நடந்தது. அதில் மகாத்மாவிற்கு பால் கொடுக்கும் ஆட்டிற்கு முதல் பரிசு கொடுத்து, அதற்கு "மகாத்மா" என்று பெயர் சூட்டினார்கள். மகாத்மா "பிரிட்டிஷ் ஆடுகள் நன்றாயிருக்கின்றன. இந்தியரைப்போல உணவில்லாமல் இந்திய ஆடுகள் மெலிந்திருக்கின்றன" என்று சொன்னார்.

---

## கண்டிக்கத் தக்கது.

தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாதென்று மிரட்டுகிறாராம். காந்திக்கு ஜேபோட்டால் சவுக்காலடிப்பேன் என்கிறாராம். பத்திரிகைப் படித்தால் 2 வருஷம் தண்டித்து விடுவாராம். ஏற்றி இருந்த கொடியை இறக்கிவிட மிரட்டுகிறாராம். கதர் போட்டவர்களை விரட்டுகிறாராம். காங்கிரஸில் சேர்ந்துள்ள முஸ்லீம்களை, வட்டமேஜை மகாநாட்டில் நடக்கும் வசைப்பு வாதங்களை விளக்கி காங்கிரஸில் சேராதீர்கள், இந்துக்களுக்கு லகலைய விரித்துக் காட்டிவிட்டு முஸ்லீம்களுக்குத்தான் பிரிட்டிஷ் சர்க்கார் சீர்திருத்தம் கொடுக்கப் போகிறார்கள் என்று ஜோசியம் சொல்லிப் பிரிவினையாக்குகிறாராம். இன்னும் பல உண்டு. மறுத்தால் ஆதாரம் காட்டலாம். சப் இன்ஸ்பெக்டரே! தேளுக்கு மணியம் கொடுத்தால் தாசில் தாரையே கொட்டுமாம். உமது கவர்ன்மென்டால் முடியாத காரியத்தை நீரா சாதிக்கப் போகிறீர்? வேண்டாம் இந்த புத்தி. நாளைவரும் சுயராஜ்ய சர்க்காரில் நம் கதி என்னவாகுமென நினைத்துப்பாரு துள்ளாதே! துள்ளின மாடு பொதி சுமக்கும். தேசிய இயக்கத்தை எதிர்க்காதே! சட்டவரம்பிற்கு மீறுபவர்களிடமும், திருடர்களிடமும் உமது கைவரிசையைக்காட்டு; காந்தி ஆணைப்படி நடக்கும் சாத்விக தர்ம வீரர்களையும், பொது ஜனங்களையும் வீண்மிரட்டல் செய்து பொதுஜன ஆதரவை இழக்காதீர். உம்மைப் போன்ற முட்டித் தேவதையின் திருக்கூத்தின் கெட்டபெயர் பெரிய தேவதைக்கு கிடைத்து விடும்.

## கோவிலில் ஆபாசம்

இந்து கோவில்களுக் குள்ளும், கோபுரத்திலும், ரதங்களிலும் ஆபாசமான படங்கள் இருக்கின்றன. இவை எந்தக் காலத்தில் எதற்காக ஏற்பட்டனவோ தெரியாது. எப்படியிருந்தாலும் இவை தொலையவேண்டும். ஐம்புலனையும் அடக்கி ஒடுக்கி பிரார்த்தனையில் ஈடுபடவேண்டிய கோவில்களில், கொக்கோகப் படங்கள் எழுதியிருப்பதை ஒருக்காலும் வைத்திருக்கக் கூடாது. பூரி ஜெகந்நாதர் கோவில் பிரசித்தி பெற்றது. அடுத்த காங்கிரஸ் கூட்டம் அங்கே தான் நடக்கப் போகிறது. அங்கேயுள்ள ஜெகந்நாதர் கோவிலிலும் ஆபாசப் படங்களுக்கு குறைவில்லை. அவற்றை உடனே நீக்கி விடவேண்டுமென்றும், இல்லாவிடில் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாகவும் சேத் ஜமன்லால் பஜாஜ் அறிக்கையிட்டிருக்கிறார். இதை நாம் பூர்ணமாய் ஆதரிக்கிறோம். மற்ற கோவில்களில் உள்ள படங்களையும் ஒழிக்க வேண்டும். சென்னையிலுள்ளவர்கள் இந்தப் படங்களின் தன்மையை அறிய வேண்டுமானால், திருவொற்றியூர் கோபுரத்தில் பார்க்கலாம்.

## படித்த அடிமைகள்

டாக்டர் சர். பி.சி. ரே சுதேசி கண்காட்சிசாலையை திறந்து வைக்கும்போது பேசிய தீரமொழிகள்—"என்னை வங்காளத்திற்கு ஒரு நாளைக்கு ராஜா வாக்கினாலும் போதும். முதலில் வந்தவுடன் சட்டகலாசாலை போன்ற அடிமைகளை உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களை தகர்த்து எறிந்துவிடுவேன். மேல் நாட்டாரைப் போல நடையிலும் உடையிலும் வாலிபர்கள் பகட்டுச் செய்வதைக்கண்டு எனக்கு அலுத்துப் போயிற்று. நீங்கள் என்று ராட்டினத்தை கைவிட்டீர்களோ அன்று ஸ்ரீதேவி நமது நாட்டை விட்டு போய் விட்டாள். நீங்கள் என்று நூற்க ஆரம்பிக்கிறீர்களோ அன்றே திரும்புவாள். சுதேச சரக்குகள் இருக்கும்போது பரதேச சரக்குகளை உபயோகிப்பது பெரிய தேசத் துரோகமாகும்."

## பூர்வ ஞானம்


பார்டோலி விசாரணை கமிட்டி முன்பு தயாபுல்லா என்பவர் சாட்சியம் கொடுத்தார். இருக்கிற பணத்தை அவர் கொடுத்தபோது "ஓ இது போதாது. கொள்ளையடித்தாவது திருடியாவது பூராபணத்தையும் கட்டிவிடவேண்டும்" என்று சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தும் ஒரு போலீஸ் புலி சொன்னாராம். அந்த சப்இன்ஸ்பெக்டருக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது பூர்வஞானம் பிறந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.

Edited, Printed & Published by T. S. C ckalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

[illegible] காலணா
(மலாய் 2 செண்ட்)




திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 அக்டோபர் 31௳, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 15௳ சனிக்கிழமை || இதழ் 46




இதுதான் ஆர்டர் செய்து பட்டணத்தில்தைத்து தபால் மூலம் வந்த கோட்டு. உனக்குத் தைக்கும்படியாக அளவு எடுத்து அனுப்பியிருப்பதும் இதே கம்பெனிதான்



"நான் இன்றைக்குத் தொட்டதெல்லாம் வெட்டவெளியாகத் தான்போகிறது" மற்றவன் "அப்படியானல் என்னையுந் தொடாதே அப்பா"



செட்டியார்; நான் பம்பாய் வரை போய்வர உத்தேசிக்றேன். அதற்கு என்ன செலவாகும் ?
மற்றவர்: "ஒன்றும் செலவாகாது"
செட்டியார்: என் ?"
மற்றவர். "உத்தேசிப்பதற்கு மாத்திரம் ஏன்·செலவாகப்போகிறது!"



பெரியவர் (கோபத்துடன)"நீநனருய் வியாபாரம் பண்ணிருய்!" மற்றவர்: "பண்ணி, நாய், என்றெல்லாம் திட்டாதேயுங்கள்,,

Koviloor Digital Library



# வேலிக்கு ஓணான் சாட்சி

சென்ற 7வ. இரவு திடீரென்று மதுரையில் போலீஸ் வீரர்கள் மதுக்கடை மறியல் செய்யும் இடங்களில் குதித்தார்கள். கண்டபடி தங்கள் தடிகளைச் சுழற்றி தொண்டர்களை அடித்தார்கள். இதனால் 15 பேர் காயமடைந்தனர். இந்த அக்கிரமத்தைக் கண்டு தமிழ்நாடு திகைத்துப் போயிற்று. இது சமாதான காலமா அல்லது யுத்தகாலமா என்ற சந்தேகம் ஏற்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் கலெக்டரிடம் சென்று தெரிவித்தார்கள். "பெரிய போலீஸ் அதிகாரிகள் நேரிலேயே இருந்து செய்ததால் அதில் குற்றமிருக்காது" என்று அந்த நவாப் சொன்னார். கவர்னருக்கு தந்திகள் பறந்தன. சென்னை கவர்னர் இருக்கிறவர்களுக்குள் நல்லவர் என்ற அபிப்பிராயத்தால், அவர் இதற்கு பரிகாரம் தேடுவார் என்று ஜனங்கள் நம்பினர். தாம் விசாரிப்பதாக கவர்னர் சொன்னார். அச்சமயத்திலேயே ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி எச்சரிக்கை செய்தார். "பெரிய அதிகாரிகள் சம்பந்தமில்லாமல் இக்காரியம் நடக்கவில்லை. ஆகவே அந்த அதிகாரிகள் அறிக்கைகளைக் கொண்டு சர்க்கார் முடிவிற்கு வருவது நியாயமல்ல. மதுரை ஜில்லா போர்ட் தலைவர் வெள்ளையர்தான். அவரைக் கொண்டு விசாரிக்கச்சொன்னால் நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்." என்று ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி சொன்னார். அவர் பயந்தது சரி என்று நிரூபமாயிற்று.

சென்னை கவர்னர் விசாரணைக் கமிட்டி நியமிக்கவில்லை. அல்லது காங்கிரஸ்காரர் சொன்னதை நம்பவுமில்லை. மதுரை கலெக்டர் சொல்லியது வேதவாக்கென்று சொல்லுகிறாம். மதுரையில் போலீசார் தடியால் அடித்தது சரிதான் என்று முடிவு செய்து விட்டதாக "ஹிந்து" சொல்லுகிறது. ஆகவே ஜனங்கள் கேட்டதோ, அவர்களின் பிரதிநிதியான காங்கிரஸ் கேட்டதோ சர்க்கார் மண்டையில் ஏறவில்லை. சர்க்காரிடம் சம்பளம் வாங்கும் சில்லரை அதிகாரிகள் சொல்லுவதே அவர்கள் மண்டையில் ஏறியிருக்கிறது.

பிரதிவாதியே ஜட்ஜாகவும் இருந்து தீர்ப்பு கூறும் அதிசயத்தை இந்த பிரிட்டிஷ் சர்க்காரைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. மதுரை போலீசார் அயோக்கியத்தனமாயும், அக்கிரமமாயும் நடந்து கொண்டார்கள் என்பது ஜனங்கள் புகார். அவர்கள் அப்படி நடந்தார்களா இல்லையா என்பதை அவர்கள் சொல்லுவதை நம்பி சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. கீழே ஒரு கூலிக்கார போலீஸ்காரன் தவறு செய்தாலும், அதை மகாத்மா போன்ற பெரியார்கள் எடுத்துக் காட்டினாலும், வைசிராய் வரை அந்த போலீஸ்காரன் செய்கையை ஆதரிப்பது இந்த சர்க்காரின் பிறவிக்குணம். இந்தக் குணத்தை மாற்ற வேண்டுமென்பதே காந்தி—இர்வின் உடன் படிக்கையின் நோக்கம். ஆனால் அது மட்டும் மாறவில்லை. வேலிக்கு ஓணான் சாட்சி என்றதைப்போல மதுரை போலீஸ் தடியடிக்கு மதுரை கலெக்டர் "ஆமாம்" போடுவதும், அவருக்கு சென்னை கலெக்டர் "ஆமாம்" போடுவதுமாயிருக்கிறது.

மதுரை போலீஸ் அக்கிரமத்தை சென்னை சர்க்கார் நியாயமானது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் ஜனங்கள் அதை ஒப்புக்கொண்டு சும்மாயிருக்கப் போவதில்லை. இந்த அக்கிரமத்திற்கு பரிகாரம் கிடைக்கும் வரையில் தமிழ் நாட்டார் கிளர்ச்சி செய்து கொண்டேயிருப்பார்கள். ஒப்பந்தத்தை மீறி நடந்த குற்றம் சென்னை சர்க்கார் தலையிலேயே இருக்கிறதென்பதை எச்சரிக்கிறோம். இதனால் ஏற்படும் சகல விஷயங்களுக்கும் சென்னை சர்க்காரே பொறுப்பாவார்கள்.

ஐக்கிய மாகாணத்தில் இம்மாதிரி அகம்பாவம் செய்துகொண்டு வந்ததால் தற்சமயம் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை சென்னை சர்க்கார் அறிவார்களா? "அங்குள்ள நிலைமைக்கு தக்கபடி அவசியமான முறைகளை கையாளலாம்" என்று மகாத்மா ஜவார்லாலுக்கு தந்திகொடுத்துவிட்டார். டெல்லியில் கூடியிருக்கும் காரியக் கமிட்டியில் அதைப்பற்றி யோசித்து முடிவு செய்யப்படும். மதுரை தடியடியைப் பற்றியும் காரியக் கமிட்டியார் யோசிக்கவேண்டும். இல்லாவிடில் தமிழ்நாடு காரியக்கமிட்டி உடனேகூடி அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம். காந்தி—இர்வின் உடன் படிக்கையால் போலீஸ் தடியடி நிற்காவிடில், சட்டமறுப்பு மட்டும் எதற்காக நிற்க வேண்டும்?

Koviloor Digital Library



# மகாத்மா அமுதமொழிகள்

பிரிட்டிஷ் ஆட்சி இந்திய சமூகங்களுக்கிடையில் ஒரு ஆப்புமாதிரி இருக்கிறது. அதை பிடுங்கி எறிந்து விட்டால் பிரிந்த பாகங்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்து கொள்ளும். அன்னியர் தங்கள் மிருக பலத்தால் அடக்கி ஒடுக்கி சமாதானமாய் வாழும்படி செய்வதைவிட, சுதந்திர நாட்டில் ஆரம்பத்தில் ஏற்படும் குழப்பம் சிலாக்கியமே. அந்த குழப்பம் அடங்கியதும் மறுபடியும் ஒற்றுமை ஏற்பட்டுவிடும். வட்ட மேஜை மகாநாட்டு பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படாதவர்களாய் இருப்பதால்தான் மகாநாட்டில் முட்டுக் கட்டை ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியால் நன்மை ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை திர்மானிப்பது யார்? பிரிட்டிஷாராகிய நீங்களா அல்லது நாங்களா? சக்கரத்திற்கு அடியில் அகப்பட்டிருப்பவர்களுக்குத்தான் அவர்கள் அநுபவிக்கும் துன்பம் தெரியும். மற்றவர்களுக்கு தெரியாது. தாதாபாய் நௌரோஜி, பிரோசிஷா மேட்டா, ரானடே, கோகலே முதலியவர்கள் பிரிட்டிஷ் சம்பந்தத்தைக் கண்டு பெருமை கொண்டிருந்த பெரியார்கள். அவர்கள் என்ன சொல்லி யிருக்கிறார்கள் தெரியுமா? பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா தரித்திரமாய் விட்டது என்று சொல்லி யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா பேடியாய்விட்டதென்று சொல்லி யிருக்கிறார்கள்.

நாம் என்ன பலவீனமான ஜாதியாரா? பாதகமில்லை. நமக்கு கலங்காத நெஞ்சமிருக்கிறது. எவ்வளவு மெலிந்திருந்த போதிலும் நமது ஆண்களோ, பெண்களோ போலீஸ் தடியடிகளைக் கண்டு பயந்து ஓடவில்லை. சர்க்கார் எவ்வளவு நல்லதா யிருந்தாலும், சுயராஜ்ய சர்க்காருக்கு ஒரு நாளும் ஈடாகாது. பிரிட்டிஷாரே, நீங்கள் எவ்வளவோ தவறு செய்யவில்லையா? செய்திருந்தும் எங்களுக்கு தவறு செய்ய சுதந்திரமில்லையென்று நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்? அந்நியர் ஆட்சியைக்கண்டு வெறுப்புற்று பல்லாயிரக் கணக்கான ஆண் பெண்களின் நெஞ்சமும் இரும்புபோல கடினமாய் விட்டது.

இந்தியாவிலுள்ள பல சபைகளில் காங்கிரஸ் ஒரு சபை என்று சொல்லுவது வெறும் பேச்சு. காங்கிரசே இந்தியாவில் மற்ற எல்லா சபைகளையும் விட பெரிய சபை. அது ஒன்றே பிரதானமானது. விடுதலைக்காக யுத்தஞ் செய்த சபையும் அது ஒன்றே. காங்கிரசிற்காக சொல்ல முடியாத துன்பங்களை இந்தியர் சகித்தனர். அவர்களில் இந்து, முஸ்லிம், சீக்கியர், பாரசீகர், கிறிஸ்தவர் முதலிய பல பிரிவினரும் இருந்தனர். அச்சமயம் மெஜாரிட்டி பேச்சோ, மைனாரிட்டி பேச்சோ வரவில்லை. காங்கிரஸ் எல்லா சமூகங்களுக்கும் பூர்ண உரிமைகளை கொடுக்க தயாராயிருக்கிறது.

---

## நமது சாபத்தீடு.

இந்தியாவுக்குத் தெய்வ சாபமும் இல்லை; பெரியோர் சாபமும் இல்லை. ஆனால் ஏழைகளுடைய சாபம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய அழுகுரல் நமக்கு சாபம். அவர்களுடைய கண்ணீர் நமது முன்னேற்றத்திற்குத் தடை. ஏழைகள் கண்ணீரைக் கதர் துடைத்து ஒழிக்கும்.

மறுபடி கைராட்டினம் நன்றாய்ச் சுழல ஆரம்பித்தால் சுயராஜ்யத்தின் அஸ்திபாரம் அமைந்துவிடும். முதலாவது அந்நியத் துணியின் கொடுமையே ஒழிய வேண்டும். இந்தத் துணி சென்ற 100 வருஷத்தில் நம்முடைய பணத்தில் ரூ. 4731 கோடியைச் சாப்பிட்டு ஏப்பம் போட்டுவிட்டது. இன்னும் நமது ஏழைகளை வதைத்து வருஷந்தோறும் 60 கோடி ரூபாயைக் கொள்ளை கொண்டு போகிறது. இந்தப் பாதகத் துணியின் பிடியிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். தீபாவளிக்குக் கதர் வாங்குங்கள் அந்நியத்துணிகளை அறவே ஒழியுங்கள்.

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

---

மீவார் முனிசிபல் கட்டிடத்தில் சென்ற வருஷம் அதன் தலைவர் தேசியக் கொடி பறக்க விட்டாராம். அதற்காக அவரை இன்றுகூட முனிசிபல் தலைவர் பதவியில் இருக்கக்கூடாதென்று சர்க்கார் சொல்லுகிறார்கள். காந்தி—இர்வின் உடன் படிக்கையை நிறைவேற்றி வைப்பதற்கு இது ஒரு உதாரணம்

Koviloor Digital Library

# செலாவணி ரகசியம்

ஸ்ரீ. ஷண்முகம் செட்டியார்

செலாவணி விஷயமானது ஓர் கஷ்டமானது என்றாவது சிக்கலானது என்றாவது நினைக்க வேண்டியதில்லை. இது விஷயமாக நான் 10 வருஷங்களாகவே ஆராய்ச்சி செய்து வருகிறேன். ஒவ்வொருவரும் சிறிது கவனம் செலுத்தினால் சுலபமாக விஷயத்தைத் தெரிந்துகொண்டு விடலாம். மனித சமூகத்திற்கு உபயோகமாக விருக்கும் ஒவ்வொரு முக்கிய பிரச்னையைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளுவது அவசியமேயாகும். படித்தவர்களாய் இருப்பவர்களிலும் கூட சிலர் இது விஷயத்தில் அசிரத்தையாக இருந்து வருகிறார்கள். காரணம் கவனம் செலுத்தாமையே. ஆனால் இப்போது சர்க்கார் கையாண்டிருக்கும் முறையை அனுசரித்தாவது, எல்லோரும் அதிக கவனம் செலுத்துவார்கள் என நினைக்கிறேன். பணம் நம்மிடம் இருக்கலாம், ஆனால் தேசத்தில் அது எவ்வாறு பிரயோஜனப்படுகிறது என்ற விஷயத்தை சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு தேசத்தின் செல்வ மதிப்பைக் கண்டுபிடிப்பதற்கு செலாவணியே முக்கியமாய் கவனிக்க வேண்டியதாகும். ஆகவே தேசத்தின் மதிப்பை அளக்க செலவாணியே ஓர் கருவியாகும். இவ்வாறு அளக்கும் கருவியானது எல்லா தேசங்களிலும் ஒரே மாதிரியாக இருக்காது. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மாதிரியான கருவியை உபயோகிக்கலாம். நாட்டின் சாமான்களின் நிலைமையைக் கொண்டே ரூபாயின் மதிப்பை அளந்துபார்க்க வேண்டும். ரூபாயின் மதிப்பு எப்பொழுதும் 16 அணாவாக இருப்பதில்லை. ஆகையால் மதிப்பில் மாறுகிறது. விலைவாசிகள் குறைந்தால் கான்சியானது மாறுகிறது. 1 ரூபாய்க்கு 10 படி அரிசி என்று வைத்துக் கொள்வோம். அதே ரூபாய்க்கு 15 படி அரிசி கிடைக்கிறது என்றால் மதிப்பானது குறைகிறது. ஒவ்வொருதேசமும் தனித்தனியாக இல்லாது இணைக்கப்பட்டே இருக்கிறது. இப்பேர்ப்பட்ட தொடர்பு இல்லாமல் எத்தேசமும் வாழமுடியாது. ஒரு தேசத்தின் செலவாணியானது அந்த குறித்த தேசத்திற்கு மட்டும் உபயோகமாய் இருப்பதோடு, மற்ற தேசங்களுக்கும் மதிப்பு கொடுக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

நமது நாட்டிலுள்ள 10 ரூ. நோட்டு இங்கிலாந்தில் செல்லாது. ஆகையால் நமது செலாவணிக்கு வெளிநாடுகளின் மதிப்பும் ஏற்படவேண்டும்; ரூபாய்க்கும் மற்ற செலாவணிக்கும் மத்தியில் ஒரு நாணயம் அவசியம் இருக்க வேண்டும்; அவ்வாறு இருப்பது தற்காலம் தங்கமேயாகும். அநேக தேசங்கள் தங்க நாணயத்தைச் செலவாணியாகக் கொண்டிருக்கின்றன. தங்கத்தைக் கொண்டுதான் தங்கள் தேசங்களின் மதிப்பைத் தெரிந்து கொள்ள முயல்கின்றன.

## பணப்பஞ்சம்.

யுத்த சமயத்தில் அநேக தேசங்கள் விவசாயம் செய்யும் தொழிலை நிறுத்தி வைத்திருந்தன. ஆனால் அமெரிக்காவும் இன்னும் சில தேசங்களும் அச்சமயத்தில் தங்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்தன. யுத்தம் நின்ற பிறகு பிரிட்டிஷார் பழையபடி விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டார்கள். இதன் பயனாக 4,5 வருஷங்களுக்குள் உற்பத்தியான உணவுப் பொருள்கள் மிதமிஞ்சி விட்டன. ரஷியாவானது 5 வருஷ திட்டத்தை அனுசரித்து, ஏராளமாக தானியங்களை உற்பத்தி செய்தது. இக் காரணங்களாலே பணமானது மிகவும் அருமையாய்ப் போய் விட்டது. தற்சமயம் ஏற்பட்டுள்ள பண நெருக்கடிக்கு அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய இரண்டு தேசங்களின் செய்கைகளே காரணமாகும். ஏராளமான தானியங்களை அது உற்பத்தி செய்து வந்தது அதனால் செல்வத்தில் ஓங்கி வளர்ந்தது. கடனாளி தேசமாக இருப்பதற்குப் பதிலாக கடன் கொடுக்கப்பட வேண்டிய தேசமாக மாறிற்று. ஐரோப்பாவிலுள்ள நாடுகள் அமெரிக்காவிற்கு 500 மில்லியன் பவுண்டுகள் கொடுக்க வேண்டியிருந்தது. கடன் கொடுப்பதற்காக அவைகள் அனுப்பி வந்த சாமான்களை அமெரிக்கா வாங்க வில்லை. வேண்டிய சாமான்களை தாங்களே உற்பத்தி செய்து கொண்டு வெளிநாட்டுச் சாமான்களுக்கு அதிக வரி போடவே—பிரிட்டிஷ் சாமான்களை அங்குவிற்க முடியவில்லை. கடனை அடைக்க இருந்த இந்த ஒரு வழி போயிற்று. உலகத்திலே உள்ள தங்கத்தின் மதிப்பில் 100-க்கு 65 விதம் இவ்விரண்டு நாடுகளிலேயே தங்கி விட்டன. அதனால் இப்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தொழிற்கட்சி போய் தேசிய கட்சி ஏற்பட்ட உடனே தேர்தலும் நடக்கப்போகிறது. இவைகள் எல்லாம் சந்தேகத்தைக் கொடுத்து வரவே, மற்ற நாடுகள் இங்கிலாந்து பாங்கியில் போட்டிருந்த பணத்தை யெல்லாம் வாப்பீஸ் வாங்கி விட்டன. நிலைமை நெருக்கடியாகப் போய்விடவே, தங்க செலவாணியை இப்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

## உலகப் போக்கு

கல்கத்தாவில் நளினி மோகன் என்ற போலீஸ்காரன் சப்இன்ஸ்பெக்டர் ரிவால்வரை திருடியதாக கைது செய்யப்பட்டிருக்கிறான். அவன் வீட்டை சோதித்தபோது கொள்ளை யடிப்பதற்கு வேண்டிய சாமான்கள் அகப்பட்டனவாம். வேலி பயிரை மேய்கிறது. வங்காளத்தில் அடிக்கடி அகப்படும் வெடிக்குண்டுகள் போலீஸ் சிருஷ்டி என்று சிலர் சொல்லுகிறார்கள். நளினி மோகனைப் போல போலீஸ் புலிகள் இருக்கும் ஒரு மாகாணத்தில் அம்மாதிரி அதிசயம் ஏற்படுவது பெரிதல்ல.

***

"தினசரி காலையில் என் குழந்தை என்னை அடித்து எழுப்புகிறது. "திரும்ப அடியாதே என்று காந்தி சொல்லுகிறார். ஆகவே என்னை திரும்ப அடிக்காதே" என்று சொல்லுகிறது. இது பெரிய சங்கடமா யிருக்கிறதே" என்று ஒரு வெள்ளையர் மகாத்மாவிடம் புகார் செய்தார். "காந்திஜி காலையில் வெளியே போகும்போது அவருக்கு நமஸ்காரம் செய்ய வேண்டுமாம். அதற்காக அதிகாலையில் எழுப்பு என்று என் குழந்தை சொல்லுகிறது. எங்களால் அந்நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லையே" என்று மற்றொருவர் புகார் செய்தாராம். இவை யெல்லாம் சாத்வீகத்திற்கு முதல் பாடம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

***

இந்நாட்டில் மகாத்மாவிற்கு 144 போட்டுக் கொண்டிருந்தார்கள். சீமையிலோ நேர் விரோதம். லங்காஷயர் பிரதேசத்திலுள்ள டார்வன் என்ற இடத்திற்கு அவர் போயிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்த ஊர் அதிகாரிகள் அச்சமயம் ஒரு விநோதமான உத்தரவு போட்டார்கள். இரவு 9 மணிக்கு மேல் காலை 7 மணி வரை அவர் தங்கியிருந்த பிரதேசத்திற்குள் யாரும் வரக்கூடாதென்று உத்தரவு போட்டு அதற்காக ஒரு போலீஸ் படையையும் வைத்திருந்தார்கள். ஏனெனில் மகாத்மாவை இரவிலாவது ஜனங்கள் தொந்தரவு செய்யாமல் அவர் சுகமாய் தூங்கட்டும் என்பதே அவர்கள் நினைப்பு. அகம்பாவம் பிடித்த இந்திய அதிகாரிகள் இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்வார்களாக.

## காந்தி தூது.

(பா. ஆதிமூர்த்தி. காசி.)

மீதூது நடந்தருளி எமது நினைவவர்க்
குரைத்தன் நினைவின் வண்ணம்
தாதூதும் தண்டலைசூழ் தன்னாடும்
உரிமையுமே தாரா ராகில்
வாதூதும் ஆங்கிலர்க்குப் போருரைத்து
வருதியெனும் வரமேற் கொண்டு
தோதோதும் "காந்திமகான்" சென்றுள்ளான்
உலகினர் தம்துயரம் தீர்ப்பான்.

அரவநெடுங் கொடியுடைய கொடுங்கோலன்
மாசபையில் அன்று தூதாய்ப்
பரவைதவழ் திருநாடும் உரிமையுமே
யவன் மறுக்கப் படைகொள் போர்க்குக்
"கரமளித்தி! யெனக்கேட்ட கண்ணனே"
இவன் இன்று "காந்தியாகி"
வரவிருக்கும் பாரதப்போர் கொடுவருவான்
ஆங்கிலர் தம் மறுப்பினாலே.

"ஒருநாளும் படையெடேன்" அமரிலெனப்
பரந்தாமன் ஒருவன் சொன்னான்
பொருநாளாம் பாரதப்போர் தொடங்கியதும்
இன்னாளில் புவன மஞ்சச்
செருநாளில் முப்பத்து முக்கோடி
பாரதரும் சேர ஒன்றாய்,
திருவாளன் "காந்திமகான்" உரைப்படியே
நிராயுதராய்ச் செருச் செய்வாரே.

இனிவருதல் பெரும்போரே யெனும்
குறிகள் எத்திசையும் எய்தக்கண்டோம்
மனிதரிலே மானமுளோர் யாமாயின்
"போர்க்கோலம்" வனைது மின்றே
அநீதியொடு கொடுங்கோலும் அடிமையுடன்
அழித் தொழிப்போம் அறமேற்கொண்டு
"தினகரனும் நம்காந்தி" யுரைப்படியே
படை தொடாத்திறன் கைகொண்டே.

ஆண்களிலே பெரியோரும் சிறியோரும்
போர்க்களத்தின் அணியில் வம்மின்
பூண்பூணையும் பெண்களெல்லாம் சாகசத்தால்
ஊழியத்தால் போரிற் சேர்மின!
சேனைகளும் விண்கலங்க மண்கலங்குத்
திசை கலங்கச் செருவின் கோரம்
காண்க அருள் "நம்காந்தி" பாரதத்தாய்
வெற்றியினைக் களிப்பின் ஏற்றே.

Koviloor Digital Library



## பிஞ்சராபோல்

("தேவிநாதன்" எழுதுகிறார்)

மனிதருக்கு வயதானால் சர்க்கார் பென்ஷன் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். எதற்காக? அந்தப் பேர்வழியால் அதற்குமேல் வேலை செய்ய முடியாது என்பதற்காகவே. இதைப் போல மிருகங்களில் வயதானவைகளுக்கு "பிஞ்சராப்போல்" என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். முடம், மொட்டை, நொண்டி, கிழம், தூக்கு மூஞ்சி, நொத்தல், வற்றல் முதலிய ஒன்றுக்கும் உதவாத மிருகங்களுக்கு "பிஞ்சராப்போல்" கட்டியிருப்பது மிகுந்த புண்ணியமான காரியம் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அப்படிக் கட்டா விட்டால் அந்தப் பிராணிகள் நடுத்தெருவில் போக்கு வரவிற்கு முட்டுக் கட்டைகளாய் நிற்கும். ஆனால்--? ஒரே ஒரு விஷயம். அதை நினைக்கும்போது உண்மையாகவே எனக்கு கண்ணீர் வருகிறது. ஆயிரம் ஆயிரமாய் சத்திரங்கள் கட்டுகிறார்கள். பிஞ்சராப்போல் கட்டுகிறார்கள். ஆனால் ஒன்றை அடிபோட்டு நமது நாட்டார் மறந்து விட்டார்கள். கேவலம் மிருகங்களைவிட ராஜ்ய வாதிகள் கேவலமா? அவைகளுக்கு பிஞ்சராப்போல் இருக்கும்போது, ராஜ்யவாதிகளுக்கு மட்டும் ஏன் இருக்கக்கூடாது? இதுவே எனது வருத்தத்திற்கு காரணம்.

ராஜ்ய வாதிகளுக்கு ஒரு பிஞ்சராப் போல் கட்டிவிட்டால், தற்சமயம் நமது நாட்டிலுள்ள கஷ்டங்கள் அநேகம் தொலைந்து போய்விடும். உடம்பில் பலம் குறைந்து, அதனால் மனோவலி குன்றி, தீரமோ, தேசாபிமானமோ சிறிதுமின்றி, குறுகிய நோக்கம் கொண்டு எடுத்ததற்கெல்லாம் முட்டுக்கட்டை போடுவது, கிழட்டு ராஜ்ய வாதிகளுக்கு வழக்கமாயிருக்கிறது. இவர்களுக்கு முதலில் சீட்டு கொடுத்து பிஞ்சராப் போலில் சேர்த்துவிட்டால், வகுப்புச் சச்சரவோ, மதச்சச்சரவோ இந்நாட்டில் மருந்துக்குக்கூட கிடைக்காமல் போய்விடும். லண்டனில் சில பிஞ்சராப்போல்கள் மகாநாட்டில் முட்டுக் கட்டை போட்டு வருகின்றார். இவர்களை கூட்டி வைத்து லண்டனில் படிக்கும் இந்திய மாணவர்கள் சவுக்கடி கொடுத்தார்கள். அந்த பேச்சு சவுக்கடியால் இந்த பிஞ்சராப்போல்களுக்கு புத்திவருமென்று நான் நினைக்கவில்லை. இவர்களை ஒரு இடத்தில் போட்டு அடைத்து வைத்தாலொழிய சரிப்படாது. எந்த தனவானாவது இந்தக் கிழடுகளுக்கு ஒரு பிஞ்சராப்போல் கட்ட மாட்டாரா?

## சிறியோர் புத்திமதி

பெரியோர் சிறியோருக்கு புத்திமதி கூறிய காலம் போய்விட்டது. இந்தியாவில் பெரியோருக்கு சிறியோரே புத்திமதி கூறவேண்டி யிருக்கிறது. முக்கியமாக ராஜ தந்திரிகளுக்கு இந்தியாவில் இது மிகவும் அவசியமா யிருக்கிறது. லண்டனில் வட்டமேஜை மகாநாட்டிற்கு பல கிழடுகள் போய் முட்டுக் கட்டை போட்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்களை லண்டனிலுள்ள இந்திய மாணவர்கள் கூட்டிவைத்து புத்திமதி கூறினார்கள். அச்சமயம் அவர்கள் சொல்லிய சில மொழிகளை கீழே வெளியிடுகிறோம்.

"வகுப்பு வாதிகளே, பிரிட்டிஷார் வலையில் அகப்படாதீர்கள். நீங்கள் இங்கே வந்து சண்டை போட வேண்டும் என்பதற்காகவே மிக ஜாக்கிரதையாக உங்களை சர்க்கார் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். வகுப்பு வாதப் பேச்சு சுயநலக்காரர்களால் கிளப்பிவிடப் பட்ட ஒரு சூழ்ச்சியே யொழிய, உண்மையில் அதில் ஒன்றுமில்லை. நீங்கள் ஒற்றுமையாக வரக்கூடாது என்பதே இந்த சர்க்காரின் நோக்கம். அதை உலகத்திற்கு காட்டி அவமானப் படுத்த வேண்டுமென்பதே அவர்கள் நினைப்பு. இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றி எங்களுக்கு அவநம்பிக்கையில்லை. சென்ற ஆகஸ்ட் மாதத்தில் பிரிட்டனில் புராடெஸ்டண்டுகளுக்கும், ரோமன் கத்தோலிக்கருக்கும் சண்டைவந்தது. ஒரு இடத்தில் கத்தோலிக்கர் ஊர்வலத்தை போலீசார் கலைத்தார்கள். அதனால் பிரிட்டன் சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லாமல் போய்விட்டதா? கிழடர்களே எச்சரிக்கை. இளைஞர்கள் அந்நியர் ஆதிக்கத்தை ஒழித்துவிடப் போவது நிச்சயம். அதோடு பழைய பஞ்சாங்க ஆதிக்கத்தையும் அழித்து விடுவார்கள். தாழ்ந்தவர்களென்ற மனப்பான்மையுள்ள கிழடர்களே, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பெரிய முட்டுக்கட்டையா யிருக்கிறார்கள். சர்வதேச சங்கம் உலகிலுள்ள மைனாரிட்டிகளை காப்பதற்காக ஏற்பட்டதென்று சொல்லுகிறார்கள். அந்த சங்கத்தில் இந்தியாவும் ஒரு அங்கத்தினர். அந்த இந்தியாவிலுள்ள மைனாரிட்டிகளை, தான் காப்பாற்றப் போவதாக பிரிட்டன் சொல்லிக் கொண்டு புறப்படுவது வெட்கமல்லவா? தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுவோர் நமதுநாட்டிற்கு அவமானத்தை உண்டு பண்ணுகிறார்கள். அதை இனி பொறுக்க முடியாது.

Koyiloor Digital Library

# தொழிற் கட்சி தோல்வி

இதை எழுதும்வரை பார்லிமென்ட் தேர்தலைப்பற்றி கிடைத்திருக்கும் விவரங்களைப் பார்த்தால், தொழிற் கட்சி அடியோடு தோற்றுப் போகுமென்றே தோன்றுகிறது. தற்கால தொழிற்கட்சி தலைவரும், தொழிற்கட்சி மந்திரி சபையில் அயல்நாட்டு மந்திரியாயுமிருந்த ஸ்ரீ. ஹெண்டர்சன் தோற்றுப்போனார். மாஜி உள்நாட்டு மந்திரி கிளைன்ஸ், கடற்படை மந்திரி அலெக்ஜாண்டர், தொழில் மந்திரி மிஸ். பான்ட்பீல்ட், போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் லீஸ் ஸ்மித், யுத்தமந்திரி டாம்ஷா, முதலியபல மாஜி தொழிற் கட்சி மந்திரிகள் தோற்றுப் போனார்கள். ஆகவே புதிய பார்லிமென்ட் சபையில் தொழிற்கட்சி ஒரு அற்ப ஜெந்துவாக இருக்க முடியுமேயொழிய, சிறப்பாயும் சிங்கமாய் விளங்க முடியாது. இந்தப் பாவம் யாரைச் சேரும்? நட்டாற்றில் கைவிட்ட அந்த மெக்டனால்டையே சேரும். தொழிற் கட்சியால் பேர் பெற்று தொழிற் கட்சியால் முதல் மந்திரி பதவிக்கு வந்த பின்பு அக் கட்சியையே குட்டிச்சுவராக்கி விட்டார். மெக்டனால்ட் அடித்த பல்டியைக் கண்டு பிரிட்டிஷ் ஜனங்களுக்கு போதும் போதுமென்றாய் விட்டது. தொழிற்கட்சி மீதிருந்த நல்லெண்ணம் போய்விட்டது. ஆகவே தொழிற் கட்சியை இந்தத் தேர்தலில் மூலைக்கு அனுப்ப முடிவு செய்து விட்டார்கள். கன்சர்வேடிவ் கட்சியாரே இந்த தேர்தலில் மிகப்பெரிய மெஜாரிட்டியாக விளங்குவார்கள். மந்திரி சபை கூட்டு சபையாய் இருந்த போதிலும், கன்சர்வேடிவ் மெஜாரிட்டியா யிருக்கும் பார்லிமென்டில் மெக்டனால்டுக்கு எவ்வளவு மதிப்பு இருந்துவிடப் போகிறது?

இந்தியாவைப் பொறுத்த வரையில் யார் மந்திரி சபை அமைத்தாலும் நமக்கு ஒன்றுதான் என்று முன்பே சொல்லி யிருக்கிறோம். பிறர் கையை எதிர்பார்த்து வாழும் வழவழா தொழிற் கட்சியைவிட, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத கன்சர்வேடிவ் கட்சியே மேல். கன்சர்வேடிவ்கள் நமக்கு எதிரிகள் என்பது உண்மையே. அம்மாதிரி பகிரங்க எதிரிகளோடு சண்டை போடுவதுதான் எளிது. மெக்டனால்டைப்போல நயவஞ்சகம் பேசுபவர்களோடு விவகாரம் வைத்துக் கொள்ளுவது பெரிய தொல்லையா யிருக்கும்.

# பலே கோயம்புத்தூர்!

ஸ்தல ஸ்தாபனங்கள் மறியலுக்கு பண உதவியோ, விளக்கு நாற்காலி முதலிய சாதன உதவியோ செய்யக் கூடாதென்று சென்னை சர்க்கார் ஒரு தாக்கீது பிறப்பித்ததை நீங்கள் அறிவீர்கள். அதற்கு சரியான பதில் கோயம்புத்தூர் முனிசிபல் சபையே கொடுத்திருக்கிறது. அந்த சபை கள்ளுக்கடை மறியலுக்காக ஆயிரம் ரூபாய் உதவி செய்ய தீர்மானித்தது. அதை சர்க்கார் மேலே சொல்லிய உத்தரவால் ஆட்சேபித்தது. சர்க்கார் சொல்லும் முக்கியமான ஆட்சேபனை என்னவென்றால், மறியல் ஒருவேளை பலாத்காரமாகவோ உக்கிரமாகவோ இறங்கிவிட்டால், கடைக்காரர்கள் நஷ்ட ஈடு கொடுக்கும்படி ஸ்தல ஸ்தாபனங்கள் மீது வழக்குத் தொடருவார்கள் என்பதே. இதற்கு அந்த சபை பின் வருமாறு தீர்மானம் செய்திருக்கிறது:—

"கவர்ன்மெண்டார் பயப்படுகிற காரணங்களை முன்னிட்டு இந்தச் சங்கத்தின் ஒரு கவுன்சிலரோ அல்லது ஒன்றுக்கு அதிகமானவர்களையோ அவர்களுடைய மேற்பார்வையின்மீது தங்களது சொந்த நபர்களைக் கொண்டு, மறியலை நடத்த ஏற்பாடு செய்யலாம் என மறுபடியும் இந்தச் சங்கம் தீர்மானிக்கிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் இது விஷயமாகப் பிறப்பித்துள்ள உத்திரவைப்பற்றி புனர் ஆலோசனை செய்ய வேண்டும் என இந்தச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது."

விளக்குகள் சப்ளை செய்வது சம்பந்தமாக கீழேகண்ட கேள்வியை அது சர்க்காரை கேட்கிறது :—

"விளக்குகளைச் சப்ளை செய்யவேண்டியது முனிசிபாலிடிகள் சட்ட ரீதியாக செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாக விருக்க, இந்த உரிமையை ஏன் கொடுக்கக்கூடாது என்ற விஷயம் எங்களுக்கு அர்த்தமாகாம லிருக்கிறது". பலே கோயம்புத்தூர்! உனது முனிசிபல் சபை ஆண்மையோடு நடந்துகொண்டதற்காக நமது வணக்கம். சர்க்கார் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

Koviloor Digital Library



# விதுரன் எச்சரிக்கை

கௌரவர்கள் ராஜசபை பேராசையாலும், பொறாமையாலும் இருளடைந்திருந்தது. அங்கே விதுரன் தான் தர்மத்தின் விளக்காக மினுக்கு மினுக்கென்று ஜொலித்துக் கொண்டிருந்தார். நியாயத்திற்காக அவர் பேசிய வார்த்தைகளும் அநியாயத்தை கண்டித்து அவர் பேசிய கண்டனங்களும் அச் சபையில் ஒருவருக்கும் ஏறவில்லை. ஆனால் துரியோதனனின் கொடுமைகளையோ, அவன் தகப்பனின் மௌனத்தையோ, சகுனியின் தந்திரத்தையோ, பீஷ்மர் சந்தேகங்களையோ, துரோணர் பொய் பக்தியையோ அவர் சமயம் வந்தபோதெல்லாம் கண்டியாமல் இருப்பதில்லை.

பாண்டவருக்கு செய்த அக்கிரமங்களை அவர் எடுத்துக்காட்டி, வரப்போகும் யுத்தத்தால் வரும் கஷ்டங்களை எச்சரித்துக் கூறினார். ஆனால் அவரை மதிப்பாரில்லை. அவரை கோழை யென்றும், துரோகி யென்றும் பரிகாசம் செய்தார்கள். தனது எச்சரிக்கைகள் வீணாய் போவதைக் கண்டார். யுத்தம் வரப்போவது நிச்சயம் என்று ஏற்பட்டுவிட்டது. எதற்கும் தோற்காத தமது வில்லை முறித்தார். பேசாமல் தீர்த்த யாத்திரை போய்விட்டார். திரும்ப வந்து பார்க்கும்போது, எல்லாம் ஓய்ந்து, யுத்தமும் முடிந்து, பேராசையும் மண்ணாய் போயிருப்பதைக் கண்டார்.

ஆசை, பொறாமை, கோபம், பெருமை, நியாயம் ஆகிய ஐந்து குணங்கள் மனிதனை ஆளுகின்றன. பிறக்கும்போது இவையெல்லாம் சமமாயிருந்தாலும், செய்கையால் ஒன்றுக்கு மற்றொன்று பலமுள்ளதாகிறது. எவ்வளவு அக்கிரமம் செய்தாலும், மனதினுள் இருக்கும் மனச்சாட்சி மட்டும் "சரியல்ல" என்று சொல்லிக்கொண்டே யிருக்கும். தனிப்பட்டவர்களுக்கு இந்த மனச்சாட்சி எப்படியோ, அம்மாதிரியே ஒரு சமூகத்திற்கும் உண்டு.

துரியோதனன், பொறாமை, பேராசையே உருவாய் திரண்டு வந்தான். திருதிராஷ்டிரன் ஒளியில்லாமல் தவித்தான். சகுனி விஷத்தை கக்கிக் கொண்டிருந்தான். பீஷ்மன் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்! துரோணர் தவறான வழியில் சென்றார். விதுரன் மட்டுமே நியாயமான பாதையை பிடித்தான். ஆனால் அவனை மற்றவர்கள் ஒக்கவிடவில்லை. அதன் பலனென்ன? பாரத யுத்தமும், துரியோதனர் தோல்வியும்.

பிரிட்டன் நிலைமை இன்று இப்படி யிருக்கிறது. பொறாமையும், பேராசையும் பிரிட்டனில் தலைவிரித்து ஆடினாலும், தர்மத்தின் மெல்லிய குரல் கேட்கிறது. "சாந்தியை வெறுங்கையோடு அனுப்பாதே" என்று அந்த குரல் சொல்லுகிறது. பிரிட்டன் காதில் இந்த வார்த்தை ஏறுமா?

5 ஆயிரங்கள் வருஷங்களுக்கு முன்பு விதுரன் எச்சரித்தான். அவர் எச்சரிப்பு உண்மையாயிற்று. மிருகபலம் மடிந்தது. 5 ஆயிரம் வருஷங்கள் [illegible]தன. பிரிட்டனில் உள்ள விதுரன் (புத்திசா[illegible] எச்சரிக்கிறான். பிரிட்டன் கேட்குமா?

—பிரீபிரஸ் ஜ[illegible]ல்

# மின் வெட்டு.

## தொண்டர்கள் துன்பம்

வேலூர் கள்ளுக்கடை மறியலில் தொண்டர்களை அடித்தார்கள். தாராபுரத்தில் ஒரு தொண்டர் மீது கள் அபிஷேகம் செய்து அடித்தார்கள். ஆரணியில் ஸ்ரீ. கிருஷ்ணசாமி முதலியார் என்ற தொண்டர் மீது கள் அபிஷேகம் செய்து மூர்ச்சை போகும் வரையில் ஒரு காலி அடித்தானாம்.

திருநெல்வேலியில் ஜவுளிக்கடை மறியல் மும்முரமாய் நடக்கிறது. தொண்டர்களையும் தொண்டர் தலைவர் காப்டன் சுப்பையா பிள்ளையையும் போலீசார் பயமுறுத்தினார்களாம். கோபிச்செட்டி பாளையத்தில் நவம்பர் 1ந் முதல் ஜவுளிக்கடை மறியல் ஆரம்பமாகப் போகிறது. காரைக்குடி மறியலில் மூன்று தொண்டர்களை கைது செய்திருக்கிறார்கள். கோவில்பட்டியில் சீமை துணி விற்பதில்லை யென்று வியாபாரிகள் காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

## வாத்தியார் சி. ஐ. டி.

புனா பர்கூசன் கலாசாலையில் கோகடே என்ற மாணவன் கவர்னரை சுட முயற்சித்ததற்குப் பின்பு சர்க்கார் கண்ணோட்டம் பலமா யிருக்கிறதாம். புதிதாக சில நிபந்தனைகள் விதித்திருப்பதாய் தெரிகிறது. ஒவ்வொரு 40 மாணவர்களுக்கும் ஒரு மேற்பார்வை வாத்தியார் நியமிக்க வேண்டும். அந்த கலாசாலையில் 1200 மாணவர்களுக்கு மேல் சேர்க்கக் கூடாது. சம்பளத்தை கூட்ட வேண்டும். இவைதான் சர்க்கார் நிபந்தனைகள். மாணவர்களுக்கு வாத்தியார் சி. ஐ. டி. நியமிக்கும் யோசனை இதுவே முதல் தடவை. இந்த யோசனை பிறந்த மூளைக்கு ஒரு கோட[illegible] பரிசு கொடுக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 | சென்னை, 1931 நவம்பர் 2உ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 17உ திங்கட்கிழமை | இதழ் 47

## மதுரை வீரன் பூஜை.




சென்னை சர்க்கார் :— பக்தா, மெச்சினோம். உன்னை ஆட்கொண்டோம்.

(மதுரையில் நடந்த போலீஸ் தடியடியை சென்னை சர்க்கார் "நியாயம்" என்று சொல்லுகிறது.

Koviloor Digital Library

## சாப்ரூ கண் திறப்பு.

சர். தேஜ் பகதூர் சாப்ரூ பெரிய ராஜ தந்திரி. அதைவிடப் பெரிய மிதவாதி. காந்தி இர்வின் உடன்படிக்கைக்கும், மகாத்மா லண்டன் போனதற்கும் சாப்ரூ—ஜெயக்கார் முயற்சி மிகவும் முக்கியமானதாகும். லண்டன் மகாநாட்டில் சர். சாப்ரூவுக்கு அவ்வளவு மோகம். ஒத்துழையாமை இயக்கம் நடக்கும்போது, 1921-ல் சர். சாப்ரூ இந்திய சர்க்காரில் சட்டமந்திரியாயிருந்தார். அச்சமயம் லார்ட் ரீடிங் விரும்பிய வட்டமேஜை மகாநாட்டிற்கு மகாத்மா சம்மதித்திருந்தால், சுயராஜ்யத்தில் எவ்வளவோ பாகம் கிடைத்திருக்குமென்று சொல்லிக்கொண்டிருந்தார். ஆகவே இச்சமயமும் மகாத்மா லண்டனுக்கு வர மறுக்கக் கூடாதென்றும், வந்தால் பூரா சுயராஜ்யமும் கப்பல் ஏற்றிவிடலாமென்றும் சொல்லிக்கொண்டிருந்தார். இதற்கு ஆதாரமாக இர்வின் நவம்பர் அறிக்கையையும் முதல் மந்திரி ஜனவரி அறிக்கையையும் காட்டி வாதித்தார். அவற்றில் வார்த்தைகளில் காணப்படாத பொருள்கள் தொக்கி நிற்பதாக வியாக்கியானம் செய்தார். இதற்காக அவரை நாம் குற்றஞ் சொல்லவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரிடம் அவருக்கிருந்த நம்பிக்கையையே இவை காட்டுகின்றன.

சர். சாப்ரூ விரும்பியபடி மகாத்மா சீமைக்கு போய்விட்டார். வட்டமேஜை மகாநாட்டில் சுயராஜ்யம் கொடுத்து விட்டார்களா? அல்லது மகாத்மா இருமுறை கேட்டபடி என்ன மாதிரி சுயராஜ்யம் கொடுக்கப் போகிறோமென்றாவது சர்க்கார் சொன்னார்களா? இரண்டுமில்லை. இதைப்பார்த்து பொறுமைசாலியான சாப்ரூவிற்கு வருத்தம் வந்து விட்டது.

“சர்க்கார் என்ன கொடுக்கப் போகிறார்கள் என்று ஏன் சொல்லவில்லை? மகாத்மா காந்தி வாரத்தில் ஒருநாள்தான் மௌன விரதமிருக்கிறார். ஆனால் சர்க்காரே, நீ வாரம் பூராவாக மௌன விரதம் இருக்கிறாயே” என்று சர். சாப்ரூ வட்டமேஜை மகாநாட்டில் கேட்டார். சர்க்கார் என்னபதில் சொன்னார்கள்? “சீக்கிரமாக தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிப்பதாகச் சர்க்கார் யாரிடமும் உறுதி கூறவில்லை. பூரா பொறுப்பாட்சி கொடுக்கப் போவதாக சொல்லவுமில்லை. இல்லாததை இருக்கிறதாக நினைத்துக் கொள்ளவேண்டாம்.” என்று சாமுவேல் ஹோர் பதில் சொன்னார். இது போதாதா? சாப்ரூவே, உமது கண் திறக்க இது ஒன்று போதாதா?

## சென்னை கவர்னர் அகம்பாவம்

மானம், மரியாதையோ, சுயமதிப்போ கடுகளவாவது இருந்திருந்தால், 30உ காலை சென்னை கவர்னர் பேச்சை கேட்டுக் கொண்டு சட்டசபை அங்கத்தினர்கள் பொம்மை போல இருந்திருக்க மாட்டார்கள். கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாவில் மறு பைசலில் நிலவரியை கூட்டியிருக்கிறார்கள். நில வரியை கூட்டிக் கொடுக்கும் படியான நிலைமையில் விவசாயிகள் இல்லை. இதைப் பற்றி கிளர்ச்சி நடந்த பின்பு சட்டசபை ஒரு கமிட்டி நியமித்தது. அக்கமிட்டி வரி உயர்வு கூடாதென்று சிபார்சு செய்தது. ஆனால் சென்னை சர்க்கார், கமிட்டி சிபார்சை கவனிக்காமல் செட்டில்மெண்ட் ஆபீசர் அபிப்பிராயப் படி கூட்டிவிட்டார்கள். சட்டசபை நியமித்த கமிட்டி அபிப்பிராயத்தை புறக்கணித்ததும், ஜனங்கள் கிளர்ச்சியை புறக்கணித்ததும் அக்கிரமமல்லவா? இந்த அக்கிரமத்தை கண்டித்து சென்ற சட்டசபை கூட்டத்தில் ஒரு அவசரத் தீர்மானம் வந்தது. இதில் என்ன தவறு இருக்கிறது?

கவர்னர் நவாபிற்கு இது பிடிக்கவில்லை. “நான் செய்ததை எதிர்ப்பதா?” என்ற “நான்” அவருக்கு பிரமாதமாய் தோன்றிற்று. ஆகவே 30உ காலை சட்டசபை கூடியதும் சண்டப் பிரசண்டம் செய்தார். பிரதிநிதிகள் அம்மாதிரி வாதஞ் செய்தது பொறுப்பற்றது என்றார். சட்ட சபையின் மதிப்பை காப்பாற்றும் விதத்தில் இனியாவது அங்கத்தினர்கள் நடந்து கொள்வார்களா என்றார். இன்னும் என்னென்னவோ பேசினார். இவற்றையெல்லாம் வாங்கி மூட்டை கட்டி அங்கத்தினர்கள் தோளில் போட்டுக் கொண்டனர். என்ன பரிதாபம்! அங்கத்தினர்களுக்கு மானம் மரியாதை இருந்திருந்தால் கவர்னர் பேசியதை கண்டிக்க உடனே வெளியேறி யிருக்க வேண்டும். கவர்னர் என்ன சொன்னாலும் சுமந்து கொள்ளலாம் என்ற நினைப்பில் அவர்கள் இருப்பதாய் நாம் நினைக்கவில்லை. கவர்னர் பேச்சைக் கேட்ட பின்பு சும்மா யிருப்பார்களானால், சென்ற சட்டசபைக் கூட்டத்தில் அவர்கள் பேசியதோ, அவசரத் தீர்மானம் கொண்டு வந்ததோ யோசனையற்ற செய்கை என்று ஏற்பட்டு விடும். அங்கத்தினர்கள் செய்வதை ஆவலோடு கவனிப்போம்.

Koviloor Digital Library



# சிதம்பர ரகசியம் வெளியாயிற்று.

ஹிஜ்லி என்ற இடத்தில் ராஜீய கைதிகளை விசாரணை யில்லாமல் பந்தோபஸ்தில் வைத்திருக்கிறார்கள். அங்கே செப்டம்பர் 16வ யன்று இரவு காவல்காரர்கள் சுட்டதால் இருவர் மாண்டனர். 18 பேர் வரை காயமடைந்தனர். இதைப்பற்றி சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில், கைதிகள் காவல்காரரிடம் சண்டை போட்டதால் தற்காப்பிற்காக அவர்கள் சுட்டதாகவும், அதனால் இந்த விபத்து நேர்ந்ததாகவும் கூறி மழுப்பினார்கள். இந்த அறிக்கையின் அயோக்கியதையைப் பற்றி முன்பே எழுதியிருக்கிறோம். ஜனங்கள் கிளர்ச்சி பலமாயிற்று. ராஜீயத்தில் தலையிடாத கவி ரவீந்திரர் கூட வெளியே வந்து இதை கண்டிக்க கூடிய கூட்டத்தில் தலைமை வகிக்கவும், பலமாய் கண்டிக்கவும் நேரிட்டது. ஹிஜிலியிலுள்ள மற்ற ராஜீயக் கைதிகள், விசாரணைக் கமிட்டி நியமித்தா லொழிய சாப்பிடுவதில்லை யென்று உண்ணாவிரத மிருந்தனர். கடைசியாக ஜனங்கள் விருப்பப்படி சர்க்கார் கமிட்டி நியமித்தார்கள். விசாரணை முடிந்து கமிட்டி தனது அறிக்கையை அனுப்பி யிருக்கிறது. அறிக்கையில் என்ன காணப்படுகிறது?

ஜனங்கள் பயந்தது உண்மையாயிற்று. ஹிஜிலியில் சிப்பாய்கள் செய்ததாக பரவிய வதந்தி ஊர்ஜித மாயிற்று. கமிட்டியின் அறிக்கையைப் படித்தால், காவல்காரர்கள் செய்த அக்கிரமங்களைப்பார்த்து உடல் நடுங்குகிறது. கமிட்டியிலுள்ள இருவரும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள். ஒருவர் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. எஸ். சி. மல்லிக். மற்றொருவர் டிவிஷனல் கமிஷனர் (கலெக்டர்) ஸ்ரீ. ஜே. ஜி. டிரம்மண்ட். இந்த இருவரும் உண்மையை மறைப்பார்களென்று யாராலும் சொல்லமுடியாது. கமிட்டி சொல்லுகிறது :—

"வாசலுக்கு வெளியே சிலர் சுற்றிக் கொண்டிருந்தனர். அவர்களை உள்ளே போகும்படி முதலில் சுட்டார்கள். சுட்டதைப்பார்த்து கோபங் கொண்டு அவர்கள் அரைமனதோடு எதிர்த்திருக்கலாம். உடனே காவல்காரர் வரையறையன்னியில் கட்டிடத்தைப்பார்த்து குண்டுமாரி பொழிந்தனர். இம்மாதிரி செய்தது எவ்விதத்திலும் நியாயமாகாது. இதனால் இருவர் மாளவும் பலர் காயமடையவும் நேரிட்டது.

"சில சிப்பாய்கள் கட்டிடத்திற்குள் நுழைந்து கைதிகளை அடித்து, ஈட்டியால் குத்தி அட்டகாசம் செய்தார்கள். உள்ளே சென்ற பின்பும் சுட்டிருக்கிறார்கள என்று தெரிகிறது. ராம சேவக பாண்டே என்ற ஹவில்தார் வந்து சிப்பாய்களை வெளியே கூப்பிடுகிறவரையில் அவர்கள் கட்டிடத்திற்குள் இந்த செய்கைகளை செய்து கொண்டிருந்தார்கள். இந்த தொல்லை நேருவதற்குரிய காரணங்கள் பல இருந்தாலும், இராத்திரி காலத்தில் பொறுப்பான அதிகாரி எவரும் ஸ்தலத்தில் தங்கும்படி ஏற்பாடு செய்யாததே முக்கியமான காரணம். இரவில் சிப்பாய்கள், ஹவில்தார்கள் கையிலேயே அந்த கைதிகள் இருந்தனர். இதுசம்பந்தமாக சிப்பாய்கள்கூறும் கதையை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது".

விசாரணை யில்லாமல் ஆள்தூக்கி சட்டப்படி அடைத்து வைத்திருப்பதே மகா கொடுமை. அப்படி வைக்கப்பட் டிருப்பவர்களை மிகுந்த ஜாக்கிரதையுடன் பாதுகாக்க வேண்டியது சர்க்கார் பொறுப்பு. ஆனால் இந்த பொறுப்பற்ற சர்க்கார், வெறும் திண்ணை தூங்கிகளான சிப்பாய்கள் கையில் கனவான்களை ஒப்படைத்த படியால், அவர்கள் மிருகத்தனமாய் சுடவும், அடிக்கவும், குத்தவும் ஆரம்பித்தனர். இதுதான் பொறுப்பா? அல்லது இதுதான் யோக்யதையா என்று கேட்கிறோம். ஜெயிலைவிட இது ஆயிரம் மடங்கு கொடுமையா யிருக்கிறது. ஏதோ நடந்து விட்டது என்று மழுப்புவதை ஒப்புக்கொள்ள முடியாது. கிளியைப் பிடித்து பூனை கையில் கொடுத்ததைப் போல, கனவான்களை காவல்காரர் கையில் பிடித்து கொடுக்கும் அக்கிரமம் தொலைய வேண்டும். அவர்கள் ராஜீய அபிப்பிராயம் எப்படி யிருந்தாலும், அவர்களை கௌரவமாய், ஜாக்கிரதையாய் நடத்த சர்க்கார் கடமைப்பட் டிருக்கிறது. இந்த சம்பவத்திற்கு யார் யார் பொறுப்போ அவர்களை பகிரங்கமாய் கோர்ட்டுக்கு கொண்டு வரவேண்டும். 2 பேர் மாண்டு 18 பேர் காயமடைந்த குற்றத்தை அவர்கள் மீது சுமத்தி, கோர்ட்டார் விதிக்கும் தண்டனையை அடையும்படி செய்யவேண்டும். காகிதத்தில் அர்களுக்கு எச்சரிக்கை அனுப்புவதும், அல்லது இடத்தை விட்டு இடம் மாற்றுவதும் ஒரு தண்டனையல்ல. சர்க்கார் யோக்யமாய் நடந்து கொள்ளுமா?

Koviloor Digital Library



## எமது பிரதிக்ஞை

("மருவே செறிந்த குழலார்" என்ற மெட்டு)

1. கதராடை பற்றி மதுவாடை விட்டு
திருநாடு தனை வளர்ப்போமே!
தயாரோல் வருந்தும் தொழிலாளர் தங்கள்
இழிவாழ்வு தன்னை துடைப்போமே!

2. உயர்வாழ்வு விட்டு அரும்பாடு பட்டு
உலகில் முழைக்கும் அறிவாளன்
உயர் காந்தி செப்பும் உபதேசம் தன்னை
சிரமேற் சுமந்து நடப்போமே!

3. உயர்பார தத்தாய் வழியே பிறந்த
உயர் வீர ரெல்லாம் சமமாமே!
உலகை புலைக்கும் திறபேத மெல்லாம்
உடனே மறைய உழைப்போமே!

4. பரிவாக ஈசன் நமைக்காத்து நிற்க
பணிவாக வாழ்ந்து இருப்போமே! [கள்
பொருள்நாவி தந்து உழைப்பாலு மெங்
உயர் நாடு தன்னை விடுப்போமே!

—கே. கணேசன்.

## ஏழைகளுக்கு கதரே கதிமோட்சம்

கதர் ஏழைகளுக்கு கஞ்சி கொடுக்கிறது.
கதர் காங்கிரஸின் உயிர் நிலை.
கதர் கற்புக்குக் காப்பு.
கதர் கட்சி பேதம் அற்றது.
கதர் நாகரிகமான உடை.

கதரை வாங்குங்கள். கதரை அணியுங்கள். நண்பர்களை கதர் வாங்கும்படி வற்புறுத்துங்கள். நீங்கள் எல்லோருக்கும் கதர் வாங்கினால் கதர் பல கோடி ரூபாய்க்கு உற்பத்தியாகிவிடும். பல கோடி ஏழைகள் பிழைப்பார்கள்.

1928—29-ம் வருஷம் தமிழ் நாட்டில் மட்டும் 11 லக்ஷ ரூபாய் கதர் உற்பத்தியாயிற்று. அடுத்த வருஷம் 16 லக்ஷம் உற்பத்தி. இந்த வருஷம் கதர் 22 லக்ஷ ரூபாய்க்கு மேல் உற்பத்தியாகியிருக்கிறது. 3 வருஷத்திற்கு முன் 15 ஆயிரம் தமிழ் ஸ்திரீகள் நூற்றார்கள்; சென்ற வருஷம் 30 ஆயிரம் பெண்கள் நூற்றார்கள். இந்த வருஷம் இன்னும் அதிகப்பேர் நூற்கிறார்கள்.

நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் உங்கள் அறிவு கதரை ஒப்புக் கொள்ளும்; உங்கள் மனது கதரை ஏற்றுக் கொள்ளும்.

## கோயிலும் சாதியும்.

(ஸ்ரீ. பரலி சு. நெல்லையப்பர்)

மதுரை நகரசபையில் அங்கத்தினரா யிருந்தவரும் ராஜகுலோத்தமர் (ஏகாலியர் - வண்ணார்) சங்கத்தின் தலைவருமான திருவாளர் சி. துரைசாமி என்பவர் நவராத்திரி திருவிழா கடைசி நாளன்று மீனாட்சி சுந்தரேசர் கிளிக்கூட்டு மண்டபத்தி னருகே செல்லும்பொழுது, குருக்கள்மார் அவரைத் தடுத்து அவர் கோயிலுக்குள் சென்றதால் கோயில் தீட்டுபட்டு விட்டதென்று அவரிடம் பத்தரை ரூபாய் சம்ப்ரோக்ஷண செலவுக்காக வாங்கிவிட்டார்க ளென்று அறிகிறோம். இதைப்பற்றி துரைசாமி வாதாடியும் பயன் இல்லையாம். இதனை யொட்டி வண்ணார்கள் சங்கம் கூடி பிராமணர்களுக்கு இனிச் சலவை செய்வதில்லை யென்று முடிவு செய்யப் போவதாகக் கேள்வி.

கோயில் சுவாமிகளின் பரிவட்டங்களை இந்த வண்ணார்களே வெளுத்துக் கொடுக்கிறார்கள். வண்ணார்கள் நமது அண்ணலிடம் அணுகக் கூடாதென்று சொல்லும் கோயில் குருக்கள் மார்களும், அந்த வண்ணார்கள் வெளுத்துக் கொடுக்கும் ஆடைகளை உடுத்திக்கொண்டே சுவாமிகளுக்குப் பூசை செய்கிறார்கள். மேலும் ஒரு வண்ணார் திருக்குறிப்புத் தொண்ட நாயனாராகி எல்லாக் கோயில்களிலும் கல்லுருவில் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பிராமணர்களே பூசை செய்கிறார்கள். ஆதித் திராவிட நந்தனாரும் இருக்கிறார்! நாடார் நாயனாரும் இருக்கிறார்! வாணிய நாயனாரும் இருக்கிறார்! குலால நாயனாரும் இருக்கிறார்! அந்தணர் முதல் ஆதித் திராவிடர் வரையுள்ள சகல ஜாதி மக்களும் ஆண்டவனிடம் அற்புதமான பக்தி செய்து நாயன் மார்களாயும், ஆழ்வார்களாயும் நமது கோயில்களில் இடம் பெற்று நமது தெய்வங்களாக விளங்குகிறார்கள்.

எனவே, தென்னாட்டில் சில கோயில்களில் வண்ணார்கள், வாணியர்கள், நாடார்குல மக்கள் போகக் கூடாதென்று தடுப்பது மடமையாகும். அவ்வாறு இதுவரை வழக்க மாயினும் இனி அதனை ஒழிக்க வேண்டும். இத்தகைய அநியாயங்களைத் தடுக்காது இன்னும் நாட்டிலே வளர்த்துக் கொண்டிருக்க முடியாது.

---

ஏழைகளுக்குப் பணத்தைக் கொடுக்கவேண்டியதில்லை. தொழிலைக் கொடுத்து காப்பாற்றுங்கள்.

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

Koviloor Digital Library



# பிரிட்டன் பல்டி அடித்ததேன்?

(பி. நா. சிவராமன்)

தற்காலம் தங்கத்தின் விலை 1-க்கு ஒன்றேகாலாக உயர்ந்திருப்பதை யாவரும் அறிவார்கள். உலகத்திலுள்ள தங்கம் பெரும்பாகம் பிரான்ஸ், அமெரிக்கா இவ்விரண்டு தேசங்களிலும் அடைபட்டுக் கிடப்பதால் இந்த உலோகத்துக்குச் சிறிது கிராக்கி ஏற்பட்டிருந்தாலும் இவ்வளவு தூரம் அதிகமாக விலை உயர்ந்ததற்கு அது மட்டும் காரணமாகாது. பிரான்ஸ் தேசத்திலோ, அமெரிக்காவிலோ மற்ற தேசங்களிலோ தங்கத்தின் விலை இவ்வளவு உயரவில்லை. இங்கும் இங்கிலாந்திலுமே தங்கம் விலை உயர்ந்திருக்கிறது. காரணம் தங்கவிலை உயர்வல்ல; நம் நாட்டு ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது. இதற்கு முன் நம் ரூபாயில் 13—8—0 ன் மதிப்பு 4·86 அமெரிக்க டாலராக இருந்தது. இப்பொழுது 3·86 டாலராகக் குறைந்துவிட்டது. முழக்கோல் சிறியதாய் விட்டதால் துணி நீளமாய்த் தெரிகிறது.

நம் ரூபாயின் மதிப்பு இப்பொழுது குறைந்த தன் காரணம் யாது; இதற்கு ஜவாப்தாரியார் என்று பார்த்தால் நாம் ஜவாப்தாரியல்ல; நாம் சுதந்திரர்களா யிருந்தாலல்லவோ இங்கு ஏற்படும் மாறுதல்கள் நம்மிஷ்டம் போல் ஏற்படும். நம் நாட்டு நாணயம் பிரிட்டிஷ் பவுன் செலாவணியோடு இணைத்திருக்கிறது. பிரிட்டிஷ் பவுன் 3-க்கு நமது ரூபாய் 40 என்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த பிரிட்டிஷ் பவுன் செலாவணி தங்கத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. எப்பொழுது வேண்டுமாயினும் இங்கிலாந்து பாங்கில் பவுன் நோட்டுக்கு சட்டபடி குறிப்பிட்ட ஓரளவு தங்கம்கொடுத்து வந்தார்கள். ஆகையால் பிரிட்டிஷ் பவுன் கடுதாசிகளுக்கு, தங்கத்தின் மதிப்பு இருந்துவந்தது. பிரிட்டிஷார் நாட்டிலிருந்து தினந்தோறும் லக்ஷக்கணக்கில் பவுன் வெளியேற ஆரம்பித்ததும் நோட்டுக்குப் பவுன் கொடுப்பதை செப்டம்பர் 20உ முதல் நிறுத்திவிட்டார்கள். உடனே பிரிட்டிஷ் பவுன் செலாவணி (ஸ்டர்லிங்) யின் மதிப்பு வெளிநாடுகளில் குறைந்துவிட்டது. ஆகஸ்ட் மாசத்தில் பிரிட்டிஷ் பவுனுக்கு நாணய மாற்று விகிதம் பிரான்ஸ் நாணயத்தில் 123 அல்லது 124 ஆக இருந்தது இப்பொழுது 100-க்கும் கீழே போய்விட்டது. அமெரிக்காவில் 4·86 டாலராக இருந்தது 3·86 டாலராக ஆய்விட்டது.

பிரிட்டிஷார் தம் செலாவணியின் மதிப்பை ஏன் குறைத்தார்கள்? தங்க இருப்பு குறைந்ததென்பதெல்லாம் அடுத்துவந்த காரணம். "அழவேண்டுமென்றிருந்தாள். கணவனும் அடித்தான்" என்பது பழமொழி. ஏற்றுமதிகளை அதிகப்படுத்தி கைத்தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமாயின் மற்ற நாட்டாருக்குப் பவுன் நாணயமாற்று விகிதத்தைக் குறைத்து பிரிட்டிஷ் சாமான்களை வாங்குவதையே லாபகரமாகச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டிஷாருக்கு இருந்தது. பல வருஷங்களாக பிரிட்டிஷார் உலகத்தில் பணவிஷயத்தில் பெரிய முதலாளி ஸ்தானத்தை வகித்துவிட்டு அந்த உச்ச ஸ்தானத்திலிருந்து இறங்குவதற்கு மனமில்லாமல் தயங்கினதினால் தான் "தங்கமதிப்பு நாணய" முறையைவிட்டு நீங்குவதற்கு இவ்வளவு தாமதம்.

பிரிட்டனில் இறக்கு மதியைவிட ஏற்றுமதி 1930 ம் வருஷத்தில் 3020 லக்ஷம் குறைவாயிருந்தது. பிரிட்டிஷார் மற்ற நாடுகளில் போட்டிருக்கும் மூலதனத்துக்கு வட்டியாகவும், கப்பல் தொழில், இன்சூரன்ஸ் இவற்றின் மூலமாகவுள்ள வருமானமாகவும் இந்தக் குறையை ஈடுசெய்த பிறகு 390 லக்ஷம்தான் கலர்மீத மிருந்தது. இந்த வியாபார மீதம்1928ல் 1370 லட்சம்பவுனுகவும் 1929ல் 1380 லட்சம் பவுனுகவு மிருந்தது. 1931ல் வர்த்தகம் மிகவும் குறைந்துவிட்டது. கப்பல் ஓட்டுதல், இன்சூரன்ஸ், முதலியவற்றிலுள்ள வருமானமும் குறைந்துவிடும். 390 லக்ஷம் அதிகவரவாயிருந்த நிலைமைபோய் அதிகச் செலவாய் மாறிவிடும். 1930-31ல் ஒரே வருஷத்தில் இந்திய இறக்குமதியில் பிரிட்டிஷார் பாகம் 100-க்கு 12 குறைந்துவிட்டது.

ஐரோப்பாக் கண்டத்தில் பிரிட்டிஷ் நிலக்கரி விற்று முதல் குறைந்துவிட்டது. 1913ல் பிரிட்டிஷ் ஜவுளி உலகத்தில் மொத்தத்தில் 100க்கு 75 ஆக இருந்தது 1928ல் 56 ஆகக் குறைந்துவிட்டது. இப்பொழுது இன்னும் குறைந்திருக்கும். "பிரிட்டனில் உற்பத்தியாகும் பொருள்கள் 100க்கு 150 ஆக விலை ஏறிவிட்டது. இறக்குமதிப் பொருள்கள் 100க்கு 13 குறைந்திருக்கிற" தென்று ஓர் பெரியார் கணக் கெடுத்திருக்கிறார்கள். ஆகவே பிரிட்டிஷார் தம் சரக்குகளை உலகத்தில் போட்டி போட்டு விற்க முடியவில்லை. யுத்தத்துக்குப் பிறகுப் பல நாடுகள் புதிதாகப் பல நாகரிக வளர்ச்சிக்குத் தக்கபடி கைத்தொழில்களை விருத்தி செய்திருக்கிறார்கள். பிரிட்டிஷார் அதிலும் பின்னடைந்துவிட்டனர். உதாரணமாக 1925 முதல் 1929க்குள் பிரான்ஸ் செயற்கைப் பட்டுத்தொழிலை 100க்கு 800 ஆகப் பெருக்கிற்று; பிரிட்டனில் 100க்கு 113 ஆகக்கூட பெருகவில்லை.

இந்த நிலைமையில் எப்பாடு பட்டாவது, என்ன முறையிலாவது பிரிட்டிஷ் சாமான்களை உலகத்தார் வாங்கும்படி செய்ய வேண்டும். பிரிட்டிஷ் சாமான்களை வாங்குவது லாப மென்று மற்ற நாட்டார் நினைக்க வேண்டும். விலை குறைய வேண்டும். உற்பத்திச் செலவைக் குறைப்போ மென்றால் எளிதில் விரைவில் சாத்தியமாகாது. தொழிலாளி சம்பளத்தைக் குறைத்தால் ஆபத்துத்தான். அதோடு தொழில் இன்சூரன்ஸில் முதலாளி கொடுக்க வேண்டிய பாகத்தையும் அதிகமாக்கி யிருக்கிறார்கள். புதிய வரவு செலவு திட்டத்தில் புதிதாய் அனுஷ்டிக்கப் போகும் சர்க்கார் சிக்கன முறையில் வர்த்தகம் இன்

Koviloor Digital Library



# வந்தேன் மறுபடியும்!

(எம்டன்" எழுதுவது)

அன்புமிக்க ஆங்கிலோயிண்ட் ஸ்ரீமெக் அல்லென் துரையவர்கட்கு எம்டனின் ஆலிங்கனம். எனது வேலைத் தொந்திரவால் நெடுநாள் தங்களை விட்டுப் பிரிந்ததற்கு மன்னிக்கவும். எங்கள் "காந்தி" யின் தொண்டு செல்விக்குப்பம் ஆலைத் தொழிலாளருக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்து, ஊக்கப்படுத்தி வருவதுடன், தொழிலாளர் சங்கமும் மீண்டும் தலையெடுக்கிறது. தங்களது தவறுதலுக்கும் "காந்தி" எடுத்துக் காட்டாய் நின்று உதவிவருகிறது. உதாரணமாக எங்கள் "காந்தி" எழுதிய பிறகு மீண்டும் சங்கை ஊதவைத்தீர், உமது இனத்தாருக்கு அற்ப சவுகரியங்களை யாவது குறைத்தீர்!

ஆனால் தாங்கள்மட்டும் "காந்தியை" யும், எம்டனையும் கனவில் கண்டாலும் நடுங்குகிறீர் யென்பதை தங்கள் செய்கையிலிருந்து யான் நன்கறிந்து கொண்டேன்.

துரையே! நான் தொழிலாளர் சங்க மூலியமாயும், நேரிலும், தொழிலாளர் துயரத்தைப் போக்கப் பாடுபட்டும், தங்களது முட்டியபின் குனியும் புத்தியால் அதைக் கவனிக்காது போனீர்கள். யானும் வேறு விதியில்லாததால் "காந்தி" யைக் கொண்டு தொழிலாளர்களை முன்னுக்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

"இவனுக்கென்ன சும்மாயிருக்கப்படாதா" என்று தாங்கள் எண்ணலாம். அநியாயமுள்ள இடத்தைக் கண்டித்து பொதுஜனங்கட்கு பாடுபடவும், திடச்சித்தத்துடன் போராடவும் ஆண்டவன் ஏனோ என்னை அமைத்துவிட்டான். அதற்கு நானென்ன செய்வேன்? ஆகவே தாங்கள் ஆலையைவிட்டு அப்புறம் அகல தற்போது எனக்கு மனமில்லை.

## இது நியாயமா?

கீர்த்தி நீங்கிய பிரிட்டிஷ் சர்க்காரே பணப்பஞ்சம் பாடிக்கொண்டு சிக்கனத்திட்டம் போட்டுவருகையில், தங்கள் வகுப்பினரை கொஞ்சம்கூட கவலையில்லாமல் ஒரு சல்லியேனும் சம்பளத்தில் குறைக்காமல், தொழிலாளர் வயற்றில் மண்ணை அள்ளிப் போடுகிறீர்கள். தற்போது பிராவிடன்ட் பண்டு, விஷயத்தில் ஏதோ அநியாயம் செய்யப்போகிறதாகவும் கேள்விப்பட்டேன். ஆயிரத்தி ஐந்நூறு தொழிலாளர்களுக்கு மாதவாரி பதினாயிர ரூபாயும், விரல் விட்டு எண்ணக்கூடிய 15 வெள்ளையர்களுக்கும் மாதம் பதினாயிர ரூபாயும் ஆலையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றால், இதை முழு முட்டாள் கூட நியாமென்று ஒத்துக் கொள்ள மாட்டானே!

ஐயாவே! உலகத்தில் மகா குபேரராகிய மோட்டார் அரசன் ஹென்ரி போர்டு தொழிலாளர் விஷயமாக கூறும் சில குறிப்புகளைத் தங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன் கூர்ந்து பார்பீராகவும்!

"ஒரு தொழிலை வளர்த்தது நான்தான் என்று எவரும் கூறிக்கொள்ள உரிமையில்லை. அத்தொழிலை வளர்க்க ஆயிரக் கணக்கானவர்கள் உதவியாயிருப்பார்கள். எல்லோரும் சேர்ந்துதான் அதை வளர்த்திருக்கக்கூடும். ஆதலால் அத்தொழிலால் வரும் ஊதியத்தை அனைவரும் பகர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியதே. அந்தம் எவருக்கும் வழங்க நான் இசையேன். ஒரு தொழிலைத் தன்னால் முற்றும் நிர்வகிக்க முடியாவிடில் தனக்கு உதவி செய்யக் கூடியவர்களைத் தொழிலில் சேர்த்துக்கொள்ளுவது சகஜம். அதேமாதிரி உற்பத்தி விஷயத்தில் தன் இருகைகளாலும் செய்யமுடியாத வேலைகளுக்குத் தொழிலாளரை நியமிக்கையில அவர்களையும் என் பங்காளிகளாக கருதக்கூடாது. தொழிலின் முதல் ஒருவருக்கே சொந்தமாக இருக்கலாம். மேற்பார்வையினைத் தும் அவரே வேலைசெய்தாலன்றி தொழில முழுதும் தனக்கே உரித்தாயதென்று கருத அவருக்கு நியாயமில்லை." என்று ஹென்ரிபோர்டு தமது சுயசரிதையில் கூறுகிறார். இத்தகைய தாராள மனப்பான்மை கொண்டதால்தான், மன்னுயிரை தன்னுயிர் எனக்கருதிய பெருந்தகைமையால் தான், ஹென்ரி போர்டு அமெரிக்கா குபேரனானான். தங்களுக்கும் தங்களது அதிகாரிகளுக்கும் இந்த பரந்த எண்ணம் உண்டாகுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்.

---

ஜம் குறைவுபடுமென்கிறார் கெய்ல்ன் என்ற ஓர் நிபுணர். என்ன செய்வது? பிரிட்டிஷ் சாமான்களை எப்படியாவது வெளிநாட்டாருக்கு லாபகரமாக்கி விற்று ஏற்றுமதியை அதிகமாக்க வேண்டும். அதற்கு நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதுதான் வழி. வேறு கதியில்லை. ஆகவே சர்க்காரில் செலாவணி நோட்டின் மதிப்பைக் குறைத்து விட்டனர்.

இதன் பயன் என்னாயிற் றென்பதை கவனித்தால் நாம் கூறுவது விளங்கும். மற்ற நாட்டு சாமான்கள் பிரிட்டிஷ் சாமான்களைவிட விலை கூடி விட்டன. ஆகவே இனி பிரிட்டிஷ் சாமான் விற்பது எளிது. ஹாலந்து முதலிய நாடுகளில் இனிமேல் பிரிட்டிஷார் தமது நிலக்கரியை ஜர்மன் நிலக்கரியுடன் போட்டி போட்டு விற்க முடியும். பிரிட்டனில் தங்க மதிப்புச் செலாவணி நின்று போன சில நாட்களிலெல்லாம் அமெரிக்காவில் உருக்குத் தொழிற்சாலைகளில் சம்பளம் குறைக்க வேண்டியிருக்கிறது. சில தொழில்களில் அமெரிக்கருடன் இனிப் பிரிட்டிஷார் போட்டி போட முடியும்.

இம்மாதிரி பிறநாட்டாரோடு போட்டி போட்டுத் தம் நாட்டுச் சரக்கை விற்று தம் தொழில்களைக் காப்பாற்று வதற்காகவே பிரிட்டிஷார் தம் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த பவுன் நோட்டின் மதிப்போடு இந்திய ரூபாயை இணைத்ததுதான் பெரிய அக்கிரமம். இதனால் இந்தியர் பிரிட்டனைத் தவிர மற்ற நாட்டு சாமான்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. பிரிட்டனைப் போல இந்தியாவிலும் தங்க மதிப்பை எடுத்திருந்தால் நிலைமை வேறுவிதமாயிருந்திருக்கும். அது வேறு கதை.

Koviloor Digital Library


## இந்தியாவிற்கு சுயராஜ்யம்

அடிமலையில் வசிக்கும் ஸ்ரீலஸ்ரீ. சாந்தி விஜயா என்ற மகரிஷி சென்ற ஜனவரி மாதம் 26உ யன்று மகாத்மா விடுதலை யடைவாரென்று சொன்னார். அவர் சொன்னபடியே மகாத்மா விடுதலையானார். இப்பொழுது அந்த மகரிஷி மற்றொரு ஜோசியம் கூறுகிறார். அதாவது எவ்வளவு மோசமாக நிலைமையிருப்பதாகத் தோன்றினாலும், நவம்பர் 1உ முதல் இந்தியாவிற்கு நல்ல காலம் ஆரம்பமாகிறது. இந்தியா கேட்பதில் 100-க்கு 70 கிடைப்பது உறுதியாம். மகாத்மா வெற்றி யடைவாராம். ஆனால் 1933-ல் ஒரு பெரிய யுத்தம் ஏற்படுமாம். அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை. மகாத்மாவின் ஜாதகத்தை கீழே வெளியிடுகிறோம்.

1869 வருஷம் அக்டோபர் மீ 22 சுக்கிலவருஷ புரட்டாசி மீ 18உ சனிவாரம் இரவு மணி 3½க்கு மகம் நான்காம் பாதம் மகாத்மா ஜெனனம்.

| | | | |
|---|---|---|---|
| | குரு | | |
| | இராசி | | ராகு |
| கேது | | | ல / சந் |
| | சனி | புதன் அங்கார சுக்கிரன் | சூரிய |

## பழைய குருடி கதவைத் திறடி

"வட்டமேஜை மகாநாடு முறிந்துவிடும். சட்டமறுப்பு ஆரம்பமாகலாம். ஆகவே தயாராயிருங்கள்" என்று மாஜிஸ்திரேட்டுகளுக்கு வங்காள சர்க்கார் அறிவித் திருக்கிறார்களாம். சென்னை மாகாணத்திலும் அந்தக்காற்று வீசுகிறது. சேலத்தில் காங்கிரஸ் காரர்மீது நடக்கும் வழக்கை வாபஸ் வாங்கும் நோக்கத்தோடு கலெக்டர் இருந்தார். ஆனால் கவர்னர்அங்கு போய் வந்தபின்பு வழக்குகளை வாபஸ் வாங்க கலெக்டர் மறுத்து விட்டாராம். ஆகவே பழைய குருடி கதவைத் திறடி என்ற நிலைமைக்கு எல்லா மாகாண சர்க்கார்களும் வருவதாய் தெரிகிறது. சர்க்காரைப் பொறுத்தவரையில் அடுத்த சட்ட மறுப்பிற்கு தயாராய்க்கொண் டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. சர்க்கார் தயாரானால், காங்கிரஸ் இனிச்சு வாய்ந்தனமாய் இருக்காது என்பதை இப்பொழுதே தெரிவித்துக் கொள்ளுகிறோம். சுயராஜ்யம் சும்மா கிடைக்காது. சும்மா பெற்றால் அதை காப்பாற்ற முடியாமல் போய்விடும். மறுபடியும் சட்டமறுப்பும், பகிஷ்காரமும் ஆரம்பமாய் தீரவேண்டுமென்பது பிரிட்டனின் நினைப்பாயிருந்தால், இந்தியா அதற்கு தயாராகவே யிருக்கிறது. கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும், அதன் அவயக் குரலை விடுமா? ஒரு நாளும் விடாது. எல்லாரும் லார்ட் இர்வினாக முடியுமா? அவர் முயற்சியெல்லாம் வீணாய் போகிறது. ராமநாதபுரத்தில் உப்பு உரிமையை பறிமுதல் செய்ததும், மதுரை போலீஸ் தடியடியை நியாயமென்று சொல்லியதும், சர்க்கார் மனப்போக்கு எந்த திக்கில் போகிறதென்பதை காட்டுகின்றன.

## எரிகிற கொள்ளியில் எந்த கொள்ளி மேல்?

எல்லா கொள்ளியும் ஒன்றுதான். பிரிட்டனில் எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும், இந்தியாவைப் பொறுத்த வரையில் ஒன்றுதான் என்பதை பலதடவைகளில் சொல்லியிருக்கிறோம். சென்ற தேர்தலில் ஒன்பது கட்சிகள் போட்டி போட்டும், இந்தியாவைப்பற்றி ஒன்றுகூட பேசவில்லை. தேர்தல் அறிக்கையில் இந்தியாவின் பெயரையே காணவில்லை. ஆகவே இந்தியாவை சுரண்டும் விஷயத்தில் கட்சிகளுக்குள் அபிப்பிராய பேதம் கிடையாதென்பது இது ஒன்றிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

மகாத்மா காந்திக்கு இந்த யோக்கியதை தெரியாமலா யிருக்கும்? தேர்தல் தினத்தன்று அவர் வெளியே போக மோட்டாரில் ஏறவந்தபோது "ஓட் கொடுக்க போகிறீர்களா?" என்று அங்கே கூடியிருந்த ஜனங்கள் கேட்டார்களாம். உடனே ஒரு நிருபர் அவரை அணுகி "மகாத்மாஜி, தங்களுக்கு ஓட் இருந்தால், யாருக்கு கொடுப்பீர்கள்?" என்று கேட்டாராம். மகாத்மா சிரித்துக்கொண்டு "யாருக்கு கொடுப்பதென்று பொறுக்குவதற்கே வழியில்லை. ஓட் கொடுக்கவே போகமாட்டேன்" என்று சொன்னாராம். ஸ்ரீமதி சரோஜினியிடம் அதே கேள்வி கேட்டபோது "நான் எதற்காக ஓட் கொடுக்க வேண்டும்? எந்த கட்சியாவது நமது தேசத்திற்காக சந்தேகமில்லாமல் ஆதரவு கொடுப்பதாகச் சொல்லுகிறதா?" என்று கேட்டார். ஆகவே எந்தக் கட்சி பட்டத்திற்கு வந்தாலும் நமது தலைவர்களுக்கு கடுகளவும் கவலையில்லை. எரிகிறகொள்ளியில் எந்தக் கொள்ளிமேல்? எதுவுமில்லை.

Koviloor Digital Library

## மின்வெட்டு.

**மாடு கலைகிறது.**

சிகப்புத் துணியைக் கண்டால் மாடுகள் மிரளுவது வழக்கம். ஆனால் வெள்ளையர் வெள்ளையைக்கண்டு மிரளுகிறார்கள். காந்தி குல்லாவையும், கதரையும் கண்டால் பாம்பு கடித்ததைப் போல இந்நாட்டில் வெள்ளையர் பதறிய காலம் ஒன்றிருந்தது. அந்தக்காலம் இதைவிட்டு போகிற போக்கில் தென் ஆப்பிரிக்காவிற்கு போயிருப்பதாய் செய்தி கிடைத்திருக்கிறது. சாய் என்ற இடத்தில் டர்ன்புல் என்ற வெள்ளையன் ஒரு இந்தியர் அணிந்திருந்த காந்தி குல்லாவைப் பார்த்து ஸ்தம்பித்துப் போனானாம். தன் நீக்ரோ வேலைக்காரனை விட்டு அதை பலாத்காரமாய் பிடுங்கி கொளுத்தினானாம். இந்தப் பேர்வழி இதேமாதிரி முன் ஒருதடவை செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த அயோக்கியன் செய்கைக்கு பதில் செய்ய அங்கு யோசனை நடந்து வருகிறது. தொண்டர்கள் கூட்டமாய் காந்தி தொப்பியோடு போவதென்றும், பகிரங்கமாய் "ஹாட்" என்ற வெள்ளையர் தொப்பிகளை கொளுத்துவதென்றும் யோசனை செய்கிறார்கள். அம்மாதிரி செய்து காட்டினாலொழிய டர்ன் புல்லின் அகம்பாவம் அடங்காது.

**10 மாதங்களில் 9 சட்டம்.**

சென்ற வருஷம்தான் சட்டமறுப்பு நடந்தது. சர்க்காருக்கு அவசரச் சட்டங்களுக்கு அவசியம் ஏற்பட்டதென்று காரணம் சொல்லலாம். இந்த வருஷம் என்ன அவசரம்? சட்டமறுப்பு இல்லாத சமாதான காலமாயிருந்தால் அவசரச் சட்டங்கள் எதற்காக? சென்ற வருஷம் 12 மாதங்களுக்குள் இர்வின் பிரபு 11 அவசரச் சட்டங்களை சிருஷ்டித்தார். இவ் வருஷத்தில் 10 மாதங்களுக்குள் 9 அவசரச் சட்டங்களாய் விட்டன. சென்ற வருஷம் தோற்றுப் போயிற்று. இதை சமாதான காலமென்று சொல்லுவதா, குழப்ப காலமென்று சொல்லுவதா என்பது நமக்குத் தெரியவில்லை. பலாத்கார குற்றத்தை செய்ததாகவோ செய்யப்போவதாகவோ போலீசார் சந்தேகப் பட்டவர்களை ஆள் தூக்கி சட்டப்படி விசாரணையில்லாமல் அடைத்து வைக்கிறார்கள். புதிய அவசரச் சட்டப்படி, பலாத்கார இயக்கத்திற்கு மறைமுகமாக தெரிந்தோ, தெரியாமலோ உதவி புரிவதாக போலீசாருக்கு சந்தேகம் தோன்றியவர்களைக்கூட இனி விசாரணையில்லாமல் அடைத்துவைத்துவிடலாம்.

## மகாத்மாஜி தினசரிவேலை

மகாத்மாஜி சீமையில் ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்து வருகிறார். ஒரு நாளுக்கு 3 மணி நேரம்கூட அவருக்கு தூங்க கிடைப்பதில்லை. அவர் ஒரு நாள் எழுதிய டயரியை பார்த்தால், அவருக்கு எவ்வளவு அதிகமான வேலை யிருக்கிறதென்பதை அறிந்து கொள்ளலாம். அவருடைய டயரியிலிருந்து ஒருநாள் அவர் செய்த வேலைகளை கீழே குறிப்பிடுகிறோம்.

காலை 1 மணி கிங்ஸ்லி ஹாலுக்கு வருதல்.
,, 1-45 ,, நூல் நூற்றல்.
,, 1-50 ,, டயரி எழுதுதல்.
,, 2 முதல் 3-45 வரை தூக்கம்.
,, 3-45 முதல் 5 வரை பிரார்த்தனை.
,, 5 முதல் 6 வரை தூக்கம்.
,, 6 முதல் 7 வரை உலாவுதல், பேட்டி.
,, 7 முதல் 8 காலைக் கடன், ஸ்நானம்.
,, 8, 8-30 முதல் ஆகாரம்.
,, 8-30 முதல் 9-15 வரை கிங்ஸ்லி ஹாலிலிருந்து கின்காட்ஸ் பிரிட்ஜ் போதல்
,, 9-15 முதல் 10-45 வரை ஒரு நிருபர், சித்திர நிபுணர், சீக்கியர், ஒரு வியாபாரி இவர்களுக்கு பேட்டி
,, 10-45, 11 ஜேம்ஸ் மாளிகை.
,, 11, 1 ஷை
மாலை 1, 2-45 மாலை ஆகாரம்.
,, 3, 5-30 முஸ்லிம்களோடு பேச்சு
,, 5-39, 7 இந்தியா மந்திரியோடு பேச்சு.
,, 7, 8 வீடு திரும்புதல், இரவு போஜனம், பிரார்த்தனை.
,, 8, 9-10 மதுவிலக்கு பிரசார கூட்டத்தில் பிரசங்கம்.
,, 9-10 போபால் நவாபை பார்க்க போதல்.

இந்தியரின் நன்மைக்காக மகாத்மா இம்மாதிரி நித்திரையோ ஓய்வோ இன்றி லண்டனில் உழைத்து வருகிறார். 63 வயதில் இவ்வளவு அதிகமாக உழைப்பது அவரின் அபார திடசித்தத்தையே காட்டுகிறது.

Edited, Printed & Published by T. S. C .: ckalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No: M. 2677

தனி காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 நவம்பர் 5வ, பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 20வ வியாழக்கிழமை || இதழ் 48

## மாயா பரதேசி.




ராவணன் பரதேசி வேஷம் போட்டு சீதை ஆசிரமத்திற்கு பிச்சை கேட்க வந்தான். உண்மையான பரதேசி என்று சீதை நினைத்து பிச்சையிடப் போனாள். ஏமாந்தாள். மறுபடியும் அதே பரதேசி வேஷம் போட்டு பரதேசத்துணி பிச்சை கேட்க வருகிறது. செல்வமாகிய சீதையே, உஷார்! முன்னால் ஏமார்ந்தது ஞாபகமிருக்கட்டும்!

தீபாவளி நெருங்கி வருகிறது. மாயாபரதேசி சுற்றிச் சுற்றி அலைகிறான். உஷார். உஷார். கத்தரை கொண்டு அந்த மாயா பரதேசியை விரட்டி யடியுங்கள்.

# சீதா, ஜாக்கிரதை!

சீதாதேவி ஆரண்ய ஆசிரமத்தில் தனியாயிருந்தாள். அச்சமயம் பார்த்து ராவணன் அங்கே வந்தான். எப்படி வந்தான்? சன்னியாசி மாதிரி வேஷம் போட்டு பிச்சை கேட்க வந்ததுபோல வந்தான். அவன் வந்தது பிச்சைக்காக வல்ல. சீதாதேவியை அபகரித்துச் செல்லவே வந்தான். அவனுடைய அந்த நீச் செயலை சன்னியாச உடை போட்டு மறைத்தான். அந்த சன்னியாச உடையைக் கண்டு சீதாதேவி ஏமாந்து போனாள். கபட நாடக உடைக்கு உள்ளே அவன் நெஞ்சத்திலிருந்த சூதை அவள் அறியவில்லை. ஆகவே பிச்சை போட வெளியே வந்தாள். உடனே ராவணன் பொறிக்குள் அகப்பட்டாள். இலங்கையில் சிறை செய்யப்பட்டாள்.

சீதையென்றால் லக்ஷ்மி. லக்ஷ்மி என்றால் செல்வம். இந்தியாவின் செல்வமாகிய சீதையை முன்பு அன்னிய நாட்டானாகிய இலங்கையான் எடுத்துச் சென்றான். இன்று அந்த சீதேவிக்கு பல நாட்டார்கள் போட்டி. ஒவ்வொரு நாடும் அபகரித்துச் செல்ல சூழ்ச்சி செய்கிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வேடம் போடுகிறது. ஒவ்வொரு நாடும் தனது சூதை மறைக்க முயற்சி செய்கிறது. இதைப்போலவே ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு உருவத்தோடு சீதையை ஏமாற்றப் பார்க்கிறது. சீதா, நீ ஏமாந்து போவாயா? முன்னால் இலங்கையாண்ட மன்னனிடம் ஏமாந்ததுபோல மறுபடியும் ஏமாறப் போகிறாயா?

தீபாவளி நெருங்குகிறது. பரதேசத் துணிகள் கண்ணை பறிக்கின்றன. இந்த மோகனாஸ்திரத்தால் பலர் கட்டுண்டு கிடப்பதாய் அறிகிறோம். சீதேவியாகிய இந்தியாவின் செல்வத்தை ராவண பரதேசியாகிய பரதேசத் துணிகள் அடித்துக்கொண்டுபோக சூழ்ச்சி செய்கின்றன. அவற்றின் பாணங்களை பகட்டு என்ற இந்த மோகனாஸ்திரம். இந்த மோகனாஸ்திரத்தால் அகப்பட்டு இரையானவர்கள் கொஞ்சமல்ல. இந்த மோகனாஸ்திரத்தால் கோடிக் கணக்கான இந்தியர் ஏழைகளாய் உண்ண உணவின்றி தவிக்கின்றனர். இந்த அஸ்திரத்தை எதிர்த்து அடிக்கவே ராட்டினம் தோன்றி யிருக்கிறது. ராட்டினமே இதை தலையெடுக்க வொட்டாமல் அடிக்கவல்லது. தீபாவளி நெருங்க நெருங்க மோகனாஸ்திரங்கள் மூலை முடுக்குகளில் எல்லாம் பறக்கின்றன. இவற்றிற்கு இரையானால் சீதாதேவியை மாயா பரதேசி அடித்துக்கொண்டு போவது நிச்சயம். அந்த அஸ்திர வலைகளிலிருந்து தப்ப வேண்டுமானால் உடனே ராட்டினத்தை கைக்கொள்ளுங்கள். உங்கள் போர்க்கொடியாகிய கத்தரைவாங்கி அஸ்திரத்தை அடித்து ஒழியுங்கள். அது ஒன்றே சீதையை காப்பாற்ற வழி.

சீதா, பரதேசி வேடம் போட்டு வரும் பரதேசத் துணி உண்மையில் பரதேசி யல்ல. பழைய ராவணனைப்போல, ஏமாற்றும் போலி பரதேசி. உனது தயாள குணத்தை அவனுக்கு காட்டிவிடாதே. உன்னை அடித்துக்கொண்டு போகவே அவன் வந்திருக்கிறான். மறுபடியும் நீ ஏமாறப் போகிறாயா? முன்னால் நீ ஏமாந்ததால் போர்க்களத்தில் இந்தியர் மாண்டது போதாதா? இன்னம் இரையாக வேண்டுமா? வேண்டாம், வேண்டாம் சீதா, உஷாராயிரு.

தீபாவளி நெருங்குகிறது. பரதேச துணிகளை துரத்தி யடியுங்கள். இத்தனை வருஷங்களாக மகாத்மா கிளிப்பிள்ளைக்கு உபதேசம் செய்தது போல உங்களுக்கு உபதேசம் செய்து வந்திருக்கிறார். அவ்வளவையும் கேட்டுக்கொண்டு மறுபடியும் பரதேச துணி வாங்கினால், நீங்கள் உயிரற்ற பிராணிகளாய், கல்லாய், மண்ணாய்த்தான் இருக்கவேண்டும். மறுபடியும் பரதேசத் துணி வாங்கினால், சீதாதேவியை நீங்களே விரட்டியடித்த பாவத்திற்கு உள்ளாவீர்கள். சீதேவியை பறிகொடுத்த பின்பு இருந்தென்ன, இறந்தென்ன? பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற நீதிவாக்கியத்தை அறியீர்களா? கொஞ்சமாவது யோசனையோ, சுயமதிப்போ இருந்தால், இந்த தீபாவளிக்கு பரதேசத்துணி வாங்குவதை அடியோடு தொலைக்க வேண்டும். ஒன்று கத்தர் வாங்குங்கள். அல்லது இந்தியாவில் நெய்த நூலால் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சுதேச துணிகளை வாங்குங்கள். மாயா பரதேசியை துரத்துங்கள்.

---

## பரதேசத் துணி பகிஷ்காரம்.

தமிழ் நாடெங்குமுள்ள காங்கிரஸ் கமிட்டிகளும், இதர பொதுஜன சேவை சங்கங்களும் தீபாவளியில் கத்தர் கட்டவேண்டிய அவசியத்தைக் காட்டும் பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் வெளியிட முடியாததற்காக வருந்துகிறோம். இந்தப் பிரசுரங்களால் வரப்போகும் தீபாவளி தமிழ்நாட்டில் கத்தர் தீபாவளியாக ஜொலிக்குமாக!

Koviloor Digital Library



# தோட்டத்தில் பாதி கிணறு

இந்திய சர்க்காரின் வரும்படியில் பெரும்பாகத்தை ராணுவ பூதம் விழுங்குகிறது. வருஷம் சுமார் 52 கோடி ரூபாய் இந்த பூதத்திற்கு பூஜையாகவேண்டும். இவ்வளவு பெரிய பூதத்தை கட்டிக்கொண்டு அழுவதால் இந்தியரால் இரை போட்டு முடியாது என்று நமது தலைவர்கள் எவ்வளவோ சொல்லுகிறார்கள். ஆனால் சர்க்கார் கேட்கவில்லை. சர்க்காரில் இப்பொழுது அதிக வரி போட்டிருக்கிறார்கள் தெரியுமா? அதற்கு காரணம் சர்க்காருக்கு வரவிற்கு மேல்வருஷம் 1-க்கு 20 கோடி ரூபாய் அதிகச் செலவு இருக்கிறதாம். செருப்புக்கு தக்கபடி காலா அல்லது காலிற்கு தக்கபடி செருப்பா? செருப்பிற்கு தக்கபடி காலைத் தறிக்கும் பிரகஸ்பதியை நீங்கள் என்னவென்று நினைப்பீர்கள்? இந்த சர்க்கார் அந்த வேலையைச் செய்கிறது. அவ்வளவு அபார மூளை. 20 கோடி அதிகச் செலவு ஏற்பட்டால் செலவை யல்லவா குறைக்கவேண்டும்? அந்த புத்தி யில்லை. போடு வரியை! என்று வரிகளை போட்டுக்கொண்டே போகிறது. ராணுவத்திற்காக 52 கோடி செலவழிக்கிறார்கள். முதலில் இவ்வளவு பெரிய ராணுவமே வேண்டியதில்லை. இப்பொழுதிருப்பதில் பாதி ராணுவம் போதும். அப்படிச் செய்தாலும் 26 கோடி ரூபாய் மீதமாகும். சரி அப்படித்தான் செய்யவில்லை, போகட்டும். ராணுவ அளவை அப்படியே வைத்துக்கொள்ளுவோம். அங்கே இந்தியருக்கு ஒரு சம்பளம், வெள்ளையருக்கு உயர்ந்த சம்பளம். இந்த அக்கிரமம் எதற்காக? இந்தியருக்கு கொடுப்பதைப் போலவே வெள்ளையருக்கும் சம்பளம் கொடுத்தால் சுமார் 32 கோடி ரூபாய் மீதமாகும். ஒன்று இரண்டல்ல. முப்பத்து இரண்டு கோடி! இதற்கு வழி யென்ன என்று நீங்கள் கேட்கலாம். இதைப்பற்றி ஒரு ராணுவ நிபுணர் சொல்லியிருப்பதை சுருக்கமாய் கூறுகிறோம்.

ராணுவத்தில் இருமாய் தீனி போடுவது போதாதென்று வெள்ளையருக்கு தனியாக தீனிக்காக சுமார் 42½ லட்சம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளை சிப்பாய்க்கும் மாதம் 3 ரூபாய் தலை முடி வெட்டி "ஜில்"படுத்த கொடுக்கிறார்கள். இந்திய சிப்பாய்க்கோ க்ஷவரக்காசு என்று மாதம் 5 அணா சம்பளத்தில் பிடித்துவிடுவார்கள். வெள்ளையருக்கு கொடுப்பதை நிறுத்தினால் 23 லட்சம் மீதமாகும். துணிக்காக மாதம் இந்திய சிப்பாய்க்கு 2—15—0. வெள்ளைசிப்பாய்க்கு 5—15—0. இந்த மூன்று ரூபாய் வித்தியாசத்தை தொலைத்தால் 20 லட்சம் மீதம். ராணுவ விஷயங்களை படித்து முன்னேற்றமடைவதற்காக பிரிட்டிஷ் சிப்பாய்க்கு மாதம் 3 ரூபாய். இந்தியருக்கு கிடையாது. இதில் 20 லட்சம். விவாகமான பின்பு வீட்டில் நாற்காலி மேஜை முதலிய ஆடம்பரத்திற்காக பிரிட்டிஷ் சிப்பாய்க்கு மாதம் 3—4—0. இந்தியருக்கு கிடையாது. இதில் 3 லட்சம். ஏனெனில் விவாகமானவர்கள் சொற்பம். பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கு படிப்பதற்காக வருஷம் 6 லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தியருக்கு கிடையாது. மதாச்சார செலவிற்காக பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கு வருஷம் 7½ லட்சம் செலவு. விவாகமான பின்பு அதற்காக அதிகச் சம்பளம் கொடுப்பதில் வருஷச் செலவு 8 லட்சம். இந்தியருக்கு கிடையாது. விவாகமான பின்பு குட்டிகள் போட்டால், ஒரு குட்டிக்கு 10 ரூபாய் வீதம் 4 குட்டிகள் வரையில் கொடுக்கிறார்கள். இது இந்தியருக்கு கிடையாது. இதில் சுமார் 8 லட்சம் செலவு. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கு விவாகமான பின்பு சராசரி மாதம் 75 ரூபாய் அதிகமாய் கொடுக்கிறார்கள். இந்தியருக்கு கிடையாது. இதில் சுமார் 54 லட்சம். இந்தியாவில் வந்து வேலைபார்ப்பதற்காக வெள்ளை உத்தியோகஸ்தர்களுக்கு அலவன்ஸ் என்று அதிகச் சம்பளம் கொடுக்கிறார்கள். இதில் 50 லட்சம். தவிர எஞ்சினியர்களுக்கு சம்பளம் தவிர அலவன்ஸ் கொடுப்பதை நிறுத்தினால் 3½ லட்சம் மீதமாகும். அதைப்போல டாக்டர்களுக்கு அலவன்ஸ் கொடுப்பதை நிறுத்தினால் 3¼ லட்சம் மீதமாகும். கமாண்டர்களுக்கு கொடுக்கும் அலவன்சை நிறுத்தினால் 16 லட்சம் மீதம். இந்தியாவிலுள்ள வெள்ளையர் படையில் வேலைபார்க்கும் வெள்ளை உத்தியோகஸ்தர்களைவிட இந்தியப்படையில் வேலைபார்க்கும் வெள்ளை உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச்சம்பளம் கொடுக்கிறார்கள். இதில் 50 லட்சம். போக்கு வரத்து சாதனங்களுக்காக 2¼ கோடி செலவு செய்கிறார்கள். இதில் ஒரு கோடி குறைக்கலாம். இந்தியாவில் வந்து வேலை பார்ப்பதற்காக ஒவ்வொரு பிரிட்டிஷ் சிப்பாய்க்கும் வாடகையாக வருஷம் 25 பவுன் பிரிட்டிஷ் சர்க்காருக்கு கொடுக்கவேண்டி யிருக்கிறது. இதைத்தவிர வேறு பல செலவுகளுக்கும் சேர்த்து வருஷம் 13¼ கோடி ரூபாய் பிரிட்டனுக்கு போகிறது. இந்திய சிப்பாய்களைப்போலவே அவர்களையும் சேர்த்துக் கொள்ளுவதென்று ஏற்பட்டால் இந்த வாடகைப் பணம் 13¼ கோடி மீதமாகும். இந்தியாவில் 60 ஆயிரம் வெள்ளை சிப்பாய்கள் இருக்கிறார்கள். இந்தியரைப்போல அவர்களுக்கும் சம்பளம் கொடுப்பதென்று செய்தால் 4¼ கோடி ரூபாய் மீதமாகும்.

எல்லாவற்றையும் கவனித்தால், ஒன்று இந்தியரைப்போல அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவோ, அல்லது அவர்களுக்குப் பதில் இந்தியர்களை நியமிக்கவோ ஆரம்பித்தால் சுமார் 32 கோடி ரூபாய் மீதமாகும். அப்படி ஏன் செய்யக்கூடாது? எதற்காக இந்த வெள்ளை யானைகளுக்கு தீனி போட்டு திண்டாடவேண்டும்?

Koviloor Digital Library

# பிரிட்டனுக்கு எச்சரிக்கை.

இந்திய சுய ஆட்சிச் சங்கம் ஸெண்டிரல் ஹாலில் ஏற்பாடு செய்த வரவேற்பிற்குக் காந்திஜி பதிலளிக்கையில் பேசியதாவது:—

இந்தியாவைப்பற்றி இத்தேசத்தில் அறியாமை மிகுதியுமிருப்பதுடன் தப்பான எண்ணங்களும் அதிகம் பரவியிருக்கின்றன. சிட்டகாங்கிலும், ஹிஜ்லியிலும் நடந்த சம்பவங்களைப் பற்றி வேண்டுமென்று மௌனம் சாதிக்கப்படுகிறது. கடைசியாகச் சில பலாத்காரச் செயல்கள் நடந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இவை மிக வருந்தக்கூடியதாகவும், வெட்கக் கேடாகவுமிருக்கின்றன. எனது கொள்கையை உத்தேசித்து எனக்கு மிகுந்த சங்கடத்தை உண்டு பண்ணுவதாகவுமிருக்கின்றன. ஆனால் இந்த விஷயங்களை மாத்திரம் ஏன் பிரபலப் படுத்த வேண்டும். மற்ற விஷயங்களை ஏன் ஒளிக்க வேண்டுமென நான் கேட்கிறேன். கவர்ன்மெண்டார் பலத்த அடக்கு முறையை நடத்துவதும், வெறி பிடித்தவர்கள் பயங்கரச் செய்கைகளில் இறங்குவதும் மாறிமாறி நடந்து முடிவில் இந்த ஆபாசமே தொடர்ந்து வருகிறது. பிறரைக் கொன்று தங்கள் உயிர்களையும் ஆபத்திற்குள்ளாக்கிக் கொள்வதென்று பலாத்காரக் கட்சியில் சேர்ந்தவர்கள் நினைக்கின்றனர். இவர்கள் செய்கையை நான் கண்டிப்பதுபோல் வேறெவரும் அவ்வளவாகக் கண்டிக்க முடியாது. காங்கிரஸ்காரர்கள் செய்தாலும் மற்றவர்கள் செய்தாலும் சரி, இவர்கள் செய்கையைக் காங்கிரஸ் அடக்கி இந்த வெறி பிடித்த பயித்தியக்கார முறையில் அவர்கள் செல்லாமலிருக்குமாறு செய்யக்கூடவில்லை. இருப்பினும் மிகவும் விஸ்தாரமான இந்திய பூமியில் வேரூன்ற முடியாதென்பதை இது நன்கு நிரூபிக்கிறது. இதில்லாவிடில் சிட்டகாங்கிலும் ஹிஜ்லியிலும் நடந்திருப்பது பெருவாரியான கலகத்தை யுண்டுபண்ணியிருக்கும்.

புதிய வங்காள அவசரச் சட்டத்தை நான் பலமாகக் கண்டிக்கிறேன். ஏற்கனவே கவர்ன்மெண்டிற்குள்ள அதிகாரங்களே போதுமானவை. ஆனால் எப்பொழுது பலாத்காரச் செய்கை நேர்ந்தாலும் கவர்ன்மெண்டார் நிதானம் தவறி வெறி பிடித்தவர்களாகி விடுகிறார்கள். பலாத்காரச் செய்கை நேர்ந்தால் உடனே பதில் கடுமையான சட்டஞ் செய்ய வேண்டுமென்பதே கவர்ன்மெண்டின் சம்பிரதாயமிருக்கிறது.

இதைத் தீர்க்க ஒரே ஒரு வழிதானுண்டு. ஆங்கிலேயர் தங்கள் நாட்டில் செய்து கொண்டிருப்பது போல் இந்தியாவில் இந்தியர்களே தங்கள் விஷயங்களைச் சரியாகவோ தப்பாகவோ நிர்வகித்துக்கொள்ள விட்டு விடுவதே அந்த வழியாகும்.

இந்தியா ஒரு பெரிய சிறையாக இருக்கிறது நாங்கள் அதிலுள்ள கைதிகள். நீங்கள் ஜெயிலர்களாகவிருக்கிறீர்கள். கைதிகளாகிய நாங்கள் ஏதோ ஒரு தினத்தில் ஜவாப் சொல்ல வேண்டியவர்கள். நீங்களும் ஜவாப் சொல்லவேண்டிய காலம் வரும். ஆகவே இவ்விதம் இயற்கைக்கு மாறான இந்த ஆபாச சம்பந்தம் ஒழிவதே சிறப்பாகும். அதுவும் சாத்தியமானால் இன்றே ஒழிவது மேல்.

நீங்கள் எங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்க முடியாதென்பது எனக்குத் தெரியும். நாங்களே அதைப் பெறவேண்டும். ஆண்டவன் சங்கல்பம் அனுகூலமாகும் பக்ஷத்தில் நீங்கள் இஷ்டப்படாவிடினும் உங்களிடமிருந்து நாங்கள் அதைப்பெற்று விடுவோம். நாங்கள் பட்ட கஷ்டங்களும் செய்த தியாகங்களும் போதுமானவையென்று நினைத்தோம். ஆனால் இவ்வளவைக் கொண்டு பிரிட்டிஷாரின் மனச்சாட்சி சீர்படுமாறு நாங்கள் செய்யவில்லையானால் அது எங்கள் குறைவேயாகும்.

ஆகையால் இந்தியா திரும்பி என் தேசத்தினர் மீண்டும் தீமிதிபோன்ற பெரிய போராட்டத்தில் இறங்குமாறு எனது தேசத்தினரைக் கேட்டுக்கொள்ள நான் தயாராகவிருக்கிறேன். இந்தத் தடவை போராட்டம் முன்னிலும் அதிகக் கடுமையாகவிருக்கும்.

சிட்டாகாங்கும், ஹிஜ்லியும் எச்சரிக்கை செய்து என்னை இந்தியாவுக்கு விரைந்து அழைப்பது போலிருக்கின்றன. அடிக்கடி நான் என்னிடத்தும் என் சுற்றியுள்ள நிலைமையைக்குறித்தும் கோபமடைந்தாலும், கோபத்தில் மகா நாட்டைவிட்டு வெளியேறுவதை நான் விரும்பவில்லை.

நான் இன்னும் பொறுத்துப் பார்க்கிறேன். பிரார்த்தித்துப் பார்க்கிறேன். ஆனால் காங்கிரஸ் கோருவதை மகா நாடு அளிக்கத் தவறிவிடின் இனி என்ன நடக்கவிருக்கிறதென்பதை நான் அறிந்திருக்கிறேன். இதில் என் தேசத்தினர் பின் வாங்கிவிட மாட்டார்களென நான் நம்புகிறேன்.

Koviloor Digital Library



# மூன்று அரக்கர்கள்

நாம் எதற்காக தீபாவளியைக் கைக் கொண்டாடுகிறோம்? முன்னொரு காலத்தில் ஒரு அசுரன் ஜனங்களுக்குப் பெருந் தீங்கு இழைத்து வந்தான். பகவான் அவனை சம்ஹாரம் செய்தார். அவன் இறந்ததனால் ஜனங்கள் சந்தோஷமடைந்து பண்டிகை கொண்டாடினார்கள். அப் பண்டிகைதான் தீபாவளி.

நம் நாட்டில் இப்பொழுது இரண்டு கொடிய அரக்கர்கள் நமக்குப் பெருந்தீங்கு இழைத்து வருகின்றனர். அவர்கள் யார்? அவர்கள்தான் கள்ளும் அன்னியத் துணியும் இவ்வரக்கர்களை நம் நாட்டை விட்டு ஓட்டுவதற்கு காந்தி மகான் அவதாரம் செய்திருக்கிறார். இந்த தீபாவளிக்குள் நாம் இவ்வரக்கர்களை நம் நாட்டை விட்டு ஓட்ட வேண்டும். எல்லோரும் கதரே அணிய வேண்டும். இந்த தீபாவளி நாம் இவ்வரக்கர்களை நம் நாட்டைவிட்டு ஓட்டியதற்காக கொண்டாடப் பட்டதாக விருக்க வேண்டும்.

அநேகர் தீபாவளியன்று வேடிக்கைக்காக கள் குடிக்கப் போய், அதன் வலையில் அகப்பட்டுக் கொண்டு, என்றென்றைக்கும் மீள முடியாமல் தவிக்கின்றனர். இவர்கள் பண்டிகை யன்று சந்தோஷமாக விருக்கப் போய், தம் ஆயுள் நாள் முழுதும் தம் மனைவி மக்களுக்கு மீளாத்துயரைக் கொடுக்கின்றனர். பண்டிகை யன்று சந்தோஷமாக விருக்க வேண்டு மென்பது நியாயமே. ஆனால் கள் குடித்து ஊராரெல்லாம் இகழும்படி செய்து கொள்வதா சந்தோஷம்? நாம் அரக்கன் இறந்தா னென்று சந்தோஷங் கொண்டாடும் தினத்தன்று மற்றோர் அரக்கனிடம் சிநேகம் செய்யலாமா. பழய குடியர்களும், புதிய குடியர்களும் தீபாவளியன்று மட்டு மிதமின்றிக் குடித்துவிட்டு வாந்தியெடுத்துக் கொண்டு ஆபாஸம் செய்கின்றனர். இதுதானா சந்தோஷம்.

மற்றோர் அரக்கனும் இருக்கின்றான் இவன்தான் சீனவெடி (பட்டாஸ்). தமிழ் நாட்டில் தீபாவளி யன்று அரைமணி நேரம் சந்தோஷமாக விருப்பதற்காக இந்தப் பட்டாசுக்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் கரியாக்கப் படுகின்றது. இது நியாயமா, இது தர்மமா தீபாவளியன்று துணி வாங்குவதற்குகூட காசில்லாத ஏழைகள் தங்கள் குழந்தைகளின் உபத்திரவத்துக்கு அஞ்சி

# கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

ஒரு பீஸ் 1703-ம் நிர். மல் 2 ராத்தல் எடையுள்ளது. தண்ணீரில் போட்டால் அதிலுள்ள கஞ்சியும் கொழுப்புமாக கால் ராத்தல் கரைந்து போகும். 1¾ ராத்தல் நிறையுள்ள இந்தத் துணியை சுமார் ரூ. 13—8—0 கொடுத்து நம்மவர்கள் வெள்ளைக்காரரிடம் வாங்குகிறார்கள். இந்தத் துணிக்கு வேண்டிய 2 ராத்தல் பஞ்சை விற்று நாம் ரூ. 1—8—0 பெற்றுக்கொண்டு அதே பஞ்சை 13—8—0 ரூபாய் கொடுத்துத் துணியாக வாங்குகிறோம். நமக்குக் கிடைத்த பஞ்சு விலை போகப் பாக்கி 12 ரூபாயில் நமது தரகர்களுக்கு 1 ரூபாய் கமிஷன் போக பாக்கி 11 ரூபாயும் கப்பலேறி வெள்ளைக்காரர் கையில் தள்ளிப் போய் விழுகிறது. இப்படித் தான் வருஷந் தோறும் தண்டம் போட்டு வருகிறோம்.

நீங்கள் கதர் வாங்கினால்—கொடுத்த பணம் முழுதும் நமது ஏழைகளுக்குப் போகிறது.

நீங்கள் ரூபாயைத் துண்டு துண்டாக வெட்டி எறிந்தாலும் வெள்ளியின் விலை கிடைக்கும்; சாக்கடையில் போட்டாலும் இந்தியத் தோட்டி எப்பொழுதாவது எடுத்துக் கொள்வான்; மண்ணுக்குள் புதைத்து வைத்தாலும் பின்னால்வரும் சந்ததியார்கள் கையிலாவது அகப்படும். ஒருவருக்கும் பயனில்லாது, ஏழைகளை வஞ்சித்து அந்நிய நாட்டுக்கு ரூபாயைக் கப்பலேற்றி அனுப்புவதில் உங்களுக்குக் கிடைக்கும் லாபம் என்ன?

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

---

சில அனைக்களுக்கு பட்டாஸ் வாங்குகிறார்கள். பட்டாஸ் கடைகளில்லா விட்டால் குழந்தைகள் பட்டாஸ் வாங்கவேண்டு மென்று வற்புறுத்தப் போவதில்லை. ஆகையால் பட்டாஸ் கடைகளை பகிஷ்கரிக்க வேண்டுவது முற்றிலும் அவசியம் ஆகையால் தீபாவளியன்று கதர் கட்டுங்கள். அன்னியத் துணியை ஒழியுங்கள். பட்டாஸ் வாங்காதீர்கள். இவ்வருஷத்திய தீபாவளியை ஓர் தேசிய திருவிழாவாகக் கொண்டாட வேண்டு மென்று நம் தமிழ் நாட்டு மக்களை மிகவும் தாழ்ந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். வந்தே மாதரம்.

—டி. எம். ராம சுப்பிரமணியம்.

Koviloor Digital Library

# காந்தி வாழ்த்து.

(சுவாமி அருணகிரி நாதர்.)

விருத்தம்.

1. எத்திசையோரும் போற்று
மெழில்மிகு பாரதநாட்டில்
மெத்தவும் வனப்புற்றோங்கி
விலங்குபோர் பந்தர்தன்னில்
சத்யவார் பவனியா வைசியக்
கரம்சந்த்ர காந்தியாவும்
புத்திலிபாயுங் கூடிப்
புரிந்தநற் றவத்தான் வந்த

2. ஐயனெங் காந்தி யார்க்கின்
றறுபத்து மூன்று மாண்டு
வையக மெல்லாம் போற்ற
வந்ததிவ் வைபவத்தில்
கையிறு விழைத்த நல்ல
கதருடை யணிந் தெல்லோரும்
துய்யசீர்க் காந்தி வாழ்கச்
சூழ்ந்துகொண் டாடு வோமே !

3. அறந்தவத் தேய்ந்து மக்க
ளாண்மையும் புகழுங் குன்றி
மறந்தரு தொழில்மேற் கொண்ட
மாக்களுக் கடிமை யாகி
சிறந்தன வெல்லாந் தோற்று
தியங்கிடு நமருய்யப்
பிறந்திடுங் காந்தி நாளின்
பெருமைகொண் டாடு வோமே !

4. செய்வன திருந்தச் செய்யுந்
திறமையும் பொறையும் வாய்ந்து
பொய்யையுங் கொலையு நீத்த
புனிதநன் னெறியைச் சார்ந்து
தெய்வமே துணையாய்க் கொண்டு
சிறுமையை யொழித்த காந்தி
ஐயனின் பிறந்த நாளை
அனைவரும் போற்றி வாழ்வாம் !

5. போற்றுவோம் காந்தி யெம்மான்
புனிதநற் கீர்த்தி தன்னை
ஏற்றுவோம் கொடியை யின்றே
யிந்திய ரில்லந்தோறும்
மாற்றுவோம் சாதி பேத
மயக்கினை யறவே யின்றே
மேற்றிசை யாரி னின்றும்
விடுதலை பெற்றே மென்றே

6. விடுதலைக் கெனவே தோன்றி
வெவ்வினை யிடத்தி லுள்ள
அடிதலை யொழிக்குஞ் சத்தி
யாக்ரக வாள்கைக் கொண்டு
கொடுஞ்சிறைக் கூடம் நண்ணிக்
குவலயம் போற்ற நிற்கும்
நடுவெனக் காந்தி நாளை
நான்தொழு துய்குவோமே!

7. ஆடுபோற் பயங்கொள் நம்மை
அச்சமில் லரிமா வாக்கி
நாடுக ளெல்லாம் வீர நாதமே
முழங்கச் செய்த
பீடுறு காந்தி வள்ளல்
பிறந்தநாள் விழாவைத் தங்கள்
வீடுகள் தோறுங்கொண் டாடி
விடுதலை பெறுவோ மின்றே

8. இன்றுநாம் விடுதலைக்கே
யெழுகடற் றூண்டி லண்டன்
மன்றினி லிருந்தெல் லார்க்கும்
மறுநெறி முறைமை யெல்லாங்
குன்றின்மே லிட்ட தீபக்
கொழுந்தென விளக்கிக் காட்டும்
வென்றிசே ரெந்தாய் காந்தி
விமலநீ ! என்றும் வாழி !

9. ஓரவஞ் சகத்தினாலே
யுலகெலா மாள வெண்ணி
பீரங்கி குண்டு வாள்வேல்
பெருவிடப் புகையுஞ் செய்வார்
கோரங்க ளெல்லா மண்ணாய்க்
குலைந்திடக் கோலங் கொண்ட
பூரணக் காந்தி யோகி
புவியிலென் னாளும் வாழி

10. தொழுத வரிடத்தும் மிக்க
துயர்செய்தா ரிடத்துமெலாம்
உழுவலன் போடு பேசி
யுயர்வு தாழ் வின்றி நோக்கும்
பழுதிலாத் தவத்தோ னென்று
பகைவரும் போற்றி நிற்கும்
முழுமுதற் பொருளாங் காந்தி
முனிவநீ வாழி ! வாழி!!

---

## தீபாவளியும் கதரும்

“இந்தியரின் காமதேனு கைராட்டினமே. ராட்டினத்தை அஸ்திவாரமாகக் கொண்டே நம் ஏழைகளின் வாழ்வு அமைந்துள்ளது. மங்கையர் கற்பைக் காப்பது ராட்டினமே; கணவரை இழந்த பெண்டிருக்கு உற்ற துணை கைராட்டினமே; ஏழைகளின் வயிற்றைக் கஞ்சியால் நனைப்பதும் ராட்டினமே. வீட்டுக்கு வீடு எப்படி வாசற்படி இருக்கிறதோ அது போலவே வீட்டுக்கு வீடு ராட்டினமும் இருக்க வேண்டும். நாம் முப்பத்தைந்து கோடி ஜனங்களும் என்று கதர் கட்டுகிறோமோ அன்றே சுயராஜ்யத்தைக் காண முடியும். இந்தியாவிலிருந்து பட்டினி ஒழிந்தால் அதுவே சுயராஜ்யம்.” (மகாத்மா வாக்கு.)

ஏழைகளைக் காப்பாற்ற வேண்டுமானால்
தீபாவளிக்குக் கதரே வாங்குங்கள்.

Koviloor Digital Library



## வில்லியர்ஸ் கூச்சல்

வெள்ளையர் சங்கத் தலைவர் ஸ்ரீ. வில்லியர்சை ஒரு வங்காளி சுட்டு விட்டார். வங்காளியின் நோக்கம் எதுவா யிருந்தாலும், அவர் செய்கை பலமாய் கண்டிக்கத் தக்கது. ஆயிரம் மடங்கு பலமாய் நாம் கண்டிக்கிறோம். அயர்லாந்து பலாத்காரத்தால் சுயராஜ்யம் பெற்ற பலனை இப்பொழுது அநுபவிக்கிறது. ஆகவே அந்த பலாத்காரம் இந்தியரின் நன்மையை கருதி பார்த்தாலும் மகா கெடுதலானது. அந்த பலாத்கார நிலைப்பையே அடியோடு தொலைத்துவிட வேண்டும். இந்தியாவின் நன்மையை விரும்பும் ஒவ்வொரு இந்தியத் தலைவரும் அதை பலமாய் கண்டித்தே வருகிறார்கள். இதில் ஒளிமறைவு ஒன்றுமே யில்லை. அப்படியிருக்க காங்கிரஸ் தலைவர்கள் இச் செய்கையை புகழ்வதாக யாராவது கூறினால் அது வெறும் அயோக்கியத்தனமாகும்.

ஸ்ரீ. வில்லியர்ஸ் லண்டன் டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு ஒரு செய்தி அனுப்பி யிருக்கிறார். அதில் இந்திய தலைவர்கள் இச்செய்கையை புகழ்வதாகவும், பள்ளிக் கூடங்களில் ராஜத்துவேஷ பிரசாரம் நடை பெறுவதாகவும், இவற்றால்தான் பலாத்காரச் செயல்கள் ஏற்படுகின்றன வென்றும் சொல்லுகிறார். இவை முழுதும் அபத்தம். சுட்டதால் வில்லியர்சுக்கு கோபம் ஏற்பட்டிருக்கலாம். அப்படி ஏற்படுவது மனித இயற்கை. ஆனால் அம்மாதிரி குரோதங்களை அடக்கி ஆளுவதே தலைவர் என்று சொல்லுவோருக்கு முக்கியமாய் வேண்டிய குணமாகும். ஸ்ரீ. வில்லியர்ஸ் இந்தியாவிலுள்ள வெள்ளையர் சங்கத்திற்கு தலைவர். அந்தப் பதவியில் அவர் இருக்கும் வரையில் அவர் வார்த்தைகளை நிதானமாய் உபயோகிக்க வேண்டும். லார்ட் ஹார்டிஞ்சு வைசிரா யிருந்தபோது டெல்லிக்குள் ஊர்வலமாய்ச் சென்றார். யாரோ ஒருவன் அவர் மீது குண்டு போட்டான். ஆனால் லார்ட் ஹார்டிஞ்சு பொறுமை யிழக்கவில்லை தக்க காரண மில்லாமல் ஒருவனைக்கூட கைது செய்யக் கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு போட்டார்.

வில்லியர்சே, அவர் பெருந் தன்மையைப் பாரும். அவர் பேசிய மொழிகளுக்கும், நீர் டெயிலி எக்ஸ்பிரசில் கூறும் மொழிகளுக்கும் எவ்வளவு பேதம் இருக்கிறதென்பதை கவனியும். வீண் கூச்சல் போட்டு, வீணுக நிரபராதிகள் மேல் பாய்வதை விடும். அதுவே தலைவருக் கழகு.

## சைமனை சனியன் விடவில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஜாதகப்படி ஒரே ஒரு தடவை தான் நல்ல தசை வரும். அதைப் போல கெட்ட தசையும் வந்தாகவேண்டும். எப்பொழுதும் ஒரே மாதிரி சக்கரம் ஓடிக்கொண்டிருக்காது. பொதுவாக நல்ல தசையை சுக்கிர தசை யென்றும், கெட்ட தசையை சனிதசை யென்றும் சொல்லுவார்கள். இந்த சனிதசை இளமையில் வந்தால் பாதகமில்லை. தாங்கிக் கொள்ளலாம். முதுமையில் வந்தால் மகா கஷ்டம். ஆனால் இளமையில் வருவதோ முதுமையில் போவதோ நமது இஷ்டமில்லை. அவரவர் பிறந்த நேரத்தை பொறுத்தது. சர். ஜான் சைமனுக்கு பால்யத்தில் சுக்கிரதசை. வெற்றி மேல் வெற்றி யடித்தார். எதைத் தொட்டாலும் வெற்றி. எதற்கும் ஒரு முடிவு காலம் உண்டல்லவா? அந்த சுக்கிர தசை முடிந்து சனி தசை ஆரம்பமாயிற்று. இது எப்பொழுது என்று நண்பர்கள் கேட்கலாம். சைமன் கமிஷன் வேலையை அவர் ஒப்புக்கொள்ளும் சமயத்தில் தான் இது ஆரம்பமாயிற்றென்று ஜாதக நிபுணர்கள் கூறுகிறார்கள். அதாவது அவருக்கு ஏற்பட்ட சனி தசையே அவரை அந்தப்பதவியை ஒப்புக்கொள்ளும் படி செய்ததாம். ஆகவே அவர் அடைந்த கீர்த்தியை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அது உலகமறிந்த ரகசியம். முதுமையில் சனிவந்தால் உடனே ஓடிப்போய் விடுமா? அதன் காலம் இருக்கிறவரை அது பேசாமல் இருக்கத்தான் செய்யுமா? இரண்டுமில்லை. அந்த சனிதசையே இடைவிடாமல் இந்தியா மீது அவர் சீறி விழுந்துகொண்டு இருக்கும்படி செய்கிறது. இப்பொழுது மற்றொரு உதாரணம். புதிதாக சீமையில் மந்திரி சபை அமைக்கப் போகிறார்கள் அல்லவா? அதில் சைமனுக்கு ஒரு நூதன உத்தியோகமாம். அதில் ஆபீசில் அமர்ந்து பார்க்கும் வேலை யில்லையாம். ஊர் சுற்ற வேண்டுமாம். ஊர் சுற்றும் மந்திரி பதவி சைமனுக்கு கிடைத்தால், அவரை சனியன் விடவில்லை யென்பதில் சந்தேகமும் உண்டா? இந்தியாவில் அவர் சுற்றியதால் அடைந்த (அ) கௌரவம் போதாதா? ஏகாதி பத்தியம் எங்கும் அந்த அநுபவத்தை அடைய வேண்டுமா? அடபாவமே, சைமனே உமக்காக இரங்குகிறோம். சனிக்கிழமை தோறும் சனீஸ்வரன் கோவிலுக்குச் சென்று கொஞ்சம் பிரார்த்தனையாவது செய்து பாரும்.

Koviloor Digital Library



# மின் வெட்டு.

**ஐக்கியமாகாண சட்ட மறுப்பு.**

ஐக்கிய மாகாணத்தில் நிலைமை நெருக்கடியாய் வருகிறது. நூற்றுக்கு 50க்கு மேல் விலைவாசிகள் குறைந்திருக்க நூற்றுக்கு 18 வீதமே நிலவரியை குறைத்திருக்கிறார்கள். சர்க்காரிடம் எவ்வளவோ சொல்லியும் புத்தியில் ஏறவில்லை. ஆகவே கோழைகளைப் போல நூறு தரம் சாவதைவிட வீரனைப்போல ஒரு தரம் சாக விவசாயிகள் முடிவு செய்து விட்டார்கள். மகாத்மா காந்திக்கு தந்தி கொடுத்ததில், அவசியமான முறைகளை கையாளலாமென்று சொல்லி விட்டார். டெல்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி, ஐக்கிய மாகாண காங்கிரஸ் சட்ட மறுப்பு ஆரம்பிக்க தீர்மானித்தால், தனக்கு ஆட்சேபனையில்லையென்று சொல்லி விட்டது. ஐக்கிய மாகாண காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடியது. பலமாக வாதம் நடந்தது. கடைசி முறையாக சர்க்காரிடம் கேட்பது, அப்பொழுதும் இணங்கி வராவிடில் சட்டமறுப்பை ஆரம்பித்துவிடுவது என்று தீர்மானித்திருக்கிறது. ஐக்கிய மாகாண கவர்னர் சர். மால்கம் ஹெய்லி டெல்லி உடன்படிக்கையை எவ்வளவு தூரம் மதிக்கப் போகிறார் என்பதை கவனிப்போம்.

**சீனாவில் தொல்லை.**

சீனாவில் மஞ்சூரியாவை விட்டு உடனே ஜப்பானியத் துருப்புகள் காலி செய்ய வேண்டுமென்று சர்வதேச சங்கம் தீர்மானித்தது. இதுவரை அத் தீர்மானத்தை மதித்து ஜப்பான் நடவடிக்கை எடுத்ததாகச் செய்தி வரவில்லை. இப்பொழுது மற்றொரு செய்தி கிடைத்திருக்கிறது. சீனா ருஷியாவுடன் நட்புச் செய்து கொண்டிருக்கிறதாம். ருஷிய படைகள் மஞ்சூரியா எல்லையில் வந்து குவிகின்றனவாம். இது உண்மையானால் மஞ்சூரியாவில் பலத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சோவியத் ருஷியா சர்வதேச சங்கத்தில் சேரவில்லை. அது சீனாவுடன் சேர்ந்து ஜப்பானிய துருப்புகளை எதிர்த்தால் சர்வதேச சங்கத்தால் எதுவும் செய்ய முடியாது. அங்கத்தினராயிருக்கும் ஜப்பானே அதன் சொற்படி கேட்கவில்லையானால், ருஷியாவா கேட்கப் போகிறது? அப்புறம் இருவரும் தங்கள் பலத்தைக் காட்டி வெற்றியோ தோல்வியோ பெற நேரிடும். ருஷியா யுத்தத்தில் தலையிடுமானால் அந்த யுத்தம் வெறும் சோதா யுத்தமா யிருக்காது. சென்ற ஐரோப்பிய யுத்தத்தைவிட பன் மடங்கு அதிகோரமாயிருக்கும். கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

## பெத்தாபுரம் பட்டு

பெத்தாபுரத்தில் சீமைபட்டு நூலைக் கொண்டு சிலர் சரக்குகள் தயார் செய்வதைப் பற்றி நமது பத்திரிகையில் வெளியா யிருந்த விஷயத்தை நண்பர்கள் கவனித்திருப்பார்கள். பெத்தா புரத்திலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி பட்டு தொழிற்சாலையார் நமக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார்கள். அவர்கள் தயார் செய்யும் சகல பட்டு ஜவுளிகளும் சுத்த சுதேசி யென்றும், பெத்தாபுரம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி சர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள். ஆகவே ஸ்ரீ. லட்சுமி பட்டுத் தொழிற்சாலையில் தயாராகும் பட்டுத் துணிகள் பூராவாக சுதேசி என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## சட்டமறுப்பு எப்போ ?

மகாத்மா காந்தி காம்பிரிட்ஜ் கலாசாலை இந்திய மாணவர் சங்கத்தில் 1உ பேசினார். அச்சமயம் அவர் சொல்லியதாவது:—

வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதிகள் போகிற போக்கு இந்தியாவின் உண்மையான போக்கு என்று சொல்ல முடியாது. வட்டமேஜை மகாநாடு தோற்றால், இந்தியாவில் சட்டமறுப்பு ஆரம்பிப்பது நிச்சயம். ஆனால் அது உடனே நடக்காது. சட்டமறுப்பு என்பது காங்கிரஸ் கட்டளையின் மீது, காங்கிரஸ் "கட்டுப்பாட்டிற்குள் ஆரம்பிப்பதாகும். ஆகவே காங்கிரஸ் நன்றாய் யோசனை செய்து முடிவுசெய்த பின்னே அது ஆரம்பமாகும். தற்கால நெருக்கடிக்கு பரிகாரம் காங்கிரஸ் திட்டமே அதுவே எனது திட்டம். ஆனால் அதை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளாததால் தனியாகப் பேசி ராஜிசெய்யவோ, அல்லது ஒரு கோர்ட் மூலம் தீர்ப்பு பெறவோ நான் தயார். இவற்றையும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையானால், இந்தப் பிரச்னை காலப்போக்கில் தான் முடிவாக வேண்டும். இந்து, முஸ்லிம், சீக்கியர் ஒருவருக்கொருவர் சந்தேகப் படுவதாலேயே பாஞ்சால பிரச்னை தீர வழியில்லை. ஆனால் பாஞ்சால பிரச்னையை அளவுக்கு மீறி பிரமாதப் படுத்திக் கூறுவதைக்கண்டு யாரும் ஏமாறாமலிருக்க எச்சரிக்கிறேன்.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 நவம்பர் 7௳, பிரஜோற்பத்தி ஐப்பசி௴ 22௳ சனிக்கிழமை || இதழ் 49

## தென்னாலிராமன் குதிரை.




குதிரையை முன்பக்கமாக ஓட்டுவதைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் லார்ட் சாங்கி வட்ட மேஜை குதிரையை பின் பக்கமாக ஓட்டுகிறார். உலகிலுள்ள அதிசயங்களில் இது மகாப்பெரிய அதிசயமல்லவா ?

அஸ்திவாரத்திலிருந்து வீடு கட்டாமல் முகட்டிலிருந்து கீழே கட்டிக்கொண்டு வருவதுபோல வட்ட மேஜை மகாநாட்டின் வேலை இருக்கிறது என்று லண்டன் "மார்னிங் போஸ்ட்" பத்திரிகை சொல்லுகிறது. இதைத்தான் காங்கிரஸ் ஆதியிலிருந்து சொல்லி வருகிறது. "மார்னிங் போஸ்ட்" மூளையில் இவ்விஷயம் பட 2 வருஷமாயிற்று. பக்கா மூளை !

Koviloor Digital Library

# இனி என்ன?

வட்டமேஜை மகாநாடு செத்துப் போனது நிச்சயம். ஆனால் மெக்டனல்ட் சாகவில்லையென்று சொல்லி உயிர் கொடுக்க முயற்சிக்கிறார். 10௳க்குள் முடிவதாயிருந்த மகாநாடு 20௳ வரை இழுத்துக் கொண்டு போகுமென்று தெரிகிறது. அதற்கிடையில் மகாநாடு உயிர் பெற்று மங்கள காமாய் முடியுமா அல்லது 20௳யன்று மகாநாட்டிற்கு கருமாதி தான் நடக்குமா என்பது 11௳ தெரிந்து போய் விடும். அன்றுதான் முதல் மந்திரி சர்க்கார் கொள்கையை வெளியிடப் போகிறார் என்று தெரிகிறது. அப்படி வெளியிட்டாலொழிய, மகாநாட்டை நடத்திக் கொண்டு போவது விருதா வேலை என்று லார்ட் சாங்கி மெக்டனல்டுக்கு இடித்துக் கூறினாராம். மற்றொரு பக்கம் லார்ட் இர்வின் பால்டுவினை முடுக்கிக் கொண்டிருக்கிறாராம். "மகாத்மாவோடு சமாசம் செய்து கொள்ள இதுவே தருணம். இத்தருணம் போனால் மறு தருணம் வாய்ப்பதரிது. சமாதானம் செய்யாவிடில் இந்தியாவில் மோசமான நிலைமை ஏற்படும்" என்று உபதேசம் செய்கிறார். சாந்த சொரூபியான பால்டுவினுக்கு கங்காவில் எவ்வளவு பிரியமோ அதைவிட அதிகமாக இந்தியாவோடு சமாதானம் செய்துகொள்ளுவதில் பிரியந்தான். ஆனால் அவர் என்ன செய்ய முடியும்? சர்ச்சில் கோஷ்டியார் குறுக்கே விழுகிறார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்க முயற்சி செய்யப்படுகிறது. முன்னால் நாலுபேர் இழுக்க பின்னால் நாலுபேர் தள்ள மாதம் காதவழி போயிற்றாம் மகா விகடன் குதிரை. இதைப்போல சாங்கி ஒரு பக்கமும், இர்வின் ஒரு பக்கமுமாய் "சர்க்கார் கொள்கை" என்ற குதிரையை வெளியே இழுத்துக் கொண்டுவர பகீரதப் பிரத்தனம் செய்கிறார்கள். முடிவு என்ன ஆகுமோ நமக்குத் தெரியாது.

முதல் மந்திரியும் மகாத்மாவும் செவ்வாய்க்கிழமை சந்தித்து பேசினார்கள். இந்திய பிரச்னைகளைப்பற்றி தீர்க்கமாய் முதல் மந்திரி யோசிக்கிறாராம். அவர் யோசனை எவ்வளவு தீர்க்கமானது என்பதை 11௳ அறிந்து விடலாம். மற்றொரு முக்கியமான விஷயம். புதிய தேர்தலில் கன்சர்வேடிவ்கள் இதுவரை வந்ததைவிட மிகவும் அதிகமாய் வந்திருக்கிறார்கள். 615 ஸ்தானங்கள் பார்லிமெண்டில் உண்டு. அவற்றில் 473 ஸ்தானங்களை கன்சர்வேடிவ்கள் கைப்பற்றிக் கொண்டனர். பாக்கியுள்ள 142 ஸ்தானங்களையே மற்ற நவதாளிய கட்சியார் பிடித்திருக்கிறார்கள். 478 ஸ்தானங்கள் பார்லிமெண்டில் இருக்கும்போது, கன்சர்வேடிவ் கட்சியார் வேறு யாரையும் லட்சியஞ் செய்ய வேண்டியதில்லை. முதலில் வாக்கு கொடுத்ததற்காக மெக்டனல்டுக்கு அவர்கள் முதல் மந்திரி பதவி கொடுப்பது என்னவோ நிச்சயம். ஆனால் அவர் பேச்சு அங்கே மந்திரி சபையில் எவ்வளவு தூரம் பலிக்கும் என்பது வேறு விஷயம். மெக்டனல்ட் நிலைமை இம்மட்டில் இருக்கிறது.

இனி மகாத்மா ஏற்பாடுகளைக் கவனித்தால், அவர் எதற்கும் தயார் என்பது தெளிவாகிறது. அவர் அடிக்கடி சொல்லுவதைப்போல, அவருக்கு லண்டன் நிலைமையைப்பற்றி திருப்தியுமில்லை, துக்கமுமில்லை. சுக துக்கம் இரண்டையும் சமமாக பாவித்து, கருமத்திலேயே கண்ணாயிருக்கும் கர்மவீரர். வென்றாலும், தோற்றாலும் அதற்காக தனது பாதையை விடப்போவதில்லை. லண்டனுக்கோ போயாயிற்று. எவ்வளவு தூரம் பொறுமை காட்டமுடியுமோ அவ்வளவு தூரம்காட்டுவது என்று அவர் முடிவு செய்திருக்கிறார். மகாநாட்டு வேலைகளைப் பார்த்து கோபம் ஏற்பட்டாலும், கோபப்பட்டு மகாநாட்டை விட்டுப் போவது தற்சமயம் சரியல்ல என்று சொல்லுகிறார். அதற்காகவே அவர் பொறுமை காட்டுகிறார். ஒருவேளை மகாநாடு முறிந்து போகுமானால் அப்புறம் என்ன செய்ய வேண்டியது? அதற்காக மகாத்மா காந்தி சர்தார் வல்லபாய்க்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார் அது மிகவும் முக்கியமான தந்தி யென்று தெரிகிறது. அதைப்பற்றி ஆலோசிக்க இன்று பம்பாயில் காரியக் கமிட்டி கூடுகிறது. காங்கிரஸ் கேட்கிறபடி மெக்டனல்ட் பூராவாக இணங்கி விடுவாரென்று நாம் நினைக்கவில்லை. அப்படி இணங்கி விட்டால் சந்தோஷந்தான். இல்லையானால்? மகாத்மா நேராக இந்தியாவிற்கு வரவேண்டுமா, அல்லது ஐரோப்பா சென்றுவிட்டு வரலாமா என்பதை காரியக்கமிட்டி தீர்மானிக்கவேண்டும். ஐக்கிய மாகாணத்தில் சட்டமறுப்பு ஏற்படும் பட்சத்தில் மகாத்மா உடனே வரவேண்டியதாயிருக்கலாம். ஐக்கிய மாகாண சட்டமறுப்பே அகில இந்திய சட்ட மறுப்பாய் மாறாது என்று யார் கூறமுடியும்?

Koviloor Digital Library



# கைத்தொழில் அழிவு:

ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார்.

உலகிலேயே செல்வத்திற் சிறந்த தேசம் என்று முற்காலத்தில் இந்தியா பெயர் பெற்றிருந்தது. அக்காளில் இந்தியாவுக்கு யாத்திரையாக வந்த பிரயாணி ஒவ்வொருவரும் இந்நாட்டின் அளவிலா ஐசுவரியத்தைக் குறித்து வியந்து எழுதியிருக்கிறார்கள். பாரத நாட்டின் பெருஞ் செல்வத்தைப்பற்றிக் கேள்வியுற்று அயல் நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு வந்து குடியேறிவர்கள் அளவில் அடங்காதவர்கள். அத்தனை பேரையும் பாரதத் தாய் அன்புடன் ஏற்றுத் தன் மக்களாகவே கொண்டு ஆதரித்து வந்தாள்.

தற்போது உலகத்திலேயே வறுமை மிகுந்த தேசம் எது வென்றால், நமது பாரதநாடே யாகும். பாரத மக்களைப் போன்ற ஏழைகள் உலகில் வேறெங்கும் இல்லை. இந்தியர்களின் சராசரி வருமானம் தலைக்கு ஒரு நாளைக்கு 1 அணு 7 பைசாதான்.

ஒரு நாட்டின் செல்வப் பெருக்கிற்கு முக்கிய சாதனங்களா யிருப்பவை இரண்டு. ஒன்று அந்நாட்டின் இயற்கை வளம். இரண்டாவது நாட்டு மக்களின் கைத்தொழில். இந்தியாவில் அன்னிய ஆட்சியினால் விளைந்த கேடுகளில் முக்கியமானது என்னவென்றால், நாட்டு மக்களின் கைத்தொழில் நாசமடைந்ததே யாகும்.

ஆதிகாலந்தொட்டு இந்தியா தேசம் நெசவுத் தொழிலில் பெயர் பெற்றிருந்தது. முதன் முதலில் பருத்தியை நூற்று துணியாக நெய்யும் தொழிலைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியரேயாவர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நெய்த அற்புதமான ஆடைகள் ரோமாபுரி முதலிய அயல் நாடுகளுக்குப் போய்க் கொண்டிருந்தன. உலகெங்கு முள்ள அரசர்களும் தனிகர்களும் ஏராளமான பொன் கொடுத்து டாக்கா மஸ்லின் முதலிய நயமான ஆடைகளை வாங்கிப் பெருமையுடன் அணிந்து வந்தார்கள். சுமார் நூறு வருஷங்களுக்கு முன்புகூட இந்தியாவில் வசித்துவந்த அனைவருக்கும் வேண்டிய துணிகள் அவ்வளவும் இந்தியாவிலேயே நூற்ற நூலால் இந்தியாவிலேயே கைத்தறிகளில் நெய்யப்பட்டன. இது தவிர இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குத் துணி போய்க்கொண்டிருந்தது. ஆனால் தற்போது வருஷந்தோறும் 60 கோடி ரூபாய் துணிக்காக மட்டும் நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பிவருகிறோம். கோடிக் கணக்கான ஏழைப் பெண்களுக்கு ஒழிந்தநேர வேலையாயிருந்த கைராட்டினத் தொழில் அடியோடு நசித்துவிட்டது. கைத்தறி நெசவுத் தொழிலும் வெகுவாக குறைந்து போயிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் வெளிநாடுகளிலிருந்து வரும் சீமைத்துணியை ஜனங்கள் வாங்கிக் கட்டுவதே.

அழிந்துபோன கைத்தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க என்ன செய்யவேண்டும்? அரசாங்கம் ஜனங்கள் கையில் இருந்தால், அயல் நாட்டுத்துணி இறக்குமதிக்கு அதிக வரிபோட்டுத் தடுத்து நமது தொழிலை ஆதரிக்கலாம். மகாத்மா காந்தி சத்தியாக்கிரஹப்போர் தொடங்குவதற்கு முன் சர்க்காருக்குப் பதினொரு சமாதான நிபந்தனைகள் சொன்னார். "சுதேசித் துணித் தொழிலைக் காப்பாற்ற அன்னியத் துணிக்கு வரி போடுங்கள்" என்பது அவற்றில் ஒரு நிபந்தனை. இதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் சம்மதிக்கவில்லை, சம்மதிக்கவும் மாட்டார்கள்.

சென்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மந்திரியாயிருந்த சர். வில்லியம் ஜாயின்ஸன் ஹிக்ஸ் என்பவர் என்ன சொன்னார் தெரியுமா? "இந்தியாவை நாம் கைப்பற்றி வைத்திருப்பது இந்தியர்களின் நன்மைக்காகவல்ல. அப்படிச் சொல்வது வெறும் மோசம். லங்காஷயர் துணி வியாபாரத்துக்காகத்தான் இந்தியாவை வைத்திருக்கிறோம்" என்று வெளிப்படையாகச் சொன்னார்.

ஆகையினால் நமது நாட்டுக் கைத்தொழிலை வளர்த்து வருஷம் 60 கோடி ரூபாய் மீதி செய்ய வேண்டுமானால், இந்தியா சுயராஜ்யம் பெற வேண்டும். ஆனால் சுயராஜ்யம் பெறும் வரையில் சும்மா யிருக்கலாமா? கூடாது. இப்போதிருந்தே அன்னியத் துணியை அடியோடு விலக்கிடவேண்டும். கைத்தறியால் நெய்யப்பட்ட துணியைத் தவிர வேறு எதுவும் உடுத்துவ தில்லை, வாங்குவதில்லை யென்று அனைவரும் சபதம் செய்யவேண்டும். எல்லாரும் கைராட்டையிலாவது, கைக்கதிரிலாவது நூல் நூற்க வேண்டும். கையால் நூற்றுக் கைத்தறியால் நெய்த கதராடையை பக்தியுடன் ஆதரிக்க வேண்டும். இதுவே மகாத்மா காந்தியின் கட்டளை; காங்கிரஸின் உத்திரவு. தமிழ் நாட்டிலுள்ள திறமை வாய்ந்த நெசவுக்காரர்களை பட்டினி போடும் சீமைத் துணியை கையாலும் தொடுவதில்லை யென்று அனைவரும் இந்த தீபாவளி யன்று விரதங் கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library



# கைத்தறிக்கு ராட்டினமே உயிர்: ஸ்ரீ எம். பி. காந்தி

மில்கள் இருமுறை வேலைத் திட்டத்தை அனுஷ்டித்தால் அவைகள் இந்தியாவுக்குத் தேவையான கோடி. வேஷ்டிகள் கோடி. ஷர்ட் துணிகள், வெளுப்பு லாங்லாத் மல், மெல்லிழைப் புடைவைகள், வர்ண புடவைகள் சாயத் துணிகள் இவைகளை உற்பத்தி செய்வ யாதொரு கஷ்டமுமிராது. ஆனால் இந்த மில்கள் இப்பொழுது இறக்குமதியாகும் துணிகளைப்போல் அகலமான துணிகளை உற்பத்தி செய்ய முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்த விதேசி துணி பெரும்பாலும் 40 அங்குல அகலத்திற்கு அதிகமாக இருக்கிறது. பம்பாயிலும் வட இந்தியா மில்களுள்ள இடங்களிலும் அகலத் தறிகள் அதிகமாக இல்லை. நம்மிடம் போதுமான அகலத் தறிகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி பம்பாய் மில் முதலாளிகள் சங்கத்தார் ஆராய்ச்சி செய்து கண்டு பிடிக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக இறக்குமதியாகும் பலவேறு துணிகளின் அகலத்தைக் குறித்து புள்ளிவிவரங்கள் இல்லை. இது சம்பந்தமாக ஜனங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்திய சர்க்கார் இறக்குமதியாகும் துணிகளின் அகலத்தைக் குறித்து புள்ளி விபரக்கணக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அகலமான விதேசி துணிகளுக்குப் பதிலாக கைத்தறிகள் ஒருவேளை அகலமான துணிகளை செய்ய முடியும்.

மில்லில் உற்பத்தியாகும் அதிகமான நூல் உயர்ந்த நம்பர் நூலாக இருக்குமாதலால், தற்காலம் முரடான கைராட்டின நூலை உபயோகிக்க தகுதியற்றதாகவுள்ள கைத்தறிகள் இந்நூலை உபயோகித்துக் கொள்ளலாம். மில்களில் நூற்கப்படும் நூல் மில்களிலேயே நெய்யப்படும் துணிகளுக்கு உபயோகப்படுத்தப் படுமாதலால், கைத்தறிகள் எப்பொழுதும் மில் நூலை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால் கைத்தறிகளுக்குத் தேவையான நூலை சப்ளை செய்ய கைராட்டினங்கள் அதிகமான நூல் உற்பத்தி செய்ய வேண்டும். கைத்தறிகள் எப்பொழுதும் கைராட்டின நூலையே எதிர்பார்த்திருப்பதுவே நலம்.

வருஷத்திற்கு 25 ராத்தல் நூல் நூற்கும் கைராட்டினங்கள் 2 கோடி இருக்குமாகில் கைத்தறிகளுக்கு தேவையான நூல் உற்பத்தியாகிவிடும். 1926 வது வருஷத்தில் 50 லட்சம் கைராட்டினங்கள் வேலை செய்து கொண்டிருந்ததாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ராட்டினமும் சராசரி வருஷத்தில் 48 ராத்தல் நூல் நூற்றுவந்தது. இனிமேல் ஒரு ராட்டினம் குறைந்த பட்சம் வருஷத்திற்கு 25 ராத்தல் நூற்பதற்கான கணக்கெடுத்துக் கொள்வோம். கைராட்டினத்தில் நூல் நூற்கும் திறமையும் அபிவிருத்தியாக வேண்டுவது அவசியம். மிருந்த திறமையான கைராட்டின மொன்றை புதிதாகக் கண்டுபிடித்து அதன் மாதிரியைக் கொண்டு வந்து காண்பிப்போருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசளிப்பதாக அகில இந்திய நூல் நூற்புக் கழகத்தார் தெரிவித்து முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். கைராட்டினக் கைத்தொழிலில் இது ஓர் மிக அருமையான முயற்சியாகும். அப்படிப்பட்ட கைராட்டினங்கள் 2-கோடி இருக்குமாகில் (சுருக்கமான செலவில் கைராட்டினங்களை ஏற்படுத்தி விடலாம். ஒரு ராட்டினத்தின் விலை 3-ரூபா தான்) 2-கோடி ஜனங்கள் தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் தினசரி 2-மணி நேரம் நூல் நூற்று ஊதியம் பெறலாம். அது தவிர 10-லட்சம் நெசவுத் தொழிலாளர்களுக்கும் வேலை ஏற்படும்.

தற்காலம் கைத்தறிகள் துணி நெய்வதற்காக வேண்டிய நூலுக்கு மில்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. மில்கள கைத்தறிகளைப் போன்று துணி நெய்வதால் மில்கள் கைத்தறிகளுக்குப் போட்டியாக வுள்ளன வென்பதை இங்கு மீண்டும் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. கைத்தறிகள் தங்களுக்கு போட்டியாகவுள்ளவை என்பதை மில்கள் நன்கு அறியும். குறிப்பிட்ட அளவுக்கு மிஞ்சிய நூலை மில்கள் கைத்தறிகளுக்கு சப்ளை செய்ய முடியாது. எந்த முறையும் போட்டியாக நின்று வேலை செய்யுமேல் அம்முறைக்கு கஷ்டமேற்படுவது சகஜமே. கைத்தறி நெசவுத் துணிகளுக்கு நாட்டில் ப்ரியமேற்பட்டு விடில், மில்கள் கைத்தறிகள் தங்களுக்குப் போட்டியாக நிற்கின்றன வென்று கருதாதிருக்க முடியாது. அந்த எண்ணம் மில்களுக்கு ஏற்பட்ட அந்த நிமிஷமே மில்கள் கைத்தறிகளுக்கு சப்ளை செய்யும் நூலைக் குறைக்க முயலும். அல்லது கைத்தறி நெசவுத்

Koviloor Digital Library



தொழிலாளர்களுக்கு வேலையில்லாது செய்யும் பொருட்டு நூல் விலையை அதிகரித்து விடும். அல்லது நெசவுத் தொழிலாளர்களுக்கு யாதொரு லாபமும் கிடைக்காதவாறு செய்யும்.

ஆதலால் கைத்தறிகள் நூலைக் குறித்து எவ்வி தத்தும் மில்களின் தயவில் இருந்துகொண்டு வரலாகாது. அவைகள் கைராட்டின நூலையே சார்ந்திருக்கவேண்டும். கைராட்டினம் தங்கு தடையின்றி வேண்டிய நூலை கைத்தறிகளுக்கு சப்ளை செய்துகொண்டிருக்க முடியும். கைத்த றிகளின் நிலைமையும் கைராட்டின நிலைமையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் இரண்டும் ஒரே ரீதியில் ஒன்றுக்கொன்று ஆதரவாக வேலை செய்துகொண்டிருக்கவேண்டும்.

கைத்தறிகள் நிலைத்திருக்க வேண்டுமென்றால் கைராட்டினங்கள் அவசியமாகும். கைத்தறியும் கைராட்டினமும் ஒன்றையொன்று சார்ந்திருந் தால்தான் இரண்டும் நிலைக்க முடியும். வீழ்ச்சி யடைந்தால் இரண்டும் ஒன்றுபோல் வீழ்ச்சி யடையும். விருத்தியடைந்தால் இரண்டும் ஒன்றுபோலவே விருத்தியடைய முடியும்.

## 4 மைல் நீளம் நூல்.

நூலின் நேர்த்தியையும், நெசவுத் தொழிலா ளர் உபயோகப்படுத்திய நூலையும் குறித்து சரியாக 100 வருஷங்களுக்கு முன்னதாக அதா வது 1830ம் வருஷத்தில் டாக்டர் ஊர் பின்வரு மாறு எழுதியிருக்கிறார்:—

"டக்காவில் நூற்கப்பட்டுவரும் நூலும் நெய்யப்பட்டுவரும் மஸ்லினும் ஐரோப்பியர் நூற்கும் நூலும் ஐரோப்பியர் நெய்யும் துணி யைவிட மிக உயர்ந்ததாக யிருக்கிறது. ஐரோப் பிய நூலும் துணியும் டக்கா நூலுக்கும் துணி க்கும் முன் நிற்க முடியாது. இக் கைத்தொழி லில் தேர்ச்சியுடைய ஒருவர் இங்கிலாந்தில் நூற்கப்படும் மிக உயர்ந்த நூலைவிட நேர்த்தி யாக விருக்கும் நூலை எவ்விதம் கதிர்களில் நூற் றூர்கள் என்றும் தறியில் நெய்தார்கள் என்றும் அறிய முடியவில்லை. நூல் நூற்பதில் கைதேர்ந்த ஒருவன் ஒரு ரூபாய் இடையுள்ள பஞ்சைக்கொண்டு 4 மைல் நீளமுள்ள நூல் நூற்க முடிகிறது."

# தீபாவளி வேண்டுகோள்.

## பெண்மக்கள் கூட்டம்

அடுத்த தீபாவளிப் பண்டிகை தினம் நாடு முழுவதும் எல்லா நகரங்களிலும், கிராமங்களி லும் பெண்மக்கள் தனிக் கூட்டம் கூடி அடியில் கண்ட சபதம் செய்யுமாறு எல்லா காங்கிரஸ் சபைகளும் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### பெண்கள் சபதம்

1. சத்தியமும், தருமமும் நல்லொழுக்கமு மே நம்மைக் காக்கும்.

2. நாட்டின் நன்மையில் பெண்களாகிய எங் களுக்கும் சம உரிமை உண்டு.

3. கட் குடியால் குடும்பங்கள் நாசமாய்ப் போ கின்றன. இதைத் தடுப்பது எங்கள் உரிமை யாகும்.

4 ஆகையால் நாம் ஆண்டவன் துணையைக் கொண்டு சபதம் செய்கிறோம்:—

"எங்கள் ஊரில் கள், சாராயம், அபின், கஞ்சா முதலிய எல்லா மது வகைகளையும் ஒழித்து நாம் சுகமாக வாழுமாறு இடைவிடாமல் பாடு படு வோம்.

சர்க்கார் கடைகளை மூடி விடுவதற்காக தேசத் தில் நடைபெறும் இயக்கத்தில் நாமும் உழைப் போம்.

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் மக்க ளுக்கு புத்தி சொல்லி கள் சாராயக் கடைகளு க்கு அவர்கள் போகாமல் தடுப்போம்.

திருட்டுக் கள், சாராயம் இவைகளுக்கு ஊரில் இடம் தரமாட்டோம்.

மதுப்பேயினின்று நாட்டை மீட்ட இன்று முதல் இரவும் பகலும் எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்திப்போம்".

தீபாவளிக்குப் பிறகும் ஒவ்வொரு ஊரிலும் பெண்மக்கள் கூட்டம் கூடி இந்த சபதத் தை எடுத்துக் கொள்ளுமாறு செய்யக் கோரு கிறேன். இந்த இயக்கத்தைத் தீவிரமாக பரவச் செய்வது எல்லா காங்கிரஸ் சபைகளின் முக்கிய கடமையாகும்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி
தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்

Koviloor Digital Library



# கத்தரே கதிமோட்சம்

(கோவை ஸ்ரீ. அய்யா முத்து)

கதரே கதிமோட்சம் தரும். கைராட்டினமே விடுதலை பெறும். ஏழு லட்சம் கிராமங்களுள்ள இந்தியாவில் வசிக்கும் முடியானவர்களுக்கு வருஷம் பனிரெண்டு மாதமும் வேலையில்லை. காடு தோட்டங்களில் விதைப்பு முடிந்து விட்ட காலங்களிலும், மழை, மாரியில்லாமல் விவசாயம் கெட்டுப் போகும் காலங்களிலும், கிராம வாசிகளுக்கு யாதொரு வேலையுமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் அக்காலங்களில் ராட்டினத்தில் நூல் நூற்பார்களாகில், அவர்களுக்கு அனேகப் பஞ்சமாவது இல்லா தொழிந்துபோகும். தங்கள் தேவைக்குப் போதுமான துணியை அவர்களே உற்பத்தி செய்து கொள்வதல்லாமல், பட்டணங்களில் வசிப்பவர்களுக்கும், ராணுவங்களுக்கும், இதர உத்தியோகஸ்தர்களுக்கும் தேவையான அளவுக்கு அவர்கள் நூற்று, நெய்வித்துக் கொடுக்க முடியும். இதனால் நாம் வருஷமொன்றுக்கு துணிக்காக அயல் நாடுகளுக்கனுப்பும் 70 கோடி ரூபாயும் நமது நாட்டிலேயே தங்கும். அப்பணத்தால் நாம் நமது இதர கைத்தொழில்களையும், கல்வியையும் அபிவிருத்தி செய்ய முடியும். இவ்விதம் சில வருஷங்கள் நாம் சிரக உழைத்தபோதிலும் நமது செல்வநிலையும், கல்வி நிலையும் எவ்வளவோ உயர்ந்து விடும்.

கத்தருக்கு அதிக விலையென்று சொல்பவர்கள் உண்மை பேசுவதில்லை. கதருக்கு என்ன விலை கொடுத்தாலும் அது எங்கும் போவதில்லை. அப்பணத்தை நாம் நமது ஏழைகளுக்கே கொடுக்கிறோம். பத்தனுவுக்கு ஒரு கஜம் கதர் வாங்கும்போது தான் அதில் இரண்டணு அதிகம் என்று தெரிகிறது. ஆனால் காலையிலும், மாலையிலும் காப்பிக்கடைகளில் கொடுக்கும் பணத்தையும், கோவிலுக்கும், சினிமாவுக்கும் கொடுக்கும் பணத்தையும், கோவிலுக்கும் கும்பாபிஷேகத்துக்கும் கொடுக்கும் பணத்தையும், தாசிக்கும் வேசிக்கும் கொடுக்கும் பணத்தையும், மற்றும் ஜரிகை, பட்டு, டுவீடு, சர்ஜ் முதலிய துணிகட்கும், டை, காலர், மப்ளர், சாக்ஸ், பூட்ஸ் முதலான டாம்பீகங்களுக்கும் கொடுக்கும் பணத்தையும் இக்கனவான்கள் கணக்குப் பார்ப்பதில்லை. கத்தர் கட்டுவதால் கடையிலும் உடையிலும் எவ்வளவோ சிக்கனம் ஏற்படுவதை இவர்கள் அறிவதில்லை.

# சுதேசியம்.

(ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தரர்.)

சுதேசியத்தை யோம்பி வராவிடில் நாடு நலனுறாது. ஒவ்வொருவரும் நாட்டுப் பொருளைப் பயன் படுத்தலே மக்கள் உறுதி கொள்ளல் வேண்டும். நாட்டுப் பொருள்களைப் பயன் படுத்தப் பயன்படுத்த வேறு நாட்டுப் பொருள்கள் தாமே அகன்று போய்விடும்.

காந்தியடிகள், நாட்டுடையில் கருத்துச் செலுத்தி வருவது உங்கட்குத் தெரியும். நாட்டுக் கதருடை, நாட்டில் ஒருவித நாட்டுணர்ச்சியை எழுப்பும். எளிதில் கிடைக்கக் கூடிய நாட்டுப் பொருள்களை விடுத்து, அவைகட்குப் பதிலாகப் பிற நாட்டுப் பொருள்களைப் பயன் படுத்துவது தாய்க் கொலையாகும். வேறு நாட்டுப் பொருள்களில் கருத்தைப் பதிய வைத்துக் கொண்டு, 'நாட்டுரிமை நாட்டுரிமை' என்று வாயினுல் பேசினுல், யாண்டிருந்து உரிமை வரும்? நாட்டுரிமை நாட்டுப் பொருள் காப்பிலும், வேறு நாட்டுப் பொருளை விலக்கலிலுமிருத்தலை உணர்ந்து நடப்பதே உரிமை வேட்கைக்கு அறிகுறியாகும். இவ்வேட்கை இளைஞர் உலகில் முருகியெழுவதாக. நாட்டுடை, நாட்டுக்கலை, நாட்டுத் தொழில் முதலியவற்றை யோம்ப இளைஞர்கள் முனைந்து தொண்டாற்றுவார்களாக.

இவ்வழிவு ஆக்கத் தொண்டால் இந்தியயன்னை விடுதலை பெறுவாள் என்பது ஒருதலை.

சுதந்திர பள்ளு.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப் போரை
நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
ஓய மாட்டோம்—பாரதி.

Koviloor Digital Library



# மின் வெட்டு.

"ஐயோ" வென்று போகிறது!

"அந்த வீட்டுக்காரன் ஐயோ வென்று போகிறான்" என்று குடுகுடுப்பைக்காரன் சொல்லுவான். பிரிட்டிஷ் பவுன் மதிப்புக்கு அந்த கதி வந்து விட்டது. தேசிய மந்திரிசபை ஏற்பட்டதும் பவுன் மதிப்பு கூடுவதாக செய்தி வந்தது. தேர்தலில் தேசீயக்கட்சியார் ஜெயமடைந்ததும், இன்னம் அதிகமாக பவுன் மதிப்பு நிலைபெறுவதாகச் சொன்னார்கள். இப்பொழுதோ அமெரிக்காவில் பவுன் மதிப்பு வெகு வேகமாய் கீழ் நோக்கிச் செல்லுகிறதாம். ஐயோ வென்று போகிறதாம். காரணமென்ன?

குருவாயூர் சத்தியாக்கிரகம்.

மலையாளத்தில் குருவாயூரில் தீண்டாதார் ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பமாய் விட்டது. கோவிலைச்சுற்றி போலீஸ்காரர் பாரா கொடுக்கிறார்கள். தீண்டாதாரா என்று சோதித்துப் பார்த்த பின்பே மற்ற ஜாதியாரை கோவிலுக்குள் விடுகிறார்கள். நாடெங்கு மிருந்து வாழ்த்துகளும், ஆதரவுகளும் வந்து குவிகின்றன. ஆலய உரிமை இல்லையே யென்று குறை கூறும் சகஜானந்தர் கோஷ்டியார் சீக்கிரம் அங்கே செல்லுவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

132 லட்சம் மண்.

கலால் வரும்படியில் இவ்வருஷம் 132 லட்சம் ரூபாய் குறைந்து போகுமென்று சென்னை சர்க்கார் சட்டசபையில் சொன்னார்கள். இதற்கு காரணம் மறியல் என்பதை அந்த வீரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம். பொருளாதார நெருக்கடியே இதற்கு காரணமாம். எதுவாயிருந்தாலென்ன? ஜனங்கள் பணம் குடிக்கு போகவில்லை யென்பது பொய்யல்லவே?

வைசிராய் மேக்டனல்ட்.

மெக்டனல்ட் வைசிராயாக வரலாமென்று புறப்பட்ட வதந்திகளுக்கு கணக்கில்லை. மறுபடியும் அந்த வதந்தி கிளம்புகிறது. அடுத்த வருஷம் அவர் முதல் மந்திரி பதவியை விட்டு விலகி லார்ட் பட்டம் பெற்று, இந்தியாவிற்கு வைசிராயாக வரலாமென்று புதிய வதந்தி சொல்லுகிறது. அப்படி வரும்படி நேரிட்டால் அதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனெனில் கன்சர்வேடிவ்கள் மெஜாரிட்டிகளாய் இருந்து கொண்டு பினுமி கட்சியைச் சேர்ந்த மெக்டனல்டை முதல் மந்திரியாக நீடித்த காலம் இருக்கும்படி விடமாட்டார்கள். இரண்டாவது மெக்டனல்டை இனி தொழிற் கட்சியில் சேர்க்க மாட்டார்கள். அவருக்கும் வயதாய் விட்டபடியால் இனி கொஞ்சம் சுகவாழ்வில் பிற்காலத்தை கழிக்க விரும்புவார். தேர்தல் சமயத்தில் "நீர் வைசிராயாகப் போகிறீரா?" என்று ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு "எனக்கு ஒரு தடவை கொடுத்தார்கள். நான் மறுத்துவிட்டேன்" என்று அவர் பதில் சொன்னாரே யொழிய, போகப் போவதில்லை யென்று சொல்லவில்லை. இவற்றை யெல்லாம் பார்த்தால், மெக்டனல்ட் லார்ட் மெக்டனல்டாகி வைசிராயாக ஏன் வரமாட்டார்?

மேக்டனல்ட் திகைப்பு.

புதிய மந்திரிசபை அமைப்பதில் மெக்டனல்டுக்கு பல தொல்லைகள் குறுக்கிடுகின்றனவாம். இவர் இஷ்டப்படி மந்திரிகளை பொறுக்க முடியவில்லை. இவருக்கு ஒரு கட்சி இருந்து, அக்கட்சி மெஜாரிட்டியா யிருந்தாலல்லவா இவர் இஷ்டப்படி மந்திரி சபை அமைக்க முடியும்? கன்சர்வேடிவ் கட்சி மெஜாரிட்டியா யிருப்பதால் அவர்கள் சொல்லுகிறபடி கேட்கவேண்டியிருக்கிறது. சாது பால்டுவினால் அக்கட்சியை அடக்கியாள முடியாது என்பது உலகமறிந்த ரகசியம். இந்த தொல்லைகளில் மெக்டனல்ட் அகப்பட்டு, அலைகடல் துரும்புபோல தத்தளிக்கிறாராம்.

வங்காளத்தில் அடக்கு முறை .

வில்லியர்ஸ் ஆஸ்பத்திரியிலிருந்து குணமாகி வீட்டுக்கு வந்துவிட்டார். வங்காள மெங்கும் வீடுகள் சோதனைகளும், கைதியாவதும் மும்முரமா யிருக்கின்றன. புதிய அவசரச் சட்டப்படி பலர் சிறைசெய்யப் படுகிறார்கள்.

நிஜாம்—துருக்கி விவாகம்

நிஜாம் தேச பட்டத்து இளவரசருக்கும், துருக்கி மாஜி சுல்தான் குமாரிக்கும் இம்மாதத்தில் விவாகம் நடக்க நிச்சயமா யிருக்கிறது. பிரான்ஸ் தேசத்திலுள்ள நீஸ் என்ற நகரில் விவாகம் நடைபெறும். விவாகமான பின்பு தம்பதிகள் நிஜாம் திரும்புவார்கள். சுதேச மன்னர்கள் வெளிநாட்டு சம்பந்தம் கொண்டது இதுவே முதல் தடவையாகும். இந்தூர் மகா ராஜா பட்டம் துறந்த பின்பே வெள்ளைப் பெண்ணை மணந்தார். புதுக்கோட்டை மன்னர் வெள்ளைப் பெண்ணை மணந்ததற்காக ராஜ்யத்திற்கே வரவில்லை. ஆகவே இந்த இரண்டு விவாகங்களை கணக்கில் சேர்க்க முடியாது.

Koviloor Digital Library

கூக் மரணம்

1926-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் பொது வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதாவது சகல தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்தனர். அந்த வேலை நிறுத்த சமயத்தில் மெக்டனல்ட் தொழிற்கட்சி அவ்வளவு பலம் பெறவில்லை. பால்ட்வின் சர்க்கார் நடந்து வந்தது. லிபரல் கட்சி தயவு அச்சமயம் அவசியமாயிருந்தது. சர். ஜான் சைமன் அச்சமயம் பிரபல வக்கீலாயிருந்தார். லிபரல் கட்சியில் பிரபல தலைவர். பொது வேலை நிறுத்தம் சட்ட சம்மதமானதா என்று அவரிடம் அபிப்பிராயம் கேட்டார்கள். அவர் சட்ட விரோதம் என்று பகிரங்கமாய் கூறினார். அதனால் பொதுஜன ஆதரவு குறைந்து பொது வேலை நிறுத்தம் முறிந்தது. இந்த பாவ மூட்டையை சைமன் சம்பாதித்துக்கொண்டார். பிரிட்டனில் ஏற்பட்ட பொது வேலை நிறுத்தம் அற்ப ஆயுளில் முடிந்து போயிற்று. ஆனால் அதன் சிறப்பு சரித்திரத்தில் என்றென்றும் இருக்கும். ஏனெனில் அம்மாதிரி பொது வேலை நிறுத்தத்தை உலகமே இதுவரை பார்த்தது கிடையாது. அந்த சிறப்பு யாரைச் சேர்ந்தது? எ. ஜே. கூக் என்ற சுரங்கத் தொழிலாளர் தலைவரைச் சேரும். சுரங்கத் தொழிலாளர் சம்பளத்தை குறைக்கவோ, வேலைநேரத்தை கூட்டவோ வேண்டுமென்று முதலாளிகள் சொல்லினர். "ஒரு சல்லி குறைக்கவு முடியாது. ஒரு விநாடி அதிகரிக்கவு முடியாது" என்று தீரமாய் கூக் பதிலளித்தார். இதனால் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களுக்கு அநுதாபம் காட்ட மற்றவர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதன் முடிவு எப்படியாயினும், மெக்டனல்ட் போன்றவர்கள் உறுதியாய் இருந்திருந்தால், முடிவு வேறுவிதமாயிருந்திருக்கும். அந்த பிரசித்திபெற்ற எ. ஜே. கூக் இறந்து போனார் என்று கேள்விப்பட்டு வருந்துகிறோம். அவர மண்ணுடம்பு மாய்ந்தாலும், அவர் புகழுடம்பு மாளாத கீர்த்தி வாய்ந்ததாகும்.

## "காந்தி"

### ஆங்கில, தெலுங்கு பதிப்புகள்

தமிழ் "காந்தி"யைப்போல தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் "காந்தி" என்ற பெயரோடு காலணா வாரம் இருமுறை பதிப்புகள் சீக்கிரம் வெளிவரும். சர்க்கார் அநுமதி கிடைத்து விட்டது. மற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## உங்கள் மனம் கல்லோ?

(எம்டன்)

திருப்பாதிரிப் புலியூர் ஜவுளிக்கடை மறியல் தொண்டர்கள் படுங் கஷ்டத்தையும், அவர்கள் மறியல் செய்யும் பொறுப்பையும் கண்டால் கல்லும் கரையும், இரும்பும் இளகுமே. ஜவுளிக்கடைக்காரர்களின், அடி, உதை, வசை ஒரு பக்கம்; அந்நியத் துணி மோக அநியாயக்காரர்களின் வம்பு மறுபக்கம். படித்த பிராமணாள் பரிகாசவாதம் வேறு பக்கம். மோட்டாரில் வந்து மோதும் முட்டாள்களின் ஆபத்து. போலீஸ் பூச்சாண்டி, மறியல் எதிர்ப்பாளர் தொல்லை. உடல் நலி. மேலே கொட்டும் மழை. கீழே ஜன்னி பிறக்கிற நனைந்த ஆடைகள். தொண்டர்கள் கூப்பிய கரங்கள். பணிவுடன் பகரும் மொழிகள். பரதேச ஆடையாளரைப் பணியும் சென்னி. அந்தோ! பிணியால் நலிந்து, மழையால் நனைந்து பசியால் உலரும் பச்சைப் பாலகனை, கரத்தில் ஏந்தி பரிவுடன் உலவி மறியல் செய்யும் மாதரசி அஞ்சா நெஞ்சினள் அஞ்சலை அம்மையைக் கண்டுங் கசியாதார் எது! ஆறு எட்டு ஆண்டுகள் நிறையாத இளஞ்சிறார்கள் கூறும் இனிய மொழிகள் இரும்பிலும் ஊடுருவுமே! அந்தோ பாவம். பரிதாபம். விழுப்புரம் ஜவுளி வியாபாரிகளுக்கு உதித்த நல்லெண்ணமும் கருணையும் திருப்பா புலியூர் ஜவுளி வியாபாரிகளே உங்களுக்குண்டாகக் கூடாதா. உங்கள் மனம்மட்டும் கருங்கல்லா? காங்கிரஸ் ஆணைப்படி சீமைத்துணிக்கு சீட்டுக் கொடுத்து மறியல் தொண்டர்களின் கஷ்டத்தைப் போக்கப் படாதா? ஏ விதேசித் துணிப்பதர்களே! உங்களுக்கு அடுத்தவாரம் சூடு.

லோகோபகாரி

வாரப் பத்திரிகைக்கு 38-ம் ஆண்டு பிறக்கப் போகிறது. வருட சந்தா ரூபா 4 0 0

லோகோபகாரி, சிந்தாதிரிப் பேட்டை சென்னை,

சகல வியாதிகளையும் தீர்க்கக் கூடிய கைதேர்ந்த பெரிய பிரபல வைத்திய ஆசிரியரின் மருந்துகள் உங்களுக்கு வேண்டுமானால் விபரமான பெரிய கேட்லாக்கிற்கு உடனே எழுதவும்.

டாக்டர் கோட்டா ஜயராம் நாயுடு

ஆந்திரா ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்

159, பிராட்வே, மதராஸ்.

Edited, Printed & Published by T. S. C.. ckalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 2 || சென்னை, 1931 நவம்பர் 9ஏ,
பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 24வ திங்கட்கிழமை || இதழ் 50

## சாங்கி குட்டு.




ஐக்கிய ஆட்சி கமிட்டி கூட்டத்தை லார்ட் சாங்கி திடீரென்று முடித்து எல்லாரையும் வெளியே போகச் சொல்லுகிறார். வகுப்புவாதிகள் தகராறு முடிந்தாலொழிய கூட்டம் நடத்தக் கூடாதென்று வகுப்புவாதிகள் சொன்னார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேறியது. அங்கத்தினர் தொங்கும் முகத்தோடு வெளியே போவதைக்கண்டு அவர்கள் கேலி செய்கின்றனர்.

Koviloor Digital Library



## புதிய மந்திரி சபை

மெக்டொனல்ட் கஷ்டம் ஒருவாறு நீங்கி விட்டது. புதிய மந்திரி சபை ஒரு நினுசாய் ஏற்பட்டிருக்கிறது. 20 பேர் மந்திரிகள். இவர்களில் 11 பேர் கன்சர்வேடிவ்கள். லிபரல்கள் 5. மெக்டொனல்ட் கட்சியைச் சேர்ந்த பேர் வழிகள் நான்கே நான்கு பேர்தான். மெக்டொனல்ட் கொள்கையான வரியில்லா வர்த்தக கொள்கைக்கு போட்டியாக உள்ளவர்கள் மந்திரிசபையில் ஸ்தானம் பெற்று விட்டார்கள். மெக்டொனல்ட் இந்தியா சம்பந்தமாக செய்தவைகளை இடைவிடாமல் கண்டித்த சர். ஜான் சைமனுக்கும் இடம் கிடைத்துவிட்டது. மெக்டொனல்டுக்கு மந்திரி சபையில் இருக்கப்போகும் செல்வாக்கிற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

மந்திரிகள்

ஸ்ரீ. மெக்டொனல்ட் (முதல் மந்திரி)
பால்டுவின் (லார்ட் பிரஸிடென்ட்)
" நெவில் சேம்பர்லேன் (பொக்கிஷம்)
" வால்டர் ரன்சிமன் (வர்த்தகம்)
சர். சைமன் (அயல் நாடு)
ஸ்ரீ. தாமஸ் (குடியேற்ற நாடு)
சர். கன்லிப் லிஸ்டர் (சார்பு நாடு)
சர். சாமுவெல் ஹோர் (இந்தியா)
சர். ஜான் மான்சல் (கடற்படை)
லார்ட் ஹெயில் ஷாம் (யுத்தம்)
லார்ட் லண்டன் டெரி (ஆகாயப்படை)
சர். ஹெர்பர்ட் சாமுவேல் (உள் நாடு)
ஸ்ரீ. ஸ்னோடன் (லார்ட் பிரிவி சீல்)
சர். மாக்லின் (கல்வி)
சர். கில்மர் (விவசாயம்)
சர். பெட்டர்டன் (தொழிலாளர்)
மேஜர் ஆர்ம்ஸ்பி கோர் (தொழில்)
லார்ட் சாங்கி (லார்ட்ஸ் சபை தலைவர்)
சர். சின்கிளேர் (ஸ்காட் லாந்து)
சர். ஹில்டன்யங் (சுகாதாரம்)

யார் முதல் மந்திரியாக வந்தாலும், அவர்களுக்கு சர்க்கார் ஜாகை டௌனிங் தெருவிலுள்ள நெ. 10. கட்டிடமாகும்! மெக்டொனல்ட் அதில் தான் தங்கி யிருக்கிறார். பால்டுவின் அதற்கு அடுத்த வீடாகிய நெ. 11 கட்டடத்தில் இருக்கப் போகிறாராம். இருவருக்கும் நேசம் முதிர்ந்து விட்டதாம். தவிர அடிக்கடி அவசரமான விஷயங்களைப்பற்றி பேசுவதற்கு பக்கத்தில் இருக்க வேண்டுமாம். பால்டுவினுக்கும், மெக்டொனல்டுவினுக்கும், ஏற்பட்டுள்ள புதிய காதல் நீடித்து நிற்குமென்று நம்புவோம்.

## "தீண்டாமையை ஒழிக்க மனைவியையும் துறப்பேன்."

மகாத்மா புரோகித வகுப்பைச் சேர்ந்தவராயிருக்கும் போது அவர் எப்படி தீண்டாதாருக்காக பேச முடியுமென்று ஒரு பிரகஸ்பதி "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் எழுதியிருந்தார். இதை ஒருவர் மகாத்மாவிடம் காட்டிய போது அவர் சொல்லியதாவது:—

"நண்பர் கூறுகிறபடி நான் பிராமணன் என்பது இது வரை எனக்குத் தெரியாது. 40 வருஷங்களுக்கு முன்னால் நான் படிப்பதற்காக இங்கிலாந்து வந்தபோது என்னுடைய சமூகம் என்னை பகிஷ்காரம் செய்து விட்டது என்பதை உங்களுக்கு தெரிவிக்கிறேன். இப்பொழுது நான் செய்யும் வேலைகளிலிருந்து நான் ஒரு விவசாயி, நெய்வோன், தீண்டாதவன் என்றே சொல்லவேண்டும். நான் எனது மனைவியை விவாகஞ் செய்யும் முன்பே "தீண்டாமை ஒழித்தல்" என்னும் கொள்கையை மணந்து கொண்டேன். எங்கள் மண வாழ்க்கையில், நான் தீண்டாமை ஒழிக்க பாடுபடுவதா அல்லது அதை விட்டு என் மனைவியுடன் இருப்பதா என்ற முக்கியமான நெருக்கடி இரு தடவை ஏற்பட்டது. நெருக்கடி முற்றியிருந்தால், தீண்டாமை ஒழித்தலை கைக்கொண்டு என் மனைவியை துறந்திருப்பேன். நல்ல வேளையாக எனது மனைவி நல்லவளாயிருந்தபடியால் அந்த நெருக்கடிகள் நீங்கின. எனது ஆசிரமே எனது குடும்பம். அங்கே "தீண்டாதார்" பலர் இருக்கிறார்கள். மிகவும் நல்ல குணமும் ஆனால் சுளித்தனமும் நிறைந்த ஒரு தீண்டாதார் பெண்ணும் எனது குமாரியாக அங்கே வளர்ந்து வருகிறாள். தீண்டாதாருக்கு இடையூறாக நான் நிற்கவில்லை. ஆனால் பூர்ண சுயராஜ்யத்திற்கு குறைந்த எதையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது."

அட அம்பேத்கார்களே, சகஜானந்தங்களே மகாத்மா மேன்மையை பார்த்தீர்களா? இவ்வளவு பெரிய மகானை திட்ட உங்கள் புத்திபோன போக்கென்ன? உங்கள் நாக்கிலுள்ள நரம்பு எங்கே போயிற்று? எந்நன்றி மறந்தார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகர்க்கு.

Koviloor Digital Library



## ராஜீயக் கொலைகள்.

வங்காளத்தில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி "யங் இந்தியா" எழுதுகிறது:—

புரட்சிக்காரர்களை காங்கிரஸ் வசப்படுத்த முடியவில்லை என்பதற்கு இவைகள் தக்க அறிகுறிகள். இவ்விளைஞர்களை தற்காலிகமாக தங்கள் முறைகளை நிறுத்தி வைக்குமாறு காங்கிரஸ் கேட்டுக் கொண்டதை அவர்கள் மதிக்கவில்லை. இது பெரிதும் விசனிக்கத்தக்கது. இந்திய விடுதலைக்கும், காங்கிரசுக்கும் அவர்கள் மறைமுகமாக உதவி புரிவதாக நினைத்துக் கொண்டிருப்பார்களாகில், அது சுத்தத் தவறாகும். காங்கிரசின் கொள்கை சாத்விகம். சாத்விகமும், பலாத்காரமும் முற்றும் முரண்பட்டது. ஒன்று மற்றொன்றுக்கு உதவ முடியாது. காங்கிரஸ் சாதிக்க முடிந்ததை இவ்வித புரட்சி காரியங்கள் சீர்குலையச் செய்கின்றன. காங்கிரஸ் தலைவர்களனைவரும் இவ்விதமே கருதுகின்றனர். அவர்கள் செய்யும் காரியத்தை கண்டு காங்கிரஸ் தலைவரெவரும் மகிழ்ச்சி கொள்வார்களென அவர்கள் நினைத்திருக்க வேண்டாம். இக்காரியங்கள் செய்பவர்களின் தேசாபிமானத்தை சிலாகிப்பவர்கள் கூட, அவர்கள் போடும் வெடி குண்டுகளொவ்வொன்றும் காங்கிரஸ் மீது போடும் வெடி குண்டுகளென மதிப்பார்கள். உண்மையில் அக் குண்டுகளோ, துப்பாக்கி வேட்டுகளோ ஸ்ரீ. தூர்னோ, ஸ்ரீ. வில்லியர்ஸ் இவர்கள் மீது மட்டுமன்றி காங்கிரஸ் மீதும் பிரயோகிப்பவையாகும். மேற்குறிப்பிட்ட இருவரும் தப்பியது நற்காலத்தின் பயனேயாகும். வெள்ளையர் மீது துப்பாக்கி குறிதவறினும் காங்கிரஸ் மதிப்பு, திட்டம் இவைகள் மீது அக்குறிகள் தப்பவில்லை. நேரே குண்டுகள் காங்கிரஸ் மீது பாய்ந்து விட்டன. இந்தியாவின் நன்மையை உத்தேசித்தாவது புரட்சிக்காரர்கள் தங்கள் காரியங்களை நிறுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். தேசம் சாத்விக விரதம் பூண்டிருக்கிறது. எனவே, அவர்களது காரியங்கள் தேச மக்களின் காரியங்களுக்கு முற்றும் முரண்பட்டது. சர்க்காருக்கு தெரிந்த மருந்து ஒன்றே. சந்தேகத்தின் மீது மக்களை கைதுசெய்து விசாரணையின்றி அடைத்து விடுவதே. எவ்வளவோ காலமாக இம் மருந்தை உபயோகித்தாய் விட்டது. கண்ட பலன் ஒன்றுமில்லை. ஆனால் இதை சர்க்கார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தீவிர அடக்கு முறையைக் கையாள முன் வந்து விட்டனர்.

## அம்பேத்கார் ஞானச் சுடர்.

மலையாளத்தில் குருவாயூர் கோவிலில் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிருப்பதை நீங்கள் அறிவீர்கள். நாசிக் என்ற க்ஷேத்திரத்திலும் இம்மாதம் ஆரம்பிக்கப் போகிறார்கள். அதைப்பற்றி நாசிக் சத்தியாக்கிரக கமிட்டி லண்டனிலிருக்கும் டாக்டர் அம்பேத்காருக்கு கடிதம் எழுதினார்கள். அவர் அதற்கு எழுதிய பதிலில் குறிப்பிடுகிறார்:—

டிவிஷனல் கமிஷனர் என்னை கேட்டுக்கொண்டிருக்கிறபடி சத்தியாக்கிரகத்தை நிறுத்தும்படி நான் சொல்லப் போவதில்லை. உடனே ஆரம்பிக்கும்படி நமது ஜனங்களுக்கு சொல்லவும். ஜாதி இந்துக்கள் பிரியப்படி இவ்விஷயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள மாட்டோமோ அதைப்போல, சர்க்கார் விருப்பப்படி நடக்கப் போவதில்லை. தீண்டாமையை சர்க்கார் போக்குவார்களென்று நாம் வெகு காலம் நம்பியிருந்தாயிற்று. இவ்விஷயத்தில் சர்க்கார் தனது சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லை. ஆகவே சத்தியாக்கிரகத்தை நிறுத்தும்படி கேட்க சர்க்காருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இந்த தீண்டாமை சாபத்தைப் போக்கும் பொறுப்பை நாமே நமது தலையில் போட்டுக் கொள்ள வேண்டும்."

சபாஷ், அம்பேத்கார்! உமக்கு இப்பொழுதாவது சர்க்காரின் யோக்கியதை தெரிந்ததைப்பற்றி சந்தோஷப்படுகிறோம். சில வாரங்களுக்கு முன்னால் "எங்களுக்கு சுயராஜ்யமே வேண்டாம். பிரிட்டிஷ் ஆட்சியே வேண்டும்" என்று லண்டனில் சொல்லியதைப்போல, யோசனையில்லாமல் இனி சொல்ல மாட்டீரென்று நினைக்கிறோம். தீண்டாமையை ஒழிக்க பிரிட்டிஷ் சர்க்கார் தனது சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லையென்பதை நீர் இப்பொழுது தான் அறிந்து கொண்டீர். ஆனால் உமது கிராமபோன்களான சகஜானந்தம் கோஷ்டியார் இன்னம் அறியவில்லை. அவர்கள் உமது பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷாரால் தீண்டாதார் பலன் பெற்று வருவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உமது புதிய கிராமபோன் பிளேட்டுகளை சகஜானந்தம் கோஷ்டியாருக்கு அனுப்புவீரென்று நம்புகிறோம். அனுப்புவதற்கு கொஞ்சம் தாமதமானால் பழைய பல்லவி பிளேட்டுகளை யாவது தூர எறியச் சொல்லும். அத்துடன் சகஜானந்தம் கோஷ்டியாரை குருவாயூருக்கு போகும்படி புத்திமதி சொல்லுவீராக.

Koviloor Digital Library



# ராஜீய கிறிஸ்து.

இங்கிலாந்தில் பிரபல பத்திரிகாசிரியரான லேடி டிரம்மண்ட்ஹே மகாத்மா காந்தியைக் குறித்தும், அவர் இங்கிலாந்து சென்றுள்ள லக்ஷியத்தைக் குறித்தும் மிகவும் புகழ்ந்தும், அவரை இந்தியாவில் அவதரித்த இயேசுநாத ரென்று விவரித்தும் ஓர் கட்டுரை எழுதி யிருக்கிறார். "கிராப் ஜெப்பிலின்" என்ற விமானத்தில் முதன் முதலாக உலகம் முழுதும் யாத்திரை செய்த பெண்மணி இவர்தான். இவர் உலகம் முழுதும் யாத்திரை செய்து நல்ல அநுபவம் பெற்றவர். இந்தியா சார்பில் மகாத்மா காந்தி கேட்கும் கோரிக்கைகளையும், அவருக்குள்ள சக்தியையும் அலட்சியம் செய்ய வேண்டாமென பிரிட்டிஷாரை எச்சரிப்பதுடன், பிரிட்டிஷாரை நியாயத்துடனும், தர்மத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் எழுதியுள்ள கட்டுரையின் விவரம் பின் வருமாறு:—

மகாத்மா காந்தி தெய்வீக சக்தி யுள்ளவர். அவரை இந்தியாவில் அவதரித்துள்ள அரசியல் கிறிஸ்து என்றே கூறவேண்டும். அமெரிக்காவின் விடுதலைக்கு அவதரித்த ஜார்ஜ் வாஷிங்டனைப் போல மகாத்மா காந்தியும் இந்தியாவின் விடுதலைக்காக அவதரித்திருக்கிறார். எதிர்காலத்தில் அவர் விடுதலை வீரராக விளங்குவாரென்பதில் சந்தேகமில்லை. அவர் சிறிதும் ஆடம்பரமற்றவர். ஆயினும் லண்டன் மகாநாட்டில் அவர்தான் எல்லோர் கண்களையும் மனத்தையும் கவர்ந்திருக்கிறார். அவர் அரை ஆடையுடன் ஓர் சால்வையை மாத்திரந்தான் இங்கு மேலே போட்டுக் கொள்ளுகிறார். அவருடைய கைப்பெட்டி யொன்றில் ராட்டினம் இருக்கிறது. அவரது தாய் நாட்டின் கைத்தொழிலுக்கு அது ஓர் அறிகுறியாகும். 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுநாதர் கழுதையின்மேல் ஏறிக்கொண்டு ஜெருசலேத்திற்கு வந்ததுபோலவே, மகாத்மா காந்தியும் யாதொரு ஆடம்பரமுமின்றி லண்டன் வந்திருக்கிறார். ஆட்டுப்பாலை ஆகாரமாகக் கொண்டவரும் மூக்குக்கண்ணாடி தரித்தவருமான இந்த அரையாடை மனிதரை சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கடுமையாகத் தூஷித்தன. சிறிதும் பொறுமையில்லாத சிலர், துவேஷத்தால் அவரை வேஷதாரி யென்றும் சாகசக்காரரென்றும் அவதூறாகக் கூறினார்கள். முன்னர் இயேசு நாதர் ஜெருசலேம் தெருக்களில் சென்ற போதும் மேற்கூறிய விதமே கூச்சல்கள் கிளம்பின. இயேசுநாதரை அப்போது பலர் தூஷித்தார்கள். அவரது நோக்கங்கள், கொள்கைகள் அவைகளுக்குத் தவறான வியாக்கியானம் செய்தார்கள். அதன் பயனாக அம்மகான் கடைசியில் சிலுவையில் மாண்டார். அவர் மாண்டதால் கிறிஸ்துவ நம்பிக்கையும், மதமும் அழிந்துவிடுமென அவரது விரோதிகள் நினைத்தார்கள். ஆனால் அவர் சிலுவையில் மாண்டதுதான் அசைக்க முடியாத அஸ்திவார மாயிற்று!

மகாத்மா மாசற்ற வாழ்க்கை.

தற்போது இவ்வுலகில் மகாத்மா காந்தி இயேசு நாதர் போன்றே இருந்து வருகிறார். அவரைக் காட்டிலும் பரிசுத்த மானவர் ஒருவருமே யில்லை. அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராயும், இவ்வுலகத்திலுள்ள ஸ்தூல விஷயங்களை வெறுத்தும் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார். இவ்வுலக விஷயங்களில் அவருக்கு ஆசையில்லை. அவரை முற்றும் துறந்த ஒரு மகரிஷி எனக் கூறுவது மிகையாகாது. வேட்டை யாடுவதை யொட்டியோ அல்லது அகாரத்திற்காகவோ அவர் ஒருபோதும் ஜீவ இம்சை செய்வதே யில்லை. தமது தேசத்திற்காகவும் தமது ஜனங்களுக்காகவும் அவர் எவ்விதத்திலும் தியாகம் செய்யத் தயாராக யிருக்கிறார். எனவே அவரை இந்தியாவின் 'அரசியல் இயேசு நாதர்' எனக் கூறுவதற்குக் காரண மிருக்கிறது.

பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை.

ஆகையால் பிரிட்டிஷார் எந்த காரியத்திலும் பரம்பரையாக நியாயமாகவே நடந்து கொண்டு வருவதை அநுசரித்து, இங்கிலாந்து வந்துள்ள மகாத்மா காந்தி விஷயத்திலும் 'நியாயமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம். பிரிட்டனின் தற்காலீக நிலைமை எதிர்கால நிலைமை இவைகளை அநுசரித்து நாம் அவ்விதம் நியாயமாக நடந்துகொள்ளுவது தான் மேன்மையாகும். நம்மிடையுள்ள அறியாமை, துவேஷம், கர்வம் இவைகளால் நாம் கண்மூடித் தனமாக இருந்துவிடக் கூடாது. தங்கள் தேசத்திற்கு வரும் தூதர்களுக்கு மரியாதை செய்வதிலும உபசாரம் செய்வதிலும் இந்தியர்கள் மகாகீர்த்தி பெற்றவர்கள். அவ்விதம் உபசாரம் செய்வது அவர்கள் தர்மமாகும். எனவே மகாத்மா காந்தியின் தோல் கருப்பாக இருக்கிற தென்பதற்காகவோ அல்லது அவர் அரை யாடை மனிதராக வந்திருக்கிறார் என்பதற்காகவோ நாம் இந்திய தூதரான அவருக்கு மரியாதை காட்டுவதிலும் உபசாரம் செய்வதிலும் கீழ் நாட்டிலுள்ளவர்களைக் காட்டிலும் பின் தங்கிவிடக் கூடாது.

Koviloor Digital Library



# ஒரு டஜன் கேள்விகள்!

(எம்டன்)

அடியிற்கண்ட கேள்விகள் மிகவும் அவசிய மாதலால் நெல்லிக்குப்பம் ஆலை ஏஜெண்டு துரை யவர்கள் இக் கேள்விக் குரிய பதிலை காந்தி ஆபீ ஸிற்கு அனுப்புவித்தால் பிரசுரிக்க ஏற்பாடு செய் யப்பட் டிருக்கிறது.

(1) ஆலைக்கு இலாபம் இல்லையென்று சொல் லப் படுகிறது. அப்படியானால் புதிய கட்டிடங்க ளும், புதிய இயந்திரங்களும் வரவழைப்பானேன்?

(2) நரிவளைக்கும் கேடாக இருக்கும் கில்பேட் டை தொழிலாளர் குடிசைகளை சீர் திருத்தாமல் ஒரு துரைக்கு இருபதாயிர ரூபா செலவிட்டு அழகிய பங்களா கட்டுவது துரோகமா? அல் லது நிறபேதமா?

(3) உலகமே பணக் கஷ்டத்தி லிருப்பதால் ஆலையில், தாங்கள் வழிகளில் பல சிக்கனம் செய் வதாகக் கேள்விப்பட்டேன். அதில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு பிரதி ஒரு 50 ரூபாய் சம்பள உயர்வு செய்வதையும் 1932-ம் வருடம் உயர்வு செய்து சிக்கனம் படுத்துவீர்க ளென்று நினைக்கிறேன். எனது எண்ணம், சரியா? பிசகா?

(4) கரும்பு விவசாயத்தில் தங்களுக்கு வருஷ வாரி பல ஆயிர ரூபாய் நஷ்டமுண்டாகிறதாமே! உண்மை தானா? உண்மையென்றால் நஷ்டத் தில் அதை நடத்தும் காரணமென்ன?

(5) ஆதித்திராவிடர் என்ற வகுப்பில் பிறந்து விட்ட பாவத்திற்காக ஒருபடித்த ஆதித்திராவிட ருக்கு உமது ஆலையில் ஒரு சிறுவேலையும் கிடைக் காதுபோன சூழ்ச்சியை தாங்கள் அறிவீர்களா?

(6) ஒரு ஆளை வேலைக்கு வைத்தால் 2 ரூபாய் இலஞ்சம் வாங்கும் சில உத்தியோகஸ்தர்கள் போக்கை தாங்கள் அறிவீர்களா? (அறியாவிடில் அடுத்தவாரம் தெரிவிக்கிறேன்)

(7) நேற்று வேலைக்கு வந்த சோக்ராபாய் இன்று எல்லோரையும் மிரட்டி ஏழைகள் வயிற் றில் மண்ணடிக்கும்படி விட்டுவைக்க காரண மென்ன? அனுபவமா? படிப்பா? கேவலமான சூழ்ச்சியால் செய்யப்படும் சிபார்சுகளா?

(8) தொழிலாளர் சட்டப்படி முதலாளிகள் தொழிலாளர்களுக்கு கல்விச் சாலைகளும், வீடு வசதிகளும் செய்து கொடுக்கவேண்டியது நியாய மாயிற்றே! தாங்களேன் அப்படிச் செய்யவில்லை?

(9) சமீபமாக வெல்லங்கரைப்பது நின்று போய் விட்டால் பல தொழிலாளர்களுக்குச் சரி வர வேலைகொடுக்க மாட்டீர்கள். அதில் சில ஐரோப்பியர்களுக்கும் வேலைகொடுக்க மாட்டீ ரென்று நினைக்கிறேன். தங்கள் அபிப்பிராயம் என்ன?

(10) மேல்பாதி பாவலரை சங்கத்தில்சேர்க்கப் படாது என்று கூறுகிறீர்களாமே? அதற்குகாரண மென்ன? பாவலரென்ன? உமக்குப் பங்காளியா?

(11) தங்கள் ஆலையில் இருக்கும் உத்தியோ கஸ்தர்கள் பிள்ளைக்கு வேலை கொடுப்பானேன்? தொழிலாளர் பிள்ளைகட்கு கொடுக்கா திருப்பா னேன்?

(12) மீண்டும் சங்கம் வளர்க்க தொழிலாளர் களுக்கு ஆவல் அதிகமாகக் காண்கிறது. தங்கள் அபிப்பிராய மென்ன? சங்கத்தை ஒப்புக்கொள் கிறீர்களா, வெறுக்கிறீர்களா?

# தமிழ்நாட்டில் கத்தர்.

சென்ற செப்டம்பர் முடிவுடன் முடிந்த 12 மாதங்களில் தமிழ் நாட்டில் 24 லட்ச ரூபாய் மதிப்புள்ள கதர் உற்பத்தியாயிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இவ் வாண்டில் ஏழு லட் சம் ரூபாய் மதிப்புள்ள கதர் அதிகமாக உற்பத் தியா யிருக்கிறது. தமிழ்நாடு பொது நலத்தை யொட்டிய மற்ற விஷயங்களில் பின்னே நிற்பி னும் கதர் உற்பத்தியில் மட்டும் இயற்கையான காரணங்களால் முன்னே நிற்பது மகிழ்ச்சிக் குரி யது. கதர் விஷயத்தில் திருப்பூர்ப் பகுதி சிறப் பாக விளங்கினும் திருநெல்வேலி ஜில்லாவில் மா தம் 15,000 ரூபாய் மதிப்புள்ள கதர் உற்பத்தி யாகி வருகிற தென்ற செய்தி தென்னாட்டார் மகிழ்ச்சிக் குரியது ஒன்றாகும். ராஜ பாளையத் தில் வீடுதோறும் ராட்டினம் ஓடுகின்றதாம். கோயம்புத்தூர் ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவிலும் புதிய கதர் உற்பத்தி ஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லா வில் 25000 நூற்போர்களும் 2500 தறிகாரர் களும் (நாகர்கோயில் உள்பட) திருநெல்வேலி ஜில்லாவில் 6000 நூற்போர்களும் 600 தறிகா ரர்களும், தென் ஆற்காட்டில் 2500 நூற்போர் களும 250 தறிகாரர்களும், மதுரை, ராமநாத புரம் ஜில்லாவில் 1500 நூற்போர்களும் 500 தறிகாரர்களும் வேலை செய்து வருகிறார்க ளென்ற செய்தி கதர் அபிமானிகள் அறிந்து மகிழக் கூடிய விஷயம். சென்ற ஆண்டில் 10½ லட்சம் ரூபாய்க்குக் கதர் விற்றிருக்கப் பிரஸ்தாப ஆண்டில் 20 லட்ச ரூபாய்க்குக் கதர் விற்றிருப் பது மிகவும் மகிழ்ச்சி அடையத்தக்க செய்தி.

Koviloor Digital Library



# பொக்கிஷ மந்திரி ஜாலம்.

40 ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கும் 100-க்கு 10 குறைவு. 2 ஆயிரம் வாங்குபவர்களுக்கும் 100க்கு 10 குறைவு. இது என்ன ஐயா நியாயம்? என்று கேட்டால், பொக்கிஷ மந்திரி ஜால வித்தை செய்கிறார். சிக்கன கமிட்டி சிபார்சு செய்தபடி. தார தம்மியமாக சம்பளக் குறைவு செய்தால், ரயில்வே, ராணுவத்தை தவிர 102 லட்சம்தான் மிதமாகுமாம். நமது பொக்கிஷ மந்திரி யுக்திப்படி. எல்லாருக்கும் 100க்கு 10 விதம் குறைத்தால் 128 லட்சம் மிதமாகுமாம். அதனால்தான் அப்படிச் செய்தாராம். 40 ரூபாய் சம்பளம் வாங்குகிறவரும் மனிதர்தான். 2 ஆயிரம் வாங்குகிறவரும் மனிதர்தான். இருவருக்கும் ஒவ்வொரு வாயும், ஒவ்வொரு வயிறும்தான் இருக்கிறது. ஆயிரக்கணக்காய் வாங்குகிறவர்கள் பாதிக்குமேல் சம்பளத்தை குறைத்தாலும் அவர்களுக்கு கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் ஏழை இந்தியரின் குறைந்த சம்பளத்தில் மறுபடியும் பிடித்தால் அவர்கள் எப்படி வாழ்வது? 1800 ரூபாய்க்கு கீழுள்ளவர்கள் சம்பளத்தில் 10 விதம் பிடிப்பது இருக்கட்டும். 1800க்கு மேல் வாங்குகிறவர்கள் சம்பளத்தில் 100க்கு 20 விதம் குறைத்தால் 11 லட்சம் மிதமாகும். அதை ஏன் செய்யக்கூடாது? இந்த பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளக்குறைவு செய்வதால் அவர்களுக்கு வருமான வரி கிடையாதாம். வருமான வரிபோட்டால் 9½ லட்சம் கிடைக்கும். அதோடு சம்பளத்தை தவிர சீமை போகும் படி, வைத்தியச் செலவு இவைகளுக்கு 15 லட்சம் செலவாகிறது. இவற்றையும் ஏன் நிறுத்தக்கூடாது? இந்த மூன்று இனங்களில் மட்டும் 35¼ லட்சம் மிதமாகும். சுலபமாய் மிச்சம் பிடிக்கக்கூடிய இந்த வழியை கைக்கொண்டால், புதிய வரிகள் கொஞ்சம் குறைவு மல்லவா? இதற்கு பொக்கிஷ மந்திரி என்ன பதில் சொல்லுகிறார்? அஞ்சாமல் புதிய வரிகள் போட குதித்துக் கொண்டிருக்கும் பொக்கிஷ மந்திரி, இந்த சிக்கனத்தை கைக்கொள்ள ஏன் அஞ்சவேண்டும்? அப்படிச் செய்தால் இந்த 35¼ லட்சமும் வெள்ளையரிடமிருந்தே பிடிக்க நேரிடும் என்று நினைப்பாரா? பொக்கிஷ மந்திரிபேச்சு வெறும் ஜாலமே யொழிய வேறொன்று மல்ல. ராணுவச் செலவில் பாதி குறைத்தாலும் புதுவரி போட

# வந்தேமாதரச் சிறப்பு.

("எம்டன்" பாடியது.)

(ஆனந்தக் களிப்பு.)

வந்தேமாதரமென் றுரைப்போம்—அதால்
வந்தெய்தும் துன்பமனைத்தும் பொறுப்போம்
சந்தேகமென்பதை மறப்போம்—மிக்கச்
சாதனையாய் காந்தி சங்கீதம் படிப்போம் (வந்)

வாழ்வுசுகம் பெறநாமும்—தினம்
வாழ்த்தும் வந்தேமாதர மென்னும் நாமம்
வாயாரவே எந்த ஜாமமும்—அதை
வணங்கிக்கரங்குவிப்போர்க்கென்றும் க்ஷேமம்(வந்)

மக்கள் அடிமை தீர்க்கும் மந்திரம் இந்த
மண்டலமெல்லாம் உரைத்தால் சுதந்தரம்
மிக்கப்பெறுக ஒரு தந்திரம்—அந்த
மேனாட்டார்க்கல்லவோ வேண்டும் வேறுயந்த்ரம்(வ)

முத்தியளித்திடும் ஞானம் - இதை
மொழிவதால் நாமினி விடுவோம் அஞ்ஞானம்
சுத்தசுதந்திரயானம் - இதில்
சூட்சுமம் உண்டென்று அறிந்து செய்தியானம்(வ)

குறிப்பு:—தொண்டர்களும், தேசபக்தி யுள்ளவர்களும் சுலபமாக பாடக்கூடியவாறு மேற்கண்டவிதம் தேசிய பாடல்கள் தொடர்ச்சியாக வெளிவரும். அனைவரும் மனனம் செய்வதவசியம்.

# அசோக ஆஸ்பத்திரி

சேலத்தில் டாக்டர் வரதராஜுலு ஸ்தாபித்திருக்கும் அசோக ஆஸ்பத்திரியை முதல் மந்திரி கனம் முனிசாமி நாயுடு 14உ மாலை 5-மணிக்கு ஆரம்பித்து வைப்பார். திவான் பகதூர் வெங்கட்ட நாராயண நாயுடு தலைமை வகிப்பார். அன்று மாலை 4 மணிக்கு அசோக ஆஸ்பத்திரியில் திவான் பகதூர் கேசவ பிள்ளை, ஸ்ரீ. விஜயராகவாச்சாரியார் இவர்கள் படங்களை டாக்டர் சுப்பராயன் பிரதிஷ்டை செய்வார். டாக்டர் வரதராஜுலு படத்தை ராசிபுரம் யூனியன் போர்ட் சபையில் முதல் மந்திரி முனிசாமி நாயுடு பிரதிஷ்டை செய்வார்.

வேண்டாம். அல்லது ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடையாதென்று சொன்னாலும் புதுவரி வேண்டாம். இந்த பொறுப்பற்ற சர்க்கார் இப்படி செய்யவா போகிறார்கள்?

Koviloor Digital Library



# 52 கோடி ரூபாய் அதிக வரி.

இந்திய சட்டசபையில் புதிய வரிகளை எதிர்த்து ஸ்ரீ. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் 5ல பேசியதாவது:—

இந்தியாவின் நாணயத்தை காப்பாற்ற பிரிட்டிஷாராகிய உங்களுக்கு எவ்வளவு சிரத்தையுண்டோ, அதை விட அதிகமாக எங்களுக்கு உண்டு. அதைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டாம். இப்பொழுது உள்ள வரிகள் போதும். இவையே தாங்கமுடியாமல் ஏழைகள் முதுகை ஒடிக்கின்றன. இந்த நிலைமையில் ஒரு தம்பிடி கூட புதுவரி போட நான் சம்மதிக்கமாட்டேன். இந்த வருஷத்தைச் சேர்த்து சென்ற மூன்று வருஷங்களாக 51¾ கோடி ரூபாய் அதிகவரி விதித்திருக்கிறார்கள். ராணுவத்திற்கு செலவாகும் தொகையும் இவ்வளவு ரூபாயாகிறது. இந்த நிலைமையில் ராணுவச் செலவை குறைக்க வேண்டுமென்று சென்னை வெள்ளையர் சங்கம் கூட தீர்மானித்திருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? இறக்கு மதியாகும் பஞ்சு மீதும், இயந்திரங்கள்மீதும் வரி விதித்திருப்பது இருக்கிற கஷ்டங்களோடு அதிக கஷ்டங்களை உண்டு பண்ணுவதாகும். இறக்குமதியாகும் பருத்தி சரக்குகளுக்கும், இயந்திரங்களுக்கும் அதிக வரி விதிப்பதால், பிரிட்டன் வர்த்தகத்திற்கு மிகுந்த சௌகரியம் ஏற்படுமென்று இந்தியா மந்திரியே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

---

# பிரிட்டிஷ் பனியா

சீமையில் மகாத்மா காந்தியிடம் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். "பிரிட்டிஷார் இந்தியாவை சுரண்டியதால் இந்தியர் ஏழைகளாய் விட்டதாய் சொல்லுகிறீர்கள். "பனியா" (வட்டி வாங்கும் கூட்டத்தார்) வாங்கும் அநியாய வட்டிக்கும், கலியாண காலங்களில் செலவழிக்கும் ஆடம்பரச் செலவிற்கும் என்ன சொல்லப் போகிறீர்கள்? சர்க்கார் டம்பாச்சாரியாய் இருப்பதாய் சொல்லுகிறீர்கள். உங்கள் சுதேச மன்னர்கள் டம்பாச்சாரி தனத்திற்கு என்ன பதில்?" இதற்கு மகாத்மா அளித்த பதிலாவது:—

"பிரிட்டிஷ் பனியாவிற்கு இந்திய பனியா எந்த விதத்திலும் ஈடாகமுடியாது. இந்திய பனியா கொடுமையாக நடந்தால் அவனுக்கு தூக்கு தண்டனை பொருத்தமானதே. ஆனால் பிரிட்டிஷ் பனியா விற்கு ஒரு தரமல்ல, நூறு தரம் தூக்கு போட்டாலும் தகும். பிரிட்டிஷ் பனியா நாணயமாற்று ஜால வித்தையிலும், கசக்கி பிழிந்து ஏழைகளிடம் நிலவரி வாங்குவதிலும் கொள்ளை யடிப்பதை பார்த்தால், இந்திய பனியா அதிக வட்டி வாங்குவது கொசு மாத்திரமே யாகும். கட்டுப்பாடில்லாத ஒரு சாதுவான சமூகத்தை கட்டுப்பாடாய் கொள்ளையடிக்கும் இந்த சம்பவத்தைப் போல சரித்திரத்தில் வேறு உதாரணத்தை நான் அறியேன். எனக்கு அதிகாரமிருந்தால் மன்னர்களின் ஆடம்பர மாளிகைகளை பறிமுதல் செய்து விடுவேன். அதில் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும், பிரிட்டிஷ் சர்க்காருக்கு புது டெல்லியிலுள்ள ஆடம்பரமான மாளிகைகளை பறிமுதல் செய்ய கொஞ்சமும் தயங்கமாட்டேன். இந்தியர் பட்டினியால் மடியும் போது, இங்கிலாந்தின் ஜம்பத்தைக் காட்ட புது டெல்லியில் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். சுதேச மன்னர்களின் ஆடம்பரச் செலவு இதற்கு எந்த மூலை?"

---

தென் ஆப்பிரிக்கா தூது.

தென் ஆப்பிரிக்கா இந்தியர் சம்பந்தமாக கேப்டவுனில் ஜனவரி மாதம் கூடப்போகும் மகாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து சர்க்கார் ஒரு தூதுக் கோஷ்டி அனுப்புவார்கள். ஸ்ரீமதி சரோஜினி, சர். பிரோஜ் சேத்னு, சர். டேர்சிவிண்ட்சே இவர்களும் அக் கோஷ்டியில் இருப்பார்கள்.

சாங்கி குட்டு.

ஐக்கிய ஆட்சி நிர்மாண கமிட்டி கூட்டம் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. மைனாரிட்டி விவகாரம் முடிந்தாலொழிய இந்தக் கூட்டம் நடக்கக் கூடாதென்று வகுப்புவாதிகள் சொல்லிவந்தனர். அவர்கள் கூச்சல் பலித்து விட்டது. சாங்கி குட்டு வெளியாயிற்று. மகாத்மா சீக்கிரம் புறப்பட்டு விடலாம். எல்லாம் வியாழக்கிழமை பிரதம மந்திரி செய்யும் பிரசங்கத்தைப் பொறுத்திருக்கிறது.

Koviloor Digital Library



## மின் வெட்டு.

காஷ்மீர் தொல்லை.

காஷ்மீரில் முஸ்லிம் ஜனத்தொகை அதிகம். கொஞ்சக் காலமாக அவர்கள் மகாராஜாவிற்கு விரோதமாக கிளர்ச்சி செய்தனர். பல சம்பவங்களுக்கு பின்னால் மகா ராஜாவிற்கும், குடிகளுக்கும் சமாசம் ஏற்பட்டு விட்டது. கைதி செய்தவர்களை மகாராஜா விடுதலைசெய்து விட்டார். ஆனால் பாஞ்சாலத்திலுள்ள முஸ்லிம்கள் சிலர் சத்தியாக்கிரகம் செய்ய காஷ்மீருக்கு செல்லுவதால் அதை தடுக்க வைஸிராய் அவசரச்சட்டம் செய்திருக்கிறார். இதைப்பார்த்து வெள்ளைப்பத்திரிகைகள் கூச்சல் போடுகின்றன. இந்தியருக்கு ஆளத்திறமையில்லை யென்று கூவுகின்றன.

மகாத்மா பரிகாசம்

மகாத்மா இவையெல்லாம் வெறுங் கூச்சல் என்று சொல்லுகிறார். "காஷ்மீரில் ஏற்பட்டிருக்கும் தொல்லைக்கு பிரிட்டிஷ் சர்க்காரே காரணம். சமஸ்தானங்களில் ஏற்படும் தொல்லைகளை உடனுக்குடன் அடக்க மன்னர்களுக்கு உண்மையான உரிமை கிடையாது. மன்னர்களை சமஸ்தானங்களில் கைதிகள் மாதிரி பிரிட்டிஷ் சர்க்கார் வைத்திருக்கிறது. பிரிட்டிஷ் சாக[illegible]ஸ்தானங்களுக்கு மேலதிகாரிகளாக இருப்பதால் சமஸ்தான மன்னர்கள் தங்கள் நாட்டில் சுதந்திரமாய் நடக்க முடியவில்லை." மகாத்மா இம்மாதிரி சொல்லுகிறார். இதற்கு யாராவது பதில் சொல்ல முடியுமா?

மகாத்மா ஐரோப்பா பிரயாணம்

மகாத்மா காந்தி இம்மாதம் 27உ லண்டனை விட்டு ஐரோப்பா புறப்படுகிறார். பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, ஸ்விட்ஜர்லாந்து, ஜெக்கோஸ்லேவேக்கியா, இத்தாலி ஆகிய தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இத்தாலி துறைமுகம் ஒன்றிலிருந்து பம்பாய்க்கு 27உ புறப்படுவார் என்று இந்தியன் டெயிலிமெயில் சொல்லுகிறது.

சர்க்கார் செய்தி யோக்கியதை

பிரிட்டிஷ் சர்க்கார் ஆகாசத்தந்தி என்ற பெயரோடு லண்டனிலிருந்து செய்திகளை அனுப்பி வருகிறார்கள். இச் செய்திகள் சர்க்கார் பார்த்து அனுப்புவதாக பெயராகையால், எல்லாம் உண்மையாயிருக்குமென்று பலர் நம்புகிறார்கள். அந்த யோக்கியதை வெளியாயிற்று. எல்லைப்புறத்திலுள்ள தென் வாஜிர்ஸ்தானத்தில் ஒரு போலீஸ்காரன் இரண்டு ராணுவ அதிகாரிகளை சுட்டுக்கொன்று போட்டான். இச் செய்கை சட்ட மறுப்பால் ஏற்பட்டதென்றும், புரட்சிக்காரர் செய்ததாகவும் சர்க்கார் ஆகாசத் தந்தி செய்தி பரப்பியது. புரட்சிக் காரருக்கும் எல்லைப் புறத்திற்கும் சம்பந்தம் சொல்லுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதைப்போலவே இருக்கிறது. இந்திய சர்க்கார் உடனே முன்வந்து, அச்செய்தி பொய் யென்றும், சட்ட மறுப்புக்கோ, புரட்சிக்காரருக்கோ இதில் சம்பந்தமில்லை யென்றும் சொல்ல முன் வந்ததற்காக நாம் சந்தோஷப் படுகிறோம். பிரிட்டிஷ் சர்க்கார்செய்தியை இந்திய சர்க்கார் பொய் யென்று சொல்லும்படி ஏற்பட்டிருப்பது விநோதமல்லவா?

## மகாத்மாவுக்கு ஜார்ஜ் மன்னர் விருந்து.

ஜார்ஜ் மன்னர் வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதிகளுக்கு நடத்திய விருந்திற்கு மகாத்மாவும் சென்றிருந்தார். 30 வருஷங்களுக்கு முன்னால், மன்னர் இளவரசராயிருக்கும் போது தென்னாப்பிரிக்கா போயிருந்தார். அச்சமயம் மகாத்மா இந்தியர் சார்பாக ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார். அதன் பின்பு இப்பொழுதே மன்னரை சந்தித்தார். 5உ மாலை, லங்கோடு தரித்து, மேலே ஒரு கத்தர் துணி போர்த்தி, காலில் செருப்புடன், மகாத்மா மோட்டாரில் பக்கிங்ஹாம் அரண்மனை சென்றார். அவருடன் ஸ்ரீமதி சரோஜினியும் மகாதேவதேசாயும் சென்றார்கள். அரண்மனைக்கு வெளியில் ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்தனர். மகாத்மாவைப் பார்த்ததும் ஆரவாரஞ் செய்து கைக்குட்டைகளை வீசினர். மகாத்மா மோட்டார் அரண்மனை வாயிலில் நுழைந்ததும் அங்கே நின்ற போலீஸ் வீரர்கள் மகாத்மாவிற்கு சலாம் செய்து மரியாதை செய்தனர். அரண்மனை முன்பு இறங்கி உள்ளே சென்று ராஜாவுடனும் ராணியுடனும் கை குலுக்கிவிட்டு தர்பார் அறைக்கு சென்றார். அங்கே கொஞ்சநேரம் பிரதிநிதிகளுடன் பேசினார். பின்னால் ராஜதம்பதிகள் விருந்தாளிகளுடன் வந்து தாராளமாய் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்புறம் எல்லாரும் சிற்றுண்டி அருந்தினர். வேல்ஸ் இளவரசர் லிவர்பூலில் இருந்தவர், இந்த விருந்தில் கலந்துகொள்ள ஆகாயக் கப்பலில் வந்து சேர்ந்தார். மகாத்மா காந்தி 5 நிமிஷம் வரையில் சக்ரவர்த்தியுடன் தனியாக பேசிக்கொண்டிருந்தார். காந்திஜி திரும்பும் போது திருப்தியோடு வருவதாய் தோன்றிற்று. அரைமணி நேரம் ஆன பின்பு மகாத்மா தமது ஜாகைக்கு திரும்பினார்.

Edited, Printed & Published by T. S. Ch-ckalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Regd. No. M. 2677

விலை காலணு
(மலாய் 2 சென்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 12உ,
பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 27உ வியாழக்கிழமை || இதழ் 1

## அம்புலி வேட்டை




மைனாரிட்டிகள் கைக்கு எட்டாத "அம்புலி" வேண்டு மென்று அழுகிறார்கள்.

செவிலித்தாயான பிரிட்டன் "மாகாண சுயாட்சி" என்ற கண்ணாடியில் அம்புலி பிரதிபிம்பத்தைக் காட்டி ஏமாற்றுகிறான். மைனாரிட்டிகள் மாகாண சுயாட்சி பெற்று ஏமாறப்போகிறார்களா, அல்லது அம்புலி, கைக்கு எட்டாதது என்று தெரிந்து புத்திசாலியாகப் போகிறார்களா?

Koviloor Digital Library



# தற்கால உலகத்தின் ஜோதி : மகாத்மா பெருமை

திரு. ஹெரால்டு லஸ்கி

எவ்வகையில் எடுத்துக்கொண்டாலும் மகாத்மாஜி தற்கால உலகத்தின் ஜோதியே. சாத்வீக சத்தியாக்கிரக முறையில் உலகத்திலுள்ள பெரும்பாலான ஜனங்களின் மனத்தை கொள்ளை கொண்டவர் வேறு யாரும் இப்போது இல்லை என்றே கூறலாம். ராஜீய விஷயத்தில் இவர் தம் நாட்டினருக்கு ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்து வருகிறார். இந்திய மக்கள் யாவரும் இவரை ஓர் சுதந்திர தெய்வமாகக் கொண்டு அன்பும் மரியாதையும் காட்டி வழிபட்டு வருகின்றனர். இத்தகைய மரியாதையும் கள்ளங்கபடமற்ற அன்பும் வேறுயாரிடமும் எதிர் பார்க்கவே முடியாது. பல்லாண்டுகளாக பல இந்திய காங்கிரஸ் சுதந்திர வீரர்கள் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வந்திருக்கின்றனர். ஆனால் அந்த தியாகமூர்த்திகள் இவர் தற்சமயம் வகித்துக்கொண்டு இருப்பது போன்று தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார்கள் இல்லை. இவருடைய தூய சந்நியாச வாழ்க்கையும், கள்ளங்கபடமற்ற தன்மையும், எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் தளராது காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலும் இவருக்கு உலகத்தினிடை ஒப்பற்றதோர் பதவியை தர ஏதுவாக இருந்தன.

கடந்த முப்பதாண்டுகளுக்கு முன்னர் இவர் தென் ஆப்பிரிக்காவில் காட்டிய தீரமும், வீரமும் இவருடைய சத்தியாக்கிரஹத்தின் வலிமையும், விடா முயற்சியும், தமது கொள்கையைப்பற்றி நின்று சாதிக்கும் வன்மையும் நிர்வாக சக்தியும் தெற்றென விளக்குவதாயின. கடந்த பதினைந்தாண்டின் இந்திய சரித்திரம் பெரும் பாலும் மகாத்மாவின் சரித்திரமாகவே இருக்கிறது.

இவர் இப்போது உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தினர் மனத்தையும் கவர்ந்து நிற்கிறார்.

சாத்வீக சத்தியாக்கிரகத்தின் முன்னர் இரத்தம் சிந்தும் படைப்போர்களெல்லாம் வெட்கி தலை குனிந்து ஓடி ஒளிவதாயின. லெனினைத் தவிர மற்ற எந்த சுதந்திர வீரத் தலைவரும் இவரைப்போல் மக்கள் மனத்தைக் கவர்ந்தவர் இல்லையென்றே கூறவேண்டும்.

மகாத்மாவின் கள்ளங் கபடமற்ற தூய தன்மையை யாரும் சந்தேகிக்க முடியாது. இவர் தம் நாட்டு மக்களுக்காக மேற்கொண்டுள்ள தியாகமும் முயற்சியும் அளவிடற்பாலது. தேசத்தின் நன்மையைக் கோரி இம்மகானுபாவர் தமது உடலுயிராதிகளை தியாகம் செய்து நிற்பது எவ்வுலகத்தினரும் செய்வதற்கரிய செய்கையேயாகும். தேசப் பணிக்காக இவர் தமது ஜென்மத்தையே அர்ப்பணம்செய்து நிற்கின்றார். தமது சுகசௌக்கியங்களையும், இல்லறக் கவலைகளையும், செல்வத்தையும் உதறித் தள்ளிவிட்டு தூய எளிய வாழ்க்கையைக் கொண்டு திகழ்கின்றார்.

இரு கட்சியார்களுக்குள் சமாதானம் உண்டு பண்ண இவரைப்போல் சாமார்த்தியம் கொண்டவர்கள் அதிகம் இருக்க முடியாதென்றே கூறுவோம். இச் சக்தி இவருக்குப் பிறப்புரிமையாகின்றது. நியாயத்திற்கே பாடுபட்டு அந்த நியாயத்தை நிலை நாட்டும் வன்மையும் இவரிடத்தில் பூர்ணமாக இருப்பது குறிப்பிடத் தக்கவையாகும்.

பழையனவென்றுவது புதியனவென்றுவது கண்மூடித்தனமாக கொள்ளுதல் ஒதுக்குதல் என்ற வழக்கம் இவரிடத்தில் இல்லை. எக்காலத்ததாயினும் அவ்வற்றிலுள்ள நன்மை தீமைகளை உணர்ந்தே நன்மையைக் கைக் கொள்ளுவார்.

இந்தியர் சுயமரியாதைக்குப் புத்துயிர் கொடுத்து இயக்குவித்தவர் மகாத்மாவே யாவர். இவருடைய உபதேசத்திற்குக் கட்டுப்பட்ட சீடர்களை எந்த சர்க்காரும் கலைக்க முடியாது.

சில ஆங்கிலர்கள் மகாத்மா, ராஜீய ஞானத்தை ஆங்கிலர்களிடமிருந்தே கற்றுக்கொண்டதாகப் பிதற்றுகின்றனர். இது காலத்தினால் எழும் பொய்க்கூற்றே யாகிறது. இவர் கொண்டிருக்கும் விடுதலை மார்க்கம் மற்ற எத்தேசத்தினரும் எக்காலத்திலும் கைக்கொண்டிராத நூதனமும் ஒப்பற்ற வலிமையும் கொண்டதாக இருக்கிறது.

சாத்வீக சத்பாக்கிரகமெனும் நூதன முறையை இவர் உலகினுக்கு அருளியிருக்கின்றார்.

. இவருடைய பூர்ண சாமர்த்தியம் இந்தியா சுயராஜ்ய மடைந்து தன்னைத்தானே நிர்வகித்துக்கொள்ளும் போதுதான் தெரியப்போகிறது.

Koviloor Digital Library



# சாந்த குன்று மகாத்மா :

ரேவரெண்ட் ஹோம்ஸ்.

பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நான் மகாத்மா காந்தியைப் பற்றித் தெரிந்துகொண்டு, 'உலகத்திலுள்ள சிறந்த மனிதர் அவரே' என்று என்னுடைய மாதா கோயிலில் பிரசங்கம் செய்தேன். அது முதல் அவருடன் கடிதப்போக்குவரவு நடத்தி வந்திருக்கிறேன். அவரை நேரில் சந்திக்க வேண்டுமென்பது என் வாழ்நாளின் முக்கிய ஆசையாயிருந்தது. அவரைச் சந்தித்துப் பேசிய இந்த இருபத்து நான்கு மணி நேரமும் என் வாழ்நாளின் சிறந்த அநுபவமாகும். காந்தி, விகாரமான குள்ள வடிவினர் என்று அடிக்கடி கூறப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இஃது உண்மைக்கு மாறுபட்டதாகும். அவருடைய பழுப்புநிற தேகத்தின் மீது வெள்ளைக் கதர் சால்வை தரித்துக்கொண்டிருந்தது மிக அழகாயிருந்தது. அவருடைய புன் சிரிப்பு சூரியப் பிரகாசத்தைப் போல் இருந்தது. அவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தது மிகவும் அழகாகவும் அமரிக்கையாயும் இருந்தது. அவரிடத்தில் எவ்வித விகாரமும் காணப்படவில்லை; அழகின் குணங்களான கம்பீரம், பொலிவு, சாந்தம் முதலியனவே திகழ்ந்தன. அவருடைய நிதானமும், மனத் தெளிவும், அவருடைய ஆத்மசாந்தியும் எனக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தன. என்னிடத்தில் அவர் பேசிக்கொண்டிருந்தபோது, நான் ஒருவனே அந்த அறைக்குள் இருப்பதாகவும், வேறெவரையும் பல மணி நேரமாகச் சந்தித்துப் பேசவில்லைபோலவும், தமது கவன மனத்தையும் என்னிடத்திலேயே செலுத்திப் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய கவனம் வேறெங்கும் செல்லவில்லை: தவறான வார்த்தை ஒன்றும் வந்துவிடவில்லை. காந்தி தன்னடக்கத்தில் வெற்றி பெற்றுவிட்டார். அதனால் அவர் பிறருக்குத் தலைவராயிருக்கிறார். அவருடன் நான் இருந்த இருபத்து நான்கு மணிநேரமும், அவர் மனிதரில் மிகுந்த பொறுமைசாலி என்ற எண்ணம் எனக்குப் பட்டது. ஆனால் இது பொறுமை யல்லவென்றும், தமது சத்துருமித்துரு அனைவரிடத்திலும் ஒரே விதமான அன்பு பாராட்டுகிறாரென்றும் அந்த அன்பின் வெளித்தோற்றமே இந்தப் பொறுமை யென்றும் பின்னர் எனக்குத் தெரியவந்தது. நீங்கள் ஒருதரம் காந்தியைப் பார்த்து, அவருடைய புன்சிரிப்பில் மூழ்கி, அவருடன் கை குலுக்கிவிட்டீர்களானால், இலட்சக் கணக்கான இந்தியர்கள் அவருடைய வார்த்தைக்கு ஏன் கட்டுப்பட்டு நடக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். காந்தியடிகள், லண்டனுக்கு வந்தது முதல் அவரைப் பல பத்திரிகைகள், தாக்கி வந்திருக்கின்றன. அவைகளைப்பற்றி நான் அவரிடம் குறிப்பிட்டபோது "பத்திரிகைகளின் வசைமொழிகளைக் கண்டு நான் கவலைப்படுவதே யில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. எல்லாப் பத்திரிகைப் பிரதிநிதிகளையும் நான் கண்டு பேசியிருக்கிறேன். அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறியிருக்கிறேன் ஒன்றையும் மறையாமல் என்னுடைய ஏற்பாடுகள் அனைத்தையும் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். அப்படியிருந்தும், இந்தப் பத்திரிகைகளில் எவ்வளவு திருத்த முடியாத பொய்கள் எழுதப்பட்டிருக்கின்றன ! இத்தகைய காரியங்கள் செய்ய முடியுமா வென்பதை நினைக்க எனக்கு வருத்தமா யிருக்கிறது" என்று சாந்தமாகப் பதில் கூறினார்.

"உங்களுடைய அன்பு உபதேசத்தைப் பற்றி நான் எப்பொழுதும் சந்தேகித்ததே கிடையாது. ஆனால் அதனை ஏற்றுக்கொண்டு நடைமுறையில் கொள்ள மனித சமூகம் தகுதியுடையதா யிருக்கிறதா வென்பதே என் சந்தேகம்" என்று நான் கூறினேன்.

"சந்தேகப்படாதீர்கள். இறுதியில் மனிதரை நம்பலாம்" என்று அவர் கூறினார்.

---

## ஆப்கன் இளவரசுக்கு மணம்.

---

ஆப்கன் இளவரசர் முஹம்மத் ஜஹீர்கானுக்கு அவருடைய மாமன் அஹ்மத்ஷாகான் குமாரத்தியுடன் வெகு வைபவமாக காபலில் விவாகம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

Koviloor Digital Library



# பிரிட்டனே பழைய சரித்திரம் ஞாபகமிருக்கிறதா?

1914-ல் மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு முன் இந்தியாமுழுதும் புரட்சிச் சங்கங்களும், சதியாலோசனைக் கூட்டங்களும் நிறைந்திருந்தன. இந்திய அரசாங்கத்தைப் பற்றி அதிருப்தியே எங்கும் குடிகொண்டிருந்தது. மகா யுத்த காலத்தில் ஐக்கிய கட்சி ராஜதந்திரிகளும், அமெரிக்கப் பிரஸிடெண்டு வில்ஸனும் வெளியிட்ட அபிப்பிராயங்களினால், யுத்தத்தில் ஐக்கிய கட்சியார் வெற்றிபெற்றால், தமது பிறப்புரிமைகள் அங்கீகரிக்கப்பெற்று, சுயராஜ்யம் கிடைக்கக் கூடுமென்று இந்திய தேசியவாதிகள் நம்பியிருந்தனர். 1916-ல் யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்திய தேசிய காங்கிரசும், அகில இந்திய முஸ்லிம் லீகும் சேர்ந்து, இந்தியாவுக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றி ஒரு திட்டம் வெளியிட்டனர். அத்துடன் யுத்தத்துக்கும் தம்மாலான உதவியை மனப்பூர்வமாகவும் செய்து வந்தனர்: மகாத்மா காந்தியும் படைக்கு ஆள்சேர்க்கவும், போர்முனையில் வைத்திய உதவிசெய்யத் தொண்டர்களைத் திரட்டவும் தீவிரமாக முயற்சி செய்தார். மகா யுத்த வெற்றிக்காக இந்தியப் பணமும் ஏராளமாகச் செலவாயிற்று; இந்தியர்களும் ஏராளமாக இரத்தம் சிந்தினர். இந்தியாவிலுள்ள ஆளுதவியும் பண உதவியும் போர்க்கருவி, உணவுப் பொருள் உதவியும் சென்றிருக்கா விட்டால் பிரிட்டிஷார் அந்தஸ்துக்குக் கேடு உண்டாவது மன்றி, ஐக்கிய கட்சியாரும் வெற்றியடைந்திருக்க மாட்டார்கள்.

இந்திய உதவியைப்பற்றி சர்க்கார் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:— "நல்ல சமயத்தில் இந்தியப் படை பிரான்சில் வந்துசேர்ந்தது. அவர்கள் வந்ததினால் ஜெர்மானியர் முன்னேற்றம் தடைபட்டது. அக்காலத்தில் பிரான்ஸ் போர்முனைக்கு வரக்கூடிய பழக்கம்பெற்ற படை இந்தியப் படையைத் தவிர சாம்ராஜ்யம் முழுதிலும் வேறு படை இல்லவே இல்லை. எகிப்து, பாலஸ்தீனம், பாரசீகம், கிழக்கு-மேற்கு ஆபிரிக்கா முதலிய பிரதேசங்களில் பிரிட்டிஷ் படையோடும், குடியேற்ற நாட்டுப் படையோடும் சேர்ந்து இந்தியப்படை தைரியமாகவும், உண்மையாகவும் உழைத்ததனாலேயே இறுதியில் ஐக்கிய கட்சியார் வெற்றி பெற்றனர்."

1916 ஏப்ரல் மாதத்தில் மெஸப்பொடோமியாவில் உண்டான குழப்பங்களுக்கு இந்திய சர்க்காரின் உபேட்சையே காரணமென்று புகார் கூறப்பட்டது அதைப்பற்றி விசாரணை நடத்த நியமனம்பெற்ற கமிட்டியாரும் இந்தியரின் திராணியின்மையினாலேயே அக் குழப்பமுண்டாயிற்றென்று தீர்ப்புச் செய்தனர். அதைப்பற்றி பார்லிமெண்டில் வாதம் நடந்தபோது இந்திய அரசாங்க அமைப்பு காலப்போக்குக்கு ஒத்ததாக இருக்கவில்லையென்றும், அதைத் திருத்தியமைக்கவேண்டியது அவசியமென்றும் ஸ்ரீ. இ. எஸ். மண்டேகு பிரஸ்தாபித்தார்.

அவர் மேலும். கூறியதாவது:—" நீங்கள் எந்த நோக்கத்துடன் இந்தியாவை ஆளுகிறீர்கள் என்று வெளிப்படையாகக் கூறிவிட வேண்டுமென்று இந்தியர்கள் விரும்புகிறார்கள். இந்தியர்களுக்கு சுயராஜ்யம் அளிப்பது உங்கள் நோக்கமானால், முதற்படியாகச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை உடன் தானே நாம் செய்துவிட வேண்டும் ஆபத்துக் காலத்தில் இந்தியர்களை நம்பலாமென்றும், அவர்கள் நமக்கு உதவி புரிவார்கள் என்றும் இந்த யுத்த மூலம் வெளிப்பட்டுவிட்டது. இந்தியர்களின் ராஜ பக்தியைக் காப்பாற்ற இந்திய அரசியல் நிருவாகத்தில் அவர்களுக்கும் சரியான பங்கு அளிக்க வேண்டும். அப்படியளித்தால், மேலும் ஒரு யுத்தமுண்டானால் அவர்கள் மனமுவந்து நமக்கு உதவி செய்வார்கள், நமது ஏகாதிபத்தியத்தின் க்ஷேமத்துக்கு இந்தியர்களின் திருப்தி மிகவும் இன்றியமையாதது."

இது இவ்வாறாக, யுத்தமோ பயங்கர நிலையை அடையத் தொடங்கிற்று. ருஷியா அழிந்தொழியும் நிலைமையி லாயிற்று. இந்தியாவிலிருந்து எவ்வளவு ஆட்களும் பணமும் கொண்டுபோக முடியுமோ அவ்வளவும் கொண்டுபோகாவிட்டால் ஐக்கிய கட்சியார் தோல்வியடைவது நிச்சயமென்றும் வெளியாயிற்று. உடனே ஸ்ரீ. லாயிட் ஜார்ஜ் ஒரு தந்திரம் செய்தார். ஸ்ரீ. மான்டேகுவை இந்தியா ஆபிசில் பிரதிஷ்டை செய்து, 1920 ஆகஸ்டு 20உ வெளிவந்த விஞ்ஞாபனத்தை வெளியிடுமாறு தூண்டினர். அந்த விஞ்ஞாபனத்தின் சாரம் பின்வருமாறு:—"இந்தியர்களை அரசியல் நிருவாகத்தில் பழக்கி காலக்கிர

Koviloor Digital Library



மத்தில் அவர்களுக்கு சுயராஜ்ய மளிப்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம். அதற்குப் பூர்வாங்கமான ஏற்பாடுகள் வெகு சிக்கிரத்தில் செய்யப்படும். அவ்வாறு ஏற்பாடுகள் செய்வதற்குள் இந்திய அதிகாரிகளும் பிரிட்டிஷ் அதிகாரிகளும் தம்முள் கலந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்காக மன்னர்பிரான் சம்மதப்படி வைசிராயிடம் கலந்து ஆலோசனை செய்ய நான் இந்தியாவுக்கு வருகிறேன்"

இந்த விஞ்ஞாபனம் முன்னாலோசனை யின்றி வெளியிடப் பட்ட தல்ல. சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்துக்கு அது இன்றியமையாத தென்று முடிவு செய்யப்பட்டது. அந்த விஞ்ஞாபனத்தை இந்தியத் தலைவர்கள் மெய்யென்றே நம்பினார்கள். "இங்கிலாந்தின் ஆபத்து அயர்லாந்தின் நற்றருணம்" என்று ஐரிஷ் தேசிய வாதிகள் எண்ணியது போல் இந்தியர்கள் எண்ணவில்லை. ஆபத்துக் காலத்தில் இந்தியர் இங்கிலாந்துக்குக் கைகொடுத்து உதவினார்கள்.

இதற்கு என்ன கிடைத்தது? "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், காலத்தின் மாணப்பெரிது" என்று திருவள்ளுவர் சொன்னார். காலத்தினாற் செய்த உதவி பெரிதாயிருந்தும், பிரிட்டிஷ் சர்க்காருக்கு கடுகளவும் நன்றியில்லாமல் போய்விட்டது. பழைய வாக்குறுதிகளை மறந்தார்கள். ஜெர்மனியுடன் யுத்தஞ் செய்ய திண்டாடி இந்தியர் உதவியைக் கேட்ட வீரர்கள், நிராயுதபாணிகளான இந்தியரை ஜாலியன் வாலா பாக்கில் வேட்டையாடினர். உபயோகமற்ற சீர்திருத்தத்தை கொடுத்தார்கள். போனதெல்லாம் போகட்டும். இப்பொழுதாவது பழைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா?

## குருவாயூர் சத்தியாக்கிரகம்

வைக்கம் சத்தியாக்கிரகம் நடைபெற்ற பொழுது அகாலியர்கள் வந்து செய்த உதவியை தமிழ்நாடு மறக்கிராது. தற்போது குருவாயூரில் (கேரளம்) ஆரம்பிக்கப் பட்டிருக்கும் சத்தியாக்கிரகத்திற்கு அகாலியர்கள் மீண்டும் வந்து உதவி செய்ய முன் வந்துள்ளார்கள். பம்பாய் சிக்கிய சங்கம் சமீபத்தில் குருவாயூருக்கு ஜதா அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறது. அவர்களுடைய உதவி குருவாயூர் சத்தியாக்கிரகிகளுக்கு அதிக உதவியாக யிருக்குமென்பது திண்ணம்.

# ஆதிதிராவிடர் கண்டனம்.

## சூட்டு வெளிப்பட்டது.

சமீபத்தில் சில நாட்களாக காந்திஜீ மீது கண்டனத் தீர்மானங்கள் சில விடங்களில் செய்யப்பட்டு வருகின்றன. இக் கண்டன தீர்மானங்களின் உண்மை என்ன வென்பதை சமீபத்தில் பம்பாயில் வல்லப்காடியில் கூடிய ஆதிதிராவிடர்கள் கூட்டத்தில் ஸ்ரீஜ.க.பி.ஜே. திபோர்கார் சூட்டை வெளிப்படுத்தி விட்டார். பம்பாயில் பெரிய மனிதர்கள் சிலர் காந்திஜியை "கண்டனங்கள் செய்புங்கள் பணம் தருகிறோமென" ஆதிதிராவிடர்களிடையே பிரசாரம் செய்து திருகிறார்களாம். பம்பாய் முனிசிபல் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடக் கமிட்டியின் மெம்பர்கள் சிலர் ஆதிதிராவிட ஹெட்மாஸ்டர்களிடமும் உபாத்தியாயர்களிடமும் சென்று காந்திஜியை கண்டனம் செய்புங்கள் என்று பிரசாரம் செய்கின்றார்களாம். முஸ்லிம் தலைவர்கள் சிலர் மௌலானா ஷவுக்கதலியைப் பின்பற்றி ஆதிதிராவிடர்கள் பால் இதுவரையில் காட்டாத அன்பைக் காட்ட வெளிவந்திருக்கின்றனர். நாசிக் காலாராம் கோவிலில் ஆதிதிராவிடர்கள் செய்துவரும் சத்தியாக்கிரக ஊர்வலத்தில் முஸ்லீம் தொண்டர்களும் செம்பிறை கொடியுடன் கலந்துகொள்ளுகிறார்களாம். மணியார் என்ற முஸ்லிம் கனவான் ஒருவர் ரூ. 51 நாசிக் சத்தியாக்கிரக கமிட்டிக்கு நன்கொடை கொடுத்திருக்கிறார்.

இப்படி எல்லாம் செய்யப்படும்போது காந்திஜீ மீது கண்டன தீர்மானங்களை ஆதிதிராவிடர்கள் நிறைவேற்றுவது ஆச்சரியமா?

## மகாத்மா கோரிக்கைக்கு இந்தியா மந்திரி எதிர்ப்பு.

நிதி, இராணுவம், வெளிநாட்டு சம்மந்தம் இவ்வினங்களில் பொறுப்பாட்சி அளிக்கவேண்டுமென்று மகாத்மா கேட்டதை இந்தியா மந்திரி சர். சாமுவல் ஹோர் முற்றும் எதிர்க்கிறாரென்று நிச்சயமாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் மந்திரி சபையின் அமைப்பு சர் சாமுவேல் ஹோருக்கு மிக ஆதரவளிப்பதாக இருக்கிறது. சமரசத்தை உத்தேசித்து மகாத்மா செய்யும் எவ்வித யோசனையையும் பிரிட்டிஷ் மந்திரி சபை எதிர்ப்பது நிச்சயம்.

Koviloor Digital Library



# பிரதம மந்திரிக்கு பிரதிநிதிகள் கடிதம்.

லண்டன் மகா நாட்டு முக்கியஸ்தர்களில் பலர் கூடி, லாசி மெனத்திலுள்ள ஸ்ரீ. மாக்டொனல்டிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில்

(1) பூரண பொறுப்புள்ள ஐக்ய சர்க்கார் திட்டமே வேண்டுமென்றும் தற்போது மாகாண முழுப் பொருப்பாட்சி கொடுத்துவிட்டு இதர விஷயத்தை பின்னால் ஒத்திவைக்கப் போவதாகத் தெரிகிறதென்றும் இப்படிச் செய்யாமல்

(2) இம்மகா நாட்டிலேயே ஒருவித முடிவு செய்துவிடவேண்டுமென்றும்,

(3) மைனாரிட்டி பிரச்னையை பின்னால் தீர்த்துக்கொள்ள விட்டுவிட்டு, தற்போது ஒருவித முடிவு ஏற்படுத்திக் கொள்வது சாத்யமே என்றும்,

குறிப்பிட்டிருக்கிறார்கள் இதில் மகாத்மாஜி உள்பட 27 பிரதிநிதிகள் கையெழுத்துச் செய்திருக்கிறார்கள்.

## இந்தியாவுக்கு ஜார்ஜ் மன்னர் ஆதரவு

பக்கிங்காம் அரண்மனையில் ஜார்ஜ் மன்னர் மகாத்மாவுடன் பேசிவிட்டு, பண்டித மாளவியாவுடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். மேரி மகாராணியும், வேல்ஸ் இளவரசரும் பண்டித மாளவியாவுடன் சம்பாஷித்தனர். மற்றும் சில "பிரதிநிதி"களுடனும் ராஜ தம்பதிகள் சம்பாஷித்ததாகத் தெரிகிறது. இந்திய பிரச்னையில் ஜார்ஜ் மன்னர் பெரும் ஊக்கமும், சிரத்தையும் காட்டியதாக பொதுவாக நம்பப்படுகிறது. படிப்படியாக இந்தியா, குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடையவேண்டு மென்பதை ஜார்ஜ் மன்னர் ஆதரித்தாரென்று தெரிகிறது. இந்தியாவில் பலாத்கார குற்றங்களும், அராஜகமும் அதிகரிப்பதைக்கண்டு அவர் கவலை காட்டியதாகவும் கூறுகின்றனர். இந்திய பிரச்னையை ஜார்ஜ் மன்னர் பெரிதும் கவனித்து வருவதைக் கண்டு "பிரதிநிதிகள்" ஆச்சரியமுற்றனர்.

# பிரதம மந்திரி ஜாலப்பேச்சு.

ஜனங்கள் வெகு ஆவலாக எதிர் பார்த்திருந்த கில்ட் ஹால் பிரசங்கத்தில் பிரதம மந்திரி மிஸ்டர் ராம்ஸே மக்டொனல்டு பேசுகையில் இந்தியா பிரச்னையை யொட்டிக் கூறியதாவது:—

"ஆச்சரியகரமான பிரிட்டிஷ் சாம்ராஜ்ய" முன்னேற்றத்திற்கான முறைகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்திய மன்னர்களும், மற்றும் இந்திய ஜனங்களின் பிரதிநிதிகளும் மீண்டும் நம்முடன் கலந்து பேசி வருகிறார்கள். எவ்விதம் சரீரத்தை சீர்படுத்தி பாதுகாக்க வேண்டியது வைத்தியருடைய கடமையோ அதுபோல் அரசியல் அமைப்பாகிற ஓர் உருவத்திற்கு பங்கமேற்படாமல் பாதுகாக்க வேண்டியது அரசியல் நிபுணரின் கடமையாகும். அதிலும் இந்தியாவிலுள்ள விசேஷ நிலைமைக்கு தகுந்தவாறு ஓர் அரசியல் திட்டம் தயாரிப்பது மிகவும் கஷ்டமான காரியமே. அமுலுக்கு கொண்டுவர முடியாத ஓர் அரசியல் திட்டத்தை ஏற்படுத்துவது மடத்தனமாகும். இந்தியாவி லேற்படுத்தும் அரசியலால் இந்தியாவில் அமைதி யேற்பட வேண்டும். இன்னும் அதனால் சுய ஆட்சி பெற்ற இந்தியாவின் நிலைமை முன்னேற்றமடைய சந்தர்ப்பங்களும் ஏற்படவேண்டும். அத்தகைய உயர்ந்த கொள்கைகள் இந்தியர் மனதில் பதியும்படி செய்ததற்கு நாம் தான் பொறுப்பாளி. நாம் அவர்களுக்கு அளித்த போதனைகளாலும், கல்வியினாலும் தான் இப்போது இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதன் பயனை பூர்த்திசெய்ய நமக்குதைரியம் வேண்டியது அவசியமாகும். நாம் உண்மையுடன் நடந்துகொள்கிறோ மென்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்திருக்கிறோம். அவர்களும் நம்மீது நம்பிக்கையுடனிருக்கிறார்களென்பதே எனது அபிப்பிராயம். எனவே, இவ்வுலகத்தில் எந்த தேசத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அரசியலுக்கு பரஸ்பர நம்பிக்கையே அஸ்திவாரமாகும்.

Koviloor Digital Library



# பெத்தாபுரம் பட்டு.

(லக்ஷ்மி தாஸன்.)

வியாழக்கிழமை, 'காந்தி'யில் வெளியான விஷயம் பார்த்தேன். நான் சில தினங்களுக்கு முன் என் சுற்றுப் பிரயாணத்தில் கண்ட விஷயங்கள் எனக்குமட்டுமல்ல, சுதேசியத்திற்காக அரும் பாடு படும் அன்பர்களுக்கே அருவருப்பாயிருக்கும். காங்கிரஸ்காரர்கள்பால், குற்றம் கண்டு பிடிப்பது என் வேலையல்ல. மிக மனத்துயரத்துடனே எழுதுகிறேன். அன்னார்கள் சுயநலத்தை கவனியாது செய்த தியாகம், எழுதப்போகும் இந்திய சரித்திரத்திலே பொன் எழுத்தால் பொறிக்கப்படுமென்பதில் ஐயமில்லை. எனினும் தொழிலைப்பற்றி சிறிதளவேனும் அனுபோகமில்லாமல் பேராசைத் "திமிங்கல வியாபாரிகள்" சொல்லும் வார்த்தைகளை உண்மையாகவே நம்பி விடுகிறார்கள். சர்ட்டிபிகேட் கொடுக்குமுன் தொழில் நன்கு தெரிந்தவரும், உண்மை தேசபக்தி கொண்டவருமான ஒரு வியாபாரியை கூடவைத்துக் கொள்வது நலம். இது தான் தருணமென, சுதேசிய வியாபாரத்தில் நடக்கும் மோசடிகள் சொல்லத்தரமன்று. மில் கதர்களை, அசல் கதரென ஆரணியில் ஒரு ரப்பர் ஸ்டாம்பு செய்து 'மொகர்'குத்தி விடுகிறார்கள். மதுரையில் ஒரு திமிங்கலம் ஆரணி சீமை பாப்ளின் ஷர்ட்டிங்கை சுதேசி யென்று ரப்பர் ஸ்டாம்பு குத்தி அனியாய விலை அணா பன்னிரண்டு என்று போட்டு விற்பதை என் கண்ணால் கண்டேன். இப்படிச் செய்யலாமா வென்று கேட்டதற்கு என் செய்வது, விற்கவேண்டுமே என்கிறார்—இனி செய்வதில்லை என்று சொல்லி யிருக்கிறார். பார்க்கலாம்.

நான் பார்த்தவரை, பெத்தாபுரம் பட்டுகள் ஒன்றாவது, "இந்தியாவில்" உற்பத்தியான பட்டு நூலால் செய்யப்படவே இல்லை. ஒருக்கால் ஸ்ரீ லட்சுமி பட்டுத் தொழிற்சாலையில் தற்சமயம் செய்யப் படலாம். பட்டு நூல் எங்கிருந்து வரவழைக்கிறார்கள். அதற்கு "மாதிரி" "காந்தி" ஆபீஸ்க்கு அனுப்புவார்களா ?

பெத்தாபுரம் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியாரும் இது விஷயமாய் கவனித்து நான் விரும்புவதை நாட்டு நலத்தை உத்தேசித்து "காந்தி" வாசகர்களுக்கு—முப்பதாயிரம் பக்தர்களுக்கு உதவி செய்வார்களாக.

# சுதந்திரப் போராட்டம்.

தொண்டர்கள் பொறுமை:—திருப்பூரில் அன்னிய ஆடை கடைகளை மறியல் செய்த தொண்டர்கள் இருவர்மீது தாரையும் கிரோஸின் எண்ணையையும் சேர்த்து ஒரு கடைக்காரர் கொட்டினாராம். இதையும் சகித்துக்கொண்டு தாய் நாட்டின் விடுதலைக்கு ஊழியம் செய்யும் தொண்டர்களின் பெயர்கள் பாரதநாட்டின் சரிதையில் தங்கமையால் எழுதப்படுமென்பது திண்ணம்.

***

மாணவர்களே தயாரா?:—ஸ்ரீமதி கமலாதேவி மீரத் கல்லூரி மாணவர் கூட்டத்தில் பேசுகையில், தேசிய இயக்கத்தில் மாணவர்கள் கலந்து கொள்ளாதது மானக்கேடான சம்பவமென்றும், அடுத்த யுத்தத்திற்கு மாணவர்கள், ஆயத்தமாக விருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

***

தொண்டர் மூர்ச்சை யடைந்தார்:—திருப்பாபுலியூரில் பண்ருட்டி ஸ்ரீ. தங்கவேலு என்னும் தொண்டரை ஒரு கடைக்காரர் கொடியை பிடுங்கி கழுத்தில் குத்தினாராம். அடிபட்ட தொண்டர் சில நிமிஷ நேரங்களில், வாயில் நுரை தள்ளிக் கொண்டு மூர்ச்சை யடைந்தாராம். கழுத்து நரம்பு அறுந்து விட்டதாம். முனிசிபல் டாக்டர் ஸ்ரீ. ரங்கநாதனும், தில்லை கோவிந்த டாக்டரும் மருந்து கொடுத்து சிகிச்சை செய்த பிறகு தொண்டர் சுகமடைந்ததாகவும் ஆனால் மறியலுக்கு வர முடியாது புத்தி தடுமாறிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

***

கடைகளுக்கு போலீஸ் பந்தோபஸ்து—ராமநாதபுரம் ஜவுளிக்கடை மறியல் சாத்வீக முறையில் தீவிரமாக நடந்து வருகிறது. சில வியாபாரிகள் மறியல் செய்யும் சாத்வீகத் தொண்டர்களை கொள்ளைக் கூட்டத்தார் என உதாசினமாகப் பேசுகின்றனர். சுமார் நாலைந்து தினங்களாக போலீசார்களை கடைக்கு இரண்டு பேராக பந்தோபஸ்துக்காக கொண்டுவந்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

Koviloor Digital Library



# தாழ்த்தப் பட்டவர்கள் பிரச்னை.

மகாத்மா விளக்கம்.

“முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் தனி பிரதிநிதித்வ மளிக்க ஒப்புக் கொள்ளுகையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி பிரதிநிதித்வம் அளிக்க தாங்கள் மறுப்பதற்குக் காரணமென்ன?” வென்று மகாத்மாவை கேட்டதற்கு அவர் கொடுத்த ஆணித்தரமான பதில் பின் வருமாறு:—

தனி பிரதிநிதித்வ விஷயத்தில் முஸ்லிம், சீக்கியர் இவர்களையும் நான் சந்தோஷமாக எதிர்ப்பேன். ஆனால் 1916-ம் வருஷம் சீக்கியருக்கும், முஸ்லீம்களுக்கும் தனி பிரதிநிதித்வ மளிப்பதை நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். லக்ஷ்மணா புரி ஒப்பந்தத்தை புறக்கணிப்பது அனுபவ சாத்யமன்று என்பதை நான் உணருகிறேன். தாழ்த்தப்பட்டவர்களின் உண்மையான க்ஷேமத்தையும் தேச நன்மையையும் நான் கோருபவன். சில்லரை மைனாரிட்டிகளுக்கு தனிப்பட்ட பிரதிநிதித்வ மளிப்பதை நான் ஒப்புக்கொள்வேனாகில் நான் என் கடமையைச் செய்யாதவனாவேன். முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் நான் ஏற்கனவே கூறியதையே தற்போது ஆதரிக்கிறேன். அவர்கள், தங்களுக்கு தனிப் பிரதிநிதித்வம் வேண்டாமென்று கூறுவதற்கில்லை என்பார், ஆனால், இவ்விததனிப் பிரதிநிதித்வத்தை மேலும் பரவச் செய்வது விரும்பத் தக்கதல்லவென்றும் நான் அவர்களிடமிருந்து நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். வயது வந்தவர்களனைவருக்கும் ஓட்டுரிமை வழங்க வேண்டுமென்பதை நான் வற்புறுத்தி வருகிறேனாதலின் சகல வகுப்பினரும், சட்டசபையில் புகுந்து தேசத்தொண்டு புரிய சந்தர்ப்ப மேற்படும்.

கே:—சுயராஜ்யம், மிக அவசியமானதாகையால், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் தாங்கள் ஏன் விட்டுக் கொடுக்கக் கூடாது?

மகாத்மா:—ஏனெனில் அது சுயராஜ்யமல்ல. இது மூலாதாரமான விஷயமெனக் கருதுகிறேன். “தீண்டாதார்” முன்னேற்றத்தில் நான் கண்ணும் கருத்தும் செலுத்துபவன், இந்திய சமூகத்தை தனித்தனியே பிரிப்பதை நான் ஒப்புக்கொள்ள இசையேன்.

மகாநாடு முறிவதால் நான் பயப்படவில்லை. மகாநாடு முறியுமென்றே நான் உணருகிறேன். அவ்விதம் முறிந்தால் நாம் நமது தாய்நாடு திரும்பி சுயராஜ்ய மடைய இதர வழிகளைத் தேடுவோம்.

---

கடன் காரர் மகாநாடு:—அதிக வட்டியின் பளுவால் இம்சிக்கப்படும் விவசாயிகளும் தொழிலாளர்களும் தங்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதை யொட்டிய முறைகளை ஆலோசனை செய்ய டிசம்பர் மாதம் வார்தாவில் ஒரு மகாநாடு கூட்டப் போகிறார்களாம். கடன் கொடுத்தவர்கள் மகாநாட்டின் அறிக்கையும் சீக்கிரம் வெளிவரக்கூடும்.

***

உலகத்தின் சர்வாதிகாரி:—ஆகாச வானி மூலம் ஆகாகான் செய்த பிரசங்கத்தில் “நான் ஓர் சர்வாதிகாரியா யிருந்தால், உலகத்திலுள்ள சைன்யங்களையும் கப்பல் படைகளையும் ஒழித்து, அடுத்த மகாயுத்தம் நடக்காதவாறு செய்து விடுவேன், சர்வதேச சங்கத்திற்கு பதிலாக ஜினிவாவில், சர்வாதிகாரிக்கு உதவி புரிவதற்கு அகில உலக பார்லிமென்டு சபையொன்றை கூட்டுவேன்.”

ஹிந்து-முஸ்லீம்களுக்கிடையே சமரசம் செய்து ஒற்றுமை ஸ்தாபித்தாகி விட்டது. இப்பொழுது உலகசமாதானத்திற்கு முயற்சி. பேஷ்.

***

கான்ஸ்டேபில்கள் அமுல்:—திருநெல்வேலியில், ஸ்ரீ. லக்ஷ்மணன் என்ற தொண்டர், “சீமைத்துணியை பகிஷ்கரியுங்கள்” “கத்தர் கட்டிக் கொள்ளுங்கள்” என துண்டுப் பிரசுரங்கள் வழங்கிக் கொண்டிருக்கையில், அவரை 8 கான்ஸ்டேபில்கள் சேர்ந்துகொண்டு அடித்ததால் தொண்டருக்கு முகத்தில் கடுமையான காயமேற்பட்டு ரத்தம் கொட்டியது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை அமுல் நடத்திய கான்ஸ்டேபில்களின் செயலைக் குறித்து மேலதிகாரிகள் கவனிப்பார்களா?

---


## காந்தி

2-வது மலர்

2வது மலர் செ. 1 லிருந்து 50 வரை பயின்ட் செய்து வைத்திருக்கிறோம். வேண்டுவோர் ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பவும்.

“காந்தி” ஆபீஸ்,

11, ஆண்டர்சன் தெரு, சென்னை.


Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No: M. 2677

விலை காலணா
(மலாய் 2 சேண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 14உ,
பிரஜோற்பத்தி ஐப்பசிமீ 29உ சனிக்கிழமை || இதழ் 2

## தாதுபுஷ்டி லேகியம்!




டாக்டர்:—இந்த தாதுபுஷ்டி லேகியத்தை சாப்பிடு. உன் நோய் குணமாய்விடும்.

நோயாளி:— மண்ணையும், கல்லையும் உருட்டி வைத்துக் கொண்டு என்னையா ஏமாற்றப்பார்க்கிறீர்? அதை சாப்பிட்டால் நான் சிக்கிரம் மண்ணாய் போவது நிச்சயம். வேண்டாமய்யா வேண்டாம். அந்த பழங்களை கொடுங்கள் போதும்.

டாக்டர்:—அதை சாப்பிட்டால் ஜீரண மாகாதே?

நோயாளி:—பழம் ஜீரணமாகாதென்றால் உங்கள் மண் லேகியம் ஜீரணமாகுமா? என்ன ஐயா வேடிக்கை!

# மீண்டும் சட்ட மறுப்பு.

## மகாத்மா எச்சரிக்கை

சர்வதேச சமாதான இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைக்கும் பல ஸ்தாபனங்களின் பிரதிநிதித்துவம் தாங்கிய சமரசச் சங்கத்தார் கூட்டத்தில் மகாத்மா பேசியதாவது:—

"வட்டமேஜை மகாநாடு தோல்வியுறுவது போல் தோற்றுவதேன்? இக்கேள்விக்குப் பதில் யாதெனில், அம்மகா நாட்டில் இந்தியாவின் 'பிரதிநிதிகள்' எனச் சொல்லப்படுபவர்கள் இருக்கின்றனரே யன்றி நாட்டின் உண்மைப் பிரதிநிதிகள் இல்லை யென்பதே யாகும். சர்க்காருக்கு வேண்டியவர்களைக் கொண்டே அம்மகாநாடு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய மக்களில் 100-க்கு 90 பேர்க்குப் பிரதிநிதியாக இருக்கும் எனக்கு எதிராக நாற்று நாற்பத் தொன்பது அல்லது அதற் கதிகமான 'பிரதிநிதிகள்' கொணர்ந்து நிறுத்தப்பட்டிருக்கின்றனர். ஆகவே அந்நாற்று நாற்பத் தொன்பது 'பிரதிநிதிகளை' விட எனக்கு அதிகமான பிரதிநிதித்துவத் தன்மை உண்டென்பதை நான் எவ்வாறு நிரூபிக்கக் கூடும்? இங்ஙனம் நான் நிரூபித்து விடுவேனாயின் அம் மகா நாட்டிலும், பிரிட்டிஷ் மந்திரிகளிடமும் உள்ள எனது வேலை வெகு சுலபமாக முடிந்து விடும்.

இந்திய மக்களில் பெரும்பாலோர்க்கு காங்கிரஸே பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக விளங்குகிறதென்பதை நான் நிரூபித்தாலன்றி, நான் திரும்பிச் சென்று மீண்டும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் துவக்க வேண்டியதுதான்.

புதிய இந்திய அரசாங்கத்தை நடத்திவைக்கும் பொறுப்பைத் தன்மேற் போட்டுக் கொள்வதாக காங்கிரஸ் உறுதி கூறுகின்றது. இப்பொறுப்பை அம் மகாசபை சமரசப் பேச்சின் மூலம் பெறுதிருக்குமாயின், துன்பத்தை ஏற்று அனுபவிப்பதன் மூலம் அதைப்பெறும். இங்ஙனம் கோரியிருக்கவே லார்டு இர்வின் என்னை இங்கு அழைத்து வந்துள்ளார். நாங்கள் போதுமான அளவு துன்பமனுபவித்து விட்டோமென வும், இந்தியாவின் பிரதிநிதிகள் நாங்கள் தான் எனவும் லார்டு இர்வினுக்குத் தோன்றி யிருக்க வேண்டும். இல்லையேல் அவருக்கு அங்ஙனம் தோன்று முன் ஜனங்களைச் சிறையிலிருந்து அவர் விடுவித்தது தவறாகும். மேலும் நாட்டினருக்குக் காங்கிரஸ்தான் பிரதிநிதி யென்பதை அவர் அறிந்திராவிட்டால் அவர் ஏன் என்னுடன் சமரசப் பேச்சைத் துவக்கியிருக்க வேண்டும்?"

***

இவ்வாரம் லண்டன், பொருளாதாரக் கலாசாலை ஹாலில் மாணவர்களுக்கு ஓர் பிரசங்கம் நிகழ்த்தியபோது காந்திஜி பேசியதாவது:—

"பொய்யான சரித்திரத்தால் உண்மை யறியாது மயங்கி நிற்கும் ஆங்கில மக்களுக்கும் எனக்கு மிடையே பிரம்மாண்டமான கெலிவேற்பட்டிருக்கிறது. இக் கெலியைப் போக்கவே நான் வழிகாண்கிறேன். வட்டமேஜை மகாநாட்டிலிருந்து சமரசம் பேசுவதிலும் சிறைக்குள்ளிருந்து பேசுவது எளிதாயிருந்தது. இந்தியாவிற்கு விடுதலை கொணர்வதில் நான் தோல்வியுற்றால் எனது இந்திய மக்களை மீண்டும் சட்ட மறுப்பு ஆரம்பிக்க அழைப்பேன். இப் போராட்டத்தில் பத்து லட்சம் மக்களை பலியிடவும் தயாரா யிருக்கிறேன்.

---

## மாயமாய் மறையும் நீர்ப்பரப்பு!

வெஸ்அங்கியல்ஸ் மலைக்கு 30-மைல் தூரத்திலுள்ள கார்ப்பினோ ஏரியின் நீர்ப்பரப்பு, திடீரென மறைவதும் பழையபடி வெளிவருவதுமாக இருக்கின்ற புது இயற்கை விநோதம் திடீரெனக் காணப்படுகின்றது. தினந்தோறும் பலதரம் தண்ணீரானது பூமிக்குள் மறைந்துபோவதும், உலர்ந்த தரை மட்டும் வெளிப்படுவதும் பிறகு பூமியின் கீழ்ப்பாகத்தில் அதிர்ச்சிகளோடு திரும்பவும் நீர் கொதித்துக் கொண்டு மேலே வருவதுமாக இருக்கின்றது. தண்ணீர் திரும்பவும் பொங்கிக்கொண்டு தரை மட்டத்துக்கு வருவதற்கு முன்னேறு அதிக மூடுபனி யுண்டாகின்றது. ஆனால் ஏரி நிறைந்தவுடன் பனி விலகிப் போகின்றதாம்.

---

## வரவு செலவு மசோதா ஆயுள்?

புதிய வரவுசெலவு மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, இம் மசோதாவின் கால வரையைப்பற்றி எதிர் கட்சியினர் தீவிரமாக எதிர்த்துப் போராடுவார்களென தெரிய வருகிறது. இந்த மசோதாவின் ஆயுள் 1932-ம் வருடம் மார்ச்சு மாதத்திற்கு மேல் அதிகப்படுத்தக் கூடாதென திரு. மகுத் அகமத், திரு, கோசாமி பூரி முதலியவர்கள் பல திருத்தப் பிரேரேபணைகளுக்காக அறிக்கை செய்திருக்கின்றனர். மற்றும் விசேஷ வரி விதிப்பது பற்றி எதிர் கட்சியினர் அபிப்பிராயத்தை,இம்மசோதாவின் காலவரையை நிர்ணயிப்பதுபற்றி ஏற்படும் ஆதரவின் மீதே உறுதிசெய்ய வேண்டியதாக விருக்கிறது. தபால் கட்டணங்களை உயர்த்தும் விஷயமாக எதிர் கட்சியினர் எவ்வகையிலும் போர்தொடுக்க எண்ணி யிருக்கின்றனர்.

Koviloor Digital Library



# இந்தியா மந்திரியின் சூழ்ச்சி.

### திரு பிர்லாவின் கண்டனம்.

ரூபாய்க்கும் தங்க நாணயத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி எப்பொழுதும் பொது ஜனங்கள் பல விதமாக பேசி வருகிறார்கள். சர்க்காருக்கு எவ்வளவோ முன் எச்சரிக்கைகள் செய்தும், அவர்கள் காதில் போட்டுக் கொள்ள வில்லை. சில நாட்களுக்கு முன் கொடுத்த எச்ச ரிக்கைகளெல்லாம் இப்பொழுது உண்மையாக மாறி வருகின்றன. இந்தியாவிலிருந்து ஏற்று மதியாகும் சரக்குகளின் விலை குறைந்துவிட் டது. இந்தியாவில் இறக்குமதியாகும் சரக்கு களின் விலை அவ்வளவு குறையவில்லை. ஆனால் இறக்குமதியாகும் சரக்குகளின் விலை எப்பொழு தும் ஏற்றுமதியாகும் சரக்கு விலையைவிட அதிக மாகவே இருக்கிறது. சென்ற வருஷத்தில் இறக்குமதியாகும் சரக்குகளின் விலை 100க்கு 16 விதம் குறைந்திருக்கிறது. ஆனால் ஏற்று மதியாகும் சரக்குகளின் விலை 100க்கு 36 விதம் குறைந்திருக்கிறது. குடியானவர்கள் சரக்குகள் வாங்க முடியாததினால் இறக்குமதியும் ஏற்றுமதி யும் சரியாக நடைபெற முடியாமற் போயிற்று. ஆதலின் சர்க்கார் பணமில்லாமல் தவிக்க ஆரம் பித்தார்கள். நாட்டில் தங்கம் சிதறிப் போயி ற்று. கடன்கள் அதிகரித்து வந்தன. இந்திய சர்க்கார் ரூபாய் முறையிலோ, அல்லது ஸ்டர் லிங் முறையிலோ, கீழ்கண்ட கணக்குப்படி கடன் பட்டிருக்கிறார்கள்:—

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச் | 31, | 1924 | 91900 | கோடிகள். |
| ,, | 31, | 1927 | 1,006.14 | ,, |
| ,, | 31. | 1931 | 1,171·96 | ,, |

### புதிய கடன்கள்.

சென்ற ஏழு வருடங்களில் இந்தியா சர்க்கார் 253 கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறார்கள். அந்தத் தொகைக்கு, பாங்கி வட்டியைவிட 100க்கு 1 அல்லது 2 விதம் வட்டி அதிகமாயும் கொடுத்து வருகிறார்கள். இதர செல்வ மிகுந்த நாடுகளில் 100-க்கு 2 விதம் வட்டிக்குப் பணம் கொடுக்கப்பட்டு வரும்பொழுது பம்பாய் கல் கத்தா முதலிய இடங்களில் பாங்கிகளில் வட்டி 100க்கு 7 அல்லது 8 விதமிருக்கிறது 1926-வருஷம் ஏப்ரல் மாதம் 1 தேதியிலிருந்து இன்றைய தினம்வரை செலவாணி சுருக்க மா னது. 125 கோடி குறைந்துவிட்டது. வியாபார மும் கைத்தொழிலும் மிக்கக் கஷ்ட நிலைமை யில் இருக்கிறது. தன் கடனைத் தீர்க்க முடியா மல் ஒவ்வொரு குடியானவனும் அதிக சிரமப்படு கிறான். நிலவரியைக் கொடுக்க முடியாமலும் வாங்கின கடனின் வட்டியைக்கூடக் கொடுக்க முடியாமலும் அவன் தவிக்கிறான். இக்கஷ்டம் உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் இருக் கிறது. ஆனால் இந்தியாவில் குடியானவர்கள் படும் சிரமம் கொஞ்சமல்ல. ரூபாய் நாணய மாற்று விகிதம் அதிகப் படுத்தப்பட்டதால் தான், இவர்கள் அதிக கஷ்டத்திற் குட்பட்டு வருகிறார்கள்.

---

## கன்சர்வேடிவ் சதி

ஐக்கிய சர்க்கார் ஆட்சி முறையையும், இந்திய சர்க்காருக்குப் பொறுப்பையும் அளிப்பதை நிறுத்திவைத்துவிட்டு மாகாண சுயாட்சி யளிப் பதாகக் கூறி விடும்படி பிரதம மந்திரியையும், மந்திரி சபையையும் வற்புறுத்துவதற்காக கன் சர்வேடிவ் பிற்போக்காளர்கள் இந்தியா மந்திரி யுடன் சதிசெய்து வருகிறார்களென நிச்சயமா கத் தெரிகிறது. இப்பொழுது ஐக்ய சர்க்கார் ஆட்சி முறையை ஏற்படுத்துவதென்பது குறைந்தது இரண்டு வருஷங்கள் செல்லுமென் றும், அதற்குள் இந்தியாவிற்கு ஏதாவது சீர் திருத்தம் கொடுக்க வேண்டியதை யுத்தேசித்து மாகாண சுயாட்சி கொடுத்து விடலாமென்றும் பிறகு 'இந்தியரும் வெள்ளையரும் அடங்கிய கமிட் டியொன்றை நியமித்து அந்த வேலையை கவ னிக்கும்படிச் செய்து விடலாமென்றும் இவர் கள் யோசனை கூறுகிறார்களாம்.

---

## லாலா லஜபதிராய் வருஷாந்திர விழா

காலஞ்சென்ற தலைவர் லாலா லஜபதிராயின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தை நவம்பர் மா தம் 17-ம் தேதி கொண்டாடுவதற்கான முன் னேற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு வருகின் றன. காங்கிரஸ் கமிட்டியாரும், அச் சமயத் தில் பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தவும் நிதி திரட்டவும் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

Koviloor Digital Library



# ஆங்கிலேயர் கோர சொரூபம்:

## மகாத்மா பிரசங்கம்.

சென்ற மாதம் லண்டனில் இந்திய மாணவர் யூனியனில் மகாத்மா காந்தி செய்த பிரசங்கத்தின் விவரமாவது:—

நான் 30 நிமிஷ நேரம் தாமதித்து வந்ததற்கு மன்னிக்கும்படி முதலில் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். லண்டனின் பல பாகங்களிலும் நான் சொல்லிவருவதென்னவென்பது உங்களுக்குத் தெரிந்ததுதான். புதிதாக நான் எதையும் சொல்லப் போவதில்லை. பூரண சுயேச்சை யென்னும் பதத்திற்கு இங்கு என்ன அர்த்தம் கொள்ளப்படுகிறதோ அந்த அர்த்தத்தில் அதைப் பெற நான் வந்திருக்கிறேனென்பதை மட்டும் இங்கு வந்திருக்கும் இந்தியர்களுக்கும் ஐரோப்பிய நண்பர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ளப் போகிறேன்.

பூரண சுயேச்சை யென்பதில் சரிசமத்துவமான அந்தஸ்துள்ள பாகஸ்தியாக இந்தியா ஏகாதிபத்தியத்திற்குள் இருக்கக் கூடாதென்பதில்லை யென்பது காங்கிரஸ் கட்டளை யென்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். இவ்விஷயத்தில் எவ்விதத் தப்பபிப்பிராயமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அந்த சம்பந்தத்தை வைத்துக் கொள்ளவோ அறுத்துக் கொள்ளவோ இருதரப்பினரில் யாருக்கும் சுதந்திரமுண்டு; மேலும் பாதுகாப்பு, அந்நிய நாட்டு விஷயங்கள், வரவு செலவு இவைகளில் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரமிருக்கவேண்டும்.

ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கு இடங்கொடுக்கக் கூடிய ஒரு பிரிவும் இருக்கிறது, அதாவது எந்த ஏற்பாடும் இந்தியாவின் நன்மைக்குற்றதாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்ளலாம்.

எத்தேசமும் நியாய வாதத்தால் சுதந்திரத்தை அடைந்ததில்லை யென்பதை நான் அறிவேன். இன்னும், அநேகமாக அந்த தேசம் பாடுபடவேண்டும் இந்தியா மாத்திரம் அந்த விதிக்கு விலக்காக இருக்க முடியாது. சுயேச்சை யென்பது நியாய நியாயத்தைப் பொறுத்ததன்று; தைரியத்தைப் பொறுத்தது. சந்தர்ப்பம் வந்த பிறகுதான் நியாயவாதத்திற்கு இடமுண்டு. நீண்டகாலம் கஷ்டப்பட்டு விட்டதன் பலனாக அந்த சந்தர்ப்பம் வந்திருக்கலாம்.

கஷ்டப்படுவதென்பது இருவகைப் பட்டது. ஒன்று ஜெயித்தவனுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தி அவன் பணிந்துவரும்படி செய்வது. முதன் முதலாக காங்கிரஸ்தான் உலகிலேயே இழந்து போன சுதந்திரத்தை அஹிம்சையாலும் ஸத்தியத்தாலும் வெல்ல முற்பட்டிருக்கிறதென்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். இதில் இந்தியா இறங்கியது பெரிய காரியம். அந்த நிலைமையை அது காப்பாற்றிக் கொண்டுமிருக்கிறது.

இந்தியா முழுவதும் விழிப்பு ஏற்பட்டிருந்தும், அது அஹிம்ஸையையும் ஸத்தியத்தையும் பின்பற்றியிருக்கிறது. இந்தியா கஷ்டப்பட்டது பிரிட்டிஷாருடைய மனதில் உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்குமென்ற எண்ணத்துடன் நான் இங்கு வந்திருக்கிறேன். அநேகமாக விவாதத்திற்கு இடமிராதென்றே நான் நினைத்து வந்தே நான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறேன். நாளாகவாக அந்த வேலை அதிகக் கஷ்டமானதென்று தெரிகிறது. கடைசியாக ஒன்றும் நடக்காமலிருக்கலாம். இருந்தாலும் நான் எப்பொழுதும் எதிர்காலத்தில் நம்பிக்கை யுடையவனாதலால் வேறு ஒன்றும் செய்வதில்லை யென்பது ஏற்பட்டுப் போகும் வரை நான் நம்பிக்கையை இழக்கமாட்டேன்.

ஆனால் வெளியில் நான் செய்யவேண்டியதைவிட சர்வகக்ஷி மகாநாட்டில் செய்யவேண்டிய வேலை குறைவென்றே தெரிகிறது. நான் வேண்டுவதென்ன என்பது உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயர்களுக்கு கிரேட் பிரிட்டனிலிருந்து வரும் சுதந்திரத்தையே நான் இந்தியாவில் விரும்புகிறேன்.

எனக்கு ஒன்றும் கிடைக்காமற் போகலாம். ஆனால் அடுத்த போராட்டம் ஆரம்பமாகையில், அதாவது மறுமுறை நாங்கள் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கையில், இப்பொழுது விதைத்திருக்கும் விதை நல்ல பலன் தந்து இந்த தேச ஜனங்கள் உணர்ச்சி பெறுவதன் பலனாக உங்களுடைய மந்திரிகள் கஷ்டப்படும் தேசத்தினருடன் ராஜி செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்று நான் நம்புகிறேன். இப்பொழுது விதைக்கும் விதை பிரிட்டிஷ் வேகத்தைத் தணித்து, மனிதர்களை கோரத்தனமாக நடத்துவதை விட்டு விடும்படி செய்ய

Koviloor Digital Library



# இந்திய சர்க்காருக்கு சாட்டை

இந்தியா சட்டசபையில் நிதிமசோதாவை யொட்டி ஸர் அப்துர் ரஹீம் அவர்கள் கூறியதாவது:—

பொது சிக்கன ஆலோசனை கமிட்டிக்கு நான் தலைவராக விருந்தேன். எங்கள் கமிட்டி அறிக்கையில் 131 லட்சம் ரூபாய்க்கு சிக்கனம்செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி யிருந்தோம். சர்க்கார் 101 லட்சத்துக்கு சிக்கனம் புரியவே ஒத்துக் கொண்டனர். வைத்திய இலாகாவும், பொது ஜன சுகாதார இலாகாவும் மாகாண சர்க்கார் மந்திரிகள் பொறுப்பி லிருக்கையில், அதிக செலவுடன் இந்திய வைத்திய சர்வீஸ் டைரக்டர் ஜெனரல் பதவியையும் சுகாதார கமிஷனர் பதவியையும் ஏன் வைத்திருக்க வேண்டும்? விவசாய ஆராய்ச்சி சபையை ஏன் ரத்து செய்யக் கூடாது? கடந்த 10 வருஷங்களில் கமிஷன்களுக்கும் கமிட்டிகளுக்கும் 200 லட்சத்திற்குக் குறையாமல் செலவாகியுள்ளது. ஒவ்வொரு கமிஷன் அல்லது கமிட்டியின் அறிக்கையைப் புதிதாக பரிசீலனை செய்யவேண்டிய தேற்பட்டது. கமிட்டிகளையும் கமிஷன்களையும் நியமித்தால், அவைகளின் அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுவது சர்க்காரின் கடமையாகும். சிக்கன கமிட்டிகளின் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவரவில்லை யாதலால், சர்க்கார் அக்கமிட்டிகள் விஷயத்தில் நேர்மையுடன் நடந்து கொள்ளவில்லை. இந்தியாவின் ஒவ்வொரு அங்குல நிலத்தை அளந்து முடித்து விட்டபோதிலும், இன்னும் சர்வே இலாகாவுக்கு அதிக வேலை இருந்து வருகிறது. மிக்க சரியாக அளக்கும் முறைகளைக் கண்டுபிடித்திருப்பதாக சர்க்கார் எங்களுக்குக் கூறினர். அதற்காக 14 லட்சம் செலவிட இணங்கினோம். ஆனால் சர்க்கார் அதிக உத்தியோகஸ்தர்களை அமர்த்துவதைக் கைவிட விரும்பவில்லை. இந்த இலாகா ராணுவத்திற்கே முக்கியமாக பிரயோஜனம் உண்டு பண்ணுவது. ராணுவச் செலவு திட்டத்தில் சேர்க்காமல், ராணுவத்திற்காக செலவிடும் மறைமுகமான முறைகளில் இந்த இலாகா ஒன்றாகும்.

ராணுவச் செலவை எடுத்துக் கொள்ளலாம். ராணுவத்தின் பேரில் 51 கோடி ரூபா செலவிடுவதோடு, அது சம்பந்தமாக வேறு செலவுமிருக்கிறது. எல்லைப்புற காவலுக்காக 253 லட்சமும், ராணுவ ரயில்வே நஷ்ட யீடாக 174 லட்சமும், ராணுவத்திற்காக ரயில்வேக்கு 80 லட்சமும் செலவு செய்கின்றனர். ராணுவத்திற்கே உரிய கம்பியில்லாத் தந்தி, சர்வே இலாகா இவைகளுக்காக வேறு செலவு செய்து வருகின்றனர். ஆகமொத்தம் ராணுவத்திற்கு செலவு செய்யும் தொகை 51 கோடி ரூபா யல்ல; மற்று 60 கோடி ரூபா யாகும். இவ்வளவு பெரிய தொகையில் 4½ கோடி ரூபா மட்டும் குறைக்க இதுபோது உத்தேசித்துள்ளனர், அதிக செலவுக்கு ஈடு செய்ய ராணுவச் செலவை மேலும் குறைக்க இடமிருக்கிறது. சிவில் இலாகாக்களிலும் மேலும் சிக்கனம் செய்யலாம்.

---

லாம். ஆங்கிலேயருடைய கோரசொரூபத்தை நான் பஞ்சாபில் பார்த்திருக்கிறேன். வேறு பல இடங்களிலும் 15 வருஷகால அனுபவத்தின் பலனாக அதன் தன்மையை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவ்விதமே நடக்கிறதென்பதை சரித்திரத்திலும் நான் படித்திருக்கிறேன். மறுபடியும் அந்த விபரீதம் ஏற்படாமல் தடுக்கவேண்டுமென்பதே எனது நோக்கம்! என்னுடைய தேசத்தினர் கஷ்டப் படுவதைத் தவிர்ப்பதைக் காட்டிலும், மனிதர் மூர்க்கர்களாகி விடுவதைத் தடுப்பதிலேயே நான் அதிக சிரத்தையுடையவனாக இருக்கிறேன். என்னுடைய தேசத்தினர் கஷ்டப்படுவதைப் பார்த்து நான் பல சந்தர்ப்பங்களில் சந்தோஷப் பட்டிருக்கிறேன். வலுவில் கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளுவோர் தங்களையும் மனித சமூகத்தையும் உயர்த்துகிறார்கள். எதிராளிகளை எவ்விதமேனும் தோற்கடித்துவிடவேண்டு மென்றோ, அல்லது தங்களைவிட பலஹீனமானவர்களைச் சுரண்டவேண்டு மென்றோ உள்ள அவாவால் மிருகத்தன்மையை அடைந்து விடுகிறவர்கள் தங்களையும் மனித சமூகத்தையும் இறக்கி விடுகிறார்கள். அவ்வித நிலைமை ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது யாருக்கும் பெருமையைக் கொடுக்கக் கூடியதன்று.

இந்திய மாணவர்களே, இந்த விஷயத்தை நீங்கள் சிரத்தையுடன் பரிசீலனை செய்து அஹிம்ஸையிலும் ஸத்தியத்திலும் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும் பக்ஷத்தில் அதை உங்களுடைய நித்திய வாழ்வில் காட்டிக்கொள்ள வேண்டும். அவ்விதம் செய்வது எனக்குப் பெரிய உபகாரமாக இருக்கும். உங்களுடன் நெருங்கிப் பழகும் ஆங்கிலேயர்கள் உங்களைப் போல் யோக்கியமானவர்களை உலகில் கண்டதில்லையென்று உலகிற்கு அறிவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்படி செய்யுங்கள். அது உங்களுடைய தேசத்திற்கு மிகுந்த கௌரவத்தைக் கொடுக்கக்கூடியதாகும்.

# இந்திய மந்திரி அகம்பாவம்

## இந்தியருக்கு ராணுவ ஆதிக்கம் அவசியமாம்.

ராணுவ அமைப்பைப்பற்றி 'பம்பாய் கிரானிகள்' தலையங்கத்தில் எழுதுவதாவது:—

ராணுவப் பிரச்னை என்னும் ஒரு பாறையிலேயே வட்டமேஜை மகாநாட்டுக் கப்பலுக்கு ஆபத்து நேரிடுமென்பதில்லை. இதைவிட இன்னும் பன்மடங்கு அபாயத்தை விளைவிப்பன முக்கியமாக ராணுவ அமைப்பு, பொருளாதார நிர்வாகம், சமஸ்தானாதிபதிகள் இவற்றைப் பற்றிய பிரச்னைகளேயாகும். சில்லறைத் தடைகள் இன்னும் எவ்வளவோ இருக்கலாம். பிரபல இந்தியத் தலைவர்கள் கூடியிருந்தார் கூட்டத்தில் சர் சாமுவேல் ஹோர் வெளியிட்டதாகக் கூறப்படும் எதிர் தாக்கலான அபிப்பிராயங்கள் இவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமென்று கொள்வதற்கில்லை. இந்திய ராணுவத்தைப்பற்றி இத்தேசிய சர்க்கார் கொண்டிருக்கும் மறைமுக அபிப்பிராயமும் இதுவேயென்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்த அவியல் சர்க்காரின் லக்ஷியம், பொய்யான தென்றும் காலத்திற் கேற்ற வேஷமென்றும் வெளியாகும் வரையே மகாநாட்டு நடவடிக்கைகள் நிலைத்திருக்க முடியும். இந்திய ராணுவத்தைப்பற்றி இதன் அபிப்பிராயம் தெரிவிக்கும்படி வற்புறுத்தப் படுமாயின் இம்மகாநாடு உடனே சிதைவுறுவதற்கு யாதொரு தடையுமில்லை.

இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்குவதில் இந்தியர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கின்றனர். இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்குவதென்றால் சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட்டு இந்திய உத்தியோகஸ்தர்களை நியமிப்பது மாத்திரம் அல்லவென்றும், இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்குவதென்றால் இந்திய ராணுவம் இந்திய தேசிய சர்க்காரின் ஆதிக்கத்துக்குட்பட்டு, இந்திய சிப்பாய்களையும் இந்திய ராணுவ நிர்வாகிகளையும் கொண்டிருப்பதே யாகுமென்பதே இந்தியர் கொள்கை, இவ்விதம் ராணுவத்தைப் பூர்ணமாக இந்திய மயமாக்க பல வருடங்களாகுமென்பதில் சந்தேகமில்லை. எனினும், பிரிட்டிஷ் மந்திரி சபையாரின் அனுமதியேயன்றி, இந்தியாவில் இப்போது இருக்கும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களில் வெகு சிலரே, இந்திய ஆதிக்கத்திற்குட்பட்டு அதிக சம்பளத்தை விட்டுவிட்டு அற்ப சம்பளம் பெற்று வேலையினின்றும் விலகிக்கொள்ள விரும்புவார்கள். மற்றும் தகுந்த அனுபவம்பெற்ற எல்லா பிரிட்டிஷ் ராணுவாதிகாரிகளையும் வீரர்களையும் இந்திய சுயராஜ்ய சர்க்கார் நீக்கிவிடத் துணியாது. ராணுவத்தை மாற்றியமைக்க சிலகாலம் சென்றாலும் இராணுவம் பூராவாவது உண்மையாகவாவது இந்தியர் ஆதிக்கத்துக்குள் விடப்படவேண்டும். இதில் யாதொரு விதமான அபிப்பிராய பேதமும் ஏற்பட வழி விடக் கூடாது. இவ்விஷயமாக வட்டமேஜைப் பிரதிநிதிகளில் சிலர் எவ்விதம் கூறினாலும் கூறுவதாக இருந்தாலும் அபிப்பிராயம் கொண்டாலும் தேசிய இந்தியர்களுக்குள் இவ்விஷயமாக யாதொரு பலமான அபிப்பிராய பேதமும் இல்லையென்றே உறுதியாகக் கூறலாம்

---

## காங்கிரஸ் கோரிக்கையில் மகாத்மா உறுதி

"காங்கிரஸ் கோரிக்கையில் சர்க்கார் 100க்கு 80 விதம் கொடுத்து விட்டால் திரும்பவும் காங்கிரஸ் தனது போராட்டத்தை ஆரம்பிக்குமா?" வென மகாத்மா காந்தியைக் கேட்டதற்கு "என்னைப் பொறுத்தவரையில் பூரண சுயராஜ்யத்தில் கடுகளவும் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் உண்மையிலேயே 100க்கு 80 விதம் சுயாட்சியளித்து விடுவதாயிருந்தால் திரும்ப போராடுவதா அல்லது அந்த அரசியல் ஏற்று நடத்துவதா வென்பதைக் குறித்து காங்கிரஸ் யோசித்து ஒரு முடிவிற்கு வர என்றும் தயாராகவே யிருக்கிறது." என்று மகாத்மா கூறினார்.

---

## காந்திஜி சுற்றுப் பிரயாணம ரத்து.

பம்பாயில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸின் காரியக்கமிட்டிக் கூட்டம் செய்த தீர்மானத்தில் மகாத்மா, இனியும் லண்டன் மகாநாட்டில் கலந்துகொள்வதில் எத்தகைய பிரயோஜனமுமில்லை. எனினும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையும், சந்தர்ப்பங்களும் மகாத்மா காந்தி அங்கிருப்பதால் அவருக்கே நன்றாகத் தெரிந்திருப்பதால், இதன் சம்பந்தமாக ஒரு திட்டமான முடிவிற்கு வரும் உரிமையை மகாத்மா காந்திக்கே விட்டு விடுவதென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது என்று தீர்மானித்ததின் மேல் மகாத்மாஜி ஐரோப்பா சுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்து விட்டதாக தந்தி வந்துள்ளது.

Koviloor Digital Library



# வட்டமேஜை மகாநாடு

## மன்னர்பிரான் ஆசி

செவ்வாய்க் கிழமை யன்று பார்லிமெண்டு சபையைத் திறந்துவைக்கையில் மன்னர் பிரான் பேசியதாவது:—

“அன்னிய நாட்டினருடன் நேசபாவத்துட னிருக்கவே நான் விரும்புகிறேன். அமைதியை யும் நல்லெண்ணத்தையும் விருத்தி செய்வதே எனது சர்க்கார் நோக்கம், சர்வதேச சங்க வேலை யிலும் விசேஷ ஊக்கங் காட்டவே அவர்கள் முந் துவர். அடுத்த வருஷம் ஆயுதப் பரிகரண மகா நாட்டின் விஷயமாய் அதிக கவனஞ் செலுத்தி வருகின்றனர் அதன் வெற்றிகரமான முடிவு உலகத்துக்கே மகத்தான நலனளிக்குமென நான் நம்புகிறேன்.

உலகத்தின் செல்வ பொருளாதார நெருக்கடி எனது சர்க்காருக்கு மிக்க கவலையுண்டாகி யிருக் கிறது. இதர தேச அரசாங்கங்களுடன் ஒத் துழைத்து இதற்குத் தங்களாலான யாவையும் அவர்கள் செய்வர். ஒருவருக்கொருவர் உதவ வேண்டுமென்ற உணர்ச்சியுடன் சர்வதேச வியா பாரத்தைப் பெருக்க வழிகாண முந்துவர்.

இந்திய வட்மேஜை மகாநாடு தனது வேலை யைச் செய்து வருகிறது. பர்மா பிரதிநிதிக ளடங்கிய மகாநாடு சீக்கிரம் கூடும். இவ்விரு மகாநாடுகளும் வெற்றியுடன் முடிவுற என் மன மாறப் பிரார்த்திக்கிறேன்.

## இந்தியா இங்கிலாந்து யுத்தம்?

ஆக்ஸ்போர்டில் இந்திய மஜ்லிஸ் கூட்ட மொன்றில் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு பேசுகை யில் கூறியதாவது:—

“சுயஆட்சி” என்ற பதமும் “பிரிட்டிஷ் சாம் ராஜ்யம்” என்ற பதங்களையும் நான் விரும்பவி ல்லை. எந்த சிறுபான்மையினர்களுக்கும் ஏதே னும் பாதுகாப்புகள் வைத்து தயாரிக்கப் படும் எந்த அரசியல் திட்டமும் இந்தியவுக்கு முழுச் சுதந்திரத்தைக் கொடுக்காது.

இங்கிலாந்துடன் யுத்தம் செய்யவேண்டியது அவசியமெனத் தோன்றினல் அவ்வாறு யுத்தம் செய்ய இந்தியாவிற்கு உரிமை இருக்கவேண் டும். இந்த உரிமையைத் தான் இந்தியா கோருகிறது. இந்தியாவும் இங்கிலாந்தும் நேச மாக இருக்கவேண்டு மென்பதே இந்தியாவின் இஷ்டம். ஆனல் இந்தியா இங்கிலாந்தால் காண்டடப்படுவதை இந்தியா விரும்பவில்லை.

# தேசிய சர்க்கார் “மோசடி”

## லான்ஸ்பரி சவுக்கடி.

காமன் சபையில் மன்னர் பிரசங்கத்துக்குப் பதிலை திரு. ஜாப்ரேலாயிட் (கன்சர்வேடிவ்) பிரே ரேபித்தார். திரு. பிளின்ட் (தேசிய தொழிற் கட்சியினர்) அதை ஆமோதித்தார்.

திரு. லாயிட் அதைப் பிரேரேபிக்கையில் பிரிட்டிஷ் பொருளாதார நிலைமையைப் பற்றிக் கூறி தற்சமயம் சாதகமான இறக்குமதிவரிகளை யுத்தேசித்து அதிகமாக அந்நியச் சரக்குகளை இறக்குமதி செய்வதை எடுத்துக்காட்டி, உடனே இதைக் கவனிக்க வேண்டு மென்றும் சர்க்கா ருக்கு நல்ல ஆதரவிருக்குமென்றும் கூறினர்.

ஆயுத பரிகரணத்தைப்பற்றியும் சர்வதேச சங்கத்தைப்பற்றியும் மன்னர் பிரசங்கத்தில் கூறி யிருப்பதைத் தாம் பாராட்டுவதாக திரு. பிளின்ட் கூறினர்.

எதிர்ப்புக் கட்சியின் தலைவரும், மாஜி மந்திரி யுமான திரு. ஜார்ஜ் லான்ஸ்பரி பிரசங்கம் புரிகை யில், இப்போது உள்ள சர்க்கார் தேசிய சர்க்கா ரல்ல. இது, மோசத்தனத்தினலும், அகட விகடத்தினலும், ஒலிப்பெருக்கையின் துர்விநி யோகத்தினலும், ஆதாரமில்லாமல் ஜனங்கள் மனதில் பொருளாதார முதலிய விஷயங்களில் மிக்க கலவரத்தை உண்டுபண்ணியதனுலும், பதவிக்கு வந்ததாகும். நெருக்கடிகளை நிவர்த் திக்க நாங்கள் ஆலோசனை கூறுவோம்.

‘சேவிங்க்ஸ் பாங்கு நிதிகளிலிருந்து வருஷ முதலில் வேலையற்றோர் நிதிக்குக் கடன் கொடு க்கப்பட்டதனுல் அவற்றின் நிலை நெருக்கடியுற்ற தென திரு. வால்டர் ரன்சிமன் தேர்தலுக்கு முந்தின நாள் மாலை கூறினர். அது வெறும் அயோக்கியத் தனமான பொய் என்று தொழிற் கட்சியினர் கூறுகின்றனர்’. எனச் சவுக்கடி கொடுத்தார்.

Koviloor Digital Library



# கலா சாலைகள் சிறைச் சாலைகளே

கமலாதேவி சட்டோபாத்தியாயா

லாகூரில் கூடிய நான்காவது பாஞ்சால மாணவர் மகாநாட்டில் ஸ்ரீமதி. கமலாதேவி சட்டோபாத்தியாயா செய்த தலைமைப் பேருரை:—

இந்திய மாணவர்கள் மகாநாடு சாதாரணமாக லேசிய ஓர் பரிதாபகரமான கொண்டாட்டமாக இருந்து வருகின்றது. இம்மகாநாட்டில் ஒருவர் தலைமை வகிக்க வேண்டுமானால், ஓர் செத்த குதிரையை அடிக்க உதவி செய்வதைப் போன்ற தன்மையை அவர் மனம் அடைகின்றது. ஏனெனில், அடிக்கடி அவர்கள் ஊக்கத்தையும் சுறுசுறுப்பையும் உண்மை நிலையையும் கைவிட்டவர்களாகின்றனர். இந்த ரகசிய மண்டபத்தின் ரகசியத்தை ஆராய்ந்து அறியவேண்டும். உலகமோ கண்டு களிப்பதற்கானதோர் காட்சிச் சாலை. மாணவர்களும் ஓர் கோயில். கடமை என்னும் [illegible] பூஜிக்க பிரதிநிதி மாணவர்கள் நாளுக்கு நாள் இக்கோயிலை நாடிநகர்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், அந்தோ! இந்தியாவிலோ, மற்ற உலகத்தின் வழக்கத்திற்கு நேர் விரோதமாக இருக்கிறது. இந்திய மாணவனோ, தான் தினம் தினம் சஞ்சரிக்கும் இயற்கை ஞானத்திற்கும் தன்னைச் சுற்றியும் தோன்றும் அந்நியநாட்டு ஞானத்திற்கும் மத்தியில் அகப்பட்டுக்கொண்டு எவ்வகையிலும் துணிந்து செல்லுவதற்கின்றி இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்துக்கொண்டு இருக்கவேண்டியதாக இருக்கிறது. விளக்கக்கூறுமிடத்து தற்காலக் கல்வி முறை இந்நாட்டிற்கு ஒவ்வாத அந்நிய நாட்டு இறக்குமதியாகின்றது.

தற்கால இந்தியாவின் கல்வி முறை நம் நாட்டில் உற்பத்தியானதல்ல. கன்னிய கதிரவன் கதிர்கள் பட்டு செழுமையுற்று விளங்கும் பாரத நாட்டின் மண்ணில் முளைத்து வளர்ந்து மலர்ந்த மலரல்ல வென்பதை நாம் பூர்ணமாகத் தெரிந்து கொள்ள அநேக நாட்களைக் கழித்து விட்டோம். இது நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளாம் இழைகளைக்கொண்டு செய்யப்பட்ட ஆடையல்ல. இது நமக்குத் தகுதியற்றதோர் சட்டம். இது கபட எண்ணங்கொண்டு வார்க்கப்பட்ட விக்கிரகத்திற்கு ஒப்பாகும். இதை நாமே நமது கழுத்தில் மாட்டிக் கொண்டோம். இப்பொழுது நமது கழுத்தையே நாளுக்கு நாள் இது நெருக்கிக் கொண்டு வருகிறது. சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதற்குப் பதிலாக இக்காலக் கல்வியோ உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடிய சித்திரவதையாக மாறி விட்டது.

## கல்விச்சாலைகள் சிறைச்சாலைகளே

தற்கால கல்விக்கழகங்கள் உயிருள்ள பிரமாண்டமான பிலத்துவாரங்கள் அல்லது சமாதிகள். இவைகள் ஆதிகாலத்தில் இருந்ததாகக் கதைகளில் கூறப்பட்டிருக்கும் ராட்சதர்களைப்போல் தங்கள் போஜைசப் பெருவாய்களை திறந்து ஜீவன்களை விழுங்கிக்கொண்டு வருகின்றன. அச்சமாதிகளில் நீங்கள் உயிர் பிணங்கள் போல் படுத்துக் கிடக்கின்றீர்கள். உரம் தரும் உயிர் பெற்றெழுவதற்கான மார்க்கமின்றி தவிக்கும்படி விடப்பட்டிருக்கின்றீர்கள். இந்த நிதிக் கோட்டங்களில்தானா பரிசுத்த ஆணிமுத்துக்களையும், நவரத்தினங்களையும் நீங்கள் தேடித் திரிகின்றீர்கள். நாளுக்குநாள் சோர்வடைந்து வரும் உங்கள் உணர்ச்சிக்கு உரம்தந்து உயிர்த்தெழச்செய்வதற்கான எத்தகைய கீதங்களையும் பாட்டுகளையும் நீங்கள் அக்கல்லறைகளிலிருந்து கொண்டு கேட்டு மகிழப்போகின்றீர்கள்? மாய்த்துக் கொண்டே வரும் உங்கள் அவயவங்களுக்குப் பத்துயிரளித்து களிப்பிக்கச் செய்ய எத்தகைய சுகந்த காலை மலர் உங்களுக்கு முன்னால் அழகு பொலியத் தோன்றுகிறது? இப்படியிருந்தும் நீங்கள் பாதைகளில் அனாவசியமாக எறிந்து கிடக்கும் கற்களைப் போன்று உங்கள் அருமையும் பெருமையும் பொருந்திய வாழ்நாட்களை ஒதுக்கித்தள்ளி இவ்வாழ்க்கையிலேயே மனமொப்பி மகிழப் போகின்றீர்களா? உங்கள் ஜீவாத்மா ஜீவசத்தற்று உணர்ச்சியற்று உயிப்புப் பிண்டமாகக் கிடக்குமானால் இப்போது நீங்கள் கற்று வரும் கல்வியால் உண்டாகும் பிரயோஜனம் யாது? இக்கலாசாலைகளை சிறைச்சாலைகளென்றே கூறவேண்டும்.

Edited, Printed & Published by T. S. C.. chalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No: M. 2677

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 19வ, பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 4வ வியாழக்கிழமை || இதழ் 4

## யார் பெரியவர்?




இரைந்தவர் பெரியவரல்ல. வட்டமேஜை மகாநாட்டில் 150 பேர்கள் கூடியிருந்து கூச்சல் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் யாருக்கு பிரதிநிதிகள்? அவர்களுடைய சமூகத்திற்குமல்ல சொந்த சரீரத்திற்குமல்ல. அவர்களை ஆட்டிவைப்பவர்களின் பிரதிநிதிகளே! இவர்கள் எவ்வளவு கூச்சல் போட்டாலும் எப்படி பெரியவர்களாக முடியும்? மகாத்மா தனியாக ஒருவர்தான். இருந்தாலும் அவர் 100-க்கு 95 பிரதிநிதித்துவம் வாய்ந்த காங்கிரஸ் பிரதிநிதி! இந்த 150 பேர்களும் எவ்வளவுதான் தள்ளினாலும் அவர் உயரத்தை அடைய முடியாது. மகாத்மா பெருமைக்கும் இவர்கள் சிறுமைக்கும் யானைக்கும் கொசுவுக்கு முள்ள வித்தியாசமுண்டு. முதல் மந்திரியே ஜாக்கிரதை!

Koviloor Digital Library



# இரைந்தவர் பெரியவரா ?

அதாவது கூச்சல் அதிகமாக போடுகிறவர்கள் பெரியவர்களா ? அதிகக் கூச்சல் போடுவதால் அவர்கள் கட்சி நியாயமாய்விடுமா ? இந்தக் கேள்விகள் லண்டன் மகாநாட்டை கவனித்து வருபவர்களுக்கு தோன்றலாம். மகாத்மா காந்தி ஒரு பக்கம் நிற்கிறார். மற்றொரு பக்கம் சுமார் 150 பேர்வழிகள் வட்டமேஜை மகாநாட்டு பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் ஒரு கட்சியல்ல. 150 பேரும் 150 கொள்கை கொண்டவர்கள். மகாத்மா காந்தி தாமே 100-க்கு 95 பேருக்கு இந்தியர்களின் பிரதிநிதி என்று சொல்லுகிறார். ஆனால் இந்த 150 கிரகங்கள் தாங்கள்தான் பிரதிநிதிகள் என்று குறிக்கின்றன. மகாத்மா கேட்பவைகளுக்கு நேர்விரோதமாய் சொல்கின்றன. கூச்சல் போடுகின்றன. ஆர்பாட்டம் செய்கின்றன. ஒருவரின் சப்தத்தைவிட 150 பேர் கூச்சல், தொனியில் அதிகமாயிருக்குமென்பதை நாம் மறுக்கவில்லை. இந்த அதிகத் தொனியைக் கேட்டு சிலர் திகைத்துப் போயிருக்கிறார்களாம். மகாத்மாவிற்கு விரோதமாக 150 பேர் இருக்கும்போது மகாத்மா சொல்லுவதை எப்படி ஆதரிப்பது என்று அவர்கள் சொல்லுகிறார்களாம். யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சர்க்கார் சொல்லுவது உண்மை. அப்படியானால், மகாத்மா சொல்லுவது பெரிதா, இந்த 150 பிரமுகர்களும் கூச்சல் போடுவது பெரிதா என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு பதில் என்ன?

லண்டன் மகாநாடு கூட்டப்போவதாக முதலில் இர்வின் அறிக்கை வெளியிட்டபோது காங்கிரஸ் சில நிபந்தனைகள் போட்டது. அவற்றில் மகாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரராயிருக்கவேண்டும் என்பது முக்கியமானது. ஜெயக்கர்—சாப்ரு மகாத்மா ஜெயிலில் இருக்கும்போது சமாசத்தானம் நடத்தினார்கள் அல்லவா? அவர்கள் சர்க்கார் ஒப்புக் கொண்டதாய் சொல்லிய நிபந்தனைகளில் காங்கிரசிற்கு பெரும்பான்மையான பதவிகள் கொடுப்பது என்பதும் ஒன்று. பின்னால் பேசிய பேச்சுக்களில், மகாநாட்டில் ஓட் பலத்தால்—ஆள் பலத்தால்—ஒன்றையும் முடிவு செய்வதில்லையென்றும், பரஸ்பர சம்மதத்தினாலேயே முடிவு செய்வதாகவும் சர்க்கார் சொன்னார்கள். அப்படியானால் காங்கிரசிற்கு ஏகப்பிரதிநிதி போதும் என்று காங்கிரஸ் முடிவு செய்து மகாத்மாவை அனுப்பியது. இப்பொழுது சர்க்கார் உலகத்தை ஏமாற்ற முயற்சிப்பதைப் போல செய்வார்களென்று முன்பு தெரிந்திருந்தால், இந்த 150 பிரதிநிதிகளில் நூறுக்குமேல் காங்கிரஸ்காரர்களாய் இன்று இருப்பார்கள். அம்மாதிரி போயிருந்தால் ஷவுகத்அலி கட்சியோ, அம்பேத்கார் கட்சியோ ஒரு பெரிய கட்சியைப்போல சீமையில் ஆர்ப்பாட்டஞ் செய்யமுடியாது. சகல வகுப்புகளுக்கும் பிரதிநிதிகளாக காங்கிரஸ்காரர்கள் ஏராளமாய் போயிருப்பார்களாகையால் வகுப்புவாதிகள் வாலாட்ட முடியாது. ஓட் பலத்தாலோ ஆள்பலத்தாலோ ஒரு விவகாரத்தை முடிவு செய்யப்போவதில்லை என்று சர்க்கார் வாக்குறுதி கொடுத்தார்கள். அதனாலேயே காங்கிரஸ் ஏகப்பிரதிநிதியை அனுப்பியது என்பதை உலகத்திற்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆகவே கூச்சல் போடுவதைக்கொண்டு ஒரு கட்சிக்கு ஆதரவிருக்கிறது என்று முடிவு செய்ய முடியாது. இரைந்தவர் பெரியவரல்ல. கும்பலாக கூடிக்கொண்டு காங்கிரஸ் எங்களுக்கு பிரதிநிதிகள் அல்ல என்று சிலர் லண்டனில் கூச்சல் போடுவதைக் கண்டு யாரும் ஏமாந்துபோகவேண்டாம். இந்தியாவில் அந்த கும்பலுக்கு ஆதரவு கிடையாது. மகாத்மா சொல்லியபடி இந்தியாவில் ஓட் எடுத்துப்பார்க்கட்டும். அப்படி ஓட் எடுத்தால் காங்கிரசுக்கே 100-க்கு 99 ஓட் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இதை பிரிட்டிஷ் சர்க்கார் அறியாதவர்களா ? அறிந்தே வேண்டுமென்று குறும்புத்தனம் செய்கிறார்கள். இந்த குறும்புத்தனத்தை இனியும் விடவில்லையானால் அதன் பலனை அவர்கள் அநுபவிக்க நேரிடும்.

---

### மந்திரி சபையில் பிளவு.

இந்தியாவிற்கு தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுக்கவேண்டும் என்பதில் மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டிருக்கிறது. உள்நாட்டு மந்திரி சர். ஹெர்பர்ட் சாமுவேல், லார்ட் ரீடிங் போன்ற லிபரல்கள் உடனே பொறுப்பாட்சி கொடுப்பதை ஆதரிக்கிறார்கள். ஆனால் கன்சர்வேடிவ்கள் எதிர்க்கிறார்கள். இந்தத் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டு மெக்டனால்ட் விழிக்கிறாராம்.

Koviloor Digital Library



# காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் கதி

சூரத்தில், (13-11-1931) ல் ஸ்ரீ. கார்டன் தலைமையில் நியமிக்கப்பட்ட பார்தோலி விசாரணைச் சபையிலிருந்து காங்கிரஸ் வக்கீல் ஸ்ரீ. தேசாய் விலகிக்கொண்டார். சர்க்காரிடம் இருக்கும், இவ்விசாரணை சம்பந்தமான சில பத்திரங்களைப் பார்க்கவேண்டுமென ஸ்ரீ. தேசாய் தெரிவித்துக் கொண்டார். ஆனால் விசாரணைத் தலைவர் ஸ்ரீ. கார்டன் அதற்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். இதுவே ஸ்ரீ. தேசாய் அவ்விசாரணைச் சபையிலிருந்து விலகிக்கொள்ள காரணமாயிற்று. ஸ்ரீ. வல்லபாய் படேலும் அவருடைய சகாக்களும் தினந்தவறாமல் விசாரணையில் ஆஜராகி வந்தனர். ஸ்ரீ. தேசாய் தாம் விலகிக்கொள்ளும் முன்னர் நீண்டதோர் கடிதமெழுதி விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பித்தார். அதில் அவர், காங்கிரஸ் இவ் விசாரணையில் கலந்து கொள்ளுவதால் யாதொரு பிரயோஜனமான காரியமும் சாதிப்பதற்கு இல்லை யென்றும், எனவே தாம் இச் சபையிலிருந்து வருத்தத்துடன் விலகிக்கொள்ள வேண்டிய முடிவிற்கு வரவேண்டியிருக்கிறதெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

## கவர்ன்மெண்டின் ஊதாரித்தனம்

இந்தியா சட்டசபையில் ஸ்ரீ. எஸ். ஸி. மித்ரா, மீரட் சதிவழக்குக்காகச் செலவழிக்கப்பட்ட மொத்த தொகையின் விவரம் கேட்டகாலத்து சர். ஜேம்ஸ் கிரிரார் அளித்த பதிலாவது:—

மத்திய சர்க்காரும் ஐக்கிய மாகாண சர்க்காரும் மீரட் சதிவழக்குச் சம்பந்தமான 1931ம் வருடம் செப்டம்பர் மாசம் 30-ந்தேதி வரை செலவழித்த தொகை பன்னிரண்டு லட்சத்து பதினெண்ணாயிரம் ரூபாய். அக்காலத்துக்குள் அஸெஸர்களுக்கும் சாட்சிகளுக்கும் கொடுக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 60000. சர்க்கார் தரப்பு வக்கீலின் கட்டணமாக ஒன்பது லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு சம்பந்தமாய் ஏற்பட்டுள்ள சகல செலவையும் ஐக்கிய மாகாண சர்க்கார் பொறுத்துக்கொண்டனர். விசேஷச் செலவுகளை மத்திய சர்க்காரே செலவழித்தனர்.

## வெள்ளையர் துரோகம்.

ப்ரிபிரஸ் ஜர்னல் விசேஷ நிருபர் லண்டனிலிருந்து தெரிவிப்பதாவது:—

முதற்படியாக மாகாணப் பொறுப்பாட்சியை மட்டுமே கொடுக்க லேபர் கவர்ன்மெண்டு முடிவு செய்திருப்பதாக சென்ற மே மாதமே வில்லிங்டன் பிரபு ஸ்ரீமான்கள் ஜெயகர், சாப்ருவிடம் சொல்லியதாக உறுதியான செய்திகள் மூலம் தெரிகிறது.

தொழிற்கட்சி கவர்ன்மெண்டு அதிகாரத்தில் இருக்கும்போதே மாகாண பொறுப்பாட்சியை மட்டுமே கொடுப்பதாக நிச்சயம் செய்திருக்க, ஒரு சமரசத்திட்டம் தயாரிப்பதை போட்டி லண்டனுக்கு வரும் படியாக காந்திஜியை அழைத்தது படுமோசமான காரியமல்லவா? முன்னதாகவே இன்னதுதான் கொடுப்பதென்று தீர்மானம் செய்து கொண்டு பின்னர் விவாதம் செய்ய இந்திய பிரதிநிதியையும் காந்திஜியையும் லண்டனுக்கு அழைத்த துரோகச் செயலுக்கு மாக்டனால்டும் உடந்தை யென்பது புலனாகவில்லையா?

## மகாத்மாஜி புறப்பாடு.

மகாத்மாஜி நாளை வெள்ளிக்கிழமை லண்டனை விட்டுப் புறப்பட்டு இந்தியாவிற்கு ஜினோவாவில் நவம்பர் 29-ந் தேதி கப்பலேறுவார்.

மகாநாடு முறிந்தால் சட்டமறுப்பு உடனே ஆரம்பமாகுமென்று காந்திஜி பத்திரிகைப் பிரதிநிதியொருவருக்கு பேட்டி கொடுத்துப் பேசுகையில் கூறினார்.

## மாக்டனால்டுக்கு காந்திஜி கடிதம்.

காந்திஜி மாக்டனால்டுக்கு எழுதியிருக்கும் கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"மாகாணப்பொறுப்பாட்சி மட்டும் கொடுக்கும் எந்த திட்டத்தையும் நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. கவர்ன்மெண்டு கோஷ்டியினர் தப்புந் தவறுமாக என் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டி தங்கள் கட்சிக்கு ஆதரவைத் தேடுவதாகத் தெரிவதால்தான், நான் இக்கடிதத்தை எழுத நேர்ந்தது."

Koviloor Digital Library



# அடிமைச்சங்கிலி முறிப்போம் : மகாத்மா முழக்கம்.

"இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு தடையாக நிற்பது என்ன" வென்று லண்டனில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு மகாத்மாஜி அளித்த பதில் வருமாறு:—

பிரிட்டிஷார் தங்களுடைய அதிகாரத்தை விடுவதற்கு இஷ்டப்படவில்லை என்பது ஒரு காரணம். அதிகாரத்தை விடுவதற்கு இஷ்டப்படாதவர்கள் கையிலிருந்து அதிகாரத்தைப் பிடுங்க நமக்கு சக்தி இல்லையென்பது மற்றொரு காரணம். நீங்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் எதிர்பார்த்த பதிலை நான் அளிக்கவில்லையென்பதாக நீங்கள் நினைக்கக் கூடும். இந்தியர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டிருந்த போதிலும் நாம் பிரிட்டிஷார்களுடைய கைகளிலிருந்து அதிகாரத்தை பிடுங்க முடியும். தவிர அதிகாரத்தை க்கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷார் விரும்புவார்களாயின், அதே க்ஷணத்தில் இந்தியர்களுக்கிடையேயிருக்கும் பிளவும் வேற்றுமையும் மறையுமென்பது நிச்சயம். பிரிட்டிஷார் இதரர்களுடைய விஷயங்களில் தலையிட இஷ்டப்படாமல் நடுநிலைமை வகிப்பதாக நீங்கள் கூறலாம். ஆனால் பிளவை உண்டாக்குவதில் பிரிட்டிஷ் கவர்ன்மென்ட் ஓர் ஆப்பைப்போலிருந்து வருவதை நான் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். தவிர தங்களுக்கு சாதகமாக இருக்கக் கூடிய கோஷ்டியை கவர்மென்டு மகாநாட்டிற்கு பிரதிநிதிகளாக நியமித்துக்கொண்டிருக்கிறதென்பதையும் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். நமக்குள் வகுப்பு பிரச்னை இருப்பது உண்மையே ஆனால் காங்கிரஸில் நாம் இதை பைசல் செய்திருக்கிறோம் துர்அதிர்ஷ்ட வசமாக முஸ்லிம்கள் சிலர் காங்கிரஸ் செய்த முடிவை ஏற்கவில்லையென்பதற்காக நம்மைப்பிணைத்துக் கட்டியிருக்கும் சங்கிலியை இன்னும் பலமாக இறுக்குவதற்கு பிரிட்டன் முயற்சி செய்யுமானால் ஒரே சமயத்தில் சங்கிலியையும் வேற்றுமையையும் முறித்தெறிவதற்கு முயற்சிசெய்வோமென்பது திண்ணம். ஆங்கிலேயர் இந்தியாவை காலி செய்துவிட்டு, இங்கிலாந்தை ஆங்கிலேயர்கள் எப்படி நடத்திச் செல்லுகிறார்களோ, அப்படியே இந்தியாவை இந்தியர்கள் நடத்திச்செல்ல ஆங்கிலேயர்கள் அநுமதிக்க வேண்டுமென்றே நாம் கேட்கின்றோம்.

இந்தியா ஒரு பெருஞ் சிறையாகயிருந்து வருகிறது. சிறைச்சாலையில் கைதிகள் ஒழுங்காக நடக்கவேண்டுமென்று ஜெயிலர் சொல்லுவதுபோல் இந்தியர்களை வெள்ளையர் நடத்தி வருகின்றனர். பிரிட்டிஷார் கௌரவமாக இந்தியாவை விட்டு காலிசெய்வதே மேலாகும். இல்லையெனில் ஆங்கிலேயர்களுடைய கைகளிலிருந்து அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாகவே நாம் சுதந்தரத்தைப் பிடுங்குவோம் என்பது நிச்சயம். என் நாட்டிற்குத் திரும்பிச்சென்று சென்ற போராட்டத்தை விட கடுமையான போராட்டத்தில் ஈடுபடும்படி நான் என் தேசமக்களைக் கேட்கப் போகிறேன். நம்மைப் பிணைத்திருக்கும் அடிமைச் சங்கிலியை முறித்தெறிவோம்.

---

## சிட்டுக்குருவி அதிகாரம்.

---

முசிறி தாலூக்கா மேட்டுப்பாளையம் என்னும், கிராமத்தில் போர்டு எலிமென்டரி ஸ்கூல் ஒன்று இருக்கிறது. இவ்வூரில் கள்ளுக்கடை மறியல் நடந்து வருகிறது. ஷை பள்ளியில் 5ந்தாவது வகுப்பில் வாசித்துவரும் டி. ஆறுமுகம் என்பவர் மறியலில் கலந்து கொள்வது வழக்கம் (விடுமுறை நாளான சனி ஞாயிறு கிழமைகளில் மாத்திரந்தான் கலந்துகொள்வது) ஷை வகுப்பு உபாத்தியாயர் ஷை ஆறுமுகம் என்பவரை மறியலில் கலந்து கொள்ளக் கூடாதென்றும் கலந்துகொண்டால் காலை முறித்து விடுவேனென்றும், பள்ளியில் சேர்க்க முடியாதென்றும் பயமுறுத்தியதுடன் பலமாக அடித்திருப்பதாகவுந் தெரிகிறது.

---

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த கேப்டவுன் என்னும் நகரத்தில் நீண்டகாலமாகப் பேதுரு என்னும் பெயரால் ஒரு ஆமை இருந்து வந்தது. 1815-ல் வாட்டர்லூ யுத்தம் நடந்தபோதே அதற்கு நூறு வயது என்று சொல்லப்பட்டது. ஆகவே அது தன் 216 வயதில் இப்போதுள்ள சமீபத்தில் இறந்துவிட்டது.

Koviloor Digital Library


# கேள்விகளுக்குப் பதில்

(எம்டன் எழுதுவது.)

நெல்லிக்குப்பம் ஆலைவிஷயமாக நான் எழுதுவதை தொடர்ந்து படித்த அன்பர் ஒருவர் சில கேள்விகள் கேட்டு ஒரு நீண்டகடிதம் எழுதியுள்ளார். அவர் கடிதத்தின் கருத்தாவது: (1) ஏஜென்டையே குறிப்பிட்டுக் கண்டிப்பானேன்? (2) ஆலையைப்பற்றி உமக்கு எழுதவேண்டிய அக்கரை யென்ன? (3) குறைகளை ஏஜென்டிடம் நேரில் சொல்லி திருத்துவதுதானே, (4) தொழிலாளர் சங்கத்தைப் பலப்படுத்தக்கூடாதா. இது தான் அன்பர் கடிதசாராம்சம். "காந்தி" சிறியதாகையால் பதில் இரண்டு தடவையில் எழுத உத்தேசம்.

(1) ஒரு பெரிய தொழிற்சாலையின் நிர்வாகத்தை முழுதும் நிர்வகித்து நடத்தும் பொறுப்பு ஏஜென்டொருவருக்காத்தானுண்டு. மற்ற சில்லரை தேவதைகளையோ! குட்டி அதிகாரிகளையோ! அல்லது கண்ணுக்குத் தெரியாத மேலதிகாரிகளையோ கேட்டுப் பலனில்லை. ஆலையில் எவவித குறைபாடும் முடிவும் ஏஜெண்டைப் பொருத்ததே! மற்ற உத்தியோகஸ்தர்கள் முடிவும், மேலதிகாரிகள் முடிவும் ஏஜென்டின் அபிப்பிராயத்தை ஒட்டியே முடிவு செய்யப்படும். ஏஜெண்டு மனம் தாராளமாக இருந்தால் எல்லாம் நன்மையாக முடியும். ஆதலால் ஏஜென்டின் மனம் விசாலமாகி இன்னும் தொழிலாளர்களுக்கு சவுகர்யம் செய்துகொடுக்க வேண்டியே அவரை குறிப்பிட்டு நான் எழுதும் காரணம். மேலும் "ஊர் கெட்டுப்போச்சு, என்றால் ஊரிலுள்ள ஜனங்கள் கெட்டுப்போனார்கள்" என்று பொருள்படுகிறதுபோல, ஏஜென்டின் மீது குறை கூறினால் அவருட்பட பலர் நிர்வகிக்கும் ஆலையையே குறைகூறியதை யொக்கும்.

(2) ஆலையிருக்கும் ஊரிற் கடுத்தாற்போலிருப்பதுடன், சில மாதங்கட்குமுன் தொழிலாளர் சங்கத்தை வளர்த்துவந்த ஆவலாலும், பொதுஜன நன்மையை ஆர்வமாகக் கொண்டதாலும், நடமாடுங் கோவில்களுக்கு ஒரு நற்பணி யாற்றவேண்டுமென்ற ஆவலாலும், உலக தொழிலாளர்கள் எவர்களையும் விட இவ் வாலைத் தொழிலாளர்கள் மிகக் குறைந்த சவுகரியம் அடைந்து வருவதுடன், தொழிலாளர்கள் தங்கள் கடமையையும், உணர்ச்சியையும் மறந்து மவுடீகமாக அந்தகாரத்தில் மூழ்கி இருப்பதாலும் நான் எனது சகோதர தொழிலாளர்கள் குறையை நீக்க "காந்தியை" கைபிடித்தேன். மற்றும் குறைகண்டவிடத்தில் கண்டித்தல் என்பது எனக்கு சகஜமாகப் போய்விட்டது. குற்றம் ஆலையில் இருந்தாலும் சரி, ஆண்டவனிடத்திலிருந்தாலும் சரி, அரசனிடத்திலிருந்தாலும் சரி, அன்னை தந்தை, சுற்றத்தாரிடமிருந்தாலும் தாட்சண்யமில்லாது எடுத்துரைப்பவனே அறிவாளி யாவன். (மற்றது அடுத்தவாரம்.)

## வந்தேமாதர கீதம்.

நாகை. என். பாலசுப்பிரமணியம்.

சிங்காரி ஒய்யாரி என்ற மெட்டு.

பல்லவி.

வந்தே மா தாரமே (வந்)

அனுபல்லவி.

சொந்த தாயின் கமலம் ஒளிர்ந்து
மிளிர்ந்து வணங்கிட (வந்)
ஆண்டுபல விரும்புக் காப்புகொண்டு
வருந்தும் மாதினை பணிந்திட (வந்)
தாயைக் காக்கத் தடியடியைப்
பெறுவீர் வாரீர் (வந்)
அடிமை அடிமை யென்று அண்டம்
அழைப்பதை வெறுத்திடீர் (வந்)

சரணம்.

விடுதலை யடைந்திட ஜேயொலி ஆர்ப்போம்
அடிமை யறுந்திட அரசொலி வீழ்ப்போம்
பொடிபட போர்செய் பொறுமையே கொள்
வோம்
வாகனந்தேர்—ஆயுதங்கள்
தேகபலம்—யாவையும் நாம்
வேண்டோம்—மனந்தீண்டோம்
மோஹனெடும்—பாலனெடும்
ஏஹநிலைச்—சாந்தப்போரிட (வந்)

---

காந்தி ஜயந்தி கதர் விற்பனையில் ஆங்கிலேயர் ஒருவர் ஆயிரம் ரூபாய் கொடுத்தார். அவரது விருப்பப்படி ஐக்ய மாகாணத்திலும், பர்டோலியிலும் கதர் வாங்கி ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

***

மைசூரில் பல பூதக்கண்ணாடிப் படங்கள் காட்டப்பட்டுவந்தன. அவை இந்தியாவின் அடிமைத்தனத்துக்கு ஆங்கிலேயரே காரணமென்று காட்டுபவையாக இருந்தபடியால் அப்படங்களை மைசூர் ரெசிடெண்ட் பறிமுதல் செய்துவிட்டார்.

Koviloor Digital Library


## அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

வங்காளமாகாண கவர்ன்மெண்டு தனது அரசாங்க கெஜட்டில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மாஜிக் லாண்டர்ன் (விளக்கு மூலம் காட்டும் காட்சிப்படங்கள்) பதினைந்தை 124-எ. பிரிவின் கீழ் பறிமுதல் செய்திருப்பதாகக் கண்டிருக்கிறது. அப்படக் காட்சிகளில் எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களின் நமூனா பின்வருமாறு.

(1) உலகத்தில் இந்தியா தவிர வேறெந்த நாட்டிலும் உப்பு வரி கிடையாது. துர் அதிர்ஷ்டம் வாய்ந்த இந்தியாவில் மட்டுமே உப்புவரி இருக்கிறது.

(2) ஒரு காலத்தில் பிரிட்டனை விட்டு ரோமர்கள் காலி செய்த மாதிரி இந்தியாவை விட்டும் ஆங்கிலேயர் திடீரென்றுக் காலி செய்வார்களாயின் கல்வி, சுகாதாரம், செல்வம், இல்லாத நாட்டையே அவர்கள் விட்டுச் செல்லுவார்கள். இவ்வாக்கியம் ஸர். டேனியல் ஹாமில்டன் என்னும் ஆங்கிலேயக் கனவானலேயே கூறப்பட்ட வாக்கியமாகும்.

(3) 1858ல் ஈஸ்டு இந்தியா வர்த்தகக் கம்பெனி தன்னுடைய மேற்பார்வையை மாற்றிக் கொண்டு இந்தியாவை ஆள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாக மாறியது. ஆனால் ஹிருதயம் மட்டும் அதே ஹிருதயமாகவே இருந்தது. உண்மையைக் கூறுவதற்கும் நமக்குரிமை கிடையாது போலும்.

---

## இந்தியாவை இழக்கவேண்டியதே.

லண்டனில் முஸ்லிம்கள், ஐரோப்பியர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகிய மூவகையினரைத் தவிர்த்த மற்றப் பிரதிநிதிகளனைவரும் பிரிட்டன் இந்தியாவை இழக்கும் காலம் வந்துவிட்டதென்றே பேசிக் கொள்ளுகின்றார்கள். தத்தம் மனோ பாவங்களுக்கு ஏற்றாற் போல அவர்கள் துயரமோ களிப்போ அடைந்திருக்கின்றனர். ஒரு கட்சியினர், இந்தியாவுக்கு 'சோதனை' காலம் வரப்போகின்றதே என்று வருந்துகின்றனர். வேறொரு கட்சியினர் இனி இந்தியா தாராளமாகச் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கலாகும் என்று உற்சாகங் கொள்பவராயிருக்கின்றனர், என்பதாக ப்ரீ பிரஸ் தந்தி யொன்று கூறுகிறது.

## உடையார்பாளையம் ரயத்துகள் குறை

உடையார்பாளையம் ஜமீன் ரயத்துகள் குறைகளை விசாரணை செய்யும்பொருட்டு திருச்சி ஜில்லா கலெக்டர், ஜயங்கொண்டம் முகாமில் குடிகளை நேரில் கண்டு குறைகளை விசாரித்தார். அவைகளுள் முக்கியமானவையாவன:-பலவந்தமாக வசூல் செய்யும் அநியாய வரிகளைக் குறைத்தல். நிலங்களை உடனே அளக்கவேண்டும். விசாரணை செய்து அவசியமானால் வரிகளை வஜா செய்தல். உடையார் பாளையம் ஜமீன் ரயத்துகளின் குறைகளை விசாரணைசெய்து அறிவிக்க ஒரு உத்தியோகப் பற்றற்ற கமிட்டி நியமிக்கவேண்டும். திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ. என். ஹாலாஸ்யம் விசாரணையைக் கவனித்து வருகின்றார்.

---

## இந்தியா கோருவதும் இதுவே.

அந்நியச் சரக்குகளை மிதமிஞ்சியவாறு பிரிட்டனில் இறக்குமதி செய்வதைத் தடுக்கத் தீவிரமாக ஏற்பாடு செய்யக் காமன்ஸ் சபையில் இவ்வாரக் கடைசியில் ஒரு மசோதா நிறைவேற்றப்படும். இவ்விஷயத்தைப்பற்றி வியாபார போர்டு தலைவர் ஸ்ரீ. வால்டர் ரன்ஸிமன் திங்கட்கிழமையன்று பார்லிமெண்டில் ஒரு அறிக்கை வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப் படுகின்றது. இவ்வறிக்கையின் விஷயம் மந்திரி சபைக் கூட்டத்தில் விவாதித்து அங்கீகரிக்கப்பட்டதென்று நம்பப்படுகிறது. இந்த ஏற்பாட்டால், பிரிட்டிஷ் மார்க்கெட்டில் மிதமிஞ்சியவாறு இறக்குமதி செய்யப்படுகிறதாக நிரூபிக்கப்படும் சரக்குகளின்மீது அவசர வரிகள் விதிக்க வியாபார போர்டுக்கு அதிகார மளிக்கப்படுமென்றும், சிற்சில சந்தர்ப்பங்களில் சில சாமான்களின் விலையால் அவற்றின் விற்பனைக்கே தடை யேற்படக் கூடிய விதமாக வரிகள் அதிகமாக விதிக்கப் படுமென்றும், 'டைம்ஸ்' பத்திரிகை கருதுகின்றது.

இந்தியர்கள் கோருவதெல்லாம் இதே வித உரிமையைத்தான். நமக்குவேண்டாத பிரிட்டன் சரக்குகள் நம்நாட்டில் வருவதைத் தடுக்க நமக்கு உரிமை வேண்டுமென்று கேட்டால் இராஜத்துரோகமாம். இராஜத்துவேஷமாம். உடனே 144, 124 எ, சட்டங்களெல்லாம் புத்தகங்களிலிருந்து ஈசல் வெளிவருவதுபோல் வெளிவந்துவிடுகின்றன.

Koviloor Digital Library



# சர்க்கார் போலித்தனம்

சென்ற 13வ யன்று வட்டமேஜை மகாநாட்டைச் சேர்ந்த மைனாரிட்டி கமிட்டி கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் மகாத்மா பேசியது ஆணித்தரமானது. வகுப்பு பிரச்னைகளை கிளப்பி விட்டு சண்டைபோட மகாநாட்டை கூட்டினீர்களா, அல்லது சுயராஜ்ய அமைப்பைப்பற்றி ஆலோசிக்க மகாநாட்டை கூட்டினீர்களா என்று மகாத்மா இடித்துக் கேட்டார். மற்ற பிரதிநிதிகளைவிட காங்கிரஸே 100க்கு 95 பேருக்கு பிரதிநிதி என்பதை விளக்கிவிட்டு தீண்டாதாருக்கு தனித் தொகுதி கூடாதென்பதற்கு அழகாக காரணம் காட்டுகிறார். அவர் பேசியதன் சாரமாவது:—

தங்கள் வீடுவாசல்களையும், சொந்த அலுவல்களையும் விட்டு எங்களை ஆறாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இங்கு அழைத்துக் கொண்டு வந்ததும், வட்டமேஜை மகா நாட்டைக் கூட்டியதும் வகுப்புப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அல்லவென்பது திண்ணம். ஆனால் அரசியல் முறையை அமைக்கும் வேலையில் கலந்து கொள்வதற்காகவே நாங்கள் அழைக்கப்பட்டிருப்பதாக நீங்கள் பகிரங்கமாக அறிவித்து இம்மகாநாட்டைக் கூட்டினீர்கள். உபசார உணர்ச்சி நிறைந்த உங்கள் நாட்டை விட்டு, நாங்கள் திரும்பிச் செல்லுகையில் இந்தியாவின் சுதந்திரத்திற்கான அடிப்படை கோலியாகி விட்டதென்றும், காமன்ஸ் சபையும், லார்டுகள் சபையும் அதை அங்கீகரித்தவுடன் இந்தியா சுதந்திரமடைந்து விடுமென்றும் நாங்கள் எண்ணக்கூடுமென்றும் நீங்கள் உறுதி கூறினீர்கள். இப்பொழுதோ அதற்கு முற்றிலும் மாறான நிலையே இருந்து வருகின்றது. அதாவது வகுப்புப் பிரச்னை தீர்க்கப்படாததனால் அரசியல் முறை அமைக்கப்படப்போவதில்லையென்றும், ஆகவே இறுதியாக அரசியல் முறையையும், அது சம்பந்தமான மற்ற விஷயங்களையும், பற்றி நீங்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் வேலை முறையை அறிவிக்கப் போவதாகவும் நீங்கள் கூறுகின்றீர்கள். மிக்க ஆர்ப்பாட்டத்துடனும், பலர் மனதில் எழுந்த நம்பிக்கையுடனும் கூட்டப்பட்ட இம் மகாநாட்டுக்கு இது வெகுத் துக்ககரமான முடிவாகுமென்றே நான் எண்ணவேண்டியிருக்கிறது.

சிறுபான்மை வகுப்புகள் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்த விஷயமாக, ஸ்ரீ. ஹியுபர்ட்கார் எனக்களித்த வந்தனத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன்!

இவ்வொப்பந்தம் அதிகாரத்தை அதிகாரவர்க்கத்தினருடன் பங்கு போட்டுக் கொள்வதற்காகத்தானே யன்றி, பொறுப்புள்ள ஆட்சி முறையை அடைவதற்காக அல்லவென நான் சிறிதும் தயக்கமின்றி பிரிட்டிஷ் சர்க்காருக்கும், சிறுபான்மை வகுப்புகளின் பிரதிநிதிகளெனச் சொல்வோர்களுக்கும், உலக முழுதுக்குமே அறிவிப்பேன். இதுவே அப்பிரதிநிதிகளின் எண்ணமாயின்—அதுபற்றி சந்தேகமில்லை—அவர்களை நான் ஆசிர்வதிக்கின்றேன்! காங்கிரசுக்கு இதில் ஒரு சம்பந்தமும் கிடையாது. சுதந்திரமும் பொறுப்பாட்சியும் வளரச் சிறிதும் இடங்கொடாத ஒரு யோசனையை எதிர்ப்பதைக் காட்டிலும் காங்கிரஸ் எத்துணை வருஷ காலந்தானாயினும், தனது லக்ஷியம் ஈடேற வகையின்றி அல்லலுற்றுக் கொண்டிருப்பதே மேல்.

இத் திட்டத்தில் கண்ட யோசனைகளை 11 கோடியே 50 லக்ஷத்துக்கு மேற்பட்ட மக்கள் அதாவது ஜனத் தொகையில் 100க்கு 46 பேர் ஆதரிப்பதாக, ஒரு மறுக்க முடியாத உண்மையைப்போல் நீங்கள் கூறியதைக் கண்டு, பிரதம மந்திரியே, நான் ஆச்சரியமடைகிறேன். இப்புள்ளி விவரம் அடியோடு தவறு என்பதை நீங்களே கண்டுகொண்டிருக்கலாம். பிரத்தியேகப் பிரதிநிதித்வம் வேண்டியதில்லையென ஸ்திரீகள் தெளிவாக அறிவித்துவிட்டார்கள். இந்தியாவின் ஜனத்தொகையில் பாதிப்பேர் ஸ்திரீகளாதலின் 100க்கு 46 என்ற புள்ளி விவரம் பாதி குறைவுபடுகிறதல்லவா! (சிரிப்பு)

அது மாத்திரமன்று. காங்கிரஸ் ஒரு சிறிய கட்சியாக இருக்கலாம் ஆனால் இந்திய மக்களில், பிரிட்டிஷ் இந்திய ஜனங்கள் மட்டுமல்ல அகில இந்திய மக்களில் 100க்கு 85 பேருக்கு அல்லது 95 பேருக்குநானே பிரதிநிதியாக இருக்கின்றேனென நான் தயக்கமின்றி கூறுவேன்.

நீங்கள் காங்கிரஸ் அங்கத்தினர் ஜாப்தாவையும் இந்தியாவிலுள்ள சிறைகளின் கைதிகள் ஜாப்தாவையும் பரிசீலனை செய்வீர்களேயாகில், ஏராளமான முஸ்லீம்களுக்கு காங்கிரஸே பிரதிநிதியாக விளங்கி வந்தது-விளங்கி வருகிறது என்பதைக் காண்பீர்கள். சென்ற ஆண்டு காங்கிரஸ்

Koviloor Digital Library



கொடியின் கீழ் ஆயிரக்கணக்கான முஸல்மான்கள் சிறையிருந்தனர். இன்று காங்கிரஸில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும், ஆயிரக்கணக்கான தீண்டாதாரும், இந்தியக் கிறிஸ்தவர்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். காங்கிரஸில் பிரதிநிதித்துவம் பெறாத எவ்வகுப்பும் இருப்பதாக நான் அறியேன். நிலச்சுவான்தார்களும் ஆலை முதலாளிகளும், கோடீஸ்வரர்களும் கூட காங்கிரஸில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள்.

தீண்டாதார்களைத் தனிப்பட்ட வகுப்பாக வைக்கவேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. இவ்வாறு தனிப்பட்ட வகுப்பாக எக்காலம் வரையில் வேண்டுமானாலும் சீக்கியர்களிருக்கட்டும் இவ்வாறே முஸ்லிம்களும் ஐரோப்பியர்களுமிருக்கட்டும்; ஆனால் தீண்டாதார் தீண்டாதாராகவே எக்காலத்திலும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களா? தீண்டாமையிருப்பதைவிட ஹிந்து மதமே ஒழிந்து விடுவதை நான் சகிப்பேன். ஆகையால் டாக்டர் அம்பேத்காருக்கும் அவர் தீண்டாதாருக்காக உழைக்கும் உழைப்புக்கும் நான் விசேஷ மதிப்பு வைத்திருக்கின்றேனாயினும், அவர் இவ்விஷயத்தில் பெரிய பிசகுக் கட்டிக்கொண்டிருக்கின்றாரென நான் கூறவேண்டியிருக்கின்றது. இவ்வாறு சொல்வதில் எனக்கு எவ்வளவோ சங்கடமுண்டு; ஆயினும் இதைச்சொல்லாவிட்டால் தீண்டாதாருக்கு என் கடமையில் தவறியவனாவேன். உலக முழுவதுமே அளிக்கப்படுவதாயினும் நான் அவர்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன். நான் தக்க பொறுப்போடேயே பேசுகிறேன். டாக்டர் அம்பேத்கார் இந்தியாவிலுள்ள தீண்டாதார்கள் அனைவருக்கும் பிரதிநிதி என்று கூறிக் கொள்வது சரியல்ல. அதனால் ஹிந்து மதத்தில் பிளவு ஏற்படும். அதைப் பற்றி நான் என்றும் திருப்தியுறேன்; வருந்துவேன். தீண்டாதாரை முஸ்லிம்களாக்குவதையோ கிறிஸ்தவர்களாக்குவதையோ கண்டு நான் மனஸ்தாபப்பட்டேன். இந்து மதத்தில் பிளவு ஏற்படுவதை விட அதை நான் சகிப்பேன். தீண்டாதாரின் அரசியலுரிமைகளுக்காக வாதிப்பவர்கள் இந்தியாவின் விவகாரங்களை உணர்ந்தவர்களல்ல; ஹிந்து சமூகத்தின் அமைப்பே அவர்களுக்குத் தெரியாது. நான் ஒருவன் மட்டுமே இவர்களுக்கான தனியேற்பாட்டை யெதிர்ப்பதாயிருந்தாலும், என் உயிரையும் பொருட்படுத்தாது நான் எதிர்த்தே தீருவேன், என்று உறுதியாகக் கூறுகிறேன்.

# மின் வெட்டு.

## மகாத்மாவின் மாகாண சுயாட்சி.

மகாத்மா மாகாண சுயாட்சியை மட்டும் ஒப்புக்கொண்டு விட்டார் என்று ஒரு "காஸ்" கிளம்பிற்று. உண்மை அதுவல்ல. தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதற்கு வகுப்புவாதிகள் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவர்களோ தெரிந்தெடுத்த பிரதிநிதிகளல்ல. ஆகவே பூர்ண மாகாண சுயாட்சி கொடுத்து, சட்டசபை பிரதிநிதிகளைக்கொண்டு 6 மாத காலத்திற்குள் தலைமை சர்க்கார் அமைப்பை முடிவு செய்ய விட்டுவிட வேண்டும் என்பதே மகாத்மா அபிப்பிராயம். இப்படிச் செய்தால் தேசிய வாதிகளே பெரும் பான்மையோராக வருவார்கள். வகுப்புவாதிகள் வால் நீட்ட முடியாது. இதில் என்ன தவறு இருக்கிறது?

## பாத்வான் நடனம்

பாத்துவான் மகாராஜா வங்காளத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்தையே தாய் நாடாக பாவித்து அங்கேயே குடும்பத்தோடு சதா இருந்து வருகிறார். பிரிட்டிஷார் வாய் திறப்பதற்கு முன்பே ததாஸ்து சொல்ல தயாராய் காத்துக்கொண்டு நிற்பது அவர் வழக்கம். அவர் அமெரிக்காவிற்கு போயிருக்கிறார். அங்கே பத்திரிகை நிருபர்கள் அவரைப்பார்த்து "காந்திஜி இந்தியாவின் உண்மையான பிரதிநிதியா?" என்று கேட்டார்களாம். "இல்லை" என்று பாத்துவான் சொன்னாராம். பிரிட்டிஷார் தாளத்திற்கு தக்கபடி நடனம் புரியும் பாத்துவான் வேறு என்னதான் சொல்லமுடியும்? ஒரே ஒரு கேள்வி. இந்த பாத்துவானுக்கு மகாராஜா பட்டம் இருக்கிறது இவர் எந்தக்காட்டுக்கு ராஜா? இவர் குடிபடைகள் எவ்வளவுபேர்? இவற்றிற்கு பதில் சொல்ல அவரால் முடியுமா? ராஜ்யமில்லாத ராஜாவாக அவர் இருப்பதால், மகாத்மாவும் அப்படியே தான் இருப்பார் என்று அவர் நினைக்கலாம். அது அவர் தவறல்ல. அவருடைய பொய்யான மகாராஜா பட்டத்தின் தவறேயாகும்.

## முஸ்லிம்கள் மனமாற்றம்

வகுப்பு விவகாரம் முடிந்தாலொழிய ஐக்கிய ஆட்சி அமைப்பு கமிட்டி விவாதத்தில் கலந்து கொள்ள முடியாதென்று முஸ்லிம்கள் முன்னால் சொன்னார்கள். தாங்கள் பூச்சாண்டி பலிக்காது என்று கண்டுகொள்ளவே, 16உ கூட்டம் கூடியதும் தங்கள் மனதை மாற்றிக் கொண்டதாக அறிவித்திருக்கிறார்கள்.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No: M. 2677

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)





திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4¼.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 21௳, பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 6௳ சனிக்கிழமை || இதழ் 5

# எட்டாத பழத்திற்கு கொட்டாவி.




ஐக்கிய ஆட்சி கமிட்டியில் முஸ்லிம்கள் முன்னால் முட்டுக்கட்டை போட்டார்கள். தங்கள் பூச்சாண்டி பலிக்காமல் போகவே, 16௳ முட்டுக்கட்டையை எடுத்துவிட்டதாகவும் மறபடியும் மகா நாட்டில் கலந்து கொள்ளுவதாகவும் சொன்னார்கள். 17௳ பழையபடி மகாநாட்டில் கலந்துகொள்ள முடியாதென்று சொன்னார்கள். எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடுவதும், குகைக்குள் போவதும், திரும்ப வந்து பழத்தை பார்ப்பதுமாய் காலங்கழிக்கிறார்கள்.

Koviloor Digital Library



# ராணுவமில்லாத சுயராஜ்யம்!: மகாத்மா கண்டனம்

17வ. லண்டன் ஐக்கிய ஆட்சி கமிட்டியில் மகாத்மா பேசியதாவது :—

பூரண பொறுப்பை இந்தியாவிடம் மாற்றிவிட வேண்டுமென்பதே காங்கிரஸ் லட்சியம். அதாவது இராணுவம், வெளிநாட்டு சம்பந்தம் இவ் விஷயங்களில் பூரண அதிகாரமிருத்தல் வேண்டுமென்பதே. மேலும் சில சில்லரை மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கும். இம் முக்கிய விஷயத்தில் பொறுப்பளிக்க வேண்டுமென்று கேட்காமலே நாம் பொறுப்பாட்சி சர்க்கார் பெற்று விடலாமென்று உலகத்தையோ அன்றி நம்மையோ நாம் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. பாதுகாப்புப் படையையும், வெளிநாட்டு கொள்கையையும் பற்றிய அதிகாரமில்லாத தேசம், சுய ஆட்சிபெற்ற தேசமாகாது. தேசத்திற்கும் தேச சர்க்காருக்கும், பாதுகாப்புப்படை அத்யாவசியமாகும். தேச பாதுகாப்புப் படையில் வெளியார் அதிகாரம் செலுத்தினால், (அவர்கள் எவ்வளவு நட்பாயிருப்பினும் பரவாயில்லை) அந்த தேசம் பொறுப்பாட்சி பெற்றதாக ஆகவே ஆகாது. தற்போது இந்தியாவிலுள்ள இராணுவம், இந்திய சிப்பாய்களோ அன்றி பிரிட்டிஷ் சோல்ஜர்களோ யாராயிருப்பினும், உண்மையில் எதிரியின் படை என்பதே எனது அபிப்பிராயம். நான் அனுபவத்தின் மீதே பேசுகிறேன். தற்போது ராணுவத்தில் சீக்கியர், கூர்க்கர், பட்டாணியர், சென்னை வாசிகள், ராஜபுத்திரர்கள் இவர்களிருக்கலாம். இராணுவத்தில் யாரிருந்தவரினும் வித்தியாசமில்லை. அவர்களனைவரும், என்னை பொறுத்தவரை, வெளிநாட்டாரே யாவர். இராணுவத்திலுள்ளவரை நான் அவர்களை அணுகி பேச முடியாது. திருட்டுத்தனமாக பல சோல்ஜர்கள் என்னிடம் வந்திருக்கின்றனர். ஆனால் என்னுடன் பேசவும் பயப்படுகிறார்கள். ஏனெனில் யாராவது இதை பார்த்துக்கொண்டு தங்கள் மீது புகார் செய்வார்களோ என்ற பீதியே யாகும். நிற்க, இந்தியாவில் பிரிட்டிஷ் இராணுவமுமிருக்கிறது. அது அங்கு இருக்கும் நோக்கமென்ன? பிரிட்டிஷாரின் வியாபாரத்தை பாதுகாக்கவும், இதரர்கள் புகாமலும் தடுக்கவே பிரிட்டிஷ் படைகளும், இந்திய இராணுவமுமிருக்கின்றன வென்பது ஒவ்வொரு இந்திய குழந்தையும் அறிந்ததாகும். இந்தியாவில் வீர தீர ஜாதியார் வேண்டிய பேர் இருக்கின்றனர். வெளியார் படையெடுப்பார்களோ என்று முஸ்லிம்கள் பீதி கொள்ளவில்லை. இதரர்கள் தங்களை வெல்வார்களென்பதை சீக்கியர்கள் மனதிலும் நினைக்கமாட்டார்கள். கூர்க்கர்களோ கேட்கவேண்டியதில்லை அவர்களுக்கு தேசிய ஞானம் வந்துவிடில் "நானொருவனே இந்தியாவை பாதுகாப்பேன்" என்று ஒவ்வொரு கூர்க்கரும் வீரமுழக்கம் செய்வார். ராஜ புத்திரர்களோ கிரீஸ் தேசத்தில் நடந்த பயங்கர 'தர்மாப்லே" யுத்தம் போன்று ஆயிரம் "தர்மாப்லே" களுக்கு காரணராவர். ஆயுதங்களை கையாடாதவர்களுக்காக புதிதாக நீங்கள் ஆயுதங்கள் பிரயோகிப்பதை கற்றுக்கொடுக்கப் போகிறீர்கள்? நான் பொறுப்பேற்றால், மேற்கூறியவர்களனைவரும் எனக்கு துணை நிற்பர். வகுப்புப் பிரச்னையில் சமரசமேற்படாதிருக்கலாம். ஆனால் நாங்களொவ்வொருவரும் பரஸ்பரம் நம்பிக்கை கொண்டிருப்பவர். ஹிந்து சீக்கியர், முஸ்லிம் யாராண்டாலும், ஓர் வகுப்பென்ற முறையில் அவர்கள் ஆளப்போவதில்லை. இந்தியர்களென்ற முறையிலேயே ஆட்சி புரிவார்கள்.

இதுதான் என்னுடைய முக்கியமான நிலைமை. நான் விவரமாக விவாதிக்க இப்பொழுது விரும்பவில்லை. இந்த விஷயங்களை ஒப்புக்கொண்டு விட்டால் பிறகு பாதுகாப்புகளைக் குறித்து துவேஷ புத்தியில்லாதவர்கள் சரியாக தெரிந்துகொண்டு விடலாம். ஆனால் இன்னுமோர் முக்கிய விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன் லார்டு இர்வின் எதைக் கூறினாரோ அதையே கூற விரும்புகிறேன். ஒப்பந்தத்தில் பாதுகாப்புகள் இந்தியாவின் நம்மைக் குகந்தன என்று கூறுகிறார்கள். லார்டு இர்வின் என் பெயரையும் கூறி நான் அதைப்பற்றி யோசிக்க வேண்டுமெனக் கூறியதாகத் தெரிகிறது. அந்த பாதுகாப்பில் பிரிட்டன் நன்மைக்கானது இல்லாதது ஒன்றுமில்லையென்றே நான் கருதுகிறேன். வெளி விவகாரங்களில் பரிபூரண உரிமைவேண்டுமென்று நான் கூறினேன். இதை நடத்த நமக்கு சக்தியுண்டென நான் கருதுகிறேன். வெளிநாட்டாரோடும் உள்ளிருப்பவரோடும் சமாதானம் செய்து கொள்ள எங்களுக்கு திறமையுண்டு. நான் கூறுவது உங்களுக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். ஆனால் இதைப் போன்ற பைத்தியக்காரர்கள் காங்கிரசில் ஆணும் பெண்ணும் லக்ஷக் கணக்கிலிருக்கிறார்களென்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவர்கள் சார்பாகவே நான் இதை கூறுகிறேன்.

Koviloor Digital Library



## வெறும் ஏமாற்று!

ஜார்ஜ் பெர்னார்ட்ஷா என்றவர் ஒரு பெரிய பிரிட்டிஷ் நாடகாசிரியர். மென்று மென்று பேசுவதோ, விளக்கெண்ணெய் வாதம் செய்வதோ அவருக்கு ஜன்மத்திலும் பிடிக்காது. அவரிடம் எதைப்பற்றி அபிப்பிராயம் கேட்டாலும் சரி. அவர் அபிப்பிராயம் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகவே இருக்கும். கழுதையை கழுதை என்று சொல்லுவாரே யொழிய, முன்னால் பார்த்தால் கழுதை பின்னால் பார்த்தால் குதிரை என்று மழுப்பமாட்டார். இதுவரை பிரிட்டனில் ஒரு கட்சியே சர்க்கார் நடத்தி வருவது வழக்கம். சென்ற தேர்தலில் அந்த வழக்கம் போய் மூன்று கட்சியும் சேர்ந்து சர்க்கார் நடத்துவது என்று ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பெர்னார்ட் ஷாவிடம் "மான்செஸ்டர் கார்டியன்" நிருபர் அபிப்பிராயம் கேட்டார். அவர் சொல்லியதாவது :—

தேசிய சர்க்கார் மெஜாரிட்டி பெற்றது பழைய தந்திரத்தைக் கைக்கொண்டுதான் நடந்தது. அதாவது ஒவ்வொருவரும் தங்களால் எவ்வளவு தூரம் புளுகமுடியுமோ அவ்வளவு தூரம் தேர்தலில் பொய் சொன்னார்கள். ஆனால் ஒன்று நிச்சயம். தேசிய சர்க்கார் என்று சொல்லுவது வெறும் புரட்டு. ஆனால் கட்சி சர்க்காரிடம் ஜனங்கள் அலுத்துப் போய்விட்டார்கள் என்பது நன்றாய் தெரிகிறது. ஆகவே தேசிய சர்க்கார் என்ற பகட்டு பலித்து விட்டது. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகவே ஸ்ரீ. மெக்டனால்ட் வெறும் பித்தலாட்டத்தை தவிர வேறு எதுவும் பேசுவதில்லை. ஜனங்களுக்கு எந்தெந்த சமயத்தில் எதெது பிடித்தமோ அதை சொல்லுவதில் மெக்டனால்ட் கைக்காரர். அவர் வாக்கில் மூன்று கட்சிகள் அடங்கியிருக்கின்றன. மூன்று கட்சிகளிருந்தும் அவர் வெகு திறமையாக பேசுகிறார். அதற்காக அவரை நாம் கண்டிக்கவேண்டியதில்லை. அவருக்கு கெட்ட எண்ணம் இருப்பதாக நான் சொல்லமாட்டேன். அவருடைய புதுக் கட்சியில் அவரால் என்ன நன்மை செய்ய முடியுமோ அதை செய்வார். ஆனால் அவர் உண்மையாக ஒரு போதும் பேசுவதே கிடையாது.

## மறியலுக்கு ஜே!

மதுரை டவுனிலும், தாலூகா எல்லைக்குள்ளுமிருக்கும் பல மதுபானக்கடைகள் அக்டோபர் மாதபாக்கி வராத காரணத்தால் 15உ அதிகாரிகளால் மூடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டன. இதிலிருந்தே காங்கிரஸ் மறியல் இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நடந்தேறி வருகிறதென்பதை ஒருவாறு அறியலாம். எப்படியெனில் கிஸ்தி பாக்கி நின்ற கடைகளை மறு ஏலத்திற்கு கொண்டுவந்த போது, அவை வேறு ஒருவராலும் கேட்கப் படவில்லை. பழைய குத்தகைதாரர்களோ, தங்களுக்கு மறியல் இயக்கத்தினால் அதிக நஷ்டமேற்பட்டதெனக் கூறி, கிஸ்திப்பணம் கட்ட வாய்தா கேட்டனர். இது காரணம்பற்றி மறு ஏலம் முடிவடையாமல் ஒத்திவைக்கப்பட்டது. இது இங்ஙனமிருக்க வருமான இலாகா அதிகாரிகள் பாக்கி கொடுக்காத கடைகளை மூடி முத்திரைவைக்கும்படி உத்திரவிட்டார்கள். அதை யொப்ப 15உ மதுரை டவுனிலுள்ள 5 கடைகளும், மற்றும் பல தாலூகா எல்லைக்குள்பட்ட கடைகளும் மூடப்பட்டன. கடைக்காரர்கள் ஜில்லா கலெக்டரைக் கண்டு விண்ணப்பித்துக் கொள்ள, பணம் கட்டுவதுதான் ஒரே வழி என அவர் கூறவே, கடைக்காரர்கள் 15உ ஞாயிற்றுக் கிழமை யானதால் கஜானா விடுமுறை தினமான போதிலும், அவசரமாகப் பணங்களை கட்டி விட்டதாகத் தெரிகிறது. நேற்றிரவில் பழையபடி சில கடைகள் திறக்கப்பட்டதெனத் தெரிகிறது.

கடைக்காரர்கள் ஆயுத போலீஸ் பந்தோபஸ்து கேட்பதிலிருந்தும், மறியல் தொண்டர்களுக்கு தங்கள் கடைகளை விட்டுச் செல்ல லஞ்சம் கொடுக்க முன் வருவதாக சொல்லப்படுவதிலிருந்தும் மறியல் இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக முடிவடைந்திருக்கிறதென்றும், மதுபான வியாபாரம் எவ்வளவு குறைந்திருக்கிறதென்றும் நன்கு விளங்கும். என்று ஒரு நிருபர் எழுதுகிறார். மதுரை போலீஸ் வீரர்கள் தடியடி திருநாள் செய்தும் மதுப்பிசாசை பிடித்த சனியன் விடவில்லை. குடிப்பிசாசை இந்நாட்டை விட்டு துரத்தும் வரையில் காங்கிரஸ் தொண்டர்கள் சும்மாயிருக்கப்போவதில்லை.

Koviloor Digital Library



# ஈடன் பிரகஸ்பதிகள்

ஸ்ரீ: மகாதேவதேசாய், லண்டனிலிருந்து 'யங் இந்தியா' பத்திரிகைக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:—

ஈடன் அழைப்பு நாங்கள் எதிர்பாராதது. இது கன்ஸர்வேடிவ் கட்சியினரின் அரண். ஏகாதிபத்திய வாதிகளின் கோட்டை. ரெவரெண்டு பாப்லிஸன் கூறியபடி, இங்கே உயர் வகுப்பு இளைஞர்கள், உலகத்தை ஜெயித்து அதன் அநாகரீக மக்களை அடக்கி ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிப்பதெங்ஙனம் என்பதே போதிக்கப் பெறுவர். இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்கும் செழுமைக்கும் ஈடன் கலாசாலை நாலரை நூற்றாண்டுகளாக மிகுதியும் காரணமாயுள்ளது. ஸ்ரீ. கிளாட்ஸ்டோன், சாலிஸ்பரி, ரோஸ்பெரி, பால்போர் ஆகிய பிரதம மந்திரிகள் இங்கே கல்வி பயின்றவர்கள். வெல்லஸ்லி, மெட்காப், ஆக்லண்டு, எல்லன்பரோ, கானிங், எல்ஜின், டப்ரின், லான்ஸ்டௌன், கர்சான், இர்வின் முதலிய பல இந்திய ராஜப்பிரதிநிதிகள் இக்கலாசாலையிலேயே பயிற்சி பெற்றவர்கள். இந்தியாவிற்கு வந்த அநேக கவர்னர்களும் இதில் பயின்ற மாணவர்களே. இந்தியாவின் நிர்வாகத்திற்கு ஈடன் பயிற்சி மிக்க உதவி புரிந்து அதுபற்றி அதன் மாணவர் பலர் தங்கள் உயிரையும் தியாகஞ்செய்துள்ளாரென இது மிகுதியும் பெருமையடைகிறது. சிறந்த தளகர்த்தர்களாம் வெல்லிங்டன், ராபர்ட்ஸ், புல்லர் முதலியோரும் இவ்விடத்திலேயே கற்றவர்கள். "எங்கெங்கு இங்கிலாந்தின் கொடி பறக்கின்றதோ அங்கங்கு ஈடன் மாணவர்கள் உயிரைத் தத்தம் செய்துள்ளனர்" என்று அம்மாணவர்கள் கற்பிக்கப் படுகின்றனர். ஈடனிலுள்ள ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.

"ஈடன் கலாசாலையில் பிரதி தினமும் நாட்டின் எதிர்கால சரிதத்தில் திகழும்படியான ஒருவர் உற்பத்தி செய்யப்படுகிறார்."

இவ்விதம் இந்த ஆங்கில உயர் வகுப்பு மாணவர்கள் போதிக்கப் பெற்று வருங்காலத்து, அக்கலாசாலை அதிகாரிகள் ஏகாதிபத்தியத்தின் ஒரு விரோதியாகிய காந்திஜியை ஐந்நூறு வருட காலமாய் விளங்கும் இப்புராதன கலாசாலைக்கு வரவேற்க அதன் தலைவருக்கு அனுமதி யளித்தது எளிதான காரியமன்று. இவ் வரவேற்புக்கும் கலாசாலைத் தலைவர் அன்புக்கும் நாங்கள் நன்றி பாராட்டுவதன்றியில், ஆங்குள்ள மாணவர்களுக்கு ஏகாதிபத்திய கல்வியில் ஒரு புதிய பாடம் கற்பிக்கவே இவ்வழைப்பு அனுப்பப்பட்டிருக்க வேண்டுமென நினைக்கிறேன். ஈடனிலுள்ள வாசகசாலையில் 25000 புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அம்மாணவர் கற்கும் இந்திய சரிதமோ, இந்தியா தன்னைத்தானே காத்துக்கொள்ள வலியதன்று, ஆதலின் அது கீழ்ப்பட்ட நாடாகவே யிருக்க வேண்டும் என்ற விஷயமடங்கிய புராதன சரித்திரமே. 50 மாணவரடங்கிய ஒரு சங்கக் கூட்டத்திற்கு நாங்கள் சென்றிருந்தோம். காந்திஜி அவர்களுக்கு பிரசங்கம் செய்யவில்லை. "நீங்கள் விரும்பும் கேள்விகளைக் கேளுங்கள். நாம் ஒருவருக்கொருவர் வெளிப்படையாக மனதிலுள்ளதை வெளியிட்டு அளவளாவுவோம். பயப்பட வேண்டாம்" என அவர் கூறினர். அவர்கள் ஒன்றல்லது இரண்டு கேள்விகளை கேட்டனர். தங்கள் உன்னத ஸ்தானத்திலிருந்து விலகாதிருக்க அவர்கள் தடைப்படுத்தப் பட்டிருந்தனர். "ஷவுகத்அலி முஸ்லிம்கள் கோரிக்கையைக் கூறினார். தாங்கள் இந்துக்களின் கோரிக்கையைக் கூறக்கூடுமா?" வென அக்கூட்டத்தலைவர் காந்திஜியைக் கேட்டனர். மேலும் அவர் கேள்வி கேட்குமாறு சொன்னதற்கும், அதே கேள்வியையே ஓர் மாணவன் திரும்பவும் கூறினான். காந்திஜியை அவர் வீடு, உடை, செருப்பு, மொழி இவைகளைப்பற்றி அடுத்தடுத்து கேள்விகள் கேட்டனர். ஈஸ்ட் எண்டிலுள்ள எளிய வகுப்பு இளைஞர்களுக்கும் இவ்வாலிபர்களுக்கும் எத்தனை வேற்றுமையுள்ளது? ஆனால் அவ்வெளிய மக்கள் ஏகாதிபத்திய நிர்மாணிகளன்று.

எவ்விதமாயினும் காந்திஜி இக் கேள்விக்குப் பதிலளிக்க முன்வந்தார். அப்பதிலும் அவர்கள் எதிர்பார்த்த தொன்றல்ல. அதன் சாரம் வருமாறு:—

" இங்கிலாந்தில் உங்களுக்கு மிக்க செல்வாக்குள்ளது. உங்களில் சிலர் பிரதம மந்திரிகளாகலாம். தளகர்த்தர்களாகலாம். உங்களது எதிர்கால வாழ்க்கை உருவகப்பட்டு வருங்காலத்திலேயே, உங்கள் இதயத்தைக் கவர விரும்புகிறேன். நீங்கள், வம்ச பரம்பரையாகப் போதிக்கப்பட்டு வரும் பொய்ச் சரிதத்திற்கு மாறாக சில உண்மைகளை உங்கள் முன்னர் கூறுவேன். உயர்ந்த அதிகாரிகளிடை அறிவீனம் நிலவுகிறது. அறிவில்லையெனக் கூறவில்லை. அவர்களறிவு பொய்மையை ஆதாரமாகக் கொண்டதெனவே கூறுகின்றேன். உங்களை ஏகாதிபத்ய நிர்மாணிக

Koviloor Digital Library



# அடிமை வாழ்வு ஒழிந்தால்

(திண்டுக்கல் அப்துல் ஹமீது.)

"சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல்
மறக்கிலேனே" என்றார் பாரதியார்.

மாடமாளிகை கூடகோபுரத்தில் உல்லாசமாய் வாழ்ந்தாலும் சுதந்தரமில்லையேல் சந்திரனில்லா வானம் போன்றே இருளடைந்து விடுகிறது. உலகில் வீரபுருஷர்களாய் வாழ்வதற்கு சுதந்திரமே அத்யாவசியமாய் வேண்டற்பாலதாகும். பகுத்தறிவில்லா மிருகங்களும் சுதந்திரவாழ்க்கையை விரும்புகின்றன. பகுத்தறிவுள்ள மனிதன் சுதந்திரவாழ்க்கையை விரும்புவது மிக மிக அற்பமென்பதை விளக்கவேண்டியதில்லை. நாம் அடிமைச் சங்கிலியால் பிணிக்கப் பட்டிருக்கிறோம். எப்பக்கம் நோக்கினும் அடிமை என்ற பொல்லா அவச் சொல்லே நம் காதை செவிடு படச் செய்கிறது. அம்மவோ, அடிமை வாழ்வும் ஒரு வாழ்வா? இந்த அடிமை வாழ்க்கையே மிக மேலானது, அடிமை வாழ்வே எங்களுக்கு வேண்டுமென ஒரு சிலர் பறை சாற்றிக்கொண்டலைகிறார்களே, அத்தகையோர்களைப்பற்றி என் சொல்வது? அன்பர்காள் அடிமை என்ற அநாதியை நமது இந்தியத்தாய் எத்தனை நாளைக்குத் தான் சுமந்து கொண்டலைவாள். அடிமை என்ற பதம் நம் இந்தியாவை விட்டு நீங்குங்காலம் வந்துவிட்டது. அடிமையைக் குழி தோண்டிப் புதைக்கவே உலகம் போற்றும் ஒப்பற்ற சாந்தமூர்த்தியான காந்தியடிகள் லண்டன் போயிருக்கிறார். போன காரியம் வெற்றியடையுமாயின் இந்தியர் மனம் சாந்தியுறும். இல்லையேல் மீண்டும் போர். அடுத்த போர் உண்டாகாதபடி ஆங்கிலேயர் பாடுபடுவாரானால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஜே, ஜே, என்ற சப்தம் எங்கும் ஒலிக்கும்.

---

ளாகக் கருதாது, பிறதேசத்தைக் கொள்ளையிடுவதை நிறுத்தி, ஆயுத பலத்தாலல்லாது, சிறந்த ஒழுக்கத்தினால் உலக அமைதியை நிறுவும் ஓர் ஜாதியின் அங்கத்தினராக மதித்து சில உண்மைகளைக் கூற விரும்புகிறேன். என் சம்பந்தப்பட்டவரையில் இந்துக்கள் கோரிக்கை யென்பதொன்றில்லை. எனது நாடு விடுதலைபெறுவதில் உங்களைப் போலவே நானும் ஓர் இந்துவன்று. இந்துக்களின் சார்பாக இந்து மகா சபையினர் ஓர் கோரிக்கை வெளியிட்டிருக்கின்றனர். எனது அபிப்பிராயத்தில் அவர்கள் இந்துக்களின் உண்மைப்பிரதிநிதிகளல்லர். இந்துக்கள் தங்கள் பிரச்னைகளை தேசீயப் பிரச்னைகளாகவே கொள்வர். தேசீயவாதிகள் என்பதற்கல்ல; இதுவே அவர்களுக்குப் பொருத்தமானது. இந்துக்கள் பெரும்பான்மையரா யிருப்பதனால், அவர்களே முன் வந்து தாராள நோக்கத்துடன் சிறுபாலாருக்கு அவர்கள் வேண்டுவன அளிக்கவேண்டும். இதுவே நிலைமையைச் சீர்திருத்தும் வழி. இது பற்றி நான் அவர்களிடம் மிகவும் வற்புறுத்தியிருக்கிறேன். இந்து சமூகம் யாது விரும்புமென்பதை யெவரும் அறியார். நான் அவர்களிடைப் பழகிய வரையில் அவர்கள் சட்டசபை ஸ்தானத்துக்கும், உத்தியோகத்துக்கும் சண்டை போடுவது அற்பத்தனமெனக் கருதுவதாகவே அறிகிறேன். வகுப்புப்பேய் தலை விரித்தாடுவது நகரங்களிலேயே. அவை இந்தியாவின் பாகமன்று. இவை, லண்டன் முதலிய மேல் நாட்டு நகரங்கள். அறிந்தோ அறியாமலோ கிராமங்களைக் கொள்ளையடிப்பதற்கு உதவும் கமிஷன் ஏஜெண்டுகளாக யிருந்து பங்கு பெறும் ஸ்தலங்கள்.

---

## காந்தி கிராமபோன் பிளேட்.

மகாத்மா கொலம்பியா கம்பெனிக்குச் சமீபத்தில் கொடுத்திருக்கும் பிரசங்கப் பிளேட்டுக்கு, டிசம்பர் மாத இறுதிக்குள் 10 லட்சம் பிரதிகளுக்குத் தேவை ஏற்படுமென்று கொலம்பியாக் கம்பெனியார் எதிர்பார்க்கிறார்கள் அதனால், அவர்கள் தற்பொழுது வேறு வேலைகளையெல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு, இந்தப் பிளேட்டுகள் தயாரிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள். பிளேட்டின் விலை ரூ. 4 வைக்கப்படும். விற்கும் பிளேட்டு ஒன்றுக்கு அதன் விலையில் 100-க்குப் பத்து விகிதம் காந்திஜீ குறிப்பிடும் ஒரு தர்ம ஸ்தாபனத்திற்கு செலுத்திவரக் கம்பெனியார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். குரல், நடை, சுத்தம் ஆகிய எல்லா அம்சங்களிலும் பிளேட் மிக நேர்த்தியாக அமைந்திருக்கிறது.

Koviloor Digital Library



## டெல்லி தலையாட்டிகள்

காந்தி மகான் ஏழைகளுக்கு உப்பாவது செழிப்பாய் கிடைக்கட்டும் என்று போர் தொடுத்தார். அவர் போராட்டத்தால் கடற்கரையோரத்தில் உள்ளவர்களுக்காவது உப்பு இனமாய் கிடைக்க வழி ஏற்பட்டது. பிச்சை எடுத்தாராம் பெருமாள். அதைப் பிடுங்கிறாராம் அநுமார். காந்திமகான் உப்பு விலை மலிவுக்காக போர் தொடுத்தார். டெல்லி சட்டசபையிலுள்ள தலையாட்டி அங்கத்தினர்கள் உப்பு விலையை அதிகரிக்க ஓட் கொடுத்திருக்கிறார்கள். தற்கால உப்புவரியில் கால்பாகம் அதிகமாக்க சட்டசபையில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இந்த பாவத்தை விலை உயர்வுக்கு ஓட் கொடுத்தவர்கள் மூட்டை கட்டிக்கொள்ள வேண்டும். அதைவிட்டு தப்ப முடியாது. கொஞ்சமாவது ஏழைகள் மீது அன்பு இருந்தால் இந்த தலையாட்டிகள் ஓட் கொடுப்பார்களா? இந்த உப்பு வரி உயர்வுக்கு 55 பேர் சாதகமாகவும் 48 பேர் பாதகமாகவும் ஓட் கொடுத்திருக்கிறார்கள். சாதகமாக ஓட்கொடுத்தவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று நினைக்க வேண்டாம். இதில் சுமார் 45 பேர் சர்க்கார் ஆசாமிகள். சர்க்கார் என்ன தீர்மானம் கொண்டு வந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு கையை தூக்குவதற்காகவே அவர்களை சட்டசபையில் வைத்திருக்கிறார்கள். இந்த சர்க்கார் இயந்திரங்கள் கை தூக்கியதைப் பற்றி நமக்கு கவலையில்லை. ஆனால் சுமார் 10 பொதுஜன பிரதிநிதிகளாய் வந்தவர்கள் சர்க்கார் பக்கம் கை தூக்கியதைக் கண்டுதான் நாம் வருந்துகிறோம். இந்தப் பேர்வழிகள் ஸ்ரீ. யாமின் கான் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம்கள். இந்தியாவில் முஸ்லிம் ஏழைகள் கிடையாதா? அல்லது முஸ்லிம் ஏழைகள் உப்பில்லாமல் கஞ்சி குடிக்க இவர்கள் பழக்கி யிருக்கிறார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. இவர்கள் கைதூக்கியதால் இந்து ஏழைகள் மட்டுமல்ல, முஸ்லிம் ஏழைகளும், மற்ற எல்லா ஏழைகளும் உப்புக்கு அதிகவிலை கொடுக்க வேண்டியே நேரிடும். இந்த யோசனை இவர்கள் மண்டையில் நுழையாமல் போய்விட்டதே! கஞ்சிக்கு உப்புப் போடுவதில் குறுக்கே வந்துநின்று ஏன் பாவ மூட்டையை கட்டிக் கொள்ளுகிறார்கள்?

## நமது நாடு

(எம்டன் பாடியது.)

எங்களது திருநாடு கேட்கிறயோ தம்பி
என்ற மெட்டு

(கண்ணிகள்)

எங்களது தேசம் மிகசிறப்புற்றிடும்—தேசம்
ஐயா சிறப்புற்றிடும்—தேசம்
இணையில்லாத தேசமிது இகபரந்தரும்—தேசம்
கங்கை சிந்துநதி ஓடுங்கருணைமிக்க—தேசம்
காமதேனுங் கற்பகமுங் கலந்துவாழ்ந்த—தேசம்
தேவர்வந்து தவம்புரிய தேடிநின்ற—தேசம்
தேனொழுகும் வனங்களுறை திங்கள்குல—தேசம்
ராமர்தரும ராசாண்ட நமது இந்து—தேசம்
சாமள கோபாலகிருஷ்ணன் தானுதித்த—தேசம்
அருந்ததியார் அனுசூயை அவதரித்த—தேசம்
அற்புதக் கற்புள்ளமாதர் உற்பவித்த—தேசம்
கைத்தொழிலும் வர்த்தகமும் விர்த்திசெய்த-தே
சத்தியமும் ஒற்றுமையும் மிக்க இந்து—தேசம்
ஒருபிடியில் நாறுகெஜதுணியை உள்ளங்கையில்
உள்ளடக்கும்படியே செய்த உத்தமநல்—தே
பல்வேறு மதத்தினருஞ் ஜாதியருந் தங்க
பாவிஇடமளித்து செல்வம பாலிக்குமித்—தேசம்
பிறநாட்டார் பிழைக்கவழி அருளியநல்—தேசம்
பேதகஞ் சிறிதுமெண்ணு பிரம்மசிருஷ்டி—தேசம்
எத்தேயமுமாசை கொள்ளு மெங்களது—தேசம்
ஏதுநிதம் அறிந்திடாத இறைவனருள்—தேசம்
பாவலரும் நாவலரும் பரவிநிற்குந்—தேசம்
பக்தகோடி வந்துகுத்த பாக்யமுள்ள—தேசம்
பிறர்க் கடிமையாவதையே பொறுத்திராத—தே
பேதகஞ்செய்தாள் பவரைப் பிரித்தெடுக்குந்—தே
காந்திமஹான் பெயர்சொல்ல களிப்படையுந்-தே
சாந்தகுண தெய்வதமிழ் ஓங்கிடுமித்—தேசம்

## காந்தி

**2-வது மலர்**

2வது மலர் நெ. 1 லிருந்து 50 வரை பயிண்ட் செய்து வைத்திருக்கிறோம். வேண்டுவோர் ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பவும்.

"காந்தி" ஆபீஸ்,
11, ஆண்டர்சன் தெரு, சென்னை.

Koviloor Digital Library


# மின் வெட்டு.

**மகாத்மா காந்தி**

மகாத்மா காந்தியுடன் பிரதம மந்திரி 17உ யன்று சுமார் 1¾ மணி நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார். லார்ட் ரீடிங்கும் பேசிக் கொண்டிருந்தார். மகாத்மா இம்மாதம் சீமையைவிட்டு புறப்படுவதாயிருந்ததை தற்காலீகமாக நிறுத்தி வைத்திருக்கிறார். டிசம்பர் மாதம் 4உ புறப்படலாமென்று தெரிகிறது.

**வெள்ளையர் சரணம்**

மைனாரிட்டிகள் ஒப்பந்தம் என்ற முஸ்லிம்கள் தூண்டுதலால் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் வெள்ளையரும் கையெழுத்துப் போட்டிருந்தனர். அவர்கள் ஒப்பந்தம் உருப்படாமல் போகவே—அவர்கள் ஒப்பந்தத்தை மதிப்பார் யாருமில்லாமல் போகவே—வெள்ளையர் மகாத்மாவிடம் சரண்புகுந்திருக்கிறார்கள். தாங்கள் சும்மா கையெழுத்துப் போட்டதாகவும், மற்ற மைனாரிட்டிகளுடன் சேர்ந்து மகாநாட்டில் மூட்டுக் கட்டை போடவில்லையென்றும், தங்களை ஆதரிக்க வேண்டுமென்றும் மகாத்மாவிடம் ஓலமிடுகிறார்கள். இம்மாதிரி அடிக்கடி ஒவ்வொரு கட்சியுடன் சேர்ந்துகொண்டு பிரித்தாளும் முறையை கைக்கொள்ளுவது யோக்கியமற்ற செய்கையென்று மகாத்மா அவர்களுக்கு எடுத்துக் காட்டி சூடு கொடுத்தார்.

**சர்க்கார் ஓட் யோக்கியதை**

கார்டு விலையை முக்கால் அணா வாகவும், கவர் விலையை ஒன்றே கால் அணா வாகவும் உயர்த்த வேண்டுமென்று டெல்லி சட்டசபையில் சர்க்கார் தீர்மானம் கொண்டு வந்தார்கள். இது தோற்றுப் போயிற்று. இதற்கு விரோதமாக ஓட் கொடுத்தவர்கள் 63 பேர். விலையை கூட்ட வேண்டுமென்று ஓட் கொடுத்த புண்ணிய மூர்த்திகள் 46 பேர். இந்த 46 பேரும் எப்படிப்பட்டவர்கள் என்பதை தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். இவர்களில் 26 பேர் சர்க்கார் உத்தியோகஸ்தர். 10 பேர் சர்க்கார் தயவில் சட்டசபையில் ஸ்தானம் பெற்ற நியமனப் பேர்வழிகள். 9 பேர் வெள்ளையர். இவ்வளவு பேரும் சர்க்காரை ஆதரிக்காமல் வேறு என்ன செய்வது தான் அவர்கள் வேலை? பாக்கியுள்ள ஒருவர்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. அவர் யார் தெரியுமா? அவர்தான் சமீபத்தில் "சர்" பட்டம் பெற்ற சர். முகமது யாகூப்! பலே பிரதிநிதி! இவ்வளவு வீரர்களும் சேர்ந்து தபால் விகிதத்தை உயர்த்த உயரமாய் கை தூக்கினார்கள். ஆனால் பாவம், தோற்று வெட்கி தலைகுனிய நேரிட்டது!

# அங்கும் இங்கும்.

மகாத்மாவை அமெரிக்காவிற்கு விஜயம் செய்யும்படி அமெரிக்காவிலிருந்து லண்டனிலிருக்கும் காந்திஜியை டெலிபோன் மூலம் பிஷப் பிஷர் அழைத்தார். மகாத்மா மறுத்துவிட்டார். மாஜி பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ஸ்நோடனுக்கு லார்ட் பட்டம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீ. சுபாஷ் போசை சொந்த ஜாமீனில் விடுதலை செய்து அவருக்கு விரோதமாக டாக்காவில் பிறப்பித்திருந்த 144வது பிரிவு உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். தடை உத்தரவை அவர் மீறிய வழக்கு 23உ விசாரிக்கப்படும். பிரிட்டன் தன் நாட்டில் இறக்குமதியாகும் வெளி நாட்டு பொருள்கள் மீது ஏராளமாக இறக்குமதி வரி விதிக்க சட்டஞ் செய்து கொண்டிருக்கிறது. இதைப்பார்த்ததும் பிரான்ஸ் சும்மாயிருக்கவில்லை. பிரிட்டனிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் வரும் சரக்குகளுக்கு 100க்கு 15 வீதமும், இந்தியாவிலிருந்து வரும் சரக்குகளுக்கு 100க்கு 7 வீதமும் வரி உயர்த்தியிருக்கிறது. துருக்கி, ஒயின, உயர்ந்த துணி முதலிய சுகாநுபவப்பொருள்களில் 50 தினுசுகளை தன் நாட்டில் யாரும் இறக்குமதி செய்யக்கூடாதென்று சட்டம் செய்திருக்கிறது சென்ற 9 மாதங்களில் 140 லட்சம் பொன்கள்பெறுமானதுணிகள் பிரிட்டனிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் துருக்கியில் இறக்குமதியாயிருக்கிறதாம். அவற்றிற்கெல்லாம் இனிமண்தான். அயர்லாந்தும்இம்மாதிரியே இறக்குமதி வரியை அதிகரித்திருக்கிறது. ஐக்கிய மாகாணத்தில் நிலவரி விஷயமாய் சர்க்காருக்கும் காங்கிரசிற்கும் ராஜிப்பேச்சு நடந்து வருகிறது. அது முடிவாகிறவரையில், அலகாபாத் ஜில்லாவில் நிலவரி கொடுப்பதை நிறுத்தி வைக்கும்படி காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. பண்டித ஜவர்லால் கல்கத்தாவிற்கு 17உ வந்திருக்கிறார். 2 ஆயிரம் வருமானத்திற்கு மேல் வரி விதிப்பதை, ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு மேல் வரி விதிக்க வேண்டுமென்று டெல்லி சட்டசபையில் சர்க்கார் கொண்டுவந்த தீர்மானம் தோற்றுப் போயிற்று. பார்டோலி விசாரணையிலிருந்து காங்கிரஸ் விலகிக் கொண்டது. ஆகவே குறையுள்ளவர்கள் நேரில் தெரிவிக்கலாமென்று விசாரணை அதிகாரி விளம்பரம் செய்திருக்கிறார்.

Koviloor Digital Library



# முஸ்லிம்கள் பல்டி

லண்டனில் ஆகாகான் கோஷ்டியாரான முஸ்லிம்கள் விநோதக்கர, விசித்திர பல்டி யடிக்கிறார்கள். வகுப்பு தகராறு தீர்ந்தாலொழிய, ராணுவம், பொக்கிஷம், அந்நிய நாட்டு வர்த்தக உரிமைகள் இவைகளைப்பற்றி விவாதிக்க முடியாதென்று ஆதிமுதல் முட்டுக்கட்டை போட்டு வந்தார்கள். மற்ற விஷயங்களைப்பற்றி பேசியாய் விட்டது. சென்ற 16உ யன்று ஐக்கிய ஆட்சி கமிட்டி கூடியது. இந்த நாலு விஷயங்களைப்பற்றி பேச வேண்டுமென்று தலைவர் லார்ட் சாங்கி சொன்னார். உடனே ஸ்ரீ. ஜின்னா எழுந்தார். முஸ்லிம்கள் இனியும் முட்டுக்கட்டை போட விரும்பவில்லையென்றும், விவாதம் ஒழுங்காய் நடைபெறலாமென்றார், ஆனால் வகுப்பு தகராறு தீர்ந்தாலொழிய எந்த அரசியல் அமைப்பையும் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் சொன்னார்கள். இந்த நற்புத்தி உதயமானதற்காக லார்ட் சாங்கி வாழ்த்தினார். அந்த நற்புத்தி 24 மணி நேரத்திற்கு மேல் இருக்கவில்லை. 17உ காலை மறுபடியும் கமிட்டி கூடியபோது ராணுவத்தைப் பற்றி விவாதம் நடந்தது. டாக்டர் ஷாபத் அகமதுகான் எழுந்தார். வகுப்பு தகராறு தீர்ந்தாலொழிய தாங்கள் எதைப்பற்றியும் பேச முடியாது என்று கர்ஜித்தார். விவாதத்தில் கலந்து கொள்ளுவதாக முதல் நாள் ஸ்ரீ. ஜின்னா சொல்லியிருக்கும்போது, மறுநாள் டாக்டர் கான் பழைய முட்டுக் கட்டைபோட பல்டி அடித்த காரணம் என்ன? முஸ்லிம் பிரதிநிதிகளுக்குள் ஒற்றுமையான அபிப்பிராயம் கிடையாதென்பதையும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைவரென்று நினைக்கிறார்கள் என்பதையும் இது காட்டுகிறது. தாங்கள் எவ்வளவு முட்டுக் கட்டை போட்டாலும் லட்சியஞ் செய்வார்கள் யாருமில்லையென்பதை கண்டு கொண்டவுடன் 16உ சொல்லிய முடிவை சிலர் ஆதரித்திருக்க வேண்டும். 17உ முதல் மந்திரி சீக்கிரமாக மகாநாட்டை முடிக்க விரும்புகிறார் என்று லார்ட் சாங்கி சொல்லியதைக் கேட்டவுடன் டாக்டர் கானுக்கு பழைய முட்டுக்கட்டை ஞாபகம் வந்திருக்க வேண்டும். மகாநாடோ சீக்கிரமாக முடியப்போகிறது; தாங்கள் பழைய முறுக்கிலேயே இருப்பதாய் காட்டிக் கொள்ளுவோமே என்று அவர் நினைத்திருக்க வேண்டும். எந்த நோக்கத்தோடு நடந்திருந்தாலும், அவர்கள் பல்டி உலகப் பிரசித்தமாய் விட்டது.

# பிக்கானீர் ராஜா கண்டனம்.

காஷ்மீர நாட்டிற்குள் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் சத்தியாக்கிரகம் செய்ய செல்லுவதைப்பற்றி பிக்கானீர் மகாராஜா கண்டித்து பேசியதாவது:—

காஷ்மீர கலகத்துக்கு இந்து முஸ்லிம் தகராறே அதிக முக்கிய காரணமாக இருந்திருப்பதாகத் தெரிகிறது. அது சரியோ தவறோ அதையே முக்கிய காரணமாகக் கொள்ளுகிறார்கள். காஷ்மீர சமஸ்தான மன்னர் பிரஜைகளில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். ஆனால் காஷ்மீர மகாராஜா இந்து. இதுபோல் இந்தியாவில் பல சமஸ்தானங்களிருக்கின்றன. அவைகளின் மகாராஜா முஸ்லிமாயிருக்கிறார்கள். ஆனால் பிரஜைகளோ பெரும்பாலும் இந்துக்களாகவே இருக்கிறார்கள். மதத்துவேஷமே காஷ்மீரத்தில் இந்நிலை ஏற்படுவதற்குக்காரணமாயிருக்குமேயானால், அல்லது இதை காரணமாகவைத்துக் கொண்டு வகுப்புக் கலவரத்தைக் கிளப்புவார்களேயானால், அல்லது அதற்கு மறைமுகமாக உதவி புரிவார்களேயானால் இதை எந்த முஸ்லிம் மன்னரும் ஆதரிக்க முன்வர மாட்டார்களென்று நம்புகிறேன். இவ்வாறு காஷ்மீரத்தில் மதத்துவேஷத்தையும் விரோதத்தையும் வெளியிலிருந்து கிளப்பி வருவதை எவரும் ஆதரிக்க முடியாது.

## ஆர். 100 அதோகதி

ஜெர்மனி ஜெப்லின் ஆகாயக் கப்பல் வைத்திருப்பதைக்கண்டு பிரிட்டன் பொறாமைப்பட்டது. ஆர் 100, ஆர் 101 என்ற இரண்டு பிரமாண்டமான ஆகாயக் கப்பல்களை ஏராளமான செலவில் செய்தது. ஆர். 101 இந்தியாவிற்கு வந்து தனது பெருமையை காட்ட நினைத்து புறப்பட்டு வந்தது. வழியில் எரிந்து உடைந்து விழுந்து சாம்பலாயிற்று. ஆகாய மந்திரி லார்ட் தாம்சன் உள்பட பலர் மாண்டனர். அந்தக் கிலி பிரிட்டனை இன்னம் விடவில்லை. பெரிய ஆகாயக் கப்பல்களை தொலைக்க வேண்டுமென்று பெரிய கிளர்ச்சி நடந்தது. ஆர். 100 ஐயும் ஒழித்துவிட ஜனங்கள் விரும்பினார்கள். கடைசியாக சர்க்காரும் ஒப்புக் கொண்டனர். $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்து கட்டிய அந்த ஆகாயக் கப்பலை அப்படியே ஓட்டை உடைந்த இரும்பு வியாபாரிகளுக்கு இரும்பு கிரயத்திற்கு விற்றுவிட்டார்களாம். ஜெர்மனியுடன் வீம்புபோட்டு பலிக்கவில்லை. ஆர். 100-ம், 101-ம் போன விடம் தெரியவில்லை. ஆனால் "கிராப் ஜெப்பலின்" கப்பல் இன்றும் கம்பீரமாய் பறக்கிறது.

Edited, Printed & Published by T. S. C... chalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

Regd. No. M. 2677

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 23உ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 8உ திட்கட்கிழமை || இதழ் 6

## எடு சட்டியை!




(பார்டோலி விசாரணையில் சர்க்கார் பக்கம் சாட்சி சொன்னவர் ரிக்கார்டுகளை ஆஜர் செய்ய மறுத்தார். அதனால் காங்கிரஸ் அதிலிருந்து விலகிக்கொண்டது.)

காங்கிரஸ் வக்கீல் :—அடே சாட்சி, உன் தலைக்கு சட்டி எதற்காக? எடு 'சட்டியை! சட்டியை எடுத்தால் அல்லவா உன் மூஞ்சியைப் பார்த்து, உன் யோக்கியதையை அறிய முடியும்?

Koviloor Digital Library



# ஸ்மட்ஸ், இர்வின் ஞானோதயம்

ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவர் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர். அங்கே முன்பு முதல் மந்திரியாயிருந்தார். பெரிய ராஜ தந்திரி. லார்ட் இர்வின் இந்தியாவில் வைசிராயாக இருந்தவர். ஜெனரல் ஸ்மட்ஸ் லண்டனுக்கு வந்திருக்கிறார். லார்ட் இர்வினும் தமது யார்க்ஷயர் பிரதேசத்தைவிட்டு லண்டனுக்கு வந்திருக்கிறார். இருவரும் அடிக்கடி மகாத்மாவுடன் கலந்து பேசுகிறார்கள். அவருடன் பேசிவிட்டு பின்னால் முதல் மந்திரி மெக்டனல்ட், ஸ்ரீ. பால்டுவின் இவர்களைப் பார்த்து மகாத்மாவின் அபிப்பிராயத்தை தெரிவிக்கிறார்கள். காந்தியை வெறுங்கையோடு அனுப்பினால் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்படும் என்று இருவரும் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு ஆணித்தரமாய் எடுத்துக் காட்டுகிறார்களாம். எப்படியாவது மகாத்மாவோடு சமரசம் செய்ய வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்களாம். இருவரும் சாமான்ய பேர்வழிகளல்ல. பழம் தின்று கொட்டை தப்பியவர்கள். தன் பலமும் மாற்றான் பலமும் அறியும் சக்தியுள்ள புத்திசாலிகள். பலிக்கிறவரை விட்டுக் கொடுக்காத தந்திரிகள். ஜெனரல் ஸ்மட்ஸ் முக்கியமான காலத்தில் தென்னாப்பிரிக்கா முதல் மந்திரியாயிருந்திருக்கிறார். லார்ட் இர்வினும் அந்த மாதிரி நெருக்கடியான நிலைமையில் வைசிராயாக இருந்தவர். இம்மாதிரி சகல அநுபவங்களும் பெற்று வெயிலில் காயாமலும், மழையில் நனையாமலும் இருக்க திறமை பெற்றவர்கள் மகாத்மாவைக் கண்டு பயப்படுவானேன்? அவரை சமாதானம் செய்யாமல் அனுப்பக் கூடாது என்று நடுங்குவானேன்? பிரதம மந்திரியிடமும், பால்டுவினிடமும் தூது சென்று முறையிடுவானேன்? இதில்தான் ரகசியம் அடங்கியிருக்கிறது. அது என்ன ரகசியம்? அதுவே மகாத்மாவை பூர்ணமாய் அறிந்த ரகசியமாகும். மகாத்மா எப்பேர்ப்பட்டவர், அவர் உறுதி எத்தன்மையது, அவர் சத்தியம் எவ்வளவு ஜொலிப்புள்ளது, அவர் செல்வாக்கு எவ்வளவு பலமுள்ளது என்பவைகளை, இந்த இரண்டு வெள்ளையரைப்போல வேறு எந்த வெள்ளையரும் அறிந்தது கிடையாது. அதனாலேயே மகாத்மாவைக் கண்டு நடுங்குகிறார்கள். இவர்கள் மகாத்மாவின் சக்தியை எப்படி அறிந்தார்கள்? சொந்த அநுபவத்தில் அறிந்தார்கள். மகாத்மாவை எதிர்த்து தோல்வியுற்று அடிபட்டார்கள். தென்னாப்பிரிக்காவில் மகாத்மா சத்தியாக்கிரகம் ஆரம்பித்தபோது அவரை ஸ்மட்ஸ் எதிர்த்தார். பலிக்கவில்லை. ஆகவே அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் பெயர் காந்தி—ஸ்மட்ஸ் ஒப்பந்தம். இந்தியாவில் லார்ட் இர்வின் மகாத்மாவை எதிர்த்தார். அவரும் தோல்வியுற்றார். அதன் பலனே காந்தி—இர்வின் ஒப்பந்தம். இந்த இரண்டு வீரர்களும் மகாத்மாவுடன் போராடி முடியாமல், ஒப்பந்தம் செய்து கொண்ட புத்திசாலிகள். ஆகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில், உயர்தர பிரிட்டிஷ் அதிகாரிகளாயிருந்து மகாத்மாவோடு போர் நடத்தி தோற்றவர்கள் இந்த இரண்டு பேரே என்று சொல்லவேண்டும். அதேமாதிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இவர்களைப்போல மகாத்மாவின் சக்தியை அறிந்தவர்கள் வேறு கிடையாதென்றே சொல்லவேண்டும். ஆகவே மகாத்மாவோடு நேருக்கு நேராகப் போராடி அநுபவம் அடைந்த ஸ்மட்சும், இர்வினும் காந்தியைப்பற்றி பேசும்போது, மெக்டனல்டும், பால்டுவினும் நடுங்காமல் என்ன செய்வார்கள்? இதுவே ரகசியம். பிரிட்டனின் நற்காலத்திற்கே ஸ்மட்சும், இர்வினும் லண்டனுக்கு வந்திருக்கிறார்கள். அந்த நற்காலம் உண்மையானதாயிருந்தால், அவர்கள் சொல்லுவதை மந்திரிகள் கேட்கவேண்டும். முப்பகர்ணனைப்போல மந்திரிகள் இனியும் தூங்கிக்கொண்டிருப்பார்களானால், அமெரிக்காவை இங்கிலாந்து எந்த முட்டாள் தனத்தால் இழந்ததோ, அதே முட்டாள் தனத்தால் இந்தியாவையும் இழக்க நேரிடும்.

---

## உளறுவாய் சர்ச்சில்.

---

மகாகனம் சர்ச்சில் பிரிட்டனில் உளறுவது நின்று போயிற்று. வாய் அடைத்துப்போனார். அவர் பேசுவதை கேட்பார் யாருமில்லை. மகாத்மா சீமைக்கு போன பின்பு சர்ச்சில் வெளியில் தலை நீட்டவே இல்லை. ஆனால் உளறினவர் நாக்கு சும்மா நிற்குமா? நாக்கு ஊறுகிறது. ஆகவே அமெரிக்கா போகிறார். அங்கே 45 இடங்களில் உளறப்போகிறாராம். அதற்காக $1\frac{1}{4}$ லட்சம் ரூபாய் அவருக்கு கூலியாம். கூலியும் கொடுத்து உளறலும் கேட்கும் அமெரிக்கரின் புத்தியீனத்தை என்னென்று சொல்லுவது?

Koviloor Digital Library



# துண்டு துணுக்குகள்.

கோயம்புத்தூர் கூட்டுறவு (கோவாப்பரேடிவ்) பாங்கு நிர்வாகிகள் கூட்டுறவுப் பிரசாரத்துக்காகவும் மதுவிலக்குப் பிரசாரத்துக்காகவும் ரூ. 2400 ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதில் பாதித்தொகையை மதுவிலக்கு வேலைக்காக ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிடம் ஒப்புவிப்பதென்று 15-11-31ல் ஷை பாங்கு நிர்வாகிகள் தீர்மானித்திருக்கின்றனர். அங்கு விஜயம் செய்திருந்த டிப்டி ரெஜிஸ்டிரார் அந்தத் தீர்மானத்தை ஆமோதித்தாராம். பாங்கு நிர்வாகிகள் தீர்மானத்தை நிறைவேற்றி மற்ற ஜில்லாக்களுக்கு வழிகாட்டியதற்காக அவர்களைப் போற்றுகிறோம். மறியல் வேலைக்குப்பண உதவி செய்வதை அனுமதிக்க முடியாதென்று உத்தரவு பிறப்பித்து ஸ்தல ஸ்தாபனங்களின் உரிமையில் சர்க்கார் தலையிட்டதை நேயர்கள் அறிவார்கள். கோவாப்பரேடிவ் பாங்கு விஷயத்திலும் சர்க்கார் அதே மனப்பான்மையுடன் தான் இருக்கப் போகிறார்களா? இப்பொழுது என்ன காரணம் கண்டுபிடிக்கப்போகிறார்களோ? நம்மந்திரிகளின் மதியின் போக்கை யாவரே யறிவார்?

தென்னாபிரிக்காவில் வேலையில்லாக் கஷ்டத்தினால் வருந்தி சுமார் 600 இந்தியர்கள் அங்கிருந்து இந்தியாவுக்குக் கப்பலேறி விட்டனர். 1927ஆம் கேப் ஒப்பந்தத்துக்குப் பிறகு சுமார் 8000 இந்தியர்கள் அங்கிருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் இங்கும் பிழைக்க வசதியின்றி ஆப்பிரிக்காவுக்கே திரும்பலாமென்றிருக்கின்றனர். தென்னாப்பிரிக்காவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முக்கிய காரணஸ்தர் அங்கு குடியேறின நம் சகோதரரே யாவர். இவர்களுடைய க்ஷேமத்துக்கு அங்குள்ள சர்க்கார் பொறுப்பாளிகளாவர். நம் நாட்டிலேயே அடிமையாயிருக்கும் நாம், வெளி நாடுகளில் நமது உரிமைகளை எவ்வாறு காக்க முடியும்? நம் சகோதரரின் கதியை நினைத்து கண்ணீர் வடிப்பதைத் தவிர இப்பொழுது வேறொன்றும் செய்வதற்கில்லை. இந்த அநியாயத்தை தொலைத்து தென்னாப்ரிக்க சர்க்கார் அங்குள்ள இந்தியப் பிரஜைகளின் க்ஷேமத்தை கவனிக்கும்படி செய்ய இந்திய சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

நம் ஹிந்து ஜாதியின் ஒரு பெரும்வகுப்பாரை தீண்டாதாராகக் கருதி ஒதுக்கிவைக்கும் மூடப் பழக்கம் நம் நாட்டிலிருக்கிறது. அதன் கர்மபலனாகத்தான் நம்மவர் பிறநாடுகளில் தீண்டாதாராய் மதிக்கப்படுவதன் காரணம் என்று காலஞ்சென்ற ரானடே கூறியிருக்கிறார். தீண்டாமையை ஒழித்து ஹிந்து ஜாதியைப் புனிதப்படுத்த வேண்டுமென்று ஜாதி ஹிந்துக்களிடையே பெருமுயற்சி நடந்துவருகிறது. அதன் பலனாக குக்கிராமங்களிலும் கூட அபிப்பிராயம் மாறுபட்டு வருகிறது. சென்ற 6 மாத காலமாய் நடக்கும் காங்கிரஸ் மதுவிலக்கு வேலைகள் இதற்கு மிகவும் உதவியாயிருந்தது. தீண்டாமை அறவே ஒழியும் காலமும் நெருங்கி வருகிறது. டாக்டர் அம்பேட்கருக்கு இது பிடிக்கவில்லை போலும். இன்னும் 20 வருஷ காலமாவது தீண்டாதார் அப்படியே இருந்துவரவேண்டுமென்று அவர் முயற்சி செய்கிறார் எனலாம். தீண்டாதாராகத் தற்காலம் கருதப்படுவோர் இந்த முயற்சியை ஒடுக்கி விடுவார்களென்று நம்புவோம்.

அக்டோபர் ஆரம்பத்தில் நாணயமாற்று விகிதம் ரூபாய்க்கு 17½ பென்ஸ் ஆக இருந்தது; இப்பொழுது 18¼ பென்ஸுக்கு மேல் போய்விட்டது. சாதாரணமாக ரூபாயின் மதிப்பு அதிகமாவது ஏற்றுமதியின் பெருக்கத்துக்கும் வியாபாரச் செழிப்புக்கும அறிகுறியாகும். ஆனால் இது வியாபாரப் பொருள் ஏற்றுமதியால் ஏற்பட்டதல்ல. நம் தேசமானது பெண்களின் பொன் நகைகளை உருக்கிவிற்றுப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் ரூபாயின் மதிப்பு டம்பமாய்க் காட்டுகிறது. அக்டோபர் மாதத்தில் பம்பாய் துறைமுக மூலமாய் மட்டிலும் 8 கோடி 93 லக்ஷம் ரூபாய் பெறுமான தங்கம் ஏற்றுமதியா யிருக்கிறது. சென்ற வருஷம் இதே காலத்தில் தங்க ஏற்றுமதியே இல்லை.

ராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு தாலுகாவிலுள்ள மக்கள் தீர்வையின்றிக் காந்தி உப்பு எடுக்கும் உரிமையை சமீபத்தில் சர்க்கார் ரத்துச் செய்துவிட்டார்கள். இது விஷயமாய் சட்டசபையில் கேள்வி பிறந்தது. உரிமையை ரத்துச் செய்தது நியாயமா என்பதைப்பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் கேட்டார். "அவ் வேண்டுகோளுக் கிணங்குவது சாத்தியமா யிருக்கவில்லை. விசாரணை நடத்தவேண்டுமென்று காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை. அவ்வாறு எண்ணுவதுபிசகு" என்று சர்க்கார்தரப்பில் பதில் கூறினார்கள். பல்லாயிரக் கணக்கான மக்களின் உரிமை சம்பந்தப்பட்ட காரியத்தில் சர்க்கார் அலக்ஷியமாகப் பேசுவது இது முதற் தடவையல்ல.

—நா. சி.

Koviloor Digital Library



# ஜப்பான் காந்தி.

(ஸ்ரீ. ஹெர்பர்ட் ஏ. மில்லர்)

தோயோஹிகோ காகவா என்பாருக்கு வயது இப்பொழுது நாற்பதுக்கு மேலாகிறது. இவர் சிறந்த கவிஞராகவும் பிரபல நாவலாசிரியராகவும் விளங்குகிறார். ஆனாலும் இத்துறைகளில் இவருக்கு அதிக விருப்பமில்லை. ஜனங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைக் கற்பித்துக் கொடுக்க வேண்டுமென்பதே இவருடைய நோக்கம். இதனால், ஒரு சமயம் டோகியோ நகரசபைத் தலைவர் அந்நகரத்திலுள்ள ஏழைக் குடிசைகள் இருக்கும் இடங்களைச் சீர்திருத்தும் வேலைக்குத் தலைமை வகிக்குமாறு இவரைக் கேட்டுக் கொண்டார். ஆசியா கண்டத்திலே அநேக காலந்தொட்டு பல மகான்கள் தோன்றி வந்திருக்கிறார்கள். கன்பூஷியஸ், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலியோர் தோன்றினர். இப்பொழுது இந்தியாவிலே காந்தி தோன்றியிருக்கிறார். இவர்களெல்லாரும் மனித சமூகத்தின் ஒற்றுமையைப் பற்றிய உபதேசித்திருக்கிறார்கள். இவர்களைப் போலவே, தோயோஹிகோ காகவாவையும், பிற்கால சரித்திரக்காரர்கள் குறிப்பிட்டுப் பேசுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு மகானுக்கு இருக்கவேண்டிய முக்கியகுணங்கள், அறிவு, ஞானம், தீர்க்க தரிசனம் ஆகிய மூன்றுமேயாம். இந்த மூன்றும் காகவாவிடத்தில் நிரம்பியிருக்கின்றன. இயந்திரங்களையும், ஆஸ்பத்திரி ஸ்தாபனங்களையும் காந்தியடிகள் மறுத்துப் பேசுகிறார். ஆனால் காகவா இவைகளைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று கூறுகிறார். காந்தி நூல் நூற்கிறார்; அதிகமான துணிகளை அணிவதில்லை. ஆனால் காகவாவோ, ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபனம் செய்து சாமான்கள் சொற்பவிலையில் விற்கப்படும்படி செய்கிறார். இவருடன் நான் ஒரு நாள் பூராவும் இருந்தேன். சம்பாஷணையில் இவரைப் பல விதங்களிலும் மடக்கிப் பேசினேன். ஆயினும் இவர் மிகத்திறமையாகத் தம் சம்பாஷணையை நடத்தினார். ஜர்மானிய தத்துவ சாஸ்திரம், பொருளாதாரம் முதலிய யாவற்றையும் அவர் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார். அவர் எதையும் புன் சிரிப்புடனே பேசுகிறார். அன்பினாலேயே உலக துன்பங்களைப் பரிகரிக்கலாமென்று அவர் பாடுபடுகிறார். அன்பினாலேயே உலகை வெல்லலாம் என்று இதுவரை பலர் சொல்லளவில் கூறியிருந்தபோதிலும், காகவா இதனைத் தமது வாழ்க்கையிலும் ஒழுங்காக நடத்திவைக்கிறார்.

1888-ம் வருஷத்தில், பணக்கார பரம்பரையைச் சேர்ந்த ஒரு ஜப்பானியக் குடும்பத்தில் காகவா பிறந்தார். இவர், பாலியத்தில், பௌத்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கன்பூஷியஸ் என்பாரின் கொள்கைகளை நன்றாகக் கற்றுணர்ந்தார். சிறுவயதிலேயே, மதப் பிரசாரகர்களின் வாழ்க்கையில் இவருக்கு அதிக விருப்பம் இருந்தது. பள்ளிக்கூடத்தில் இவர் படித்துக்கொண்டிருந்த போது, வலைஞர்கள் வசிக்கும் ஒரு கிராமத்தில், சுமார் ஒரு வருஷகாலம் மிகுந்த எளியவாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். கோப் நகரத்திலுள்ள கலாசாலையில் படித்துவிட்டுப் பின்னர், ஏழைகள் வசிக்கும் இடத்திற்குச் சென்று சுமார் நான்கு வருஷ காலம் அங்கே வசித்து வந்தார். அப்பொழுது ஏழைகளுக்குப் பல விதங்களிலும் உதவி செய்து வந்தார். பின்னர் பிரின்ஸ்டன் என்ற ஊருக்குச் சென்று, அங்கே தியான சமாதியில் பலகாலம் இருந்தார். அப்பொழுதே இவருக்கு ஞானோதயம் உண்டாயிற்றென்று சொல்லலாம். அங்கிருந்து திரும்பிவந்த முதல் நாளிலேயே இவர் ஏழைகளின் வாசஸ்தலத்திற்குச் சென்று அங்கே வசித்தார். இங்கே சில காலம் வசித்துக் கொண்டிருந்தார். பின்னர் இவருக்குச் சந்ததிகள் உண்டாயின. அதனால் வேறோரிடத்திற்குச் சென்று வசிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவைகளுக்குப் பன்னிரண்டு வயதானதும், இவர் மீண்டும் ஏழைகளின் மத்தியிலேயே வசிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். எவ்விதத்திலும் தமது அந்தஸ்தையும், மேன்மையையும் பாராட்டாமல் ஏழைகளிடத்தில் அன்புடன் நடந்துவந்த ஒரு ஸ்திரீயையே இவர் காதலித்து விவாகம் செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவருக்குக் கண்பார்வையும் மங்கிய நிலையில் இருக்கிறது. ஆயினும் அவர் தத்துவமெல்லாம், "எல்லாரையும் நேசிக்கிறேன்" என்ற ஒரு வாக்கியத்திலேயே அடங்கியிருக்கின்றன. இதை அநுபவத்திலும் நன்கு நடத்திக் காட்டியிருக்கிறார்.

உலக விஷயங்களை இவர் அறிந்திருப்பது போல் வெகு சிலரே அறிந்து கொண்டிருப்பர் என்று நான் கருதுகிறேன். இவர் தேக நலிவு உடையவராக இருந்தபோதிலும் இது வரை சுமார் நாற்பத்தைந்து நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார்; இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார். தவிர, வேறு பல அலுவல்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். வருஷத்தில் ஆயிரக்கணக்கான கூட்டங்களில் பேசுகிறார்;

Koviloor Digital Library



இக் கூட்டங்களுக்கு இலட்சக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். இவர் உழைப்பெல்லாம் ஏழை ஜனங்களிடத்திலேயே யாகும். ஆனால் பணக்காரர்களும் அரசாங்கத்தாரும் இவருக்குச் சிநேகிதர்களே. சில சமயங்களில், அரசாங்கத்தார், இவரைத் தங்களுக்கு விரோதியாகக் கருதுவதுமுண்டு. இவர் ஒரு சமயம் "ஏழைகளின் மனோதத்துவம்" என்பதைப்பற்றி ஒரு சிறு நூல் எழுதினார். இதில், ஏழைகளின் துன்பத்தை மிக அழகாக வருணித்திருந்தார். இதைப் பார்த்த அரசாங்கத்தார் ஜப்பானிலுள்ள ஆறு பெரிய நகரங்களில் ஏழைகளின் விடுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கோடி டாலர்கள் செலவழிக்கத் தீர்மானித்தனர். இவர் எழுதிய முதல் நாவலில் தம்முடைய ஜீவிய சரித்திரத்தையே சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தார். இது, 180 பதிப்புகள் செலவழிந்தன. இவர் ஒரு சமயம், கப்பல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்தபோது, அவர்களுக்குத் தலைவராக இருந்து வேலை நிறுத்தத்தை நடத்தினார். இதனால் இவர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருந்தபோது, இவருடைய புஸ்தகம் ஒன்று, குறித்த ஒரு மணி நேரத்தில் வெளியாகும் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இதனை வாங்கும் பொருட்டு ஜனங்கள் கும்பல் கும்பலாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். இதனால், இவருடைய நூல்களை ஜனங்கள் எவ்வளவு சுவையுடன் படித்து வந்தார்கள் என்பது நன்கு புலனாகும். இவர் வறுமையில் வாழ்ந்து கொண்டு, தாம் சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் ஏழைகளின் நன்மைக்கென்று செலவிடுகிறார்.

காகவா, கிறிஸ்தவ மதத்தை அநுசரிக்கிறவராயிருந்தும், ஜப்பானியர்களுக்கு இயற்கையாயுள்ள சில அம்சங்கள் அவரிடம் இருக்கின்றன. ஜப்பானியர்கள், எவ்வளவு கஷ்ட காலத்திலும் புன்சிரிப்புடன் கூடியே இருப்பார்கள். காகவா, சர்வ தேசத்தாரிடமும் அன்பும் சகோதரத்துவமும் உடையவராக இருக்கிறார். யுத்த உணர்ச்சியிலேயே திளைத்திருப்பவர்களையும் அன்பால் வசப்படுத்தலாம் என்று இவர் கருதுகிறார். ஜப்பானில் உண்மைக் கிறிஸ்தவ அன்பைப் பரப்ப வேண்டுமென்பது ! தமது நோக்கமென்று இவர் கூறுகிறார். இவர், சமூக சீர்திருத்தத்தில் உழைக்கும் மூன்று சங்கங்களுக்குத் தலைமை பூண்டிருப்பதுடன், ஒரு குஷ்டரோகிகள் சாலையையும், கூட்டுறவுப் பண்டக சாலையையும் நடத்துகிறார். இவருடைய எளியவாழ்வையும், சலியா உழைப்பையும் பாராட்டாதவர் எவருமில்லையென்று கூறலாம்.

## மூளை கெட்ட சப் மாஜிஸ்டிரேட்

அம்பாசமுத்ராம் தாலூகாவில் வீரக்காடு என்ற கிராமத்தில் 4 மாதமாக கள்ளுக்கடை மறியல் நடக்கிறது. 2 மாதத்துக்கு முன் போலீசார் இரண்டு தொண்டர்களையும் வீரக்காரர் மூன்று பேர்களையும் சேர்த்து அம்பாசமுத்ரம் சப் மாஜிஸ்திரேட் முன் வழக்குத் தொடுத்தார்கள். கத்தி, அரிவாள், தடி சகிதம் கடைக்குப் பக்கத்தில் நின்று கொண்டு இவர்கள் குடிக்கப் போனவர்கள் இரண்டு பேர்களை வழி மறித்துப் பயமுறுத்தியதாக வழக்கு. தன்னைப் பயமுறுத்தியதாக வேனும், வழிமறித்ததாகவேனும், தடிக்கம்பு அரிவாள் வைத்துக் கொண்டிருந்ததாகவேனும் அவ்விருவரும் சாட்சி கூறவில்லை. எதிரிகள் பக்கமும் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். போலீஸ் வக்கீல் கடைசியாக விவாதிக்கையில், தமது பக்கம் சாட்சியம் பலமில்லையென்பதை ஏற்றுக்கொண்டு, போலீசார் மீது ஜனங்களுக்கு நல்லெண்ண மில்லையென்றும், ஆகையால் கோர்ட்டார் தாட்சண்யம் காட்டவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். எதிரிகள் விடுதலை யடைவார்களென்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் சப் மாஜிஸ்டிரேட் 10ரூ. அபராதம் அல்லது 15 நாள் காவல் தண்டனையென்று தீர்ப்புக்கூறி விட்டார். இந்தத்தீர்ப்பின்மீது சேரன்மாதேவி டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன் அப்பீல் செய்யப்பட்டது. எதிரிகள் யாதொரு குற்றமும் செய்ததாய் ருசுவாகவில்லையென்று தீர்ப்புக் கூறி தண்டனையையும் அபராதத்தையும் அவர் ரத்துச் செய்தார்.

குடிக்கப் போனவர்களோ, தொண்டர்கள் தங்களை பயமுறுத்துவதில்லையென்று சொல்லும் போது, மாஜிஸ்திரேட் அபராதம் விதித்ததை என்னென்று சொல்லுவது? அவர் மூளை கெட்டுப் போயிற்று என்றே சொல்லவேண்டும். இம்மாதிரி சிட்டுக் குருவிகள் கண்ணை மூடிக்கொண்டு தீர்ப்பு கூறுவதால்தான் பிரிட்டிஷ் சர்க்காருக்கு கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. அம்பாசமுத்திரம் மாஜிஸ்திரேட் ஒரு விநோதப் பிராணியா யிருக்கிறார். அவர் மூளையை உடனே பரிசோதிக்கும்படி சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறோம்.

Koviloor Digital Library



# தமிழா, உன் தாய் எங்கே?

(ஆசிரியர் திரு வி. கலியாணசுந்தரர்)

வேறு நாட்டினரும் எவர் புகினும் அவரை அன்புடன் வரவேற்பதைப் பேரின்பமாகப் பழந் தமிழ் மன்னர்கள் கொண்டிருந்ததைச் சரித்திரத்தில் இன்றுங் காணலாம். தமிழ் நாட்டில் ஆரியர்கள் புகுந்தார்கள்; ரோமர்கள் வந்தார்கள்; கிரேக்கர்கள் நுழைந்தார்கள்; இன்னும் மற்ற மற்றவர்களும் அணைந்தார்கள். அவர்களை வரவேற்ற பெருமை முந்தமிழ் மன்னர்கட்குண்டு. அவர்கள் எவரையும் மாற்றாராகக் கருதினார்களில்லை. "யாதும் ஊரே, யாவருங் கேளிர்" என்பது அவர்களின் வாழ்விற் கலந்த கொள்கையா யிருந்தது. அதனால் அவர்கள் மாட்டு சகோதர நேயம் கனிந்திருந்தது.

இவ்வரும் பெருங் கொள்கை நாளடைவில், தான் பிறந்த தமிழ் நாட்டிலேயே வீழ்ந்து பட்டது. அஃது எழுத்தளவில், புலவோர் உதட்டளவில் நிழலாயிற்று. அது புறநானூற்றில் ஓரிடத்தில் தளையுண்டு கிடக்கிறது. சிறையில் அது நன்றாக உறங்கிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருபோது அது விழித்துப் பார்க்கிறது; வெளியே வரவும் முயல்கிறது. இடைக்காலத்தில் நுழைந்த வேற்றுமைப் பேய்கள் அதை வெளியேறாதவாறு தகைந்து காத்து வருகின்றன. சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றினின்றும் பிறந்த பேய்களும் பூதங்களும் காளிகளும் கூளிகளும் தமிழ்நாட்டை ஆட்சி புரியலாயின. இவ்வாட்சியில் அன்புக் கொள்கைக்கு இடம் ஏது! அக் கொள்கை தற்போது பெற்றுள்ள இடம் சிறை யென்று சொல்லவும் வேண்டுமோ? தமிழன் அடிமையாகிவிட்டான். அருமைத் தமிழனே! உன் பழைய நிலை யென்னை? இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்? சாதி முதலிய சேற்றில் செறியுந் தமிழனே! உனது தற்கால நிலையை உன்னுவாயாக.

இடைக்காலந், தமிழ்த் தாய்க்குச் சிறை வாழ்வு வழங்கிற்று. இக்காலமோ, அவளுக்குச் சிறையுடன் நோய்களையும் வழங்கியிருக்கிறது. தமிழ்த்தாயின் அழகிய உடல்—செழும்மேனி புண்ணீர் ஒழுகும் புன் தேகமாகிவிட்டது. அவள் உன்னம்மா * * * தமிழனே! நீ தமிழ்த் தாயின் சேயா? நீ எங்கேயிருந்து விடுதலை விடுதலை என்று முழக்குகிறாய்? நின் தாய் முகம் நோக்கு. அவள் எப்படியிருக்கிறாள்? எவ்வழியில் நின்று எத்துறையிலிருந்து அவளை நோயினின்றும் சிறையினின்றும் விடுதலை செய்யப் போகிறாய்? தமிழ் மகனே!

# யுத்தப் பிசாசு

யுத்த தளவாடங்களைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதன் நோக்கம் என்ன வென்றால் யுத்தத்தின் பயனாக ஏற்படும் எல்லாவிதத் தொல்லைகளையும் ஒழிப்பதேயாகும். மனித சமூகம் தோன்றின நாள் தொட்டே யுத்த எண்ணம் எல்லாரிடையிலும் இருந்து கொண்டு வந்திருக்கிறது. முதன் முதலில் மனிதன் யுத்தச் சூழலிலேயே வாழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது. ஆண்டவன் பெயரால் பல யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்றும், இவைகள் தர்ம யுத்தங்களென்றும் ஜிஹாத்துகள் என்று அழைக்கப்பட்டன வென்றும் மதசம்பந்தமான நூல்கள் கூறுகின்றன. எனவே, யுத்த மென்பது, பூர்வ காலந் தொட்டு ஒருவாறு அங்கீகரிக்கப் பட்டே வந்திருக்கிற தென்று கூறலாம். மனித சமூகம் தோன்றிய நாள் தொட்டு இது காறும் எவ்வளவு யுத்தங்கள் நடை பெற்றிருக்கின்றன வென்பதை நாம் கணக்கிட முடியாது. ஆனால் 1821-ம் வருஷ முதல் 1914-ம் ஆண்டு வரை மொத்தம் நாற்பது யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்று கணக்கிடலாம். நெப்போலியன் நடத்திய யுத்தமானது ஒன்பதினாயிரம் நாட்கள் நடை பெற்றது; இருபது லட்சம் பேர் அதில் மாண்டனர். சென்ற ஐரோப்பிய யுத்தமோ 1750 நாட்கள் நடை பெற்றது. ஒரு கோடி ஜனங்கள் இறந்து போனார்கள். யுத்தத்தின் விளைவாக ஏற்படும் தீங்குகள் எண்ணில. இதனாலேயே ஒரு பெரியார் "மனித சமூகம் யுத்தத்தை ஒழிக்கா விட்டால், யுத்தம் மனித சமூகத்தை ஒழித்துவிடும்" என்று கூறினார். இந்தத் தீமைகளை யெல்லாம் உணர்ந்தே, சர்வ தேச சங்கம்போன்ற அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் தோன்றியது; யுத்த தளவாடங்களைக் குறைக்கவேண்டுமென்ற உணர்ச்சியும் உண்டாயிற்று.

## ஹிந்தி சமஸ்கிருத வகுப்பு.

சென்னை சிறு பஜார் நெ. 102 கட்டிடத்தில் சுவாமி சிவானந்த சரஸ்வதி, சிரோமணி கங்காதான் ஆகிய இருவர் தலைமையில் ஹிந்தி, சமஸ்கிருதம் சொல்லிக் கொடுக்கப்படும். தினசரி மாலை 6 மணி முதல் 8 மணிவரை வகுப்பு நடக்கும். விருப்பமுள்ளவர்கள் வந்து கற்றுக் கொள்ளலாம்.

Koviloor Digital Library



# மின் வெட்டு.

ஜிம்மி வீண்ஜம்பம்.—

இந்திய சர்க்கார் உள் நாட்டு மந்திரி பெயர் சர். ஜேம்ஸ் கிரிரார். வைசிராய் வில்லிங்டன் கவர்னராயிருந்த போது இவர் அவருக்கு காரியதரிசியாக இருந்து "ஜிம்மி" என்ற பட்டப்பெயர் பெற்றார். இந்த ஜிம்மி டெல்லி சட்டசபையில் ஒரு பூச்சாண்டி காட்டினார். "மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்பித்தால், சகல முறைகளையும் கையாண்டு சட்டத்தை நிலை நாட்டுவோம்" என்றாராம். ஜிம்மியின் வீர தீரங்களை நாம் அறிவோம். சென்ற வருஷம் சட்டமறுப்பு நடந்த போது இவர் என்ன செய்தார் உங்களுக்கு தெரியுமா? சட்டமறுப்பு ஆரம்பமாகு முன்பாகவே ரஜா எடுத்துக்கொண்டு சீமைக்கு ஓடிவிட்டார். கனம் பட்டேலிடம் சட்டசபையில் பட்ட கஷ்டங்கள் போதும் போதும் என்று சொல்லி ஓட்டம் பிடித்தார். அந்த வீரர்தான் இனி சட்டமறுப்பு வந்தால் அடக்கிவிடப் போகிறாராம். அவர் குரு லார்ட் இர்வினல் கூட முடியாத காரியத்தை இவர் செய்யப் போகிறாராம். இந்த வீண் ஜம்பம் எதற்காக?

அகம்பாவம் அடங்கியது.

ஐக்கிய மாகாணத்தில் பார்லி என்ற ஜில்லாவில் ஹோபார்ட் என்ற கமிஷனர் ஒரு வெள்ளையர். தலை கிறுக்கு மிகுந்த ஐ. சி. எஸ். கூட்டத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறும்போது ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. கெண்டாலை கண்டித்து எழுதினார். ஹைகோர்ட் ஜட்ஜ் காலால் இடும் உத்தரவை கமிஷனர்கள் தலையால் நிறைவேற்றவேண்டும். அந்தப்பதவியில் ஹோபர்ட் இருந்தும், ஹைகோர்ட் ஜட்ஜை கண்டிக்கப்புறப்பட்டது எவ்வளவு அகம்பாவம்! "4 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவர் இம்மாதிரி உத்தரவு போட்டது விநோதமாகவே யிருக்கிறது" என்று இந்த பிரகஸ்பதி தமது தீர்ப்பில் எழுதினார். உடனே சிப் ஜட்ஜ் பார்த்தார். "மன்னிப்பு கேட்கிறாயா, என்ன வேண்டும்?" என்று உத்தரவு அனுப்பச்சொன்னார். ஹோபர்ட் பார்த்தார். தலை கிறுக்கும், அகம்பாவமும் மறைந்தன. அடியற்ற மரம்போல கீழே விழுந்து நமஸ்காரம் செய்து மன்னிப்புக் கேட்டார். ஜட்ஜ் மன்னிப்பை ஏற்றுக்கொண்டார். இந்த அகம்பாவம் எதற்காக?

போச்சு மதிப்பு!

சர்வதேச சங்கம் சொல்லுகிறபடி மஞ்சூரியாவை விட்டு காலிசெய்ய முடியாதென்று ஜப்பான் முடிவாய் சொல்லிவிட்டது. இதைக் கேட்டு வெள்ளைப் பத்திரிகைகளுக்கு பொறுக்க முடியவில்லை. ஒரு பத்திரிகை எழுதுகிறது:— "மற்ற விஷயங்கள் எப்படியும் இருக்கட்டும். ஒரு கீழ்நாடு (ஜப்பான்) மேல் நாட்டார் அபிப்பிராயத்தை துளியும் லட்சியம் செய்யாமல் உதறித் தள்ளி விடலாம் என்று இதன் மூலம் ஏற்படும். அப்படி ஏற்பட்டால் ஜப்பானுக்கு கீழ்நாட்டில் செல்வாக்கு மலைபோல உயர்ந்துவிடும். இம்மாதிரி நமது மதிப்பு கீழ்நாட்டில் போகும்படி விடலாமா? அதிலும் இந்தியாவில் தற்சமயம் நமது மதிப்பை எப்படியும் நிலைநாட்ட வேண்டியது அவசியம். இந்த நிலைமையில் நாம் மதிப்பை விடும்படி இருக்கலாமா?"

ஐயோ, வெள்ளை பத்திரிகையே! உன் ஓலத்தைக் கண்டு நாம் கூட ஒரு சொட்டு கண்ணீர் உனக்காக கொடுக்கிறோம். இதிலிருந்து உங்கள் சர்வதேச சங்கத்தின் யோக்யதை வெளியாய் விட்டது. சீனாவில் ஜப்பான் செய்யும் அக்கிரமம் உனக்கு பெரிய காரியமாயில்லை. சர்வதேச சங்கமாகிய வெள்ளையர் சங்கத்திற்கு கீழ்நாடுகளை அடங்கி யிருக்கும்படி செய்து, அதன் மூலம் வெள்ளையர் மதிப்பை உயர்த்தும்படி செய்வதே உனக்கு பெரிய காரியமா யிருக்கிறது. சர்வதேச சங்கம் "வெள்ளையர் கொள்ளைக் கூட்டம்" என்று ஒருவர் சொன்னார். அதை உண்மையென்று உனது ஓலம் ரூபித்து விட்டது.

அலகாபாத்தில் அதிகாரிகள் திகைப்பு.

காங்கிரஸ்காரர் சர்க்காருடன் பேசிவரும் ராஜிப் பேச்சு முடிவாகிறவரை, நிலவரி கொடுப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென்று அலகாபாத் ஜில்லா காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. சட்டமறுப்பு வந்தால் ஒரு கைபார்ப்போம் என்று மீசை முறுக்கிய வெள்ளை அதிகாரிகள் இதைப் பார்த்து திண்டாடுகிறார்கள். கவர்னர் உடனே அலகாபாத்திற்கு ஓடிவந்திருக்கிறார். இந்திய சர்க்கார் உள்நாட்டு காரியதரிசி ஸ்ரீ. எமர்சன் ஒரே ஓட்டமாய் அலகாபாத் வந்து, சர்க்காரிடம் கலந்து பேசுகிறாராம். சட்டமறுப்பிற்கு சர்க்கார் பயப்படுகிறதா அல்லது சர்க்காருக்கு சட்டமறுப்பு பயப்படுகிறதா?

Koviloor Digital Library

**ஆகாகானுக்கு போலீஸ்.**

லண்டனில் இருக்கும் ஆகாகானுக்கு பயமுறுத்தல் கடிதங்கள் வருகிறபடியால், அவருக்கு விசேஷ போலீஸ் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறதாம். இந்த பயமுறுத்தல் கடிதங்கள் ரகசியப் போலீஸ் வேலைகளா யிருக்கலாமென்று ஒரு குருவி சொல்லுகிறது. அப்படியிருந்தகால் அதில் நமக்கு ஆச்சரியம் ஒன்றுமில்லை.

**ஒப்பந்தத்திற்கு சமாதி.**

"ஒப்பந்தத்தின் ஆயுள் நெருங்கிக்கொண்டே வருகிறது. வாரக்கணக்கிலோ அல்லது நாள் கணக்கிலோ தான் அதன் ஆயுள் இருக்கிறது. அப்புறம் பேஷான அடக்கம் செய்யவேண்டியதுதான் பாக்கி. மறுபடியும் ஆரம்பமாகும் போராட்டத்தில் பழைய அஹிம்சையையே நாம் கைப்பற்றி நடக்கவேண்டும்" என்று பண்டித ஜவஹர்லால் கல்கத்தாவில் கூறினர். மிஸ்டர் ஜம்பி, உமது காதை சுத்தம் செய்து இந்த மொழிகளை காதுக்குள்ளே போட்டுக்கொள்ளும்.

## இந்து மத பாடசாலை வாலாஜாபாத்

இவ்வாண்டு கார்த்திகைத் திங்கள் 5-ம் நாள் வெள்ளிக்கிழமை (20-11-31) பிற்பகல் 3-மணிக்கு மெய்கண்டார் மாணவர் கழகத்தின் 15ம் ஆண்டு நிறைவிழா நிகழ்ந்தது. செங்கல்பட்டு ஜில்லாக் கல்விப் பகுதித் தலைவர் மெய்த்திருவினர் G. L. லோபோ B. A. (Cantab) I. E. S. அவர்கள் விழாவிற்கு முதன்மை வகித்தார்.

## காந்திஜி வேலை

(ஸ்ரீமதி மீராப்பென் எழுதியது)

லண்டன், அக், 16

வேறெந்த வாரத்தையும் விட இந்தவாரம் காந்திஜிக்கு அதிகமான வேலை. இரவு 12 மணி 1-மணி வரையில்கூட விழித்திருக்கிறார். ஒரு நாளிரவு படுக்கும்பொழுது இரண்டு மணி கூட ஆய்விட்டது. அதோடு கூட காலையில் 3-மணிக்கே வேலைக்காக எழுந்திருந்து விடுகிறார். அவருக்கு இளைப்பாறுவதற்கே அவகாசமில்லை. அவர் முகத்தில் களைப்புக் குறிகள் காணப்படுகின்றன. தூக்கமில்லாமையே இதற்குக் காரணம். இனிமேல் இவ்வளவு நேரமாகாது. எவ்வளவு சீக்கிரமென்றாலும் 11 மணிக்கு முன்னால் படுக்கப் போவதும் முடியாது. இங்கே சீதோஷ்ண ஸ்திதி வெகு ரம்யமா யிருக்கிறது. பாபுஜீ மாத்திரம் புதிதாக உடைகளொன்றும் தரித்துக் கொள்ளவில்லை. இரண்டே யிரண்டு காஷ்மீரப் போர்வைகளையே யவர் உபயோகப்படுத்தி வருகிறார். ஆகாரமும் எப்பொழுதும் போல் தான். இங்குள்ள சீதோஷ்ண நிலை எங்களுக்கு வெகு ஆரோக்கியமா யிருக்கிறது.

## காந்தி—லாயட் ஜார்ஜ்

மகாத்மாகாந்தி மாஜி முதல் மந்திரி லாயட் ஜார்ஜுடன் புதன் கிழமை இரவு 3 மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். லாயட் ஜார்ஜ் வீட்டு வாசலுக்கு மகாத்மா மோட்டார் போய் நின்றதும், லாயட் ஜார்ஜ் வெளியே வந்து வரவேற்று அழைத்துச் சென்றார். இருவரும் மிகுந்த சந்தோஷமாய் பேசிய பின்பு, லாயட் ஜார்ஜ் அபிப்பிராயம் இந்தியாவிற்கு சாதகமாய் திரும்பியிருப்பதாய் தெரிகிறது. அவர் உடல் நலம் குன்றி யிருப்பதால் கொழும்புக்கு வருகிறார். ஜனவரி மாதம் சீமை திரும்புவார். திரும்பிய பின்பு, இந்தியாவிற்கு சாதகமாக பார்லிமென்டில் வேலை செய்வார்.

## அறிக்கை

"வந்தேமாதரம்" தினசரி பத்திரிகையை இன்று நாம் வாங்கிக்கொண்ட படியால் இனி நமது நிர்வாகத்திலேயே நடைபெற்று வரும். நண்பர் வி. என். ரங்கசாமி ஐயங்கார் அவர்களே இனியும் ஆசிரியராய் இருந்து வருவார். மணியார்டர், கடிதங்கள் முதலியவைகள் இனி "வந்தே மாதரம்" ஆபீஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும். எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. உடனே எழுதவும்.

மானேஜர், "காந்தி" ஆபீஸ்,

## தங்கம் வெள்ளி.

சென்னை, நவம்பர், 21௳

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 26—0—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 16—10—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 60—0—0 |
| ,, 1 | ரூ. எடை | 0—10—0 |

## தேவை

ஆங்கிலமும், தமிழும் நன்கறிந்த ஒரு குமாஸ்தா தேவை. ரூபாய் 100 டிபாசிட் கட்டத் தயாராயிருப்பவரே கீழ்கண்ட விலாசத்திற்குத் தெரிவித்துக் கொள்ளலாகும்.

ஜெனரல் நியூஸ் ஏஜன்சி,
பிராட்வே கார்னர் சென்னை.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 26உ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 11உ வியாழக்கிழமை || இதழ் 7

## காந்திஜீ எச்சரிக்கை



பிரிட்டிஷ் சிங்கம்:—தினசரி ஒரு ஆட்டுக்குட்டி போதும். கொடுத்துவிட்டால் உங்களை யெல்லாம் எனது மந்திரிகளாக வைத்துக்கொள்ளுவேன்.

வகுப்புவாதிகள்:—உத்தரவு. அப்படிச்செய்ய காத்திருக்கிறோம்.

மகாத்மா:—பிரதிநிதிகளே, இது என்ன நட்பு? அற்ப பதவிகளுக்காக உங்கள் உடமைகளையும், உரிமைகளையும் தத்தஞ் செய்வது மூடத்தனமல்லவா?

Koviloor Digital Library



# சீமையில் ஓலம்

காரியம் நெருங்கிவிட்டது. இனியும் விளக்கெண்ணெய் போட்டுப் பேச முடியாது. இப்படியோ அப்படியோ சொல்லியாக வேண்டும். முதல் மந்திரி மக்டானல்டுக்கும், சர்ச்சில் கோஷ்டியின் மிரட்டலுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது. லண்டனில் வட்டமேஜை மகாநாடு முடியப் போகிறது. அநேகமாக டிசம்பர் மாதம் ௨-ல் முடிந்துவிடும். அதற்குள் சர்க்கார் கொள்கையை வெளியிட்டாகவேண்டும். ஆகவே பழமைவாதி கொதிப்பும், முணுமுணுப்பும், ஓலமும் சீமையில் அதிகமாகின்றன. அணைகிற விளக்கு பிரகாசமாய் எரியும். அதைப்போல முடிவு நெருங்க நெருங்க ஓலம் அதிகமாகிறது. பதுங்கிவிட்டார். சர்ச்சில் பகிரங்கமாய்ப் பேச தைரியமில்லாமல், விழுங்கி விழுங்கி பேசுகிறார். கன்சர்வேடிவ் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் கூட்டமாய்ச் சென்று முதல் மந்திரியை பேட்டி கண்டு "காந்தியை திருப்பி அனுப்புங்கள்" என்று சொன்னார்களாம். சீமையிலுள்ள ஈவினிங் நியூஸ், டெயிலி மெயில் போன்ற பத்திரிகைகளும் இதேமாதிரி ஓலம் போடுகின்றன. ஈவினிங் நியூஸ் சொல்லுகிறது:—"காந்தி வந்தார். பார்த்தோம். ஆனால் அவரை ஜெயிக்க முடியவில்லை. பூர்ண சுயேச்சை வேண்டுமென்று சொல்லுகிறார். பிரிட்டிஷாரை கழுத்தைப் பிடித்து இந்தியாவை விட்டு தள்ள வேண்டும் என்கிறார். ஆகவே இந்தப் பேச்சுகளை வெகுநாள் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அவரை சீக்கிரம் அனுப்புங்கள்."

டெயிலி மெயில் சொல்லுகிறது:—"பூகோள சாஸ்திரப் படியோ, பொருளாதாரப் படியோ, ராஜீயப்படியோ எப்படிப் பார்த்தாலும் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இணையற்ற பொக்கிஷமாகும். அதை இழந்தால் நமது ஏகாதிபத்தியமே தவிடு பொடியாய்விடும். அதை இழக்கும்படி சொல்லும் எந்த பிரிட்டிஷ்காரரும் பெரிய தேசத் துரோகியாகும்."

இம்மாதிரி ஓலங்கள் சீமையில் தற்சமயம் அதிகமாயிருக்கின்றன. இவற்றின் மூலமாக, இந்தியாவை பிரிட்டிஷார் என்ன நோக்கத்தோடு கைப்பற்றியிருக்கிறார்கள் என்ற ரகசியம் வெளியாகிறது; இது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த ஓலங்களை மந்திரி சபை கவனிக்கப் போகிறதா? இவற்றிற்கு பயந்து வட்டமேஜை மகாநாட்டை கலைத்துவிடப் போகிறதா? பிரதம மந்திரி ஜனவரி மாதம் வெளியிட்ட அறிக்கை வெறும் துண்டுக் காகிதமாகப் போகிறதா? எப்படி யானாலும் நமக்கு கவலையில்லை. லண்டனில் சுயராஜ்யம் பெறாமல் இருக்கப் போவதில்லை; அதற்காக எதையும் தியாகம் செய்யத் தயார் என்று இந்தியர் முடிவு செய்துவிட்டார்கள். ஆகவே பிரிட்டிஷார் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இந்தியா சுயராஜ்யமடைவது உறுதி. ஆனால் பிரிட்டிஷார் கொடுக்காமல், இந்தியா பறித்துக் கொள்ளுமானால், முன்பு அமெரிக்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விலகியதைப் போலவே இந்தியா விலக நேரிடும். அப்படி விலகினால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்—அல்ல பிரிட்டன்—அதை சகித்துக்கொள்ள முடியுமா? அதனால் ஏற்படும் வர்த்தக நஷ்டங்களையும், பொருளாதார நஷ்டங்களையும் தாங்கிக்கொள்ள முடியுமா? பிரிட்டன் இதை சிந்திக்கவேண்டும். ஜெனரல் ஸ்மட்ஸ் சாமான்யப்பேர்வழியல்ல. ஆயிரம் சர்ச்சில் கொண்டவரே ஒரு ஜெனரல் ஸ்மட்ஸ். இந்தியாவுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும், காந்திஜியை வெறுங்கையோடு அனுப்பக்கூடாது என்று அவரே எச்சரித்திருப்பதை பிரிட்டன் கவனிக்க வேண்டும். ஜெனரல் ஸ்மட்சுக்கு அப்படி தோன்றுமானால், நெருக்கடி எவ்வளவு பலமாயிருக்கிறதென்பதை அதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இனி பிரிட்டன் தலையெழுத்தை முடிவு செய்வது மந்திரி சபையைச் சேர்ந்தது. அது எப்படி செய்யப் போகிறது என்று பார்ப்போம்.

---

## பஜாஜுக்கு ஜே!

சேத் ஜமுனாலால் பாஜாஜ் மத்திய மாகாணத்தில் தீண்டாமை ஒழிக்க சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அவர் சுற்றுப் பிரயாணத்தில், 26 கிணறுகளையும், 3 கோவில்களையும் தீண்டாதாருக்காக திறந்து வைத்திருக்கிறார். இன்னும் 50 கிணறுகளை திறந்து வைக்கும்படி அவருக்கு அழைப்பு வந்திருக்கிறது.

Koviloor Digital Library



# ஜெனரல் ஸ்மட்ஸ் எச்சரிக்கை.

ஜெனரல் ஸ்மட்ஸ் தென்னுப்பிரிக்காவுக்குப் பயணமாகிச் செல்வதற்கு முன் இந்தியப் பிரச்னையைக் குறித்து பின்வருமாறு தெரிவித்தார்.—

இன்று பிரிட்டனை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னை இந்தியப் பிரச்னையேயாகும். இது தான் மிகவும் முக்கியமான பிரச்னையாக இப்பொழுதிருக்கிறது. முக்கியமானது மட்டுமல்ல ஒருவேளை மிகவும் அபாயகரமான பிரச்னை யென்றும் சொல்லலாம். இந்தியாவைத் திருப்திசெய்வதற்கு நியாயமாக எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்கவேண்டும். எவ்வளவு சீக்கிரம் அவ்விதம்செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து முடித்தால் நலன் பயக்கும். ஏனெனில் சமரசத்திற்கு இப்பொழுது தகுந்த சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இது நெடுங்காலம் நீடித்து நிற்காது. ஒரு ஒழுங்கான சமரசத்திற்கு வரவேண்டுமென்று காந்திஜி கொஞ்சமும் களங்கமின்றி மனப்பூர்வமான ஆவலுடையவராக இருக்கிறார். இந்த சமயம் காந்திஜியின் செல்வாக்கு பிரிட்டனுக்கோர் சொத்தாகும், அவருக்கு செல்வாக்கிருக்கும் போதே பிரிட்டன் காந்திஜியுடன் சமரசம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பிரிட்டன் இந்தியாவுடன் சமரசம் ஏற்படுத்துவதற்காகச் செய்யும் முயற்சிகளுக்குக் காந்திஜி செல்வாக்கு மிகவும் பயனளிக்கத்தக்கது. இந்தியாவின் பெரும்பாலான ஜனங்களுக்கு அவர் தலைவர். அவர்களின் சார்பாக அவர் எதையும் செய்து முடிக்க முடியும். அவரைப்போல் செல்வாக்குடைய மற்றொரு தலைவர் இந்தியாவிலேயே இல்லை. மீண்டும் தப்பெண்ணங்கள் ஏற்படாதவாறும் இந்தியாவில் மீண்டும் குழப்பங்கள் நேரிடாதவாறும் தடைசெய்ய எவ்வளவு முயற்சிகள் செய்ய முடியுமோ அவ்வளவு முயற்சிகளும் செய்யவேண்டும். இந்தியாவில் மீண்டும் குழப்பம் நேரிடுமேல் அது எல்லா விதமான பரிதாபகரமான சம்பவங்களிலும், சங்கடங்களிலும் கொண்டுபோய் விடும். குழப்பங்களை அடக்க பலாத்காரம் ஏற்ற மருந்தல்ல. அடக்குமுறைக்கு பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் கொள்கைக்கு தற்காலமுள்ள அபிப்பிராயமோ அல்லது பிரிட்டிஷ் இயல்போ இடந்தராது. இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைவிட்டு வெளியேறிவிடாது இணைந்திருக்கும்படி செய்வதற்கும், சமரச முடிவு ஏற்படுத்துவதற்கும் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியையும் பிரிட்டிஷ் ஜனங்கள் நன்னம்பிக்கையுடன் பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

# அவ்வளவும் முத்து

சென்றவாரம் பண்டித ஜவர்லால் கல்கத்தாவில் பேசிய பேச்சைக் கேட்டு சர்ச்சில் கோஷ்டியார் இடிவிழுந்த நாகம் போல திகைக்கிறார்கள். மகாத்மா ஜாகையில் இப்பேச்சை "ஜவார்" (முத்து) போல இருக்கிறதென்று சொல்லுகிறார்களாம். அந்தப்பேச்சின் சாராம்சத்தை கீழே வெளியிடுகிறோம்:—

வங்காளத்தில் என்ன நடக்கிறதென்பதை மற்ற மாகாணங்கள் கவனியாமல் இல்லை. ஆனால் காங்கிரஸ் வெறும் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் காலம் போய்விட்டது. காங்கிரஸ் இன்று ஒரு பலம் பொருந்திய சபையாகும். இதை பிரிட்டிஷ் சர்க்கார் மட்டுமல்ல; மற்ற சர்க்கார்களும் மற்ற நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இன்று காங்கிரஸ் பிரிட்டிஷ் சர்க்காரோடு சம அந்தஸ்திலிருந்து பேசுகிறது. ஆகவே காங்கிரஸ், தீர்மானங்கள் நிறைவேற்றும் சபையாயிருக்கும் காலம் மாறிவிட்டது. சிற்சில சமயங்களில் தன் அபிப்பிராயத்தை வெளியிடுவதற்காக தீர்மானங்களை அது நிறைவேற்றலாம். ஆனால் இனி என்ன செய்வதென்று யோசனை செய்ய அது உட்கார்ந்தால், சட்ட மறுப்பை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டுமா என்பதைப்பற்றி யோசிக்கவே அது உட்காரும். ஜர்மனியும் இங்கிலாந்தும் சண்டை செய்ய நேரிட்டால், ஜெர்மனி வெறும் தீர்மானங்களை நிறை வேற்றிக் கொண்டிருக்காது. பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி ஆபீசுக்கு தனது ஸ்தானாதிபதியை அனுப்பி, 24 மணி நேரத்தில் பதில்வேண்டும் என்று கேட்டுவிடும். மறுபடியும் போர் நேரிட்டால், காங்கிரசும் அம்மாதிரியே சர்க்காரிடம் நடந்து கொள்ளும். இன்று நாம் உண்மையான சமாதானத்தில் இருக்கிறோமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? இன்று நாம் ஒரு விநோதமான நிலைமையில் இருக்கிறோம். சிட்டாகாங், ஹிஜிலி, டாக்கா முதலிய இடங்களில் நடந்த சம்பவங்களை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இவற்றை யெல்லாம் பார்த்த பின்பு காங்

(54-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# யுத்த நிறுத்த முயற்சிகள்.

யுத்த தளவாடங்களைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் 1817-ம் வருஷத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. அந்த வருஷத்தில் ஏற்பட்ட ரஷ்--பாகட் உடன்படிக்கைப்படி, அமெரிக்கா ஐக்கிய மாகாணமும், கிரேட் பிரிட்டனும் 'கிரேட்லேக்ஸ்' என்னும் பெரிய ஏரியில் மூன்று யுத்தக் கப்பல்களுக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கக் கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டன. மறுபடியும், 1831-ம் வருஷத்திலும் 1861-ம் வருஷத்திலும், பிரான்ஸ் தேசமானது சர்வ தேசங்களின் யுத்த தளவாடங்களைக் குறைக்க வேண்டுமென்று முயற்சி செய்து பயனடையாமற் போய் விட்டது. 1902-ம் வருஷத்தில் ஏற்பட்ட அர்ஜண்டைன் சில்லி உடன்படிக்கைப்படி யுத்தக் கப்பல்களை இனியும் சேர்த்துக் கொண்டு வரக்கூடாதென்று தீர்மானிக்கப் பட்டது. 1899-ம் வருஷத்திலும் 1907-ம் வருஷத்திலும் ஹேக்கில் நடைபெற்ற மகாநாடுகளில் இது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் இவைகளை அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை. சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகே, அகில உலக சமாதானத்திற்கு அமைதியாயிருப்பது யுத்த தளவாடங்களைக் குறைப்பதே என்ற உணர்ச்சி வலுப்பட்டது. பின்னர் மேற்படி சர்வதேச சங்கம் காணப்பட்டு "தேசத்தின் அமைதிக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவைத்தான் ஒவ்வொரு தேசமும் வைத்துக் கொள்வதற்குரிய திட்டங்களை வகுக்கவேண்டும்" என்று மேற்படி சங்க உடன்படிக்கையின் எட்டாவது விதி கூறுகிறது. இந்த விதியை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு நிரந்தர ஆலோசனைக் கமிட்டி ஒன்றும், பின்னர் தற்காலிக கமிஷன் ஒன்றும் நியமிக்கப்பட்டன. ஆனால் சர்வதேச சங்கத்தில் சேராத தேசங்கள் ஒருவித விரோத மனப்பான்மை கொண்டிருந்ததால் இந்தக் கமிட்டிகள் எவ்வித பயனுள்ள வேலையும் செய்ய முடியவில்லை. பின்னர் 12-11-1921-ல் ஏற்பட்ட வாஷிங்டன் உடன்படிக்கைப்படி, அமெரிக்கா ஐக்கியமாகாணம், கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தலி, ஜப்பான் ஆகிய இந்த நாடுகள், யுத்தகாலங்களில் மூச்சுத் திணறக்கூடியதும் விஷத்தைக் கக்கக்கூடியதுமான காற்றுகளையோ இதற்கிணையான சாதனங்களையோ உபயோகிக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நீர் மூழ்கிக் கப்பல்கள், யுத்தக்கப்பல்கள், ஆகாயயுத்த விமானங்கள் முதலியவைகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் இந்த வாஷிங்டன் மகாநாடு ஒன்றும் செய்யவில்லை. பின்னர் 1924-ம் வருஷத்தில் ஜினீவாவில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார்மீது படையெடுப்பது சர்வ தேசத்தினராலும் கண்டிக்கப்படக் கூடிய குற்றமென்றும், சண்டைக்கு ஆஸ்பதமான காரணங்கள் கட்டாய மத்தியஸ்தத்திற்கு விடப்பட வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டன. பின்னர் லொகார்னோ உடன்படிக்கையின்படி ஜர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் யுத்தம் செய்வதில்லையென்று தீர்மானித்துக் கொண்டன. பின்னர் 1927-ம் வருஷம் ஜினீவாவில் நடைபெற்ற கடற்படை மகாநாட்டில் நாசகாரிக்கப்பல்கள் நீர் மூழ்கிக்கப்பல்கள் முதலியவற்றை ஓர் அளவுக்குட்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இதனால் பயன் விளையவில்லை. 1928-ம் வருஷம் அமெரிக்கா செய்த சூசனைப்படி கெல்லாக்-பிரயண்ட் உடன்படிக்கை ஏற்பட்டது. தேசங்கள் கையெழுத்திட்டன. சர்வ தேசங்களும், தங்களுக்குள் ஏற்படும் மனமாற்றங்களை யுத்தத்தின் மூலமாகத் தீர்த்துக் கொள்ளக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டன. ஆனால் 1930-ம் வருஷம் லண்டனில் நடைபெற்ற கப்பற்படை மகாநாட்டில், ஒவ்வொரு தேசமும் எவ்வளவு கப்பற்படைகளைக் குறைத்துக் கொள்வதென்பதைப் பற்றி ஒருவித சமரஸ முடிவு ஏற்படாமற் போனது வருந்தத் தக்கதாகும்.

# கத்தர்

தீபாவளிக்குமட்டும் திருநெல்வேலி ஜில்லாவில் விற்பனையான கதர் ரூ. 44027—10—1 இதில் சுமார் ரூ. 7800 பெறுமான கதர் வெளி ஜில்லாக்களுக்கு விற்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர தனிப்பட்ட வியாபாரிகளும் காங்கிரஸ் அபிமானிகளும் வெளியிலிருந்து சுமார் ரூ. 3000க்குக் கதர் வாங்கி விற்றிருக்கிறார்கள்.

விற்பனை விவரம்

I. அ. பா. ச. சங்கக்கிளைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) திருநெல்வேலி | ரூ | 15181 | 9 | 0 |
| (2) பாளையங்கோட்டை | ரூ. | 10175 | 8 | 9 |

Koviloor Digital Library



## வர்த்தக உரிமை
(மகாத்மா காந்தி)

பிரிட்டிஷாரோ அன்றி இதர ஐரோப்பியர்களோ, அமெரிக்கர்களோ அன்றி ஜப்பானியர்களோ யாராயிருப்பினும் சரி; வர்ண பேதம், ஜாதி பேதம் இவைகளை அடிப்படை யாகக்கொண்டு பிரிட்டிஷ் காலனிகளும், குடியேற்ற நாடுகளும் செய்துள்ள அவலக்ஷணமான சட்ட திட்டங்களை பின்பற்ற வேண்டுமென்பது என் எண்ணமல்ல. இந்தியர் உலகத்தினின்றும் பிரிந்து தனித்து இருக்கவேண்டு மென்றோ அன்றி, இந்தியாவிற்குள் ஒருவரையும் வியாபாரம் செய்ய அனுமதிக்கக் கூடாதென்றோ நான் விரும்பவில்லை. ஆனால், இந்திய நிலைமையை உலக நிலைமைக்கு சரிசமமாகக் கொண்டுவர இந்தியாவில் செய்யவேண்டிய காரியங்கள் பல உள. முதலாளிகள், ஜமீந்தார்கள் உயர் ஜாதியாரென்று கூறிக்கொள்பவர்கள், இவர்களாலும், பின்னல் வெகு கட்டுப்பாடான முறையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாலும் அதோகதியடைந்துள்ள, ஏழைகளையும், வாயில்லாப் பூச்சிகளையும் கைதூக்கி உயர்த்தும் பொருட்டு, இன்னும் பல வருஷ காலங்களுக்கு இந்திய சுய ஆட்சி சர்க்கார் சட்ட திட்டங்கள் அமைப்பதிலேயே கண்ணும் கருத்தும் செலுத்தும். அவர்களை கைதூக்கி விட அவர்களுக்கு தேசத்தில் முதல் உரிமையும், விசேஷ சலுகையும் காட்டவேண்டியது தேசிய சர்க்காரின் முதல் கடமையாகும். இதற்காக ஏற்கனவே அவர்களை நசுக்கிக் கொண்டிருக்கும் சுமைகளை அகற்றவேண்டியிருக்கும். அதோகதியிலாழ்ந்து, கபோதிகளாய் பரதவிப்பவர்களை கை தூக்கி விடும் வேலையில், விசேஷ சலுகை அனுபவித்துவரும் வெள்ளையரும், இந்தியரும், யாராயிருப்பினும் அவர்களது உதவியை வேண்டி நிற்கின்றேன். அவர்கள்பால் வித்தியாசம் காட்டப்படுகிறதென்று பின்பு அவர்கள் மனதில் கஷ்டப்படக் கூடாது. தற்போது இந்தியாவில் "திண்டாதார்" படுந்துயர் கொஞ்சமன்று. "உயர்ஜாதி" வகுப்பினரின் கையிலும், சர்க்கார் கையிலும் சிக்கி வாழ்நாளை பற்பல இன்னல்களுக்குட்பட்டு ஒருவாறு கழித்து வருகிறார்கள். நிலைமையை சரிசமானமாக்க தேசீய சர்க்கார் பல வேலைகள் செய்ய வேண்டியிருக்கும். "திண்டாதார்" வகுப்பினருக்கு நிலங்களை இனாமாக வழங்கத்தக்க சட்டதிட்டங்களை முதலில் செய்யும். நிலங்களின் விலைகளை, வெள்ளையருள்ளிட்டு இந்தியாவிலுள்ள பணக்காரர்கள் யாவரும் கொடுக்க வேண்டும். அது பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் நடக்கும் போராட்டமே யாகும். கோடிக்கணக்கான வாயில்லாப் பூச்சிகளுக்கு சுய ஆட்சி சர்க்கார் இருக்கக் கூடாதென்றும் தங்கள் உரிமைகளுக்கும் சொத்துக்களுக்கும் உத்தரவாத மளிக்க வேண்டுமென்றும் "பணக்காரர்கள்" பிடிவாதம் செய்வார்களாகில் தேசீய சர்க்காரை ஸ்தாபிக்க முடியாதென்றே நான் கூறவேண்டும். காங்கிரஸ் எவ்வித வித்தியாசத்தையும் புகுத்தாது. வெளிநாட்டினரென்ற காரணத்தால் அவர்களுக்கு தடையேற்படுத்தாது. அவ்வித வித்தியாசமேதாவ திருப்பின், அது, இந்தியாவில் பிறந்த பிரஜைகளையும் கட்டுப் படுத்துவதாக இருக்கும். தற்போதைய சர்க்கார் கடன்களை மறுத்து விடவேண்டுமென்று காங்கிரஸ் கேட்கவில்லை. அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்றே கேட்கிறது. தற்போதைய சர்க்கார் சிலருக்கு சர்வமான்யங்க ளளித்துள்ளனர். அவற்றில் சில தேசத்திற்கு செய்த தொண்டிற்காக அளிக்கப்படாமல் சில சர்க்கார் அதிகாரிகளுக்கு செய்த ஏதோ சில பணிகளுக்காகவே ஈந்துள்ளனர். இவ்வித சலுகைகளை பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். ஏதோ ஒரு சர்க்கார் அதிகாரிக்கு செய்த பணியின்காரணமாக யாராவது இவ்வித சலுகை பெற்று வந்தால், அச்சலுகையை நான் கூடிய சீக்கிரம் பறித்து விடுவேன். சட்ட பூர்வமாக, நேர்மையாக பெற்றுள்ளவைகளையு முள்ளிட்டு யாவற்றையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (3) | தூத்துக்குடி | ரூ. | 7898 | 1 | 9 |
| (4) | திசையன்விளை | ரூ. | 1123 | 12 | 9 |
| (5) | வீரவநல்லூர் | ரூ. | 645 | 1 | 0 |
| (6) | ஏரல் | ரூ. | 576 | 14 | 0 |
| (7) | பாவூர் சத்திரம் | ரூ. | 159 | 4 | 3 |
| II. | அத்தாட்சி பெற்ற கடை. | | | | |
| (8) | திருநெல்வேலி சுத்த கதர் ஹவுஸ் | ரூ. | 1052 | 6 | 6 |
| III. | இதர விற்பனை | | | | |
| (9) | திருநெல்வேலி கைராட்டை நூல்நெசவுக் கம்பெனி லிமிடெட் | ரூ. | 5275 | 0 | 0 |
| (10) | தென்காசி காங்கிரஸ் காரியதரிசி | ரூ. | 1940 | 0 | 0 |
| | ஆக | ரூ. | 44027 | 10 | 1 |

Koviloor Digital Library



# தமிழ் நாடு காங்கிரஸ் கூட்டம்

கோவையில் தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 20-ம் மாலை தலைவர் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் நடந்தது. பல தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளில் முக்கியமானவை:—

மாப்பிள்ளை கைதிகளை விடுதலை செய்ய சர்க்கார் முடிவு செய்தது பற்றி இக்கமிட்டியார் சந்தோஷப்படுவதுடன், ஜூன் மாதம் நடந்த தமிழ் நாடு மகாநாட்டில் அந்த விஷயமாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இணங்க பக்ஷபாதமில்லாமல் சர்க்கார் தமது முடிவை நிறைவேற்றுவார்கள் என்றும், ஸ்ரீ. எம். பி. நாராயண மேனனையும் விடுதலை செய்வரென்றும் நம்புகின்றனர்.

கள்ளுக் கடைகளிலும், சீமை ஜவுளிக் கடைகளிலும் மறியல் செய்யும் காங்கிரஸ் தொண்டர்களது தைரியத்தையும், பொறுமையையும் தமிழ் நாட்டவர்களின் ஆதரவையும் இக்கமிட்டியார் பாராட்டுவதுடன், சப கலெக்டர்களோ அல்லது சர்க்காரோ என்ன தடைபுரிந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் மறியல் இயக்கம் நடைபெறுமென்றும் நம்புகின்றனர்.

காங்கிரஸ் வாதிகள் டில்லி ஒப்பந்தத்தை மீறியதாக சர்க்கார் வீண்பழி கூறுவதை இக்கமிட்டியார் மறுப்பதுடன், காங்கிரஸ் வாதிகள் அஹிம்சா தர்மத்தை சித்திகமாக அனுசரித்து வருவதைப் பாராட்டுகின்றனர்.

தீண்டாதார் சார்பில் தனித் தேர்தல் முறை கேட்பது சங்கடத்தை விளைவிக்குமாகையாலும், அத் தேர்தல் முறையால் தேசிய ஒற்றுமைக்கு பங்க மேற்படுவதோடு, தீண்டாதார் நன்மைக்கும், அவர்களது சமுதாய முன்னேற்றத்திற்கும், தீண்டாமை விலக்குக்கும் தடை ஏற்படுமாகையாலும், அந்த கோரிக்கையை நிராகரிக்கும்படி இக்கமிட்டியார், அந்த வகுப்பாரைக் கேட்டுக் கொள்கின்றனர்.

காங்கிரஸில் சேர்ந்து, தீண்டாதாரின் உண்மை நண்பரும், வழிகாட்டியுமான மகாத்மா காந்தியைப் பின் பற்றும்படி இக்கமிட்டியார் அந்த வகுப்பாரைக் கேட்டுக் கொள்கின்றனர்.

மடாதிபதிகளும், கோயில் தர்மகர்த்தாக்களும் காங்கிரஸ் வேண்டுகோளுக்கு இணங்கி நடக்காதது பற்றியும், முக்கியமாக ஆலயங்களை தீண்டாதாருக்கு திறந்துவிடாதது பற்றியும் இக்கமிட்டியார் வருந்துகின்றனர். இந்த அதிகாரிகள் பொறுப்பில்லாமலிருப்பதால் தான் இந்து மதம் நாளுக்கு நாள் க்ஷீணதசை யடைந்து வருகிறதென்று அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். குருவாயூரில் நடக்கும் ஆலயப்பிரவேச சத்தியாக்கிரக விஷயத்தில் பூரண அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் அச்சத்தியாக்கிரகம் சித்தியாகும் பொருட்டு, கூடுமான உதவி புரியும்படி ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

ராணுவ விஷயத்தில் பூரண நிர்வாகமில்லாத எந்த அரசியல் திட்டத்தையும் இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்று இக்கமிட்டியார் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொளளுவதுடன், கனம் சீனிவாச சாஸ்திரி முதலிய இந்திய பிரதிநிதிகள் மகாத்மாவின் கோரிக்கைக்கு விரோதமாக ராணுவத்தை கவர்னர் ஜெனரல் நிர்வாகத்தில் வைக்கும் திட்டத்தை ஆதரித்ததைக் கண்டிக்கின்றனர்.

இக்கமிட்டியார் சென்னை மாகாணத்தில் சர்க்கார் டில்லி ஒப்பந்தத்தை சரியாக அனுசரிக்காததைக் கண்டிக்கின்றனர். உப்பு வரி அநீதமானதென்ற அபிப்பிராயத்தை மீண்டும் வற்புறுத்துகின்றனர். முதுகுளத்தூர், ராமநாதபுரம் இந்த தாலூகாக்களில் உப்பெடுக்கும் உரிமையை சர்க்கார் ரத்து செய்தது டில்லி ஒப்பந்தத்தை மீறியதாகுமென்றும் வற்புறுத்துகின்றனர்.

---

(51-ம் பக்கம் பார்க்க)

கிரஸ் காரியக் கமிட்டி என்ன தீர்மானிக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்? இவற்றைப் பார்த்த பின்பு சட்டமறுப்பு அவசியமா இல்லையா என்ற யோசனையே போய்விட்டது. சட்ட மறுப்பு அவசிய மென்பதற்கு யாரும் சொல்லவேண்டியதில்லை. அதை இன்று நாளையா அல்லது எப்பொழுது ஆரம்பிப்பது என்பதே இப்பொழுது முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம். மறுபடியும் சட்டமறுப்பு ஏற்பட்டாலொழிய நமது லட்சியம் நிறைவேறப் போவதில்லை. அது நிச்சயம். தாம் இல்லாமலே அவசியமானால் போர் ஆரம்பிக்கும்படி மகாத்மா சொல்லி விட்டார். ஆனால் ஜெனரலாகிய அவர் நம்மிடம் வந்தபின்பே நாம் போர் ஆரம்பிப்பது நல்லது. ஏனெனில் வரப்போகும் போராட்டம் மிகப் பெரியதாய் இருக்கும்.

Koviloor Digital Library



# மின் வெட்டு.

## ராஜீநாமா ரகசியம்.

ஐக்கிய மாகாணத்தில் ஒரு பெரிய வெள்ளை அதிகாரியும் ஒரு பெரிய இந்திய அதிகாரியும் வேலையிலிருந்து விலகி விட்டார்கள். சர். ஜார்ஜ் லாம்பார்ட் பொக்கிஷ மந்திரி. ரஜாவிலிருந்து சென்ற 1௳ தான் வேலையில் வந்து சேர்ந்தார். அதற்குள் அவர் வேலையை விடுவானேன்? ஸ்ரீ. தன்வர் ஜகதீச பிரசாத் ஐக்கிய மாகாண சர்க்காரின் பிரதம காரியதரிசி. அவர் வேலையை விட்டு விலக இன்னம் 18 மாதங்கள் இருக்கின்றன. அவரும் இப்பொழுது விலகுவானேன்? இவர்கள் விலகுவதைப் பார்த்தால், ஐக்கிய மாகாண குடிகளின் நிலவரி சம்பந்தமாக அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விலகுகிறார்களோ என்று முதலில் சந்தேகம் தோன்றலாம். உண்மை அப்படியல்ல. நிலவரி உயர்ந்தாலும், குடிகள் தாழ்ந்தாலும் அவற்றைப் பற்றி இவர்களுக்கு கவலையில்லை. வேறு என்ன காரணம்? அவர்களுக்கு வேலை உயர்வு கிடைக்கவில்லையாம். அசாம் கவர்னர் பதவி லாம்பார்ட்டுக்கு கிடைக்கவில்லையாம். பொக்கிஷ மந்திரி பதவி பிரசாத்துக்கு கிடைக்கவில்லையாம். இதனால் அவர்களுக்கு வேலை வேண்டாமாம், தாடி தீப்பற்றி எரியும் போது, சுருட்டுக்கு நெருப்பு கொடுக்கும்படி ஒருவன் கேட்டானாம். அதற்கும், இதற்கும் என்ன வித்தியாசம்?

## கொலு சபை.

டெல்லி சட்டசபை உண்மையான சட்டசபையா? பொறுப்புள்ளதா? இரண்டும் கிடையாது என்பதைக் காட்ட எத்தனையோ காரியங்கள் இதற்கு முன்பு நடந்திருக்கின்றன. இப்பொழுது மறுபடியும் ஒரு உதாரணம். டெல்லி சட்டசபையில் வரியைக் கூட்ட புதிதாக வரவு செலவு மசோதா கொண்டுவந்தார்கள் அல்லவா? இதில் சில வரிகளை அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவைகள் ஒப்புக் கொள்ளாததால் ஏற்பட்ட குறைவு சுமார் 4 கோடியே யிருக்கும். பிரதிநிதிகள் சொல்லுவதைக் கேட்டு நடக்கும் சர்க்காரா யிருந்தால், இந்தக் குறைவை ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா? சர்க்கார் என்ன செய்தது? வைசிராயிடம் கையெழுத்து வாங்கி, அங்கத்தினர்கள் குறைத்ததை ரத்துச் செய்து மறுபடியும் பழையபடியே மசோதாவை மூன்றும் முறையாக கொண்டுவந்தது. சட்டசபை என்ன செய்தது? ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ் என்றபடி வைசிராய் சிபார்சு செய்ததற்காக பூரா மசோதாவையும் நிராகரிப்போம் என்று உதறி அடித்துவிட்டது. சட்டசபை தைரியத்தை பாராட்டுகிறோம். நிராகரித்துவிட்டதால் மசோதா நின்றுவிடப் போவதில்லை. வைசிராய் அதிகாரத்தால் உயிர் பெற்று விடும். ஆனால் சட்டசபையின் போலித்தனம் மறுபடியும் உலகிற்கு வெளியானது ஒரு விசேஷமல்லவா?

## பலே பரோடா!

இம்மாதம் 23௳ முதல் பரோடா சமஸ்தானத்தில் தீண்டாதார்களுக்காக ஏற்படுத்தியிருந்த தனிப்பள்ளிக் கூடங்களை எடுத்துவிட்டார்கள். இனி அந்த சமஸ்தானத்திலுள்ள மற்ற பள்ளிக் கூடங்களிலேயே தீண்டாதாரையும் சேர்த்து படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டும். இப்படி உத்தரவு போட்டதற்காக பரோடா சமஸ்தானத்தை வாழ்த்துகிறோம். தனிப் பள்ளிக்கூடங்கள் இருக்கிறவரை தீண்டாமை தொலையாது. பொதுப் பள்ளிக் கூடங்களில் தீண்டாதாரைச் சேர்த்தால் தான் தீண்டாமை தொலையும். இந்த தத்துவத்தை கடைப்பிடித்தே, தீண்டாமை தொலைய வேண்டுமானால் தனித்தொகுதி கூடாது என்று மகாத்மா சொல்லுகிறார்.

## சர்க்கார் பின் புத்தி

டாக்காவிற்குள் சுபாஷ் சந்திரபோசை போகக் கூடாதென்று முதலில் தடுத்தார்கள். அவர் போனார். சட்டத்தை மீறியதாக கைது செய்தார்கள், அவர் ஜாமீன் கொடுக்க மறுத்தார். தடை உத்திரவை ரத்துச் செய்து சொந்த ஜாமீனில் விட்டார்கள். அவர் சட்டத்தை மீறிய வழக்கு 23௳ யன்று நடைபெறப் போவதாய் ஏற்பாட்டஞ் செய்தனர். இப்பொழுது என்ன செய்தார்கள் தெரியுமா? மூச்சுப் பேச்சில்லாமல் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டனர். இந்த பின் புத்தி கொண்ட வங்காள சர்க்காருக்கு கடவுள் எப்பொழுதுதான் முன் புத்தி கொடுக்கப் போகிறாரோ தெரியவில்லை.

## தங்கம் வெள்ளி.

சென்னை, நவம்பர், 24௳

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 27—4—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 17—5—0 |
| சீமை வெள்ளி 100 ரூ. எடை | | 59 10—0 |
| „ 1 ரூ. எடை | | 0—10—0 |

Koviloor Digital Library



## போலி கத்தர்

ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் நிறைவேறின. கொட்டைத் தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கும் பொருட்டும், தென் இந்தியாவில் கைத் தொழிலினால் பிழைக்கும் லக்ஷக் கணக்கான ஜனங்களை பாதுகாக்கும் பொருட்டும், தமிழ் நாட்டில் சுதேசி திட்டத்தைப் பின் வருமாறு நடத்த வேண்டும் என்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

1. காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரசுக்கு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களும் கத்தர் அபிவிருத்திக்காகவே உழைக்க வேண்டும்.

(2) அடுத்தபடி. சுதேசி மில் நூலான கைத் தறித் துணியை மில் துணிகளுக்கு மேலாக ஆதரிக்கவேண்டும்.

(3) மில், சுதேசி துணியைப்பற்றி தனிப்பட்ட பிரசாரமும், பிரயத்தனமும் வேண்டியதில்லை.

(4) கைத் தறியில் நெய்த எந்த துணியையும் மறியல் செய்யவேண்டியதில்லை. ஆனால் விதேசி நூலால் நெய்த தறித்துணிகளை வாங்கவேண்டாம் என்று பிரசாரம் செய்யவேண்டும்.

தற்போது விதேசித் துணிகளைக் கொண்டு நெய்யும், கைத் தறிகளை சுதேசி நூல் தறிகளாக மாற்றுவதற்கும் சுதேசி நூல், கத்தரின் பாதுகாப்பை முன்னிட்டும் 20-ம் நெம்பருக்கு மேலுள்ள நூலையே உபயோகிப்பதற்கு பிரசாரமும் பிரயத்தனமும் செய்ய வேண்டும்.

(5) விதேசி துணியையும், காங்கிரஸ் அங்கீகாரம் பெறாத இந்திய ஆலைகளின் துணியையும் மறியல் செய்யவேண்டும்.

(6) மறியலுக்குரிய துணிகளையும், காங்கிரஸ் அங்கீகரித்த துணிகளையும் கலந்து வைத்திருந்தால் அத்தகைய கடைகளையும் மறியல் செய்ய வேண்டியதுதான்.

(7) விதேசித் துணிக்கு இந்தியாவில் சாயம் தோய்த்து அச்சடித்திருந்த போதிலும், அதையும் விதேசித் துணியாகவே நினைத்து மறியல் செய்ய வேண்டியது.

## ஆமதாபாத் தொழிலாளர் சிறப்பு

ஆமதாபாத் தொழிலாளர் சங்கமே இந்தியாவிலுள்ள தொழிலாளர் சங்கங்களில் மிகச் சிறந்தது. முதலாளிகளும் தொழிலாளரும் கலந்து வேலை செய்கிறார்கள். பசுவும், புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடிப்பதைப்போல மற்றவர்களுக்கு தோன்றலாம். ஆனால் ஆமதாபாத்தில் பசுவும், புலியும் கலந்து விளையாடுவதைப் பார்க்கலாம். இதன் ரகசிய மென்ன? மகாத்மா காந்தியே. அவர் செல்வாக்கிலும், தீர்ப்பிலும் தொழிலாளியும் முதலாளியும் கட்டுப்பட்டு அடங்கி நடப்பதால், ஆமதாபாத்தில் சண்டையே கிடையாது. இந்த ஆச்சரியத்தைக் கண்டு தொழிலாளர் கமிஷனாகிய விட்லி கமிஷன் கூட பாராட்டியிருக்கிறது. அந்த சங்கத்தின் சென்ற வருஷ வேலைகள் மிகவும் திருப்திகரமாய் நடைபெற்றிருக்கின்றன. தற்சமயம் 22463 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். சங்கத்திற்கு வந்த 3293 பிராதுகளில் 2816 பிராதுகள் சமரசமாய் முடிவு பெற்றன- சென்ற வருஷம் சங்கம் செய்த கிளர்ச்சியால், தொழிலாளருக்கு 100க்கு 5 முதல் 8 வரை சம்பளம் கூட்டியிருக்கிறார்கள். 10 பகல் பள்ளிகளையும், 11 இராப்பள்ளிக்கூடங்களையும் சங்கம் நடத்தி வருகிறது. தர்சனா உப்பள முற்றுகைக்கு 165 பேரை சங்கம் அனுப்பியது. உள்ளூர் மறியலுக்கு 56 பேரை கொடுத்தது. சங்கத்தொண்டர்களில் 250 பேர் காயமடைந்தனர். சுமார் 200 பேர்வரை கைதியாகி தண்டனை யடைந்திருக்கிறார்கள்.

### ஜாதிகள் தொலைக!

பம்பாயில் தீண்டாமை ஒழிப்பதற்காக இந்துக்கள் மகாநாடு ஒன்று கூடியது. அதில் ஸ்ரீ. கே. நடராஜன் பேசியபோது, இந்த தீண்டாமைக்கு அடிப்படை ஜாதி வித்தியாசமே என்று சொன்னார். "ஜாதிகள் இருக்கிறவரை புற ஜாதிகள் (தீண்டாதார்) இருந்து கொண்டே இருக்கும்" என்று அவர் கூறினார். இதை நாம் ஆதரிக்கிறோம். தீண்டாமை தொலையவோ, இந்தியா ஒரு சமுதாயமாகவோ வேண்டுமானால் ஜாதி வித்தியாசங்களை முதலில் தொலைக்க வேண்டும். அதை மண்டையில் அடித்து தள்ளினால்தான் சமதர்மம் ஏற்பட முடியும்.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11, Anderson St., Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை, 1931 நவம்பர் 28௳, பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 13௳ சனிக்கிழமை | இதழ் 8

## மந்திரிசபை நாடகம்.




(மந்திரி சபைக்குள் மெக்டனல்டுக்கும், இந்தியா மந்திரி கட்சிக்கும் பெரிய போர் நடப்பதாக சொல்லப் படுகிறது. மெக்டனல்ட் அப்படியே சுயராஜ்பத்தை கப்பலேற்ற வேண்டும் என்கிறாராம். இந்தியா மந்திரி "கூடாது" என்கிறாராம். ஆனால் மகாத்மா இந்த நாடகத்தைக்கண்டு ஏமாறப்போவதில்லை. விருந்தாளியை ஏமாற்ற புருஷனும் மனைவியும் சண்டை போடுவதுபோல வீட்டிற்குள் சத்தம் போட்டார்களாம். விருந்தாளி போக பின்பு தங்கள் சாமர்த்தியத்தை மெச்சி புருஷனும், மனைவியும், பரஸ்பரம் புகழ்ந்தார்களாம். இச்சமயம் போனவிருந்தாளி திரும்பியதைப் பார்த்து தம்பதிகள் விழித்தார்களாம். அதைப்போல இந்தக்கதை இருக்கிறது)

மெக்டனல்ட்:—நான் நோகாமல் அடித்தேனே! சர்ச்சில் கோஷ்டி:—நான் ஓயாமல் அழுதேனே!

மகாத்மா:—நானும் போகாமல் வந்தேனே!

(மகாத்மா ஏமாறாமல் திரும்பியதைப்பார்த்து புருஷனும் மனைவியும் திகைக்கிறார்கள்)

Koviloor Digital Library

## டாம் புல்லக் பிரபுவின கதை

மிஸ்டர் டாம் புல்லக்கிற்கு சீமையில் பிண்டத்திற்கு வழியில்லை. அவரைச் சேர்ந்தவர்கள் எப்படியோ ஒரு ஓட்டைக்கப்பலில் அவரைத் தூக்கிப் போட்டு இந்தியாவிற்கு அனுப்பினார்கள். இந்தியாவிற்கு வந்தார். அவர் பழைய கண்பருடைய நண்பர் ஒருவர் இங்கே தேயிலை தோட்டம் போட்டு பெரிய மதலாளியா யிருந்தார்கள். அவரிடம் போய் தங்கினார். அவர் அந்த ஜில்லா கலெக்டரிடம் இவரை அறிமுகப் படுத்தினார். பின்னால் மிஸ்டர் டாம்புல்லக் ஒரு மனு எழுதி கலெக்டருக்கு கொடுத்தார். 5 ஆயிரம் ஏக்கர் புறம்போக்கு நிலத்தை தர்காஸ்தாக மிஸ்டர் டாம்புல்லக்கிற்கு கலெக்டர் கொடுத்தார். வெறும் டாம்புல்லக், பிண்டத்திற்கு திண்டாடிய டாம்புல்லக், 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு அதிபதியானார். நிலம் கிடைத்துவிட்டது. பணம் தான் வேண்டும். என்ன செய்வது? நிலம் கையில் இருக்கும்போது கவலை என்ன? வெள்ளையர் பாங்குகள் காத்துக்கொண்டிருக்கின்றன. வாங்கிய நிலத்தை ஈடு வைத்து ஒரு லட்சம் ரூபாய் பாங்கியில் வாங்கினார். உடனே தோட்ட வேலை ஆரம்பமாயிற்று. தேயிலை பயிர் போட்டார். ஏராளமாக கூலிகளை அமர்த்தினார். வேலை மும்முரமாய் நடந்தது. துரைக்கு தனியாக ஒரு பங்களா கட்டிக் கொண்டார். ஒரு மோட்டார்கார். எல்லாம் தடபுடல். 5 வருஷங்களாயின. வெறுங்கையோடு வந்த டாம் புல்லக் 50 லட்சம் ரூபாய்க்கு அதிபதியானார். சட்ட சபையில்கூட பதவி கிடைத்துவிட்டது. மன்னர்கூட "சர்" பட்டம் கொடுத்தார். சர். டாம்புல்லாக் இந்தியாவில் ஒரு பெரிய வர்த்தகராய் விளங்குகிறார். இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுப்பதாயிருந்தால், பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லும் கோஷ்டியைச் சேர்ந்தவர். எதற்காக பாதுகாப்பு தெரியுமா? டாம்புல்லக் சொத்து 50 லட்சம் பெருமானது இந்தியாவில் இருக்கிறதாம். அதை பாதுகாக்க சட்டத்தில் விதிகள் வேண்டுமாம்! இந்த டாம்புல்லக்கிற்கு 50 லட்சம் ரூபாய் சொத்து ஏது? இவர் எங்கிருந்து இந்த சொத்தை கொண்டுவந்தார்?

இம்மாதிரி டாம்புல்லக்குகள் இந்தியாவில் பலர் இருக்கிறார்கள். மகாத்மா காந்தி வர்த்தக உரிமைகளைப்பற்றி பேசும்போது, இந்த புல்லக்குகளுக்கு ஒரு வெடிக்குண்டு போட்டார். பழைய தானங்களை யெல்லாம் மறுபடியும் சோதித்துப்பார்த்து, நியாயமற்றவைகளை ரத்துச் செய்யப்போவதாகச் சொன்னார். இதைக் கேட்டு வெள்ளை தோட்டக்காரர் நடுங்குகிறார்கள். சென்ற 21உ மறுபடியும் சில வெள்ளை வர்த்தகர்கள் மகாத்மாவை பேட்டிகண்டார்கள். "முக்கியமாக தேயிலைதோட்டங்களைப்பற்றிய மூல தஸ்தாவேஜிகளை பார்க்காமல் ஒப்புகொள்ள முடியா"தென்று உறுதியாய் சொல்லிவிட்டார். அட புல்லக்குகளே, உங்கள் மனம் ராவணன் மனதைப்போல கலங்குகிறதே!

# சென்னையில் அயோக்கியத்தனம்

புதன் கிழமை மாலை சென்னை தமிழ் பத்திரிகைகளில் இரண்டு "காந்திஜியை நாடு கடத்த யோசனை" என்ற பெரிய தலைப்புகளுடன் சுவரொட்டி விளம்பரங்கள் (போஸ்டர்கள்) வெளியிட்டன. ஜனங்கள் திகைத்துப் போனார்கள். ஏராளமாக பத்திரிகைகள் செலவாயின. நாடு கடத்த யோசனை! யாரை? மகாத்மாவை! இச் செய்தியைக் கேட்டால் யார்தான் பத்திரிகை வாங்காமல் இருக்கமுடியும்? மகாத்மா மீதுள்ள அன்பால், 15 முடிச்சுப் போட்டு பணம் வைத்திருப்பவர்கள்கூட அன்று அத்தனை முடிச்சுகளையும் அவிழ்த்து ஒரு அணாவை வெளியே எடுத்தார்கள். பத்திரிகையை பிரித்து படிக்கிறவரை மனம் பதைபதைப்பு. கடைசியாக அணா கொடுத்து பத்திரிகையும் வாங்கியாய்விட்டது. "நாடு கடத்தும் யோசனை" செய்தியை தேடிப்பிடித்தார்கள். அவ்வளவு சுலபமாய் அகப்படவில்லை. கடைசியில் இரண்டு வரியில் அச்செய்தி காணப்பட்டது. அதைப்பார்த்ததும் ஒரு பக்கம் மனம் குளிர்ந்தது. மற்றொரு பக்கம் இம்மாதிரி ஏமாற்றிய பத்திரிகைகளை வாயார வைதார்கள். எவ்வளவு வைதால்தான் என்ன? வசவு காற்றோடு போச்சு: கொடுத்த அணாவோ பத்திரிகைக் காரர் பெட்டிகளில் போய்ச் சேர்ந்தது. இந்தப் புரட்டை கவனிப்போம்.

போஸ்டர்களில் "காந்திஜியை நாடு கடத்த யோசனை" என்று போடப்பட்டிருந்தது. யோசனை என்றால் யார் யோசனை? சாதாரணமாக சர்க்கார் யோசனை யென்றே ஜனங்கள் நினைப்பார்கள். அப்படி நினைத்து பத்திரிகைகளை அதிகம் வாங்கும்படி செய்யவேண்டுமென்பதே அம்மாதிரி போஸ்டர் போட்டவர்களின் நோக்கம். ஆனால் யோசனை சர்க்கார் யோசனையல்ல. லார்ட் எலிபாங்க் என்ற பேர்வழி, காந்திஜியை நாடு கடத்த

(63-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library


# வீர கமால் பாஷா

தற்கால துருக்கியை உருப்படுத்தி—உலகத்தில் துருக்கி "ஐரோப்பிய நோயாளி" என்று இழிவுபடுத்தி வந்த ஐரோப்பிய நாடுகள் மதிக்கும்படி செய்த மகான் கமால் பாஷாவே ஆவர். மகா யுத்தத்திற்குப்பின், துருக்கியைத் திருத்தி செப்பனிட்டு உயரிய நிலைக்குக் கொண்டு வந்த பெருமை அவருக்கே உரியது. சாதாரண ஏழை குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதிலே தகப்பனை துறந்தார். அனாதை ஆனார்—தாய் மாமன் வீட்டில், வயிற்றுக்காக, மாடு மேய்த்து ஜீவனம் செய்தவர். இன்றோ, உலகத்தார் பிரமிக்கும்படி, துருக்கி முடியரசுக்கு தலைவராய் விளங்குகிறார். கலிபா ஆதிக்கத்தை தவிடுபொடி செய்தார். துருக்கிய இளைஞர்கள் உள்ளத்தில் தீரதேசிய உணர்ச்சியை ஊட்டினார். இப்பொழுது இவருக்கு வயது 51.

துருக்கி பட்டாளத்தில் தலைவரா யிருந்தார். புதிய துருக்கிக்கு அஸ்திவாரம் கோலிய ஊர் எர்ஸரம் என்ற முக்கிராமம். அச்சமயம் இவரின் பட்டாளம் அங்கு டேரா போட்டிருந்தது. இவர் உள்ளத்தில் 1919 ஜெனவரி மாதத்தில் பழய துருக்கி சுல்தான் ஆட்சியை எதிர்ப்பதென எண்ணினர். ஜெனவரி 19 தேதிதான் துருக்கிக்கு ஒரு உத்தம நாளாகும். அன்று கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து, யுத்த மந்திரி கமால் பாஷாவை உடனே அங்கு திரும்பும்படி உத்திரவிட்டார். கமாலோ தற்சமயம் வருவது உசிதமில்லையென்று மழுப்பிய பதிலடித்தார். இவரை திரும்பும்படி சாந்தமாய் எழுதிய தந்திகளுக்கு பலனில்லை. முதல் மந்திரியை கலந்து யுத்த மந்திரி கண்டிப்பாய் "உடனே திரும்பும்படி" தந்தி கொடுத்தார். அதற்குப்பதில் முஸ்தபா கமால் "என் தாய்நாடு (துருக்கி) சுய ஆட்சி அடையும் வரை அனடோலியாவில்தானிருக்கப் போகிறேன்" என்று கொடுத்தார். இதுதான் துருக்கி புரட்சிக்கு அடிகோலி ஆரம்பித்த வீர நாளாகும்.

அன்று சாயங்காலம், தந்தி ஆபீசுக்கு வரும்படி கமாலுக்கு ஆள் வந்தான். கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்து பேசப்பட்டது.

தந்திகள் "கடகட" வென்று கர்ச்சித்தன. திரும்ப ஒரு முறை கடைசியாக திரும்பும்படி கமாலை யுத்த மந்திரி கெஞ்சினார். முதல் மந்திரியோ தன்னாலியன்ற முயற்சி செய்தார். பெரிய உத்தியோகம் கொடுப்பதாக ஆசை வார்த்தை கொடுத்தார். எல்லாம்வல்ல துர்க்கி சுல்தானும் பேசினார். சம்பளத்துடன் ரஜா எடுத்துக் கொள்ள சொன்னார். "எங்கு வேண்டுமென்றாலும் இரு. ஆனால் எத்தகைய கிளர்ச்சியும் செய்யாதிருக்கவேண்டும்" என்றார். கமாலா கேட்பவர்? கண்டிப்பாய் முடியாதென்றார் கண்டிப்பாய் வரத்தான் வேண்டுமென்றார்கள் மூவரும்.

கமால்பாஷாவோ முன்பின் யோசியாமல் ஒரே பிடிவாதமாய் ஒரு தந்தி எழுதச் சொன்னார். அதில் எல்லா உத்தியோகத்தையும் ராஜினாமா செய்துவிட்டதாகவும், பட்டாளத்தை விட்டு தள்ளிவிட்டதாக தானாகவே கருதுவதாகவும் எழுதச் சொன்னார். இதை எழுதிக் கொண்டிருப்பதற்குள் தந்தி "கட்கட்" என்று கதறிற்று. அங்கிருந்து "உன்னை உத்தியோகத்தை விட்டு தள்ளப்பட்ட" தென்ற உத்தரவு

உத்தியோகம் போயிற்று, ஒருவிதமான அந்தஸ்து மில்லாமலாயிற்று. தைரியத்துடன், வீரத்துடன் தன் உண்மை நண்பர் சிலரை வரவழைத்தார். தெரிவித்தார். தெளிவாகவும் உண்மையாகவும் அவர்கள் மனதில் படும்படி சொன்னார். எத்தகைய கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்றும் தேச சேவைக்காக செய்ய வேண்டிய அரும் சேவையையும் தியாகத்தையும் தெளிவாகச் சொன்னார்.

"நாம் செய்யப் போகிற வேலையோ நம் எதிரிலிருக்கிறது. எப்படியும் செய்துதானாக வேண்டும். பட்டாளத்தையோ சர்க்கார் உத்தியோகஸ்தர்களையோ நம்புவதில் பயனில்லை. நாம் தைரியமாக தெருக்களிலும் பஜார்களிலும் நடக்க வேண்டும். நாம் நமது இயக்கத்தை ஆரம்பித்துவிட்டால் பின் வாங்கக் கூடாது. நாம் ஒவ்வொருவரும், திடமாயும், தீவிரமாயும், தீர்மானித்துக்கொள்ள வேண்டும். பின் வாங்கக் கூடாது. எதுவந்தாலும் இயக்கத்தை விட்டு போகக் கூடாதென்று சபதம் செய்யவேண்டும். நான் ஒரு புரட்சிக்காரன் என, சர்க்காரால், பகிரங்கப்படுத்தப்படுவதுடன், எனக்கே கோரமான தண்டனைகள் விதிக்கப்படலாம். இந்த க்ஷண முதல் என்னுடன் வேலை செய்ய உடன்படுகிறவர்கள், எந்த விதகதிக்கும் ஆளாகத் தயாராக இருக்கவேண்டும். உண்மையில் சந்தர்ப்பத்துக்கேற்றாற்போல் தலைவனாக இருக்க நான் தகுதியற்றவனா யிருக்கலாம். ஆனால், நீங்கள் தகுதியுள்ள ஒருவரை தேர்ந்தெடுக்க

(62-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# காந்தீயம்.

(ஸ்ரீ. பி. கந்தநரசிம்மன் பி. ஏ., பி. எல்.)

காந்தீயம் என்பது உலகில் தற்போது தோன்றியிருக்கும் ஒரு புதிய ஆதர்ஸம். பண்டைக் காலத்து மஹரிஷிகளால் கண்டு பிடிக்கப்பட்ட பாரத சக்தியின் புதிய பதிப்பே காந்தீயம் என்பது. இயற்கை அன்னை அதை மகாத்மா காந்தியின் மூலமாக வெளிப்படுத்தியதால் அதற்குக் காந்தீயம் என்ற பெயராயிற்று. உலகத்திற்கே உண்மையாகத் தற்போது வேண்டிய மதம் இன்னதென்று காட்ட வந்த இயக்கமே காந்தீயம். உலகத்தில் தோன்றியுள்ள எல்லா மதங்களுக்கும் பொதுவாகவும் அடிப்படையாகவுமுள்ள சத்தியத்தையும் அன்பையும் கொண்டதே காந்தீயம். "மாந்தருக்குள் தீமை குன்ற வந்த தெய்வ மார்க்கமே" காந்தீயம்.

இது ஒரு உயரிய கொள்கை அல்லது நன்னெறி. இதை யாராயினும் சரி, தங்கள் மதத்தை, நாட்டை, தொழிலை விடாமல் கைப்பற்றி ஒழுகலாம். இதைத் தனி மனிதன் ஒருவன் கடைபிடித்தொழுகினால் அவன் வாழ்வு சுத்தமாகும், நிலைமையும்; ஒரு சமூகத்தார் கடைப்பிடித்தொழுகினால் அச் சமூகத்தில் பழக்க வழக்கங்களாலுண்டான அழுக்காகிய சமூகத் தொல்லைகள் தீரும், சமூகக்கட்டு வளரும்; ஒரு நாடு இதைக் கடைப் பிடித்தால், அந்நாட்டை பற்றிய அடிமை விலங்குகள் உடைந்து அந்நாடு சுதந்திரத்தில் ஜொலிக்கும். மேலும் அந்நாட்டின் முற்போக்கிற்குப் பெருந் தடைகளான தரித்திரம், பஞ்சம், நோய், பலஹீனம், அறிவின்மை பிளவுகள், சோம்பல், துணிவின்மை, குருட்டுப் பழக்க வழக்கங்கள் என்பவை யாவும் கெட்டு, நாட்டில் சம்பத்து, ஆரோக்கியம், தொழில், கல்வி அறிவு ஒழுக்கம், ஒற்றுமை, கூட்டுறவு, ஊக்கம் துணிவு ஆகியவைகள் குடிகொண்டு வளரும்: காந்தீயத்தைக் கைப்பற்றி ஒழுகும் இந்தியாவே இதற்கோர் உதாரணம். காந்தீயத்தைப் பின் பற்றும் மக்கள் பூவுலகிலேயே தேவர்போல இன்பமாய் வாழ்வர். "எல்லாரும் அமரநிலை எய்தும் நன் முறையை இந்தியா உலகிற்களிக்கும்" என்று சுப்ரமண்ய பாரதியார் பாடியது காந்தீயத்தையே குறிப்பதாகும்.

பகைவரிடத்தும் அன்பு காட்டுவதே காந்தீயத்திலுள்ள அருமை. அவரிடத்துள்ள தீமையை அழிக்கப் பாடுபடும்போதும் அவர்களை உடலாலும், சொல்லாலும், ஆயுதத்தாலும் வருத்தாமலிருப்பதும், எண்ணத்தாலும் அவர்களைத் தூஷிக்காமலிருப்பதும், ஆனால் பகைவர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, துணிவு, வீரம், விடா முயற்சி ஆகியவற்றோடு எதிர்த்து நின்று பகைவர் மனம் மாறும் வரை தான் கஷ்டப்படுவதுமே காந்தீயத்தின் விசித்ரம். தன்னலங்களை யெல்லாம் ஒரு கொள்கையின் பொருட்டுத் தியாகம் செய்வதே காந்தீயத்திலுள்ள நுட்பம். முடிவில் நன்மை பயப்பதனாலும் முறையில் சாதனமாகவும் கூட கொலை, பொய், சூது, வஞ்சனை, மோசம், ஒளிமறைவு ஆகிய வைகளைக் கைப்பற்றாமையே காந்தீயத்தின் சிறப்பு. காந்தீயத்தின் லக்ஷியம் மனதை நல்வழிக்கு மாற்றுவதே, ஆட்களைக் கொல்வதல்ல. இன்பத்தை வளர்ப்பதே, துன்பத்தைப் பெருக்குவதல்ல. காந்தீயத்திலுள்ள உருக்கமான சக்தி ஆத்ம சக்தியாகும். அற்பமான மிருகபலமும் ஆயுதபலமும் அன்று.

உண்மையான நாகரிகமுள்ள மனிதனுக்கேற்ற போர்முறையாகிய சத்யாக்ரஹம் என்பது காந்தீயத்தின் ஒரு கூறுதான். காந்தீயமோ அதைவிடப் பெரியது. உலக க்ஷேமத்தைப் பாதிக்காதபடி தன் நாட்டுக்குச் சேவை செய்வது; பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதாமை; மக்கள் யாவரும் சமம் என்று கருதுவது; மதத்தால், நிறத்தால், ஜாதியால், கொள்கையால் மாறுபட்டிருந்தாலும் அன்போடு சகோதர நேயத்தோடு வாழ்வது; எவரையும், எங்கும், என்றும் எவ்விதத்தும் அடிமைப் படுத்தாது தானும் பிறரும் சுதந்திரத்தில் வாழ்வது; பெண்களும் ஆண்களுடன் சமமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வது; உயிர்களிடம் கருணை, இயற்கையோடு இயைந்த வாழ்வு ஆடம்பரமற்ற எளிய தூய வாழ்வு, தன் உணவுக்கும் உடைக்கும் தானே பாடு பட்டுழைப்பதுடன் தனக்கென வின்றி பிறருக்கென அல்லும் பகலும் வேலை செய்தல்; விரதத்தாலும், பிரார்த்தனை, பஜனை ஆகியவற்றாலும், வாழ்வை அழகு படுத்தல்—என்ற கொள்கைகளும் இன்னும் பல சிறப்புக்களும் அடங்கியதே உலகப் பெருங் கொள்கையாகிய காந்தீயம். இதை உலகுக்கு அருளிய காந்தியடிகள் வாழ்க.

Koviloor Digital Library



# ஆயுதங்களில் போட்டி

உலகத்தின் தற்போதைய நிலைமையில் யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்வது அநுபவ ரூபமாக எவ்வளவு தூரம் சாத்தியமாகி வந்து கொண்டிருக்கிறதென்பதைச் சிறிது கவனிப்போம். இப்பொழுது உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிடத்தும் பரஸ்பரம் சந்தேகமும் அவநம்பிக்கையும் குடிகொண்டிருக்கின்றன. மற்றும் அனைத்தும் யுத்த தேவதைக்கு அடிமைகளாக இருக்கின்றன. இப்பொழுது நாம் காண்பது என்ன? உலகத்தின் முக்கிய தேசம் ஒவ்வொன்றும் தங்களுடைய யுத்த தளவாடங்களை விருத்தி செய்து கொண்டு வந்திருக்கின்றன. 1914-ம் வருஷத்தில், கிரேட் பிரிட்டனானது, தனது கப்பற்படைக்கென்று 760 லட்சம் பவுன் செலவழித்தது. இப்பொழுது 520 லட்சம் பவுன் செலவழிக்கிறது. இந்தச் செலவுக் குறைவுக்குக் காரணம் கிரேட் பிரிட்டனின் பண முடையேயாகும். 1914-ம் வருஷத்தில் 420 லட்சம் பவுன் செலவழித்த அமெரிக்க ஐக்கிய மாகாணம், இப்பொழுது 780 லட்சம் பவுன் செலவழிக்கிறது. 1914-ம் வருஷத்தில் 150 லட்சம் பவுன் செலவழித்த ஜப்பான் 1930-ம் வருஷத்தில் 260 லட்சம் பவுன் செலவழிக்கிறது. 1925-ம் வருஷத்திலிருந்து பிரான்சின் இராணுவச் செலவு 210 லட்சம் பவுனாக உயர்ந்திருக்கிறது. ஆகாயப்படைகள் விஷயத்திலோ, கிரேட் பிரிட்டனானது 1922-ம் வருஷத்தில் செய்த செலவைவிடப் பிரஸ்தாப வருஷத்தில் இருபது லட்சம் அதிகமாகச் செலவழித்திருக்கிறது. அப்படியே அமெரிக்கா ஐக்கியமாகாணங்கள் 200 லட்சமும், இத்தலி ஆறுலட்சமும், பிரான்ஸ் நான்கு லட்சமும் அதிகமாகச் செலவழிக்கின்றன. பெல்ஜியநாட்டு யுத்த மந்திரியால் 1931-ம் வருஷம் பிப்ரவரி மாதம் கிளத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் இராணுவச் செலவுக்கென்று 13000 லட்சம் மார்க்குகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. யுத்த தளவாடங்களுக்காக, உலகத்தின் எல்லா நாடுகளும் சேர்ந்து செலவழிப்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால் ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து 100க்கு 60 வீதமும் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள் 100க்கு 20 வீதமும் செலவழிக்கின்றனவென்று தெரிகிறது. இதனால் உலகத்தின் எல்லா நாடுகளும் சேர்ந்து 1914-ம் வருஷத்தில் எவ்வளவு ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருந்தனவோ அதைவிட இப்பொழுது அதிகமாக வைத்துக் கொண்டிருக்கின்றன வென்பது நன்கு புலனாகும். இந்தமாதிரியான நிலையில் சர்வதேச ஆயுதப் பரிகரண மகாநாடு 1932-ம் பிப்ரவரி மாதம் 2-ந்தேதி கூடப்போகிறது. இராணுவப் படையைக் குறைப்பது, கப்பற்படைகளைக் குறைப்பது, விஷக்காற்று முதலியவைகளை யுத்த காலங்களில் உபயோகியாமலிருப்பது, ஆயுதப் பரிகரணக் கமிஷன் ஒன்றை நிரந்தரமாக நியமிப்பது ஆகிய இந்த ஐந்து விஷயங்களைப்பற்றி யோசிக்கவே இந்த மகாநாடு கூட்டப்படுகிறது. எல்லாத் தேசங்களின் உண்மையான நோக்கம் இந்த மகாநாட்டில் பரிசோதிக்கப் படும் என்பது நிச்சயம். இந்த மகாநாடு முறிந்து போய் விட்டதேயானால், உலகத்தில் மிகப் பெரிய யுத்தம் ஒன்று தோன்றுவது திண்ணம்.

## எச்சரிக்கை.

பின் வரும் ஆலைகள் காங்கிரஸ் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமையால், அவைகளைக் காங்கிரஸ் மகா சபை பகிஷ்கரித்திருக்கிறது. ஆகையால் இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் துணியும் நூலும் சுதேசியாகாது. அவைகளைச் சுதேசியென்று ஏமாந்து வாங்கிவிடக் கூடாதென்று பொது ஜனங்களுக்கும், ஜவுளி நூல் வர்த்தகர்களுக்கும், நெசவுகாரர்களுக்கும் எச்சரிக்கை செய்யப்படுகிறது:—

| ஆலையின் பெயர். | நிர்வாகிகள். | ஊர். |
|---|---|---|
| (1) பெங்களூர் உலன் அண்டு காட்டன் மில்ஸ் | பின்னி கம்பெனி | பங்களூர். |
| (2) பக்கிங்காம் மில்ஸ் | ஷை | சென்னை |
| (3) கர்னடிக் மில்ஸ் | ஷை | சென்னை |
| (4) கம்போடியா மில்ஸ் | பியர்ஸ் லெஸ்லி கம்பெனி | கோயமுத்தூர் |
| (5) கோகக் மில்ஸ் | | கோகக் |
| (6) லக்ஷ்மி காட்டன் மில்ஸ் | பம்பாய் கம்பெனி | ஷோலாப்பூர். |
| (7) விஷ்ணு காட்டன் மில்ஸ் | ஷை | ஷோலாப்பூர். |

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி.

# ஹோர் உண்மை சொரூபம்

சர். சாமுவேல் ஹோர் என்ற மகான்தான் இந்தியா மந்திரியாயிருக்கிறார். இவர் அசல் முதல்தர கன்சர்வேடிவ். சர்ச்சிலுக்கு எந்த விதத்திலும் கொள்கையில் பின் வாங்கியவரல்ல. பழைய கூட்டு சர்க்காரில்தான் இவரை இந்தியா மந்திரியாய் அவசரத்தில் போட்டிருந்தார்கள் என்றால், இந்த சர்க்காரிலும் இவர் அந்தப்பதவியைவிடவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள பெரிய நெருக்கடி இந்திய பிரச்னை ஒன்றே. ஆகவே அதை தீர்த்து வைக்க சாமர்த்தியமும், பொறுப்புமுள்ள ஒருவரை அந்தப்பதவியில் போட்டிருக்க வேண்டும். மெக்டொனல்ட் சர். சாமுவேல் ஹோரை தெரிந்தெடுத்தது முட்டாள்தனமென்றே சொல்ல வேண்டும். பழைய மந்திரி பென்னின் போக்கையும், ஹோரின் போக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தால் குதிரைக்கும் கழுதைக்குமுள்ள வித்தியாசம் இருப்பதைக் காணலாம். பென்னின் அநுதாபப்பேச்செங்கே, ஹோரின் அகம்பாவப் பேச்செங்கே! பென்னின் பொறுப்புள்ள பொறுமையெங்கே, ஹோரின் பொறுப்பற்ற குறும்புத்தனமெங்கே! சென்ற வாரம் லண்டனில் முஸ்லிம் பிரதிநிதிகள் நடத்திய விருந்தில் ஹோர் பேசினார். அவர் பேச்சில் இந்து பிரதிநிதிகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. பழைய மந்திரி பென் அங்கே பிரசன்னமாயிருந்தும், அவர் செய்த வேலைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. முஸ்லிம் பிரதிநிதிகளைப் புழ்ந்து பிரித்தாளும் சூழ்ச்சி செய்தார். இந்தச் செய்கையிலிருந்து ஹோரின் உண்மை சொரூபம் வெளியாகிறது. வட்டமேஜை மகாநாட்டில் ஆரம்பத்திலிருந்தே இவர் முஸ்லிம்களைத் தூண்டிவிட்டுக் கொண்டே வந்திருக்கிறார். இந்திய விடுதலைக்கு அவர் பரம விரோதியென்பது இப்பொழுது தெளிவாய் விட்டது. சர். கிராடக் என்ற பழைய பெருச்சாளி காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி கேட்டார். அவருக்கு பதில் சொல்லும் போது "கட்டாயப்படுத்தி தங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடும்படி பிரிட்டிஷ் வர்த்தகர்களை நிர்ப்பந்தித்துவந்த நிலைமையில்தான் நான் இந்தியா மந்திரியாக வந்தேன். அதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனேன்" என்று சொல்லுகிறார். அதாவது பரதேசி துணி

(59-ம் பக்கத்தொடர்ச்சி.)

உங்களுக்கு எப்பொழுதும் சுதந்தரமுண்டு. ஆனால், முக்கியமாய், நிச்சயமாய் ஒன்றுமட்டும் அவசியம். யார் தலைவராயிருந்தாலும் சரி, சகல பொறுப்பும் ஒருவர் தலையில்தானிருக்க வேண்டும். ஒரு மனிதனே தலைவனாக இருத்தலவசியம். இந்த இயக்கம், ஒருவர் தலைமையிலே இருத்தல் வேண்டியது அத்யாவசியம்"

முடிவில் 1919ம் வருஷம் ஜூலை மாதம், 23 தேதி ஒரு சிறு கூட்டம், நாலைந்து நண்பர்கள், ஒரு சின்ன பள்ளிக்கூடத்தில் கூடினார்கள். அங்குதான் "காங்கிரஸ்" ஆரம்பமாயிற்று. புதிய துருக்கிக்கு அஸ்திவாரம் கோலிய இடம் இதுவே. இங்குதான் காங்கிரசிற்கு முதல் தலைவராக காஜி முஸ்தபா கமால் தேர்ந்தெடுக்கப் பட்டார். அன்று அங்கு நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமானது ஒன்று. அதாவது.

"சமுதாயம் (Nation) ஓர் பிரிக்கக்கூடாத ஐக்கியமாகும். ஒரே மூச்சில், கிழக்கு தேசத்தவர் முழுவதும் அந்நியர் ஆதிக்கத்தையும் தலையிடுதலையும் எதிர்க்க வேண்டும். கான்ஸ்டாண்டிநோபல் சர்க்கார் இதைச் செய்ய மறுத்தால் தற்காலிக சர்க்கார் ஒன்று இதை நடத்த பொறுப் பேற்றுக் கொள்ளும்"

இந்த தீர்மானம்தான் கடைசியில், முக்கியமாய்ப் புத்துயிர் பெற்ற துர்க்கி—புது துர்க்கியாகியது.

எத்தகைய பிரமாண்ட காரியங்களுக்கும், கீர்த்தியான முடிவு, ஐயக்கொடி ஒருவரால்தான் நாட்டப் பெறுமென்பது சரித்திரத்துணிபு. பெருங் கூட்டங் கொண்ட தலைவர்களால் ஒரு நாடும் முன்னுக்குவர முடியாது.

வட்டமேஜை தலைவர்களே கவனியுங்கள்! ஒருவர் தலைவராக இந்தியாவிலிருந்து போயிருந்தால், இன்று வட்டமேஜை மகா நாட்டின் கதி கௌரவமாயிருந்திருக்கும். பிரேதமாய்க் கிடந்த துருக்கி 1923ம் வருஷம் முடிவில் அக்டோபர் மாதம் 29 தேதி புதிய துர்க்கி பிரஜாதிபத்தியம்மா (Republic) யிற்று. இதற்கு சர்வாதிகாரி கமால்பாஷா. துருக்கி நாடு வாழ்க.

(கே. எஸ். எஸ்.)

---

பகிஷ்காரம் கட்டாயப்படுத்துவதாம். ஸ்ரீ. பென் அதை வளரவிட்டுக் கொண்டிருந்தாராம். இவர் வந்த பின்பு அதை அடக்கப் போகிறாராம். இப்பேர்ப்பட்ட ஹோர் இந்தியாவிற்கு கடுகளவாவது நன்மை செய்வார் என்று நினைக்கிறீர்கள்? அவர் உண்மை சொரூபம் வெளியாய் விட்டது.

Koviloor Digital Library

# வங்காளத்தில் புதிய புலி

வங்காளத்திற்கு புதிய புலி ஒன்று வருகிறது. அது பார்த்தமாத்திரத்திலேயே, பாய்ச்சல் போடாமல் இரையடித்து விடுமாம். அதன் பெயர் சர். ஜான் ஆண்டர்சன். இந்தப்புலியை வங்காள கவர்னராக அனுப்பியதை பாராட்டி லார்ட்ஸ் சபையில், பலர் பேசினார்கள். உதவி இந்தியா மந்திரிகூட புதிய புலியின் சாமர்த்தியத்தை மெச்சிப் புகழ்ந்தார். இந்தப்புலி வங்காளத்திற்கு வந்தவுடன் எல்லா வெடிகுண்டுக் காரர்களையும் அடக்கி விடுமாம். இந்த ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் பார்த்தால், பிரிட்டிஷாருக்கு இன்னம் நல்ல புத்தி வரவில்லை யென்றே தெரிகிறது. பலாத்காரத்தை பிரிட்டிஷாரைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக நாம் கண்டிக்கிறோம். ஆனால் பலாத்காரத்தை அடக்கும் முறைகள் ஒழுங்கானவையா, பலிக்கக் கூடியவையா என்பதை கவனிக்கவேண்டும். இச்செயல்களுக்கு அடிப்படையான காரணங்களை போக்கவேண்டும். வெறும் அடக்குமுறையால் பயனில்லை. வங்காளத்திற்கு வரும் புதிய புலியின் யோக்கியதை என்னவென்றால், அவர் அயர்லாந்தில் அடக்குமுறை தாண்டவமாடும்போது அடக்குமுறைகளுக்கு முக்கிய அதிகாரியாயிருந்தாராம். இது ஒன்று தான் அவருக்குள்ள யோக்கியதை. இந்த யோக்கியதையை கொண்டே நாம் யோசிப்போம். இவர் அடக்கு முறைகளால் அயர்லாந்தில் என்ன சாதித்துவிட்டார்? சின்பீன் கட்சியாரை தோற் கடித்து விட்டாரா? இவர் அடக்குமுறை கட்சியே தோற்றது. முடிவில் அயர்லாந்துக்கு சுயராஜ்யம் கொடுத்துவிட்டு சர். ஜான் ஆண்டர்சன் கும்பல், மூட்டை முடிச்சுகளோடு வெளியே ஓடிவர நேரிட்டது- அயர்லாந்தில் தோற்றுப் போன அந்த பழைய தந்திரம் இந்நாட்டில் மட்டும் எப்படி ஜெபிக்க முடியும்? சர். ஆண்டர்சன் அயர்லாந்தில் வாலிபப் புலியாயிருந்த போதிலும் தற்சமயம் புத்தியும், அநுபவமும் பொறுமையும் மிகுந்த கிழட்டுப் புலியாக மாறியிருப்பா ரென்று நம்புகிறோம்.

(58-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டு மென்று சொன்னாராம். இந்த எலிபாங் எந்த வளையில் இருக்கிறதென்பதை யாரும் அறியார்கள். இம்மாதிரி பேர்வழிகள் என்ன உளறினால் யாருக்கென்ன? இதை பிரமாதப்படுத்தி, ஜனங்கள் தவறாக நினைக்கும்படி போஸ்டர்கள் போடுவது வெறும் அயோக்கியத்தனத்தைத் தவிர வேறொன்றுமில்லை. பரபரப்புடன் செய்திகளை வெளியிட்டு, ஜனங்களை ஏமாற்றி, அதிகப்பிரதிகளை விற்பதற்கு அமெரிக்காவில் ஹீர்ஸ்ட் பத்திரிகைகளும் பிரிட்டனில் நார்த்கிளிப் பத்திரிகைகளும் பேர்பெற்றவை. அந்த முறையை சென்னையில் இரண்டொன்று கைப்பற்ற முயற்சிக்கின்றன. சில தினங்களுக்கு முன்னால் "காந்திஜியை சுட்டுவிட யோசனை" என்று சென்னை பத்திரிகை ஒன்று போஸ்டர் போட்டது. அந்தச்செய்தியை விசாரிக்கப்போனால், யாரோ ஒருவர் வேறு யாரோ ஒருவர் காந்திஜியை சுட்டுவிடக்கூட சம்மதிப்பார் என்று சொன்னாராம். இதை கயிறு திரித்து பிரமாதமாக போஸ்டர் போட்டது அயோக்கியத்தனமல்லவா? விற்கும்படியை பொறுத்த வரையில், வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், இந்த நடத்தை யோக்கியமாய் தோன்றலாம். ஆனால் தேசாபிமானத்தை பொறுத்த வரையில் ஜனங்களின் உணர்ச்சியை பொறுத்த வரையில் இந்த நடத்தை வெறும் அயோக்கியத்தனமாகும். இதை வளரவிடாமல் மண்டையில் அடித்து தடுக்க வேண்டியது ஜனங்களின் கடமை.

## காந்திஜி திரமொழி

'எகோ டி பாரிஸ்' என்ற பிரஞ்சு பத்திரிகையின் நிருபர் ஒருவர் மகாத்மாவை பேட்டி கண்டு பேசினார். அப்போது மகாத்மா, தாம் இந்தியாவுக்கு திரும்பி வந்தவுடன் கைதிசெய்யப்படக் கூடுமென எதிர் பார்ப்பதாகக் கூறினார். பூரண சுய ஆட்சி தவிர வேறு எதையும் தாம் ஏற்கத்தயாரில்லை யென்றும், வட்டமேஜை மகாநாடு முறிந்தால் தாம் திரும்பவும் 'போர்' தொடங்க நேருமென்றும், தலைவர்களனைவரும் கைது செய்யப்படுவரென்றும், ஆயினும் தேசிய இயக்கம் பின்னும் மும்முரமாக நடை பெறுமென்றும் அவர் கூறினார்.

## தங்கம் வெள்ளி'

சென்னை, நவப்பர், 26உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ, | 27—10—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 17—6—0 |
| சீமை வெள்ளி 100 ரூ.எடை | | 60—0—0 |
| ,, 1 ரூ. எடை | | 0—10—0 |

## அறிக்கை

நமது ஆபீசை இம்மாதம் 30உ முதல் பவளக்காரத்தெருவிலுள்ள நெ. 2 கட்டிடத்திற்கு மாற்றுகிறோம். காந்தி, வந்தேமாதரம் ஆபீசுகளுக்கு எழுதும் கடிதங்களை 20உ முதல் கீழே கண்டபடி விலாசமிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

"காந்தி" ஆபீஸ்.

2, பவளக்காரத் தெரு, சென்னை

Koviloor Digital Library

# மின் வெட்டு

## செக்கடியும் தம்பூரும்.

வட்டமேஜை மகாநாட்டில் நவம்பர் 17உ யன்று இந்திய ராணுவம் விஷயமாக பிரசங்கங்கள் நடைபெற்றன. பிரதிநிதிகள் தம் அபிப்பிராயங்களைக் கூறினார்கள். லார்ட் ரீடிங் பின் வருமாறு பேசினார். "இந்திய ராணுவம் ராஜப்பிரதிநிதியின் அதிகாரத்திலேயே இருக்க வேண்டும். ராணுவமந்திரி ராஜப்பிரதிநிதிக்கே ஜவாப்தாரியாயிருக்கவேண்டும். இதை ஏற்றுக் கொள்ளாத எந்தப் பொறுப்பாட்சி திட்டத்தையும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேனென்பதை தெளிவாய்க்கூற விரும்புகிறேன்." தெளிவாய் வெட்ட வெளிச்சமாய்க்கூறியதற்கு அவருக்கு அநேக வந்தனம். மகாத்மாஜியும் காங்கிரஸ் அபிப்பிராயத்தை விளக்கினர். "தன் நாட்டின் ராணுவத்தின்மீது அதிகாரம் பெறாத எந்த தேசமும் பொறுப்பாட்சி பெற்ற நாடாகாது. பாதுகாப்பும் ராணுவமும் உயிர்நிலையாகும். பாதுகாப்புரிமை பிறநாட்டார் கையிலிருந்தால் அந்த தேசம் பொறுப்பாட்சி பெற்றதல்ல." என்றார் காங்கிரஸ் பிரதிநிதி. செக்கு ஆடும் ஓசைக்கும் தம்பூர் சுருதிக்கும் பொருத்தமிருக்க முடியுமா?

***

## நரியும் கொக்கும்

எல்லோருக்கும் தெரிந்த ஓர் கதை. ஓர் நரி ஓர் கொக்கை விருந்துக் கழைத்தது. அகலமான ஓர் தட்டத்தில் குழம்பை ஊற்றியது. இருவரும் ஒரே தட்டிலிருந்து "சம உரிமையுடன் சம வசதியுடன்" உண்டி கழித்தனர். கொக்கு சில நாட்களுக்குப்பின் நரியார் அவர்களை விருந்துக் கழைத்து கழுத்து ஒடுங்கின உயரமான ஓர் ஜாடியில் நண்டுகளையும் மீன்களையும் வைத்தது. ஆங்கிலேயர் அவர்களுடைய சொந்த நாட்டிலும் அவர்களுக்கு அடிமையாய்க் கிடந்த இந்த நாட்டிலும் வர்த்தகத் துறையில் இந்தியருக்கு அளித்த "சமவசதியும் சம உரிமையும்" நரியார் அளித்த சம வசதி விருந்தேயாகும். ஆகையால் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கிறது போலும். சுயராஜ்ய இந்தியாவில் வர்த்தகப் பாதுகாப்புகள் கேட்கிறார்கள். ஆங்கிலேயர்களே! நீங்கள் பதற வேண்டியதில்லை. நரிக்கு நடத்தின விருந்தை நாங்கள் உங்களுக்குச் செய்வதாய் உத்தேசமில்லை. ஆயினும் மூலாதாரமான வர்த்தகங்களையும் கைத்தொழில்களையும் பிறர் ஆதிக்கத்தில் விட்டு வைப்பதற்கு எந்த நாடும் சம்மதிக்காது என்பதை நாம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவோம்.

***

## வீண் பூச்சாண்டி.

இந்தியாவில் கைத்தொழில் முன்னேற்றத்துக்குப் பிறநாட்டு மூலதனம் மிகவும் அவசியமானது; வியாபாரப் பாதுகாப்புகள் அளிக்காவிடில் பிறநாட்டார் இங்கு மூலதனம் போட மாட்டார்கள் என்று சிலர் பூச்சாண்டி காட்டுகிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாவது ரஷியாவிடம் நல்லெண்ணம் கொண்டதல்ல. அப்படியிருந்தும் சில வருஷங்களுக்கு முன் சில நிபந்தனைகள் குறிப்பிட்டு அவற்றின்படி ரஷியாவில் மூலதனம் போட்டு இப்புதிய தொழில்கள் ஆரம்பிக்க இஷ்டமுள்ள அந்நிய நாட்டார் மனுச் செய்து கொள்ளலாமென்று ரஷிய சர்க்கார் கூறியது. பிரிட்டனிலிருந்தும் ஜர்மனியிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் 2152 வர்த்தகர்கள் மனுச்செய்து கொண்டார்கள். ரஷிய சர்க்கார் 145 மனுக்களை மட்டிலும் ஏற்றுக்கொண்டு மீதத்தைத் தள்ளிவிட்டார்கள். ஆகையால் வியாபாரப் பாதுகாப்புகள் சுயராஜ்யத்திட்டத்திலேயே இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. பொறுப்பாட்சி ஏற்பட்ட பிறகு சுதந்தரமாக நாம் பிறநாட்டாரோடு பரஸ்பரம் சௌகரியமான முறையில் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ள முடியும். இதுதான் காங்கிரஸ் கொள்கை.

கா. சி.

சுதேசத்தவர்களை ஆதரியுங்கள்
ஸ்தாபித்தது 1902
புதிய கேட்லாக் இனாம்!
கே.எஸ். முத்தையா கம்பெனி
சில்க் அவுஸ், காசி.

## தேவை

இரண்டு சைக்கிள் பியூன்கள் தேவை. சொந்த சைக்கிள் வைத்திருப்பவர்களாகவும், நல்ல நடத்தையுள்ளவர்களாகவும் இருப்பவர்கள் நேரில் வரவும். 15 ரூபாய் டிபாசிட் கட்டவேண்டும்.

மானேஜர், "காந்தி" ஆபீஸ்

Edited, Printed & Published by T. S. Chocklingam, at the Lakshmi Press, 11 Anderson St. Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணு
(மலாய் 2 சென்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட் சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 நவம்பர் 30வ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 15வ திங்கட்கிழமை || இதழ் 9

## நரியின் விருந்து




இந்தியாவில் வர்த்தகத்தில் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் சம உரிமை வேண்டுமென்று பிரிட்டிஷார் கேட்கிறார்கள். பிரிட்டிஷாருக்கு சம உரிமை கொடுப்பது, நரியுடன் விருந்து சாப்பிடப்போய் ஏமாந்தது போலவே முடியும்.

Kovilkam Digital Library

# முஸ்லிம்கள் ஆதரவு

கடைசி காலத்திலாவது லண்டனிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் மற்ற இந்தியருடன் சேர்ந்து கொண்டதைப்பற்றி நாம் சந்தோஷப்படுகிறோம். முஸ்லிம் தலைவர்கள் முன்னால் செய்து வந்த காரியத்தைப்பற்றி ஆராய வேண்டியது இப்பொழுது உள்ள வேலையல்ல. ஐக்கிய ஆட்சி கமிட்டி விஷயத்தில் அவர்கள் கலந்துகொள்ள மறுத்ததை ஒரு காரணமாக உபயோகிக்க பிரிட்டிஷ் மந்திரிகள் முயற்சித்தார்கள். அதாவது சமூக சமரசம் ஏற்படாதபடியால் தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுக்க முடியாதென்று சொல்லிவிடலாமென்று நினைத்தார்கள். வெறும் மாகாண சுயாட்சியை மட்டும் கொடுத்து ஏமாற்றிவிட முயற்சி செய்தனர். காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்கும், முதல் மந்திரி ஜனவரி அறிக்கைக்கும், வட்டமேஜை மகாநாட்டை கூட்டிய தன் நோக்கத்திற்கும் இது நேர் விரோதமானது. இருந்தாலும் பலித்தவரை பார்க்கலாமென்று நினைப்பது பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு புதிதல்ல. மலைவிழுங்கி மகாதேவனுக்கு கதவு வடம் எந்த மூலை? ஆனால் இந்த அபவாதத்திற்கு முஸ்லிம் தலைவர்கள் தங்கள் தலையைக் கொடுக்காமல் சமயத்தில் உஷாரானது மிகவும் போற்றத்தக்கது. ஆகாகான் மந்திரிகளோடுபேசிய விவரத்தை மற்றொரு பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம். வகுப்பு சமரசம் ஏற்படவில்லையென்றால், அதில் தீர்ப்புக் கூறி முடிவு செய்ய வேண்டியது சர்க்கார் கடமை என்று ஸ்ரீ. ஜின்னாவும், சர். ஷாபியும் இழுத்துக் கூறுகிறார்கள். ஆகவே வகுப்புச் சமரசம் ஏற்படவில்லையென்ற காரணம் சொல்லி தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுப்பதை தள்ளி வைக்கமுடியாது. இதையும் மீறி மாகாண சுயஆட்சி கொடுத்தால், அதை முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளுவார்களா? ஒருகாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று ஜின்னா, ஷாபி, ஆகாகான் தெளிவாய் சொல்லிவிட்டார்கள். வட்டமேஜை படலம் முடிவுறப் போகிறது. இனி தலைவர்கள் இந்தியா திரும்ப வேண்டியதுதான். இங்கே வாலிப இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கியர் எவ்வளவு விடுதலை வெறி கொண்டிருக்கிறார்கள் என்பதை லண்டனிலுள்ள கிழடுகள் அறியும். ஆகவே முன்னால் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய தற்சமயம் முன் வந்திருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் சரி: இச்சமயமாவது பூரண பொறுப்பாட்சி வேண்டும் என்று பகிரங்கமாய் சொல்ல அவர்கள் முன் வந்ததைக் கண்டு சந்தோஷமடைகிறோம்.

# வட்டமேஜை சமாதி

பரிதாபம், பரிதாபம், "வட்டமேஜை"க்கு சாவு சடங்கு அவ்வளவு விரைவில் நடக்குமென்று ஒருவரும் நினைக்கவில்லையே! அற்ப ஆயுள். அதற்கு மாரப்படிதற்கு இந்தியாவிலிருந்து எத்தனை புலிகள் கோட்டையும், கால்சட்டையையும் இழுத்துக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். அதனால் ஏற்படும் "குதிரைமுட்டை"யால் என்னென்ன உத்தியோகங்கள் கனவு கண்டார்கள், தெரியுமா? முதல் மந்திரி வேலைக்கு ஆசைப்பட்டவர்கள் அநேகம்! யுத்த மந்திரி வேலைக்கு எதிர் நோக்கியவர்கள் பலர்; ஆகாய மந்திரி வேலை, மிதக்கும் கப்பல் மந்திரி வேலை, இன்னும் என் மூளையில் எட்டாத பல வேலைகள். ஐயோ பலர் எண்ணங்கள் நாசமாயினவே!

சாப்ரு கூடயிருந்து கருமாதியை நடத்திவிட்டு, சுயநாடு திரும்பி சொந்த வீட்டில் சாய்வு நாற்காலியில் கால் நீட்டிக்கொண்டு "ராமன் ஆண்டாலென்ன; ராவணன் ஆண்டாலென்ன?" வென்று பழயபாட்டி வேதாந்தம் பேசுவார்களா? அல்லது, அடிகள்கூட சேர்ந்து, கிளர்ச்சி செய்து, "அரச பெருமான்" விருந்தினராகப் பேசுவார்களா? பார்ப்போம்.

எனினும், "வட்டமேஜை" கருமாதி ஜேம்ஸ் மாளிகையில் நடவாதாம். சேண்ட் ஸ்டிபன்ஸ் கல்லறையில் நடக்கப் போகிறதாம்.

அன்று "இழவு பிரசங்கம்" யார் கொடுப்பார்களென்று நிச்சயமாய்த் தெரியவில்லை.

ஆனால் "கருமாதி குருக்களையா" ஸ்ரீலஸ்ரீ வின்சண்ட் சர்ச்சில். அவருக்கு தம்பிரான் இந்தியா மந்திரி ஸ்ரீலஸ்ரீ ஹோர் கூட இருந்து கருமாதி சடங்குக்கு உதவி செய்வார். சில ஒடுக்கம் தம்பிரான்களும் உதவி செய்வார்களாம். அன்னார்களின் நாமதேயம், ரெஜினல்ட் கிரடாக், வார்ட்லா-மில்னர்.

(71-ம் பக்கம் பார்க்க)

வட்டமேஜை மகாநாடு பொதுக்கூட்டம் சனிக்கிழமை ஆரம்பமாயிற்று. நாளை செவ்வாய்க் கிழமை சர்க்கார் கொள்கையை முதல் மந்திரி தெரிவிப்பாரென்று தெரிகிறது. பிரிட்டனின் சரித்திரத்தில், முதல் மந்திரி அறிக்கை வெளியிடும் தினம் ஒரு முக்கிய தினமாயிருக்கும். ஏனெனில் அந்த அறிக்கையே இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் இனி ஏற்படப் போகும் நட்புக்கோ பகைமைக்கோ அடிப்படையாயிருக்கும். பிரிட்டிஷாரின் யோக்கியதையை உலகத்திற்கு வெளிப்படுத்தும் ஒரு முக்கிய தஸ்தாவேஜியாக விளங்கும். ஆகவே பிரிட்டனின் நல்லெண்ணத்தையோ அல்லது கெட்டெண்ணத்தையோ காட்டப் போகும் அந்த அறிக்கையை நாம் எதிர் பார்க்கிறோம்.

Koviloor Digital Library

# பிரிட்டனுக்கு 'ஆகாகான் எச்சரிக்கை

கோர்ட்டை ஏமாற்ற "பே பே பே" சொல்லியவன் கதை உங்களுக்கு தெரியும். வக்கீல் சொல்லிக் கொடுத்த இந்தப் பாடத்தை அவன் வக்கீலிடமே பின்னால் காட்டினான். அதைப் போல ஆகாகான் கோஷ்டி நிலைமை இருக்கிறது. பிரிட்டிஷார் தங்களை ஆதரிப்பார்கள் என்று நினைத்தார்கள். பிரிட்டிஷாரை நம்பி ஏமாந்தவர்கள் கதைகள் அநேகம். அவற்றை அறிந்தும் ஆகாகான் கோஷ்டியார் நம்பினார்கள். முடிவில் அவர்களுக்கும் பிரிட்டிஷார் "பே பே பே" காட்டினார்கள். இதை இப்பொழுதாவது ஆகாகான் கோஷ்டியார் அறிந்து கொண்டதைக் கண்டு சந்தோஷப்படுகிறோம். முதல் மந்திரியும், இந்தியா மந்திரியும் சேர்ந்து உட்கார்ந்திருக்கும்போது ஆகாகான் அவர்களை பேட்டி கண்டார். அச்சமயம் அவர்கள் கேட்ட கேள்விகளையும் ஆகாகான் அளித்த பதிலையும் கீழே வெளியிடுகிறோம்.

கேள்வி:—வகுப்பு சமரசம் ஏற்படாமல் தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுப்பது எப்படி சாத்தியம்?

பதில்:—வகுப்பு சமரசத்திற்கு வழி தேட வேண்டியது சர்க்கார் கடமை. முஸ்லிம்கள் நிலைமை மிகவும் மோசமாய் விட்டது. தாங்கள் இந்தியாவிற்கு திரும்பிச் சென்றால் எங்கள் நிலைமை கஷ்டமானதாயிருக்கும். அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாத பிரிட்டிஷாருக்கு, முஸ்லிம்கள் ஆயுதங்களாய் உபயோகப் படுகிறார்கள் என்று இந்தியாவில் ஒரு நினைப்பு தோன்றியிருக்கிறது. ஐக்கிய ஆட்சி கமிட்டியில் எங்கள் நிலைமையை நாங்கள் ஒப்புக்கொள்ளும்படி நீங்கள் செய்து விட்டீர்கள். ஆகவே பொதுஜன விரோதம் பூராவும் எங்கள் பேரில் திரும்பியிருக்கிறது.

கேள்வி:—மகாண சுயாட்சி கொடுத்தால் முஸ்லிம்கள் திருப்தியடைவார்களா?

பதில்:—ஒரு நாளுமில்லை. அப்படி கொடுத்தால், நாங்கள் பிரிட்டிஷ் அடிமைகள் அல்லவென்பதை காட்டிக்கொள்ள நேரிடும்.

கேள்வி:—பூர்ண மாகாண சுயாட்சி கொடுத்தால் முஸ்லிம்கள் ஒத்துழைப்பார்களா?

பதில்:—தலைமை சர்க்காரில் பொறுப்பு வேண்டுமென்பது முஸ்லிம்கள் அபிப்பிராயம். சர்க்கார் தங்கள் செய்கையால் எப்படி காங்கிரஸை விரோத மாக்கிக் கொண்டதோ, அம்மாதிரியே முஸ்லிம்களையும் திரும்பும்படி செய்கிறது.

கேள்வி:—மறுபடியும் முயற்சி செய்தால் வகுப்பு சமரசம் ஏற்படுமா?

பதில்:—தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுப்பதாகச் சொன்னால் உடனே ஏற்படும். அதற்கிடையில் என்ன முயற்சித்தாலும் ஏற்படாது.

கேள்வி:—காங்கிரஸ் சட்ட மறுப்பு ஆரம்பித்தால் முஸ்லிம்கள் என்ன செய்வார்கள்?

பதில்:—முஸ்லிம் வாலிபர்களில் பெரும்பாலோர் சட்டமறுப்பில் சேர்வார்கள். சென்ற போராட்டத்தில் முஸ்லிம் தலைவர்கள் சேராமல் நடு நிலைமை வகித்தார்கள். அப்படிச் செய்ததால் அவர்களுக்கு தேசாபிமானம் இல்லை என்ற கெட்ட பெயர் ஏற்பட்டது. ஆகவே எங்கள் தேசாபிமானத்தை இனி நிரூபிக்க வேண்டும். மறுபடியும் பகிஷ்காரம் ஆரம்பித்தால் முஸ்லிம்கள் ஏராளமாய்ச் சேர்வார்கள். அடுத்த பகிஷ்காரம் அரைகுறையா யிருக்காது. பூர்ண பகிஷ்காரமாய்விடும். வட்டமேஜை மகாநாடு தோல்வியுற்றால் மகாத்மா காந்தி மறுபடியும் சட்ட மறுப்பு ஆரம்பிப்பார் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

கேள்வி:—அப்படியானால் நாங்கள் என்னதான் செய்ய வேண்டும்?

பதில்:—சமூக சமரசத்திற்கு ஒரு வழி கண்டு பிடித்து அதை ஒப்புக் கொள்ளும்படி இந்து முஸ்லிம்களுக்கு சொல்ல வேண்டும். உடனே ஐக்கிய ஆட்சி அமைப்பை—தற்காலிக பாது காப்புகளுடன்—ஏற்படுத்த வேலை செய்யவேண்டும். இதைத் தவிர வேறு எந்த முறையும், இந்தியரில் எந்த வகுப்பாரையும் திருப்தி செய்ய முடியாது.

Koviloor Digital Library



# அடக்கு முறைக்கு அஞ்சேன் : மகாத்மா காந்தி

மாகாண சுயாட்சி, நான் நினைக்கும் மகாண சுயாட்சியாயின், அதை நான் பரிசீலனை செய்ய பின்வாங்கி இருக்கமாட்டேன். நான் விரும்புவது அதனால் உண்மையில் கிடைக்குமா என்பதைக் கண்டறியமுன் வருவேன். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் வழங்கவுள்ள மாகாண சுயாட்சி நான் கனவுகண்டு கொண்டிருக்கும் மாகாண சுயாட்சி அல்லவென்பது, கமிட்டி விவாதத்தால் பகிரங்கமாகி விட்டது. 'மாகாண சுயாட்சி' என்று பெயர் மட்டும் கொண்ட அரசியல் முறையை நான் முட்டாள் தனமாக ஆதரிப்பேனென்றோ, தேசத்திற்கு ஏதாவது கிடைத்தால் போதுமென ஆத்திரத்தால் தேச நன்மையை காட்டிக் கொடுப்பேனென்றோ என்னைக் கருத வேண்டாமென்று நான் நண்பர்களுக்குக் கூறினேன். தலைமை சர்க்காரில் பல நிர்ப்பந்தங்களுடன் பொறுப்பாட்சி யளிப்பதைக்கொண்டு நான் திருப்தியடைய மாட்டேன்.

இராணுவம், நிதி இலாகைகளில் அதிகாரம் அளிக்கத்தக்க பொறுப்பாட்சியே எனக்குத்தேவை: தற்போது அவ்வித பொறுப்பாட்சி இங்கு கிடைக்காதென்பதை நானறிவேன். அதை யளிக்க ஒரு பிரிட்டிஷாரும் தயாராயில்லை என்பதும் எனக்குத் தெரியும். எனவே, நான் திரும்பிச் சென்று என் தேசமக்களை மீண்டும் கஷ்டங்களை அனுபவித்து தியாகங்கள் செய்யுமாறு கேட்கவேண்டியதே என்பதையும் நான் அறிவேன்.

அன்னியர் பலமாக தலைமை சர்க்காரிலிருந்து அதிகாரம் செலுத்துகையில், உண்மை மாகாண சுயாட்சி இருக்கமுடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது. பொறுப்பாட்சியும் மாகாண சுயாட்சியும் ஏக காலத்தில் புகுத்த வேண்டுமென்று நான் உணருகின்றேன். நான் கேட்கும் மாகாண சுயாட்சி அளிப்பதாயின் அதை உடனே ஏற்க சித்தமாயிருக்கிறேன்.

வங்காளத்தை எடுத்துக் கொள்வோம். எனது மாகாண சுயாட்சியின்படி, வங்கத்தில புரட்சியை அறவே நீக்கிவிடலாம். புரட்சிக் காரர்களைத் தூக்கிப்பிடித்துக் கொல்லமாட்டோம். அவர்களது மனதை திருப்பி அவர்களின் நம்பிக்கையைப் பெறுவோம். என் அதிகாரத்திற்கு உட்படாத இராணுவத்திற்கு ஒரு தம்படியும் கொடுக்க மாட்டேன். அவ்வித ராணுவத்தைச் சேர்ந்த ஒரு சிப்பாயையும் வங்கத்திற்குள் நுழையவிட மாட்டேன். ஆள் தூக்கிச் சட்டப்படி விசாரணையின்றி சிறைபட்டிருப்பவர்களனைவரையும் விடுதலை செய்து, 1818ம் வருஷத்திய 3 வது ரெகுலேஷனை ரத்து செய்துவிடுவேன். அவ்வித மாகாண சுயாட்சியே வரப்போகிறதென்று நான் நம்பியிருக்கிறேன்.

டில்லி ஒப்பந்தத்திற் கிணங்கவே நான் லண்டன் வந்தேன். பொறுப்பாட்சி பெற்ற ஐக்ய சர்க்கார் முறையையும், இந்தியாவுக்கு நன்மை பயக்கும் பாதுகாப்புகளையும் உட்கொண்ட ஓர் அரசியல் திட்டத்தைப்பற்றி விவாதித்து, அதை பெறலாமென்று டில்லி ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இதனாலேயே நான் லண்டன் வந்தேன். பார்லிமெண்டும், பிரிட்டிஷ் மந்திரிகளும் மனது வைப்பார்களாயின் ஐக்ய அரசியல் திட்டத்தை தயாரிக்க 3 வருஷங்கள் ஆகுமென நான் நினைக்கவில்லை.

மகாநாட்டால் ஒன்றும் விளையப் போவதில்லை என்றும், இந்தியாவில் அடக்குமுறை ஆரம்பமாகுமென்றும் ஐயுறுகிறேன்.

அடக்கு முறையை நான் பொருட்படுத்தவில்லை. அது இந்தியாவுக்கு நன்மையே பயக்கியுள்ளது. மீண்டும் பிரிட்டனுடன் இந்தியா ஒத்துழைக்க நான் செய்துள்ள முயற்சி பாழாகுமே என்றே வருத்தப்படுகிறேன்.

நான் மீண்டும் ஒத்துழையாமையையும் சட்ட மறுப்பையும் கைக்கொள்ள வேண்டியிருக்கும். கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு ஒத்துழையாமை சட்ட மறுப்பு மந்திரத்தை மீண்டும் எடுத்தோதுவேன். இந்தியாவின்மீது எவ்வளவு இராணுவ ஆகாய விமானங்களை பறக்கவிட்டாலும் சரி; இந்தியாவிற்குள் எவ்வளவு பயங்கரமான "டாங்க்" பீரங்கிகளை கொணர்ந்தாலும் சரி.

இந்தியாவில் புரட்சி இயக்கத்திற்கு காங்கிரஸ் ஜவாப்தாரியல்ல. ஆனால் இதற்கு மாறாக புரட்சி இயக்கம் பரவாது தடுத்து வைத்து வருவதற்கு காங்கிரஸின் அகிம்சா தர்மமே காரணமாகும்.

இந்தியா விடுதலை பெற வேண்டுமென நான் விரும்புகிறேன். புரட்சி எவ்வித நன்மையும் பயக்க முடியாது. பிரிட்டிஷ் அதிகாரத்தையும், பிரிட்டிஷ் அடக்கு முறை கொடுமையையும் ஒரு பக்கத்திலும், இந்திய வாலிபர்களின் புரட்சி காரியங்களை மற்றோர் புறத்திலும் காங்கிரஸ் எதிர்த்து நின்று போராடும்.

—லண்டன் பிரசங்கம்.

Koviloor Digital Library



# ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் : :

அறிஞர்
வஸ்வானி

முதல் முதலில் 1924ல் கூட்டிய மாணவர்கள் கூட்டத்தில், மாணவர்கள் காலத்திற்கேற்றபடி சேவை செய்வதாக வாக்களித்தார்கள். நானும் நம்பினேன். இப்பொழுதோ 1931ம் வருடம். இந்த ஏழு வருடங்களில் மாணவர்களே! நீங்கள் எதை சாதித்திருக்கிறீர்களென்று கேட்கிறேன்? கான்பரன்ஸ்கள் கேவலம் தமாஷ் பார்க்கும் கூட்டங்களாக இருக்கக்கூடாது. கான்பரன்ஸ்கள் வாக்குவாதம் செய்து நாவன்மை காட்டும் நாடகசாலையாக யிருக்கக்கூடாது. கான்பரன்ஸ்கள், உண்மையோடு நடத்தக்கூடிய திட்டங்கள் போட்டு அதுபடி நடக்கக்கூடிய "செய்கை" கூட்டங்களாக வேண்டும். நீங்கள் கொடுத்த வாக்குறுதியை உங்களுக்கு ஞாபகம் மூட்டவே இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் "உண்மை சேவை"யைச் செய்யத் தயாராயிருந்தால் என் வந்தனங்கள் உங்களுக்கு உரித்தாகுக. இல்லையேல் எழுங்கள், என்னுடன் வாருங்கள் இந்த கூட்டத்தில் தீர்மானம் செய்த காகிதங்களை ஸிந்து நதியில் எறிந்துவிட்டு வருவோம்.

இந்த மகத்தான மாணவர்கள் கூட்டம் குளிர் காலத்தில் ஆரம்பமாகிறது. மாணவர்களே! நீங்கள் யௌவனர்கள். வளர்ச்சிக் குரிய அறிகுறி காணப்படுகின்றது. என் உள்ளத்தில் அக்கினி ஜுவாலை எரிகிறது. இந்த ஜுவாலையில் சிறிதளவு உங்கள் உள்ளத்தையும் பற்றுக. சமஸ்கிருதத்தில், யௌவனர்களுக்கு "யுவக்" என்பது. "யவன்" என்ற வார்த்தையுடன் கலந்தது. "யவன்" என்றால் அக்னி நான் உங்களை அக்னி தேவிக்கு புத்திர புத்திரிகளாக வேண்டுமென்று விரும்புகிறேன். இங்கு சில பெண் பிரதிநிதிகளைக் காண்கின்றேன். அன்னார்களை வரவேற்க என் உள்ளத்தில் ஆனந்தம் பொங்குகிறது. ஆனால் ஏராளமாய் பெண்கள் வராததற்காக வருந்துகிறேன். தற்சமயம் ஸிந்து நாட்டிற்கு "சர்வஜனங்களிடையே செட்டுத் தனம்" அபாரமாய் வேண்டற்பாலது. இப்புரட்சி மாதர்களின் உதவியில்லாமல் நடைபெறாது. மாதர்கள் தான் சக்திக்கு அணிகலன். மனிதனால் உண்டாக்கப்பட்ட உலகத்தில் நாம் வசிக்கிறோம். மனிதன் ஹிம்ஸையை, பலாத்காரத்தை நம்புகிறான். மிருகபலத்திலும், கொள்ளையடிப்பதிலும், தொல்லை கொடுப்பதிலும் நம்புகிறான்.

ஜனசமூகமோ, ஓர் புதிய உலகத்தை சிருஷ்டிக்க கதறுகின்றது. அந்த அன்பினாலும் உள்ளத்தின் உண்மையிலும் சாந்தத்தின் சக்தியினாலுமே சிருஷ்டிக்கப்பட முடியும். இந்த சாந்தத்தின் சக்தி நம் பெண்மணிகளிடமிருக்கிறது. மாணவிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படாதவரை மாணவர்களின் இயக்கம், சக்தி பெற்று புத்துயிர் அடையப் போவதில்லை.

பள்ளியில் ஏற்பட்ட அடக்கு முறையின் பலனாய் எழுந்த எழுச்சி ஜெர்மனி மாணவர் இயக்கத்திற்கு புதிய புத்துயிர் கொடுத்தது. அச்சமயம் அம்மாணவர்கள் காராகிரகத்தைவிட பள்ளி சிறந்ததாக யில்லை யென்று சொல்லினர். இயக்கம் பலத்தது, மாணவர்கள் அதிகமாய்ச் சேர்ந்தார்கள். மாணவிகள் அதிகமாய்ச் சேர்ந்தபின் தான் அதற்கு உண்மை சக்தி உண்டாயிற்று.

ஸிந்து மாணவர்களிடம் அநேகர் நம்பிக்கை வைக்கவில்லை யென்று எனக்கு தெரியும் ஏனெனில், மாணவர்கள் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நான் பிறப்பிலே தீவிர பிடிவாதக்காரன். நம்பிக்கையை இழந்து விடவில்லை. உங்களிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. யௌவனர்களே! சக்தி. சக்தியின் அபார அளவைப் பற்றி சரித்திரங்கள் கூறுகின்றன. சக்தி மறைந்து கிடக்கின்றது. சக்தி கைதியாகி யிருக்கின்றது. விடுவியுங்கள் விடுவியுங்கள். நீங்கள் உலகம் பிரமிக்கும்படி அபார அதிசயங்கள் செய்து காட்டுவீர்கள். நான் உங்களுக்கு விடுவிக்கும் செய்தியாவது இதே ஒரே வார்த்தை.

" சக்தி சக்தி "

தற்கால நாகரிகம், ஒவ்வொரு நரம்புகளையும் சிக்காய் அடித்து விட்டது. இந்த நாகரிகத்தின் கூற்று, சத்தம் தசை நரம்புகளையும், சத்தையும் மெலியச் செய்து விட்டன. ஜெர்மனியில், மாணவர்கள் மலைகளில், தொத்துவதற்கும் நடப்பதற்கும் ஆசைப்படுகிறார்கள். உங்களுக்கு வீர விளையாட்டு உணர்ச்சி ஏற்படல் வேண்டும். கஸரத்துகளும் ஓர் முக்கியமான படிப்பே. பயில்வான்களாகுங்கள். நிச்சயமாய் கஸரத்தில் ஆசை கொள்ளுங்கள். பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டியுங்கள். அப்பொழுதுதான் உங்கள் சரீரத்தை, சரியான வழியில் திடகாத்திரமாய்ச் செய்ய முடியும். ஆரிய நாகரிகத்திற்கு அஸ்திவாரமாய் திகழ்ந்தது பிரமச்சரியமே. ரிஷிகணங்களும், அக்கால பிரம்மசாரியத்திற்காக தவமிருந்தார்கள்.

கே. எஸ். எஸ்.

Koviloor Digital Library



## மீண்டும் கடும் போர்

'நியூ லீடர்' பத்திரிகை பிரதிநிதி மகாத்மாவைக் கண்டு பேசியபோது அவர் கூறியதாவது:—

எதிர்கால நிலைமையை நான் கவனிக்கு மிடத்து இந்தியாவில் மீண்டும் கடுமையான போர் ஆரம்பமாகும்போல் தோன்றுகிறது. ஜனங்கள் போருக்கு முற்றிலும் தயாராக இருக்கிறார்கள். எப்போது அதற்கு அனுமதி கிடைக்கப் போகிறதென்று அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி:—தலைமை சர்க்காரிடம் பொறுப்பாட்சி மளிக்கும் விஷயமாக தகராறு ஏற்படும் பக்ஷத்தில், இந்தியாவிலுள்ள யாவரும் ஏகமனதாக சர்க்காரை எதிர்ப்பார்களா?

மகாத்மா:—சைமன் கமிஷன் நியமித்த சமயத்தில் என்ன நிலைமை ஏற்பட்டதென்பதை கவனித்துக் கொள்ளுங்கள். அதுபோலவே, ஏகோபித்து எல்லோரும் சர்க்காரை எதிர்ப்பார்களென்றே நினைக்கிறேன். லிபரல்களும், மிதவாதிகளும் காங்கிரஸ் இயக்கத்தில் நேராகக் கலந்து கொள்ளாவிடினும், காங்கிரஸை அவர்கள் ஆதரிப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

## சீப்பில்லா கல்யாணம்

மணப்பெண் மீது ஒருத்திக்கு கோபம். இதனால் விவாகத்தை நிறுத்திவிட சூழ்ச்சி செய்தாள். மணவறைக்கு பெண் போவதற்கு சிங்காரம் செய்ய வேண்டும். சீப்பை ஒளித்துவிட்டால் சிங்காரம் செய்யமுடியாது விவாகமும் நின்று போம் என்று அவள் விசித்திர மூளையில் பட்டது. அப்படியே செய்தாள். ஆனால் அவள் நினைத்தபடி நடந்ததா? சீப்பை ஒளித்து வைப்பதால் கல்யாணம் நின்று போய்விடுமா? கல்யாணம் நிற்கவில்லை. சீப்பை எடுத்தவள் அவமானமடைந்தாள். வங்காள சர்க்கார் இந்த சீப்பை ஒளித்தவள் கூட்டத்தைச் சேர்ந்தது. கவியரசர் ரவீந்திரருடைய 70-வது ஜயந்தியை கொண்டாட கல்கத்தாவில் பெரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதை யொட்டி சித்திரக்காட்சிசாலை யொன்றை நடத்துவதற்காக டவுன் தோட்டங்களை சர்க்காரிடம் கமிட்டி இரவல் கேட்டது. சும்மாயிருந்த கவியரசர், ஹிஜ்லி, சிட்டாகாங், டாக்காவில் சர்க்கார் நடத்திய அட்டூழியங்களை கண்டிக்கலாமா? இதைக்கண்டு சர்க்கார் பல்லை கடித்துக் கொண்டிருந்தார்கள். சரியான சமயம் வந்தது. அந்த முட்டாள் சீப்பை ஒளித்த மாதிரி, இந்த சர்க்கார் தோட்டம் கொடுக்க மறுத்து விட்டது. பலே சர்க்கார். சீப்பில்லாமல் கல்யாணம் நின்று போகவில்லை. அதைப்போல தோட்டம் இல்லாததால் கவியரசர் ஜெயந்தி நின்றுவிடாது. சர்க்காரே, இதை அறிந்துகொள்.

## மாப்பிள்ளை இல்லாத மணப்பந்தல்

இந்தியாவிலுள்ள முஸ்லிம் ஏழைகளை கவனிக்க எந்த முஸ்லிம் தலைவரையும் காணவில்லை. ஆனால் மற்ற முஸ்லிம் நாடுகள் சுயேச்சை அடையவேண்டுமென்று ஷவுகத் அலி அரும்பாடு படுகிறாராம். பாலஸ்தீனத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஒன்று கூடப்போகிறது. அகில முஸ்லிம் ஐக்கியத்தை உண்டு பண்ணப் போகிறாராம். இதற்கு பிரிட்டிஷார் உதவி செய்தால், இந்தியாவில் பிரிட்டிஷ் சரக்குகளை முஸ்லிம்கள் வாங்கும்படி செய்வதாக உறுதி கூறி யிருக்கிறாராம். இந்தப் போக்கு முஸ்லிம் பிரதிநிதிகளில் பலருக்கு பிடிக்கவில்லை யாகையால், அவர்கள் ஷவுக்கத்அலி, ஷாபிதாவுதி இவர்களை கண்டித்து ஒரு அறிக்கை வெளியிடுவார்கள் என்று தெரிகிறது. சர். இப்ராகிம் ரஹிம்டூலா சொல்லுகிறபடி, ஏழை முஸ்லிம்கள் துன்பத்தைப் போக்க எந்த முஸ்லிம் தலைவரையும் காணவில்லை. பரிதாபம்! இதில் மற்றொரு வேடிக்கை. முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்களான மெக்கா மெதினாவிற்கு அரசர் நெஜத் சுல்தான். அவர் சேராத எந்த இயக்கமும் மாப்பிள்ளை யில்லாத கல்யாணம் போலத்தான். அவருக்கு அழைப்பு அனுப்பினார்கள். இந்த முஸ்லிம் காங்கிரஸில் பிரிட்டிஷார் சம்பந்தம் இருப்பதால் நான் வரமுடியாது என்று சொல்லிவிட்டார். கமால்பாஷாவோ எகிப்தியர்களோ இதில் சேரப்போவதில்லை. இவ்வளவு பேரும் சேராத ஒரு இயக்கத்தை மௌலானா ஷவுகத்அலி எம்மாதிரி நடத்தி முடிக்கப்போகிறார் என்பதை ஆவலோடு எதிர்ப்பார்க்கிறோம்.

Koviloor Digital Library

# மின் வெட்டு.

## கள்ளுக்கு மரமில்லை.

கோவில்பட்டி தாலுகாவில் ஒரு விசித்திரமான பிரசாரம் ஆரம்பமாயிருக்கிறது. கள்ளுக்கு மரம் கொடுப்பதில்லையென்று சொந்தக்காரர்களிடம் காங்கிரஸ்காரர்கள கையெழுத்து வாங்கி வருகிறார்கள். மூன்றே மூன்று கிராமங்களில் மட்டும் 80 ஆயிரம் பனைகளை கொடுப்பதில்லையென்று சொந்தக்காரர் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். முன்பு சட்ட சபை பகிஷ்காரத்திற்குகூட இம்மாதிரி கையெழுத்து வாங்கியது நல்ல பலன் கொடுத்தது. இந்தியர் பொதுவாக கையெழுத்துக்கு கட்டுபடும் சத்திய சீலர்களாகையால், இந்த முறை மிகுந்த சிலாக்கியமானது. மற்ற இடங்களிலும் தொண்டர்கள் இதைப் பின் பற்றுவார்களாக.

## அநியாய தண்டனை

சேனாபதி போபத்கார் மகாராஷ்டிர காங்கிரஸ் கமிட்டி தலைவர். மகாராஷ்டிரத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவர். மகாத்மா கொள்கையில் அளவற்ற பிரியமுள்ளவர். சமீபத்தில் தான் நீண்டகாலம் சிறையிலிருந்து விடுதலையடைந்தார். அதாவது சட்ட மறுப்பு நின்ற பின்பே விடுதலையடைந்தார். அவர் மீது ராஜத்துவேஷக் குற்றஞ்சாட்டி 7 வருஷம் தண்டனை விதித்திருக்கிறார்கள். இது மிகவும் அநியாயம். ராஜத்துவேஷக்குற்றத்திற்கு, இந்த சமாதான காலத்தில், ஒரு பிரபல தலைவருக்கு, ஒரு மாகாண காங்கிரஸ் தலைவருக்கு 7 வருஷம் தண்டனை விதிப்பதென்றால், இது சமாதான காலமா, அல்லது யுத்த காலமா என்று லார்ட் வில்லிங்டனை கேட்கிறோம்.

## போபால் நீதிபதி.

போபால் ஒரு முஸ்லிம் சமஸ்தானம். அதன் பிரதம நீதிபதியும் ஒரு முஸ்லிம். இருந்தாலும் பிரதம நீதிபதி பக்ஷபாதமின்றி காஷ்மீர படையெடுப்பைப் பற்றி பேசியிருப்பதைக்கண்டு நாம் சந்தோஷப்படுகிறோம். நம்மைப்பொருத்தவரையில், சமஸ்தானங்களையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியாவோடு சேர்த்து விட வேண்டுமென்பதே நமது கருத்து. காஷ்மீரமோ நிஜாமோ எல்லாம் நமக்கு ஒன்றே. ஆனால் காஷ்மீர ஜனங்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள் ஆகையால் சமஸ்தானத்திற்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் அங்கே தலையிடுவது, என்பது நேர்மையல்ல. நாளை நிஜாமுக்கோ, போபாலுக்கோ அக்கதி வருமானால் எவ்வளவு கஷ்டமாயிருக்கும்? மேலும் நீதி நிர்வாக விஷயங்களில் இந்து முஸ்லிம் என்ற பிரிவினை உணர்ச்சி தொலைந்தால் தான் நமது நாடு உருப்படும். ஆகவே காஷ்மீரத்திற்கு வெளியே உள்ளவர்கள் சமஸ்தானத்திற்குள் படையெடுத்துச் செல்வது நியாயமல்ல என்று போபால் பிரதம நீதிபதி எச்சரித்திருப்பதை நாம் பாராட்டுவோம்.

## மேஜர் போரன் உளறல்

சென்ற வாரம் இந்திய வெள்ளையர் சங்கத்தின் காரியதரிசியான மேஜர் போரன் என்றவர் சென்னைக்கு எழுந்தருளினார். சென்னை வெள்ளையர் சங்கத்தில இந்த மேஜர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். முதலிலிருந்து கடைசிவரையில் எல்லாம் அபத்தமாயிருந்தது. இம்மாதிரி பேர்வழிகள் காரியதரிசிகளாகவும், வில்லிங்டன் போன்றவர்கள் தலைவராகவும் இருக்கிறவரை வெள்ளையர்—இந்தியர் ஒற்றுமை ஏற்பட முடியுமா என்று நாம் சந்தேகப்படுகிறோம். சென்னை மெயில் பத்திரிகை, மேஜர் போரன் இந்தியப் பத்திரிகைகளைப்பற்றியும், முக்கியமாய் "பிரி பிரஸ்" ஜர்னலைப்பற்றியும் உளறியவைகளில் பெரும்பான்மையை வெளியிடவில்லை. அதைக்கண்டு சந்தோஷப்படுகிறோம். சென்னை வெள்ளையர் சங்கம் மேஜர்போரன் பேசியவற்றை கண்டித்து, அவர் போக்கை வெறுத்து கல்கத்தா தலைமை சங்கத்திற்கு கடிதம் அனுப்பி யிருப்பதாகத் தெரிகிறது. ரகசியமாக கடிதம் அனுப்புவது மட்டும் போதாது, மேஜர் போரன் பகிரங்கமாய் பேசியதால், சங்கமும் தனது கடிதத்தை பகிரங்கமாய் வெளியிடவேண்டும். முன்னால் வில்லியர்ஸ் லண்டனில் தாறுமாறாய் பேசியதையும் சென்னை வெள்ளையர் சங்கம்தான் கண்டித்தது. ஆகவே சென்னை வெள்ளையர் கொஞ்சம் நிதான புத்தியோடு நடந்து கொள்ளுகிறார்கள். வங்காளத்தில் வில்லியர்ஸ்களும், போரன்களும் அதிகமா யிருப்பதாலேயே அங்கு வெள்ளையருக்கு விரோதமான உணர்ச்சியும் அதிகமாயிருக்கிறது. இந்தியாவில் வெள்ளையருக்கும், இந்தியருக்கும் நேசப்பான்மை ஏற்பட வேண்டுமானால் உடனே, வில்லியரையும், போரனையும் அவர்களைப் போன்றவர்களையும் சீட்டுக்கொடுத்து சீமைக்கு அனுப்ப வேண்டும். நமது யோசனையை சென்னை வெள்ளையர் சங்கம் ஆதரிக்குமென்று நம்புகிறோம்.

---

(66-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் "வட்டமேஜை" பாடையை தூக்குவதற்கு ஆள்கள் நியமிக்கவில்லை. ஸன்சர்வேடிவ் கட்சியில் நாக்கு நீளமும் இந்தியபணத்தில் கொழுத்த ஊதியவர்களாப் பொறுக்கி எடுக்கப்படுவார்கள். பலே நல்ல தேர்தல்.

ஆனால் யாவருக்கும் கருப்பு, அசல் கருப்புசட்டை தலை முதல் கால்வரை போடப்பட்டிருக்குமாம். கண் மூடியிருக்குமென்று நீங்கள் நினைக்க வேண்டாம். ரோஜாப் பூக்கொத்து ட்டைகளில் குத்தப்பட்டிருக்கும். ஆனால் சவபாட்டு யாவரும் ஒரே சுரத்துடன் பாடும் பொழுது பண்டாரசன்நிதி முதல்மந்திரி மாக்டனால்டு.பூத ஹார்மோனியமென்ற "பயானோ"வை வாசிப்பார். வட்டமேஜை சமாப்தி ஓம்.

ஆனால் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. புதைத்து விடுவதா அல்லது கொஞ்ச நாள் கழித்துப் புதைப்பதா? முடிவைப் பார்ப்போம்

Koviloor Digital Library

# தள்ளு குப்பையில்!

சென்றவாரம் ஐக்கிய ஆட்சி கமிட்டியில் வாதம் நடந்தபோது, ஒருவராவது வெறும் மாகாண சுயாட்சியை ஒப்புக்கொள்ளவில்லை. வெள்ளையரான ஜோன்ஸ் ஒருவரைத்தவிர மற்றபடி இந்து, முஸ்லிம், சிக்கியர், முதலிய சகலரும் தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி உடனே வேண்டுமென்று கேட்டனர். அம்மாதிரி பொறுப்பாட்சியில்லாத மாகாண சுயாட்சியை குப்பையில் தள்ளு என்று பேசினர். இந்தியா மந்திரியும், முதல் மந்திரியும் விழிக்கின்றனர். அங்கத்தினர்கள் பேசிய சில வாக்கியங்களை கீழே வெளியிடுகிறோம்.

### பண்டித மாளவியா

மாகாண சுய ஆட்சியை மட்டும் அளிப்பதாயின் சுயந்தான மன்னர்களை மகா நாட்டில் நியமிப்பானேன்? தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சியளிப்பது சர்க்கார் எண்ணமில்லாவிடில் இராணுவம், நிதி வெளிநாட்டு சம்பந்தம் இவைகளை மகா நாட்டில் விவாதிப்பது அனாவசியமே யாகும். தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சியளிக்காவிடில் அது நம்பிக்கை மோசம் செய்வதாகும்.

### சர்தார் உஜ்ஜல் சிங்

மாகாண சுய ஆட்சியையும், தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சியையும் ஏக காலத்தில் புகுத்த வேண்டும். வெறும் மாகாண சுய ஆட்சியைக் கொண்டு இந்தியாவில் எந்தக் கட்சியும் திருப்தி கொள்ளாது.

### ஸ்ரீ. ரங்கசாமி அய்யங்கார்

மாகாணசுய ஆட்சியை மட்டும் தற்போது புகுத்துவதென்பது, மகா நாட்டை வெறும் பொம்மலாட்டமாகச் செய்வதாகும். மகாண சுயாட்சியும், தலைமைப் பொறுப்பாட்சியும் சேர்ந்த அரசியல் திட்டமே தேவையாகும்.

### ஸ்ரீ. லீஸ் ஸ்மித்

மாகாண சுயாட்சியுடன் ஐக்கிய அரசியல் அமைப்பையும் அளிக்க வேண்டியதுதானா வென்பதை முக்கிய பிரச்னை. இரண்டையும் ஏககாலத்தில் வழங்குவதே நலமென நினைக்கிறேன். எவ்வளவு கஷ்டம் இருப்பினும் சரியே.

### சர். சாப்ரு

மத்திய சர்க்காரில் பொறுப்பற்ற மாகாண சுயாட்சியை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நான் மட்டும் ஆதரிக்க மாட்டேனென்பதல்ல. எனது நாட்டினரையும் ஒப்புக்கொள்ள வேண்டாமெனக் கூறுவேன்.

### சனம். சாஸ்திரி

இந்திய மாகாண சுயாட்சியை ஒருக்காலும் ஒப்புக்கொள்ளாது. மத்திய சர்க்காரில் பொறுப்பளிக்கப்படுவதற்கு முன் இம் முறை வழங்கப்பட்டால், அதனால் சர்க்காரின் தற்போதைய சங்கடங்கள் அதிகமாவது மட்டுமின்றி, அரசியல் வாதிகளுக்குள் மிக்க ஆத்திரத்தை மூட்டவும் காரணமாக விருக்கும்.

### ஸ்ரீ. ஏ. ராமசாமி முதலியார்

மத்திய சர்க்காரில் பொறுப்பற்ற மாகாண சுய ஆட்சியை ஒத்துழைப்பவரால் நடத்த முடியாது.

### ஸ்ரீ. ஜோஷி

பொது மக்களின் நன்மை கருதியே இந்தியா பொறுப்பாட்சி வேண்டுகிறது. பொறுப்பாட்சியில்லாத மாகாண சுயாட்சியை அடைவதன் மூலம் இக்கருத்து நிறைவேறாது.

### சர். நாகூர் தாஸ்

மாகாண சுயாட்சி வியாபாரிகளுக்கு யாதொரு பயனும் தராது. வியாபாரமும் வர்த்தகமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

### ஸ்ரீ. ஜின்னா

இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்திற்கு எவ்வித இடையூறும் விளைவிக்க வேண்டுமென்பது முஸ்லிம்கள் விருப்பமில்லை. இந்தியாவில் அறிவாளிகள் வெறும் மாகாண சுயாட்சியை மட்டும் ஆதரிக்கமாட்டார்களென முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர். வகுப்பு பிரச்னையில் மட்டுமின்றி சமரசம் அவசியமான இதர முக்கிய பிரச்னைகளிலும் எதிர்காலநடை முறைகளைப் பற்றி ஓர் முடிவு செய்ய வேண்டியது சர்க்கார் கடமையாகும்.

### சர். ஷாபி

மாகாண சுயாட்சி மட்டுமின்றி தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சியும் வழங்க சர்க்கார் முன்வர வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன்.

### ஸ்ரீ. ஜோன்ஸ்

ஐக்ய பொறுப்பாட்சி யேற்படுத்துவதற்கு முன் மாகாண சுயாட்சியை மட்டும் முதலில் புகுத்துவதை வெள்ளையர் கோஷ்டியார் ஆதரிக்கின்றனர். ஏனெனில், ஐக்ய சர்க்காரை நிறுவுவதற்கு முன்பு தனித்தனியே மண்டல சர்க்கார்களை ஏற்படுத்துவது அவசியம்.

---

## தங்கம் வெள்ளி.

சென்னை, நவம்பர், 28உ.

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 28—6—0 |
| சவரன் கில்லரை | ரூ. | 17—12—0 |
| சீமை வெள்ளி 100 ரூ. எடை | | 61—0—0 |
| ,, 1 ரூ. எடை | | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam, at the Lakshmi Press, 11 Anderson St. Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 டிசம்பர் 3உ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 18உ வியாழக்கிழமை || இதழ் 10

## வட்டமேஜை மயான யாத்திரை.




"வேண்டிய அவுஷதம் கொடுத்தும் குணத்துக்கு வராமல், என் அருமை வட்டமேஜை குழந்தை காலகதி அடைந்து விட்டது. அதன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யுங்கள்".

—மெக்டனல்ட்

Koviloor Digital Library

# பூச்சாண்டி வேண்டாம்

பிரிட்டிஷ் சர்க்கார் பூச்சாண்டி காட்டுவதில் பேர்பெற்றவர்கள். இதுவரை எத்தனையோ பூச்சாண்டிகளை நாம் பார்த்தாய்விட்டது. சர். சாமுவேல் ஹோர் (இந்தியா மந்திரி) புதிய பூச்சாண்டி காட்டுகிறாராம். மறுபடியும் காங்கிரஸ் சட்ட மறுப்பு ஆரம்பித்தால் அந்த நொடியே அடக்கிவிடுவாராம். தலைவர் கூட்டங்களை அப்படியே பூராவாக கைது செய்து ஜெயிலில் போட்டு பூட்டிவிடுவாராம். காங்கிரஸ் காரியக்கமிட்டி நடைபெறமுடியாதபடி தடுத்துவிடுவாராம். இப்படியெல்லாம் செய்து விட்டால் சட்ட மறுப்பு செய்ய முடியாமல் போய்விடுமென்பது அவர் நினைப்பு. சர். சாமுவேல் ஹோர் இப்படிச் சொல்லுவதன் மூலம், காங்கிரஸின் செல்வாக்கை அவர் ஒப்புக்கொள்ளுகிறார். சென்ற வருஷ சட்ட மறுப்பு ஆரம்பமாவதற்கு முன்பு மகாத்மா சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்தார். கொடுத்தும், டண்டியில் உப்புச் சட்டத்தை மீறிய பின்பும் கூட அவரை கைது செய்யவில்லை ஏன் கைது செய்யவில்லை?

மகாத்மாவை உடனே கைது செய்தால் தேசத்தில் அவருக்கு ஆதரவு அதிகமாகும்; மகாத்மாவுக்கு செல்வாக்கு இல்லையாகும்; அவரை பேசாமல் விட்டுவிட்டால் சட்ட மறுப்பு தானே செத்துப் போகும்; என்று சர்க்கார் நினைத்தார்கள். அதனாலேயே அவரை கைது செய்யவில்லை. ஆனால் சர்க்கார் ஏமாந்தார்கள். அவர் ஆரம்பித்த சட்ட மறுப்புக்கு ஏற்பட்ட ஆதரவைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்கள். ஆகவே தாங்கள் நினைத்தது முட்டாள் தனம் என்று பின்னால் அறிந்தார்கள். அதனால் அடுத்த சட்ட மறுப்பின் முதலிலேயே மகாத்மாவையும், மற்ற தலைவர்களையும் கைது செய்துவிட்டால், சட்டமறுப்பு அடங்கிவிடுமென்று அவர்கள் இப்பொழுது நினைக்கிறார்கள். இதிலிருந்து மகாத்மாவிற்குள்ள செல்வாக்கை அவர்கள் ஒப்புக்கொள்ளுவது வெளியாகிறது. ஆனால் இந்த முறையில் அவர்கள் வெற்றியடைய முடியுமா?

மகாத்மாவிற்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கின் ரகசியமென்ன? உடனே விடுதலை பெற வேண்டுமென்ற ஜனங்களின் உணர்ச்சியே மகாத்மாவின் செல்வாக்காகும். ஜனங்களுக்கு விடுதலை உணர்ச்சியில்லாவிடில் மகாத்மாவால் ஒன்றும் செய்ய முடியாது. விடுதலை உணர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மகாத்மாவின் செல்வாக்கும் அதிகமாகிறது. அதாவது, ஜனங்களின் விடுதலை உணர்ச்சியே மகாத்மாவின் சக்தியாய் மிளிருகிறது. இதுவே மகாத்மா செல்வாக்கின் ரகசியம். உண்மை இப்படியிருக்கும் போது, மகாத்மாவையோ, மற்ற தலைவர்களையோ கைது செய்துவிட்டதால் இயக்கம் நின்றுவிடுமா? ஒரு நாளும் நிற்காது. அப்படி நிற்குமென்று நினைப்பது மூடத்தனம். சர்க்கார் இந்த நினைப்பை விடாவிட்டால் முடிவில் சென்ற வருஷத்தைப் போல் இவ்வருஷமும் தங்கள் முட்டாள் தனத்தை சீக்கிரம் கண்டு கொள்ளுவார்கள்.

சென்றவருஷம் சட்டமறுப்பையே எடுத்துக் கொள்ளுவோம். ஆரம்பத்தில் சர்க்கார் சும்மாயிருந்தார்களே யொழிய பின்னால் எல்லா தலைவர்களையும் கைதுசெய்தார்கள். காரியக்கமிட்டி அங்கத்தினர்களை கூட்டங் கூட்டமாக ஜெயிலுக்குள் போட்டார்கள். யுத்த சபை அங்கத்தினர்களை கூண்டோடு சிறைக்கு அனுப்பினார்கள். பம்பாயில் மட்டும் சுமார் 20 யுத்தசபைகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வரகேரிட்டது. இதனால் சட்டமறுப்பு நின்று போயிற்றா? ஜனங்கள் ஊக்கம் குறைந்ததா? இல்லை. ஜனவரி மாதம் பிரதம மந்திரி அறிக்கை வெளியிட்ட போது, இந்தியாவிலுள்ள சகல தலைவர்களும் ஜெயிலுக்குள் இருந்தார்கள். எல்லா தலைவர்களும் ஜெயிலுக்குள் இருந்த போது சர்க்கார் ஏன் சமாதானத்திற்கு கெஞ்சினார்கள்? தலைவர்கள் வெளியேயிருந்தாலும், உள்ளேயிருந்தாலும் அவர்கள் சக்தி குறையவில்லை; ஜனங்கள் ஊக்கம் குன்றவில்லை; இதனால்தான் சமாதானம் செய்யும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தப்பாடத்தை அதற்குள் இந்த சர்க்கார்—அல்லது இந்தியா மந்திரி -- மறந்து விட்டது அவர்கள் அறிவீனத்தையே காட்டுகிறது.

சட்ட மறுப்பை அடக்கிவிடலாமென்று சர். சாமுவேல் ஹோர் நினைப்பது சூரியனை விழுங்கி விடலாமென்று அநுமார் நினைத்து பாய்ந்ததைப் போலவே இருக்கிறது. அநுமார் கதி என்னுயிற்று? இரண்டு கன்னங்களும் சப்பையாயின. சர். சாமுவேல் ஹோர் இந்த ஆபத்தான வேலையில் இறங்கும்படி பிரிட்டிஷ் ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா? இனி அடுத்த முறை சட்டமறுப்பு ஆரம்பமானல் அது அரை குறையாக இருக்காது. பூர்ணமாயிருக்கும். ஏனெனில் அந்த சட்டமறுப்பை

Koviloor Digital Library



# பிரிட்டனில் பால்ய விவாகம்

மிஸ். மேயோ என்ற அமெரிக்க குப்பைக்காரியைப்பற்றி நண்பர்கள் அறிவீர்கள். மகாத்மா அவளுக்கு சாக்கடைக்காரி என்ற திருநாமம் சூட்டினார். இந்தியாவிலுள்ள அழகான காட்சிகளையெல்லாம் விட்டுவிட்டு, குப்பை கூளங்களை கிண்டிக் கிளறிப்பார்த்து அவள் ஒரு புத்தகம் எழுதினாள். அந்தப் புத்தகத்தில் இந்தியர்மீது சாட்டிய குற்றங்களில் இந்தியாவில் பால்யவிவாகம் அதிகம் என்பதும், கிழடர்கள் குமரிகளை மணந்து கொள்ளுகிறார்கள் என்பதும் ஒன்று. இந்த குப்பைக்காரி மேயோவுக்கு தனது நாட்டிலேயே கூட்டிப்பெருக்க எவ்வளவோ குப்பைகள் இருந்தும், இந்தியாவிற்கு அவள் வருவானேன்? இந்தியா சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லை என்று உலகத்தார் நினைக்க வேண்டுமென்பது அவள் விருப்பு. பால்யவிவாகமும், கிழடர்—குமரி விவாகமும் இந்தியர் ராஜ்யம் ஆள தகுதியற்றவர்களாக்கும் குற்றங்கள் என்பது அவள் கட்சி.

இது ஒருபக்கம் இருக்கட்டும். பிரிட்டன் யோக்யதையை மேயோ கண்ணாடிமூலம் பார்ப்போம். 1930-ம் வருஷத்தில் 721 பேர் 16 வயதில் மணம் செய்திருக்கிறார்கள். இவர்களில் 22 பேர் ஆண்கள். 699 பேர் பெண்கள். ஆண்கள் 25 வயதுக்கு குறைந்தும், பெண்கள் 20 வயதுக்கு குறைந்தும் எங்கள் நாட்டில் விவாகம் செய்வதில்லையென்று கத்தும் மேயோவே, இந்த விஷயத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்? இதுதான் போகட்டும் கிழடர்—குமரி கல்யாணமாவது பிரிட்டனில் இல்லாமலிருக்கிறதா? மேலே சொல்லிய 16 வயது யுவதிகள் விவாகம் செய்துகொண்ட புருஷர்களின் வயது தெரியுமா? 16 முதல் 49 வரை வயதுள்ளவர்களையே இந்த பால்மணம் மாறா சிறுமிகள் விவாகம் செய்துகொண்டிருக்கிறார்கள். இது மட்டுமா? 20 வயதுள்ள மூன்று மடந்தைகள் 70 வயதுக்கு மேற்பட்ட கிழடுகளை மணந்தார்களாம். 17 வயதுள்ள மற்றொரு யுவதி 67 வயது சென்றவனுக்கு மாலையிட்டாளாம். மேயோவே, இவற்றிற்கு என்ன பதில் சொல்லுகிறாய்? பிரிட்டனில் இம்மாதிரி விவாகங்கள் நடைபெற்றிருக்கும்போது, அது சுயராஜ்யத்திற்கு லாயக்கா? சுயராஜ்யத்திற்கே தகுதியில்லாவிடில், பிறநாட்டை ஆள எப்படி அதற்கு யோக்கியதையுண்டு?

---

இந்தியரில் யாரும் எதிர்க்கமாட்டார்கள்; எதிர்க்கவும் முடியாது. மிதவாதிகள் வாய்மூடி ஒதுங்கி விடுவார்கள். முஸ்லிம்கள் அப்படியே காங்கிரசில் வந்து சேர்ந்து கொள்ளுவார்கள். மௌலானா ஷவுகத் அலி பத்திரிகையான "கிலாபத்" எழுதியிருப்பதை மற்றொரு பத்தியில் வெளியிட்டிருக்கிறோம். அதை படித்துப் பார்க்கவும். ஆகவே சர்க்காருக்கு ஆதரவாய் ஒரு குருவிக் குஞ்சு கூட இந்த நாட்டில் அகப்படாது.

இவற்றை யெல்லாம் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு சமர்ப்பிக்கிறோம். அடுத்த போராட்டம் நேரிட்டால், தற்சமயம் பிரிட்டிஷாருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிற அற்ப சொற்ப நினைப்புக் கூட பறந்துவிடும். அம்மாதிரி ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ள பிரிட்டிஷ் ஜனங்கள் விரும்பமாட்டார்களென்றே நினைக்கிறோம். அப்படியானால் சாமுவேல் ஹோர் கூட்டத்தை முதலில் ஜெயிலில் போடுங்கள். அப்பொழுதே இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் நிலைத்திருக்கும். இந்திய தலைவர்களை ஜெயிலில் போட்டால் இந்தியாவை இழப்பது திண்ணம். பிரிட்டிஷ் ஜனங்களே, உங்களுக்கு எது இஷ்டமோ அதைச் செய்யுங்கள். வெறும் பூச்சாண்டி வேண்டாம். எந்தப் பூச்சாண்டிக்கும் நாங்கள் பயப்படப்போவதில்லை.

---


## ஆபீஸ் மாற்றம்.

நண்பர்கள் கவனிக்க.

**காந்தி ஆபீஸ், வந்தேமாதரம் ஆபீஸ்**

2, பவளக்காரத் தெரு, சென்னை.

---

## தேவை.

காந்தி, வந்தேமாதரம் பத்திரிகைகளுக்கு ஏஜண்டுகள் நியமிக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஜில்லா ஏஜண்டு தேவை. சம்பளம் ரூ. 30—0—0 பிரயாணப்படி ரூ. 15—0—0 டிபாசிட் ரூ. 200 கட்டவேண்டும். நிபந்தனைகள் வேண்டுவோர் பதிலுக்கு ஸ்டாம்புடன் எழுதவும்.

"காந்தி" ஆபீஸ்,

2, பவளக்கார தெரு, சென்னை.

Koviloor Digital Library



## பலே ஷவுகத் அலி!

பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு ஆகாகான் விடுத்த எச்சரிக்கையைப் பற்றி, மௌலானா ஷவுகத் அலியின் பத்திரிகையான "கிலாபத்" பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது:—

"லண்டன் மகாநாட்டிற்குச் சென்ற முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம்களின் கோரிக்கைகளை அடிக்கடி வற்புறுத்தி வந்ததால், முஸ்லிம்களுக்கு தேசிய இயக்கத்தில் அனுதாபமில்லையென்று ஜனங்கள் மனத்தில் தவறான எண்ணம் தோன்றிவிட்டது. மாகாண சுயாட்சியுடன் முஸ்லிம்கள் திருப்தியடைந்து விடுவார்களென்றும், தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி வேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்களென்றும் ஓர் வித எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. பிரதம மந்திரியுடன் பேசியபோது, முஸ்லிம்கள் தேசியத்திற்கு எதிராக நிற்பார்கள் என்னும் வீண் எண்ணம் வேண்டாமென்று, சர். ஆகாகான் நன்கு விளக்கிவிட்டார். தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி அளிக்காவிட்டால், முஸ்லிம்களும் காங்கிரசுடன் சேர்ந்து, சட்டமறுப்புப் போரில் ஈடுபடுவார்கள் என்று பிரதம மந்திரியையும், இந்தியா மந்திரியையும் முஸ்லிம்கள் நன்கு எச்சரித்து விட்டனர். பெரும் பான்மையான முஸல்மான்களும் இதே எண்ணத்தைத்தான் கொண்டுள்ளனர். தங்களது உரிமைகளுக்காக முஸ்லிம்கள் சர்க்காரிடமும், காங்கிரசிடமும் போராடத் தயங்கமாட்டார்கள். ஆனால் தாய் நாட்டின் விடுதலைக்கு தடையாகவும், இந்தியா விடுதலையின் எதிரிகளுக்கு உதவிசெய்து இந்தியாவின் அடிமைத் தனத்தை ஓர் கணப்பொழுது வரை நீடிக்கவும் முஸ்லிம்கள் ஒரு நாளும் இணங்கப் போவதில்லையென்பது திண்ணம். ஆகவே இப்பொழுதாவது சர்க்கார், நிலைமையின் அபாயத்தை உணர்ந்து கொள்ள வேண்டுமென எச்சரிக்கிறோம். தலைமை சர்க்காரில் பொறுப் பாட்சி அளிப்பதுடன், முஸ்லிம்களின் கோரிக்கைகளையும் அங்கீகாரம் செய்யவேண்டும். இன்றேல், சர்க்கார் அடுத்த சட்டமறுப்புப் போரைச் சமாளிப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டியதுதான். இனி ஆரம்பிக்கப்போகும் சட்ட மறுப்புப் போராட்டம் வெற்றிகரமாக முடிவடையும். ஏனெனில், இத்தடவை முஸ்லிம்கள் முழுமனதுடன் போராட்டத்தில் முனைந்து காங்கிரசுடன் ஒத்துழைப்பார்கள் என்பது திண்ணம்.

## மிதவாதிகள் ஓலம்

தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுத்து காங்கிரசை திருப்தி செய்யாவிடில், தாங்கள் அதோகதியாய் போய்விடுவோமென்று மிதவாதிகள் நடுங்குகிறார்கள். லண்டன் மகா நாட்டில் சர். கௌவாஸ்ஜி ஜஹாங்கீர் ஓலமிட்டதாவது:—

மாகாணங்களுக்கு பூரண அதிகாரங்களை மாற்றவேண்டுமென்று மிதவாதிகள் கேட்கின்றனர். அரசியல் திட்டம் முறியாமல் பார்த்துக் கொள்ளவே கவர்னருக்கு அதிகாரமிருக்குமேயன்றி, வேறொரு ரிசர்வ் அதிகாரங்களுமிருத்தல்கூடாது. நான் பிரிட்டிஷ் உறவு வேண்டுமென போராடுபவன். வெறும் மாகாண சுயாட்சி மட்டும் அளிப்பின் அதனால் மிகவும் ஆபத்து ஏற்படுமென எச்சரிக்கை செய்கிறேன். தற்போதைய நெருக்கடியான சமயத்தில், நீங்கள் தவறி விட்டால் எங்களைப் போன்றவர்களை பொது ராஜ்ய வாழ்விலிருந்து ஒரேயடியாக ஒழித்து விடுபவர்களாவீர்கள். நாங்கள் மகாத்மாவின் ஒத்துழையா இயக்கத்தில் சேரப் போவதில்லை. ஆனால் நாங்கள் எந்த அரசியல் கோஷ்டியிலும் சேருவதற்கு வழியில்லாது போகும். சுதந்திரம் பெற ஒத்துழையாமை ஒன்றுதான் வழியென பொது ஜனங்கள் நம்புமாறு நீங்கள் காரியங்களை செய்யாதீர்கள். இன்றேல் உங்களுக்கு இந்தியாவில் ஒரு நண்பரும் இருக்கமாட்டார்கள். பிரிட்டிஷ் சம்பந்தத்திற்காக வாழ்நாளனைத்தும் உழைத்து வந்த சிநேகிதர்களையும் நீங்கள் இழப்பவர்களாவீர்.

---

ஆகாகான் கூறியதை நாம் முழுமனத்துடன் ஆதரிக்கிறோம். இப்பொழுதும் சர்க்கார் முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுத்து இந்தியாவின் சுதந்திர முன்னேற்றத்திற்கு தடை செய்வார்களாயின், முஸ்லிம் சமூகம் முழுவதும் ஒன்றுபட்டு, சட்ட மறுப்பில் காங்கிரசுடன் ஒத்துழைக்கும் என சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறோம். முதலாவது லண்டன் மகாநாட்டிலே மௌலானா முகம்மதலி விடுத்துள்ள எச்சரிக்கையையே இன்று ஆகாகான் வற்புறுத்தியிருக்கிறார். இந்த எச்சரிக்கையை சர்க்கார் எவ்வளவு தூரம் கவனிக்கின்றார்கள் என்பதை பார்ப்போம்."

Koviloor Digital Library



# தமிழ் தாய் விடுதலை :

(ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தரர்)

தமிழ்நாட்டில் தன்னை யறியாமலே சாதி வேட்கை ததும்பி வழிகிறது. சாதியொழிதல் வேண்டுமென்ற பேச்சுகள் வான்முகட்டையும் பிளந்து ஓடுகின்றன. அப்பேச்சுகளின் பயன் சாதிக்கு ஆக்கந் தேடுவதாக முடிகிறது. இக் குறைபாடு எல்லாச் சாதியாரிடத்து மிருக்கிறது. குரதிப்பித்து கொண்டுள்ள ஒருநாடு உய்தல் அருமையன்றோ? சாதி வேண்டாமென்னும் பேச்சேயில்லாத காலத்தைப்பார்க்கிலும், சாதி போதல் வேண்டுமென்னும் பேச்சு மிகுந்த இக் காலத்தில்—மேல்நாட்டு நாகரிகம் சண்டதாண்டவம் புரியும் இந்நாளில்—சாதிப்பற்று பெருகியே வருகிறது. சாதிப்பற்றும் வேட்கையும் பெருகி வருதல் நாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறியாகாது. சுமார் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் சாதி இயக்கங்கள் பெருகிவருதல் கண்கூடு. இப்பெருக்கம் சாதிப்பற்றை வளர்க்குமா தேய்க்குமா என்பதை நேயர்கள் சிந்திப்பார்களாக.

சாதி இயக்கங்கள் காட்டுத்தீப்போல் பரந்து பெருகுதற்குக் காரணமாக நிற்பவர்கள் பெரிதும ஆங்கிலம் படித்தவர்களேயாவர். இவர்கள் தங்கள் நலத்தினபொருட்டுச் சாதி இயக்கங்களைத் தோற்றுவிக்கிறார்கள். சாதிகளுக்குள் பிளவும் பிணக்கும் பூசலும் கொதித்தெழுந்து கொழுந்து விட்டெரிகின்றன. இவ்வெரியைப் பற்றி, இயக்கங்களைத் தோற்றுவித்தவர்கட்குக் கவலையென்பதே கிடையாது. அவர்கள் சுகமாக மாடியிலுறங்கிக் "கிளப்பு"களில் விளையாடிக் கொண்டிருப்பார்கள். சமயம் நேர்ந்தால் எரியுந்தீயில் நெய் சொரிய முயல்வார்கள். வினை அடித்துச் சாகிறவர்கள் ஏழை மக்களேயாவர். ஏழை மக்கள் கண்விழிக்குநாள் எந்நாளோ?

சாதி இயக்கங்கள் நாட்டையும் மறக்கச்செய்யும். நாட்டைக் கூறுபடுத்தும் இயக்கங்கள் சிற்சிலருக்கு இன்பந் தருவதுபோல் தோன்றினும், அவர்களையும், அவருள்ளிட்ட மற்றவர்களையும் அவ்வியக்கங்கள் பினனே விழுத்தி விடுமென்பதைச் சகோதரர்கள் என்றாதல் ஒருபோது உணராமற் போகமாட்டார்கள். நாடு என்பது சுவர்போன்றது. சுவரிலுள்ள ஒவ்வொரு கல்லும் பிணங்கிக் கோணத்தொடங்கினால் சுவரின் கதி என்னாகும்?

பலநிற இயக்கங்களின் தோற்றத்துக்கும் பலநிறக் கருத்து வெளியீட்டிற்கும் அடிப்படையான நோக்கமென்ன? நாட்டு நலன் அதாவது நாட்டு விடுதலை என்று சொல்ல வேண்டுவதில்லை. உள்நோக்க மறவால் இடையே இடையே பலநிற இடுக்கண்கள் நேர்ந்துவிடுவது வழக்கம். மனிதன் முன்னேற்றத்தை நாட வேண்டுமேயன்றிக் கடந்ததைப்பற்றிக் கழிவிரக்கமோ காழ்ப்போ கொள்ளலாகாது. அங்ஙனங்கொள்ளும் மனிதன் ஒருபோதும் முன்னேற்றமடையான். தமிழ்மொழியை ஓம்பும் இயக்கம் எதுவாயினும் அது தமிழ்த்தாயின் விடுதலையை நாடுவதாகும். தமிழ்நாட்டின் முழு விடுதலை தமிழ்மொழியின் ஆக்கத்திலேயேயிருக்கிறது.

தமிழ் மக்களே! உங்களைத் தமிழ்மக்கள் என்று அழைக்கச் செய்திருப்பது எது? அதை நினையுங்கள். அதைமறந்து ஆற்றப்படுந் தொண்டுகள் கடைக்காலில்லாமல் எழுப்பப்படும் கட்டடம் போன்றனவாகும். நீங்கள் எத்தொண்டு செய்யினும் அத்தொண்டின் அடிப்படையில் தமிழ் வேட்கை யெழுச்சியிருத்தல் வேண்டும். அவ்வேட்கை, உங்கள்பால் இடைநாள் தோன்றி உங்களைப் பலவாறு பிரித்துப் பிளந்துவரும் சாதி மதப் பூசல்கள் உங்களை விடுத்து இரிந்து ஓடச்செய்யும். அவ்வாற்றல் அமிழ்தினும் இனிய தமிழுக்குண்டு என்பதை மறவாதேயுங்கள். தமிழ் மொழியின் ஆக்கத்துக்காகவே தமிழ்க் காவியங்கள் எழுந்தன. அவை நாளடைவில் கதை நூல்களாகக் கொள்ளப்பட்டன. தமிழின் ஆக்கம் அருக அருகத் தமிழ்மக்களின் கண்ணுக்குத் தமிழ்க் காவியங்களிலுள்ள தமிழணங்கின் இன்பக்கூத்தும் புலனாதல் அரிதாயிற்று. அவர்கட்குப் பெரிதும் கதைகளே புலனாகின்றன. ஆதலால் சகோதரர்களே! தமிழ்க்காவியத்தில் தமிழணங்கைக் காண எழுங்கள்; தலைவர்களே அவளைக் காட்ட எழுங்கள். அக்காட்சிக்கென எல்லாரும் ஒன்றி மகாநாடு கூட்டுங்கள்; உங்கள் தாயின் சிறை போம்; நோய் போம்; குறை போம். அவள் விடுதலையடைவாள். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னுங் கொள்கை மீண்டும் தமிழ்நாட்டில் அரசபுரிம். உங்கள் வேற்றுமைகள்—பிணக்குகள்—பூசல்கள் எல்லாம் பறந்து ஓடும்; ஓடும்.

Koviloor Digital Library



## தேசியக்கொடி.

(எம்டன் பாடியது)

மீனாக்ஷிமகனே என்ற மெட்டு.
ஹிந்துஸ்தான் காபி-தாளம் ஆதி

பல்லவி

ஜெயக் கொடியே—இந்து
தேசிய பொற்கொடியே (ஜெ)

அநுபல்லவி

பயமென்பதை—நீக்கி
பல வினையை—போக்கி (ஜெ)
பட்சமுடன் ஆதிக் பிரஜைசெறத்தகு
நிச்சய சுதந்தரம் பெற்றிடச் செய்யும் (ஜெ)

(தொகையறா)

வெற்றிக் குறிகுறியாய் விளங்கியித்
தாய்நாட்டின் விடுதலைக் காதாரமே

(பாட்டு எடுப்பு)

உயரப் பறந்து—நன்மை
உண்டாக்கும் மென்மேல் செம்மை
உத்தமமுத்துக் குமரன் கனிமலர்
நித்தம் இருப்பிட மெய்மக்கள் (ஜெ)

---

## நாட்டின் மகிமை

(சடைமறைத்து முடிமீட்ட சொக்கநாதா
என்ற மெட்டு)

பல்லவி

நாட்டினைத்தைச் சுற்றிப்பசி வோட்டுவோமே-சுய
ராஜ்யக் கொடியைநிலை நாட்டுவோமே
நாட்டினில் பாரதவீரங் காட்டுவோமே—இந்த
நானில் கம்மடிமைத்தனம் ஓட்டுவோமே

எழிலுறு மஹாத்மா காந்தி
இன்று நமக்குபசாந்தி

வந்தேமாதரம் அல்லாகூ அக்பர் ஜெ ஜெ ஜெ

ஏழைமக்கள் வயிறார உண்டுவாழ்க—இதை
ஏற்படுத்தி வைத்தார்காந்தி நமக்காக
கோழைத்தனம் ஓடிநின்று வீரம்பெறுக
இது குண்டுவைத்த பீரங்கியாம் ஜெயம்தருக

முத்துகுமாரனும் பாடி—தினம்
ஒத்துமையாய்க்கூடி

வந்தேமாதரம் அல்லாகூ அக்பர் ஜெ ஜெ ஜெ.

## வட்டமேஜை புலம்பல்

வட்டமேஜை மகாநாட்டின் அந்திகாலச் சடங்கு பரிதாபமாயிருந்தது. மேஜையைச் சுற்றி சிலர் புலம்பியது உண்மையிலேயே கல்லும் கரையும்படி. செய்தது. மிதவாதிகளும் சர்க்கார் தாசர்களும் "ஓ" என்று அலறினர். "ஐயோ உனக்கு இந்த கதியா?" என்று சிலர் புலம்பினர். "எங்களை விட்டு போகிறாயே!" என்று மிதவாதிகள் கதறினர். "உன்னை பலி கொடுக்கவா இங்கு வந்தோம்?" என்று சர்க்கார் தாசர் கண்ணீர் வடித்தனர். "காங்கிரஸ் காரருக்கு விரோதமாய் பேசிய நாங்கள், எப்படி. இந்தியாவில் தலை நீட்டப் போகிறோம்?" என்று முட்டுக்கட்டை போட்டவர்கள அழுதனர். "தான் பெற்றெடுத்த குழந்தைக்கு அற்பாயுளில் இக்கதி நேரிட்டதே" என்று மெக்டனால்ட் முக்காடு போட்டுக் கொண்டார். எல்லாம் பரிதாபமாய்த்தான் இருக்கின்றன. என்ன செய்வது? அரைப் பிரசவம், குறைப்பிரசவம் எப்பொழுதாவது உருப்பட்டதுண்டா? வட்டமேஜை குழந்தையை பார்த்தவுடனேயே மகாத்மா அது பிழைக்காது என்று சொல்லிவிட்டார். இருந்தாலும் பார்க்கலாம் என்று மெக்டனால்ட் புறம் தட்டினார். மகாத்மா சொல்லியது உறுதியாயிற்று. குழந்தையைக் காட்டி இது வரை பிரிட்டிஷ் சர்க்கார் சுயராஜ்யம் கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார்கள். அதுவும் போயிற்று. இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பதே இப்பொழுதுள்ள கேள்வி. இனி சால்ஜாப் சொன்னால் காங்கிரஸ் கேட்காது. மெக்டனால்டே, என்ன சொல்லப்போகிறீர்?

---

### வேள்ளையர் ராஜ்யமா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றால் என்ன? மற்ற நாட்டாரும், ஜாதியாரும் பங்காளிகளாக சேர்ந்திருக்க இடம் உள்ளதா; அல்லது வெள்ளையரை மட்டும் கொண்டதா?" என்று லண்டன் ஸ்பெக்டேட்டர் கேட்கிறது. சர்ச்சில் கோஷ்டியார் சொல்லுவதைப் பார்த்தால், வெள்ளையர் நாடுகளே சம உரிமை பெற்று இருக்க முடியுமென்றும், மற்றநாடுகள் அடிமைகளாகவே இருக்க வேண்டு மென்றும் தெரிகிறது. அப்படியானால் "சம உரிமை பெற்ற நாடுகளின் பிணைப்பே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்" என்று சொல்லுவது வெறும் புரட்டா?

Koviloor Digital Library

## காந்தி சுருட்டு வேண்டுமா?

(எம்டன்)

நல்லவர்கள் பெயரை கெட்ட காரியங்களில் உபயோகப்படுத்திக் கொள்வது கேவல செய்கையாகும். எங்குபார்த்தாலும் சர்தார் சிகரெட்டு ஜவாரிலால் பீடி காந்தி சுருட்டுகள் என்று பெயர் கொடுத்து, படம் போட்டு காந்தி மார்க் சுருட்டை கவனித்து வாங்குங்கள் என்று விளம்பரம் செய்கிறார்கள். இந்த சுருட்டு வியாபாரிகளுக்கு ஒருக்கால் தேசியத் தலைவர்கள்பால் இருக்கும் பக்தியால் அவர்கள் பெயரைக் குறிப்பிடுகிறார்களோ என்று சிலர் எண்ணலாம். கிராமபோன் பெட்டி பண்டித மோதிலால் நேருவின் மேல் எவ்வளவு பக்திவைத்து உருக்கமாகப் பாடுகிறதோ அவ்வளவு பக்திதான் இச்சுயநலமிகளுக்குண்டென்று நான் கூசாமல் கூறுவேன். இந்தியாவில் செய்ததுதானே! ஏன் காந்தி பெயரை வைக்கக்கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். இந்தியாவில் இருக்கும் கள்ளை புட்டியில் அடைத்து காந்திகள், 'சுதேசிகள்' சர்தார்கள் "உள்நாட்டுச் சரக்கு" எனக் கூறி விற்றால், அச்செய்கை எவ்வளவு யோக்யமானதோ அஃதே போன்றுதான் இக்காந்தி மார்க் சுருட்டுக்காரர்கள் செய்கையுமிருக்கிறது. காந்தி சுருட்டு, சிகரெட்டு பிடிக்கின்றாரா? இவைகள் உலக ஜனங்களுக்கு பொதுவாக நன்மையைத் தருவதா? முக்காலுமில்லை. சாராயம் கள்ளைப் போல் சுருட்டு பீடிகளும் லாகிரி வஸ்துக்களின் இனத்தைச் சார்ந்தன.

---

### காக்ஸ் அண்ணன்

சென்னை கலெக்டராயிருந்த ஸ்ரீ காக்ஸ் கள்குடி விசேஷத்தைப்பற்றி முன்பு ஒரு அருமையான பிரசங்கம் செய்ததை நண்பர்கள் அறிவார்கள். அச்சமயம் ஒரு உபதேசம் செய்தார். கள்ளுக் கடைகளை மட்டும் மறியல் செய்வானேன்; விபசார விடுதிகளையும் ஏன் மறியல் செய்யக்கூடாது? என்று கேட்டார். பெஷாவரில் விபசார விடுதிகள் மறியல் மும்முரமாயிருக்கிறது. ஆனால் அங்குள்ள மாஜிஸ்திரேட் அப்படிச் செய்வது சட்ட விரோத மென்று உத்தரவிட்டிருக்கிறார். காக்கம் சர்க்கார் கோஷ்டிதான். பெஷாவார் மாஜிஸ்திரேட்டும் சர்க்கார் கோஷ்டிதான். காக்ஸ் சொல்லிய உபதேசத்தை அவர் அண்ணன் ஏன் சட்ட விரோத மென்று சொல்லுகிறார்? இதிலிருந்து ஒன்று நிச்சயமாகிறது. எந்த மறியலையும் இந்த சர்க்கார் கோஷ்டி விரும்பவில்லை. கள்ளுக்கடை மறியல் செய்தால் தான் சர்க்கார் வரும்படி குறையுமென்று சொல்லலாம். விபசார விடுதிகளை மறியல் செய்தால் சர்க்கார் கோபங் கொள்ளுவானேன்? காங்கிரஸ் இஷ்டப்படி செய்கிறதா என்ற அகம் பாவத்தைத்தவிர வேறு எந்தக் காரணமும் கிடையாது.

### எச்சரிக்கை.

"ரெயினல்ட்ஸ் வீக்லி" என்ற மற்றொரு பிரிட்டிஷ் பத்திரிகை பலமாய் எச்சரிக்கை செய்கிறது. "பிரிட்டிஷ் ஆதிக்கம் விடுபட்டு சுதந்திரமடைய வேண்டுமென்று இந்தியா கேட்கிறது. இதில் நடுவழி ஒன்றுமில்லை. இந்தியா கேட்கிறபடி பிரிட்டன் உதவி செய்தால், மறுபடியும் இந்தியரின் நல்லெண்ணத்தைப் பெற்று, இந்தியாவில் வர்த்தகமும் செய்யலாம். இல்லாவிடில் ஏகாதிபத்தியத்தின் இணையில்லா மாணிக்கத்தை (இந்தியாவை) இழக்க நேரிடும்."

---

## மகாத்மா—ஹோர் சந்திப்பு

வங்காளத்தில் சர்க்கார் கையாண்டுவரும் அடக்குமுறைகளை கண்டித்து மகாத்மா ஐக்கிய ஆட்சி மகாநாட்டில் பேசினார். தம்மிடம் இருக்கும் தஸ்தாவேஜிகளை காட்டுவதாகவும், தமது ஆபீசுக்கு வரவேண்டுமென்றும் இந்தியா மந்திரி மகாத்மாவை கேட்டுக்கொண்டார். மகாத்மா அதன்மீது அவர் ஆபீசுக்கு சென்று பேசினார். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வந்திருக்கும் பயமுறுத்தல் கடிதங்களை மகாத்மாவிற்கு இந்தியா மந்திரி காட்டினார். இதைப்போலவே தமக்கும் கடிதங்கள் வந்திருப்பதாகவும், புரட்சி இயக்கத்தின் பலத்தை தாமும் அறிவதாகவும் மகாத்மா சொன்னார். புரட்சிக்காரருக்கு உண்மையான தேசபக்தி இருப்பதாக மகாத்மா எடுத்துக் கூறினார். ஒத்துழையாமை இயக்கத்திற்கும், அஹிம்சா தர்மத்திற்கும் கொஞ்சக் காலம் கொடுத்து பார்க்கும்படி தாம் புரட்சிக்காரரை கேட்டுக் கொண்டபோது, அவர்கள் சம்மதித்து அப்படி தங்கள் செய்கைகளை நிறுத்திவைத்திருந்ததையும் மகாத்மா எடுத்துக்கட்டினாராம். மகாநாடு லண்டனில் வெற்றிகரமாய் முடியாமல் இருப்பதைக் கண்டே மறுபடியும் புரட்சி இயக்கம் தோன்றியிருப்பதாகவும் மகாத்மா சொன்னார்.

Koviloor Digital Library



## மின் வெட்டு

### பழைய வாக்குறுதிகள்

"முன்னால் இந்தியாவிற்கு கொடுத்த வாக்குறுதிகளை மீற பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு அதிகாரம் கிடையாது" என்று "ஸ்பெக்டேட்டர்" சொல்லுகிறது. மீறி நடந்தால் அவர்களை கேட்பதோ தண்டிப்பதோ யார்? அம்மாதிரி கேட்பதற்கு ஒரு கோர்ட் இல்லாதவரையில் பிரிட்டிஷ் சர்க்கார் என்ன செய்தால் தான் யார் என்ன செய்ய முடியும்?

### சுதேசி பிரிட்டன்

பிரிட்டனில் சுதேசி பிரசாரம் பலமாய் இருக்கிறது. "பிரிட்டிஷ் சாமான்களை வாங்குங்கள்" என்ற சுவரொட்டி விளம்பரங்களை 40 லட்சம் அச்சடித்து ஒட்டியிருக்கிறார்கள். ஆகாயக் கப்பல்களிலும், மோட்டார் வண்டிகளிலும் இதை வர்ணம் தீட்டியிருக்கிறார்கள். "வேலையில்லா கஷ்டத்தை போக்கவேண்டுமானால் பிரிட்டிஷ் சாமான்களை வாங்குங்கள்" என்று பிரசாரம் செய்கிறார்கள். பிரிட்டன் சுதேசியாக மாற வேல்ஸ் இளவரசர் முதல் கீழே கூலிக்காரன் வரை பிரசாரம் செய்கிறார்கள். இப்படிச் செய்வது நியாயமா; இது பிறநாட்டார் மீது துவேஷத்தை உண்டுபண்ணாதா என்ற கேள்விகள் பிறக்கின்றன. இல்லையென்றால் இந்தியாவில் சுதேசி பிரசாரம் மட்டும் எப்படி குற்றமாகும்? சுதேசி பிரசாரகர்களை 153, 108-வது பிரிவுகளின்படி தண்டிப்பது எப்படி யோக்கியமாகும்? பிரிட்டன் எப்படி பிரிட்டிஷாருக்கோ, அது மாதிரி இந்தியா இந்தியருக்கல்லவா?

### மகாதேவய்யர் சண்டித்தனம்

சோமாதேவி குருகுலப்பணம் போதாதென்று திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் பணத்தையும் ஏப்பம் போட மகாதேவய்யர் முயற்சிக்கிறார். ஸ்ரீ திருகூடசுந்தரம் பிள்ளையிடம் வாங்கிய காங்கிரஸ் பணத்தில் ரூ. 1200 வரை இன்னும் திருப்பிக்கொடுக்காமல் சண்டித்தனம் செய்கிறார். இதற்காக அவர் சொத்துக்களை ஜப்தி செய்வதென்று திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. இந்த மகாதேவரைப்பற்றி நண்பர்கள் அறிந்திருக்கலாம். சோமாதேவி குருகுலத்திற்காக மலாய் நாட்டில் பணம் வசூலித்தவர் இவரே. திருநெல்வேலி ஜில்லா காங்கிரசில் காரியதரிசியாயிருந்து, 1922-ல் நடந்த ஜவுளிக்கடை மறியலை அக்கிரமமாய் நிறுத்தியவர் இவரே. அந்தக் காலத்தில், சுயராஜ்யம் கிடைத்தாலொழிய மயிர் களைவதில்லையென்று சொல்லிக் கொண்டு தாடி வளர்த்து வந்தார். அவர் தாடி இப்பொழுது என்ன கதியாயிற்று என்பது நமக்குத் தெரியாது. இவ்வளவெல்லாம் தடபுடல் செய்த ஒருவர், காங்கிரஸ் பணத்தை கொடுக்க முடியாதென்று சண்டித்தனம் செய்வது பெரிய அயோக்கியத்தனமாகும்.

---

### கார்டு கவர்களின் விலை

1931-ம் வருஷம் டிசம்பர் மாதம் 15-ந் தேதி முதல் உள்நாட்டு தபால் கடிதங்களின் கட்டண விகிதங்களையும், தந்தி மணி ஆர்டர் விகிதங்களையும் அதிகப்படுத்தியிருக்கின்றனர். 2½ தோலா எடைக்கு அதிகப்படாத கடிதங்களுக்கு ஒரு அணா மூன்று தம்பிடியாகவும், இதற்கு மேல் பட்ட ஒவ்வொரு 2½ தோலா நிறைக்கும் இதே விகிதமாகவும் உயர்த்தியுள்ளனர். தபால் கார்டின் விலை 9 தம்படி. ரிப்ளைகார்டின் விலை 1½ அணா; போதுமான ஸ்டாம்பு ஒட்டாத தபால்கார்டை தபாலில் போட்டால் அதை கார்டில் கண்டுள்ள விலாசத்திற்கு அனுப்பமாட்டார்கள்; ஆனால் கிழித்தெறிந்து விடுவார்கள். தந்தி மணியார்டர்களுக்கு ஏற்கனவேயுள்ள விகிதத்திற்குமேல் 2 அணா விதம் வசூல் செய்வார்கள்.

---

### வங்காளத்திற்கு புதிய தொல்லை.

நாம் அச்சுக்குப் போகும் போது ஒரு பயங்கரமான செய்தி வந்திருக்கிறது. வங்காளத்திற்காக வைசிராய் புதிய அவசரச் சட்டம் ஒன்றை செய்திருக்கிறார். அதன்படி யாரையும் கைது செய்யலாம். யார் சொத்தையும் சர்க்கார் கேட்டால் கொடுத்து விடவேண்டும். யாரையும் எதுவும் செய்யும்படி சர்க்கார் கட்டாயப்படுத்தலாம். கொலை செய்ய முயற்சி செய்தால் கூட மரண தண்டனை விதிக்கலாம். விசேஷ கோர்ட் தண்டனைகளை உறுதி செய்ய வேண்டுமென்ற அவசியமும் இல்லை.

Edited, Printed & Published by T.S. Chockalingam, at Lakshmi Press, 2,Coral Merchant St. Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 செண்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.


ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3

சென்னை, 1931 டிசம்பர் 5வ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 20வ சனிக்கிழமை

இதழ் 11

## புலி பூனையாயிற்று




வட்ட மேஜைச் சர்க்கசில் பிரதம மந்திரி காட்டப்போகும் புலி அதிசயமான பிறவி என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? அவர் சர்க்கசில் புலி வரவில்லை, ஒரு சாக மாட்டாத பூனைக் குட்டி வந்தது! எல்லோரும் ஏமாந்தார்கள்.

Koviloor Digital Library



# குதிரை முட்டை.

வட்டமேஜை மகாநாட்டு விஷயம் குதிரை முட்டை வாங்கப்போன கதையாக முடிந்தது. பரஸ்பரம் கலந்து பேசி சுயராஜ்யம் கொடுத்து விடுவதாக மகாநாட்டை கூட்டினார்கள். இந்தியாவிற்கு அவசியமாய் வேண்டிய பாதுகாப்புகளோடு பொறுப்பாட்சி கொடுப்பதாக சொன்னார்கள். அந்த அடிப்படையின் மீதே காந்தி—இர்வின் சமரசம் ஏற்பட்டது. இப்பொழுது என்ன ஏற்பட்டிருக்கிறது தெரியுமா? பிரதம மந்திரி மிகுந்த ஆர்ப்பாட்டத்தின் மேல் வெளியிட்ட அறிக்கையில் என்ன இருக்கிறது தெரியுமா? பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. ஜனவரி மாதம் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையை மறுபடியும் இப்பொழுது ஊர்ஜிதப்படுத்தி யிருக்கிறாராம். அதுவே பெரிய வெற்றி என்று சில புத்தியில்லாத மிதவாதிகள் சொல்லுகிறார்கள். அந்த அறிக்கையில் ராணுவம், பணம், வெளிநாட்டு சம்பந்தம் மூன்றிலும் இந்தியருக்கு அதிகாரம் கிடையாதென்று சொன்னார். அதையே இப்பொழுது ஊர்ஜிதப்படுத்தினார். இதற்கு மகாநாடு எதற்கு? பேச்சு எதற்கு?

ஜனவரி மாதம் விடுத்த அறிக்கை தொழிற்கட்சி சர்க்கார் செய்ததாம். ஆகையால் மற்ற கட்சிகளை கட்டுப்படுத்தாதாம். இப்பொழுது கூட்டுக் கட்சிகள் சர்க்கார் இதை ஊர்ஜிதப்படுத்தி யிருப்பதால், சகல கட்சிகளையும் கட்டுப்படுத்துமாம். ஆகவே இது பெரிய வெற்றி என்று மிதவாதிகளில் சிலர் சொல்லுகிறார்கள். இவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தை மறந்து விட்டார்கள். மூன்று கட்சிகளும் சேர்ந்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், அவர்களை யார் கட்டாயப்படுத்த முடியும்? இதற்கு முன்னால் பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டார்களே, அதற்கு யாரால் என்ன செய்ய முடிந்தது? இந்த விஷயம் மிதவாதிகள் மூளையில் நுழையவில்லை.

இனி சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்? வட்டமேஜை மகாநாட்டின் இரண்டாவது கூட்டம் முடிந்து விட்டது. ஆனால் விவகாரம் முடியவில்லை. வட்டமேஜை மகாநாடு போன்ற பெரிய கூட்டங்களால் விவகாரங்களை ஆராய்ந்து முடிவு செய்ய முடியாதாம். ஆகவே இந்தியாவில் வட்டமேஜை மகாநாட்டிற்கு ஒரு காரியக் கமிட்டியை நியமித்து, வேறு மூன்று கமிட்டிகளையும் நியமித்து விவகாரங்களை அலசிப்பார்க்கப் போகிறார்களாம். இந்த வேலை எந்த யுகத்தில் முடியுமோ கடவுளுக்கே தெரியும். ஐக்கிய ஆட்சி என்பது ஒன்றிரண்டு மாதங்களில் அடைவது முடியாத காரியம் என்று பிரதம மந்திரி சொல்லுகிறார். ஆகவே பல வருஷங்கள் சென்றாலும் செல்லலாம். இதன் முடிவு என்னவென்றால், சுயராஜ்யம் இப்பொழுது இல்லை. இது தெளிவாய் விட்டது.

மாகாண சுயாட்சி கொடுத்து தலைமை சர்க்காரில் பொறுப் பாட்சி கொடுப்பதை ஒத்திப் போட முதலில் சூழ்ச்சி செய்தார்கள். அதை முஸ்லிம்கள் உள்பட சகலரும் எதிர்த்தபடியால் அந்த யோசனையை பிரதம மந்திரி விட்டு விட்டார். ஆனால் பிரித்தாளும் சூழ்ச்சியை அவர் விடவில்லை. எல்லைப்புற மாகாணத்தை கவர்னர் மாகாணமாகவும், சிந்துவை தனி மாகாணமாகவும் செய்யப் போவதாக சொல்லுகிறார். மற்ற விஷயங்களை யெல்லாம் முடிவு செய்யாமல் ஒத்திப் போடும் போது, இவற்றை மட்டும் இப்பொழுது தெரிவிக்க வேண்டிய அவசியமென்ன? அதுவே முஸ்லிம்களை தட்டிக் கொடுக்கும் பிரித்தாளும் சூழ்ச்சி.

மன்னர்கள் ஐக்கிய ஆட்சியில் சேர ஆட்சேபனைகள் சொல்லி காலங் கடத்தி வந்தால், அதை எப்படி முடிவு செய்யப் போகிறார்கள்? எல்லாவற்றையும் கவனித்தால், சுயராஜ்யம் கொடுப்பதை ஒத்திப் போடும் ஏமாற்று வித்தையாக இருக்கிறதே யொழிய, உண்மையான நோக்கத்தோடு இருப்பதாய் தெரியவில்லை.

வங்காளத்தில் ராணுவச் சட்டத்திற்கும் கேவலமான அவசரச் சட்டம் தாண்டவமாடுகிறது. ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் படும் துன்பம் சகிக்கக் கூடியதாயில்லை. கூர்ஜரத்தில் நியமித்த பார்டோலி கமிட்டி குட்டிக்கரணம் போட்டு விட்டது. நாடெங்கும் காங்கிரஸ்காரர்களை கைது செய்வதும், தண்டிப்பதும் வெகு வேகமாய் நடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தால், காந்தி இர்வின் ஒப்பந்தம் இன்னம் இருக்கிறதா அல்லது தொலைந்து போயிற்றா என்ற சந்தேகம் வருகிறது. வட்டமேஜை மகாநாட்டிற்காக காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. வட்டமேஜை மகாநாடு சுயராஜ்யம் கொடுக்கவில்லை. இனி செய்ய வேண்டியது என்ன? மகாத்மா கட்டளையை எதிர்பார்க்கிறோம்.

Koviloor Digital Library



# மின்வெட்டு

## லங்காஷயர் கூச்சல்

மறுபடியும் இந்தியாவில் பகிஷ்காரம் ஆரம்பிக்காமல் இருக்க வேலை செய்யவில்லையே யென்று லங்காஷயர் பார்லிமெண்ட் அங்கத்தினர் கூச்சல் போடுகிறார்கள். சுயராஜ்யத்திற்காக மறுபடியும் சண்டை போடாமல் இருக்க பிரிட்டிஷ் ஜனங்கள் முயற்சி செய்தார்களா? அவர்கள் மந்திரிகளை சுயராஜ்யம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினார்களா? இல்லை. அப்படியிருக்க, பகிஷ்காரம் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? வினை விதைத்தால் வினையை அநுபவித்து தானே தீரவேண்டும்?

## உலக்கை கொழுந்து.

ஸ்ரீ. அபர்குரோம்ப் என்பவர் பம்பாய் வெள்ளையர் சங்கத்தலைவர். அவர் ஒரு ஆச்சரியமான விஷயத்தை கண்டு பிடித்திருக்கிறார். அதாவது மாண்டேகு சீர்திருத்த மாகிய தற்கால சர்க்கார் அமைப்பு பயனற்றதாம். இதைக்கண்டு பிடிக்க இந்த பிரகஸ்பதிக்கு 11 வருஷங்கள் வேண்டியிருந்தன. மாண்டேகு சீர்திருத்தம் உபயோக மற்றது என்று தெரிந்துதான் காங்கிரஸ்காரர் அதை பகிஷ்கரித்தார்கள். போகட்டும், இவ்வளவு காலம் கழித்தாவது அபர்குரோம்ப் மூளையில் இந்த உண்மை உதயமானதற்காக நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனால் அவர் சொல்லும் மற்றொரு விஷயத்தைப் பார்க்கும் போது அவர் மூளை இன்னம் சுத்தம் பெறவில்லை யென்றே தோன்றுகிறது. பூர்ண சுயராஜ்யம் கொடுத்து விட்டால் வகுப்புச் சண்டைகள் அதிகமாகும் என்பது அபர்குரோம்பின் சித்தாந்தம். அரை குறை சுயராஜ்யம் தான் மாண்டேகு சீர்திருத்தம். அது அரை குறையாய் இருந்ததால்தான் அதை இந்தியர் பகிஷ்கரித்தனர். அந்த உண்மையை அறிய அபர்குரோம்பிற்கு இவ்வளவு காலமாய் விட்டது. மறுபடியும் அரை குறை சுயராஜ்யம் கொடுத்தால் திரும்பவும் அந்த தொல்லை ஏற்படாதா? இது ஏன் அபர்குரோம்ப் மூளையில் ஏறவில்லை? அவர் மூளை உலக்கை கொழுந்தாய் இருக்கிறது!

## இரும்பு கை

சென்னை வெள்ளையர் சங்கத்திற்கு ஆட்டமில்லாத சுமாரான திட்புத்தி இருக்குமென்று நம்பினோம். அவர்களுக்கும் ஆட்டம் வந்துவிட்டது. சென்னை சர்க்கார் உள்நாட்டு மந்திரியை பேட்டி காணப் போகிறார்களாம். மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்பித்தால் சர்க்கார் "இரும்புக் கை" காட்டவேண்டுமென்று சொல்லப் போகிறார்களாம். வெள்ளையர் எவ்வளவு கெட்டிக்காரர்களாயிருந்தாலும் ஒரு குறை அவர்களிடம் இருக்கிறது. அதுவே ஞாபகமறதி. முன்னால் நடந்ததை மறந்து விடுகிறார்கள். பழைய படிப்பினைகளை மறந்து விடுவதால் மறுபடியும் மறுபடியும் புதிதாக பாடம் கற்க வேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலும், அயர்லாந்திலும் அவர்கள் கற்ற பாடத்தை மறக்காமல் இருந்தால், இந்தியர் சுயராஜ்யத்திற்காக கஷ்டப்படவோ போராடவோ வேண்டியிருக்காது. அவர்கள் ஞாபக மறதிக்காக நாம் கஷ்டப்பட வேண்டியது காலத்தின் கோலம் போலும். நாம் சுயராஜ்யத்திற்காக எவ்வளவு கஷ்டப்படுகிறோமோ அதைப்போல, அவர்கள் ஞாபகமறதிக்காக அவர்களும் நஷ்டமடைவார்கள். அது பிற்கால சங்கதி. அதை அவர்களால் அறிய முடியாவிட்டால் நாம்தான் என்ன செய்ய முடியும்? உள்நாட்டு மந்திரி "சரி, இரும்புகை தயாராக இருக்கிறது" என்று தலையாட்டுவார். இதில் சந்தேகமில்லை. ஆனால் எத்தனை இரும்புகைகள் சேர்ந்தாலும் சுயராஜ்யத்தை நிறுத்திவிட முடியுமா என்று வெள்ளையரை கேட்கிறோம்.

## மகாநாடு முடிந்த காட்சி.

மகாநாடு முடிவுற்றதும் பிரதம மந்திரி எழுந்து மகாத்மாவிடம் சென்று அவர் கைகளை பிடித்துக் கொண்டார். இருவரும் சில வினாடிகள் ஒருவரை ஒருவர் இமைகொட்டாமல் பார்த்தனர். பின்பு மெதுவான குரலில் இருவரும் பேசினர். பிரதம மந்திரி அதன்பின்பு மற்ற பிரதிநிதிகளிடம் ஒவ்வொருவராய் விடைபெற்றுக்கொண்டார். மகாநாடு முடிந்ததும், ஸ்ரீமான்கள் மாளவியா, சாப்ரூ, ஜெயக்கார், சாஸ்திரி, ஜமால் முகமது சாகிப், பிர்லா, தாகூர்தாஸ், முதலிய பிரபலஸ்தர்கள் மகாத்மா ஜாகையில் கூடி, பிரதம மந்திரி அறிக்கையை விவாதஞ் செய்தனர். அச்சமயம் மகாத்மா தமது அபிப்பிராயத்தை கூறவில்லை.

Koviloor Digital Library



# மகாத்மா கடைசி எச்சரிக்கை.

வட்டமேஜை மகாநாடு செவ்வாய்க்கிழமை முடிந்தது. திங்கட்கிழமை இரவு 12—5க்கு மகாத்மா பேச ஆரம்பித்தார். முதல் மந்திரி உள்பட பல மந்திரிகள் மகாத்மா பேச்சை நேரில் கேட்க ஆசை கொண்டனர். இந்தியாவைப்பற்றி யோசிக்க மந்திரி சபைக் கூட்டம் அன்று இரவு நடந்தபடியால், மகாத்மா பிரசங்கத்தை தாங்கள் கேட்க சௌகரியமாயிருக்கும்படி மகாநாட்டை கால் மணி நேரம் ஒத்திவைக்க முதல் மந்திரி கேட்டுக்கொண்டார். 11—45க்கு மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. முதல் மந்திரி மற்ற மந்திரிகளோடு நேரே மகாநாட்டிற்கு வந்தார். மகாத்மா 12—5க்கு பிரசங்கம் ஆரம்பித்தார். 70 நிமிஷங்கள் வரை பேசினார். அச்சமயம் அவர் பேசிய பேச்சு மிக உயர்ந்ததாகவும், ஆணித்தரமாகவும், கம்பீரமாகவும் இருந்ததாக நேரில் கேட்டவர்கள் சொல்லுகிறார்கள். அதை கீழே வெளியிடுகிறோம்:—

இந்தியா முழுவதற்கும் காங்கிரஸ் ஒன்றே உண்மையான பிரதிநிதித்வ ஸ்தாபனமாகும். அது சகல மைனாரிட்டிகளுக்கும் பிரதிநிதித்வம் வகிக்கிறது. போட்டி சர்க்காரை காங்கிரஸ் நடத்துகிறதென காங்கிரஸ் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். புரட்சி உணர்ச்சியை காங்கிரஸ் குறிக்கிறதென்பது உண்மையே. சமாதான வார்த்தைகள் மூலம் பிரிட்டன் இணங்குவது, பிரிட்டனின் மதிப்பை அதிகரிக்கும். புரட்சிக்காரர்களை நானோ அன்றி காங்கிரஸோ ஆதரிக்க வில்லை. கல்கத்தா மேயர் தேசபக்திக்காக போதிய கஷ்ட ஈடுகொடுத்திருக்கிறார். சட்டமறுப்பு மூலம் மிகவும் மகத்தான கஷ்டங்களுக்கு இந்தியாவின் கோடிக்கணக்கான ஆண் பெண், சிசுக்களை ஆளாக்க முடியாமல் தடுக்க நான் கௌரவ சமாதானத்திற்கான முறைகள் ஏதாவதிருக்கிறதா என்று மன்றாடி பாடுபட்டு பார்ப்பேன். ஆனால் சட்ட மறுப்பு தான் வழி என்றேற் பட்டால் அதையே சந்தோஷத்துடன் கைக்கொள்ளுவேன். எவ்வித பெயரால் அழைத்தாலும் சரி. நான் வேண்டுவது உண்மை சுயேச்சை. சிநேக பாவத்துடனிருக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்கவே நான் வந்துள்ளேனேயன்றி, இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள சம்பந்தத்தை துண்டிக்க அல்ல. ஆனால் அச்சம்பந்தம் விடுதலையே அடிப்படையாகக் கொண்ட கூட்டு முறையிலேயே இருத்தல் வேண்டும். பிரஸ்தாப "பாதுகாப்புகள்" இந்தியாவை அடிமையிலாழ்த்துவதாகவே இருக்கும். நிதி 'பாதுகாப்பு'களோ இந்தியாவை நசுக்கிப் பிழிவதாக இருக்கின்றன. இந்தியாவின் நன்மைக்காகவே "பாதுகாப்பு"களிருக்குமென்று ஏற்கனவே காங்கிரஸிற்கு உறுதிமொழி கொடுத்திருக்கின்றனர். இந்தியாவிலோ, அன்றி இங்கிலாந்திலோ அதிக்கிரமமாக அனுபவித்துவரும் இனங்கள் அடியோடு ஒழியவேண்டும். ஒற்றுமை அதிக மேற்பட்டிருக்கிறதென்று ஸ்ரீமான்கள் சாப்ரூ ஜெயகார் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். உண்மை விஷயங்கள் பற்றி நமக்குள் அபிப்பிராய பேதமேற்பட வில்லை. மிகவும் திக் பிரமையளிக்கும் பிரச்னைகள் இருக்கின்றனவென்பதை நான் அறியாமலில்லை. எனினும் நான் சமரசமேற்படுத்தி விடலாமென நம்பியிருக்கிறேன். சட்ட மறுப்புதான் மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென்பது என் விருப்பமல்ல. தற்போது நிலவும் ராஜியை, நிரந்தர சமாதானமாக மாற்றிவிட வேண்டுமென்பது எனது பேரவா. யாவற்றிற்கும் நம்பிக்கையே அவசியம். காங்கிரஸ் என்னைவிட மகத்தானது. மைனாரிட்டி பிரச்னை சமரச மேற்படாதவரை இந்தியாவில் சுயராஜ்ய மேற்படுவதற்கில்லை. ஆனால் சமரசமேற்படுத்தி விடலாமென்றே நான் நம்புகிறேன். அந்நிய ஆட்சி இருக்கும்வரை இவ்விஷயத்தில் சமரச மேற்படுவது துர்லபம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்திற்கு முன் இந்தியாவில் இவ்வித பிரச்னையே இல்லை. தற்போதும் கூட கிராமாந்திரங்களில் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக சகோதரர்கள்போல் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். சமஸ்தான பிரஜைகளுக்கு மூலாதார உரிமை வழங்குவதன்றி சமஸ்தானங்களில் பிரதிநிதி ஆட்சி முறையை மன்னர்கள் புகுத்துவார்களென நம்பி இருக்கிறேன். ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தின் அரசியல் திட்டப்படி மன்னராக இருப்பது போல் இந்திய மன்னர்களும் சமஸ்தானங்களில் விளங்க வேண்டுமென நான் விரும்புகிறேன். காங்கிரஸ் விரும்பும்படி செய்ய முடியுமாயின், எல்லைப்புற மாகாணத்திற்கு உடனே மாகாண சுயாட்சி அளித்து விடும். அனுமதி யளிப்பின், நான் பூரணமாக ஒத்துழைக்க சித்தமாயிருக்கிறேன். என்பால் மரியாதையும் பொறுமையும் காட்டியதற்காக பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் சகல பிரதிநிதிகளுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல்லாயிரக்கணக்கானவர்களின் மேலான நட்புடன் நான் இந்தியா திரும்புகிறேன்.

Koviloor Digital Library



## வங்கத்தில் அடக்குமுறை.

கல்கத்தா "லிபர்ட்டி" எழுதுகிறது:—

'யானைவரும் பின்னே, மணியோசைவரும் முன்னே! 1920ம் ஆண்டில் அயர்லாந்தில் கொடிய அடக்குமுறைகள் கையாளப்படுகையில், அந்நாட்டு லார்டு லெப்டினென்டுக்கு கூட்டுக்காரியதரிசியாக இருந்த சர். ஜான் ஆண்டர்ஸன் என்பார் வங்கக் கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பது தற்செயலான நியமனமல்லவென்றே தோன்றுகிறது. காந்திஜியை வெறுங்கையாகத் திருப்பி அனுப்பிய பின் எதிர்கால இந்திய அரசாங்கத்தை நடத்தும்பொருட்டு தீவிரமாக யோசித்து அமைக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பாகமாகவே இந்நியமனம் உளது. வங்க அவசரச் சட்டத்தை ரத்து செய்ய ஸர் ஸாமுவேல் ஹோர் மறுத்ததும், ஸர் ஜான் ஆண்டர்ஸன் நியமனமும், கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக உதவி இந்திய மந்திரி லார்டு லோதியன் வெளியிட்ட வாக்குறுதியும், இந்தியாவுக்கும் நமது ஏகாதிபத்தியத்துக்கும் நலன்விளைவிப்பதென ஐரோப்பியர்கள் எண்ணுவதைச்செய்து முடிக்கப் போவதாக வில்லியர்ஸ் பயமுறுத்தியதும் வேவ்வேறான ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத சம்பவங்களல்ல. காந்திஜி வெறுங்கையுடன் அனுப்பப் படப்போவதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் இச்சம்பவங்கள் இந்திய வானத்திலுள்ள கருமேகங்களைக் காட்டுவதாகும். வங்காளத்திலும், இந்தியாவில் இன்னும் சில பாகங்களிலும் சாதாரணச் சட்ட நிர்வாகத்தை மறையச் செய்திருக்கும் வங்க அவசரச் சட்டத்தையும் மற்ற அவசரச்சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டுமென காமன்ஸ் சபையில் ஒரு யோசனை வெளியிடப்பட்ட பொழுது, வங்கப் புரட்சி இயக்கம் தணியவில்லையென இந்தியா மந்திரி கூறினாராம். இங்ஙனம் அவர் ஒப்புக்கொண்டது குறிப்பிடத் தக்கதாகும். வங்கத்தில் சுமார் ஆயிரம் பேர்களை கைது செய்து விசாரணையின்றி சிறையிலடைத்தும் அதனால் புரட்சி இயக்கம் சிறிதும் தணியவில்லை யானால் அது எதைக் காட்டுகின்றது?

காந்தி-இர்வின் ஒப்பந்தத்துக்கு அடிப்படையாக விளங்கும் வேலை முறையை கடைசி வரை சர்க்கார் பின்பற்றி நடப்பதொன்றே இந்தியாவில் அமைதியும், சமாதானமும் நிலை நாட்டத் தக்க வழியாகும். சர்ச்சில் யோசனையை ஏற்பின் நாட்டில் அயர்லாந்தைப்போல் அடக்குமுறைகளைக் கையாள்வதும், இறுதியில் அந்நாட்டில் விளைந்த பலனை இங்கும் அனுபவிப்பதும் திண்ணம். சர்ச்சில் கூறும் அடக்குமுறைகளைக் கையாண்டதன் மூலம் அயர்லாந்து தனது சுயநிர்ணய உரிமையை அடைவதினின்றும் அதைத்தடுக்க முடியவில்லை. அவைகளால் இந்தியாவையும் தடுக்க முடியாது.

## ஐக்கிய மாகாணத்தில் வரி மறுப்பு

(சர்தார் பட்டேல்)

ஐக்கிய மண்டலத்தில் வரிகொடா இயக்கம் ஆரம்பித்தது சிம்லா ஒப்பந்தத்தை மீறியதாகுமென்று கூறுவதை நான் நிராகரிக்கின்றேன். சிம்லாவில் சமரசப் பேச்சு நடந்த காலத்தில் ஐக்கிய மண்டலத்தில் ஏற்பட்டதுபோல் நிலைமை ஏற்படக் கூடுமென்று நாங்கள் எதிர் பார்த்தோம். காங்கிரஸ் பிரதிநிதியான மகாத்மா காந்திக்கும் சர்க்காருக்கும் இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசனை நடந்தது. ஆகஸ்டு மீ 27ந் தேதி மகாத்மா காந்தி சிம்லா ஒப்பந்தமாக சர்க்காருக்கு எழுதிய கடிதத்தில் இந்த விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். மகாத்மா அக்கடிதத்தில் எழுதியதாவது:—"ஏதாகினும் பெரிய குறை ஏற்பட்டு, விசாரணை இல்லாமற் போகவும், அக்குறையை தற்காப்பு முறையில் நேராக நடவடிக்கை எடுத்துக் கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டியது காங்கிரஸின் கடமையாகுமானால், சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திய போதிலும், அப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள காங்கிரஸிற்கு சுதந்திரம் இருக்கவேண்டும். நேராக நடவடிக்கை எடுத்துக் கொள்வதைத் தவிர்த்து, கலந்து பேசுதல், அறிவுறுத்தல் முதலிய நடவடிக்கைகள் மூலமாக நிவாரணம் தேட காங்கிரஸ் முயற்சி செய்யுமென்று நான் சர்க்காருக்கு உறுதி கூறுவேன். தப்பான அபிப்பிராயம் ஏற்படுவதையோ காங்கிரஸ், நம்பிக்கை துரோகம் செய்ததென்று கூறுவதையோ தடுக்க காங்கிரஸின் நிலைமையைத் தெரிவிக்க வேண்டியது அவசியமானது." சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திய போதிலும், தற்காப்புமுறையில் நேராக நடவடிக்கை எடுத்துக் கொள்ள காங்கிரஸிற்குள்ள உரிமையை சர்க்கார் தங்கள் பதிலில் மறுக்கவில்லை. காங்கிரஸைப் பொறுத்தவரையில் இன்னும் சமரசத்திற்கு ஆயத்த

Koviloor Digital Library



மாக விருக்கின்றோம். சமரசப் பேச்சின் முடிவு தெரியும் வரையில் ரெவினியு சிப்பந்திகள் வரி வசூல் செய்வதை சர்க்கார் நிறுத்திவைப்பார்களே யானால், வரி கொடுப்பதை நிறுத்தி வைக்கும்படி விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதாக நிறைவேற்றிய தீர்மானத்தை ரத்து செய்யும்படி நான் உறுதியாக ஐக்கிய மண்டல காங்கிரஸ் கமிட்டிக்கு அறிவுறுத்துவேன். ஐக்கியமண்டல காங்கிரஸ் கமிட்டி தலைவரான ஸ்ரீ. ஷெர்வானி ஒரு ஜமீன்தாரவர். அப்படியே ஐக்கிய மண்டல காங்கிரஸ் கமிட்டியிலும், அலகாபாத் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலுமுள்ள பல உத்தியோகஸ்தர்கள் ஜமீன்தார்களாக விருக்கின்றனர். முன் பின் யோசனையின்றி அவர்கள் எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்பவர்களல்ல.

## மற்றோர் அவசரச் சட்டம்

ஐக்கிய மண்டலத்தில் வரி மறுப்பு ஆரம்பிப்பதைக் குறித்த பேச்சு பலமாயிருந்து வருவதால், இந்த வரி மறுப்பு இயக்கத்தை சமாளிப்பதற்கு தங்களுக்கு விசேஷ அதிகாரங்கள் வேண்டுமென ஐக்கிய மண்டல சர்க்கார் கருதுகிறது. எனவே இதன் சம்பந்தமாக இந்திய சர்க்காருடன் கலந்தாலோசித்து வருகிறார்களென்றும் நிச்சயமாகத் தெரிகிறது. வைஸிராய் நிர்வாகசபையாரோ இதன் சம்பந்தமாக முன்பே ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்து விட்டார்கள். அநேகமாக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படலாம்.

## மகாத்மா காந்தி

மகாத்மா காந்திக்கு மறுபடியும் ஜலதோஷம் பிடித்திருக்கிறது. இன்று 5உ காலை லண்டனை விட்டு புறப்படுகிறார். ஐரோப்பாவில் பல இடங்களுக்கு போய்விட்டு, இத்தாலியிலுள்ள பிரின்டிஸி என்ற துறைமுகத்தில் 14உ இந்தியாவிற்கு கப்பலேறுவார்.


## "காந்தி" மலர் 2

பைண்ட் செய்தது. தபால் செலவு உள்பட ரூ. 1-0-0 முன் பணம் அனுப்பவும்.

காந்தி ஆபீஸ்,
2, பவளக்கார தெரு, சென்னை.


# 1932-ன் பலன்

வங்காள ஜோசியரான ஸ்ரீ. புரஞ்சன் முக்கர்ஜி 1932-ம் வருடத்தைப்பற்றி பயங்கரமான ஜோசியம் சொல்லுகிறார். அதாவது:—

வருகிற 1932-ம் வருஷம் பிறக்கும் போது செவ்வாயும் சனியும் மகரத்திலேயே சேர்ந்திருக்கின்றன. அந்த சமயத்தில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட புளோடோ என்ற கிரகம் கடகத்திலிருப்பதால் இதற்கும் செவ்வாய் சனிக்கும் நேர் ஏழாம் பார்வையாக விருக்கிறது. இந்தக் கிரகங்களின் சக்தி உலக முழுவதிலும் உண்டாக்கக் கூடிய பலனை, விசேஷமாய் வங்காளக்குடாக் கடல், பர்மா, கிழக்கிந்தியா இவைகளில் காட்டும். கிழக்கிந்தியாவிலும் கல்கத்தா பர்மா இவ்விடங்களிலும் பயங்கரமான கொடுமைகளும், பலாத்காரச் செயல்களும் சொல்லொணா அக்கிரமங்களும் நடக்கும். இவை போதாவென்று பலத்த நஷ்டங்களை யுண்டாக்கப் பூகம்பமும் புயற்காற்றும் சேரும். பிரஸ்தாப வருஷ ஆரம்பத்தில் பூமண்டலத்துக்குச் சென்ற அக்டோபர் 11-ம் தேதி காலத்தில் சூரியக் கிரகணம் உண்டானதன் பலன் இன்னும் போய்விடவில்லை. அந்தக் கிரகணம் இந்தியாவில் தெரியாவிட்டாலும் வேறு தேசங்களில் தெரிந்தது. அப்போது யுரேனஸ் மேஷத்திலிருந்தது. இந்தியாவுக்குக் கடகம் உதய ராசியாகையாலும் மேஷத்துக்குக் கடகம் கேந்திரமாகையாலும் இந்தியாவுக்கு கெட்ட பலனைத் தருகிறது. ஆனால் புளோடோவின் கிரணங்கள் அபார சக்தியோடு வருகிறபடியால் ஒரு பெரிய கட்சி பலத்த அதிகாரமான ஸ்திதிக்கு வரும். மகா வாக்சக்தி வாய்ந்த தலைவர் ஒருவர் ஏற்படுவார். ஆனால் தேசம் முழுதும் குழப்பமும் அராஜகமும் கலகமுமாயிருக்கும். ஒரு கட்சி சமாதானம் செய்து கொண்டால் அதை நிர்த்தாட்சண்யமாய் மற்றக் கட்சிகள் வேண்டாம் என்று தள்ளிவிடும். ஒரு சமயம் ஒரு கட்சியோடும் மற்றொரு சமயம் வேறொரு கட்சியோடும் இங்கிலாந்து பேச்சுவார்த்தை நடத்துகையில், இந்தியாவே இங்கிலாந்துக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற ஸ்திதி உண்டாய்விடும். திபேத், கிழக்கிந்தியா, பர்மா இவ்விடங்களில் க்ஷீண ஸ்திதியை உண்டாக்கக்கூடிய வியாதிகள் சூறையாடும்:

Koviloor Digital Library



## சாஸ்திரியார் தவிப்பு

வட்டமேஜை மகாநாட்டின் முடிவில் கனம் சீனிவாச சாஸ்திரியார் தவித்த தவிப்பு பரிதாபமாயிருந்தது. மகாத்மாவைப்பார்த்து அவர் சொல்லியதாவது:—

"மகாத்மாவே! இனி எங்களுடன் சேரவேண்டியதே உங்கள் கடமை. இணையற்ற கீர்த்தியை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் செல்வாக்கோ நிகரற்றது. மனித மனிதசமூகத்தை ஆட்கொண்டு அவர்களை உயர்வாக்கும் உங்கள் ஆத்ம சக்தியின் பலத்தை உலகம் பூரா அறியும். இவ்வளவு பெரிய சக்திகளையும் தேசத்தின் நிர்மாணதிட்டத்திற்கு உபயோகிக்கக் கூடாதா? உங்களிடம் நம்பிக்கையும், பணிவு முள்ளவர்களை மறுபடியும் கஷ்ட நிஷ்டூர முள்ள பாதையின் வழியாக நடத்திச் செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படிச் செய்யவேண்டியது மறுபடியும் அவசியமில்லை யென்றே நான் நினைக்கின்றேன். இந்தியாவின் எதிர்கால நிலைமை உங்கள் கையிலேயே இருக்கிறது. வேறு எந்த இந்தியர் கையிலுமில்லை. எங்களால் கொஞ்சமாவது பிரயோஜன மேற்படும். எங்களை உங்களோடு சேர்த்து கொள்ளுங்கள். உங்களுடனும், உங்கள் மனதிற்கு உகந்தவர்களுடனும் நாங்கள் சேர்ந்து நமது ராஜீய அமைப்பை நிர்மாணிக்க காத்திருக்கிறோம். பிரிட்டிஷார் சில சமயங்களில் தவறு செய்வது வழக்கம். ஆனால் காலப்போக்கில் அவர்கள் நியாயத்திற்கு திரும்புவார்கள். இதுவே எனது அநுபவம். இன்று பிரிட்டிஷார் நல்ல மனப் போக்கில் இருக்கிறார்கள். அவர்களை இச்சமயம் விடக்கூடாது. வெற்றி நமதே."

கனம் சாஸ்திரியார் பிரிட்டிஷாரைப் பற்றி அறிந்த சரித்திரம் தவறானது. மேலும் பிரதம மந்திரி அறிக்கை ஏமாற்றமாயிருக்கும் என்பதை அவர் முன்னதாகவே அறிந்திருப்பதாய் தெரிகிறது. அதனால்தான் மறுபடியும் சட்ட மறுப்பில் இறங்கவேண்டாமென்று அவர் மகாத்மாவை கெஞ்சுகிறார். சாஸ்திரியார் பிரிட்டிஷாரின் தத்து புத்திரர். ஆகவே பிரிட்டிஷாருக்கு கஷ்டம் நேரிடாதபடி காக்க தவிக்கிறார். ஆனால் மகாத்மா இந்தியாவின் தகப்பனர். தமது குழந்தைகளுக்கு கஷ்டம் நேரிடாதபடி காக்கவேண்டியது தகப்பன் கடமையல்லவா? இதை ஏன் வலங்கிமான் சாஸ்திரி அறிய வில்லை?

## பிரியும் வழி

பிரதம மந்திரி இந்தியா சம்பந்தமான அறிக்கையை வாசித்து முடித்ததும், மகாத்மா காந்தி பதில் சொன்னார். அச்சமயம் அவர் பெசியதாவது:—

மகா நாட்டுத் தலைவராயும், மகா நாட்டின் விவாதங்களை மந்திரி சபைக்கு எடுத்துக் கூறுபவராயும் இரண்டுவித வேலைகளைப் பிரதம மந்திரி செய்துவந்திருக்கிறார். அவரது இரண்டாவது வேலையைப்பற்றி நான் ஒன்றும் பேசப் போவதில்லை; மகாநாட்டுத் தலைவராய் ஸ்ரீ மாக்டொனால்டு செய்துள்ள அபார வேலையையும் சலியாத உழைப்பையும் நான் பாராட்டுகிறேன். காலத்தை வீணாக்காமல் வேலை செய்யும் சுறு சுறுப்புத் தன்மையை நான் பிரதம மந்திரியிடம் கண்டேன்: இதை என் தேச மக்களுக்கு எடுத்துரைப்பேன். பிரதம மந்திரி இப்பொழுது வெளியிட்ட முக்கியமான அறிக்கையைக் குறித்து நான் எவ்வித அபிப்பிராயத்தையும் இப்பொழுது கூறவில்லை; அபிப்பிராயம் கூறும்படி நீங்கள் என்னை எதிர்பார்க்கமாட்டீர்கள். இந்த அறிக்கையை ஒன்றுக்கு மூன்று தடவைப் படித்து, அதன் உள் அர்த்தங்களையும் பிடிப்புகளையும் கண்டறிந்து, அதன் பிறகு தான் சர்க்கார் அறிக்கையைக் குறித்து அபிப்பிராயங் கூறலாம். ஆனால் நான் வந்தனோபசாரம் கூற வேண்டியதற்கு மற்றொரு காரண முண்டு. ஏனெனில் நாம் பிரியும் வழியை அடைந்து விட்டோம். நாம் வெவ்வேறு வழிகளில் பிரிந்து தனித்துப் போக வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டதாக நான் கருதுகிறேன். தனி வழியே போகவேண்டி யிருப்பினும் பாதக மில்லை. இதே காரணத்திற்காக வேனும் நான் தங்களுக்கு வந்தனோபசாரம் செலுத்த வேண்டும். ஆனால் வாழ்க்கையின் கானுறுகளை நாம்கடக்க வேண்டும். கஷ்டங்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ராஜி செய்து கொண்டு, கொள்கைகளைப் பறக்க விடக் கூடாது. வாழ்க்கையின் துன்பங்களையும் கஷ்டங்களையும் எதிர்த்து வெற்றி கொள்ள வேண்டியது மனித சுபாவத்தின் கௌரவத்திற் கேற்றதாகும்.

Koviloor Digital Library



## கடுகளவும் நம்பிக்கையில்லை

வங்காள அவசர சட்டத்தை பலமாகக் கண்டித்து மகாத்மா பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:—" புரட்சிக்காரர் செய்கைகளின் மூல வேர்களை களைய சர்க்கார் முயலவில்லை. சர்க்காரும் காங்கிரசும் ஒத்துழைப்பதற்கு இருந்த சிறிது நம்பிக்கையையும் இந்த அவசரச்சட்டம் பாழாக்கிவிட்டது. லண்டனிலே இப்பொழுது நடந்துவரும் சம்பவங்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எனது தாய் நாட்டில் நடந்துவரும் சம்பவங்களே எனது மனத்தை சஞ்சலப்படுத்தி வருகின்றன. "யானை வரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே" என்று ஓர் பழமொழி யுண்டு. இந்தியாவிலும், முக்கியமாக வங்காளத்திலும் நிலைமை மிகவும் மோசமாய் விட்டது. லண்டன் மகாநாட்டிலிருந்து திட்டமானபலன்கள் கிடைக்குமென்ற நம்பிக்கைகள் யாவும் பாழாய் விட்டன. சமீபத்தில் தோன்றியுள்ள அவசரச்சட்டத்தையே நான் குறிப்பிடுகின்றேன். பயங்கர புரட்சி செய்கைகளை அடக்குவதற்காக சர்க்காருக்கு எல்லையற்ற விசேஷ அதிகாரங்களை இச்சட்டம் அளிக்கின்றது. பயங்கர புரட்சி இயக்கம் சிறிது நிலவியிருப்பது உண்மையே. ஆனால் சென்றுபோன ஆண்டுகளின் அனுபவம், சர்க்கார் மிகுந்த கலவர மடைந்து விட்டனர் என்பதை எனக்கு நன்கு விளக்குகின்றது. ஐரோப்பியரது உயிருக்கு உலை வைப்பதாக அச்சுறுத்தும் சந்தர்ப்பங்கள் நேர்ந்த காலங்களில் எல்லாம், சர்க்கார் இவ்வாறு தடுமாற்ற மடைந்து கலவர மடைவது வழக்கம்தான். இத்தகைய பயங்கரச் செய்கைகளை நான் அருவருப்புடன் வெறுக்கிறேன். ஆனால் பயங்கர புரட்சி இயக்கத்தை அடக்குவதற்கு வேண்டிய அதிகாரங்களைவிட பன்மடங்கு அதிகமான, எல்லையற்ற அதிகாரங்களை அளித்திருக்கின்றனர். சாதாரண சட்டத்தின் கீழேயே சர்க்காருக்கு ஏராளமான அதிகாரங்கள் உள்ளன. சர்க்கார், அடிவேரைக்களைய முற்படாமல், மேலே தோன்றும் குறிகளை மட்டும் அடக்கவே முயற்சி செய்து வருகின்றனர். பயங்கரச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள புரட்சிக்காரர்கள், தங்களது செயல்களால் சுயேச்சை வந்துவிடுமென நம்புகின்றனர். சுயேச்சை கிடைத்து விட்டால்

## "காந்தியாலும் முடியாது"

பண்டித மாளவியா வட்டமேஜை மகாநாட்டில் செய்த முடிவுரை பிரசங்கமாவது:—

இந்தியாவின் நிலைமையை பிரிட்டனில் உள்ளவர்கள் இன்னும் நன்கு உணர்ந்து கொள்ளவில்லை. எல்லாவற்றையும் கவனிக்கும் பொழுது எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையான எண்ணங்களுக்கு இடமில்லை. இந்தியாது பிரச்னையை மற்றோர் வெள்ளை நிறத்தாரது பிரச்னையைப் போன்று கருதும் மனப் பான்மைகொண்ட ஆங்கிலேயர்கள் வெகு சிலரேயுள்ளனர். இந்தியாவில் பூர்ணமான பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதென்று பார்லிமெண்டு திட்டமாக முடிவு செய்தாலொழிய, இந்த தீர்மானம் கட்சி மாற்றங்களால் சிறிதும் பாதகமடையாதென்பது உறுதிப்பட்டாலொழிய, புதிய யுகம் ஆரம்பமாகும் என்று இந்தியா எதிர்பார்க்க முடியாது. அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமையாய்க் கிடந்து வாழும் இந் நிலைமையை, இந்தியா நன்கு உணர்ந்துவிட்டது. மக்கள் மனத்திலே பெருகி வரும் சுதந்திரதாகத்தை தணிக்க மகாத்மா காந்தியின் வாக்கினாலும் இனி முடியாது. பிரிட்டிஷார் மீதும், பார்லிமெண்டு மீதும் மகத்தான பொறுப்பு விழ்ந்துள்ளது. எதிர்காலத்திலே தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி யளித்துவிடுவதாக உறுதி கூறி அறிக்கைவெளியிடுவதால் மட்டும் இந்தியர் திருப்தியடைந்து விட மாட்டார்கள்."

## தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர், 9உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 29—10—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 19—0—0 |
| சீமை வெள்ளி 100 ரூ.எடை | | 61—4—0 |
| „ 1 ரூ. எடை | | 0—10—0 |

பயங்கர ஆட்சி இருக்காது என்பது திண்ணம், அப்பொழுது ஐரோப்பியரும், உத்தியோகஸ்தர்களும் தங்களது உயிர்களுக்காக அஞ்சவேண்டுவதில்லை.

Edited, Printed & Published by T.S. Chockalingam, at Lakshmi Press, 2,Coral Merchant St. Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 சென்ட்).




திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 டிசம்பர் 7௳, பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 22௳ திங்கட்கிழமை || இதழ் 12

# காக்காய் பூச்சாண்டி.




சர்ச்சில் குழந்தை:—ஓ, அவனைப்பார்த்தால் பயமாயிருககிறது. நான் வரமாட்டேன். கையை விடு. ஓ ஓ ஓ ஓ ஓ

மெக்டனல்ட்:—அடே பையா, பயப்படாதே. அது வெறும் பொம்மை. காக்காய்களை (மிதவாதிகளை) ஏமாற்றுவதற்காக வைத்திருக்கிறது. வெறும் பொம்மை. பயப்படாதே.

Koviloor Digital Library



# வெட்டவெளிச்சம்.

பிரதம மந்திரி அறிக்கையைப்பற்றி சர்ச்சில் பார்லிமெண்டில் போட்ட கூச்சலால், உண்மை நிலைமை வெட்டவெளிச்சமாயிற்று. முதல் மந்திரியும், இந்தியா மந்திரியும் பார்லிமெண்டில் பேசியதைப் பார்த்த பின்பு, சுயராஜ்யப் பேச்சு வெறும் ஏமாற்றும் வித்தை என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. ராணுவம், வெளிநாட்டு சம்பந்தம், பொக்கிஷம், பிரிட்டிஷார் வர்த்தக உரிமை, மன்னர்கள் சம்பந்தம் இவை பிரிட்டிஷாரிடமே இருக்குமென்று இந்தியா மந்திரி சர்ச்சிலுக்கு உறுதி கூறுகிறார். பார்லிமெண்டுக்கே இவ்விஷயங்களில் முடிவான அதிகாரமுண்டு என்பதில் சர்ச்சிலுக்கும் தமக்கும் அபிப்பிராயபேதம் இல்லையென்று சொல்லுகிறார். இவ்வளவு விஷயங்களும் இந்தியர் கைக்கு போகாமல் பிரிட்டிஷாரிடம் இருக்கும் போது, இந்தியாவிற்கு குடியேற்ற ஆட்சி கொடுத்ததாக எப்படிச் சொல்ல முடியும் என்று முதல் மந்திரி சர்ச்சிலுக்கு தைரியம் கூறுகிறார். இவற்றையெல்லாம் பார்த்த பின்பு, இந்தியாவிற்கு பிரிட்டிஷார் சுயராஜ்யம் கொடுக்கப்போகிறார்கள் என்று கனவுதான் காண முடியுமா?

குடியேற்ற ஆட்சி கொடுப்பதே பிரிட்டிஷ் சர்க்கார் லட்சியம் என்று ஜனவரி மாத அறிக்கையில் முதல் மந்திரி சொன்னார். குடியேற்ற ஆட்சி அமுலில் வந்துவிட்டதாகவும், சட்டத்தில் மட்டும் திருத்தவேண்டியதுதான் பாக்கி என்றும் அந்தக்கால இந்தியா மந்திரி வெட்ஜ்வுட்பென் சொன்னார். இந்தப்பேச்சுகள் எல்லாம் வெறும் ஏமாற்று என்பது இப்பொழுது வெட்டவெளிச்சமாய் விட்டது. பூர்ண சுயராஜ்யம் வேண்டுமென்றும், பிரியும் உரிமை வேண்டுமென்றும் காங்கிரஸ் கேட்ட சமயங்களில் எல்லாம் மிதவாதிகள் குடியேற்ற நாடுகளை காட்டினார்கள். "குடியேற்ற நாடுகளுக்கு பிரியும் உரிமை உண்டு என்று ஏகாதிபத்திய மகாநாட்டால் ஏற்பட்டுவிட்டது. உங்களுக்கு குடியேற்ற ஆட்சி கிடைத்தால் பூர்ண சுயராஜ்யமும், பிரியும் உரிமையும் தானாக வந்துவிடும்" என்று மிதவாதிகள் சொன்னார்கள். மிதவாதிகளே, நீங்கள் சொன்ன குடியேற்ற ஆட்சி எங்கே போயிற்று? பிரிட்டிஷார் தந்திர புத்தியை அறிந்துதான், காங்கிரஸ் அன்று முதல் பூர்ண சுயராஜ்யத்தை வற்புறுத்தி வருகிறது. காங்கிரஸ் கேட்பது நியாயம் என்பதை பிரதம மந்திரி நிரூபித்து விட்டார்.

இந்தியா மந்திரியும், பிரதம மந்திரியும் பேசியதைப் பார்த்தால், குடியேற்ற ஆட்சியை இந்த கலியுகத்தில் அவர்கள் கொடுப்பதாய் தெரியவில்லை. ராணுவமும், பொக்கிஷமும் இந்தியர் கைக்கு ஒருக்காலும் அவர்கள் மாற்றப்போவதில்லை. இப்பேர்ப்பட்ட போலி சுயராஜ்யத்தைக் கண்டே மிதவாதிகள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும். சர்க்கார் மனப் பான்மையை அவர்கள் செய்கையைக்கொண்டே அளக்க வேண்டுமென்று மகாத்மா அடிக்கடி கூறுவார். வங்காள அடக்கு முறையும், மற்ற மாகாணங்களில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களும் எதைக் காட்டுகின்றன? இந்தியருக்கு விரோதமாக அதிகார வர்க்கம் ஆளுவதற்கு முடிவு செய்திருப்பதையே காட்டுகின்றன. ஆகவே இனி வீண் விவாதம் செய்வதால் பயனில்லை. இந்தியாவின் நன்மைக்காக மட்டும் பாதுகாப்புகள் ஏற்படுத்தி மற்றப்படி பூரா சுயராஜ்யம் கொடுப்பதாக காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் காணப்படுகிறது. அதை சர்க்கார் புறக்கணித்து விட்டார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறி அடக்கு முறைகளிலும் இறங்கி விட்டார்கள். ஆகவே காங்கிரஸ் செய்யவேண்டிய வேலை தெளிவாய் விட்டது. காங்கிரஸ் கேட்கிறபடி சுயராஜ்யம் கொடுக்கிறவரை மறுபடியும் போராடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

## சட்ட மறுப்பு எப்போ?

(மகாத்மா காந்தி)

"நான் இந்தியா போய்ச் சேர்ந்து, காங்கிரஸ் காரியக் கமிட்டியை கலந்து கொள்ளுவதற்கு முன் பிரதம மந்திரியின் அறிக்கையினால், மீண்டும் சட்ட மறுப்பு ஆரம்பமாக இடமில்லை. ஆனால் வங்காள அவசர சட்டத்தை பூர்ணமாக அதிகாரிகள் அமுலுக்கு கொண்டு வருவார்களாயின், வங்காளத்திலும் இந்தியா முழுவதிலும், சட்ட மறுப்பை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் சேர்ந்து விடும்."

Koviloor Digital Library


# கவர்னர் மதியீனம்.

(ஸ்ரீ. டி. பிரகாசம்.)

பெஜவாடாவில் கவர்னரை விவசாயிகளின் தூது கோஷ்டியொன்று கண்டு பேசியதாகவும் விளைபொருள்களின் விலை அதிகரிக்காமல் இப்போது இருப்பதுபோலவே தொடர்ந்தாற்போல் இருக்குமானால் சர்க்கார் நிலவரியை உயர்த்த மாட்டார்கள் என்று கவர்னர் கூறியதாகவும் கிடைத்துள்ள செய்தியிலிருந்து தெரிய வருகிறது. கிடைத்துள்ள செய்தி உண்மையாக இருக்குமானால் கவர்னர் தற்போது கூறியுள்ள பதில் விளைபொருள்களின் விலை கூடக்கூடுமானால் வரி உயர்த்தப்படும் என்று சொல்வதைக் காட்டிலும் சற்று சாந்தமானதேயாகும். கவர்னர் காட்டிய இந்த அற்பமான தயாள குணத்திற்கும் பாராட்டப்படுவார். ஆனால் கவர்னர் தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தில் தூது கோஷ்டியாரிடம் உயர்த்தப்பட்ட ஒரு அணு வரி கூட தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரப் படமாட்டாது என கூறி இருப்பாராகில், பொதுஜனங்கள் யாவரும் பெரிதும் திருப்தியடைந்திருப்பார்கள்.

ஸ்ரீ. மாக்டனால்ட் இந்தியாவிற்கு மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கத்திலும் பொறுப்பாட்சி வழங்குவதாக தமது மந்திரி சபையின் அபிப்பிராயத்தை வெளியிடும்போது, சென்னை கவர்னரும் அவரது சகாக்களும் ஓர் சிவில் உத்தியோகஸ்தரது ரிசெட்டில்மெண்ட் யாதாஸ்தைக் காக்கும் பொருட்டு பொறுப்பு வாய்ந்த சட்டசபை அங்கத்தினர்களும் பொது ஜனப் பிரதிநிதிகளும் அடங்கிய பொருளாதார விசாரணைக் கமிட்டியின் சிபார்சை புறக்கணிப்பதுடன், விவசாயிகளின் தலைவர்களை சிறையிலடைத்துவைத்த மாஜிஸ்டிரேட்டுகளின் நடத்தையை சரியென அங்கீகரிப்பதென்றால் இந்த அபிபாயத்தை என்னென்று சொல்வது?

வட்டமேஜை மகாநாடு முடிந்ததும் ஸ்ரீ. மாக்டனால்ட் காந்திஜியை நண்ணி அவரை கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நமது சர். ஜார்ஜ் ஸ்டேன்லியோ கீர்த்தி வாய்ந்த காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ. நாராயணராஜுவைக்கண்டு பேசுவது தமது அந்தஸ்துக்குக் குறைவென எண்ணுகிறார். ஸ்ரீ. நாராயண ராஜு மூன்று ஜில்லாக்களுக்கும் பொதுஜனங்களின் தலைவர். தூது கோஷ்டியில் கலந்து கொள்வதால் பயனில்லை என்பதை அவர் அறிவார். இருந்தாலும் அவர் தாமாகத் தூது கோஷ்டியில் கலந்து கொள்வதாக முன் வந்தார். ஆனால் கவர்னர் அவருக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். என்னே! கவர்னரின் மதியீனம். கவர்னரும் அவரது சகாக்களும் பெறும் கொழுத்த சம்பளம் பொது ஜனங்களின் வரிப் பணத்திலிருந்து அன்றோ. அப்படியிருக்க, வரியை உயர்த்துகிற விஷயத்தில் பொதுஜனப் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தை உணர்ந்து நடக்கவேண்டியது அவர்கள் கடமை அல்லவா?

# சாப்ரூ சபலம்.

உயர் நிலையை அடைய யோகத்தில் இருக்கும் போது. இடையில் சில சோதனைகள் ஏற்படுமாம். அந்த சோதனைகள் சில அற்ப சக்திகள் மூலமாக வரும். அந்த சக்திகளைக் கண்டு ஏமாந்து போகிறவர்கள் அநேகர். கொங்கணவர் கொக்கை எரித்தார். ஆனால் அவர் தமது சக்தியை பிரமாதமாய் நினைத்துக் கொண்டார். அதனால் கணவனுக்கு பணிவிடை செய்த கற்பாசியை சபிக்க விழித்தார். அந்த கற்பாசி கொங்கணர் விழிப்பை பார்த்து "கொக்கென்று நினைத்தாயே கொங்கணவா?" என்று கேட்டாள். அதன்மூலம் அவர் அவமான மடைந்தார். இந்த அற்ப சக்திகளில் மயங்காமல் யார் மேலே செல்லுகிறார்களோ அவர்களே பூர்ணத்துவம் அடைய முடியும். பூர்ணத்துவம் அடையவேண்டுமானால், சபலபுத்தி போகவேண்டும். இந்தியா பூர்ணசுயேச்சை வேண்டுமென்று போர் புரிகிறது. இடையிடையே அதன் நோக்கத்தைக் கெடுக்க சில அற்ப சுதந்திரங்களை பிரிட்டிஷார் கொடுக்கிறார்கள். இவற்றைப்பார்த்து சில தலைவர்கள் சபலமடைந்து ஏமாறுகிறார்கள். இந்த தலைவர்களின் சபல புத்தியால் இந்தியா பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. மாண்டேகு சீர்திருத்தத்தைக் கண்டு மிதவாதிகள் சபல மடைந்ததால் ஒத்துழையாமையை அவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் பட்ட பின்பே அவர்களுக்கு புத்தி வந்தது. அதைப் போல பிரதம மந்திரி அறிக்கையைக் கண்டும் மிதவாதிகளுக்கு சபலம் ஏற்பட்டிருக்கிறது. சாப்ரூவும் சாஸ்திரியும் அறிக்கையைக் கண்டு

(94-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library



# இந்திய ராணுவச் செலவு

1902-ல் இந்திய வருமானத்திலிருந்து வருஷந்தோறும் புதிதாக 786000 பவுன் பிரிட்டிஷ் துருப்புக்களின் சம்பள உயர்வுக்காகச் செலவழிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. 1904-5ல் காங்கிரஸ் இதைப் பலமாகக் கண்டித்து அத்தொகையைக் குறைக்கும்படி மன்றாடிற்று, பயனில்லை. அதற்கு பிறகும் லார்டு கிச்னர் 100 பவுன் அதிகச் செலவு செய்யத் திட்டம் போட்டார். இவ்வாறாக வருஷத்திற்கு வருஷம் ஏழை இந்தியனின் தலைச் சுமை அதிகமாயிற்றே தவிர எவ்வித உருவான பயனையும் அவன் காணக் கூடவில்லை என்பதைச் சிம்லா ராணுவக் கமிஷனே ஒப்புக்கொண்டது. இந்தியாவில் இராணுவத்திற்காக செலவழிக்கும் தொகையையும் மற்ற தேசங்கள் அதற்காகச் செலவழிக்கும் தொகையையும் கணக்கிட்டுப் பார்க்கும் எந்த மனிதனும் இரத்தக் கண்ணீர் வடிப்பான் என்பதில் ஐயமில்லை. சராசரி 0-1-7 பைசா வருமானமுள்ள ஏழை இந்தியன் கோடிக்கணக்கான இராணுவச் செலவை எங்ஙனம் தாங்குவன்? இந்தியன் வாழவேண்டுமென்று பிரிட்டிஷார் கருதவில்லை யென்றே நாம் கருத வேண்டி யிருக்கின்றதல்லவா? டயான்பி என்பவர் 1929-ம் வருஷத்தில் வெளியிட்ட தமது நூலில் குறிப்பிடும் ராணுவச் செலவு புள்ளிகள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| இந்தியாவில் | 100-க்கு | $45\frac{1}{3}$ |
| ஜப்பான் | 100-க்கு | $26\frac{1}{8}$ |
| பிரிட்டன் | 100-க்கு | $14\frac{3}{8}$ |
| அமெரிக்கா | 100-க்கு | 16 |
| பிரான்ஸ் | 100-க்கு | $19\frac{3}{4}$ |

இவ்வாறாக எல்லாத் தேசத்தையும் காட்டிலும் இந்தியாவில் தான் இராணுவச் செலவதிகமென்பது டயான்பியின் குறிப்பிலிருந்து விளங்குகின்றதல்லவா? இராணுவம் அன்னியர் ஆதிக்கத்துக்கு உட்பட்டதால் உண்டான மற்றொரு பெரிய கேட்டினை இன்று விளக்காமலிருக்கக்கூடாது. அதாவது கம்பெனியிலிருந்து நேரான ஆட்சிக்கு வந்த, 20 வருஷங்கட்குள் போர்புரியும் வகுப்பினரென்றும், லாயக்கில்லாத வகுப்பினரென்றும் பிரித்து விட்டனர். இதனால் வங்காளிகள், சென்னைவாசிகள், மராட்டியர் முதலியோர் தேசபலம் குறைய நேர்ந்தது. இவ்வாறு அவர்கள் செய்ததின் காரணம் சுதேச சிப்பாய்களைக் குறைத்து அன்னியரை அதிகமாக்க வேண்டுமென்பதே. சுதேசிகளிடத்தில் இராணுவ பலம் அதிகரிப்பின் தமக்கே ஒரு சமயம் ஆபத்துண்டாகக்கூடுமென்பதும் அவர்களுடைய தேச வன்மையைக் குறைக்கவேண்டுமென்பதும் தான் அவர்கள் நோக்கம். ஒவ்வொரு வருஷமும் நாம் கவனித்துக் கொண்டு தான் வருகின்றோம். இராணுவச் செலவு குறைந்தபாடில்லை. ஆனால் இந்தியர்களின் தொகை முன்னையைவிட இப்பொழுது மிக மிகக் குறைவு. 1856-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார்களின் கீழ் இராணுவ வீரர் தொகையும் அதற்குப் பின்னால் இருந்த தொகையும் வி. என். வக்கீல் என்பவரால் கணிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

| | பிரிட்டிஷ் துருப்புகள் | இந்தியத் துருப்புகள் |
|---|---|---|
| 1857ல் | 39500 | 311038 |
| 1887ல் | 73602 | 153092 |
| 1914ல் | 80090 | 156650 |

இவ்வாறாக வருஷத்துக்கு வருஷம் இந்தியர் தொகை குறைந்தும் அன்னியர் தொகை மிகுந்தும் வந்திருப்பதன் காரணம் பலமாக யோசிக்கத் தக்கதாகும். ஆனால் ஒவ்வொரு வருஷமும் செலவு எங்ஙனம் உயர்ந்திருக்கின்றதென்பதும் அறியத்தக்கதல்லவா?

| | இராணுவச் செலவு | | |
|---|---|---|---|
| 1856-ல் | ஒரு கோடி | 15 லட்சம் | பவுன் |
| 1857-ல் | ,, | 14 | ,, |
| 1874-ல் | ,, | 69 | ,, |
| 1884-ல் | ,, | 70 | ,, |
| 1915-ல் | 2 | 0 | ,, |
| 1916-ல் | 2 | 10 | ,, |

இவ்வாறு செலவும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு இந்தியருக்கு எவ்விதப் பயனுமின்றி இராணுவம் ஏற்படுத்தி யிருப்பதின் நோக்கம் மிக மோசமானதாகும். இராணுவத்தில் இந்தியர்கள் வருஷா வருஷம் குறைக்கப்பட்டு வருவதில் பெரியதொரு சூழ்ச்சி முன்னே கூறினோமல்லவா? அந்தச் சூழ்ச்சியை ஒரு ஆங்கிலேயரே வெளிப்படுத்தி யுள்ளதைக்காண்க. 'இந்தியக் கலக சரித்திரம்' என்ற நூலெழுதிய மல்லேஸன் என்பவர் குறிப்பிடுவது:—

"இராணுவத்தில் சுதேசி உத்தியோகஸ்தர்கள் குறைக்கப்பட்ட பின்பு சிப்பாய் இராணுவம் அடியோடு மாறிவிட்டது. ஒரு காலத்தில் இராணுவத்தைத் தமது தொழிலாகக் கொண்டிருந்த அயர்லாந்தினர்க்கு ஆறுதல் அளிப்பதற்காக இந்திய இராணுவத்தில் இடங்கொடுக்கப் பெற்றனர். மிக மட்டரகமான பேர் வழிகளெல்லாம் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்."

இது இவ்வாறிருக்கட்டும். இந்திய ராணுவத்தில் தற்பொழுது ஏறக்குறைய 8000 வெள்ளை உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றார்கள் ஒவ்வொருவருக்கும் சராசரி வரும்படி 10000 ரூபாய். சாதாரண வெள்ளை சிப்பாய்களின் தொகை ஏறக்குறைய 70 ஆயிரம். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷச் செலவு 1000 ஆனால் இந்திய சிப்பாய் ஒருவனுக்கு வருஷச் செலவு சராசரி ரூ 250. இவ்வாறாக இராணுவத்திலுள்ள இந்தியர் நிலை மிக்க கேவலமானதாக இருக்கின்றது. மேலும் இந்தப் பொறுக்க முடியாத செலவை இந்தியர் நெடுநாள் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அப்படியானால் இந்தியாவின் முதுகெலும்பு சீக்கிரத்தில் ஒடிந்து விழவேண்டியது தான்.

Koviloor Digital Library



## மறியல் அறிக்கை.

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரி எழுதுகிறார்:—

தமிழ்நாட்டில் பலவிடங்களிலும் நடக்கும் மதுபானக்கடை மறியலைப்பற்றி விவரமான அறிகைகள் எனக்கு (திருச்செங்கோடு, காந்தி ஆசிரமம் விலாசத்துக்கு) அனுப்பிவைக்கும்படி மாகாண காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து 21-10-31 தேதி 45 நெம்பர் சுற்றறிக்கை அனுப்பப் பெற்றது. இன்னின்ன விவரங்கள் எழுதவேண்டு மென்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறது.

அச்சுற்றறிக்கையின்படி பல கிராம காங்கிரஸ் சபைகளும், தாலூகா சபைகளும் மறியல் அறிக்கைகள் அனுப்பி வைத்திருக்கின்றன. ஆனால் இன்னும் பல சபைகள் எக்காரணத்தினாலோ அறிக்கை அனுப்பவில்லை.

இதுவரையிலும் மொத்தம் 237 கள்ளுக் கடைகளின் மறியலைப்பற்றியும், 57 சாராயக் கடைகளின் மறியலைப்பற்றியும் அறிக்கைகள் வந்திருக்கின்றன. மறியல் நடந்த கள்ளுக்கடைகள் மொத்தம் 237-ல் 28 கடைகளில் பல காரணங்களினால் மறியல் நடுவில் நின்றுவிட்டது. 46 கள்ளுக்கடைகள் திறமையாக மறியல் செய்ததின் பயனாக, புது வருஷத்திற்கு ஏலம் எடுத்தும் இன்னும் திறக்கப்படாமலோ, அல்லது திறந்தபிறகு மறுபடியும் மூடப்பட்டோ கிடக்கின்றன. பாக்கி 163 கடைகளில் மறியல் நடந்து வருகிறது.

மறியல் நடந்த சாராயக்கடைகளில் 3 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர ஷர்க்கட்டுப்பாட்டின் பயனாகவே 16 கள்ளுக் கடைகள் வியாபாரம் அறவே இல்லாமல் மூடிக் கிடக்கின்றன.

அறிக்கை அனுப்பியிருக்கும் ஜில்லாக்களின் தென் தஞ்சையும், மதுரையும் முதன்மையாயிருக்கின்றன. தென் தஞ்சையில் திருத்துறைப் பூண்டி தாலூகாவில் 41 கடைகளும், அறந்தாங்கியில் 4 கடைகளிலும், மன்னார்குடி தாலூகாவில் 11 கடைகளிலும், நாகப்பட்டினம் தாலூகாவில் 5 கடைகளிலும், திருக்காட்டுப்பள்ளிப் பகுதியில் 9 கடைகளிலும் மறியல் நடப்பதாக அறிக்கைகள் கிடைத்திருக்கின்றன.

மதுரை ஜில்லாவைப் பொருத்த வரையில், அந்தந்த தாலுகா கமிட்டியார் பூரா விவரமும் சேகரித்து அனுப்பி யிருக்கிறார்கள். மதுரை நகரில் 9 கள்ளுக் கடைகளும், 5 சாராயக்கடைகளும், 4 பீர்க்கடைகளும் மறியல் செய்யப்படுகின்றன. மதுரை தாலுகாவில் 9 கள், 2 சாராயக் கடைகளும், மேலூர் தாலூகாவில் 8 கள், 3 சாராயக் கடைகளும், திருப்புவனம் தாலுகாவில் 13 கள், 3 சாராயக் கடைகளும், திருமங்கலத்தில் 2 கள், 2 சாராயக் கடைகளும், மறியல் செய்யப்பட்டு, மூடியவை போக பாக்கியுள்ள கடைகளில் மறியல் நடந்து வருகிறது.

## வங்காள நீரோ

ரோமாபுரி தீப்பற்றி எரிந்தபோது, நீரோ என்ற அதன் அரசன் பிடில் வாசித்து சங்கீதத்தில் மூழ்கி யிருந்தானாம். இந்த நீரோக்கள் வங்காளத்தில் தோன்றியிருக்கிறார்கள். மிதுனபுரி பக்கத்தில் கோப் என்ற இடத்தில் ராணுவ வீரர்கள் மெஷின் பீரங்கி உபயோகிக்கும் விதத்தை கற்றுக் கொண்டார்களாம். இதற்கு என்ன செய்தார்கள் தெரியுமா? அப்பக்கத்திலுள்ள கிராம வாசிகளை குஞ்சு குழந்தைகள் உள்பட சூரிய உதயத்திற்கு முன்பே வீட்டை விட்டு வெளியே யனுப்பிவிட்டார்களாம்! மாலை 2 மணி வரை அவர்கள் காட்டில் இருந்தார்கள். அப்புறம் தான் வீட்டிற்கு திரும்பினார்கள். இம்மாதிரி இரண்டு வாரம் நடந்ததாம். ராணுவ வீரர் பீரங்கி பயிற்சி பெறுவதற்காக நாட்டிலுள்ளவர்கள் காட்டுக்குப் போகவேண்டுமென்றால், இந்த ராணுவம் எதற்காக இருக்கிறது? ஜனங்களை காப்பாற்றவா அல்லது நாட்டை காடாக மாற்றவா? இம்மாதிரி குடிகள் தினசரி காடுபுகும்படி நேரிடுவதால் குழந்தை குஞ்சுகள் எவ்வளவு கஷ்டப்படும்படி நேரிடும். ஒரு மாதம் இரண்டு மாதக் குழந்தைகளைக்கூட தாய்மார் எடுத்துக்கொண்டு போக நேரிட்டது. திரும்பி வந்து பார்க்கும்போது வீடுகளில் குண்டுகள் பாய்ந்திருப்பதைக் கண்டார்களாம். இம்மாதிரி ஜனங்கள் திகிலடையும்படி செய்வது ஒரு யோக்கியமுள்ள சர்க்காருக்கு நேர்மையா என்று கேட்கிறோம். ஜனங்களுக்காகவே சர்க்கார்; ஜனங்களை பாதுகாக்கவே ராணுவம். அந்த ராணுவம் ஜனங்களுக்கு தொல்லை கொடுப்பது, வேலியே பயிரை மேய்வது போலிருக்கிறது. இம்மாதிரி ராணுவம் அட்டகாசம் செய்வது நீரோ தனது திருப்திக்காக ரோமாபுரியை தீ வைத்ததுபோலிருக்கவில்லையா? இதை பார்த்துக்கொண்டு வங்காள சர்க்கார் பேசாமலிருப்பது நீரோ பிடில் வாசித்ததைப்போல இருக்கிறது.

Koviloor Digital Library

## குரங்கின் விரதம்

வட்ட மேஜை மகாநாடு ஆரம்ப முதலே பர்மா பிரிவினை விஷயம் விநோத மாகவே இருக்கிறது. குரங்கு ஒன்று ஏகாதசி விரதம் இருந்தது. விரதம் முடிந்த பின்பு சாப்பிடுவதற்காக ஒரு வாழைப் பழத்தை பக்கத்தில் வைத்துக் கொண்டது. சிறிது நேரம் சென்றதும் கண் வாழைப் பழத்தின் மீது போயிற்று. நாக்கில் நீர் ஊறிற்று. சீச்சீ விரதபங்கம் செய்யக் கூடாது என்று மறுபடியும் மனதை திடப் படுத்திற்று. மறுபடியும் சில விநாடிகள் ஆயின. பழத்தின் மோகம் விடவில்லை. கிட்ட இருக்கிறதை கையில் வைத்துக் கொண்டால் விரதபங்கம் இல்லையென்று கையில் எடுத்தது. கதையை வளர்ப்பானேன்? கையில் வைத்திருக்கும்போது தோல் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன என்று சொல்லி உரித்தது. விழுங்கத் தானே கூடாது, வாயில் சும்மா போட்டிருந்தால் பாதகமில்லை என்று சொல்லி வாயில் போட்டது. அப்புறம் சில விநாடிகளில் வாயில் போட்ட பழம் வயிற்றுக்குள் போய்விட்டது. குரங்கின் ஏகாதசி விரதம் இம்மாதிரி முடிந்தது.

பர்மா பிரிவினையைப் பற்றி வட்டமேஜையில் வந்த விவாதமும் இதே கதியை அடைந்தது. வட்டமேஜை மகாநாடு கூடியதும்; மற்ற விஷயங்களைப் பற்றி பேசாமல் பர்மா பிரிவினையை கொண்டு வந்தார்கள். அவசரம் அவசரமாய் அதைப் பற்றி பேசி, "பிரிவினையை சபை ஒப்புக் கொண்டது" என்று சொன்னார்கள். இதை அங்கத்தினர்கள் ஆட்சேபித்த போது, "பிரிவினை விஷயம் முடிவானதல்ல" என்று மழுப்பினார்கள். இந்திய சட்டசபையில் பர்மா பிரிவினையை கண்டித்து ஒரு பர்மியர் தீர்மானம் கொண்டு வந்த போது மறுபடியும் இதே மாதிரி பேசி மழுப்பினார்கள். முடிவில் என்ன நடந்தது? பர்மியர் ஆட்சேபனையையோ, இந்தியர் கண்டனத்தையோ கேட்காமல், பர்மாவிற்கு தனியாக வட்டமேஜை மகாநாடு கூட்டினார்கள். பிரிவினையை ஆதரிப்பவர்களாக பொறுக்கி எடுத்து அங்கத்தினர்களாய் அனுப்பினார்கள் இப்பொழுது பர்மா மகாநாடு தனியாக நடக்கிறது. அதில் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். பிரிவினையைப் பற்றி பேச வேண்டுமென்றார். தலைவர் லார்ட்பீல் உடனே பாய்ந்து விட்டார். "பிரிவினையை அடிப்படையாகக் கொண்டே மகாநாடு கூடியிருக்கும்போது, மறுபடியும் அதைப் பற்றி எப்படி பேச முடியும்?" என்று சொல்லுகிறார். பேச்சு முற்றிலும் சமாப்தியாய் விட்டது! பிரிவினை விஷயமே கனவு போல் ஆய்விட்டது. பிரிவினையை எதிர்த்துப் பேசிய வாதங்கள், அநுமார் வாயில் போன வாழைப் பழத்தின் கதியை அடைந்தன! பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இவ்விஷயத்தில் அநுமாரைக் கூட தோற்கடித்து விட்டார்கள்.

---

(91-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். தலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி கொடுப்பதாய் சொல்லியதே பெரிய வெற்றியல்லவா என்று சாப்ரூ கேட்கிறார். சுயராஜ்யம் கொடுப்பதே எங்கள் லட்சியம் என்று பத்தாயிரம் தடவை பிரிட்டிஷார் சொல்லியிருக்கிறார்களே, அதனால் என்ன நடந்து விட்டது?

தலைமை சர்க்காரில் எம்மாதிரி பொறுப்பு கொடுக்கப் போகிறார்கள்? ராணுவம், அன்னிய நாட்டு விஷயம், பொக்கிஷம் இவற்றைத் தவிர பாக்கி விஷயங்களில் பொறுப்பாட்சியாம். இந்த பொறுப்பாட்சி ஒரு பொறுப்பாட்சியா? இதற்கு இவ்வளவு ஆனந்தமா? சாப்ரூவே, உமது சபல புத்தியை விட்டுவிடும். விஸ்வாமித்திரர் சபல புத்தியால் தான் தவத்தை இழந்தார். அது ஞாபகமிருக்கட்டும். மேலும் கிடைத்தது போதும் என்று சொல்லுவதற்கு நீர் யார்? சுயராஜ்யத்திற்காக யார் கஷ்டப் பட்டார்களோ அவர்களே, எத்தகைய சுயராஜ்யம் வேண்டும் என்று சொல்ல யோக்யதையுள்ளவர்கள். சட்ட மறுப்பு காலத்தில் பதுங்கிக் கிடந்த பேர்வழிகள், அதுபோதும், இது திருப்தி என்று பேச நாக்கு உண்டா? உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும். சாப்ரூ கோஷ்டியாருக்கு எது திருப்தி என்பதைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. ஆகவே வீணாக மதிமயங்கி தேசத்தை காட்டிக்கொடுக்க வேண்டாமென்று மிதவாதிகளை எச்சரிக்கிறோம்.

Koviloor Digital Library



# மகாத்மா செய்தி

லண்டன் நைட்ஸ் பிரிட்ஜில் உள்ள தமது காரியாலயத்தில் உள்ள ஓர் சிறு அறையில், வியாழக்கிழமை நடு இரவுக்கு சற்று முன்பு மகாத்மா காந்தி சுமார் 40 பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார். அச்சிறிய அறையில் எரிந்து கொண்டிருந்த சிறிய கணப்புத் தீ முன்னால், மகாத்மா கீழே உட்கார்ந்திருந்தார். உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள பத்திரிகைகளின் பிரதிநிதிகளாக வந்த சுமார் 40 நிருபர்கள் மகாத்மாவைச் சுற்றிலும் சூழ்ந்து தரையின் மீதே வீற்றிருந்தனர். மகாத்மா பின் வருமாறு கூறினார்:—

"பிரதம மந்திரியின் அறிக்கையை பற்றியும், பார்லிமெண்டு விவாதத்தைப் பற்றியும் நான் முடிவாக ஒன்றும் கூறமுடியாது. ஆனால் முடிவான தீர்மானம் செய்வதற்குமுன், அறிக்கை, விவாதம் ஆகிய இவ்விரண்டின் கருத்தையும் உணர்ந்து கொள்ள நான் என்னாலான வரை பிரயாசைப்படுவேன். ஆயினும், காங்கிரஸ் காரியக்கமிட்டியில் விவாதித்து கமிட்டி ஒப்புக்கொள்ளும் வரை, எனது முடிவிற்கு முக்கியாம்சம் எதுவும் கிடையாது. மேலாகப் பார்க்கும் போது, இனி பிரிந்து போகும் காலம் வந்து விட்டதென்று எனக்கு தோன்றுவதாக நான் முன் கூறியதையே மீண்டும் வற்புறுத்துகிறேன். கொடுந் துன்பமும் கடுமையான தியாகமும் பொருந்திய ஓர் சோதனையில் தேசம் முழுவதையும் மீண்டும் இறங்கும்படி கூறுபவருக்கு மகத்தான பொறுப்பு உண்டு என்பதை நான் நன்கு அறிவேன். ஆகையால், நான் தீர்க்கமாக யோசியாமல், லேசாக மீண்டும் சட்டமறுப்பை ஆரம்பிக்குமாறு கூறமாட்டேன் ஆனால் வங்காள அவசரச் சட்டம் போன்ற அடக்கு முறைகளை சர்க்கார் விடாது கைப்பற்றி வருவார்களானால், எல்லா யோசனைகளும் பாழாய் விடும். இதனால் எந்த நிமிஷத்திலும் தேசமெங்கும் சட்ட மறுப்பு ஆரம்பிக்கும் நிலைமை ஏற்பட்டுவிடலாம். வங்காள அவசரச் சட்டம் பிறப்பிப்பதற்கு சிறிதும் காரணமில்லை. இந்தியாவை விட்டு புறப்படும் போதிருந்ததை விட நான் இப்போது நம்பிக்கை யற்றவனாகி விடவில்லை. எங்களது உண்மையான சக்திக்கு எவ்வளவு உரியதோ அதைவிட அதிகமானதை எதிர்பார்த்து நான் இங்கு வரவில்லை. தற்போது அதிகாரத்தை வகித்து வருபவர்களின் சக்தியுடன், நமது சக்தியை நான் மகாநாட்டின் மூலமாக ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொண்டு விட்டேன். நாம் தோல்வியடைந்து விட்டோம். ஆகையால் தனது கடமைகளைச் செய்வதற்கு வேண்டிய பலத்தையடைய, காங்கிரசில் மீண்டுமோர் முறை புதிய சக்தியை ஆவாகனம் செய்ய வேண்டும். நான் இங்கிலாந்திற்கு வந்ததினால் நன்மையே ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். மகாநாட்டுக்குள்ளே நான் செய்த வேலைகளைவிட, வெளியே செய்த வேலைகளே அதிக உபயோகமானவை என நான் கருதுகின்றேன். பொதுஜன அபிப்பிராயத்தைக் கலந்து கொண்டு சமரசமாகப் போவது, சர்க்காரின் கொள்கையாக விருந்து பிரதம மந்திரியின் அறிக்கையில், காங்கிரசின் கோரிக்கைகளுக்கும் இடமிருக்கும் பக்ஷத்தில், நான் சர்க்காருடன் பூர்ணமாக ஒத்துழைக்குமாறு ஜனங்களை வேண்டிக்கொள்வேன். ஸ்ரீ. சர்ச்சில் முதலிய சிலரை பார்க்க முடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகிறேன். டிசம்பர் மாதம் 28ந் தேதி நான் இந்தியா போய்ச்சேருவேன்.

## வங்காளத்தில் போலீஸ் ஆட்சி

வங்காளத்தில் நடக்கும் போலீஸ் ஆட்சியை மகாத்மாவால் சகிக்க முடியவில்லை. அந்த ஆட்சி நீடித்து நிற்குமானால் இந்தியா வெங்கும் சட்டமறுப்பு ஆரம்பிக்க நேரிடும் என்று எச்சரித்திருக்கிறார். உதவி இந்தியா மந்திரி, இந்தியா மந்திரி, முதல் மந்திரி இவர்களைப் பார்த்து வங்காள அவசரச்சட்டத்தை கண்டித்துக் கூறினார். யாரை வேண்டுமோ பிடித்து அடைப்பதும், அப்பில் இல்லாத ஒரு தீர்ப்பும், கொலை முயற்சிக்கு தூக்குத் தண்டனையும், போலீஸ் சொல்லுவதற்கு பதில் சொல்லாமல் கீழ்படிய வேண்டும் என்பதும் தாண்டவமாடும் நாட்டில் மனிதர் எப்படி குடியிருக்கமுடியும்?

## சுதேசி மை.

சென்னை சர்க்கார் கைத்தொழிற்சாலையொன்று சென்னை வண்ணாரப் பேட்டையில் இருக்கிறது. அச்சாபீஸ்களுக்கு வேண்டிய மைகளை அங்கே தயார் செய்கிறார்கள். அங்கிருந்து நாம் மாதிரி வரப்பெற்றோம். அதை உபயோகித்துப் பார்த்ததில் வெளிநாட்டு மைகளைப்போல சிலாக்கியமாகவே இருக்கிறது. விலையும் மிக மலிவு. சுதேசி தொழில் விருத்தி செய்ய ஆர்வங்கொள்ளும் அச்சாபீஸ்கள் இந்த இங்கியை வாங்கி ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

Koviloor Digital Library



## மின் வெட்டு

**ஹமிப்நார்**

ஹமிப்நார் என்ற எல்லைப்புறவாசி ஒரு வெள்ளை அதிகாரியை கொல்ல முயற்சித்தான். அதிகாரிக்கு கொஞ்சங்கூட காயம் ஏற்படவில்லை. இருந்தாலும் எல்லைப்புற சட்டப்படி அந்த ஹமிப்நாருக்கு தூக்கு தண்டனை விதித்தார்கள். இதை ஆட்சேபித்து இந்தியா வெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. இந்தியா சட்டசபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேறியது. இனி அம்மாதிரி தண்டனைகள் விதிப்பதில்லையென்று சர்க்கார் ஒப்புக் கொண்டார்கள் அந்த கண்டனையை அச்சமயம் சட்ட சபையில் தீவிரமாய் எதிர்த்தவர் சர். அப்துர் ரஹீம். இன்று அவர் மகாணமாகிய வங்காளத்திலேயே அச்சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. இதைவிட அக்கிரமமான செய்கையை எங்குதான் பார்க்க முடியும்? இதுவா நாகரிக ஆட்சி என்று பிரிட்டிஷாரை கேட்கிறோம்.

**சர்ச்சில் எங்கே?**

மகாத்மா லண்டனுக்குப் போனது முதல் சர்ச்சிலையும் அவர் உளறுவாய் தோழர்களையும் பார்க்க பிரியப்படுவதாக சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் சர்ச்சில் எப்படியோ இதுவரை மகாத்மா முன்பு வராமல் தப்பித்துக்கொண்டு விட்டார். மகாத்மா அவரை பார்க்கவில்லையே என்று வருந்துவதாக தெரிகிறது. இதிலிருந்து சர்ச்சிலின் கோழைத்தனம் வெளியாகிறது. வெளியே அட்டகாசம் செய்வதை—அதாவது சுயராஜ்யத்திற்கு இந்தியர் லாயக்கில்லை என்பதை—அவர் நிரூபிக்க வல்லவராயிருந்தால், ஏன் மகாத்மா முன்பு வரக்கூடாது? மகாத்மா முன்பு இவர் வாதம் நிற்க முடியாது; சர்ச்சில் பேசுவது வெறும் கூச்சல் என்பது வெளியாய் விடும். இந்த காரணங்களுக்காகவே சர்ச்சில் மகாத்மா முன்பு வர தைரியங்கொள்ளவில்லை. கோழைகள்தான் உளறுவதில் கை தேர்ந்தவர்களாய் இருப்பார்கள் என்பதை சர்ச்சில் காட்டிவிட்டார்.

### தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர், 5உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ, | 29—8—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 19—0—0 |
| சீமை வெள்ளி 100 ரூ.எடை | | 61—8—0 |
| „ 1 ரூ. எடை | | 0—10—0 |

## கிரடாக் போக்கிரித்தனம்

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி)

வாய் வீச்சு ஆரம்பமாய் விட்டது. நியாயமற்ற பேச்சுகளை இவ்விதம் வாய் வீச்சுகளின்றி மேலே நடத்திச் செல்ல முடியாது. சுதேசி பிரசாரத்தையும், அந்நியர் சுரண்டுவதை மிக நேர்மையான முறையில் தடுக்க முயல்வதையும், "சதி" என சர். ரெஜினால்டு கிரடாக் கூறுகிறார். காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாய் தோன்றுகின்றது. தவறையும், சதியும் தம்மைச் சார்ந்ததென்பதை சர். கிரடாக் அறிந்துகொள்ளமுடியாமற்போயிற்று. பலி கொடுத்தவர்களே குற்றவாளிகளென அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார். குற்றஞ் செய்தவர்களே பலி கொடுத்தவர்கள் மீது, அக்குற்றத்தை சுமத்துவதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை. இந்தியாவில் தங்கள் சரக்குகளை ஏராளமாக இறக்குமதி செய்வதின் பொருட்டு, இந்தியர்களை சிறையிலடைப்பதாகவும், பலாத்காரத்தால் நசுக்குவதாகவும் மிரட்டுபவர்களே உண்மையில் 'சதி' செய்பவர்களாவர். பரதேச சரக்குகளை வாங்க வேண்டாமென்றும், சுதேசியத்தை ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்பது சதியா? பல கஷ்டங்களுக்கிடையே தேசத்திலுள்ள வேலையில்லா சங்கடத்தை ஒழிக்க பாடுபடுவது குற்றமா? இது குற்றமாகில், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையே இவ்வித "சதிக்கும்" "குற்றத்திற்கும்" மூலஸ்தானமாக விளங்கும். நிற்க, எவ்வளவோ அனுபவித்துங்கூட துணியையும், இதர சரக்குகளையும் விற்பதற்கு அடக்கு முறை சரியான கருவியல்ல என்பதை இன்னும் அறிந்து கொள்ளாதது ஆச்சரியமளிக்கிறது. பல்லாயிரம் மைல் கடல் கடந்து, மகாத்மா சமாதான தூதுவராய் சென்றிருந்தும், அதை அவர்கள் புறக்கணித்து விட்டார்களென்று தோன்றுகிறது. சமாதானமும், சகோதரத்வமும் அசாத்தியமானதாகச் செய்யவேண்டுமென பிரிட்டிஷார் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார்களென்று தோன்றுகிறது. கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் வேண்டியதைச் செய்வாரென இந்தியா நம்புகிறது. லண்டன் மகாநாட்டின் இவ்வித முடிவுக்கு இந்தியர் சரியான ஒரே பதில் இறுக்க முடியும். "ஒரு கஜம் விதேசி துணி கூட வாங்கமாட்டோம்" என்பதே இதற்கு தக்க விடையாகும்.

—யங் இந்தியா.

Edited, Printed & Published by T.S. Chockalingam, at Lakshmi Press, 2, Coral Merchant St. Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாய் 2 சென்ட்)

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வேளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருடசந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை 1931 டிசம்பர் 10வ,
பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 25வ வியாழக்கிழமை || இதழ் 13

## எலி பிடித்த சூரர்கள்




எல்லா சூரர்களும் சேர்ந்து வட்டமேஜை மகாநாட்டு மலையைப் புரட்டிப் பார்த்தார்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். கடைசியில் என்ன அகப்பட்டது? வெறும் எலிக் குஞ்சு!

# மின் வெட்டு

---

## தென் ஆப்பிரிக்கா நாடு.

தென்னாப்பிரிக்கா இந்தியர் சம்பந்தமாக 1927ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் படி தென்னாப்பிரிக்கா சர்க்கார் யோக்கியமாய் நடந்து கொள்ள வில்லை. பிரியப்பட்டவர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவது என்ற விதியை இந்திய சர்க்கார் ஒப்புக் கொண்டார்கள். புதிதாக இந்தியருக்கு விரோதமாக சட்டம் செய்வதில்லை என்று பெருந்தன்மையோடு ஒப்புக் கொண்டார்கள். தென்னாப்பிரிக்கா சர்க்காரோ அந்த வாக்கை காப்பாற்றவில்லை. புதிது புதிதாக இந்தியருக்கு துன்பம் கொடுக்கிறார்கள். இந்தியாவிற்கு திரும்பிய தென்னாப்பிரிக்கா இந்தியர் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். 1929ல் 8477 பேர் திரும்பியிருக்க 1930ல் 1012 பேரே வந்திருக்கின்றனர். மேலும் திரும்பி அனுப்பும் வழக்கமும் கொடிது. அதை நிறுத்த வேண்டும். 1927ல் செய்த ஒப்பந்தம் இந்த வருஷத்தோடு முடிவடைவதால் புதிய ஒப்பந்தம் செய்ய தென்னாப்பிரிக்கா கேப்டவுனில் அடுத்த மாதம் ஒரு கூட்டம் கூடுகிறது. அதற்கு இந்திய சர்க்காரின் பிரதிநிதிகளாக சர். பஸ்லி ஹுசேன், சர். கார்பட், சர். லிண்ட்சே, ஸ்ரீ.பாஜ்பே, ஸ்ரீமதி. சரோஜனி தேவி, கனம் சாஸ்திரி ஆகியவர்கள் போகிறார்கள். இவர்கள் போய் செய்யப்போகும் வேலையைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. நிறத்திமிர் பிடித்த தென்னாப்பிரிக்கா சர்க்கார் இந்தியருக்கு சாதகமாக எதாவது செய்வார்களா என்பதும் சந்தேகம் தான். இந்தியா சுயராஜ்யம் பெற்று பதிலுக்கு பதில் செய்யக் கூடிய வன்மை பெற்றாலொழிய, குடியேற்ற நாடுகள் இந்தியரை கௌரவத்துடன் நடத்தப் போவதில்லை. குடியேற்ற நாடுகள் எல்லாம் சம அந்தஸ்து பெற்ற சகோதர நாடுகள் என்று சொல்லுவதெல்லாம் வெறும் ஜம்பக். சம அந்தஸ்து பெற்றிருந்தால், கானடா ஆஸ்திரேலியா, தென்னாப் பிரிக்காவில் இந்தியர் படாத பாடுபடும்படி நேரிடுமா? கேப்டவுனில் கூடப் போகும் மகாநாடு வெள்ளையர் சமதர்ம போக்கை சோதிக்கும் மகாநாடாய் இருக்கும். இந்தியருக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உண்மையான சம அந்தஸ்து உண்டா என்பதை கேப்டவுன் மகாநாடு உலகத்திற்கு காட்டப்போகிறது. லண்டன் மகாநாடு முடிந்த இந்த சமயத்தில் கேப்டவுன் மகாநாடும் நடப்பது இந்தியர் கண்களை திறக்க ஒரு கருவியாய் இருக்குமென்று நம்புகிறோம். கேப்டவுன் மகாநாடு எப்படி முடிந்தாலும் நமக்கு கவலையில்லை. மகாத்மா சொல்லுகிறபடி, இந்தியா சுயராஜ்யம் பெற்றாலொழிய வெளிநாட்டு இந்தியருக்கு விமோசனம் கிடைக்காது. ஆனால் அந்த சுயராஜ்யம் உடனே வேண்டும் என்பதாக கேப்டவுன் மகாநாடு விளக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

## உண்மை சொன்னால் உடம்பெரிச்சல்.

இந்தியாவிலுள்ள வெள்ளையரில், மண்ணாசையை கண்டிப்பவர்கள் வெகு சொற்பம். அத்தி பூத்தாற்போல் காணப்படுகிறார்கள். நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக் காரனாம். அடக்குமுறை ஆவேசமும், அடக்கி யாளும் ஆவலும் கொண்ட வெள்ளையர் பெருத்திருக்கும் இந்நாட்டில், சமதர்ம நோக்கங் கொண்ட வெள்ளையரை பைத்தியக்காரர் என்றே சொல்லுகிறார்கள். மகாத்மாவிடம் அன்பு கொண்டதற்காக மதுரை பசுமலையிலிருந்த ஒரு வெள்ளை பாதிரியாரை மூட்டை முடிச்சுகளுடன் சென்ற வருஷம் அனுப்பினார்கள். இப்பொழுது மற்றொரு விசேஷம் நடந்திருக்கிறது. புரபசர் கிறிஸ்டோபர் ஆக்ராயிட் என்ற வெள்ளையர், கல்கத்தா செண்ட் பால்ஸ் கலாசாலையில் ஒரு பண்டிதர். சிட்டகாங்கில் போலீசார் செய்த அக்கிரமங்களை கண்டித்து அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். நியாயபுத்தியுள்ள ஒவ்வொரு மனிதனும் அப்படியே செய்வான். ஆனால் சர்க்காருக்கு அது பிடிக்க வில்லை. உள்ளதைச் சொன்னால் உடம்பெரியுமல்லவா? உடனே கிறிஸ்டோபரை கப்பலேற்றி சீமைக்கு அனுப்பிவிட்டார்கள். வங்காளத்தில் பிரிட்டிஷ் நீதி இந்த விதமாக தாண்டவமாடுகிறது.

---

## தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர் 8உ

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | | ரூ. | 30—0—0 |
| சவரன் சில்லரை | | ரூ. | 19—4—0 |
| சீமை வெள்ளி | 100 | ரூ. எடை | 16—8—0 |
| ,, | | ரூ. எடை | 0—10—0 |

Koviloor Digital Library



# தொழிற் கட்சி ஆதரவு.

ஸ்ரீ ஜார்ஜ் லான்ஸ்பரி தொழிற்கட்சி தலைவர்களில் ஒருவர். டெயிலி ஹெரால்ட் பத்திரிகைக்கு வெகுகாலம் ஆசிரியராய் இருந்தார். தொழிற்கட்சி சர்க்காரில் ஒரு மந்திரியாய் இருந்தார். அவர் லண்டனில் பேசியதாவது:—

தங்களைத் தாங்களே ஆட்சி புரியும் உரிமையை இந்தியர் வேண்டி நிற்கின்றனர். ஸ்ரீ. சர்சிலின் எண்ணங்களைப் பற்றி எனக்கு கவலையில்லை. மகோன்னத திசையை அடைவதாயினும், அல்லது பாழடைந்து போவதாயினும், ஒவ்வொரு தேசத்திற்கும், தனக்கு இஷ்டமான வழியை பின்பற்றி செல்லுவதற்கு பூர்ணமான உரிமையுண்டு. இப்புனிதமான உரிமையில் நான் தீவிரமான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தங்கள் தாய்நாட்டை தங்களுக்கு விருப்பமான முறையில் ஆட்சி புரிவதற்கு, பூர்ணமான, முடிவான சுதந்திரம் உண்டு. இதை தொழில் கட்சி நிபந்தனை சிறிது மின்றி, ஆதரிக்கின்றது.

ஒவ்வொரு சர்க்காருக்கும், கலகத்தை யடக்கி சட்டத்தை நிலைநாட்டும் பொறுப்பு உண்டு; ஆனால் கலகத்தின் காரணங்களையும் அறிந்து இவைகளை அகற்றும் பொறுப்பும் அரசியல் வாதிளுக்குண்டு என்பதை நினைவில் வைக்கவேண்டும். இக் கொள்கையை பிரதம மந்திரி பின் பற்றுவாரென்றும், வைசிராயிடமும், மண்டல கவர்னர்களிடமும், "லார்டு இர்வின் செய்ததை பின்பற்றி நீங்களும் நடந்துகொண்டு புரட்சியை யடக்குவதற்கு உடனே எடுத்துக்கொள்ள வேண்டிய முறைகளைக் குறித்து தெரிவியுங்கள்". என்று ஸ்ரீ மாகடெனல்டு கூறுவார் என்றும் தொழிற் கட்சி எதிர்பார்க்கிறது

இவ்வாறு செய்தால், இந்தியாவில் சமாதானமும், சுபிக்ஷமும் நிலவவேண்டுமானால், இந்தியாவிற்கு பூர்ணமான தேசிய உரிமைகளை அளிப்பதே சிறந்த வழியென்பது கன்சர்வேடிவ் சர்க்காருக்கு நன்கு விளங்குமென்பது நிச்சயம்.

---

சுபாஷ் சந்திரபோஸ் சரித்திரம்
விலை 1 அணா.
"காந்தி" ஆபீஸ், 2, பவழக்கார தெரு, சென்னை.

# பிரிட்டன்—மகாத்மா பிரிவு

சனிக்கிழமை காலை 4 மணிக்கு மகாத்மா எழுந்தார். காலைக் கடன்களை முடித்து விட்டு, கிங்ஸி ஹாலில் உள்ளவர்களிடம் விடை பெற்றார். விடை பெற்ற காட்சி உருக்கமாயிருந்தது. தெருக்களில் ஏராளமான ஜனங்கள்கூடியிருந்தார்கள. சரியாக 8-½ மணிக்கு லண்டன் விக்டோரியா ரயில்வே ஸ்டேஷனுக்கு விஜயமானார். ஸ்டேஷனில் வெள்ளையரும் இந்தியருமாக ஏராளமாய் காந்தி குல்லாய் தரித்து கூடியிருந்தார்கள். பத்திரிகைகளுக்கு படம் பிடிக்கிறவர்கள் கூட்டத்திற்கும் குறைவில்லை. லான்ஸ்பரி, மாளவியா சென்குப்தா, சரோஜனி தேவி, டாக்டர் தத்தர், போலக் ரெயினல்ட்ஸ் முதலியோரும் வந்திருந்தனர். மகாத்மா மிகுந்த உற்சாகத்தோடு விடை பெற்றுக் கொண்டார். அவர் லண்டனுக்கு வரும்போது இருந்த சாமான்களைவிட லண்டனைவிட்டுப் புறப்படும்போது மூட்டைகள் ஏராளமாயிருந்தன. எல்லாம் வட்டமேஜை மகாநாடு சம்பந்தமான தஸ்தாவேஜிகள் தான். நண்பர்கள் மகாத்மாவுக்கு ஜே, வந்தே மாதரம் என்று கோஷமிட மகாத்மா ஏறியிருந்த ரயில் சரியாக 9-மணிக்கு புறப்பட்டது. போக்ஸ்டோன் என்ற துறைமுகத்திற்கு ரயில் வண்டி 9-40-க்கு வந்து சேர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் மகாத்மாவை வரவேற்று கப்பலுக்கு அழைத்துச் சென்றார்.. கப்பலில் ஏறி மகாத்மா பிரஞ்சு துறைமுகமாகிய கார்டி நார்ட் போய்ச் சேர்ந்தார். அங்கே இந்தியரும், பிரஞ்சு போலீசாரும் அவரை வரவேற்றனர். போலீஸ் கமிஷனர் மகாத்மாவோடு கைகோர்த்துக் கொண்டு ஏராளமாக கூடியிருந்த ஜனங்களுக்கு இடையே மோட்டாருக்கு அழைத்துச் சென்றார். பின்னர் செயின்ட் லாஜேர் என்ற விடுதியிலுள்ள ஹோட்டலில் இந்தியர் அவருக்கு வரவேற்பு அளித்தனர். புத்தரைப்போல சம்மணம் போட்டு மகாத்மா ஒரு மேஜை மீது உட்கார்ந்துகொண்டு பிரசங்கம் செய்தார். பிரதம மந்திரி பேச்சைப்பார்த்து தமக்கு திருப்தி ஏற்படவில்லையென்றும், சமாசம் ஏற்பட வழியிருப்பதாய் தெரியவில்லையென்றும், இந்தியர் எப்பொழுது விடுதலை பெறுவார்கள் என்பது கடவுளுக்கே தெரியுமென்றும் மகாத்மா சொன்னார்.

Koviloor Digital Library



# லாயட் ஜார்ஜ் ஜோசியம்.

பம்பாய் கார்ப்பரேஷன் உபசாரப் பத்திரத்திற்கு ஸ்ரீ. லாயட் ஜார்ஜ் பதில் சொல்லியதாவது:—

யுத்த சமயத்தில் உங்கள் மகத்தான தேசம் அளித்த உதவியை இச் சந்தர்ப்பத்தில் போற்றுகிறேன். மேல் நிலையில் எங்கள் விடுதலைக்காக நாங்கள் போராடிக்கொண்டிருக்கையில் 10 லக்ஷத்திற்கு மேற்பட்ட இந்திய இளம் சிங்கங்கள் எங்கள் உதவிக்கு வந்தனர். தற்போது உலகத்திலுள்ள பிரச்னையைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராய பேதங்களிருக்கினும் நாங்கள் மேல்நிலை விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கையில், இந்தியா எங்களைக் காப்பாற்ற வந்து உதவியளித்ததை நாங்கள் என்றென்றும் மறவோம். நாமிருபாலரும் சேர்ந்து சமாசம் செய்து கொள்ள வேண்டிய முக்கிய பிரச்னைகள் பல விருக்கின்றன. நான் இங்கிலாந்தை விட்டு புறப்படுவதற்கு முன்பாக உங்கள் தேச மகத்தான தலைவரான மகாத்மா காந்தியைக் காணும் பாக்கியம் பெற்றேன். (பலத்த கரகோஷம்) மிகவும் தீவிரமாக நாள் முழுதும் உழைத்துவிட்டு, குளிர்பனி கவிழ்ந்த பிறகு இரவில் அவர் மிக அன்புகொண்டு என் இல்லம் வந்தார். இதனால் அவர் செய்த தியாகம் கொஞ்சமல்ல. அவர் என்னுடன் உட்கார்ந்து 3½ மணி நேரம் பேசினார். தமது தேசத்தின் கோரிக்கைகளை ஒப்பற்ற முறையில் மிக தெளிவாக எடுத்துக் கூறினார். அவரது வன்மைகளை நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம். நான் ஓர் அரசியல் வாதி. அவரும் ஓர் அரசியல் வாதியல்லவென்பதை நான் அறிந்து கொண்டதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனது அரசியல் உள்ளத்தில், அவர் கூறியவை யனைத்தும் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டன. அவர் மகா புத்தி கூர்மை யுள்ளவர். இது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். 3½ மணி சம்பாஷணை மிகவும் ருசிகரமானது. அவர் சொல்வன்மையும், விஷயங்களைப் பகுப்புப்படி தெளிவாக எடுத்துப் புகட்டும் ஆற்றலும் பெரிதும் ஆச்சரியகரமானதாக இருந்தது. அவருடன் 3½ மணி சம்பாஷித்ததிலிருந்து அவரது அரசியல் நிபுணத்வத்தை நான் அறிந்து கொள்ள முடிந்தது. அவர் அன்புடன் என் ஜாகைக்கு வந்து சம்பாஷித்ததற்கு, நான் பகிரங்கமாக நன்றி கூறுவதற்கு இதுவே முதல் சந்தர்ப்பமாகும். லண்டன் மகாநாடு முடிந்துவிட்டது. முடிவான தீர்மானமொன்றும் ஏற்படாவிடினும், மகாநாடு ஓரே அடியாக முறிந்துவிடாம லிருந்தது திருப்திகரமானதாகும். "மூன்றாம் முயற்சி வெற்றி கிடைக்குமென்று" வெல்ஷ் பாஷையில் ஓர் பழமொழி உண்டு. மகாநாடு இருமுறை தோற்று விட்டாலும் மூன்றாம் முறை நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம். மகாநாட்டின் கஷ்டங்களை அறிந்தவர்கள் மகாநாடு சாதித்துள்ளவைகளை ஒருவாறு அறிய முடியும். பொறுமையும் விடா முயற்சியுமே இப்பொழுது தேவையாகும். இந்தியாவுடன் சமாசமும் நட்புமேற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணம் பிரிட்டிஷார் மனதில் குடிகொண்டிருக்கிறது. அவ்வித எண்ணம் சித்தியாகுமென நான் நம்புகிறேன். உங்கள் தேச நாகரிகம், எங்கள் தேசத்தைவிட மிக புராதனமானது. உங்கள் மேலான வேதாந்த தத்துவங்களுடனும், இதிகாசங்களுடனும் கூடிய உயரிய நாகரிகம் பிரிட்டனுக்கு மட்டுமல்லாது உலகத்திற்கே உபகாரார்த்தமாக இருந்து வருகிறது. எதிர் காலத்தில் நான் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

குறிப்பு:—யுத்தகாலத்தில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாயிருந்து பெரும்போர் எடுத்தவர் லாயட் ஜார்ஜ் அவர் சிலோனுக்கு போகிறவழியில் சென்ற வெள்ளிக்கிழமை பம்பாயில் சில மணி நேரம் தங்கினார். இந்தியா யுத்தத்திற்கு உதவி செய்தால், யுத்தம் முடிந்தவுடன் சுயராஜ்யம் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றிய பேர்வழி இந்த லாயட் ஜார்ஜ்தான். இப்பொழுது இந்தியாவைப் பற்றி பிரியமாய் பேசுகிறார். அதிகாரத்தில் இல்லாமல் இருக்கும் போது ஆசை வார்த்தைகள் காட்டி தங்களுக்கு பலம் தேடிக் கொள்வதும், அதிகாரத்திற்கு வந்தவுடன் பழய வாக்குறுதிகளை குப்பைத் தொட்டியில் போடுவதும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் பிறவிக் குணம். உடனே சுயராஜ்யம் கொடுத்து விட்டு மறுவேலை பார்க்க வேண்டும் என்று மெக்டனால்ட் 20 வருஷங்களுக்கு முன்பு ஒரு பத்தகம் எழுதினார். இப்பொழுது அவரே பிரதம மந்திரியாயிருந்தும் என்ன செய்து விட்டார்? ஆகவே லாயட் ஜார்ஜ் போன்ற பேர்வழிகளின் இனிய பேச்சைக் கேட்டு யாரும் ஏமாந்து போக வேண்டாம். இந்தியாவுடன் சமாசமும் நட்பும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டு மென்ற எண்ணம் பிரிட்டிஷார் மனதில் குடிகொண்டிருப்பதாயும், அது சித்தியடையு மென்று நம்பு

Koviloor Digital Library



# அடக்கு முறைக்கு பதில்

வங்காள மாகாண மகாநாடு பெர்ஹாம்பூரில் 5உ கூடியது. வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் அமளி குமிழிபோல நிலைமையில் இந்த மகாநாடு மிகவும் முக்கியமானது என்பதில் சந்தேகமும் உண்டோ? இதமது வாய்த்த தலைவரும் ஒப்பற்ற தலைவராகும். அவர் பெயர் ஹரிதயால் நாக். மிகுந்த தீவிர ஒத்துழையாதார் காந்தியத்தில் அளவற்ற பற்றுக்கொண்டவர். 1921ம் வருஷம் வங்காளத்தில் ஒத்துழையாமை பலமாய் இருக்கும்போது, ஆயிரக்கணக்கானவர்கள் சிறைசென்றதை நண்பர்கள் அறிவார்கள். அச்சமயம் தேசபந்து தாஸ் கைதியானார். அவருக்குப் பின் வங்காளத்தலைவராக இந்த ஹரிதயால் நாக் வந்தார். ஆகவே இச்சமயம், இந்த நெருக்கடியான வேளையில் பாபுஹரிதயாலைக் மீண்டும் வெளிவந்ததை நாட வாவேங்கிறோம். அவர் தலைமையில் வங்காளியர் அஹிம்சா தர்மத்தை கைக்கொண்டு, சர்க்கார் அடக்குமுறைகளை எதிர்த்து வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறோம். அவர் மகாநாட்டில் பேசியதாவது:—

"காங்கிரஸ் இறந்து போவதற்காகத் தோன்றவில்லை. அதை நசுக்குவதற்காக எவ்வளவு முயற்சிகளைச் செய்த போதிலும் அவைகளுக்கும் சமாளித்து உயிர் வாழ்ந்தே தீரும். காங்கிரசின் கௌரவத்தையும், அந்தஸ்தையும் உயர்த்துவதற்காக இந்தியர் எவ்வளவு தியாகஞ் செய்த போதிலும் அந்த தியாகம் பொருத்தமானதே. தேசாபிமானங் கொண்ட ஒவ்வொரு இந்தியனும் தேசம் சுதந்தரம் பெறும்படிச் செய்ய வேண்டுமென்ற பிரதிக்ஞையைச் செய்து கொள்வதோடு காங்கிரஸ் கொடியின் கீழ் யாவரும் ஒன்று சேர வேண்டியதும் அவசியம். நமது சுதந்தரப் போர் வெற்றிகரமாக முடியவேண்டுமாகில், காங்கிரசை பலப்படுத்த வேண்டும். சர்க்கார் சட்டத்தையும், அமைதியையும் காப்பதாகக் கூறி, கொண்டுவரும் ஒவ்வொரு அடக்கு முறையும் காங்கிரஸ் இயக்கத்தை நசுக்குவதன் உட்கருத்துடனேயேயாகும். ஆனால் தடியடிக்கும், துப்பாக்கி வெடிக்கும் தப்பி காங்கிரஸ் இருந்து கொண்டு தானிருக்கிறது. சில புத்தி கெட்ட இளைஞர்கள், பலாத்காரத்தில் இறங்கி விட்டால் சீக்கிரத்தில் சுதந்தரம் பெற்று விடலாமென மிகுந்த மோசமான ஒரு அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு செய்ய முற்பட்ட காரியத்தை சாக்காக வைத்துக் கொண்டு அநேக காங்கிரஸ்காரர்களை சர்க்கார் விசாரணையின்றி சிறையிலடைத்து வைத்திருக்கிறார்கள். ஹிஜ்லி, சிட்டகாங், டாக்கா முதலிய விடங்களில் நடந்த சம்பவங்களை கவனித்தால் பொறுப்பற்றவர்களுக்கு பொறுப்பு கிடைத்து விட்டால் எவ்விதம் அவற்றை துஷ்பிரயோகஞ் செய்து விடுகிறார்களென்பது நன்கு விளங்கும். உலகத்திற்கே உஜ்ஜீவனத்தையளிக்க கூடியது அஹிம்சா தர்மமே. அதிலும் நிராயுதபாணிகளாகிய இந்தியருக்கு அகிம்சையினும் சிறந்த ஆயுதம் ஒன்றில்லை. பரதேச துணிகளையும், வெளிநாட்டு சர்க்கரை, உப்பு முதலியவைகளையும் அடியோடு பகிஷ்கரித்துவிட வேண்டியது அவசியம். சென்ற சட்ட மறுப்பு காலத்தில் பெண்கள் செய்த உயர்ந்த சேவையை நான் பாராட்டுகிறேன். திரும்பவும் அப்போர் ஆரம்பமாகுமாகில் யாவரும் ஊக்கத்துடன் ஈடுபடுவார்களென்று நம்புகின்றேன். லண்டன் மகாநாட்டில் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்குமென்று நம்புவதற்கில்லை. இங்கிருந்து சென்ற சில பிரதிநிதிகள் தங்கள் ராஜபக்தியை தெரிவித்துக்கொள்ள முற்பட்ட வேகத்தில், இந்தியர் மீதுகூட நம்பிக்கையில்லையெனக்கூறி விட்டதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். லண்டன்மகாநாடு டில்லி ஒப்பந்தத்தை சமாதி வைத்து விட்டது. நாம் இனி செய்யவேண்டியது என்ன என்பதைதான் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது."

---

வதாகவும் லாயட் ஜார்ஜ் ஜோசியம் சொல்லுகிறார். பிரிட்டிஷாருக்கு அத்தகைய நற்புத்தி இருந்திருந்தால், லண்டன் மகாநாடு இப்படிமோசமாய் முடிந்திருக்காது. வங்காளத்தில அவசரச் சட்டம் வந்திருக்காது. ஆகவே லயட் ஜார்ஜ் போன்ற பழம் பெருச்சாளிகளிடம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். யுத்தத்திற்கு உதவி செய்ததற்கு பதில் பாஞ்சால அட்டூழியம் நடந்தது, இந்த லாயிட் ஜார்ஜ் காலத்தில் தான என்பதை மறந்துவிட வேண்டாம். ரௌலட் சட்டத்திற்கு இதே லாயிட் ஜார்ஜ் தான் ஆதரவு கொடுத்தார். இந்திய சிவில் சர்வீஸ் கோஷ்டியைய வானமாளவப் புகழ்ந்து அவர்கள் சர்க்கரைத் தாங்கும் இரும்புத் தூண்கள் என்று பேசியது இதே லாயிட் ஜார்ஜ்தான். அப்பேர்ப்பட்டவர் இன்று எப்படி நல்லவராய் விட முடியும்? இன்று அவருக்கு பதவியோ அதிகாரமோ இல்லை. பல் பிடுங்கிய பாம்பைப் போல கிடக்கிறார். அதனால் இந்தியாவிற்காக கண்ணீர் விடுகிறார். இதுவே ரகசியம்.

Koviloor Digital Library



# பிரிட்டனுக்கு மகாத்மா செய்தி.

மகாத்மா காந்தி கப்பலேறும் போது, ராய்ட்டர் ஸ்தாபனப் பிரதிநிதியிடம், பிரிட்டனுக்கு கடைசியாக விடுத்த பிரிவுச் செய்தி வருமாறு:—

"இந்தியாவிற்கு திரும்புவதைப் பற்றி மகிழ்ச்சியும், இங்கிலாந்தை விட்டு நீங்குவதைப் பற்றி வருத்தம், இதுவே எனது சந்தோஷமான நிலைமை.

"இங்கிலீஷ்காரர்கள் நான் சொல்லுவதை நம்ப வேண்டும். உங்களுடன் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டால், துவேஷமும் வெறுப்பும் கொண்ட போராட்டத்தில் ஓர் நாளும் இறங்க மாட்டேன் என்பதை நம்புங்கள். எனக்கு மிகவும் நெருங்கிய உறவினரிடம் சண்டையிடுவது போலவே, உங்களிடமும் பூர்ணமான அன்புடனேயே போர் தொடுப்பேன். ஆதலின் தேசிய சுயமரியாதைக்கு பாதகமில்லாத வரை, உங்களுடன் ஒத்துழைக்க என்னாலியன்றவரை பாடுபடுவேன் என்பது நிச்சயம்.

"ஆனால் வங்காள அவசரச்சட்டத்தை நான் திரும்பத் திரும்பிப் பார்க்குந் தோறும் எனது நம்பிக்கைகள் அனைத்தும் பாழடைந்து விடுமென்று பெரிய அவநம்பிக்கையும், கவலையும் தோன்றுகின்றன. கொலை முயற்சிக்கும் சாக்கு தண்டனை விதிக்க அனுமதி யளிக்கும் கொடுமையான விதியைவிட கொடிய விதிகளும் இதிலிருக்கின்றன. சில உயிர்களை பலியாகக் கொடுத்து விடுவதை நாங்கள் பெரிதாகக் கொள்ளோம். ஆனால் ஓர் பெரிய தேசத்தின் சக்தியையும் ஆண்மையையும், அழிக்க முயலுவதை, ஒரு நாளும் கவலையின்றி பார்த்திருக்க முடியாது. ஈவிரக்க மற்ற அபாயகர அதிகார அமுல் என நான் இதைக் கருதுகின்றேன். ஆகவே பிரிட்டிஷார் இந்த அவசர சட்டத்தை, நன்கு படித்துப் பார்த்து உடனே இதை வாபீஸ் வாங்கிக்கொள்ளுமாறு வற்புறுத்துவார்களென்று நம்புகிறேன்.

"ஆங்கிலேயரிடம் துவேஷமும், வெறுப்பும் இல்லாமல் சுயேச்சைக்காக போராடும்படியே என் நாட்டினரிடம் நான் எப்பொழுதும் வேண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். நான் இங்கிலாந்துக்கு வந்ததிலிருந்து, ஆங்கிலேயர் மீது கடுகளவும் துவேஷம் கொள்ளக் கூடாதென்பதை மீண்டும் எனது ஜனங்களிடையே வற்புறுத்துவது அத்தியாவசியம் என்று கருதுகின்றேன்."

இங்கிலாந்தை விட்டுப் புறப்படும் போது, கடைசியாக மகாத்மா காந்தி, இந்திய சங்கத்தின் மூலம் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்:—

"ராணுவம், அன்னிய நாட்டு விவகாரங்கள், நிதி நிர்வாகம் முதலியவைகளின் பூர்ண நிர்வாகம் உட்பட பூர்ண சுயேச்சையையே காங்கிரஸ் வேண்டுகின்றது. பிரிட்டனுடன் சமமான அந்தஸ்தும், இருவரில் யார் விரும்பினாலும், கொடுக்கல், வாங்கல்களை பரஸ்பரமாகத் தீர்த்துக் கொண்டு பந்தத்தை யறுத்துக் கொள்ளுமாறு, பிரிட்டனிடம் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதே காங்கிரசின் விருப்பம்.

"இந்தியாவின் நன்மைக்கான பாதுகாப்புகளை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளும். பாரபட்ச பற்ற விசாரணை சபை கூறும் தீர்ப்பை ஒப்புக்கொண்டு நியாயமாக இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டிய கடன்களை ஏற்றுக் கொள்ளவும் காங்கிரஸ் சம்மதிக்கின்றது.

பூர்ண தேசீயத்தையே அடிப்படையாகக் கொண்ட கொள்கையின் படி மைனாரிட்டி பிரச்னைகளை தீர்த்து வைப்பதே காங்கிரசின் நோக்கம். ஆனால், அவசியமாயின், சரித்திர சம்பந்தமான காரணங்களை முன்னிட்டு, தவிர்க்க முடியாத தவறெனக் கருதி, முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கவும் காங்கிரஸ் சம்மதிக்கும்.

"தீண்டாதாரின்" நலனை காங்கிரஸ் தனது முக்கிய கடனாகக் கொண்டு உழைத்துவரும். "தீண்டாமையை" அறவே ஒழித்து ஓட்டிவிட பாடுபட்டு வரும் இக்காலத்தில், "தீண்டாமைக்கு" சட்ட பூர்வமாக ஓர் நிரந்தர ஸ்தானமளித்து, அவர்களைத் தனியாகப் பிரித்து ஒதுக்கி வைப்பது நேர்மையாகாது."

நிறம், ஜாதி, மதம் முதலியவைகளால், அரசியலில் எவருக்கும் எவ்விதமான தடையுமிருக்காத சர்வ ஜன வாக்குரிமையே, காங்கிரசின் முக்கொள்கையாததால், தேச சேவை செய்யும் எந்த மைனாரிட்டியின் பிரதிநிதியும் சட்ட சபைகளுக்கு வருவதில், சிறிதும் கஷ்டமிருக்காது."

Koviloor Digital Library



## வேலை கேட்டால் உதையா?

(எம்டன் எழுதுவது)

கேள்வி கேட்ட அன்பரே! எனது மற்ற பதிலை அனுபவத்தில் அறிந்து பதிலெழுத சற்று சவகாசப் பட்டாலும் ஏஜெண்டின் உள்ளக் கருத்தை நன்கு தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பங்கிடைத்தது. தாங்கள் எழுதிய படி தொழிலாளர்கள் குறையை நேரில் தெரிவித்தும், கதை வட்ட மேஜை முட்டை யிட்ட கதையாய் விட்டதைக் கேட்க நீரும் ஆச்சரிய மடைவீர்.

சில தினங்களுக்கு முன் ஆலையில் வேலையில்லை யென்று பல டிபார்ட்மெண்டுகளிலு மிருந்து சுமார் 500 பேருக்கு மேல் எடுக்கப்பட்டனர். பல்லாண்டு ஆலையில் உழைத்த நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை திடீரென்று எடுப்பது எத்தகைய கொடுமை யென்று வெள்ளையரின் கடின சித்தம் கருதவில்லை. பாயிலர் டிபார்ட்மெண்டிருந்து தள்ளப் பட்ட தொழிலாளர் சிலர் துரையைக் கெஞ்சிக்கேட்போம்,கால்வயிறு கஞ்சிக்காவது வழி தேடுவோர் எனக் கருதி கூட்டமாக சென்று ஆலை உதவி அதிகாரி ஒருவரிடம் தங்கள் வயிற்றைக் காட்டி வேலை கேட்டனர். அந்தத் துரை என்ன செய்தானும்! எடுத்தான் ஒரு தடிக்கயிற்றை. சாடினான் பலரை! உதைத்தான் அநேகரை. காரி உமிழ்ந்தான் முகத்தில். பலர் உதை அடி பட்டனர். பலர் கீழே விழுந்து காய மடைந்தனர். உதை பட்ட கூட்டம் ஓடி மறைந்தது. பரமசாதுவான தொழிலாளர் கூட்டம் 'கஞ்சிக்கில்லையடா ராகவா' என ஏங்கும் போது அவர்களால் வேறென்ன செய்யமுடியும்? நேரில் வேலை கேட்ட பலனிதுவோ!

இது எனக்குத் தக்க ஆதாரத்துடன் தெரிய வந்ததும் அன்பர் குறிப்பிட்ட படி துரைக்கு உடனே கடிதம் எழுதி விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டதுடன், எனக்கும் பதில் தெரிவிக்கச் சொன்னேன். நேரில் ஒருவரிடமும் சொல்லி அனுப்பினேன். துரை தபால்வந்தது பதில் கிடையாது என்று கூறிவிட்டாராம். இது பற்றியாதொரு விசாரணையும் செய்யவில்லையாம்.

தொழிலாளர் பட்ட உதை தேவருக்கே அர்ப்பணம். நேரில் கேட்டும் குறையைத் தெரிவித்தும் அது அலட்சியப் படுத்தப்படுமானால் "எம்டன்" ஏன் காந்தியில் கிளர்ச்சி செய்யப் படாது? அன்பரே அறிவீர் இதனை.

## டெல்லி ராஜியின் கதி

ஸ்ரீ. ராம்சே மெக்டனல்டு லண்டன் மகாநாட்டிலும் பார்லிமெண்டு சபையிலும் கூறியவைகள், டெல்லி ராஜி ஒப்பந்தத்தை எவ்விதம் பாதிக்குமெனெ, ஒரு பத்திரிகை பிரதிநிதி, சர்தார் வல்லபாய் பட்டேலை அணுகி கேட்டதற்கு.சர்தார் கூறியதாவது:—

"தற்போது பல மாகாணங்களிலும் காங்கிரஸ்காரர்கள் பொதுஜன தொண்டு சம்மந்தமாய் செய்து கொண்டுவரும் வேலையை மேற்படி இரு அறிக்கைகளும் பாதிக்கா. பிரிட்டிஷ் சர்க்கார் கொடுக்கும் வாக்குகளை நிறைவேற்றி வைப்பரென்று காங்கிரஸ்காரர்கள் எப்பொழுதும் நம்பியதே கிடையாது. வெறும் வாதங்களால் சர்க்காரிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று விடலாமென்றும் நாங்கள் எண்ணியிருக்க வில்லை. பிரதம மந்திரியின் அறிக்கையும், பார்லிமெண்ட் விவாதங்களும் காங்கிரஸ்காரர்கள் டெல்லி ஒப்பந்தப்படி அனுசரித்து வருவதை பாதிக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. காரியக் கமிட்டி வேறு விதமாக தீர்மானிக்கும் வரையிலோ, அன்றி சர்க்கார் அவ்வொப்பந்தத்தை ரத்து செய்யும் வரையிலோ மேற்படி ஒப்பந்தப்படி காங்கிரஸ்காரர் நடக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி அநேகமாக இம்மாதம் முடிவிற்குள் இந்தியா திரும்பிவிடுவார். பின்னர் நிலைமை பூராவையும் காரியக்கமிட்டி பரிசீலனை செய்யும்.

## எட்டிக்கு போட்டி

வைசிராய்க்கு நினைத்தபோதெல்லாம் அவசரச் சட்டம் செய்ய அதிகார மிருந்தால், திக்கற்ற ஜனங்களுக்கு பதிலுக்கு பதில் செய்ய கடவுள் வழிகாட்டாமல் இருக்கவில்லை. வங்காளத்தில் வைசிராய் அவசரச்சட்டம் பிரயோகித்தார். வங்காளியர் சும்மாயிருக்கவில்லை. சகல பிரிட்டிஷ் சாமான்களையும் பகிஷ்காரம் செய்வது என்று தீர்மானித்திருக்கிறார்கள். உப்பு முதல் கற்பூரம் வரையுள்ள எல்லா பிரிட்டிஷ் சரக்குகளையும் வங்காளியர் இனி வங்காளத்தில் தலை நீட்டாமல் செய்து விடுவார்கள். இதை எந்த அவசரச்சட்டமும் தடுக்கமுடியாது. பகிஷ்காரம் முற்ற முற்ற வில்லியர்ஸ் வியாபாரக் கூட்டம் விலவிலத்து போய் விடும்.

Koviloor Digital Library



# சத்தியமூர்த்தியின் சுறுசுறுப்பு.

(“நாடோடி” எழுதுகிறார்)

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சென்னை ஜில்லா காங்கிரஸ் தலைவர். அதோடு தலைவர்களில் ஒருவர். அவரை வட்டமேஜை மகாநாட்டின் முடிவிற்குப் பின்னால் இருந்து சுறுசுறுப்பாக வேலை செய்வதாக ஒரு வதந்தி சொல்லுகிறது. மகா நாட்டைப்பற்றி சத்தியமூர்த்திக்கு என்ன சம்பந்தம்? இவர் ஏன் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். இந்த அர்த்தமற்ற, சாரமற்ற கேள்விகளுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கப் போவதில்லை. முன்னால் சுயராஜ்யக் கட்சியார் வெற்றியடைந்த போது, சத்தியமூர்த்தி கோஷ்டியார் முட்டுக் கட்டை போடத்தானே சட்ட சபைக்குச் சென்றார்கள்? டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை அமைப்பதில் ஏன் இராப் பகலாய் பாடுபட்டார்கள்? முட்டுக் கட்டை போடச் சென்றது உண்மையானால், டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை அமைப்பதில் சத்தியமூர்த்திக்கு வந்த சிரத்தையென்ன? அது தான் போகட்டும். முதலாவது மகாநாட்டில் தலைமை வகித்தபோது, ஸ்தல ஸ்தாபனங்களை கைப்பற்ற வேண்டுமென்று உபதேசம் செய்தாரே அது எதற்காக? இந்தக் கேள்விகளுக் கெல்லாம் நீங்கள் பதில் சொல்லும் காலத்தில், நானும் முதலில் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லுகிறேன்.

வட்டமேஜை மகாநாட்டின் முடிவைப் பற்றி யோசிக்க சத்தியமூர்த்தி வீட்டில் ஒரு கூட்டம் கூடியது. ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் முதல் ஸ்ரீ. டி. ரங்காச்சாரியார் வரை பல கட்சியார்களும் வந்திருந்தார்களாம். வட்டமேஜை மகாநாட்டின் பலாபலன்களைப் பற்றி ஆலோசனை செய்தார்களாம். என்ன முடிவுக்கு சத்தியமூர்த்தி வந்தாரோ நாம் அறியோம். மாகாண சுயாட்சியை முதலில் வாங்கிக் கொள்ள வேண்டுமென்பது அவர் விருப்பம் என்று ஒரு வதந்தி சொல்லுகிறது. இது உண்மையாயிருந்தாலும், காங்கிரஸ் தீர்மானித்தாலொழிய சத்தியமூர்த்தியால் ஒன்றும் செய்துவிட முடியாது. அது ஒரு பக்கம் இருக்கட்டும். மாகாண சுயாட்சியும், மந்திரி பதவிகளும் ஒரு மூலையில் கிடக்கட்டும். காங்கிரஸ் வேலைகள் எவ்வளவோ இருக்க, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, வட்டமேஜை மகாநாட்டில் சத்தியமூர்த்தியின் சுறுசுறுப்பான மூளை பாய்வானேன்? சென்னையைப் பொறுத்தவரையில், தீண்டாமையை போக்க வேண்டியது முக்கியமேயொழிய, வாக்சாலமாக இழுத்து, நீட்டி, வெட்டி, ஒய்யாரமாய் பேசுவது அவ்வளவு முக்கியமல்ல. தீண்டாமையை போக்க நாசிக்கிலும், குருவாயூரிலும் சத்தியாக்கிரகம் நடைபெறுகிறது. திருநெல்வேலியிலும், சிவகங்கையிலும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க காங்கிரஸ் கமிட்டி ஏற்பாடு செய்து வருகிறது. சென்னை மட்டும்—சத்தியமூர்த்தி போன்ற அகில இந்திய தலைவர்கள் மிளிரும் சென்னை மட்டும்—தூங்குவானேன்? நண்பர் சத்தியமூர்த்தியே, உமது மூளையில் இது ஏன் நுழையவில்லை? வட்டமேஜையை குப்பையில் தள்ளும். ஸ்தலஸ்தாபன தேர்தல் யோசனையை மூலையில் போடும். தேர்தல் தேர்தல் என்ற பைத்தியத்தை விட்டு நீங்கும். தீண்டாமையை போக்க முன் வாரும். உமது வேலையால் தீண்டாதாருக்கு காங்கிரஸ் மீது அபிமானம் ஏற்படும்படி செய்யும். நாளையே நீர் ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பித்தால், உமக்கு ஆயிரக் கணக்கான தொண்டர்களை சேர்த்து தருகிறோம். ஆதரவைப் பற்றி உமக்கு கவலைவேண்டாம். தீண்டாமையை போக்குவதே உண்மையான காங்கிரஸ் வேலை. அதைச் செய்யாமல், பிஞ்சராப் போல் ராஜீய வாதிகளுடன் உறவாடிக்கொண்டிருப்பது வெறும் மானக்கேடு. தீண்டாமையை போக்க உமக்குள்ள சிரத்தையை காரியத்தில் காட்ட ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

---

## போர் ஆரம்பம்

ஐக்கிய மாகாணத்தில் சர்க்கார் வழிக்கு வருவதாயில்லை. ஆகவே வரிமறுப்பு ஆரம்பிப்பதைத் தவிர வேறுவழியில்லை. ஐக்கிய மாகாண காங்கிரஸ் விவசாய கமிட்டி, ராய்பரேலி, எட்டாவா, கான்பூர், யூனோ ஆகிய நாலு ஜில்லாக்களில் நிலவரி மறுப்பு ஆரம்பிக்கலாம் என்று அநுமதி கொடுத்துவிட்டது. சட்டமறுப்பை அடக்க ஐக்கிய மாகாணத்தில் புதிதாக அவசரச்சட்டம் செய்தால், அதைப்போல மூடத்தனமான நடத்தை வேறொன்றுமிருக்காது. சர்தார் பட்டேல் சொல்லுகிறபடி ராஜி செய்து கொள்ளுவதே கௌரவமாயிருக்கும் என்று கவர்னர் ஹேலிக்கு எச்சரிக்கிறோம்.

Edited, Printed & Published by T. S. Chockalingam. at Lakshmi Press. 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா
(மலாக் 2 சென்ட்)

# காந்தி


திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்:
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை, 1931 டிசம்பர் 12உ, பிரஜோற்பத்தி கார்த்திகைமீ 27உ சனிக்கிழமை | இதழ் 14

## சட்ட மறுப்பு உதயம்



ஐக்கிய மாகாணத்தில் சட்ட மறுப்பு ஆரம்பமாகிறது.

Koviloor Digital Library



# இர்வின் சூடு.

லார்ட் இர்வின் ஒரு நல்ல வேலை செய்தார். லார்ட்ஸ் சபையில் பழைய பம்பாய் கவர்னர் லார்ட் லாயிட் ஒரு திருத்தம் கொண்டு வந்தார். இந்தியாவிற்கு பொறுப்பாட்சி கொடுக்க கூடாதென்று கத்தினார். எகிப்தில் கல்தா வாங்கியவர் இந்தப் பேர்வழிதான் என்பதை நண்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம். அடக்கு முறையால் தேசியத்தை நசுக்கிவிடலா மென்பது இந்த ஆளின் நினைப்பு. இம்மாதிரி புத்தி கெட்ட நபர்களுக்கு லார்ட் இர்வின் லார்ட்ஸ் சபையில் ஒரு சூடு கொடுத்தார். அடக்கு முறை இந்தியாவில் தாண்டவமாடுகிறது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் சர்க்காரைப்பொறுத்தவரையில் காகிதத்திலேயே நிற்கிறது. கல்கத்தாவில் லார்ட் வில்லிங்டன் பேசிய போது, வேண்டா வெறுப்போடு அவசரச் சட்டங்களை செய்வதாக சமாதானம் கூறினார். அவர் வேண்டுமென்று செய்தாலும், வேண்டாமென்று செய்தாலும் பலன் ஒன்றுதான். ஆனால் அவசரச் சட்டங்களால் வைசிராய் நினைக்கிற பலன் கிடைக்குமா? வில்லிங்டனை விட இர்வின் அதிக அநுபவமுள்ளவர். சென்ற வருஷ சட்டமறுப்பில் நேராக இருந்து பல அவசரச்சட்டங்கள் இயற்றி அநுபவம் அடைந்தவர். "கடுமையான வியாதிக்கு கடுமையான சிகிச்சை வேண்டும்" என்று கூறும் வில்லிங்டனும் அவர் தம்பி வங்காள கவர்னர் ஜாக்சனும் லார்ட் இர்வின் பிரசங்கத்தை படிப்பார்களாக. அவர் கூறுவதாவது:—

"தேசிய இயக்கம் மைனாரிட்டி கட்சியார் கிளர்ச்சி யென்றும், கடுமையான அடக்குமுறைகளால் நசுக்கி விடலா மென்றும் நினைப்பது வெறும் மாயை. புரட்சியையோ, குழப்பத்தையோ அடக்குவதற்கு வேண்டிய அதிகாரத்தை பார்லிமெண்ட் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் வெறும் அடக்குமுறைகளால் ராஜீய அதிருப்தியை அடக்கிவிடலாமென்று நினைப்பது உபயோகமற்ற யோசனை. நாம் உண்மையாக பொறுப்பாட்சிக்காக உழைக்கிறோம் என்பதை நியாய புத்தியுள்ள இந்தியாவது நம்பும்படி செய்ய வேண்டும். சென்ற வருஷம் சட்ட மறுப்பு ஆரம்பமாகு முன்பு அடக்குமுறையை பலமாக கையாள யோசித்தேன். பல அநுபவஸ்தர்களை கலந்தேன். பத்திரிகைகளையும், பேச்சுகளையும் அடியோடு நிறுத்தவும், சட்ட சபைகளை மூடிவிடவும் யோசனை செய்தோம். இவற்றையெல்லாம் செய்தால் "சமாதானம்" நிலவும். அந்த சமாதானம் வனாந்தர (சுடுகாடு) சமாதானமாகவே இருக்கும். ஆகவே அடக்கு முறைகளால் பிற்போக்கு ஏற்படுமே யொழிய முற்போக்கு ஏற்படாது என்ற முடிவுக்கு வந்தேன்,"

இதை விடத் தெளிவாக வேறு யாரும் சொல்ல முடியாது. ஊரிலுள்ளவர்களை ஜெயிலில் தள்ளி ஊரை காடாக்கி விட்டால் "சமாதானம்" நிலவலாம். ஒரு குருவி கூட சத்தம் போடாது. ஆனால் அப்புறம் சர்க்கார் யாரை ஆளுவது, எப்படி ஆளுவது என்பதை அடக்குமுறை வெறி பிடித்தவர்கள் யோசிக்கவேண்டும். இந்தியாவில் சர்க்கார் தற்சமயம் போகிற போக்கு ஒன்றும் திருப்தியாயில்லை. எந்த சர்க்காராயிருந்தாலும் சரி. அடக்கு முறைகளில் எப்பொழுது தஞ்சமடைகிறதோ அந்த வினாடியே அந்த சர்க்காருக்கு ஆளும் யோக்கியதை இல்லை யென்பது வெளியாகும். ஆளும் யோக்கியதையையும், ஜனங்களின் விருப்பையும் பெறாதவர்கள் எத்தனை அடக்குமுறைகளை கையாண்டாலும் ஒரு நாளும் சமாதானம் நிலவ முடியாது. வைசிராய் அவசரச் சட்டங்களைக் கண்டு உலகம் சிரிக்கிறது. இன்னம் சிரிசிரி யென்று சிரித்து இகழ்வதற்கு இடம் கொடுக்காமல் இருக்கவேண்டுமானால், லார்ட் இர்வின் உபதேசத்தை கேட்டு நடப்பார்களாக.

---

## ஐரோப்பாவுக்கு விமோசனம்

(மகாத்மா காந்தி)

யுத்த தளவாடங்களினாலும், போர்க் கோலங்களினாலும் ஏற்பட்ட பெருஞ் செலவுகளால் ஐரோப்பா முழுதும் அதிகமாக அவதிப்படுகின்றன. யுத்த தளவாடச் செலவுகளால் அநேக தேசங்கள் ஒழுக்கத்திலும், அபிவிருத்தியிலும் சூன்யமாகும் நிலைமையிலுமிருக்கின்றன. இந்த தொத்து நோய் இப்பொழுது ஆசியாவிற்கும் பரவி வருகிறது. ஆனால் இந்த தொல்லையிலிருந்து விலகுவதற்கு வேண்டிய நம்பிக்கை இந்தியாவிலிருந்துதான் உதயமாகி வருகிறது. இந்தியா பலாத்காரமற்ற சமாதானமுறையில் பூர்ண சுயேச்சையை அடைவதற்காக முயன்று வருகிறது. பாரபட்சமும், துவேஷமுமற்று இந்த அஹிம்சா இயக்கத்தை ஆராய்ச்சி செய்யும்படி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

Koviloor Digital Library



# மீசையில்லாத மந்திரிகள். : (தேவிதாசன் எழுதுகிறார்.)

மீசை முறுக்கி போர்தொடுக்கப் போவதாக புஜம்தட்டியவர்களுக்கு இந்த மண்ணுலகில் அளவில்லை. மீசை முறுக்குவதில் பிரமாதமாக செலவு எதுவும் ஏற்பட்டுவிடாது. கெய்சர் மீசையைப்போல முறுக்கி உயர்த்துவதும் பெரிய காரியமில்லை. ஒரு தோலா கோந்து இருந்தால் நாம் சொன்னபடி மீசை ஆடும். ஆனால் வெறும் மீசை முறுக்கால் நடக்கப்போவதென்ன? எப்பேர்ப்பட்ட கெய்சரும்கூட மீசையை முறுக்கி வெற்றிபெறவில்லை. அவர் மீசையைவிட முறுக்கிலோ, அழகிலோ வேறு எவர் மீசையும் உயர்ந்துவிட முடியாது. ஆகவே கெய்சர் தோற்றுப்போனபின்பு மீசை அலங்காரத்தால் பலனில்லை என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பேசிக்கொண்டதாக ஒருவதந்தி. இது உண்மையோ பொய்யோ நமக்குத் தெரியாது. ஆனால் மண்ணாசை பேயாய் பிடித்தாட்டும் கன்சர்வேடிவ்களில் முக்கியமானவர்களுக்கு மீசை கிடையாது. தற்கால பிரிட்டிஷ் மந்திரி சபையில் கூட பெரும்பாலோருக்கு மீசை கிடையாது. மெக்டானல்டுக்கு மீசையிருப்பதாக நீங்கள் சொல்லலாம். இவர் பேச்செல்லாம் வழவழா விளக்கெண்ணையாக இருக்கும். அதனால்தான் அவர் மீசை வைத்திருக்கிறார். அகில உலகத்தையும் கட்டியாளவேண்டும் என்று நினைக்கும் பேர்வழிகளுக்கு—அவர்கள் எந்தக்கட்சியில் இருந்தாலும்—மீசை இருக்கிறதா என்று கவனியுங்கள். பால்டுவின், இந்தியா மந்திரி சாமுவேல் ஹோர், பொக்கிஷ மந்திரி நெவிலி சேம்பர்லேன், ஆஸ்டின் சேம்பர்லேன், லார்ட்சாங்கி, லார்ட் ஸ்நோடன், சைமன், இந்தப்பேர்வழிகளுக்கு மீசையே கிடையாது. இதன் ரகசியமென்ன? மீசை தொன்று தொட்டு புருஷத்தனத்தை—ஆண்மையை—எடுத்துக் காட்டும் அறிகுறியாக இருக்கிறதாம். "இதைச் செய்து முடிக்காவிட்டால் என் மீசையை எடுத்துவிடுகிறேன் பார்" என்று சபதம் கூறுவது ஆண்களுக்கு வழக்கம். மண்ணாசைகொண்ட பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு தங்கள் ஜம்பம் வெகுகாலம் பலிக்காது என்பது தெரியும். தோல்வியுற்றபின்பு மீசையை முறுக்குவது பெரிய அவமானம். ஆகவே மீசை வளர்க்காமல் இருப்பதே சிலாக்கியம் என்று நினைக்கிறார்களாம். இந்த எண்ணம் லார்ட் கர்ஜன் காலத்திற்கு முன்பே இருந்திருக்கவேண்டும். அதனால்தான் கர்ஜன் மீசை வளர்க்கவில்லை. பின்னல் பாஞ்சால அட்டூழியகாலத்தில் வைசிராயாக இருந்த லார்ட் செம்ஸ்போர்ட் மீசை வளர்க்காத தற்குகாரணமும் இதுவாகவே இருக்கவேண்டும். ஆனால் இந்த எண்ணம் பலமாக வேரூன்றியது கெய்சர் தோல்விக்குபின்னால்தான் என்று சில சரித்திரக்காரர்கள் கூறலாம். தோல்வியடையு முன்பு மேல் நோக்கியிருந்த கெய்சர்மீசை தோல்விக்குப் பின்பு கீழ்நோக்கியதே இதற்கு மூலகாரணம். சென்னையைப் பொறுத்தவரையில லார்ட் பென்ட்லன்ட் காலத்தில்தான் தேசியக் கிளர்ச்சியும் அடக்குமுறையும் ஆரம்பமாயின. அவருக்கு மீசை கிடையாது 'என்பதை நண்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். ஒத்துழையாமைகாலத்தில் வைசிராயாக இருந்த லார்ட் ரீடிங்கும் மீசையை சிறைத்துக்கொண்டே வந்தார். இப்படி கதைசொல்லிக் கொண்டு போக எனக்கு இஷ்டமில்லை ஒரு நண்ப எனக்கு ஒருகடிதம் எழுதியிருந்தார். அதில் "சாமுவேல்ஹோர் மீசையை முறுக்குகிறார் போலிருக்கிறதே?" என்று குறிப்பிட்டிருந்தார். "அவருக்கு மீசையே கிடையாது" என்று பதில் எழுதினேன். அவர் மீசை வளர்க்காத ரகசியத்தை விளக்கும்படி நண்பர் மறுபடியும் கடிதம் எழுதினார். அதற்காகவே இவ்வளவு தூரம் எழுதநேரிட்டது. ஆகவே இதன் மூலம் எச்சரிக்கை செய்கிறேன். சாமுவேல் ஹோர் எவ்வளவு ஆர்ப்பாட்டஞ் செய்தாலும், அவர் மீசை முறுக்குகிறார் என்று யாரும் சொல்லாதீர்கள். ஏனெனில் அவருக்கு மீசையே கிடையாது! மீசை யில்லாதவர் எப்படி மீசை முறுக்க முடியும்?

---

## மகாத்மா விஜயம்.

மகாத்மாஜி இம்மாதம் 28உ பம்பாய்வந்து சேருவார். தென்னாப்பிரிக்காவில் மகாத்மா சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது முதல் அவருடன் சேர்ந்து இதுவரை அவர் நண்பராயிருக்கும் இமாம்சாகிப் என்ற பெரியார் 9உ காலை காலஞ் சென்றார். சென்ற வருஷம் உப்புச்சட்டமறுப்பில் தரிசனாவில் அவர் ஒரு வருடம் தண்டனைகூட பெற்றார். இமாம்சாகிப் இறந்ததைப்பற்றி மகாத்மா மிகுந்த கவலைப்படுவதால் பம்பாய்வந்து சேர்ந்ததும் அன்றிரவே ஆமதாபாத் புறப்பட்டுச் செல்லுவார். காரியக் கமிட்டி கூட்டம் 30உ ஆமதாபாத்தில் நடைபெறும்.

Koviloor Digital Library



# தென்னாப்பிரிக்கா இந்தியர் துன்பம்.

(சுவாமி பவானி தயாள்)

---

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நிகழ்த்திய பிறகு, அரசாங்கத்தார் 1914-ம் வருஷத்து இந்திய விடுதலை மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றினர். யூனியன் அரசாங்கத்தார், அதுகாறும் இந்தியர்களுக்கு விரோதமாக அநுசரித்து வந்த முறையைக் கைவிட்டு விடுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா இரண்டாவது முறை வாதத்திற்கு வரும்போது ஜெனரல் ஸ்மட்ஸ் பின் வருமாறு கூறினார்:—

"சாலோமன் கமிஷனார் பதிமூன்று சிபார்சுகளைச் செய்திருக்கின்றனர். இவைகளிற் பெரும்பாலானவற்றை, நிருவாக தோரணையிலேயே அமுலுக்குக் கொண்டு வந்துவிடலாம். இந்தச் சிபார்சுகளனைத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்பது அரசாங்கத்தாரின் விருப்பம். இப்படி அமுலுக்குக் கொண்டு வருவதன் பயனாக, தென்னாப்பிரிக்காவுக்குள்ளேயும், அதன் வெளிநாட்டு சம்பந்தங்களிலும் அவசியமாக வேண்டப்படும் சமாதானத்தை அடையலாம் என்பது அரசாங்கத்தாரின் நோக்கம்."

1914-ம் வருஷத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் சமாதானத்தை விரும்பினார். ஆனால் இந்தியர் சமாதானமாக இருக்கும்படி விடப்படவில்லை. 1912-ம் வருஷத்தில் ஸ்ரீ. கோகலேயும் மகாத்மா காந்தியும் சேர்ந்து, தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியர்கள் குடியேறுவதைத் தடுக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை ஆதரித்தனர். இவர்களுடைய செய்கையை அப்பொழுது சர். பிரோஸ்ஷா மேத்தாவும் சர். எம். எம். பவநகிரியும் கண்டித்தனர். ஸ்ரீ. கோகலேயும் மகாத்மா காந்தியும் சேர்ந்து, இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவில் குடியேறுவதைத் தடுக்கும் ஏற்பாட்டை ஆதரித்தது, தென்னாப்பிரிக்காவில் இனி அதிகமாக இந்தியர்கள் வந்து சேரமாட்டார்கள் என்று அங்குள்ள ஐரோப்பியர்களுக்கு உறுதி கொடுத்தது போலாயிற்று.

யூனியன் அரசாங்கத்தின் பெயரால் ஜெனரல் ஸ்மட்ஸ் பின்வரும் உறுதிமொழியைக் கூறினார்:—

"இப்பொழுதுள்ள சட்டங்களை நிருவகிக்கும் விஷயத்தில், இவைகள் நியாயமாகவும், இங்குள்ள சொத்துக்காரர்களின் உரிமைகளைக் கவனித்தும் பிரயோகிக்கப்படும் என்று தெரிவிக்கும்படி மந்திரி எனக்குத் தெரிவித்திருக்கிறார்."

1913-14-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தியக் குடியேற்றத் தடுப்புச் சட்டத்தின் மூலமாக இந்த அச்சம் ஒழிந்து விட்டது. தவிர, ஒவ்வொரு குடியேற்றநாடும், இந்தியாவும், தத்தம்முடைய ஜனத்தொகையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு அநுகூலமாயிருக்கும் பொருட்டு வெளிநாடுகளுக்குக் குடியேறுவதை ஒருவித வரையறைக்கு உட்படுத்திக்கொள்ளலாம் என்ற தீர்மானம் 1917, 1918-ம் வருஷங்களில் நடைபெற்ற ஏகாதிபத்திய யுத்த மகாநாடுகளில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. எனவே, தென்னாப்பிரிக்காவைப் பொறுத்த மட்டில் முக்கிய பிரச்னையாயிருந்தது, இந்தியர்கள் அந்நாட்டில் குடியேறுவதை எப்படித் தடுப்பது என்பதைப் பற்றியல்ல ; அங்கு வசிக்கும் இந்தியர்களை நடத்தும் விஷயத்தைப்பற்றியதே யாகும்.

ஸ்மட்ஸ் சமாதானம் வேண்டுமென்று 1914-ம் வருஷத்திலேயே கூறினார். ஆனால் நடந்தது என்ன? சுமார் ஆறு வருஷம் வரையே, இந்தியர் சமாதானமாக வாழ்ந்தனர். 1920-ம் வருஷம் பிப்ரவரி மாதம் மூன்றாந் தேதி யூனியன் அரசாங்கத்தார், தென்னாப்பிரிக்கா யூனியனில் ஆசிய வாசிகள் நிலம் ஆக்ரமிப்பு செய்து கொள்வதைப்பற்றியும், அவர்களுடைய வியாபாரம் முதலியவைகளின் உரிமைகளைப் பற்றியும் விசாரிக்கவும், இவர்கள் என்னென்ன இடத்தில் எவ்வெவ்விதமாக வியாபாரம் செய்யலாம் என்பதைப்பற்றி நிர்ணயிக்கவும் ஒரு கமிஷனை நியமித்தனர். 1921-ம் வருஷம் முதல் 1925-ம் வருஷம் வரை இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்களை இயற்றுவதில் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் முனைந்து வந்திருக்கின்றனர். 1924-ம் வருஷத்தில் வகுப்புப் பிரதேச மசோதாவை நிறைவேற்றினர். பிறகு 1925-ம் வருஷத்து ஆசியச் சட்டம் என்று சொல்லப்படும் "ஏரியால் ரிசர்வேஷன் அண்ட் இமிகிரேஷன் அண்ட் ரிஜிஸ்ட்ரேஷன் மசோதா"வை நிறைவேற்றினர். தவிர, நேடால் மாகாணத்தைச் சேர்ந்த மூன்று சட்டங்கள் 1. 1924-ம் வருஷத்து பரோஸ் ஆர்டினன்ஸ்; 2. 1925-ம் வருஷத்து டவுன்ஷிப் பிரான்சைஸ் அமெண்ட்மெண்ட் ஆர்டினன்ஸ்; 3. ரூரல் டீலர்ஸ் லைசென்சிங் ஆர்டினன்ஸ் அண்ட் ஜெனரல் டீலர்ஸ் கண்ட்ரோல் ஆர்டினன்ஸ் என்பன இயற்றப் பட்டன. இந்தியர்கள் நாசமடையக் கூடியவாறே இவை இயற்றப்பட்டன. தவிர, தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார், 1914-ம் வருஷத்து உடன்படிக்கைக்குப் புதிய முறையில் பொருள் கூற முற்பட்டுவிட்டனர். தென்னாப்பிரிக்கா இந்தியர் விஷயமாக 1927-ம் வருஷத்தில் கூட்டப்பட்ட சர்வ கட்சி மகாநாட்டிற்குப் பின்னர் ஒருவித சமாதானம் நிலவும் என்று கருதப்பட்டது. ஆனால் அங்ஙனம் நடைபெறவில்லை. இந்த மகாநாடு முடிந்த பிறகே, டிரான்ஸ்வால் ஆசியாடிக் நில பாத்தியதை மசோதாவும், குடிபுகு நிர்ணய மசோதாவும் கொண்டு வரப்பட்டன.

Koviloor Digital Library



## அகில இந்திய ஸ்வதேசி பொருட் காட்சி.

காரியதரிசி எழுதுகிறார்:—

அகில இந்திய ஸ்வதேசி பொருட்காட்சி கண்டு, "சுதந்தரச்சங்கு" குற்றஞ் சொல்லுகிறது:— நடந்த விஷயம்வெகு விநோதம்; ஸ்வதேசியா—விதேசியா? என்று மகுடமிட்டு போன மாதம் 28ந் தேதி ஒரு கட்டுரை எழுதி, அதன் நகல் முன் பிரதியாக நமக்கு அனுப்பினர் அப்பத்திரிகையின் பிரசுரகர்த்தர். அந்த நகல் கிடைத்த மறுகணமே, அதில் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்கு நேர்மாறானவை யென்று பிரசுரகர்த்தாவுக்கு ஒரு கடிதம் பின் வருமாறு எழுதினோம்.

"நடக்கவிருக்கும் அகில இந்திய ஸ்வதேசி பொருட்காட்சியைப் பற்றி தாங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப் போகும் வியாஸத்தின் முன் பிரதியைப் பார்த்தோம். அதில் தாங்கள் கேள்விப்பட்டதாகக் கூறியிருக்கும் விஷயங்கள் யாவும் உண்மையற்றவை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஒரு பத்திரிகையைப் பிரசுரிப்பவர் என்ற ஹோதாவில் தாங்கள் நிதானம் தவறி அவஸரமாய் பத்திரிகையில் பிரசுரிக்குமுன் விஷயங்களின் உண்மையை விசாரித்து தெரிந்து கொள்ளவேண்டும். அவஸரப்பட்டு இதுபோல் தவறான விஷயங்களை பிரசுரிப்பதின் முடிவுகளைத் தாங்கள் உணர்ந்திருப்பீரென்று நம்புகிறோம்." இக்கடிதம் கிடைத்தபின்பும், அக்கட்டுரையைத் திருத்தவில்லை. பொருட்காட்சியின்மீது சுமத்தியிருக்கும் குற்றங்களை மட்டும் கவனிப்போம்.

நம்மீது சுமத்தியிருக்கும் குற்றங்கள்.

1. ஸ்வதேசி பொருட்காட்சியை விவரிக்க வெளியிடப்போகும் புத்தகத்தில் அந்நிய நாட்டுச் சாமான்கள் விளம்பரப்படுத்தப் படுமென்பது.

2. கண் காட்சியிலும் அன்னிநாட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்குமென்பது.

பதில்.

1. ஸ்வதேசி பொருட்காட்சியை விவரிக்கும் புத்தகத்தில் அன்னிய நாட்டுச்சாமான் விளம்பரங்கள் சேர்க்கப்படமாட்டா.

2. கண் காட்சியிலும் பொருட் காட்சியிலும் அன்னிய நாட்டுச் சாமான்கள் வைக்கப்படமாட்டா என்று நாங்கள் உறுதி கூற வேண்டியது அவசியமேயில்லை.

## குதிரை தூக்கிப் போட்டு குழியும் பறித்தது!

ஹிஜிலியில் ராஜீயக் கைதிகளை காவல் காரர் சுட்டு வீழ்த்தியதை நண்பர்கள் அறிவார்கள். இதைப் பற்றி விசாரிக்க சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்தது. அக்கமிட்டியும் காவல்காரர் செய்த கொடுஞ் செய்கை அக்கிரமமானது என்று கண்டித்திருக்கிறது. நியாய முறையில் கோர்ட்டுகளில் விசாரிக்காமல் ஜெயிலில் போடுவதே பெரிய அக்கிரமம். அப்படி போட்ட பின்பு அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து பாதுகாக்க வேண்டிய பெரிய பொறுப்பு சர்க்காரைச் சேருகிறது. அந்தப்பொறுப்பை கொஞ்சமும் உணராமல வெறும் காவல்காரர் கையில் ராஜீயக்கைதிகள் உயிரை ஒப்படைத்தது பொறுப்பற்ற செய்கை. அப்படிச் செய்ததால் தான், தேளுக்கு மணியம் கொடுத்தது போல அந்த கூலிக்காரர்கள் துப்பாக்கி வீச்சு காட்டினார்கள். சர்க்கார் இப்பொழுதாவது பொறுப்பையும், தனது முட்டாள் தனத்தையும் உணர்ந்திருந்தால், அந்த கூலிக்காரர்களை கோர்ட்டு முன்னால் கொண்டு வந்து கொலைக் குற்றத்திற்கு விசாரித்திருக்கவேண்டும். சர்க்கார் என்ன செய்தார்கள் தெரியுமா? அந்த காவல்காரர்களை இலாகா மூலமாக விசாரித்து சிட்சிக்கப் போகிறார்களாம். இரண்டொரு ரூபாய் சம்பளத்தை குறைப்பதாலோ, இரண்டொரு வருஷம் பிரமோஷனை பிடிப்பதாலோ சரியான தண்டனை விதித்ததாய் ஏற்பட்டு விடுமா? ஒன்றுமறியா தேசபக்தர்களை சுட்டதற்கு இதுதானா தண்டனை? வங்காள கவர்னர் போக்கு விசித்திரமாகவே இருக்கிறது.

குதிரை தூக்கிப் போட்டதுமல்லாமல் குழியும் பறித்ததாம். அதைப் போல வங்காள கவர்னர் நடத்தை இருக்கிறது. ராஜீயக்கைதிகள் இவ்வளவு கஷ்டமடைந்ததற்காக கவர்னர் மகான் மற்றொரு பரிசு கொடுத்திருக்கிறார். அதாவது அவர்களுக்கு கொடுக்கும் படியை குறைக்கப்போகிறாராம். இதுவரை ஒவ்வொருவருக்கும் ரூ—1—10—0 தினசரி படி கொடுத்துவந்தார். இம்மாதம் முதல் தேதி முதல் அதை ரூ-1-4-0 ஆக குறைத்து விட்டார். இதுவே ராஜீயக்கைதிகள் அடைந்த பரிகாரம். பிரிட்டிஷ் நீதியில் இது எந்தப் பகுதியைச் சேர்ந்ததோ நம்மால் அறிய முடியவில்லை.

Koviloor Digital Library



# 1லட்சம் பேர் சிறைவாசம்

சென்ற சட்ட மறுப்பு போராட்டத்தில் எவ்வளவு பேர் ஜெயிலுக்கு போனார்கள் என்பதைப் பற்றி காங்கிரஸ் காரியகமிட்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

| | |
|---|---|
| அஜ்மீர் | 150 |
| ஆந்திரா | 2878 |
| அஸாம் | 1459 |
| பீஹார் | 14251 |
| வங்காளம் | 15000 |
| பீரார் | 1750 |
| பம்பாய் நகரம் | 4700 |
| மத்திய மாகாணம் | 2255 |
| ஹிடமராத்தி | 907 |
| டெல்லி | 4500 |
| கூர்ஜரம் | 3549 |
| கர்னாடகம் | 1900 |
| கேரளம் | 450 |
| மகாராஷ்டிரம் | 4000 |
| பாஞ்சாலம் | 12000 |
| ஸிந்து | 774 |
| தமிழ் நாடு | 2991 |
| ஐக்கிய மாகாணம் | 12651 |
| உத்கல் | 1009 |
| எல்லைப்புறம் | 4000 |

மொத்தம் 91,174

இந்த தொகையில் சில விவரங்கள் விட்டுப் போயிருக்கிற படியால் மொத்தம் 1 லட்சம் பேர் சிறை சென்றிருக்கலா மென்று தெரிகிறது. இவர்களில் முஸ்லிம்கள் மட்டும் 12 ஆயிரம் பேர் போயிருக்கிறார்கள். அதிகத் தொகையில் வங்காளமே முதன்மை வகிக்கிறது. இரண்டாவதாக ஐக்கிய மாகாணமும், மூன்றாவதாக பாஞ்சாலமும் நிற்கின்றன. சென்னை மாகாணத்தில் ஆந்திரா அதிகப் பேர்களை ஜெயிலுக்கு அனுப்பியதாக முன்னால் சொலப்பட்டது. அது தவறு. ஆந்திராவை விட தமிழ் நாடு முதன்மையிப் பதைப் பார்த்து சந்தோஷ மடைகிறோம். ஆனால் பம்பாய் நகரில் மட்டும் 4700 பேர் ஜெயில் சென்றிருக்க, தமிழ் நாடு முழுவதிலும் 2991 பேரே ஜெயில் போயிருப்பது அவமானமாகும். அடுத்த போராட்டத்தில் இக்குறையை தமிழ் நாடு நிவர்த்தி செய்து விடும். காங்கிரஸ் உத்தர விட்டதும் ஒரு லட்சம் பேர் சிறைசென்றிருக்கும் போது, காங்கிரஸ் பிரதிநிதித்துவம் வாய்த்ததில்லை யென்று சொல்லுவது வெறும் அயோக்கியத்தனமல்லவா?

# கிளிக்கண்ணி

("எம்டன்" பாடியது)

(1) காந்தியாய் வந்த காருண்ய மூர்த்தி
சாந்தத்தின் தெய்வமடி-கிளியே
சன்யாசியானடி.

(2) நல்லோர்க்கு நல்லாடி நானில காந்தியடி
வல்லார்க்கு வல்லாடி-கிளியே
வஞ்சனைகள் செய்யாரடி

(3) வாயில்லா ஏழை மக்கள் வயிறார உண்டு [வாழ்க
தாயெனப் பாடுபடும்-கிளியே
சற்குண சீலரடி

(4) மோஹன் அவதார மோஹனதாஸ் காந்தி
தியாகமே இவ்வுருவாய்-கிளியே
ஜெனித்தாரிப் பார்தனிலே

(5) புன்சிரிப்பாலுலகை பூரணமாய் மயக்கி
தன்வயம் செய்திடுவார்-கிளியே
தர்மத்தின் தெய்வமடி

(6) ஒரு தரம் சொன்னால் நாமம் உள்ளங்களிப் [படையும்
பொறுமை முகத்தழகன்-கிளியே
பூலோக கண்ணனடி

(7) ஆத்ம சக்தியாலே ஆள இந்தியாவை
சாத்திரம் சொன்னாரடி-கிளியே
சமரச வீரனடி

## மறியல்

தஞ்சாவூர் ஜில்லா அம்மபப்பன் கிராமத்தில் சென்ற சில வாரமாக இவ்வூர் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் ஸ்வீகாரத் தெருவிலுள்ள பால்யர்களின் முயற்சியால் சாத்வீக முறையில் கள்ளுக்கடை மறியல் நடந்து வருகிறது. இந்த மறியலால் கடைகளில் வியாபாரமே கிடையாது. இதனால் சில வீடுகளிலும் தெருவிலும் கள் விற்பனை நடக்கிறதாக தெரிகிறது. அதிகாரிகள் ஸ்தலத்தில் இருந்தும் இவ்விதம் நடக்கிறதாம். இனியாவது அதிகாரிகள் இதைக் கவனித்து இவ்விதம் நடவாதபடி செய்வார்கள் என்று நம்புகிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

# மின் வெட்டு

## பூரியில் பூதச்செய்கை.

பூரியில் மார்ச்சு மாதம் காங்கிரஸ் நடைபெறப் போகிறது. அதற்காக ஏற்பாடுகளும், தொண்டர்படை பயிற்சியும் மும்முரமாய் நடக்கின்றன. ஆனால் பூரிஜில்லா மாஜிஸ்திரேட் ஒரு விநோத ஐந்துவாயிருக்கிறார். தொண்டர்கள் கவாத்து பழகுவதோ, ஊர்வலம் போவதோ கூடாதென்று தடையுத்தரவு போட்டிருக்கிறார். காங்கிரஸ் ஆரம்பமானது முதல் இதுவரை காங்கிரஸ் நகரின் பந்தோபஸ்தையும், பிரதிநிதிகள் சௌகரியத்தையும் கவனிப்பது தொண்டர்கள் வேலையாயிருந்து வருகிறது. பூரியில் அந்த வேலைக்காக பயிற்சி நடப்பதை எதற்காக தடுக்கவேண்டும்? சமாதானத்தை விரும்புவதாய் அகடவிகடம் செய்யும் வில்லிங்டனே, இதுதான் சமாதானமா? காந்தி—இர்வின் உடன்படிக்கையை நிறைவேற்றிவைக்கும் யோக்கியதை இதுதானா? காங்கிரஸ் இந்தியாவின் உயிர். அதன் கௌரவம் இந்தியரின் உயிரையும்விட பெரிது. பூரி காங்கிரஸ் நடைபெற்றே தீரும். சர்க்கார் முட்டுக்கட்டைகளால் எதுவும் நின்றுவிடாது. இதை பூரி மாஜிஸ்திரேட்டும், லார்ட் வில்லிங்டனும் அறியவேண்டும். பூரியில் குட்டி அதிகாரிகள் வால்நீட்டுவதை உடனே மேல் அதிகாரிகள் தடுக்காவிட்டால் காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை சமாதிவைத்த பாவம் அவர்களையே சேரும் என்று எச்சரிக்கிறோம்.

## பொய்யா புரட்டா?

வங்காள அவசரச் சட்டத்தில் ஒரு புதிய அக்கிரமம் என்னவென்றால், போலீசார், ராணுவத்தார் நடமாட்டங்களை பத்திரிகைகள் வெளியிடக் கூடாது. இவ்வளவு பலமாய் இரும்புக்கை ஆட்சி புரியும்போது, அங்கு நடப்பது என்னவென்பது யாருக்குத்தான் தெரியும்? சிட்டாகாங்கில் புரட்சிக்காரர்கள் ஒளிந்துகொண்டிருப்பதால் சிட்டகாங்மீது படையெடுத்து காடு, மலைகளை ஒரு அங்குலம் விடாமல் சோதிக்கப்போவதாகச் சொன்னார்கள். இப்பொழுது மெதுவாக அசோசியேடட் பிரஸ்மூலமாக ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். எவ்வளவு தேடியும் பலனில்லையாம். சமீபத்தில் பலன் கிடைக்குமென்றும் தெரியவில்லையாம். ராணுவத்தாரால் குடிகளுக்கு ஒரு தொந்தரவுமில்லையாம். இதற்கு என்ன அர்த்தமென்று நமக்கு தெரியவில்லை. ஒன்று சர்க்கார் செய்த ஆர்ப்பாட்டம் வீண் என்றும், அவர்கள் முயற்சி தோல்வியடைந்துவிட்டதென்றும் சொல்லவேண்டும். அல்லது சிட்டகாங் செய்திகளை தடுத்துவிட்டபடியால், ஜனங்கள் கண்ணைதுடைக்க "எல்லாம் அமைதி" என்ற பல்லவியைப் பாடவேண்டும்? எது உண்மை?

## ஹோர் ஆகாய வீச்சு.

இந்தியா மந்திரியின் பெயர் சர். சாமுவேல் ஹோர். வங்காள மாகாண மகா நாட்டில் சீமைச் சரக்குகள் பகிஷ்கார தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைக் குறித்து பார்லிமென்டில் ஒருவர் கேள்வி கேட்டார். உடனே ஹோர் ஒரு துள்ளு துள்ளினார். "நிலைமையை ஜாக்கிரதையாக கவனித்து வருகிறோம். புதிதாக ஏற்படும் எந்த நிலைமையையும் சமாளிக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்." என்று கூச்சல் போட்டார். சாமுவேல் ஹோர் பேச்சு பெரிய ஆகாய வீச்சாக இருக்கிறதே என்று ஒரு நண்பர் கேட்கிறார். அதற்கு காரணத்தை நாம் தெரிவிக்கிறோம். அவர் முன் ஜன்மத்தைப் பார்த்தால் இந்த உண்மை வெளியாகும். அவர் பழைய பால்டுவின் மந்திரி சபையில் என்னவேலை பார்த்தார் தெரியுமா? ஆகாய மந்திரியாய் வேலை பார்த்தார். இந்தியாவிற்குக்கூட தமது மனைவி சகிதம் ஆகாயக் கப்பலில் முன்பு வந்திருக்கிறார். ஆகவே ஆகாயவாசம் செய்த ஹோர் இப்பொழுது ஆகாய வீச்சு வீசுவதில் என்ன அதிசயம் இருக்கிறது? இவர் ஆகாய வீச்சு எவ்வளவு தூரம் பலிக்கும் என்பதை லார்ட் இர்வினிடம் தட்சணைவைத்து ஜோசியம் கேட்பாராக.


## 'காந்தி'

(ஆங்கிலப் பதிப்பு).

விலை காலணா

"காந்தி" வாரம் இருமுறை ஆங்கிலப்பதிப்பு 14உ முதல் வெளிவரும். ஒவ்வொரு திங்களும் வியாழனும் திகழும். ஏஜண்டுகள் தங்களுக்கு வேண்டும் பிரதிகளை உடனே தெரிவிக்கவும்.

மானேஜர்.


## தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர் 10உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 30—0—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 19—0—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 16—8—0 |
| ,, | ரூ. எடை | 0—10—0 |

Koviloor Digital Library



## பாதுகாப்பு மோசடி

சர்ச்சிலைப் போன்ற உளறு வாயர்களால் தான் பிரிட்டிஷாரின் உண்மையான நோக்கம் வெளியாகிறது. மெக்டொனல்ட் போன்ற குள்ள நரிகள் தேனொழுகப் பேசி மறைத்து விடுவார்கள். பிரிட்டிஷாரின் நலத்திற்காகவும், வர்த்தகத்திற்காகவுமே இந்தியாவை நாம் ஆளுகிறோம் என்று முதல் முதலில் பேசியவர் லார்ட் பிரண்ட்போர்டாகும். இவர் சர்ச்சிலின் தோழர். இவர் கூறிய படியே சர்ச்சிலும், ராதர்மீர், பீவர் புரூக்கும் பின்னால் பகிரங்கமாய் பேச ஆரம்பித்தார்கள். இக்கோஷ்டியைச் சேர்ந்த லார்ட் லாயட் மற்றொரு புதிய உண்மையை இப்பொழுது வெளியிடுகிறார். லார்ட்ஸ் சபையில் பேசும்போது, முதல் மந்திரி அறிக்கையில் காணப்படும் பாதுகாப்புகளின் குட்டை வெளியிட்டார். "அந்த பாதுகாப்புகள் உண்மையானவைகளாக இருந்தால் பொறுப்பாட்சி என்பது வெறும் பேச்சு. பொறுப்பாட்சி உண்மையானதாயிருந்தால் பாதுகாப்புகள் என்பவை உபயோகமற்றவை" என்று லாயட் சொன்னார். இந்தக்குட்டை லார்ட்லாயட் உளறு வாயராக இருப்பதாலேயே வெளியிட்டார் என்பதை மறக்கவேண்டாம். முதல் மந்திரி இதற்கு பதில் சொல்லும்படி கேட்கிறோம்.

இந்த விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும். சட்டபூர்வமாக பாதுகாப்புகள் ஏற்படுத்துவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இந்தியர் நல்லெண்ணம் இல்லா விட்டால், அவற்றை வெள்ளையர் அநுபவிக்க முடியுமா? சென்னை வெள்ளைவர்த்தகர் சபையில் அதன் தலைவர் ஸ்ரீ. பிர்லி பேசியதை பாருங்கள். "பாதுகாப்புகளை நிறை வேற்றி வைக்கும் விஷயமாக சட்ட பூர்வமான அபிப்பிராயங்களை நான் எவ்வளவோ படித்திருக்கிறேன். படிக்க படிக்க இந்தியரின் நல்லெண்ணத்தை பெறுவதை விட சிறந்த பாதுகாப்பு வேறு எதுவுமில்லை யென்ற முடிவிற்கே வருகிறேன். இந்தியரின் நல்லெண்ணம் என்ற பாறையின் மீதே நமது பாங்கி, தொழில், வர்த்தகம் இவைகளின் எதிர் கால வளர்ச்சியை நாம் கட்டவேண்டும்".

பாதுகாப்புகள் கேட்கும் அறிவிலிகள் இதை கவனிப்பார்களாக. சட்டபூர்வமான பாதுகாப்புகள் ஏற்படுத்தினால் லாயட் சொல்லுவதைப் போல பொறுப்பாட்சி இருக்க முடியாது.

## விநாச காலத்தில் விபரீத புத்தி

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி)

போலீஸ் உதவியைக்கொண்டு ராஜாங்கத்தை நடத்திவிடலாமெனச் சர்க்காருக்கு தோன்றியிருக்கிறது. வடமொழியில் ஒரு பழமொழி உண்டு. 'விநாச காலத்தில் புத்தி விபரீதமாகப் போகுமாம்" அம்மாதிரிதான் சர்க்காருக்குப் புத்திசொல்வதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இப்பொழுது இங்கிலாந்திலிருக்கும் சர்க்கார் ஒருவித மயக்கத்திலிருக்கிறார்கள். போலீஸ் உதவியைக்கொண்டே ராஜாங்கத்தை நடத்தலாமென அவர்களும் எண்ணியிருக்கிறார்கள். தன் மனைவியை அடித்து ஜெயித்துவிட்டதனால் உலகத்தையே ஜெயித்துவிடலாமென்று ஒருவன் எண்ணுவதுபோல், கன்சர்வேடிவ் கக்ஷிக்காரர்கள் பார்லிமெண்டில் வெற்றி அடைந்ததுபோல் இந்தியாவிலும் வெற்றியடையலாமென எண்ணுகிறார்கள். அடக்குமுறைகளை ஆண்டுவந்த லார்டு இர்வின் கூடக் கட்டாயத்தினால் வியாபாரம் நடத்தமுடியாதெனக் கூறி இருக்கிறார். காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கு மீறி சர்க்கார் சென்றாலும், நாம் அதன்படி நடக்கவேண்டும். நம் நாடு விடுதலைபெற வேண்டுமென்றாலும், மதுவிலக்குப் பிரசாரம் அந்நியத்துணி பகிஷ்காரம், தீண்டாமை ஒழித்தல் முதலியவைகளை அதிக ஊக்கத்துடன் நடத்தவேண்டும்.

### தீண்டாமை ஒழிக.

" தீண்டாதார் என்று ஏன் ஆதிதிராவிடர்கள் அழைக்கப்படவேண்டும்? எல்லோரையும் சிருஷ்டித்த கடவுள் அவர்களுக்குச் சொந்தமில்லையா? ஆகையால் ஒவ்வொரு கோவிலுக்குள்ளும் செல்லவும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவேண்டும். அவர்கள் முஸல்மானாகவும், கிருஸ்துவராகவும் மாறுதற்குக் காரணம் இதுவே.

பொறுப்பாட்சி இல்லா விட்டால் இந்தியரின் நல்லெண்ணத்தை பெறமுடியாது. அதை பெறாவிட்டால் சட்ட பூர்வமான பாதுகாப்புகளும் ஏட்டுச் சுரைக்காயாக போய்விடும். ஆகவே பாதுகாப்புகள் இல்லாத சுயராஜ்யம் கொடுப்பதே, பிரிட்டன் வர்த்தகத்திற்கு பெரிய பாதுகாப்பாகும்.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at Lakshmi Press, 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 டிசம்பர் 19உ, பிரஜோற்பத்தி மார்கழிமீ 4உ சனிக்கிழமை || இதழ் 17

## புதிய பூதம்




(வைசிராய் வில்லிங்டன் யாகத்தினால் புதிய பூதத்தை சிருஷ்டிக்கிறார்.)

பூதம் :—உத்தரவுக்கு காத்திருக்கிறேன்.

வைசிராய்: —அதோ, ஐக்கியமாகாண கவர்னருடன் சென்று, அவர் இட்ட வேலைகளைச் செய்வாயாக.

Koviloor Digital Library



## மின்வெட்டு.

புரட்சி இந்தியா

மி. பிரெய்ல்ஸ்போர்ட் என்ற பிரிட்டிஷ் ஆசிரியர் 'புரட்சி இந்தியா' என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகம் வெளியாகி மூன்று மாதங்களாகியும் இதுவரை அதன் பிரதிகளை சுங்க இலாகா அதிகாரிகள் கொடுக்கவில்லை. இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறார்கள். அதில் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் இந்தியாவில் அடிக்கும் கொள்ளையைப் பற்றி அழகாய் வர்ணித்திருக்கிறார். அவர் சொல்லுகிறார்:—

"யுத்தத்திற்குப் பின்னால் சில வருஷங்களில் வங்காள சணல் மில்கள் அடித்த லாபக் கணக்கு என்னிடம் இருக்கிறது. ஸ்காட்லாந்து தேசத்தில் உள்ள மில் பங்காளிகளுக்கு கொடுத்த லாபத் தொகையில் 100க்கு 12 விகிதமே இந்திய சிப்பந்திகளுக்கு சம்பளமாக கொடுத்திருக்கிறார்கள்."

வெள்ளை வர்த்தகர் இக்காட்டை விட்டு எப்படித்தான் போக சம்மதிப்பார்கள்? 100 ரூபாய் வரும்படி வந்தால் அதில் 12 ரூபாய்தான் செலவு. இந்த காமதேனுவை விட்டுவிட எப்படி மனம் வரும்? சர்ச்சில் கூச்சல் போடுவதெல்லாம் இதற்காகத்தான்.

சர்ச்சிலுக்கு விபத்து

மகாகனம் சர்ச்சில் இந்தியாவைப் பற்றி திட்ட அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கே மோட்டாரால் தாக்குண்டு படுகாயமடைந்தாராம். தக்க சமயத்தில் இந்த விபத்து நேரிட்டதற்காக நமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஒரு விஷயம். பழைய பம்பாய் கவர்னர் சர். ஜார்ஜ் லாயிட் மகாத்மா காந்தியை திட்டினார். உயிரோடு புதைத்து விடவேண்டுமென்று சொன்னார். அவர் சீமைக்கு போகும் முன்பு ஒரு விபத்து ஏற்பட்டு கால் முறிந்தது. சர். சங்கரன் நாயர் மகாத்மாவை திட்டி புத்தகம் எழுதினார் அதே புத்தகத்தால் ஓடயர் வழக்கில் லட்சம் ரூபாய் அபராதம் கொடுத்தார். அவர் மாளிகையும் இடிந்து விழுந்தது. லார்ட் இஞ்ச்கேப் மகாத்மாவை திட்டினார். அவர் குமாரி ஆகாய விமான விபத்தில் மாண்டாள். இதைப் போலவே மகாத்மாவை திட்டி பிரசாரம் செய்ய அமெரிக்காவிற்கு சர்ச்சில் சென்றார். அங்கே பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் எதை காட்டுகின்றன? மூட நம்பிக்கைகள் என்று நீங்கள் சொல்லலாம். எதுவானாலும் சரி. இவையெல்லாம் உண்மையே.

## பர்மியர் கண் திறப்பு

பர்மாவை ஏமாற்றுவதற்காகவே அதை தனியாய் பிரிக்கிறார்கள் என்று நாம் பலதடவைகளில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். லார்ட் பீல் அறிக்கையால் இது உறுதியாயிற்று. அந்த அறிக்கையைப் பார்த்தபின்பே பர்மிய பிரதிநிதிகளுக்கு கண் திறப்பு ஏற்பட்டது. ஆகவே பர்மிய வட்டமேஜை மகாநாட்டு அங்கத்தினர்கள் இந்த அறிக்கையை பலமாய் கண்டிக்கிறார்கள். மூன்றுபேர் மகாநாட்டைவிட்டு எழுந்துபோனார்கள். அவர்களில் ஒருவரான சிட்கிளெயிங் வெளியேபோகு முன்பு கர்ஜித்ததாவது:—

"எங்கள் கோரிக்கைகளை சர்க்கார் அறிக்கை நிறைவேற்றுவதாயில்லை. இந்தியாவில் பிரிட்டிஷாரின் கொள்கையைப்பற்றி பிரதம மந்திரி ஜனவரி 19உ ஒரு அறிக்கை வெளியிட்டார். அதை வட்டமேஜை மகாநாட்டு முடிவிலும் உறுதி செய்தார். லார்ட் பீல் அறிக்கையைப் பார்த்தால், பிரதம மந்திரியின் அறிக்கையின் பயன் பர்மாவுக்கு இல்லையென்று தோன்றுகிறது. இந்தியாவுக்கு ஏற்படுத்தும் பாதுகாப்புகள் இந்தியாவின் நன்மைக்கானவையாக இருக்கவேண்டுமென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவையும் தற்காலிகமானவையாம். ஆனால் பர்மாவுக்கு அத்தகைய வாக்குறுதிகளைக்காணோம். பாதுகாப்புகள் நிரந்தரமானவை என்று தெரிகிறது. பர்மாவை பிரிக்கவேண்டுமென்று சொன்ன நோக்கம் தெரிந்து விட்டது. இந்த நிலைமையில் பர்மா இந்தியாவை விட்டுப்பிரிவது ஆபத்தாகவே இருக்கும். ஆகவே இந்தியாவின் ஐக்கிய ஆட்சியில் பர்மா சேர்ந்து கொள்ள சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம். உடனே சுயராஜ்யம் கொடுக்காவிட்டால் மகாநாட்டினின்று விலகிக்கொள்ளும்படி எங்கள் நாட்டார் கட்டளையிட்டிருக்கிறார்கள். இனி இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளுவதால் பயனில்லை."

பர்மியருக்கு இப்பொழுதாவது உண்மை வெளியானதை அறிந்து சந்தோஷிக்கிறோம். மறுபடியும் சர்க்காரின் மாயப் பேச்சில் மயங்கி விட வேண்டாம். இந்தியாவோடு சேர்ந்து நின்று சுயராஜ்யத்திற்கு போராடுங்கள்.

Koviloor Digital Library



# : : அவசரச்சட்ட ஆட்சி : :

சென்ற வருஷம் இந் நாட்டில் சட்ட மறுப்பு நடந்தது. ஆகவே சர்க்கார் அவசரச் சட்டங்கள் செய்ததற்கு ஒரு காரணமாவது உண்டு. இந்த ஆண்டில் சட்ட மறுப்பு இல்லை. இந்த ஆண்டு சமாதான ஆண்டு என்று சொல்லப்படுகிறது. காந்தி—இர்வின் உடன் படிக்கையினால் நாட்டில் சமாதானம் நிலவி, அதிகாரிகள் வாலை மடக்கிக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். ஆனால் உண்மை நேர் விரோதமாயிருக்கிறது. சென்ற ஆண்டு சட்ட மறுப்பு வருஷமாயிருந்த போதிலும் 11 அவசரச் சட்டமே லார்ட் இர்வின் செய்தார். சமாதான வருஷமாகிய இந்த வருஷத்தில் எத்தனை அவசரச் சட்டங்கள் தெரியுமா? 12 அவசரச் சட்டங்கள்! சென்ற வருஷத்தைவிட ஒன்று அதிகமாய் கூட்டி போட்டிருக்கிறது. அதுவும் டிசம்பர் 15உ வரையில்தான். இவ்வருஷ முடிவிற்குள் இன்னம் எத்தனை அவசரச் சட்டங்கள் தோன்றுமோ நமக்குத் தெரியவில்லை.

* * *

ஐக்கிய மாகாணத்தில் சர். மால்கம் ஹெயிலிக்கு பக்கபலமாய் நிற்க, லார்ட் வில்லிங்டன் ஒரு புதிய பூதத்தை சிருஷ்டித்திருக்கிறார். அதற்குப் பெயர் ஐக்கிய மாகாண அவசரச் சட்டமாம். வங்காள ஆள் தூக்கி சட்டத்தையும், புதிய சிட்டகாங் அவசரச் சட்டத்தையும் ஒன்று சேர்த்து இந்த பூதம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு இரட்டை அவசரச்சட்ட பலமுண்டு. சர்க்கார் கேட்கிற தீர்வைகளை வசூலிக்கவும், யாரையும் எங்கும் போகவிடாமல் தடுக்கவும் இந்த அவசரச் சட்டப்படி அதிகாரமுண்டு. வரி மறுப்பு பிரசாரஞ் செய்தால் 6 மாதம். தடை உத்தரவை மீறி ஒரு பிரதேசத்துக்குள் சென்றால் 2 வருஷம். 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வரி மறுப்பு பிரசாரத்திற்காக அபராதம் விதித்தால், கார்டியன்கள் செலுத்தவேண்டுமாம். கார்டியன்கள் செலுத்த தவறினால் சிறுவர்கள் செய்த குற்றத்திற்காக கார்டியன்கள் ஜெயில் தண்டனை அநுபவிக்கவேண்டுமாம். ஒருவர் செய்த குற்றத்திற்கு மற்றொருவர் தண்டனை அநுபவிப்பது பழைய அநாகரிக காலத்தில் வழக்கம் என்று சரித்திரம் சொல்லுகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டில், காருண்யம் மிகுந்த பிரிட்டிஷ் ஆட்சியில், குடியேற்ற ஆட்சியை இந்நாட்டில் நிலைநாட்டவந்த வில்லிங்டன் தர்பாரில், ஐக்கிய மாகாணத்தில் இந்த விநோத தண்டனை தாண்டவமாடுகிறது. இதுமட்டுமா? சர்க்கார் இஷ்டப்பட்ட கட்டிடங்களையோ, மோட்டார் வண்டிகளையோ ஜனங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளலாமாம். இம்மாதிரி ஆயிரம் அதிகாரங்களைக் கொண்டு ஐக்கிய மாகாண அவசரச்சட்டம் தோன்றியிருக்கிறது. இந்தச்சட்டம் ஐக்கிய மாகாணத்துக்கு மட்டும்தான். ஆனால் இதில் ஒரு பிரிவு இந்தியா முழுவதற்கும் பிரயோகப்படுமாம். அதாவது இந்தியாவிலுள்ள எந்தப் பத்திரிகையும், ஐக்கியமாகாண வரி மறுப்பை ஆதரித்து ஒரு வார்த்தைகூட சொல்லக்கூடாதாம்..

* * *

பாமர ஜனங்களை பதறடிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தை செய்திருந்தால், இது ஒரு பலமான அதிர்வெடி என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். வரிவசூலிக்கவும், நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டவும் இச்சட்டத்தை செய்திருந்தால், இது மாயமான் வேட்டையாகவே முடியும். ஜனங்களிடம் பணம் இல்லாவிட்டால், எந்த அவசரச் சட்டத்தால் பணத்தை உண்டு பண்ணமுடியும் என்று கேட்கிறோம். சர்க்கார் பணத்திற்கு ஆலாய் பறக்கிறார்கள். இச்சட்டத்தை அமுல் செய்வதென்றால் அதிகப் பணச் செலவாகும். அதற்கு வழியென்ன? ஏழைகளின் சாமான்களை ஜப்தி செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அவற்றை எங்கே கொண்டு விற்பது? அவற்றை வாங்க யாரிடம் பணமிருக்கிறது? ஜனங்கள் ஆதரவில்லாமல் எந்த சர்க்காரும் காலந்தள்ள முடியாது. குடிகளின் நன்மைக்காகவே காங்கிரஸ் பாடுபடுகிறது. அந்த குடிகளுக்கு விரோதமாக அவசரச் சட்டம் செய்து விட்டு, அதை குடிகள் ஆதரிக்கவேண்டுமென்று சர்க்கார் கேட்பது வெறும் போலித்தனமாயிருக்கிறது. வங்காளத்தில் ராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பதைப் போல ஐக்கிய மாகாணத்திலும் ஏற்பட்டு விட்டது. காரியக்கமிட்டி முடிவை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

Koviloor Digital Library

# மொகல் ராஜ்யம் : :

(ஸ்ரீ. வி பரமசிவன்)

பார்ஹத்தல் முல்க் என்பவர் மொகலாய ஆட்சி காலத்தில் கூர்ஜாத்திற்குக் கவர்னராக இருந்தார். அவர் தமது எல்லையிலுள்ள இந்துக்களை எவ்வித வேற்றுமையுமின்றி நடத்தி வந்தாரென்றும், இந்துக்களுடைய கோவில்களுக்கு எவ்விதத் தீமையும் வாராதவாறு போதிய காப்பு வைத்திருந்தாரென்றும், பசுவதையை சற்றும் ஆதரிக்கவில்லையென்றும் சரித்திரங்களினால் தெரியவருகின்றது. காருநின் குஷ்ரோ காலத்திலும் கோவதை முதலியன புறக்கணிக்கப் பட்டிருந்தனவென்றும் இந்துக்கள் பெருத்த செல்வாக்குடன் இருந்தனரென்றும் தெரிகிறது.

17ம் நூற்றாண்டில் இங்கு வந்து சென்ற ஆங்கிலேயப் பிரயாணி ஒருவர், முகம்மதியர் பசுக்களை வதை செய்வதில் மிக்க கவனம் செலுத்தினரெனவும், மனிதக் கொலையும் கோவதையும் ஒன்றெனவே கருதப்பட்டதெனவும் அவர் எழுதியிருக்கின்றார். பேபர் சக்ரவர்த்தி தன் மகனை ஹுமாயூனுக்கு சாசனம் ஒன்று எழுதிக் கொடுத்து அதன்படி நடக்குமாறு அறிவித்தார். அச்சாசனத்தின் மூலப் பிரதி போபால் சுகாத்து இராஜாங்க புத்தகாலயத்தில் இருக்கிறது. அச்சாசனத்தில் பாபர் கூறுவதாவது:—

(1) மன்னர் மன்னனை சர்வேசுவரன் இந்த அரசாட்சியைத் தக்கதற்காக அவனிடம் அன்பு செலுத்த கடமைப் பட்டிருக்கிறாய்.

(2) மதசம்பந்தமான குரோதங்கள் ஏற்படக் கூடாது. உன் ஆட்சியில் உள்ள ஒவ்வொரு வகுப்பாரும் உன்னால் நன்கு ஆதரிக்கத் தக்கவர். பட்சபாதமின்றி நடந்து கொள்,

(3) முக்கியமாக கோவதை செய்வதை அறவே ஒழித்து விடு. இங்ஙனம் செய்வதால் இந்தியாவின் மனத்தைக் கொள்ளை கொண்டவனாய். நாட்டினர் உன்னிடத்து அன்பு செலுத்த இதுவே சாதனம்.

(4) கோவில்கள் ஒன்றும் அழிக்கத் தக்கதல்ல. கொடுமை எனும் வாளேந்தி ஆட்சி புரிவதினும் அன்பெனும் வாளேந்தி ஆட்சி புரிவதே மேல்.

வேற்றுமை உணர்ச்சி எட்டுணையும் இல்லாத புனிதமான உள்ளம் படைத்த பாபரின் ஆட்சி எத்தகையதாயிருக்கவேண்டும்? மகம்மதிய அரசர்கள் சிலர் தாமே வலிந்து ஒழிந்து யோகிகளைத் தேடி வந்து உபதேசங் கேட்பதுண்டு என்று ஜிஹாங்கீரின் ராஜ சபைக்கு இங்கிலாந்து முதலாவது ஜேம்ஸ் மன்னனால் அனுப்பப்பட்ட ராஜ தூதன் சர். தாமஸ் ரோ என்பார் கூற்றால் விளங்குகிறது. அவர் கூறுவது :—"ஜிஹாங்கிர் அடிக்கடி இந்து யோகிகளைத் தரிசித்துப் பேசுவதையும், ஒரு முறை அரசசபையின்கண் மௌனதாரியான சந்நியாசி ஒருவரை அரசரே தமது அருகில் இருத்திக்கொண்டு உபதேசம் கேட்டதையும், தந்தையே! என்று அழுது பணிந்ததையும் நான் நேரில் கண்டேன்" மேலும் பசுவதையை முஸ்லிம் மன்னர்கள் மிகக் கவனமாகக் கண்டித்து, தவறி பசுவதை செய்பவரிடம் 100 ஜேத்தல் வரை வரி வாங்கப் பட்டதாக சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இவ்வாறு வரி விதிப்பதானது முகமமதிய ஆட்சி ஏற்பட்டு 200 வருஷம் வரை இருந்ததாகத் தெரிகிறது. சர். ஜார்ஜ் வாட் என்பவர் டெல்லியைப் பற்றி எழுதிய (Indian Art in Delhi) நூலில் இந்து முஸ்லிம்கள் எவ்வாறு தொழில் முறையில் ஒன்று பட்டிருந்தனர் என்பதை விளக்குகிறார்.

"டில்லியில் பல கட்டிடங்களில் உள்ள சிற்பம் ஓவியம் முதலிய வற்றைக் கவனித்தால் இவ்விரு வகுப்பாரும் ஒருவரோடொருவர் செய்து கொள்ளும் உதவி இத்தகைத் தென்பது விளக்கும். இவைகளை நுட்பமாக நோக்கினால் இவ்விருவகுப்பார் ஒருவருக்கொருவர் எவ்வளவு ஒற்றுமையுடன் இத்தொழிலை நிறைவேற்றியுளர் என்பது புலப்படும். பொதுவாக இத்தொழிலாளர் யாவரும் முஸ்லிம்களாகவும் முதலாளிகள் யாவரும் இந்துக்களாகவும் இருக்கின்றனர். வடஇந்தியாவிலிருந்து வருகின்ற காஷ்மீரம் சால்வைகள், இரத்தின கம்பளங்கள் ஆகியவைகளும் பல நூற்றாண்டுகளாக ஒன்று பட்டு விளங்கிய உணர்வின் பயனாய் இவ்விருவகுப்பாரும் கூடியிருந்து செய்து முடிப்பனவே"

Koviloor Digital Library



## தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் !

(ஸர்டன் எழுதியது)

எனது பிரிய தொழிலாள சகோதரர்களே ! நீண்டகாலமாக யானும், "காந்தியும்" தங்களுக்காக ஒருவித பிரதிப் பலனுமில்லாமல் வெகு தைரியமாக பல்வேறு விதத்தில் உழைத்துவந்தோம். ஆலையின் அநீதிகளையும் ஏஜண்டின் தவறுதல்களையும், தொழிலாளர் குறைகளையும், எடுத்துக்காட்டி வன்மையாகக் கண்டித்தோம். சில விவகாரங்களில் நியாயம் வழங்கப்பட்டது. பலவற்றில் வழக்கம்போல் அலட்சியம் செய்யப்பட்டது. முதலாளி வர்க்கத்தினர் அலட்சியம் செய்தாலும் எழுதியவைகள் யாவும் நியாயமானவைகள் என்று பொது ஜனங்களும், தொழிலாளர்களும்—ஏன்—ஆலை முதளாளி வர்க்கத்தினரும் கூட ஒத்துக்கொண்ட உண்மைகளே !

தோழர்காள் ! ஆலை முதலாளி இனத்தவர்கள்தான அநீதி செய்கிறார்கள் என்று நினைத்து விடவேண்டாம். உங்களிடமும் எவ்வளவோ குறையிருக்கிறது. ஒருவருககொருவர் கோள் சொல்லும் குணமும், சற்று உயர்பதவியிலிருப்போர் லஞ்சம் வாங்குதலும், நன்றி செய்தாரை மறத்தலும் இழிதகையாகும். உங்களுக்குள் ஒற்றுமையும், சகோதர உணர்ச்சியும் அறவே யில்லை. தொழிலாளர் சங்கத்தை உங்கள் உள்ளத்தில் நினைத்துபாருங்கள். தொழிலாளர் சங்கம் இருந்தபோது நீங்கள் பெற்ற பலனை அதை அநுபவிக்கும்போதாவது நினைத்து மனம் உருக வேண்டியது நியாயமாயிற்றே! ஆதலால் தொழிலாளர்களுக்கு மனப்பூர்வமாக உழைக்கும் தோழர்களை மேலும் மேலும் ஆதரித்து, கட்டுப்பாடாக சேர்ந்து மீண்டும் சங்கம் வளர்த்து இன்னல் தீருங்கள். இன்னும் சில நாள்களுக்குள் நீங்கள் சங்கத்தை வளர்க்காவிடில், உங்களுக்கு மிகவும் கஷ்டம் நேரிடும் என்று எச்சரிக்கிறேன். ஒன்று பட்டாலுண்டு வாழ்வு.

## சீமைத் துணிக்கு மண்

வருஷாவருஷம் பிரிட்டிஷ் துணிகள் இறக்குமதி குறைந்து வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 1929, 1930, 1931 இம் மூன்று வருஷங்களிலும், ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய இந்தியாவில் இறக்கு மதியான கணக்கை கீழே வெளியிடுகிறோம்.

| | 1929—1930—1931 |
|---|---|
| | (லட்சம் ரூபாய்) |
| நூல் | 153—69—48 |
| சலவை செய்யாத துணி | 480—225—49 |
| சலவை துணி | 559—342—198 |
| சாய மிட்டவை | 653—424—196 |

## "போர் புரிய திரும்புகிறேன்"

ரோமாபுரியில் இத்தாலியா ஜர்னல் என்ற பத்திரிகையின் பிரதிநிதி மகாத்மாவை பேட்டி கண்டார். அச்சமயம் அவர் சொல்லியதாவது:— ஏராளமான மக்களைக் கொண்ட இந்தியா ஒரு புதிய நாகரிகத்தை சிருஷ்டிக்க முடியும். ஆனால் நிர்மாண வேலையாகிய அந்த வேலையை இப்பொழுது எடுத்துக் கொள்ளுவதற்கில்லை. அது எதிர் காலத்தைச் சேர்ந்தது. தற்சமயம் இந்திய சமுதாயம் முழுவதும் நாச வேலையாகிய பகிஷ்காரத்தில் கவனஞ் செலுத்தவேண்டும். வட்ட மேஜை மகாநாட்டு நடவடிக்கைகள் நரக வாதனையாயிருந்தன. அவற்றின் மூலம் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமுள்ளசம்பந்தம் அறவே முறிபட்டுப் போயிற்று. ஆனால் அந்த மகாநாட்டால் இந்தியரின் உணர்ச்சியை பிரிட்டிஷாரும், பிரிட்டிஷாரின் உண்மையான நோக்கத்தை இந்தியரும் அறிய சாத்தியமாயிற்று. நான் மறுபடியும் போரை தொடர்ந்து நடத்தவே இந்தியா திரும்புகிறேன். முன் போலவே அந்தப் போர் அஹிம்சையை அடிப்படையாய் கொண்டிருக்கும். பலாத்காரம் இந்தியாவிற்கு தோல்வியையே கொடுக்கும். அஹிம்சை போருக்கு இந்தியாவில் போதுமான பலமும் வழிகளும் இருக்கின்றன. அவற்றைக் கண்டு பிரிட்டன் நடுங்கியே தீர வேண்டும். பகிஷ்காரம் ஆரம்பித்தால் இங்கிலாந்து மிகவும் பாதிக்கப்படும் என்பது உண்மையே. ஆனால் பகிஷ்காரத்தை பிரிட்டிஷாருக்கு விரோதமாய் நாங்கள் ஆரம்பிக்கப் போவதில்லை. பிரிட்டிஷாரின் கொள்கைகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் விரோதமாகவே ஆரம்பிப்போம்.

எந்த தேசத்தாருக்கும் விசேஷ சலுகை காட்டமுடியாது. சகல மைனாரிட்டிகளும் ஒன்று சேர்ந்து அமைக்கும் சுயராஜ்யத்தையே இந்தியா அடையும். ஆனால் பழைய புராதன கொள்கைகளைக் கொண்ட தலைவர்களை இந்தியா இனி ஒப்புக் கொள்ளாது. புதிய தலைவர்களையே ஒப்கொள்ளும்.

Koviloor Digital Library



## எதற்கும் தயார்

பாரிஸ் இந்திய சங்கத்தினர் பண்டித மாளவியாவை உபசரித்து ஹோட்டலில் ஓர் சிற்றுண்டி விருந்து நடத்தினர்கள். பல பெண்கள் உட்பட 200 பேருக்குமேல் விருந்துக்கு வந்திருந்தனர். லண்டன் மகாநாட்டைப் பற்றி பேசுகையில் பண்டித மாளவியா பின்வருமாறு கூறினர்:—

"இந்தியர் கோரிக்கைகளுக்கும், பிரிட்டிஷாரின் மனோபாவத்திற்கும் மிகுந்த வித்தியாசம் தென்படுகின்றது. முக்கியமாக அன்னிய நாட்டு விவகாரம், ராணுவம் முதலிய விஷயங்களில் நமக்கு அதிகாரம் வேண்டுமெனக் கேட்கிறோம். ஆனால் பிரிட்டிஷார் முக்கியமான இவ்விஷயங்களில் சிறிதும் விட்டுக் கொடுக்க மறுக்கின்றனர். இவ்விஷயங்களில் சமாசமான முடிவு ஏற்படாவிடில் இந்திய நாடு திருப்தியடையாது.

பிரதம மந்திரி அறிக்கையை நான் ஒப்புக் கொள்ள முடியாது. சமாசத்திலும், பேச்சு வார்த்தையிலும் நம்பிக்கை கொண்டிருப்பதாக சர்க்கார் வாயால் சொல்லுகிறார்கள். ஆனால் காரியத்திலோ நேர் விரோதமாய் இருக்கிறது. அவசரச் சட்டங்கள் புறப்படுகின்றன. பலாத்காரத்தில் சம்பந்தப் படாத காங்கிரஸ் காரரையும் கைது செய்கிறார்கள். சர். சார்லஸ் டேகார்ட் கல்கத்தா கமிஷனராயிருந்த போது, சர்வதேச விதிகளையும் மீறி பிரெஞ்சு தேசமாகிய சந்திரநாகூரில் சென்று அட்டகாசம் செய்தார். அவரை இந்தியா மந்திரிசபையில் நியமித்திருப்பதிலிருந்து, சர்க்ககார் நோக்கம் வெளியாய் விட்டது. சர்க்கார் அடக்கு முறையில் அவசரமாய் இறங்க மாட்டார்களென்றும், நற்புத்தி உதயமாகுமென்றும் இன்னம் நம்புகிறேன். இந்தியாவில் நடக்கிறவைகளை நான் ஜாக்கிரதையாக கவனித்து வருகிறேன். எந்த மோசமான கஷ்டத்திற்கும் உட்பட தயாராகவே நான் இந்தியா திரும்புகிறேன். கடவுள் கிருபை செய்வாராக.

## ஜோதி.

காலஞ்சென்ற சிதம்பரம் ஸ்ரீ. பரஞ்ஜோதி சுவாமிகள் ஞாபகார்த்தமாகவும், ஆதித்திராவிடர்கள் அபிவிருத்திக்காகவும் சுவாமி சகஜானந்தம் அவர்களால், "ஜோதி" என்ற பெயரோடு ஒரு வாரப்பத்திரிகை சிதம்பரத்திலிருந்து சீக்கிரமாய் வெளிவரும்.

## சுதேசி காட்சி சாலை

சென்னை காங்கிரஸ் மைதானத்தில் 16உயன்று மாலை அகில இந்திய சுதேசி காட்சி சாலை ஆரம்பமாயிற்று. இதை சர். எம். விஸ்வேஸ்வரய்யா திறந்து வைத்தார். சர். விஸ்வேஸ்வரய்யா மைசூர் திவானாயிருந்தவர். பத்ராவதி இரும்பு தொழிற்சாலை, மைசூர் சந்தன எண்ணெய் தொழிற்சாலை, மைசூர் சோப் தொழிற்சாலை, சிவசமுத்திரம் மின்சாரசாலை, கத்தர், பட்டு தொழிற் சாலைகள் போன்ற பல பெரிய தொழிற்சாலைகளை மைசூரில் ஏற்படுத்தியவர். உலகமெங்கும் பேர் பெற்ற எஞ்சினீயர். சுக்கூர் அணை என்ற மிகப் பெரிய அணை சிந்துவில் கட்டியாகிறது. அதைப் பற்றி யோசனை சொல்லுவதற்கு சர். விஸ்வேஸ்வரய்யாவை பம்பாய் சர்க்கார் முன்னால் அழைத்திருந்தார்கள். இவ்வளவு பெரியவரான சர். விஸ்வேஸ்வரய்யா காட்சி சாலையை திறந்து வைக்கும் பாக்கியத்தை சென்னை பெற்றது. காட்சி சாலையிலுள்ள கடைகளும், சரக்குகளும் நன்றாய் அலங்காரம் செய்யப் பட்டிருக்கின்றன. எல்லாம் சுத்த சுதேசி சாமான்கள். பரதேச சாமான்களை வைக்கப் போவதாக சிலர் கிளப்பிய வதந்தி பொய்த்துப் போனதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைகிறோம். ஸ்ரீ. சத்தியமூர்த்திதான் வரவேற்பு தலைவர். சென்னையிலுள்ள சகல கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் திறப்பு விழாவிற்கு வந்திருந்தார்கள். காங்கிரஸ் மண்டபம் எள் விழ இடமில்லாமல் நிறைந்திருந்தது. சபர்மதி ஆசிரமத்தில் பஞ்சு பட்டை போட்டு நூல் நூற்கும் விதத்தை காட்டும் காட்சியும், மகாத்மா ஏரவாடா ஜெயிலில் கண்டுபிடித்த ராட்டினமும், காட்சிசாலையில் காட்டப் படுகின்றன.

### சர்க்கார் பாஷாபிமானம்.

ஹிந்தியை தேசிய பாஷையாக்க வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானத்திருக்கிறது. இந்தக் கொள்கையை முதலில் ஐக்கிய மாகாண சர்க்கார் கைக்கொண்டிருக்கிறது போலிருக்கிறது! தலைவர்களுக்கு பிறப்பித்த 144வது பிரிவு தடையுத்தரவுகள் எல்லாம் ஹிந்திபாஷையில் எழுதப் பட்டிருக்கின்றனவாம். ஐக்கிய மாகாண சர்க்கார் மூளையில் தேசியக்காற்று அடிபடுகிறதா?

Koviloor Digital Library



# சுதேசி மகத்துவம்

சென்னை காங்கிரஸ் மைதானத்தில் 16௳யன்று அகில இந்திய சுதேசி பொருட்காட்சி சாலையை சர். விஸ்வேஸ்வரய்யா ஆரம்பித்து வைத்தார். அச்சமயம் அவர் பேசியதாவது:—

ஏராளமாக துணிகளை உற்பத்தி செய்து மிகவும் மலிவாக விற்பனை செய்ய யந்திரங்கள் சக்தியுள்ளவைகளாக இருக்கும்போது, கையால் நெசவு செய்து கத்தர் உற்பத்தி செய்வதற்கு செலவழிக்கும் நேரமும் முயற்சியும் வீண் வியர்த்தமென நான் அபிப்பிராயப் பட்டேன். ஆனல், தற்போது இத்தேசத்தில் வேலையில்லாக் கஷ்டம் சகிக்க முடியாததாக இருக்கிறது. வேலையில்லாதவர்களுக்கு பரிகாரமாக இத்தேசத்தில் யாதொரு ஸ்தானமுமில்லை. தற்போது கத்தர் பிரசாரத்தால் அளவற்ற பயனேற்பட்டிருக்கிறதென்பதை அறிவுள்ள ஒருவரும் மறுக்கமுடியாது. கத்தர் இயக்கம் அபிவிருத்தியடைய காங்கிரஸ்வாதிகள் நமது நாட்டில் பெரியாராகிய மகாத்மா காந்தி தலைமையில் செய்துவரும் முயற்சி மிகவும் பயனளித்து வருகிறதென்பதும் மறுக்க முடியாத விஷயம். ஆனல், எதிர்காலத்தில் பொருளாதார முன்னேற்ற முறைகளில் சர்க்கார் சிரத்தை யெடுத்துக்கொள்ளும்போது, கத்தருக்காக செலவழிக்கும் முயற்சியை, அதிக பயன்தரத்தக்க வேறு விஷயங்களில் ஓரளவு செலவழிக்க மகாத்மா முற்படுவாரென்பது நிச்சயம். சுதேசி உற்பத்திகளையும் சுதேசி கைத்தொழிலையும் ஆதரித்து அபிவிருத்தி செய்வதற்காக சென்னையில் சர்க்கார் ஆதரவிலும், பொருட்காட்சிசாலை நடக்கிறது. காங்கிரஸ் ஆதரவிலும் நடக்கிறதென்பது எனக்குத் தெரியும். இத்தேசத்தில் கைத்தொழில் விருத்தியடைவது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது. கைத்தொழில் இலாகாவையே முதன் முதலாக சென்னை சர்க்கார்தான் ஆரம்பித்தனர். ஆனல், லார்டு மார்லி இந்தியா மந்திரியாக இருந்தபோது, சர்க்கார் சுதேசி கைத்தொழில் விஷயங்களில் அதிக சிரத்தையெடுத்துக்கொள்ளக்கூடாதெனக் கூறிவிட்டார். அதனல், கைத்தொழில் அபிவிருத்திக்கு தடை ஏற்பட்டது.

இவ்வுலகிலுள்ள பெரும்பாலான நாகரிக தேசங்களிலும் கைத்தொழில்தான் ஜனங்களுக்கு பிரயோஜனம் உண்டாக்குகிறது. விவசாயத்தைக் காட்டிலும் கைத்தொழிலால்தான் சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. அமெரிக்கா, ஜெர்மனி, ஸ்வீடன் போன்ற தேசங்களில் கைத்தொழில்களால்தான் சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. உதாரணமாக கீழ்க்கண்ட புள்ளி விவரங்களை குறிப்பிடுகிறேன்:—

| | விவசாயம் | கைத்தொழில் |
|---|---|---|
| அமெரிக்கா | 286 கோடி | 1300 கோடி |
| கானடா | 464 „ | 1047 „ |
| பிரிட்டன் | 80 „ | 808 „ |
| ஜப்பான் | 85 „ | 120 „ |
| ஸ்வீடன் | 129 „ | 384 „ |
| இந்தியா | 67 „ | 13 „ |

பிரிட்டனைக் காட்டிலும் சென்னை மாகாணம் ஜனத்தொகையிலும், விஸ்தீர்ணத்திலும் பெரியது. பிரிட்டனில் 110 லக்ஷம் தொழிலாளர்கள் வரை, வருஷா வருஷம் தலா 200 பொன் பொறுமானமுள்ள சாமான்களை உற்பத்தி செய்கிறார்கள். கைத்தொழிலிலிருந்து மாத்திரம் 220 கோடி பொன் பிரிட்டனுக்கு வருமானம் கிடைக்கிறது. சென்னை மாகாணத்தில் சகல வருமானமும் சேர்த்து 25 கோடி பொன்தான்! பிரிட்டிஷார் கைத்தொழில் விஷயத்தில் அவ்வளவு முன்னேற்றமடைந்திருப்பதால்தான், கப்பல் வர்த்தகம், பாங்கித் தொழில் முதலியன அபிவிருத்தியடைந்து விளங்குகின்றன. 30 வருஷங்களுக்கு முன்பு இந்தியா ஜப்பானுக்கு துணியும் நூலும் ஏற்றுமதி செய்தது. இன்று காலம் மாறிவிட்டது. துணியும், நூலும் இன்று ஜப்பான் இந்தியாவிற்கு அனுப்புகிறது. நான் ஜப்பானுக்கு இருமுறையும், கானடாவிற்கு 3 முறையும் சென்று, அங்குள்ள நிலைமையை அறிந்து வந்திருக்கிறேன். கைத்தொழிலால் அளவற்ற பயனுண்டென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நமக்குள் தேவையான சாமான்கள் வாங்க பிறதேசங்களுக்கு கொடுக்கும் பணம் நமக்கு ஓர் போதும் திரும்பிவருவதே யில்லை. அப்படியிருக்க, நமக்கு வேண்டிய சாமான்களை நாமே உற்பத்தி செய்துகொள்ளும் பட்சத்தில் நம் தேசத்திலுள்ள பணம் இங்கேயே இருக்கும்.

## தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர் 17௳

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 28—15—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 18—0—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 62—0—0 |
| „ | ரூ. எடை | 0—10—0 |

Koviloor Digital Library



## செய்தித் திரட்டு

டிப்பரா ஜில்லா கலெக்டர் ஸ்டீவன்ஸை சுட்டுக் கொன்ற இருவரும் சிறுமிகள். எட்டாவது வகுப்பில் படிக்கிறவர்கள். ஏதோ மனுக்கொடுக்கப் போகிற பாவனையாகப்போய் இந்த வேலையைச் செய்தார்கள். இருவரையும் ஜெயிலில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பெயர் கன்னி சுனிதி சௌத்ரி, கன்னி சாந்திகோஷ். இந்தக்கொலை சம்பந்தமாக எங்கும் வீடு சோதனைகளும், கைதியாதலும் நடக்கின்றன. பெண்கள் இச்செய்கையில் இறங்கியது இந்திய பெண்மைக்கே பெரிய இழிவு என்று சர்தார் பட்டேல் கண்டிக்கிறார்.

தேசத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையை யொட்டி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் சீக்கிரம் நடைபெறுமென்று தெரிகிறது.

ஜப்பானிலிருந்து தங்கம் வெளியே போகக் கூடாதென்று தடுத்து விட்டார்கள். இதனால் ஜப்பானிய சரக்குகள், முக்கியமாய் துணிகள் இந்நாட்டில் விலை மலிவாய் விற்கமுடியும். இந்திய துணிமில்களுக்கு கஷ்டம் ஏற்படலாம்.

பெண்கள் தொண்டர் படைக்கு பெண் அதிகாரிகளை பயிற்சி செய்விக்கும் வேலை பாட்டையில் 15உ. ஆரம்பமாயிற்று. காங்கிரஸ் தலைவர் சர்தார் பட்டேல் ஆரம்பித்து வைத்தார்.

லாகூர் ரயில்வே ஸ்டேஷன் சமீபமாயுள்ள ஒரு ஹோட்டலில் 5 கைத் துப்பாக்கிகளும் குண்டுகளும் அகப்பட்டனவாம். 4 பேரை கைது செய்திருக்கிறார்கள். லாகூர் நகரில் போலீஸ் பந்தோபஸ்து பலமாயிருக்கிறது.

நாசிக்கிலுள்ள ராமகுண்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்ய தீண்டாதார் சத்தியாக்கிரகிகள் முயன்றனர். அவர்களை 144 வது பிரிவுப்படி சர்க்கார் தடுத்திருக்கிறார்கள்.

லண்டனில் வேலையில்லாதார்கள் கூட்டங் கூடி ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள். போலீசார் கூட்டத்தை முதலில் கலைத்தாலும், பின்னால் ஊர்வலத்தை அமைதியாக நடத்திச் சென்றார்கள்.

தென்னாப்பிரிக்கா இந்தியரை இனி நாட்டை விட்டு வெளியே அனுப்பும் யோசனையை நிறுத்திவிடவேண்டுமென்று ஸ்ரீ. ஆண்ட்ரூஸ் சொல்லுகிறார். அங்குள்ள சகல கட்சிகளும் மகாநாட்டில் கலந்துகொள்ளுவதால், நிலைமை சாதகமாயிருக்கிறதென்று ஆண்ட்ரூஸ் சொல்லுகிறார்.

அலகாபாத்தில் பண்டித ஜவார்லால் மாளிகையையும், வேறு பல இடங்களையும் போலீசார் சோதனை போட்டார்கள்.

## புதுவருஷ பரிசு

1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 1உ யன்று இந்தியாவிற்கு ஒரு பெரிய பரிசு வழங்க வைசிராய் முடிவு செய்திருப்பதாக நமது குருவி சொல்லுகிறது. அந்தப்பரிசுக்குப் பெயர் "மூளை அவசரச் சட்டம்" 1932ல் அதுவே முதல் அவசரச் சட்டமாயிருக்குமாம். அதன் ஷரத்துக்களைப் பற்றி நமது குருவி சொல்லுகிறதை அப்படியே வெளியிடுகிறோம்.

1. இந்தச் சட்டத்திற்கு மூளை அவசரச் சட்டம் என்று பெயர். எந்த மாகாணத்தில் இதை அமுலுக்கு கொண்டு வரவேண்டுமோ அங்கு உடனே கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டும்.

2. எந்த நபரையும் அவர் மூளை சுயராஜ்ய விஷயங்களில் செல்லக்கூடாதென்று தடுக்க இதன்படி அதிகாரம் உண்டு. போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்கு மேற்பட்டவர்களே இந்தப் பிரிவுப்படி உத்தரவு பிறப்பிக்கலாம்.

3. எந்த நபரையும் அவர் மூளையை சர்க்காருக்காக உபயோகிக்கும்படி கட்டாயப்படுத்த இதன்படி அதிகாரமுண்டு. பிரயோகிப்பவர் அந்தஸ்து மேலே சொல்லியபடி.

4. இந்தப்பிரிவுகளின்படி பிறப்பிக்கப்பட்ட தடை யுத்தரவுகளை மீறி நடந்தால் உடனே அவர்களுக்கு தண்டனை விதிக்க ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமுண்டு. அவருக்கு குறைந்த அதிகாரமுள்ள யாரும் தண்டனை விதிக்கக் கூடாது இரண்டு பிரிவுகளுக்கும் தண்டனை ஒன்றே. அதாவது மூளை பறிமுதல். உத்தரவை மீறி நடப்பவர்கள் மூளையை ஒரு வருஷத்திற்கு பறிமுதல் செய்து வைக்கலாம். ஒரு வருஷத்திற்கு அப்புறமும் அதே ஆசாமி அதே குற்றத்தைச் செய்தால் நிரந்தரமாய் பறி முதல் செய்துவிடலாம்.

5. இந்த அவசரச்சட்டத்திற்கு வயதே கிடையாது. இதை ரத்துச் செய்ய மறுபடியும் ஒரு அவசரச் சட்டம் தோன்றும் வரை இது அமுலில் இருக்கும்.

குறிப்பு:—மூளையை எப்படி பறிமுதல் செய்வது என்பதைப்பற்றி சர்க்கார் இன்னம் ஒரு முடிவிற்கு வரவில்லை. இதில் ஆலோசனை கூறும்படி மூளை நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை சர்க்கார் சீக்கிரம் நியமிப்பார்கள்.

Edited, Printed & Published by T. S. Chockalingam. at Lakshmi Press. 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா

# காந்தி


திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சோக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை, 1931 டிசம்பர் 21உ, பிரஜோற்பத்தி மார்கழிமீ 6உ திங்கட்கிழமை || இதழ் 18

## டெல்லி ஒப்பந்தம் கதி



மகாத்மாவும் லார்ட் இர்வினும் ஒப்பந்தம் செய்தார்கள். பிச்சை எடுத்தாராம் பெருமாள், அதைப் பிடுங்கினாராம் அநுமார். அதைப் போல இர்வின் செய்த ஒப்பந்தத்தை மாகாண கவர்னர்கள் குட்டிச் சுவராக்க முயற்சிக்கிறார்கள். லார்ட் வில்லிங்டனால் அடக்க முடியவில்லை. ஒவ்வொரு கவர்னரும் ஒரு அவசரச் சட்டம் கேட்கிறார்கள். வில்லிங்டன் விழிக்கிறார்.

Koviloor Digital Library



## ஹெயிலி தடபுடல்

ஐக்கிய மாகாண அவசரச் சட்டத்தை கண்டிக்க பழுத்த மிதவாதியான ஸ்ரீ. சிந்தாமணி ஐக்கிய மாகாண சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். நாங்கள் மிகவும் நிதானமாய்த் தான் உபயோகிப்போம், பயப்பட வேண்டாம் என்று சர்க்கார் சொன்னார்கள். உடனே மிதவாதிகள் உச்சி குளிர்ந்து விட்டது. தீர்மானத்தை வற்புறுத்தாமல் விட்டு விட்டார்கள்.

இந்த மிதவாதிகளை எப்படி கட்டிப் போடலாம் என்பதை சர்க்கார் நன்றாய் அறிவார்கள். சர்க்கார் வெற்றி பெற்றார்கள். மிதவாதிகள் தோற்றார்கள். சட்ட சபையில் 15உ சர்க்கார் உறுதி மொழி கொடுத்தார்கள். 16உ அதே அலகாபாத்தில், பண்டித ஜவர்லால் மாளிகை உள்பட பல இடங்களை சோதனை போட்டார்கள். புரோ ஜில்லாவில் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாதென்று . காங்கிரஸ் தலைவர்களுக்கு உத்தரவு போட்டார்கள். 17உ யன்று அலகாபாத் தலைவர்கள் அலகாபாத்தை விட்டு வெளியே போகக்கூடாதென்றும், பொதுக் கூட்டங்கள் கூட்டவோ பேசவோ கூடாதென்றும் உத்தரவிட்டார்கள். 16உ இரவு ருதாபூர் கிராமத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். உணவு பொருள்களை போலீசார் ஜப்தி செய்து கொண்டு போகும் போது ஜனங்கள் தடுத்ததால் துப்பாக்கியால் சுட நேரிட்டதாக போலீசார் சொல்லுகிறார்கள். சுட்டும் கூட பெண்களும், குழந்தைகளும் முன் வந்து இரண்டு மூட்டை உணவுப் பொருள்களை கொண்டு போய் விட்டதாக போலீசார் சொல்லுகிறார்கள். இது ஒன்றே ஐக்கிய மாகாண ஜனங்களின் தரித்திர நிலைமையை விளக்க போதுமான உதாரணமாகும். 18உ வாடகை மோட்டார் காரர்கள் காங்கிரஸ் காரரை ஏற்றிச் செல்லக் கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இது மட்டுமா? ஜமீன்தார்களுக்கு ஒரு பெரிய உத்தரவு, வரிமறுப்பு பிரசாரம் செய்கிறவர்களையெல்லாம் ஜமீன்தார்கள் உடனே கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கவேண்டுமாம். ஜமீன்தார்கள் இப்படிச் செய்ய தவறினால், குடிகள் வரி செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும், ஜமீன்தார்கள் கொடுக்க வேண்டியதை தாட்சண்யமின்றி வாங்கி விடுவார்களாம். புரோ ஜில்லாவில் ஒரு பொதுக் கூட்டத்தை போலீசார் தடியால் அடித்து கலைத்தார்கள். ராய் பெரிலி ஜில்லாவிலும் மற்ற இடங்களிலும் பலர் கைதியாயிருக்கின்றனர். கான்பூரில், நேஷனல் பிரஸ், லக்ஷ்மி பிரஸ் இரண்டையும் போலீசார் பூட்டி முத்திரைவைத்து விட்டார்கள். இவ்வளவு தடபுடல்களும், சட்ட சபையில் சர்க்கார் வாக்குறுதி கொடுத்த பின்பே நடைபெற்றிருக்கின்றன. ஹே மிதவாதிகளே, இப்பொழுதாவது உங்கள் மண்டையில் உண்மை விஷயங்கள் ஏறுகின்றனவா?

பாபு புருஷோத்தம தாஸ் தாண்டன் ஜில்லா கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் "நீர் தடை உத்தரவு போட்டதால் நான் நின்றுவிடப் போவதில்லை. எங்கெங்கு போக வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் செய்வேன்" என்று சொல்லுகிறார். பண்டித ஜவர்லால் 21உ பம்பாய்க்கு வந்து விட்டு மறுபடியும் அலகாபாத் திரும்புகிறார். 28உ மகாத்மா பம்பாய்க்கு வருவதால் அச்சமயம் அவர் பம்பாய் திரும்புவார். ஆனால் அதுவரை அவர் வெளியே இருப்பாரா அல்லது சர்க்கார் மாளிகையில் இருப்பாரா என்பது சந்தேகமாய் இருக்கிறது.

## தீண்டாமை தொலைக!

மைசூர், பரோடா, திருவாங்கூர் சமஸ்தானங்களில் திவானுயிருந்த திவான் பகதூர் வி. பி. மாதவ ராவ் பெங்களூரில் பேசியதாவது:—

"தீண்டாமை ஒழியவேண்டியது மிக மிக அவசியமாகும். இந்த இயக்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இந்நாள் எனது வாழ்க்கையிலேயே அதிகப்பெருமை யளிக்கும் நாளாகும். இந்து மதத்தைப் போன்று உலகத்துக்கு அவ்வளவு நன்மை பயந்திருக்கும் மதம் வேறு எதுவுமில்லை. ஆனால், அது இந்தப் பெரிய கறையால் துன்புறுகிறது. இந்து மதத்தின் தாராள நோக்கத்தை ஆதாரமாகக் கொண்டே, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற கூக்குரல் அதிகமாக எழுப்பப்படுகிறது. முன்னர் தொழில் வேற்றுமையால் ஜாதிப் பாகுபாடு ஏற்பட்டது. ஆனால், காலம் மாறிவிட்டது. காலத்திற் கேற்ப சனாதன தர்மிகள் புதிய வழிகளிலே வேலை செய்யவேண்டும்."

Koviloor Digital Library



# : மலையேறும் தெய்வங்கள் :

இந்தியாவிற்கு வந்த வெள்ளைக்காரர் ஒரு புதிய வழக்கத்தை பிடித்துக் கொண்டார்கள். இங்கேயுள்ள தெய்வங்களில் சில மலைமீது வாசஞ் செய்வதை பார்த்தார்கள். அவற்றிற்கு ஜனங்கள் காவடி எடுத்துச் செல்லுவதையும் பார்த்தார்கள். உடனே ஒரு பக்கா யோசனை அவர்கள் மண்டையில் நுழைந்தது. "இந்தியாவை காப்பாற்ற கடவுளால் நாம் அனுப்பப்பட்டிருக்கிறோம். இங்கேயோ பேசாத தெய்வங்கள் கூட மலைமேல் ஏறி இருக்கின்றன. அப்படியானால் பேசுந் தெய்வங்களாகிய நாம் ஏன் அம்மாதிரி மலை உச்சிக்கு போகக் கூடாது? இந்த ஜனங்கள் நம்மைத் தேடி காவடி எடுத்துக் கொண்டு ஏன் மலை மீது ஏறக்கூடாது?" உடனே மலை மீது ஏறிவிட்டார்கள். அன்று முதல் இந்த மலையேறும் திருவிழா வருஷா வருஷம் நடந்து கொண்டிருக்கிறது. வெயில் காலத்தில் சாதாரண சமபூமியில் இவர்களால் இருக்க முடியாதாம். அதற்காக மலை உச்சிக்கு போகிறார்கள். வரிகொடுக்கும் எஜமான்கள் சமவெளியில் இருக்க முடியுமானால் அவர்களிடம் சம்பளம் வாங்கும் சேவகர்கள் மலை உச்சிக்கு ஏன் போக வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அப்படிச் செய்கிறவர்களுக்கு தான் தகப்பன்சாமிகள் என்று பெயர். மலைமேல் வாசஞ் செய்யும் கடவுளுக்கு தகப்பன்சாமி என்று பெயரல்லவா? அதைப் போல இந்தத் தெய்வங்களும் பெயர் எடுக்க விரும்புவதாயிருக்கலாம். எப்படியிருந்தாலும் சரி. இந்த மலையேறும் உற்சவத்தை இனியும் நடத்திக் கொண்டு போக ஜனங்கள் விரும்பவில்லை. பம்பாய் தெய்வங்கள், கையில் பணமில்லாமல் போகவே, மலையேறும் திருவிழாவை நிறுத்தி விட்டார்கள். சென்னை சர்க்கார் இப்படிச் செய்வதா அப்படிச் செய்வதா என்று விழிக்கிறார்கள். எல்லாருக்கும் மேலாக சிம்லா தெய்வங்கள் விழிக்கின்றன.

* * *

17 கோடி ரூபாய் செலவு செய்து, டெல்லியில் தடபுடலாய் அரண்மனைகளை கட்டினார்கள். அவற்றை வருஷத்தில் 6 மாதங்களுக்கு மூடிப் போடுவதென்றால், இதைவிட முட்டாள் தனமான செய்கை வேறு இருக்க முடியுமா? இந்தக் கேள்வி ஒரு பக்கம் டெல்லி தெய்வங்களை உறுத்துகிறது. மற்றொரு பக்கம் "மதிப்பு" வந்து குறுக்கிடுகிறது. "இதுவரை சிம்லா மலை மீது தொந்தி குந்திக்கொண்டிருந்தோம். கேவலம் இந்தியாவில் பணக்கஷ்டம் என்பதற்காக அந்த மதிப்பைவிட்டு விடுவதா?" என்று சிம்லா தெய்வங்கள் கேட்கின்றனவாம். பழைய நவாப் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பச்சை பாப்பராய்விட்டார். அவர் மார்க்கட்டுக்கு போயிருக்கும்போது அவர் குடிசை தீப்பற்றி எரிவதாக ஒருவன் வந்து சொன்னான். நவாப் பழைய கம்பீர நடையில் யானையைப்போல அசைந்து போனாரே யொழிய வேகமாய் நடக்கவில்லை. இப்படி நடக்கலாமா, வீட்டில் பற்றிய நெருப்பை அணைக்க வேண்டாமா என்று பக்கத்தில் நின்றவன் கேட்டான். நவாப் சொல்லுகிறார்:—ஹே, இந்த அற்ப குடிசைக்காக என் மூதாதைகள் நடையைவிட்டு விடுவேனோ?" அந்த நவாப்பிற்கும் இந்த சிம்லா தெய்வங்களுக்கும் வித்தியாசம் கிடையாது. ஆனால் பணக் கஷ்டம் ஒரு பக்கம் குறுக்கிடுகிறது. இந்த சங்கடத்திலிருந்து எப்படி தப்புவிப்பது என்று சிம்லா தெய்வங்கள் விழிக்கின்றன. இந்தக் கஷ்டத்திலிருந்து விடுபட வெள்ளை பத்திரிகையுடன் "பயோனியர்" ஒரு யோசனை சொல்லுகிறது. வைசிராய் வேண்டுமானால் சிம்லாவுக்கு போகட்டும். நிர்வாக சபை அங்கத்தினர்களும் மற்ற பரிவாரங்களும் டெல்லியிலேயே இருக்கட்டும். நிர்வாக சபை கூட்டம் நடைபெறும்போது வைசிராய் வந்து போய்க் கொண்டிருந்தால் செலவு அதிகமாகாது. இவைகளே பயோனியர் யோசனை. எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். சர்க்காருக்கு வைசிராயே தலை. அவரை சிம்லாவுக்கு அனுப்பிவிட்டால், மலையேறும் கௌரவம் தங்கிவிடுகிறது; மற்றவர்கள் போகாமல் இருப்பதால் செலவும் குறைகிறது! எப்பேர்ப்பட்ட யோசனை? ஆகவே செலவையும் குறைத்து மதிப்பையும் நிலைநாட்டக்கூடிய ஒரு அதிசய யோசனையை கண்டுபிடித்த பயோனியர் மூளைக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்!

Koviloor Digital Library



# முதலுக்குமேல் கொள்ளை.

சென்னையில் நடைபெறும் சுதேசிக் காட்சியில் ஸ்ரீ. சத்திய மூர்த்தி பேசியதாவது:-

கைத் தொழில்களையும் பொருளாதார முன்னேற்றத்தையும் அதிகரித்து உற்சாகப் படுத்தும் நோக்கத்துடன் தான் சென்னை மகா ஜன சபை இப்பொருட் காட்சியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இதனால் சுதேசிப் பொருட்களின் செல்வாக்கு அதிகமாகுமென்பதும், தொழில்கள் விருத்தியடையுமென்றும் நம்புகிறோம். நமது தேசத்தின் வறுமையை நீக்குவதற்கு பாடுபடுவதே சிறந்த தேச கைங்கரியமாகும். இதுவே காங்கிரசின் லட்சியமுமாகும். இந்திய சர்க்காரிலும், மாகாண சர்க்காரிலும் கொழுத்த சம்பளம் வாங்கும் தொழிலிலாகா அதிகாரிகள் பலரிருந்தும் நமது தொழில்களுக்கு சிறிது நன்மைகூட ஏற்பட்டதாகக் காணோம். இந்த சந்தர்ப்பத்தில், சென்னை சர்க்கார் இந்த பொருட் காட்சியில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்களென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இலாகா மந்திரியின் நிர்வாகத்தில் இருந்தும் கூட நமது அழைப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக சர்க்கார் இதில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். ஆயினும் சர்க்காரை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை. ஜனங்களிடையே சுதேசியம் பரவி வருவது உண்மையாயினும், முதலும் முயற்சியுமின்றி போதுமான பலன்கள் ஏற்படாது. படித்த வகுப்பினர் கஷ்டப்பட்டு உழைக்க மறுக்கின்றனர். பணமுள்ளவர் புதிய தொழில்களில் இறங்க அஞ்சுகின்றனர். நமது மாகாணத்தில் தொழில்களை விருத்தி செய்ய ஏராளமான சந்தர்ப்பங்கள் உள்ளன. நெசவுத் தொழிலில் வெகு தூரம் விருத்தி செய்ய இடமிருக்கிறது. நெசவு ஆலைகளையும் விருத்தி செய்யலாம். ஆனால் இத்தேசத்தில் 685,675 கிராமங்கள் உள்ளனவென்பதையும், 28 கோடியே 65 லக்ஷம் ஜனங்கள் கிராமங்களிலேயே வாசம் செய்கிறார்களென்பதையும் 2316 நகரங்களில் 3 கோடியே 24 லக்ஷம் ஜனங்கள் தான் வசிக்கின்றனர் என்பதையும் நினைவில் வைக்கவேண்டும். 22½ கோடி ஜனங்கள் விவசாயிகளாகும். இவர்களுக்கு வேலை கொடுக்கவே மகாத்மா காந்தி ராட்டினத்திற்கு புத்துயிரளித்தார். கதரின் முக்கியத்தை யுத்தேசித்தே பொருட்காட்சியில் கதரைத் தவிர வேறு சுதேசித் துணிகளை வைப்பதற்கு அனுமதி கொடுக்க வருத்தத்துடன் மறுத்து விடும்படி நேர்ந்து விட்டது. அய்யம்பேட்டை, தஞ்சாவூர், வாலாஜா நகர் முதலிய இடங்களில் நேர்த்தியான பட்டுக் கம்பளங்கள் நெய்து வந்தனர். பெத்தாபுரம், மானாமதுரை, சேலம், பாம்பன், பரமக்குடி, அரியலூர், ஆற்காடு முதலிய இடங்களில் நெசவுத் தொழில் மிகுந்த உன்னத ஸ்திதியில் இருந்தது. அன்னிய நாட்டு மக்களின் போட்டியால் இத் தொழில்கள் படுத்துப் போய் விட்டன. இவைகளுக்கு புத்துயிரளிக்க வேண்டுவது நமது கடமை. இதனால் நான் மில்கள் வேண்டாம் என்று சொல்லுவதாக எண்ணி விடக்கூடாது. நமது நாட்டின் பிரத்யேக நிலைமையையும் கவனித்தே முன்னேற வேண்டும் என்றே நான் வற்புறுத்துகிறேன். சர். விஸ்வேஸ்வரய்யா, தொழில் கல்வியின் முக்கியத்தைக் குறித்து ஒவ்வொரு கலாசாலையிலும் வற்புறுத்தி வந்திருக்கின்றார். பிரிட்டிஷ் வர்த்தகர் கோரிக்கை வெள்ளை வர்த்தகர்கள் கோரும் பாது காப்புகளைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அசாத்தியமான இக்கோரிக்கைகளுக்கு எந்த சுயராஜ்ய சர்க்காரும் இசைய மாட்டார்கள் என்பது திண்ணம். இங்கு வாசம் செய்து பிரிட்டிஷ் வர்த்தகர்கள் இந்நாட்டின் பிரஜா உரிமை பெறுவதை எவரும் தடை செய்ய வில்லை. எதிர்கால நட்பை யுத்தேசித்து பிரிட்டனுக்கு சில விஷயங்களில் சலுகையும் காட்டலாம் என்று நான் கூறுவேன். ஆனால் இந்நாட்டில் தங்காமலிருக்கும் வர்த்தகர்களுக்கும் அவர்களது சந்ததியாருக்கும் எக்காலத்திலும் பாது காப்பும், சலுகையும் அளிப்பதாக அரசியல் அமைப்பு விதிகளில் உத்தரவாதம் செய்வதை ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது. பிரிட்டிஷார் முதல் போட்டிருந்தால் அதைவிட, பன்மடங்கு அதிகமான வரும்படியை சுரண்டிக் கொண்டு போய்விட்டார்களென்பதை சர். தாகூர்தாஸ் நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆகவே இத்தகைய கோரிக்கைகள் அசாத்தியமானதாகும். சென்னை வர்த்தகசங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ. பையர்லி கூறியவாறு பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு இந்தியர்களின் நல்லெண்ணமே சிறந்த பாதுகாப்பாகும்.

## ஆடுபாப்பா பாட்டு.

("எம்டன்"—பாடியது)

(ஆடுமயிலே—என்பதுபோல்)

பல்லவி

ஆடுபாப்பா கூத்தாடு பாப்பா
ஆனந்தமாக ஓடி ஆடுபாப்பா (ஆடு)

அனுபல்லவி

பாடுபட்டால் பலனுண்டு சின்னபாப்பா—ஒரு
பாபமும் செய்யாதடி சின்னபாப்பா
நாடுவிட்டு நாடுவந்த ஜாதிபாப்பா—சுய
நலத்திற்கு ஆட்சிகொண்டா ராடுபாப்பா (ஆடு)

நல்ல வழியொன்றுண்டு கேளுபாப்பா—நம்
நாட்டின் மானங்காக்க நாடுபாப்பா
பால்நுரைபோல் பஞ்செடுத்து பச்சைபாப்பா
—வெகு
பசுந்தாக நூலைநூற்றுப் பாருபாப்பா (ஆடு)

ஆனமட்டும் ஊசிஇழைபோல பாப்பா—வெகு
அருமையாய் நூலிழைப்பாய் ஆசைபாப்பா
பானைதனில் சோறுவரும் பாருபாப்பா—ஏழை
பசிப்பிணி தீர்த்திடுவாய் பாலபாப்பா (ஆடு)

நெஞ்சிலிரக்கங் கொள்ளவேணும்பாப்பா—இது
நிலையற்ற ஆட்சியிலே விழிபாப்பா
பஞ்சிருக்க பாவிருக்க ஏனேபாப்பா—அந்த
பரதேசி ஆடைவேண்டாம் கண்ணேபாப்பா ()

குருட்டுப்பிள்ளை யென்றாலும் குள்ளபாப்பா
—ஆசை
குழந்தை நமதல்லவோ தள்ளலாமோ
முரட்டுத் துணியானாலும் யெந்தன்பாப்பா—நம்
முன்னோர்கள் நாட்டுத்துணியல்லவோபாப்பா()

பாரத நாட்டின் பட்டு பாப்பா—கதர்
பரம ஏழைகட்கு கஞ்சி பாப்பா
தீராத அடிமையைத் தீர்க்கும் பாப்பா—அந்த
தீனபந்து காந்திபுரை கேளுபாப்பா (ஆடு)

விளையாட்டு புத்திவேண்டாம் பொன்னு
பாப்பா—வீண்
காலங்கழிக்காதே பெண்ணே பாப்பா
சளைக்காது ராட்டைச்சுற்ற சாதுபாப்பா
—இதில்
சாதகம்உண்டுசொன்னேன் கேளுபாப்பா (ஆடு)

மானத்தைக்காக்க வழிதேடுபாப்பா—நம்
மாதாவின் துயர்தீர்க்க வேண்டும் பாப்பா
ஈனத்துணி விலக்க வேண்டும்பாப்பா—நமக்
கேற்ற கதருடுத்தி ஆடுபாப்பா (ஆடு)

## இர்வின் தந்தை எச்சரிக்கை.

லார்டு இர்வின் தந்தையான லார்டு. ஹாலி பர்க்ஸ் யார்க்ஷயரில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் கூறிய தாவது.—இந்தியாவை பலாத்கார முறைகளைக்கொண்டு ஆட்சி செய்ய லாமென்ற நம்பிக்கை நமக்கு சிறிதும் வேண்டாம். இந்தியாவின் க்ஷேமத்தில் நாம் சிரத்தை யுடையவர்களாக இருக்கிறோ மென்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். அப்படியானால்தான், அமைதியும் திருப்திகரமான நிலைமையும் ஏற்பட இடமுண்டு. அவ்விதம் அமைதியும், திருப்திகரமான நிலைமையும் ஏற்படும்படி செய்தால் தான், நாம் நமது கடமையை பெருமையுடன் செய்தவர்களாவோம். இந்தியா முன்னேற்ற மடைவதற்குள்ள முறைகளை யொட்டி நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம்.

## இத்தாலிய இளவரசி பக்தி

இத்தாலிய மன்னரான விக்டர் எமானுவலின் கடைசி புதல்வியான மேரியா இளவரசி, 13உ மாலை மகாத்மாகாந்தி பிரிண்டிசிக்கு புறப்படுவதற்கு முன், திடீரென மகாத்மாவைக் காண வந்தார். மேரியா இளவரசி மகாத்மா காந்தியுடன் அரை மணி நேரம் வரை பேசிக்கொண்டிருந்த பின், மகாத்மாவுடன் மாலை பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்.

## சர்க்கார் தயார்?

பம்பாய் கிராணிகள் எழுதுகிறது:—

எவ்வித நிலைமையையும் சமாளிக்க தயாராக இருக்கவேண்டுமென இந்தியா சர்க்கார் மாகாண சர்க்கார்களனைத்திற்கும் ரகசிய சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாக பம்பாயில் பலத்த வதந்திகள் உலவி வருகின்றன. சென்ற வருஷ விசேஷ போலீஸ் படைகளை மீண்டும் திரட்டும்படியும், தடிகளை தயாராக வைத்திருக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library



## கதரும் கைத்தறியும்

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி)

கதர் இயக்கம் தறிகாரர்களுக்கு எவ்விதத்திலும் விரோதமானதன்று. அப்படி யாராவது சொன்னால் பெரிய அறிவீனமாகும். கதர்த் துணியைக் கைத்தறியில்தான் நெய்தாகவேண்டும். கைத்தறிகாரனுக்குக் கூலி கொடாமல் ஒரு கஜம் கதர்கூட உற்பத்தியாகாது. கதர் நெய்பவர்கள் எல்லாம் பழைய கைத்தறிகாரர்கள்தான். கைத்தறியைக் காப்பாற்றுவது கதர் இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

கதர் இயக்கம் தறிகாரர்களுக்கு ஜீவனோபாயம் அளிப்பதுகூட, இராட்டையில் நூற்கும் லட்சக்கணக்கான ஏழைக்குடியான ஸ்திரீகளுக்கும் உதவியளித்து வருகிறது. ஆகையினால்தான் கதர் இயக்கத்தைக் "காமதேனு" என்று மகாத்மா சொல்கிறார். காங்கிரஸ், சுதேசித் துணியைவிடக் கதருக்கே முதன்மை கொடுப்பதும் இக்காரணத்தினால்தான். சொந்த நன்மையையும், பொது நன்மையையும் நாடும் தறிகாரர்கள் கதரைப் பாதுகாப்பதில் காங்கிரஸுடன் ஒத்துழைக்கவேண்டும்.

கதர் இயக்கத்தைப் பாது காப்பதற்குத் தறிகாரர்கள் என்ன உதவி செய்ய முடியும்? இராட்டை நூல் கிடைக்குமிடங்களிலெல்லாம் அவர்கள் கதர் நெய்யலாம். இதைச் செய்யாதவர்கள் சுலபமாகச் செய்யக் கூடிய உதவியொன்று உண்டு. அதாவது 20-ம் நம்பருக்குக் கீழ்ப்பட்ட முரட்டு மில் நூலைக்கொண்டு போலிக் கதர் நெய்வதில்லையென்பதாக விரதங் கொள்ள வேண்டும். போலிக்கதர் தான் தற்போது கதருக்குப் பெரிய பகையாயிருக்கிறது.

நமது நாட்டிலிருந்து வருஷந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் அயல் நாடுகளுக்குப் போவதைத் தடுக்கவும் உங்களுடைய ஏழைச் சகோதர சகோதரிகள் லட்சக்கணக்கானபேரைப் பட்டினியினின்று பாதுகாக்கவும், நமது நாட்டின் பரம்பரைச் செல்வமான கைத்தறித் தொழில் அழியாமல் காக்கவும் விரும்பினால்; (1) கைத்தறியில் நெய்யப்படாத துணியைக் கண்ணெடுத்தும் பார்க்கவேண்டாம். (2) கைத்தறித் துணி சீமை நூலால் நெய்திருந்தால் அதையும் தள்ளிவிடுங்கள். (3) சுதேசி ஆலை நூலைக்காட்டிலும் கைராட்டை நூலே சிரேஷ்டம். ஆகையால் கைத்தறித் துணி வகைகளில் கதரே மேன்மையானது. அதை உடுத்தினால் தான் நாட்டிற்குப் பூரண நன்மை. (4) மெல்லிய துணி மோகம் வேண்டாம். அது சீமைத்துணியாகவேதான் முடியும்.

## பொய்யும் புளுகும்

ஐக்கியமாகாண சர்க்கார் அவசரச் சட்டத்தை வெளியிடும்போது, கூட ஒரு கதையும் சேர்த்து வெளியிட்டார்கள். அதில் முதலிலிருந்து கடைசி வரையில் காங்கிரஸ்காரர் சட்டமறுப்புக்கு முஸ்திப்பு செய்வதாக குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். இந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைக்காட்ட ஒரு உதாரணம் கொடுக்கிறோம். ஐக்கிய மாகாண காங்கிரஸ் தலைவர் பெயர் ஸ்ரீ. ஷெர்வானி அவர் ஒரு முஸ்லிம் ஜமீன்தார். அவர் காங்கிரஸ் கிளைச் சபைகளுக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு வாக்கியத்தை சர்க்கார் எடுத்துக் கொண்டார்கள். அதாவது:— "விவசாயிகள் பிரச்னை நமக்கு உதவி செய்ய தெய்வாநுகூலமாய் வந்திருக்கிறது. இதன் முழு பலனையும் நாம அநுபவிக்கவேண்டும். நாம் கொஞ்சம் முயற்சி செய்து தூண்டி விட்டால், இந்த மாகாணத்திலுள்ள சகல சமூகத்திலுமுள்ள விவசாயிகளும் நம்முடன் வந்து சேர்வார்கள்" இதை மட்டும் பார்த்தால் சர்க்காருக்கு விரோதமாக ஜனங்களை கிளப்பி விட ஷெர்வானி எழுதியிருப்பதாய் தோன்றும். சர்க்கார் தங்கள் அறிக்கையில் அப்படித் தான் கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மை மட்டும் அதுவல்ல. ஸ்ரீ. ஷெர்வானி கடிதம் எழுதியது அந்த நோக்கத்தோடு அல்ல. அவர் வட்டமேஜை மகாநாட்டில் வகுப்புவாதிகள் செய்த குள்ளிகளை எடுத்துக் காட்டி, வகுப்புவாதத்தை உடனே தொலைக்க வேண்டுமென்று எழுதினர். அதற்கு ஏராளமாக முஸ்லிம்களை காங்கிரசில் சேர்ப்பதுதான் வழி என்று குறிப்பிட்டார். இப்படிச்செய்ய தற்கால விவசாயிகள் பிரச்னை கடவுளால் அனுப்பப்பட்டதென்று கூறினர். முன்னும் பின்னும் உள்ளதைவிட்டு, மத்தியில் ஒரு வாக்கியத்தை எடுத்துக்காட்டி திரித்துக் கூறுவது பெரிய அயோக்கியத்தனமாகும். அதையே ஐக்கிய மாகாண சர்க்கார் செய்திருக்கிறார்கள். இந்தப் பொய்யும் புளுகும் இல்லாவிட்டால், அவசரச் சட்டத்திற்கு வேறு ஆதாரம் எங்கே கிடைக்கப் போகிறது?

Koviloor Digital Library



# லண்டன் சென்ற பலன்

(ஸ்ரீ. ரிச்சார்ட் கிரக்.)

மகாத்மா லண்டனுக்கு விஜயம் செய்வதால் காங்கிரசின் கோரிக்கைகளில் ஒன்றாவது கிடைக்கும் என்று நான் நம்பவில்லை. அனேகமாக மீண்டும் போராட்டம் தொடங்க வேண்டியே வரலாம். ஆயினும் ஏற்கெனவே மகாத்மாவின் விஜயத்தால் பலநன்மைகள் ஏற்பட்டுவிட்டன. நேருக்குநேராக நமது கண்ணுக்குப் புலப்படாத பல நன்மைகள் உண்டாகி யிருக்கின்றன. காலம் செல்லச்செல்ல இதனால் ஏற்பட்டுள்ள முக்கியமான நன்மைகளை இந்தியா உணர்ந்து கொள்ளும். முதலாவதாக, இந்தியர் அசாத்தியமான கோரிக்கைகளை வேண்டுவதாகவும், எதற்கும் சம்மதிக்காத குறுகிய புத்திகொண்ட பிடிவாதக் காரர்களெனவும், பிறநாடுகளில் இந்தியாவின் மீது தப்பெண்ணம் உண்டு பண்ணுவதற்கு பிரிட்டன் செய்த சூழ்ச்சி, மகாத்மாவின் விஜயத்தால் மரித்தது. காங்கிரஸ் மிகுந்த ஒழுங்கும், கட்டுப்பாடும், பொறுமையும், சக்தியும் வாய்ந்த மகத்தான அரசியல் ஸ்தாபனம் என்பதை மகாத்மா உலகத்துக்கு நன்கு நிரூபித்து விட்டார். பிரிட்டிஷ் சர்க்கார் பிற்போக்காளர்களின் ஆதாரவையும், தேசத்தில் பிளவு செய்யும் மனப் போக்குகொண்டவர்களின் ஆதரவையும் பெறுவதற்கு முயன்று வருவதை உலகம் அறிந்தே யிருக்கிறது. ஆகவே, சர்க்காரின் பக்க பலம் ஸ்திரமற்றது என்பதும் மற்றவர்களுக்கு நன்கு தெரிந்துவிட்டது. காங்கிரஸ், அத்திரமும், பலஹீனமும், பிளவும் நிறைந்த ஸ்தாபனமென்றும், திறமையும், அரசியல் ஞானமும் அற்றது என்றும் உலகத்தினருக்கு எடுத்துக் காட்டுவதற்கு செய்த முயற்சிகள் வீணாய் விட்டன. மகாத்மா, பிரிட்டிஷ் தொழிலாளரிடையேயும், ஏழைகளிடமும் நெருங்கிப் பழகியதிலிருந்து மிகுந்த நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியின் திறமை பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் திறமைக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல வென்பதையும், யோக்கியப் பொறுப்பிலும், உன்னத லட்சியங்களிலும், மகாத்மா மிகவும் மேம்பட்டவ ரென்பதையும் உலகம் அறிந்து கொண்டு விட்டது. ஆகவே, மீண்டும் போராட்டம் தொடங்கும் காலத்தில் உலகம் சுயேச்சை இயக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்ளும். இனி இந்தியாவை வெளியுலகம் குறை கூறாதென்பதுடன், பிரிட்டனின் நல்லெண்ணம், திறமை, சக்தி வாக்குறுதி முதலியவைகளைப் பற்றியும் அதிகமாக சந்தேகிக்கத் தொடங்கும் இவைகள் எல்லாம் கைமேல் கண்ட பலன்களல்ல வென்பது உண்மையே. ஆனால், நாளாவட்டத்தில் இப்பிரயாணத்தின் மகத்தான பலன்கள் நன்கு தெரியவரும்.

# எமனை ஏமாற்றும் வழி

இந்திய இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் ஏஜண்டுகள் மகாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது. அச்சமயம் சர். சி. வி. ராமன் என்ற நோபல் பரிசு பெற்ற பிரபல சாஸ்திரியார் பேசினார். இன்ஷூரன்சைப் பற்றி அவர் சொல்லியதாவது:—

"இன்ஷூரன்ஸ் ஒன்றினால் தான் எமனை ஏமாற்ற முடியும். இன்ஷூரன்ஸ் செய்து கொண்டால் எமன் உயிரை பறித்தாலும் மனைவியையும், குழந்தைகளையும் நல்ல நிலைமையில் இருக்கும் படி செய்யலாம். இன்ஷூரன்சில் மற்றொரு முக்கிய விஷயமிருக்கிறது. இன்ஷூரன்ஸ் தேசத்தின் பெரிய செல்வம். ஒருவன் இறந்தால் அவன் குடும்பத்திற்கு உதவுவதோடு இன்ஷூரன்ஸ் நின்று விடவில்லை. அந்தக் கம்பெனிகள் குவித்து வைத்திருக்கும் ஏராளமான செல்வத்தை தேசத்தின் நன்மைக்கான வழிகளில் உபயோகிக்க முடியும். இந்தியாவில் தொழில் செய்யும் சகல இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும், இங்கு வசூலிக்கும் பணத்தை இந்நாட்டிலேயே போடவேண்டும். இதற்கு அவசியமானால் சட்டம் செய்ய வேண்டும் என்று கூட நான் அபிப்பிராயப் படுகிறேன். மற்ற நாட்டு கம்பெனிகளுக்கும், இந்நாட்டு கம்பெனிகளுக்கும் வித்தியாசம் பாராட்ட வேண்டுமா என்பதைப் பற்றி நான் எதுவும் சொல்லப் போவதில்லை. அது ராஜீய வாதிகளைச் சேர்ந்தது. ஆனால் இந்நாட்டில் வசூலாகும் பணத்தை இந்நாட்டிலேயே போட்டு வைக்கவேண்டுவது மிகவும் அவசியமாகும்."

Koviloor Digital Library



## வீண் புரளி

வீண் புரளி செய்வதில் வெள்ளைப் பத்திரிகைகள் களைத்ததில்லை. தொழிற்கட்சியாரை தோற்கடிப்பதற்காக ஒரு போலி சோவியத் கடிதத்தை பிரசுரித்த கதையை நாம் அறிவோம். அதைப்போல தென்னாப்பிரிக்காவிலிருந்து மகாத்மா இங்கு வந்திருக்கும்போது அவர் பேசியதாக ராய்ட்டர் ஒரு பொய்ச் செய்தியை அனுப்பியது. அதனால் மகாத்மா தென்னாப்பிரிக்கா திரும்பிய போது பெரிய கலகம் ஏற்பட்டது. இம்மாதிரி பொய்யும் புளுகும் கட்டிவிடுவதில் கொஞ்சங்கூட சளைப்பதில்லை. சமீபத்தில் ஒரு இத்தாலியப் பத்திரிகை ஒரு புரளி செய்தது. மகாத்மாவை பேட்டி கண்டு பேசியதாகவும், இந்தியா திரும்பியதும் போர் ஆரம்பிக்கப் போவதாக மகாத்மா சொல்லியதாகவும் அது பிரசுரித்தது. அதை சென்ற இதழில் வெளியிட்டிருக்கிறோம். இந்தச் செய்தியைக் கண்டதும், மார்னிங் போஸ்ட், டெயிலி மெயில் போன்ற பத்திரிகைகள் வேட்டை நாய்களைப் போல மகாத்மா மீது பாய்ந்தன. தாறுமாறாக உளறின. சென்னை மெயில் கூட அந்தக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டது. மகாத்மா அப்படி சொல்லியிருந்தாலும், அதை குற்றமென்று நாம் சொல்லமாட்டோம். ஐக்கிய மாகாணத்திலும், வங்காளத்திலும் போலீஸ் ஆட்சி செய்ய சர்க்கார் முனைந்தால், சட்ட மறுப்பு செய்ய காங்கிரசுக்கு ஏன் உரிமை கிடையாது? அது வேறு விஷயம். "இந்தியா திரும்பிச் சென்று காங்கிரஸ் காரியக் கமிட்டியை கலந்து முன்பு எந்த அபிப்பிராயமும் சொல்ல முடியாது என்று மகாத்மா லண்டனில் சொல்லியிருக்கிறார். பிரான்ஸிலும் அதை வற்புறுத்தியிருக்கிறார். அப்படியிருக்க இப்பொழுது மகாத்மா தமது அபிப்பிராயத்தை மாற்ற காரணம் என்ன என்பதை பிரிட்டிஷ் பத்திரிகைகள் யோசித்திருக்கலாம். இட்டி இட்ட காலத்திலும் டெயிலிமெயில், மார்னிங் போஸ்ட் கூட்டங்களுக்கு அந்த கௌரவ புத்தி ஏற்பட முடியுமா? ஆகவே சள்புள் என்று பாய்ந்தன. இன்று என்ன நிலைமை தெரியுமா? இத்தாலி பத்திரிகை பிரசுரித்த செய்தியே வெறும் பொய் என்று ஏற்பட்டுவிட்டது. இத்தாலியில் மகாத்மா எந்தப் பத்திரிகை நிருபருக்கும் பேட்டி கொடுக்கவில்லையென்றும், யாரிடமும் அம்மாதிரி சொல்லவில்லையென்றும் மகாத்மா சொல்லுகிறார். ஆகவே பாய்ந்து விழுந்த பத்திரிகைகள் வாய்மூடி திகைக்கின்றன. இம்மாதிரி புரளிசெய்ய காரணமாயிருந்தது எது? வெள்ளை பத்திராசிரியத் தொழிலே! பொய்யும் புளுகும் பிரசுரித்து ஜனங்களை ஏமாற்ற முயலும் வெள்ளை பத்திராசிரியத் தொழிலே இத்தாலியப் பத்திரிகையை பிடித்தது. இதற்கு இந்தியா ஜவாப்தாரி? இம்மாதிரி படுகுழியில் விழுந்து தவிக்கும் வெள்ளை பத்திரிகைத் தொழிலைக்கண்டு மார்னிங் போஸ்டும், டெயிலி மெயிலும் தலை குனிந்து மன்னிப்புக் கேட்குமா?

## மறுபடியும் மாயை

பர்மா அங்கத்தினரைப் பிடித்த மாயை, பீல் அறிக்கையால் போய் விட்டதென்று நினைத்தோம். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் மறுபடியும் தங்கள் மாய வலையில் அவர்களை பிடித்து விட்டார்கள். "லார்ட் பீல் அறிக்கையில் கண்டதைப் பார்த்து கோபங் கொள்ள வேண்டாம். பிரதம மந்திரி இந்தியாவிற்காக கொடுத்த வாக்குறுதிகளும் அறிக்கைகளும் உங்களுக்கும் சம்பந்தப்படும்" என்று உதவி இந்தியா மந்திரி வாக்குறுதி கொடுத்தாராம். உடனே பர்மிய அங்கத்தினர்கள் ஏமாந்து விட்டார்கள். "சரி, திருப்தியாய்விட்டோம். இனி மகாநாட்டில் கலந்துகொள்ளுவோம்" என்று வாக்குறுதி கொடுத்துவிட்டார்கள். "கண்ணிருந்தும் பார்க்கார், காதிருந்தும் கேட்கார்" என்று சிலரைச் சொல்லுவதுண்டு. பலதடவை பட்டுப்பட்டு அநுபவித்தும் மறுபடியும் புத்தி வராமல் போகிறவர்களையே அம்மாதிரி சொல்லுவார்கள். அந்தக் கூட்டத்தில்தான் நமது பர்மிய அங்கத்தினர்களையும் சேர்க்கவேண்டும்.

## தங்கம் வெள்ளி

சென்னை, டிசம்பர் 19௳

| | | | |
|---|---|---|---|
| பார்பாய் ஆலைத் தங்கம் | | ரூ. | 30—0—0 |
| சவரன் கில்லரை | | ரூ. | 18—13—0 |
| சீமை வெள்ளி | 100 | ரூ எடை | 63—0—0 |
| ,, | | ரூ எடை | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam at Lakshmi Press, 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி
வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு
வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை 1931 டிசம்பர் 24வ, பிரஜோற்பத்தி மார்கழிமீ 9வ வியாழக்கிழமை | இதழ் 19

## ஒப்பந்தம் எங்கே?




வங்காள அவசரச் சட்டமும், ஐக்கிய மாகாண அவசரச் சட்டமும் டில்லி உடன் படிக்கையை கட்டிப் போடுகின்றன.

Koviloor Digital Library



## மின்வெட்டு.

தங்கம் கொள்ளை

19-ந் தேதி பம்பாயைவிட்டுப் புறப்பட்ட "ஸ்டிராத் நாவர்" கப்பலில் 276 லட்சம் ரூபாய் பெறுமான தங்கம் ஏற்றுமதியாயிருக்கிறது. இது வரை சென்ற மூன்று மாதங்களில் 27 கோடி ரூபாய் தங்கம் இந்தியாவைவிட்டு வெளியே போயிருக்கிறது.

விரட்டு கிராடக்கை!

கிராடக் என்ற பேர்வழி மத்திய மாகாணத்தில் கவர்னராயிருந்தவர். கொஞ்சங்கூட நன்றி விசுவாசமின்றி மகாத்மாவை பார்லிமெண்டில் திட்டி பேசினர். இப்படி பேசுகிறவரின் படத்தையோ ஞாபகச் சின்னத்தையோ இந்த நாட்டில் வைத்திருப்பது பெரிய அவமானம் என்று மத்திய மாகாண வாசிகள் நினைக்கிறார்கள். அது நியாயமான நினைப்பே. மத்திய மாகாண சட்ட சபை மண்டபத்திலுள்ள கிராடக் படத்தை எடுத்துவிடும்படி ஒரு அங்கத்தினர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். நாகபுரியில் மார்க்கட்டுகள், தெருக்கள் முதலியவைகளுக்கு கொடுத்திருக்கும் கிராடக் பெயரை உடனே நீக்கிவிடும்படி நாகபுரி முனிசிபாலிடி தீர்மானித்திருக்கிறது. நல்லவேளை! தீயோரை காண்பதுவும் தீதே, தீயோர் நாமம் கேட்பதுவும் தீதே!

குடியும் கூத்தும்!

லாகூரில் நடந்த ராஜீய மகாநாட்டை கலைக்க சில போக்கிரிகளை தூண்டிவிட்டார்கள். அவர்களுக்கு இரண்டு மூன்று தினங்களாக கள்ளுக்கடை சாராயக்கடைகளில் பீப்பாய்களை பூராவாக திறந்துவைத்துவிட்டார்களாம். இத்துடன் நிற்கவில்லை. மூன்றாவது நாளில் இந்தப் போக்கிரிகள் மகாநாட்டுப் பந்தலில் ஒரு சதுர்க்கச்சேரி நடத்தினார்கள். பேஷ்! சரியான வேலை.

---

(147-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி. எனெனில் சுயராஜ்ய ஆவல் என்ற சக்தியை எந்த அடக்கு முறையாலும் அடக்கிவிடமுடியாது. தலைவர்களை கைது செய்து விட்டால் இயக்கம் நின்றுவிடாது. தலைவர்கள் இல்லாத காலத்தில் என்ன செய்யவேண்டும் என்பதை ஜனங்கள் நன்றாய் அறிவார்கள். தாங்கள் நினைத்தது வெறும் குருட்டுயோசனை என்பதை சர்க்கார் சீக்கிரம் தெரிந்துகொள்ளுவார்கள்.

## ரங்காச்சாரி அதிகப்பிரசங்கம்

பம்பாய் வக்கீல்கள் ஒரு மகாநாடு கூடினார்கள். அங்கெல்லாம் அதற்கு தலைவர் அகப்படாமல் சென்னையில் தேடி அலைந்தார்கள். கடைசியாக கனம் திவான்பகதூர் டி. ரங்காச்சாரியார் என்ற மாபெரும் ராஜபக்தர் கிடைத்தார். ஸ்ரீ. ரங்காச்சாரியாரும் அழைப்பிற்கு இணங்கி பம்பாய் சென்றார். ஒரு பெரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் நிகழ்த்திய சொற்பொழிவில் எதைக் காணலாமென்று நினைக்கிறீர்கள்? துரும்பும் தேசாபிமானமும், துள்ளும் வீரமும், குதிக்கும் ஆவேசமுமா அதில் இருக்கப்போகின்றன? பாவம், வெறும் ராஜபக்தியைத் தவிர வேறு காணமுடியாது. ரங்காச்சாரியார் தமது பிரசங்கத்தில் வக்கீல்களுக்கு ஒரு உபதேசம் செய்கிறார். அதாவது சட்டமறுப்பு இயக்கத்தில் வக்கீல்கள் சேரக்கூடாதாம். அப்படிச்சேர்ந்தால், தங்கள் தொழிலுக்காக கொடுத்திருக்கும் வாக்குறுதிக்கு விரோதமாம். இந்த உபதேசத்தை செய்யும்போது, மனிதருக்காக சட்டம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது சட்டத்திற்காக மனிதர் ஏற்பட்டிருக்கிறார்களா என்ற அடிப்படையான கொள்கையை அவர் மறந்துவிட்டார். மனிதருக்காக சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைக்காப்பாற்ற வேண்டியது சட்டம் படித்த வக்கீல்கள் கடமை. அந்த சட்டங்கள் மனித சுதந்திரத்தை கெடுக்கக்கூடியதாயிருக்குமானால், அவற்றை தொலைக்க வேண்டியதும் அவர்கள் கடமையாக வந்து சேருகிறது. கனம் ரங்காச் சாரியருக்கு இந்த விஷயம் மூளையில் படவில்லை. அவர் பிரசங்கத்தைக் கேட்டு பம்பாய் வக்கீல்கள் திருப்தியடையவில்லையென்று தெரிகிறது. மகா நாட்டில் ஸ்ரீ. கனுகா என்பவர் "ராஜீய இயக்கத்தில் சேருவதோ, அதனால் தண்டனை படைவதோ வக்கீல் தொழிலுக்கு விரோதமானதல்ல" என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதில் "தண்டனை அடைந்தால்" என்ற வார்த்தைகளை எடுத்துவிடும்படி தலைவர் ரங்காச்சாரியார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மகா நாட்டில் யாரும் கேட்கவில்லை. அந்த வார்த்தைகளையும் தீர்மானத்தில் சேர்த்து நிறைவேற்றி விட்டார்கள். ஸ்ரீ. ரங்காச்சாரியார் போக்கை பம்பாய் வக்கீல்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்பதைக் காட்ட

Koviloor Digital Library



# காங்கிரஸை நசுக்க சர்க்கார் கனவு.

வரப்போகும் போராட்டத்தை ஒரே விநாடியில் அடக்கிவிட டெல்லியில் சர்க்கார் அதிகாரிகள் யோசனை செய்கிறார்களாம். இதைப்பற்றி பம்பாய் பிரீ பிரஸ் ஜர்னலில் வெளியாயிருக்கும் செய்தியாவது:—

காங்கிரஸ் காரியக்கமிட்டியோ அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியோ சட்ட மறுப்பு தீர்மானம் செய்தவுடன் இந்த வேட்டை ஆரம்பமாகும். இர்வின் செய்த "தவறான வழிகளை" சர்க்கார் இனிபின்பற்ற மாட்டார்களாம். இயக்கத்திற்கு ஆதரவு கிடைக்கு முன்பாகவே அதை உடைத்துவிடுவார்களாம். கையாள யோசிக்கும் முறைகளாவன :—

1. சத்தியாக்கிரக கமிட்டிகளை யெல்லாம் சட்ட விரோதமானவை என்று அறிவித்தல்.

2. சத்தியாக்கிரகஞ் செய்வதோ, செய்யும்படி தூண்டுவதோ, அதற்கு உடந்தையாக இருப்பதோ சர்க்காருக்கு விரோதமான செய்கை என்று அறிவித்தல்.

3. சத்தியாக்கிரக நிதிகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்தல்.

4. பறிமுதல் சொத்துக்களையும் நிலங்களையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தல்.

5. சத்தியாக்கிரக தலைவர்களை கூண்டோடு கைது செய்தல்.

ஒரு ஜாப்தா தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் ஜாப்தாவில் சுமார் 10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். டெல்லியில் சுயராஜ்ய விரோதிகள் குனியாட்டம் போடுகிறார்கள். தங்கள் மனதிற்குகந்த ஒரு இந்தியா மந்திரியும, தாங்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வரும் ஒரு வைசிராயும் இருக்கும்போது அவர்களுக்கு என்ன குறை? வரும் வரும் ஜன்மங்களுக்கெல்லாம் மறக்க முடியாதபடி காங்கிரசிற்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்களாம்.

சட்டமறுப்பு தீர்மானம் செய்த உடனேயே சகலரையும் ஜெயிலுக்குள் தள்ளி விட்டால் எல்லாம் அடங்கிவிடு மென்பது சர்க்கார் நினைப்பு. எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக இந்த வேலை நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றி நிச்சயம் என்று சொல்லுகிறார்களாம். போலீசாருக்கு உதவியாக வெள்ளை சிப்பாய்களை அனுப்புவார்களே யொழிய இந்திய ராணுவத்தை அனுப்பமாட்டார்களாம். இந்த விதமான வேலைகளிலும், பறிமுதல் சொத்துக்களை விற்பனை செய்வதிலும் முஸ்லிம்கள் தங்களுக்கு உதவியாக இருப்பார்களென்று சர்க்கார் நம்புகிறார்கள். அவர்கள் தலைவர்களுடன் இப்பொழுதே பேச்சுவார்த்தை நடக்கிறதாம். ஆனால் ஒரு கஷ்டம் வந்து குறுக்கிடுகிறது. அதுவே பணக்கஷ்டம். இப்பொழுதே பணத்திற்கு பஞ்சாய் பறந்தால், போர்காலத்தில், ஏராளமான செலவும், குறைவான வரும்படியும் இருக்கும்போது எப்படி திண்டாட வேண்டியிருக்கும்? இதுவே சர்க்கார் கவலை. ஆனால் இயக்கத்தை சீக்கிரமாக அடக்கிவிட்டால், லண்டனில் ஏராளமாக கடன் கிடைக்குமென்று நம்புகிறார்கள்.

மேலே சொல்லிய சர்க்கார் யோசனைகள் எவ்வளவுதூரம் உண்மையானவை என்பது நமக்குத் தெரியாது. ஐக்கிய மாகாணத்திலும், வங்காளத்திலும் நடக்கும் ஆர்ப்பாட்டங்களை கவனித்தால், வில்லிங்டன் சர்க்கார் எதைச் செய்யவும் பின் வாங்கும் பேர்வழிகள் அல்ல என்பது விளங்கும். லார்ட் இர்வின் சென்ற வருஷ சட்ட மறுப்பை ஆரம்பத்திலேயே அடக்கவில்லை யென்று சீமை உளறுவாயர்கள் கூறுகிறார்கள். அப்படிச் செய்யாததால்தான் சென்ற வருஷ சட்ட மறுப்பு வளர்ந்ததென்பது அவர்கள் நினைப்பு. இதே ஆசாமிகள் சென்ற வருஷ சட்ட மறுப்பு ஆரம்பிக்கு முன்பு என்ன சொன்னார்கள் தெரியுமா? லாகூர் காங்கிரசிற்கு முன்பும், மகாத்மா டண்டிக்கு புறப்படுவதற்கு முன்பும் சீமை உளறுவாயர்கள் ஒரு உபதேசம் செய்தார்கள். மகாத்மாவை கவனிக்காமல் விட்டுவிட்டால், அவர் சட்டமறுப்பு தானாக செத்துப் போகுமென்றும், ஒருவரையும் கைது செய்யாமல் இருப்பதே சரியான வழியென்றும் சொன்னார்கள். அந்த உளறுவாயர்கள் உபதேசப்படி தான் இர்வின் சர்க்கார் நடந்தது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போல சட்டமறுப்பு அடங்கிவிடவில்லை. அடங்காமல் வளருவதை பார்த்தவுடன், தங்கள்பழைய உபதேசங்களை மறந்துவிட்டு இர்வின்மீது குற்றஞ் சொல்லப் புறப்பட்டார்கள். இதுவே ரகசியம், சென்ற சட்டமறுப்புக்கு முன் யாரையும் கைது செய்யக்கூடாதென்று கூச்சல் போட்டார்கள். இப்பொழுது உடனே கைது செய்யவேண்டும் என்று கூச்சல் போடுகிறார்கள். சென்ற வருஷம் எப்படி ஏமாந்தார்களோ அதைப்போல இந்தத்தடவையும் ஏமாறுவது

Koviloor Digital Library



# தறிகாரருக்கு வேண்டுகோள்

(ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரி)

தென்னிந்தியாவில் ஏராளமாக நூல் உற்பத்தி செய்யும் மதுரை ஹார்வி மில்காரர்களும், கோயமுத்தூரிலுள்ள மில் சொந்தக்காரர்களும் காங்கிரஸ் நிபந்தனைகளுக்கு இணங்கி, காங்கிரஸ் ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டிருக்கிறார்கள். ஆகையால் தென்னாட்டுத் தறிகள் எல்லாவற்றிற்கும் வேண்டிய அளவு 20-ம் நெம்பருக்கு மேல் 40-ம் நம்பர் வரை உள்ள சுதேசி நூல் தென்னாட்டிலேயே இப்போது கிடைக்கும். எனவே எவ்வித கஷ்டமுமின்றி, தறிகாரர்கள் விதேசி நூலையும் 20-ம் நம்பருக்குக் கீழ்ப்பட்ட நூலையும் விலக்கிவிடலாம். வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது. கதருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான மில்காரர்கள் கூட காங்கிரஸ் கோரிக்கைக் கிணங்கி, 20-ம் நம்பருக்குக் கீழ் நூல் நூற்பதில்லையென்று சுதேசி ஒப்பந்தம் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற ஆலை சொந்தக்காரர்களும் இவ்வாறு ஒத்துழைப்பார்களென்று எதிர் பார்க்கிறோம். அப்படியிருக்க, கைத்தறிகாரர்கள் 20-ம் நம்பருக்குக் கீழ் நூல் உபயோகித்து நெய்வதில்லையென்று விரதம் கொண்டு, கதர் இயக்கத்துக்கு உதவிபுரிவது பெரிதாகாது. கதருக்கும் கைத்தறிக்கும் ஒரு பெரிய அபாயம் ஜப்பான் தேசத்திலிருந்து வரும் மட்டரகத் துணிதான். இத்துணியை இந்நாட்டில் சாயம் தோய்த்துச் சேலைகளாக்கி விற்று வருகிறார்கள். தேசபக்தியும் ஜீவகாருண்யமும் உள்ள ஜவுளி வியாபாரிகள், இந்தத் துணியைக் கையினால் தொடவுங்கூடாது. இராட்டைக்கும் கைத்தறிக்கும் இது பெருஞ் சத்ருவென்று தள்ளவேண்டும். மோட்டா துணியானாலும், மெல்லிய துணியானாலும் விதேசித் துணிகள் எல்லாவற்றையும் ஜவுளி வியாபாரிகள் தள்ளிவிடவேண்டும். தென்னாட்டுக் கைத்தறிகாரர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் 'சுதேசி ஆலைத் துணிகளையும் நீக்கவேண்டும். கதரும், சுதேசி மில் நூலால் கைத்தறியில் நெய்த துணியும் மட்டுமே அவர்கள் வாங்கி விற்கவேண்டும். சாயம் போடும் கம்பெனிகளும், தொழிலாளிகளுங்கூட இவ்விஷயத்தில் தேசத்தோடு ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் விதேசித் துணிகளுக்குச் சாயம் போடக் கண்டிப்பாய் மறுத்துவிட வேண்டும். முக்கியமாக, ஜப்பான் துணிகளுக்குச் சாயம் போட்டுச் சேலைகளாக்கிக் கொடுப்பதால், ஆயிரக்கணக்கான தறிகாரர் குடும்பங்கள் பாழாகின்றன. இந்தப் பாவத்துக்கு அவர்கள் ஆளாகக்கூடாது. அச்சுத் தொழிலாளிகள் விதேசித் துணிகளுக்கும், மில் துணிகளுக்கும் அச்சடித்துக் கொடுக்கக்கூடாது அப்படி அச்சடித்துக் கொடுப்பதால், அவைகளைக் கதர் என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றி விற்பதற்கு இடமுண்டாகிறது. இது கதரியக்கத்துக்கும் கைத்தறிக்கும் பெரிய தீங்காகும். இவ்வாறு அனைவரும் ஒத்துழைத்தால் தேச முன்னேற்றத்துக்கு மகத்தான உதவி புரிந்தவர்களாவோம்.

# வந்தேமாதரம்

(ஸ்ரீ. பி. எஸ். கந்தசாமி)

செந்தூர் வேலாண்டி—என்றமெட்டு

வந்தே மாதரமே—மனதில்
வணங்கு மந்திரமே—மகத்வமிகு (வந்)

மாசிலாதமணி வாசகந்தமிழின்
நேசைதந்தமிர்த மாசுகந்தருகும் (வந்தே)

மடிமையுற்றபல படிமைமுற்றுமிடர்
அடிமையற்றுவிழ வுடைமைபெற்றுமெழில் (வ)

மாநிலத்துயர் வாகிய பாரத
தேவிநன்புகழாகிய சீரித (வந்தே)

மாமனமே தினமே நினைவார் தன
மோகனமே பெறுவாரினி மோகன (வந்தே)

சொந்த நம்மிந்தியாவின்
பந்தபாசத்தை யூட்டும்
சுருதிவிளக்கிடு பரிதியெனத்திகழ்
அருவிகொழித்திடு நறுமணியொத்திடு (வந்தே

(தொகையறா)

சாதிசமயச் சண்டையிற் சோதரர்
சாவதைத் தடுக்கும் அன்பாம்
நீதிநெறியிற் சமரச சன்மார்க்கம்
நிலைபெற்றவாழ்வைக் கொடுக்கும்
தூயசித்தாந்த வேதம்
சுதந்தரஞான போதம்
சொற்பரி பக்குவமுற்றவர் கற்றிடு
நற்கருணைப் புனிதத்துயர் வுற்றிடு (வந்தே.

Koviloor Digital Library



# ஐக்கிய மாகாண ஆர்ப்பாட்டம்

அலகாபாத்தில் பொதுக்கூட்டம் கூடக்கூடா தென்று முக்கியமான தலைவர்களுக்கு அவசரச் சட்டப்படி உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதை மீறி ஸ்ரீ. புருஷோத்தமதாஸ் தாண்டன் கூட்டினர். அந்தக் கூட்டத்திற்கு ஏராளமாக ஜனங்கள் வந்தார்கள். ஜவார்லால் தாயார், சகோதரி, மைத்துனர், மோகன்லால் சாக்சனு முதலிய வர்களும் வந்திருந்தார்கள். பலர் பேசினர்கள். மறுநாள் காலை ஸ்ரீ. தாண்டனை கைது செய்தார்கள். அவர் கைதியாவார் என்பதை முன்பாகவே ஜனங்கள் எதிர்பார்த்து ஏராளமாக அவர் வீட்டு முன்பு கூடினார்கள். ஸ்ரீ. தாண்டனை கைது செய்து மோட்டாரில் அழைத்துப் போவது பெரிய கஷ்டமாயிருந்தது. மறுநாள் கூடிய கூட்டத்தில் பண்டித மாளவியா குமாரரான ஸ்ரீ. கிருஷ்ண காந்த மாளவியா பேசினர். அதற்கடுத்த நாள் காலையில் அவரையும் போலீசார் கைது செய்தார்கள். அவர் வீட்டு முன்பும் ஜனங்கள் ஏராளமாய் கூடியிருந்தார்கள். கான்பூரில் ஹார்த்தால் செய்யும் படி விளம்பரம் செய்யச் சென்ற இரண்டு தொண்டர்கள் கைதியாயினர். காங்கிரஸ்காரர் வேறு முறைகளை அநுஷ்டிக்க நிர்மானித்திருக்கிறார்கள். நந்தியா தாலூக்கா காங்கிரஸ் காரியதரிசியை கைது செய்து காங்கிரஸ் ஆபீசை பூட்டிவிட்டார்கள். ஜவார்லால் நேரு சகோதரியின் மோட்டாரைஸ்ரீ. தாண்டனுக்கு உபயோகிக்க கொடுத்ததாகவும், அவசரச்சட்டப்படி அந்த மோட்டாரை போலீசார் வசம் ஒருமாதத்திற்கு விட்டு விடவேண்டு மென்றும் ஜில்லா மாஜிஸ்திரேட் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். ஜில்லா மாஜிஸ்திரேட் சொல்லுவது தவறு என்று ஸ்ரீமதி விஜய லக்ஷ்மி பண்டிதர் பதில் எழுதியிருக்கிறார். பண்டித ஜவார்லால் 21வ பம்பாயை விட்டு அலகாபாத்திற்கு புறப்பட்டார். அவர் மறுபடியும் 28வ மகாத்மாவை வரவேற்க பம்பாய் திரும்புவது சந்தேகம். மகாத்மா காந்தி ஐக்கிய மாகாணத்திற்கு விஜயஞ் செய்யலா மென்று தெரிகிறது.

---

சுபாஷ் சந்திரபோஸ் சரித்திரம்.
விலை 1 அணா.

"காந்தி" ஆபீஸ் 2, பவழக்காரத்தெரு, சென்னை.

# பிரிட்டிஷ் நீதி

பிரிட்டனில் பரதேச சரக்கு பகிஷ்காரம் பிரபலமாயிருக்கிறது. வேல்ஸ் இளவரசர் தலைமையாயிருந்து நடத்துகிறார். எங்கு பார்த்தாலும் பரதேச சரக்குகளை பகிஷ்கரிக்கும் விளம்பரங்கள் காணப்படுகின்றன. பத்திரிகைகள் பகிஷ்கார படங்களை பிரசுரிக்கின்றன. மேரி ராணி தான் வாங்கிய சாமான்களில் இரண்டொன்று வெளிநாட்டு சாமான்களாயிருக்கவே, அவற்றை திருப்பிவிட்டார். இவையெல்லாம் அந்நாட்டில் தேசாபிமானமாக கருதப்படுகிறது. பிரிட்டிஷ் சரக்குகளை வாங்குபவர்கள் பெரிய தேசாபிமானிகளாக கொண்டாடப் படுகிறார்கள். பிரிட்டிஷ் நீதி, கடுகளவும் பட்சபாதமின்றி நேரேபாதையில் செல்லும் நீதி யென்று பிரிட்டிஷர் புகழ்ந்து கொள்ளுகிறார்கள். அது உண்மையானால், பிரிட்டனில் பிரிட்டிஷார் செய்யும் ஒரு காரியத்தை இந்தியாவில் இந்தியரும் செய்யும்படி அது உதவி செய்யவேண்டும். ஆனால் நடப்பில் எப்படியிருக்கிறது? நேர் விரோதம்! பரதேச துணிகளையோ சரக்குகளையோ பகிஷ்காரம் செய்வதோ மறியல்செய்வதோ குற்றமாகாது என்று காந்தி—இர்வின் உடன்படிக்கையில் இருக்கிறது இருந்தும், கல்கத்தாவில் ஜவுளிக்கடை மறியல் தொண்டர்களை கைது செய்திருக்கிறார்கள். அதோடு நிற்கவில்லை. பரதேச சரக்கு கடைகளை மறியல் செய்வது டெல்லி உடன்படிக்கைக்கு விரோதமானதாம். ஆகவே மறியல் செய்யும்படி சர்க்கார் விடமாட்டார்களாம். இந்தப்படி சர்க்கார் அச்சடித்து ஏராளமாக நோட்டீஸ்களை கல்கத்தாவில் வினியோகித்திருக்கிறார்கள். இது தான் பிரிட்டிஷ் நீதியா? மேரி ராணி செய்வதை சீமையில் போற்றும்போது, அதே காரியத்தை இந்நாட்டில் காங்கிரஸ்காரர் செய்யும்போது ஏன் சீறி விழவேண்டும்? இதற்கு காரணம் சுய நலமே. சீனு மீது ஜப்பான் படையெடுத்துச் செல்லுவதற்கும் இந்த சுய நலமே காரணம். அந்த சுய நலத்தை பிரிட்டன் பெரிய கூச்சல்போட்டு கண்டிக்கிறது. ஆனால் இந்தியாவில் அது செய்வதை மட்டும் விடவில்லை. இந்த சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் நீதி எப்படி நேர்மையானதாயிருக்க முடியும்?

Koviloor Digital Library



# ராஜியை முறிப்பது யார்?

பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கே. எப். நரிமன் சென்ற வாரம் சென்னையில் பேசியதாவது:—

காங்கிரஸே ராஜியை முறிக்கிறதென்று சர்க்கார் பிரமாதமாக அறிக்கைகளும், புகார்களும் வெளியிட்டு வருகின்றது. காரியக் கமிட்டி மெம்பரென்ற ஹோதாவிலும், காங்கிரஸ் வாதி என்ற முறையிலும் நான் சர்க்கார் கூறுவதை ஆட்சேபித்து கட்டோடு மறுக்கிறேன். கட்சி பலவிலாவில், எதிர் கட்சியை வெறும் வார்த்தைகளால் தடபுடலாகத் தாக்குவது வக்கீல்களின் சூழ்ச்சி. அதையே சர்க்கார் பின்பற்றுகின்றனர். ராஜியை முறித்து வருவது யார்? மகாண சர்க்கார்களோ அன்றி அங்காங்குள்ள குட்டி தேவதைகளோதான். காங்கிரஸ் ராஜி ஒப்பந்தம் ஏற்படும்போது இந்திய வாலிபர்களுக்கு சற்றே அதிருப்தி யேற்பட்டிருந்த தெனினும், ஒப்பந்தம் ஏற்பட்டபின் அதை மீறினார்களில்லை. லார்டு இர்வின், மகாத்மாவுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்காக மாகாண தேவதைகள் பல லார்டு இர்வின் மீது குற்றம் சாட்டி முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் வெளியில் கூற அவர்களுக்கு தைரியமில்லை. ஒரு முறை வாக்கு கொடுத்தபின் அதை பக்தி சிரத்தையுடன் பின்பற்றுவது நமது கடமையும் பொறுப்பு மாகுமென்று நாம் இருந்து வந்திருக்கிறோம். ஆனால் சர்க்கார் அப்படியல்ல. ராஜியை முறிக்க எப்பொழுது சமயம் வாய்க்குமென ஆவலுடன் பார்த்திருந்து வந்திருக்கின்றனர். நமக்கு வேண்டியது கௌரவ சமாதானம். ஆனால் அன்னிய அதிகாரிகள் சுகத்துடனும், சம்பளம் முதலியவைகளுக்கு ஸ்திரமான பாதுகாப்புடனும் சமாதானம் வேண்டுகின்றனர். இதுவே வித்தியாசம்.

தற்போது இந்தியாவில் நடப்பதென்ன? வங்காளத்திலும், ஐக்ய மண்டலத்திலும் அதிதீவிர அடக்குமுறை தாண்டவமாடி வருகின்றது. வங்காளத்தில் உண்மையாக வெள்ளையர் சங்கமே ஆட்சிபுரிந்து வருவதாகக் கூறலாம். ஆனால் வங்காளத்தில் தற்போது பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் மறைமுகமாக மிக நன்மையைப் பயக்குமென்றே நான் கருதுகின்றேன். அடிமை விலங்குகளை தகர்த்தெறிய ஒரே மார்க்கந்தான் இந்தியாவுக்கு உகந்தது. அதுவே மகாத்மா காந்தியின் அஹிம்சா வழியாகும். சிட்டகாங்கில் நடந்த அட்டூழியங்களை சொற்ப காலத்திற்குள் எடுத்துக்காட்ட இயலாது. ஒரு இன்ஸ்பெக்டர் சுடப்பெற்றார். அவரை சுட்டதாகக் கூறி ஒரு வாலிபனையும் உடனே கைது செய்துவிட்டனர். பின்னால் நடந்ததென்ன? சுட்டதாகக் கூறப்படுபவர் ஹிந்துவென்ற காரணத்தினால் சிட்டகாங்கிலுள்ள ஹிந்துக்கள் எல்லாரும் சொல்லொணாத் துயரத்திற்கு உட்பட்டனர். மூன்று தினங்கள் வரை, சிட்டகாங் ஹிந்துக்கள் வீட்டில் இராப்பகலாக சூறைகளும் கொள்ளைகளும் அடிக்கப்பட்டன. ராஜீய கைதிகளின் வீடுகளனைத்தையும் தீக்கு இரையாக்கினர். பள்ளிக்கூடங்களில் புகுந்து உபாத்தியாயர் முன்னிலையிலேயே மாணவர்களை சவுக்கால் அடித்தனர். ஐக்ய மண்டலத்திலும் அடக்குமுறை ஆரம்பமாகிவிட்டது. ராஜியின் காரணகர்த்தாவான லார்டு இர்வினிடம் இரு கட்சியாரும் சென்று யார் ஒப்பந்தத்தை மீறியதென்று கேட்கலாமென காங்கிரஸ் தலைவரே பட்டவர்த்தனமாகவும், தன்னம்பிக்கையுடனும் கூறியிருக்கிறார். சர்க்கார் இதை ஏற்குமா? சர்க்கார் அடக்குமுறைக்கு பரிகாரமென்ன? பலாத்காரத்திற்கு பலாத்காரத்தை உபயோகித்தலாகாது. மகாத்மா கூறியபடி இது முடிவில்லாமல் ஒன்று மாறி ஒன்று நடந்துகொண்டே இருக்க வழி கொடுக்கும். தேசபந்து தாஸர் வங்க மாணவர்களை பலாத்காரத்தில் தலையிடவேண்டாமென்று மிக வினயமாக கேட்டுக்கொண்டிருக்கிறார். சென்ற 20 வருஷகாலமாய் புரட்சியை வேரறுத்து விடுவதென அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கும்போதெல்லாம் வைஸிராய் கூறிவந்திருக்கின்றார். எனினும் இன்னும் புரட்சிக் காரியங்கள் அதிகரித்து வருகின்றனவேயன்றி குறைந்தபாடில்லை. சர்க்கார் அடக்குமுறையே இதற்குக் காரணம். "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையில் அதன் ஆசிரியர் "இந்திய விரோதியார்" என்ற மகுடத்தின் கீழ் ஓர் தலையங்கம் எழுதியிருக்கிறார். அதன் முடிவில் காங்கிரஸ்காரர்களே தேசவிரோதிகளென அம்மகானுபாவர் கூறியுள்ளார். ஒரு கண்ணாடியை அவ்வாசிரியர் எடுத்துப்பார்த்தால், இந்தியாவின் விரோதியை அவர் நேரே பார்க்கமுடியுமென நான் பதிலளிக்கிறேன்.

Kavikoor Digital Library

# : பகிஷ்கார இயக்கம் :

(வி. பரமசிவன்)

"நிரந்தரமான சமாதானமே நான் வேண்டுவது. ராஜியை நான் விரும்பவில்லை" என்று கூறிக் கொண்டு பதவியில் அமர்ந்த வில்லிங்டன் இப்பொழுது பழைய வில்லிங்டனாகிவிட்டார். ராஜியும் சமாதானமும் கோழைகளின் ஆயுதம் என்ற கருத்துக் கொண்டுவிட்டார் போலும் புதிய வைஸ்ராய்! இந்த எண்ணத்தின் விளைவு என்ன? ஒரு வங்காள அவசரச்சட்டம், ஒரு மத்திய மாகாண அவசரச் சட்டம் இவைகளே.

வங்காளம் மூச்சுவிடும் சுதந்திரம் ஒன்றைத் தவிர மற்றவை அனைத்தையும் பறிகொடுத்துப் பரிதவிக்கின்றது. சந்தேகம் என்ற கண்ணாடியை அணிந்து கொண்டு திரிகின்றனர் போலீஸார். கண்ணிற்பட்டவரெல்லாம் கைதியாகின்றார்கள். அடுப்படி, சோர்றுப்பானை முதற்கொண்டு சோதனை செய்யப்படுகின்றன. வீட்டைவிட்டு வெளியில் வருபவர்கள் 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் திரும்பமுடியும் என்ற எண்ணத்தோடுதான் விடைபெற வேண்டும். வீதியில் வேகமாக நடந்தால் "சந்தேகம்" ஓடினால் "சந்தேகம்" மெதுவாக நடந்தாலோ அதுவும் சந்தேகந்தான். உட்கார்ந்தால் "வெடிகுண்டு தோண்டி எடுக்கின்றானோ" என்ற சந்தேகம். ஆகவே வங்காளம் "சந்தேக" ராஜ்யமாக இருக்கின்றது. "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு"

இத்தியாதி நிகழ்ச்சிகள் எதைக் காட்டுகின்றன? அரசாங்கத்தின் பலவீனத்தையும் மதியீனத்தையுமே அல்லவா? உடற்கூறு சாஸ்திரப்படி உடம்பால் பலஹீனம் ஏற்படும்பொழுது "கோபம்" அதிகமாகின்றதென்பர் வைத்தியர்கள். நோயாளி கோபப்படுவது சகஜந்தானே! கோபமே அதிக தீமையை உடம்புக்கு கொடுக்கின்றது! அதிலும் நோயாளி கோபப்பட்டால் தீமையின் அளவைக் கூறவும் வேண்டுமா? "அப்பா நீ நோயாளியாய் இருக்கின்றாய்! கோபப்படுவதனால் உடம்புக்கு அதிக தீமையே சம்பவிக்கும் ஆகவே கோபம் படாதே" என்று சொன்னால் கேட்க வேண்டுமல்லவா! கோபிக்காதே என்று சொல்லும் நம்மிடத்திலும் கோபம் கொண்டால்.........?

இந்த உதாரணம் எதற்காக? அரசாங்கம் பலஹீனமாய் இருக்கின்றது. எனவே அதற்குக் கோபம் வந்து அவசரச்சட்டங்களை இயற்றிவிட்டது என்பதற்காகவா? ஆம். அரசாங்கம் பலவிதத்திலும் பலஹீனமடைந்துவிட்டது. உலக செல்வாக்கில், பொருளாதாரத்தில், உள்நாட்டு நன்மதிப்பில், கௌரவத்தில் எல்லாவற்றிலும் பலஹீனம். இதோடு பெருத்த எதிர்ப்பு வேறு. கோபம் வராமல் என்ன செய்யும்? கோபத்தின் பயனாக வங்காளத்தை நசுக்கத் தீர்மானித்திருக்கின்றது. அவசரச்சட்டம் என்ற ஒன்றை ஏற்படுத்தி யிருக்கின்றது!

இந்த அவசரச் சட்டத்தைக் கண்டிப்பதற்கறிகுறியாக வங்காளமக்கள் பகிஷ்காரத்தை மும்முரப்படுத்த எண்ணியிருக்கின்றனர். வங்காளம்மட்டுமா? அகில இந்தியாமுழுதும் எண்ணியிருக்கிறது. எனவே பிரிட்டனின் கதி ஆபத்துத்தான். 28 வருஷங்களுக்கு முன் சென்னை மாகாண கவர்னராயிருந்த லார்டு ஆம்தில் பகிஷ்கார இயக்கத்தைப் பற்றிக் கூறுவதாவது:—

"காந்தியின் கொள்கைகளில் அன்னிய சாமான் பகிஷ்காரம் தான் நமக்கு அதிக பாதகத்தை விரைவில் தரக்கூடியது. இந்த பகிஷ்காரம் பலித்துவிடுமாயின் பளீர் என்று அடிபடாத ஒரு குடும்பமாவது ஒரு தொழிற்சாலையாவது இந்தத் தேசத்திலிராது. அந்த அடியின் பலனாக சில குடும்பங்களும் சில தொழிற் சாலைகளும் உடனே பிராண ஹானி அடையலாம். 1918-19-ம் வருஷங்களில் இந்த தேசத்திலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின் கிரயம் 5-கோடியே 10 லட்சம் பவுனென்று தெரிகிறது. ஏற்கனவே இங்கு வேலையில்லாமல் ஜனங்கள் திண்டாடிக் கொண்டிருக்கிற சமயத்தில் பகிஷ்காரமும் சேர்ந்தால் சொல்லவேண்டியதில்லை. இந்தியாவுக்கு அனுப்புவதற்கென்றே சாமான்கள் செய்யும் தொழிற் சாலைகள் பல இங்கு உள. இதற்கே கூட்டம் கூட்டமான தொழிலாளர்கள் உளர். உடனே இந்தத் தொழிற்சாலைகளும் வேலைக் காரர்களும் வயிற்றில் ஈரத் துணியை போட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான். 1918-19-ம் வருஷங்களில 16000000 பவுன் பெறுமான காரிக்கன் துணிகளும் 80-லட்சம் பவுன் பெறுமான சீட்டித் துணிகளும் 380 லட்சம் ராத்தல் நிறையுள்ள நூலும் 770000 டன் நிறையுள்ள எஃகும் 2000000 பவுன் பெறுமான இரும்புச்சாமான்களும் 1800000 பவுன் பெறுமான உடுப்புகளும் 2400000 பவுன் பெறுமான பட்டுகளும் 18000000 பவுன் பெறுமான காகிதமும் இந்தியாவுக்கு மாத்திரம் ஏற்றுமதியாயின"

இந்தப் புள்ளி விவரங்களை நேயர்கள் நுணுக்கமாக கவனிக்கவேண்டும். இவைகள் இந்தியாவினின்று பகிஷ்கரிக்கப்படுமாயின் எத்தனை தொழிற்சாலைகள், குடும்பங்கள் பரதவிக்கும்? இவைகளின் மூலமாக கப்பல் கட்டணம், ரயில் கட்டணம், சுங்கம் முதலிய வருமானங்கள் அரசாங்கத்திற்கு இல்லாமற்போகுமல்லவா? இந்திய பகிஷ்காரத்தின் மூலம் இங்கிலாந்தின் ஒவ்வொரு தொழிலும் நசித்துப் போகுமென்பதில் சந்தேகமில்லை. இங்கிலாந்து தனது ஏகாதிபத்திய வெறியினால் அறிவிழந்து கண் மூடித்தனமாக இந்தியாவின் நியாயமான அபிலாஷைகளை அலக்ஷியம் செய்யுமாயின், கோடிக்கணக்கான இங்கிலாந்து மக்களை பட்டினி போட்டு நாசஞ் செய்யும் பாவத்திற்கு உள்ளாகும். இங்கிலாந்தின் விருப்பம் எது?

Koviloor Digital Library

## சென்னை மலையாண்டி.

மலையேறும் தெய்வங்களைப்பற்றி முன்பே எழுதியிருக்கிறோம். சென்னை மலையாண்டியைப் பற்றி விநோதமான செய்தி கிடைத்திருக்கிறது. சிக்கன கமிட்டி என்று ஒரு கமிட்டி இருக்கிறது. கடுகு போகிறதை வெகு ஜாக்கிரதையாக கவனிக்கும் கூர்மையான திருஷ்டி அதற்குண்டு. ஆனால் பூசணிக்காய் போவதை அதனால் பார்க்க முடியாது. பெரிய வஸ்துக்களை பார்க்கும்போது வெள்ளெழுத்து வந்துவிடும். அதன் கண் அமைப்பே அப்படி ஏற்பட்டு விட்டது. அந்தக் கமிட்டி சென்னை சர்க்கார் மலைவாசத்தைப்பற்றி யோசித்ததாம். "நான் நோகாமல் அடிக்கிறேன், நீ நோகாமல் அழு" என்ற தந்திரம் அதற்கு அகப்பட்டிருக்கிறது. அந்த வித்தையை மலையேறும் சிபாரிசில் காட்டுகிறது. சென்னை கவர்னர் மலைவாசம் செய்வதால் வருஷத்தில் 24 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. மந்திரிகள் போவதால் 30 ஆயிரம் விழுகிறது. மற்றப்படி சகல குமாஸ்தாக்களுக்கும் 30 ஆயிரம் பிடிக்கிறது. இந்த தெய்வங்கள் மலை உச்சியில் தொத்தி ஏறாமல் சம பூமியில் இருந்தால் வருஷத்திற்கு 84 ஆயிரம் மீதம்! ஒன்று இரண்டல்ல. சென்னையில் வாசஞ்செய்கிறவர்கள் வெயில் காலத்தில் செத்துப்போக வில்லை. இந்த சர்க்கார் தெய்வங்களுக்கு மட்டும் அந்த வெயிலை ஏன் பொறுக்க முடியாது. கொடுக்கிறதற்கு வைத்தியக்காரன் இருந்தால், தெய்வம் குதித்து குதித்து கேட்குமாம். அதைப் போல இந்தியர் வாய் பேசாமல் வரி கொடுத்தால் உதகமண்டலத்திற்கு மட்டும்தானா போவார்கள்? சந்திர மண்டலத்திற்கு கூட போவார்கள். சிக்கன கமிட்டிக்கு இந்த 84¾ ஆயிரம் ரூபாய் எவ்வளவு பெரிய தொகை என்று மண்டையில் ஏற வில்லை. ஆகவே மலைவாசத்தை அடியோடு நிறுத்த அதற்கு புத்தியில்லை. கவர்னர் 6 மாதம் மலைவாசம் செய்கிறாராம். அதை நாலு மாதமாக குறைத்து விட்டால் போதுமென்று சொல்லுகிறது, இந்த அசட்டு யோசனையால் எவ்வளவு மிச்ச மேற்பட்டு விடப் போகிறது? பம்பாய் சர்க்கார் மலை வாசத்தை முழுவதும் நிறுத்தி விட்ட போது, சென்னை மலையாண்டிகள் மட்டும் எதற்காக மலைமீது ஏறுகிறார்கள்? யார் வீட்டுப்பணம்? அதுவே ரகசியம்.

இது ஒன்றே போதுமானது. அவர் பிரசங்கத்தைக் கேட்டு வக்கீல்கள் அதிருப்தி அடைந்திருக்கலாம். அதற்கு அய்யர் ஜவாப் தாரியல்ல, அவர் போக்கை அறிந்திருந்தும், அவரை தலைவராக தெரிந்தெடுத்தவர்கள் மீதே அக்குற்றம் சேரும்.

### மிதவாதப் பெருச்சாளி

ஸ்ரீ. சிந்தாமணி அலகாபாத்திலுள்ள "லீடர்" பத்திரிகையின் ஆசிரியர். பழைய மிதவாதப் பெருச்சாளி. சமீபத்தில் சட்டசபையில் பேசும்போது, வரிமறுப்பை அடக்குவதில் சர்க்காருக்கு தாம் பூர்ண ஆதரவு கொடுக்க தயார் என்று சொன்னார். அதன்குட்டு இப்பொழுது வெளியாய்விட்டது. ஐக்கிய மாகாண உள்நாட்டு மந்திரி சத்தாரி நவாப் ஜனவரிமாதம் வேலையை விட்டு விலகுகிறார். அந்த வேலையை ஸ்ரீ. சிந்தாமணி ஒப்புக்கொள்ளும்படி சர்க்கார் கேட்டிருக்கிறார்களாம். ஆகவே சிந்தாமணி சர்க்காரை ஆதரிக்கப்போவதாக குறிப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

### தமிழ்நாட்டில் அடக்குமுறை

திருநெல்வேலி, சாத்தான் குளத்தில் ஸ்ரீமான்கள் வேதரத்தினம் தோழர் அய்யமுத்து முதலிய ஐவர் கைது செய்யப்பெற்றார்கள். காரணம் தெரியவில்லை. திருநெல்வேலி விவசாயிகள் மகா நாட்டில் தலைமை வகித்து ஸ்ரீ வேதரத்தினம் பிரசங்கம் செய்தார். ஸ்ரீ அய்யா முத்துவும் பேசினார். மகாநாட்டிலிருந்து திரும்பும்பொழுது அவர்கள் கைது செய்யப் பட்டார்கள்.

பண்டித ஜவார்லால் சரித்திரம்

விலை 1 அணா

காந்தி ஆபீஸ் சென்னை.

சென்னை, டிசம்பர் 22உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 29—5—0 |
| சவான் சில்லரை | ரூ. | 18—6—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 62—8—0 |
| ,, | ரூ. எடை | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam, at Lakshmi Press, 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர் : டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை 1931 டிசம்பர் 26௳, பிரஜோற்பத்தி மார்கழி௴ 11௳ சனிக்கிழமை | இதழ் 20

# பழைய விளக்குக்கு புது விளக்கு.




பாடுபட்டுத்தேடிய பவுனை பறிகொடுத்த, கேடுகெட்டமானிடரே கேளுங்கள்—நாடுவிட்டு
அவைதான் போயினபின் யார்தான் நாடுவார் பாவிகாள் அந்த வெள்ளியை ?

அலாவுதீன் சரித்திரத்தில் பழைய விளக்குக்கு பதில் புது விளக்கு விற்பதாக கூறிக்கொண்டு ஒரு மந்திரவாதி சென்றான். அந்த தந்திரத்தால் அலாவுதீனின் ஆச்சரிய விளக்கை அபகரித்துச் சென்றான். தங்கத்திற்கு அதிகவிலை கொடுப்பதாக வெளி நாட்டார் ஆசைவார்த்தைகள் காட்டி தங்கத்தை அபகரித்து செல்லுகிறார்கள். தங்கத்திற்கு பதில் என்ன கொடுக்கிறார்கள் தெரியுமா ? வெறும் வெள்ளி. தங்கத்தை கொடுத்துவிட்டு, ஈயத்தைவிட கேவலமான வெள்ளியை பெறுகிறார்கள். சென்ற 4 மாதங்களில் இந்நாட்டைவிட்டு 27 கோடி ரூபாய் பெறுமான தங்கம் வெளியே போயவிட்டது ! இனியாவது கண் திறப்பார்களா ?

Koviloor Digital Library



# 28உ

28உ திங்கட்கிழமை உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். 28உ நெருங்க நெருங்க நமக்கு புதிய பலம் அதிகரித்துக் கொண்டுபோவதாக உணருகிறோம். நம்மை விட்டுப்பிரிந்த சக்தி நம்மிடம் திரும்பி வருகிறதாக உணர்ச்சி தோன்றுகிறது. அந்த மகத்தான 28உயை இந்தியாவெங்கும் எதிர்பார்க்கிறார்கள். 28உ காலை தோன்றும் அந்த சூரியனை எப்பொழுது காண்போமென்று ஏங்கி நிற்கிறார்கள். 28உக்கு அவ்வளவு விசேஷமென்ன? அன்று என்ன நடக்கப்போகிறது? 28உ பாக்கிய திங்கட்கிழமையன்றோ நமது ரக்ஷகராகிய மகாத்மா காந்தி இந்நாட்டில் காலடி வைக்கிறார். ராமர் வனவாசம் சென்றபோது எப்படி அயோத்தியிலுள்ள சகல தாவர, ஜீவராசிகளும் வருந்தினவோ, அதைப்போல மகாத்மா சீமைக்கு கப்பலேறியதும் நாம் அனைவரும் வருந்தினோம். இன்று மகாத்மா நமது புண்ணிய பூமிக்கு திரும்பி வருகிறார். அவரைக்காணாமல் பூத்துப்போன கண்களும், அவர் இன்பமொழிகளை கேட்காமல் அடைத்துப்போன காதுகளும், அவர் புத்திமதிகளை அடைய முடியாமல் அசந்துகொண்ட மூளையும் 28உயை ஆவலோடு எதிர்பார்க்கின்றன. அன்று நமது உயிரும், குருவும், ஒளி விளக்குமாகிய மகாத்மா இந்த புண்ணிய பூமிக்கு வந்துவிடுவார். வங்காளமும், ஐக்கிய மாகாணமும் அவர் வரவை எதிர்பார்த்து நிற்கின்றன. பாரதமாதா துடிதுடித்து நிற்கிறாள். டெல்லி ஒப்பந்தம் இருக்கிறதா தொலைந்ததா என்பதை நிர்ணயிக்கவேண்டியவர் மகாத்மாவே. தொலைந்தது தென்றால் அடுத்தபோருக்கு நாம் இப்பொழுதே தயாராயிருக்க வேண்டும். நமது தளகர்த்தர் 28உ வருகிறார். அவர் வரும் தினத்தை தமிழர் எல்லாரும் கொண்டாட வேண்டும். பம்பாயில் ஆகாயக் கப்பல்களும், கப்பல்களும் தேசியக் கொடிகள் தாங்கி அவரை வரவேற்கப் போகின்றன. மூன்று மைல் நீளத்திற்கு 10 ஆயிரம் தொண்டர்கள் அணி வகுத்து நின்று வரவேற்பார்கள். துறைமுகத்தில் புஷ்பமாரி பொழிந்து வாழ்த்துவார்கள். அந்த புனித தினத்தில் தமிழ் நாடெங்கும் ஒவ்வொரு கட்டிடத்திலும், தேசியக் கொடி பறக்க வேண்டும்.

அன்று ஒவ்வொரு வீட்டிலும் தீபாலங்காரம் செய்யவேண்டும். கோயில்களில் பிரார்த்தனையும், மாலையில் மகாத்மா விஜயத்தை பாராட்டி கூட்டங்களும் நடைபெற வேண்டும். இதற்கு முன்பு நடந்த எல்லா திருநாளையும்விட பெரிய திருநாளாக 28உ விளங்க வேண்டும். தமிழர் வேறு எந்நாட்டாரையும் விட மகாத்மா பக்தியில் குறைந்தவர்கள் அல்ல. அவர்கள் பக்தியை 28உ யன்று உலகத்திற்கு காட்டுவார்களாக.

# தமிழ் நாட்டு வீரர்கள்

திருநெல்வேலி விவசாயிகள் மகாநாட்டில் வேதாரண்யம் வீரர் ஸ்ரீ. வேதரத்னம் பிள்ளை தலைமை வகித்தார். அவர் செய்த அரிய பிரசங்கத்தின் சாராம்சத்தை மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். தஞ்சை ஜில்லாவில் காங்கிரஸ் வேலைகள் நடைபெறுவதற்கு ஸ்ரீ. வேதரத்னம் உயிராய் இருக்கிறார். ஆடம்பரம் இல்லாமல் அமைதியாய் உண்மை நோக்கத்தோடு வேலைசெய்யும் திருத்தொண்டர் கூட்டத்தைச் சேர்ந்தவர் நமது பிள்ளை. ஆகவே அவரை பலர் அறியாமல் இருந்தால் அது அவர் குற்றமல்ல. அவர் அடக்கமே அதற்குக் காரணம். வேதாரண்யத்தில் சென்ற வருஷம் நடந்த உப்பு சட்டமறுப்பிற்கு ஸ்ரீ. வேதரத்னமே மூலகாரணம். அவர் உதவி செய்ய முன்வந்திருக்காவிட்டால் சென்ற வருஷம் வேதாரண்யத்தில் உப்பு சட்ட மறுப்பு நடந்திருக்குமா என்பது சந்தேகம். சென்ற சட்ட மறுப்பில் பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்தார். இருந்தாலும் அவர் தேசபக்தி வளர்பிறை போல வளருவதற்கே அவர் கஷ்டங்கள் உதவி செய்தன. விவசாயிகள் கஷ்டங்களை தீர்ப்பதில் மிகுந்த ஊக்கங்கொண்ட ஸ்ரீ. வேதரத்னம் திருநெல்வேலி விவசாயிகள் மகாநாட்டில் தலைமை வகித்தது மிகவும் பொருத்தமானது. மகாநாட்டை ஆரம்பித்து வைத்த ஸ்ரீ. அய்யாமுத்து, தமிழ் நாட்டிலுள்ள வீர இளைஞர்களில் ஒருவர். ஸ்ரீ. வேதரத்னம் எப்படி விவசாயிகளுக்காக பாடுபடுகிறாரோ, அதைப் போல, விவசாயிகளின் ஓய்வு காலங்களில் அவர்களுக்கு வரும்படி கிடைக்கும்படி ஸ்ரீ. அய்யாமுத்து பாடு படுகிறார். அய்யாமுத்துவின் கதர் திருப்பணியை தமிழ்நாடு நன்கு அறியும். இரண்டு இளஞ்சிங்கங்களும் திருநெல்வேலி சென்றதைக் கேட்டு நாம் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் ஒரு விஷயம்.

* * *

இந்த பிரிட்டிஷ் சர்க்கார் ஆகாயக்கப்பல்களுக்கு அஞ்சாது. ஆனால் ஒரு ஏழை விவசாயியைக் கண்டால் நடுங்கும். பீரங்கிக்கு பயப்படாது. ஆனால் ஒரு ஒட்டை ராட்டினத்தைப் பார்த்தாலும் அலறும். காரணமென்ன? ராட்டினம் பிரிட்டிஷ் துணி வியாபாரத்தில் மண் அடிக்கிறது. விவசாயி வரி கொடுக்க மறுத்தால், இந்தச் சர்க்காரே நடைபெற முடியாது. அதனால் தான் பகிஷ்காரத்தைக் கண்டு ஓலமிடுகிறது. நிலவரி மறுப்பைக் கண்டு அவசரச்சட்டங்கள் செய்கின்றன. விவசாயிகள் குறைகளைப்பற்றி யாராவது ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும். உடனே கீழே கர்ணம் முதல் மேலே கவர்னர் வரையில் ஒரு முட்டிக்கரணம் போடுகிறார்கள்.

* * *

(159-ம் பக்கம் பார்க்க)

Koviloor Digital Library

# பஞ்சு புள்ளி விவரங்கள்

### இந்தியாவில் பஞ்சு உற்பத்தி

| வருஷம் | 500 ராத்தல் மூட்டைகள் |
|---|---|
| 1928 | 57 லட்சம் |
| 1929 | 66 லட்சம் |
| 1930 | 65 லட்சம் |

### இந்தியாவிலிருந்து பஞ்சு ஏற்றுமதி

| | |
|---|---|
| 1928 | 37 லட்சம் |
| 1929 | 39 லட்சம் |
| 1930 | 40 லட்சம் |

சத்தியாக்கிரஹப்போர், விதேசித்துணி பகிஷ்காரம் இவைகளினால் பருத்தி விளைவிக்கும் குடியானவர்களுக்கு நஷ்டம் என்று சொல்வது பொய்யாகும் முந்தைய வருஷங்களைவிட 1930-ல் பஞ்சு அதிகமாய் ஏற்றுமதியாகி யிருக்கிறது. ஆனால் பருத்தியின் விலை மிகவும் குறைந்துவிட்டதென்பது உண்மை. இதற்கு உலகப் பொருளாதார நிலைமையும் நாணயமாற்று மோசடியும் காரணங்களாகும்.

### இந்தியாவின் பஞ்சில் இந்திய ஆலைகள் எடுத்துக்கொண்ட பங்கு

| | |
|---|---|
| 1928 | 17 லட்சம் |
| 1929 | 23 லட்சம் |
| 1930 | 24 லட்சம் |

### வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குப் பஞ்சு இறக்குமதி 500 ராத்தல்

| வருஷம் | மூட்டைகள் | விலை ரூ. |
|---|---|---|
| 1928 | 1,62,000 | 390 லட்சம் |
| 1929 | 1,34 000 | 342 லட்சம் |
| 1930 | 3,70,000 | 638 லட்சம் |

தற்போது இந்தியாவில் உற்பத்தியாகும் பஞ்சு, ஆலைகளில் மெல்லிய நூல் நூற்பதற்குத் தகுந்ததல்ல. ஆகையால் மில்காரர்கள் மெல்லிய நூல் நூற்பதற்காக எகிப்து, கெனியா, அமெரிக்கா தேசங்களிலிருந்து பஞ்சு இறக்குமதி செய்கிறார்கள். இதை நிறுத்த வேண்டுமானால் ஜனங்கள் மெல்லிய ஆடை மோகத்தை ஒழிக்கவேண்டும். 40-ம் நம்பருக்குட்பட்ட துணியே போதுமென்று இருக்கவேண்டும்.

# பிரிட்டிஷ் ஆட்சியால் வந்த வினை.

(ஸ்ரீ. பிரெய்ல்ஸ் போர்ட்)

விவசாய முன்னேற்றத்திற்கும், கூட்டுறவு வியாபார விருத்திக்கும், மின்சார உபயோக வளர்ச்சிக்கும் போதுமான பணம் இந்தியாவிலிருக்கின்றதா? வருடா வருடம் இறக்குமதியாகும் 20 கோடி டாலர் விலையுள்ள தங்கம் பெண்களுக்கு நகைகளாகவும், கோவில் கருவூலப்பணமாகவும் போகின்றதே யல்லாமல் உபயோகத்திற்கு வருவதில்லை. இவ்வாறு புதைக்கப்படும் பணம் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கின்றது. அந்தத் திரவியமெல்லாம் பாங்குகளிலிருந்தால் பொதுஜனங்களுக்குப் பயன்படும். அது நடைபெறுமா? ஒருக்கால் தேசிய அரசாங்கம் வந்த பின் அவர்களது முயற்சியால் நடைபெறலாம். முன்னேற்றத்தில் ஜனங்களுக்கு ஒரு ஆசையைக் காட்டிவிட்டால் திரவியம் தானாகவே புதைபட்ட இடங்களிலிருந்து வெளி வந்துவிடும். கிராமந்தோறும் ஒவ்வொரு மரத்தின்கீழும் ஒவ்வொரு "ரேடியோ"க் கருவி வைக்கப்பட்டால் எவ்வளவு நலமாயிருக்குமென்று நினைத்துப் பாருங்கள். இந்தியாவின் தரித்திர தசைக்கு இரண்டு காரணங்கள்; ஒன்று ஜாதி மதக் கட்டுப்பாடுகள். இரண்டாவது பிரிட்டிஷ் அரசாங்கம். தொடர் வண்டிகளும் மற்ற வாகனங்களும் கிராமங்களில் இயந்திரத்தால் செய்யப்பட்ட சாமான்களைக் கொன்றுவிட்டன. தொழிலின்மையால் கிராமவாசிகள் விவசாயத்தை யாரம்பித்தார்கள். "கம்பெனி" அரசாங்கத்தில் நெசவுதுணி யேற்றுமதி வியாபாரத்திற்குப் பிரிட்டிஷார் தடையேற்படுத்தினர்கள். உடனே லங்காஷயர் துணிகள் இந்தியாவில் வந்து குவிந்துவிட்டன.

மகா யுத்தம் ஆரம்பமாகும் வரையில் இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களுக்குத் தீர்வையில்லாமலிருந்தது. ஆகவே தொழில் விருத்தி யடையவில்லை. பிரிட்டிஷ் இறக்குமதி வியாபாரிக்கு இம்முறை அனுகூலமாயிற்று. விவசாயம் ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லை யென்பதுதான் தெரியவில்லை. 1903-ம் வருஷத்தில் முதன் முதல் விவசாய ஆராய்ச்சி யொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் ஒரு அமெரிக்க கோடீசுவரது உதவியால் தான் செய்யப்பட்டது. விவசாயத்தில் மிகமுன்னேற்றமடைந்ததென்று சொல்லப்படும் பஞ்சாப் மாகாணத்திலுங்கூடப் போதிய பணம் விவசாயத்திற்காகச் செலவு செய்வதில்லை. 1000 ஆட்களுக்கு 30 டாலர் வீதம்தான் விவசாயச் செலவாகிறது. இங்கிலாந்தில் 360 டாலர் செலவாகிறது. யுத்தத்திற்குப் பிறகு இந்திய கைத்தொழிலுக்கு கொஞ்சம் நல்ல காலம் பிறந்திருக்கிறது. பிரிட்டிஷ் இறக்குமதிகளுக்கு சொற்ப தீர்வைகள் விதித்ததாலேயே இந்த மட்டாவது நன்மை யுண்டாயிற்றென்று சொல்லவேண்டும். ஆனால் தேசிய அரசாங்கம் செய்யக்கூடிய நலங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்யமுடியாதல்லவா?

Koviloor Digital Library



# விவசாயிகள் துன்பம் ::

(ஸ்ரீ. அ. வேதரத்தினம் பிள்ளை)

முன் காலத்தைவிட தற்காலத்தில் நம் நாடு வறுமை மிஞ்சி வருகிறதென்பதை நாம் பிரத்தியக்ஷமாகக் கண்டு வந்தாலும் அதைச் சிலர் மறுக்கின்றனர். ஆனால் தற்போதைய அரசாங்க முறையில் கிராமங்களின் செல்வம் பல வாய்க்கால்களின் வழியாக நகரங்களுக்கும் இதர நாடுகளுக்கும் ஓயாமல் போய்க்கொண்டிருக்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. இதற்குப் பதிலாக கிராம ஜனங்களுக்குக் கிடைக்கும் நன்மை யாதொன்றுமில்லை. நம் நாட்டில் வசூலிக்கப்படும் ரூ. 250 கோடி வரியில் கிராமங்களுக்குக் கிடைக்கும் லாபம் கிராம முன்சீப், கர்ணம், வெட்டிகள் இவர்களின் சம்பளங்களே. சில இடங்களில் ஒரு உபயோக மற்ற பள்ளிக்கூடமும் காணப்படுகின்றது. நிலவரி முழுமையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு, கிராமப்பஞ்சாயத்து ஏற்படுத்தி புதிய வரி வசூல் செய்யலாமென்று சொல்வது கிராம ஜனங்களைப் பரிகாசம் செய்வதாகும். நிலவரியில் குறைந்தது பாதியேனும் கிராமங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அதை வைத்து ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு பள்ளிக்கூடம், நல்ல ரஸ்தாக்கள், விளக்குகள், குழந்தைகளுக்கு விளையாடுமிடம், ஒரு புத்தகசாலை முதலிய வசதிகள் கிராம பஞ்சாயத்து மூலம் ஏற்பாடு செய்யவேண்டும். வாழ்க்கையின் சௌகரியங்கள் நகரத்தார்களுக்கே உரியன, கிராமங்களுக்கு வேண்டாம் என்கிற அக்கிரமக் கொள்கை அடியோடு மறையவேண்டும். சாதாரணமாகத் தஞ்சை ஜில்லாவில் ஒரு வட்டத்தில் ரூ. 5000-த்திலிருந்து ரூ. 10,000 வரையில் நிலவரி வசூல் செய்யப்படுகிறது. இதில் பாதி கிராமத்திற்குக் கொடுத்து விட்டால் ஒவ்வொரு கிராமமும் எவ்வளவு அழகாக இருக்கக்கூடும். இதைப் பற்றி தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்து ஜனங்களும் விடா முயற்சியுடன் கிளர்ச்சி செய்யவேண்டும். நமது விவசாயிகளின் வருங்கால வாழ்வு பெரிதும் இந்த சீர்திருத்தத்தைப் பொறுத்திருக்கின்றது. நமது கல்வியும் பெரும்பாலான ஜனங்கள் கிராமத்தில் வசிக்க வேண்டுமென்ற உண்மையை அனுசரித்து கிராம வாழ்வைச் சுகமாகச் செய்யக் கூடியதாக விருக்கவேண்டும்.

கிராமத்தில் வசிக்கும் ஜனங்கள் யார்? ஒன்றிரண்டு பெரிய மிராசுதார்கள், சில சிறிய மிராசுதார்கள், பல குடியானவர்கள், பண்ணை அல்லது கூலிவேலை செய்து வாழும் மக்கள். சில இடங்களில் பெரிய ஜமீன்தார்கள் இருக்கின்றனர். என்னிடம் நிச்சயமான புள்ளி விவரங்கள் இல்லாதபோதிலும், தமிழ் நாட்டில் கிராமங்களின் வருஷ வருமானத்தில் பாதி பெரிய மிராசுதார்களுக்குப் போய் விடுகின்றது என்பது எனது அபிப்பிராயம். சில்லரை மிராசுதார்களின் நிலைமை மிகவும் பரிதாபமாயிருக்கின்றது. தலைக்குமேல் கடன் இல்லாதவர்கள் வெகு சிலரே. ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவருக்கும் 1000 ஏக்கர் நிலம் வைத்திருப்பவருக்கும் ஒரே விகிதமாக நிலவரி போடப்பட்டிருப்பது பெரிய அநியாயமாகும்; வருமானத்தின் பேரில் வரி விதிப்பதே நியாயம். ஆதலால் வருமான வரியைப் போலவே நிலவரியையும் தலைக்குத் தகுந்த பளுவாகச் செய்வது அவசியமானது. உடனே ரூ. 20-க்கு கீழ் கிஸ்தி செலுத்தும் பட்டாதார்களுக்கு வரியை எடுத்துவிட வேண்டும். அதற்கு மேல் ரூ. 100-வரையில் செலுத்தும் பட்டாதார்களுக்குப் பாதி குறைத்துவிடவேண்டும்.

சில்லரை மிராசுதார்களின் நிலைமை இவ்வாறிருந்தால் குடியானவர்களின் ஸ்திதியைப் பற்றிக் கூறவேண்டுமோ? தமிழ் நாட்டில் குடியானவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. வருஷா வருஷம் மிராசுதாரர்களிடம் நிலத்திற்குத்தொங்க வேண்டியதுதான். சாதாரணமாக வருஷ முழுதும் பாடுபட்டுப் பயிர் செய்தால் நல்ல வருஷத்தில் 36 கலம் (கலம்-24 பட்டணம் படி) கிடைப்பது துர்லபம். இதிலிருந்து குடும்ப ஜீவனம் செய்யவேண்டும்; மாடுகளைப் போஷிக்கவேண்டும்; விதைக் கோட்டை கட்டி வைக்க வேண்டும். இவர்கள் எவ்வாறு காலம் கழித்து வருகிறார்கள் என்பது உலகத்தின் விநோதங்களில் ஒன்று.

குடியானவர்களில் இருவிதம் உண்டு. சிலர் வாரத்திற்குச் சாகுடி செய்கின்றனர். பாசனமுள்ள பல இடங்களில் 100-க்கு 25 வாரம் கொடுக்கப்படுகின்றது. புஞ்சை நிலங்களில் 40 லிருந்து 50 வரையில் வாரம் வழக்கமாகவிருக்கின்றது. இது நியாயமில்லை. பாசன வசதிகளுள்ள நிலங்களில் பாதி வாரமும், புஞ்சை அல்லது இறைத்துப் பயிர் செய்யும் நிலங்களில் ¾ பாகமும் நியாமான வாரமாகும். உடனே இந்த வாரம் ஏற்படுத்துவது கஷ்டமாகவிருப்பின் பாசன நிலங்களுக்கு மூன்றிலொன்றும் விதைக் கோட்டையும் மற்றவைகளுக்கு 60 வார

(157-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டார் உணவு பொருள்

தமிழ் நாட்டார் உணவு பொருள்களைப் பற்றி பல டாக்டர்கள் குறை கூறி வருகிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் டாக்டர் குருசாமி முதலியார் அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. டாக்டர் குருசாமி முதலியார் சென்னையில் பிரபலமான டாக்டர். சென்னையில் செய்த ஒரு பிரசங்கத்தில் கேள்விகளுக்கு பதில் சொல்லும் போது அவர் தெரிவித்ததாவது:—

கோதுமை சாப்பிடுகிறவர்களுக்கு மூத்திரப் பையில் கற்கள் காணப்படுவது சகஜம். அரிசி சாதம் சாப்பிடுகிறவர்களுக்கு இது அதிகமாய் இருப்பதில்லை. அரிசியை மினுக்குவது நல்லதல்ல. மினுக்க மினுக்க சத்து குறைகிறது. பழங்கள் அதிகமாக உபயோகிக்க முடியாதவர்கள் புளி உபயோகிப்பது நலம். மிளகாய் சேர்ப்பது அவசியமில்லை. வெற்றிலை பாக்கு உபயோகிப்பதால், மற்ற ஆகாரங்களிலுள்ள சத்துக் குறைவுகளை நிவர்த்தி செய்ய முடியும். பசுவின் பாலைவிட ஆட்டின் பாலே விசேஷம். வாதாம் பருப்பு பணக்காரருக்கு வேண்டியிருக்கலாம். ஆனால் சிறிது வெல்லம் சேர்த்து நிலக்கடலை உபயோகித்தால் வாதாம்பருப்பைவிட அதிகமான பலன் ஏற்படும். வெள்ளை சர்க்கரையை விட வெல்லமே சிலாக்கியம். வெள்ளை சர்க்கரை வாங்குவதால், அதிகப்பணம் கொடுத்து குறைவான சத்தை பெறுகிறோம்.

(156-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் ஏற்படுத்தி 5 வருஷங்களுக்கு ஒரு முறை 100-க்கு ஐந்து வீதம் வாரத்தை அதிகப்படுத்தி 50-க்கும் 75-க்கும் பதினைந்து வருஷங்களில் கொண்டுவந்து விடவேண்டும். விதைத்த கூலிக்கு கொடுக்கப்படும் நெல்லுக்கு கால்பங்கு வீதம் வாசி (வட்டி) பல இடங்களில் சேர்க்கப்படுகிறது. இது மிகவும் அக்கிரமமான வழக்கம். இதை உடனே நிறுத்திவிடவேண்டும். மிராசுதார்களிடமிருந்து கடன் வாங்குவதால் குடியானவர்கள் அவர்களுக்கு அடிமைகளாகின்றனர். ஆதலால் கோவாப் பரேடிவ் சொசைட்டிகள் ஏற்படுத்தி அவைகளிடமே குடியானவர்கள் கடன் வாங்கவேண்டும். ஒரு வருஷம் வாரம் சரியாகச் செலுத்திவிட்டால் அடுத்த வருஷத்தில் அதே நிலத்தை உழுது சாகுபடி செய்ய குடியானவனுக்கு சட்டபூர்வமாக உரிமை வேண்டும். நிலத்திற்காக குடியானவன் வருஷந்தோறும் அலையக் கூடாது.

## கள்ளுக்கடை

(ஜே. எம் கிருஷ்ணமாச்சாரி)

("தேயிலைத் தோட்டத்திலே" என்ற மெட்டு)

கள்ளுக்கடை எடுங்கள்—ஐயோ (கள்ளு)

சரணங்கள்

(1) முப்பது நாள்முழுதும்—தொழில்
முக்கிமுக்கிச்செய்து முடிவினிலெய்திடும்
அப்பணம்யாவையுமே—உடன்
ஆங்கே கொடுத்திட்டறிவை இழக்கிறார் (க)

(2) இந்தப் புதுமையினை—நீங்கள்
எங்கெங்கு கண்டீர் இசைத்திடுவீரின்றே
மந்தம் படைக்கவேண்டாம்—செக்கு
மாடுபோல் மட்டையில் வாங்கிக்குடித்திடுங் ()

(3) மானிடரெங்கு உள்ளார்—சொந்த
மானமிழந்து மதிகெட்டலைந்துமே
தேனிற்சுவை தருமாம்—தங்கள்
தேசத்தறு நிலைதெரியாதுழன்றிடும் (கள்)

(4) பாவியரெங்கு உள்ளார்—தொழும்
பாவையரைக்காலாலெட்டி யுதைத்துதே
சீவிய கூந்தலையும்—பற்றிச்
சிக்குச்சிக்காகவே சின்னமுறச்செய்யும் (கள்)

(5) நாய்களுமுள்ளரே—ஐயோ !
நாய்கூட இன்னன இன்னலிழைக்காதே
பேய்களென்றுவார்கொலோ—இல்லை
பேடியரென்போமோ பிறதொன்றுரைப்போ
மோ (கள்)

(6) கூடிக்குடியர்செய்யும்—கூத்து
கொடுமை கொடுமை கொடுமை கொடுமையாம்
நீடிருக்கவிழையும்—வெள்ளைக்
காரர்களே உங்கள் கல்லான மண்

(7) இன்னு முறைக்கலையா—எங்கள்
ஏழ்மையான கூழுமில்லாமலாகுதே !
மன்னிய மக்களுமோ—இந்த
மாநிலத்தே பசிபிணியென்றலைந்தய்யோ !

(8) யாண்டுமுணவு மின்றித்—தங்கள் (கள்)
அப்பாமார் ஆசைகுடிய வழிவுற்று
நீண்டதெருக்களிலே—அவர்
நீள்பிணமாக நிலைகெட்டிருத்தலான் (கள்)

(9) தாண்டியே போவாரெலாம்—பெருந்
தடிகொண்டடித்துமே சாக்கடையிற்றள்ளி
ஆண்டவர் மீள்வதாலே—அந்தோ
ஆவென்றலறித்துடித்துமே ஐயையோ (கள்)

(10) மாண்டுமடிகின்றாரே—இந்த
"மாஜி ?"யை மாற்றென்று சொல்லிடுவார்
கண்டிலடைக்கிறீரே—இந்தக் [தமைக்
கொடுமைகளுக்கொரு கழுவாயுமில்லையோ
(கள்ளுக்கடை எடுங்கள்)

Koviloor Digital Library



# இதுதானே? எம்பிரானே!

("எம்டன்")

தென்னாற்காடு ஜில்லா கோர்ட்டு சம்பந்த பட்டவலையில் சிக்கனத்தை முன்னிட்டு சர்க்கார் 40 பிராசஸ்சர்வர்களையும், 16 அமீனாக்களையும், 8 ரீடர்களையும் எடுத்துவிடப் போவதாக முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் சிக்கனம் செய்யவேண்டியது அவசியமென்றாலும், தாரதம்மியம் தெரியாது பதினைந்து பதினெட்டு ரூபாய்கள் சம்பளம் வாங்கும் ஏழைகள் தலையில் கைவைப்பது தர்மமாகுமா? திடீரென இவ்வளவு பேர்களை எடுத்தால் அவர்கள் இருப்பதா? அன்றி இறப்பதா என்பதை சர்க்கார்தான் விளக்கவேண்டும். என்னமோ .................அட்டால் கரியாகுமா? என்பார்கள். அதுபோல ஏழைகள் வயிற்றிலடித்தால் சர்க்காருக்கு பணம் சேர்ந்துவிடுமா? இரண்டாயிரம், ஆயிரம் சம்பளம் வாங்கும், மீதிபடிக்கட்டும், அதிக சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளத்தைக் குறைப்பது தானே! வேண்டுமென்றால் ஒன்றிரண்டு ரூபாய் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளலாமே! கண்ணிருக்கும் கிணற்றில் விழ நேர்ந்தால் அதை யார் தடுப்பது? பாவம் வெகு பொறுப்பாக வேலைபார்த்து வந்த மேற்படி கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்கார் செய்த கைமேற்பலன். இதுதானோ! எம்பிரானே!

## ஸ்ரீ. புருஷோத்தமதாஸ் தாண்டன்.

அலகாபாத்தில் அவசரச்சட்டப்படி கைதியான பாபு புருஷோத்தம தாண்டன் 1 வருஷம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். பாபு தாண்டன் பாஞ்சாலத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் மிகவும் செல்வாக்குள்ள தலைவர். 1920ம் வருஷத்திலும், சென்ற வருஷத்திலும் சட்ட மறுப்பில் சேர்ந்து ஜெயில் வாசம் செய்தார். அவர் ஒரு வகீல். ஆனால் தேச சேவைக்காக அத்தொழிலை முன்பே துறந்து விட்டார். பின்னர் ஒரு பெரிய இன்ஷூரன்ஸ் கம்பெனியில் மானேஜராயிருந்து உயர்ந்த சம்பளம் வாங்கி வந்தார். அச்சமயம் லாலா லஜபதிராய் இறந்து போகவே, அவர் சங்கமாகிய "பீப்பிள்ஸ் சொசைட்டி" என்ற ஜனசேவை சங்கத்திற்கு தாண்டனை தலைவராக நியமித்தார்கள். அந்த வேலையை செய்வதற்காக தாண்டன் இன்சூரன்ஸ் வேலையை விட்டார். லாகூரில் வேலை செய்து கொண்டிருக்கும் போது அலகாபாத்திற்கு சேவை செய்ய வந்தார். அலகாபாத்தில் அவர் செய்த சேவையை பாராட்டும் பொருட்டு ஒரு அழகான நந்தவனத்திற்கு புருஷோத்தம தாஸ் பார்க் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த தோட்டத்தில் தான் காங்கிரஸ் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். அங்கே பிரசங்கம் செய்ததற்காகத்தான் அவரை கைது செய்து தண்டித்திருக்கிறார்கள். பாபு தாண்டன, பண்டித ஜவஹர்லாலுக்கு வலது கை போன்றவர்.

# மகாத்மா வைசிராய் சந்திப்பு

மகாத்மா காந்தி டிசம்பர் மாதம் 28ந் தேதியன்று பம்பாய் வந்து இறங்கியதும், வைசிராய் லார்டு வில்லிங்டனைக் கண்டு பேசச் செல்லுவார் என்று பம்பாயில் பலமான வதந்தி யுலாவி வருகின்றது. வங்காள கவர்னரைக் கண்டு பேசி, வங்காள நிலைமை சம்பந்தமாக, அவருடன் விவாதிக்கவும் மகாத்மா எண்ணி யிருக்கின்றார். மகாத்மா காந்தியை வரவேற்பதற்காக "எல்லைப்புற காந்தி" ஸ்ரீ. கான் அப்துல் கபூர்கானும், ஏராளமான செஞ்சட்டைத் தொண்டர்களும் பம்பாய்க்கு வருவார்களெனத் தெரிகிறது. மகாராஷ்டிர மலைப் பிரதேசத்திலுள்ள ஏராளமான மில் ஜாதியாருடன் ஸ்ரீ. அமிர்தலால் தாக்கரும் பம்பாய்க்கு வருகிறார். மகாத்மா காந்தி பம்பாய் வந்திறங்கியதும், காங்கிரசின் சார்பாக சர்தார் வல்லபபாய் பட்டேல் அவருக்கு மாலை சூட்டுவார். இளைஞர்களின் சார்பில் பிரபு பண்டித ஜவார்லால் நேருவும், பம்பாய் நகரின் சார்பாக ஸ்ரீ. கே. எப். நாரிமானும், தேச சேவிகைகளின் சார்பாக ஸ்ரீமதி. பெரின் காப்டனும் காந்திஜிக்கு மாலை சூட்டுவார்கள்.

---

சுபாஷ் சந்திரபோஸ் சரித்திரம்

விலை 1 அணா

காந்தி ஆபீஸ் சென்னை.

Koviloor Digital Library



## சர்க்கார் சண்டித்தனம்

கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாவில் நிலவரியை உயர்த்தக் கூடாதென்பதற்கு எவ்வளவோ காரணங்கள் காட்டியாய் விட்டது. விலைவாசிகள் கூடியிருந்த சமயத்திலேயே அந்த வரி உயர்வு நியாயமல்ல என்று சட்ட சபையும் சட்ட சபை நியமித்த விசாரணை கமிட்டியும் சொல்லின. இவை யெல்லாவற்றையும் சர்க்கார் கவனிக்காமல் ஒரே பிடிவாதமாக வரி உயர்வு செய்வதென்று தீர்மானித்து விட்டது. ரூபாய்க்கு மூன்று அணா விகிதம் கூட்டப் போகிறது. சென்ற ஜூலை மாதம் இருந்த விலை வாசிகளை விட இப்பொழுது கொஞ்சம் கூடியிருக்கிறதாம். இதுவே சர்க்கார் புது வரிக்கு சொல்லும் நொண்டிக்காரணம். பழைய விலை வாசிகளைவிட தற்கால விலை பாதிக்கு மேல் குறைந்திருக்கும் போது, ஜூலை மாதத்தைவிட இப்பொழுது கூடியிருக்கிறதென்று சொல்லுவது வெறும் சண்டித்தனமாகும். ஏழை விவசாயிகள் கஷ்டத்தை கொஞ்சமும் கவனிக்காமல், தான் சொல்லுவதையே சாதித்துக் கொண்டிருப்பது யோக்கியப் பொறுப்புள்ள சர்க்காருக்கு அழகல்ல வரப்புயரக்கோல் உயரும் என்று ஔவையார். சொன்னார். இந்த சர்க்காருக்கு வரப்பு உயர்ந்தாலும் சரி, தாழ்ந்தாலும் சரி. அதற்கு வேண்டியது வரி ஒன்றே.

---

(154-ம் பக்கம் தொடர்ச்சி)

நமது வேதரத்னமும், ஐய்யாமுத்துவும் திருநெல்வேலி மகாநாட்டில் பிரசங்கம் செய்து விட்டு, பக்கத்திலுள்ள சாத்தான் குளத்திற்குச் சென்றார்கள். அங்கே ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது போலீஸ் புலிகள் வந்தனவாம். ஸ்ரீமான்கள் வேதரத்னமும், அய்யாமுத்து, திருச்செந்தூர் மாஜி சேர்மேன் கனக சபாபதி பிள்ளை, முகையதீன் சாகிப், கன்னியப்ப நாடர், வீரபாகுபிள்ளை ஆகியவர்களை கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போனார்கள். எந்த செக்ஷன் என்று கேட்டதற்கு, 124, 153 என்று போலீசார் பதில் சொன்னார்களாம். 124 வது செக்ஷன்படி கைது செய்ய சென்னை சர்க்கார் சம்மதம்வேண்டுமே என்று கேட்டதற்கு, வேறு பல செக்ஷன்களின்படியும் கைது செய்திருப்பதாகச் சொன்னார்களாம். சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் சட்டடப்புத்தகங்களிலுள்ள செக்ஷன்களை யெல்லாம் சப் இன்ஸ்பெக்டர் சொல்லி தீர்த்து விட்டார். தேச பக்தர்கள் ஜாமீன் மீது விடுதலையடைந்திருக்கிறார்கள்.

## ஐக்கியமாகாண அடக்கு முறை

ஸ்ரீ. புருஷோத்தமதாஸ் தாண்டனுக்கு இரு வருஷ கடுங்காவல் தண்டனையும், ஸ்ரீ. கிருஷ்ண காந்த மாளவியாவிற்கு 6 மாத கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள். அலகாபாத்திற்கு 20 மைல் தூரத்திலுள்ள பார்வாரி தாசில் என்ற இடத்தில் விவசாயிகள் மகாநாடு கூடியது. ஜில்லா மாஜிஸ்திரேட், போலீஸ் சூப்பரின்டென்ட் முதலியவர்கள் போலீஸ் படையோடு அங்கு சென்றார்கள். கூட்டம் கூடக் கூடாதென்று ஜில்லா மாஜிஸ்திரேட் தடையுத்தரவு போட்டார். ஜனங்கள் லட்சியம் செய்யாமல் கூடினார்கள். காங்கிரஸ்காரர்கள் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களில் 7 பேரைக் கைது செய்து 4 பேருக்கு அங்கேயே 6 மாதம் தண்டனை விதித்தார்கள். பின்னால் ஜில்லா மாஜிஸ்திரேட் எழுந்து பிரசங்கம் செய்ய முயன்றார். ஜனங்கள் "நிறுத்தும் உமது பிரசங்கத்தை" என்று சொல்லி ஆரவாரம் செய்தார்கள். மாஜிஸ்திரேட் கீழே இறங்கி போய் விட்டார். பூனா ஜில்லா காங்கிரஸ் தலைவருக்கு 6 மாதம் தண்டனை கிடைத்திருக்கிறது. காரியதரிசிக்கு தடை உத்திரவு. பண்டித மாளவியாவின் மூத்த குமாரரின் மோட்டாரை போலீசார் வசம் ஒப்புவிக்கும்படி நோட்டீஸ் கிடைத்திருக்கிறது. அநேக இடங்களில் காங்கிரஸ்காரர் வீடுகளை போலீசார் சோதனை போட்டு வருகிறார்கள். எட்டாவா ஜில்லாவில் மாகாண மகாநாடு நடைபெற ஏற்பாடாயிருந்தது. அதில் வரி மறுப்பைப் பற்றி பேசாமல் இருக்க முடியுமா என்று சர்க்கார். காங்கிரஸ் கமிட்டிக்கு எழுதிக் கேட்டார்கள். அவ்விஷயம் விஷயாலோசனை கமிட்டியைச் சேர்ந்ததென்று மாகாண காங்கிரஸ் பதிலளித்து விட்டது. ஆகவே மகாநாடு நடை பெறக் கூடாதென்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். மகாநாட்டிற்காக பண்டித ஜவார்லால் அலகாபாத் வந்தார். அவர் வந்தவுடன், அலகாபாத்தை விட்டு வெளியேறக் கூடாதென்று ஜில்லா மாஜிஸ்திரேட் உத்தரவு போட்டிருக்கிறார். காங்கிரஸ் தலைவர்கள், இனி செய்யவேண்டிய வேலைகளைப் பற்றி யோசிக்க அலகாபாத்தில் கூடுகிறார்கள்.

Koviloor Digital Library

## சுபாஷ்பாபு வீரமொழி.

மகாராஷ்டிர வாலிபர் மகாநாட்டில் பாபு சுபாஷ் சந்திரபோஸ் செய்த பிரசங்கமாவது:—

மகாத்மா காந்தி இந்தியா வந்ததும், சர்க்காருக்கு ஓர் இறுதிக் கடிதம் அனுப்பவேண்டுமென கேட்டுக்கொள்ள வேண்டும். ராஜிமைய ஓர் முடிவுக்குக் கொணர்ந்து விட்டதாக சர்க்கார் தங்கள் காரியங்களால் வெளிக் காட்டிய பின்னும், காங்கிரஸ், ராஜியின் நிழலைப் பற்றிக் கொண்டு இருப்பதின் கருத்து எனக்கு விளங்கவில்லை. ராஜியின் சாராம்சம் மறைந்து, அதன் நிழலே நிலவி வருகிறது. மகாத்மா வந்ததும் காங்கிரஸ் காரியக் கமிட்டி என்ன முடிவு செய்யுமென்பதைப்பற்றி ஜோசியம் கூற நான் விரும்பவில்லை. ஆனால் மிக தைரியமான கொள்கையை அநுஷ்டிக்க வேண்டுமென நான் வற்புறுத்திக் கூறுகிறேன். சர்க்காரின் அடக்கு முறையையும் பயங்கர ஆட்சி முறையையும் கவனிக்கவேண்டியது அவசியம். குடிவார மறுப்பு இயக்கம் ஏற்கனவே ஆரம்பமாய்விட்டது. பிரிட்டிஷ் சாமான்கள், ஸ்தாபனங்கள் இவைகளின் பகிஷ்காரத்திற்கு காங்கிரஸ் அனுமதியளிக்க வேண்டுமென வங்காளம் எதிர்பார்த்து நிற்கிறது. இச்சமயத்தில் வழவழப்பான முறையைக் கைக்கொண்டால் தற்கொலை செய்துகொள்வதை ஒக்கும் காங்கிரசிற்கும்—சர்க்காருக்கும் ஏட்டளவிலேயே ராஜி நிலவுகிறது. நாட்டிலெங்கும் அடக்குமுறை தாண்டவமாடி வருகிறது. ஆள்தூக்கி சட்டக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அடக்குமுறையோ நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வாலிபர்கள் பொறுமை இழந்து, பலாத்காரப் புரட்சியில் மனம் செலுத்துகின்றனர். அதிகாரவர்க்கத்தினரின் அடக்கு முறையை காங்கிரஸ் நிறுத்த முடியாததாலேயே, வாலிபர்களிடையே காங்கிரஸ் செல்வாக்கு மறைந்து வருகிறது. டில்லி ஒப்பந்தத்தின் பொழுது, வாலிபர்களின் பேச்சு புறக்கணிக்கப் பெற்றது. எனவே புரட்சி. சதி, ஆள்தூக்கி கைதிகள் விடுதலையாகவில்லை. நாம் தற்போது சுதந்திர தாகங்கொண்டிருக்கிறோம். அவ்வித தாகத்தை பூரணமாக தீர்க்கவேண்டியது அவசியம். யாவருக்கும் சுதந்திரம் நன்மை பயக்குமென்றே நம்புகிறோம். நாம் விடுதலை யடைந்தால் மனித சமூகத்திற்கு நன்மை ஏற்படும்.

## புதுக்கோட்டை கிலி

புதுக்கோட்டை தர்பாருக்கு கிலிபிடித்து ஆட்டுகிறது. பண்டித மோதிலால் நேரு படத்தை டவுன் ஹாலில் தொங்கவிடக் கூடாதென்று தர்பார் தடுத்துவிட்டது. இதற்கு காரணம் என்ன என்பதை தர்பார் குறிப்பிடவில்லை. வக்கீல்களில் அரசராகவும், கொடையாளிகளில் கர்ணனாகவும், தேசத் தலைவர்களில் சிறந்தோராகவும் பண்டித நேரு விளங்கினர். அவர் படத்தை டவுன் ஹாலில் மாட்டியிருந்தால், அதை பார்க்கும் போதெல்லாம் பண்டிதரின் பெருவாழ்வு மனிதருக்கு ஊக்க மூட்ட வழியாயிருக்கும். புதுக்கோட்டை தர்பாருக்கு தனது குடிகளின் அபிவிருத்தியில் சிரத்தையிருந்தால், தன்நாட்டில் பெரியாராய் விளங்கிய பண்டிதர்தரிசனத்தை அவர்கள் பெறும்படிசெய்திருக்க வேண்டும். அதைவிட்டு சுண்டைக்காய் போல இருக்கும் ஒரு சிறிய சமஸ்தானம், ஒப்பற்ற தலைவராய் விளங்கிய ஒரு பெரியார் படத்தை தடுக்கப் புறப்படுவது வெட்கக்கேடு. டவுன் ஹால் கட்டியது பொதுஜனங்கள் கொடுத்த சந்தாப்பணத்திலிருந்தேயாகும். அங்கு மாட்டுவதற்காக தயார்செய்த படத்திற்குபணமும் பொதுஜனங்களே கொடுத்தார்கள். படத்தை தயாரித்தவர் நமக்கு வேடிக்கை ப்படங்கள் எழுதும் பிரபல ஓவியரான ஸ்ரீ. கே. ஆர். சர்மா. அப்படத்தை பார்த்தவர்களெல்லாரும், பண்டிதர் சாயை அப்படியே அமைந்திருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்த அழகான படத்தை புதுக்கோட்டை வாசிகள் பார்த்துப் பார்த்து பரமானந்த மடைய முடியாமல் செய்த பாவம் தர்பாரைச்சேரும். ஜனங்கள் பணத்தால் கட்டிய மண்டபத்தில், ஜனங்கள் பணத்தால் தயாரித்த பண்டிதர் படத்தை வைக்கக் கூடாதென்று தர்பார் தடுத்தது வெறும் புத்தி கெட்ட செய்கை. பண்டித நேரு படத்திற்கு இடமில்லாத டவுன் ஹாலில், வேறு எந்தப்படத்திற்கு இருக்க யோக்கியதை உண்டென்று கேட்கிறோம்.

சென்னை, டிசம்பர் 24உ

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | | ரூ. | 29—0—6 |
| சவரன் கில்லரை | | ரூ. | 18—4—0 |
| சீமை வெள்ளி | 100 | ரூ. எடை | 61—8—0 |
| ,, | | ரூ. எடை | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam.' at Lakshmi Press. 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு

விலை காலணா

# காந்தி


திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை 1931 டிசம்பர் 28௳, பிரஜோற்பத்தி மார்கழி௴ 13௳ திங்கட்கிழமை || இதழ் 21

## மகாத்மா காண்பதென்ன?




பாரதத்தாயை பார்க்கவேண்டுமென்று மகாத்மா வேகமாய் இந்தியாவை நோக்கி வருகிறார். இங்கு வந்ததும் அன்னையை எப்படி காண்கிறார்? 15 விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கும் நிலைமையில் காண்கிறார்.

Koviloor Digital Library



## 12 அல்ல 15!

ஐக்கிய மாகாண அவசரச் சட்டத்தைப்பற்றி எழுதிய போது, இம்மாதம் முடிவதற்குள் இன்னும் எத்தனை பிறக்கப்போகின்றனவோ என்று சந்தேகப்பட்டோம். லார்ட் வில்லிங்டன் 12 மாதங்களுக்கு 12 அவசரச் சட்டங்கள் கொடுத்தபோதிலும், கிறிஸ்மஸ் திருநாளை மறக்கவில்லை. இடது கன்னத்தில் அடித்தால் வலது கன்னத்தைக் காட்டு என்று உபதேசித்த கிறிஸ்துமகான் மதத்தை பிரிட்டிஷார் பின்பற்றுகிறவர்களல்லவா? அப்படியிருக்கும் போது அந்த மகான் பிறந்த தினத்தன்று வெகுமதி யளிக்காமல் எப்படி சும்மாயிருப்பார்கள்? ஆகவே இந்தியாவிற்கு கிரீடம் போன்று விளங்கும் எல்லைப்புற மாகாணத்திற்கு மூன்று அவசரச் சட்டங்களை வெகுமதியளித்திருக்கிறார். இது வரை 12 மாதங்களில் 15 அவசரச் சட்டங்கள் செய்து விட்டார். இந்த மாத முடிவிற்குள் இன்னும் எத்தனை பிரசாதங்கள் இருக்கின்றனவோ அதுவும் தெரியவில்லை. எல்லைப்புறத்திற்கு அளித்திருக்கும் மூன்று சட்டங்களும் மூன்று மணிகள். ஐக்கியமாகாண அவசரச் சட்டம் வங்காள அவசரச்சட்டத்தையும், சிட்டகாங் அவசரச்சட்டத்தையும் சேர்த்து பெரிய சட்டமாய் வந்தது. இந்த எல்லைப்புற அவசரச் சட்டம் எல்லாவற்றையும் விழுங்கிய மகாப் பெரிய அவசரச் சட்டமாயிருக்கிறது. யாரை வேண்டுமோ கைது செய்யலாம். வரி மறுப்பு செய்தால் தண்டனை. எந்த சபை கட்டிடத்தையும் பூட்டி முத்திரை வைத்து விடலாம். எல்லைப்புறத்திற்கு மற்ற மாகாணங்களைப் போல உரிமை கொடுக்கப்போவதாக பிரதம மந்திரி சொன்னார். இவை தான் அந்த அக்கிரம போலும்! எல்லைப்புறத்திலுள்ள காங்கிரஸ்கமிட்டி, தொண்டர் படை, நவஜவான் சபை இவைகள் சட்டவிரோதமானவை என்று சீப் கமிஷனர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். காந்தி—இர்வின் உடன்படிக்கை இவ்வளவு அழகாக சர்க்காரால் நடத்திவைக்கப் படுகிறது. இந்தியாவில் இப்பொழுது டெல்லி ஒப்பந்தம் இருக்கிறதா அல்லது தொலைந்ததா? தொலைந்ததானல் அதை யார் தொலைத்தார்கள்? இதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை.

## மகாத்மா வாழ்க!

இன்று காலை மகாத்மா காந்தி பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்தார். தலைவர்கள் கைதியானதைமுன்னிட்டு, மகாத்மாவுக்கு ஏற்பாடு செய்திருந்த ராஜோபசாரங்களை ரத்துச் செய்து விட்டார்கள்.

தாய்முகம் காணாத சேய் போல தவித்து நின்ற இந்தியர் இன்று மகாத்மாவைக் கண்டு மன மகிழ்ச்சி கொண்டனர். பாரதத்தாய் 15 அவசரச்சட்ட விலங்குகளால் தளையுண்டு தவிக்கிறாள். மகாத்மா இந்நாட்டை விட்டுப் போகும்போது இந் நாட்டில் சாந்தமும் அமைதியும் குடிகொண்டிருந்தன. அவர் திரும்பி வரும் போது இன்று நாடு எப்படி இருக்கிறது? எங்கும் அடக்கு முறை ஜுவாலை கொழுந்து விட்டு எரிகிறது. தேசபக்தர்கள் கூண்டோடு கைதியாகின்றனர். இந்த கதிக்கு சர்க்கார் நாட்டை கொண்டுவந்து விட்டார்கள். இருந்தாலும் நாட்டில் சாந்தத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி, சாந்த மூர்த்தியாகிய மகாத்மா ஒருவருக்கே உண்டு. ஆகவே அந்த சாந்த மூர்த்தியின் உத்தரவை இந்தியா எதிர்நோக்கி நிற்கிறது. மகாத்மா க்ஷேமமாக இந்நாடு திரும்பிவந்து சேர்ந்ததற்காக பராசக்தியை பிரார்த்திக்கிறோம்.

### வருக காந்தி!

(சுகன ஜீவனு என்ற மெட்டு.)

வருக காந்தியே!—எங்கள்.
மனத்துட் காந்தியே—இங்கு (வருக)
அருமை நின்காம்—எமக்
களித்த சாதனம்—அதை
ஆங்கில அரசாங்கவாதிகள் அலட்சியம்
செய்தார் இங்கு (வருக)
எங்கும் அடக்கு முறையும் சிறையில்
அடைப்பு மோங்கிற்றே
ஏழைக் களித்த உப்பு உரிமை
பிடுங்கலாயிற்றே......
தங்கலாகுமா—லண்டன்
தருவதேதுமா—உண்டு
சாந்தனே எங்கள் வேந்தனே—புதுச்சமய
போதனே—இந்த (வருக)

— சோம சுப்பிரமணியன்.

Koviloor Digital Library



## சிவகங்கையில் பழைய ஸ்டுவார்ட்

சிவகங்கையில் கோவலன் நாடகம் நடத்துவதாக ஸ்ரீ. ஆர். வி. சாமிநாதன் ஏற்பாடு செய்திருந்தார். ஸ்ரீ. சாமிநாதன் தமிழ்நாடு காரியக் கமிட்டி அங்கத்தினர். அந்த நாடகத்தில் தேசியக் கீதங்கள் பாடுவதில் பேர்பெற்ற ஸ்ரீ. விஸ்வநாத தாஸ் நடிப்பதாயிருந்தது. புதன் கிழமையன்று நடைபெறுவதாயிருந்த நாடகத்திற்காக பக்கத்து ஊர்களிலிருந்து ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தார்கள். திடீரென்று 144 புறப்பட்டது. நாடகத்தை நடத்தக் கூடாதென்று தாக்கீது பிறந்தது. வெளியூரிலிருந்து வந்திருந்த ஜனங்கள் எல்லாரும் ஏமாந்து திரும்பினார்கள். இது ஒரு பக்கம் இருக்கட்டும். எந்தக்காலத்திலேயோ இருந்ததாக கூறப்படும் கோவலனைக்கண்டு சிவகங்கை அதிகாரிகளுக்கு திகில் ஏற்பட காரணமென்ன? அந்தக் கோவலன் பூர்ண சுயராஜ்யம் வேண்டுமென்று சொன்னரா? அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் கூடாதென்று சொன்னரா? இரண்டுமில்லை. பாவம், திடீரென்று பழையகாலத்து கோவலன் மீது இந்த நாகரிக சர்க்காருக்கு திகில் ஏற்பட்ட காரணம் என்ன வென்று தெரியவில்லை. இந்த ஆச்சரியத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போது ஒரு குருவி வந்து ஒரு ரகசியம் சொல்லிற்று. அதைக் கேட்டவுடன் நமது சந்தேகம் நிவர்த்தியாயிற்று. அந்த ரகசியம் என்ன தெரியுமா? பழைய ஸ்டுவார்ட் ராமநாத புரத்திற்கு கலெக்டராக வந்திருக்கிறாராம். அன்று காலையில் தான் சிவகங்கைக்கு வந்தாராம். அர்த்தம் தெரிந்ததா? உடனே 144 பறந்து விட்டது. இந்த பழம் பெருச்சாளி ஸ்டுவார்ட் யார் தெரியுமா? இவர் தான் காந்தி தொப்பி மீதும், தேசியக் கொடி மீதும் குண்டூரில் 144 போட்டவர். அதில் ஹைக் கோர்ட்டில் அவமான மடைந்தார். அவர் ஜேபியில் 144 எப்போதமும் தயாராயிருக்கும். 144 தான் அவருக்கு சர்வ சஞ்சீவி. ஆகவே அந்தப் பேர் வழி கோவலன் நாடகத்தின் மீது 144 போட்டால் அதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

## ஜவார்லால் சவுக்கடி.

அலகாபாத்தை விட்டு வெளி யேறக்கூடாதென்று அலகாபாத் ஜில்லா மாஜிஸ்திரேட் பண்டித ஜவார்லாலுக்கு உத்தாவிட்டதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு பண்டிதர் பதில் எழுதி யிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது :—

இந்தியாவில் மிகப் பெரிய சபையாகிய காங்கிரஸ் சபையைத் தவிர வேறு யாரிடமும் உத்தரவு பெறும் வழக்கம் எனக்கு கிடையாது. காங்கிரஸ் ஒன்றே எனக்கு உத்தரவிடும் அதிகாரம் கொண்டிருக்கிறது. வேறு யார் உத்தரவையும் நான் லட்சியஞ் செய்ய முடியாது. அலகாபாத்திற்குள்ளேயே கைதியைப் போல வைத்திருக்க வேண்டு மென்பது தங்கள் விருப்பம் போலும். என்னுடைய போக்கு வரத்துகளை கட்டுப் படுத்தும் எதையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது. காங்கிரஸ் காரியதரிசி என்ற ஹோதாவில் நான் அடிக்கடி வெளியில் போக வேண்டியிருக்கும். தடையுத்திரவுக்குக் கட்டுப் பட்டு என் அலுவலை நிறுத்தி வைக்க மாட்டேன். மகாத்மா காந்தியை வரவேற்பதற்கு நான் பம்பாயிக்குப்போக வேண்டியிருப்பதால், நான் அலகாபாத் முனிசிபல் எல்லைக்குள்ளேயே யிருக்க முடியாது. என் பேச்சுச் சுதந்திரத்தை நான் மாஜிஸ்ட்ரேட்டுக் கட்டளைப்படி பறி கொடுக்கத் தயாராயில்லை. சர்க்கார் காங்கிரஸ் சம்பந்தமாய் வெளியிடும் பொய் அறிக்கைகளை நான் அவசியம் நேரும் பொழுது கண்டித்தே தீருவேன். ஆகையால் உங்கள் தடையுத்திரவுக்குக் கீழ்ப்படிய முடியாதென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அலகாபாத் முனிசிபல் எல்லையை விட்டு வெளியேறக் கூடாதென எனக்கு உத்தரவிடும் உங்களுடைய நோட்டீசை, முனிசிபல் எல்லைக்கு வெளியே சார்வ் செய்திருக்கின்றனர் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நோட்டீசை சமர்ப்பிக்கும் பொழுது,நான் அலகாபாத்திற்கு எவ்வளவோ மைல் தூரத்திற் கப்பாலிருக்கையில், நான் அலாகாபாத் நகருக்குள்ளாகவே நடமாட வேண்டுமென்று கூறுவது எனக்கு சரியாக விளங்கவில்லை. மேலும் இனி நீங்கள் எனக்கு அனுப்பும் கடிதங்களில் எனது பெயரை சற்று சிரமப்பட்டாவது தவறில்லாமல் சரியாக எழுதினால், மிகுந்த வந்தன மளிப்பேன்.

Koviloor Digital Library



## ஷோக் இளவரசர்

நமது நாட்டில் விசித்திரமான மன்னர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூளைப் போக்கின் விசேஷத்தைப் பற்றியும், அவர்கள் செய்யும் அதிசய காரியங்களைப் பற்றியும் எத்தனையோ கதைகள் சொல்லப் படுகின்றன. இப்பொழுது ஒரு விசித்திரமான கதை கிடைத்திருக்கிறது. ஸர். ஹார்கோர்ட் பட்லர் என்ற பேர்வழி இந் நாட்டில் கவர்னராயிருந்தவர். அவர் தான் சைமன் கமிஷன் நியமன சமயத்தில், மன்னர்களைப் பற்றி விசாரிக்க ஏற்பட்ட கமிட்டிக்கு தலைவரா யிருந்தவர். அவர் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதில் மன்னர்களைப் பற்றி பல அதிசயங்கள் காணப்படுகின்றன. ஒரு இளவரசரைப் பற்றி அவர் கூறும் கதையை கீழே பிரசுரிக்கிறோம். காடுகளால் பயன் என்ன என்று ஒரு இளவரசரை பரீட்சையில் கேள்வி கேட்டார்களாம். அதற்கு அவர் எழுதிய பதிலாவது:—

"மலைகள் மிகவும் விரும்பத் தக்கவை. ஏனெனில் எங்கெங்கு மலைகள் இருக்கின்றனவோ அங்கங்கு காடுகள் இருக்கும். காடுகளில் புலிகள் இருக்கும். புலிகள் இருந்தால் வைஸிராய்கள் வேட்டையாட வருவார்கள். அவர்கள் வேட்டையாட வந்தால், ரோடுகள் நன்றாய் வைக்கப்படும். அந்த ஏற்பாடுகளுக்காக அந்த சமஸ்தான மன்னருக்கு ஜி. ஸி. எஸ். ஐ. பட்டம் அளிப்பார்கள். அந்தப் பட்டம் சமஸ்தானத்திற்கு மிகவும் நல்லது."

இளவரசர்கள் எம்மாதிரி பயிற்சி செய்விக்கப் படுகிறார்கள், அவர்கள் மனப் போக்கு எப்படி இருக்கிறது என்பது இதன் மூலம் தெளிவாய் தெரிகிறது. வேட்டையாடுவதும், விருந்துண்பதும், கூத்தாடுவதும் தவிர வேறு எதுவும் தங்களுக்கு வேலையிருப்பதாக அவர்களுக்கு நினைப்பு வருவதில்லை. குடிகளுக்கு செய்யவேண்டிய கடமைகளையோ, தங்களுக்குள்ள பொறுப்புகளையோ அவர்கள் அறிவதில்லை. வெறும் சோம்பேறி வாழ்க்கையில் ஊறுகிறார்கள். வெறும் ஷோக்கு ஜவடால்களில் திரிகிறார்கள். இம்மாதிரி உருப்படாத வழிகளில் அவர்கள் புத்தி போகும்படி பயிற்றுவித்தால் மாஜி இந்தூர் மகாராஜாவைப் போல சிலர் கிளம்புவதில் என்ன ஆச்சரியம்?

## தீண்டாமை சாபம்

ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரி தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார், பாடுபட்டு வருகிறார் என்பதை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். 1910ம் வருஷத்தில் அவர் சேலம் முனிசிபல் சேர்மனாயிருந்தார். அச்சமயம் அக்கிரகாரம் தொகுதியில் தண்ணீர் குழாய்களை அடைக்கவும் திறக்கவும் இரண்டு தீண்டாதார்களை போட்டார். இது பிராமணர்களுக்கு பிடிக்கவில்லை. பெரிய ஆட்சேபனை கிளம்பிற்று. முனிசிபல் சபையில் இதை கண்டித்து பல தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஆனால் ஆச்சாரியார் இவைகளுக்கெல்லாம் அசையவில்லை. அச்சமயம் முனிசிபல் சபையில் அவர் பேசியதாவது:—"நீங்கள் சொந்த ஹோதாவில் என்ன வித்தியாசமோ, மதமோ, ஜாதியோ வைத்துக் கொள்ளலாம். ஆனால் முனிசிபாலிட்டி அம்மாதிரி ஜாதி வித்தியாசம் காட்ட முடியாது. இன்று அக்கிரகார வார்டிலிருந்து தீண்டாதார் வேலைக்காரர்களை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். உங்கள் விருப்பப்படி அவர்களை எடுத்து வேறு வார்டுக்கு போடுவதாக வைத்துக்கொள்ளுவோம். நாளை அங்குள்ளவர்களும் ஆட்சேபிப்பார்கள். இம்மாதிரி மாற்றிக்கொண்டே போனால் முடியுமோ? ஆகவே அவர்கள் தற்சமயம் இருக்கும் வார்டில் இருக்கவேண்டியதே."

இரண்டு ஆதித்திராவிட சிறுவர்களை ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்கச்சொன்னார். உபாத்தியாயர்கள் முதலில் உறுமினார்கள். அவர்களைச் சேர்த்தால் தாங்கள் வேலை செய்யமாட்டோம் என்று சொல்லி பயமுறுத்தினார்கள். ஆச்சாரியார் இவற்றையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. தாம் விரும்பியபடி அவர்களை பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார். ஜெயிலில் சென்ற வருஷம் அவர் இருக்கும்போது, அங்கு அடிக்கடி நடக்கும் கூட்டங்களில் அவர் சொல்லியதாவது:—

"ஒருவன் மற்றொருவனுடன் சாப்பிடக்கூடாதென்று சொல்லுவது நியாயமல்ல. அம்மாதிரி சொல்லுவது சாத்தியமுமல்ல, பிரயோசனமுமல்ல. யார் சமைத்தாலும், எங்கு சமைத்தாலும் நான் சாப்பிடத்தயார்."

Koviloor Digital Library



## கதர் வெற்றி

(ஸ்ரீ. சி. ராஜகோபாலச்சாரி)

இந்தியா ஆலைகளில் நூல் உற்பத்தி

| வருஷம் | ராத்தல் |
|---|---|
| 1927 | 80 கோடி |
| 1928 | 65 கோடி |
| 1929 | 83 கோடி |

இந்தியா விதேசி நூல் இறக்குமதி

| | |
|---|---|
| 1927 | 590 லட்சம் |
| 1928 | 430 லட்சம் |
| 1929 | 240 லட்சம் |
| 1930 | 290 லட்சம் |

இந்திய ஆலைகளில் உற்பத்தியாகும் நூலில் 30 கோடி ராத்தல் நூல் கைத்தறிகளில் நெய்யப்படுகின்றன. பாக்கி 50 கோடி ராத்தலுக்கு மேல் ஆலைகளிலேயே நெய்யப்படுகின்றன. இறக்குமதியாகும் நூலெல்லாம் விலை அதிகமுள்ள மெல்லிய நூலாகும். இது அநேகமாய் கைத்தறிகளிலேயே நெய்யப்படுகிறது. இதற்கு பதிலாக இரட்டை நூலையாவது, சுதேசி மில் நூலையாவது உபயோகிக்கும்படி தறிகாரர்களைக் காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது. ஜனங்களுக்கு மெல்லிய ஆடை மோகம் போனால், தறிகாரர்களும் சுலபமாக சுதேசி நூலைக் கைக்கொள்வார்கள்.

இந்தியாவில் விதேசித் துணி இறக்குமதி

| வருஷம் | கெஜம் |
|---|---|
| 1927 | 194 கோடி |
| 1928 | 191 கோடி |
| 1929 | 189 கோடி |
| 1930 | 89 கோடி |

இந்தியாவில் விதேசி நூலும் துணியும் மொத்த இறக்குமதி

| வருஷம் | பெறுமானம் ரூ. |
|---|---|
| 1928 | 63 கோடி |
| 1929 | 59 கோடி |
| 1930 | 25 கோடி |

சத்தியாக்கிரஹப் போரின் பயனாகச் சென்ற ஆண்டில் நூல் இறக்குமதி $1\frac{1}{2}$ கோடி ராத்தலும், துணி இறக்குமதி 100 கோடி கெஜமும் குறைந்து தேசத்திற்கு மொத்தம் 35 கோடி ரூபாய்க்குமேல் மிச்சமாயிற்று. இந்த ஏழை நாட்டுக்கு எவ்வளவு பெரிய லாபம்?

## இந்தியாவில் நெசவுத்தொழில்

இந்தியாவில் நெசவு மில்களும், நூல் மில்களும், எவ்வளவு சீக்கிரமாக அபிவிருத்தி அடைந்து வந்திருக்கின்றன என்பதைப் பற்றி பம்பாய் மில் சங்கத்தார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள சில விவரங்களை கீழே வெளியிடுகிறோம்.

| வருஷம் | மில்கள் | கதிர்கள் |
|---|---|---|
| 1890 | 137 | 3274196 |
| 1900 | 193 | 4945783 |
| 1910 | 263 | 6195671 |
| 1920 | 253 | 6763076 |
| 1925 | 337 | 8510633 |
| 1931 | 339 | 9311953 |

| வருஷம் | தறிகள் | தொழிலாளர் |
|---|---|---|
| 1890 | 23412 | 102721 |
| 1900 | 40124 | 161189 |
| 1910 | 82725 | 233624 |
| 1920 | 119012 | 311078 |
| 1925 | 154292 | 367877 |
| 1931 | 182429 | 395475 |

இந்திய ஆலைகளில் துணி உற்பத்தி

| வருஷம் | கஜம் |
|---|---|
| 1927 | 235 கோடி |
| 1928 | 189 கோடி |
| 1929 | 241 கோடி |

இந்தியக் கைத்தறிகளில் துணி உற்பத்தி

| | | |
|---|---|---|
| 1927 | உத்தேசக் கணக்கு | 129 கோடி |
| 1928 | ,, | 111 கோடி |
| 1929 | ,, | 140 கோடி |

இந்தியாவில் மொத்தம் செலவாகும் துணி

| | | |
|---|---|---|
| அயல் நாட்டிலிருந்து இறக்குமதி | | 1929 |
| | | 189 கோடி |
| இந்திய ஆலைகளில் உற்பத்தி | ஷை | 241 கோடி |
| இந்தியக் கைத்தறிகளில் உற்பத்தி | ஷை | 140 கோடி |
| மொத்தம் | ஷை | 570 கோடி |

கைத்தறித் தொழில் எவ்வளவோ க்ஷீணதசை யடைந்திருக்கும் இக்காலிலும், இந்தியாவில் உபயோகமாகும் துணியில் நாலில் ஒரு பங்கு கைத்தறிகளில் நெய்யப்படுகின்றது.

Koviloor Digital Library



# தொண்டர்கள் பெருமை

சென்னை காங்கிரஸ் மாளிகையிலுள்ள தோட்டத்தில், தொண்டர்களுக்காக ஒரு ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை சென்ற வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி திறந்து வைத்தார். அச்சமயம் அவர் பேசியதாவது;—

சத்தியாக்கிரகப் போரில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் அரிய தியாகங்கள் செய்திருக்கிறார்கள். யாருக்கும் தெரியாமல், பத்திரிகைகளிலும் பெயர் வெளிவாமல், போராட்டத்தில் கஷ்டப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கணக்கில. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் ஆகாவிலேயே இவ்வித ஞாபக சின்னத்தை ஸ்தாபிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததற்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடிமையாக ஒருவரிருப்பதெனின் அது அவருக்கு மிகவும் வெட்ககாமாகும். ஆனால் ஒருதேச சமூகத்தினரான 35 கோடி ஜனங்கள் அடிமைதனத்தில் ஆழ்ந்திருப்ப தெனின், அது தேசத்திற்கே மிக வெட்க காமானதும், கஷ்டமுமாகுமென்பதில்சந்தேகமென்ன? இவ்வித அடிமைத்தனத்தை நீக்குவதற்கே சத்தியாக்கிரகப்போர் நடைபெற்றது. இனியும் • நடைபெறப்போகிறது. சென்ற வருஷம் தொண்டர்கள் செய்த தியாகத்திற்குமட்டுமன்றி இனியும் தொண்டர்களுக்கு இச் சின்னம் சக்தியையும், மனோ உறுதியையும் கொடுக்கும். அகலிகை அழகே ஓர் உருவாகத்திரட்டிய மங்கை என்றும், சாபத்தால் கல்லானளென்றும் கூறுவர். தொண்டர்களின் குறைகளை நீக்கி மேலான குணங்களை மட்டுமே உருவாக்கி இச்சின்னத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீராமர் பாதம் பட்டதும் கல்லாயிருந்த அகலிகை உயிர் பெற்றாள். இந்தியாவுக்கு சுதந்திரம் வந்ததும்இதுவும் உயிர் பெற்றுவிடும்.

சென்னை நகரில் பலவித உருவச் சிலைகளை வைத்திருக்கிறார்கள். இனி எதிர்காலத்தில் நகரிலுள்ள எல்லா சிலைகளைக் காட்டிலும் இதுவே உன்னத ஸ்தானம் வகிக்குமென்பது நிச்சயம். ஏனெனில், அவர்கள் பலாத்காரத்தால் பல உயிர்களைக் கொன்று புகழ் பெற்றிருக்கலாம். ஆனால் சத்தியாக்கிரகத் தொண்டர்களோ உலகத்திற்கே ஓர் புதுமையான சாத்வீக போரிலீடுபட்டு அருந்தியாகம் செய்திருக்கிறார்கள். இந்த ஞாபகச் சின்னத்திற்கே இனி பிரதானமும், அதிக கௌரவமும் மேற்படும். இதை ஸ்தாபித்துவைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்கு நான் மீண்டும் என் சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# "நான் கல் அல்ல"

(மகாத்மா காந்தி)

ரௌலெட் சட்டத்தைவிட வங்காள அவசரச் சட்டம் மிக்க மோசமானதாகும். 1857ம் வருஷம் நடந்த சிப்பாய் கலக காலத்தையும் 1919ம் வருஷம் பிறப்பித்த ராணுவ சட்ட காலத்தையும் ஞாபகமூட்டுகிறது. இந்த அவசர சட்டம் ராணுவ சட்டத்தைவிட மோசமானதாகும். ராணுவ சட்டத்தின் கீழ் மேற்கொண்ட காரியங்களை பின்பு அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இந்த அவசர சட்டமோ அந்த நடவடிக்கைகளுக்கு முன்னதாகவே அங்கீகரிப்பை அளித்துள்ளது. அதிகாரத்தை இந்தியர் வசம் ஒப்படைக்க தயாராகவிருக்கவில்லையென்பதை இந்த அவசர சட்டம் காட்டுகிறது. பொறுப்பாட்சி அளிக்கப்போவதாக உறுதி கூறியிருப்பது சாரமல்ல; சக்கையே. இந்த அவசரசட்டம் அபாய அறிகுறியாகவிருக்கிறது. அந்த அவசர சட்டத்தால் எந்த க்ஷணத்திலும் நேராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது ஏற்படும்போலிருக்கிறது. அந்த அவசர சட்டத்தை "டைப்" பண்ணித் தரும்படி நண்பர் ஒருவரைக் கேட்டேன். அதனை "டைப்" பண்ணவே அவரால் சகிக்கமுடியவில்லை. நான் மிக்க பொறுமை உடையவன். ஆனால் கல் போன்றிருக்க என்னால் முடியாது. எல்லாம் சரியாக நடந்தேறுமென்று நான் எப்படி நம்பிக்கைகொண்டிருப்பது? ஒன்று இந்தச் சட்டத்தை நான் தொலைப்பேன். அதைத் தொலைக்கமுடியவில்லையானால், அதை தொலைக்கும் வேலையில் நான் தொலைவேன்.

---

சுபாஷ் சந்திர போஸ் சரித்திரம்.
விலை 1 அணா.
காந்தி ஆபீஸ் சென்னை.

# அவசரச்சட்டங்கள் தோல்வி

அவசரச்சட்டங்களால் ஆட்சிசெய்ய முடியாதென்பதை லார்ட் இர்வின் அநுபவத்தில் அறிந்தார். ஆனால் லார்ட் வில்லிங்டன் இன்னம் அறியவில்லை. அதனால் அவசரச்சட்டத்தை பற்றிக்கொண்டு தள்ளுகிறார். இந்த அவசரச் சட்ட ஆட்சி உபயோகமில்லாமல் முடியுமென்பது கொஞ்சங் கொஞ்சமாக வெளியாகிறது. சிட்டாகாங்கில் புரட்சிக்காரர்களை பிடிக்கப் போவதாகவும், காடுகளில் படையெடுக்கப் போவதாகவும் கூறி அவசரச்சட்டம் செய்தார். சும்மாயிருக்கிறவர்களை பிடித்துப் பிடித்து போடுகிறார்களேயொழிய, அவர்கள் நினைத்த புரட்சிக்காரர்கள் அகப்பட்டதாய் தெரியவில்லை. இதை சர்க்காரே ஒப்புக்கொள்ளுகிறார்கள். இனி ஐக்கிய மாகாணத்தை பார்ப்போம். 24உவரை சுமார் 100 பேரை தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 6 ஜில்லாக்களில் அவசரச்சட்டம் அமுலில் இருக்கிறது. இருந்தும் வரிவசூல் மிகமிக மெதுவாகத்தான் நடக்கிறதென்று சர்க்கார் சொல்லுகிறார்கள். ஆகவே இரண்டு அவசரச்சட்டங்களும் பயனில்லாமல் போய்விட்டன. வில்லிங்டனுக்கு இப்பொழுதாவது கண் திறக்குமா?

## அவசரச்சட்ட அமுல்

ஐக்கிய மாகாணத்தில் பாராபங்கி என்ற ஜில்லா விற்கும் அவசரச் சட்டத்தை பிரயோகித்திருக்கிறார்கள். அலகாபாத் காங்கிரஸ் கமிட்டி உள்பட பல கமிட்டி இடங்களை சோதித்து போலீசார் பூட்டிவிட்டனர். அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டத்திற்குப் பின்னால் எட்டாவா மகாநாட்டை நடத்துவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். மகாநாட்டு பந்தலை போலீசார் உபயோகத்திற்காக அவசரச் சட்டப்படி எடுத்துக் கொண்டார்களாம். பண்டித பிரிஜ்கிஷோர் மாளவியா வரி செலுத்தாததற்காக அவர் சொத்துக்களை ஜப்தி செய்திருக்கிறார்கள்.

சென்னை, டிசம்பர் 26உ

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | | ரூ. | 28—4—0 |
| சவரன் சில்லரை | | ரூ. | 18—4—0 |
| சீமை வெள்ளி | 100 | ரூ. எடை | 61—4—0 |
| ,, | | ரூ. எடை | 0—10—0 |

# பகைவனிடம் ஜாதகம் கேட்டால்?

பகைவனிடம் ஜாதகம் கேட்டால், அர்த்த ராத்திரியில் மரணம் என்று சொல்லுவான். சகாதேவனைப் போல யோக்கியமான ஜோதிடனை இந்த உலகத்தில் பார்க்கமுடியாது. ஆகவே, பார்டோலி விசாரணை அதிகாரி தாறுமாறாக தீர்ப்பு எழுதியிருப்பதில் அதிசயமில்லை. முதலில் அந்த விசாரணை அதிகாரியான கார்டன் என்பவர் சிவில் சர்விசை சேர்ந்தவர். சர்க்கார் சொல்லுவது சரியென்று சாதிக்கும் கூட்டத்திலுள்ளவருக்கு நியாயபுத்தி எங்கிருந்து ஏற்படும்? ஒரு ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்தால், கொஞ்சமாவது நியாயத்தை எதிர்பார்க்கலாம். பார்டோலி கிராமாதிகாரியின் டைரியை பார்க்க வேண்டுமென்று காங்கிரஸ் வக்கீல் கேட்டபோது, சர்க்காரிடம் கேட்டு பதிலளிப்பதாக கார்டன் சொன்னார். நீதிபதி கூறவேண்டிய ஒரு விஷயத்திற்கு சர்க்காரிடம் என்ன ஆலோசனை? சர்க்காருக்கும் காங்கிரசிற்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு தகராறை விசாரிக்கும் போது, சர்க்காரிடம் யோசனை கேட்க புறப்பட்டால் அந்த விசாரணை உருப்படுமா? உருப்படாமலேயே போய்விட்டது. கார்டன் தமது தீர்ப்பில் அநாவசியமாக காங்கிரசை திட்டி சர்க்காரை தாங்கி பேசியிருக்கிறார். இதன் மூலம் இந்த சர்க்காரின் யோக்கியதையை அவர் உலகத்திற்கு வெளிப்படுத்தி விட்டார். காங்கிரஸ் சாட்டிய குற்றம் ஒன்றே. அதாவது "போலீசாரைக் கொண்டு பயமுறுத்தி குடிகளிடம் வரி வசூலித்தார்கள். இப்படிச் செய்ததால் குடிகள் கடன் வாங்கி கொடுக்க நேரிட்டது. இச்செய்கை டெல்லி உடன் படிக்கைக்கு விரோதமானது." இதற்கு வேண்டிய ஆதாரங்களை காங்கிரஸ் நிரூபித்திருக்கும். ஆனால் கிராமாதிகாரி டயரியை காட்ட மறுத்ததால் காங்கிரஸ் வக்கீல் விசாரணையிலிருந்து விலகிக்கொள்ள நேரிட்டது. அவர் விலகிக்கொள்ளவே கார்டன் பாடு கொண்டாட்டமாயிற்று. தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம் என்றமாதிரி தீர்ப்புக் கூறியிருக்கிறார். அவர் கூறுவதாவது:—

"போலீஸ் பலத்தை உபயோகிக்கவில்லை. உபயோகித்திருந்தாலும் அளவுக்கு மீறி போகவில்லை. போயிருந்தாலும், குடிகள் கடன் வாங்கவில்லை. வாங்கியிருந்தாலும், வட்டிக் கடைகளில் வாங்கவில்லை." என்ன அழகான வாதம்!

## குட்டு வெளியாயிற்று

"இத்தாலி ஜர்னல்" என்ற பத்திரிகை மகாத்மாவைப் பற்றி ஒரு பொய்ச் செய்தியை வெளியிட்டதை அன்பர்கள் அறிவார்கள். அதை மகாத்மா உடனே மறுத்தார். அந்தச் செய்தியைப் பார்த்ததும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஓலமிட்டன. மகாத்மா இங்கிலாந்தை விட்டு போய் விட்டதால் இம்மாதிரி பிரிட்டனை தாக்குகிறார் என்று கூறின. மகாத்மாவைப் பற்றி பிரிட்டிஷார் தவறாய் நினைக்கும்படி செய்தன. இந்தப் பெரிய புளுகைப் பற்றிய ரகசியம் இப்பொழுது வெளியாயிருக்கிறது. இத்தாலியில் எத்தனையோ பெரிய பத்திரிகைகள் இருக்கும் போது "இத்தாலி ஜர்னல்" என்ற இந்த துக்கடா பத்திரிகை மகாத்மாவைப் பற்றி இப்படி பிரசுரிப்பானேன்? அதை உடனே ராய்ட்டர் உலக மெங்கும் அனுப்புவானேன்? இந்தக் கேள்விகளுக்கு பதில் கிடைத்து விட்டால் விஷயம் சுலபமாய் விளங்கிவிடும். இத்தாலி ஜர்னல் பிரசுரித்த செய்தி உண்மையானது தான் என்று லண்டன் டைம்ஸ் பின்னால் அழுத்தமாய் கூற காரணமென்ன? இத்தாலி ஜர்னலின் பத்திராசிரியர் தான் லண்டன் டைம்சுக்கு ரோம் நகரில் நிருபராம். அவர்தான் மகாத்மாவை பேட்டி கண்டாராம். அவர் தான் லண்டன் டைம்சுக்கு பின்னால் தந்தி கொடுத்தாராம். லண்டன் டைம்சுக்கு நிருபராயிருக்கிறவர் ஒரு பத்திரிகை நடத்துகிறாரென்றால், அது எவ்வளவு பெரிய பத்திரிகையாயிருக்க வேண்டும் தெரியவில்லையா? மேலும் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளின் நிருபர்கள் அனுப்பும் செய்திகள் எப்பேர்ப்பட்டவையாயிருக்க வேண்டும்? இவைகளிலிருந்தே மகாத்மாவைப் பற்றி கூறிய செய்தியின் யோக்கியதையை அறிந்து கொள்ளலாம். லெனினை உயிரோடு வைத்துக் கொண்டே மாண்டு போய் விட்டதாக 6 தடவை செய்திகள் அனுப்பிய நிருபர்கள் இந்தப் பேர்வழிகள் தான். ஜினோவிப் கடிதம் மாதிரி போலியாக ஒரு கடிதத்தை சிருஷ்டித்து தொழிற் கட்சி சர்க்காரை தோற்கடித்ததும் இந்த நிருபர்கள் தான். இப்பேர்ப்பட்டவர்கள் என்ன மாதிரி தான் புளுகமாட்டார்கள்.

## கதர் உற்பத்தி

இந்தியா பூராவாக 1930-31ல் செப்டம்பர் முடிய ஒரு வருஷத்தில் கதர் உற்பத்தி, விற்பனை விவரங்கள் வருமாறு:—

| | உற்பத்தி, | விற்பனை. |
|---|---|---|
| அசாம் | 37412 | 15081 |
| ஆந்திரா | 772320 | 716780 |
| பீஹார் | 359185 | 314297 |
| வங்காளம் | 277348 | 571896 |
| பம்பாய் | — | 645395 |
| பர்மா | — | 25577 |
| கூர்ஜரம் | 82500 | 319981 |
| கர்நாடகம் | 237681 | 388211 |
| காஷ்மீரம் | 150477 | 105748 |
| மகாராஷ்டிரம் | 132177 | 257615 |
| பாஞ்சாலம் | 291142 | 224222 |
| ராஜஸ்தானம் | 329220 | 143607 |
| சிந்து | 30456 | 99133 |
| தமிழ்நாடு, கேரளா | 2395982 | 1928300 |
| ஐக்கிய மாகாணம் | 622840 | 716377 |
| உத்கலம் | 63212 | 58829 |
| மொத்தம் | 5781952 | 6531046 |

## தலைவர்கள் கைதியாயினர்

பண்டித ஜவஹர்லாலும், ஸ்ரீ டி. ஏ. கே. ஷெர்வானியும் அலகாபாத்திருந்து பம்பாய்க்கு புறப்படும் போது கைதியாயினர். கான் அப்துல் காபூர்கான் என்ற எல்லைப்புற காந்தியையும் அவர் சகோதரர் டாக்டர் கான சாகிபையும், வேறு இருவரையும் 1818வது வருஷ சட்டப்படி கைது செய்து எங்கேயோ கொண்டு போயிருக்கிறார்களாம்.

ஜவஹர்லால் சரித்திரம்

விலை 1 அணா

காந்தி ஆபீஸ் சென்னை.

Edited, Printed & Published by T. S. Chockalingam, at Lakshmi Press. 2, Coral Merchant St, Madras

Koviloor Digital Library

காங்கிரஸ் வெளியீடு விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும். | உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½. | ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 3 | சென்னை 1931 டிசம்பர் 31வ, பிரஜோற்பத்தி மார்கழிமீ 16வ வியாழக்கிழமை | இதழ் 22

## மகாத்மா—வைசிராய் சந்திப்பு.




மகாத்மா:—ஓ, வைசிராய் க்ஷேமந்தானு? இதென்ன பாம்புக் கோலம்?

வைசிராய்:—மகாத்மாவே, சீமைக்கு போனபின்பாவது இந்த வாகனத்தை விட்டிருப்பீர் என்றல்லவா நினைத்தேன்!

மகாத்மா:—அப்படியா? சீமைக்கு போனதால், இந்த வாகனம் மிகவும் அவசியம் என்பது அதிகமாய் உறுதியாயிற்று. இதையும் என்னையும் பிரிக்க முடியாது என்பதை நீர் அறியீரா?

(கருடன் பாம்புக்கு பயப்படுமா அல்லது பாம்பு கருடனுக்கு பயப்படுமா?)

Koviloor Digital Library



# மகாத்மா பிரசங்கம்

பம்பாயில் திங்களன்று மாலை 5 மணிக்குள் ஆசாத் மைதானத்தில் லட்சக்கணக்காக ஜனங்கள் கூடிவிட்டனர். சப்தகருவிகள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்த படியால், எந்த மூலையில் இருப்பவர்களுக்கும் பிரசங்கம் நன்றாய் கேட்கும் படியிருந்தது. சரியாக மாலை 5 மணிக்கு மகாத்மா காந்தி வந்து சேர்ந்தார். சர்தார் பட்டேல் மகாத்மாவை வரவேற்று பேசினார். மகாத்மா பேச ஆரம்பித்ததும் ஊசிவிழுந்தால் கூட சப்தம் கேட்கும்படியான அவ்வளவு நிசப்தம் ஏற்பட்டது. மகாத்மா பேசியதன் சாராம்சமாவது:—

இன்று காலை, என்மீதுள்ள அன்பினால் ஏராளமாக கடற்கரையில் கூடினீர்கள். இப்பொழுது இங்கு கூடியிருக்கிறீர்கள். அந்த அன்பிற்காக என் இருதயபூர்வமாக வந்தனஞ் செலுத்துகிறேன். உண்மை யென்னவென்றால் காங்கிரஸ் மீது உங்களுக்குள்ள அன்பையே இப்படி காட்டுகிறீர்கள். நேற்று இரவு உங்களுக்கு சொல்ல வேண்டுமென்று நான் நினைத்தவைகளுக்கும், இன்று சொல்லவேண்டு மென்று நினைக்கிறவைகளுக்கும் வித்தியாசம் உண்டு. தான் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறது என்பது பொய்யல்ல. நான் எதிர்பாராத பல விஷயங்கள் இன்று நடை பெற்றிருக்கின்றன. பெஷாவரில் சட்டத்தையும், வீரர்கள் பலர் மாண்டதையும், ஜவார்லால், ஷெர்வானி கைதியானதையும் இங்கு வந்த பின்பே அறிந்தேன். கிறிஸ்மஸ் காலத்தில் ஒருவருக்கொருவர் வெகுமதி கொடுப்பது வழக்கம். ஆகவே இவைகளை கிறிஸ்தவ வைஸிராயான லார்ட் வில்லிங்டனின் கிறிஸ்மஸ் வெகுமதியாக நான் எடுத்துக்கொள்ளுகிறேன்.

வங்காள அவசரச் சட்டத்தை நான் கண்டிக்கிறேன். ஆனால் வங்காளத்திலுள்ள வெடிக்குண்டெக்காரர்களை நான் தாக்கிப் பேசப் போவதாகவோ, அல்லது அவர்களை அடக்க சர்க்கார் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை நான் கண்டிக்கப் போவதாகவோ நினைக்கவேண்டாம். ஆனால் ஒருவர் இருவர் செய்கிற குற்றத்திற்காக ஒரு மாகாணத்தையே தண்டிப்பது நியாயமா? ஐக்கிய மாகாணத்திலும், எல்லைப்புறத்திலும் அவசரச் சட்டங்கள் தோன்றியிருக்கின்றன. இம்மாதிரி காரியங்களால் தேசத்தில் தோன்றியிருக்கும் நிலைமை சகிக்க முடியாததாயிருக்கிறது.

சமாசத்திற்கு வழியிருக்கு மென்று நான் நம்பினேன். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால், திருப்திகரமாயில்லை. இருந்தாலும் நான் நம்பிக்கையை முற்றிலும் இழக்கவில்லை. அப்துல் காபர்கான், அவர் சகோதரர், ஜவார்லால், ஷெர்வானி இவர்களை சத்தியாக்கிரக தர்மத்திற்கு விரோதமாய் நடப்பார்களென்று யார் சொல்ல முடியும்? இவர்களை கைது செய்துவிட்டதால் இனி என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்கலாம். நாம் சர்க்காருக்கு பதிலளிப்பதற்காக மறுபடியும் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கலாமா அல்லது வேறு முறைகளை கையாளலாமா? எதைக் கையாளுவதென்று என்னால் தற்சமயம் எதுவும் சொல்லமுடியாத நிலைமை யிலிருக்கிறேன். ஆனால் ஒன்று நிச்சயம் மறுபடியும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கவேண்டிய அவசியம் நேரிட்டால், அம்மாதிரி செய்யும்படி சர்தார்பட்டேலுக்கும் காங்கிரசிற்கும் சொல்ல நான்பின்வாங்கமாட்டேன். சண்டையை தவிர்க்க என்னால் கூடிய பிரயத்தனங்களை யெல்லாம் செய்வேன். உடனே சண்டையில் குதிக்கவேண்டுமென்று நினைப்பவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் உண்மை வீரர்களுக்கு பொறுமை வேண்டுமென்று நான் ஞாபக மூட்டுகிறேன். மறுபடியும் சண்டை நேருமானால் அந்த சண்டையில் குழந்தைகள் கூட சேரவேண்டியிருக்கும். சென்ற போராட்டத்தில் தடியடியை தாக்கினோம். வரப்போகும் போராட்டத்தில் குண்டுகளை தாங்கவேண்டியிருக்கும். எல்லைப்புற வாசிகளைப்போல, பம்பாய் வாசிகளும் குண்டுகளைத் தாங்கும் தீரர்கள் என்பதைக் காட்டவேண்டும்.

வட்டமேஜை மகாநாட்டில் நான் அறிந்து கொண்டது என்ன தெரியுமா? நாம் சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லை என்று மந்திரி சபை நினைக்கிறது. அதோடு காங்கிரஸ் அஹிம்சையை கடைசி வரையில் கைப்பற்றி நடக்காது என்று நினைக்கிறது. இந்தியாவிலிருந்து அதிகாரிகள் அனுப்பிய அறிக்கைகளிலிருந்து மந்திரி சபை இம்மாதிரி நினைக்கிறது. நமது கடமை யென்ன? நமது கொள்கைகளை மிகவும் பலமாய் கையாள உறுதி கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library



## கடைசி வார்த்தை !

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கெனியா பிரதேசத்தில் பிரிட்டிஷார் ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சி அங்குள்ள சுதேசிகளான ஆப்பிரிக்கா வாசிகளின் நன்மையை கவனிப்பதாயில்லை. அங்கு குடியேறிய பிரிட்டிஷ் தோட்டக்காரருக்காகவே ஆட்சி நடைபெறுகிறது. இந்த அநியாயத்தை கண்டிக்கும் நியாய புத்தியுள்ள வெள்ளையர்களில், டாக்டர் நார்மன் லேஸ் ஒருவர். அவர் சமீபத்தில் எழுதி வெளியிட்டிருக்கும் புத்தகம் ஒன்றிற்கு "கடைசிவார்த்தை" என்று பெயர் கொடுத்திருக்கிறார். அதில் கூறுகிறார் :—

தென்னாப்பிரிக்கா சுதேசிகளுக்கு செய்யும் அநீதிகளை உடனே நீக்கா விட்டால், அதன் பலனை அநுபவிக்கும் பயங்கர நாள் சீக்கிரமாய் வந்துசேரும். ஆப்பிரிக்கர் பிரிட்டிஷ் குடிகள் தான். சென்ற யுத்தத்தில் பிரிட்டிஷாரைவிட அதிகமாக அவர்கள் உயிரை தியாகம் செய்திருக்கிறார்கள். கெனியாவிலுள்ள சர்க்கார் என்ன செய்கிறது தெரியுமா? 12 ஆயிரம் வெள்ளை தோட்டக்காரர்களின் நன்மையை அநுசரித்து 30 லட்சம் ஆப்பிரிக்கர்களை ஆளுகிறது. அங்குள்ள உயர்ந்த நிலங்களை சுதேசிகளிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். அதற்கு நஷ்ட ஈடு கூட கொடுக்கவில்லை. ஆப்பிரிக்கர் ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் வாழவேண்டும். மற்ற இடங்களை விலைக்கு வாங்கவோ, வாடகைக்கு வாங்கவோ கூடாது. சாதாரணமாக ஒரு சுதேசி குடும்பத்திற்கு வருஷம் 5 பவுனே வரும்படி கிடைக்கிறது. ஆனால் அவர்கள் சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய வரியோ $1\frac{1}{2}$ பவுன். ஆனால் ஒரு வெள்ளையருக்கு வருஷம் சராசரி 600 பவுன் வருகிறது. அவர் கட்டவேண்டிய வரியோ அதே $1\frac{1}{2}$ பவுன்தான். ஆப்பிரிக்கர்கள் சங்கம் ஆரம்பிக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள். 6 ஆப்பிரிக்கர்கள் சேர்ந்து ஒரு இடத்தில் கூடக்கூடாது. சந்தா பணம் வசூலிக்கக்கூடாது. நிலத்தையும் பறித்து, உள்ளதையும் பிடுங்கி, ஒரு மதிப்பும் இல்லாமல் சொந்த நாட்டில் திண்டாடும்படி அவர்களை விட்டிருப்பதால், இவர்களுக்கு ஆழ்ந்த மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் ஆப்பிரிக்கர்கள் எப்பொழுதும் பணிந்து ஒடுங்கி இருப்பார்கள் என்று நினைப்பது தவறு.

## அழுகிற வீட்டில் ஐயங்கார் சங்கீதம்

சனிக்கிழமை யன்று எல்லைப்புற காந்தி, ஜயார்லாலை கைது செய்து விட்டதாக இந்தியா வெங்கும் தந்திகள் பறந்தன. பம்பாய் முதலிய பெரிய நகரங்களில் பூர்ண ஹார்த்தால் செய்தார்கள். சென்னைக்கும் தந்தி வந்தது. ஆனால் தலைவர்களைக் காணவில்லை. ஊருக்குள் தலைவர்கள் இருந்திருந்தால், உடனே ஹார்த்தாலுக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டுமல்லவா? ஸ்ரீ. சத்தியமூர்த்தியை காணவில்லை. எங்கு சென்றார் என்று தேடிப்பார்த்த போது, பீப்பிள்ஸ் பார்க்கில் நடந்த சங்கீத மகா நாட்டில் பிரசன்னமாயிருந்தாரென்று தெரிந்தது. சங்கீத இன்பத்தில் மூழ்கி குளித்து விட்டு இரவுதான் அவர் வெளியுலகத்திற்கு வந்தபடியால், அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லையாம். போகட்டும், மறுநாளாவது ஹார்த்தால் ஏற்பாடு நடந்ததா? அதுவுமில்லை. சென்னைக்கடைக் காரர்கள் தாங்களாக ஹார்த்தால் செய்து கொண்டார்கள். ஞாயிற்றுக்கிழமை காலையில் சென்னை தலைவர்களில் ஒருவராய் சீமைக்குச் சென்று, மகாத்மாவுக்கு ராஜீய காரியதரிசியாய் வேலை செய்த ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்கார் இந்த நகருக்கு விஜயஞ்செய்தார். அவராவது ஹார்த்தாலுக்கு ஏற்பாடு செய்மாட்டாரா என்று பலர் நினைத்திருந்தார்கள். அதுவும் ஏமாற்றமாய் முடிந்தது. ஐயங்கார் அவர்களும் ஞாயிறன்று சங்கீத மகாநாட்டிற்கு போய் விட்டார். கதை எப்படியிருக்கிறது? ரோமாபுரி பற்றி எரியும் போது, நீரோ பிடில் வாசித்ததைப் போல இருக்கவில்லையா? அவசரச் சட்டங்களால் ஒரு பக்கம் அவஸ்தை. தலைவர்களை ஜெயிலுக்கு பறிகொடுத்தது மற்றொரு பக்கம் அவஸ்தை. இந்த நிலைமையில் சங்கீதம் வேறு வேண்டுமா? கல்கத்தாவில் கவியரசர் தாகூர் 70 வயது திருநாளை வெகு சிறப்பாக 1 வாரமாய் கொண்டாடுகிறார்கள். அங்கு தலைவர்கள் கைதியான செய்தி கிடைத்ததும் உடனே அன்று நடக்க விருந்த சங்கீத மகாநாட்டை ஒத்திபோட்டு விட்டார்கள். அங்கு தேசாபிமானம் இருக்கிறதா அல்லது சங்கீதப் பைத்தியம் பிடித்த சென்னை தலைவர்களிடம் இருக்கிறதா?

Koviloor Digital Library



# கோவிலை திறவுங்கள்

(ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரி)

---

ராஜீய சுயேச்சைக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் தீண்டாத வகுப்பினர் ஆலயப் பிரவேச விஷயத்தை எழுப்பி நமது பலத்தைப் பிரித்துவிடக் கூடாதென்று கூறப்படுகிறது. ஒரு நிலத்தைப்பற்றிச் சண்டை போடுகிறவர்கள் ஸ்வராஜ்யப் போராட்டம் முடியும் வரையில் அதை ஒத்தி வைத்துவிட்டுக் காத்திருப்பார்களா என்று நான் கேட்கிறேன். அதற்கு மாறாக நாம் காண்பதென்ன? வக்கீல்கள் தங்கள் தொழிலைத் தீவிரமாக நடத்திவருகிறார்கள். ஒரு சிறிது நிலத்திற்காக நாம் இப்போது கோர்ட்டுக்குப் போகலாமென்றால் கடவுளின் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படாத வகுப்புகள் பூராவும் நாம் ராஜீய சுயேச்சைக்காகப் போராடிக் கொண்டிருக்கையிலும் அந்த உரிமையைக் கேட்பது நியாயமே. கடவுளைப் பிரார்த்திப்பதைவிட நிலம் அல்லது பணத்திற்கு இருக்கும் உரிமை மேலானதென்று கருதுகிறீர்களா? அப்படி நினைத்தால் ஸ்வராஜ்யப் போராட்டம் முடியும் வரையில் கோவில்களைப் பூட்டி வைக்கலாம். உங்களுக்குக் கோவில் அவசியமானால் இதரர்களுக்கும் அது அவசியமானதே. இந்த வேற்றுமைதான் ஸ்வராஜ்யத்திற்குத் தடையாக இருக்கிறது. நாம் இந்த கோவிலின் கதவுகளைத் திறந்துவிட்டால் அது நிச்சயமாக ஸ்வராஜ்யப் போராட்டத்திற்கு உதவியாக இருக்கும். நாம் நமக்குள்ளாகப் பிளவுண்டிருப்பது இன்னும் ஸ்வராஜ்யம் கிடைக்காமலிருப்பதன் காரணங்களுள் ஒன்றாகும். இங்கிலாந்தில் மகாத்மாஜிக்குப் பல வேதனைகளை உண்டாக்கிய போதிலும் டாக்டர் அம்பேத்கர் விடுத்த அம்புதான் மிகுந்த வேதனையை உண்டு பண்ணியது. இங்கிலாந்தில் சர்ச்சில் கோஷ்டிகளைக் கண்டு காந்திஜீ பயப்படவில்லை. ஆனால் தேசத்தின் பிரதிநிதி ஹோதாவில் அவர் டாக்டர் அம்பேத்கர் காட்டிய குற்றங்களை ஒப்புக் கொள்ளவேண்டியிருந்தது. இந்தியாவில் தீண்டாமையை ஒழிப்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேசிய திட்டமாகி விட்டதென்றும், தாமே அதற்கு முதன்மையாக நிற்பதாயும் காந்திஜீ கூறினார். ஆகையால் நாம் இந்தச் சண்டையை ஒத்தி வைத்தால் ஸ்வராஜ்யம் இன்னும் தாமதமாகப் போய்விடும். நான் கூறுவதைத் தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள். நாம் இம்மாதிரி பிளவுபட்டிருக்கையில் பிரிட்டிஷார் நம்மை ஆளப் பாத்தியதை கொண்டாடுவது நியாயமானதென்று நினைத்து விடாதீர்கள். தென் ஆப்பிரிக்கா பூர்ண சுயேச்சை கேட்டபோது அங்கு சிறுபான்மையோர் பிரச்னை தீண்டாமை முதலியவை எல்லாம் முன்னதாக தீர்க்கப்படவேண்டுமென்று பிரிட்டிஷார் கூறவில்லை. இந்த ராஜீய வாதம் யோக்கியமானதல்ல. அனுமதிக்கப்படக்கூடாதது. ஆனால், நமக்குள் நியாயம் தர்மம் முதலியவற்றை நடத்தி வைத்துக் கொள்ள வேண்டும். ஸ்வராஜ்யப் போராட்டம் நடந்து கொண்டிருப்பதற்காக அநியாயம் செய்து கொண்டிருக்க முடியாது. அதனால்தான் கோவிலைத் திறந்து விட வேண்டும். பலாத்காரமற்ற முறையை நாம் அனுஷ்டிக்காவிடில் பரிகாரம் வியாதியைவிடக் கேவலமாகிவிடும். பலாத்காரமாக இந்தக் கோவில் கதவு திறக்கப்பட்டால் அதனால் நன்மை ஏற்படாது. மன ஒற்றுமையும் சம்மதமும் ஏற்படவேண்டும். கோவிலின் வாயிலில் உள்ள மரக்கதவு திறக்கப்படவேண்டுமென்று விரும்புவதாக நினைக்காதீர்கள். மேல் ஜாதியினரின் மனது என்ற கதவுதான் திறக்கப்படவேண்டும். "தீண்டாத" வகுப்புச் சகோதரர்கள் அடைப்புகளுக்கு முன் கைகூப்பி நிற்கும் போது, தாங்கள் பிரார்த்தனை செய்வதற்குத் தடையாவுள்ள ஸவர்ண ஹிந்துக்களின் மனது திறக்கப்பட வேண்டுமென்றே பிரார்த்திக்கின்றனர். அந்த மனது இதற்குள்ளாகவே திறந்திருக்கக்கூடும். ஆனால் பயமே தடையாக இருக்கலாம். இதைப் போன்ற புராதன ஸ்தானத்தின் வழக்கங்கள் மாற்றப்பட்டால் என்ன நேருமென்று நமக்குத் தெரியாது. நாம் பிரார்த்திப்பதாக நடிக்கும் கடவுளையே நம்பித் தைரியமாகக் கதவுகளைத் திறந்துவிடுங்கள். கடவுள் சர்வ வல்லமையுடையவராயும் நல்லவராயுமிருந்தால் நம்மைத் தவறான வழியில் விடமாட்டார். நமது மனச்சாக்ஷிக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்வோம். நாம் உண்மையான கடவுளையே பிரார்த்திக்கிறோம். நியாயம் செய்வது நமக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணாது. வியாதியை ஒழிக்க விரும்பினால் மருந்து எவ்வளவு கசப்பாக இருந்தபோதிலும் அதைச் சாப்பிட்டாகவேண்டும். தாயார் குழந்தையினிடம் அன்பினால் அது வியாதியாயிருக்கும் போது கசப்பான மருந்தைக் கொடுக்காதிருக்கலாம் அது வியாதியை அதிகப்படுத்தி குழந்தைக்குத் தீங்கையே உண்டுபண்ணும். நமது தீண்டாமை வழக்கம் ஒரு வியாதியே.

Koviloor Digital Library



# ஏழைகள் செலவில் பணக்காரர் வாழ்வு.

ரயில்வண்டிகளில் மூன்றுவது வகுப்பு பிரயாணிகள் புளி மூட்டைகளைப்போல அடைக்கப்படுகிறார்கள். முதல்வகுப்பு, இரண்டாவது வகுப்பு பிரயாணிகளோ உல்லாசமாக யாத்திரை செய்கிறார்கள். இவர்களில் யார் பணத்தால் ரயில்வே கம்பெனி நடைபெறுகிறது? யாரால் நஷ்டம் ஏற்படுகிறது? இதைப்பற்றி சண்டே டைம்ஸ் ஆசிரியர் ஸ்ரீ. எம். எஸ். காமத் எழுதி வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் சில ருசிகரமான விஷயங்கள் காணப்படுகின்றன. அதை கீழே வெளியிடுகிறோம்.

1929-30ல் பிரயாணிகளால் ரயில்வேக்கு கிடைத்த வருமான விவரம்.

| | லக்ஷம் ரூபாய். |
|---|---|
| முதல்வகுப்பு | 101 |
| இரண்டாம்வகுப்பு | 183 |
| மத்தியவகுப்பு | 158 |
| மூன்றும்வகுப்பு | 3411 |

இந்த 38½ கோடிரூபாயில் 34 கோடிரூபாய் மூன்றுவதுவகுப்பு பிரயாணிகளிடமிருந்தே கிடைக்கிறது. இனி வண்டிகளில் 1929-30ல் ஏற்பட்டிருந்த ஆசனங்களையும் அவைகளை உபயோகித்த அளவையும் குறிப்பிடுவோம்.

| | ஆசனங்கள் | பிரயாணிகள் |
|---|---|---|
| முதல்வகுப்பு | 33600 | 804000 |
| இரண்டாவதுவகுப்பு | 52000 | 9125000 |
| மத்தியவகுப்பு | 77300 | 17900000 |
| மூன்றுவதுவகுப்பு | 1040100 | 606468000 |

இந்தக்கணக்குப்படி பார்த்தால், முதல்வகுப்பு ஆசனம் ஒன்று ஒருவருஷத்தில் 25 தடவைகளே உபயோகமாயிருக்கிறது. மூன்றுவது வகுப்பு ஆசனத்திலோ, ஒவ்வொன்றிலும் 600 பிரயாணிகள் விதம் ஒருவருஷத்தில் ஏறியிருக்கிறார்கள். இன்னம் கணக்குப் பார்க்கப்போனால் மூன்றுவதுவகுப்பு வண்டிகளில் எவ்வளவு பிரயாணிகள் ஏறலாமோ அதைவிட இரண்டுமடங்கு அதிகமாக வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று தெரிகிறது. முதல் வகுப்பைப்பார்த்தால் வருஷத்தில் ஒருமாதம்கூட பூராவாக ஆசனங்கள் உபயோகிக்கப்படுவதில்லை. 11 மாதங்களும் காலியாகவே இருக்கின்றன. இனி ஒரு ரயில்வண்டியில் உயர்ந்த வகுப்பு வண்டிகள் எவ்வளவு சேர்க்கப்படுகின்றவென்று பார்ப்போம். மெயில்வண்டிகளில் மூன்றில் ஒருபங்குக்கு குறையாமல் உயர்வகுப்பு வண்டிகள் சேர்க்கப்படுகின்றன. சில மெயில்வண்டிகளில் மூன்றுவது வகுப்பை சேர்ப்பதேயில்லை. சாதாரண வண்டிகளில் 4ல் ஒருபாகம் உயர்வகுப்பு வண்டிகளை சேர்க்கிறார்கள். சராசரி பார்த்தால் ஒரு வண்டித்தொடரில் நாலில் ஒரு பாகமாவது உயர் வகுப்பு வண்டிகள் இருக்கும். அப்படியானால் அந்தவண்டிகளால் வருமானமும் காலில் ஒருபங்கு இருக்கவேண்டுமல்லவா? ஆனால் உயர்வகுப்பு பிரயாணிகளால் வரும் வரும்படி 9ல் ஒருபங்கே இருக்கிறது அவர்கள் கணக்குப்படி 11 கோடிரூபாய் கட்டவேண்டும். 4 கோடியே அவர்கள் கொடுப்பதால் பாக்கி 7 கோடிரூபாய் நஷ்டம். இந்த நஷ்டம் மூன்றுவதுவகுப்பு பிரயாணிகள் தலையிலேயே விழுகிறது. எதற்காக இந்த நஷ்டத்தை ஏழைகள் பொறுக்கவேண்டும்? முதல்வகுப்போ, இரண்டாவது வகுப்போ இல்லாமல் எல்லாவற்றையும் ஒரேவகுப்பாய் செய்துவிட்டால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். சௌகரியங்கள் அதிகமாகும். மூன்றுவது வகுப்பில் ஜனங்கள் படும் கஷ்டம் குறையும். பணக்காரர்கள் அவசியமானால் தனியாக ஒருவண்டியை அமர்த்திக்கொள்ளட்டும். அதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை.

---

இப்போதைய நிலைமையே இருந்து வருமாறு கூறுபவர் நான் கூறிய தாயாரைப் போன்றவராவார். ஆனால் தகப்பனார் ஸ்தானத்தில் காந்திஜி இப்போது ஹிந்து மதம் வியாதியாகப் படுக்கையிலிருப்பதை உணர்ந்து அதற்குத் தகுந்த மருந்தைக் கொடுக்கு மாறு உத்திரவிட்டிருக்கிறார். தாயாரின் முட்டாள் தனமான யோசனையைக் கேட்டால் ஹிந்து மதமே ஒழிந்துவிடும் தகப்பனாரையோ நல்ல வைத்தியரையோ போல் மகாத்மாஜி கசப்பு மருந்தைக் கொடுக்கிறார். அதைச் சாப்பிட்டால் ஹிந்து மதம் உயிருடனிருக்கும். ஹிந்து மதம் ஒரு பெரிய அபாயத்திலிருக்கிறது. அது மரிக்குமாறு விடுவது தேச சேவையாகாது.

—குருவாயூர் பிரசங்கம்.

Koviloor Digital Library

# அகவிலை உயர்வும் தாழ்வும் : வி. பரமசிவன்

உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தால் அதனால் ஜனங்களுக்கு உண்டாகும் பாதகம் மிக அதிகம். இந்தியாவில் பெரும் என்மை யானவர்கள் தரித்திரர்களே. ஆகையால் இயற்கையாகவே அவர்கள் அரை வயிற்று உணவே உண்கின்றபோது இந்த விலையேற்றம் அவர்கள் மேலும் பட்டினி கிடக்கச்செய்வதாகுமல்லவா? ஒரு சில வியாபாரிகளுக்கு இதனால் லாபங் கிடைக்கலாம். அதனால் என்ன பயன் ? இவ்வாறு உணவுப் பொருள்களின் விலை ஏறுவதும் இறங்குவதும் எதனால என்பது பெரும்பாலான ஜனங்களுக்குத் தெரிவதில்லை. அதை அவர்கள் தெரிந்திருத்தல் அவசியமல்லவா ?

ஐரோப்பாவில் நெடுங்காலமாக யுத்தம் நடந்துகொண்டிருந்ததல்லவா ? அந்தக் காலத்தின் தானியங்களின் விலை இப்போதிருப்பதைக் காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. சமீபத்தில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஐக்கிய மாகாணத்தில் அக விலையின் நிலைமை யளித்துக் காட்டியிருந்ததை இங்கு விளக்குகிறேன்.

| | 1914-15 | 1916—20 | 1931. |
|---|---|---|---|
| கோதுமை | 5-00 | 5-39 | 2-30 |
| பார்லி | 3-00 | 4-00 | 1-50 |
| கொள்ளு | 3-30 | 4-56 | 2-10 |
| அரிசி | 5-70 | 6-34 | 4-25 |
| கரும்பு | | 8-82 | 4-5 |
| பருத்தி | | 36-64 | 12-00 |

இந்தக் கணக்கை நேயர்கள் நுணுக்கமாகக் கவனிக்கவேண்டும். போர் ஆரம்ப காலத்திலும் மத்திய காலத்திலும் இருந்த விலைக்கும் தற்போதிருக்கும் விலைக்கும் எத்தனை வித்தியாசமிருக்கிறது! காரணமென்ன ?

பணமானது பெருகிவிட்டதானால் அதன் மதிப்பு உலகத்தில் குறைந்து விடுகின்றதென்பதை நாமறிவோம். எந்தப்பொருளும் அதிகமாகிவிட்டால அதன் மதிப்புக் குறைவது சகஜந்தானே ! அதேபோல மகாயுத்தத்தில் கலந்துகொண்ட தேசங்கள் தங்களுடைய தேவைகளையும் செலவுகளையும் பூர்த்திசெய்து கொள்வதற்காக நாணயங்களை அதிகமாக உற்பத்தி செய்து விட்டனர். பின்னால் அதிகச் செலவு செய்யநேரும் என்ற காரணத்தால் ஒவ்வொரு தேசமும் இவ்வாறு செய்ததில் ஆச்சரியமில்லையல்லவா ? பணம் பெருகிற்று. அதனால் அதன் மதிப்புக் குறைந்தது. ஒருபவுனுக்கு முன்னால் இங்கிலாந்தில் எவ்வளவு சாமான் கிடைத்ததோ அவ்வளவு சாமான் போர்க்காலத்தில் அதாவது பணம் அதிகமான காலத்தில் கிடைக்காது.

டாக்டர் கில்பர்ட் கிலேடர் கூறியதுபோல உலகமகாயுத்தம் ஆரம்பித்தபிறகு யுத்தச் செலவுகளுக்காக ஐரோப்பிய தேசங்கள் தங்கள் நாணயங்களை அதிகப்படுத்திக் கொண்டதோடு உலகிலுள்ள தங்கச் சுரங்கங்களிலிருந்து அதிகமான தங்கம் எடுக்கப்பட்டு விட்டதால் உலகில் பவுன் மதிப்புக் குறைந்து பண்டங்களின் விலையேறிவிட்டது.

தற்கால நிலைக்கு அதாவது பண்டங்களின் விலை மிகக் குறைந்து விற்கப்படுவதன் காரணம் என்ன ? மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களிலிருந்தே தெளிவுறும். பணம் புழக்கம் குறைந்துவிட்டது. மேலும் குறிப்பிட்ட ஒன்றிரு தேசங்களைத் தவிர மற்றத்தேசங்கள் எல்லாவற்றிலும் தங்க இருப்புக் குறைந்துவிட்டது. பணப்புழக்கம் குறைந்தால் பணத்தின் மதிப்பு அதிகமாகி விலை வாசிகள் குறைந்து விடும்.

இவ்வாறு விலை வாசிகள் மிகவும் குறைந்திருப்பது ஒரு வகையில் நன்மை தருவதே யாயினும் இன்றைய நிலையில் விவசாயிகளுக்கு இது மகத்தான நஷ்டத்தையே விளைவிக்கும். உதாரணமாக 100ரூ. பெறுமான தானியம் விளையக் கூடிய நிலத்துக்கு ஏறக்குறைய 100 ரூபாய் நிலவரியும் நிலக் குத்தகை 100 ரூபாயும் கொடுக்க வேண்டியிருக்கின்றதென்று சொன்னால் விவசாயின் வயிறு எங்ஙனம் நிரம்பும்? கீழேக் காணும் புள்ளிவிபரத்தைக் கவனித்தால் விவசாயியின் கஷ்டம் தெளிவாகும்.

| வருஷம். | தானியவிலை. | நிலவரி. | நிலக்குத்தகை |
|---|---|---|---|
| 1898-99-ல் | 100 | 100 | 100 |
| 1914-15-ல் | 117 | 105 | 131 |
| 1930-31-ல் | 80 | 113 | 160 |

அகவிலை குறைந்திருப்பதனால் விவசாயி என்ன கஷ்டம் இதைவிட அடைய முடியும்? நாளுக்கு நாள் வரிப்பளு அதிகமானதைத் தவிர என்ன நன்மையை விவசாயி காண முடிந்தது.

"கன்டெம்பரரி ரெவ்யூ" எனும் பத்திரிகையில் அறிஞர் ஆண்ட்ரூஸ் எழுதுவதை நேயர்கள் கவனிக்கவேண்டும்.

(1) பிரிட்டிஷ் ஆதிக்கமானது தன் முயற்சியையும் நிர்வாகத்திறமையையும் அடக்குவதாயிருக்கின்றது. இந்தியர்களின் ஒழுக்கத்தின் பலத்தை அழிப்பதாயிருக்கின்றது.

Koviloor Digital Library



## மகாத்மா விஜயம்

---

28ௗ காலை 8-மணிக்கு மகாத்மா வந்த "பில்ஸ்னா" கப்பல் பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்தது. ஜனக்கூட்டம் சொல்லி முடியாது. லட்சக்கணக்கான பேர்கள் கூடியிருந்தனர். ஆண் தொண்டர்களும், பெண் தொண்டர்களும் அணி வகுத்து நின்றனர். கப்பல் துறைமுகத்திற்கு வந்ததும் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் கப்பலில் ஏறி மகாத்மாவை வரவேற்றனர். மகாத்மா கப்பலிலிருந்து இறங்கியதும் தொண்டர்கள் மரியாதை செய்தனர். துறைமுக மண்டபத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் சரியாக 8½ மணிக்கு மகாத்மா வந்து அமர்ந்தார். சர்தார் பட்டேல் மாலை சூட்டினார். சுமார் 100 சங்கங்கள் வரை மகாத்மாவை வரவேற்று மாலை போட்டனர். பின்னால் மகாத்மா துறைமுகத்தை விட்டு மோட்டாரில் புறப்பட்டார். அவர் மோட்டார் முன்பு பம்பாய் காங்கிரஸ் அதிகாரிகள் மோட்டார் சென்றது. அடுத்த மோட்டாரில் மகாத்மா சென்றார். அலங்காரம் செய்யப்பட்ட மோட்டாரில் அவர் ஏறவில்லை. அந்த மோட்டார் மூன்றாவதாக வந்தது. அதில் பண்டித ஜவார்லால் படத்தை வைத்திருந்தார்கள். படத்தின் இருபக்கத்திலும் ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தியும், பண்டித ஜவார்லால் குமாரியும் அமர்ந்திருந்தார்கள். துறைமுகத்திலிருந்து 3 மைல் தூரமுள்ள "மணிபவன்" என்ற மகாத்மா ஜாகை வரையிலும் தொண்டர்கள் பதினாயிரக்கணக்காய் அணிவகுத்து நின்றனர். வழியெங்கும் நன்றாய் அலங்காரஞ்செய்யப் பட்டிருந்தது. வழியில் மகாத்மா மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். மகாத்மாவைப் பார்க்க தெருவில் இருபக்கங்களிலுமுள்ள வீட்டு மெத்தைகளில் ஏராளமாக ஆணும் பெண்ணும் கூடியிருந்தனர். மணிபவனுக்கு மகாத்மா 9½ மணிக்கு வந்து சேர்ந்தார். இன்று பகல் 12 மணிக்கு மகாத்மா மௌன விரதத்தை முடிக்கிறார். எல்லைப்புற மாகாணத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாய் ஒருசெய்தி கிடைத்திருக்கிறது. அதைக் கேட்டதும் மகாத்மா முகம் கவலையில் ஆழ்ந்தது. மகாத்மா விஜயத்தைப் பார்த்து பம்பாய் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறது.

---

(2) "சீமைச் செலவுகள்" இந்தியாவின் செல்வத்தை இங்கிலாந்துக்குக் கொண்டுபோய் விடுவதால் சம மற்ற நிலை ஏற்படுகின்றது.

(3) இதற்கு முன்னும் இப்பொழுதும் இங்கிலாந்துக்குச் சாதகமான வரிகளே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றால் இந்தியாவும் இங்கிலாந்தும் சுயமதிப்பை இழக்க நேருகின்றது.

(4) பளுவான நிலவரியினால் விவசாயம் குறைந்து. பொதுவான தரித்திரம் வியாபித்திருக்கின்றது அதனால் ஜன சமூக ஒழுக்கத்திலும் பலஹீனம் ஏற்பட்டிருக்கின்றது.

---

## மகாத்மா செய்தி.

---

மகாத்மா காந்தி 28ௗ பம்பாய் வந்து சேர்ந்தார். 27ௗயன்று கப்பலிலிருந்து ஆகாச தந்தி மூலம் உலகிற்கு விடுத்த செய்தியாவது:—

"பாரத நாட்டின் கரைகளை யணுகும் போது லண்டனை அணுகுவதற்கு முன் என் மனத்தில் தோன்றிய ஓர் மகத்தான பொறுப்புணர்ச்சியே என் மனத்தில் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இச்சமயத்தில் இப்பொறுப்பு உணர்ச்சி ஆயிரமடங்கு அதிகமாயுள்ளது. ஆதலின் அவசரமாக நான் எவ்விதமான நடவடிக்கைகளிலும் இறங்கமாட்டேன். மீண்டும் தியாக அக்னியில் இறங்குமாறு எனது நாட்டினரை வேண்டிக் கொள்ளுமுன்பு, என்னால் செய்யக் கூடிய எல்லாவிதமான சமரச முறைகளையும் அனுஷ்டித்து பார்ப்பேன் என்பது நிச்சயம். எனக்கு வழி காட்டுமாறு நான் பகவானை நோக்கி பிரார்த்தித்தவண்ணமிருக்கிறேன். எனது கொள்கையை சத்தியமாக கடைப் பிடித்து நின்றுவரும்வரை கடவுள் எனக்கு ஆதரவளிப்பார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். தேசிய விஷயங்களில் சத்தியத்தையும், சாத்விகத்தையும் அனுஷ்டிப்பது பற்றி எனக்குள்ள நம்பிக்கை, எனது ஐரோப்பிய பிரயாணத்தால் மிகவும் உறுதிப்பட்டதைக் கண்டு நான் மிகவும் திருப்தி யடைகிறேன். இந்த ஜன்மத்திலே, இதைத் தவிர வேறு சேவையும், ஊழியமும், லட்சியமும் எனக்கு கிடையாது."

Koviloor Digital Library



# செய்தித் திரட்டு

பண்டித ஜவஹர்லாலும், ஸ்ரீ. ஷெர்வானியும் அலகாபாத்தை விட்டு புறப்பட்டு போகும் போது இராட்சந்த் ஸ்டேஷனில் கைதியாயினர். அவர்களை ஒரு மோட்டாரில் நைனி ஜெயிலுக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் மீதுள்ள வழக்கு ஜனவரி 2உ விசாரணையாகும். ஸ்ரீ. ஷெர்வானி கைதியா விட்டதால் ஸ்ரீ. மோகன்லால் சக்சேனா ஐக்கிய மாகாண காங்கிரஸ் தலைவராக நியமனம் செய்யப் பட்டிருக்கிறார். கான்பகதூர் அப்துல்காபர்கானை காசி ஜெயிலிலும் அவர் சகோதரரை நைனி ஜெயிலிலும் வைத்திருக்கிறார்கள். செந்தொண்டர்கள் என்ற எல்லைப்புற காங்கிரஸ் தொண்டர் படையை சட்ட விரோதமென்று சொல்லியிருக்கிறார்கள். 26உ சுமார் 200 தொண்டர்கள் கோஹாத்தில் ஊர்வலமாய்வந்தார்கள். அவர்களை கைது செய்து மறுநாள் விடுவித்தனர். 27உ மற்ற 500 தொண்டர்கள் கோஹாத்தின் கிழக்கு திசையில் தோன்றினர். அவர்களை தடியால் அடித்தும் கலைந்து போகமறுக்கவே, ராணுவம் சுட்டதாம். அதனால் 11 பேர் மாண்டனர். 50 பேர் காயமடைந்தனர். தெற்கு திசையில் உடனே 2 ஆயிரம் தொண்டர்கள் தோன்றினர். அவர்களையும் ராணுவத்தார் சுட்டனர். அதில் மாண்டவர்கள் தொகை தெரியவில்லை. எல்லைப்புற மாகாணத்திலிருந்து வரும்செய்திகளை தணிக்கை செய்து சர்க்கார் அனுப்புகிறார்கள்.

---

## சர்க்காருக்கு நிபந்தனை

திங்கட்கிழமை இரவு "வேல்பேர் ஆப் இந்தியா லீக்" என்ற சங்கம் மகாத்மாவை வரவேற்று உபசரித்தது. அந்த சங்கத்திற்கு மகாத்மா சென்றதும், சர். ஸ்டான்லி ரீட் வாசலில் வந்து வரவேற்றுச் சென்றார். சர். சிமன்லால் செதல்வாட், என். டி. சக்லத்வாலா, பம்பாய் மில்காரர் சங்கத்தலைவர் ஸ்ரீ. எச். பி. மோடி முதலிய பிரபலஸ்தர்கள் கூடியிருந்தார்கள். மகாத்மா அங்கு பேசியதாவது:—

"ஸ்ரீ. அப்துல் காபர்கான் கடவுளுக்கு பயந்து நடக்கும் உத்தமர். அவரை கைது செய்திருக்கிறார்கள். பண்டித ஜவஹர்லாலும், ஸ்ரீ. ஷெர்வானியும் என்னைபார்க்க புறப்பட்டு வந்ததை தவிர வேறு எதுவும் செய்ய வில்லை. அதற்காக கைதியாயிருக்கின்றனர். இவையெல்லாம் டெல்லி உடன் படிக்கையை யார் மீறுகிறார்கள் என்பதை காட்டுகின்றன. வட்ட மேஜை மகாநாட்டில் ஏமாற்ற மடைந்த போதிலும், இந்தியாவில் சாத்தியமான வரையில் ஒத்துழைப்பதாக எனது பிரிட்டிஷ் நண்பர்களுக்கு நான் வாக்குறுதி கொடுத்தேன். ஆனால் இன்று இங்குள்ள நிலைமையைப் பார்த்த பின்பு, அந்த ஒத்துழைப்பு சாத்தியமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வருகிற வட்ட மேஜை மகாநாட்டு கமிட்டிகளோடு ஒத்துழைக்க முடியுமா என்று நீங்கள் கேட்கிறீர்கள். ஒரு வழியுண்டு. எல்லா அவசரச்சட்டங்களையும் ரத்துச் செய்து, ராணுவ, நிதி விஷயமாக மறுபடியும் விவாதிப்பதற்கு ஒப்புக்கொண்டால், காங்கிரஸ் ஒத்துழைக்குமாறு நான் சிபார்சு செய்வேன்".

# மணித்திரள்

இனி நடைபெறும் போராட்டமே இந்தியாவின் இறுதி போராக இருக்கும். ஒன்று இந்தியா வெற்றிபெற்று விடுதலை பெற்ற தேசமாக வெளிவரும். அன்றி உலகத்திலிருந்தே இந்தியா மறைந்து விடும். நாம் வெற்றி பெறுவோமாயின், அது உலகத்திற்கே ஓர் படிப்பினையாக இருக்கும். பலாத்கார யுத்த முறை முற்றிலும் மறைந்து, சாத்விக கொள்கை உலகெலாம் பரவும். கௌரவமாக இறக்க காலம் வந்து விட்டது.

—சர்தார் படேல்

* * *

சென்ற வருஷம் சாத்விகப் போருக்கு நாம் புதியவர்களாக ஆரம்ப திசையில் இருந்துவந்தோம் ஆனால் தற்போது நாம் தேர்ச்சி பெற்று விட்டோமாதலின் யாதொரு கஷ்டமுமில்லாமல் அவசியமாயின் அதை மேற்கொள்ளலாம். இவை யனைத்தும் கிறிஸ்தவ அதிகாரிகளிடமிருந்து நாம் பெறும் கிறிஸ்மஸ் பிரசாதமாகும். அடக்கு முறையாலும், அவசரச் சட்டங்களாலும் ஒரு தேச மக்களின் ஒத்துழைப்பை பலாத்கார முறையில் வற்புறுத்தி பெறமுடியாது. இம்முறையால் நேரும் பலாபலனை கூடியசீக்கிரம் அவர்களே அறிந்து கொள்வர்.

—நரிமன்

* * *

ராஜியிலும், மகாநாட்டிலும் ஆதிமுதல் எனக்கு நம்பிக்கையே கிடையாது. தற்போது போர் ஆரம்பமாகி வருகிறது. தொண்டர் படையில் சீக்கியர்கள் முதன்மையில் சேர முன்வருவர். உப்பெடுக்கவோ, அன்றி துணிக்கடையை மறியல் செய்யவோ இனி போராட்டம் நடைபெறாது. பூரண விடுதலையைப் பெறுவதே இனி போராட்டத்தின் லட்சியமாயிருக்கும்.

—ஜாமியத்சிங்.

* * *

சென்னை, டிசம்பர் 29உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 28—8—0 |
| சவரன் கில்லரை | ரூ. | 18—8—0 |
| சிமை வெள்ளி 100 ரூ எடை | | 61—8—0 |
| „ ரூ. எடை | | 0—10—0 |

Koviloor Digital Library


காங்கிரஸ் வெளியீடு விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும். உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½. ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை 1932 ஜனவரி 2வ, பிரஜோற்பத்தி மார்கழி 18வ சனிக்கிழமை | இதழ் 23

## யானை பார்க்க வெள்ளெழுத்தா?




மகாத்மா:— வைசிராயே, யானை எவ்வளவு பிரமாண்டமானது. அதைப் பார்க்க வெள்ளெழுத்தா? உமது கண்களாலேயே பாரும். நான் பாடுபட்டு வளர்த்த கற்பக விருட்சம் இருக்கிறதா அல்லது முறிந்து போயிற்று என்பதை நீரே பார்த்து சொல்லும்.

Koviloor Digital Library



# ஒப்பந்தம் உயிருடன் இருக்கிறதா?

துரியோதனன் சபையில் பாஞ்சாலியை அவமா னப்படுத்தியபோது, தர்மர் "பொறுமை பொறுமை" யென்று, துடி துடித்த பீமனுக்கு சொன்னார். "துரி யோதனன் கொடுமையைவிட உனது பொறுமை பெரிய கொடுமையாயிருக்கிறதே" என்று பீமன் பதிலளித்தான். அன்று தர்மர் காட்டிய பொறுமை யைவிட இன்று மகாத்மா காட்டும் பொறுமை ஆயிரம் மடங்கு அதிகமாயிருக்கிறது. வங்காளத்தில் ஆர்டினன்ஸ் சட்டம். மாகாணத்தில் அவசரசட்டம். ஐக்கிய மாகாணத்தில் இந்த இரண்டையும் சேர்த்த புதிய தோர் சட்டம். இவற்றையெல்லாம் தோற் கடிக்கும் விதத்தில் எல்லைப்புறத்தில் ஓர் பயங்கரச் சட்டம். காங்கிரஸ் பொதுக் காரியதரிசியான பண்டித ஜவார்லாலை ஜெயிலில் போட்டிருக்கிறார்கள். மகாத்மாவை பார்க்கவந்த எல்லைப்புற காந்தியை எங்கேயோ ஒரு ஜெயிலில் பூட்டிவிட்டார்கள். செந்தொண்டர்கள் அஹிம்சா தர்மத்தை கடைப்பிடி த்து கலைந்துபோக மறுத்ததற்காக சுட்டுத்தள்ளினார் கள். இவ்வளவையும் பார்த்த பின்பும் டெல்லி ஒப்பந்தம் இருக்கிறதென்று யார்தான் சொல்ல முடியும்? இந்தக்காரியங்களெல்லாம் டெல்லி ஒப்பந்தத்தை சர்க்கார் உடைத்துவிட்டதை தெளி வாய் காட்டுகின்றன. இருந்தாலும் மகாத்மா காந்தி இன்னும் பொறுமை காட்டச்சொல்லுகிறார். டெல்லி ஒப்பந்தத்தை மீறிய செய்கைகளாஇல்லையா வென்று வைசிராய் பதில்சொல்லும்படி கேட்கிறார். மகாத்மா பொறுமை தர்மர் பொறுமையைவிட கொடியதா யிருக்கிறது. இம்மாதிரி தந்தி கொடுப்பதை பாபு சுபாஷ் சந்திரபோஸ் காரியக்கமிட்டியில் ஆட்சே பித்தாராம். ஆனால் முடிவில் காரியக்கமிட்டி அதை ஒப்புக்கொண்டுவிட்டது. மகாத்மா காந்தியின் பொறுமையைக்கண்டு சகிக்க முடியவில்லையென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையே. ஆனால் ஒருவார்த்தை. மகாத்மா காந்தி நமது தள கர்த்தர். அவர் உத்தரவுப்படிநடக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்பொறுமை அளவுகடந்து போகிறதாயிருந்தாலும், அவ்வளவும் நன்மைக்கே. லண்டனுக்கு புறப்பட்டுப்போகுமுன்பு மகாத்மா இர் வினிடம் எவ்வளவு பொறுமை காட்டினார் என்ப தை ஞாபகமூட்ட விரும்புகிறோம். சர்க்கார் வாயினா லேயே ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்று சொல்ல வேண்டுமென்பது மகாத்மா கருத்தாயிருக்கலாம்.

அம்மாதிரி செய்வது நமக்கு அளவற்ற பலமாயிருக் கும். ஆகவே வைசிராயுடன் மகாத்மா நடத்தும் பேச்சுவார்த்தைகளை பொறுமையுடன் நாம் கவனித் துக்கொண்டிருப்பது கடமையாகும். பொறுத்தார் பூமியாள்வார் என்பது பொய்யல்ல.

# மகாத்மா செய்திகள்

மகாத்மாவும் வைசிராயும் சந்திக்கும்படி வெல் பெர் ஆப் இந்தியா லீக் முயற்சி செய்து வருகி றது. காரியக் கமிட்டி கொடுத்த தந்தி யோடு மகாத்மாவும் தனியாக வைசிராய்க்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார். லண்டனிலுள்ள காமன் வெல்த் லீக், மகாத்மா கேட்கிறபடி அவசரச் சட்டங்களை ரத்துச் செய்வதே புத்திசாலித்தன மாயிருக்குமென்று முதல் மந்திரிக்கு தந்தி கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் கூடியதும், எல்லைப்புறத்திலிருந்து வந்திருந்த இருவர் அங்குள்ள நிலைமையை விளக் கிக்காட்டினர். பண்டித ஜவார்லால், தாம் கைதி யாகு முன்பு மகாத்மாவுக்கு எழுதிய கடிதத்தை காரியக் கமிட்டியார் படித்து பார்த்தார்கள். 30உ காலை பம்பாயில் தேச சேவிகா (பெண் தொண்டர்) பயிற்சி சாலைக்கு மகாத்மா சென்று 30 நிமிஷம் பேசினார். அடுத்த போராட்டம் எந்த வினாடியில் வருமென்று யாருக்கும் தெரி யாதென்றும், அதற்கு தயாராயிருக்கவேண்டு மென்றும் மகாத்மா சொன்னார். வங்காள சிறு மிகள் மாஜிஸ்திரேட்டை சுட்டதை பலமாய் கண்டித்தார். ஒவ்வொரு மாகா ணத்திலிருந்தும் சென்றிருந்த தலைவர்கள் அங் கங்குள்ள நிலைமையை மகாத்மாவுக்கு விளக்கி காட்டினார்கள். பின்னால் அசௌக்கியமாயிருக் கும் ஸ்ரீமதி ஜவார்லால் நேருவை மகாத்மா சென்று பார்த்துவந்தார். பம்பாயிலுள்ள 40 தீண்டாதார் சங்கங்களின் பிரதிநிதிகள் மகாத்மா விற்கு ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத் தார்கள். அந்தப்பத்திரத்தின் முடிவில் "நீங் களே எங்கள் ஏகப்பிரதிநிதி. நீங்களே எங்கள் ரக்ஷகர்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மகாத்மா ஏறிவந்த "பில்ஸனா" கப்பலில் அவருக்கு ஒரு நல்ல அறை கொடுப்பதாக காப்டன் கூறினார். ஆனால் மகாத்மா அதை மறுத்துவிட்டார். மேல் தளத்தில் ஒரு கூடாரம் அடித்து அதிலேயே அவரும் அவர் சீடர்களும் தங்கியிருந்தார்கள். சீமையிலிருந்து பிரிண்டிசி வரை மகாத்மாவுடன் இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வந்தார் கள். மகாத்மாவின் அன்பர்கள் ஏராளமாய் கூடி தொந்தரவு ஏற்படக்கூடாது என்பதற்காக வே அவர்களை இந்தியாமந்திரி அனுப்பியிருந் தார். பிரிண்டிசியில் அவர்களுக்கு விடை கொடுக்கும்போது தமது கையெழுத்திட்ட இர ண்டு படங்களை அளித்தார்.

Koviloor Digital Library



# முஸ்லிம் தலைவர் எச்சரிக்கை

சர். ஜுல்பிகர் அலிகான் எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்தவர். சர்க்கார் கட்சியை ஆதரிப்பவர். சென்றவாரம்தான் வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டன் சென்றுவிட்டு திரும்பினார். அவர் எல்லைப்புற மாகாணத்தில் சர்க்கார் அநுஷ்டிக்கும் அடக்குமுறைகளை கண்டித்து பேசியதாவது :—

" இனி யுத்தம் ஏற்படலாம். அதில் ஆயிரக்கணக்கானவர்களைச் சுட்டு வீழ்த்தக்கூடும். அக்கதி முதன் முதலில் எல்லைப்புற மாகாணத்திற்கு நேர்ந்தது துரதிர்ஷ்டமாகும். பிரிட்டிஷாருக்கு விரோதமான பிரசாரத்தில் முஸ்லிம்கள் இதுவரை கலந்து கொள்ளவில்லை. ஆனால் எல்லைப்புறத்தில் ரத்தம் சிந்துவதானது முஸ்லிம்களிடையே வெறுப்பைஉண்டு பண்ணக் கூடும். முஸ்லிம்களது மனப்பான்மையும் மாறக்கூடும். அதனால் அவர்கள் ஏராளமாக காங்கிரசோடு சேருவதை நாம் பார்க்கக் கூடும். எல்லைப்புற மாகாணத்தில் இருப்பதுபோல் உலகில் எந்த பாகத்திலும் அவ்வளவு அநாகரிகமாக சட்டங்கள் இல்லை. மகாத்மா காந்தி என்ன முடிவுக்கு வருகின்றாரென்பதை அறியும் வரையில் காத்திராமல், சர்க்கார் அடக்கு முறையில் தீவிரமாக இறங்கிவிட்டனர். இந்த அடக்குமுறை கொள்கையால் நாட்டு வாலிபர்கள் மனக்கொதிப்படைந்து, மகாத்மா காந்தி முதலியோரையும் புறக்கணித்து, சொந்த முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைவர். படித்தவர்களில் சிலர் மட்டுமே புரட்சிகரமான மனப்பான்மை யுடையவராக விருக்கவில்லை யென்பதை லார்டு இர்வினே கூறியுள்ளார். புரட்சிகரமான நடவடிக்கைகள் அபூர்வமானவையாக விராது. அவைகளை நசுக்க சர்க்கார் பலரைச் சுடவேண்டியேற்படும். சர்க்கார் எல்லைபுற மாகாண சீர்திருத்தங்கள் சம்பந்தமாக அறிவித்த பிறகு கொஞ்சகாலம்காத்திருந்து பார்த்து எந்த நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்க வேண்டும். போராட்டம் தீவிரமாவது சாத்தியமென்று எனக்குப் படுகிறது. விதியையே எதிர்ப்பதற்கு பதிலாக புதிய அரசியல் திட்டத்தை சீக்கிரம் அமுலுக்கு கொண்டு வந்து நிலைமையை அபிவிருத்தி செய்வது எவ்வளவோ உசிதமான காரியமல்லவா?

# கண்மூடி தர்பார்

சிட்டாகாங்கில் அமுலில் இருக்கும் அவசரச் சட்டத்தில் ஒரு விநோதமான பிரிவு இருக்கிறது. அதாவது ராணுவ, போலீஸ் சம்பந்தமாக எந்தச் செய்தியையும் யாரும் தெரிவிக்கக் கூடாதாம். அத்தகைய செய்திகளை பத்திரிகைகள் எதுவும் பிரசுரிக்கவும் கூடாது. மீறி பிரசுரித்தால், பத்திரிகை சொந்தக்காரர், ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் ஆகிய அனைவருக்கும் தண்டனையாம். இந்த விநோத உத்தரவு வரை யறையில்லாத கண்மூடி தர்பாராயிருக்கிறது. போலீஸ், ராணுவம் சம்பந்தமாக எத்தகைய செய்தியையும் பிரசுரிக்கக் கூடாதென்றால், அதற்கு பொருளேயில்லை. போலீஸ், ராணுவ நடமாட்டங்களைப்பற்றி பிரசுரிக்கக் கூடாதென்றால் அதற்கு பொருளுண்டு. எதுவுமே பிரசுரிக்கக் கூடாது என்று தடுப்பது மிகவும் அநீதி. ஆகவே இதனால் ஏற்படும் சந்தேகங்களை தீர்க்கும்படி, கல்கத்தா பத்திராசிரியர் சங்கம் சர்க்கார் காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதியது. அதில் 6 உதாரணங்களை குறிப்பிட்டு, இம்மாதிரி செய்திகளை பிரசுரிப்பது குற்றமாகுமா என்றுகேட்டது. அவையாவன, 1. பொதுஜனங்கள் போலீசாரை இம்சித்தால் 2. போலீசார் பொது ஜனங்களை இம்சித்தால். 3. பொதுஜனங்களுக்கும் போலீசாருக்கும் சண்டை ஏற்பட்டால் 4. போலீசார் போடும் சோதனைகள் 5. பொதுஜனங்களோ போலீசாரோ குற்றஞ்செய்தால் 6. போலீசாரோ, ராணுவமோ ஒரு ஊருக்கு போவதோ அல்லது அதைவிட்டு வெளியேறுவதோ. இம்மாதிரி செய்திகள் சாதாரண செய்திகள்தான். ஆனால் இவற்றை பிரசுரித்தால் கூட அவசரச் சட்டப்படி தண்டிக்கலாம் என்று பொருள்படும்படி சட்டத்தின் விதிகள் இருக்கின்றன. ஆகவே இவற்றைப் பற்றிய சந்தேகத்தை நீக்க சர்க்கார் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் சங்கத்தார் எழுதிய கடிதத்திற்கு அவர்கள் எழுதிய பதிலைப் பார்த்தால், தங்கள் கடமையை அவர்கள் உணர்ந்ததாய் தெரிய வில்லை. இந்தக் கேள்விகள் வெறும் யூகமாம். ஆகவே இவற்றிற்கு பதிலளிக்க முடியாதாம். சிட்டாகாங் ஜில்லா மாஜிஸ்திரேட் கொடுக்கும் செய்திகளை மட்டும் பிரசுரித்தால் போதுமாம். இதன் மூலம் இந்திய பத்திரிகைகளை நசுக்க இந்த சர்க்கார் முடிவு செய்திருப்பது வெளியாகிறது. என்ன அகம்பாவமான ..தில் பார்த்தீர்களா ?

Koviloor Digital Library



# அஹிம்சையை கைவிடேல் : மகாத்மா காந்தி

லண்டன் மகா நாட்டைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன், நாம் சுயராஜ்யத்திற்கு லாயக்கில்லை யென்பதுதான் பிரிட்டிஷ் மந்திரி சபையின் அபிப்பிராய மென்பதை உணர்ந்தேன். மேலும் காங்கிரஸ் காரர்கள் அஹிம்சா தர்மத்தை என்றுமே தங்கள் கொள்கையாகக் கொண்டிருக்க மாட்டார்களென்று கருதுகிறார்கள். இவைகளெல்லாம் வெறுங் கொள்கைகளென்றே அவர்களுக்குத் தோன்றுகிறது. காங்கிரஸ்காரர்கள் எதைக் கூறுகிறார்களோ அதன்படி. அவர்களுடைய நடவடிக்கைகளில்லையென இந்தியாவிலுள்ள அதிகாரிகள் கொடுத்திருக்கும் தகவல்களின் பேரிலேயே, மந்திரி சபையார் இம் மனப்பான்மையைக் கொண்டிருக்கிறார்கள். இந்த மனோபாவம் தினந்தோறும் மந்திரி சபையாரிடம் அதிகரித்துக்கொண்டும் வருகிறது. எனவே நமது கடமை என்ன? நம்மிடமுள்ள குறைகளை யெல்லாம் போக்கி நமது உறுதியை பலப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அஹிம்சாதர்ம வழிபற்றி நாம் நடந்து கொள்ளவேண்டும். சத்தியாக்கிரக விஷயத்தில் நாம் சத்தியத்துடன் நடந்துகொள்ளவேண்டும். அஹிம்சை தர்மத்திலிருந்து நாம் எடுகாலும் மாறி விடக்கூடாது. இந்த கொள்கையில் நம்பிக்கையில்லாதவர்கள் ஒன்று காங்கிரஸை விட்டு விலகிவிடவேண்டும். அல்லது காங்கிரஸின் கொள்கையையே மாற்றிக் கொண்டுவிட வேண்டும் இந்தியாவிற்கு சுயராஜ்யம் உலகம் முழுமைக்குமே சமாதானமாகும். நமது முறைகளைக் கொண்டு சுயராஜ்யம் பெற பல வருஷங்கள் செல்லலாம். ஆனால் அதைப்பற்றிக் கவலையில்லை.

நாம் சத்தியாக்கிரகத்தை விட்டுவிட்டால் சர்க்கார் நம்முடன் ஒத்துழைப்பார்களென்று சிலர் கருதுகின்றனர். அது ஒருக்காலும் நடக்காத காரியமென்று பணிவுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனெனில் சத்தியாக்கிரகமும் காங்கிரஸும் ஏக வஸ்துவாயிருப்பதால் அதைத் தனியாகப் பிரிக்க முடியாது. சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றே யாகவேண்டும்: முடிவில் வெற்றி பெற்றே தீரும். காங்கிரஸின் மூலமும் சத்தியாக்கிரகத்தின் மூலமும் இந்தியா சுயராஜ்யமடைந்தே தீருமென்று உறுதிகொண்டுவிட்டது. சர்க்கார் இப்பொழுது இதை எதிர்க்கலாம். முடிவில் சர்க்கார் நம்முடன் ஒத்துழைத்தே தீருவார்கள். காங்கிரஸ் அதற்கும் தயாராகயிருப்பதோடு, எல்லோருக்கும் பொதுவானதாகவுமிருக்கிறது. இது ஒரு தனிக்கட்சியன்று. எல்லாவிதத்திலும் தேசிய மாயமானது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், புத்தர்கள் யாவரும் காங்கிரஸிலிருக்கிறார்கள். இந்த சமூகங்களெல்லாவற்றிற்கும் உழைக்கும் உரிமை காங்கிரஸிற்கிருக்கிறது. இங்கிலாந்தில் இதை நான் விளக்கிக் காட்டியிருக்கிறேன்.

இங்கிலாந்தில் வகுப்பு வாதம் எத்தகைய சமரச முடிவையுமடையவில்லை. இது இங்கிலாந்தில் சமரசம் செய்வதற்கில்லை யென்றும் இந்தியாவே சமரசம் செய்வதற்கு ஏற்ற இடமென்றும் நான் அடிக்கடி கூறி வந்திருப்பதை நீங்களெல்லோரும் நன்கறிவீர்கள். இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முந்தியே இவ் விஷயத்தில் ஒரு சமரசம் செய்து கொண்டுபோக நான் முற்பட்டபோதிலும் சமரச முடிவு ஏற்படாமலேயே நான் செல்ல நேர்ந்ததையும் நீங்களறிவீர்கள். இந்த பிரச்சினையில் ஒரு கௌரவான சமரச மடைவதற்காக எல்லாவிதங்களிலும் காங்கிரஸ் முயற்சிசெய்து தீருமென்பது நிச்சயம். சுயராஜ்ய சர்க்காரில்; எந்த சமூகமும் அதன் உரிமையை இழக்க நேரிடாது.

'தீண்டாதவர்'களைக் குறித்து ஒருவார்த்தை கூற விரும்புகிறேன். நானும் ஒரு தீண்டாதவன்தான். எனது வாழ்நாள் முழுமையையும் அவர்களுடைய சேவைக்காக செலவிட்டிருக்கிறேன். அவர்களுக்கு தீங்கிழைக்கப்படுவதை கண்கொண்டு காண நான் சகிக்கமுடியாது. அனைடஜன் ஹிந்துக்கள் "தீண்டாதார்"களுக்காக தங்கள் உயிரையும் தியாகஞ் செய்ய முற்படுவார்களாகில் "தீண்டாதாரு"க்கு பல வருஷங்களாக செய்துவந்த அநீதிகளுக்கு அது பரிகார மாகிவிடுமென்று நீங்கள் கருதுகிறீர்களா? இந்த மானக்கேட்டை ஒழிப்பதற்கு ஹிந்துக்கள் எவ்வளவு தியாகஞ் செய்தபோதிலும் அது அதிகமாகாது. தீண்டாமை யென்னும் தீமை அடியோடு ஒழிவதற்கு முடிந்ததை யெல்லாம் செய்ய நான் தயாராயிருக்கிறேன்.

—பம்பாய் பிரசங்கம்.

Koviloor Digital Library



# நரக வாழ்வு

(எய்டன்)

நெல்லிக்குப்பம் ஆலைத்தொழிலாளர்களின் கேவல வாழ்க்கையைப் பற்றி எழுதவும் கைகூசுகிறது. ஆலையைச் சுற்றிலும் வசித்துவரும் தொழிலாளர்கள் வீடுகள் கேவலம் ஆலை ஸ்டோரியர்களின் கக்கூஸை விட மோசமாயிருக்கிறது. கில்பேட்டை பெயர் கில்துரை ஞாபகார்த்தம். வீடுகள் ஆபாசக் கண் காட்சி. கிராவல் கல்லால் 40 வருஷத்திற்கு முன் ஜெயிலறை போல் தடுக்கப்பட்டு உலர்ந்து போன சவுக்குக் கட்டை மீது குப்பையில் போட்ட தகரத்தகட்டுகளை வேய்ந்த கூரைகள். ரஸ்தாவை விட பள்ளமான விடமாதலால் சமீப மழையில் வீட்டுள் 2 அடி தண்ணீரும், தெருவில் ஆறு போன்ற ஜலப் பிரவாகமும் ஓடியது. மழை பெய்து ஆறு மாதமானாலும் வீதி சேறு அப்படியே இருக்கும். ஜலம் ஓட வழியுமில்லை. வீட்டைச் சுற்றிலும் அழுகிய சப்பாத்திக்காடு. கீழ்புறம் ஆலையின் துர்நாற்றத் தீர்த்தம். இதில் வாழ்பவர்கள் துரைகளுக்கு சமையல் செய்யும் பொட்லர்கள். வெகு ஒழுங்கான இடம்.

துலுக்கப்பாளையம். ஆலையின் கக்கூஸ் ஜலம் இங்கு போய் தங்கும். சாராய அழுக்குத் தண்ணீர் வீடுகளில் பரவும். இவர்களுக்கு மலஜலம் கழிக்கவும் இடமில்லை. குடிக்கத் தண்ணீரும் குளிக்க ஜலமும் கிடையாது. இவர்கள் வசிக்கும் வீதிகளில் மழை பெய்தால் தங்கும் தண்ணீர்க் குளத்தில் அடிக்கடி குளித்துக் கொள்வார்கள். ஆலையின் கரிப்புகை: இவர்கள் வீடுகளை அலங்கரிப்பதுடன் ஆகாரமாகவும் உதவும். இவர்களை இவ்வளவு முன்னேற்ற நிலைமையில் வைத்திருப்பது ஆலை அதிகாரிகள் தாம் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மோரை. இது கேட்பாரற்ற இடம். தொழிலாளர்கள் தங்கள் வேலையுண்டு. தாமுண்டு என இருப்பார்கள். இம் மழை காலத்தில் வேண்டிய வெளியூர் வாசிகள் துரை இருக்கும் பங்களாவையும், தொழிலாளர்கள் இருக்கும் நரக வீதிகளையும் பார்வையிட்டு மகிழ்ந்தனர். வீதிகளை ஓரம் வெட்டி வடிகால் விட்டு நாற்றுப்பயிர் நடவேண்டியது தான் பாக்கி. 6 மாதமாக தயார் செய்யப்பட்ட சதுப்பு நிலங்கள். மழை ஜலம் ஓடிவிடும் என்ற பயமே இல்லை. வீட்டுக்கு வீடு, தோட்டத்திற்குத் தோட்டம் திருக்குளம். இரவில் விளக்கு வெளிச்சம் இல்லாததால் எவ்வளவோ அபாயம் நேரிடுகிறது. சுற்றிலும் ஆலை கக்கூசுகளின் சுகமான காற்று. இவைகளைக் கேட்பதுயார்? நெல்லிக்குப்பம் யூனியனைப் பற்றிக் கவலையில்லை. அதன் போக்கையும், நிர்வாகத்தையும் கடவுள் கூட திருப்பமுடியாது. அந்த ஆபாசங்களெல்லாம் ஒழிய கூடிய சீக்கிரம் தொழிலாளர்கள் தங்களுக்குரிய உழைப்பும் உண்மைத் தியாகமும் கொண்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதே முறையாகும்.

# மகனே எழுந்திராய்!

(வி. பரமசிவன்)

நாட்டில் வறுமை மிகுந்தது எங்கும்
நல்லவர் யாவரும் நன்மை யொழிந்தார்.
வீட்டில் அடிமைப் பெரும்பேய் புகுந்து
வெங்குர லோட்டி விழிக்கின்ற தையோ!
எட்டில் அடங்காத இன்னல்கள் தம்மை
எம்மக்கள் ஏற்று இழிவுறு கின்றார்
கூட்டில் அடைப்பட்ட குஞ்சர மொப்பாய்
குமரனே நீதுயில் நீங்கி எழுவாய்.

o o o

அன்னையான் நாளும் அழுங்கிக் கண்ணீரை
ஆறாய்ப் பெருக்கி அழுதிடல் காணாய்!
முன்னைத் தவத்தினால் பெற்றவ ளன்றோ
மிக்க துயிலிந்த நேரத்தில் நன்றோ!
என்னை நசுக்குறார் என்னுயிர் அந்தோ!
ஏக்கமுட னுன்னை நோக்குதல் காணாய்.
அன்னை துயராதன ஆற்றிடு தற்கே
அன்ப! அருந்துயில் நீங்கிடு வாயே.

o o o

இல்லம் கொடுந்தீக் கிரையாகும் போழ்து
இன்றுயில் கொள்ளல் தகுமோ என்மைந்தா!
அல்லல் அடிமை அரும்பசி யாவும்
ஆர்ப்பரித் தென்னை அழித்திடல் கண்டும்
மல்லற் புயத்தரு மைந்தனே! கண்ணில்
மயக்கந் தெளியாத மாயையீ தென்னே!
வல்லை துயிலொழிந் தன்னையைக் காக்க
வந்திடு வாயென்றன் சுந்தர மைந்தா!

o o o

நீதி யழிந்து நிறையழிந் தென்றன்
நீண்ட பெருஞ் செல்வம் யாவுமழிந்து
ஆதிபராசக்தி அன்னை யளித்த
ஆன்றபே ராற்றல் அனைத்து மழிந்து
பாதி உடலொடு பாரோ ரிகழ
பண்டைப் பெரும்புகழ் யாவுமிழந்து
கோதியன் றேநான் குணமழி வுற்றேன்
கோமகனே துயில் நீங்கி எழுவாய்

Koviloor Digital Library



## மகாத்மா வாக்கு

மகாத்மாகாந்தி பம்பாயில் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது, அவர்கள்கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதிலாவது :—

கேள்வி :—லண்டன் மகாநாட்டைப்பற்றி தங்கள் அநுபவத்தாலேற்பட்ட அபிப்பிராயமென்ன ?

பதில் :—அது ஓர் வெறும்பேச்சு சங்கமென்பது எனது அபிப்பிராயம். உண்மையில் அது பிரதிநிதித்வம் வாய்ந்ததல்ல. "வட்டமேஜை மகாநாடு"என்னும் பதம் அதற்குப் பொருத்தமானதன்று.

கேள்வி :—காங்கிரஸ் ஒருவரைமட்டுமல்லாது மற்றும் பல பிரதிநிதிகளை அனுப்பி இருப்பின் சிலாக்யமாக இருந்திருக்குமல்லவா ?

பதில் :—ஏகபிரதிநிதியை மட்டும் அனுப்பியது மிக புத்திசாலித்தனமான முடிவென்பது எனது அநுபவத்தின் முடிவாகும். சிரேஷ்டமான 14 அல்லது 15 தலைவர்களை தேசத்தை விட்டு வெளியே அனுப்பியிருப்பின் அது பெரும் கேடாக முடிந்திருக்கும்.

கேள்வி :—பிரதம மந்திரியின் அறிக்கையை பரிசீலனை செய்தீர்களா ? அப்படியாயின் தங்கள் அபிப்பிராயமென்ன ?

பதில் :—நான் பரிசீலனை செய்தேன். எனக்கு இவ்விஷயத்தில் சுதந்திரமிருப்பின், தாராளமாக என் அபிப்பிராயத்தை வெளியிட முடியும். ஆனால் நான் ஒரு பிரதிநிதியே. வடமேற்கு எல்லைப் புறத்திலும், பொதுவாக தேசத்திலும் தற்போதேற்பட்டுள்ள நிலைமையைப்பற்றி நானாக ஒன்றும் கூறுவதற்கில்லை. சர்க்கார் ஒப்பந்தத்தை மீறியுள்ளனரா இல்லையா என்பதை சர்தார் வல்லபாய் பட்டேலே கூறவேண்டும்.

கேள்வி:— தற்போதைய நிலைமையில் லண்டன் மகாநாட்டு கமிட்டிகள் வெற்றிகரமாக வேலைசெய்ய முடியுமா?

ப:— இது மிகவும் கஷ்டமான கேள்வி. இக்கமிட்டிகள் எவ்விதம் வேலை செய்யுமென்பதை சர்க்காரே யோசனை செய்ய வேண்டும்.

கே:— எதிர் காலம் மிக சங்கடமாயிருக்குமென நீங்கள் எண்ணுகிறீர்களா?

ப:— இல்லை. நான் அவ்விதம் நினைக்கவில்லை. ஒரு சத்தியாக்கிரகி எப்பொழுதும் சங்கடப்படுவதாக நினைக்க முடியாது. நாம் மற்றொரு முறை தீவிரமான சோதனைக்கு உட்படவேண்டியிருக்கலாம். ஆனால் அது ஓர் சங்கடமென நான் நினைக்கக்கூடாது. அதை விலக்க நான் என்னாலியன்றதனைத்தும் செய்வேன். சோதனை கால கஷ்டங்களை எதிர்த்து எது வரினும் வருக என்ற உணர்ச்சி இல்லாதிருப்பது வீரர்களுக்கு அழகல்ல.

கேள்வி:— 'தீண்டாதார்' ஏன் தங்கள் மீது ஆத்திர மடைந்திருக்கிறார்கள்?

பதில்:— அவர்கள் என்பால் ஆத்திர மடைந்திருக்கிறார்களென்று கூறுவதை நான் மறுக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் என் சகோதரர்கள் என் எலும்பும் சதையும்-அவர்கள் எலும்பும் சதையும் ஒன்றேயாகும். அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக நான் சந்தோஷமாய் இறக்கவும் சித்தமாயிருக்கிறேன். நானே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்.

கேள்வி: — சமீபத்தில் பிறப்பித்துள்ள அவசரச் சட்டங்கள் காங்கிரசை அறை கூவி அழைப்பதாக இருக்கின்றனவா?

பதில்:— எவரும் அவ்வண்ணமே நினைக்க வேண்டியிருக்கும்.

## காரியக்கமிட்டி தீர்மானம்.

29உ இரவு பம்பாயில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. தற்கால நிலைமையைப்பற்றி வாதம் நடந்தது. பத்திரிகை நிருபர்களை உள்ளே விடவில்லையாகையால் நடந்த விஷயம் தெரியவில்லை. வங்காளம், ஐக்கியமாகாணம், எல்லைப்புறம் இவைகளில் செய்யட்டிருக்கும் அவசரச்சட்டங்கள் டெல்லி உடன்படிக்கையை மீறியவையல்லவா என்று வைசிராயை தந்தி மூலம் கேட்கவேண்டுமென்றும், இப்படிச் செய்ததற்கு சர்க்கார் சமாதானம் கூறவேண்டுமென்றும் கமிட்டி முடிவு செய்ததாக தெரிகிறது. அதோடு மகாத்மா வைசிராயை பார்த்து பேசவேண்டியது அவசியமா என்று வைசிராய்க்கு தந்திகொடுத்து கேட்பதென்றும் முடிவு செய்திருக்கிறது. இவற்றிற்கு பதிலையும் தந்தி மூலம் அனுப்பும்படி காரியக்கமிட்டி கேட்கப் போகிறது. இந்த தந்திப் போக்குவரத்துகளின் முடிவு தெரிந்தே, காரியக்கமிட்டி தற்கால நிலைமையைப் பற்றி முடிவு செய்யும்.

Koviloor Digital Library



## பட்டேல் கர்ஜனை

காங்கிரஸ் தலைவர் சர்தார் படேலின் மூத்த சகோதரரான ஸ்ரீ விட்டல்பாய் படேல் மகாத்மாவுடன் அதே கப்பலில் பம்பாய் வந்திறங்கினார். அவர் தமது அபிப்பிராயத்தை பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருப்பதாவது:—

பிரதம மந்திரியின் அறிக்கை காங்கிரஸ் கோரிக்கைகளை நிராகரித்து விட்டது. இராணுவம், அன்னிய இலாகா முதலியவைகளை ஒதுக்கிவைக்க வேண்டும் என்று பிரதம மந்திரி கூறுகிறார். இது காங்கிரஸ் கோரிக்கைக்கு முற்றிலும் விரோதமானது பிரதம மந்திரி ஒரு தடவைக்குமேல், இந்தியா சுயேச்சையை விரும்பவில்லை என்றும் ராணுவம் அன்னிய நாட்டுச் சம்பந்தம் ஆகிய இலாகாக்களை ஒதுக்கிவைக்க எல்லாரும் சம்மதித்து விட்டதாகவும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். ஆகையால் 2-வது லண்டன் மகாநாட்டாலும் அதன் 3-கமிட்டிகளாலும் நன்மை யொன்றும் விளைந்து விடாது. லண்டன் மகாநாடு தோல்வியுற்றது; இந்தியா முற்றிலும் ஏமாற்றப்பட்டு விட்டது. காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட நாள் முதல், பிரிட்டிஷ் இராஜ தந்திரம் பலித்து, இந்தியாமென்மேலும் அவமான மடைந்து வருகிறது. உலகத்தார் காங்கிரஸைக்கண்டு ஏளனஞ் செய்யும்படியாயிற்று. பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் ஆனால் இந்தியாவின் கட்சிகள் தடைக் கற்களாயிருக்கின்றனவென்றும் உலகத்தார் எண்ணும்படி பிரிட்டிஷார் செய்து, காங்கிரஸை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அவமானப்படுத்தி வைத்தார்கள். இந்தியர் கேட்பது என்னவென்பதை அவர்களே யறியவில்லை யென்றும் பிரிட்டிஷ் ஆட்சி இன்னும் நீடித்து நடக்க வேண்டுமென்றும் பிறர் எண்ணும்படியாயிற்று. எப்படியாவது பிரிட்டனோடுசமத்துவங்கொண்டாட இந்தியா விரைந்தோடியதாகவும் ஆனால் பிரிட்டன் இந்தியாவை உதைத்துத் தள்ளியதாகவும் நினைக்க இடமேற்பட்டது. இனியும் சர்க்காருடன் சமாதானம் பேசி ஒத்துழைப்ப தென்பது இந்தியாவுக்கு அவமதிப்பையும் ஆபத்தையுமே தாக் கூடும். சாத்விகப் போராட்டத்தைத் தாமத மின்றி மேற்கொள்ள வேண்டும்.

## முதல் மந்திரி வீண் உபதேசம்

இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப் பற்றி முதல் மந்திரி திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இந்தியாவில் பலாத்காரமும், ஒழுங்கீனமும் ஏற்பட்டிருப்பதாகவும், அவற்றைக் கிளப்பிவிடும் குறும்புக்காரர்களை அடக்க இந்தியர் சர்க்காரோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். பலாத்காரத்தை காங்கிரஸ் கண்டிக்கிறபடியால், அதைப் பற்றி பேச்சில்லை. ஐக்கிய மாகாணத்திலும், எல்லைப் புறத்திலும் பலாத்காரம் தோன்றியிருக்கிறதா என்று முதல் மந்திரியை கேட்கிறோம். அந்த மாகாணங்களில் அவசரச் சட்டங்களை பிரயோகிக்க வேண்டிய அவசியமென்ன? வரி வசூலைப் பற்றி காங்கிரஸிற்கும், சர்க்காருக்கும் சமரசப் பேச்சு நடக்கும் போது, வரி வசூலிப்பது யோக்கியமான செய்கையா? அப்படிச் செய்யக்கூடாது என்று சொன்னால் அதற்காக ஒரு அவசரச் சட்டமா? இதுதான் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுக்கும் ஒழுங்கா? எல்லைப் புறத்தை எடுத்துக் கொள்ளுவோர். காங்கிரஸ் வேலைகள் நடப்பது டெல்லி ஒப்பந்தப்படி நியாயமான வேலையே அதைச் செய்வதற்காக ஒரு அவசரச் சட்டமா? அதை கண்டிக்க தொண்டர்கள் கூடினால், அவர்களை சுட்டு வீழ்த்துவது தான் நேர்மையான சர்க்காருக்கு அழகா? அல்லது எல்லைப்புறத்திற்கு சுதந்திரம் அளிக்கும் யோக்கியதை இதுதானா என்று கேட்கிறோம். நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள சகல அமைதியின்மைக்கும் சர்க்காரே காரணம். அமைதியின்மை உண்டு பண்ணும் குறும்புக்காரர் யார் என்பதை மெக்டனால்ட் அறிவார். அறிந்திருந்தும் யாரோ குறும்புக்காரர் இருப்பதாக சொல்ல முன் வருவது வெட்கக்கேடு. ஜனங்களுக்கு இம்மாதிரி உபதேசம் செய்வதைவிட்டு, இந்தியா மந்திரிக்கும், வைசிராய்க்கும் உபதேசம் செய்வாராக. ஆனால் அவர் உபதேசத்தை இந்தியா மந்திரி கேட்பவராயில்லை. தமக்கு முதல் மந்திரி பதவி கிடைத்தால் போதும் என்று பதவியை பற்றிக்கொண்டிருக்கும் அவருடைய வார்த்தையை கேட்க வேறு எந்த மந்திரியும் தயாராயில்லை.

Koviloor Digital Library



## சில புள்ளி விவரங்கள்

நிலவரி வரும்படி

| 1928—29 | லக்ஷம் ரூபாய் |
|---|---|
| சென்னை | 524 |
| பம்பாய் | 484 |
| வங்காளம் | 326 |
| ஐக்கிய மாகாணம் | 604 |
| பஞ்சாலம் | 277 |
| பீகார் ஒரிசா | 173 |
| மத்திய மாகாணம் | 219 |
| அசாம் | 117 |

கலால் வரி வரும்படி

| 1928—29 | லக்ஷம் ரூபாய் |
|---|---|
| சென்னை | 558 |
| பம்பாய் | 392 |
| வங்காளம் | 224 |
| பீகார் ஒரிசா | 189 |
| ஐக்கிய மாகாணம் | 130 |

நகரங்கள்

10 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நகரங்கள்.

| | |
|---|---|
| சென்னையில் | 172 |
| பம்பாய் | 77 |
| வங்காளம் | 115 |
| ஐக்கிய மாகாணம் | 85 |
| பாஞ்சாலம் | 61 |
| பீகார் ஒரிசா | 42 |

நீர்ப்பாசானம்

நீர்ப்பாசானத்திற்காக 1928—29ல் சர்க்கார் செலவு செய்த விவரம்.

| | லக்ஷம் ரூபாய் |
|---|---|
| சென்னை | 105 |
| பம்பாய் | 89 |
| வங்காளம் | 36 |
| ஐக்கிய மாகாணம் | 104 |
| பாஞ்சாலம் | 150 |

வருமானவரி.

| 1928-29 | லக்ஷம் ரூபாய் |
|---|---|
| சென்னை | 138 |
| பம்பாய் | 309 |
| வங்காளம் | 411 |
| ஐக்கிய மாகாணம் | 81 |
| பாஞ்சாலம் | 66 |
| பீகார் ஒரிசா | 48 |

## மின் வெட்டு

**பொதுவேலை நிறுத்தம்**

இந்திய தொழிலாளர் காங்கிரசின் நிர்வாகக் கூட்டம் பம்பாயில் நடைபெற்றது. தொழிலாளரின் பலத்தை காட்டும் பொருட்டு, பிப்ரவரி மாதம் 4உ யன்று இந்தியா முழுவதிலுமுள்ள சகல தொழிலாளரும் வேலை நிறுத்தஞ் செய்வ தென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

**மிதவாதிகள் வழவழா**

ஐக்கியமாகாண மிதவாதிகள் சங்கம் ஒரு அதிசயமான தீர்மானம் செய்திருக்கிறது. வரி மறுப்பு இயக்கம் கூடாதாம். ஆனால் வரி உயர்வை குறைக்க வேண்டுமாம். அவசரச் சட்டத்தையும் அது கண்டிக்கிறதாம். பேஷ்! பிரதாப்காரா என்ற ஜில்லாவிற்கும் அவசரச் சட்டத்தை பிரயோகித்திருக்கிறார்கள். ஆனால் வரி வசூல் ஆகிறதா என்பது தான் பெரிய சந்தேகமாயிருக்கிறது. பண்டித கிருஷ்ண காந்த மாளவியாவை அவசரச் சட்டப்படி 6 மாதம் தண்டித்திருக்கிறார்கள். அது போதாதென்று, அவர் மீது ராஜத்துவேஷ வழக்கும் தொடரப் போகிறார்கள்.

**டைம்ஸ் குறும்பு**

லார்ட் வில்லிங்டன் தாராளமாக அடக்கு முறைகளை கையாளலாமென்றும், அவரை ஆதரிக்க பிரிட்டிஷார் தயார் என்றும் லண்டன் டைம்ஸ் சொல்லுகிறது. பிரிட்டிஷார் -அடக்கு முறை வேண்டாமென்று இதுவரை எந்த நாளிலும் சொல்லியது கிடையாது. அவர்களுக்கு என்ன நடக்கிறதென்று தெரிந்தால் அல்லவா, அவர்கள் அபிப்பிராயத்தை சொல்ல முடியும்? சினிமா காட்சியிலும், புட்பால் கிரிக்கட் விளையாட்டுகளிலும் காலங்கழிக்கும் அப்பாவிகள். அவர்களை இழுத்துவைத்து டைம்ஸ் அழ வேண்டிய அவசியமேயில்லை. அடக்கு முறைகளால் தேசியத்தை அடக்கிவிட முடியுமா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி. லார்ட் வில்லிங்டனுக்கு பிரிட்டனில் ஆதரவு இருக்குமானால், மகாத்மாவிற்கு அதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இந்நாட்டில் ஆதரவு உண்டு என்று எச்சரிக்கிறோம். பூச்சாண்டி வேண்டாம்.

சென்னை, டிசம்பர் 31உ

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | | ரூ. | 28—12—0 |
| சவரன் சில்லரை | | ரூ. | 18—8—0 |
| சீமை வெள்ளி | 100 | ரூ. எடை | 61—0—0 |
| ,, | | ரூ. எடை | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam, at Lakshmi Press, 2, Coral Merchant St, Madra

Koviloor Digital Library


காங்கிரஸ் வெளியீடு | விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும். | உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½. | ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 | சென்னை 1932 ஜனவரி 4வ, பிரஜோற்பத்தி மார்கழி 20வ திங்கட்கிழமை | இதழ் 24

## மகாத்மா சங்கநாதம்



மகாத்மா போர் சங்கு ஊதிவிட்டார். தொண்டர்களே, புறப்படுங்கள் !

Koviloor Digital Library



## சட்ட மறுப்பு திட்டம்

இந்தியர் செய்யவேண்டிய சட்டமறுப்பைப் பற்றி, காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அந்த திட்டமாவது:—

போராட்டத்தின் அஹிம்சா தத்துவத்தை அறியாமலும், உயிர், சொத்து இவைகளை தியாகம் செய்யவும் சித்தமில்லாத எந்த மாகாணமோ, ஜில்லாவோ, தாலூகாவோ அன்றி கிராமமோ சட்டமறுப்பை மேற்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. மனது, வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தியாக அஹிம்சையை திட்டமாக அனுசரிக்க வேண்டும். பணம் முதலிய உதவிகளளிப்பதாகக் கூறி ஆட்களைத் திரட்டி அஹிம்சா இயக்கத்தை நடத்தக் கூடாதென்பதை மனதிலிருத்த வேண்டும். எனவே கூலிக்கு தொண்டர்களை அமர்த்தக் கூடாது. சாத்யமானால் அஹிம்சா போரில், சிறைப்பட்ட அல்லது மாண்ட ஏழைகளான ஆண்கள், பெண்கள் இவர்களை அண்டியிருப்பவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு மட்டும் உதவி செய்யலாம். பிரிட்டிஷ் துணியாயினும் அன்றி வேறெந்த விதேசத் துணியாயினும், அவைகளை எப்பொழுதும் பகிஷ்கரிக்க வேண்டியது மக்கள் கடமையாகும். காங்கிரஸில் சேர்ந்த ஆண்களும் பெண்களும், கையால் நூற்று கைத்தறியில் செய்யப்பெற்ற கத்தராடைகளையே உபயோகிக்க வேண்டும். சுதேசி மில்களில் உற்பத்தி செய்யும் துணிகளையும் அவர்கள் விலக்கவேண்டும். கள்ளுக்கடை, பரதேச துணிக்கடை முதலிய இடங்களில் முக்கியமாக பெண்களே மும்முரமாக மறியல் செய்ய வேண்டும். ஆனால் மறியல் அஹிம்சா முறையிலேயே நடக்க வேண்டியதவசியம். லைசென்ஸ் பெறாமல் உப்பை தயாரித்து சேகரிப்பதை மீண்டும் மேற்கொள்ள வேண்டும். தடியடிகளையோ அன்றி துப்பாக்கிக் குண்டுகளையோ வாங்கிக்கொண்டு, சற்றும் அசையாமல், இருந்த இடத்திலிருக்க தைரியமுள்ளவர்களே ஊர்வலங்களிலோ அன்றி பொதுக் கூட்டம் முதலியவைகளிலோ கலந்துகொள்ள வேண்டும். அடக்கி யாளுபவர்களின் சாமான்களை பகிஷ்கரிப்பது அஹிம்சா யுத்தத்திலும் பூராவும் நேர்மையானதே. அடக்கியாளுபவருடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டு, அவர்களின் வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டியது தன்ப மறுப்பவரின் கடமை யல்ல. எனவே, பிரிட்டிஷ் சாமான்களையும் ஸ்தாபனங்களையும் மீண்டும் அதிதீவிரமாக பகிஷ்கரிக்கவேண்டும். ஒழுக்கீனமான சட்டங்களையும், ஜனங்களை பாதிக்கும் சட்டங்களையும் உத்தரவுகளையும் எங்கெங்கு சாத்யமோ உசிதமோ அங்கு அவைகளை மீறலாம். அவசரச் சட்டப்படி பிரயோகிக்கும் எல்லா முக்கியமான உத்தரவுகளையும் சாத்வீகமாக மீறலாம்.

## டம்பாச்சாரி யார்?

லார்ட் வில்லிங்டன் கல்கத்தாவில் பேசிய போது ஐக்கிய மாகாண, எல்லைப்புற காங்கிரஸ் வாதிகளைப் பற்றி குறிப்பிட்டார். அச்சமயம் அவர் நாக்கில் நாம் இருந்ததா என்பது சந்தேகமாயிருக்கிறது. எல்லைப்புற காந்தி, ஷெர்வானி ஜவார்லால் போன்ற ஒப்பற்ற மாணிக்கங்களை, அவர் தூற்றினார். பெயர் பிரபலமாவதற்காக இம்மாதிரி கிளர்ச்சியில் அவர்கள் ஈடுபட்டிருப்பதாக கொஞ்சங் கூட கூச்சமில்லாமல் சொன்னார். வில்லியர்ஸ் சர்ச்சில் போன்ற பொறுப்பற்ற உளறுவாய்ப் பேர்வழிகள் இம்மாதிரி கூறியிருந்தால நாம் கவனிக்கப் போவதில்லை. ஆனால் ஒரு பெரிய பொறுப்பான பதவியில் இருக்கும் ஒரு வைஸிராய் இம்மாதிரி பேசுவதென்றால், இந்த சர்க்காருக்கு புத்தி அழுகிப் போயிற்றென்றே சொல்லவேண்டும். பெயர் பிரபலமாவதற்காக ஆகாயக் கப்பலில் பறப்பதும், இரவு பகலாக ஓய்வின்றி நடனமாடுவதும், போலிவரவேற்புகள் கொடுப்பதும் இந்நாட்டாருக்கு வழக்கமா மேல் நாட்டாருக்கு வழக்கமா என்பதை வைஸிராயே அறிவார். அதுதான் போகட்டும். ஏழைகள் வயிற்றுக்கில்லாமல் பஞ்சாய் பறக்கும் போது, டம்பம் டமாண்டங்களோடு சர்க்காரை நடத்துவது பெயர் விளம்பரத்திற்கல்லவா? வில்லிங்டன் சென்னையில் கவர்னராயிருக்கும் போது செய்த டம்பாச்சாரிதனத்தை யார் மறந்து விட்டார்கள்? லட்சக்கணக்கான ரூபாய்களை கொட்டி குதிரைப் பந்தயம் ஏற்படுத்தி, அதற்கு கவர்னர் தம்பதிகள் ஆடம்பரமாக பவனி செல்லுவது டம்பமல்லவா? டெல்லி அரண்மனையில் பல்ப் உள்பட சகல சாமான்களையும் மாற்றியது டம்பமல்லவா? ரயில் வண்டிக்குக் கூட கத்தரிப்பூ வர்ணம் கொடுத்தது ஆடம்பர மல்லவா? வில்லிங்டனுக்கு சென்னையில் டம்பாச்சாரி என்று பெயர் கொடுத்தார்கள். அதற்கு இம்மியளவும் மாசு ஏற்படாமல் அவர் நடந்து கொண்டார். இன்றும் நடந்து கொண்டுவருகிறார். இன்று ஆகாயக் கப்பலில் அவர் பறந்து செல்வதும் டம்பத்திற்காகவே. இம்மாதிரி காலை எழுந்தது முதல், இரவு படுக்கும்வரையில் டம்பத்திலேயே புரண்டு விழும் ஒரு பேர்வழி, ஜெயிலையே வீடாகவும், துன்பத்தையே வாழ்க்கையாகவும் கொண்டுள்ள தியாகிகளை விளம்பரக்காரர்கள் என்று கூறுவது அயோக்கியத்தன மல்லவா?

# காங்கிரஸ் போர் முரசு

வைஸிராய் வில்லிங்டன் வெள்ளையர் சங்கத்தில் முடுக்காய்ப் பேசியிருக்கிறார். அதை மற்றொரு பகுதியில் பார்க்கலாம். மகாத்மாவிற்கு அவர் அளித்த பதில் அதைவிட முடுக்காய் இருக்கிறது. வட இந்தியாவில் வைஸிராய் செய்திருக்கும் அவசரச் சட்டங்கள் எல்லாம் டெல்லி ஒப்பந்தத்தை மீறியவை யல்லவா என்று மகாத்மா தந்தி கொடுத்துக் கேட்டார். இப்படி கேட்டதே கூடாதென்பது சுபாஷ் பாபு போன்றவர்களின் அபிப்பிராயம். இருந்தாலும் பொறுமையையே பூஷணமாகக் கொண்ட மகாத்மா தந்தி கொடுக்க விரும்பினார். இர்வின் செய்த உடன்படிக்கையை வில்லிங்டன் மதிப்பவராயிருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? நேரில் கலந்து கொள்ள வரவழைத்திருக்க வேண்டும். ஆனால் வில்லிங்டன் என்ன செய்தார்? "அவசரச் சட்டங்களைப்பற்றிப்பேசாமல் இருந்தால் நீங்கள் வரலாம். அவசரச் சட்டங்கள் சர்க்காரின் முடிவான தீர்மானம். அதைப்பற்றி கேள்விகேட்க யாருக்கும் அதிகாரமில்லை" என்று அகம்பாவத்தோடு பதிலளித்தார். வில்லிங்டன் பழைய பெருச்சாளி என்று நாம் அடிக்கடி சொல்லி வந்ததை ஞாபக மூட்டுகிறோம். அது இன்று உறுதியாய் விட்டது. இந்த அகம்பாவமான பதிலைக்கண்டு நாம் வருந்தவில்லை. டெல்லி ஒப்பந்தத்தை மீறியது யார் என்பது இப்பொழுது தெளிவாய் விட்டது. நாய் வாலை நிமிர்க்க யாராலும் முடியாது. எத்தனை தடவை பட்டாலும் இந்த சர்க்காருக்குப் புத்தி வராது. இர்வின் அநுபவம் இர்வினோடு போயிற்று. வில்லிங்டன் புதிதாக அநுபவம் பெற்றுத்தான் அறியவேண்டும். ஆகவே அவர் மீசையை முறுக்குகிறார்.

* *

வில்லிங்டன் மீசையை முறுக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்தியா மந்திரி சாமுவேல் ஹோர் முதல் வெள்ளையர் சங்கத்தலைவர் வில்லியர்ஸ் வரை-சில காலமாக பேசி வருவதைப்பார்த்தால், வில்லிங்டன் வேறு விதமாக பேசியிருக்க முடியாது என்பதை அறிந்து கொள்ளலாம். வில்லிங்டன் இம்மாதிரி அகம்பாவமாய் பதில் கொடுத்திருப்பதைக் கண்டு ஜனங்கள் கோபங்கொள்ள வேண்டாம். சுயராஜ்யம் எளிதில் கிடைத்துவிடாது. மகாத்மா சொல்லுகிறபடி மற்றுமோர் முறை அடக்குமுறை நெருப்பில் ஜனங்கள் செல்ல வேண்டுமென்பது ஈசன் நினைப்பாயிருக்கலாம். அப்படியானால் அதை யாரால் தடுக்க முடியும்? வில்லிங்டன் பதிலைக் கண்டதும், காங்கிரஸ் காரியக் கமிட்டி சட்டமறுப்பு ஆரம்பிப்பதென்று தீர்மானித்து விட்டது. அதைத் தவிர வேறு வழியில்லை.

1929-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31உ இரவு 12 மணிக்கு லாகூரில் காங்கிரஸ் மகாசபை பூர்ண சுயராஜ்ய தீர்மானம் செய்தது. அந்தப் பலனை 1930-ம் வருஷத்தில் தேசமெங்கும் நடந்த சட்டமறுப்பிலிருந்து அறிந்துகொள்ளலாம். அந்த நாளில் கூட லார்ட் இர்வின் மகாத்மா கோரிக்கைக்கு இணங்காததினாலேயே பூர்ண சுயராஜ்ய தீர்மானம் செய்ய நேரிட்டது. அதைப்போல, 1931-ம் வருஷம் டிசம்பர்மாதம் 31உ இரவு 12-மணிக்கு காங்கிரஸ் காரியக் கமிட்டி சட்டமறுப்பு ஆரம்பிப்பதென்று தீர்மானித்திருக்கிறது. இனி யார் அவமானத்தையும் பொறுக்க முடியாது. யார் அகம்பாவத்தையும் பொறுக்க முடியாது. நமக்கு வேண்டியது சுயராஜ்யம் ஒன்றே. அந்த சுயராஜ்யத்தைப் பெற மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, சகோதரர்களே, எழுந்திருங்கள் சகோதரிகளே, மறுபடியும் போர்முனைக்குக் கிளம்புங்கள். பாரதத் தாய் உங்களை அழைக்கிறாள். மகாத்மா உத்தரவு கொடுத்து விட்டார். காங்கிரஸ் தீர்மானித்து விட்டது. இந்தியாவில் பிறந்து இந்தியாவில் வளர்ந்த நமக்கு, இந்நாட்டில் ஆள உரிமை ஏன் இல்லையென்பதை பார்த்து விடவேண்டும். எழுங்கள்! காங்கிரஸ் போர்முரசு அதோ ஒலிக்கிறது!

## புள்ளி விவரங்கள்.

### இந்தியாவில் வெள்ளையர்.

இந்தியாவில் தொழிற்சாலை, தோட்டம், சர்க்கார், வர்த்தகம் முதலியவைகளில் வேலை செய்யும் வெள்ளையர் கணக்கு:

| | |
|---|---|
| சென்னை | 807 |
| பம்பாய் | 1206 |
| வங்காளம் | 4558 |
| ஐக்கிய மாகாணம் | 673 |
| பாஞ்சாலம் | 537 |
| பீகார் ஒரிசா | 684 |
| மத்திய மாகாணம் | 99 |
| அசாம் | 1144 |

Koviloor Digital Library



# டக்கா மஸ்லின்.

(ஆர். சுவாமிநாதன் எழுதியது.)

உலகிலே நெசவில் நிகர் இலாதார் இந்தியரே என்பது சரித்திர உண்மை. உலகோர்க்களுக்கு நெசவுத்தொழிலை கற்பித்தவர்கள் இந்தியர்களே. கிறிஸ்து பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பே இந்தியர்கள் நெசவுத் தொழிலில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினார்கள். இந்தியர்களே உலகத்தாருக்கு ஆடைகள் கொடுத்து உதவிவந்தனர். ஐரோப்பாவிலுள்ள இராஜகுடும்பங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் இந்தியத் துணிகளையே விரும்பி அணிந்து வந்தார்களென்றால் அதன் பெருமையை என்னென்றுரைப்பது?

கைத்தொழில்கள் சீரும், சிறப்பும் பெற்று விளங்கவே இந்திய மக்கள் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள். வறுமைப்பிணி அவர்களை அணுகவில்லை. இந்தியர்கள் உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் தங்கள் சாமான்களை அனுப்பி, அதற்காக ஏராளமான தங்கம், வெள்ளி உலோகங்களை பெற்று வந்தார்கள். உலகிலேயே செல்வத்திற் சிறந்த தேசமாயிருந்தது நமது பாரத தேசம்.

பண்டைக் காலத்தில் இந்தியாவில் நெய்யப்பட்ட துணிகள் எல்லாவற்றையும் விட டாக்கா மஸ்லினே உலகமக்களின் மனதை கவர்ந்தது. உலகமக்கள் டாக்கா மஸ்லினை பெரிதும் விரும்பி அணிந்து வந்தார்கள். ரோமர்கள் ராஜ்யமே இந்திய பட்டுத் துணிகளால் நிரப்பப்பட்டிருந்தது. ரோமில் பட்டுத்துணிகள் எடைக்கெடை தங்கத்திற்கு விற்றதாக எல்டர் பிளினி கூறியுள்ளார். டாக்கா மஸ்லினின் மேன்மையைப் பற்றி புகழாதார் உலகிலேயே இல்லை. டாக்கா மஸ்லினுக்கு "இரவுப்பனி" (ஷபனம்) "ஓடும்நீர்" (அபரவான்) "நெய்தகாற்று" என்று பலபெயர்கள் வழங்கிவந்ததை கண்டு ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். வங்காள நவாப் கலிவர்த்திகானின் வீட்டு நெசவுக்காரன் ஒருவன் அஜாக்கிரதையாக உயர்தர மஸ்லின் ஒன்றை தரையில் விடுத்துச் செல்ல அதை புல் என்று எண்ணி அவனுடைய பசு தின்று விட்டதாம்! இதனால் கோபங்கொண்ட நவாப் அத்தொழிலாளியை நாட்டை விட்டுத் துரத்தினாராம்.

அவுரங்கசீப் தர்பாரில் இருக்கும் பொழுது, அவர் மகள் டாக்கா மஸ்லினை உடுத்திக்கொண்டு தந்தையை காண வந்தாள். அதை கண்டு தந்தை முனிந்து கொண்டு "கண்ணே! நிர்வாணமாய் இங்கு வந்தனையே" என்று வினவினான் அவுரங்கசீப். அதற்கு அவள் "தந்தையே! ஓர் உடை அன்று, 7 சுற்று உடை பூண்டிருக்கிறேன்" என்று சுட்டிக்காட்டினாள். இவைகளெல்லாம் சரித்திர உண்மைகள். இனி டாக்கா மஸ்லினைப் பற்றி மேனாட்டார் என்ன கூறியிருக்கிறார்களென்று சற்று ஆராய்வோம்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த மார்க்கோ போலோ என்பார் கூறியிருப்பதாவது:—

"மஸ்லின் துணிகள் சிலந்தி வலையைப் போல் காணப்படுகின்றன! அவற்றை அணிய ஆசை கொள்ளாத அரசனோ, அரசியோ இவ்வுலகில் இல்லை".

"பாரசீகத்திலிருந்து மொகலாய மன்னனின் சபைக்கு வந்த தூதுவன் ஒருவன் திரும்ப பாரசீகம் சென்றதும், தன்னுடைய அரசனுக்கு நெருப்புக்கோழி முட்டை அளவினதும், முத்துக்கள் பதிக்கப் பெற்றதுமான ஒரு தேங்காய் குடுக்கையை சமர்ப்பித்தான். இதை திறந்து பார்த்த போது 60 முழம் நீளமுள்ள மஸ்லின் தலைப்பாகை ஒன்று அதில் இருந்தது" என்று டாவர்னியர் எழுதியுள்ளார்.

1836-ஆம் ஆண்டில் டாக்டர் ஊரே என்பவர் கூறியதாவது:—

"டாக்காவில் நூற்கப்படும் நூலுக்கும், நெய்யப்படும் மஸ்லினுக்கும் இணையானவை ஐரோப்பாவில் எங்கும் இல்லை."

பிளினி, வங்காளத்திலிருந்து வந்த மஸ்லின் துணிகளை அணிந்தோரின் உடம்பு நன்றாக வெளியே தெரியும் வண்ணம் அவ்வளவு மேன்மையுற்றிருந்ததென்று கூறியுள்ளார்.

லாங்லிமான் டாக்கா மஸ்லினை வாய்கொண்ட மட்டும் புகழ்ந்திருக்கிறார்.

இன்னும் ரால்பிட்ச், டாக்டர். டெயிலர் முதலியோரும் டாக்கா மஸ்லினைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்.

1787-ஆம் ஆண்டில் டாக்காவின் கலெக்டராயிருந்த மிஸ்டர் டே என்பவரும் டாக்கா மஸ்லினின் நேர்த்தியைப் பற்றி வியந்து கூறியுள்ளார்.

Koviloor Digital Library



## வைசிராய் உறுமல்

கல்கத்தா வெள்ளையர் சங்க வருஷாந்தர விருந்தில் லார்ட் வில்லிங்டன் உறுமியதாவது:—

இந்தியாவில் தீவிரமாக நடைபெறும் அரசியல் ஸ்தாபனம் ஒன்றேயாகும். அதுவே காங்கிரஸ். காங்கிரஸ் தலைவர்களில் சிலர் ஒழுங்கீன மனதும், ராஜத்துவேஷமானதுமான பிரசங்கங்களாலும், செய்கைகளாலும், அரசியல் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர சாத்தியமில்லாதபடி தேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி மீண்டும் ஒத்துழையாமை சட்டமறுப்பு இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றே பலமான முயற்சிகள் செய்து வருகின்றனர். இவ்வித இயக்கங்களின் கேடுகள் சகல வகுப்பினருக்கும் இன்றும் ஞாபகமிருக்கலாம். வங்க, ஐக்ய மண்டலம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் இவ்விடங்களில் நடைபெற்றுவரும் கிளர்ச்சியைப்பற்றி காங்கிரஸ்கட்சி மெம்பர்கள் எல்லாரையும் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன. இந்த தேசத்தில் பொறுப்பாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்னும் கொள்கையை நாம் யாவரும் ஒப்புக் கொண்டுள்ளோம். இதற்காக நாம் அனைவரும் தற்போது ஒத்துழைத்து காரியங்களைச் செய்ய வேண்டியிருக்க, காங்கிரஸ் தலைவர்கள் இவ்வித பாழான இயக்கத்தை தற்போது ஆரம்பிப்பானேன்? ஒன்று இயக்கத்தின் தலைவர்கள் தங்கள் பெயர்களை விளம்பரப்படுத்திக்கொள்ள இவ்விதம் செய்ய வேண்டும். அன்றி இந்தியாவில் போட்டி சர்க்கார் ஏற்படுத்தி, கவர்னர் ஜெனராலும், அவரது சர்க்காரும் இந்திய நிர்வாகத்தை நடத்த முடியாது செய்யும் நோக்கத்துடனிருக்க வேண்டும்.

நாங்கள் தற்போது அனுசரித்துவரும் கொள்கையைப் பற்றி எவ்வித சந்தேகமும் வேண்டியதில்லை. அரசியல் சீர்திருத்தவேலையை கூடிய சீக்கிரம் நடத்திச் செல்லவேண்டுமென நாங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் பிரதிநிதிகள் பிப்ரவரி முதல் வாரத்தில் இங்கு வந்து விடுவார்கள். பின்னர் கமிட்டிகள் தங்கள் வேலையை ஆரம்பிக்கும்.

இதுவே தற்போதைய உண்மை நிலைமை. ஆனால் அரசியல் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழையாமையோ, அன்றி வேறெந்த இயக்கமோ தடையாக நிற்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தேசமெங்கும் சட்டத்தையும், ஒழுங்கு முறையையும் நிலைநாட்ட சகல முறைகளையும் கையாளுவோம். சர்க்கார் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச்செய்ய குடிவார மறுப்போ, வரிமறுப்போ, அல்லது, பிரிட்டிஷ் சாமான்கள் ஸ்தாபனங்கள் இவைகளை அரசியல் சம்மந்தமான காரணங்களால் பகிஷ்கரிப்பதோ அன்றி தேச சட்டங்களை மீறுவதோ இவைகளைக் கைக்கொள்ள முயலும் எவ்வித கட்சியையும், நாங்கள் அவ்விதம் செய்யா வண்ணம் தடுக்க எந்த முறையையும் மேற்கொள்ளுவோம்.

## அவசரச் சட்டம் ஒழிக

லண்டனிலுள்ள "காமன் வெல்த் ஆப் இந்தியா லீக்" பிரதம மந்திரிக்கு எழுதியிருப்பதாவது:—

"மகாத்மா காந்தி, அவசரச் சட்டங்களை ரத்து செய்தால், சர்க்காருடன் ஒத்துழைப்பதாகக் கூறியுள்ளார். பிரதம மந்திரியும், இந்திய மந்திரியும் இந்த வேண்டுகோளுக்கு எவ்வளவு தூரம் இணங்குகிறார்கள் என்பதிலிருந்து, டிசம்பர் மாதம் முதல் தேதியன்று பிரதம மந்திரி வெளியிட்ட அறிக்கையின்படி நடந்து கொள்ளுவதில் சர்க்காருள்ள சிரத்தை வெளியாகிவிடும். மகாத்மா காந்தி இந்திய க்ஷேம சங்கத்தில் பேசுகையில் அவசரச் சட்டங்களை ரத்து செய்தால் ஒத்துழைப்பதாக கூறியுள்ளதை கவனிக்குமாறு பிரதம மந்திரியை கேட்டுக்கொள்ளுகிறோம். மகாத்மாவின் இவ்வேண்டுகோளை தாராளமான மனத்துடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். அவசரச் சட்டங்களை ரத்து செய்வது அத்தியாவசியமாகும். இது நியாயமான முறையாக விருப்பதுடனல்லாமல் அரசியல் அறிவு நிறைந்த செய்கையுமாகும். எல்லைப்புறத்திலும், ஐக்கிய மண்டலத்திலும் அவசரச் சட்டங்கள் பிறப்பித்ததால் நிலைமை சிக்கலானதற்கு முன்னமேயே பிரிட்டனை விட்டுப் புறப்பட்ட மகாத்மா காந்தி, தான் இந்தியாவிற்கு திரும்பியதும், சர்க்காரும் தன்னைப்போலவே சமாதானத்தை விரும்பினால் சமாதானத்திற்காக மிகுந்த பாடுபடுவதாக வாக்களித்திருக்கிறார். தாங்கள் இந்தியருக்கு விடுத்த வேண்டுகோளில், சமாதான முறைகளாலும், சமரசப்பேச்சுகளாலும் முடிவு ஏற்படுத்துவதில் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென வேண்டிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் முக்கியமான தலைவர்களை சிறையிலடைத்து அவசரச் சட்டங்களையும் பிறப்பித்து விட்டதால் இம்மாதிரியான சமரச முறைகளுக்கு சிறிதும் மார்க்கமில்லாமல் போய் விட்டது. அடக்கு முறைகளினால் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் ஒருவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. கணக்கற்ற தீமைகளே விளையும். அவசரச் சட்டங்களை ரத்து செய்துவிடுவதால் சர்க்காரின் மதிப்பு குறைந்து விடுமென்னும் அதிகாரிகள் வீண் கௌரவ எண்ணங்களை கவனியாது, உடனே இச்சட்டங்களை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்."

Koviloor Digital Library

# மகாத்மாவின் லண்டன் அனுபவம்.

இங்கிலாந்துக்கு புறப்பட்ட பின் முதன் முதலாக மகாத்மா காந்தி இன்று தான் "யங் இந்தியாவில்" வியாசம் எழுதியிருக்கின்றார். சென்ற சம்பவங்களைக் குறித்து மகாத்மா பின் வருமாறு எழுதுகிறார்.—

லங்காஷயரில் நான் சிறிது நாட்களே தங்கியிருந்தேன். தொழிலாளர்களில் கபடமற்ற மனத்தையும் புதிய விஷயங்களை கிரஹிக்குங் கொள்ளும் சக்தியையும் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தேன். லண்டன் மகா நாட்டில் நான் செய்த காரியங்களைப் பற்றி புதிதாக சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. லண்டன் மகாநாட்டைப் பற்றியும், அது சாதித்தவைகளையும் பற்றி எனக்கு தோன்றியவைகளை பட்டவர்த்தனமாக எடுத்துக் கூறினேன். பிரிட்டிஷ் மந்திரிகள் மோசக்காரர்கள் என்றும், அவர்கள் சொல்லுவது ஒன்று, செய்வது வேறு எனவும் நினைப்பது தவறாகும். பிரிட்டிஷ் மந்திரிகள் மிகவும் யோக்கியமானவர்கள் தாம்; ஆனால் பல தடைகளின் கீழ் அவர்கள் வருந்துகின்றனர். மகா நாட்டுப் பிரதிநிதிகள் அடிப்படையான கொள்கைகளில் பலவற்றில் ஒன்றுபட்டு நிற்பது போல தோன்றினாலும், மூலாதாரமான முக்கியமானம் கொண்ட பல சிறு விஷயங்களில் ஒன்றுபடவில்லை. மைனாரிட்டி பிரச்னையால் முட்டுக்கட்டை ஏற்பட்டதற்கு மந்திரிகள் மீது மட்டும் குற்றம் கூறி பயனில்லை. இது ஓர் சந்தர்ப்பமான குறையேயாகும். ஆனால் மந்திரிகளிடமுள்ள பெரிய தடை, ஒருதலைப் பக்ஷமாக அவர்களது ஏஜண்டுகள் அனுப்பும் செய்திகளை வேத வாக்காக நம்புவதேயாகும். பிரிட்டிஷ் ராஜ்யம் ஆரம்பமானதிலிருந்தே தேசிய சக்திற்கு எதிராகவும் கற்பனை செய்யும் இந்த ஏஜண்டுகள் அனுப்பிவரும் செய்திகளை வேதவாக்காக மந்திரிகள் நம்பி வருகின்றனர். நமக்கு நமது நிதியை நிர்வகிக்கத் தெரியாதென்று அவர்கள் நம்புகின்றனர். தற்காப்பு சக்தி நம்மிடம் கிடையாது என்று இவர்கள் கூறுகின்றனர். பிரிட்டிஷ் அதிகாரிகளும், பிரிட்டிஷ் துருப்புகளும் இல்லாவிடில் இந்தியாவே பாழடைந்துவிடும் என இவர்கள் நம்புகின்றனர். தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்ளுவதில் பிரிட்டிஷாரைப்போல திறமை வாய்ந்த தேசத்தினர் உலகத்திலேயே வேறு எவரும் கிடையாதென்று கூறலாம். இந்த பிரிட்டிஷ் மனோபாவத்தை எவ்வாறு மாற்றுவது? கொடுக்க மறுக்கும் கைகளிலிருந்து அதிகாரத்தை எவ்வாறு பிடுங்குவது? வெறும் பேச்சுகளாலும் வாதங்களாலும் பயனில்லை. பிரிட்டிஷார் ஸ்திரமான புத்திகொண்ட தீரமான போர்வீரர்கள். காரியங்களையும், திட்டமான வேலைகளையும் தான் அவர்கள் கவனிப்பார்கள். பகிரங்கமான கலகத்தை உணர்ந்துகொள்ளும் ஆற்றல் அவர்களுக்குமுண்டு. இக் கலகத்தை யடக்க முடியவில்லையானால் உடனே யோக்கியமாக நமக்கு தற்பாதுகாப்பு சக்தியும் நிருவாக ஆற்றலும் உண்டு என்பதை ஒப்புக்கொண்டு விடுவார்கள். நமது பலாத்காரமற்ற புரட்சியை அவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். எனினும் உறுதியான எண்ணத்துடனேயே நான் இந்தியா திரும்பி வந்துள்ளேன்; ஆனால் துரதிருஷ்டவசமாக, நாம் அனைவரும் சாத்வீகமாக இருப்போம் என்பதை அவர்கள் நம்பவில்லை. ஏராளமான ஜனக்கூட்டத்தினர், சாத்வீகத்தை யனுசரிப்பதே முடியாத காரிய மென்பது அவர்களது நம்பிக்கை. வாதம் செய்வதினால் இந் நம்பிக்கையை போக்க முடியாது. உண்மையான அனுபவம் தான் இவ்வாறு செய்ய வல்லது. காங்கிரஸ் தேசத்தின் முழு ஆதரவையும் பெற்ற கட்சி என்பதிலும் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. காங்கிரசுக்கு இத்தகைய சக்தி உண்டென்பதை அவர்களுக்கு வற்புறுத்த ஜெனரல் ஸ்மட்ஸாலும் முடியவில்லை. இந்தியாவில் உள்ள தங்களது ஏஜண்டுகள் இதற்கு விரோதமான செய்திகளை யனுப்பி வந்திருக்கும்போது, இவர்கள் எவ்வாறு ஜெனரல் ஸ்மட்ஸை நம்ப முடியும்? ஆகவே மீண்டும் தீயாக அக்கினி பாட்டையிலே அணிவகுத்துச் செல்ல வேண்டியது அவசியமென்றே தோன்றுகின்றது. பிரதம மந்திரியின் அறிக்கையை விட முற்போக்கான எவ்விதமான கொள்கையையும் பிரிட்டிஷ் பொது ஜனங்கள் ஆதரிக்கத் தயாரா யிருக்கவில்லை."

Koviloor Digital Library



# : மகாத்மா பதில் :

அவசரச் சட்டங்களைப்பற்றி பேசாமல் இருந்தால், தங்களுடன் பேட்டி கண்டுபேசலாம் என்று வைஸிராய் தந்தி கொடுத்தார். அதற்கு பதிலாக முடிவாய் மகாத்மா கொடுத்த தந்தியாவது :—

எல்லைப்புற மாகாண விஷயமாக சில சம்பவங்களை தாங்கள் தந்தியில் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். அதற்காக பொது ஜனங்களால் விரும்பப்படும் தலைவர்களைக் கைது செய்வதற்குப் அசாதாரணச் சட்டங்களைப் பிறப்பித்து உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைப்பதற்கும், நிராயுதபாணிகளான கூட்டத்தார் தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களைக் கைது செய்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்ததற்காக அவர்களைச் சுடுவதற்கும் யாதொரு காரணமுமில்லை. கான்சாகிப் அப்துலகபார் பூரண சுயேச்சை வேண்டுமென வற்புறுத்தியது நியாயமான கோரிக்கையே யாகும். அது லாகூரில் நிறைவேறிய தீர்மானத்திற்கேற்ப வெளியிடப்பட்ட கோரிக்கை யாகும். லண்டனில் நானும் தான் என்னால் கூடிய வரை அதை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு முன் வற்புறுத்தினேன். காங்கிரஸ் கோரிக்கையில் இவ் விஷயமும் அடங்கி யிருக்கிறதென்பதைக் கவர்ன்மெண்டார் அறிந்திருந்தும் என்னைக் காங்கிரஸ் பிரதிநிதியாக லண்டன் மகாநாட்டில் கலந்து கொள்ள அழைத்தார்கள் என்பதையும் நான் ராஜப் பிரதிநிதிக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். தர்பாருக்கு போகாமலிருந்து விட்டது விசாரணை யன்னியில் சிறைப்படுத்தி விடுவதற்குப் போதிய காரணமென்று எனக்குத் தோன்றவில்லை. கான்சாகிப் ஜாதித் துவேஷத்தைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தால் அது வருந்தத் தக்கதுதான். ஆனால் தாம் அவ்விதம் செய்வதில்லை யென்று அவர் என்னிடம் கூறியிருக்கிறார். அவ்விதமின்றி அவர் கிளம்பி விட்டாரென்றே சொல்லுவதாயின் பகிரங்கமான விசாரணைக்கு அவரை கொண்டு வந்திருக்கவேண்டும். அப்பொழுது அவர் பதில் சொல்லியிருக்கக் கூடும். ஐக்கிய மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் ராஜப் பிரதிநிதிக்கு உண்மை விஷயம் அறிவிக்கப்படவில்லை. வாரங்கொடா இயக்கத்தை அங்கு நடத்த காங்கிரஸ் அனுமதிக்க வில்லை. இருதிறத்தினருக்கும் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கையில் வாரவசூல் காலம் வந்தது. வாரத்தை ஜமீன்தார்கள் கேட்க ஆரம்பித்தார்கள். ஆகவே பேச்சு வார்த்தை முடியும் வரை வாரங் கொடுப்பதை நிறுத்தி வைத்துக்கொள்ளும்படி காங்கிரஸ் தலைவர்கள் யோசனை சொல்ல வேண்டியதாயிற்று. அதிகாரிகள் பேச்சு வார்த்தை முடியும்வரை தாங்களாகவே வசூலை நிறுத்தி வைத்தால் நாங்கள் சொல்லிய யோசனையை வாபீஸ் வாங்கிக்கொண்டு விடுவதாக ஜனாப் ஷெர்வாணி சொல்லியிருந்தார். இந்த விஷயத்தை உங்களுடைய தந்தியில் நீங்கள் லேசாக நினைத்து அலக்ஷியம் செய்திருப்பதுபோல செய்ய முடியாது. ஐக்கிய மாகாணங்களில் தகராறு வெகு காலமாக இருக்கிறது. அது கசக்கிப் பிழியப்பட்டிருக்கும் லட்சக்கணக்கான குடிகளின் க்ஷேமத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. ஜனங்களுடைய க்ஷேமத்தில் உண்மையில் கவர்ன்மெண்டார் சிரத்தையுள்ளவர்களாக இருந்தால் அவர்களுடைய அபிவிருத்தியையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாகவும், அவர்களிடத்தில் விசேஷ செல்வாக்குள்ளதாகவுமுள்ள காங்கிரஸின் ஒத்துழைப்பை அவர்கள் வரவேற்றிருக்க வேண்டும். சகிக்கமுடியாத பொருளாதார பளுவினால் பாதகமடைந்துள்ளவர்கள் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கு அனுஷ்டித்த இதர எல்லா முறைகளும் பலன் தராமற் போய்விடின் கடைசிப்பக்ஷமாக வரிகொடாமலிருக்கலா மென்பது புராதன காலம் முதல் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள தர்மம். அமைதியின்மையை எந்த வழியிலேனும் ஏற்படுத்துவது காங்கிரஸின் நோக்க மென்று சொல்லியிருப்பதை நான் மறுக்கிறேன். வங்காளம் சம்பந்தப்பட்டவரை பயங்கரச் செயல்களை ஒடுக்க வேண்டு மென்பதில் காங்கிரஸுக்கும் கவர்ன்மெண்டுக்கும் அபிப்பிராய பேதமில்லை. குற்றங்களை ஒழிப்பதற்கு கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் அது மனப்பூர்வமாக ஒத்துழைக்கும். காங்கிரஸ் பயங்கரச் செயல்களை அழுத்தமாகக் கண்டித்த போதிலும், கவர்ன்மெண்டார் சட்ட பூர்வமாக அவசரச் சட்ட மூலம் செய்து வரும் பலாத்காரச் செய்கைகளையும் அது தன்னுடைய கொள்கையின் வரையறைக் குட்பட்டு எதிர்க்கவேண்டும். ஒத்துழைப்பு பரஸ்பரம் இருக்கவேண்டுமென்று உங்களுடைய தந்தியில் சொல்லியிருப்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் கவர்ன்மெண்டார் ஒத்துழைக்க இஷ்டப்படாமல் காங்கிரஸ் மட்டும் ஒத்துழைக்க வேண்டு மென்று ராஜப் பிரதிநிதி கோருவதாக அவருடைய தந்தியிலிருந்து தெரிகிறது.

---

## இந்துநேசன் அநுபந்தம்.

---

சென்னை இந்துநேசன் பத்திரிகையின் வருட அநுபந்தம் வரப்பெற்றோம். அழகிய ஆர்ட் பேப்பரில் ஏராளமான படங்களும், தமிழ், ஆங்கில கட்டுரைகளும் அச்சிடப்பெற்றிருக்கின்றன. விலை ரூ. 1.

Koviloor Digital Library

# தலைவர்கள் ஜெயில் ஆயத்தம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் 1உ இரவோடு முடிவாயிற்று. தலைவர்களும் அவரவர்கள் ஊருக்கு புறப்பட்டு விட்டார்கள். எல்லாரும் ஜெயிலுக்கு போகவேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். காரியக்கமிட்டி முடிவு செய்த பின்பு பம்பாயிலுள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் மகாத்மாவை பேட்டி கண்டனர். சர். தாகூர் தாஸ், சர். சுனிலால் மேத்தா, லால்ஜி நாராயணஜி, முதலியவர்கள் வந்திருந்தனர். இன்சூரன்ஸ், கப்பல், நாணயமாற்று வர்த்தகர்களும் கூடினர். எம்மாதிரி சட்ட மறுப்பிற்கு உதவி செய்வது என்பதைப் பற்றி பேசினர். பின்னால் பம்பாய் வெள்ளையர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ. மில்லருக்கும், ஸ்ரீ. பெந்தாலுக்கும் மகாத்மா பேட்டி கொடுத்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி, மாகாண கமிட்டிகளுக்கு, என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி உத்தரவுகள் கொடுத்து விட்டது. பம்பாயிலுள்ள சகல தேசிய ஸ்தாபனங்களும் யுத்தத்திற்கு தயாராய் விட்டன. காங்கிரஸ் தலைவர் பட்டேலுக்கு காரியக்கமிட்டி சர்வாதிகாரம் கொடுத்து விட்டது. மகாத்மா காந்தி பம்பாயிலேயே இருக்கிறார். காரியக் கமிட்டி கீழ்க்கண்டவாறு முடிவாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

தபால், தந்தி, சுங்கம் முதலியவைகள் மூலமாக சர்க்காருக்கு வரும்படி கிடைக்காமல் எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் ஜனங்கள் குறைக்கவேண்டும். இந்தியாவின் விடுதலைப் போரில் அந்நிய நாட்டார் அநுதாபம் காட்டும்படி காங்கிரஸ் வேண்டுகிறது. ஜமீன்தார்களுக்கு விரோதமாக வரிமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை யென்று காங்கிரஸ் தெரிவித்துக் கொள்ளுவதோடு, அவர்கள் உதவியையும் நாடுகிறது. வர்த்தக ஸ்தாபனங்கள் எல்லாம், காங்கிரஸ் பகிஷ்கார இயக்கத்தில் உதவிபுரிய வேண்டுகிறது. இதுதான் சமயமென்று சுதேசி மில்கள் விலையை கூட்டி லாபமடிக்க வேண்டாமென்று தெரிவித்துக் கொள்ளுகிறது.

# : வைசிராய் குழப்புகிறார் :

அவசரச் சட்டங்கள் செய்ததற்கு வைசிராய் சரியான காரணங்கள் காட்டமுடியவில்லை. குழப்புகிறார். முக்கியமாக மூன்று காரணங்கள் சொல்லுகிறார். 1. காங்கிரஸ் போட்டி சர்க்கார் நடத்தப்பார்க்கிறது. 2. பூர்ண சுயராஜ்ய பேச்சு பேசுகிறார்கள். 3. வரிமறுப்பு பிரசாரம் செய்கிறார்கள். இதற்கு பதில் கூறுவோம். 1. காங்கிரஸ் தான் இந்நாட்டிற்கு பிரதிநிதி. இந்நாட்டிற்கு சுயராஜ்யம் தேடவும், அதை நடத்திவைக்கவும் காங்கிரஸ் விரும்புகிறது. தாதாபாய் நௌரோஜி கால முதலே இதை சொல்லி வருகிறார்கள். ஆகவே சரியான வாரிசுதார் ராஜ்யத்தை கேட்கும் போது, சர்க்கார் கொடுத்து விட வேண்டியது தானே? 2. பூர்ண சுயராஜ்ய பேச்சு லாகூர் காங்கிரசில் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். காங்கிரசின் கொள்கை பூர்ண சுயராஜ்யம் என்று தெரிந்தே மகாத்மாவை சர்க்கார் லண்டனுக்கு அழைத்தார்கள். அப்படியிருக்க இப்பொழுது எப்படி அது விரோதமாகும்? 3. முக்கியமாக சர்க்கார் காங்கிரசுடன் ராஜிப்பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் போது வரி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பேச்சு முடிகிறவரை வரி வசூலை நிறுத்திவைக்கும்படி காங்கிரஸ்காரர் கேட்டார்கள். சர்க்கார் மறுத்துவிட்டார்கள். அதனால் தான் வரி மறுப்பு செய்யும்படி காங்கிரஸ் தீர்மானித்தது. வழக்கு என்றால் இருவருக்கும் பொதுத்தானே? ராஜிப் பேச்சு நடக்கும் போது வரி வசூல் செய்வது நியாயமானால், வரி மறுப்பு செய்யும்படி சொல்லுவது மட்டும் எப்படி நியாயத்தவறாகும்? எல்லைப்புற காந்தியை கமிஷனர் தமது தர்பாருக்கு அழைத்தாராம். அவர் மறுத்துவிட்டாராம். இது ஒரு பெரிய குற்றமா? தர்பாருக்கு வரமுடியாதென்றால் அதற்கு தண்டனை நிரந்தர சிட்சையா? எல்லைப்புற சர்க்கார் நிர்வாகம் வெகு விநோதம். அவசரச்சட்டங்களுக்கு சர்க்கார் சொல்லும் காரணம் ஆட்டுக்குட்டிக்கு ஓநாய் சொல்லிய காரணத்தைப் போலவே இருக்கிறது.

---

சென்னை, ஜனவரி 2உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 28—12—0 |
| சவரன் சில்லறை | ரூ. | 13—9—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 61—8—0 |
| ,, | ரூ. எடை | 0—10—0 |

Edited, Printed & Published by T. S. Chockalingam. at Lakshmi Press, 2, Coral Merchant St, Mad

விலை காலணா

# காந்தி

திங்கள், வியாழன், சனி வெளிவரும்.

உள் நாடு, வெளிநாடு வருட சந்தா ரூ. 4½.

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

மலர் 3 || சென்னை 1932 ஜனவரி 7ௗ, பிரஜோற்பத்தி மார்கழிமீ 23ௗ வியாழக்கிழமை || இதழ் 26

## விபீஷணர் முறையீடு




(கல்கத்தா வெள்ளையர் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ. பென்தால் வட்டமேஜை மகாநாட்டிற்கு சென்றார். அவர் பம்பாய்க்கு வந்ததும். நிலைமையைப் பார்த்து விட்டு, உடனே முதல் மந்திரிக்கு ஒரு தந்தி கொடுத்தாராம்). அவர் சொல்லுகிறார்:—முதல் மந்திரியே. இதென்ன அநியாயம்? மகாத்மாவை ஜெயிலில் போட்டு விட்டு என்ன செய்துவிட முடியும்? இனி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை காப்பாற்றும் பெரிய பொறுப்பை உம்மால் சமாளிக்க முடியுமா? உடனே காந்தியை விட்டு விடும்.”

விபீஷணரைப் போல பென்தால் முறையிடுகிறார். அவர் வேண்டுகோளை யார் கேட்கப் போகிறார்கள்?

Koviloor Digital Library



# போர் ஆரம்பம்

போர் ஆரம்பமாய் விட்டது. மகாத்மா காந்தியை கைது செய்ததோடு சர்க்கார் நிற்கவில்லை. அப்படி நின்று விடுவார்களென்று நாம் எதிர்பார்க்கவுமில்லை. பம்பாயில் 30 தலைவர்கள் வரை கைதியாய் விட்டனர். இந்தியா சட்டசபை சிம்மாசனத்தில் இருந்து, இந்திய சர்க்காரை ஆட்டி வந்த வித்தல்பாய் பட்டேலும், பழைய பம்பாய் கவர்னர் லார்ட் லாயிட் கண்களில் விரல் விட்டு ஆட்டிய நரிமனும், தேசிய முஸ்லிம்களுக்கு சிங்கமாய் விளங்கும் பம்பாய் கிரானிகிள் ஆசிரியர் பிரெல்வியும், பம்பாயில் வக்கீல்களுக்கு மன்னனாய் விளங்கிய முன்ஷியும், வாதலா உப்பள முற்றுகையில் வீரத்தோடு போர் புரிந்த அவர் மனைவி லீலாவதி முன்ஷியும், சென்ற போராட்டத்தில் பம்பாயை நடத்திய கமலாதேவியும் இன்று ஜெயிலுக்குள் இருக்கின்றனர். சர்தார் பட்டேல் தடைப்பட்டபின் காங்கிரசுக்கு தலைவராக நியமித்த ராஜேந்திர பிரசாத்பாபுவும் ஜெயிலில் தவம் கிடக்கிறார். வங்காள காங்கிரஸ் சர்வாதிகாரியும் கைதியாய் விட்டார். தெற்கே மதுரை சர்வாதிகாரிக்கு ஒரு வருடம் தண்டனை. தமிழ் நாடெங்கும் ஒரு ஊர் கூட பாக்கி யில்லாமல் 144 தாண்டவமாடுகிறது. ஆகவே ஒழுங்கான போர் ஆரம்பமாகிவிட்டது

***

சர்க்கார் அடக்கு முறைகள் சீறுகின்றன. ஆனால் காங்கிரஸ் என்ற கருடன் இவற்றிற்கெல்லாமா பயப்பட்டு விடப்போகிறது? இந்தியா முழுவதிலும் சகல காங்கிரஸ் சபைகளும் ஒழுங்காய் போருக்கு ஆயத்தமாய் விட்டன. பம்பாயில் தினசரி கைது செய்தாலும், 8 மாதங்களுக்கு பஞ்சமில்லாமல் போதுமான ஆட்கள் கொடுக்க ஏற்பாடாயிருக்கிறது. அலகாபாத்தில் யிருந்த வயது சென்ற ஜவார்லால் தாயாரே ஊர்வலத்தை நடத்திச் செல்லுகிறார். அவர் கூறிய வீர மொழிகளை கவனியுங்கள்.

"தேசத்திற்காக எனது குமாரன் ஜவஹரை தத்தம் செய்திருக்கிறேன். சுயராஜ்யம் கிடைக்கும் வரை நானும் போர் புரிவதை விடப்போவதில்லை."

***

மகாத்மா ஜெயிலுக்குள் இருக்கிறார். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி மகாத்மா தேசத்தாருக்கு ஆக்ஞாபித்திருக்கிறார். அதை மற்றொரு பத்தியில் வெளியிட்டிருக்கிறோம். அதை படித்துப்பாருங்கள். அதன்படி நடக்க வேண்டியது நமது கடமை. உயிர் போனாலும், உடமைகளை யெல்லாம் இழந்தாலும், காரியக்கமிட்டி தீர்மானங்களை அப்படியே நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பது மகாத்மாவின் கட்டளை. காங்கிரஸ் காரியக்கமிட்டியை சட்ட விரோதமான சபையென்று சர்க்கார் விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் சோளா கமிட்டியை சட்டவிரோதமானதென்று விளம்பரஞ் செய்திருக்கிறார்கள். சென்னையிலும் பல கமிட்டிகளை அம்மாதிரி விளம்பரப் படுத்தலாம். சென்னை நகருக்கு ஸ்ரீ. சத்தியமூர்த்தியை சர்வாதிகாரியாக நியமித்திருக்கிறார்கள். இதுவரை என்ன செய்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியவில்லை. மற்ற நகரங்களில் சட்டமறுப்பு தீவிரமாய் நடக்கும்போது, சென்னை மட்டும் தூங்கிக் கொண்டிருந்தால் பெரிய அவமானமாகும். இதை சென்னை வாசிகள் கவனிக்க வேண்டும். சென்னை வாசிகளுக்கு தேசாபிமானத்தில் குறைவு கிடையாது. வேறு எந்த மாகாணத்தாருக்கும் தேசபக்தியில் அவர்கள் குறைந்தவர்களல்ல. அவர்களுக்கு வேண்டியது தலைவர்களே. பூ மாலைகள் வாங்குவதற்கு போட்டி போடக் கூடிய தலைவர்கள் இந்த நகரில் ஏராளம். ஆனால் போராட்ட சமயத்தில் முன் நின்று நடத்த வருபவர்கள் கிடைப்பது அபூர்வம். அந்த சங்கடத்தாலேயே சென்னை பின் தங்கி நிற்கிறது. இருக்கட்டும். இதற்காக பின் தங்கி நிற்பதென்றால் கேவலமல்லவா? தலைவர்கள் இல்லையென்பதற்காக சும்மாயிருப்பது வெட்கக்கேடு. நீங்களே தலைவர்கள். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும் தனித்தனியாக தானே தலைவர் இல்லாமல் செய்யக் கூடியவராயிருக்க வேண்டும். அவரே உண்மை சத்தியாக்கிரகி என்று மகாத்மா சொல்லுகிறார். சென்னை சத்தியாக்கிரகிகளே, தலைவர்களுக்காக காத்திருக்க வேண்டாம். இன்றே உங்கள் கடமைகளை செய்ய புறப்படுங்கள்.

# கஸ்தூரிபாய் கண்ணீர்.

ஜனவரி 4-ம் தேதி அதிகாலையில் 3 மணிக்கு பம்பாய் போலீஸ் கமிஷனர் வில்சனும், இரகசிய போலீஸ் டெப்டி கமிஷனர் ஸ்ரீ. பெட்டிகாராவும், ஒரு இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டரும், சார்ஜண்டும் மகாத்மா தங்கிருந்த மணிபவனம் வந்தார்கள். அங்கு கூடியிருந்த தொண்டர்களைத் தூரத் தள்ளி விலக்கிக் கொண்டு, மகாத்மா காந்தியும், மற்றொருவர் தங்கியிருந்த மாடிக்கு விரைவாகச் சென்றனர். இவர்களைக் கண்டதும் ஒருவர், போலீசார் வந்திருக்கிறார்களென்றார். நித்திரை செய்து கொண்டிருந்த மகாத்மா காந்தி உடனே எழுந்திருந்து உட்கார்ந்தார். போலீஸ் கமிஷனர் மகாத்மா காந்திக்கு வாரண்டைக் காட்டி "உங்களைக் கைது செய்ய வேண்டியது எனது கடமை' என்று வணக்கமாகவும் வேடிக்கையாகவும் கூறினார். மகாத்மா புறப்படுவதற்கு கொஞ்ச நேரம் வேண்டுமெனத் தெரிவித்தார். உடனே டிப்டி கமிஷனர் ஸ்ரீ. பெட்டிகாரா 'உங்களை நாங்கள் உடனே அவசரப்படுத்த வில்லை' என்று கூறி மகாத்மாவுக்கு அரை மணி நேரம் கொடுத்தார்.

### கஸ்தூரிபாய் கண்ணீர்

மகாத்மா காந்தி காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தம்முடனிருந்த கஸ்தூரிபாய் காந்தி, மீராபென் முதலியோர்களை தம்மிடம் வரும்படி அழைத்தார் உடனே அவரைச் சுற்றி பலர் வந்து சூழ்ந்து கொண்டார்கள். மகாத்மா காந்தி உடனே 6 கடிதங்களையும் இன்னும் சில விசேஷங்களையும் அவசரமாக அனுப்ப வேண்டிய செய்திகளையும் எழுதி முடித்தார். அவற்றில் ஒரு கடிதம் ரெவரண்டு எல்வினுக்கு எழுதி இருந்தார் இவர் இதற்கு முன் கிறிஸ்து சேவா சங்கத்தைச் சார்ந்திருந்தவர். அக் கடிதத்தின் மூலம் மகாத்மாஜி ஆங்கிலேயருக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். மகாத்மாவை சூழ்ந்திருந்தவர்கள் யாவரும் மகாத்மாவுக்கு அதிகப் பிரியமான வைஷ்ணவ ஜனதோ" (உண்மை வைஷ்ணவன் யார்?") என்னும் பாடலைப் பாடினர். அதன் பின் அவருக்கு குங்குமப் பொட்டிட்டு மாலை சூட்டினார். அங்கு கூடியிருந்தோர் யாவரும் அவர் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டனர். ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தி கண்ணீர் தாரை தாரையாக வடிய "அவர்கள் என்னையும் அழைத்துக் கொண்டு போகட்டும்" என்றார். மகாத்மா புன்னகை தவழும் முகத்துடன் சந்தோஷமாக இருந்தார். அங்குமிங்கும் ஒருவர் ஒருவராக உற்சாகத்துடன் தட்டிக்கொடுத்தார். புன்னகை பூத்த முகத்துடன் அவர் எதிரே வந்தவர்களையெல்லாம் மகாத்மா ஆசிர்வதித்தார்.

### மௌன விரதம்

ஞாயிற்றுக்கிழமை மாலை பிரார்த்தனை முடிந்த பின் மகாத்மா மௌனவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார். ஜனங்கள் மகாத்மா காந்தியை அனுசரவாறு விரதத்தை விடுமாறு வேண்டிக் கொண்டும் மகாத்மா மறுத்து விட்டார். இதற்கு முன் மகாத்மா டண்டியில் கைதியான போதும் அவர் மௌன விரதமே அனுஷ்டித்திருந்தார். அவரைச் சூழ்ந்திருந்தோர், மகாத்மாவின் வார்த்தைகளைக் கேட்க வற்புறுத்தி ஒரு வார்த்தையேனும் கூறும்படி கேட்டுக் கொண்டனர். மகாத்மா புன்னகை புரிந்தாரேயொழிய அவர்கள் கோரிக்கைகளை மறுத்து விட்டார்! மகாத்மாவை அழைத்துக் கொண்டு கீழே காத்திருந்த ஒரு மோட்டாருக்கு சென்றார்கள். அவரை மோட்டாரில் ஏற்றி ஒரு போலீஸ் சார்ஜண்டு பந்தோபஸ்தில் எரவாடா சிறைக்கு காரை ஓட்டிச் சென்றனர்.

மகாத்மா தம்முடன் 19 புஸ்தகங்களை எடுத்துச் சென்றிருக்கிறார். அவற்றில் ஒன்று பிரிட்டிஷ் முதன் மந்திரி ஸ்ரீ மாக்டொனல்டு எழுதிய "யாத்திரை" என்னும் பல வியாசங்கள் நிறைந்த புஸ்தகம். இப்புஸ்தகத்தை முதன் மந்திரியே லண்டன் மகாநாட்டின் கடைசி கூட்டத்தின் போது மகாத்மாவுக்கு சன்மானமளித்தார். அப்புஸ்தகத்தில் முதன் மந்திரி ஒப்பமும், அவரது புகைப்படமும் அடங்கி இருக்கிறது. மற்றொரு புஸ்தகம் சர். சாமுவல் ஹோர் ரஷியாவைப் பற்றி எழுதிய "போர்த் வில்" என்னும் புஸ்தகமாகும் மகாத்மாஜி லண்டனிலிருக்கும்போது, சர். சாமுவேல் ஹோர் இப்புஸ்தகத்தை அவருக்கு அனுப்பி அதைப் படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். மகாத்மா தமது கைராட்டினத்தையும், பஞ்சு வெட்டும் வில் முதலிய சாமான்களையும், இன்னும் கடிதங்கள், புஸ்தகங்கள் அடங்கிய பைகளிரண்டும், படுக்கை, இரு சிறு கூடைகளில் தமக்கு அவசியமான சாமான்களை எடுத்துக் கொண்டதோடு, உலர்ந்த பழங்களும் எடுத்துக் கொண்டு சென்றார்.

Koviloor Digital Library



# வைஸிராய் திண்டாட்டம்

மிதவாதிகள், வகுப்புவாதிகள் ஒத்துழைப்புக் கிடைக்குமென்றும், ஒரு கையால் சீர்திருத்தத்தையும் மற்றொன்றால் அடக்கு முறையையும் காட்டி இந்தியாவின் தேசிய எழுச்சியைப் புதைத்து விடலாமென்றும் வைஸிராய் லார்டு வில்லிங்டன் பகற் கனவு காணுவதாக டில்லியில் அரசியல் அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால் மிதவாதிகள் சர்க்காரோடு இந்த நோக்கத்திற்காக ஒத்துழைப்பது அசாத்தியமென்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் வைஸிராய் மிதவாதத் தலைவரான சர். பிரோஸ் சேத்னாவுக்குப் பேட்டி யளிப்பதாக அறிவித்தார். ஆனால் ஸ்ரீ. சேத்னா வைஸிராய் அழைப்பை நிராகரித்து விட்டார். மகாத்மாவுக்குப் பேட்டியளிக்க மாறு தாண்டவே தாம் வைஸிராயுடன் பேச விரும்பியதாகவும் நிலைமை மாறி மகாத்மாவைச் சிறையில் வைத்து விட்டதால், இப்பொழுது, பேட்டிக்கு அவசியமில்லை என்றும் சர். சேத்னா பதிலெழுதி விட்டார்.

* * *

பம்பாயில் மற்றொரு பிரபலஸ்தரான ஸ்ரீ. மோடி என்பவர் வைஸிராயிக்குப் பக்கபலமாய்ப் பேசுகிறார். அவர் கூறுவதாவது; காங்கிரஸும் சர்க்காரும் தங்கள் பலாபலங்களைக் காட்டி வரும் பயங்கரமான போரில் இந்தியாவிலுள்ள மற்றக் கட்சிகள் உறங்கிக் கொண்டிருந்தால், அபாயமேற்படும். சமாதான முறையில் இந்தியாவின் கதிமோக்ஷத்தை யடைய இன்னும் வழியும் தருணமும் இருக்கிறது என்கிறார். ஆனால் பம்பாயில் 20 மில்களும் காலேஜ்களும் மூடி, பூரண ஹர்த்தால் அனுஷ்டித்ததும், பம்பாயில் பெரிய ஹர்த்தால் செய்ததும் ஸ்ரீ மோடியின் கருத்துக்கு ஆதரவு கொடுப்பதாயில்லை.

* *

கவிபாசர் ஸ்ரீ ரவீந்திரநாத தாகூர் கொடுத்துள்ள அபிப்பிராயமாவது:—

சர்க்காருடன் சமாசம் தேடிய மகாத்மாவைச் சர்க்கார் கைது செய்திருக்கிறார்கள். இந்தியச் சரித்திரத்தை எழுதும் காங்கிரஸையும் மகாத்மாவையும் அலக்ஷியஞ் செய்து விடலாம் என்பதையே சர்க்கார் செய்கை அறிவுறுத்துகிறது. நாம் அவசரப்பட்டு முன்பின் தவறான காரியங்களைச் செய்தால், நமக்குக் கிடைத்திருக்கும் சந்தருணத்தை இழந்து விடுவோம். தற்கொலைக்கேதுவான வழிகளிலும் வீண் ஆர்ப்பாட்டங்களிலும் நமது சக்தியைச் சிதறடிக்காமல், அமைதியாய் நமது லட்சியத்தைப் பூர்த்தி செய்யும் முறையில் வேலை செய்ய வேண்டும். நமது அசக்தியிலிருந்தே அசைக்க முடியாத பலம் பிறக்க வேண்டும். நமக்கு கிடைத்திருக்கும் தருணம் அடிக்கடி கிடைப்பதல்ல. எப்பொழுதோ ஒரு தடவை அபூர்வமாக வருவதாகும். மின்சார வேகத்தைப் போல இது நம் கடமையைச் செய்யும்படி நம்மைத் தூண்டுகிறது. நம்முயற்சியின் கஷ்டங்களைக் குறைக்கிறது. சுதந்திரம் பெறும் மார்க்கத்தில் நம்மை இழுத்துச் செல்லுகிறது.

சர்க்கார் அனுஷ்டிக்கும் அநாகரிக ரவுடி மிரண்டித்தனமான சட்டமில்லா செய்கைகள் நமது மாபெரும் பொறுப்பை விளக்குகின்றன. சர்க்காரின் ஸ்தூல பல ஆதிக்கத்தால் ஜீவகாருண்யத்தையே மறுத்து வரும் மிருக சக்தியைவிட நம் ஆத்மசக்தி உயர்ந்தது என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும்.

* * *

பம்பாயில் நிலைமை எப்படி இருக்கிறது? மகாத்மா கைது செய்ததைக் கேட்டு, 15,000 தொண்டர்கள் காங்கிரஸ் போர்க்களத்திற்கு வரத் தயாரா யிருப்பதாக சம்மதம் கூறினார்கள். சென்ற சட்ட மறுப்பு இயக்கத்தில் 5000 தொண்டர்கள் தான் வந்திருந்தார்கள். இப்பொழுது முன்னிலும் மூன்று மடங்கு அதிகமான தொண்டர்கள் வந்திருக்கிறார்கள். அவசரக் கமிட்டிகள் 250 ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது ஒரு கமிட்டியைக் கைது செய்தால், மற்றொன்று வேலைசெய்யும். இப்படி 8 மாதத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைப் பம்பாய்க் காங்கிரஸ் சபை செய்திருக்கிறது. அன்னிய ஜவுளி பகிஷ்காரமும் மறியலும் முதன்மையான வேலையாக விருக்கும். காங்கிரஸ் புல்லடீன் என்ற சமாசப் பத்திரிகையை வெளியிட ஆரம்பித்து விட்டார்கள். ஸ்ரீ நரிமன் தலைமையில் ஒரு பிரமாண்ட கூட்டம் நடைபெற்றது. ஊர்வலம் நகரெங்கும் சுற்றிவந்தது. போலீஸ் படையும் தயாராயிருக்கிறது.

* * *

கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தார்தான் முக்.

Koviloor Digital Library



னியமாய் வைசிராய் லார்ட் இர்வினை அடக்கு முறை மார்க்கத்தில் அதிவேகமாய்ப்போகுமாறு தூண்டினார்கள். ஆனால் கல்கத்தா வர்த்தக சங்கத்தின் சார்பாக லண்டன் மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஸ்ரீ. இ. வி. பெந்தால் என்ற ஐரோப்பியர் லண்டனுக்கு பிரதம மந்திரிக்கு ஒரு தந்தி யடித்திருக்கிறார். வைசிராய் மகாத்மாவுக்குப் பேட்டி யளிக்காமல் சட்டமறுப்பு ஆரம்பிக்கும்படிச் செய்வதால் இந்தியாவில், முக்கியமாய் ஐரோப்பிய வியாபாரிகளுக்கு, ஏற்படும் அனர்த்தங்களை 15 பக்கம் பூலஸ்காப் தாள்கள் கொண்டபதங்களால் பிரதம மந்திரிக்குத் தந்தி யடித்திருக்கிறார். சட்டமறுப்பு இயக்கத்தை யாரம்பிக்குமாறு செய்தவைசிராய் செய்கையால் ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் சமூகத்தாருக்கும் விளையும் தீமைகளிலிருந்து காப்பாற்ற பிரதமமந்திரிதயாராயிருக்கிறாரா? என்றும் ஸ்ரீ பெந்தால் கேட்டிருக்கிறார்.

பம்பாய் இந்திய வியாபாரச் சங்கத்தார் பின்வரும் தந்தியை வைசிராயிக்கு அனுப்பி அவர் செய்கையைக் கண்டித்திருக்கிறார்கள்:—

காந்திஜிக்குப் பேட்டி யளிக்காமற் போனது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். காந்திஜி தந்திக்குச் சர்க்கார் செய்த வியாக்கியானத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தை நாங்கள் ஆதரிக்க முடியாமற் போன போதிலும், பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்கவும், சுதேசியையும் கதரையும் அபிவிருத்தி செய்யவும் தயாரா யிருக்கிறோம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற ஒரு கமிட்டியை நியமித்து ஹர்த்தால் அனுஷ்டித்தார்கள்.

## எல்லைப்புற காந்தி

எல்லைப்புற காந்தியான ஸ்ரீ, அப்துல் கபூர்கான் டிசம்பர் மாதம் 27-ந் தேதி ஹஸாரிபாக் சிறைக்குக் கொண்டு வரப்பட்டார். தகுந்த பாதுகாப்புடன் அவர் ஒரு ஸ்பெஷல் ரயிலில் வந்தார். ஆயுதந்தாங்கிய 5 போலீஸாருடனும் 4 வாடகை மோட்டார்களுடனும் டிப்டி கமிஷனரும் போலீஸ் சூப்பிரின்டெண்டென்டும் வந்திருந்தனர். ரயில் 8-மணிக்கு வந்தது. அவர் ஒரு மோட்டாருக்கு அழைத்துப் போகப்பட்டார். இரண்டு மணி நேரத்திற்குள் அவர் சிறை நுழைந்துவிட்டார். அவர் வழிநெடுக சந்துஷ்டியாக இருந்ததோடு தமது காவலர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

## இந்தியனே எழுவாய்

மிடிமையைத் தீர்த்திடற்கு—இந்திய!
முன்னே எழுந்திடடா!
அடிமைச் சிறுகுழியில்—இன்னு நீ
ஆனந்தக் கொள்ளுதியோ?

இன்பச் சுதந்திரத்தை—இந்திய!
என்று கொல் நீ பெறுவாய்!
துன்ப மகலும் நெறி—அதுவே
துணிவுடன் தேடிடடா!

என்னுயிர்ச் சோதரர்கள்—வறுமை
உற்றிங்கு வாடுதலைக்
கன்னெஞ்சு பெற்றவரும்—கண்டுவிடில்
கரைகுவர் உள்ளமடா?

வீட்டினில் வெள்ளமடா!—இந்திய!
வெந்துயில் கொள்ளுகின்றாய்!
ஏட்டினில் கண்டதுண்டோ—இந்த நிலை
எறி அழித்திடடா!

மக்கள் பிறப்பினிலே—இந்திய!
மானம் பெரிதலவோ!
இக்கணத் தேயழிப்பாய்!—இந்த உயிர்
எதுக்கு? மான மற்றால்

போரமுர சோங்குதடா!—இந்திய!
போகத் தயார் செய்குவாய்!
மார்புதலை இரண்டும்—முன் நிமிர்ந்து
மாண் அறப் போர் புரிவாய்!

காந்தி தலைவரடா!—இந்திய!
காருண்ய மூர்த்தியடா!
சாந்தப் பெருங்கடல் காண்-அவன்படை
சத்தியம் என்றறிவாய்!

இன்பச் சுதந்திரமாம்—கோயிலினை
எம் கண்கள் காணு மட்டும்
துன்ப மனுபவிப்போர்—செத்திடற்கும்
துக்கப்பட மாட்டோம்

தியாகக் கனல் வளர்த்தே—நாமெல்லோ
தக்கெனவே குதிப்போம் [ரும்.
போக மனைத்தினையும்—புல்லடிமை
மோதிப் பொசுக்கிடுவோம்

சட்டங்கள் ஆயிரங்கள்—வரினும்
சட்டை செய்யாதடா நீ! [ரான்
இட்டங்கொள் சாந்த வீரன்—காந்தி பி
இட்டது சட்டமடா

—வி. பரமசிவன்

Koviloor Digital Library



# புரட்டான அறிக்கை

சர்க்கார் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. மிதவாதிகளில் ஒருவர்கூட சர்க்காரோடு சேரவில்லை. முஸ்லிம்களை சர்க்கார் நம்பி யிருந்தது ஏமாற்றமாய் முடிந்தது. ஆகவே தாங்கள் மகாத்மாவை கைது செய்ததற்கும், அடக்கு முறையில் இறங்கியதற்கும் நொண்டிக் காரணம் சொல்லி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை முழுவதும் அகம்பாவம் நிறைந்திருப்பது மட்டுமல்ல; அபத்தமாகவும் இருக்கிறது. முன்னுக்குப் பின் முரண். முதலிலிருந்து கடைசி வரையில் படித்துப் பார்த்தால், தங்கள் அகம்பாவத்தையோ, முட்டாள் தனத்தையோ நிலை நாட்ட சர்க்கார் தத்தளிப்பது நன்றாய் விளங்கும். ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். லார்ட் இர்வின் ஒப்பந்தம் செய்து கொள்ளும் சமயத்தில் சட்ட மறுப்புக்கு தேசத்தில் ஆதரவேயில்லையாம். அது ஓய்ந்துபோயிருந்ததால் சர்க்கார் கவலைப்படாமல் இருந்தார்களாம். இது உண்மையானால், மகாத்மாவிடம் ஒப்பந்தம் செய்ய மண்டி போட்டு கெஞ்சுவானேன்? காங்கிரசிற்கு செல்வாக்கு இல்லை யென்றால், மகாத்மாவை லண்டனுக்கு அனுப்ப சர்க்கார் அவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டது எதற்காக? மகாத்மா விடுத்த நிபந்தனைகளை யெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமென்ன? இவை தான் போகட்டும். அடக்கு முறைகளை கையாண்டு பயனில்லை என்று அச்சமயம் வைசிராயிருந்த லார்ட் இர்வின் லார்ட்ஸ் சபையில் சொன்னார். வைசிராயாயிருந்த அவர் சொல்லுவது உண்மையா அல்லது காரியதரிசியாக வேலை பார்க்கும் எமர்சன் சொல்லுவது உண்மையா என்று வில்லிங்டனை கேட்கிறோம். ஆகவே சர்க்கார் அறிக்கையில் காணப்படும் இந்த விஷயம் வெறும் புளுகு.

* *

இனி அடக்கு முறைகளைப் பற்றி அவர்கள் சொல்லும் நொண்டிக் காரணத்தைப் பார்ப்போம். ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்தே, காங்கிரஸ் தலைவர்கள் சட்ட மறுப்பு பேச்சு பேசி வந்தார்களாம். அதை அப்போதைக்கப்போது மகாத்மாவிடம் சர்க்கார் எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்களாம். மகாத்மா சீமைக்குச் சென்ற பின்பு இந்தச் சட்டமறுப்பு பேச்சு அதிகமாய் விட்டதாம். அதனால் அடக்கு முறைகளையும், அவசரச் சட்டங்களையும் கையாள நேரிட்டதாம். மகாத்மா இந்தியாவில் இருக்கும் போது அவபடம் புகார்களை உடனுக்குடன் சர்க்கார் எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்கள். அச்சமயம் சர்க்கார் அவசரச் சட்டங்கள் செய்யாததிலிருந்து, அவற்றிற்கு அவசியமில்லை யென்பது தெளிவாகிறது. மகாத்மா சீமைக்குச் சென்ற பின்பு சட்டமறுப்பு பேச்சு அதிகமாய் விட்டதாகவே வைத்துக் கொள்ளுவோம். இருந்தாலும் எப்பொழுது முன்னால் மகாத்மாவிடம் சர்க்கார் புகார்களை தெரிவித்து வந்திருக்கிறார்களோ, அந்த முறையையே மகாத்மா வந்த பின்பும் அவர்கள் கையாண்டிருக்க வேண்டும். ஒப்பந்தபடி யோக்கியமாய் நடப்பதென்றால் அப்படியே செய்திருக்க வேண்டும். ஆனால் சர்க்கார் என்ன செய்தார்கள்? காங்கிரஸ்காரர் மீது சர்க்கார் கூறும் புகார்களைப் பற்றி மகாத்மா நேரில் கேட்க விரும்பினார் வில்லிங்டன் மறுத்து விட்டார். ஆகவே இந்தச் செய்கை வெறும் அகம்பாவத்தையே காட்டுகிறது.

* *

எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், இர்வின் ஒப்பந்தத்தை உடைப்பதற்கு ஒரு நொண்டிக் காரணத்தை சர்க்கார் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றே தோன்றுகிறது. பழைய பெருச்சாளி வில்லிங்டன் வைசிராயாகவும், பச்சை கன்சர்வேடிவ் சர். சாமுவேல் ஹோர் இந்தியா மந்திரியாகவும் இருக்கும் போது, எப்படி இர்வின் ஒப்பந்தத்தை அவர்கள் சகித்துக் கொண்டிருக்க முடியும்? இதுவே ரகசியம். இதை எத்தனை அறிக்கைகள் வெளியிட்டாலும் மறைத்து விட முடியுமா? சென்ற மகா யுத்தம் ஆரம்பமானவுடன், ஜெர்மன் முதல் மந்திரியிடம் பிரிட்டிஷ் தூதர் சென்று, பழைய ஒப்பந்தத்தை ஞாபக மூட்டினாராம். "ஓ அது வெறும் துண்டு காகிதம்" என்று ஜெர்மன் மந்திரி திமிராய் பதிலளித்தார். ஒப்பந்தத்தை "துண்டுக்காகிதமென்று சொல்லியதை பிரிட்டிஷார் பெரிய கூச்சல் போட்டு கண்டித்தார்கள். இன்று வில்லிங்டன் என்ன செய்திருக்கிறார்? அவசரச் சட்டங்கள் செய்வது ஒப்பந்தத்திற்கு விரோதமல்லவா என்று மகாத்மா வில்லிங்டனை கேட்டார் வில்லிங்டன் அந்த ஒப்பந்தத்தை "துண்டு காகிதமாக்கி விட்டார். ஜெர்மன் மந்திரி சொல்லியதற்கும் இவர் செய்ததற்கும் என்ன வித்தியாசம்? சத்தியம் வெல்லுமா இல்லையா என்பதை பார்ப்போம்.

Koviloor Digital Library



# பம்பாயில் "வேட்டை"

பம்பாயில் தலைவர்கள் வேட்டை ஆரம்பமாய் விட்டது. எல்லாரையும் கூண்டோடு கைது செய்ய பம்பாய் போலீசார் நேற்று காலை முதல் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் வித்தல்பாய் பட்டேல், நரிமன், நகின்தாஸ் மாஸ்டர், பட்டில், ஜயந்த்தலால், பம்பாய் கிரானிகிள் ஆசிரியர் சையது அகமது பிரல்வி, முகுந்த காந்தி மாளவியா, முனிஷி, ஸ்ரீமதிகள் முனிஷி, கமலாதேவி சட்டோபாத்தியாயா, அவந்திகாபாய் கோகலே, காப்டன், டில்ஷட் சையத், முதலிய 30 பேர்கள் கைதியாயிருக்கின்றனர். தம்மை கைது செய்யப் போகிறார்கள் என்ற வதந்தியை கேள்விப்பட்டதும், ஸ்ரீ. பிரெல்வி நேராக போலீஸ் கமிஷனர் ஆபீசுக்குச் சென்றார். தம்மை கைது செய்ய வேண்டுமானால் செய்யலாம் என்று சொன்னார். உடனே போலீசார் கைது செய்தார்கள். பம்பாய் காங்கிரஸ் மாளிகைக்கு போலீஸ் புலிகள் பவனி வந்த காட்சி வெகு வேடிக்கை. 25 கான்ஸ்டேபில்கள் அணிவகுத்துச்செல்ல, முன்னால் ஒரு போலீஸ்காரன் யூனியன் ஜாக்கை எடுத்துச் சென்றானாம். டிப்டி கமிஷனர் இரண்டு சார்ஜன்டுகளுடன் பக்கத்தில் சென்றாராம். காங்கிரஸ்காரர் தேசியக் கொடியை பிடித்துக் கொண்டு செல்லுவதைப் பார்த்து, இந்த புலிகளுக்கு பொறாமை ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் இந்த கொடி ஊர்வலம் எதற்காக? காங்கிரஸ் மாளிகைக்கு சென்றவுடன், போலீசார் சுற்றி வளைந்து கொண்டார்கள். பாவம், இரண்டொரு பத்திரிகா நிருபர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள். பின்னால் அவர்களை விடுவித்து விட்டார்கள். காங்கிரஸ் மாளிகையை அவசரச் சட்டப்படி சர்க்கார் கைப்பற்றிக் கொண்டார்கள். சோதனை நடக்கும் போது ஜனங்கள் ஏராளமாய் கூடி நின்றார்கள். எல்லாரும் அவசரச் சட்டப்படி கைதியாயிருக்கிறார்கள். இவர்களை 15 நாட்கள் வரையில் விசாரணையில்லாமல் அவசரசட்டப்படி ஜெயிலில் வைத்திருப்பார்களாம்.

---

சென்னை, ஜனவரி 6உ

| | | |
|---|---|---|
| பம்பாய் ஆலைத் தங்கம் | ரூ. | 29—4—0 |
| சவரன் சில்லரை | ரூ. | 18—14—0 |
| சீமை வெள்ளி 100 | ரூ. எடை | 61—8—0 |
| ,, | ரூ. எடை | 0—10—0 |

## எல்வின் பாதிரியாருக்கு மகாத்மா கடிதம்

2உ மாலை அவசர தந்தி மூலம் கிடைத்த அழைப்பிற்கிணங்கி பூனாவிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்த, பூனா கிறிஸ்து சேவா சங்கத்தைச் சேர்ந்த எல்வின் பாதிரியாரிடம் மகாத்மா கொடுத்த கடிதம் வருமாறு:—

அன்பு மிகுந்த எல்வின்,

நீங்கள் வந்ததைப்பற்றி வெகு சந்தோஷம். எனது தேசமக்களிடம் நான் கொண்டுள்ள, இதே விதமான அன்புடனேயே உங்களது நாட்டினரையும் நான் நேசிக்கிறேன் என்பதை நீங்களே தெரிவிக்க வேண்டுமென விரும்புகிறேன். துவேஷமோ, அல்லது கெட்ட எண்ணமோ கொண்டு நான் அவர்களுக்கு இது வரை எத்தகைய காரியமும் செய்ததில்லை. கடவுளின் கருணையால், இனியும் இவ்வாறான எந்த காரியத்தையும் செய்யமாட்டேன் என உறுதியாய் நம்புகிறேன். எனது சொந்த உறவினர்களிடம், நான் இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்ளுவேனோ, அதே முறையில் தான் தற்போது தங்கள் தேசத்தினரிடமும் நடந்து கொள்ளுகிறேன்.

---

## ஸ்ரீமதி காந்திக்கு அந்நிய நாட்டினர் செய்தி

மகாத்மா காந்தியின் மனைவியான கஸ்தூரிபாய் காந்திக்கு ஜெர்மனி, ஆஸ்டிரியா, ருஷ்யா, ஜக்கோஸ்லோவாக்கியா, நியூஜிலந்து, பிரிட்டன் ஆகிய தேசங்களிலும் வேறு பல தேசங்களிலுமுள்ள பிரபலஸ்தர்களுடைய கையொப்பத்துடன் கூடிய அடியிற்கண்ட தந்தி சேர்ந்திருக்கிறது—அதில் கையெப்ப மிட்டவர்களுள் மிஸ்டர் பென்னர் பிராக்வே மிஸ்டர் ஹரோல்டுடிங், மிஸ்டர் வில்போர்ட்டு வெல்லாக் கிரேஸ் பீட்டன் இவர்களுமிருக்கிறார்கள்.

"யுத்தத்தைத் தடுக்கின்றவர்களது சர்வதேச நிர்வாக சபையானது 25 தேசங்களிலுள்ள ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கிறது. இந்த நிர்வாக சபை தங்களுக்கும் இந்தியா வெங்குமுள்ள காந்திஜியின் சிஷ்யர்களுக்கும் அதன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இந்தியாவின் பூரண சுயேச்சைக் கோரிக்கையையும் அதனைப் பெறுவதற்காக அது கையாளும் அஹிம்சா முறைகளையும் இச்சபை ஆதரிப்பதாக உங்களுக்கு கூறுகிறது."

 Koviloor Digital Library Regd No. M. 2677

# நான் கைதியானால்? :: மகாத்மா உத்திரவு

நாம் கைதியானால், ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி, மகாத்மா காந்தி "பாம்பாய் கிரானிகிள்" பத்திரிகைக்கு தமது அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறார். அதாவது:—உங்கள் தூக்கத்தை விட்டு முதலில் எழுந்திருங்கள். அப்புறம்.

1. சீமைத்துணிகளை பகிஷ்காரம் செய்து கதர் கட்டுங்கள்.

2. மது பானங்கள், லாகிரி வஸ்துக்களை ஒழியுங்கள்:

3. கடுகளவு கூட பலாத்கார நினைப்பு கூடாது. உத்தியோகஸ்தர்கள் செய்வது எவ்வளவு கோப மூட்டக் கூடியவைகளாய் இருந்தாலும், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வெள்ளைக்கார, ஆண், பெண், குழந்தைகளை காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை.

4. எவ்வளவு தூரம் சர்க்காருக்கு உங்கள் ஒத்துழைப்பை நிறுத்த முடியுமோ அவ்வளவு தூரம் நிறுத்தவேண்டும்.

5. காரியக் கமிட்டி நிர்மானத்தை ஒன்று விடாமல் படித்து, அதன்படி அப்படியே நடக்க வேண்டும். அதனால் என்ன கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், உயிர் போனாலும், நிர்மானத்தை நடத்தி வைப்பதில் தயங்கக் கூடாது.

## வேலைத் திட்டம்

இந்தியா முழுவதற்கும் ஒரே வேலைத் திட்டம் கொடுப்பது சாத்தியமல்ல. அஹிம்சை மூலமாக சுய பரிசுத்தமுடைய காங்கிரஸ் தீர்மானித்திருப்பதால், முதலில் ஹர்த்தால் செய்து, பட்டினி விரத மிருங்கள். அப்புறம் அந்தந்த இடத்திற்கு தகுந்தபடி ஏக காலத்தில் சட்ட மறுப்பு ஆரம்பியுங்கள். அதாவது:—

1. உப்புச் செய்தல்.

2. கள்ளுக்கடை, சீமைத்துணி கடைகளை மறியல் செய்தல்.

3 காங்கிரஸை நசுக்குவதற்காக சர்க்கார் பிறப்பிக்கும் 144 போன்ற உத்திரவுகளை மீறுதல்.

## தேசம் சும்மா யிருக்குமா?

தலைவர்கள் எல்லாரையும் கைது செய்யப் போவதாக சர்க்கார் சொல்லுகிறபடி செய்து விட்டால், காங்கிரஸ் நிர்மானப்படி வேலைகள் நடக்க முடியுமா என்று நிருபர் கேட்டார். அதற்கு மகாத்மா அளித்த பதிலாவது.—

"அதற்கெல்லாம் பரிகாரம் காரியக் கமிட்டி நிர்மானத்தில் இருக்கிறது. நிலைமை திடீரென்று பிரமாதமாய் கிளம்பிவிடும். 12 வருஷ காலம் சத்தியாக்கிரகத்தில் இருந்து அநுபவமடைந்த பின்பு, காலம் மாறுதலுக்கு ஏற்றபடி எப்படி நடப்பதென்பது தெரியாமல் போய் விடாது. சென்ற வருஷம் எல்லா தலைவர்களையும் கைது செய்தும் கூட, தேசம் ஆச்சரியகரமாய் ஆதரவு கொடுத்து, சட்ட மறுப்பை நிலை நாட்டி வந்ததை நாம் மறந்து விடவில்லை."

---

## வளவனூர் காங்கிரஸ் வாதிகளுக்கு ஜே.

(எட்டன்)

தென்னாற்காடு ஜில்லா வளவனூர் காங்கிரஸ் வாதிகளின் தேசிய சேவை போற்றத்தக்கதாகும். சில தினங்களுக்கு முன் விழுப்புரம் உள்ளூர் ஜவுளிக்கடைக்காரர்களைத் திகைக்கவைத்து ஒப்பந்த முடித்தனர். ஒப்பந்தப்படி மூன்று மாத கெடுவு நெருங்கி விட்டதால் தமுக்கடித்து இருக்கும் சீமைத்துணிகளை கடைக்காரர்கள் எலம் விட்டுக்கொண்டு வருகின்றனர் தற்போது கள், சாராயக்கடை மறியலைத் தொடங்கி யிருக்கின்றனர். இதற்குள் சாராயக் கடைக்காரர் பணிந்துவிட்டார். கள்ளுக் கடைச் சாமி சற்றுத் துள்ளிப் பார்க்கிறதாம் தினம் துப்பாக்கி எடுத்துக்கொண்டு ஊரைச்சுற்றுகிறாராம். தொண்டர்கள் இதற்கெல்லாம அஞ்சுவார்களோ ! சென்னை ஷண்முக கிராமணியைப் போல் ஆகலாமென்று பார்க்கிறாரோ! சகலத்திற்கும் தயாராய் இருக்கும் தொண்டர்கள் இதற்கெல்லாம் பலைத்துப்போகப் போவதில்லை. காங்கிரஸ்காரர் கொடுத்த நோட்டீஸைத்திருப்பி அவருக்கே தபாலில் அனுப்பிவிட்டாராம் கடைக்காரர். வளவனூர் காங்கிரஸ் வாதிகளே ! தொண்டர்களே உங்கள் திறமையை இதில் பார்க்க வேண்டும். உங்கள் உயிர் போ போனாலும் அஹிம்சா தர்மத்தைக் கைவிட வேண்டாம். வெற்றி பெறுக!"

Edited, Printed & Published by T. S. Chockalingam. at Lakshmi Press.2, Coral Merchant St, Madras